சரஸ்வதி மஹால் ... லைப்ரரி

இப்புத்தகத்திலடங்கியவை.

பக்கம்.

1. இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலிய வற்றின்முதற்குறிப்பகராதி v
2. பிழையும் திருத்தமும் vi
3. இப்புத்தகத்தில் எடுத்தாளப்பட்ட பலவகை நூற் பெயர்கள் .... vii-viii
4. முகவுரை .... viii-xx
5. நூலாசிரியர் வரலாறு .... xxi-xxvi
6. மணிமேகலையால் தெரிந்தஅரசர்களின்பெயர் முதலியன .... xxvii-xxviii
7. புத்த சரித்திரம், பௌத்ததருமம், பௌத்தசங்கம் 1 - 131
8. மணிமேகலைக் கதைச்சுருக்கம் .... 132 - 196
9. மணிமேகலை மூலமும் அரும்பதவுரை முதலியனவும் .... க - ௩௯0

பதிகம் .... க

க. விழாவறை காதை .... கக
உ. ஊரலருரைத்தகாதை க௯
௩. மலர்வனம் புக்ககாதை .... உஎ
ச. பளிக்கறை புக்ககாதை .... சஉ
ரு. மணிமேகலாதெய்வம் வந்துதோன்றியகாதை. ருச
சு. சக்கரவாளக் கோட்டமுரைத்தகாதை.... ௯௯
எ. துயிலெழுப்பிய காதை .... அரு
அ. மணிபல்லவத்துத் துயருற்ற காதை ௯௯
௯. பீடிகைகண்டு பிறப்புணர்ந்த காதை க0க
க0. மந்திரங் கொடுத்தகாதை க0எ
கக. பாத்திரம் பெற்றகாதை .... ககஎ

பக்கம்.

கஉ.	அறவணர்த் தொழுத காதை	கஙச
கங.	ஆபுத்திரன்றிறம் அறிவித்தகாதை	கசஉ
கச.	பாத்திரமரபு கூறிய காதை	கருஉ
கரு.	பாத்திரங்கொண்டு பிச்சைபுக்க காதை....	கசுங
கசு.	ஆதிரை பிச்சையிட்ட காதை	கசுசு
கஎ.	உலகவறவி புக்ககாதை	கஎஅ
கஅ.	உதயகுமரன் அம்பலம் புக்ககாதை	கஅசு
ககூ.	சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை	உ0உ
உ0.	உதயகுமரனைக் காஞ்சனன் வாளாலெறிந்த காதை	உகஎ
உக.	கந்திற்பாவை வருவதுரைத்த காதை	உஉசு
உஉ.	சிறைசெய் காதை	உச0
உங.	சிறைவிடுகாதை ...	உருங
உச.	ஆபுத்திரனுடைந்த காதை	உசுரு
உரு.	ஆபுத்திரனோடு மணிபல்லவமடைந்த காதை	உஎசு
உசு.	வஞ்சிமாநகர்புக்க காதை ...	உகூங
உஎ.	சமயக் கணக்கர் தந்திறங்கேட்டகாதை...	ங0ங
உஅ.	கச்சிமாநகர் புக்ககாதை ...	ஙஉசு
உகூ.	தவத்திறம்பூண்டு தருமங்கேட்டகாதை....	ஙசசு
ங0.	பவத்திறமறுகெனப் பாவைநோற்ற காதை	ஙசுரு

10. மணிமேகலைப் பாட்டுக்களின் முதற்குறிப்பகராதி ஙகூக
11. மணிமேகலைப் பிரயோகவிளக்கம் ஙகூஉ - ஙகூச
12. மணிமேகலையில் வந்துள்ள வேறுகதைகள் ஙகூரு - ஙகூசு
13. புத்ததேவனுடைய பெயர்கள் ஙகூஎ - ஙகூஅ
14. மறுப்புக்கள் .... ஙகூகூ - ச00
15. அரும்பத முதலியவற்றின் அகராதி ச0க - ருஉ0

இப்புத்தகத்தில் எடுத்துக் காட்டிய நூற்பெயர் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி.

அகநா - அகநானூறு.
அடியார் - அடியார்க்கு நல்லார்.
அறநெறி - அறநெறிச்சாரம்.
ஆசார - ஆசாரக்கோவை.
ஆதி - ஆதிபர்வம்.
இலிங்க - இலிங்க புராணம்.
இறை - இறையனாரகப்பொருள்.
எ-ம் - என்றும், எனவும்.
ஐங்குறு - ஐங்குறுநூறு.
ஒ - ஒப்பு.
கம்ப - கம்பராமாயணம்.
கல் - கல்லாடம்.
கலி - கலித்தொகை.
கலிங்க - கலிங்கத்துப் பரணி.
குண்டல - குண்டலகேசி.
குறிஞ்சி - குறிஞ்சிப்பாட்டு.
குறுந் - குறுந்தொகை.
கூர்ம - கூர்மபுராணம்.
சமய - சமய திவாகரம்.
சிலப் - சிலப்பதிகாரம்.
சிவ. சித்தி - சிவஞானசித்தியார்.
சிறப் - சிறப்புப் பாயிரம்.
சிறுபாண் - சிறுபாணாற்றுப்படை.
சீவக - சீவக சிந்தாமணி.
சூ - சூத்திரம்.
சூடாமணி - சூடாமணி நிகண்டு.
சூளா - சூளாமணி.
ஞானப் - ஞானப்பிரகாசர் உரை.
தக்க - தக்கயாகப்பரணி.
தஞ்சை - தஞ்சைவாணன் கோவை.
தமிழ்நா - தமிழ்நாவலர் சரிதை.
திரி - திரிகடுகம்.
திருச்சிற் - திருச்சிற்றம்பலக்கோவையார்.
திருஞான - திருஞான சம்பந்தர்.
திருவந் - திருவந்தாதி.
திருவா - திருவாசகம்.
திவ் - திவ்வியப் பிரபந்தம்.
தே - தேவாரம்.
தொல் - தொல்காப்பியம்.
ந - நச்சினார்க்கினியருரை
நள - நளவெண்பா.
நன். மயிலை - நன்னூல் மயிலைநாதருரை.
நன். வி - நன்னூல் விருத்தியுரை.
நாலடி - நாலடியார்.
நீல - நீலகேசி.
நெடுநல் - நெடுநல்வாடை.
ப - பக்கம்.
பட்டின (பட்டினப்) - பட்டினப்பாலை.
பதி - பதிகம்.
பதிற்றுப் - பதிற்றுப்பத்து.
பரி - பரிபாடல், பரிமேலழகருரை.
பரிமேல் - பரிமேலழகருரை.
பழ - பழமொழி.
பி - ம் - பிரதிபேதம்.
புறநா - புறநானூறு.
பு. வெ - புறப்பொருள் வெண்பாமாலை.
பெரிய - பெரியபுராணம்.
பெரியாழ்வார் - பெரியாழ்வார் திருமொழி.
பெருங் - பெருங்கதை.
பெரும்பாண் - பெரும்பாணாற்றுப்படை.
பேர் - பேராசிரியருரை.
பொருந - பொருநராற்றுப்படை.
மணி - மணிமேகலை.
மதுரை - மதுரைக்காஞ்சி.
மலைபடு - மலைபடுகடாம்.
மு - முற்றும்.
முருகு - திருமுருகாற்றுப்படை.
முல்லை - முல்லைப்பாட்டு.
மூத்ததிருப் - மூத்த திருப்பதிகம்.
மேருமந்தர - மேருமந்தரபுராணம்.
மேற் - மேற்கோள்.
வீர - வீரசோழியம்.

பிழையும் திருத்தமும்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
		பௌத்த தருமம்.	
90	27:	மணிமேகலைபிற்	மணிமேகலையிற்
		மணிமேகலை.	
௨௧	17	ஓ.	ஒ.
௩௫	17	யோக	யோகம்
௧௨௭	36	௮௨	௮௩
௨௫௧	1	லபதி	நீலபதி
௩௧௪	11	கருமம்	கரும்ம்
௪௫௮	38	817	815.

இப்புத்தகத்தில் எடுத்தாளப்பட்ட பலவகை நூற்பெயர்கள்.

[இவற்றிற் பெரும்பாலனவற்றைப் பற்றிய வரலாறுகளை அரும்பத முதலியவற்றின் அகராதியிற் காணலாகும்.]

அகநானூறு, அங்கம் ஆறு, அங்காகமம், அபிதர்மபிடகம், அபிதர் மார்த்த சங்கிரகம், அருணசிகை, அவதானகல்பலதை, அறநெறிச் சாரம், அன்னம்பட்டீயம், அநுமான ஸூத்திரம், ஆக்கினேய புராணம், ஆசாரக் கோவை, ஆசௌச சதகம், ஆசௌசநிர்ணயம், ஆத்திரேயம், ஆதித்திய பரியாயசூத்திரம், ஆபஸ்தம்ப கிருஹ்யம், ஆபஸ்தம்பம், ஆர்த்திப் பிரபந்தம், ஆரியபரியேஷண ஸூத்திரம், இசைத்தமிழ்நூல், இரகுவம்சம், இலக்கணக்கொத்து, இலக்கணவிளக்கம், இலகுஜாதகம், இலிங்கபுராணம், இறையனாரகப்பொருள், உதயணகுமார காவியம், உபதேசரத்னமாலை, உலோகவசனம், ஏலாதி, ஐங்குறுநூறு, ஐந்திரம், ஓவியநூல், கடகர்ப்பரகாவியம், கண்டபூஷணம், கம்பராமாயணம், கல்பசூத்திரங்கள், கல்லாடம், கலிங்கத்துப்பரணி, கலித்தொகை, காதம்பரி, கார்நாற்பது, காரைக்காலம்மையார் அற்புதத்திருவந்தாதி, ௸ திருவிரட்டைமணிமாலை, ௸ மூத்ததிருப்பதிகம், காவ்யகல்பலதா, காவேரிமாகாத்மியம், கிராதார்ஜுனீயம், கிருதகோடி, கிருஹ்யரத்நம், கிருஷ்ண யஜுர்வேதப்ராஹ்மணம், கிழக்குத்திசைப்பரிசுத்த புத்தகங் கள், கீதகோவிந்தம், கீதாதாத்பர்யம், குண்டலகேசி, குமாரசம்பவம், குல்லூகபட்டீயம், குலோத்துங்கசோழனுலா, குவலயானந்தம், குறிஞ் சிப்பாட்டு, குறுந்தொகை, கூர்மபுராணம், கோகளசிகை, கோயிற்றிருப் பண்ணியர் திருவிருத்தம், கோவிந்தராஜீயம், கௌதமதர்மசூத்திரங்கள், சப்தகௌஸ்துபம், சாகுந்தலம், சித்தாந்தத்தொகை, சிலப்பதிகாரம், சிவஞானசித்தியார், சிவஞானபோதம், சிவபோகசாரம், சிறுபாணாற்றுப் படை, சீவகசிந்தாமணி, சூடாமணி நிகண்டு, சூளாமணி, ஞானசாரம், தக்கயாகப்பரணி, தசகுமார சரிதம், தசநிர்ணயம், தஞ்சைவாணன் கோவை, தத்துவபோதினி, தத்வத்ரயம், தமிழ்நாவலர் சரிதை, தருக்க சங்கிரகம், தார்மிகசூத்திரம், தானபாரமிதை, திரிகடுகம், திருக்குறள், திருச்சிற்றம்பலக்கோவையார், திருஞானசம்பந்தர் திருக்கலம்பகம், ௸ திருச்சண்பை விருத்தம், ௸ திருத்தொகை, ௸ திருமும்மணிக் கோவை, ௸ திருவந்தாதி, ௸ திருவுலாமாலை, திருத்தணிகையுலா, திருத்தொண்டர் திருவந்தாதி, திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் திருவிரட்டைமணிமாலை, திருநாவுக்கரசர் திருவேகாதசமாலை, திருப் பதிகம், திருப்பல்லாண்டு, திருப்பெருந்துறைப்புராணம், திருமுரு

காற்றுப்படை, திருவள்ளுவமாலை, திருவாசகம், திருவாதவூரடிகள் புராணம், திருவாய்மொழிநூற்றந்தாதி, திருவாராதனக்கிரமம், திருவிசைப்பா, திருவெங்கைக்கோவை, திருவெண்காட்டுப் புராணம், திவ்யப்பிரபந்தம், திவாகரம், தீர்க்கநிகாயம், தேவகோச நிகண்டு, தேவாரம், தொல்காப்பியம், நரிவிருத்தம், நவகதிர், நளவெண்பா, நற்றிணை, நன்னூல், நாகானந்தம், நாமலிங்கானுசாஸனம், நாரதசிக்ஷை, நாராயணீயம், நாலடியார், நாற்கவிராசநம்பியகப்பொருள், நீதிப்ரதீபம், நீலகேசி, நூற்றந்தாதி, நெடுநல்வாடை, நைஷதம், ப்ரபஞ்சஹ்ருதயம், ப்ரமேயஸாரம், ப்ரஜ்ஞாபாரமிதை, பகுசுருதியாகமம், பட்டிகாவியம், பட்டினப்பாலை, பதிற்றுப்பத்து, பரதநூல், பரமததிமிரபானு, பரிபாடல், பழமொழி, பன்னிருபடலம், பாகசாத்திரம், பாணினிசிக்ஷை, பாணினீயவியாகரணம், பாரத்துவாசம், பாரத்துவாஜசிக்ஷை, பிங்கலம், பிதிர்மேதஸாரம், பிரதாபருத்திரீயம், பிரயோகவிவேகம், பிராகிருதப்ரகாசம், பிராதிமுக்தக வினய விநிச்சயம், பிராதிமோக்ஷம், பிருஹத்கதை, பிருஹத்ஜாதகம், பிருஹத்ஸம்ஹிதை, பிருஹதாரணியகோபநிஷத், புத்தசரித காவ்யம், புத்தஜாதககதை, புறத்திரட்டு, புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, பூர்வாகமம், பெரியபுராணம், பெரியாழ்வார் திருமொழி, பெருங்கதை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, போதாயன தர்மசூத்திரம், போதாயனீயம், போதிஸத்துவாவதானகல்பலதை, மகாகண்டகம், மகாபரிநிர்வாணசூத்திரம், மகாவம்சம், மகாவர்க்கம், மத்தியமநிகாயம், மதிவாணர் நாடகத்தமிழ்நூல், மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம், மனுஸ்மிருதி, மனோரமா, மஹாபதானசூத்திரம், மஹாவிஹ்மநாதசூத்திரம், மாகம், மாளவிகாக்கினிமித்திரீயம், மீமாம்ஸா சாஸ்திரம், முப்பத்தாறாயிரப்படி, முமுக்ஷுப்படி, முல்லைப்பாட்டு, மேகஸந்தேசம், மேதாதீயம், மேருமந்தரபுராணம், மைத்ராயணீ உபநிஷதம், யதிராஜவிம்சதி, யாப்பருங்கலவிருத்தி, ரத்நாபரணம், வங்கர்கோவை, வாராகம், வான்மீகராமாயணம், விக்கிரமசோழனுலா, விக்கிரமோர்வசீயம், விம்பசாரகதை, வியாசசிக்ஷை, வியாசபாரதம், வினயபிடகம், வீரசோழியம், வேதாலபஞ்சவிம்சதி, ஜப்பான்தேசத்துப் பௌத்தநூல்கள், ஸ்ரீஆதிவண்சடகோபஸ்வாமிவைபவம், ஸ்ரீபுராணம், ஸ்ரீவசனபூஷணம், ஸ்மிருதிரத்நாகரம், ஸ்ருகாலவாதசூத்திரம், ஸப்தகாண்டம், ஸம்யக் திருஷ்டிசூத்திராந்தம், ஸம்யுக்தநிகாயம், ஸர்வஸம்மதசிக்ஷை, ஸாரஸங்கிரகம், ஸித்தாந்தகௌமுதி, ஸித்தாந்தசிக்ஷை, ஸுதீவிலோசனம், ஸூத்திரபிடகம்.

உ

கணபதிதுணை.

முகவுரை.

அகவல்.

"நின்றே ஞான்கி றென்றுகைம் மிகூஉம்
களிறுவளர் பெருங்கா டாயினும்
ஒளிபெரிது சிறந்தன் றளியவென் னெஞ்சே."

வெண்பா.

"காலையு மாலையுங் கைகூப்பிக் காறொழுதால்
மேலை வினையெல்லாங் கீழவாம்—கோலக்
கருமான்றோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தார்ப்
பெருமானைச் சிற்றம் பலத்து."

கட்டுரை.

உலகமார் பன்னூற் றிலகமா யிலகி
நவையறு மொன்பான் சுவைபுணர்ந் தினிமைத்
திரட்டுறு * மைந்து பொருட்டொடர் நிலைகளுள்
அமிழ்தினிற் சிறந்த தமிழெனு மடந்தை
அணிமே கலையா மணிமே கலைதான்,
நச்சும் பெருமை முச்சங் கத்துட்
கறைமிடற் றிறைவ னிறையனா ரெனும்பெயர்
வாய்ந்தே † புலம்பல வாய்ந்த சங்கத்
தொல்லிசை பலவுறு நல்லிசைப் புலவருட்
சீலமார் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனாரென்னும்

புலவர்பெருமானால் அருளிச் செய்யப்பட்டது; இளம்பூரணர், பேராசிரியர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்குநல்லார், சமயதிவாகரவாமன முனிவர், இலக்கண விளக்கவுரையாசிரியர், இலக்கணக்கொத்து உரையாசிரியர், திருவொற்றியூர் ஞானப்பிரகாசர், மயிலைநாதர், சங்கரநமச்சிவாயர்

---

* ஐந்து பொருட்டொடர்நிலைகளாவன:—சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதியென்பன.

† புலம் - நூல்; இதனை, "புலந்தொகுத் தோனே" என்னும் தொல்காப்பியப் பாயிரத்தாலுணர்க.

முதலிய உரையாசிரியர்களால் எடுத்துக்காட்டப்பட்டுள்ள பிரமாணநூல்களுள் ஒன்று; தன்மைநவிற்சியணியும் பாவிகவணியும் இன்னோரன்ன பிறவணிகளுமே ஆங்காங்கு அமைந்திருத்தலால், தன்னுட் கூறப்பட்டுள்ள மலை கடல் தீவு வனம் நாடு நகர் ஆறு முதலியவற்றையும் பிறவற்றையும் நேரில் அறிந்துகொண்டாற்போலப் படிப்பவர்களுடைய மனத்திற்கு நன்றாகப் புலப்படச் செய்யும் நலப்பாடுற்றது; இக்காலத்தில் வேறொருவகையாலும் விளங்காதனவாகிய சில தெய்வங்களுடைய பெயர்களையும், அத்தெய்வங்களை வழிபடுமுறைமையையும், சிலசாதியாரையும், அவர்களுடைய நடை முதலியவற்றையும், சில நகரங்கள் தீவுகள் மலைகள் வனங்கள் கோட்டங்கள் அறச்சாலைகள் மன்றங்கள் முதலியவற்றையும், அவைகள் இன்னஇன்ன வண்ணமாக இருந்தனவென்பதையும், இன்ன இன்ன சமயங்கள் இன்ன இன்ன இடத்திற் பரவியிருந்தனவென்பதையும், அவற்றின் இலக்கணங்களையும், சில அரசர் சில முனிவர் முதலியோருடைய சரித்திரங்களையும், பிறவற்றையும் இந்நூலால் விளங்க அறிந்துகொள்ளலாம்; இதன்பாலுள்ள சொல்நுட்பம் பொருள்நுட்பங்கள் நூலளவேயாகிய நுண்ணறிவிற்கேற்ப எவ்விடத்தும் காணப்படுமென்று கூறுவர்; இதனை,

> "மந்தா கினியணி வேணிப் பிரான்வெங்கை மன்னவநீ
> கொந்தார் குழன்மணி மேகலை நூனுட்பங் கொள்வதெங்ஙன்
> சிந்தா மணியுந் திருக்கோ வையுமெழு திக்கொளினும்
> நந்தா வுரையை யெழுதலெவ் வாறு நவின்றருளே"

என்று கவிஞர் பெருமானாகிய துறைமங்கலம் ஸ்ரீ சிவப்பிரகாச முனிவர் அருளிச்செய்த வெங்கைக்கோவைச் செய்யுளாலுணர்க. பின்னும், "சிந்தா மணியாஞ் சிலப்பதிகா ரம்படைத்தான், கந்தா மணிமே கலைபுனைந்தான்" (திருத்தணிகையுலா) என்று இந்நூற் பெயரையும், "மாதவி பெற்ற மணிமேகலைநம்மை வாழ்விப்பதே" (அம்பிகாபதிகோவை) என இக்காப்பியத் தலைவியாகிய மணிமேகலையின் பெயரையும் தத்தம் நூல்களில் தொனியில் அமைத்து வித்துவான்கள் பாடியிருப்பதும் இதன் பெருமையையும் மணிமேகலையின் பெருமையையும் புலப்படுத்தும்.

சிலப்பதிகாரக் கதைத்தலைவனான கோவலன் மகளாகிய மணிமேகலையென்பவளுடைய சரித்திரமாதலின், இந்நூல் சிலப்பதிகாரத்தோடு கதைத்தொடர்புடையது.

இதில், சோழவளநாட்டுள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் பெருங்குடி வாணிகர்மரபில் உதித்த கோவலனுக்கு மாதவியென்னும் நாடகக்கணிகையிடந்தோன்றிய மணிமேகலையென்பவள் தன்னுடைய தாய் கோவலன் மதுரையில் வெட்டுண்டிறந்தது கேட்டுப் பரத்தைமைத் தொழிலை வெறுத்துப் பௌத்தமுனிவராகிய அறவணவடிகளைச் சரணடைந்து வாய்மைநான்கும், சீலமைந்தும் உபதேசிக்கப்பெற்றுப் பௌத்தசங்கத்திருத்தலையறிந்து அவளோடு பழகிச் சிறுபிராயத்திலேதானே பௌத்த தருமங்களை அறிதற்கேற்ற உணர்ச்சியுற்று ஒருநாள் தாயின் கட்டளைப்படிச் சுதமதியுடன் பூக்கொய்தற்கு மலர்வனஞ்சென்று தன்னை விரும்பிவந்த உதயகுமரனுக்கு அஞ்சி அங்குள்ள பளிக்கறையில் ஒளித்திருந்து அவன் போனபின்பு வெளியேவந்து தன் குலதேவதையாகிய மணிமேகலாதெய்வத்தால் மணிபல்லவத் தீவிற்குக் கொண்டுபோகப்பட்டு அத்தீவிலுள்ள புத்தபீடிகைக் காட்சியால் தன்னுடைய பழம்பிறப்பில் நிகழ்ந்த செய்திகளையறிந்து அப்பால் அத்தெய்வம் அறிவுறுத்திய மூன்று மந்திரங்களையுணர்ந்து முற்பிறப்பிற் கணவனாயிருந்த இராகுலனென்பவனே இப்பிறப்பில் உதயகுமரனாக வந்தானென்று அத்தெய்வம் கூறக்கேட்டு அப்பீடிகையின் காவற்றெய்வமாகிய தீவதிலகையினுதவியாற் கோமுகியென்னும் பொய்கையையடைந்து அதிலிருந்த அமுதசுரபியென்னும் அக்ஷயபாத்திரம் தன்கையில் வரப்பெற்று பின்பு காவிரிப்பூம்பட்டினத்தைச் சார்ந்து அறவணவடிகளையடைந்து ஆபுத்திரன் வரலாற்றையும் அவனுக்கு மதுரையிற் சிந்தாதேவி அமுதசுரபியைக் கொடுத்ததையும் பசித்த உயிர்களுக்கு உணவளித்தலே எல்லாவற்றினும் மேலான தருமமென்பதையும் அவர் கூறக்கேட்டு அவர் கூறியவாறே உணவளித்தற்பொருட்டு அமுதசுரபியைக் கையிலேந்திக்கொண்டு வீதியிற் சென்று சிறந்த பத்தினியாகிய ஆதிரையென்பவள் முதலிற் பிச்சையிடப்பெற்றுக் காயசண்டிகையென்னும் வித்தியாதரமங்கையின் தீராப்பசியை அப்பாத்திரத்திலிருந்தெடுத்துதவிய ஒருபிடியமுதாற்போக்கி அப்பாத்திரத்தில் மேன்மேலும் அமுதுவளரப்பெற்று அந்நகரத்துள்ள உலகவறவியென்னும் அம்பலத்தையடைந்து அங்கேவந்த எல்லாவுயிர்களின் பசியையும்போக்கி அவ்வறஞ்செய்தலையே நித்த நியமமாகப் பூண்டு தன்னை விரும்பி

வந்த உதயகுமரன் அறிந்து கொள்ளாவண்ணம் மேற்கூறிய காயசண்டிகையின் வடிவங்கொண்டு அந்நகரத்துள்ள சிறைச்சாலையையடைந்து அங்கே பசித்திருப்பவர்களுக்கெல்லாம் உணவளித்து அதனை அறச்சாலையாக்கி, தன்னை மீட்டும் விடாது தொடர்ந்த உதயகுமரன் காயசண்டிகையின் கணவனால் வெட்டுண்டுவீழ்ந்தது கண்டு மனங்கலங்கிப் பின்பு கந்திற்பாவைத்தெய்வத்தின் மொழிகளால் தேறுதலுற்று உதயகுமரனுடைய தந்தையாகிய மாவண்கிள்ளியாற் சிறையில் வைக்கப்பட்டு, இராசமாதேவியின் முயற்சியால் அச்சிறையினின்று நீங்கி நாகபுரத்தை யடைந்து அதன் தலைவனான புண்ணியராசனோடு மணிபல்லவஞ்சார்ந்து புத்தபீடிகையைக்காட்டி அதனால் அவனது பழம்பிறப்பை அவனுக்கறிவித்து, காவிரிப்பூம்பட்டினம் கடல் கொள்ளப்பட்ட செய்தியைத் தீவதிலகையாலறிந்துகொண்டு அப்பாற்சென்று வஞ்சிநகர்ப்புறத்தேயுள்ள பத்தினிக்கடவுளாகிய கண்ணகியின் கோயிலையடைந்து தரிசித்து, தன்னுடைய எதிர்காலச் செய்திகளைக் கண்ணகித்தெய்வங்கூற அறிந்துசென்று ஆங்கிருந்த சமயவாதிகள் பலரையுஞ் சார்ந்து அவரவர்களுடைய கொள்கைகளைத் தனித்தனியே வினவியுணர்ந்து, அந்நகரில் தவம்புரிந்து கொண்டிருந்த மாசாத்துவானைக்கண்டு அவன் மொழிந்த செய்திகள் பலவற்றையுங் கேட்டு அவன் கூறியவாறு காஞ்சிநகரம்போய், அந்நகரிற் பசியால்வருந்தி வாடிய எல்லாவுயிர்களுக்கும் உணவளித்து, அங்கேவந்த அறவணவடிகளைத் தரிசித்து அவர் உபதேசித்த அறமொழிகளைக்கேட்டு, பின் முத்திபெறுதற்பொருட்டு அந்நகரிலேயே தவஞ்செய்து கொண்டிருந்தாளென்னுங் கதை விரித்துக் கூறப்படும்.

இந்நூல், பௌத்த சமயச்சார்பினளாகிய மணிமேகலையின் சரித்திரமாதலின் இதில் அச்சமயக் கொள்கைகளைப் பரக்கக் காணலாம்.

பற்பல தருமங்கள் இதிற் சொல்லப்பட்டுள்ளன ; அவற்றுள் மிகுதியாகக் காணப்படுவது ஒருவன் மனமொழிமெய்கள் தூயனாகி எல்லாவுயிர்களிடத்தும் எப்பொழுதும் அருளுடையனாதல் வேண்டுமென்பதே.

மணிமேகலை யென்பவளுடைய சரித்திரத்தை விரித்துக்கூறுதலின், இஃது இப்பெயர் பெற்றதென்பர். நீலகேசி, புத்தவாதச் சருக்கத்தில், "குயலாகுயலம்" என்றுஞ் செய்யுளுரையில்,

* "தீவினையென்பது.......................பிரமரு மாகிளன்பது மணிமேகலைத்துறவாதலின், இதனால் ஸம்ஸ்காரமறிந்துகொள்க" எனச் சமயதிவாகரவாமன முனிவரும், சிவஞானசித்தியார் பரபக்கத்திற் சௌத்திராந்திகன் மதத்துள்ள "ஒங்கிய வுருவம்" என்னுந் திருவிருத்தத்தின் உரையில், *"தீவினையென்பது.......................பிரமரு மாகிளன்பது மணிமேகலை துறவாதலின், இதனால் ஸம்ஸ்கார மறிந்துகொள்க" எனத் திருவோற்றியூர் ஞானப்பிரகாசரும் எழுதியிருத்தலால், இந்நூல் மணிமேகலைதுறவென்றும் அக்காலத்தில் வழங்கப்பட்டு வந்ததென்று தெரிகின்றது; "மணிமே கலைதுற, வாறைம் பாட்டினு ளறிய வைத்தனன்" என்று பதிகத்திறுதியிற் கூறப்பட்டிருத்தலும் இதற்கு இப்பெயருண்டென்பதை வலியுறுத்தும்.

இந்நூல், அம்மைமுதலாகிய வனப்பெட்டினுள் இயைபின் பாற்படும்; தொல்காப்பியச் செய்யுளியலின் கண்ணே, 'அம்மை முதலியவனப்பெட்டும் தொடர்நிலைச் செய்யுட்கிலக்கணம்' என்று கூறுகின்றுழி, † "ஞகாரை முதலா ளகார வீற்றுப், புள்ளி யிறுதி யியைபெனப் படுமே" என்னுஞ் சூத்திரவுரையில், 'ஞணநமன யரலவழளவென்னும் பதினொருபுள்ளியுள் ஒன்றனை ஈறாகவமைத்துச் செய்யுளைப் பொருட்டொடராகவும் சொற்றொடராகவுஞ் செய்வது இயைபெனப்படும்; னகாரவீற்றானிற்றுப் பொருளுமியைந்து சொல்லுமியைந்து வந்தன, சீத்தலைச்சாத்தனாராற் செய்யப்பட்ட மணிமேகலையும், கொங்குவேளிராற் செய்யப்பட்ட உதயணன்கதையும் போல்வன' என்று பேராசிரியரும் ஆசிரியர் நச்சினார்க்கினியரும் எழுதியிருத்தல் காண்க; இந்நூலிற் சொல்லியையும் பொருளியையும் அமைந்திருத்தல் அறிதற்குரியது.

இதிற் கூறப்பட்டுள்ள சரித்திரம்நிகழ்ந்தகாலமும் இந்நூலாசிரியர் காலமும் ஒன்றென்றும், இஃது அவரால் தமிழிலேதான் முதலிற் பாடப்பட்டதென்றும், சிலப்பதிகாரத்தாலும் அதன் பதிகத் தொடக்கத்தில் அடியார்க்கு நல்லாரெழுதிய உரைநடையாலும், இந்நூற் பதிகத்தாலும் விளங்குகின்றமையின், இது வேறு மொழியிலிருந்து வந்ததென்று சொல்லுவதற்கிடமில்லை.

---

* மணிமேகலை, உ௪ : ௧௨௯ - ௧௩௧, ௩௦ : ௬௭ - ௮௦.

† தொல்காப்பியம், செய்யுளியல், சூ. உ௪௦.

கதையைத் தொகுத்துக் கூறுவதும் பதிகமென்று வழங்கப்படுவதுமாகிய கதைபொதிபாட்டை இது முதலிற்பெற்று விழாவறை காதை முதற் பவத்திறமறுகெனப்பாவைநோற்றகாதையிறுதியாகவுள்ள முப்பது பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது; காதை - பாட்டு; நீலகேசி, குண்டலகேசிவாதச்சருக்கம், ௨௭-ஆம் செய்யுளுரையில், "முன்றான், பெருமைக்கணின்றான் என்னுங் காதையை அனுவதித்தவாறு" எனவும், ௨௮ - ஆம் செய்யுளுரையில், "பிடகம் என்னுங்காதை சொன்னவாறு" எனவும், மொக்கலவாதச்சருக்கம், ௨௫ - ஆம் செய்யுளுரையில், "தன்புறத்த என்னுங்காதை சொல்லப்பட்டது" எனவும், ௪0 - ஆம் செய்யுளுரையில், "எழும்பைத்தி என்னுங்காதை" எனவும், ௪௧ - ஆம் செய்யுளுரையில், "காவினாற் சுமந்துய்ப்பான் என்னுங்காதை" எனவும், ௪௨ - ஆம் செய்யுளுரையில், "மக்கட் பண்பழியாது என்னுங்காதை" எனவும், அந்நூலுரையாசிரியர் எழுதியிருத்தலானும், 'காதைகரப்பு' என்னும் ஒருவகைச் சித்திரகவிப்பெயரானும் காதையென்பதற்குப் பாட்டென்று பொருள் கொள்ளுதல் துணியப்படும்; "ஆறைம் பாட்டினு ளறிய வைத்தனன்" எனப் பதிகத்திறுதியிற் கூறப்பட்டிருத்தலும், மிதிலைப்பட்டித் திருச்சிற்றம்பலக்கவிராயரவர்கள் வீட்டிற்கிடைத்த பிரதியில் இந்நூற்பகுதிகளின் பெயர்கள்யாவும் பாட்டென்றே இருப்பதும் இதனை வற்புறுத்தும்; காதையென்பதை இசையோடு பாடப்படுவதாகிய செய்யுளென்று பொருள்படுகிற 'காதா' (ഗாயா) என்னும் வடசொற்சிதைவென்று கொண்டால் யாதோரிழுக்குமின்றென்று வடமொழியாளர் கூறுவர்; இது நிற்க;

பலவருடங்களுக்குமுன் பழைய தமிழ்ப் புத்தகங்களைத் தேடும்வண்ணம் இத்தமிழ்நாட்டினுள்ளே செல்லுதற்குரிய பல ஊர்களுக்குச் சென்று அங்கங்குள்ள பரம்பரைத் தமிழ்ப்பண்டிதர்களுடைய வீடுகளில் இருந்த கையெழுத்துப் பிரதிகளைப் பரிசோதித்துப் பார்த்தகாலங்களிலெல்லாம் எனக்கு மணிமேகலை மூலப்பிரதிகள்மட்டும் கிடைத்தனவேயன்றி உரைப்பிரதி யாண்டும் கிடைத்திலது. சென்னை, தஞ்சை முதலிய நகரங்களிலுள்ள பழைய கையெழுத்துப் புத்தகசாலைகளும் பார்க்கப்பட்டன; அங்கும் கிடைக்கவில்லை. வெளிநாட்டிலுள்ள நண்பர்கள் பலரைப் பத்திரிகைவாயிலாக இதைப்பற்றி வினவினேன்; அங்ஙனம்

வினவப் பட்டவர்களுள், யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ சிற். கைலாசபிள்ளையவர்கள் தமது கையாலெழுதிய மூலப்பிரதியொன்றை அன்புடன் அனுப்பினார்கள்; பின்பு பாரிஸ்நகரத்துள்ள புரொபஸர் ஜ-ஊலியன்வின்ஸன் என்பவர், 'இந்நகரத்துக் கையெழுத்துப் புத்தகசாலையில் மணிமேகலை மூலப்பிரதி ஒன்றேயுள்ளது' என்று தெரிவித்து மாதிரிகைக்காக அதிலிருந்து பதிகத்தை மட்டும் எழுதி யனுப்பினார்; மற்றவர்கள், 'யாதொன்றுங் கிடைக்கவில்லை' என்று விடையளித்துவிட்டார்கள். கிடைத்த பிரதிகளை வைத்துக்கொண்டு ஒப்புநோக்கி ஆராய்ந்துவந்தபொழுது பிரதிகளில் எழுதுவோர்கள் இயல்பாகவே செய்வித்திருந்த வேறுபாடுகளாலும், இது பௌத்தசமயக் காப்பியமாதலால் அச்சமயக் கொள்கைகளைக் கூறும் பாகங்களையெல்லாம் எளிதிற்றெரிந்துகொள்ளல் கூடாமையாலும், அவற்றை ஒழுங்காகப் புலப்படுத்தும் பழைய * தமிழ்ப் பௌத்தநூல்கள் பண்டைக்காலத்தில் இருந்தும் பாதுகாப்போரின்மையால் பிற்காலத்தில் இறந்தொழிந்தமையாலும், அக்கொள்கைகளை விளங்கச் சொல்லுவோர் அகப்படாமையாலும், பிழைகளைப் பிழைகளென்று நிச்சயித்துக் களைந்து திருத்தமான பாடங்களைத் தெரிந்துகொள்ளுதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியும் கழிந்தகாலமும் அடைந்த வருத்தமும் அளவுபடுவனவல்ல.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய சைவசமயாசாரியர்கள் அருளிச்செய்த தேவாரங்களிலுள்ள பௌத்தசமய மறுப்புக்களும், பெரியபுராண முதலியவற்றுட் கூறப்பட்டுள்ள அச்சமயக் கொள்கைகளும், மறுப்பும், சிவஞானசித்தியார் பரபக்கத்துள்ள சௌத்திராந்திகன்மத முதலியனவும், அவற்றிற்குத் திருவொற்றியூர் ஞானப்பிரகாசரெழுதியவுரையும், அவ்வுரையிலுள்ள சில உதாரணச் செய்யுட்களும், மறுப்புக்களும், நீலகேசியும் அதனுரையும், அவ்வுரையில் மேற்கோள்களாக எடுத்துக்காட்டப்பட்டுள்ள

* பண்டைக்காலத்துப் பௌத்தநூல்களென்று தெரிந்தவை குண்டலகேசி, சித்தாந்தத்தொகை, திருப்பதிகம், விம்பசாரகதை யென்பன; அவற்றிலிருந்து சில பாடல்களே நீலகேசியுரை முதலியவற்றில் நூற்பெயர்களோடெழுதப்பட்டுள்ளன; தக்கயாகப்பரணியின் உரையால் கவிராசராசரென்னும் பெயரினராகிய புலவரொருவர் பௌத்தநூலொன்று செய்துள்ளாரென்று தெரிந்தது.

சில கவிகளும், வீரசோழியம் யாப்புப்படலவுரையிலுள்ள சில உதாரணப் பாடல்களும், இன்னுஞ்சிலவும் பௌத்தசமயமரபுகளிற் சிலவற்றையும் அச்சமயத்தோர் பேசிவந்த சில தமிழ்ப்பரிபாஷைகளையும் பிறவற்றையும் ஒருவாறு விளங்கச்செய்தன; செய்தும் முன்பிருந்த ஐயங்கள் முற்றுந் தீராமையாற் பின்னும் அறிந்தோர்பாற் சென்றும் தூரதேசத்தார்க்குக் கடிதமெழுதியும் விசாரித்தலையே மேற்கொண்டிருந்தேன்.

இப்படி இருக்கையில், ஹிந்துதேசத்து வித்தைகளிலும் ஆங்கிலேய வித்தைகளிலும் மிகப்பயிற்சியடைந்து விளங்கிவரும் சென்னை இராசதானிக் கலாசாலையில் ஸம்ஸ்கிருத போதகாசிரியராக இருந்தவருமான ராவ்பகதூர் மளூர் ஸ்ரீ அரங்காசாரியரவர்கள், எம். ஏ., பௌத்தசமய நூல்களிலும் பாண்டித்தியமுள்ளவர்களென்பதை அறிந்துகொண்டு உரியகாலங்களில் அவர்களிடத்துச் சென்று வினவிவந்தேன்; வருகையில், ஒவ்வோரமயத்தும் தடையின்றி உடனுடன் அவர்கள் கூறியவிடைகளால் அதற்குமுன்பு எனக்கிருந்த ஐயங்களிற் பெரும்பாலன நீங்கின; நீங்கவே இந்நூலைப் பரிசோதித்தலில் என் மனம் ஊக்கம்பெற்றது. அவர்களுடைய பேருதவி இல்லையாயின், மணிமேகலையில் வந்துள்ள துடிதலோகம், பாரமிதை, அருபப்பிரமர், உருபப்பிரமர் முதலிய சொற்களுக்குக்கூட உள்ளவாறே பொருள்கொள்ளுதல் எனக்கு மிகஅரிதாகும்; தமக்குரிய அரியவேலைகள் அநேகமிருந்தும் இப்பழைய தமிழ்நூல் வெளியேவந்து உலாவுதலையே பயனாகக்கருதி, யான் செல்லுங்காலந்தோறும் சிறிதும் சலிப்பின்றி அவர்கள் செய்துவந்த பேருதவி ஒருபொழுதும் மறக்கற்பாலதன்று; அவர்களுடைய பேருதவியாலேயே பௌத்தமதத்துள் மும்மணியென்று வழங்கும் புத்தசரித்திரம் பௌத்ததர்மம் பௌத்த சங்கம் என்பவை எழுதப்பெற்றன. அம்மகோபகாரி விஷயத்தில் இத்தமிழ்நாட்டினேமாகிய நாமெல்லாம் நன்றிபாராட்டுதற்கு உரியவர்களாக இருக்கிறோம்.

எவ்விடத்தும் இந்நூலுக்கு உரை அகப்படாமையாலும், உரை முன்பு உண்டென்று ஒருவாற்றானும் விளங்காமையாலும் இனி மூலத்தைமட்டுமாவது வெளிப்படுத்தவேண்டுமென்று நிச்சயித்துப் பதிப்பிக்கத் தொடங்கியபொழுது, தமிழ்ப்பாஷாபிமானிகளாகிய அன்பர்களிற் சிலர், 'உரையெழுதியே இதனை

வெளிப்படுத்தவேண்டும்' என்று வற்புறுத்திக் கூறினமையின், அவர்கள் சொல்லை மறுத்தற்கு அஞ்சி, இது புலவர்திலகர்கள் செய்தற்குரிய அரிய காரியமென்று கருதாமல், * "ஆங்கவன் புகழ்ந்த நாட்டை யன்பெனு நறவ மாந்தி, மூங்கையான் பேச லுற்றா னென்னயான் மொழிய லுற்றேன்" என்று பெரியோர்கூறியதற்கு இலக்கியமாக, தக்க நூலாராய்ச்சியும் எண்ணியவற்றைச் சுவை பயக்கும்படி நல்லநடையில் விளங்கவெழுதும் வன்மையுமில்லாத யான், † "மணிமேகலை நூனுட்பங் கொள்வதெங்ஙன்" என்று ஆன்றோராற் பாராட்டப்பட்டுள்ள இந்நூற்கு அரும்பதவுரை யென்ற ஏதோவொன்றை எழுதத் தொடங்கினேன்.

மொழிகளுட் பெரும்பாலனவற்றிற்குப் பொருள் விளங்கிக் கிடக்கின்றமையின் அரியவற்றிற்குமட்டுமே பொருள்செய்தும், ஆங்காங்குள்ள வாக்கியங்களை ஒத்தவைகளாக இந்த நூலிலும் வேறு நூலிலும் காணப்பட்டவாக்கியங்களை அவ்வவ்விடத்தில் தந்துகாட்டி அவற்றினிடங்களை உடனுடன் விளங்கச்செய்தும், பொருள்விளங்காத இடங்களில் (?) இக்கேள்விக்குறியை அமைத்தும், கையெழுத்துப் பிரதிகளிற்கண்ட பாடபேதங்களை எடுத்துக்காட்டி அவற்றுள் இன்றியமையாத சிலவற்றிற்குமட்டுமே பொருளைப் புலப்படுத்தியும், எல்லோருக்கும் எளிதிற் பொருள் விளங்குதற்பொருட்டு வடசொற்களைப் பெரும்பாலும் விரவுவித்தும், சிலவற்றிற்குச் சங்கமருவிய நூல்களிலிருந்து மேற்கோள்கள் இப்பொழுது அகப்படாமையால் அவற்றை விளக்குதற்குப் பிற்காலத்து நூல்களிலிருந்து பிரயோகங்களை எடுத்துக்காட்டியும் ஒருவாறு அதனை எழுதிமுடித்தேன்.

‡ "சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் பயின்று" என்று கம்பநாடரும், § "செல்லாறு தோறும் பொருளாழ்ந்து தெளிந்து" எனப் பரஞ்சோதி முனிவரும் அருளிச்செய்த திருவாக்குக்களுக்கு இலக்காகவிளங்குங் கவிகளினுடைய வரிசையிலே

---

* கம்பராமாயணம், நாட்டுப்படலம், ௧.

† திருவெங்கைக்கோவை.

‡ கம்பராமாயணம், சூர்ப்பநகைப்படலம், ௧.

§ திருவிளையாடற்புராணம், அன்னக்குழியும் வையையுமழைத்த படலம், ௨௨.

நிற்கும் தகுதியுள்ள பாட்டுக்களையுடைய இந்நூலுக்கு யானா அரும்
பதவுரை எழுதுபவன்? இதுசெய்தற்குத் துணிந்த எனது தறு
கண்மையைப் பொறுத்தருளும்படி இத்தமிழுலகத்தை மிகவும்
வேண்டுகிறேன்.

பழைய செந்தமிழ்நூற் பரிபாலகரும் இவ்வாராய்ச்சியால்
எனக்கு மனச்சோர்வுண்டாகாதவண்ணம் அடிக்கடி ஊக்கமளித்து
வந்தவரும் கொழும்புநகரத்துப் பிரபுசிகாமணியுமாகிய கௌரவம்
பொருந்திய ஸ்ரீ. பொ. குமாரசாமி முதலியாரவர்கள், இந்நூலிற்
சிற்சில விடங்களில் முன்னம் நிகழ்ந்த ஐயங்களை நீக்கிக்கொள்ளு
தற்பொருட்டு யான் கேட்ட வினாக்களுக்கு இலங்கையிலுள்ள
பௌத்த வித்தியோதயபாடசாலைத் தலைவராகிய ஸ்ரீஸுமங்களர
வர்களைக்கொண்டு விடைகளெழுதுவித்து அனுப்பிப் பேருதவி
செய்து வந்தார்கள்.

எனக்கு அக்காலத்தில் வடமொழிப் பிரயோகங்களில் உண்
டாகிய ஐயங்களை உடனுடன் போக்கியருளிய பெருகவாழ்ந்தான்
ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய அரங்காசாரியாரவர்கள், திருமலை
ஈச்சம்பாடி சதாவதானம் ஸ்ரீ ஸ்ரீனிவாஸாசாரியரவர்கள் என்
னும் இருவர்களுடைய நினைவும் என்றும் என் நெஞ்சினின்றும்
நீங்கவில்லை.

மணிமேகலையின் முதற்பதிப்பு 1898-ஆம் வருஷத்திலும்
இரண்டாம்பதிப்பு 1921-ஆம் வருஷத்திலும் வெளியிடப்பெற்
றன. முதற் பதிப்பிற்கு உதவியாகக் கிடைத்த கையெழுத்துப்
பிரதிகள்:

1.	திருவாவடுதுறையாதீனத்துப்	பிரதி	க.
2.	எட்டயபுரம் பெரிய அரண்மனைப்	,,	க.
3.	மிதிலைப்பட்டி ஸ்ரீ அழகிய சிற்றம்பலக் கவிராயரவர்கள் வீட்டுப்	,,	க
4.	திருநெல்வேலி ஸ்ரீ திருவம்பலத்தின் னமுதம்பிள்ளையவர்கள்	,,	க.
5.	சேலம் ஸ்ரீஇராமசாமிமுதலியாரவர்கள்	,,	க.
6.	யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ சிற். கைலாச பிள்ளையவர்கள்	,,	க.

7. ஆறுமுகமங்கலம் ஸ்ரீ சுந்தரமூர்த்திப்
பிள்ளையவர்கள் பிரதி ௧.
8. திருமயிலை ஸ்ரீசண்முகம்பிள்ளையவர்கள் ,, ௧.
9. சென்னை ஸ்ரீ தி. முத்துக்குமாரசாமி
முதலியாரவர்கள் ,, ௧.
10. சென்னை இராசாங்கத்துக் கையெழுத்
துப் புத்தகசாலைப் ,, ௧.

இவற்றுள், மிகப் பழமையானதும் பரிசோதனைக்கு இன்றி யமையாததாக இருந்ததும் மற்றைப் பிரதிகளிற் குறைந்தும் பிறழ்ந் தும் திரிந்தும் போகியபாகங்களையெல்லாம் ஒழுங்குபடச் செய்த தும் கோப்புச்சிதைந்து அழகுகெட்டுமாசுபொதிந்து கிடந்த செந் தமிழ்ச் செல்வியின் மணிமேகலையை அவளணிந்துகொள்ளும் வண்ணம் செப்பஞ்செய்துகொடுத்ததும் மிதிலைப்பட்டிப்பிரதியே.

இரண்டாம் பதிப்புக்கு உதவியாக மதுரைத் தமிழ்ச்சங்கத் துப்பாண்டியன்புத்தகசாலைப் பிரதியொன்றும், சென்னை ஸ்ரீ பார் சுவநாதநயினாரவர்கள் பிரதியொன்றும் கிடைத்தன. முதற்பதிப் பில் தனித்தனியே பதிப்பிக்கப் பெற்றிருந்த அபிதான விளக்கம் அரும்பதவகராதி, அருந்தொடரகராதி, மூலவிஷயசூசிகை, அரும் பதவுரையில் அடங்கியவை, தமிழ் நூற்பெயர்கள் முதலியன என் னும்பகுதிகள் ஒருங்கேதொகுக்கப்பெற்றுஒரேஅகராதியாக 'அரும் பத முதலியவற்றின் அகராதி' என்னும் பெயருடன் பதிப்பிக்கப் பெற்றன; மூலம் முதலியவற்றிற் காணப்பட்டு முன்பு பதிப்பிக் கப் படாமலிருந்த அரும்பதங்களும், அருந்தொடர்களும், சிலவற் றின் பொருளும், உவமைகளும், பழைய செய்திகளும், வழக்கங் களும், பிறவும் இவ்வகராதியிற் சேர்க்கப்பெற்றன.

முதலிரண்டு பதிப்புக்களைப்பற்றிய மற்ற விஷயங்களை அப் பதிப்புப் புத்தகங்களிலுள்ள முகவுரைகளாலறிந்து கொள்ளலாம்.

இப்பொழுது இது மூன்றாவது முறையாக வெளியிடப்படு கிறது. இப்பதிப்பில் விசேஷமான மாற்றம் ஒன்றும் இல்லை ஆனாலும் இடையிடையே விளங்காமலிருந்த சில பகுதி களை விளக்கியும் சில மேற்கோள்களைக் காட்டியும் இருத்தலைக் காணலாம். புத்த சரித்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்க மென்னும் மூன்றும் மணிமேகலையைப் படிப்பவர்களுக்குப்

பயன்படுவதற்காகவே முதலில் எழுதப்பட்டனவாதலின் அவை யும் இப்பதிப்பிற் சேர்க்கப் பெற்றுள்ளன.

இப்பதிப்பிற்கு உடனிருந்து ஒப்புநோக்குதல் முதலிய உதவி களைச் செய்து வந்தவர்கள், சென்னை கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் சிரஞ்சீவி, வித்வான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், மோகனூர்த் தமிழ்ப் பண்டிதர் சிரஞ்சீவி, கி. வா. ஜகந்நாத ஐயரும் ஆவார்கள்.

கட்டளைக்கலித்துறை.

"ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயர் செல்வமெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமுநட்பும்
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
என்றென் றிருமன மேயுனக் கேயுப தேசமிதே."

'தியாகராஜ விலாஸம்'
திருவேட்டீசுவரன் பேட்டை.
28—8—31.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

——

இந்நூலாசிரியராகிய மதுரைக் கூலவாணிகன்

சீத்தலைச் சாத்தனார் வரலாறு.

இவர் கடைச் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவருடைய இயற்பெயர் சாத்தனாரென்பது; வணிகமரபினர்; கூல வியாபாரம் செய்துகொண்டிருந்தமையின் இப்பெயர் பெற்றார். கடைச் சங்கத்து நல்லிசைப் புலவர்களுள் இவரைப்போலவே, பொன்வாணிகனார், மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார், மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவனார் என்ற வணிகமரபினர் சிலர் இருந்தனரென்று தெரிகின்றது. இவர், பத்தினிக் கடவுளாகிய கண்ணகியின் வரலாற்றையும் அவள் மேம்பாட்டையும் சேரன் செங்குட்டுவனுக்கு அறிவுறுத்தி அவனைக்கொண்டு அவளுக்குக் கோயில் கட்டுவித்து நித்தியபூசை முதலியன நடக்கும்படி செய்தவர். அவ்வரசனுக்குக் கண்ணகியின் வரலாற்றைக் கூறிய பொழுது அவனோடு கேட்டுக்கொண்டிருந்தவரும் அவன் சகோதரரும் துறவு பூண்டவருமாகிய இளங்கோவடிகள் அவளுடைய சரிதத்தைப் பொருட்டொடர் நிலைச் செய்யுளாகச் செய்தற்கு வேட்கையடையும்வண்ணம் செய்தவர் இவரே; அச்சிலப்பதிகாரத்தைக் கேட்டாரும் இவரே; இவற்றைச் சிலப்பதிகாரத்தின் பதிகத்தாலும் அந்நூலிலுள்ள உ0-ஆவது காட்சிக் காதையாலும் உணர்க. எட்டுத்தொகையாகிய நற்றிணை முதலிய நூல்களில் இவர் இயற்றியனவாக பத்துச் செய்யுட்களும் (நற். 3, குறுந். 1, அகநா. 5, புறநா. 1) திருவள்ளுவமாலையில் ஒரு செய்யுளும் இப்பொழுது காணப்படுகின்றன. இவற்றுட் புறநானூற்றுச் செய்யுள் பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனைப் பாடியது.

இவர் பெயர் கூலவாணிகன் சாத்தனாரெனவும், மதுரைச் சீத்தலைச் சாத்தனாரெனவும், சாத்தனாரெனவும் வழங்கும். "தண்டமிழ்ச் சாத்தன்" (பதிகம், 10) என்றும், "தண்டமிழாசான் சாத்தன்" (காட்சிக். 66) என்றும், "நன்னூற் புலவன்" (காட்சிக். 105) என்றும் சிலப்பதிகாரத்து இவர் சிறப்பிக்கப்பட்டிருக்கின்றனர். சங்கத்தில் அரங்கேற்றுவித்தற்பொருட்டு வரும் நூல்களிற் பிழைகள் காணப்படுந்தோறும் ஆக்கியோர்களைக் குற்-

றங் கூறுதற்குத் துணியாராய், "இந்தப் பிழைகளைக் கேட்கும்படி நேரிட்டதே" என்று மனம் வருந்தித் தமது தலையைக் குத்திக் கொள்வாரென்றும், அதனால் தலை புண்பட்டுச் சீயோடிருந்தமையின் சீத்தலைச் சாத்தனாரென்பது இவருக்குப் பெயராயிற்றென்றும் கூறுவர்; "வள்ளுவர்முப் பாலாற், றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு" என்று மருத்துவன் தாமோதரனார் திருக்குறளைச் சிறப்பித்துக் கூறிய செய்யுளில் இதனைக் குறிப்பித்திருத்தலும், "இயற்பெயர் சினைப்பெயர்" (தொல். பெயர். சூ. 20) என்பதன் உரையில் ஆசிரியர் இளம்பூரணர் முதலியோர் சினைமுதற்பெயருக்கு உதாரணமாக, 'சீத்தலைச் சாத்தன்' என்னும் இவர் பெயரைக் காட்டியிருத்தலும் இக்கொள்கைக்கு ஆதாரங்களாக அமைவது காண்க. சீத்தலையென்னும் ஊரிலுள்ள ஐயனார் பெயராகிய சீத்தலைச் சாத்தனாரென்பது இவரது இயற்பெயரென்று ஒரு சாரார் கூறுவர்.

அகநானூற்றிலும், புறநானூற்றிலும், திருவள்ளுவமாலையிலும் இவருடைய செய்யுளும் மருத்துவன் தாமோதரனார் செய்யுளும் அடுத்தடுத்துக் காணப்படுதலாலும் தாமோதரனார் இவரைப்பற்றிக் கூறியிருத்தலாலும் இவ்விருவரும் நெருங்கிய நட்பினரென்று கருத இடமுண்டு. * திருக்கச்சூர்ச் சாஸனமொன்றில், முத்தமிழாசிரியரென்னும் சிறப்புப்பெயர்பெற்ற சாத்தனார் வழிவந்த பெருநம்பியென்னும் ஒருவர் கூறப்படுகிறார். அதிற் கூறப்படும் சாத்தனார் இவரோ வேறு யாரோ தெரியவில்லை. இவர் சேரன் செங்குட்டுவன்பாலும் இளங்கோவடிகள்பாலும் நட்புரிமைபூண்டவர். இந்நூலில் வஞ்சிமாநகர் புக்க காதையின் இறுதியில் செங்குட்டுவனுடைய செங்கோன்முறைமையையும் வெற்றிச் சிறப்பையும் விளக்கியிருத்தலாலும் இந்நூலை இளங்கோவடிகள் கேட்டதாலும் தம் நூலில் இவரைச் சிறப்பித்திருத்தலாலும் இஃது உணரப்படும்.

இவர் திருக்குறளில் மிக ஈடுபட்டவரென்பது அந்நூலை இவர் சிறப்பித்துப்பாடிய திருவள்ளுவமாலைச் செய்யுளாலும், மருத்துவன் தாமோதரனார் அம்முப்பாலால் இவர்தலைக்குத்துத் தீர்ந்ததெனச் சொல்வதாலும், இந்நூலில் இவர், "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் பெருமழையென்றவப், பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்" (உஉ : 59-

* South Indian Inscriptions, 301 of 1909.

61) எனத் திருக்குறட் செய்யுளொன்றை மேற்கோள் காட்டித் திருவள்ளுவரைப் பாராட்டி யிருத்தலாலும், "கேள்வியாற் றோட்கப் படாத செவி" என்னும் குறட்பகுதியை நினைந்து, "கேள்வி யாளரிற், றோட்ட செவியைநீ யாகுவை" (௧௮: 134-5) என்பதனாலும் பிறவற்றாலும் அறியக் கிடக்கின்றது.

இவர் கண்ணகியைப்பற்றிய வரலாற்றை இளங்கோவடிகட்குக் கூறுகையில், "வினைவிளை காலமாதலின் பாண்டியன் தேரானாகிக் கோவலனைக் கொல்லுமாறு கட்டளையிட்டான்" என்று சொல்ல இளங்கோவடிகள், "வினைவிளை காலமென்றீர்; யாது அவர் வினை விளைவு?" என்று கேட்க இவர், தாம் மதுரையில் வெள்ளியம்பலத்திற் பள்ளிகொண்டிருக்கையில் மதுராபதியென்னும் தெய்வம் கண்ணகிக்கு முற்பிறப்பின் வரலாற்றைக் கூறிக் கோவலன் கொலையுண்டது பண்டைவினையின் பயனென்றறிவுறுத்தியதைக் கேட்டவாறு கூறினாரென்பதும், அதனைக் கேட்ட இளங்கோவடிகளால் மூன்று உண்மைகளைப் புலப்படுத்திச் சிலப்பதிகாரம் இயற்றப்பெற்றதென்பதும் அந்நூலால் தெரிகின்றன. இவ்வரலாற்றினால் சாத்தனார் எந்த நிகழ்ச்சியும் பண்டை வினையின் பயனாக விளைவதென்னும் கொள்கையுடையராதல் காணப்படும். அக்கொள்கையை இந்நூற்கண் பலவகையிற் புலப்படுத்தி யிருக்கின்றனர்: உதயகுமரன் காஞ்சனனென்னும் விஞ்சையனால் வெட்டுண்ட செய்தியைச் சக்கரவாளக்கோட்டத்து மாதவர் அரசனுக்குக் கூறும்பொழுது, "ஆங்கவன் தீவினை உருத்ததாதலின் அஃது அவடன்னை அம்பலத்தேற்றி இவனை ஆங்குய்த்து விஞ்சையனைக் கூஉய் அவன் மனத்தையுங் கலக்கி இவன்றன்னை எறிந்தது" (௨௨ : 193 - 203) என்று அச்செய்கையை வினையின்மேலேற்றிச் சொல்லும் பகுதியாலும், "மடையனை, உடற்றுணி செய்தாங் குருத்தெழும் வல்வினை, நஞ்சுவிழி யரவி னல்லுயிர் வாங்கி, விஞ்சையன் வாளால் வீட்டிய தன்றே" (௨௩ : 82-5), "காண்டகு நல்வினை நும்மையீங் கழைத்தது" (௨௪ : 98) என்பன போன்ற பகுதிகளாலும் இதனை அறியலாகும்.

காவிரிப்பூம்பட்டினம், வஞ்சிமாநகர், கச்சியம்பதி யென்னும் பெரியநகரங்களைப்பற்றி இவர் விரித்துக் கூறியுள்ள பகுதிகள் அக்காலத்து நாகரிகச் சிறப்பையும், கைத்தொழில் மேம்பாட்டையும், நகரவளத்தைப்பும் விளக்கி அந்நகரங்களிலெல்லாம் இவர்

நன்கு பழகிக் கண்டவற்றைக் கண்டவாறே அறிவிக்கும் பேராற்றலுடையாரென்பதைப் புலப்படுத்துகின்றன. சிறு பொழுதுகளின் வருணனைகள் இடையிடையே சுவைபயக்கும்வண்ணம் இவராற் கூறப்பெற்றிருக்கின்றன. உவவனத்தைப்பற்றிச் சொல்லுகையில் அது, பல மலர்மரங்கள் நிறைந்து வித்தகரியற்றிய விளங்கிய கைவினைச் சித்திரச் செய்கைப் படாம் போர்த்ததுவே யொப்பத் தோன்றியதாக உரைக்கின்றார்; இதே கருத்து இவருடைய அகநானூற்றுச் செய்யுளொன்றிற் சிறிது வேறுபாட்டுடன் காணப்படுகின்றது; அது வருமாறு :

"வானம் வாய்ப்பக் கவினிக் கானம்
கமஞ்சூன் மாமழை கார்பயந் திறுத்தென
மணிமருள் பூவை யணிமல ரிடையிடைச்
செம்புற மூதாய் பரத்தலி னன்பல
முல்லை வீகழ் றூஅய் வல்லோன்
செய்கை யன்ன செந்நிலப் புறவின்." (134)

இவர் சித்திரசம்பந்தமாகக் கூறும் வேறுசில செய்திகளும் உண்டு. மனைகள்தோறும் தெய்வங்கள் முதல் பலவகை உயிர்கள்வரையிலுள்ளவற்றைப்போன்று சுண்ணச் சாந்தில் சிற்பிகள் இயற்றிய கண்கவரோவியங்கள் இருந்தமையும் (௩: 127 - 31), ஓவியநூலில் பரத்தையரும் பயிற்சியுடையராக இருந்தமையும் (௨: 31) இவராற் சொல்லப்படுகின்றன. அணிகலன் முதலியவற்றை அணியாமல் மணிமேகலை நின்றதை, "புனையா வோவியம் போல நிற்றலும்" (௧௫ : 131) என்றும், ஊரார் அலர்கூறியதற்காக மணம்பெறாதுயாதொரு செயற்கையழகுமின்றிக் கன்னியாக வாழ்வைக் கழிக்கத் துணிந்த விசாகை வந்ததை, "புனையா வோவியம் புறம்போந்தென்ன," (௨௨ : 88) என்றும் கூறிய அடிகளில் வண்ணங்களைக் கொண்டு ஒப்பனை செய்யாத சித்திரத்தை அவ்விருவர்களுக்கும் உவமைகூறியிருத்தல் காண்க. மாதவிக்குச் சுதமதி உவவனத்திலுள்ள பளிக்கறை மண்டபத்தைப்பற்றி யுரைக்கும்பொழுது, "விளிப்பறை போகாது மெய்புறத் திடூஉம், பளிக்கறை மண்டபமுண்டு" (௩: 63 - 4) என்றதும், மணிமேகலை அதற்குள் மறைந்திருந்தகாலையில் உதயகுமரன் அவள் உருவத்தைமட்டிலும் கண்டதுமாகிய செய்திகளால் இவர் கண்ணாடியின் இயற்கையைப் புலப்படுத்தியிருக்கின்றார். இவர், இந்நூலில் வருகின்ற பல

ருடைய வரலாற்றையும் யாரேனும் ஒருவருடைய கூற்றாக அமைத்துப் புலப்படுத்துகின்றார்; உயிர்களின் பசிப்பிணியை நீக்கியும், அவற்றிற்கு உடை இருக்கை முதலியவற்றை வழங்கியும் செய்யப்படும் அருளறத்தினது சிறப்பைப் பலவகையில் எடுத்துக் காட்டுகின்றார். மாதவி கண்ணகியைப்பற்றிக் கூறும் பகுதியிலும், ஆதிரை மருதியென்பவர்களுடைய வரலாறுகளிலும், சித்திராபதியின் கூற்றிலும் பத்தினிப்பெண்டிர் இயல்பை விளங்கவைத்திருக்கின்றார்.

எடுத்துக்கொண்ட நூற்கேற்ற கொள்கைகளைச் சிறப்பித்தல் ஆசிரியரது கடப்பாடாதலின், பௌத்த சமயத்தைப் பாராட்டிக் கூறும் இந்நூலில் சுதமதியின் வரலாற்றால் சமணரையும் ஆபுத்திரனது வரலாற்றால் வேள்வியையும் குறைகூறுதல் அறிதற்குரியது. இடையிடையே * பல இதிகாசக் கதைகள் புராணக் கதைகள் முதலியன இவரால் எடுத்தாளப்படுகின்றன. மாதவர்களுக்கு அபசாரம் செய்யின் அத்தீங்கு பெருந்துன்பத்தை விளைக்குமென்பதும் அவர்களுக்கு ஒரு சிறிது நன்மைபுரியினும் அது பின்பு பன்மடங்கு நற்பயனை உண்டாக்குமென்பதும் பலருடைய வரலாறுகளால் இந்நூற்கண் இவராற் காட்டப்படுகின்றன.

சில இடங்களில் சிலர் கூற்றில் உலகவழக்கில் நிகழும் சில வகைத் தொடர்களை இடைப்பெய்து அப்பகுதிகளைச் சுவைபெறச் செய்கின்றார்: "மறந்தே னதன்றிற மாதவி கேளாய்" (ரு: 69), "மறந்தது முண்டென மறித்தாங் கெழுந்து" (கo: 88), "மறந்தே னதன்றிற நீயெடுத் துரைத்தனை" (கக : 119) என்பவற்றையும், "ஆங்கவன் றன்றிற மறவண னறியுமென், றீங்கென் னுவை வருத்தியது" (கரு : 38 - 9) என்பதனையும், "ஒவியச் சேனனென் னுறு துணைத் தோழன், ஆவதை யிந்நகர்க் காருரைத் தனரோ" (உக : 135-6) என்பதனையும், "இருந்தாய் நீயோ வென்பா ரின்மையின்" (கச: 69) என்பதனையும் காண்க. சுதமதி உதயகுமரனுடன் உடலின் தன்மையைக் கூறும் பகுதியும், சித்திராபதி மணிமேகலையை அழைத்துவருமாறு உதயகுமரனைத் தூண்டும் பகுதியும், சக்கரவாளக் கோட்டத்து முனிவர் உதயகுமரன் வெட்டுண்ட செய்தியை அரசனுக்குக் கூறும் பகுதியும், இவைபோன்ற பிறவும் இன்னவகைச் செய்தியை இன்னருடன் இவ்வாறு சொல்லவேண்டுமென்

* இவற்றை இந்நூல், நகூ௫ - கூ-ஆம் பக்கங்களிற் காணலாம்.

னும் முறையைப் புலப்படுத்தி நிற்கின்றன. சில தொடர்கள் ஓரேவிதமாகப் பல விடங்களில் இந்நூலில் வந்துள்ளன. உருவகங்கள் பலஇந்நூலுட் காணப்படும். "வலம்புரிச் சங்கம் வறிதெழுந் தார்ப்பப், புலம்புரிச் சங்கம் பொருளொடு முழங்க" (எ: 113-24) என்பன முதலிய அடிகளிற் சொற்பின்வருநிலையணியும், "சாலிக் குண்டோ தவறு" (கூ: 98) என்னும் தொடரிற் சிலேடையணியும், * "குருகுகரு வுயிர்ப்ப, ஒருதனி யோங்கிய திருமணிக் காஞ்சி" (கஅ: 56-60) எனவரும் அடிகளிற் சிலேடை உருவகம் முதலியனவும், "பருஅக் குருகி னுயிர்த்து" (கக: 38), "பூத்த வஞ்சி பூவா வஞ்சியில்" (உரு: 78) என்பவற்றில் வெளிப்படை நிலையணியும் அமைந்துள்ளன. சமய சம்பந்தமான சில சொற்களையும் தொடர்களையும் வேறு சிலவற்றையும் இடத்திற் கேற்ப இவர் மொழிபெயர்த்து அமைத்திருத்தல் மிகப் பாராட்டற்குரிய தொன்றும். இவருடைய வாக்கில் நன்கனம் செவ்வனம் என்னும் சொற்கள் பலவிடங்களில் வந்துள்ளன.

வேண்பா.

"சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென்னும்
நல்லிருந் தீந்தாது நாறுதலால் - மல்லிகையின்
வண்டார் கமழ்தாம மன்றே மலையாத
தண்டாரான் கூடற் றமிழ்."

---

* "பெயர்நிலை மயக்கமாவது பொருணிலைமை மயக்கங் கூறுதல்; 'குருகு கருவுயிர்ப்ப, ஒரு தனியோங்கிய திருமணிக் காஞ்சி' என்றவழி, குருகு என்பது மாதவி யென்னும் கொடிக்கும் பெயராதலின் அப்பெயருடையாளைக் குருகென்றார். காஞ்சி யென்பது மேகலைக்குப் பெயராதலின், அது மணிக்காஞ்சி யென்றெட்டி மணிமேகலை யென்பாள்மேல் வந்தது. இவ்வாறு பொருணிலைமயக்க வருவனவும் இசையெச்சமாமென்றவாறு" (தொல். எச்ச. 47, தெய்வச்.) என்றது இங்கே கருதற்குரியது.

இந்நூலால் தெரிந்த அரசர்களின் பெயர்கள் முதலியன.

க. அரசர்கள் :—அத்திபதி, இரவிவன்மன், இராகுலன், இராமன், உதயகுமரன், ககந்தன், கரிகால்வளவன் (கரிகாற்பெருவளத்தான்), கனகன், காந்தன், கிள்ளிவளவன், குமரன், சீதரன், செங்குட்டுவன், துச்சயன், துணையிளங்கிள்ளி, தூங்கெயிலெறிந்த தொடித்தோட்செம்பியன், தொடுகழற்கிள்ளி, நாகநாட்டரசிருவர், நெடுஞ்செழியன், நெடுமுடிக்கிள்ளி, புண்ணியராசன், பூமிசந்திரன், மனு, மாவண்கிள்ளி, மாவலி, முசுகுந்தன், வசு, வடிவேற்கிள்ளி, வத்தவன் (வத்ஸராஜன்), வலைவாணன், வாணன், விசயன், விடர்ச்சிலைபொறித்தவேந்தன், விராடன், வெல்வேற்கிள்ளி.

உ. அக்ஷயபாத்திரம் :—அமுதசுரபி.

௩. ஆறுகள் :—கங்கை, காயங்கரை, காரியாறு, காவேரி; குமரி.

௪. உலகம் :—துடிதலோகம், வித்தியாதரருலகு.

ரு. ஊர்கள் .—அசோதரநகரம், இடவயம், உஞ்சை, கச்சயம், கபிலை, காஞ்சனபுரம், காஞ்சி, காவிரிப்பூம்பட்டினம் (காகந்தி), கொற்கை, கோசம்பி (கௌசாம்பிநகரம்), சண்பை, சிங்கநகரம், சித்திபுரம், சேடி, தக்கணமதுரை (மதுரை), நாகபுரம், வஞ்சி, வயனங்கோடு, வாரணாசி.

சா. குலங்கள்:—இந்திரகுலம், சூரியகுலம், மாவலிகுலம்.

எ. கோயில்கள் :—இந்திரவிகாரம், கலைநியமம், குச்சரக்குடிகை, சக்கரவாளக்கோட்டம், தருநிலை (கற்பகதரு நிற்குங் கோயில்), தீவதிலகை கோயில், புத்தபாத பீடிகைக் கோயில், பூதசதுக்கம், மணிமேகலா தெய்வக் கோயில், வச்சிரக்கோட்டம் (வச்சிராயுதம் நிற்கும் கோயில்.)

அ. தருமசாலை:—உலகவறவி.

சா. தீவங்கள்:—இரத்தினத்தீவம், இலங்காதீவம், சம்புத்தீவம், சிறுதீவு இரண்டாயிரம், பெருந்தீவுநான்கு, மணிபல்லவம்.

௧0. தெய்வங்கள்,—அந்தரி (துர்க்கை), அருபப் பிரமர் நான்கு வகையினர், இந்திரன், உருபப்பிரமர் பதினாறுவகையினர்,

கண்ணகி, கந்திற்பாவை (துவதிகன்), குமரி, கோவலன், சம்புத்தீவக்காவற் றெய்வம் (சம்பாபதி), சித்திரசேனன், சிந்தாதேவி, சிவபெருமான், திருமால், தீவதிலகை, பலதேவன், பிரமன், பூதம் (சிருங்காடிப்பூதம்; சதுக்கப்பூதம்), மணிமேகலா தெய்வம், மறைப்பற்றமா, மாரன், மாருதவேகன், முருகக்கடவுள், விந்தாகடிகை.

கக. நகரத்தெய்வங்கள் :—சம்பாபதி, மதுராபதி.

கஉ. நாடுகள் :—அங்கநாடு, உத்தரமகதம், கலிங்கநாடு, காந்தாரநாடு, சாவகநாடு, நாகநாடு, பாண்டிநாடு, பூருவதேயம், மகதம்.

கங. நூல்கள்:—ஓவியநூல், திருக்குறள், பிடகம், மடைநூல், மற்கலிநூல்.

கச. நோய் :—யானைத்தீநோய்.

கரு. பாம்பு :—திட்டிவிடம்.

கசா. புத்தஸ்தலமுள்ள இடங்கள் :—காஞ்சி, காவிரிப்பூம்பட்டினம், சமந்தம் (சமனொளி, பாதபங்கயமலை), மணிபல்லவம், வஞ்சிநகர்.

கஎ. புலவர்கள்:—இளங்கோவடிகள், திருவள்ளுவர்.

கஅ. பொய்கைகள் :—கோமுகி, சரவணம்.

கசு. மலைகள் :—இமயம், சமந்தம் (சமனொளி, பாதபங்கயமலை, கிருத்திரகூடம்), தவளமலை, நாகர்மலை, பொதியில், மேரு, மேருவைச் சூழ்ந்த எழு குன்றங்கள், விந்தம்.

உ0. முனிவர்கள்:—அக்கபாதர், அகத்தியர், அசலர், அறவணவடிகள், கவேரர், கிருதகோடி, கேசகம்பளர், கௌதம முனிவர், சங்கதருமர், சாதுசக்கரர், சிருங்கி, சைமினி, தருமசாவகர், பரசுராமர், பிரமதருமன், புத்தன், மண்முக முனிவன், விசுவாமித்திரன், வியாசன், விரிஞ்சி, விருச்சிகன்.

உக. வனங்கள் :—கவேரவனம், சம்பாதிவனம், தருமதவனம்.

உஉ. வாதங்கள் :—அளவைவாதம், ஆசீவகவாதம், சாங்கியவாதம், சைவவாதம், நிகண்டவாதம், பிரமவாதம், பூதவாதம், மந்திரவாதம், வேதவாதம், வைசேடிகவாதம், [illegible]வாதம்.

உங. விழாக்கள்:—இந்திரவிழா, மங்கலத்திருநாள்.

உ

கணபதி துணை.

புத்தசரித்திரம்.

இந்தப் பரதகண்டத்தில் * உத்தரகோசலதேசத்தில் † உரோகிணி நதிக்கரையிலுள்ள ‡ கபிலவாஸ்து என்னும் நகரத்தில், இக்ஷ்வாகு பரம்பரையிலுதித்துச் சுத்தோதனனென்று பெயர்பெற்ற ஓர் அரசன் இருந்தான். அவனுடையகாலம், இற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரத்தைந்நூறு வருடங்களுக்கு முந்தியதென்பர். அவனுக்குச் சுக்கிலோதனன் அமிருதோதனன் தௌதோதனன் கனிதோதனனென்னும் நான்கு சகோதரர்களும், பிரமிதை அமிருதையென்னும் இரண்டு சகோதரிகளும் இருந்தார்கள். அவனுடைய முன்னோர் § சாகவிருக்ஷங்கள் அடர்ந்துள்ள இடத்தில் முன்னம் இருந்ததுபற்றிச் சாக்கியரென்றும், கோதமரென்பவரது மரபிலுதித்தமைபற்றிக் கௌதமரென்றும் சொல்லப்படுவர். சுத்தோதனன் கோலிய தேசாதிபதியாகிய அஞ்சனனென்னும் அரசனுடைய மகளிரான மாயா

---

* கிழக்கே லிச்சவிகளின் தேயமும் மகததேயமும், தெற்கே கோலிய தேயமும், மேற்கே ஸ்ராவஸ்தி தேயமும், வடக்கே மலையில் வாழ்பவர்களாகிய மங்கோலியர்களுடைய தேயமும் உத்தர கோசலத்திற்கு எல்லைகளாகக் கூறப்பட்டுள்ளன. லிச்சவிகளென்பது ஒருவகைக் குழுவின் பெயர். உத்தரகோசல தேசம் சாக்கியதேசமென்றும் கூறப்படும்.

† உரோகிணிநதி இக்காலத்தில், 'கொகாணு' என்று வழங்கப்படுகின்றது. இது கங்கையின் கிளைநதிகளுள் ஒன்று.

‡ 'கபிலவாஸ்து' என்பதற்குக் கபிலரென்று பெயருள்ள முனிவரொருவர் தங்கித் தவஞ்செய்த இடமென்று பொருள் கூறுவர். (வாஸ்து-இடம்.) பழைய தமிழ்நூல்களில் இந்நகர் கபிலபுரமென்றும் கபிலையென்றும், இந்நகரையுடைய நாடு மகதநாடென்றும் வழங்கப்படுகின்றன; "கண்டார் விரும்புங் கபிலபுரமென்ப, துண்டு" என்பது நீலகேசி, மொக்கலவாதச்சருக்கம், ௧௯௫-ஆம் பாட்டு; "மறந்துமழை மாறா மகத நன்னாட்டுக், கொருபெருந் திலகமென் றுரவோ ருரைக்குங், கரவரும் பெருமைக் கபிலையம் பதி" என்பது மணிமேகலை, ௨௬-ஆம் காதை, ௪௨-௪. § சாகவிருக்ஷம் - தேக்கமரம்.

தேவியையும் கௌதமியையும் மணஞ்செய்துகொண்டான். மாயா தேவி மூத்தவள்; *கௌதமி இளையவள். கௌதமி, பிரஜாவதி யென்றும், பிரஜாவதி கௌதமியென்றும், மஹாப்பிரஜாவதி கௌதமியென்றும் கூறப்படுவார். இவ்விருவருள்ளே குணவதி யாகிய மாயாதேவி பேரழகுடையவளாயிருந்ததுபற்றி அரசன் அவ்விடத்து மிக்க வேட்கையுடையவனாகியிருந்தான். கௌதமி அது தெரிந்து மாயாதேவிபால் அழுக்காறுற்று மனங்கொதித் துக்கொண்டே காலங்கழித்து வந்தாள். இவ்விருவரும் நெடுங் காலம்வரையிற் புத்திரப்பேறின்றி இருந்தார்கள்.

இப்படி இருக்கையில், † துஷிதலோகவாசியாகிய பிரபாபால ரென்னும் ‡ போதிசத்துவர் உயிர்களைத் தீயவழியினின்றும்நீக்கி நல்லவழியிற் செலுத்துவதற்கு இவ்வுலகில் அவதரிக்க விருப்புற்று, ஒருநாள் பொன்மயமான $ தெய்வவிமானமூர்ந்துவந்து, மாயா தேவி சுத்தோதனன் என்னுமிருவருடைய கனவிலுந்தோன்றி, தாம் அவர்களுக்குப் புத்திரராக அவதரிக்கப்போதலைத் தனித் தனியே உணர்த்திப் பின்பு மாயாதேவியினுடைய ||வயிற்றிற் புகுந் தனர். எங்கும் நிறைந்துள்ள தெய்வம் இங்ஙனஞ் செய்ததென் றும் மாயாதேவி ஒரு ஷட்கோண நக்ஷத்திரம் தன்வயிற்றிற் புகுந் ததாகக் கனவுகண்டு பின்புகருவுற்றாளென்றுஞ் சொல்வதுண்டு.

---

* கௌதமி மூத்தவளென்றும், மாயாதேவி இளையவளென்றும் சில புத்தகங்களிற் சொல்லப்படுகிறார்கள்.

† துஷிதலோகம் - தெய்வலோகங்கள் ஆறினுள் நான்காவது.

‡ 'போதிசத்துவர் - புத்தராக வருவதற்குரியோர்; "புத்த ராகு மாண்பினோர் போதிசத்து வர்கடாம்" என்பது நீலகேசி, மொக்கல வாதச்சருக்கம், கூ-ஆவது செய்யுள். கௌதமபுத்தருடைய பழைய பிறப்புக்களையுணர்த்தும் வடநூலைப் போதிசத்துவாவதான கல்பலதை யென்று கூறுதல் காண்க.

$ "துடிதவிமானத்தினின்றும்போந்து குயிலாலபுரத்துத்தோன்றி உலும்பினி வனத்துப்பிறந்து கபிலபுரத்துப் புத்தத்துவம்பெற்றுத் தர்மோபதேசம் பண்ணி மஹாபோதிப்பிரதேசத்துப் பொன்றக்கெடுதல் புத்தனுக்குரியதி" (மொக்கலவாதச்சருக்கம், கூo-ஆம் பாட்டுரை) என்று சிலவற்றை வேறுபடுத்திக் கூறுவர் நீலகேசியுரையாசிரியர்.

|| ஈசானசகாப்தம் கூஎ-ஆம்ஆண்டில் மாயாதேவி கருப்பமுற்றா ளென்று பர்மாதேசத்துப் பௌத்தநூல்கள் தெரிவிக்கின்றன. அவள் கருப்பமுற்ற நக்ஷத்திரம் உத்திரட்டாதி யென்பர்.

மாயாதேவி கருவுற்றனளென்பதை அவளுடைய தோள்மெலிவு முதலியவற்றாலறிந்த அரசன் முதலியோர் அகமகிழ்ந்தனர்.

அப்பொழுது அவளுக்குப் பிராயம் நாற்பத்தைந்து. மாயா தேவிமட்டும் கருப்பிணியாயினளேயென்று கறுமொறுப்புற்ற கௌதமி அவளுடைய உயிரைப் போக்குதற்குப் பலவாறு முயன்றாள்; முயன்றும் அது சிறிதும் பலிக்கவில்லை. அதன்பின்பு கௌதமி தான்செய்த குற்றத்தை நினைந்து நினைந்து மனம் நொந்து மாயாதேவிபால் அன்புகூர்ந்து ஒழுகுவாளாயினள். மற்றொரு நாள் மாயாதேவியின் கனவிற் பிரபாபாலர் ஓராண்குழந்தை வடிவாக வெளிப்பட்டு அவளுக்குச் சில நல்வழிகளை உபதேசித்து மீட்டும் அவள் வயிற்றிற் புகுந்தனர். அவள் அவர் உபதேசித்தவாறே நியமவழியில் ஒழுகுவாளாயினள். உலகத்திற் கருவுற்ற மங்கையர்களுக்கு உளவாகும் வயாவும் வருத்தமும் அவளுக்கு இலவாயின. கருவுயிர்க்குங் காலம் அணுகிற்று; அணுகவே அவள் இனிய பலவகைக்காட்சிகளும் அமைந்த லும்பினி என்னும் பூஞ்சோலையை யடைதற்கு விரும்பித் தன்கருத்தை அரசனுக்குத் தெரிவித்தாள். அவன் அகப்பரிசாரங்களும் புறப்பரிசாரங்களுஞ் சூழ அவளுடன் அச்சோலையையடைந்து அதிலுள்ள மாளிகையொன்றிற்றங்கி, அவளுள்ளத்தைக்கவரும் நறுமலர்களைக் கொணரும்படி தன்பரிவாரங்களுக்குக்கட்டளையிட்டான். அதைக் கேட்ட பலரும் பலவகை மலரும் கொணர்ந்து காட்டி அவளை மகிழ்வித்தார்கள். பின்பு அரசன் மாயாதேவியுடன் அச்சோலையிடையே மலர்ந்து விளங்கும் அசோகமரமொன்றைச் சார்ந்து, அதனிழலில் மயில் கலாபத்தை விரித்தாடுதலையும் கலவிங்கமென்னும் பறவை அதற்கேற்பப் பாடுதலையும் கண்டும் கேட்டும் விழிகளுக்கும் செவிகளுக்கும் விருந்தூட்டிக் களிக்கும் அவளைநோக்கி, "இம் மரப் பூவொன்றைப் பறித்துத்தா" என்று வேண்டினன். பூப்பறிக்க அவள் அம்மரத்தின் கிளையொன்றைப் பற்றுதற்கு வலக்கையை உயர்த்தினள். முன்னம், ஔர்வரென்னு முனிவர் தமது தாயினது துடையிலிருந்தும், பிருது என்னும்சக்கரவர்த்தி வேனராஜாவினுடைய கையிலிருந்தும், மாந்தாதா உபோஷிகனுடைய நெற்றியிலிருந்தும், *கக்ஷீவானென்னுமுனிவர் சுதேக்ஷ்ணு

---

*கக்ஷீவானென்பவர், 'தீர்க்கதமஸ்' என்கிற முனிவருடைய அனுக்கிரகத்தால் பலியென்னும் அரசன் மனைவி சுதேக்ஷ்ணையின் கக்ஷத்திலிருந்து பிறந்தாரென்று ஸ்ரீமஹாபாரதம் கூறுகின்றது; கக்ஷம்-கைம்மூலம்.

தேவியின் கைம்மூலத்திலிருந்தும் வெளிப்பட்டது போலப் பிரபாபாலர் அப்பொழுது மாயாதேவியின் கருப்பத்திலிருந்து சிறிதும் அவளுக்கு வருத்தத்தை உண்டுபண்ணாமல் மெல்ல மெல்ல அவளுடைய வலப்பக்கத்தின்வழியே ஆண்குழந்தை வடிவாக வெளியேவந்து அவள் காலருகே அச்சமயத்தில் தேருருளையைப் போற் பெரிதாக முளைத்துத் தோன்றிய நீலத்தாமரை மலரொன்றிற் சென்றிருந்தார். அவர் *பிறந்ததினம் வைசாக சுத்த பூர்ணிமை. அக்கணமே தெய்வ அரசர்கள் நால்வரும் நந்தன் உபநந்தன் என்ற நாக அரசர்கள் இருவரும் அங்கேவந்து முன்பு அவதரித்துள்ள புத்தர்களுக்குத் தாம் செய்ததுபோலச் செய்யவேண்டிய பல உபசாரங்களையும் செய்துவிட்டுத் தத்தம் உறைவிடஞ் சென்றார்கள். அப்பால் அவர் அந்நீலத்தாமரை மலரினின்றும் சிங்கக்குருளைபோல் ஏழடி நடந்துபோந்து தாம் புத்தாவதாரமென்பதை ஆங்குள்ளவர்களுக்குக் கூறினர். கூறியவுடன் வெப்பமும் தட்பமுமுள்ள † நீரோடைகள் இரண்டு தனித்தனியே ஆகாயவழியே வந்து அவரை மஞ்சனஞ் செய்வித்தன. தேவர்கள் மலர்மழை பொழிந்தார்கள்; ஆகாயம் மேகத்தால் மூடப்படுதலின்றித் தூய்மையுற்று விளங்கிற்று; விலங்குகளும் பறவைகளும் தம்முட் பகைமையின்றி அன்புற்றுப் பயின்றன; இன்னும் பற்பல ‡ நன்னிமித்தங்கள் நிகழ்ந்தன. தீயவழிகளுக்குத்

* கௌதமபுத்தர் பிறந்ததினம், ஈசான சகாப்தம், ௬அ-ஆம் வருஷம் வைகாசிமாதத்திற் பூர்ணிமையும் விசாக நக்ஷத்திரமுங்கூடிய வெள்ளிக்கிழமை யென்று சொல்லுவர்; "இருதிள வேனிலி லெரிகதி ரிடபத், தொருபதின் மேலு மொருமூன்று சென்றபின், மீனத் திடைநிலை மீனத் தகவயிற், போதித் தலைவனொடு பொருந்திய போழ்தத்து" என்று மணிமேகலையிலும் கூறப்பட்டிருத்தல் காண்க; கரு-ஆம் காதை, உ௩-௬.

† நீரூற்று ஒன்று, மாயாதேவியின் அருகே பூமியில் தோன்றி மஞ்சனஞ் செய்வித்ததென்றும் கூறுவதுண்டு.

‡ "மைத்திருள் கூர்ந்த மனமாசு தீரப், புத்த ஞாயிறு தோன்றுங் காலைத், திங்களு ஞாயிறுந் தீங்குறு விளங்கத், தங்கா நாண்மீன் றகைமையி னடக்கும், வானம் பொய்யாது மாநிலம் வளம்படு, மூனுடை யுயிர்களூறுதுயர் காணா, வளிவலங் கொட்கு மாதிரம் வளம்படு, நளியிரு முந்நீர் நலம்பல தரூஉங், கறவைகன் றார்த்திக் கலநிறை பொழியும், பறவை பயன்றுய்த் துறைபதி நீங்கா, விலங்கு மக்களும் வெரூஉப்பகை நீங்குங், கலங்கஞர் நரகரும் பேயுங் கைவிடுங், கூனுங் குறளு மூமுஞ் செவிடு, மாவு மருளு மன்னுயிர் பெறாஅ" என்று புத்தர் அவதரிக்குங்காலத்தில்

தலைவனான மாரனென்னுந்தேவன் ஒருவனே றன்புற்றான். மாயா தேவி பொறையுயிர்த்தலால் உண்டாகுந்தளர்ச்சி சிறிதுமின்றி மேற்கூறிய அசோகமரத்தின் கீழேயிருந்தாள். கௌதமி அன்பு கூர்ந்து அக்குழந்தையை யெடுத்துச் சீராட்டிப்பாராட்டி வரு வாளாயினள். குழந்தையும் அவள்பால் அன்புமிக்கது. அப்படி யிருக்கையில், சிறந்த நிமித்திகனாகிய அந்தணனொருவன் வந்து அக்குழந்தையை உற்றுநோக்கி, “ஆசிரியராக வருவோர்க்குரிய இலக்கணங்களெல்லாம் இவன்பால் உள்ளன; ஆதலால், இவன் துறந்து பலவிடத்துஞ்சென்று தருமோபதேசம் புரிதலை மேற் கொள்வான்; இவனால் மனிதர்கள் அடையும் ஊதியம் மிகப்பல” என்று அரசனுக்குக்கூறி நன்கொடை பெற்றுச்சென்றான். மாயாதேவி கருவுயிர்த்த *ஏழாநாளில் ஆனந்தாதிசயத்தால் இறந்தாள்.

“உலும்பினி வனத்து ளொண்குழைத் தேவி
வலம்படு மருங்குல் வடுநோ யுறாம
லான்றே னவ்வழித் தோன்றின னாதலி
னீன்றே ளேழாநா ளின்னுயிர் வைத்தாள்.”

(விம்பசார கதையென்னுங் காப்பியம்.)

அவளுடைய உடம்பைத் தகித்து என்பையும் சாம்பலையும் ஒரு குடத்தில் நிறைத்து, அவளிருந்துவந்த மாளிகையை †அஸ்த மயகிரியிற் பெயர்த்துக்கட்டி அதில் அக்குடத்தை அடக்கஞ் செய்தார்கள். அவளுடைய பெருமையைப் புலப்படுத்தற்பொ ருட்டு நூற்றறுபது அடி உயரமுள்ள ஆலயமொன்று அம்மாளி கையினருகே கட்டப்பட்டதன்றி மேற்கூறிய அசோகமரமும் அவ் வாலயத்தின் எதிரிலே பெயர்த்து நடப்பட்டது. கௌதமி குழந் தையை எடுத்து வளர்த்துவந்தாள்.

உலகத்துண்டாகும் நிமித்தவிசேடங்களை மணிமேகலையில் விளங்கக் கூறியிருத்தல் காண்க; ௧௨-ஆம் காதை, ௮௫-௯௮.

* “புத்தன்றாய் நண்டிப்பி வாழை புனமூங்கில், கத்தும் விரியன் கடுஞ்சிலந்தி-இத்தனையும், வேலாலும் வாளாலு மன்றியே தாங்கொண்ட, சூலாலே தம்முயிர்க்குச் சோர்வு” என்பது உலோகவசனமென்னும் நூல்; இச்செய்யுள், நீலகேசியுரையிற் கண்டது; “இவன் பிறக்கின்றகாலத்து மாதாவினது வலம்மருங்குலாற் பிறந்தான்; அவளும் ஆறுநாள் குற்றுயி ரோடு கிடந்து ஏழாம்நாள் இறந்தாள்; இது புத்தமாதர்கள் யாவர்க்கும் ஒக்கும்” என்பது நீலகேசி, குண்டலகேசி வாதச்சருக்கம், ௪௧-ம். பாட்டுரை. † அஸ்தமயகிரியென்பது அங்கேயுள்ள ஒரு மலையின்பெயர்.

ஒருநாள், சுத்தோதனன் குழந்தையை எடுத்துக்கொண்டு கோயில் சென்று பண்டைதேவரைத் தரிசித்தபொழுது அத்தேவர் தமது படிமத்திலிருந்து வெளிப்பட்டு அக்குழந்தையின் பெருமைகளை அவனுக்கு விரித்துக்கூறினர். பின்பு அக்குழந்தைக்கு *ஸித்தார்த்தனென்று நாமகரணம் செய்தார்கள்; செய்தும் எல்லாரும் கௌதமனென்னும் குடிப்பெயராலேயே அழைத்து வருவாராயினர்.

கௌதமர் உரியகாலத்தில் வித்தியாரம்பஞ் செய்விக்கப்பெற்று †மித்திரரென்று பெயருள்ள ஒரு பிராமணனிடம் பல கலைகளையும் முறையாகக் கற்பாராயினர். 'விளையும்பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கேற்ப, ஜீவகாருண்ணிய முதலிய நற்குணங்கள் பலவும் அவர்பால் இளம்பருவந்தொடங்கியே நாடோறும் வளர்ச்சியுற்று விளங்கின. கற்கவேண்டிய கலைகள் எல்லாவற்றையும் அவர் யாதொரு வருத்தமுமின்றிக் கற்றுவந்தார். அதுதெரிந்த சுத்தோதனன் பெருமகிழ்ச்சியடைந்தான். அவரோடு கற்றுவந்த பார்ப்பனப்பாங்கன் உதாயியென்பவன்.

அவ்வளவில் அஸிதரென்னும் முனிவர்வந்து கௌதமரைக்கண்டு பரிபூர்ண புத்தர்களுக்குரிய ‡ஸஹஸ்ரார சக்கரரேகை முதலிய ஸாமுத்திரிக லக்ஷணங்கள் பலவும் அவர்பால் உளவாதலையறிந்து வியந்து, 'மானிடராகிய மரத்திற் பல நூற்றாண்டுகளுக்கு ஒருமுறையே மலரும்மலர் இக்குழந்தை; உமது குலப்பெருமையை என்னவென்று சொல்லுவேன்! இவன் துறவுபூண்டு உலோக ரக்ஷகனாக இருப்பான்' என்று அரசனுக்குக் கூறினர். அரசன், 'துறப்பது எப்பொழுதோ?' என்றான். அவர், 'அஃது இப்பொழுது அறிவிக்கற்பாலதன்று' என்று சொல்லித் தம்மிடஞ் சென்றனர். செல்லவே அரசன் கௌதமர் துறப்பரென்பதை

---

* ஸித்தார்த்தன் - (தந்தையின்) விருப்பத்தை நிறைவேற்றியவன். ஸர்வார்த்த ஸித்தியென்று நாமகரணம் செய்ததாகச் சொல்லுவதுமுண்டு. புத்தருக்கு இன்னும் உள்ளனவாகிய பெயர்கள் பல.

† இப்பெயர், விசுவாமித்திரரென்றும் சில புத்தகங்களிற் காணப்படுகின்றது.

‡ ஸஹஸ்ராரசக்கரரேகை - புத்தருடைய பாதத்திலிருந்த கீற்றுவிசேடமென்பர்; இதுபற்றியே அவரை, "ஆயிரவாரத் தாழியன்" என்றார் மணிமேகலையிலும்; ௩-ஆம் காதை, ௧0௪.

முன்பு ஒரு நிமித்திகனுலும் அறிந்தோனுதலால், அவருடைய உள்ளத்தை உலக வழியிற் புகுத்தற்பொருட்டுப் பலவாறு முயன்றுவந்ததோடு உலகவாழ்வில் அவருக்கு ஒருபொழுதும் யாதொரு வெறுப்புந் தோற்றுமலிருக்கும் வண்ணஞ் செய்வித்தும் வந்தான்.

அந்நாட்களிலே ஒருநாள் தோழர்களுள் ஒருவனுகிய தேவதத்தனென்பவன் தான் ஓரிடத்தில் எய்துவீழ்த்திய * அன்னப் பறவையைக் கௌதமர் அளிசுரந்தெடுத்து அதன்மேலே தைத்திருந்த அம்பைப் பிடுங்கியெறிந்து அப்பறவையைத் தைவந்து பாதுகாத்து விடுத்தமைபற்றிக் கோபமுற்றுப் பகைமைகொண்டு அவரை நீங்கித் தனக்கமைந்த நண்பர் சிலருடன் வேற்றிடஞ் சென்றுன்.

சிலநாளைக்குப்பின் கௌதமரைச் சுத்தோதனன் தன்னுடைய இளவரசாக நியமித்து அதற்குரிய சிறப்போடிருக்கும்படி செய்வித்தான். அப்பொழுது அவருக்குப்பிராயம் பதினைந்து. அவர் இளவரசராக இருந்தே சில வருடங்களைப் போக்கினர்.

பின்பு அரசன், தன் மைத்துனனுகிய சுப்பிரபுத்தனுடைய மகள் யசோதரையை அவருக்கு † மணம் புரிவித்தான்; அப்பொழுது அவருக்குப் பிராயம் பத்தொன்பது.

அப்பால், கௌதமர் யசோதரைபாற் காதல் கூர்ந்து வேறொன்றையும் அறியாது அவள்போகத்திலேயே சிலகாலம் அழுந்திக்கிடந்தார். அது தெரிந்த உறவினர் கவலையுற்று, "மேன்மேலும் அறிந்து கொள்ள வேண்டிய படைக்கலப்பயிற்சி முதலியவை கௌதமனுக்கு இல்லையாயினவே! எப்பொழுதேனும் யுத்தம் நேருமாயின் அக்காலத்து இவன் யாது செய்வான்?" என்று அரசனுக்குச் சொன்னுர்கள். அதைத் தெரிந்துகொண்ட கௌதமர் அவ்வுறவினர் பலரையும் வருவித்து, தாம் அவற்றில் வல்லராதலை அரசன் முன்பு வெளிப்படுத்தி, அவ்வுறவினரால் நன்கு மதிக்கப்பட்டார். இச்செய்தி விவாகத்திற்கு முன்னே நடந்ததென்றும் இதைக்கண்டு வியந்த சுப்பிரபுத்தன் தன்மகளைக்

---

* பருந்தென்று கூறுவது முண்டு.

† காட்டப்பட்ட மங்கையர் பலருள்ளே யசோதரை கௌதமரால் தெரிந்தெடுத்து விவாகஞ்செய்து கொள்ளப்பட்டாளென்றுஞ் சொல்லுவர்.

கௌதமருக்கு மணம் புரிவித்தானென்றும் கூறுவதுண்டு. 'நிமித்திகரும் அஸிதருஷியும் முன்புகூறியவாறு கௌதமன் துறவுபூண்பானோ' என்று, கவலையுற்ற அரசன், ஒரு தோட்டத்தில் வேனிற்காலம், மழைக்காலம், பனிக்காலம் ஆகிய இம்மூன்றிலும் முறையே தங்கிப் போகம்நுகர்தற்குத் தகுதியாக மூன்று மாளிகைகள் கட்டுவித்து, அவற்றின் நாற்புறவழிகளிலும் வலிய நிலைகளும் கதவுகளும் அமைப்பித்து, அத்தோட்டத்தைச் சூழ உயர்ந்த மதிலை எழுப்பி, இரவும்பகலும் அம் மதிலைச்சூழ்ந்து போர்வீரர் காக்கவும், அருவருக்கத்தக்க பொருள்களுள் யாதொன்றும் கண்ணுக்குப் புலப்படாமலிருக்கவும் புரிவித்துக் கௌதமரை அங்கே தங்கி இன்பம் நுகரும் வண்ணம் செய்வித்தான். அரசன் இவ்வாறு மேன்மேலுஞ் செய்து வந்த பெருமுயற்சிகளாற் பிணிமூப்புச் சாக்காடென்பவைகள் மனிதர்களுக்கு உண்டென்ற ஞாபகம் அக்காலம் வரையிற் கௌதமருக்குச் சிறிதும் உண்டாகவேயில்லை.

அப்படியிருக்கையில், ஒருநாள் உலும்பினி வனத்திலுள்ள அரண்மனையில் வந்து தன்னைக்காணும்படி அரசன் அவருக்குத் திருமுகமனுப்பினான். அதனைப் பெற்று உடனே தந்தையைக் காணுதற்கு நினைந்து தாமிருக்குந் தோட்டத்தின் கீழைவாயில் வழியே சிவிகையூர்ந்து செல்லும் கௌதமர், தம்மெதிரே வந்த மிக்க பிணியாளனொருவனைக்கண்டு எல்லாரும் இப்படியே பிணிவாய்ப்பட்டுத் துன்புறுவாரென்பதையும், மற்றொரு நாள் அங்ஙனஞ் செல்லுகையில் மிகத்தளர்ந்து வருந்திக்கொண்டே வந்த முதியோன் ஒருவனை வழியிடையே கண்ணுற்று எல்லாரும் இங்ஙனம் மூப்புற்று வருந்துவாரென்பதையும், வேறொருநாள்குதிரையேறி மேலைவாயில் வழியே செல்லுகையில் அங்கே அழுகிக் கிடந்த பிணமொன்றைக்கண்டு எல்லாரும் இறத்தற் குரியாரென்பதையும் உடன்வந்த குதிரைக்காரனாகிய *சந்தகனால் அறிந்தறிந்து, அநித்தியமாகிய உலகவாழ்வில் அருவருப்புற்று, "இப்பிணிமூப்புச்சாக்காட்டிற்குக் காரணமாகிய பிறப்பிற்கு இடங்கொடாத நல்வழியையறிந்து நாமுமுய்ந்து உலகத்தையும் உய்வித்தல் எப்பொழுது கூடுமோ?" என்று கவலை யடைந்து, அதைக்குறித்து ஆலோசித்துக்கொண்டே மீண்டு மீண்டு வருவாராயினர்.

---

* அநிருத்தா, பாக்கனாகிய உதாயியென்பவனாலென்றும் கூறுவதுண்டு.

* சுத்தாவாஸ தேவர்களுளொருவர் கௌதமருக்கு நிலையாமையை அறிவுறுத்தற்பொருட்டுப் பிணியாளன் வடிவமுதலிய மூவர் வடிவங்களாகத் தோன்றினரென்று கூறுவர்.

இக்காட்சிகளால் கௌதமருடைய மனம் வேறுபட்டிருத்தலைக் கேள்வியுற்ற அரசனுடைய கட்டளையால் உதாயியுடன் அழகிய மங்கையர் பலர்வந்து தம்வயமாக்க முயன்றும் ஒத்த தோழர்களாகிய மந்திரிகுமாரர்கள் பலர்வந்து சிற்றின்பத்தைப் பற்றிப் பலவகையாகப் போதித்தும் கௌதமருடைய உள்ளம் சிறிதும் மீளவில்லை; வேறுபடுத்தத் துணிந்துவந்தவர்கள் அவருடைய அழகிய மேனியையும், கம்பீரமான தோற்றத்தையும், சாந்தமான பார்வையையும், மற்றுமுள்ள விசேடங்களையும் கண்டு அஞ்சிச் சென்றார்கள்.

பின்பு ஒருநாள் கௌதமர் தேரேறித் தோட்டம்பார்க்கப் போனபொழுது வழியின் இருபுறத்துமுள்ள நன்செய்களிலும் புன்செய்களிலும் உழவர் முதலியோரும் எருது முதலியவைகளும் உழைத்தலையும் அதனால் அவ்வுயிர்கள் அடையும் வருத்தங்களையுங்கண்டு மனம்வருந்தி ஒரு நாவல் மரத்தின்கீழே தங்கிக் கண்ணை மூடிக்கொண்டு, துக்கமாகிய பிறப்புப்பிணி மூப்பிறப்புக்களையும், அவற்றிற்குரிய காரணங்களையும், அவற்றைமாற்றும் வழிகளையும் மெல்ல ஆராய்ந்துகொண்டிருந்தார்; அங்ஙனமிருக்கும்பொழுது, முன்பு தாம் பிணியாளன் வடிவங்கொண்டு தோன்றி யாவரும் பிணிவாய்ப்படுதற்குரியரென்பதையும், முதியவன் வடிவங்கொண்டு தோன்றி யாவரும் மூத்தற்குரியரென்பதையும், பிணவடிவங்கொண்டு தோன்றி யாவரும் இறத்தற்குரியரென்பதையும் புலப்படுத்திய சுத்தாவாஸதேவர் துறவறநெறியையும் கௌதமருக்கு அறிவுறுத்த நினைந்து துவராடையையணிந்த ஒரு † துறவியாகிவந்து, "சித்தார்த்த" என்று அழைக்கக் கௌதமர் விழித்துப்பார்த்து, "நீயார்?" என்றார். அவர், "நான் ஒரு ‡ ஸ்ரீமணன், துக்கத்தை நினைந்து நினைந்து என்மனம் இடை

* சுத்தாவாஸதேவரென்பார் பிரமகணங்களுள் ஒருவகையார்.

† பிணியாளன்றோற்றமுதல் இத்துறவியின் தோற்றமிறுதியாகிய நான்கையும் ஒரேநாளில் கௌதமர் கண்டனரென்று கூறுவதுமுண்டு.

‡ ஸ்ரீமணனென்பதற்குத் துன்புறுத் தவஞ் செய்பவனென்று பொருள்; இச்சொல் ஸ்ரீவான்மீகிராமாயணத்திலும் வந்துள்ளது.

விடாது வருந்தாநின்றது; இத்துக்கத்தினின்றும் நீங்கி என்றும்
அழியாததும், ஆதியந்தமில்லாததும், நட்புப் பகைமையற்றதும்,
ஏகாந்தமானதும், ஆநந்தமயமாக உள்ளதுமான ஒரு நிலையை
யடைதற்கு அவாவுகின்றது; ஆதலால், ஊர்ப்புறத்தே தங்கி ஐம்
புலன்களையும் அடக்கிச் சமாதியிலிருந்து கொண்டு உயிரைப்
பாதுகாத்தற்கு வேண்டியவளவே உணவை இரந்து உண்டுவாழும்
பிக்ஷுக்களின் நிலைமையை விழைந்தேன்'' என்று கூறி அவர்
கள் பெருமையையும் எடுத்துச்சொல்லிவிட்டுச் சென்றனர். அது
கேட்டவுடனே துறத்தற்குத் துணிந்த கௌதமர் அவ்விடத்தி
லிருந்தும் எழுந்து அரண்மனை சென்று, தாம் துறவுபூண இச்
சித்திருத்தலைத் தந்தைக்குத் தெரிவித்தார்; அதனைக்கேட்ட
சுத்தோதனன், மனங்கலங்கிக் கண்ணீர்பெருக, "ஐய, அதற்கு
இதுகாலம் அன்று; எம்மைப்பாதுகாத்து நெடுங்காலம் அர
சாண்டபின்னரே அது விரும்பத்தக்கது'' என்ன, கௌதமர்,
"பிறப்புப்பிணி மூப்புச்சாக்காடாகிய இத்துன்பங்களை ஒழித்தற்
குரிய வழியை அறிந்துகொண்டாலன்றி இங்கு நில்லேன்''
என்று உறுதியாகக் கூறிவிட்டுத் தமது உறைவிட மடைந்தார்;
அரசன் அவருடைய மனத்தை வேறுபடுத்தும்படி ஆடல் பாடல்
களில் வல்ல மகளிரைப் பின்னும் அவர்பால் அனுப்பினான்;
அவர்கள் வந்து இயன்றவரையில் முயன்றும் அம்முயற்சி சிறிதும்
பயன்படவில்லை. அவர்களுடைய அழகிய உருவங்கள் வைராக்
கியமிருந்த கௌதமருக்கு அருவருக்கத் தக்கனவாகத் தோற்
றின; இப்படியிருக்கையில், * ஒருநாள் ஆறு சென்று நீராடிய
கௌதமர் அரண்மனை செல்லுதற்குத் தேரேறுகையில் ஒருவன்
வந்து, †"உமக்கு மகன்பிறந்தான்'' என்றனன். அதுகேட்ட
கௌதமர், "பந்தத்தின்மேற் பந்த முண்டாயிற்றே! இத்துன்
பக்கடலைக் கடப்பது எப்படி?'' என்று கவலையுற்றுக்கொண்டே
தேரூர்ந்து அரண்மனைக்குச் செல்வாராயினர்; அங்ஙனஞ் செல்லு
கையில் அவருடைய தேருக்கு முன்னும் பின்னும் பலவாத்தியங்

---

* அக்காலம், கௌதமர் நான்காவது தோற்றங்கண்டதினத்தின் பிற்பகலென்று சொல்லுவதுமுண்டு.

† "உமக்கு மகன்பிறந்தான்" என்பதைக்கேட்ட கௌதமர் அம்மகன் தமது புத்தியாகிய 'திங்களை விழுங்கவந்த இராகுவென்று சொன்னாரென்றும், அதனால் அப்புதல்வனுக்கு இராகுலனென்னும் பெயர் பின்பு இடப்பட்டதென்றுஞ் சொல்லுவர்.

கள் முழங்கின; நகரத்தார் பலரும், "நம்மரசனுக்குப் பௌத்திரன் பிறந்தான்" என்று மகிழ்ந்து புகழ்ந்துகொண்டேயிருந்தார்கள்; ஆடல் பாடல்கள் நிகழ்ந்தன; அவற்றுள் யாதொன்றும் கௌதமர் மனத்திற்கு இன்பந்தரவில்லை; அவருடைய உறவினளாகிய மங்கையொருத்தி, "இக்குழந்தையின் தந்தை பாக்கியவான்; தாயும் பாக்கியவதி; மனைவியும் பாக்கியவதி" என்று பாடிய பாட்டொன்று, துக்க நிவாரணத்திற்குரியவுபாயம் யாதென்று இடைவிடாமற் சிந்தித்துக்கொண்டே செல்கிற அவருக்கு அப்பொழுது நன்னிமித்தமாகவிருந்து இன்பந் தந்தது; அவர் அந்த * உபஸ்ருதிக்காக அவள்பால் நன்றிபாராட்டுவாராய்த் தமது கழுத்திலிருந்த விலையுயர்ந்ததான முத்துமாலையை அவளுக்கு நன்கொடையாகக் கொடுத்தார்; அதைப் பெற்றுக்கொண்டவுடன் அம்மங்கை கௌதமர் தன்னிடத்திலுள்ள விருப்பத்தாலளித்தாரென்றும் பிற்காலத்தில் தான் அவருடைய முதன்மையுள்ள மனைவியாக ஆதல்கூடுமென்றும் மனோராச்சியஞ் செய்வாளாயினள்.

அப்பால் அவர் அரண்மனைசென்று அங்கே நிகழ்ந்த நாடக முதலிய காட்சிகளுள் ஒன்றையும் பாராட்டாமலே அன்றிரவின் முற்பாகத்தில் அயர்ந்து நித்திரைசெய்து நள்ளிரவில் திடீரென்று விழித்துக்கொண்டு, தான் உள்ளேயிருக்கும்பொழுது தன்வீடு தீப்பற்றிக்கொண்டதென்றதை அறிந்த ஒருவன் அவ்வாபத்தினின்று நீங்குவதற்கு எவ்வளவு பரபரப்புடனெழுவானோ அவ்வாறே யெழுந்து, எல்லாவற்றையுந் துறந்து வேற்றிடஞ் செல்லுதற்குத் துணிந்தார். துணிந்தபொழுது, மேற்கூறிய சுத்தாவாஸ தேவராற் கதவுகள் திறந்துவைக்கப்பட்டன; கௌதமர், தம்மைச்சூழ்ந்து தாறுமாறாகப் படுத்துக்கொண்டிருந்த மங்கையர்களின் கூட்டத்தினின்றும் நீங்கிப் புறத்தேபோந்து அங்கே விழித்துக்கொண்டிருந்த சந்தகனை அழைத்துத் தம்முடைய கண்டகமென்னும் பெயருள்ள குதிரையை விரைவிற் கொண்டுவரும்படி அவனுக்குக் கட்டளையிட்டார். சந்தகன், மஹாராஜாவின் அநுமதியின்றி இளவரசன் கட்டளையை அவ்விரவில் நிறைவேற்றலாமோவென்று சிறிதுபொழுது சிந்தித்துக்கொண்டே நின்று பின்பு மேற்கூறிய தேவருடைய அருளால் துணிவுண்டாகப் பெற்றுக் குதிரையைக்கொணரச் சென்றான்; அவன் சென்றவுடன்,

* உபஸ்ருதி - உதவியானசொல்.

எல்லாவற்றையும் துறத்தற்குத் துணிந்த கௌதமர், இல்வாழ்க்கையிலுள்ள வலிய பற்றை அப்பொழுதே முற்றுந் துறக்கலாற்றாமல், தம் குழந்தையைக் கையிலெடுத்துப் பார்த்தற்கு நினைந்து சென்று, அந்தப்புரத்திற் குழந்தையுடன் யசோதரை சயனித்திருக்கும் அறையின் கதவை மெல்லத்திறந்து, அங்கே மலரணை மேலே யசோதரையால் அணைப்புண்டு அவளோடு துயிலுங் குழந்தையைத் தீபவொளியாற் கண்டு, "இக்குழந்தையை யெடுத்தால் இவள் விழித்துக்கொள்வாள்; விழிப்பின் நம்முடைய செலவிற்கு அது பெருந்தடையாகும்" என்று நினைந்து, இன்னது செய்வதென்று தெரியாமல் மயங்கி அவ்விருவரையும் காதலோடு பார்த்துக்கொண்டே வாயிற்படியிற் சிறிதுபொழுது நின்றார்; நின்றவர் தடுமாறிக்கொண்டிருந்த மனம் பின்பு தெளியப்பெற்று, "நாம் இவளுக்கும் இவனுக்கும் பிற்காலத்தில் ஞானாசிரியனாகவும் ஆதல்கூடும்" என்று எண்ணித் துணிந்து புறப்பட்டார். அவர் அங்ஙனம் வெளிப்பட்டதினம் பூர்ணிமையென்பர். அவ்வாறு அவர் வெளிப்பட்டவளவிற் சந்தகன் குதிரையைக் கொணர்ந்து நிறுத்தினான். அவர் அதில் ஏறிச் செலுத்திய போது நான்குதேவர்கள் அதன் குளம்புகளின் ஓசைகள் ஒருவருடைய செவிக்கும் புலப்படாவண்ணம் அடக்கிக்கொண்டு உடன் சென்றனர். இளவரசராகிய கௌதமர், "உலகத்திற் பிறப்புப் பிணி மூப்புச் சாக்காடாகிய துன்பங்களையெல்லாம் முற்றும் போக்குதற்குரிய வழியை அறிந்தாலன்றி மீளேன்" என்று உள்ளத்தில் உறுதிகொண்டு ஊக்கத்துடன் * செல்வாராயினர்.

அப்பொழுது அவருக்குப் பிராயம் இருபத்தொன்பது. கௌதமர், அகத்துறவுபூண்டு எல்லாவற்றிலும் அருவருப்புற்றுத் தந்தை முதலியோரையும், அரண்மனையையும், பெருஞ் செல்வத்தையும், மனைவியையும், பிள்ளையையும் பிரிந்துசென்றதை † மஹாபிநிஷ்கிரமணமென்று கூறுவர்.

பாவத்திற்குக்காரணமான இச்சைகளை உண்டாக்குந் தெய்வமாகிய மாரனென்பவன் இப்படி அரண்மனையைவிட்டுப் புறப்பட்ட

---

* கௌதமர் இங்ஙனஞ் சென்றகாலம், ஈசான சகாப்தத்தில், கூகூஞும் வருடமென்றும், வாரம் வெள்ளிக்கிழமை யென்றும் சொல்லுவர்.

† திரிபிடகத்தில் இச்செய்தியைக்கூறும் பாகத்திற்கு மஹாபிநிஷ்கிரமணஸூத்திரமென்றுபெயர்; மஹாபிநிஷ்கிரமணம் - பெருந்துறவு.

கௌதமரைத் தொடர்ந்துவந்து, "நீர் துறவன்மின்; துறவா தொழியின், இன்று முதல் ஏழு நாளைக்குள் நான்கு மஹாத்வீபங்களுக்கும் உம்மை அரசனாக்குவேன்" என்று சொல்லித் தடுத்தான். அவர் அத்தடையை மதியாமற் சென்றார்; செல்லவே மாரன் வெல்லுதற்குரிய சமயமும் தனக்கு எப்பொழுது வாய்க்குமோவென்று நினைந்து நிழல்போலவே அவரைத்தொடர்ந்து செல்வானாயினன்.

சென்ற கௌதமர், அவ்விரவில் நாகர்களும் தேவர்களும் தமக்கு இயல்பாகவுள்ள ஒளியால் வழிகாட்டிக்கொண்டு செல்ல, ஒரு கணமேனும் இடையே தங்காமல் நல்லாசிரியர் எங்கே கிடைப்பாரென்ற கவலையோடுஞ் சென்று கோலிய தேசத்துக்கு அப்பாலுள்ள அநோமநதிக்கரையைச் சூரியோதயத்திற்கு முன்னமே அடைந்தார். அடைதலும் கண்டகமென்னுங் குதிரை அங்கு நின்றுவிட்டது. அப்போது அங்கேயுள்ள பார்க்கவரென்னும் தாபதருடைய தவப்பள்ளியையும் அதில் வைக்கப்பட்டுள்ள பிக்ஷைப் பாத்திரங்கள் பலவற்றையுங் கண்டு, கபிலவாஸ்துவிலிருந்து சலிப்பின்றி மூன்று யோசனையளவு விரைந்து வந்ததான குதிரை அத்தவப்பள்ளியை அணுகியவுடன் தானாகவே நின்றுவிட்டதைத் துறவை விரும்பிவந்த தமக்கு நன்னிமித்தமாகக் கொண்டு களிப்புற்றார். பின்பு அவர் தம்முடன் வந்த சந்தகனை நோக்கி, "அடைய வேண்டுமென்று பலநாளாக நினைத்துக் கொண்டேயிருந்த இடத்தை இப்பொழுது அடைந்தேன்; நம் உறவு இன்றோடு முடிவுபெற்றது" என்று கூறித் தமது கழுத்திலிருந்த விலையுயர்ந்த கண்டசரத்தைக் கழற்றி அவனுக்கு நன்கொடையாக இன்சொல்லோடு கொடுத்தார்; கொடுத்தவர் பின்பு தமது முடிமணியையெடுத்து அவன் கையில் வைத்து, "இதனை நான் அன்புடன் கொடுத்ததாகச் சொல்லி அரசனுக்குக்கொடு; என்னிடத்திலுள்ள காதலை முற்றும் மறக்கும்படி நான் சொன்னதாகத் தெரிவி; இல்வாழ்க்கையின் வழியாகத் துக்கக்கடலை நீந்துதற்குரிய தெப்பம் எனக்குக் கிடையாமையினாலேயே நான் பிரிந்தேனென்று சொன்னதாகவும் விண்ணப்பஞ் செய்" என்று கூறினர். அதைக்கேட்டு மனம் வருந்திய சந்தகன், "இப்பொழுது துறத்தல் தக்கதன்று" என்று பல வகையாக மறுக்கவும் அவர் அதற்கு இணங்காததுபற்றிப் பின்பு, "நானும் உடன் வருவேன்" என்றான். கௌதமர் அதற்கு உடன்படாமற் குதிரையின் முதுகைத்தடவித்

தட்டிக்கொடுத்து அதற்கு இனிய வார்த்தைகளைச் சொல்லிவிட்டு அதைக்கொண்டு செல்லும்படி வற்புறுத்திக்கூறி அவனுக்கு விடை கொடுத்தார்.

அது நிகழ்ந்தபின் கௌதமர் அநோமநதியின் மணலில் தங்கி உடைவாளால் தமது மயிர்முடியை அறுத்தெறிந்துவிட்டு அங்குச் சிறிதுபொழுது உண்மையை * ஆராய்ந்துகொண்டே யிருந்தார். இது சந்தகனுக்கு விடையளித்ததற்கு முன்பு நிகழ்ந்ததாகக் கூறுவதுமுண்டு.

அங்ஙனம் ஆராய்ந்துகொண்டிருக்கையில், மேற்கூறிய சுத்தாவாஸதேவர் துவராடையுடுத்து வில்லும் அம்பும் தாங்கிய ஒரு † வேடனாகத்தோன்ற, கௌதமர் தம்முடைய பட்டாடையை அவ்வேடனுக்குக் கொடுத்துவிட்டு அவனுடைய துவராடையைத் தாம் வாங்கி யுடுத்திக்கொண்டு உண்மையை அறிவுறுத்தும் பெரியோரைத் தேடிச்சென்றார்.

கௌதமரிடத்தில் விடைபெற்று, அவர் கேசத்தை அறுத்தெறிந்ததைப் பார்த்துக்கொண்டே நின்று, அவர் கட்டளையை மறுத்தற்கஞ்சி வருந்திச் சென்ற சந்தகன் கண்ணீர் பெருகக் காலோய்ந்து மனம் புழுங்கிக் குதிரையுடன் நகர்க்கு மீண்டான்.

பெரியோரைத் தேடிச்சென்ற கௌதமர், காற்று சுத்தநீர் மலர்கள் இளங்குருத்துக்கள் காய்கள் கனிகள் கிழங்குகள் ஆகிய இவற்றுள் ஏதாவதொன்றையேனும் எடுத்த பிச்சையையேனும் உண்டு, நீரிலே நின்றும் நெருப்பிலே நின்றும் இன்னும் பலவாறாக ஒழுகியும் அருந்தவம் புரிந்து வாழும் முனிவர்கள் பலரை வழியிடையிற்கண்டு அவர்களோடு அளவளாவி, "துக்க நீக்கத்திற்குரிய வழி யாது?" என்று அவர்களைக்கேட்டு, அவர்கள் கூறியவைகள் தம் மனத்திற்குப் பொருந்தாமையால் அவற்றை மறுத்துரைத்து, அவ்விடத்தை நீங்கி அவர்களுடைய சொற்படி சூரி

---

* இவர் தங்கி ஆராய்ந்துகொண்டிருந்ததற்கு அறிகுறியாக அங்கே பிற்காலத்தாரால் மேல் வளைவுள்ள மண்டபமொன்று கட்டப்பட்டதென்று கூறுவர்.

† வேடனைக்கூறிய இவ்விடத்தில் ஏழையாகிய வழிப்போக்கனொருவனைச் சொல்வதுமுண்டு.

யாஸ்தமயத்திற்குப்பின் மகததேசத்துள்ள * பாண்டரமலையைச் சார்ந்து, அம்மலைக் குகையில் தவஞ் செய்து கொண்டிருக்கும் † அராளராம முனிவரைக்கண்டு வணங்கி, "பிறப்பு முதலிய துக்கங்களை யொழித்தற்குரிய உபாயத்தை அடியேனுக்கு உரைத்தருள்க" என்று விண்ணப்பித்தார். அராளராமர் யோக மார்க்கத்தை உபதேசிக்க, கௌதமர் அந்நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுவாராயினர்.

கபிலவாஸ்துவில் முன்பு தெய்விகமாகத் திறக்கப்பட்டுக் கௌதமருக்கு வழியைக்கொடுத்த அரண்மனைக் கதவுகளெல்லாம் மீட்டும் மூடினபடியே யிருந்தன. அவைகள் அவ்வாறிருக்கவும், கௌதமரும் குதிரையும் குதிரைக்காரனுமே இல்லாமையையறிந்து எல்லோரும் திகைத்து வருந்தி எங்கும் தேடுவாராயினர்.

அப்பொழுது, குதிரையுடன் அழுதுகொண்டே மீண்ட சந்தகன் நிகழ்ந்தவற்றை அவர்களுக்குத் தெரிவித்தான். அவற்றைக் கேட்ட அவர்கள் துக்கக்கடலில் ஆழ்ந்தார்கள்.

தன் மகன் துறந்தானென்பதை அறிந்த மஹாப்பிரஜாவதி கௌதமி, பெருங்காற்றால் தாக்குண்ட இளவாழை போலக் கை கால் முதலிய அவயவங்கள் சோர்ந்து மூர்ச்சித்துச் சிறிது பொழுது கீழே விழுந்து கிடந்து பின்பு ஒருவாறு உணர்ச்சியுற்று எழுந்து மிகவும் பெருமூச்செறிந்து கொண்டு, "அந்தோ! இக்ஷ்வாகு குல சிகாமணியே! இருண்டு வலப்புறத்தே சரிந்து தூய்மையையுடைய தாய் அழகிதாகி விளங்கிக் கட்டுண்ணுதபோது பூமியைத்தொட்டும் முடித்தபொழுது கிரீடம் போன்று திரண்டும் பளபளப்பாக விருந்த அந்தக்குடுமி குறைக்கப்பட்டுப் புல்லிற் கிடக்கின்றதே! ஆ! அந்தத் திரண்ட தோள்கள், அந்தச் சிங்கநடை, விடையேற்றின் கண்கள்போன்ற அந்தக் கண்கள், பளபளப்பான பொன் போல் ஒளியை வீசி விளங்கும் அந்தத் தேகம், அந்தச் சதுரமார்பு முதலியவற்றை யுடையாய்! நீ துன்பத்திற்கிடமாகிய காட்டிற் சென்றனையே! தூய்மையினும் நிறத்தினும் மென்மையினும் அல்லி

---

* வெண்ணிறமுடைமையால் இம்மலை இப்பெயர் பெற்றது; இக்காரணம்பற்றிச் சுவேதகிரியென்றும் கூறப்படும்.

† இப்பெயர் ஆராடருத்திரராமர், ஆராடராமர், அராளகாலராமரெனப் பலவாறாகக் காணப்படுகின்றது.

மலர் போன்ற அப்பாதங்கள் கற்களாலும் முட்களாலும் கிழிக்கப் படுகின்றனவே! ஆ! அப்பாதங்கள் அத்துன்பத்தை எவ்வாறு பொறுக்கும்? காவலுள்ள இராசமாளிகையிற் பிறந்து இனிது வளர்க்கப்பெற்று, மிகவும் மெல்லிய ஆடையையுடுத்துச் சிறந்த நறு நீரில் ஸ்நானமாடி இனிய அறுசுவையையுடைய நால்வகை அடிசிலு முண்டு விளங்கிய நீ இப்பொழுது தாக்கி விறைக்கச்செய்யும் குளிர் காற்றில் அடிபட்டுப் பட்டினியுற்றுப் பனிக்குள்ளாகி வருந்துகின் றனையே! மிக்க வெப்பக் காலத்திலும் மிக்க தட்பகாலத்திலும் இளைப்பாறுமிடம் உனக்கு அங்கே எவ்வாறு கிடைக்கும்?'' என்று தன் பிள்ளையை நினைந்து நினைந்து பிரலாபித்து விம்மிவிம்மி ஆற் றொணாதவளாய் மீண்டும் நிலத்திலே விழுந்துகிடந்தாள். ஏவல் மகளிர் அவளையெடுத்துத் தாங்கிக் கண்ணீர் துடைத்துத் தேற்று வாராயினர்.

யசோதரை, தன் உயிர்த் துணைவர் துறந்தாரென்பது கேட்டுக் கலங்கி நெஞ்சுருகிக் கல்லும் மரமும் இரங்கும்படி வேய்ங் குழல் அழுமாறுபோல அழுது அவருடைய அவயவங்களை முன் னிலைப்படுத்திக்கொண்டு, "தாமரை மலர்போலும் திருவடிகளே! உமக்கு யான் செய்த குற்றம் யாது? முன்பு தவிசாகி என்னைச் சுமந்து ஆளுந்தன்மையையுடைய தொடைகளே! அளிக்கத்தக்க இப் பெண்ணுயிர் தான் அளியாக்கால் வருந்துமென்று நீங்கள் நினை யாமற் பிரிந்தீர்; இது தகுமோ? எனக்கு மாலையும் துகிலுமேந்திக் குங்குமமெழுதிப் பூந்தாதை அளகத்திலே அப்பிச் சிவந்து அன் புற்றிருந்த விரல்களே! என்னைப் பாதுகாக்கத்தக்க நீங்களும் அவ ரெண்ணியதையே எண்ணினீர்; இஃது அறமோ? தோள்காள்! அவர் இனி நுகரேமென்று கைவிட்ட என்னை நீங்கள் அணைத்துத் தழுவிக்கொள்ளீர்; நீங்களும் நெஞ்சம் வலியீராகி நிற்பீரோ? எனக்கு அணையாய மார்பே! என்பாற்கொண்ட நட்பைக் கைவிட்டு நீங்கினையே! கழுநீர்த்தாரே! அவர்போல நீயும் என்னைப் பாது காவாமற் கைவிட்டனையே! செவ்விய நாவே! அவர்போல நீயும் அருளின்றி என்னை இகழ்ந்தனையே; இங்ஙனமிகழ்தற்கு என்னிடத் துக்கண்ட குற்றம் யாது? அதனைக் கூறாய். கண்களே! முன்பு என் னைப் பார்த்துப் பேரின்பமுற்று எனக்குப் பேரின்பத்தைத்தந்த நீர் இப்பொழுது என்பால் அருளிலிராயினீர்; இதற்குக் காரணம் யாது? எனது வண்ணங் கெட்டபடியைக் கூறுமின்'' என்று பல வாறு பிரலாபித்து விம்மிவிம்மிப் பின்னும் வருந்திப் புலம்புவாளா

யினள்; அதுதெரிந்து அந்நகரின் எப்புறத்துமுள்ள மாந்தர் பலரும் வந்து ஒருங்குகூடி அழுதலாலே, அந்தப்புரத்திற் கடலொலிபோலே ஓரொலி உண்டாயிற்று; நகரமுற்றும் கலங்கிற்று.

சுத்தோதனன் இவ்வாறு நிகழுமென்பதை முன்னமே அறிந்தவனாகவிருந்தும் அவன் அப்போதடைந்த வருத்தத்திற்கு அளவில்லை. மகப்பிரிவினும் துயர்வேறு யாவதே.

அவ்வளவிலே இராசபுரோகிதர் சுத்தோதனனைத்தேற்றி, “அரசிளஞ் சிங்கத்தை விரைவிற்கொணர்வேன்” என்று சொல்லி விட்டு ஒரு மந்திரியோடு கூடிப் பலவிடத்தும் தேடிக்கொண்டு போய் அராளராமமுனிவருடைய தவச்சாலைக்கருகே கௌதமரைக்கண்டு பிரிவாற்றாமல் அரசன் முதலியோர் படும்பாட்டைச் சொல்லி வருந்தி அழைத்தார்; அழைத்தவர்க்குக் கௌதமர், “அழகிய இராசமாளிகை எனக்குக் கனல்நிறைந்த இடம்போலும்; இனிமையுள்ள உணவுகளை ஆக்குதற்குரிய மடைப்பள்ளியோ நஞ்சினை உண்பிக்கும் இடம்போலும்; எல்லாம் துக்ககரமாகவேயுள்ளன; ஆதலால், நிலைத்த இன்பத்தைப் பெறவேண்டுமென்பதே எனது கருத்து; அது முற்றுப்பெற்றாலன்றி மீளேன்” என்று மறுத்துரைத்தார். அவ்விருவரும் அளவற்ற துயரமுற்று மீண்டுபோனார்கள்.

அவர்கள் போனபின் ஒருநாள் பிக்ஷை எடுத்தற்காக இராசகிருகநகரத்தை யடைந்த கௌதமர், அந்நகரத்தரசனாகிய *பிம்பஸாரன் பலபசுக்களைப்படுத்து யாகஞ் செய்கின்றானென்பதைக் கேள்வியுற்று மிக்க பரபரப்புடன் அந்த யாகசாலைக்குச் சென்று கொல்லாமையாகிய நல்லறத்தின் பெருமையை விரித்துக்கூறி அவ்வேள்வியில் நிகழுங்கொலையை மாற்றிவிட்டு அவ்விடத்திற் சிலபகல் இருக்கவேண்டுமென்று வேண்டிய அவனுக்கு, “நான் உண்மையையுணர்ந்த பின்புதான் இவ்விடம் வருவேன்” என்று வாக்களித்துவிட்டுச் சென்றார்.

அதுதொடங்கிக் கொல்லாமையாகிய நல்லறத்தைப் பிம்பஸாரன் மேற்கொண்டு ஒழுகிவந்தான்.

---

* பிம்பவம்சமென்று ஒருவம்சமுண்டென்று தெரிகின்றது; மாளவிகாக்கினிமித்திரீயமென்னும் வடநூலில் அக்கினிமித்திரனென்பவன் பைம்பிகனென்று சொல்லப்படுகிறான்.

அக்காலந் தொடங்கிக் கௌதமருக்குக் கௌதமபிக்ஷு, பிக்ஷுகௌதமரென்னும் பெயர்கள் வழங்கலாயினவென்பர்.

கௌதமர், அராளகாலமமுனிவர் உபதேசித்த வழியிலேயே பலநாள் ஒழுகிவந்து அதனால் உண்மை விளங்காததுபற்றி அவரை நீங்கி உருத்திரகரென்னும் வேறொரு முனிவரை ஆசிரியராக அடைந்து அவர் உபதேசித்தவழியிலும் பலநாள் முயன்றொழுகி ஆராய்ந்து வந்தார். அதனாலும் கௌதமருக்கு உண்மை புலப்படவில்லை.

அப்பால் அவர் துக்கபரம்பரையைப் போக்கும் வழியை அறிந்துகொள்ளவேண்டி ஞானாரணியமெனப்படும் * உருவேலா வனத்தைச்சார்ந்து அங்கேதவஞ்செய்துகொண்டிருந்த கௌண்டின்ய குலபுத்திரர், தசபலகாசியபர், பாஷ்பர், அசுவஜித், புத்திரர் என்னும் ஐந்துமுனிவர்களை அடைந்து அளவளாவி அவர்களோடு அவ்வனத்தில் அருந்தவம் புரிவாராயினர்.

இவ்வாறு பலநாள் சென்றபின் ஒருநாள் கௌதமர், உண்மையை அறிந்துகொள்ளுதற்குரிய வழியை ஆராய்ந்துகொண்டே உலாவுங்காலத்தில், பலகாலம் பட்டினியுற்று நோற்றுவந்த இளைப்பால் நிற்கலாற்றாது மூர்ச்சித்துக் கீழேவிழுந்துவிட்டார். மேற்கூறிய துறவிகள் ஐவரும் இவரிறந்தாரென்றே நிச்சயித்தார்கள். சிறிதுபொழுது சென்றபின் கௌதமர் தெளிவடைந்து எழுந்து, "இப்படிப் பட்டினியுற்றுச் செய்யும் தவத்தாலே யாதும் பயனில்லை" என்று நினைந்து கிடைத்தவுணவை †உண்ணத் தொடங்கினர். தொடங்கவே மேற்கூறிய ஐந்து தாபதர்களும், "இவர் விரதபங்கமுற்றார்" என்று வெறுப்புற்று மதியாமல் இவரை விட்டு நீங்கி வேறிடஞ் சென்றார்கள்.

---

* உருவேலாவென்பது நைரஞ்சரை யென்னும் நதியின் கரையிலுள்ளதென்று தெரிகிறது. இந்த நதி இக்காலத்துப் பல்குனியென்று வழங்கப்படும்; நைரஞ்சரையென்பது பௌத்த நூல்வழக்கு.

† 'உணவால் உடம்பும் உடம்பால் உணர்வும் ஆகுமென்பது பௌத்தர் கொள்கை' என்பர் நீலகேசி உரையாசிரியர்; "மற்றுடம்பு சார்வாக வுணர்வெழு மெழுதற்குப், பெற்றிமைப் பறையடிப்பப் பெறுமொலியே யுரையாதோ" என்பது நீலகேசி, புத்தவாதச்சருக்கம், ௫உ-ஆம் பாட்டுரையிற் கண்ட செய்யுள்.

மஹாபிநிஷ்கிரமணத்திற்குப் பின் உண்மையை அறிந்து கொள்ளுதற்குச் செய்த முறையில் கௌதமருக்கு இவ்வாறு ஆறு வருடங்கள் சென்றன.

மேற்கூறிய ஐந்து தாபதர்களும் நீங்கியபின் அவர் நைரஞ்சரையென்னும் ஆற்றின் கரையை யடைந்து ஆங்குள்ள ஓர் * அரச மரத் தடியில் இருந்துகொண்டு † இருபத்தெட்டு நாட்கள் பகலும் இரவும் அயிலுதலும் துயிலுதலுமின்றி உண்மையை ஆராய்ச்சி செய்துகொண்டே யிருந்தார். இருபத்தொன்பதாவது தினத்தின் காலையில் அருகேயுள்ள ஊரிலிருப்பவனாகிய பலனென்னும் இடையனுடைய மகள் ‡ ஸுஜாதை யென்பவள், தன்னுடைய வழிபடு தெய்வத்திற்கு நிவேதனஞ் செய்யச் சமைத்துக் கையில் வைத்துக் கொண்டிருந்த பாலன்னத்தை ஊட்டினள். அதனையுண்டு கௌதமர் ஒளியால் விளங்கினர். §

அப்பொழுது சீலவிரோதியாகிய மாரனென்பவன் தன் அரசாட்சிக்குக் கேடு வந்துவிட்டதென்று வருத்தமுற்றுக் கௌதமருடைய மனத்தை வேறுபடுத்த நினைந்து காமம், வெகுளி, மயக்கமென்னும் தன் புத்திரிகள் மூவருடன்வந்து பலவாறு முயன்று மிகப்போர்செய்தும் அவருடைய மனம் சிறிதும் வேறுபடவில்லை.

இங்ஙனம் வேறுபடாது நின்ற கௌதமபுத்தருடைய மனவுறுதியைப் பாராட்டிப் பழைய பௌத்த கவிகள் கூறிய பாடல்கள் வருமாறு:—

---

* இதனடியிற் கௌதமருக்கு ஞானோதயமானமையின், இதுமஹாபோதியென்றுபௌத்தராற் கூறப்படும்; "பணையைந் தோங்கிய பாசிலைப் போதி" (சிலப்பதிகாரம், நாடுகாண்காதை, ௧௧) என்றதனால், இவ்வரசமரம் ஐந்துகிளைகளையுடையதென்று தெரிகிறது. இது பௌத்தர்களால் திசை நோக்கித் தொழப்படுவது.

† நாற்பத்தொன்பது நாட்களென்று சொல்வதுமுண்டு.

‡ இப்பெயர், நந்தையென்றும் விசாகையென்றுங் காணப்படுகின்றது.

§ 'போதிவ்ருக்ஷத்து நாற்றிசையும் எவ்வேழுநாள் போதிவ்ருக்ஷம் பார்த்து நின்று உபவசித்துப் பின் விசாகையென்பாள் பொற்கலத்திற் சோறிடப் புத்தன் உண்டானென்பதுமுண்டு' என்பது நீலகேசி, மொக்கலவாதச்சருக்கம், ௯௧-ஆம் பாட்டுரை. அவ்விருபத்தெட்டு நாட்களுள் முதலேழுநாட்களிற் கௌதமர் தியானஞ் செய்துகொண்டே யிருந்தாரென்றும், இரண்டாம் ஏழுநாட்களில் மாரன் அவருடைய உள்ளத்திற் பலவேறுபாடுள்ள தீய எண்ணங்களை யுண்டாக்கினனென்றுந் தெரிகின்றது.

* "வாடாப் போதி மரகதப் பாசடை
மாநிழ லமர்ந்தோ னெஞ்சம் யார்க்கும்
அருளின் நீந்தே ணிறைந்துநனி நெகிழ்ந்து
மலரினு மெல்லி தென்ப வதனைக்
காமர் செவ்வி மாரன் மகளிர்
நெடுமா மழைக்கண் விலங்கிநிமிர்ந் தெடுத்த
வாளும் போழ்ந்தில வாயின
யாதோ மற்றது மெல்லிய வாறே."

† "தாமநறுங் குழன்மழைக்கட் டளிரியலார் தம்முன்னர்க்
காமனையே முனந்தொலைத்தாற் கண்ணோட்டம் யாதாங்கொல்"

கௌதமருடைய உள்ளத்தை வேறுபடுத்தற்குரிய வன்மை தனக்கில்லாமையைத் தெரிந்துகொண்ட ‡ மாரன் தோல்வியுற்றுத் தன் உறைவிடமடைந்தான். கௌதமருடைய உள்ளம் ஞான வொளியால் விளங்கிற்று.

இங்ஙனம் மாரனை வென்று வீரனாகிச் சலனமற்றுச் சில சமாதியிலிருந்த கௌதமருக்கு மேற்கூறிய § இருபத்தொன்ப தாவதாகிய தினத்தின் இரவில் பழம்பிறப்புணர்ச்சியும் தத்துவ ஞானமும் முறையே உண்டாயின. அப்பொழுது முதலில் முற்பிறப்பிற் பாவஞ் செய்தோர் இப்பிறப்பில் வருந்துதலையும் சீவ காருண்ணியம் பூண்டோர் இன்பமுற்று வாழ்தலையும் அவர் தம்முடைய ஞானக்கண்ணால் அறிந்தார். அறிந்தவர் பின்பு காமம் வெகுளி மயக்கமென்னும் இவற்றையுடையவர்கள் துக்கத்துக்கே உரியவர்களாகிப் பிறந்து பிணி வாய்ப்பட்டு மூத்து இறக்கிறார்

---

* இது, தொல்காப்பியப் புறத்திணையியலில், "அறுவகைப்பட்ட" என்னுஞ் சூத்திரத்திலுள்ள, 'மருவில்..........தேயமும்' என்பதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதிய உரையிலும், வீரசோழியம் பொருட் படலத்துள்ள "நாற்குலப்பக்கம்" என்னுங் கலித்துறையுரையிலுங்கண்ட செய்யுள்.

† இது, வீரசோழியம், யாப்புப்படலம், கக-ஆம் கலித்துறை யுதாரணச் செய்யுள்.

‡ மாரன் தோல்வியுற்றுப் போனபின்பு ஸுஜாதை பாலன்னமளித்ததாகச் சொல்வதுமுண்டு.

§ புத்தருக்கு ஞானோதயமான தினம் வைசாக சுத்தபூர்ணிமையென்பர்; அதனால், ஒவ்வொருவருடத்தும் அந்தத்தினம் சிறந்த திருநாளாகப் பௌத்தரால் கொண்டாடப்படும்; இதுபற்றியே, "மதிநாண் முற்றிய மங்கலத் திருநாட், பொதுவறி விகழ்ந்து புலமுறு. மாதவன்" (கO-ஆம் காதை, அரு-ச) என்றார் மணிமேகலையிலும்.

களென்றும், அந்தஇறப்பு பிறப்பிலிருந்தும், பிறப்பு கருமக் கூட்டத்திலிருந்தும், கருமக்கூட்டம் பற்றிலிருந்தும், * பற்று வேட்கையிலிருந்தும், வேட்கை நுகர்விலிருந்தும், நுகர்வு ஸ்பரிசத்திலிருந்தும், ஸ்பரிசம் வாயிலிலிருந்தும், வாயில்கள் நாமரூபத்திலிருந்தும், நாமரூபம் விஞ்ஞானத்திலிருந்தும், விஞ்ஞானம் செய்கையிலிருந்தும், செய்கை பேதைமையிலிருந்தும் உண்டாகின்றனவாதலால், பிறப்பை நீக்க இறப்பும், கருமக்கூட்டத்தை நீக்கப் பிறப்பும், பற்றை நீக்கக் கருமக்கூட்டமும், வேட்கையை நீக்கப் பற்றும், நுகர்வை நீக்க வேட்கையும், ஸ்பரிசத்தை நீக்க நுகர்வும், வாயிலை நீக்க ஸ்பரிசமும், நாமரூபத்தை நீக்க வாயிலும், விஞ்ஞானத்தை நீக்க நாமரூபமும், செய்கையை நீக்க விஞ்ஞானமும், பேதைமையை நீக்கச் செய்கையும் நீங்குமென்றும், துக்கம், துக்கோற்பத்தி, துக்கநிவாரணமென்னும் மூன்று சத்தியங்களை ஆராய்ந்து தெரிந்துகொண்டதன்றி, நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர் தலைப்பாடென்கிற நான்காவது சத்தியமாகிய துக்க நிவாரண மார்க்கமெனப்படும் நல்வழிகள் எட்டையும் ஆராய்ந்து தெரிந்துகொண்டார்.

† 'போதி விருக்ஷத்தினடியேயிருந்த நாட்களுள் ஒரு நாளிரவில் புத்தர் தியானஞ் செய்கையில் முதல் யாமத்திற் செய்த தியானத்திற் பழம்பிறப்பின் நிலைமைகளெல்லாம் அவருக்குத் தெரியவந்தன; இரண்டாம் யாமத்திற் செய்த தியானத்தில் அப்பொழுதுள்ள பிறப்பின் நிலைமைகளெல்லாம் அவருக்குத் தெரியவந்தன; மூன்றும் யாமத்திற் செய்த தியானத்தில் துவாதச நிதானரூபமாகிய எதுநிகழ்ச்சி அவருக்குத் தெரியவந்தது; நான்காந் தியானத்திற் சூரியன் உதியா நிற்கையில் முழுதும் அவருக்குத் தெரியவந்தது' என்று சொல்லுவதுமுண்டு.

அரசமரத்தினடியிலிருக்கும் நாட்களுள் ஒருநாள் கௌதமர் நைரஞ்சரையென்னும் ஆற்றையடைந்து நீராடுகையில், அவ்வாற்றில் தூணொன்று மிதந்து வந்ததென்றும், அத்தூணில், "தோன்று

* "அவாச்சார்ந்து பற்றுகும் பற்றினால் வினைமுதிர்வாந், தவாதவிவ் வினைமுதிர்வாற் பிறப்பாகும் பிறப்பினாற், குவாவிய பிணிமூப்புச் சாக்காட்டின் கூட்டமா, யுவாயவித் தமொற்ற மொழிவின்றி யுருளுமே" என்பது நீலகேசி, புத்தவாதச்சருக்கம், கககூ- ஆம் செய்யுளினுரையிற் கண்ட செய்யுள். † போதிவிருக்ஷம் - அரசமரம்.

வனவெல்லாம் நிலையற்றன; அவை பிறப்பிறப்பிற்குட்பட்டவை; எக்காலத்து இந்தச் சனன மரண நியமம் நீங்குமோ அக்காலத்தே தான் ஆனந்தம் காணப்படும்" என்னும் பொருள் அடங்கிய வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்தனவென்றும் அவற்றைக் கண்ணுற்றறிந்த பின்பு அவருக்கு ஞானோதயமாயிற்றென்றும் ஜப்பான் தேசத்துப் பௌத்த நூல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வண்ணம் கௌதமர் * ஸத்தியசதுஷ்டய ஞானத்தைப் பெற்றபின், நாகரும் தேவரும் மற்றையோரும் களித்தனர். நன்னிமித்தங்கள் பல நிகழ்ந்தன.

அப்பால் கௌதமர், "நான் விரும்பியதை அடைந்தேன்; யான் எனதென்னும் அகங்கார மமகாரங்களினின்றும் தப்பினேன்" என்று களிப்புற்றார். † அப்பொழுது மஹாப்பிரஹ்மா அவருக்கு முன்னே தோன்றி, "கவலையால் மெலிகின்ற மனிதர் மேல் இரக்கம் வை. உலகத்தார் தமது பயனையே கருதி உழைக்கின்றனர்; பிறவுயிரோம்புதலைப் பேணிலர்; எல்லோருக்கும் தருமோபதேசஞ் செய்து அத்தீய வழியினை மாற்று" என்றனர். அது கேட்ட ‡ ததாகதர் மனமகிழ்ந்து அவர் கூறியவாறே உண்மையை உபதேசித்துப் பரவச்செய்து எல்லாவுயிர்களையும் நல்வழிப்படுத்தற்கு நிச்சயித்தார். நிச்சயித்தவர் தமக்குண்டான உண்மை ஞானத்தைத் தாம் முன்பு ஆசிரயித்திருந்த அராளராம முனிவர் உருத்திரகர் என்பவர்களுக்கு முதலில் அறிவிக்க வேண்டுமென்று நினைத்து விசாரிக்கும்பொழுது அவர்கள் இறந்துபோய்விட்டார்களென்பதைக்கேட்டு மிகவும் வருத்தமுற்றார்.

பின்னர், முன்பு உருவேலாவனத்தில் தம்மோடு தவஞ் செய்து கொண்டிருந்த ஐந்து தாபதர்களுக்கும் தாம் பெற்ற பேற்றை அளித்தற்கு நினைந்து அவர்களைத் தேடிக்கொண்டு அவ்வனத்தின் வழியே செல்பவர், அங்கே உபகனென்னும் அந்தணன்

* ஸத்திய சதுஷ்டயமாவன துக்கம், துக்கோற்பத்தி, துக்கநிவாரணம், துக்கநிவாரணமார்க்கமென்பன.

† கௌதமர் இங்ஙனம் ஞானம்பெற்றுப் புத்தத்துவம்பெற்றகாலம் ஈசான சகாப்தம், ௬0௩ - ஆம் வருடத்தில் விசாக நக்ஷத்திரமும் பௌர்ணமாவியுங்கூடிய புதன்கிழமை யென்பர்.

‡ ஞானோதயமான பின்பு கௌதமருக்குத் ததாகதர், புத்தர், ஜினர் என்பவை முதலிய காரணப்பெயர்கள் வழங்குவனவாயின.

ஒருவனைக் கண்டு அவனோடுரையாடித் தாமறிந்த உண்மையை வெளியிட்டு அவனை மகிழ்வித்து அதனால் தமது கொள்கை பிறருக்கு உபதேசிக்கத்தக்கதென்பதில் ஊக்கமுற்று மேற்கூறிய தாபதர்கள் ஐவரும் காசியிலிருப்பதாகக் கேள்வியுற்றுப்போய்க்காசியைச்சார்ந்த *மிருகதாவமென்னும் வனத்திற் புகுந்தார். அங்கே தவம்புரிந்துகொண்டிருந்த கௌண்டின்யகுல புத்திரர் முதலிய ஐவரும் அவரைத் தூரத்துக் கண்டபொழுதே, "இவர் முன்பு தவத்தினின்று நீங்கினமையால், இவருக்கு நாம் யாதோர் உபசாரமுஞ் செய்தலாகாது" என்று தம்முட்பேசி நிச்சயித்துக்கொண்டிருந்தும் சமீபத்திற் கண்டவுடனே அவருடைய முகமலர்ச்சி முதலியவற்றால் தாம் பரவசமுற்றுத் திடீரென்றெழுந்து உபசாரஞ் செய்தார்கள். ததாகதர் அதை யேற்றுக் கொண்டு, "காயக்கிலேசம் செய்தற்கு வலியில்லாமல் வேண்டியவாறே நுகர்ந்தொழுகுபவன் மனத்தை எவ்வாறு அடக்குதல் கூடும்? இப்பொழுது நீர் அறிந்துகொண்ட வழி யாது?" என்று வினவிய அவர்களுக்கு, "நற்காட்சி முதலிய எட்டு அங்கங்களையுடைய வழியைப்பற்றி ஒழுகல்வேண்டும். அவ்வாறு ஒழுகினாலன்றிச் சனன மரணங்களை நீக்குதல் ஆகாது. துக்கம், துக்கோற்பத்தி, துக்கநிவாரண மென்பனவற்றை உள்ளவாறறிந்தபின்பே இவ்வழியைப்பற்றி ஒழுகுதல்வேண்டும். இதுவே நான்கண்ட வழி" என்று உபதேசித்தார். கேட்ட ஐவரும் அவர் கூறியவற்றை அங்கீகரித்துச் சிஷ்யர்களாய் அவரைச் சேர்ந்தார்கள்.

இங்ஙனம் அவர்கள் தம்முட் கூடியிருக்கத் தொடங்கியதே பௌத்தர்களாற் கூறப்படும்† மும்மணிகளுள் ஒன்றான ஸங்கத்திற்குத் தொடக்கமென்பர்.

கண்டோரை வசிகரித்தற்குரிய அழகியபார்வையும் முகமலர்ச்சியும் கேட்டோருடைய உள்ளத்தைக் கவர்தற்கமைந்த சிறந்த இசைக்குரலும் இன்சொல்லும் புத்தருக்கிருந்தனவென்றும் அவைகளே அவருடைய பிரஸங்கங் கேட்டோர்களை விரைவில் அவருக்குச் சிஷ்யர்களாகச் செய்வதற்குச் சிறந்த கருவிகளாக இருந்தனவென்றும் புத்தசரித்திரங்கள் கூறுகிற்கும்.

---

* மிருகதாவம் - மான்காடு.

† மும்மணிகளாவன புத்த தர்ம சங்கமென்பன; "புத்த தர்ம சங்க மென்னு, முத்திற மணியை மும்மையின் வணங்கி" என்று மணிமேகலையில் வந்திருத்தல் காண்க; ௩0-ஆம் காதை, ௩-௪.

பின்பு புத்தர், தாம் அறிந்து கைக்கொண்ட தருமமாகிய சக்கரத்தை எவ்விடத்தும் உருட்ட நினைந்து அந்த மிருகதாவ வனத்திலேயே யிருந்துகொண்டு சாதிவேற்றுமை கருதாமலும் ஆண்பாலர் பெண்பாலரென்று பாராமலும் இவர் பகைவர் இவர் நட்பினரென்று நினையாமலும் அங்கு வந்தோர் யாவருக்கும் ஒப்பத் தமது சித்தாந்தத்தை உபதேசித்துவந்தார்.

"இன்னார்க்கு மினியனு மிறந்தார்க்கு மின்றீம்பால்
குன்றமற் பொழிந்திட்ட குன்றாய குணத்தினன்"

(நீலகேசி, புத்தவாதச்சருக்கம், ௬௩-ஆம்பாட்டுரையிற்கண்ட செய்யுள்.)

அப்பொழுது குசிநகரத்திருந்த யசனென்னும் செல்வவானொருவன் அவர் பெருமையைக் கேள்வியுற்று விரைவில் அவரைச் சரணமடைந்து அறங்கேட்டுத் தன்னுடைய பாலிய நண்பர்களாகிய ஐம்பத்துநால்வர்களோடும் பிக்ஷுவாய்ப் பௌத்த சங்கத்தைச் சார்ந்தான்.

அவருக்கு ஞானோதயமான நாள்முதல் ஐந்துமாதத்திற்குள்ளாகவே அறுபதுபேர்கள் இல்வாழ்க்கையைத் துறந்து பிக்ஷுக்களாய்ப் பௌத்ததருமத்தையே தஞ்சமாகப் பெற்றுச் சிஷ்யர்களுக்குரிய நிலையைப் பாராட்டிக்கொண்டு சங்கத்தின் அங்கமாக விளங்கினார்கள். இதனால், தம்முடைய தருமத்தை எல்லாரும் வருத்தமின்றி யறிந்து அங்கீகரிக்கும்படி செய்தற்கு வேண்டிய போதனாசக்தி புத்தருக்கு மிகவும் இருந்ததென்றும், அவர் உபதேசித்த தருமம் மிக்கவிரைவிற் பரவிற்றென்றும் அறிந்துகொள்ளலாம்.

பின்பு யசனுடைய தந்தை தாய் மனைவி ஆகிய மூவரும் அவரையடைந்து அறங்கேட்டு * உபாஸகரானார்கள்.

அப்பால், அவர் மேற்கூறிய அறுபது சிஷ்யர்களையும் ஒருங்கு சேர்த்து முகமலர்ச்சியோடும் அவர்களை நோக்கி, "அன்பர்களே, யான் உபதேசித்தவுண்மையை அறிவில்லாத மானிடர்களுக்கு விளங்கப் போதித்து அவர்களை அவ்வறிவின்மையினின்றும் நீக்கி

---

* உபாஸகர்-பௌத்தரில் இல்லறத்தோர்; "மேலை மாதவர் பாதம் விளக்குஞ், சீல வுபாசகர் செங்கைநறு நீரும்" என்று மணிமேகலையில் வந்திருத்தல் காண்க; ௨அ-ஆம் காதை, ௧௧-௨.

நல்வழிப்படுத்துதல் உங்களுடைய கடப்பாடாகும்; ஆதலால், நீங்கள் தனித்தனியே பலவிடங்களுக்குச் சென்று நம்முடைய சமயக்கொள்கைகளைப் பலர்க்கும் உபதேசித்து வருக" என்று கட்டளையிட, அவர்களில் யசன்மட்டும் காசியிலிருந்தும் மற்றவர்கள் தனித்தனியே பலவிடங்களிற் சென்றும் தாமறிந்த தருமங்களை எல்லாருக்கும் அன்புடன் போதிப்பாராயினர்.

வருடந்தோறும் மழைக்காலத்தில் தம்முடைய சிஷ்யர்களை வருவித்துத் தம்முடனிருக்கச்செய்வதும் மற்றைக்காலங்களில் அவர்களைப் பலவிடங்களுக்கும் அனுப்பித் தருமப்பிரசங்கம் புரியச் செய்வதும் அவருக்கு வழக்கமாகவிருந்தன.

ததாகதர், மேற்கூறிய உருவேலா வனத்திலிருந்து அக்கினியை வழிபடுபவரும் அக்காலத்தில் ஆசிரியரென்று பெயர் பெற்றிருந்தவரும் வானப்பிரஸ்தருமாகிய அக்கினிகாசியபரென்பவரிடஞ் சென்று அவரிடத்திருந்த கொடிய பாம்பொன்றைத் தம்முடைய விசேட ஆற்றலால் அடக்கி அவர் வழிபட்டுவந்த அக்கினியையே உதாரணமாகக்காட்டி புலன்களெல்லாம் பொறிகளின் வழியே சென்று காமவெகுளிமயக்கங்களை உள்ளத்தில் உண்டாக்கி அஞ்ஞானமாகிய பெருந்தீயால் ஒவ்வொருவரும் எரிந்து வரும்படி செய்துகொண்டு வருகின்றனவென்றும், அத்தீயையவித்து நிருவாணத்தைப் பெறுதற்கு முயல்வோர் யாவரும் புலன்களால் உள்ளம் சலியாதபடி தம்முடைய பொறிகளை வெல்லவேண்டுமென்றும், இதையன்றி நிருவாணத்தை அடைதற்குரிய வழி வேறொன்றுமில்லை யென்றும் உபதேசிக்க, அவரும் அவருடைய சிஷ்யர்கள் ஐஞ்ஞூற்றுவரும் தங்கள் கொள்கைகளைத்துறந்து சங்கத்தைச் சார்ந்தார்கள். பின்பு அந்தக் காசியபருடைய சகோதரர்களாகிய நதீகாசியபர், கயாகாசியபரென்னுமிருவரும் ததாகதரைச் சரணமடைந்து அறங்கேட்டுப் பிக்ஷுக்களானார்கள். அக்கினிகாசியபருக்குப் புத்தர் அக்கினியை உதாரணமாகக்காட்டி உபதேசித்த விஷயங்கள் ஆதித்தியபரியாய சூத்திரமென்னும் நூலிற்கூறப்பட்டுள்ளன.

பின்பு புத்தர், பிம்பஸாரனுக்கு முன்பு வாக்களித்ததை நினைந்து, அக்கினிகாசியபர் முதலியவர்களோடே உருவேலா வனத்திலிருந்து இராசகிருக நகரத்தைச்சேர்ந்த *யஷ்டிவனத்தை

* யஷ்டி - அதிமதுரமரம்.

யடைந்தபொழுது, ஆங்குள்ளார் அவருக்கும் அக்கினி காசிய பருக்குமுள்ள வேற்றுமையைத் தெரிந்துகொள்ளாமல் மயங்கினார்கள். அப்பொழுது இராசகிருக நகரத்தரசனாகிய பிம்பஸாரன் வந்துபார்த்து மிக்க புகழ்பெற்ற காசியபரே இவருக்குச் சிஷ்யரானாரென்றால், இவர் ஒப்பற்ற பெரியோராயிருத்தல் வேண்டுமென்று முன்னையினும் நன்குமதித்துப் புத்தரைவணங்கினான். அப்பொழுது காசியபர் பிம்பஸாரனுக்குப் புத்தருடைய மேம்பாட்டை மிகப்பாராட்டிக் கூறினர். அந்தச்சமயத்திற் காசியபரின் பெருமையைப் புலப்படுத்தற்பொருட்டு அவருடைய பழம்பிறப்பைப்பற்றிய ஜாதககதையொன்று புத்தராற் சொல்லப்பட்டது; அதனால், ததாகதருக்குப் பழம்பிறப்புணர்ச்சியுமுண்டென நினைந்து அவரே பெரியோரென்று அரசன் முதலிய எல்லோரும் தெளிந்து அவரைச் சரணமடைய, அவர் ஜனனமரணங்களை நீக்கும் வழியை விளங்க விரித்து உபதேசித்தார். அதுகேட்டவர் அனைவரும் பரமார்த்த தத்துவப்பொருளையறிந்து அவருக்கு அடியவரானார்கள். பிம்பஸாரன் தனதுநாட்டிற் சிறையிலடைபட்டிருந்தோர் யாவரையும் விடுவித்து எல்லாவுயிர்களுக்கும் தண்ணளி சுரந்து அரசாட்சி செய்வானாயினன். அந்நகரத்துள்ள மற்றையோரும் யஷ்டிவனஞ்சார்ந்து புத்தர்பால் தருமோபதேசம் பெற்றுவந்தார்கள்.

பின்பு ஒருநாள் ததாகதர் பிக்ஷைக்கு வந்தபொழுது யஷ்டிவனம் இராசகிருக நகரத்திற்குத் தூரமாயிருத்தல்பற்றிச் சிந்தித்த அரசன், சமீபத்திலுள்ளதாகிய *வேணுவனத்தில் ஒரு †விஹாரம் கட்டுவித்து, அவ்விஹாரத்தோடு அவ்வனத்தை அவருக்கும் அவருடைய சங்கத்திற்கும் வாஸஸ்தலமாகக் கொடுத்தான். எல்லோரையும் தமதுவழியைப்பற்றி ஒழுகும்படி செய்து அவர்களுடைய உள்ளங்களில் நிலைத்த ஞானதீபத்தை ஏற்றுதற்பொருட்டுத் ததா

* வேணுவனம் - மூங்கிற்காடு; இது புத்தருக்குப் பிரியமான வாஸஸ்தலங்களுளொன்று; இதில் அவர் பலவருடங்கள் சங்கத்துடன் தங்கியிருந்தாரென்று தெரிகின்றது; இது 'கரண்டவேணுவனமென்று வழங்கப்படும்.

† விஹாரம் - பௌத்தமுனிவர்கள் தங்குவதற்காகவே கட்டிய இடம்; "இந்திர விகார மேழுடன் போகி" சிலப்பதிகாரம், நாடுகாண் காதை, கங.

கதர் அவ்வனத்திற்றங்கி அங்குவருபவர்களுக்கெல்லாம் அன்புடன் தருமோபதேசஞ்செய்துவருவாராயினர்.

இப்படியிருக்கையில், ஒருநாள் அவருடைய சிஷ்யர்களாகிய அசுவஜித், பாஷ்பரென்ற பிக்ஷுக்கள் இருவரும் உரியகாலத்திற் பிக்ஷையெடுத்தற்பொருட்டு இராசகிருக நகரவீதியிற் செல்லுகையில், கபிலரென்பவருடைய மாணுக்கர்களுள்ளே மேம்பட்டு விளங்கும் * சாரீபுத்திரனென்பவன், அவர்களுடைய தோற்றப்பொலிவைக்கண்டு நன்குமதித்து அவர்களுடன் உரையாடிக் கௌதமருடைய மகிமைகளையறிந்து தன் நட்பாளனாகிய மௌத்கல்யாயனனென்பவனோடும் தன்னுடைய மாணுக்கர்கள் இருநூற்றைம்பதின்மரோடும் வேணுவனஞ்சார்ந்து புத்தரைச் சரணமடைந்து தருமோபதேசம்பெற்று † அருகத்தசையை அடைந்தான். சாரீபுத்திரன் ‡ புத்தருடைய சிஷ்யர் பதின்மர்களுள் உயர்ந்தவன்; பௌத்தசமய நூலுணர்ச்சியிற் புகழ்பெற்றவன். மௌத்கல்யாயனன் § இருத்தியிற்சிறந்தவன்.

அப்பால் புத்தர், சாரீபுத்திரனுக்கும் மௌத்கல்யாயனனுக்கும் தமது சங்கத்தில் முதன்மையளித்தனர். அதுபற்றிச் சங்கத்துள்ள மற்றையோர் பிணங்கி அவ்விருவரோடும் கலகம் விளைப்பாராயினர். புத்தர் அதுதெரிந்து தம் சங்கத்தார் எப்பொழுதும் கைக்கொண்டு ஒழுகவேண்டிய விதிகளை அப்பொழுது அவர்களுக்கு உபதேசித்தார். அதன்பின் சங்கம் அமைதிபெற்று ஒழுகுவதாயிற்று. அது தொடங்கிச் சங்கம் || ஸேவக ஸங்கிபாதமென்று பெயர்பெற்றது. மேற்கூறிய விதிகள் பிராதிமோக்ஷமென்ற நூலில் அடங்கியுள்ளன.

---

* சாரீயென்பவளின் புதல்வன்; இதுபற்றியே இவன் போதிஸத்துவாவதான கல்பலதையென்னும் வடநூலில், சாரீஸூநுவென்று வழங்கப்படுவன்; இவனையும் பின்பு கூறப்படும் மௌத்கல்யாயனனையும் ஸஞ்சயரென்பவருடைய மாணுக்கர்களாகச் சொல்வதுமுண்டு.

† அருகத்தசை - நிருவாணமடைவோர்க்குரிய தியானங்கள் ஐந்தனுள் நான்காவது தியானத்தை யடைந்தவர்களின் நிலைமை.

‡ புத்தருடைய சிஷ்யர் பதின்மர்களாவார்: காசியபன், ஆநந்தன், சாரீபுத்திரன், மௌத்கல்யாயனன், அனுருத்தன், ஸுபூதி, பூர்ணன், காத்தியாயனன், உபாலி, இராகுலனென்பவர்.

§ இருத்தி - அற்புதசக்தி; இது சித்தியென்றுங் கூறப்படும்.

|| ஸேவகஸங்கிபாதம் - அடியவர்களின்கூட்டம்.

சங்கம் இவ்வாறு மேன்மேலும் வளர்ச்சியடைதலைப்பொறாத மற்றைச்சமயவாதிகள் பௌத்ததர்மம் பரவாதிருத்தற் பொருட்டுப் பலவகையான இடையூறுகள் செய்துவந்தார்கள். ததாகதர் அவற்றைச் சிறிதும் மதியாமல் தமது கடப்பாட்டை மேற்கொண்டொழுகிவந்தார்.

பின்பு காசியப அக்கினித்தரென்னும் துறவியொருவர், வைசாலிநகரஞ் செல்லுதற்குப் புறப்பட்டு வழிக்கொண்டவராய் இடையே சாக்கியமுனிவரின் பெருமையைக் கேள்வியுற்று அவரையடைந்து அறங்கேட்டுத் தமது கொள்கையைத்துறந்து பௌத்த பிக்ஷுவாயினர்; சங்கத்தில் மிகவும் மேன்மையுற்று விளங்கினமையின், இவர் மஹாகாசியபரென்றும் கூறப்படுவர்.

கோசலதேசத்தில், ஸ்ராவஸ்திநகரத்துள்ளவனும் பெருஞ்செல்வவானுமாகிய * அநாதபிண்டகனென்னும் வணிகன், புத்தருடைய காருணிய உபதேச விசேடத்தைக் கேள்வியுற்று உடனே இராசகிருகநகரம் வந்து ஆங்குள்ள சூளனென்னுமித்திரன் வீட்டில் தங்கி அன்றிரவே பரபரப்புடன் புத்தரைச் சரணமடைந்து அறங்கேட்டு ஐயம் நீங்கப்பெற்று அவாவற்றுப் பிறப்பாகிய பெருங்கடலைக் கடத்தற்குரிய தெப்பமாகிய நல்வழியைக் கடைப்பிடித்தான்.

புத்தர் வேணுவனத்தில் இருக்கும்பொழுது அவரிடத்தில் தருமத்தைக்கேட்டுத் தத்தம் கொள்கைகளைவிட்டுப் பௌத்த மதத்தையடைந்து † சீவரதாரிகளாய்ப் பிக்ஷுக்களானோர் தொள்ளாயிரவரென்றும் உபாஸகரானோர் மிகப்பலரென்றும் கூறுவர்.

இப்படியிருக்கையில், கௌதமர் சிறந்த ஞானியாகிப் பலவிடத்துஞ்சென்று செய்துவரும் பிரசங்கத்தைக்கேட்ட அநேகர் தீயவழிகளினின்றும் நீங்கி நல்லொழுக்கமுடையவர்களாயினரென்பதைச் சுத்தோதனன்கேட்டுத் தான் இறக்குமுன்னமே ஒருமுறையேனும் அவரைப் பார்க்கவேண்டுமென்று விரும்பி அடிக்கடி பலரைத் தூண்டினமையால் அவர்கள் கபிலவாஸ்துவிலிருந்து வந்து அரசன்கருத்தைப் புத்தருக்குத் தெரிவித்தார்கள். அப்பால் புத்தர் சுத்தோதனன் முதலியோரைக்கண்டு தருமோப

* இப்பெயர் அநாதபரிபாலகனென்றுங் காணப்படுகின்றது.

† சீவரம் - பௌத்தபிக்ஷுக்கள் தரித்துக்கொள்ளும் ஆடை.

தேசஞ்செய்து அவர்களையும் நல்வழிப்படுத்த நினைந்து வேறு வனத்தை நீங்கிக் கபிலவாஸ்துவுக்குச் செல்லுவாராயினர்.

அங்ஙனஞ் செல்லுகையில், இடையேயுள்ள பிரபாஸதேசத் தரசனாகிய வைடூரியனென்பவனை அவன் வேண்டுகோளின்படி நல்வழிப்படுத்தக்கருதிய புத்தர், அரசமரத்திலிருந்து கடைந்தெடுத்த நூற்றெட்டுமணிகள் கோக்கப்பட்டுள்ள மாலையால், "நமோபுத்தாய, நமோதர்மாய, நமஸ்ஸங்காய" என்னும் மந்திரத்தைத் தினந்தோறும் இரண்டிலக்கம் (உ,00,00,0) தரம் ஜபித்து உருவேற்றும்படி உபதேசித்து அதனாலுண்டாகும் பயனையும் அவனுக்குக் கூறி அப்பாற்சென்று * நியக்குரோத வனத்தை யடைந்து அங்கே சிலநாளிருந்தனர்.

பின்பு அவர் நியக்குரோதவனத்திலிருந்து கபிலவாஸ்துவைக் கிட்டிச் சுத்தோதனனால் தக்கவாறு உபசரித்தழைக்கப்பட்டு அந் நகரத்துள்ளே சென்றார். சுற்றத்தாரல்லாத ஏனையோர் அவமதித்து அவருக்கு யாதோர் உபசாரமுஞ் செய்யவில்லை. துறவிகளை நகரத்தார் அழைத்துச்சென்று பிக்ஷை பண்ணுவிப்பது அக்கால வழக்கமாகவிருந்தும், அவர்கள் புத்தரைப் பிக்ஷைக்கு அழையாமலே இருந்துவிட்டார்கள். அதனால், புத்தர் உரியகாலத்தில் பாத்திரமேந்திக்கொண்டு சிஷ்யர்களுடன் சென்று எவ்விடத்தும் பிக்ஷைவாங்குவாராயினர். தன்புத்திரர் இப்படி வீடுகள் தோறும்போய்ப் பிக்ஷை யெடுக்கிறாரென்றசெய்தி சுத்தோதனன் காதிற்கு எட்டியது. எட்டவே, அவன் எழுந்து விரைவாக ஓடி வந்து அவரைக்கண்டு, "மகிமைபொருந்திய புத்தரே, இப்படிச் செய்து ஏன் எங்களையெல்லாம் அவமதிப்புக்கு உள்ளாக்குகிறீர்? நீர் எல்லாருடைய வீடுகளிலுஞ்சென்று பிக்ஷை யெடுக்கவேண்டுமோ ? உமக்கும் உம்மையடுத்த இவர்களுக்கும் பிக்ஷைபண்ணுவித்தற்கு என்னால் முடியாதா ?" என்று சொன்னான். புத்தர், "எங்களுடைய மரபிலுள்ளார்க்கு இவ்வாறு இரந்து புசிப்பதே இயல்பு" என்றார். சுத்தோதனன், "அஃது எப்படி ? புகழ்பெற்ற இராச பரம்பரையில் நீர் பிறக்கவில்லையா ? இந்த வம்சத்திற் பிறந்தவருள் ஒருவரேனும் ஒழுங்கீனமாக இப்படி நடந்ததுண்டோ?" என்றான். புத்தர், "நீரும் உம்முடைய முன்னோர்களும் இராசாங்க ஒழுக்கத்துக்கு உரியவர்கள். இதற்கு முன்பு பிறந்தவர்களும்

* நியக்குரோதவனம் - ஆலமரச்சோலை; இது கபிலவாஸ்துவிற்குச் சமீபமாகவுள்ளது.

இனிப் பிறப்பவர்களுமாகிய *புத்தர்களுடைய மரபிற்கு நான் உரியேன்; ஆதலால், அவர்கள் மேற்கொண்டொழுகிய ஒழுக்கத்தையே கைக்கொண்டேன். இஃது இம்மைப்பயனையும் மறுமைப் பயனையும் தரும் பெருமையையுடையது. இது நிற்க; ஒருவன் ஒரு புதையலைக் கண்டெடுத்தால் அதனைத் தன் தந்தைக்குக் கொடுப்பது அவனுடைய கடமையாகும்; ஆதலால், நான் கண்டெடுத்த இப்புதையலைத் தருவேன். தாழ்தியாமற் பெற்றுக் கொள்க" என்றார். சுத்தோதனன் நாணமுற்றுப் புத்தருடைய பிக்ஷாபாத்திரத்தைக் கையில் வாங்கிக்கொண்டு புத்தரைத் தன் அரண்மனைக்கு அழைத்துப் போய் அவ

---

* உலகத்திற் பாவங்கள்பெருகப் புண்ணியங்கள் குறைந்த காலந்தோறும் உபதேசத்தால் அப்பாவங்களைப்போக்கி அருளறத்தை நிலைநிறுத்தி உயிர்களைநல்வழிப்படுத்தற் பொருட்டுப் புத்ததேவர்அவதரித்தலுண்டென்பது பௌத்தநூற்றுணிபு. அப்படியே இந்தக் கௌதமபுத்தருக்கு முன்பு அவதரித்த புத்தர்களுக்கு அளவில்லையென்று கூறுவர்; இஃது, "இறந்த காலத் தெண்ணில் புத்தர்களுஞ், சிறந்தருள் கூர்ந்து திருவாய் மொழிந்தது" (௩௦-ஆம் காதை, ௧௫-டு) என்று மணிமேகலையிற் கூறியிருத்தலாலும் பெறப்படுகின்றது. அவர்களுள், கௌதமபுத்தருக்கு முன்னமே முறையே அவதரித்திருந்த இருபத்தேழு புத்தர்களுடைய பெயர்கள்மட்டும் இப்பொழுது தெரிகின்றன; அப்பெயர்களை, இப் புத்தகத்தின் ௩௬௧ - ஆம் பக்கத்திற் காண்க. கௌதம புத்தருக்குப்பின்பு அவதரிப்போராகிய புத்தர்பெயர் மைத்திரேய புத்தரென்பர். அதனைப் பின்னெடுத்துக்காட்டப்படும் தக்கயாகப்பரணியின் உரையாலுணர்க:—'அந்தத் ததாகதபுத்தர் ஸ்ரீவாரணசியிலே தருமமருளிச்செய்கிறார்: இனிப் பிறக்கக்கடவ மயித்திரியாழ்வாரான புத்ததேவர்க்குப் பாதாளத்திலே மாணிக்கத்தால் அடித்துக்கிடப்பதொரு கோயிலுண்டு; அக்கோயில் மாணிக்க ரத்தினமாளிகை. ஐந்நூறு யோசனை நீளமும் ஐந்நூறுயோசனை அகலமுமுள்ளதொன்றென்று தம்முடைய ஸ்ரீபாதத்தி லொன்றாலே பெருவிரலும் மணிவிரலுங்கொண்டு எடுத்துக்காட்டியருளி மீட்டும் காலாலே அழுத்தியருளினாரென்று ஒருகதையுண்டு.' (தாழிசை, 183, உரை.) மயித்திரியாழ்வார் - மைத்திரேயபுத்தர்; புத்தரையும் அவருடைய தாதுக்களையும் பௌத்தபிக்ஷுக்களுள் மேம்பட்டோரையும் ஆழ்வாரென்றல் தமிழ்ப்பௌத்தநூன்மரபென்று தெரிகின்றது; புத்ததாதுக்கள் தாது ஆழ்வாரென்றும் பௌத்தபிக்ஷு ஒருவர் ஈழமடிப்படுத்த 'தாடையாழ்வாரென்றும் நீலகேசியுரை முதலியவற்றிற் கூறப்பட்டிருத்தல் காண்க.

ருக்கும் அவருடன் வந்த ஆயிரத்தைந்நூறு பிக்ஷுக்களுக்கும் அமுது செய்விப்பானாயினன். இங்ஙனம் கபிலவாஸ்துவிலிருக்கையில் ஒருநாள் புத்தர் தாம் பிக்ஷுவாக இருத்தல்பற்றி நாணிய சுத்தோதனனுக்கும் தம்முடைய தாயத்தார்க்கும் தாம் பெற்றிருந்த *இருத்தியாற்றல்களைக் காட்டி அவர்களால் நன்கு மதிக்கப்பெற்றுப் பின்பு தருமோபதேசஞ் செய்தார்.

ததாகதர் கபிலவாஸ்துவிற்குச் சென்றபொழுது முதலில் காலச்ரேஷ்டியென்ற ஒரு பிரபுவின் வீட்டிலும் பின்பு தம்முடைய தாயின் சரீரதாது வைக்கப்பட்டுள்ள ஆலயத்திலும் தங்குவாராய் அந்நகர வீடுகள்தோறுஞ் சென்று பிக்ஷை யெடுத்துப் பாத்திரம் நிரம்பியவுடன் தமது இருப்பிடத்திற்குச் செல்லுவாரென்று சொல்லுவர்.

அந்நகரத்திலே துவாதச நிதானத்தைப்பற்றியும் மஹாப் பிரஜ்ஞா சூத்திரத்திலுள்ளபடி பிரஜ்ஞாபாரமிதையைப்பற்றியும் புத்தர் உபந்யஸித்ததைக் கேட்டுப் பௌத்தரானோர் மிகப்பலர்.

அந்நாட்களிலே ஒருநாள் சிஷ்யர்களோடு சுத்தோதனனுடைய அரண்மனையிற் பிக்ஷைக்குப் போனபொழுது ஆங்குள்ள ஆண்பாலார் பெண்பாலாராகிய இருதிறத்தாரும் வந்து பணிந்து புத்தரை உபசரித்தார்கள். யசோதரைமட்டும் வரவில்லை. ஆப்தர்கள் சென்று புத்த தரிசனத்திற்காக வரவேண்டுமென்று யசோதரையை அழைத்தபொழுது அவள், "என்னைக் குணவதியென்று தாம் எண்ணியிருப்பின், அவர் என்னை நல்வழிப்படுத்தற்பொருட்டு இங்கே எழுந்தருளுவார்; அப்பொழுது அடியேனும் அவரை இவ்விடத்திலேயே தக்கவாறு வழிபடுதற்கு உரியேன்" என்று சொன்னாள். புத்தர், தம்மைத் தரிசித்தற்கு வந்த குழாங்களுள்ளே யசோதரையைமட்டுங் காணாமையால் தாம் முன்பு கருதியிருந்தவாறே அவளுக்குத் தருமோபதேசஞ்செய்து ஆசிரி

---

* 'நின்னைப்பணியாது மானித்துநின்ற அரசன்முன் வில்லேற்றி அவன் மானந்தவிர்த்து, மற்றுநின்ஞாதிகள் தமது மானத்தால் நின்னை அவமதிப்ப, அவர்களது மானம் போக்குதற்கு நீ இருத்திகாட்டினமை மறந்தாயோ' (நீலகேசி, புத்தவாதச்சருக்கம், ௬அ-ஆம் பாட்டுரை) என்பதனால் புத்தர் சுத்தோதனனுக்கு வில்லேற்றியும் இருத்தி காட்டியும் தமது பெருமையைப் புலப்படுத்தினரென்று தெரிகின்றது.

யராதற்கு விரும்பிச் சிஷ்யர்களாகிய இரண்டு பிக்ஷுக்களுடன் அவளிடஞ் சென்று அவ்வளாற் பூசிக்கப்பட்டுத் தமது பழைய நிலைமையை நினைந்து வருந்தி மிகத் துக்கித்த அவளது துயரத்தைத் தமது இனிய மொழிகளாற் போக்கி, எல்லாவற்றுனும் மேம்பட்டு விளங்கிய அப்பெண்மணியின் நற்குண நற்செய்கைகளையும் அவளுடைய உண்மையான வைராக்கியத்தையும் அங்கே வந்திருந்த சுத்தோதனன் சொல்லக்கேட்டு மகிழ்ந்து, பழம் பிறப்பிலும் அவள் தூய்மையை யுடையவளா யிருந்தாளென்பதை ஆண்டுள்ளாரெல்லோர்க்கும் புலப்படுத்துதற்கு அவளைப்பற்றிய ஜாதக கதை யொன்றைச் சொல்லி அவளுக்குத் தம்முடைய தருமத்தை உபதேசித்தார்.

இவ்வாறு உபதேசம் பெற்றுக்கொண்ட யசோதரை சில தினங்களுக்குப்பின் தம் புதல்வனாகிய இராகுலனை யழைத்து, "உன் தந்தையை யடைந்து அவரிடமிருந்து நீ பெறத்தக்க உரிமைப் பொருள்களையெல்லாம் விரைவிற் பெற்றுக்கொள்" என்றாள். அதற்கு அப்பாலன், "என் தந்தையை இன்னாரென்று அறிந்திலேனே! நான் போய்க் கேட்பது எப்படி?" என்றான். யசோதரை உடனே அவனை யெடுத்துக்கொண்டு அரண்மனைக்குப் போய் ஒரு சுவர் மறைவில் நின்று அங்கே பிக்ஷை பண்ணிக்கொண்டிருந்த புத்தரைச் சாளரவழியாற் காட்டி, "அதோ பல பிக்ஷுக்களின் நடுவே அமுதுசெய்துகொண்டிருக்கும் மிகுந்த ஒளியுள்ளவராகிய ஸந்யாஸியே உன் தந்தையாவார்" என்று சொல்லி அப்பாலனை அவரிடம் விடுத்தாள். ஏழு அல்லது எட்டுப் பிராயத்துக்கு மேற்படாத அவன் அப்படியே புத்தரிடம்போய்த் தனக்குரிய சொத்தைக் கொடுக்கவேண்டுமென்று இடைவிடாமற் கேட்டுக்கொண்டே அவரைத் தொடர்ந்து நியக்குரோத வனத்தை யடைந்தான். அப்பொழுது புத்தர், "எல்லோரும் தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் பொருள்கள் அழிவுள்ளவை; நாம் போதி விருக்ஷத்தினடியில் அடைந்த நிதி அழிவற்றது; அதனை இவனுக்குக் கொடுப்போம்" என்று எண்ணிக்கொண்டு சாரீபுத்திரனை நோக்கி, "இராகுலனையும் சங்கத்திற் சேர்த்துக்கொள்க" என்று கட்டளையிட, அவன் அவ்வாறு செய்தான்.

பின்பு ஒருநாள் புத்தர் கபிலவாஸ்துவிற்குப் போனபொழுது அங்கே மணமகனாக இருக்கும் கௌதமியின் புதல்வனா

றிய) *நந்தனை யடைந்து, தம்மைக்கண்டு மிகுந்த பரபரப்போடு வந்து அன்புடன் பணிந்த அவனை நோக்கி, "அகங்கார மமகாரங்களைவிட்டு ஆராய்ச்சி செய்து உண்மைப் பொருளை அறிதலே எல்லாவற்றிலும் மேலானது" என்று உபதேசிக்க, அவன் அதனை மகிழ்ந்து கேட்டு உடனே எல்லாவற்றையுந் துறந்து அவருடைய பிக்ஷா பாத்திரத்தை வாங்கித் தன் கையிலேந்திக்கொண்டு அவரோடு கூடவே நியக்ரோதவனத்தை அடைந்து பிக்ஷுவாகிச் சங்கத்தைச் சார்ந்தான். நந்தன் சங்கத்தைச் சார்ந்தது இராகுலன் புத்தரை அடைந்ததற்கு முன்பென்று கூறுவதுமுண்டு.

இவ்வாறு இராகுலனும் நந்தனும் துறவு பூண்டதை யறிந்து, "அரசாட்சி செய்தற்குரிய அருமைப் புதல்வர்கள் இருவரையும் சிறந்த பேரன் ஒருவனையும் இம்முதுமைப் பருவத்தில் இழந்துவிட்டேனே; இனி யாது செய்வேன்!" என்று மிகுந்த வருத்தமுற்று மற்றவர்களுக்கேனும் இனி இந்த வருத்தமில்லாதிருக்கும்படி செய்யவேண்டுமென்று எண்ணிவந்த சுத்தோதனனுடைய வேண்டுகோளின்படி, பெற்றோர்களுடைய அனுமதியின்றிப் பிள்ளைகளைப் பிக்ஷுக்களாகச் செய்வித்தல் கூடாதென்ற விதி அப்பொழுது புத்தரால் உண்டுபண்ணப்பட்டது.

போதிவிருக்ஷத்தினடியில் ஞானோதயமான காலந்தொடங்கி அதுவரையிற் புத்தருக்கு இவ்வாறு பதினெட்டு மாதங்கள் சென்றனவென்பர்.

பின்பு இராஜகிருக நகரத்தைச்சார்ந்த வேணுவனஞ் செல்ல நினைந்து வழிக்கொண்டு இடையேயுள்ள அநோம நதிக்கரையை யடுத்த 'அநுப்பிரியா' என்னுமிடத்தில் ஒரு மாந்தோப்பில் தங்கியபொழுது, அங்கே தரிசித்தற்குவந்த உறவினராகிய சாக்கியர்

---

* நந்தனும் உரூபநந்தையென்பவளும் கௌதமி, கௌதமரை வளர்க்கத் தொடங்கிய பின்பு பெற்ற மக்கள்; 'புத்த தேவர்க்கு ஞாதியாவானொருவன் நந்தனென்பான்; அவனுக்குத் தர்மோபதேசம் பண்ணித் தவவழிப்படுத்தி அவனுக்குப் பிடகத்திரயமோதுவிப்ப, அவன் நித்ராஸமயத்துத் தன் ஸ்திரீயாகிய வரசுந்தரியை நினைந்து அரற்ற, அந்த வேட்கையைத் தவிர்க்கவேண்டித் தேவலோகத்து அப்ஸரஸ்ஸுக்களைக் காட்டி வரஸுந்தரிமேல் உபேக்ஷைபண்ணுவிக்கவுற, அவனும் அப்ஸரஸ்ஸுக்களைக் கண்டு ஸ்திரீ வேட்கை பெருத்துத் தவம்விட்டுப் போயினன்' என்பது நீலகேசி, புத்தவாதச்சருக்கம், ௧௬-ஆம் பாட்டுரை.

கள் பலரும் கோலியர்கள் பலரும் வேறு பலரும், அவரிடம் தருமோபதேசம் பெற்றுப் பௌத்தமதத்தை அடைந்தார்கள். அவர்களுள்ளே மிகப் பிரஸித்தரானவர்கள் * ஆனந்தன், தேவதத்தன், உபாலி, † அநுருத்தனென்பவர்கள். ஆனந்தன் புத்தரை வழிபடுபவர்களிலும் அவருடைய அன்பைப் பெற்றவர்களிலும் மேற்பட்டவன். தேவதத்தன் பிற்காலத்திற் பொறாமையுற்றுப் புத்தருக்கு விரோதியாகி ஸங்கத்திற் பல கலகங்களைச் செய்தவன். உபாலி சாதியில் அம்பட்டன்; இவன் தன்னுடைய அறிவின் மிகுதியால் பௌத்தர்களுள்ளே மிக்க கௌரவமடைந்தவன். அநுருத்தன் பௌத்த மதத்தைச் சார்ந்த தத்துவ சாஸ்திரங்களில் மஹாநிபுணனானவன்.

அப்பால் ததாகதர் தமது பெரிய ஸங்கத்தோடு கோசல தேசத்தில் ‡ 'ரப்தி' நதிக்கரையிலுள்ளதாகிய ஸ்ராவஸ்தி நகரஞ் சென்று அங்கே தம் வரவுநோக்கி மிக அலங்கரிக்கப்பட்டிருந்த § ஜேதவன விஹாரத்தை ஸங்கத்திற்காக மேற்கூறிய அநாத பிண்டகனென்ற பிரபு தாரைவார்த்துக்கொடுக்க, அதை அங்கீகரித்துக்கொண்டு அதிற்றங்கிச் செய்துவந்த உபந்நியாஸங்களைக் கேட்டுப் பௌத்தரானோர் பலர். பின்பு அந்நகரத்தரசனாகிய 'பிரஸேன ஜித்' என்பவனும் வந்து தருமங்கேட்டு உலகப் பற்றொழிந்தான்.

புத்தர் தருமசக்கரப்பிரவர்த்தனஞ் செய்யத் தொடங்கிய காலமுதலாக இவ்வாறு அவரால் மூன்று வருடங்கள் கழிக்கப்பட்டன.

பின்பு, புத்தர் வைசாலி நகரஞ் சென்று அதைச் சார்ந்த மஹாவனமென்னும் சோலையிலுள்ள கூடாகார விஹாரத்தில் தங்கி அங்கே வருவோர்களுக்கெல்லாம் தருமோபதேசம்

---

* ஆனந்தனும் தேவதத்தனும் சுத்தோதனன் தம்பியாகிய சுக்கிலோதனனுடைய பிள்ளைகள்.

† அநுருத்தன்-சுத்தோதனன் தம்பியாகிய அமிர்தோதனனுடைய குமாரன்.

‡ இந்நதி அஜிரவதியென்றும் கூறப்படும்.

§ இவ்வனம், முதலில் ஜேதனென்ற ஓரரசனுடையதாக இருந்தமையின் இப்பெயர் பெற்றதென்பர். இதில் புத்தர் ஏழு வருட காலம் வசித்தாரென்று ஜப்பான் தேசத்துப் பௌத்த நூல்களால் தெரியவருகிறது.

செய்துவந்தார். அப்படியிருக்கையில், உரோகிணிநதியைப்பற்றிக் கோலியர்களுக்கும் சாக்கியர்களுக்கும் பிராணஹானியைத் தருவதற்குரிய பெரியகலகம் உண்டாயிருக்கிறதென்று கேள்வியுற்றுக் காருணிய மேலீட்டால் உடனே கபிலவாஸ்துவுக்குச் சென்று அவர்களைச் சமாதானமுற்றிருக்கும்படி செய்துவிட்டு மீண்டுவந்து மஹாவனத்திலே இருந்தனர்.

அவர் அவ்வனத்திலிருக்கும் நாட்களிலே சுத்தோதனன் நோயால் மிகவும் துன்புறுகின்றானென்று அறிந்து அவ்வனத்திலிருந்து கபிலவாஸ்துவுக்குச்சென்று அவன் இறக்குங் காலத்திலே உடனிருந்து அவன் இறந்தபின்பு அவனுக்குச் செய்தற்குரிய அபரக்கிரியைகளையெல்லாம் தாமே செய்துமுடித்தார். சுத்தோதனன் இறந்தகாலம் ஈசானசகாப்தம் நூற்றேழாவது வருடமென்றும் இறக்கும்பொழுது அவனுக்குப் பிராயம் தொண்ணூற்றேழென்றும் கூறுவர்.

அப்பால், புத்தர் கபிலவாஸ்துவினின்றும் மீண்டு மஹாவனத்துள்ள கூடாகார விஹாரத்துக்கு வந்து ஸங்கத்தோடு தங்குவாராயினர். அங்கே கபிலவாஸ்துவிலிருந்து தொடர்ந்துவந்த மஹாப் பிரஜாவதிகௌதமி, யசோதரை முதலிய சாக்கிய மாதர்கள் பலர்க்கும் கோலியமாதர்கள் பலர்க்கும் தருமோபதேசஞ் செய்தார்.

அதுகேட்ட மஹாப்பிரஜாவதிகௌதமியும் மற்ற மங்கையரும் இல்வாழ்க்கையில் வெறுப்புற்றவர்களாய்த் தங்களையும் ஸங்கத்திற் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று மிகவும் பிரார்த்தித்தார்கள். புத்தர் தம் தாய்சொல்லியதை நிறைவேற்றுதற்பொருட்டே பெண்பாலாரும் பிக்ஷுணிகளாகி ஸங்கத்தையடையலாமென்று நியமித்ததன்றிப் பிக்ஷுணிகளுக்குரிய விதிகளையும் அப்பொழுது கட்டளையிட்டார். உடனே மேற்கூறிய மங்கையர் பலரும் பிக்ஷுணிகளாகிச் சங்கத்தைச் சேர்ந்தார்கள். அவர்களுள் முதலில் பிக்ஷுணிகளானவர்கள் மஹாப்பிரஜாவதி கௌதமியும் யசோதரையும். அது தொடங்கி ஸ்திரீகளும் பிக்ஷுணிகளாகிச் ஸங்கத்தைச்சேரும் வழக்கம் நடைபெற்று வந்தது.

முதலில், புத்தருக்கு ஸ்திரீகளை ஸங்கத்திற் சேர்த்துக் கொள்ளுதற்கு மனமில்லாமலிருந்ததென்றும், பின்பு ஆனந்த

னுடைய வேண்டுகோளால் அவர்களைச் சேர்த்துக்கொள்ளுதற்கு உடன்பட்டாரென்றும் சொல்லுவதுண்டு.

பின்பு புத்தர் மஹாவனத்திலிருந்து பிரயாகைக்கு அருகே யுள்ளதான கௌசாம்பி நகரத்தைச்சார்ந்த மகுளமென்னு மலைக்குச் சென்று அதிற் சிலகாலந் தங்கியிருந்து, அப்பால் இராஜ கிருகநகரம்போய்ப் பிம்பஸாரனுடைய மனைவியாகிய க்ஷேமை யென்பவளுக்குத் தருமோபதேசஞ்செய்தார்.

அதுகேட்டு அவள் பிக்ஷுணியாகி ஸங்கத்தையடைந்தாள். அப்பொழுது ஸங்கத்திலுள்ள ஒரு பிக்ஷுவானவர் தமக்குள்ள இருத்திசக்தியைப் புலப்படுத்த நினைந்து அற்புதமானவழி யாலே ஒரு பிக்ஷாபாத்திரம் பெற்றார். அதையறிந்த புத்தர் வருத்தமடைந்து, "பிக்ஷுக்கள் தமக்குக் கிடைத்த இருத்தி சக்தியை நிர்வாணமடைவதற்கு உரியவழியை உறுதிப்படுத் திக் கொள்ளுதற்கன்றி உலகத்தார் மதிக்கும்படி ஆச்சரியகர மான காரியங்களைச் செய்வதற்குக் கருவியாகக்கொள்ளுவதில் யாதும் பயனில்லை" என்று பிக்ஷுக்கள் யாவருக்குஞ் சொல்லி மேற்கூறிய பிக்ஷாபாத்திரத்தை உடைத்து வீசியெறிந்தார். இவ்வாறு இருத்தி சக்தியைப் பாராட்டி அற்புதகாரியங்களைச் செய்தலில் யாதும் பயனில்லையென்று சொன்னமையாற் புத்த ருக்கு அவ்வகையான சக்தி யாதொன்றும் இல்லையோவென்று பலர் எண்ணங்கொண்டிருந்தார்கள். அவர்கள் அவ்வாறெண்ணியதைப் பிம்பஸாரனாலறிந்த புத்தர் தமக்குள்ள சக்தியைப் புலப்படுத் தற்கு ஒருகாலத்திற் பற்பல அற்புதகாரியங்களைச் செய்தார்.

அதன்பின் திரயஸ்திரிம்சலோகஞ்சென்று அங்கே இந்தி ரன் மகளாகப்பிறந்து வளர்ந்துகொண்டிருந்த தாயாகிய மாயா தேவிக்குத் தத்துவோபதேசஞ்செய்து சிலநாள் அங்கிருந்து விட்டுப் பின்பு அவ்வுலகிலிருந்து ஸங்கர்ஷமென்னுமிடத்தி லிறங்கி ஜேதவன விஹாரத்திற்குச் சென்றாரென்று சொல்லுவ துண்டு.

அவர் அந்த விஹாரத்திலிருக்கும்பொழுது விரோதிகளிற் சிலர், தன்னை அவர் விரும்பிக்கூடினதாகச் சொல்லும்படி துஷ்டமங்கையாகிய சிஞ்சையென்பவளைத் தூண்டினார்கள். அவளும் அவ்வண்ணமே அவர்பால் தோஷாரோபணம் செய்வா

யினன். அந்த அபவாதம் அழுக்காறுள்ள சிலருடைய முயற்சி யாற் காரணமின்றி உண்டாக்கப்பட்டதென்று விரைவில் யாவர்க்கும் புலப்பட்டுவிட்டது.

அப்பால், புத்தர் கபிலவஸ்துவுக்கு அருகேயுள்ள * சிம்சுமாரம் என்னும் கற்பாறையிற் சிலகாலமிருந்தார். இருக்கும்பொழுது அங்குவந்த நகுலனென்னும் பிரசித்த சிஷ்யனுடைய தாய்தந்தையர்களும் மௌத்கலி யென்பவனுடைய தாய் தந்தையர்களும் அவர்பால் அறங்கேட்டுப் பௌத்தரானார்கள். பின்பு புத்தர் கௌசாம்பிநகரத்துக்கு ஸங்கத்துடன் மீண்டு வந்தார். அவர் அந்நகரத்திலிருக்கும்பொழுது மௌத்கலி யென்பவனால் ஸங்கத்திற் பெருங்கலகம் உண்டாயிற்று. புத்தர் இயன்றவரையில் சமாதானஞ்செய்தும் அடங்கவில்லை. கலகம் மேன்மேலும் வளர்ச்சியுற்று வந்தது. அதுதெரிந்த புத்தர் தம்முடைய சிஷ்யர்களை அங்கே விட்டுவிட்டுத் தனியே பாரிலேயகமென்ற காட்டை யடைந்து அக்காட்டில் ஆங்குள்ளவர்களால் கட்டிக் கொடுக்கப்பட்ட குடிசையொன்றில் இருந்தார். இருக்கையில் ஸங்கத்துள்ள சிஷ்யர்கள் தாங்கள்செய்த குற்றவிஷயத்தில் அநுதாபமுற்று, "போதி வேந்தன் சரணலால் அரண்புகேம்" என்று அவரைச் சரணமடைந்து பணிந்து,

"பூமகனே முதலாகப் புருந்தமர ரெண்டிசையும்
தூமலரா வடிமலரைத் தொழுதிரந்து வினவியநாட்
காமமுங் கடுஞ்சினமுங் கழிப்பரிய மயக்கமுமாய்த்
தீமைசால் கட்டினுக்குத் திறற்கருவி யாய்க்கிடந்த
நாமஞ்சார் நமர்களுக்கு நயப்படுமா றினிதுரைத்துச்
சேமஞ்சார் நன்னெறிக்குச் செல்லுமா றருளினையே!

எண்ணிறந்த குணத்தோய்நீ யாவர்க்கு மரியோய்நீ
உண்ணிறைந்த வருளோய்நீ யுயர்பார நிறைத்தோய்நீ
மெய்ப்பொருளை யறிந்தோய்நீ மெய்யறமிங் களித்தோய்நீ
செப்பரிய தவத்தோய்நீ சேர்வார்க்குச் சார்வுநீ

நன்மைநீ தின்மைநீ நனவுநீ கனவுநீ
வன்மைநீ மென்மைநீ மதியுநீ விதியுநீ
இம்மைநீ மறுமைநீ யிரவுநீ பகலுநீ
செம்மைநீ கருமைநீ சேர்வுநீ சார்வுநீ"

* இது சம்சுமாரமென்றும் காணப்படுகின்றது.

"அருளாழி பயந்தோய்நீ யறவாழி நயந்தோய்நீ
மருளாழி துரந்தோய்நீ மறையாழி புரிந்தோய்நீ
மாதவரின் மாதவனீ வானவருள் வானவனீ
போதனருட் போதனனீ புண்ணியருட் புண்ணியனீ
ஆதிநீ யமலனீ யயனுநீ யரியுநீ
சோதிநீ நாதனீ துறைவனீ யிறைவனீ
அருளுநீ பொருளுநீ யறவனீ யநகனீ
தெருளுநீ திருவுநீ செறிவுநீ செம்மனீ"

(வீரசோழியம், யாப்புப்படலம், ௧௧-ஆம் கலித்துறையின் உரையிற்கண்டவை)

என்று துதித்து, "எங்கள் குற்றத்தைப் பொறுத்தருளுக" எனப் பிரார்த்தித்தார்கள்.

புத்தர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இசைந்து பொறுத்துக்கொண்டதன்றி அவர்களுக்குச் சித்தசமாதானமுண்டாகும் வண்ணம் தருமோபதேசமுஞ் செய்தார்.

அதனைக்கேட்டு மகிழ்ந்த சிஷ்யர்களுடன் மகததேசஞ் செல்லும் புத்தர், இராஜகிருக நகரத்துக்கருகேயுள்ள கிராமமொன்றிலிருப்பவனும் உழுதொழில் செய்து சீவிப்பவனுமாகிய பாரத்துவாசனென்னும் பிராமணனையடைந்து பிக்ஷைகேட்டார். அப்பொழுது அவருடைய தோற்றப்பொலிவைக்கண்ட பலர்வந்து அவரை வணங்கி நின்றார்கள். பாரத்துவாசன் அவர் தன்பால் இரத்தற்கு வந்ததை நினைந்து கோபங்கொண்டு, "பிக்ஷுவே! நான் உழுது விதைத்து அதனாலுண்டாகும் பயனையுண்டு சுகமாக இருக்கிறேன். நீரும் இவ்வண்ணமே செய்வீராயின் உமக்கு உளதாகுங்குறை யாது?" என்றான். புத்தர், "நானும் உழுகின்றேன்; விதைக்கின்றேன்; அதனாலுளதாகும் பயனை நுகர்ந்து இன்புற்றிருக்கின்றேன்" என்றார். அதற்கு அவன், "நீர் உழுபவரென்பது உண்மையாயின், மாடு எங்கே? கலப்பை எங்கே? விதைமுதலியன எங்கே? காட்டுமின்" என்றுகேட்டான். அதற்குப் புத்தர், "விதை சிரத்தை; அதை முளைத்து விருத்தியுடையும்படி செய்வதாகிய மழை நற்காரியம்; வயல் தருமநூல்; உழுதற்குரிய கலப்பையின் அங்கங்கள் அறிவும் வணக்கமும்; தர்மம் அக்கலப்பையின் பிடி; உழும் எருது விடாமுயற்சி; அவ்வெருத்தைத் தன் வயமாக்கிச் செலுத்துங் கயிறு மனம்; தாற்றுக்கோல் ஊக்கம்;

பயிர்க்கு இடையூறுகிய களை மயக்கமாகும்" என்றும், "இந்த கையதான வியவஸாயம் நிர்வாணமாகிய பலத்தை அளித்துப் பலவகைத் துக்கங்களையும் போக்குகின்றது" என்றும் கூறினர். இந்த இனிய மொழிகளைக்கேட்ட பாரத்துவாசன் தன் வீண் செய்கைகளைத் துறந்து அவருக்குச் சிஷ்யனானான்.

பின்பு புத்தர் அங்கிருந்து கோசலதேசத்துள்ள ஸத்தியப்பிரியை என்னும் நகரத்தையடைந்து அங்கே சிலகாலந் தங்கினர். அப்பால் தெற்கே நெடுந்தூரம்வந்து பின்பு காசி, வைசாலி இந்நகரங்கள் வழியாகச்சென்று ஸ்ரீராவஸ்திநகரத்தை அடைந்தார். இடையிடையே அவர் செய்துவந்த பிரஸங்கங்கள்பல; அவற்றைக் கேட்டுப் பௌத்தரானோர் மிகப் பலர்.

சிலநாளைக்குப்பின் ஸ்ரீராவஸ்தியில் இராகுலனுக்கு மஹாராகுல ஸூத்திரத்திலுள்ள தர்மத்தைப் போதித்தார்; அப்பொழுது அவனுக்குப் பிராயம் பதினெட்டு.

அதன்பின் இராகுலன் மிக்க பரிபாகமடைந்திருக்கிறனென்பதை அறிந்துகொண்டு அவனைப் பிக்ஷுவாக்கி அவனுக்கு இராகுல ஸூத்திரமென இக்காலத்தில் வழங்கும் நூலை உபதேசித்தார்.

பின்பு நியக்குரோதவனத்தை யடைந்து அதிற் சிலநாள் தங்கியிருந்தார். இருக்கையில் சுத்தோதனனுக்கும் அவனைப் பின்பற்றி அரசனாயிருந்த பத்திரகனென்பவனுக்கும் பின்பு கபிலவாஸ்துவை ஆண்டு கொண்டிருந்த மஹாநாமனென்பவனுக்கும் தருமோபதேசஞ்செய்து அவர்களை உய்வித்தார்.

அக்காலத்தில் அங்கேவந்த ஸுப்பிரபுத்தன் தன்மகளாகிய யசோதரையைத் துறந்ததுபற்றிப் புத்தரை வெளிப்படையாக வைதானென்றும் அப்பொழுது பூமிவெடிக்க அவ்வெடிப்பில் விழுந்து அவன் பாதலம் போயினனென்றும் சொல்லுவதுண்டு.

பின்பு புத்தர் ஆலவியென்னுமூருக்குப்போய் அங்கே குழந்தைகள் பலவற்றை விழுங்கிக்கொண்டுவந்த துஷ்டராக்ஷஸனொருவனுக்குத் தருமோபதேசஞ்செய்து அவனைச் சீலவானாக்கினர். அவர் அவ்வூரிலிருக்கும்பொழுது ஒருநாள் தருமங்கேட்டலில் மிக்க விருப்பமுற்றுவந்த ஒருவன் கடும்பசியோடிருத்தலை யறிந்து உண்பித்து அப்பால் அவனுக்குத் தருமோபதேசஞ் செய்

தார். இதனால், புத்தரிடம் தருமோபதேசம் பெறுவதற்குப் பட்டினியிருத்தல் முதலிய விரதங்கள் வேண்டாவென்பதும் அவர் மிக்க இரக்கமுடையரென்பதும் வெளியாகின்றன.

அதன்பின் மகததேசத்தை யடைந்து அதிலுள்ள ஊர்கள் தோறுஞ்சென்று கேட்பவர்களுடைய அளவுக்குத் தக்கவண்ணம் தருமோபதேசஞ் செய்துகொண்டு வருபவர், ஒருவேடனாற் கட்டப்பட்ட வலையொன்றில் அகப்பட்டுச் சிக்குண்டு வருந்திய மானொன்றைக் கண்டு அதனை அவ்வலையினின்றும் விடுவித்துவிட்டுச் சென்று ஒருமரத்தடியில் சில சமாதியில் இருந்தார். இருந்த பொழுது, மேற்கூறிய வேடன் தான் அகப்படுத்திய மானை அவர் விடுவித்தது தெரிந்து கோபங்கொண்டு அவரைக் கொல்லத் தொடங்கி அவருடைய மகிமையால் தடுப்புண்டுநின்றுவிட்டான். சிறிதுபொழுது சென்றபின் அவர் அவனைப்பார்த்துச் செய்த தருமோபதேசத்தால் அவ் வேடனும் அவனுடைய குடும்பத்தாரும் அல்லவைகடிந்து நல்லவை புரிவாராயினர்.

அப்பால் ஸ்ராவஸ்திநகரஞ்சென்று அங்கே சிலநாள் தங்கி, "அறஞ்செய்ம்மின், மறம் ஒழிமின்" எனப் பிரஸங்கமாரி பொழிந்து பாவவெப்பத்தைத் தணித்து வருபவர், தமது பிக்ஷைப்பாத்திரத்தைக் கூடவிருந்த பிக்ஷுவொருவர் கவர்ந்துகொண்டு பிரிந்து சென்றதைப் பாராட்டாமல் இரண்டுமுறை பொறுத்தார். பொறுத்தவர் பின்னும் அவ்வாறு நிகழாதிருக்கவேண்டி, தமக்கு உதவியாகப் பிரியாமற் கூடவிருக்கும்படி ஆனந்தனுக்குக் கட்டளையிட்டார். அவன் அவ்வாறே விட்டுப் பிரியாமல் அவருக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளை அன்புடன் செய்து வருவானாயினன்.

அப்படி யிருக்கையில் அந்நகரத்துள்ள விசாகையென்பாளொருமடந்தை புத்தருடைய மகிமைகளைக் கேள்வி யுற்றுத் தருமத்தின் நுண்மைகளை ஆராய்ந்து சங்கத்தார் இனிது தங்குதற்பொருட்டுப் பூர்வாராமமென்ற ஒரு சோலையையும் அதிற் செவ்விதாகக் கட்டப்பட்ட விஹாரமொன்றையும் அளித்தாள்.

பின்பு அவர் சாலியையென்னும் ஊருக்கு அருகேயுள்ள காட்டையடைந்து அதில் ஆறலைத்துத் திரிபவனாகிய அங்குலிமாலனென்னும் கொடிய திருடனுக்குத் தம்முடைய இனிய மொழிக

னால் தருமோபதேசஞ்செய்ய அவன் அதுகேட்டு எல்லாவற்றையும் வெறுத்துப் பிக்ஷுவாயினன்.

'அங்குலிமாரகனென்பானொருவன் வித்தை சாதிப்பதுடையனாய் அதற்கு ஆயிரம்விரல் தேடவேண்டி அதற்கு இரண்டுகுறைய ஆயிரம் விரல்தேடி அதற்குத் தன் மாதாவின் விரலில் இரண்டு குறைக்கப்புகப் புத்தனார் சென்று அவனைத் தார்மிகனாக்கித் தவம் படுத்தார்' (நீலகேசித்திரட்டு, புத்தவாதச் சருக்கம், கஉக - ஆம் பாட்டுரை) என்பதனால், அங்குலிமாரகனென்ற தறுகண்ணனொருவன் ஒருகாலத்தில் புத்தருடைய தருமோபதேசத்தால் உய்வுற்றானென்று தெரிகின்றது; இவனே மேற்கூறிய அங்குலிமாலனென்று சொல்லுதற்கும் இடமுண்டு.

புத்தருக்கு ஞானோதயமானபின்பு இவ்வாறு இருபதுவருடங்கள் சென்றன.

இதற்குப் பின்பு புத்தர் பலவிடத்துஞ் சென்று அவரவர்களுடைய குணம் தொழில் அறிவு முதலியவற்றிற்கு ஏற்பப் போதித்து அவர்களை நல்வழிப்படுத்தினாரென்றுள்ள சரித்திரங்கள் மிகப் பலவாகவுள்ளன. அவற்றுள் இன்னதன்பின் இன்னது நடந்ததென்று அவைகளையெல்லாம் காலக்கிரமத்திற்கு ஒத்தபடி அறிந்து எடுத்தெழுதுவது எளிதாக இல்லை; ஆதலால், இதற்குமேலும் அவருடைய நிருவாணத்திற்கு முன்பும் உள்ள காலத்தில் நடந்த முக்கியமான சிலவிஷயங்கள் மட்டும் இங்கே எடுத்து எழுதப்படும்.

ஒருகாலத்தில், சூனியப்பிராந்தமென்னும் இடத்திலிருந்து வந்து தருமங்கேட்டுத் துறவுபூண்டு பௌத்தசங்கத்தைச்சார்ந்த ஒரு வியாபாரி தன்னைச் சார்ந்தவர்களையும் நல்வழிப்படுத்த நினைந்து புத்தரையடைந்து, "என்னுடைய சுற்றத்தார்களுக்குத் தருமத்தை உபதேசித்தற்பொருட்டுச் செல்லுதற்கு நினையாநின்றேன்; அங்ஙனஞ் செய்வதற்கு விடைதருக" என்றான். அதற்குப் புத்தர், "சூனியப்பிராந்தத்திலுள்ள ஜனங்கள் மிகவும் மூர்க்கரல்லரோ! அவர்கள் நீ சொல்வதை மதியாமல் உன்னைத் தூஷிப்பாராயின் நீ யாது செய்வாய்?" என்றார். அவன், "நான் ஒன்றும் பேசேன்" என்றான். புத்தர், "அவர்கள் கோபங்கொண்டு அடிப்பாராயின் நீ செய்வது யாது?" என்றார். அவன், "மாறாக

அவர்களை அடிக்கமாட்டேன்" என்றான். புத்தர், "அவர்கள் உன்னைக் கொல்லத்தொடங்கினால் நீ யாது செய்வாயோ?" என்ன அவன், "சாவினால் எனக்குவரும் தீங்கு யாதொன்றுமில்லை; இறப்பையே விரும்புவோர் இவ்வுலகிற் பலருண்டு; நானோ என்னுடைய வாழ்நாளைக் குறைக்கவாவது மிகுக்கவாவது முயலேன்" என்றான். இவற்றையெல்லாங் கேட்ட புத்தர் அவன் மனந்தூயனாதலை யறிந்து, "நீ எண்ணியவாறே செய்துவருவாய்" என்று அவனுக்கு விடையளித்தார்.

மற்றொருகாலத்தில், கிருசாகௌதமியென்பாளொரு மங்கை, தான்பெற்ற அழகிய குழந்தை நடக்கும் பருவத்திலேயே இறந்துபோனமையால் மிகவும் வருத்தமுற்றுப் பலவாறு புலம்பி அன்பின் மிகுதியால் அக்குழந்தையினுடம்பையெடுத்து மார்போடணைத்துக்கொண்டு தன்பால் அன்புள்ளவர்களுடைய வீடுதோறுஞ்சென்று, "இக்குழந்தையைப் பிழைப்பித்தற்குரிய மருந்து ஏதேனும் உங்களிடம் இருக்குமாயின் அதனைக் கொடுத்துப் பாதுகாக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டு பரிதபித்துத் திரிவாளாயினள். அதுதெரிந்த பௌத்த பிக்ஷு ஒருவர் மனமிரங்கி அவளைப் பார்த்து, "நீ கேட்கிறமருந்து இங்கே கிடைப்பதன்று; அதை வைத்துக்கொண்டிருக்கிற ஒருவரை மட்டும் யான் அறிவேன்" என்றார். கிருசாகௌதமி, "அவர் யாவர்? விரைவிற் சொல்லவேண்டும்" என்ன அந்தப் பிக்ஷு, "மிகப் புகழ்பெற்றவராகிய புத்தரே; அவரிடம் போவாய்" என்று சொன்னார். அவள் புத்தரையடைந்து வணங்கி, "ஸ்வாமீ, இறந்த குழந்தையைப் பிழைப்பிக்கும் மருந்தை அறிந்ததுண்டோ?" என்றாள். புத்தர், "அதனை அறிவேன்" என்ன அவள், "நீர் எந்தப் பச்சிலை எந்த வேர் அல்லது வேறெவை கொண்டுவரும்படி கட்டளையிட்டாலும் அவற்றையெல்லாம் விரைவிற் கொண்டுவருவேன்" என்றாள். அதற்குப் புத்தர், "ஒருபிடி கடுகு வேண்டும்" என்றார். அது கொண்டுவருதற்கு விரைந்து போகாநிற்கையில், அவர் அவளை யழைத்து, "ஒருவரும் இறவாத வீட்டிலிருந்து வாங்கி வரவேண்டும்" என்று சொன்னார். அவள் நன்றென்று சொல்லிவிட்டுக் குழந்தையை ஏந்தி அணைத்துக்கொண்டு ஒரு வீட்டு வாயிலிற்சென்று, "ஒருபிடி கடுகு வேண்டும்" என்று கேட்டாள். அதைக்கேட்ட அவ்வீட்டார் கொணர்ந்து, "பெற்றுக்

கொள்" என்று சொல்ல, அவள் அதை வாங்காமல் நின்று, "உங்கள் வீட்டில் இதுவரையில் யாரேனும் இறந்ததுண்டோ? இறந்திருப்பின் எனக்கு இது வேண்டுவதில்லை" என்றாள். அதற்கு அவர்கள் அவளைப்பார்த்து நகைத்து, "நீ பித்துக் கொண்டனை யோ? உயிரோடிருப்பவர்கள் மிகச் சிலர்; இறந்தவர்கள் மிகப் பலர்; அங்ஙனமிருப்பவர்களும் பின்பு இறத்தற்குரியவர்களே" என்று சொன்னார்கள். அவள் அவ்வளவில் நில்லாது ஒவ்வொரு வீட்டிலுஞ் சென்று விசாரித்தபொழுது, என் பிள்ளை இறந்தா னென்றும், என்னுடைய தாய் தந்தையர்கள் இறந்தார்களென் றும், என் மனைவி இறந்தாளென்றும், என் கணவன் இறந்தா னென்றும், என்னுடைய அடிமைக்காரன் இறந்துவிட்டானென் றும் இப்படியே பலவாறாக ஒவ்வொருவரும் கூறுவாராயினர். இவற்றையெல்லாங் கேட்ட கிருசாகௌதமி பின்னும் பலமுறை அலைந்தும் ஒருவருமிறவாத வீடொன்றும் எங்கும் காணப்படாமை யால், பிறந்தோர் யாவரும் இறத்தற்குரியாரென்று தெளிந்தவளா, யிப் புத்திரசோகம் ஒழிந்து மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு பிணத்தை மயானத்திற் சேர்த்து அங்கே செய்யவேண்டியவற் றைச் செய்துவிட்டுப் புத்தரை அடைந்து வணங்கினாள். புத்தர், "நான் சொல்லியவாறு கடுகு கொண்டு வரப்பட்டதோ?" என்று கேட்ப, அவள் நிகழ்ந்தவற்றைக்கூறினள். அப்பொழுது புத்தர், "இவ்வுலகில் ஒன்றும் நிலையுள்ளதன்று" என்னும் உண்மைப் பொருளை அவளுக்கு நன்கு விளங்கப் போதித்தார். அதனைக் கேட்ட அவள் மனமாசு நீங்கிப் பௌத்த மதத்தைச் சார்ந்து பிறப்பறுத்தற்குரிய வழியில் நின்று நோற்பாளாயினள்.

மற்றொரு காலத்தில், மிக்க உலோப குணமுடையானொரு வன், ஒருவருக்கும் ஒன்றுங் கொடாமல் தான் மட்டும் இன்பம் நுகர்தலையே பெரும்பயனாக எண்ணிச் சீவித்து வருகிறானென் பதைக் கேள்வியுற்ற புத்தர் இரக்கமுற்று, அவனிடத்துள்ள உலோபமென்னும் பெருங் குற்றத்தைப் போக்கி அவனை நல்வழிப் படுத்த நினைந்து தாமாகவே அவனிடஞ் சென்றார். அப்பொழுது, வேறிடத்திலிருந்தால் பிறர் தன்னைக் கண்டுபிடித்துக் கேட்பார் களென்று அஞ்சி அவன் தன் மனைவியோடு மச்சில் ஏறி அங்கே ஒருவருக்குந் தெரியாமல் தனியே அப்பம் சுட்டுத் தின்றுகொண் டிருந்தான். புத்தரும் அம்மச்சிலேறி அவன் தின்னும் அப்பத்

தைப் பிச்சையாக இரந்து பெற்றுக்கொண்டு தருமோபதேசஞ் செய்து அவனுடைய குற்றங்களையெல்லாம் மாற்றி அவனை உய்வித்தார்; இச்செய்தி நீலகேசி, புத்தவாதச்சருக்கம், ௬௮-ஆம் பாட்டுரையில், 'ஒருவன் தன் ஸ்திரீயுடனுங்கூட மச்சேறி அப்பஞ் சுட்டுத் தின்பானது உலோபம் போக்குதற்கு நீ அவ்வழிச்சென்று அப்பமிரந்தது அறியாயோ?' என்று வந்துள்ளது.

வேறொரு காலத்தில் புத்தர் எல்லாவுயிர்களையும் நல்வழிப் படுத்த நினைந்து கிருத்திரகூட மலையின் உச்சியில் ஏறிநின்று கேட்பவர் மனம் கனிந்துஉருகத் தருமோபதேசஞ் செய்தபொழுது ஸஹஸ்ரார சக்கர ரேகை யமைந்த அவருடைய பாதங்கள் அழுந்தினமையால், அம்மலையுச்சியில் ஆயிரவார ஆழிச்சுவடுகளும் அவற்றையுடைய பாதச்சுவடுகளும் உண்டாயின. அதனால் அது பாதபங்கயமலையென்று பெயர் பெற்றது;

"ஆதி முதல்வ னறவாழி யாள்வோன்
மாதுய ரெவ்வ மக்களை நீக்கி
விலங்குந் தம்முள் வெரூஉப் பகைநீக்கி
உடங்குயிர் வாழ்கவென் றுள்ளங் கசிந்துகத்
தோன்றுகா லத்து நின்றற முரைத்த
குன்ற மருங்கிற் குற்றங் கெடுக்கும்
பாத பங்கயங் கிடத்தலி னீங்கிது
பாதபங் கயமலை யெனும்பெயர்த் தாயது"

(மணிமேகலை, ௧0-ஆம் காதை, ௬௧-௮.)

புத்தர் அம்மலையின்மேற் கட்டப்பட்ட விஹாரத்திற் பலநாளிருந்துகொண்டு தமது கொள்கையைப் பலர்க்கும் போதித்து வந்தார். அக்காலத்தில், அம்மலையில் ஜனங்கள் வருத்தமின்றி ஏறியிறங்குவதற்கு அகன்று நீண்டனவாகிய அழகிய படிகள் பிம்பஸாரனாற் செய்விக்கப்பட்டன. புத்தர் அம்மலையில் தங்கிய பொழுது தேவதத்தனென்பவன் பொறாமை கொண்டு அவருக்குப் பல தீங்குகளைச் செய்துவந்தான். அவைகளெல்லாம் அவருடைய மகிமையால் விலகிப்போயின. அவன் அவ்வளவில் நில்லாமல் அவரைக் கொல்லும்படி யானை யொன்றை ஏவினான்; சினந்து கொல்ல வந்த அந்த யானை அவருடைய தருமோபதேசத்தைக் கேட்டும் அவர் கவித்த கையைக்கண்டும் சினந்தணிந்து

நின்றுவிட்டது. இப்படியே மிகவும் கோபங்கொண்டு கொல்ல வரும் கொடிய விலங்குகளைக்கூடத் தமது இருத்தி வலியால் அடக்குமாற்றல் புத்தருக்கு உண்டென்பது பின் வருவனவற்றுனும் விளங்குகின்றது:

"ஓரரசன் பௌத்த தரிசனங் கொண்டு மிகவும் புத்த பக்தனாய்ச் செல்ல, பிரீதனாகிய புத்தனும் அரசன் சாவாமை வரங் கொடுக்க, இராஜ்யம்பண்ணிச் செல்லாநிற்ப, புத்தன் சிஷ்யவர்க்கத்துள்ளானொரு பிக்ஷு இராஜபுத்திரனை நோக்கி, 'குமாரனே, பகவான் நின் பிதாவுக்குச் சாவா வரம் கொடுத்தனராதலின், உனக்கு இராஜ்யப் பிராப்தி இல்லை' என்று சொல்ல, கவன்ற இராஜகுமாரன், பிக்ஷு உபதேசித்ததோர் உபாயப் பிரயோகத்தால் இராஜாவை வதித்து இராஜ்யங்கொண்டு செல்வான் தன் மித்திரனாகிய பிக்ஷுவுக்குப் புத்தத்துவங் கொடுப்பான் வேண்டிப் புத்தன் பிக்ஷைக்குப் போகின்ற வழி ஒரு மத்தகஜத்தைக் கொல்லக் குறிசெய்து வரவிட, அதனை நோக்கிப் புத்தர் தம் கைகவித்துத் தருமோபதேசஞ் செய்து அதனை உபசாந்தமாக்கினர்"

"........உணர்ந்தவன் விடப்பட்ட
களிநாக விசையவித்த கையினனல்லனோ"

(நீலகேசி, புத்தவாதச்சருக்கம், ௧0௫-ஆம் பாட்டின் உரையிற்கண்டவை.)

ஒரு காலத்தில் மகதநாட்டிலுள்ள எண்பதினாயிரங் கிராமத் தலைவர்களாகிய எண்பதினாயிரவரும் ஒருங்கு கூடிவந்து புத்தரிடம் தருமோபதேசம் பெற்றுப் பௌத்தரானார்களென்று தெரிகின்றது. இதனால் மகதநாடு முழுவதிலும் புத்தர் காலத்திலேயே அவருடைய தருமங்கள் நன்றாகப் பரவியிருந்தனவென்று அறிந்து கொள்ளலாம். இதுபற்றியும் புத்தர் ஞானமடைதற்குரிய இடமாக இருந்ததுபற்றியும் மகதநாடு புண்ணியபூமி யென்று பௌத்தர்களாற் கொண்டாடப்படும்.

வேறொரு காலத்தில், புத்தர் * வைசாலி யென்னும் நகரத்தை யடைந்து அந்நகரத்தைச் சார்ந்த † ஆம்ரவனத்திற் கட்டப்பட்ட விஹாரத்திற் சில் காலமிருந்து செய்து வந்த பிரசங்கங்களைக் கேட்

* இந்நகரம் கங்கையும் கண்டகி நதியும் சேருமிடத்திருந்த தென்பர்.

† ஆம்ரவனம் - மாஞ்சோலை.

டோர்களில் இருபதினாயிரம் பேர்களுக்கு மேற்பட்டோர் ஒரே காலத்திற் பௌத்தரானார்கள்.

மற்றொரு காலத்திற் புத்தர் தம் சிஷ்யர்களுடன் பாடலீபுத்திர நகர வழியே போய்க் கங்கையைக் கடக்க நினைந்தபொழுது, அவர் வருதலைத் தெரிந்த கங்காதீரவாஸிகள் எதிர்கொண்டுவந்து உபசரித்துத் தாங்கள் கொணர்ந்த தோணிகளின்மீது ஏறிச் செல்லவேண்டுமென்று ஒவ்வொருவரும் வேண்ட, புத்தர் ஒருவருடைய தோணியிலேறினால் மற்றவர்களுடைய மனம் வருந்துமே யென்று நினைந்து அத்தோணிகளுள் ஒன்றிலும் ஏறாமல் தமக்குள்ள இருத்தி வலியால் ஸங்கத்துடன் ஆகாய வழியே சென்று அந்நதியைக் கடந்தாரென்றும், அது முதல் அந்தத் தோணித் துறை கௌதமகட்டமென்று பெயர் பெற்றதென்றுஞ் சொல்வதுண்டு.

ஒரு வருஷா காலத்தில் புத்தர் வேணுவனத்திலிருந்தபொழுது தேவதத்தனென்பவனும் தன் தந்தையாகிய பிம்பஸார ராஜனைக் கொல்லுதற்கு முயன்ற அஜாத சத்துருவென்பவனும் சேர்ந்து அழுக்காறுற்று அவருக்குச் செய்துவந்த தீங்குகள் பல. அவ்விருவரும் சங்கத்திற்கு முதல்வராக இருத்தலினின்றும் புத்தரை நீக்குதற்கும் அவருடைய ஆசிரியத்தன்மையின் உயர்வைக் குறைத்தற்கும் அவருடைய கொள்கைக்கு மாறாக வேறொரு சங்கத்தையும் வேறொரு சமயத்தையும் உண்டாக்குதற்கும் முயன்றார்கள். பின்னும் அவர்கள் ஒரு காலத்தில் அவரைக் கொல்லவுந் தொடங்கினார்கள். புத்தர் தமது பொறுமையாலும் மகிமையாலும் அவற்றையெல்லாம் வென்று விளங்கினார்.

ததாகதர் வருஷா காலந்தோறும் ஊர்களைச்சார்ந்த சோலைகளினிடையேனும் காடுகளினிடையேனும் கட்டப்பட்டுள்ள விஹாரங்களில் சிஷ்யர்களுடனிருந்தும் மற்றைக் காலங்களில் பல நகரங்களுக்கும் பல ஊர்களுக்கும் வேறுள்ள பல இடங்களுக்கும் சிஷ்யர்களுடனாவது தனித்தாவது சலிப்பின்றிச் சென்றும் எல்லோரும் எப்போதும் ஜீவகாருண்ணியத்தையே மேற்கொண்டொழுகும்படி செய்ய வேண்டுமென்று இரக்கமுற்றுப் பற்பல உபந்யாஸங்கள் செய்துவந்ததோடு மயக்கத்தைக் கொடுப்பனவாகிய மது முதலியவற்றை அருந்திக் களிப்பவர்களை அத்தீங்கினின்றும் மாற்றுதற்பொருட்டும், பிறன் மனைவியை விழை

தல் வரையில் மகளிரை விழைதல் முதலியவற்றை மேற்கொண்டு வீணே காலங் கழிப்போரை அவற்றினின்றும் விலக்குதற் பொருட்டும், பொய்யையே கூறிவந்தவர்களை மெய்யையே கூறும்படி செய்தற்பொருட்டும், திருடிக் கொண்டே காலங் கழிப்பவர்களை அத்திருட்டு வழியினின்றும் நீக்குதற்பொருட்டும், தேக முதலியவைகள் நிலையுள்ளனவென்று துணிந்திருப்போர்க்கு அவைகள் நிலையில்லாதனவென்று அறிவுறுத்தற்பொருட்டும், புண்ணியத்தைக் கனவிலுமறியாதவர்களுக்குப் புண்ணியம்புரிதல் எல்லாவற்றினும் மேலானதென்று தெரிவித்தற்பொருட்டும், யாதொன்றையும் சிறிதேனும் கொடுத்தலில்லாதோரை வண்மையுடையராகச் செய்தற்பொருட்டும், பிறர் செய்தநன்றியை நினையாத கொடியோர்களை அதனை மறவாதிருக்கும்படி செய்தற்பொருட்டும், இருவினைகளும் இல்லையென்போர்களை அவைகள் உண்டென்று தெளிந்தொழுகும்படி புரிதற்பொருட்டும், இன்னும் பற்பல நன்மைகளை விளைத்தற்பொருட்டும் அவரவர்களுடையபருவ முதலியவற்றிற்கேற்பப் பல பிரகாரமாகச் செய்துவந்த அழகிய இனிய உபந்யாஸங்கள் எத்தனையோ பற்பல. அவர் பேசிவந்த பாஷை பாலீயாதலால், அவ்வுபந்யாஸங்களெல்லாம் அந்தப் பாஷையிலேயே முதலில் இருந்தனவென்றும் பிற்காலத்தில் பற்பல தேசத்தாரால் இயன்றவரையில் தத்தமக்குரிய வேறுவேறு பாஷைகளில் பெயர்த்தெழுதப்பட்டுள்ளனவென்றுங் கூறுவர்.

புத்தருக்கு மகாபோதி விருக்ஷத்தின் அடியில் ஞானோதயமான வருஷத்திற்கு சச - ஆவது வருஷத்து வருஷாகாலம் ஜேதவன விஹாரத்திலிருந்து கழிக்கப்பட்டது.

அப்பால் புத்தர் வைசாலிநகரத்தைச்சார்ந்த மாஞ்சோலையையடைந்து அதில் ஸங்கத்துடன் தங்கியிருந்தார். அங்கே வந்து அவருடைய உபந்யாஸத்தைக்கேட்டு மகிழ்ச்சியடைந்தவர்களுள் ஆம்ரபாலியென்னுங்கணிகை நல்வழியையறிந்து தன்னுடையதான மாஞ்சோலையொன்றை ஸங்கத்திற்குக் கொடுத்தாள்.

லிச்சவிகள், புத்தர் மேற்கூறிய மாஞ்சோலையிற் சங்கத்துடன் தங்கியிருத்தலைக் கேள்வியுற்று ஒரு தினத்தில் வந்து வணங்க அவர் அப்பொழுது அவர்களுக்குத் தமது சித்தாந்தத்தைப்பற்றிப் பிரஸங்கஞ்செய்தார். அதனைக்கேட்ட அவர்கள்

அறிவுற்று மிகுந்த மகிழ்ச்சியடைந்து பௌத்தரானார்கள். அதற்கு மறுநாள் புத்தர் ஆம்ரபாலியின் வேண்டுகோளின்படி ஸங்கத்தாருடன் அவளுடைய வீட்டில் பிக்ஷைசெய்தார்.

பின்பு பேலுவமென்னும் கிராமத்திற்குப்போய் அங்கே மழைக்காலமுற்றுந் தங்கியிருந்தார்; அஃது அவருக்கு ஞானோதயமான காலத்திற்குப்பின் நாற்பத்தைந்தாம் வருஷத்து வருஷாகாலமென்பர்.

அக்காலத்தில் அவருக்குத் தேக அசௌக்கியம் உண்டாயிற்று. அதன்பின் வைசாலிநகரத்திற்குவந்து அங்குள்ள கபிஸரஸ்ஸைச்சார்ந்த குளிர்ந்த சோலையொன்றில் தங்கினார். அப்பொழுது மாரன் அவரிடம்வந்து, "நீர் எண்ணிய யாவும் செய்து முடிக்கப்பட்டன; ஆதலால் இனி நிர்வாணமடைதற்குரியீர்" என்றான். புத்தர், "இன்னும் சில மாதங்கள் சென்றபின் நீ கூறியவண்ணஞ் செய்வேன்" என்றுசொல்ல, அவன் அதுகேட்டுத் தன்னிடமடைந்தான்.

அப்பால், ததாகதர் ஒரு மரத்தடியிற் சீலசமாதியிலிருந்து தாம் சீவித்திருக்கவேண்டியகாலம் இவ்வளவென்பதை வரையறுத்தனர். அப்பொழுது பல உற்பாதங்கள் நிகழ்ந்தன. பின்பு புத்தர் சமாதியினின்றும் நீங்கி முன்னின்றாரைநோக்கி, "என்னுடைய வாழ்நாள் முழுவதும் நீங்கிவிட்டது. இனிச் சமாதியின் ஆற்றலாலேயே வாழ்வேன்; என்னுடம்பு வருதல் போதலிரண்டிற்குங் காரணமாயிருத்தலையொழிந்து நொறுங்கிய தேர்போன்றுள்ளது. இனிப் பரிபூர்ண நிவ்ருத்தியைப்பெற்று முட்டையினின்றும் வெளிப்படுங் குஞ்சுபோலத்* தடையின்றிச் செல்வேன்" என்றார். அப்பொழுது பூமி நடுங்கியது; அதைக்கண்டு ஆனந்தன் நெஞ்சந் திடுக்கிட்டு, "இவ்வதிர்ச்சிக்குக் காரணம் யாது?" என்று கேட்ப, ததாகதர், "நான் இவ்வுலகை நீங்கக் கருதியிருப்பதே" என்று சொல்லி, அதைக்கேட்டு வருந்திய ஆனந்தனைத் தேற்றினார்.

பின்பு ததாகதர் இவ்வுலகைத் துறத்தலைக் கேள்வியுற்று அங்கே வந்த லிச்சவிகள், வருந்தி நின்று, அவர்கூறிய அறமொழிகளைக் கேட்டு ஒருவாறு வருத்தந்தீர்ந்து தத்தமிடஞ்

---

* "குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே, உடம்போடுயிரிடை நட்பு" திருக்குறள், ௩௩௮.

சென்று வேற்றுமதப்பற்றை முற்றும் கைவிட்டுப் புத்தர் கூறிய தருமபதங்களைச் சிந்தித்து அவ்வழியையே கடைப்பிடித்து ஒழுகி வந்தார்கள். ததாகதர், "யான் நிர்வாணத்தை அடையப்போவதனால் இனி இவ் வைசாலிநகரம் என்னாற் பார்க்கப்படுவதன்று" என்று கூறி மெல்ல மெல்லச் சென்று போகநகரத்தையடைந்து ஆங்குள்ள ஆனந்தசைத்தியமென்று கூறப்படும் சாலமரச் சோலையிலே தங்கித் தம்மைச்சூழ்ந்துள்ள பிக்ஷுக்களுக்குத் தத்துவோபதேசஞ் செய்தார்.

அப்பால், புத்தர் * குசிநகரத்திற்குச் செல்லுவாராய்ப் பாவா நகரம்போய் அங்கேவந்த † மல்லர்கள் அன்புடன் செய்த உபசாரங்களை ஏற்றுக்கொண்டு அந்நகரத்துள்ள ‡ சந்தனென்னும் தட்டானால் அழைக்கப்பட்டுச் சென்று அவனாற் சங்கத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள சோலையொன்றில் தங்கி இளைப்பாறிவிட்டு அவனுடைய வீட்டில் அன்று சிஷ்யர்களுடன் உண்டார். அவ்வுணவிற் பன்றியிறைச்சி கலக்கப்பட்டிருந்தமையின் தேகவியோகத்திற்குக் காரணமான அசௌக்கியம் அவருக்கு வளர்ச்சியுற்றதென்றும் அவ்வுணவே அவருக்கு ஈற்றுணவென்றும் கூறுவர்.

அப்போது புத்தருக்குப் பிராயம் எண்பது.

"யாதும் நிலையுள்ளதன்று" என்கிற பொருளமைந்ததான பிரசங்கம் அன்று அங்கே அவராற் பண்ணப்பட்டது. அதன்பின்பு அவ்விடம்விட்டுப் புறப்பட்டுச் செல்லும்பொழுது நடக்கலாற்றாது வழியிற்றங்கித் தங்கி இளைப்பாறிச் செல்பவர், ஆனந்தனைப் பார்த்து, "தாகம் அதிகமாகவுள்ளது" என்றார். அவன் உடனே தண்ணீர் கொணர்ந்து கொடுக்க, அதனைப்பருகி இளைப்பாறிவிட்டு அங்கே ஓடுவதான குகுஷ்டையென்னும் ஆற்றையடைந்து அதிற் கடைமுறை ஸ்நானஞ் செய்தார்.

"சந்தன் அளித்த உணவாலேயே புத்தருக்கு அசௌக்கியம் மிகுந்தது" என்று அருகேயுள்ளவர்கள் தம்முள் மெல்லச் சொல்

---

* இந்நகரம், காசிக்கு வடகிழக்கில் ௧௨ - காதவழித் தூரத்திலும் கபிலவாஸ்துவிற்கு நேர்கிழக்கிலுமுள்ளதென்பர்.

† மல்லர்கள் - ஒருவகைச் சாதியார்; லிச்சவிகளைச் சார்ந்தோர். இவர்கள் குசிநகரத்துவாழ்வோரென்று தெரிகின்றது.

‡ இப்பெயர் குண்டனென்றுங் காணப்படுகின்றது

லிக்கொண்டிருந்ததைக் கேட்ட புத்தர் ஆனந்தனை நோக்கி, "சந்தன் என் மரணத்துக்குக் காரணமாயிருந்தானென்று பலரும் அவனைப் பழிப்பார்கள். அவனும் அவ்வாறு நினைத்தல் கூடும். அது தவறு; அவன் அளித்த உணவையுண்டபின்புதான் நான் நிருவாணமடைதற்கு உரியனானேன். இதனால் அவன் சிறந்த பயனை யடைவது திண்ணம். அக்காலத்தில் அரசமரத்தடியில் நான் ஞானமடையுமுன்பு ஸுஜாதை அளித்த உணவும், இக்காலத்தில் நிருவாணமடைதற்குமுன்பு சந்தன் அளித்த உணவும் எல்லாவற்றினும் மேலானவை. இதனை அவனுக்குச் சொல்" என்று கூறினர்.

பின்பு, அவர் அவ்விடத்தை நீங்கி அடிக்கடி இடையிடையே தங்கித் தங்கிக் குசிநகரத்தை யடைந்து, அதனருகே ஓடுவதான ஹிரண்யவதி யென்னும் ஆற்றின் கரையைச் சார்ந்து இளைப்பாறிவிட்டு ஆனந்தனைப்பார்த்து, "அந்த இரட்டைச் சாலமரத்தின் நடுவிடத்தைப் பெருக்கி நீர் தெளித்துப் பாயையும் விரிப்பாயாக. நான் இன்று நடுயாமத்தே நிருவாணமடைவேன்" என்றார். தன் ஆசிரியர் சொல்லியதைக்கேட்ட ஆனந்தன் துக்க பரவசனாயிருந்தும் அவருடைய கட்டளையை மறுத்தற்கு அஞ்சி, அவர் கூறியவண்ணமே செய்து தெரிவித்தான். ததாகதர் அந்த இடத்தையடைந்து தலையை வடக்கே வைத்து வலக்கையைத் தலையணையாகக் கொண்டு மேற்றிசையை நோக்கி வலப்புறமாக ஒருக்கணித்துக் கால்மேற் காலைக்கிடத்திச் சிங்கவேறுபோற் படுத்துக்கொண்டு, தாம் நிருவாணமடைந்த பின்பு தமது உடம்பை இன்னவாறு அடக்கஞ் செய்யவேண்டு மென்பதையும், தமக்குப் பின்பு சிஷ்யர்கள் யாவரும் கைக்கொண்டு ஒழுகவேண்டிய விதிகள் இன்னவை என்பதையும் அப்பொழுது ஆனந்தனுக்குச் சொன்னார்; சொன்னவர் ஆனந்தன் வருந்துவதை அறிந்து, "இவ்வுலகில் ஒன்றும் நிலையுள்ளதன்று; மிகவும் நெருங்கியுள்ள *ஒவ்வொரு பொருளினின்றும் நாம் நீங்கவேண்டும்; அதுவே பேரின்பத்திற்குக் காரணமாகும்" என்றுசொல்லிவிட்டுத் தம்மையே பார்த்து மிகவும் வருந்திக்கொண்டு நாற்புறத்தும் நின்ற மற்றச் சிஷ்யர்களை நோக்கி, "நான் அறிந்தவற்றை யெல்லாம் அறிந்துகொண்டவன் ஆனந்தன்; ஆதலால், என்னால் அறியவேண்டியவற்றை இனி

* "யாதனின் யாதனி னீங்கியா னோதல், அதனி னதனி னிலன்" திருக்குறள், ௩௪௧.

அவனால் அறிந்து கொண்மின்" என்று கூறிச் சிறிதுபொழுது துயின்றார்.

துயிலுகையில் அவருடைய சிஷ்யர்கள் பலரும் அவரைச் சூழ்ந்துகொண்டு, "இப்பேருலகம் இருண்டதே" என்று நெட்டுயிர்த்து நின்றார்கள். காற்று ஒய்ந்தது. அங்குள்ள நீரோட்டங்கள் ஒலியடங்கின. பறவைகளும் விலங்குகளும் யாதோரொலியையும் செய்யவில்லை. தேவரும் மனிதரும் மிக்க துக்கத்தோடு கூடினர். அவ்வளவில் ததாகதர் விழித்துக்கொண்டு ஆனந்தனை நோக்கி, "எனது நிருவாணகாலம் நெருங்கிற்றென்பதை மல்லருக்குச் சொல்வாயாக" என்று சொல்ல, அவன் அழுது கொண்டே சென்று அவர்களுக்குத் தெரிவித்தனன். அது கேட்ட மல்லர்கள் புலம்பிக்கொண்டேவந்து புத்தரைப் பணிந்து அவருடைய தேகசக்தி மெல்லமெல்லக் குறைவதைக்கண்டு துன்புற்றார்கள். ததாகதர் முகமலர்ச்சியோடு அவர்களைப் பார்த்து, "நீங்கள் துன்பமடையன்மின்; இது மகிழ்தற்குரிய காலம்; அடையக் கருதிப் பலநாளாக முயன்று வந்த பெரும்பேற்றை இப்பொழுது அடையப்போகிறேன்; துக்ககரமாகிய ஐம்புலச் சிறையினின்றும் நீங்கி என்றும் அழியாத இன்பமயமான நிருவாணத்தை அடையப்போகிறேன்" என்ற இவைபோன்ற பலவற்றைக்கூறி அவர்களைத்தேற்றி உண்மையை உபதேசிக்க, அவர்கள் ஒருவாறு சித்த சமாதானமுற்றுத் திரும்பிச் சென்றார்கள்.

அப்பொழுது சிறந்த நூற்பயிற்சியும் நன்னடையுமுள்ளவரும் குசிநகரத்தினருமாகிய சுபத்திரரென்னும் பிராஹ்மண ஸந்யாஸி யொருவர் ததாகதருடைய நிலையைக் கேள்வியுற்று அவரைப் பார்த்தற்கு விரைந்துவந்து தமது கருத்தை ஆனந்தனுக்குத் தெரிவித்தார். ஆனந்தன், இவர் புத்தரோடு வாதஞ் செய்ய வந்திருக்கிறாரென்றும் வாதஞ் செய்தால் இச்சமயத்தில் அவருக்கு மிக்க துன்ப முண்டாகுமென்றும் நினைந்து, சுபத்திரரைப் புத்தரிடம் அனுப்புவதற்கு உடன்படாமல் நின்றான். ததாகதர் அந்த ஸந்யாஸி வந்திருப்பதை வேறுவகையால் அறிந்துகொண்டு தம்மைப் பார்த்தற்கு அவரை வரவிடும்படி ஆனந்தனுக்குக்கூற அதுதெரிந்த சுபத்திரர் உள்ளேசென்று அளவளாவி அவருடைய, ஸித்தாந்தத்தைக்கேட்டு நன்குமதித்து

அவர் மரித்தலைக்காணச் சகியாதவராகித் துன்பமுற்று வேறிடஞ் சென்றார்.

அப்பொழுது அந்த இரவின் முற்பாகஞ் சென்றது. எவ்விடத்தும் ஓசைகள் அடங்கின. புத்தர் மிகவும் இரங்கிய மனமுடையவராகித் தம்முடைய சிஷ்யர்களைப்பார்த்து, *"ததாகதன் சொல்லியவற்றில் ஏதேனும் ஐயமுண்டோ? இருக்குமானாற் சொல்லுங்கள்" என்று கேட்டார். அதற்கு ஒருவரும் ஒன்றும் சொல்லவில்லை. புத்தர் அதனை அறிந்து, "என்னையும் யான் சொல்லியவற்றையும் நேசிப்பதுபோல நீங்கள் ஒருவரையொருவர் நேசித்து ஒழுகல்வேண்டும்" என்று கட்டளையிட்டார். அவர்களெல்லோரும் நெடும்பொழுது மௌனமாயிருக்கையில், அனுருத்தன், மிக்க துக்கத்துடன், "ததாகதர் ஏன் இவ்வளவு சீக்கிரத்தில் நிருவாணமடையவேண்டும்?" என்றான். அதுகேட்ட புத்தர் அவன் மனத்திற்குச் சமாதானமுண்டாகும்படி சில வார்த்தைகளைச் சொல்லிவிட்டு எல்லோரையும் பார்த்து, "அன்பர்களே, பிறப்புக்குக் காரணம் எதுவோ அதுவே இறப்பிற்குங் காரணமாகும்; இந்த உண்மையை மறவன்மின்; இதை உங்களுடைய மனத்தில் தரித்துக்கொண்மின்; இனி என் வார்த்தைகள் வெளிப்படுவனவல்ல" என்று உபதேசித்துப் பின்பு எல்லாப்பற்றையுமொழித்து நிருவாணமடைந்தார்.

புத்தர் நிருவாணமடைந்தகாலம், ஈசானசகாப்தம், கசஅ-ஆம் வருஷத்தில் வைகாசி மாதத்திற் பூர்ணிமையும் விசாக நக்ஷத்திரமுங் கூடிய செவ்வாய்க்கிழமை யென்பர்.

அப்போது அவரைச் சூழ்ந்துநின்ற அருஹத்துக்களும் அரசர்களும் முனிவர்களும் வேறு பலரும் மனங்கலங்கி,

†"மருளறுத்த பெரும்போதி மாதவரைக் கண்டிலமா லென்செய்கேம் யாம்!
அருளிருந்த திருமொழியா லறவழக்கங் கேட்டிலமா லென்செய்கேம் யாம்!!
பொருளறியு மருந்தவத்துப் புரவலரைக் கண்டிலமா லென்செய்கேம்யாம்!!!"

---

* புத்தர், நானென்று சொல்லவேண்டிய இடங்களில் ததாகதனென்னும் பெயரையே உபயோகித்து வந்தனரென்பர்.

† வீரசோழியம், யாப்புப்படலம், கடு - ஆம் கலித்துறையுரையிற் கண்ட செய்யுள்.

என்று புலம்பி மிகத் துன்புற்றார்கள். எல்லாவுயிர்களும் கவலையடைந்தன. அநுருத்தன்,

*"போதி மேவினை புன்மை யகற்றினை
சோதி வானவர் தொழுதெழுந் தருளினை
ஆதி நாதநி னடியிணை பரவுதும்"

என்று ததாகதருடைய பரிநிருவாணத்தைப்பற்றி இவ்வாறாகப் புகழ்ந்துபாடினான். புத்தர் நிருவாணமடைந்த செய்தியைக் கேள்வியுற்ற மல்லர்கள் வந்து அவர் நெடுந்துயில்கொண்டதை உற்று நோக்கி மிகப் பிரலாபித்தார்கள். பின்பு, பரிமளமூட்டி அலங்கரித்த அவருடைய உடம்பைப் பொற்பல்லக்கின்மீது வைத்து எடுத்துக்கொண்டு நிருத்தகீத வாத்தியத்துடனே சென்று ஹிரண்யவதிநதியைக்கடந்து, முன்பு நிருவாணமுற்ற புத்தர்களுக்காகச் சைத்தியம் கட்டப்பட்டுள்ள இடத்தையடைந்து அங்கே சந்தனமுதலிய நறுமணமுள்ள விறகுகளைப்பரப்பி அவ்வடுக்கில் அச்சரீரத்தை வைத்து மேலும் அவ்விறகுகளை யடுக்கி அதன்மீது பரிமள தைலங்களை வார்த்துத் தீமூட்டி வலம்வந்து வணங்கினார்கள். செய்யவேண்டிய யாவும் விதிப்படி செய்யப்பட்டன. எரிந்தபின் வைரம்போன்ற என்புகள்மட்டும் எஞ்சின. மல்லர்கள் அவற்றை ஒரு பொற்கரகத்திற்பெய்து நகரத்துட் கொண்டுசென்று ஒருகோபுரத்தின்மேல் அக்கரகத்தை வைத்துத் தரிசித்துப் பூசித்து வணங்கிவந்தார்கள்.

அதன்பின்பு, ததாகதருடைய நிருவாணத்தைக்கேட்ட மகதநாட்டரசன் முதலிய எழுவர்வந்து அவ்வங்கத்திற் பங்கு கொடுக்கும்படி மல்லர்க்குத் தூதனுப்பினர்.—அதற்கு மல்லர்கள் இணங்கவில்லை. அதனால் அவ்வெழுவரும் கோபங்கொண்டு மல்லர்களோடு போர்செய்வதற்குச் சேனைகளுடன்வந்து குசீநகரத்தைச் சூழ்ந்தனர்; சூழவே இருதிறத்தார்க்கும் பெரியயுத்தம் நிகழத்தொடங்கியது. அப்பொழுது, † சுபத்திரனென்னும் பிராமணனொருவன் மத்தியஸ்தனாய்நின்று இருதிறத்தாரையும் ஸமாதானஞ்செய்ய யுத்தம் நின்றுவிட்டது. பின்பு அவ்வங்கத்தை எட்டுப்பங்குசெய்து மல்லர்கள் ஒருபங்கும் மேற்கூறிய ஏழரசரும் ஏழுபங்குமாக எடுத்துக்கொண்டு தத்தம் இடங்களிற் சென்று

* வீரசோழியம், யாப்புப்படலம், கக - ஆம் கலித்துறையுரையிற் கண்ட செய்யுள். † இவன்வேறு, முன்புகூறிய சுபத்திரன் வேறென்பர்.

பங்கு ஒன்றுக்கு ஒரு*தாதுகோபங்கட்டுவித்து அவற்றில் அப் பங்குகளை வைத்து வணங்கிவருவாராயினர். சுபத்திரனே அங்கம் இருந்த பொற்கரகத்தை மல்லரிடமிருந்துபெற்று மேற்கூறிய எழுவரிடத்துஞ்சென்று அங்கத்துண்டு சிறிது சிறிது வாங்கி அவற்றை அக்கரகத்திலிட்டு ஒரு சைத்தியங்கட்டுவித்து அதில் அக்கரகத்தை அடக்கஞ்செய்தான்; அந்தச் சைத்தியத்திற்கு ஸுவர்ணகரக தாதுகோபமென்றபெயர் வழங்கலாயிற்று. குசிநகரத்து மாந்தர்கள் புத்தருடைய தேகச்சாம்பரைத் தொகுத்து வைத்து அதற்குச் சைத்தியமொன்று கட்டுவித்து அந்தச்சைத்தியத்திற்குப் பஸ்மதாதுகோபமென்று பெயர்வைத்தார்கள்.

இப்படிச் சம்புத்தீவில் ஆதிகாலத்தில் பத்துத் தாதுகோபங்கள் இருந்தன. அவற்றுள் ஒவ்வொன்றிலும் பௌத்தர்கள் நிருத்தகீதத்துடன் புத்தரை வழிபட்டுவருவாராயினர்.

புத்தர் வைடூரியனென்பவனுக்கு அரசவனத்திலிருந்து கடைந்தெடுத்த நூற்றெட்டு மணிகளாலாகிய மாலையைக்கொண்டு ஜபிக்கும்படி மந்திரோபதேசஞ் செய்தமையால் ஜபமாலை கொண்டு மந்திரங்களை ஜபிக்கும் வழக்கம் பௌத்தர்களுக்கு உண்டாயிற்றென்றும், அவர் திரயஸ்திரிம்சலோகத்திற்குச் சென்றபொழுது அவருடைய பிரிவாற்றாத பிம்பஸாரன் முதலியோர் சிறந்த ஒரு சிற்பியைக்கொண்டு அவரைப்போலவே ஐந்தடி இரண்டங்குல உயரமுள்ள படிமமொன்றைச் செய்வித்து அதைக் கிருத்திரகூட விஹாரத்தில் ஸ்தாபித்துத் தரிசித்து வழிபட்டு வந்தமையால் புத்தாலயங்களிற் புத்தப்படிமம்வைத்துப் பூசிக்கும் வழக்கமுண்டாயிற்றென்றும், உபதேசித்தற்கு வந்த புத்தருக்குத் திரயஸ்திரிம்சலோகத்திலிருந்த மாயாதேவி ஒரு மந்தாரமலரை அளித்தமையால் ஆலயங்களிற் புத்தப்படிமத்திற்குப் பூக்களைப் புனையும் வழக்கமுண்டாயிற்றென்றும், புத்தர் கிருத்திரகூட விஹாரத்திலிருந்தபொழுது அவரைக் கொல்லநினைந்த தேவதத்தனுடைய முயற்சியால் ஒரு மந்திரவாதி அனுப்பிய பேய்களை ஓட்டுதற்கு அவருடைய கட்டளையின்படிவந்த தெய்வகணங்கள் காசியபரை முன்னிட்டுப் பல கொடிகளைப் பிடித்துக்கொண்டும் ஜயகண்டி முதலிய பல வாத்

* தாதுகோபமென்பதற்குத் தாதுக்களைப் பாதுகாப்பது அல்லது மறைப்பதென்று பொருள் கூறுவர்.

தியங்களை முழங்கிக்கொண்டும் சென்றமையால் புத்தாலயங்களிற் கொடியெடுத்தலும் ஜயகண்டிமுதலிய பல வாத்தியங்களை முழக்குதலுமாகிய வழக்கமுண்டாயிற்றென்றும், மேற்கூறிய தேவதத்தனுடைய நட்பாளனாகிய மந்திரஜோதி புத்தருடைய மகிமையால் தன் ஆற்றல்குறைந்து காளைவடிவங்கொண்டு இறக்குங்காலத்தில் அவரை நோக்கி, "பகைவர்கள் உமது ஆற்றலை அறிந்துகொள்ளும்படி என்னுடைய இவ்வுடம்பின்தோலாற் கட்டுவித்த பேரிகையை உமக்குமுன்பு அடிக்கும்படி செய்யவேண்டும்" என்று வேண்டிக்கொண்டமையாற் புத்தாலயங்களிற் பேரி அடிக்கும் வழக்கமுண்டாயிற்றென்றும் சொல்லுவர்.

புத்ததேவருடைய பாதப்படிமைகள், காவிரிப்பூம்பட்டினத்தைச்சார்ந்த உவவனத்திலும் இலங்கைத்தீவிலுள்ள (இரத்தினத்தீவிலுள்ள) சமந்தம் அல்லது சமனொளி (ஆடம்ஸ்பீக்) என்னும் மலையின் உச்சியிலும் இருந்தனவென்றும் அவைகள் பௌத்த மதத்தைச்சார்ந்த தெய்வங்களாலும் பௌத்தசாரணர் முதலியவர்களாலும் உபாஸகர்களாலும் புத்ததேவராகவே பாவித்து வணங்கித் துதிக்கப்பட்டு வந்தனவென்றும் மணிமேகலையால் தெரிகின்றன. இவற்றை,

"அருளு மன்பு மாருயி ரோம்பும்
ஒரு பெரும் பூட்கையு மொழியா நோன்பிற்
பகவன தாணையிற் பன்மரம் பூக்கும்
உவவன மென்பதொன் றுண்டத னுள்ளது
விளிப்பறைபோகாது மெய்புறத் திடூஉம்
பளிக்கறை மண்டப முண்டத னுள்ளது
தூநிற மாமணிச் சுடரொளி விரிந்த
தாமரைப் பீடிகை தானுண்டு" (ரு-ஆம்காதை, கூ-௬௬) எனவும்,

"..................மணிமேகலா தெய்வம்
பதியகத் துறையுமோர் பைந்தொடி யாகி
மணியறைப் பீடிகை வலங்கொண் டோங்கிப்
புலவன் றீர்த்தன் புண்ணியன் புராணன்
உலக நோன்பி னுயர்ந்தோ யென்கோ
குற்றங் கெடுத்தோய் செற்றஞ் செறுத்தோய்
முற்ற வுணர்ந்த முதல்வா வென்கோ,
காமற் கடந்தோ யேம மாயோய்
தீநெறிக் கடும்பகை கடிந்தோ யென்கோ

ஆயிர வாரத் தாழியன் றிருந்தடி
நாவா யிரமிலே ரேத்துவ தெவன்" (ங-ஆம் காதை, கூஙு-கoங)
எனவும்,

"ஆதி முதல்வ னறவாழி யாள்வோன்
பாத பீடிகை" (சு-ஆம் காதை, கக-உ) எனவும்,

"ஈங்கித னயலகத் திரத்தின தீவத்
தோங்குயர் சமந்தத் துச்சி மீமிசை
அறவியங் கிழவோ னடியிணை யாகிய
பிறவியென்னும் பெருங்கடல் விடூஉம்
அறவி நாவா யாங்குளது" (கக-ஆம் காதை, உக-ஙு) எனவும்,

"இலங்கா தீவத்துச் சமனொளி யென்னும்
சிலம்பினை யெய்தி வலங்கொண்டு மீளும்
தரும சாரணர்" (உஅ-ஆம் காதை, கoஎ-கூ) எனவும் வருவன வற்றாலுணர்க.

இன்னும், காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கே முப்பது யோசனைத்தூரத்தில் கடலினுள்ளதாகிய மணிபல்லவமென்னும் சிறியதீவில், புத்ததேவர் இருத்தற்காக இந்திரனால் நிருமித்து இடப்பட்ட ஆசனமொன்று இருந்ததென்றும், அது தீவதிலகையென்னுந் தெய்வமங்கையால் காக்கப்பட்டிருந்ததென்றும், தன்னைத்தரிசித்தோர்க்கு அவர்களுடைய பழம்பிறப்பில் நிகழ்ந்த செய்தியைத் தெரிவித்துத் தன்னுடைய தெய்வத்தன்மையைப் புலப்படுத்தியதென்றும், அதனால் பலதேயத்துமுள்ள பௌத்தர்களால் வணங்கப்பட்டு வந்ததென்றும் மணிமேகலையால் தெரிகின்றன. அவை வருமாறு:—

"விரிந்திலங் கவிரொளி சிறந்துகதிர் பரப்பி
உரைபெறு மும்முழ நிலமிசை யோங்கித்
திசைதொறு மொன்பான் முழநில மகன்று
விதிமா ணாடியின் வட்டங் குயின்று
பதும சதுர மீமிசை விளங்கி
அறவோற் கமைந்த வாசன மென்றே
நறுமல ரல்லது பிறமரஞ் சொரியாது
பறவையு முதிர்சிறை பாங்குசென் றதிராது
தேவர்கோ னிட்ட மாமணிப் பீடிகை
பிறப்புவிளங் கவிரொளி யறத்தகை யாசனம்"
(அ-ஆம் காதை, சச-ஙட.)

"பெருந்தவ முனிவ னிருந்தற முரைக்கும்
பொருவறு சிறப்பிற் புரையோ ரேத்தும்
தரும பீடிகை" (அ-ஆம் காதை, கக-௫.)

"வேக வெந்திற னாகநாட் டரசர்
சினமா சொழித்து மனமாசு தீர்த்தாங்
கறச்செவி திறந்து மறச்செவி யடைத்துப்
பிறவிப்பிணி மருத்துவ னிருந்தற முரைக்கும்
திருந்தொளி யாசனஞ் சென்றுகை தொழுதி
அன்றைப் பகலே யுன்பிறப் புணர்ந்தீங்
கின்றியா னுரைத்த வுரைதெளி வாய்" (கூ-ஆம் காதை, ௫அ-கூச.)

"உயிர்க ளெல்லா முணர்வுபா ழாகிப்
பொருள்வழங்கு செவித்துளை தூர்ந்தறி விழந்த
வறந்தலை யுலகத் தறம்பாடு சிறக்கச்
சுடர்வழக் கற்றுத் தடுமாறு காலையோர்
இளவள ஞாயிறு தோன்றிய தென்ன
நீயோ தோன்றினை நின்னடி பணிந்தேன்
நீயே யாகிநிற் கமைந்தவிவ் வாசனம்
நாமிசை வைத்தேன் றலைமிசைக் கொண்டேன்
பூமிசை யேற்றினேன் புலம்பறு கென்றே
வலங்கொண் டாசனம் வணங்குவோள்" (க0-ஆம் காதை, எ-கசு.)

"மன்பெரும் பீடிகை வணங்கினை யேத்தி
நின்பதிப் புகுவாய்" (க0-ஆம் காதை, அசு-எ.)

"மன்பெரும் பீடிகை யென்பிறப் புணர்ந்தேன்"(கக-ஆம்காதை,கசு.)

"பழுதில் காட்சியிந் நன்மணிப் பீடிகை
தேவர்கோ னேவலிற் காவல் பூண்டேன்"(கக-ஆம்காதை,உஎ-அ.)

"மன்பெரும் பீடிகை தொழுதனள் வணங்கி" (கக-ஆம் காதை,௫ச.)

"கோமகன் பீடிகை தொழுதுவலங் கொண்டு"
(கக-ஆம் காதை, கஉசு.)

"ஆங்கத் தீவகத் தறவோ னாசனம்
நீங்கிய பிறப்பு நேரிழைக் களித்ததும்" (கஉ-ஆம் காதை, கக-உ.)

"மணிப்பல் லவத்திடை யென்னையாங் குய்த்துப்
பிணிப்பறு மாதவன் பீடிகை காட்டி
என்பிறப் புணர்ந்த வென்முற் றோன்றி" (உக-ஆம்காதை,௫க-எ.)

"மணிப்பல் லவப்வலங் கொண்டு மடக்கொடி
பிணிப்பறு மாதவன் பீடிகை காண்டலும்
தொழுதுவலங் கொள்ளவத் தூமணிப் பீடிகைப்
பழுதில் காட்சி தன்பிறப் புணர்த்த" (உ௫-ஆம் காதை, ௫௫-சு.)

"பெரியவன் றேன்று முன்னரிப் பீடிகை
கரியவ னிட்ட காரணந் தானும்
மன்பெரும் பீடிகை மாய்ந்துயிர் நீங்கிய
வென்பிறப் புணர்த்தலு மென்னென்றி யான்றொழு
முற்ற வுணர்ந்த முதல்வனை யல்லது
மற்றப் பீடிகை தன்மிசைப் பொறீஅது
பீடிகை பொறுத்த பின்ன ரல்லது
வானவன் வணங்கான் மற்றவ் வானவன்
பெருமகற் கமைத்துப் பிறந்தார் பிறவியைத்
தரும பீடிகை சாற்றுக வென்றே
அருளினன்" (உரு-ஆம் காதை, ருச-சுச.)

"......................பூங்கொடி பொருந்தியித்
தீவகம் வலஞ்செய்து தேவர்கோ னிட்ட
மாபெரும் பீடிகை வலங்கொண் டேத்துழி"
(உரு-ஆம் காதை, கஅக-ங.)

"செல்வற் றொணர்ந்தத் தீவகப் பீடிகை
யொல்காது காட்டப் பிறப்பினை யுணர்ந்ததும்"
(உஅ-ஆம் காதை, எஎ-அ.)

"பொன்றிகழ் புத்த பீடிகை போற்றும்
தீவ திலகையு மித்திறஞ் செப்பினள்" (உகூ-ஆம் காதை, ஙஅ-கூ.)

மணிமேகலையில் புத்ததேவரைப் பாராட்டியும் துதித்தும் வருவனவற்றுட் சில வருமாறு:—

"அருளு மன்பு மாருயி ரோம்பும்
ஒருபெரும் பூட்கையு மொழியா நோன்பிற்
பகவன்" (ங-ஆம் காதை, ருகூ-சுக.)

"எங்கோ னியல்குண னேதமில் குணப்பொருள்
உலக நோன்பிற் பலகதி யுணர்ந்து
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
இன்பச் செவ்வி மன்பதை யெய்த
அருளறம் பூண்ட வொருபெரும் பூட்கையன்
அறக்கதி ராழி திறப்பட வுருட்டிக்
காமற் கடந்த வாமன்" (ரு-ஆம் காதை, எக-எ.)

"ஆதி முதல்வ னறவாழி யாள்வோன்" (சு-ஆம் காதை, கக.)
"ஆதிசான் முனிவன்" (எ-ஆம் காதை, ககூ.)
"பெருந்தவ முனிவன்" (அ-ஆம் காதை, சுக.)
"பிறவிப்பிணி மருத்துவன்" (கூ-ஆம் காதை, சுக.)
"ஆதி முதல்வ னறவாழி யாள்வோன்" (க0-ஆம் காதை, சுக.)

“மதிநாண் முற்றிய மங்கலத் திருநாட்
பொதுவறி விகழ்ந்து புலமுறு மாதவன்” (௩௦-ஆம் காதை; ௮௩-௪.)

“தருமதலைவன்” (௧௧-ஆம் காதை, ௩௦.)

“மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
எண்பிறக் கொழிய விறந்தோய் நின்னடி
கண்பிறர்க் களிக்குங் கண்ணோய் நின்னடி
தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
உரகர் துயர மொழிப்போய் நின்னடி
வணங்குத லல்லது வாழ்த்தலென் னாவிற்
கடங்காது” (௧௧-ஆம் காதை, ௬௧-௭௨.)

“மைத்திருள் கூர்ந்த மனமாசு தீரப்
புத்த ஞாயிறு தோன்றுங் காலை” (௧௨-ஆம் காதை, ௮௫-௬.)

“தெளிந்த நாதன்” (௨௫-ஆம் காதை, ௯௩.)

“தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயி ரோம்பும்
மன்னுயிர் முதல்வன்” (௨௫-ஆம் காதை, ௧௧௬-௭.)

“செம்பொன் மாச்சினைத் திருமணிப் பாசடைப்
பைம்பூம் போதிப் பகவன்” (௨௮-ஆம் காதை, ௧௭௩-௪.)

“அறிவு வறிதா யுயிர்நிறை காலத்து
முடிதயங் கமரர் முறைமுறை யிரப்பத்
துடித லோக மொழியத் தோன்றிப்
போதி மூலம் பொருந்தி யிருந்து
மாரனை வென்று வீர னாகிக்
குற்ற மூன்று முற்ற வறுக்கும்
வாமன்” (௩௦-ஆம் காதை, ௭-௧௩.)

பழைய பௌத்தகவிகள் இப்படியே புத்ததேவருடைய குண விசேடங்களைப் பாராட்டித் தமிழிற்பாடிய பாடல்களுள் இப்போது கிடைத்தனவை மணிமேகலையின் அரும்பதவுரையில் உரிய இடங்களில் மேற்கோள்களாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவற்றை அவ்வவ்விடங்களிற் பார்த்துக்கொள்க.

"மதிநாண் முற்றிய மங்கலத் திருநாட்
பொதுவறி விகழ்ந்து புலமுறு மாதவன்" (௧௦-ஆம் காதை; ௮௩-௪.)

"தருமதலைவன்" (௧௧-ஆம் காதை, ௩௦.)

"மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
எண்பிறக் கொழிய விறந்தோய் நின்னடி
கண்பிறர்க் களிக்குங் கண்ணோய் நின்னடி
தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
உரகர் துயர மொழிப்போய் நின்னடி
வணங்குத லல்லது வாழ்த்தலென் னாவிற்
கடங்காது" (௧௧-ஆம் காதை, ௬௧-௭௨.)

"மைத்திருள் கூர்ந்த மனமாசு தீரப்
புத்த ஞாயிறு தோன்றுங் காலை" (௧௨-ஆம் காதை, ௮௫-௬.)

"தெளிந்த நாதன்" (௨௫-ஆம் காதை, ௬௩.)

"தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயி ரோம்பும்
மன்னுயிர் முதல்வன்" (௨௫-ஆம் காதை, ௧௧௬-௭.)

"செம்பொன் மாச்சினைத் திருமணிப் பாசடைப்
பைம்பூம் போதிப் பகவன்" (௨௮-ஆம் காதை, ௧௭௩-௪.)

"அறிவு வறிதா யுயிர்நிறை காலத்து
முடிதயங் கமரர் முறைமுறை யிரப்பத்
துடித லோக மொழியத் தோன்றிப்
போதி மூலம் பொருந்தி யிருந்து
மாரனை வென்று வீர னாகிக்
குற்ற மூன்று முற்ற வறுக்கும்
வாமன்" (௩௦-ஆம் காதை, ௭-௧௩.)

பழைய பௌத்தகவிகள் இப்படியே புத்ததேவருடைய குண விசேடங்களைப் பாராட்டித் தமிழிற்பாடிய பாடல்களுள் இப்போது கிடைத்தவை மணிமேகலையின் அரும்பதவுரையில் உரிய இடங்களில் மேற்கோள்களாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவற்றை அவ்வவ்விடங்களிற் பார்த்துக்கொள்க.

னங்களுள் யாதேனுமொன்றில் இல்லாதது ஒன்றுமில்லை ; அவர் வகுத்த அறநெறிக்குரிய விதிகளோ அவருடைய காலத்திற்கு முன்னுவது பின்னுவதுள்ள ஹிந்துக்களுடைய புஸ்தகங்களி லிருந்து எடுத்துக் காட்டக்கூடியவைகளாகவே இருக்கின்றன. கௌதமரிடத்திலிருந்த அரிய சிறப்பாற்றல்களெல்லாம் பிறரால் முன்பு நன்ருகச் சொல்லப்பட்டதை அபிவிருத்திசெய்து நன்கு பாராட்டிச் சீர்ப்படுத்தியவழியினும், ஹிந்துக்களில் மிகப் புகழ்பெற்ற ஆராய்ச்சிமிக்க அறிஞர்கள் பண்டைக்காலத் திலேயே ஒத்துக்கொண்டிருக்கும் ஒழுங்கிற்கும் நடுவுநிலைமைக்கும் உரிய தர்மங்களை நியாயமாக எந்த முடிபுவரையிற் கொண்டு செலுத்தலாமோ அதுவரையிற் கொண்டு செலுத்தியதிலுந்தான் காணப்படுகின்றன. கௌதமருக்கும் மற்றை ஆசிரியர்களுக்குமுள்ள வேறுபாடு, முக்கியமாக அவருடைய மிக ஆழமான ஆர்வத்துடன்கூடிய ஶ்ரத்தையினும் உலோகோபகாரமாயிருக்கிற விசாலமான ஜீவகாருண்யபாவத்தினு * முள்ளது. இந்த வேறுபாடுகூடப் பெரும்பாலும் இப்பொழுதுதான் அதிகமாகத் தோற்றுகின்றது. இவ்வேறுபாட்டால் அக்காலத்தில் அவருக்குப் பிராஹ்மணர்களில் உயர்ந்தவர்களாக இருந்தவர்களுடைய உடன்பாடும் உதவியும் ஒருவிதத்திலும் இல்லாமற்போகவில்லை. அவருடைய முக்கியசிஷ்யர்களிற் பலரும் அவருடைய ஸங்கத்தோரில் மிகப்புகழ்பெற்றவர் பலரும் பிராஹ்மணர்களே ; அவர் பிராஹ்மணர்களை மானிக்கத்தகுந்தவர்களென்று மதித்துப் பௌத்தபிக்ஷுக்களுடன் எப்பொழுதுஞ்சேர்த்துப் பாராட்டிக் கொண்டிருந்தார்; பௌத்தசமயத்தில் ஆழ்ந்தவர்களான அருகத்துக்களுக்குப் பிராஹ்மணரென்ற பெயரை ஒரு கௌரவநாமமாக உபயோகித்துக்கொண்டுவந்தார் ; ஸங்கத்தாருக்குள் ஜாதிபேதமில்லாமற்செய்ததும், நிர்வாணத்திற்குரியவழி மிக உயர்ந்தவனுக எண்ணிக்கொண்டிருக்கும் இருபிறப்பாளனுக்கும் மிகத் தாழ்ந்த சண்டாளனுக்கும் ஒரேவிதமாகத் திறந்துள்ளதென்று அவர் சொல்லியதும் அதிக அதிருப்தியை உண்டுபண்ணினவென்பதிற் சந்தேகமில்லை. மேலும் யாகமுதலிய கர்மமார்க்கத்தில் அவருக்கிருந்த அவமதிப்பும் இந்தஜன்மத்தில் இவ்விடத்

* கௌதமரிடத்தில் இந்த இரண்டுகுணங்களும் மிகுதியாக விருந்தனவென்பது கருத்து.

திலேயே தாம் கரையேறுவதற்கு வேண்டியதைச் செய்து கொள்ளும் யோக்கியதை ஒவ்வொருவருக்கு முண்டென்று அவருக்கிருந்த தெளிவும் அபாயகரமான கொள்கைகளென்று புராதனவழியிலேயே பற்றுள்ள கூட்டத்தாருக்குத்தோற்றின. மேற்கூறிய இருதிறத்தாருடைய சம்பிரதாயங்கள் காலக்கிரமத்தில் ஒன்றற்கொன்று முற்றும் ஒவ்வாதனவாகவே ஆய்விட்டனவென்பது உண்மையாயிருத்தல்கூடும். ஆனால் பண்டைக்காலத்தில் கௌதமரும் பிராஹ்மணரிற் பெரும்பான்மையோரும் அவை அவ்வாறு வேறுபாடுள்ளனவென்று எண்ணவில்லை. அசோகன் காலத்திற்குப்பிறகு நெடுங்காலஞ் சென்றபின்பு பௌத்தமதம் தன்னியற்கைமாறிச் சீர்குலையுமளவும் மதசம்பந்தமான கலகத்தினால் வருந்துன்பம் இருந்ததாகவே கேள்வியில்லை. வழிவழியே வந்துள்ள ஹிந்துமதத்தினகத்திருந்தே பௌத்தமதம் வளர்ந்து பெருகியது. அந்தப் பௌத்தமதத்தில் அழகுமிகுந்த பல மேம்பட்ட விஷயங்கள் அடங்கியிருக்கின்றனவென்பதை யாவரும் அறிவாராதலின், அது தனது மூலமாகிய ஹிந்துமதத்தின் சிறப்பினையே விளக்குவதென்றும், ஹிந்துமதம் இழிந்ததென்றேனும் துன்புறுத்துவதென்றேனும் விளக்கவந்ததன்றென்றும் அறியற்பாலது. கௌதமருடைய பயிற்சியெல்லாம் பிராஹ்மணமதத்திலேயே. அப்புராதனமதத்தின் உட்பொருளைவெளியிட்டு மிகச் சரியாக விளக்கிக்காட்டியவர்களெல்லாருள்ளும் தாமே சிறந்தவரென்று கௌதமபுத்தர் தம்மைப்பற்றி எண்ணிக்கொள்வதற்கு உரிமையுண்டு. அவர், ஹிந்துக்களுள் மிகவுயர்ந்தவரும் அறிவுடையவரும் சிறந்தவருமாக இருந்தாரென்பதுதான் அவருக்குத் தக்கது'' என்பது.

மத ஆராய்ச்சியில் உழைத்திருக்கும் சிறந்த வித்வத்சிகாமணிகளாகிய 'மாக்ஸ் முல்லர்' (Max Muller), 'ஓல்டன்பர்க்' (Oldenberg), 'மானியர் வில்லியம்ஸ்' (Monier Williams) முதலான மற்றை ஐரோப்பிய வித்துவான்களுடைய கருத்தும் இதுவே. கிழக்குத்திசைப் பரிசுத்த புஸ்தகங்களென்று பொருள்படும் 'ஸேக்ரெட் புக்ஸ் ஆப் தி ஈஸ்ட்' (Sacred Books of the East) என்ற இங்கிலீஷ் பெயரால் 'மாக்ஸ் முல்லர்' என்பவர் வெளிப்படுத்திய புஸ்தகங்களுள் கரு - ஆம் புஸ்தகத்தின் நூன்முகத்தில் ௫உ - ஆம் பக்கத்தில் அவர் சொல்லியிருப்பது

யாதெனின்:—“என் புத்திக்கேற்க உபநிடதங்களே புத்தமதத்திற்கு மூலம்; புத்தமதம் பலவாற்றானும் உபநிடதத்தின் கொள்கையை எந்தமுடிபுவரையிற் கொண்டு செலுத்தலாமோ அந்த முடிபாகவுள்ளது. அது பின்னும் அந்த உபநிடதங்களின்கொள்கையையே தன்னுடைய நூதனமான கோட்பாட்டிற்கு ஆதாரமாகவுடையது. கொள்கையைப்பற்றிச் சொல்லப்புகுங்கால், வேதாந்தத்தால் நாடப்படுவதும் எவற்றிற்கும் மேலான முடிவானதுமாகிய ஆத்மதத்துவஞானமானது பௌத்தர்களுடைய * ஸம்யக்ஸம்போதியேயாம். ஆசாரத்தைப்பற்றிப் பேசுங்கால், ஹிந்து ஸந்யாசியே பௌத்தபிக்ஷுவாம்; பிராஹ்மணப் பிரஹ்மசரியாச்ரமத்துக்குரிய துன்புறுத்தும் நீடித்த நியமத்தினின்றும், பிராஹ்மண கிருகஸ்த னுடைய தருமங்களினின்றும், பிராஹ்மண வானப்ரஸ்தனுக்கு நியமித்திருக்கும் தவச்சுமையினின்றும் விடுதலையடைந்த துறவியே அந்தப்பிக்ஷு. ஹிந்துமதத்தில் ஸந்யாசிக்கேயுரிய ஆத்மஸம்பந்த ஸ்வாதந்திரியமானது பௌத்த மதத்தில் ஸங்கமென்கிற சகோதர கோஷ்டியிலுள்ள எல்லார்க்குமே உரிய பொதுப்பொருளாம். அந்தக் கோஷ்டியில் இளைஞரும், முதியரும், பார்ப்பாரும், அல்லாரும், வறிஞரும், செல்வரும், அறிஞரும், பேதையரும் ஆகிய எல்லோருமே ஒருங்குசேரலாம்; உண்மையில் வேதத்தைப்பற்றி நிற்கும் உலகமும் திரிபிடகத்தைப்பற்றி நிற்குமுலகமும் தொடர்ச்சியற்றவையே அல்ல; அவ்விரண்டிற்கும் தேச சரித்திரத்தால் தொடர்ச்சியுண்டு. ஒன்றோடொன்று மிக்கவேறுபாடுற்றுத் தோன்றும் இவ்விரண்டு கோடிகளையும் சேர்த்துப்பொருத்திக் காட்டுவதற்குள்ள இயைபை உபநிடதங்களில்தேடிக் கண்டு கொள்ள வேண்டும்” என்பதாம்.

இவ்விதமாக ஆராய்ந்து பார்க்குங்கால், பௌத்தமதத்திற்குள்ள ஆதாரங்கள் கௌதம புத்தருக்கும் முந்தியகாலத்திலேயே இருந்தனவாகக் காணப்படுகின்றன. பௌத்த நூல்களாலும் கௌதம புத்தருக்கு முன்பு அநேக புத்தர்கள் இருந்தார்களென்றும் அந்தப்புத்தர்களில் இருபத்துநால்வர் மிகப்பெயர் பெற்றவர்களென்றும் அவர்களுள் இருபத்து நான்காம் புத்தர் கௌதமபுத்தரென்றும் தெரிகின்றது. இதனாலும் கௌதம புத்தருடைய

* ஸம்யக்ஸம்போதி - நல்லஞானம்.

காலத்துக்குமுந்தியே பௌத்தசமயத்துக்குரிய இன்றியமையாத கொள்கைகளெல்லாம் வழக்கத்தில் இருந்தன வென்றறியலாம்.

"இறந்த காலத் தெண்ணில்புத் தர்களும்
சிறந்தருள் கூர்ந்து திருவாய் மொழிந்தது."

(மணிமேகலை, ௩௦-ஆம் காதை, ௧௪-ரி.)

ஸ்மிருதிகளிற் கூறப்பட்டுள்ள வருணாச்ரம தர்மங்களைக் கைப்பற்றிப் பண்டைக் காலத்தில் ஹிந்துக்கள் யாவரும் தவறாது ஒழுகிவந்தனரென்று எண்ணுவதற்குப் பலசாதனங்கள் உண்டு. ஆரியர்கள் பிரஹ்மசரியத்திலிருந்து கிருகஸ்தாச்சிரமத்திற்கும், அதிலிருந்து வானப்பிரஸ்தாச்சிரமத்திற்கும், பிறகு ஸந்யாஸ ஆச்சிரமத்திற்கும் செல்லுவது வழக்கமாகவிருந்தது. பிரஹ்மசாரிக்கும் கிருஹஸ்தனுக்கும் ஸ்மிருதிகளால் விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் பலவாம்; அவை கடினங்களுமாம். வானப்ரஸ்தனுக்குரிய ஒழுக்கங்கள் அவ்வளவு கடுமையுள்ளனவல்ல. ஸந்யாசிக்குரிய ஸ்வாதந்திரியமோ மிகஅதிகம். அவன் நித்திய நைமித்திக கருமங்களினின்றும் கிருஹ்ய ஸம்ஸ்காரங்களினின்றும் நீங்கினவன். இந்த ஸ்வாதந்திரியத்தைக் கருதியே அநேகர் தக்க காலத்தில் துறவறத்தை மேற்கொண்டனர். இங்ஙனம் வானப்பிரஸ்தராயும் ஸந்யாசிகளாயுமிருந்தோர் காட்டிற் சென்று ஒருங்குசேர்ந்து ஆங்காங்குத் தத்துவவிசாரம் செய்து வந்ததன் பயன், வேதங்களிலுள்ள *ஆரண்யகபாகத்தைச்சார்ந்த உபநிடதங்களில் நன்கு விளங்குகின்றது. ஹிந்துக்களுடைய பிரஸித்தமான † ஆறு தரிசனங்களும் உண்டானது கூட இவ்வித தத்துவ விசாரத்தினாலேயே. இன்னும், க்ஷத்திரியர்கள் நடுவுநிலைமையில் நின்று செங்கோல் செலுத்தி வருங்காலத்தில், அவர்களுள்ளே பலர் ஸ்மிருதிகளாற் பாராட்டப்படுகிற முற்சொல்லிய வருணாச்சிரமங்களின் ஏற்றத்தாழ்வுகள் ஜனங்களுக்குப் பொறாமையை உண்டாக்குவதனால், அவை தமது நல்ல அரசாட்சிக்கு இடையூறாகவுள்ளவைகளென்று எண்ணங்கொண்

---

* ஆரணியகம்—காட்டிற்குச் சம்பந்தமுள்ளது.

† ஆறு தரிசனங்களாவன: ஸாங்கியம், யோகம், மீமாம்ஸை, வேதாந்தம், நியாயம், வைசேஷிகமென்பன; இவை ஷட்தரிசனமெனப்படும்.

லாமென்றும் ஊகித்தற் கிடமுண்டு. பௌத்தமத ஆராய்ச்சியில் பேர்பெற்றவருள் ஒருவரான 'ஓல்டன்பர்க்' (Oldenberg) என்பவர், துறவறமானது முதலில் ஹிந்து தேசத்தில் உதித்துப் பின்பு மற்றையிடங்களிற் பரவியதென்று எண்ணுகிறார். கௌதமபுத்தர்காலத்தில் விந்தியமலைக்கும் இமயமலைக்கும் நடுவேயுள்ள நாடாகிய ஆரியாவர்த்தத்தில் துறந்தோர்கூட்டம் பல இருந்தனவென்று பௌத்த நூல்களாலும் ஜைன நூல்களாலும் தெரியவருகிறதென்றும் அவர் சொல்லுகிறார். ஆகவே தத்துவ விசார முயற்சி எவ்விடத்தும் மிகுதியாக இருந்தகாலத்திலேயே அவ்வாரியாவர்த்தத்தில் கௌதமபுத்தர் அவதரித்தனர். மேற்கூறிய முன்னோர்களின் ஞானமே அவருக்கு மூலதனம். வேதாந்தத்திற்கும் பௌத்தமதத்திற்கும் பலவற்றிலும் ஒற்றுமையிருப்பதற்கு இதுவே காரணம். உலகவாழ்வானது துன்பத்தொகுதியென்பதும், மறுபிறப்பு அத்துன்பத்தைத் தொடர்ச்சியறாது வழிவழியாக வளர்விப்பதென்பதும், பிறவாமையே மாந்தரெய்துதற்குரிய மேலான உறுதிப்பொருளென்பதும், அப்பிறவாமைக்குப் பற்றற்றுப் பயன் நோக்காது செய்யும் நற்கருமங்களே காரணமாமென்பதும் ஹிந்துக்களுடைய தரிசனங்களிலும் பௌத்த நூல்களிலும் ஒரேவிதமாகக் கூறப்பட்டுள்ளன.

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்ன
தற்றோ ருறுவது"

(மணிமேகலை, உ-ஆம் காதை, கூச-எ.)

*மூவகைத் துன்பங்களினின்றும் நீங்குவதே சிறந்தபுருஷார்த்தமென்பது சாங்கிய தரிசனத்தின் கொள்கை. உலகவாழ்வு ஸாரமில்லாததென்றும் நிலையில்லாததென்றும் நினைத்து மாறுபடுதலில்லாததும் நித்தியமானதுமாகிய வீட்டையடைய ஒவ்வொருவரும் முயலவேண்டுமென்பதே வேதாந்தத்தின் கருத்து. இங்கே சொல்லிய அந்தமிலின்பத்தழிவில்வீட்டை வேதாந்திகள் நிருவாணமென்றுங்கூறுவதுண்டு. பௌத்தர்களும் தாம்பெறுதற்

* மூவகைத் துன்பங்களாவன:—(க) ஆத்யாத்மிகம், (உ) ஆதிதெய்விகம், (ங) ஆதிபௌதிகம்.

குரிய மேலான புருஷார்த்தத்தை நிருவாணமென்றே கூறுவர். இந்த நிருவாணத்தினுடைய இலக்கணத்தைக் கூறுதலினும் இதனை அடைதற்குரிய வழியை அறிவுறுத்துதலினும் வேதாந்திகளுக்கும் பௌத்தர்களுக்கும் சிறிது வேறுபாடிருந்தாலும் அத்வைதிகளல்லாத மற்றை வேதாந்திகள் அத்வைதிகளைப் *பிரச்சன்ன பௌத்தர்களென்று அவமதித்துக்கூறும் வழக்கம் வேதாந்தத்திற்கும் பௌத்தமதத்திற்குமுள்ள ஒற்றுமையை விளக்குகின்றது. பௌராணிகர் கௌதமபுத்தரை விஷ்ணுவின் அவதாரமாக ஏற்றுக்கொண்டிருப்பதும் பௌத்தமதம் ஹிந்துமதத்திற்கு நேரே முற்றும் முரணியதன்றென்பதைக் குறிப்பிக்கும்.

பௌத்தமதத்தில் மஹாயானம் ஹீனயானமென்று இருவகையுண்டு. அவற்றுள், மஹாயானம் நேபாலம், திபெத், சீனம், ஜப்பான் என்கிற இடங்களில் இருந்து வருகிறது. ஹீனயானம் பர்மாதேசத்திலும் இலங்கைத்தீவிலும் பரவியுள்ளது. மணிமேகலையிற் கூறப்பட்டுள்ளது இந்த ஹீனயான சம்பிரதாயமே. ஹிந்துதேசத்தின் வடக்கேயுள்ள மஹாயானசம்பிரதாயத்தாரும் வேதாந்திகளும் அடிக்கடி தம்முள் வாதித்து வந்தனரென்று தெரிகிறது. மஹாயான சம்பிரதாயத்தைச் சேர்ந்த பலநூல்கள் ஸம்ஸ்கிருத பாஷையிலே எழுதப்பட்டுள்ளன. ஹீனயானத்தார்க்குப் பாளிபாஷையில் எழுதப்பட்டுள்ள திரிபிடகமே மூலநூல்; வேறொன்றுமில்லை. கௌதமபுத்தர் காலத்திலே பௌத்தருக்கும் வேதாந்திகளுக்கும் தத்துவசாஸ்திர விஷயமான வழக்கு அதிகமாக இருந்ததென்று தெரியவில்லையாதலால், அவர்காலத்துக்குப் பின்பே பௌத்தமதத்திற் பிரஸித்தமாகவுள்ள மாத்தியமிகர், யோகாசாரர், ஸௌத்திராந்திகர், வைபாஷிகர் என்கிற நான்குவகையாருடைய தத்துவசாஸ்திர சம்பிரதாயங்களும் உண்டாயிருக்கவேண்டும்.

கௌதமபுத்தர் வேதாந்தக்கொள்கையில் அடங்கியிருக்கிற அப்பிரத்தியக்ஷமான தத்துவங்களை அனுமான தர்க்கத்தினாற் சாதிக்கமுடியாதென்ற அபிப்பிராயங்கொண்டவர். ஆனாலும் ஸாங்கியர்களுடையனவும் வேதாந்திகளுடையனவுமாகிய மானஸ சாஸ்திரத்தையும், முன்னேயுள்ள பல ஆசிரியர்களின் ஆசாரத்தையும், அவர்களுடைய அறநெறிக்குள்ள விதிகளையும்

* பிரச்சன்ன பௌத்தர் - வேறு வேறிடத்தில் மறைந்த பௌத்தர்.

கைக் கொண்டவர். ஸ்வப்பிரயோசனத்தை நாடி முயல்வது அறமன்றென்பதும், அவ்வகை முயற்சி துன்பமே உருவங்கொண்டாற்போன்ற உலகவாழ்வின் பற்றினை விருத்திசெய்துகொண்டே வருமென்பதும், பயன்கருதாமல் பிறருக்காகப் புரியுங் கருமமே துன்பந்தரும் உலகப்பற்றினை அறுப்பதென்பதும் அவருடைய கொள்கை ;

"தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்"

(மணிமேகலை, ௫-ஆம் காதை, ௭௩.)

"பிறர்க்கற முயலும் பெரியோய்"

(மணிமேகலை, ௧௧-ஆம் காதை, ௬௩.)

"பிறர்க்கற மருளும் பெரியோன்"

(மணிமேகலை, ௨௧-ஆம் காதை, ௧௭௮.)

"தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயி ரோம்பும்
மன்னுயிர் முதல்வன்"

(மணிமேகலை, ௨௫-ஆம் காதை, ௧௧௬-௭.)

"முன்றான்பெரு மைக்கணின் றான்முடி வெய்து காறும்
நன்றே நினைந்தான் குணமொழிந் தான்ற னக்கென்
றொன்றானு முள்ளான் பிறர்க்கேயுறு திக்கு ழந்தான்
அன்றே யிறைவ னவன்றாள்சர ணங்க ளன்றே."

(குண்டலகேசி, கடவுள் வாழ்த்து.)

"இருட்பார வினைநீக்கி யெவ்வுயிர்க்குங் காவலென
அருட்பாரந் தனிசுமந்த வன்றுமுத லின்றளவும்
மதுவொன்று மலரடிக்கீழ் வந்தடைந்தோர் யாவர்க்கும்
பொதுவன்றி நினக்குரித்தோ புண்ணியநின் திருமேனி."

(வீரசோழியம், யாப்புப்படலம், ௧௧-ஆம் கலித்துறை உதாரணம்.)

தெய்வமுண்டென்னும் உறுதியும் ஆன்மாக்களுண்டென்னும் உறுதியும் அவற்றின் இலக்கணங்களையும் சம்பந்தத்தையும் அறிந்துகொள்ளுதலுமே நல்லொழுக்கத்திற்கு ஆதாரமென்று அவர் உறுதியாக எண்ணினவரல்லர். தெய்வத்தைப் பற்றியும் ஆன்மாவைப் பற்றியும் எவரும் யாதொன்றும் அறியவல்லவரல்லரென்பது அவரது கருத்துப்போலும். ஆயினும் துன்பம் நிறைந்த பிறவிப்பிணியினின்றும், நீங்குவதே மாந்தர் எய்துதற்குரிய பெரும்பயனென்பதையும் யான் எனதென்ற இருவகைப்பற்றுமே

அப்பிறவிப்பிணியை அறுத்தற்கு இடையூறாக வுள்ளன வென்பதையும், அப்பிணி நீங்கிய நிருவாண நிலையில் துன்பத்திற்கு இடமேயில்லை யென்பதையும் அவர் உறுதியாக நம்பினவர். ஆன்மாவைப்பற்றியும் பிரஹ்மத்தைப்பற்றியும் வழக்காடுவதைக் காட்டிலும் ஒழுக்கத்தைச் செவ்வை செய்து நடைபெறச் செய்வதால் உலகத்தில் துன்பம் குறையுமென்றெண்ணி அவர் தர்மத்தை வெளியிட்டு விளக்கிப் பரவச்செய்தாரென்றே நினைக்கவேண்டும். புத்தரைச் சிலர் நாஸ்திகரென்றும் அநாத்மவாதியென்றும் பேசுகிறார்கள். திரிபிடகத்திலடங்கிய புத்தருடைய உபதேசங்களுள் ஒன்றேனும் இக்கருத்தை முற்றும் விளக்குவதாகத் தெரியவில்லை. இவ்வாறு கூறுபவர்கள் பௌத்தர்கள் சொல்லும் நிருவாணத்தைச் சூனியநிலையென்று கருதுகிறார்கள். அது புத்தருடைய கொள்கையென்று சொல்லற் பாலதன்று.

(Oldenberg. Page, 278.)

ஸம்யுக்தநிகாயம் என்கிற பௌத்தநூல், வத்ஸகோத்திரன் என்ற ஒரு துறவி கௌதமபுத்தரிடஞ் சென்று, "ஆன்மாவென்று ஒன்று உளதோ?" என்று கேட்டபொழுது புத்தர் மௌனமுற்றிருந்தனரென்றும், ஆனால் அங்ஙனம் ஒன்று இல்லையோவென்று பின்னும் அவன் வினவியபோது அதற்கும் புத்தர் ஒன்றும் பேசாமலே இருந்தனரென்றும் கூறுகின்றது. கோசலதேசத்தரசனாகிய ப்ரஸேஜித் என்பவன் ஸாகேத நகரத்திற்கும் ஸ்ராவஸ்தி நகரத்திற்கும் நடுவிற் போய்க்கொண்டிருக்கையில், க்ஷேமை என்கிற ஒரு பிக்ஷுணியைச் சந்தித்துப் பணிந்து அவளிடத்தில் பௌத்த தருமத்தைப்பற்றித் தான் ஐயுற்றபொருளைப் பின்வரும் வினா விடைகளால் தெளிந்து கொண்டனனென்று மேற்கூறிய ஸம்யுக்த நிகாயத்தாலேயே தெரிகின்றது:

அரசன்—*"பகவதி! ததாகதன் இறந்தபின்னரும் உளனோ?"

க்ஷேமை,—"அரசர் தலைவ! ததாகதன் இறந்த பின்னரும் இருப்பதாக ஆசாரியபுத்தன் சொல்லவில்லை."

---

* பகவதி என்பது, பிக்ஷுணிகளைக் கௌரவித்தழைக்கும் விளிப்பெயர்; க்ருகிணிகளைப் பவதியென்பதுபோல.

அரசன்—"பகவதி! ஆனால் இறந்தபின்பு ததாகதன் இல்லையோ?"

க்ஷேமை—"அரச சிங்கமே! ததாகதன் இறந்த பின்னர் இல்லையென்பதையுங்கூட ஆசாரியபுத்தன் சொல்லவில்லை."

அரசன்—"பகவதி! அங்ஙனமாயின், ததாகதன் இறந்த பின்னர் உளனுமாம், இலனுமாம் என்னலாமோ? பகவதி! ததாகதன் இறந்தபின்னர் உளனுமல்லன், இலனுமல்லன் என்றும் கூறலாமோ?"

இவ்வினாக்களுக்கும் முன்போலவே அந்தப்பிக்ஷுணி, "இவற்றைப்பற்றி ஆசாரியபுத்தன் ஒன்றும் சொல்லவில்லை" என்றனள்.

இவ்வகை வினாவிடைகளுங்கூட நிருவாணமென்பது சூனியாவஸ்தையென்றும், ஆன்மாவென்று ஒன்றில்லை யென்றும் கௌதம புத்தர் வற்புறுத்திக் கூறினரென்று காட்டவில்லை. நிருவாணத்தை அடைந்தபின்னர் உலகத்துன்பம் முற்றும் அறுமென்றும் அத்துன்பத்தை அறுக்க முயலுவதே எல்லாத்தருமங்களுக்கும் முடிவான பயனென்றுங் கருதி உலகம் உய்யும் பொருட்டுக் கௌதமபுத்தர் தமது மதத்தை யாவருக்கும் உபதேசித்து வந்தனர்.

கௌதம புத்தருக்குப் போதிவிருக்ஷத்தினடியில் ஞானோதயமானபொழுது அவருடைய மதத்திற்கு அடிப்படையாகிய நான்கு ஸத்தியங்கள் அவர் மனத்துட் புகுந்தன. அவற்றின் மேலேதான் அவர் பின்பெழுப்பிய கட்டிடமெல்லாம் நிற்கின்றன.

அந்த ஸத்தியங்களாவன:—(க) துக்கம், (உ) துக்கோற்பத்தி, (ங) துக்கநிவாரணம், (ச) துக்க நிவாரணமார்க்கம்.

"துன்பம் தோற்றம் பற்றே காரணம்
இன்பம் வீடே பற்றிலி காரணம்
ஒன்றிய வுரையே வாய்மைநான் காவது"

(மணிமேகலை, ௩0-ஆம் காதை, கஅசு-அ.)

கௌதமபுத்தர் தமக்கு ஞானோதயமானபின்பு காசிக்குச் சென்று, முன்பு தம்முடன் தவஞ்செய்துகொண்டிருந்தோராகிய ஐந்து ஸந்யாஸிகளுக்குத் தமது கொள்கையைத் தெரிவிக்கும் பொருட்டுச் செய்த உபந்யாஸத்திற் காணப்படுவது யாதெனின்:

(Oidenberg. Page, 211.)

"ஓ ஸங்யாசிகளே! துக்கமென்ற தூய்மையான ஸத்தியம் இதுவே; பிறவி துன்பம்; பிணி துன்பம்; மூப்பு துன்பம்; இறப்பு துன்பம்; அன்பில்லாரோடு தொடர்பு துன்பம்; அன்புள்ளாரிடத்தினின்றும் பிரிவு துன்பம்; விரும்பியதைப் பெறுமை துன்பம்; சுருங்கச்சொல்லின் ஐம்புலப்பற்றும் துன்பமேயாம்.

"ஓ ஸங்யாசிகளே! துக்கோத்பத்தியாகிய தூய்மையான ஸத்தியம் இதுவே; இங்கும் அங்கும் சிறுபான்மையே நிறைவேறுதற்குரியனவாகிய காமலோபங்களோடுசேர்ந்த வேட்கை (திருஷ்ணை) என்பதே இது; இதுவே பிறப்பீனும் வித்து;

"அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து" (திருக்குறள், ௩௬௧.)

"இன்ப வேட்கையும் உயிர்வாழ்வேட்கையும் அதிகாரவேட்கையும் இதுவாம்.

"ஓ ஸங்யாஸிகளே! துக்க நிவாரணமாகிய தூய்மையான சத்தியம் இதுவே; ஆசையை யொழித்து அதைத் தன்னிடத்தினின்றும் வலிந்து நீக்கித் தன்னை அதிலிருந்து பிரித்துக்கொண்டு அதற்கு இடங்கொடாமல் அதை முற்றும் நாசஞ்செய்தலினால் உண்டாகும் இந்த திருஷ்ணையின் அழிவு இதுதான்.

"ஓ ஸங்யாஸிகளே! துக்கநிவாரணமார்க்கமாகிய தூய்மையான ஸத்தியம் இதுவே; மிக்க தூய்மையையுடைய அஷ்டாங்க மார்க்கம் இதுதான்; அஃதாவது: நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர்தலைப்பாடு என்னும் இவ்வெட்டுமாம்" என்பதே;

"நற்காட்சி நல்லொழுக்க நல்வாய்மை நல்வாழ்க்கை
நற்செய்கை போடைந்து நாடு."

"நன்முயற்சி நன்காங் கடைப்பிடிநல் லோர்தம்புரந்
செல்கையுட னட்டனைத்துந் தேறு." (பரமததிமிரபானு.)

"பழித்திடாப் பழுதில் வாழ்க்கை யெட்டையும் பாரித்து"
(சிவஞானசித்தியார்.)

உலக வாழ்க்கை துன்பமென்பது சாங்கியர்களுக்கும், வேதாந்திகளுக்கும், மற்றத் தரிசனத்தார்களுக்கும், ஜைனர்களுக்கும், பௌத்தர்களுக்கும் பொதுவாகவுள்ள கொள்கை. மைத்திராயணி உபநிடதத்தின் தொடக்கத்தில் உலகவாழ்வு நிலையற்றதென்பதும் ஆதலின் அது துன்பத்திற் கிருப்பிடமானதென்பதும் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளன:

(Sacred Books of the East, Vol. XV. Pages, 237-9.)

"பிருஹத்ரதனென்னுமரசன் யாக்கை நிலையாமையைக் கருதி வைராக்கியம் பூண்டு தன் அரசை மூத்தமகனிடந்து ஒப்பித்து விட்டுக் காட்டுக்குச் சென்றனன். அங்கே அவன் சிரமேற்குவித்த கையனுகிச் சூரியனையே நோக்கிக்கொண்டு அருந்தவம் புரிந்தான். இங்ஙனம் ஆயிரம்நாள் சென்றபின் ஒரு முனிவரை யடைந்து அவர் பாதத்தைப் பணிந்து வீழ்ந்துகிடக்க, எல்லாவற்றையும் எரிக்கின்ற புகையில்லாத தீச்சுடர்போல ஒளிவீசும் ஆத்மஞானியான பகவான் சாகாயந்யரென்னும் அம்முனிவர் அரசனை நோக்கி, 'எழுவாய், எழுவாய்; விரும்பியதைப் பெறுவாய்; நீ வேண்டுவது என்ன?' என்றனர். அதற்கு அவ்வரசன் அவரைப்பணிந்து, 'யாவரும் வழிபடற்குரிய முனியே! தேவரீர் மெய்ப் பொருளுணர்ச்சியுடையீர்; அடியேனுக்கு ஆத்மஞானமில்லை; அடியேன் அதைக்கேட்க விரும்புகிறேன்; எனக்கு உபதேசித்தருள வேண்டுகிறேன்' என்றனன். அதற்கு அம்முனிவர், 'ஆத்ம தத்துவ ஞானமானது பண்டைக் காலத்திற் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளது; அஃது எளிதிற் பெறக்கூடியதன்று. ஆதலின், இக்ஷ்வாகு குலத்தோன்றலே! நீ விரும்பிய பிறவற்றைக் கேட்பாயாக' என்றனர். அப்போது அரசன் சாகாயந்யருடைய பாதத்தில் தன் சென்னியுறப்பணிந்து பின்வரும் காதையைக் கூறினன்:

"என்பு, தோல், நரம்பு, என்பினுள் இருக்கும் ஸத்து, மாம்ஸம், சுக்கிலம், சோணிதம், சிலேஷ்மம், கண்ணீர் ஆகிய இவற்றையுடைமையாற் பழிக்கப்படுவதாயும் மலமூத்திர வாதபித்த கபங்களுடைய கூட்டமாயுமுள்ள நாற்றமுடைய இந்தச் சாரமில்லாத சரீரத்திலிருந்துகொண்டு போகத்தை அனுபவித்தலினுல் யாது பயன்? காமம், குரோதம், உலோபம், மோகம், பயம், துக்கம், அழுக்காறு, விரும்பியதையடையாமை, விரும்பாததை அடைதல்,

பசி, தாகம், மூப்பு, இறப்பு, பிணி, சோகம் ஆகிய இவற்றால் துன்புறும் இச்சரீரத்திலிருந்து இன்பத்தை அனுபவித்தலால் யாது பயன்? ஈ கொசுகு முதலிய ஜந்துக்களும் புல் பூண்டுகளும் பிறந்திறக்குமாறுபோலவே உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் அழியுந்தன்மையனவாக நாம் பார்க்கிறோம்; அவற்றால் யாது பயன்? இஃதன்றிப் பெரியோர்களும், ஸுத்யும்நன், இந்திரத்யும்நன், குவலயாசுவன், யுவனாசுவன், வத்திரியாசுவன், அசுவபதி, சசிபிந்து, ஹரிச்சந்திரன், அம்பரீஷன், அநநுக்தன், சர்யாதி, யயாதி. அநரண்யன், உக்ஷஸேநன் முதலிய சிறந்த வில்லாளிகளான சக்ரவர்த்திகளும், மருத்து, பரதன் முதலிய அரசர்களும் தம் சுற்றத்தாருடைய கண்காணத் தமக்குரிய பெரிய ஐசுவரியத்தைத் துறந்து இவ்வுலகைவிட்டு வேறுலகஞ் சென்றனர். இம்மட்டுமேயன்று. வேறு பெரியோர்களும் அவ்வாறே சென்றார்கள். கந்தர்வர், அசுரர், யக்ஷர், அரக்கர், பூதகணங்கள், பிசாசர், உரகர், பேய்கள் முதலியோருடைய நாசத்தையும் கண்டிருக்கிறோம். இதுவுமன்றி, பெரிய சமுத்திரம் நீர்வற்றுதலும், மலைகள் கீழே விழுதலும், துருவநக்ஷத்திரம் சலித்தலும், பூமி ஆழ்தலும், தேவர்கள் தங்கள் இடங்களைவிட்டு ஓடுதலும் உண்டு. இப்படியிருத்தலின் இந்த உலக ஸுகானுபவங்களால் எனக்கு யாது பயன்? அவற்றை நம்பினவர்களுக்கு இவ்வுலகில் அடிக்கடி பிறப்பு நேரிடுவதைப் பார்க்கலாம். ஆகையால், என்னைக் கைதூக்கிவிடல் வேண்டும். நான் இந்த உலகவாழ்வில் பாழ்ங் கிணற்றிலுள்ள தவளையைப் போன்றிருக்கிறேன்; பூஜ்யரே! தேவரீரே எங்களுக்குக் கதி; பூஜ்யரே! தேவரீரே எங்களுக்குக் கதி.''

இவ்வாறு கூறியுள்ள உபநிடதத்தின் பொருளை ஆராய்ந்து பார்க்குமிடத்தில் உலகமும், உலகவாழ்வும், மானிட சரீரமும் நிலையற்று மாறிப்போதலுக்கு உட்பட்டவையாதலால், அவை துன்பத்திற்கு ஓர் இருப்பிடமாகுமென்றும், நிலையுள்ளதும் வேறுபாடில்லாததுமான பொருள் ஆத்ம தத்துவம் ஒன்றுதானென்றும் தெரிந்துகொள்ளலாம்.' புத்தர் இந்த ஆத்ம தத்துவத்தைப் பற்றி உறுதியாக ஒன்றும் சொல்லாவிட்டாலும் பிரபஞ்ச சம்பந்தமான பொருள்களெல்லாம் நிலையற்றனவாகையால், அவைகள் துக்கத்திற்கு இருப்பிடமென்று உறுதியாய்ச் சொல்லியிருக்கிறார். கௌதம புத்தர் தம்முடைய ஆதி சிஷ்யர்களாகிய ஐந்து துறவிகளுக்குக் காசியில் அடியில் வருமாறு உபதேசித்தாரென்று

பௌத்தர்களுடைய மஹாவர்க்கமென்கிற நூலால் தெரியவருகிறது.

"ஓ ஸந்யாஸிகளே! உருவம் ஆத்மாவன்று; உருவம் ஆத்மாவாயின், ஸந்யாஸிகளே! அந்த உருவத்திற்கு நோய் வருதல் கூடாது; ஒவ்வொருவரும் தம்முருவத்தைப்பற்றித் தம் தேகம் இவ்விதம் இருத்தல் வேண்டு மென்றும் இவ்விதமிருத்தல் கூடாதென்றும் சொல்லத் தகுந்தவரா யிருத்தல்வேண்டும். ஆனால், ஓ ஸந்யாஸிகளே! உருவம் ஆத்மாவல்லாததாதலால் நோய்க்கு உட்பட்டிருக்கிறது. மனிதன் தன் உருவத்தைப்பற்றித் தன் தேகம் இவ்விதம் இருத்தல்வேண்டும், இவ்விதம் இருத்தல் கூடாதென்று சொல்லத் தகுந்தவனாகவில்லை."

வேதனை, ஸம்ஜ்ஞை, ஸம்ஸ்காரம், விஜ்ஞானம் என்கிற மற்ற ஸ்கந்தங்களைப்பற்றியும், "இவைகள் ஆத்மாவல்ல" என்று தெரிவித்து விட்டுப் புத்தர் அவர்களோடு அடியில்வருமாறு சம்பாஷிக்கிறார்:

புத்தர்.—"ஓ ஸந்யாஸிகளே! உருவம் நிலையுள்ளதா? நிலையற்றதா? என்ன எண்ணுகிறீர்கள்?"

சிஷ்யர்.—"தந்தையே! நிலையற்றது."

புத்தர்.—"நிலையற்றபொருள் துன்பமா? இன்பமா?"

சிஷ்யர்.—"தந்தையே! துன்பம்."

புத்தர்.—"நிலையற்றதும் துன்பம் நிறைந்ததும் மாறுதலுக்கு உட்பட்டதுமான பொருளை முறையே ஆராய்ந்த பிறகு ஒருமனிதன், 'அஃது என்னுடையது, அது நான், அது நானே' என்று சொல்லுதல் கூடுமா?"

சிஷ்யர்.—"தந்தையே! சொல்ல முடியாது."

இவ்வாறே மற்றை நான்கு ஸ்கந்தங்களாகிய வேதனை, ஸம்ஜ்ஞை, ஸம்ஸ்காரம், விஜ்ஞானம் என்பவற்றைப்பற்றியும் நிலையற்ற தன்மையினால் அவை ஆத்மா அல்லவென்றும் துக்கத்திற்கிடமென்றும் கூறியிருக்கிறார்.

ஆத்ம தத்துவத்தைப்பற்றியும் பரப்பிரஹ்மத்தைப்பற்றியும் வேதாந்திகள் சொல்வதுபோல வெளிப்படையாகப் புத்தர் ஒன்றும் சொல்லாவிட்டாலும் பிரபஞ்ச சம்பந்தமானபொருள்

களெல்லாம் நிலையற்றன வாகையால் உலகத்தையும் உலகவாழ்வையும் துன்பத்திற்கிடமென்று வேதாந்திகள் சொல்வதுபோலவே புத்தரும் சொல்லியிருக்கிறார். இவ்வாறு எல்லாம் துன்பமென்று பௌத்தர்கள் பாராட்டுவதனால், அவர்கள் லௌகிக வியாபாரம் ஒன்றும் வேண்டாமென்று விட்டொழிந்து தங்களைத் தாங்களே எப்பொழுதும் வருத்திக்கொண்டிருந்ததாக நினைப்பதற்கு இடமில்லை; இதனை அவர்களுடைய தர்மபதமென்கிற நூலினின்று பின் எடுத்துக் காட்டும் வாக்கியங்களால் அறிந்து கொள்ளலாம்:

"பழக்குகிறவனால் அடக்கப்பட்ட குதிரைகளைப்போல எவனுடைய காமங்களானவை அடக்கப்பட்டிருக்கின்றனவோ, எவன் அகங்காரத்தைத் துறந்தவனோ, எவன் அசுத்தத்தினின்றும் விலகினவனோ அவ்விதமான பரிபக்குவ முற்றவனைக்கண்டு தேவர்களும் அழுக்காறடைவார்கள். பகைநிரம்பிய இவ்வுலகத்தில் ஒரு சத்துருவு மில்லாமல் பரிபூரணானந்தத்தில் நாங்கள் வாழ்கிறோம்; பகைநிரம்பிய மனிதரிடையில் பகையில்லாமல் நாங்கள் வசிக்கிறோம்; நோயாளிகளிடையில் ஆரோக்கிய முள்ளவர்களாகப் பரிபூரணானந்தத்தில் நாங்கள் வாழ்கிறோம்; நோயாளிகளிடையில் நோயற்று வசிக்கிறோம்; உழைக்கிறவரிடையில் உழைப்பில்லாமல் பரிபூரணானந்தத்தில் நாங்கள் வாழ்கிறோம்; உழைக்கிற மனிதரிடையில் உழையாமலே வசிக்கிறோம்; யாதொரு பொருட்பேறுமில்லாத நாங்கள் பரிபூரணானந்தத்தில் வாழ்கிறோம்; ஒளிபொருந்திய தேவர்களின் ஆனந்தத்தைப்போன்ற ஆனந்தந்தான் எங்கள் பணப்பையாயிருக்கிறது. ஒருவருமில்லாமல் ஒழிந்திருக்கிற வீட்டில் இருந்துகொண்டு தன் ஆத்மாவைச் சாந்தியால் நிரப்பிக்கொண்டிருக்கிற பிக்ஷுவானவன் ஸத்தியத்திலேயே கருத்துடையவனாய் மனிதர்க்குரிய ஆனந்தத்தைக் காட்டிலும் சிறந்த ஆனந்தத்தை அனுபவிக்கிறான்."

(Oldenberg, Pages, 221-2)

காமமும் உலோபமும் இன்பவேட்கையும் இருப்பைப்பெற வேண்டுமென்னும் வேட்கையும் அதிகார வேட்கையுமே உலக வாழ்விலுள்ள துன்பத்திற்குக் காரணங்களாகுமென்று இரண்டாம் வாய்மையாகிய துக்கோற்பத்தியைப்பற்றிப் பௌத்தர்

சொல்லுவதாக முன்னமே கூறப்பட்டிருக்கிறது. இந்தக் காரணங்களி லிருந்து துக்கம் உண்டாகும்வழி இன்னதென்று விளக்குதற்குப் பௌத்த நூல்களில் காரியகாரண முறைமையோடு கூடிய துவாதச நிதானங்களென்ற பெயரையுடைய பன்னிரண்டு தத்துவங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மேற்கூறிய துக்கோற்பத்தியைப்பற்றித் திரிபிடகத்திற் சொல்லியிருப்பது யாதெனின்,

"அவித்தை (பேதைமை)யிலிருந்து ஸம்ஸ்காரங்கள் (செய்கைகள்) உண்டாகின்றன; ஸம்ஸ்காரத்திலிருந்து விஞ்ஞானம் (உணர்வு) உண்டாகின்றது; விஞ்ஞானத்திலிருந்து நாமரூபங்கள் (அருவுரு) உண்டாகின்றன; நாமரூபங்களிலிருந்து ஷடாயதனங்கள் (வாயில்கள்) உண்டாகின்றன; ஷடாயதனங்களிலிருந்து ஸ்பரிசம் (ஊறு) உண்டாகின்றது; ஸ்பரிசத்திலிருந்து வேதனை (நுகர்வு) உண்டாகின்றது; வேதனையிலிருந்து திருஷ்ணை (வேட்கை) உண்டாகின்றது; திருஷ்ணையிலிருந்து உபாதானம் (பற்று) உண்டாகின்றது; உபாதானத்திலிருந்து பவம் (பிறப்புக்கு மூலமான கருமக்கூட்டம்) உண்டாகின்றது; பவத்திலிருந்து பிறப்பு உண்டாகின்றது; பிறப்பிலிருந்து மூப்பும், மரணமும், வலியும் (Pain), அழுகையும், துன்பமும் (Suffering), கவலையும், ஏக்கமும் (Despair) ஆகிய வினைப்பயன்கள் உண்டாகின்றன; துன்பமென்கிற இராச்சியத்திற்கெல்லாம் இதுதான் உற்பத்தி" என்பது.

(Oldenberg, Page, 225)

"பேதைமை சார்வாச் செய்கை யாகும்
செய்கை சார்வா வுணர்ச்சி யாகும்
உணர்ச்சி சார்வா வருவுரு வாகும்
அருவுருச் சார்வா வாயி லாகும்
வாயில் சார்வா வூறா கும்மே
ஊறு சார்ந்து நுகர்ச்சி யாகும்
நுகர்ச்சி சார்ந்து வேட்கை யாகும்
வேட்கை சார்ந்து பற்றா கும்மே
பற்றிற் றோன்றுங் கருமத் தொகுதி
கருமத் தொகுதி காரண மாக
வருமே யேனை வழிமுறைத் தோற்றம்
தோற்றஞ் சார்பின் மூப்புப்பிணி சாக்கா
டவல மற்றுக் கவலைகை யாறெனத்

தவலி றன்பந் தலைவரு மென்ப
ஊழின்மண் டிலமாச் சுழுமின் நுகர்ச்சி."

(மணிமேகலை, ௩௦-ஆம் காதை, ௧௦௪-௧௫.)

"அவித்தை ஆசையை முற்றுந் துறப்பதினால் போக்கப்படும்; அதனால் ஸம்ஸ்காரங்கள் போக்கப்படுகின்றன; ஸம்ஸ்காரங்களைப் போக்குவதனால் விஜ்ஞானம் போக்கப்படுகின்றது; விஜ்ஞானத்தைப் போக்குவதனால் நாமரூபங்கள் போக்கப்படுகின்றன; நாமரூபங்களைப் போக்குவதனால் ஷடாயதனங்கள் போக்கப்படுகின்றன; ஷடாயதனங்களைப் போக்குவதனால் ஸ்பரிசம் போக்கப்படுகின்றது; ஸ்பரிசத்தைப் போக்குவதனால் வேதனை போக்கப்படுகின்றது; வேதனையைப் போக்குவதனால் திருஷ்ணை போக்கப்படுகின்றது; திருஷ்ணையைப் போக்குவதனால் உபாதானம் போக்கப்படுகின்றது; உபாதானத்தைப் போக்குவதனால் பவம் போக்கப்படுகின்றது; பவத்தைப்போக்குவதனால் பிறப்பு போக்கப்படுகின்றது; பிறப்பைப் போக்குவதனால் மூப்பும், மரணமும், வலியும் (Suffering), அழுகையும், துன்பமும், கவலையும், ஏக்கமும் (Despair) போக்கப்படுகின்றன; துன்பமென்கிற இராச்சியத்திற்கெல்லாம் இதுதான் நிவிர்த்தி."

"பேதைமை மீளச் செய்கை மீளும்
செய்கை மீள வுணர்ச்சி மீளும்
உணர்ச்சி மீள வருவுரு மீளும்
அருவுரு மீள வாயின் மீளும்
வாயின் மீள வூறு மீளும்
ஊறு மீள நுகர்ச்சி மீளும்
நுகர்ச்சி மீள வேட்கை மீளும்
வேட்கை மீளப் பற்று மீளும்
பற்று மீளக் கருமத் தொகுதி
மீளுங் கருமத் தொகுதி மீளத்
தோற்ற மீளுந் தோற்ற மீளப்
பிறப்பு மீளும் பிறப்புப் பிணிமூப்புச்
சாக்கா டவல மாற்றுக் கவலை
கையா றென்றிக் கடையி றுன்பம்
எல்லா மீளுமிவ் வகையான் மீட்சி."

(மணிமேகலை, ௩௦-ஆம் காதை, ௧௧௧-௩௩.)

இவ்விதமாகச் சொல்லப்பட்டிருக்கிற அவித்தை, ஸம்ஸ் காரம், விஜ்ஞானம், நாமரூபம், ஷடாயதனம், ஸ்பரிசம், வேதனை, திருஷ்ணை, உபாதானம், பவம், பிறப்பு, பிணி மூப்புச் சாக்காடு முதலிய வினைப்பயனென்கிற இப்பன்னிரண்டு தத்துவங்களுக் குள் ஒன்றற்கும் மற்றொன்றற்குமுள்ள காரணகாரிய முறையை அறிந்து கொண்டால், புத்தருடைய இரண்டாவது மூன்றாவது வாய்மைகளாகிய துக்கோற்பத்தி துக்க நிவாரணங்களைப் பற் றிய எல்லாம் தெரியவரும் ;

"பேதைமை செய்கை யுணர்வே யருவுரு
வாயி லூறே நுகர்வே வேட்கை
பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்
இற்றென வகுத்த வியல்பீ ராறும்
பிறந்தோ ரறியிற் பெரும்பே றறிகுவர்
அறியா ராயி னாழ்நர கறிகுவர்."

(மணிமேகலை, உச-ஆம் காதை, ௧0ரு-௧0; ௩0-ஆம் காதை, சரு-ரு0.)

பௌத்தமதம், ஸகலவஸ்துக்களினுடைய மூலகாரணமாகிய தத்துவத்தைத்தேடிக் கண்டுபிடிக்க முயலுவதில்லை. மத்தியமநி காய மென்கிற பௌத்தநூலில், மாலங்கனென்பவன் கௌதம புத்தரை யடைந்து, "இவ்வுலகம் நிலையுள்ளதா ? நிலையற்றதா?" என்று வினவியபொழுது புத்தர் மறுமொழி கூறாதிருந்தா ரென்றும், அவ்விதமான ஆராய்ச்சி பயனைக்கொடாதென்பது தான் அவருடைய மௌனத்திற்குக் காரணமென்றும் சொல்லி யிருக்கிறது. மூல காரணத்தைப்பற்றிய ஆராய்ச்சி பௌத்த மதத்தில் இல்லாவிடினும், உலகத்திலுள்ள எல்லாப் பொருள் களும் எங்கும் வியாபித்திருக்கும் காரணகாரிய முறைமைக்குள் அடங்கினவை யென்பதை அம்மதம் ஏற்றுக்கொண் டிருக்கிறது. 'காரணமிருந்தாற் காரியமுண்டாகும் ; காரணத்தைப் போக்கி னாற் காரியமும் போய்விடும்' என்கிற நியாயத்தைக் கொண்டு, புத்தர் உலகத்தில் எங்கும் காணப்படுகிற துக்கத்தை எல் லோரும் போக்கிக் கொள்ளுதற்கு முயலவேண்டிய வழியைத் தாம் கண்டுபிடித்து உபதேசித்து வந்தார். இத்துன்பம் மூல காரணத்தைச் சேர்ந்ததல்லாததனால், இத்துன்பத்தைப்போக்க முயலுபவர்களுக்கு அம்மூலகாரணத்தைப்பற்றிய அறிவு வேண் டுவதே யில்லையென்று அவர் நினைத்ததாகத் தெரியவருகிறது.

அதனால்தான் மேற்கூறிய துவாதச நிதானங்களில் எல்லாவற்றிற்கும் மூலகாரணமானதாக ஒன்றும் கூறப்படவில்லை. பௌத்தருடைய மானஸசாஸ்திரக் கொள்கை வழியே ஆராயுமிடத்து, அறிவுள்ள பிராணிகளெல்லாம் ஐந்து ஸ்கந்தங்களின் சேர்க்கையினால் உண்டாவனவென்று அவர்கள் எண்ணியிருப்பதாகத் தெரியவருகிறது. அவையாவன:—ரூபம், வேதனை, ஸம்ஜ்ஞை, ஸம்ஸ்காரம், விஜ்ஞானமென்பன;

"உருவு நுகர்ச்சி குறியே பாவனை
உள்ள வறிவிவை யைங்கந்த மாவன."

(மணிமேகலை, ௩0-ஆம் காதை, ௧௮௯-௯0.)

அவற்றுள், ரூபஸ்கந்தமாவது உருவங்கட்கெல்லாம் காரணமாகிய பொருளைத் தெரிவிக்கின்றது. இந்த ரூபஸ்கந்தத்தில், பிருதிவி, அப்பு, தேயு, வாயு ஆகிய நான்கு பூதங்களும், ஐந்து ஞானேந்திரியங்களும், ரூப ரஸ கந்த சப்த ஸ்பரிசங்களாகிய ஐந்து புலன்களும், ஆண்மை பெண்மை வேறுபாடுகளும், இவைபோல்வன பிறவுமாகிய இருபத்தெட்டுத் தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன; ஆகாயத்தை ஒருபூதமாக அவர்கள் கொள்ளார்.

வேதனாஸ்கந்தமாவது இந்திரியங்களுக்கும் புலன்களுக்குமுள்ள ஸம்பந்தத்தினால் உண்டாகும் உணர்வு. பொறிகள் ஐந்தும் மனமொன்றும் ஆகிய அறுவகை வாயில்களால் இவ்வுணர்வு அறுவகைப்படும்; இந்த ஆறும் தனித்தனியே குசலம், அகுசலம், குசலா குசலமென மூன்றுவகைப் படுதலால் வேதனை பதினெட்டு வகைப்படும்.

ஸம்ஜ்ஞாஸ்கந்தமாவது மெய், வாய், கண், மூக்கு, செவி, மனமென்னும் ஆறு இந்திரியங்களாலுண்டாகிற அறுவகை யுணர்வுக்குச் சம்பந்தமுற்று அவ்வுணர்வின லுண்டாகும் பொதுவறிவையும் சிறப்பறிவையுங்கொண்டு பொருள்களைப் பெயரிட்டுக் குறித்துக்காட்டுவதற்கு வேண்டிய ஞானமாகும். இந்த ஸ்கந்தம் ஆறு இந்திரியங்களின் வாயிலாகத் தோன்றுதல்பற்றி அறுவகையினதாகும்.

ஸம்ஸ்காரஸ்கந்தமாவது மனம், வாக்கு, காயமென்கிற முக்கரணங்களாற் செய்யப்படும் தொழில் வேறுபாடுகளால் அக்

கரணங்களுக்குண்டாகும் பரிபாகவிசேடம். இந்த ஸ்கந்தம் ஐம்பத்திரண்டு வகைப்படுமென்பர்.

விஜ்ஞான ஸ்கந்தமாவது தூங்குவோருடைய உணர்வானது கர்த்திருத்துவம் போக்திருத்துவமின்றிச் சாக்ஷிமாத்திரமாய் நிற்றல்போலச் சேதநர்களுடைய சரீரத்துள்ளிருந்து அவர்களுடைய அறிவுக்கெல்லாம் ஆதாரமாய்நிற்கும் சைதந்ய தத்துவம் ஆகும்;

"உணர்வெனப் படுவ துறங்குவோ ருணர்விற்
புரிவின் றுகிப் புலன்கொளா ததுவே."

(மணிமேகலை, ௩௦-ஆம் காதை, அஉ-௩.)

இந்த விஜ்ஞானஸ்கந்தம், தன்னுடைய காரியங்களாகிய பல வகைப்படும் எண்ணங்களாலுண்டாகும் நல்வினை தீவினைகளைக் கொண்டு எண்பத்தொன்பது வகையாக வகுக்கப்பட்டுள்ளது.

இந்த ஸ்கந்தங்களெல்லாம் நிலையற்றன; ரூபம் நுரையைப் போன்று தோன்றி உடனே மறைவதென்றும், வேதனை நீரின் மீது அசைந்துதோன்றும் குமிழியைப்போன்றதென்றும், ஸம்ஜ்ஞை வெயிலில் தோன்றும் பேய்த்தேர்போல்வதென்றும், ஸம்ஸ்காரம் வாழைபோல வன்மையும் நிலையுமில்லாததென்றும், விஜ்ஞானம் இந்திரசாலத்தோற்றம் போல்வதென்றும் சொல்லப்பட்டுள்ளன.

"ஜாதஸ்ய மரணம் த்ருவம்" (பிறந்தவனுக்கு மரணம் நிச்சயம்) என்கிற விதமாகப் பிறந்தவர்களுக்கெல்லாம் பிணி மூப்பு முதலிய துன்பங்களுமுண்டு. பிறப்பே துன்பத்திற்கு நேராக முன்புள்ள காரணம். ஒருவனுக்கு மறுபிறப்பிற்கு இடமிருக்கிற வரையில் அவன் துன்பமில்லாத ஸ்திதியை அடையமாட்டான். மறு பிறப்புக்குக் காரணமும், மறு பிறப்புண்டாகும் வழியும் பௌத்த நூல்களில் பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளன:

"ஒருவன் மரணமடையும்பொழுது அவனைச் சேர்ந்த ஐந்து ஸ்கந்தங்களும் தங்களுடைய பழைய சேர்க்கையினின்றும் பிரிக்கப்படுகின்றன; மேற்கூறிய ஸ்கந்தங்கள் இவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கும் நிலையிலே அவன் ஜீவித்திருந்த காலத்திற் செய்துவந்த நல்வினை தீவினைகளாகிய செய்கைகளெல்லாம் விஜ்ஞான ஸ்கந்-

தத்தில் வித்துப்போன்று உள்ளடங்கியிருந்து அந்த விஞ்ஞான ஸ்கந்தத்தைத் தமக்குந் தகுதியுள்ளகதியில் (பிறப்பில்) மற்றை நான்கு ஸ்கந்தங்களோடு கலப்பித்து மறுபிறப்பை அடையச் செய்கின்றன; இவ்வண்ணமான கருமப்பிரவாகம் மறுபிறப்பின் மூலம். ஒரு தீபத்தினின்றும் பல தீபங்கள் எவ்வாறு ஏற்றப்படுமோ அவ்வாறே ஒரு பிறப்பினின்றும் பல பிறப்புக்கள் உண்டாக்கப்படும்." ஓராற்றில் நீர் ஓடிக்கொண்டிருக்கும் பொழுது ஓரிடத்தில் ஒரு விநாடியிற்கண்ட நீர் அவ்விடத்தில் அடுத்த விநாடியில் இல்லாவிட்டாலும் அவ்வாற்றொழுக்கம் ஒன்றாகக் கருதப்படுமாறுபோல வரும் பிறப்புக்களின் தொடர்ச்சி ஒன்றாகவேயிருக்கும். இதனை விளக்குதற்பொருட்டே இத்தொடர்ச்சிக்கு வாயுசந்தானம், தீபசந்தானம், * தாராசந்தானம், † பிபீலிகாசந்தான மென்னும் இந்த நான்கினை உதாரணமாகக் கூறுவர். தாமியற்றிய நல்வினை தீவினைகளுக்கு ஏற்றவாறு மக்கட்கதி, தேவகதி, பிரமகதி, நரககதி, விலங்குகதி, பேய்க்கதியென்னும் அறுவகைக்கதியுள் ஒன்றை அவரவர் அடைவர்;

"மக்களுந் தேவரும் பிரமரு நரகரும்
தொக்க விலங்கும் பேயு மென்றே
நல்வினை தீவினை யென்றிரு வகையாற்
சொல்லப் பட்ட கருவிற் சார்தலும்."

(மணிமேகலை, ௩௰-ஆம் காதை, ௫௭-௬௰.)

மக்கட்கதியிலுள்ளோர்க்கு அவர்கள் இயற்றிய தீவினைகளின் வேறுபாட்டால், நரககதி, விலங்குகதி, பேய்க்கதியென்னும் மூன்றனுள் தக்கவாறு பிறப்புக்கள் உண்டாகும்;

"விலங்கு நரகரும் பேய்களு மாக்குங்
கலங்களுந் தீவினை."

(மணிமேகலை, ௨௫-ஆம் காதை, ௪௧-௨.)

"..........பயன்றெரி புலவர்
இத்திறம் படரார் படர்குவ ராயின்
விலங்கும் பேயு நரகரு மாகிக்
கலங்கிய வுள்ளக் கவலையிற் றோன்றுவர்."

(மணிமேகலை, ௩௰-ஆம் காதை, ௭௨-௫.)

* தாரை - நீர்ப்போக்கு. † பிபீலிகை - எறும்பு.

மக்கட்கதி, தேவகதி, பிரமகதி, யென்னும் இம்மூன்றினும் உள்ள பிறப்பின் வேறுபாடுகளானவை நல்வினையின் வேறுபாடுகளால் உண்டாகும்;

"கலங்கஞர்த் தீவினை கடிமின் கடிந்தால்
தேவரு மக்களும் பிரமரு மாகுதிர்
ஆகலி னல்வினை யயரா தோம்புமின்"

(மணிமேகலை, உரு-ஆம் காதை, சஉ-ச)

"சொல்லிய பத்தின் றொகுதியி னீங்கிச்
சீலந் தாங்கித் தானந் தலைநின்று
மேலென வகுத்த வொருமூன்று திறத்துத்
தேவரு மக்களும் பிரமரு மாகி
மேவிய மகிழ்ச்சி வினைப்பய னுண்குவர்."

(மணிமேகலை, ௩0-ஆம் காதை, எஎ-அக.)

இந்த அறுவகைப்பட்ட கதிகளுட் பிறந்தோர்கள்யாவரும் சக்கரவாளமென்று கூறும் பிரஹ்மாண்டத்துள் அடங்கிய உலகம் முப்பத்தொன்றனுள் இருப்பர்.

இந்த உலகம் முப்பத்தொன்றும் சக்கரவாளத்தின் நடுவே நின்ற ஸுமேருமலையின் அடிதொட்டு அதன் உச்சி வரையில் முறையே ஒன்றன்மேல் ஒன்றாக உள்ளனவாகும்; இப்படி அநேக சக்கரவாளங்கள் உள்ளனவென்பதும், அவைகள் * கற்பங்களின் தொடக்கத்துத் தோன்றி அவற்றின்முடிவில் அழியுமென்பதும், ஒவ்வொரு சக்கரவாளத்தினுள்ளும் மேற்கூறிய ஸுமேருவும் அதனைச் சூழ்ந்துள்ள ஏழுகுலகிரிகளும் அக்குலகிரி ஒவ்வொன்றினையுஞ் சூழ்ந்து அவ்வக்கிரியின் உயரவளவுள்ள ஆழமும் அகலமுமமைந்த ஏழு கடல்களும் ஆகிய இவற்றையெல்லாஞ் சூழ்ந்து கிடக்கும் பெரும்புறக் கடலும் அந்தப் பெரும் புறக்கடலினுள்ள சம்புத்தீவு முதலிய நான்கு மஹாத்வீபங்களும் அந்த நான்கனுள் ஒவ்வொன்றையும் தனித்தனியே ஐந்நூறு ஐந்நூறாகச் சூழ்ந்துள்ள இரண்டாயிரம் சிறு தீவுகளும் உள்ளனவென்பதும் பௌத்தருடைய கொள்கை. இந்த மஹாத்வீபம் நான்கனுள் தெற்கேயுள்ளது சம்புத்தீவென்பர். இத்தன்மையதான சக்கர

* கற்பம் என்பது காலத்தின்பேரெல்லை; ஹிந்துக்களின் சோதிட நூலின்படி பார்க்குமிடத்து சஙஉ - கோடி வருஷமென்று தெரிகிறது; பௌத்தருடைய கொள்கை கணக்கால் விளங்கவில்லை; 'கற்பமாவது ஓசனையகன்றுயர்ந்ததோர் வச்சிரமலை கருப்பிணியுடுத்த பட்டாடைத் தோகை பட்டுக் கையறத்தேய்ந்ததாம்' (நீலகேசியுரை) என்பதனால் சைனருடைய கொள்கை வெளியாகின்றது.

வாளத்தினுள்ளேயிருப்பனவாகிய உலகம் முப்பத்தொன்றனுள் எல்லாவற்றிற்கும் கீழேயுள்ளது நரகலோகம்; அது மகாநிரயம், இரௌரவம், காலஸூத்திரம், ஸஞ்சீவனம், மகாவீசி, தபனம், ஸம்பிரதாபனம், ஸங்காதமென எட்டு வகைப்படும். இந்த நரக லோகத்திற்கு மேலுள்ளது விலங்கினுலகம்; அதற்கு மேலுள்ளது பேயுலகம்; அதற்கு மேலுள்ளது அசுர லோகம்; அதற்கு மேலுள்ளது மக்களுலகம்; அதற்கு மேலுள்ளன ஆறு தேவலோகங்கள்; அவற்றிற்கு மேலேயுள்ளன இருபது பிரஹ்ம லோகங்கள்; இவ்விருபது லோகங்களுள் உச்சியிலுள்ள நான்கும் அரூபப் பிரஹ்ம லோகங்களென்றும் எஞ்சிய பதினாறும் ரூபப் பிரஹ்ம லோகங்களென்றும் சொல்லப்படும். நரகலோகம் முதல் பரநிர்மிதவசவர்த்தி யென்னும் ஆறுவது தேவலோகமிறுதியாகவுள்ள பதினொன்றனையும் காமலோகங்களென்றும் எஞ்சியனவாகிய பிரஹ்ம லோகமிருபதினையும் நிஷ்காம லோகங்களென்றும் சொல்லுவார்கள். நரகலோகம் முதல் ஆஸுரிகலோகம் இறுதியாகவுள்ள நான்கினையும் பாபலோகங்களென்றும் மற்றை இருபத்தேழினையும் புண்ணிய லோகங்களென்றும் கூறுவதுண்டு ;

"நால்வகை மரபி னரூபப் பிரமரும்
நானல் வகையி னுருபப் பிரமரும்
இருவகைச் சுடரு மிருமூ வகையிற்
பெருவனப் பெய்திய தெய்வத கணங்களும்
பல்வகை யசுரரும் படுதுய ருறாஉம்
எண்வகை நரகரு மிருவிசும் பியங்கும்
பன்மீ னீட்டமு நாளுங் கோளும்
தன்னகத் தடக்கிய சக்கர வாளம்."

(மணிமேகலை, ௬-ஆம் காதை, ௧௭௬-௮௩)

"சூழ்கடல் வளைஇய வாழியங் குன்றத்து
நடுவு நின்ற மேருக் குன்றமும்
புடையி னின்ற வெழுவகைக் குன்றமும்
நால்வகை மரபின் மாபெருந் தீவும்
ஓரீ ராயிரஞ் சிற்றிடைத் தீவும்
பிறவு மாங்கத னிடவகை யுரியன
பெறுமுறை மரபி னறிவுவரக் காட்டி
ஆங்குவா ழுயிர்களு மவ்வுயி ரிடங்களும்
பாங்குற மண்ணீட்டிற் பண்புற வகுத்து
மிக்க மயனு லிழைக்கப் பட்ட
சக்கர வாளக் கோட்டமீங் கிதுகாண்."

(மணிமேகலை, ௬-ஆம் காதை, ௧௯௨-௨0௨.)

உலகம்—௩௧.

இந்த நான்கும் அரூப ப்ரஹ்ம லோகங்கள்.	௩௧. ஸைவஸம்ஜ்ஞாநாஸம்ஜ்ஞாயதன லோகம்	இவை ஐந்தாந் தியானத்தில்தேறியவர்கள் அடைதற்குரியவை.	இவை இருபதும் நிஷ்காம லோகங்கள்.
	௩௰. ஆகிஞ்சந்யாயதன லோகம்		
	௨௯. விஜ்ஞாநாநந்த்யாயதனலோகம்		
	௨௮. ஆகாசாநந்த்யாயதன லோகம்		
இந்தப் பதினாறும் ரூபப்ரஹ்ம லோகங்கள்.	௨௭. அகநிஷ்டலோகம்	இவை நான்காந் தியானத்தில்தேறியவர்கள் அடைதற்குரியவை.	
	௨௬. ஸுதர்சிலோகம்		
	௨௫. ஸுதர்சலோகம்		
	௨௪. அதபலோகம்		
	௨௩. அப்ருஹல்லோகம்		
	௨௨. அஸம்ஜ்ஞ்யா ஸத்வ லோகம்		
	௨௧. பிருஹத்பலலோகம்		
	௨௰. சுபகிருஸ்நலோகம்	இவை மூன்றாந் தியானத்தில்தேறியவர்கள் அடைதற்குரியவை.	
	௧௯. அப்பிரமாண சுபலோகம்		
	௧௮. பரீத்தசுபலோகம்		
	௧௭. ஆபாஸ்வரலோகம்	இவை இரண்டாந் தியானத்தில் தேறியவர்கள் அடைதற்குரியவை.	
	௧௬. அப்பிரமாணாபலோகம்		
	௧௫. பரீத்தாபலோகம்		
	௧௪. மஹாப்ரஹ்மலோகம்	இவை முதலாந் தியானத்தில்தேறியவர்கள் அடைதற்குரியவை.	
	௧௩. ப்ரஹ்மபுரோஹிதலோகம்		
	௧௨. ப்ரஹ்மகாயிகலோகம்		
இந்த ஆறும் தேவ லோகங்கள்.	௧௧. பரநிர்மிதவசவர்த்திலோகம்	... ...	இவை பதினொன்றும் காம லோகங்கள்.
	௧௰. நிர்மாணரதிலோகம்	... ...	
	௯. துஷிதலோகம்	... .	
	௮. யாமலோகம்	... ...	
	௭. திரயஸ்திரிம்சலோகம்	... ...	
	௬. மஹாராஜிகலோகம்	... ...	
	௫. மனுஷ்யலோகம்	... ...	
இந்த நான்கும் பாபலோகங்கள்.	௪. ஆஸுரிகலோகம்	... ...	
	௩. பிரேதலோகம்	... ...	
	௨. திரியக்லோகம்	... ...	
	௧. நரகலோகம்	... ...	

இந்த இருபத்தேழும் புண்ணிய லோகங்கள். (௩௧ – ௫)

இவ்வுலகங்களுட் சில வேறுபெயர்களாலும் சொல்லப்படும்.

* * *
* * *
*

"யேதர்மா ஹேதுப்ரபவாஃ தேஷாம் ஹேதும் ததாகத|| ஆஹதேஷாம் யோநிரோதஃ ஏவம்வாதீ மஹாச்ரமண:"

என்பது, புத்த மதத்தினுடைய முக்கிய ஸாரத்தை எடுத்துக்காட்டும் ஒரு பிரஸித்த சுலோகமாகப் பௌத்தர்களுக்குள்ளே வழங்கி வருகின்றது. பௌத்தர்களைச் சேர்ந்த தாதுகோபம் முதலிய கட்டிடங்களுட் சிலவற்றில் இந்தச் சுலோகம் சிலைகளிற் செதுக்கி அமைக்கப்பட்டுமுள்ளது. "காரணத்திலிருந்து உண்டாகுந் தன்மைகள் எவைகளோ? அவற்றிற்குக் காரணம் யாதோ? பின்னும் அவற்றின் தடையாதோ? இவற்றைத் ததாகதன் சொன்னான்; இப்படிச் சொன்னவன் மஹாச்ரமணன்" என்பது இந்தச் சுலோகத்தின் பொருள். இதிற் கூறப்பட்டுள்ள மூன்று விஷயங்களும் மணிமேகலையில் 'ஏதுநிகழ்ச்சி' என்று கூறப்பட்டுள்ளன:

"ஏது நிகழ்ச்சி யெதிர்ந்துளது" (௩-ஆம் காதை, ௪).

"ஏது நிகழ்ச்சி யீங்கின்று" (௬-ஆம் காதை, ௫௧).

"ஏது நிகழ்ச்சி யாவும் பலவுள"

(௧௨-ஆம் காதை, ௧0௫; ௨௧-ஆம் காதை, ௧௬0.)

இந்த ஹேது நிகழ்ச்சியை விளக்கியதே கௌதம புத்தருடைய பெருமையாகும். உருவமுதல் விஜ்ஞான மிறுதியாகவுள்ள ஐந்து ஸ்கந்தங்களும் இவ்வாறு காரணங்களிலிருந்து உண்டான காரியங்களென்பதுதான் அவருடைய கொள்கை. ஹேதுநிகழ்ச்சியாகிய இந்தக் காரண காரிய பரம்பரைக்குத் தடையின்றிச் செல்லுகை இருக்கும்வரையில் நிலையின்மையால் உண்டாகுந் துன்பம் நீங்காது; காரணத்திலிருந்துண்டான பொருள்கள் யாவும் அக்காரணங்கள் நீங்கியபொழுது தாமும் நீங்குதல் இயல்பு; ஆதலால், இத்தன்மையனவாகிய பொருள்களெல்லாம் நிலையற்றன; ஸாரமில்லாதன; துன்பத்திற்கு இடமாகும்;

"நிலையில வறிய துன்பமென நோக்க
உலையா வீட்டிற் குறுதி யாகி."

(மணிமேகலை, ௩0-ஆம் காதை, ௩0-௩௧)

"அநித்தந் துக்க மநான்மாவசுசியெனத்
தனித்துப் பார்த்துப் பற்றறுத் திடுதல்"

(மணிமேகலை, ௩௰-ஆம் காதை, உ௫௪-௫.)

நிலையில்லாமையையே பெருந்துன்பமாகப் பௌத்தர்கள் கொண்டிருத்தலால், இந்நிலையில்லாத் தன்மையிலிருந்து நீங்குதல்தான் அவர்களுக்கு உயர்ந்த புருஷார்த்தமாகும்; இப்படி நிலையில்லாத் தன்மையிலிருந்து நீங்கி நிலையுள்ள தன்மையை அடைதலே அவர்கள்கூறும் நிருவாணத்திற்குப் பொருளென்று தெரிகிறது. இவ்வுலகத்திற் காட்சியளவையாலும் அநுமானவளவையாலும் தாம் அறிந்துகொள்ளுகிற பொருள்களெல்லாம் ஹேதுநிகழ்ச்சியுள் அடங்கியவை யென்றும் நிலையில்லாதன வென்றும் அவர்களாற் கொள்ளப்பட்டிருப்பினும் ஹேதுநிகழ்ச்சியுள் அடங்காததும் நிலையுள்ளதுமான தசை ஒன்றிருக்குமென்று அவர்கள் கொண்டதாக நாம் ஊகிக்கலாம். இந்தத் தசைக்கு நிலையுள்ளதாக இருத்தலும் துன்பமின்றி இருத்தலுமே இலக்கணம்; இதைப்பற்றி வேறொன்றும் சொல்ல முடியாது. இந்தத் தசையைப் பெறுதற்குக் காட்சியாலும் அநுமானத்தாலும் அறிந்துகொள்ளக்கூடாத 'ஆத்மா', 'பிரஹ்மம்' என்கிற பொருள்களின் ஞானம் அநாவசியமென்று கொண்டு ஒழுக்கத்தைத் திருத்திக்கொள்ளுவதனாலேயே மேற்கூறிய துன்பமில்லா நிலையை எல்லோரும் அடையலாமென்று துணிந்து புத்தர் தமது அறவாழியை உருட்டிவந்தனர். நிலையில்லாத தன்மையோடுகூடிய தசையிலிருப்பதே துன்பமாகையாலும், நிலையில்லாப்பொருள்களெல்லாம் காரணங்களிலிருந்துண்டாகிய காரியங்களாயிருப்பதனாலும், காரணத்தைப்போக்கினால் காரியமும் அழிந்துபோவதனாலும், நிலையில்லாத் தன்மையிருப்பதை உறுதியாக்குவதாகிய காரணமே துன்பத்திற்குக் காரணமாகும்; அந்த நிலையில்லாத் தன்மையை நீக்குவதற்கு வேண்டிய காரணமே துன்பத்தின் அழிவிற்கு வேண்டிய காரணமாகும்; ஆகையால், பௌத்தர்களுடைய பரமபுருஷார்த்தத்தைப் பெறுதற்குக் காட்சியனுமானங்களால் அறிந்துகொள்ளக்கூடிய ஹேதுநிகழ்ச்சியறிவும் அதற்கு ஒத்ததான நன்னடையுமே போதியவை; துன்பமும் துன்பத்தின் காரணங்களும் காட்சி யனுமானங்களால் அறிந்துகொள்ளக்

கூடியவைகளாக இருத்தலினாலே அவை வ்யாவஹாரிகத்தையைச் சேர்ந்தனவாக இருக்கின்றன; ஆகையால், பாரமார்த்திக விஷய விசாரம் துன்பத்திலிருந்து நிவ்ருத்தி பெறுவதற்குவேண்டியு தன்று. ஹேது நிகழ்ச்சி முடிபொருளாகிய ஆதிகாரணத்தைத் தெரிவிக்க வந்ததன்று; வ்யாவஹாரிகமான ஸம்ஸாரபரம்பரையின் தோற்றத்தையும் அழிவையுமே காட்டுகின்றது. ஸாதாரணமாக ஒருவன் யாதேனும் ஒருபொருளைத் தன் பொறிகளால் அறிந்துகொள்ள முயலும்பொழுது முதலில் நேரிடுவது பொருள்களுக்கும் அவனுடைய பொறிகளுக்கும் உண்டாகும் ஸம்பந்தந்தான்; இந்த ஸம்பந்தத்தை ஸ்பரிசமென்பர்; இந்த ஸ்பரிசமுண்டானவுடன் இன்பதுன்பவடிவங்களான நுகர்ச்சி இயல்பாகவே உண்டாகின்றது; இதை வேதனையென்பர். இந்நுகர்ச்சியைப் பெற்ற பின்பு இன்பத்தைப் பெறவேண்டுமென்றும், துன்பத்தை அகற்றவேண்டுமென்றும் தோன்றுகிற எண்ணம் இயல்பாகவே உண்டாகும்; இந்தஎண்ணம் வேட்கையெனப்படும்; இவ்வேட்கையின் பயன் பற்று ; இதனை உபாதானமென்பர் ; வழியில்லாதவழியில் உழைக்கும்படி ஒவ்வொருவரையும் தூண்டுதல்செய்வது இப்பற்றுத்தான்; இதுதான் முடிவில்லாமல் ஒன்றன்பின் ஒன்றாகத் தோற்றும் மறுபிறப்பிற்குக் காரணமாகிய பவத்தையுண்டுபண்ணுவது; இத்தன்மையையுடைய மறுபிறப்பு இல்லையாயின், பற்றின் தூண்டுதலாற் செய்யப்பட்ட தொழில்களின் பயனாகிய நல்வினை தீவினைகளை இயல்பிற்கேற்றபடி ஒவ்வொருவரும் அனுபவிப்பதற்கு இடமில்லாமற்போகும். நல்வினை தீவினைகளின் பயன்களெல்லாம் நிலையில்லாதனவாதலாலும் ஸாரமில்லாதனவாதலாலும் துன்பத்தையே கொடுக்கும். உலகப்பொருள்களிற் பொறிகளைச் செலுத்துவதனால் மேற்கூறியபடி துன்பமுண்டாகுமென்பதில் யாருக்கும் ஸந்தேகமில்லை; இப்பொறிகள் துன்பத்தைத்தரும் வண்ணம் செல்லுதற்குக் காரணம் யாதென்று விசாரிப்போமாக: பௌத்தர்கள் மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐந்து பொறிகளையும் மனத்தையும் கூட்டி ஆறுவாயில்களாக அங்கீகரித்திருக்கிறார்கள். இந்தஆறும் புறத்தேயுள்ளஉருவத்தின்அறிவையும் அகத்தேயுள்ள நாமத்தின்அறிவையும் கொடுப்பதற்கு ஏற்ற இயல்போடு கூடியவைகளாம் ; இவ்வாயில்கள் அருவுருவாகிய இவ்விருவகை அறிவையும் கொடுப்பதற்கு மூலமாகவுள்ளது விஞ்ஞானமாகும். வேதாந்த நூல்களிலும் இப்படியே வெளியேயுள்ள

பொருள்களைக்காட்டிலும் பொறிகள் உயர்ந்தன வென்றும், பொறிகளைக்காட்டிலும் மனம் உயர்ந்ததென்றும், மனத்தைக்காட்டிலும் புத்தி உயர்ந்ததென்றும், புத்தியைக்காட்டிலும் ஆன்மா உயர்ந்த தென்றும் கூறப்பட்டிருக்கின்றது. வேதாந்திகள் புத்தியென்பதைத்தான் பௌத்தர்கள் நாமரூபமென்று சொல்லுவதாகப் பெரும்பாலும் தோற்றுகிறது. இந்த நாமரூபமானது விஞ்ஞான ஸம்ஸ்கார ஸம்ஜ்ஞாஸ்கந்தங்களுக்கு ஸம்பந்தமுள்ளதாகப் பௌத்தருடைய நூல்களால் விளங்கி வருகின்றது; ஆனால், பௌத்தர்களுடைய விஞ்ஞானம் வேதாந்திகள் கொண்டிருக்கும் ஆத்மதத்துவத்திற்குச் சமானமானதன்று. ஆத்மாவுக்கு அநாதியாகிய தன்மையையும் நித்தியமாகிய தன்மையையும் இலக்கணமாகச் சொல்லுகிறார்கள். விஞ்ஞானத்திற்கு இவ்விரண்டுமில்லை. தீர்க்கநிகாய மென்கிற பௌத்தநூலில் ஓரிடத்தில் புத்தர் பிருதிவி அப்புத் தேயு வாயு ஆகாசம் விஞ்ஞான மென்கிற ஆறு பூதங்கள் உள்ளனவென்று சொல்லியிருப்பதாகத் தெரியவருகிறது. ஆகையால், விஞ்ஞானத்தையுங்கூட ஒரு பூதமாகப் பௌத்தர்கள் கொண்டிருக்கிறார்களென்று நினைக்கவேண்டும். இந்த விஞ்ஞானம் கபிலருடைய ஸாங்கிய தரிசனத்திலுள்ள 'மகத்து' என்கிற தத்துவத்திற்கு ஒப்பாக இருக்கலாம். இது ஸம்ஸ்காரத்திலிருந்தும் ஸம்ஸ்காரம் அவித்தையிலிருந்தும் உண்டாயினவென்று சொல்லுகிறார்கள்.

அத்வைத ஸித்தாந்தத்தில் மாயையை அவித்தையென்றும் அஜ்ஞான மென்றும் சொல்லுகிறார்கள். மாயை, அவித்தை, அஜ்ஞான மென்னும் இப்பெயர்கள் மூன்றும் அந்த ஸம்பிரதாயத்தில் பிரகிருதியைக்குறித்துக் காட்டுகின்றன. புத்தருடைய காலத்திற்குப் பிறகு த்வாதசநிதானத்தில் ஒன்றாகிய அவித்தையை அத்வைதிகள் கூறும் மாயைக்கு ஒப்பென்று பௌத்தர்கள் எண்ணியதாகச் சொல்ல இடமுண்டு. பிரஜ்ஞா பாரமிதை என்னும் ஒருபுத்தகத்தில், புத்தருக்கும் சாரீபுத்திரனுக்கும் பின்வருமாறு ஒரு ஸம்வாதம் நடந்ததாக இருக்கிறது.

புத்தர்.—“ஓ சாரீபுத்ர! மிகவும் பற்றுள்ளவர்களாய் அறிவுறுத்தப்படாதவர்களாய் ஸாதாரணமானவர்களும் அஜ்ஞானி

பொருள்களைக்காட்டிலும் பொறிகள் உயர்ந்தன வென்றும், பொறிகளைக்காட்டிலும் மனம் உயர்ந்ததென்றும், மனத்தைக்காட்டிலும் புத்தி உயர்ந்ததென்றும், புத்தியைக்காட்டிலும் ஆன்மா உயர்ந்த தென்றும் கூறப்பட்டிருக்கின்றது. வேதாந்திகள் புத்தியென்பதைத்தான் பௌத்தர்கள் நாமரூபமென்று சொல்லுவதாகப் பெரும்பாலும் தோற்றுகிறது. இந்த நாமரூபமானது விஞ்ஞான ஸம்ஸ்கார ஸம்ஜ்ஞாஸ்கந்தங்களுக்கு ஸம்பந்தமுள்ளதாகப் பௌத்தருடைய நூல்களால் விளங்கி வருகின்றது; ஆனால், பௌத்தர்களுடைய விஞ்ஞானம் வேதாந்திகள் கொண்டிருக்கும் ஆத்மதத்துவத்திற்குச் சமானமானதன்று. ஆத்மாவுக்கு அநாதியாகிய தன்மையையும் நித்தியமாகிய தன்மையையும் இலக்கணமாகச் சொல்லுகிறார்கள். விஞ்ஞானத்திற்கு இவ்விரண்டுமில்லை. தீர்க்கநிகாய மென்கிற பௌத்தநூலில் ஓரிடத்தில் புத்தர் பிருதிவி அப்புத் தேயு வாயு ஆகாசம் விஞ்ஞான மென்கிற ஆறு பூதங்கள் உள்ளன வென்று சொல்லியிருப்பதாகத் தெரியவருகிறது. ஆகையால், விஞ்ஞானத்தையுங்கூட ஒரு பூதமாகப் பௌத்தர்கள் கொண்டிருக்கிறார்களென்று நினைக்கவேண்டும். இந்த விஞ்ஞானம் கபிலருடைய ஸாங்கிய தரிசனத்திலுள்ள 'மகத்து' என்கிற தத்துவத்திற்கு ஒப்பாக இருக்கலாம். இது ஸம்ஸ்காரத்திலிருந்தும் ஸம்ஸ்காரம் அவித்தையிலிருந்தும் உண்டாயினவென்று சொல்லுகிறார்கள்.

அத்வைத ஸித்தாந்தத்தில் மாயையை அவித்தையென்றும் அஜ்ஞான மென்றும் சொல்லுகிறார்கள். மாயை, அவித்தை, அஜ்ஞான மென்னும் இப்பெயர்கள் மூன்றும் அந்த ஸம்பிரதாயத்தில் பிரகிருதியைக்குறித்துக் காட்டுகின்றன. புத்தருடைய காலத்திற்குப் பிறகு த்வாதசநிதானத்தில் ஒன்றாகிய அவித்தையை அத்வைதிகள் கூறும் மாயைக்கு ஒப்பென்று பௌத்தர்கள் எண்ணியதாகச் சொல்ல இடமுண்டு. பிரஜ்ஞா பாரமிதை என்னும் ஒருபுத்தகத்தில், புத்தருக்கும் சாரீபுத்திரனுக்கும் பின்வருமாறு ஒரு ஸம்வாதம் நடந்ததாக இருக்கிறது.

புத்தர்.—“ஓ சாரீபுத்ர! மிகவும் பற்றுள்ளவர்களாய் அறிவுறுத்தப்படாதவர்களாய் ஸாதாரணமானவர்களும் அஜ்ஞானி

"பேதைமை யென்பது யாதென வினவின்
ஓதிய விவற்றை யுணராது மயங்கி
இயற்படு பொருளாற் கண்டது மறந்து
முயற்கோ டுண்டெனக் கேட்டது தெளிதல்"

(மணிமேகலை, ௩௦-ஆம் காதை, ௬௩-௬௪.)

"பேய்மை யாக்குமிப் பேதைமைக் கள்வனோ டேனும்க்
காமுற் றுமதன் பயத்தினிற் காமனைக் கடந்து
நாம ரூஉம்புகழ் கொடுப்பதோர் நன்னெறி நண்ணும்
வாமன் வாய்மொழி மறந் திட்டு பறந்தொழி கின்றும்."

(வீரசோழியம்,யாப்புப்படலம், ௰- ஆம் கலித்துறையுரையிற் கண்டது.)

இத்தன்மையதான அவித்தையிலிருந்து ஸம்ஸ்கார முண்டாகின்றது; ஸம்ஸ்காரமாவது மனோவாக்குக் காயங்கள் தத்தம் தொழில்களைச் செய்தலினால் அவைகளுக்குண்டாகும் பரிபாக விசேடம் (திருத்தம்) என்று அத னிலக்கணம் முன்னமே கூறப்பட்டிருக்கிறது. பதார்த்தங்களின் தன்மைகளையெல்லாம் ஸம்ஸ்காரத்தின் பயனாகப் பௌத்தர்கள் சொல்லுகிறார்கள். புத்தர் நிருவாணத்தை அடைந்தபொழுது தேவனாகிய இந்திரன், "ஸம்ஸ்காரங்கள் உண்மையாக நிலையற்றன; தோற்றத்திற்கும் அழிவிற்கும் உள்ளடங்கினவை; அவைகள் உண்டானபடியே அழிந்து விடும்; அவைகளின் ஒடுக்கமே இன்பம்" என்று சொன்ன வாக்கியங்கள் திரிபிடகத்தில் இடந்தோறுங் காணப்படு மென்பர். தர்மபதத்தில் ஸம்ஸ்காரத்தைப்பற்றிச் சொல்லியிருப்பது யாதெனின், "ஸம்ஸ்காரங்களெல்லாம் அநித்தியங்களாக வுள்ளவை; ஒருவன் இதை உண்மையாக அறிந்துகொண்டால் அவன் துன்பத்திலிருந்து திரும்புவான்; இதுதான் பரிசுத்தமார்க்கம்; ஸம்ஸ்காரங்களெல்லாம் துன்பமயமாகவுள்ளவை: ஒருவன் இதை உண்மையாக அறிந்துகொண்டால், அவன் துன்பத்திலிருந்து திரும்புவான்; இதுதான் பரிசுத்தமார்க்கம்; இயல்புகளெல்லாம் அநாத்மாக்கள்; ஒருவன் இதை உண்மையாக அறிந்து கொண்டால், அவன் துன்பத்திலிருந்து திரும்புவான்; இது தான் பரிசுத்தமார்க்கம்" என்பது. இங்கே ஆத்மா இல்லையென்று சொன்னதாக நினைக்க இடமில்லை. செய்கை (ஸம்ஸ்காரம்) களும் இயல்புகளும் ஆகிய உலகத்துள்ள எல்லாப்பொருள்களும் அநித்

தியமானவைகளென்றும் துன்பமயமானவைகளென்றும் அநாத்மாக்களென்றுமே சொல்லப்பட்டிருக்கின்றன. நான்கு வாய்மைகளையும் அறிந்து கொள்ளாமையாகிய அவித்தையானது ஸம்ஸ்காரத்தை வளர்ச்செய்யவேண்டுவது முறைதான்; இந்த ஸம்ஸ்காரம் ஒரு பிறப்பிலிருந்து மறுபிறப்பிற்கும் செல்லும். முன் ஜன்மத்திலிருந்து பின் ஜன்மத்திற்கு இவ்வாறு வந்திருக்கிற ஸம்ஸ்காரத்தை ஜன்மாந்தரவாஸனையென்ன எல்லோரும் சொல்லுகிறார்கள்; இப்படியுண்டாயிருக்கிற ஜன்மாந்தரவாஸனை ஒவ்வொருவனுக்கும் இந்த ஜன்மத்தில் அவன் பெறக்கூடிய ஞானாஞ்ஞானங்களுக்குக் காரணமாய் நிற்கும்; அஃதாவது பூர்வஜன்மத்தின் ஸம்ஸ்காரம் கெட்டதாகவிருந்தால் அஃது இந்த ஜன்மத்தில் அவித்தையை உண்டாக்கும்; நல்லதாக இருந்தால் அவித்தையை ஒழிக்கும் என்றதாம். மேலும் முன் ஜன்மத்தினுள்ள அவித்தை மறுஜன்மத்தில் அவித்தையை உண்டாக்கக்கூடிய ஸம்ஸ்காரங்களுக்கு இந்த ஜன்மத்திலேயே காரணமாயிருக்கிறதென்பதை எளிதாக அறிந்துகொள்ளலாம். ஒரே ஜன்மத்தில் அவித்தை ஸம்ஸ்காரத்தை உண்டாக்குகிறது; ஒரு ஜன்மத்திலிருந்து வேறொரு ஜன்மத்திற்குச் செல்லும் பொழுது முன் ஜன்மத்தின் ஸம்ஸ்காரம் பின்ஜன்மத்தில் அவித்தையை உண்டாக்குகிறது. ஆகையால் அவித்தை ஸம்ஸ்காரத்திற்குக் காரணமென்றும் ஸம்ஸ்காரம் அவித்தைக்குக் காரணமென்றும அறிந்துகொள்ளவேண்டும். ஒவ்வொரு ஜன்மத்திலும் இத்தன்மையையுடைய ஸம்ஸ்காரமில்லாவிட்டால் விஞ்ஞானமும் அதன் பயன்களும் உண்டாகா. இதைக்கண்டு துக்கோற்பத்தி துக்க நிவாரணங்களென்கிற வாய்மைகளை விளங்க அறிந்து கொள்ளலாம். மேற்கூறிய பன்னிரண்டு நிதானங்களின் இலக்கணம் இவ்வாறு மணிமேகலையிற் கூறப்பட்டிருக்கிறது:

"பேதைமை யென்ப தியாதென வினவின்
....
....
....
உணர்வெனப் படுவ துறங்குவோ ருணர்விற்
புரிவின் றாகிப் புலன்கொளா ததுவே
அருவுரு வென்பதவ் வுணர்வு சார்ந்த
உயிரு முடம்பு மாகு மென்ப

வாயி லென்ப தாயுங் காலை
உள்ளமுறு விக்க வுறுமிட னாகும்
ஊறெனை வுரைப்ப துள்ளமும் வாயிலும்
வேறு புலன்களை மேவுத லென்ப
நுகர்வே யுணர்வு புலன்களை நுகர்தல்
வேட்கை விரும்பி நுகர்ச்சியா ராமை
பற்றெனப் படுவது பசைஇய வறிவே
பவமெனப் படுவது கரும வீட்டம்
தருமுறை யிதுவெனத் தாந்தாஞ் சார்தல்
பிறப்பெனப் படுவதக் கருமப் பெற்றியின்
உறப்புண ருள்ளஞ் சார்பொடு கதிகளிற்
காரண காரிய வுருக்களிற் றோன்றல்
பிணியெனப் படுவது சார்பிற் பிறிதாய்
இயற்கையிற் றிரிந்துடம் பிடும்பை புரிதல்
மூப்பென மொழிவ தந்தத் தளவும்
தாக்குநிலை யாமையிற் றாந்தளர்ந் திடுதல்.
சாக்கா டென்ப தருவுருத் தன்மை
யாக்கை வீழ்கதி ரெனமறைந் திடுதல்."

(௩௦-ஆம் காதை, ௫௧-௧௦௩.)

(துக்கநிவாரண மார்க்கம்.)

புத்தர் காசியில் ஆதிசிஷ்யர்களாகிய ஐந்துபேர்களுக்குத் தம்முடைய மதத்தைச்சார்ந்த வாய்மைகள் நான்கையும் உபதேசித்தபொழுது, அவைகளில் நான்காவதாகிய துக்கநிவாரண மார்க்கத்தைப்பற்றிப் பின்வருமாறு கூறியிருப்பதாகப் பௌத்த நூல்கள் தெரிவிக்கின்றன:

"ஓ ஸந்யாஸிகளே! துக்கவிநாசத்திற்குரிய மார்க்கமாகிய பரிசுத்தமான ஸத்தியம இதுதான்; இதுதான் நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன் முயற்சி நற்கடைப்பிடி, நல்லுள்த்தோர்தலைப்பாடு என்பனவாகிய பரிசுத்தமான அஷ்டாங்கமார்க்கம்."

இதைத்தான் விசுத்திமார்க்கமென்றும் பழுதிலா வாழ்க்கையென்றுங் கூறுவர். ஆராய்ந்துபார்க்குமிடத்தில் இந்த விசுத்தி மார்க்கத்தில் நடப்பவர்களுக்கு முக்கியமான மூன்று குணங்கள் வேண்டுமென்பர். அவற்றைச் சீலம் ஸமாதி பிரஜ்ஞையென்று

வாயி லென்ப தாயுங் காலை
உள்ளமுறு விக்க வுறுமிட னுரும்
ஊறெனவுரைப்ப துள்ளமும் வாயிலும்
வேறு புலன்களை மேவுத லென்ப
நுகர்வே யுணர்வு புலன்களை நுகர்தல்
வேட்கை விரும்பி நுகர்ச்சியா ராமை
பற்றெனப் படுவது பசைஇய வறிவே
பவமெனப் படுவது கரும வீட்டம்
தருமுறை யிதுவெனத் தாந்தாஞ் சார்தல்
பிறப்பெனப் படுவதக் கருமப் பெற்றியின்
உறப்புண ருள்ளஞ் சார்பொடு கதிகளிற்
காரண காரிய வுருக்களிற் றோன்றல்
பிணியெனப் படுவது சார்பிற் பிறிதாய்
இயற்கையிற் றிரிந்துடம் பிடும்பை புரிதல்
மூப்பென மொழிவ தந்தத் தளவும்
தாக்குநிலை யாமையிற் றாந்தளர்ந் திடுதல்.
சாக்கா டென்ப தருவுருத் தன்மை
யாக்கை வீழ்கதி ரெனமறைந் திடுதல்."

(௩0-ஆம் காதை, ௫௧-௧0௩.)

(துக்கநிவாரண மார்க்கம்.)

புத்தர் காசியில் ஆதிசிஷ்யர்களாகிய ஐந்துபேர்களுக்குத் தம்முடைய மதத்தைச்சார்ந்த வாய்மைகள் நான்கையும் உபதேசித்தபொழுது, அவைகளில் நான்காவதாகிய துக்கநிவாரண மார்க்கத்தைப்பற்றிப் பின்வருமாறு கூறியிருப்பதாகப் பௌத்த நூல்கள் தெரிவிக்கின்றன:

"ஓ ஸந்யாஸிகளே! துக்கவிநாசத்திற்குரிய மார்க்கமாகிய பரிசுத்தமான ஸத்தியம இதுதான்; இதுதான் நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன் முயற்சி நற்கடைப்பிடி, நல்லுள்ளத்தோர்தலைப்பாடு என்பனவாகிய பரிசுத்தமான அஷ்டாங்கமார்க்கம்."

இதைத்தான் விசுத்திமார்க்கமென்றும் பழுதிலா வாழ்க்கையென்றுங் கூறுவர். ஆராய்ந்துபார்க்குமிடத்தில் இந்த விசுத்திமார்க்கத்தில் நடப்பவர்களுக்கு முக்கியமான மூன்று குணங்கள் வேண்டுமென்பர். அவற்றைச் சீலம் ஸமாதி பிரஜ்ஞையென்று

மூன்றுஞ்சேர அஷ்டசீலமென்றும், இவை இல்லறத்தாரில் நிஷ்டாபரர்களுக்கே உரியனவென்றும், இவ்வெட்டனோடு நாட்டியம் கானம் முதலியவற்றை விரும்பாமை, பொன் வெள்ளிகளைத் தொடாமையென்னும் இவ்விரண்டும் சேரத் தசசீலமென்றும், இப்பத்தும் துறவிகளுக்கே உரியனவென்றும், இப்பத்தில் வியபிசரியாமை நின்றவிடத்திற் பிரமசரியம் கூறப்படுமென்றும் தார்மிக சூத்திரமென்னும் பௌத்த நூல் கூறும்.

இப்பத்தினோடு தன் மதமே உயர்ந்ததென்று எண்ணிக்கொண்டு பிறர் மதத்தை அவமதியாமையையும் ஒரு சீலமாகக் கூறுவதுண்டு. சீலவான்களினுயர்ந்தோர் மனைவி, மக்கள், பொருள், உயிர், பிறவி, விருப்பமென்னும் ஐந்தையும் விட்டுவிட வேண்டும். இவ்வீடு பஞ்சத்தியாகமென்று சொல்லப்படும். இந்தச் சீலவான்களுக்கு அவா, பற்று, பேதைமை என்னும் மூன்று குற்றங்களும் இருத்தலாகாது.

"குலவிய குற்றமெனக் கூறப் படுமே
அவாவே பற்றே பேதைமை யென்றிவை."

(மணிமேகலை, ௩௦-ஆம் காதை, ௧௬௯-௭௦.)

அக்குற்றம் மூன்றும் ஆஸ்ரவமென்றும் கூறப்படும். மேற்கூறிய சீலஸமாதிப் பிரஜ்ஞைகளுக்கு விரோதமாய் நின்று அவற்றை வளராமற் செய்யக்கூடிய மனோபாவங்கள் பத்துண்டென்பதும், அவற்றை ஒழித்தாலன்றி முடிபாகிய நிருவாணத்தை நோக்கிச் செல்ல முடியாதென்பதும் பௌத்தர்களுடைய கொள்கை. இந்தப் பத்து மனோபாவங்களுக்கும் தசஸம்யோஜனங்களென்று பெயர். ஸம்யோஜனமென்பது விலங்கு; பற்றையுண்டாக்கித் துன்ப மயமாகிய உலக வாழ்வினின்றும் நிவிர்த்தியுண்டாகாதபடி ஒவ்வொருவரையும் கட்டி வைப்பதனால், இவற்றிற்கு இப்பெயருண்டாயிற்று.

தசஸம்யோஜனங்களாவன:

௧. ஸத்காயதிருஷ்டி - உடம்பு உண்மையுள்ளதென்னும் எண்ணம்;

௨. விசிகித்ஸை - ஸந்தேகம்;

௩. சீலவிரதம் - பயனை நாடிச் செய்யப்படும் விரதங்கள்;

௪. காமம் - சப்தாதி விஷய விருப்பம்;

௫. ப்ரதிகை - கோபம்;

௬. ரூபராகம் - உருவம் பெறவேண்டுமென்னுமாசை;

௭. அரூபராகம் - உருவம் பெறாமலிருத்தற்குரிய உலகங்களில் வாழ்தலை இச்சித்தல்;

௮. மானம் - கர்வம்;

௯. ஔத்தத்தியம் - நானே மேலானவனென்னும் தற்புகழ்ச்சி;

௧௦. அஜ்ஞானம் - அறியாமை.

இவைகளைப் போக்கினாலன்றி விசுத்தி மார்க்கத்திற் சென்று நிருவாணத்தைப் பெறுதல் ஒருவருக்கும் இயலுவதன்று.

இந்த ஸம்யோஜனங்களைப் போக்குதற்கு வேண்டிய பிரயத்தனத்தோடு விசுத்தி மார்க்கத்திற் செல்லுவோர் நான்கு வகைப்படுவர். ஸத்ஸங்கம், பௌத்த தர்ம ஸ்ரவணமனனங்கள், நல்லொழுக்கம் என்பவைகளால் ஸத்காயதிருஷ்டி, விசிகித்ஸை, சீலவிரதமென்கிற மூன்றையும் போக்கிக் கொண்டு பாபம் துவேஷம் அசுத்தி ஆகிய இவற்றுள் ஒன்றுமில்லாமல் நீக்கி நான்கு வாய்மைகளையும் அறிந்துகொள்ளத் தொடங்குதலுக்கு ஸ்ரோதாபத்தி யென்று பெயர்; ஸ்ரோதாபத்தியாவது ஆற்றையடைதல்; புத்த தர்மமாகிய இவ்வாற்றை மேற்கண்டபடி அடைந்தவர்கள் ஸ்ரோதாபன்னரென்று கூறப்படுவார்கள். அங்ஙனம் புத்தருடைய தர்மத்தை அடைந்து மேற்கூறிய மூன்று ஸம்யோஜனங்களையும் தொலைத்தற்கு முயன்று வெற்றி பெற்றவர்கள், காமம் வெகுளி மயக்கங்களை இயன்றவரையில் தம்மிடத்தில் இல்லாதபடி குறைத்துவிடுவார்கள்; இப்படி ஜயத்தைப் பெற்றவர்களுக்கு ஸக்ருதாகாமிகளென்று பெயர்; ஸக்ருதாகாமி யென்பவன் பின்பு ஒரே பிறப்பை மட்டும் பெறுதற்கு உரியவனாக இருப்பான்; அந்த மறு பிறப்பிலேயே அவன் நிருவாணத்தைப்பெறுதல் நிச்சயமென்பது இதன் கருத்து. இந்த வழியிலேயே வளர்ச்சி பெற்றுக் காமவெகுளி மயக்கங்களை முற்றும் ஒழித்துத் தம்மைப் பற்றியாவது பிறரைப்பற்றியாவது தாழ்ந்த எண்ணம் ஒன்றுமில்லாத தசையை அடைந்தவர்களுக்கு அநாகாமிகளென்று

பெயர்; அநாகாமியென்பவன் மறுபிறப்பில் தோற்றுவதற்கு உரிமையே இல்லாதவன்; பின்னும் பயிற்சிசெய்வதனால் வளர்ச்சி பெற்று எஞ்சிய ஸம்யோஜனங்களையெல்லாம் போக்கிக் கொண்டு எடுத்த பிறப்பிலேயே நிருவாணத்தைப் பெறுதற்கு உரியவனாகக்கூடியவன். அக நோக்கத்தினால் உண்மையை யறிந்து கொண்டு ரூபாரூபராகங்களையும் மான ஔதத்திய அவித்தைகளையும் போக்கிக்கொண்டு எல்லாக் குற்றங்களினின்றும் விலக்கப்பட்டவர்களாய்ப் பொருள்களையெல்லாம் உள்ளவாறே மதிக்க வல்லவர்களாய்த் தீயவெண்ணம் ஒன்றுமே இல்லாமற் பிறரிடத்தில் தயையும் பரிசுத்தமான அன்பும் உள்ளவர்களா யிருப்பவர்கள் அருகத்துக்களென்று சொல்லப்படுவார்கள்; அருகத்தென்பதற்கு, பூஜையைப் பெற்றுக்கொள்ளுதற்குப் உரியவர்களென்பது கருத்து. இப்படிப் பரிபூர்ணமான பயிற்சியைப் பெற்றவன் அத்வைதிகள் சொல்லும் ஜீவன்முக்தனுக்கு ஒப்பாகக்கொள்ளுதற்குரியன். இத்தன்மையை யுடையவனுக்கு மரணம்நேரிட்டால் அவன் பரிநிருவாணமென்கிற துன்பமில்லா நிலையை அடைந்துவிடுவான்.

மேற்கூறியபடியே படிப்படியாகப் பரிபாகத்தையடைந்து நிருவாண நிலையைப் பெற்றுக்கொள்ள முயல்பவர்களுக்கு உதவியாக ஸ்மிருதிகளென்று பேருள்ள நான்கு ஸதிப்பிரஸ்தானங்களும், நான்கு ஸம்யக்ப்ர தானங்களும், நான்கு ருத்திபாதங்களும், பஞ்சபலங்களும், ஸப்தபோத்தியாங்கங்களும் சொல்லப்பட்டிருக்றன. புத்தர் தாம் நிருவாணமடைவதற்குமுன் கூடாகாரமலையில் கூடியிருந்த தம் சிஷ்யர்களாகிய ஸங்கத்தார்க்குச் சொன்னதாகப் பின்வருமாறு மஹாபரிநிருவாணஸூத்திரத்திற் கூறப்பட்டுள்ளது:—

"ஓ பிக்ஷுக்களே! என்னுடைய சுத்தமான மதம் நீடித்திருந்துகொண்டு ஜனங்களுடைய கூட்டத்திற்கெல்லாம் நன்மையையும் ஸுகத்தையும் தருவதற்கு உரியதாய் நிலைபெற்றிருப்பதற்கும் உலகத்தாரிடத்தில் அருள்செலுத்துதற்கும் தேவர்கள் மனிதர்கள் ஆகிய இவர்களுக்கு லாபத்தையும் அபிவிர்த்தியையும் உண்டாக்குவதற்கும் நான் அறிந்துகொண்டு உபதேசித்து வந்த தர்மத்தை நன்றாகக்கற்று ஆசரித்துத் திருத்திப் பரவச்செய்யுமின்; அந்தத் தர்மமாவது என்னவெனின், நான்கு ஸதிப்

பிரஸ்தானங்களும், நான்கு ஸம்யக்ப்ரதானங்களும், நான்கு ருத்திபாதங்களும், பஞ்சபலங்களும், ஸப்தபோத்தியாங்கங்களும் அஷ்டாங்கமார்க்கமுமாயிருக்கிறது.”

ஸ்மிருதிகளாகிய நான்கு ஸதிப்பிரஸ்தானங்களாவன:—

க. தேகம் அசுத்தமென்று நினைத்தல்;

உ. வேதனை (நுகர்வு)களிலிருந்து உண்டாகும் கேடுகளை நினைத்தல்;

௩. எண்ணங்களின் நிலையில்லாத் தன்மையை நினைத்தல்;

௪. இருப்புக்கு இயல்பானதன்மைகளை நினைத்தல்.

நான்கு ஸம்யக்ப்ரதானங்களாவன—நான்கு விதமான நன் முயற்சிகள்:—

க. கெட்டகுணங்களுண்டாகாமல் அவற்றைத்தடுக்க முயலுதல்;

உ. உண்டாயிருக்கும் கெட்டகுணங்களை விலக்குவதற்கு முயலுதல்;

௩. முன்னில்லாத நன்மையை உண்டாக்க முயலுதல்;

௪. உண்டாயிருக்கும்நன்மையை அதிகப்படுத்த முயலுதல்.

நான்கு ருத்திபாதங்களாவன—அருகத்தவ நிலையாகிய வித்தியைப் பெறுவதற்குவேண்டிய ஸாதனங்களாம்:—

க. இருத்தியைப் பெறவேண்டுமென்கிற நினைப்பு;

உ. இருத்தியைப் பெறுதற்குரிய பிரயத்தனம்;

௩. அதற்குரிய ஹிருதயபரிபாகம்;

௪. அதற்குரிய ஆராய்ச்சி.

பஞ்சபலங்களாவன—மனத்தின் அங்கங்களுக்குள்ள ஆற்றல்:—

க. சிரத்தை;

உ. ஸாமர்த்தியம்;

௩. ஞாபகம்;

௪. மனனம்;

௫. ஊகை (ஊகித்தல்.)

ஸப்தபோத்தியாங்கங்களாவன—உண்மையான ஞானத்தை அடைவதற்கு வேண்டிய கருவிகள்:—

க. ஸாமர்த்தியம்;

உ. ஞாபகம்;

௩. மனனம்;

௪. [illegible] ஆராய்ச்சி;

௫. உத்ஸாகம்;

௬. சாந்தி;

௭. [illegible].

பற்றையறுத்து ஸம்ஸ்காரத்தை ஒழித்து விடுவது வருத்த மின்றிச் சாதிக்கக்கூடியதாகப் புத்தர் நினைக்கவில்லையென்று மேற்கூறிய விஷயங்களை ஆராய்ச்சி செய்து பார்ப்பவர்களுக்கு விளங்காமற் போகாது; ஆகையால், பற்றையறுத்து ஸம்ஸ்காரத்தை ஒழித்துவிடுதலை ஸாதாரணமான ஜனங்கள் மிகவும் கஷ்டமாக நினைப்பார்களென்பதில் ஸந்தேகமென்ன ?

இப்படிப்பட்ட கடினமான பயனையடைவதற்கு இன்னும் இரண்டுவிதமான ஸாதனங்கள் உண்டு. அவைகளாவன ஐந்து பாவனைகளும் நான்கு தியானங்களுமாம்.

அவற்றுள் ஐந்து பாவனைகளாவன:— மைத்திரீபாவனை, கருணாபாவனை, முதிதபாவனை, அசுபபாவனை, உபேக்ஷாபாவனை என்பன.

இவ்வைந்தனுள் மைத்திரீ பாவனையாவது:— ஒரு துறவி வசதியான ஓரிடத்தையடைந்து தக்க ஆஸனத்திலிருந்த பின்பு பின் வருமாறு தியானித்தலாம்: 'உத்தமமான பிறப்பினையுடைய பிராணிகளெல்லாம் களிப்புற்று வாழ்வனவாகுக; அவை யெல்லாம் துக்கம் வியாதி துராசை யென்னும் இவைகளினின்றும் விடுபட்டனவாகுக; எல்லாமனிதர்களும் எல்லாத்தேவர்களும் நரகவாதையினாற் பீடிக்கப்படுகிற யாவரும் ஸந்தோஷமுடையவர்களாக ஆகுக; அவர் துக்கம் வியாதி துராசையென்னும் இவற்றினின்றும் விடுபட்டவர்களாக ஆகுக.'

கருணாபாவனையாவது:—'வறியவர்கள் வறுமை நீங்கிச்செல்வமுடையவர்களாக ஆகுக' என்று பாவித்தல். கருணையாவது இரக்கமுள்ள எண்ணம்; அஃது ஒரு பிராணி துன்பமுறுவதைக் காணின் மனக்கலக்கத்தையும் அத்துன்பத்தை நிவிர்த்திபண்ணவேண்டுமென்னும் எண்ணத்தையும் ஒருவருக்கு உண்டாக்கும்.

முதிதபாவனையாவது:— 'ஆக்கமுடையவர்களுடைய நல்ல அதிர்ஷ்டமானது எப்பொழுதும் நீங்காதிருத்தல் வேண்டும்; ஒவ்வொருவரும் தத்தமக்கு அமைந்துள்ள நல்வினைப்பயனை அடைக' என்று பாவித்தல். முதிதமென்பதற்குச் சந்தோஷமென்பது பொருள்; ஆனால் அஃது உலகப்பொருள்களையுடைமையால் உண்டாகுங் களிப்பன்று; அது மைத்திரீ, கருணை யென்னும் இரண்டு பாவனைகளுக்கும் சம்பந்தமானது.

[மேற்கூறிய மூன்றுவகைப்பாவனைகளுள் ஏதாவதொன்றை அப்பியஸிக்குந் துறவி தான்கருதிய பாவனையை முதலில் சில ஜனங்களிடத்தும் அப்பால் ஒரு தெருவில் வாழ்பவர்களிடத்தும் அப்பால் ஒரூராரிடத்திலும் பிறகு ஒரு தேயத்தாரிடத்தும் முறையே செலுத்திப் பயிலுதல் நலம்.]

அசுபபாவனையாவது:— [அசுப மென்பதற்குப் பொருள் அமங்களம்] நல்ல அதிர்ஷ்டமென்பதன் எதிர்மொழியாயிருப்ப தோடு மகிழ்ச்சியின்மை வெறுப்பு என்பனவற்றை யுண்டாக்கு வதாகவு முள்ளது. இதைப் பயிலும் ஒரு துறவி, சரீரமானது பல வகைக்குற்றங்களால் ஆக்கப்பட்டதென்றும் சாணியின் குவி யலில் தோன்றிவளரும் புழுக்கள்போலக் கருப்பப்பையில் உண் டாகின்றதென்றும் மலங்கழிக்குமிடத்தைப்போல அசுத்தத்தின் கொள்கலனாயிருப்பதென்றும் அருவருப்பான கசிவு அதிலுள்ள நவத்துவாரங்களின் வழியே ஓயாமற் பெருகுகின்றதென்றும் ஜலதாரையைப்போல் வெறுத்தற்குரிய நாற்றத்தை அது வெளிப் படுத்துகின்றதென்றும் பாவிக்க வேண்டும். 'சரீரத்தின் கால வளவை ஒரு நிமிஷமே; மின்னலையும் நுரையையும் நீரிற்போட்ட உப்பையும் காய்ந்த புல்லிற்பற்றிய நெருப்பையும் கடலில் உள்ள அலையையும் ஆகாயத்திற் சஞ்சரிக்கிற ஜுவாலையையும் புன்னுனி யிற்பட்ட பனித்துளியையும் போலப் பிறந்தபோதே அது நாச மாம்' என்று சரீரத்தின் நிலையின்மையைப் பாவித்தலும் அசுப பாவனையின்பாற் படும்.

உபேக்ஷா பாவனையாவது:—எல்லாவுயிர்களையும் சமமாகப் பாவித்தலும் விருப்பு வெறுப்பின்றி இருத்தலுமாம். இது மற்ற நான்கு பாவனைகளைக்காட்டிலும் மிகவுயர்ந்தது; அருகத்துக்க ளால் அநுஷ்டிக்கப்படுவது; இது சமசித்தத்துவமென்றும் கூறப்படும். (உபேக்ஷை - உதாசீனம்.)

நான்கு தியானங்களுள் முதலாந்தியானமாவது:— பிக்ஷு வானவன் காமத்திலிருந்தும் பாவத்திலிருந்தும் தன்னை விலக்கிக் கொண்டு மனனத்தோடும் ஆராய்ச்சியோடும் கூடியிருக்கும் பொழுது தனித்திருத்தலினுண்டாகும் ஸந்தோஷ மயமும் ஆனந்த மயமுமான நிலை.

இரண்டாந் தியானமாவது:— மனனமும் ஆராய்ச்சியுமில்லா மல் அவைகள் அடக்கப்பட்டிருக்கும் பொழுது சாந்தியிலிருந் துண்டாகும் ஸந்தோஷமயமும் ஆனந்தமயமுமான நிலை.

மூன்றாந் தியானமாவது:—பிக்ஷுவானவன் காமவெகுளிகளை நாசஞ்செய்து ஸந்தோஷத்தைப் பெற்றுக்கொண்டு ஆனந்தமுடையவனாகி அறிவுள்ளவனாகி அருகத்துக்கள் கொண்டாடுவதாம் பொறுமை அறிவு முதலியவற்றோடு கூடியதுமான ஆனந்தத்தைத் தன்னுள் அநுபவித்தல்.

நான்காந் தியானமாவது:—முன்னிருந்த ஸுக துக்கங்களை விட்டொழித்து ஸுகதுக்கநாசங்களைப்பெற்று ஸுகமுமில்லாமல், துக்கமுமில்லாமலிருக்கிற ஸமதிருஷ்டியையும் அறிவையுமுடைய பரிசுத்தமான நிலை.

மேற்கூறிய தியானங்கள் நான்கும் ஸமாதிக்கு உதவியாகவுள்ளன.

இவ்வாறு படிப்படியாகத் தியானங்களில் மனத்தைச் செலுத்துதலினால் பௌத்த பிக்ஷுக்கள் ஸமாதியாகிய யோகஸித்தியைப் பெற்றுவந்தார்களென்று தெரியவருகிறது. புத்தர் போதிவிருக்ஷத்தினடியிலிருந்து தமக்கு ஞானோதயமாவதற்கு முன்பு ஓரிரவில் தியானஞ்செய்து வந்தாரென்றும், முதல் யாமத்திற்செய்த முதலாவது தியானத்திற் பூர்வஜன்ம ஸ்திதிகளெல்லாம் அவருக்குத் தெரியவந்தனவென்றும், இரண்டாம் யாமத்திற்செய்த இரண்டாவது தியானத்தில் அப்பொழுதுள்ள ஜன்மத்தின் ஸ்திதிகளெல்லாம் தெரியவந்தனவென்றும், மூன்றாம் யாமத்திற்செய்த மூன்றாவது தியானத்தில் துவாதச நிதானரூபமாகிய ஹேதுநிகழ்ச்சி தெரியவந்ததென்றும், நான்காம் தியானத்தில் சூரியனுதியாநிற்க எல்லாம் தெரியவந்தனவென்றும் சில பௌத்தநூல்கள் கூறும். மஹாபரிநிர்வாணஸூத்திரத்திற் பின்வருமாறு தியானங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

“பிறகு பகவான் பிரதம த்யானத்தை அடைந்தான்; அந்த முதற்படியைக்கடந்து த்விதியத்யானத்திற்குச் சென்றான்; அந்த இரண்டாம்படியைக் கடந்து த்ருதியத்யானத்திற்குச் சென்றான்; அந்த மூன்றாம்படியைக்கடந்து துரியத்யானத்திற்குச் சென்றான்; அந்த நான்காம்படியைக்கடந்து வெட்டவெளி மட்டற்றதென்றுமறிவை உள்ளே ஸாக்ஷாத்கரித்துக்கொடுக்கும் ஆகாசாநந்த்யாயதனமென்கிற த்யானத்தை அடைந்தான்; அந்த ஆகாசாநந்த்யாயதன த்யானத்தைக்கடந்து விஞ்ஞானம் [illegible]

யற்றதென்றும் அறிவை உள்ளே ஸாக்ஷாத்கரித்துக்கொடுக்கும் விஜ்ஞாநாநந்த்யாயதனமென்கிற த்யானத்தை அடைந்தான்; அந்த விஜ்ஞாநாநந்த்யாயதன த்யானத்தைக்கடந்து உண்மை யாக யாதொரு வெளிப்பொருளுமில்லையென்கிற அறிவை உள்ளே ஸாக்ஷாத்கரித்துக்கொடுக்கும் ஆகிஞ்சந்யாயதன மென்கிற த்யானத்தையடைந்தான்; அந்த ஆகிஞ்சந்யாயதன த்யானத்தைக் கடந்து அறிவுள்ளதும் அறிவில்லாததும் அல்லாததாகிய நைவஸம்ஜ்ஞாநாஸம்ஜ்ஞாயதன மென்கிற த்யானத்தை யடைந்தான்."

இன்னும் அநேகவிதமாகச் சொல்லப்பட்டிருக்கிற தியானத்திலக்கணத்தை விவரித்துக்காட்டுவது கடினமாக இருக்கின்றது. இந்தத் தியானத்தின் உதவியினால் யோகஸமாதியை அடைந்தவர்களுக்கு ஆறுவகையான அபிஜ்ஞைகளுண்டாகு மென்பது பௌத்தர்களின் கொள்கை; அபிஜ்ஞையென்பதற்கு மறந்து போனவிஷயம் மீட்டும் நினைவிற்கு வருதலென்பது பொருள்.

ஆறுவகையான அபிஜ்ஞைகள்:—

௧. யோகசுரோத்திரம்;

௨. யோகசக்ஷுஸ்;

௩. பரசித்தஞானம்;

௪. ஜன்மாந்தர ஸ்மரணம்;

௫. காயரோக விநாசஞானம்—காமத்தினாலுண்டாகும் ரோகங்களைப் போக்கிக்கொள்ளும் வழியை அறிந்துகொள்ளுதல்;

௬. இருத்திகள்—அற்புத சக்திகள்; அவை நிலத்தில் நடப்பதுபோல நீரிலே நடையின்றிநடத்தல், நீரிற் புகுவதுபோல நிலத்திற் புகுதல், ஆகாயத்திற் செல்லுதல் முதலிய ஆச்சரியச்செய்கைகள்; அவை பத்துவகைப்படுமென்பாரும், எண்பத்தொன்பது வகைப்படுமென்பாரும், வேறு கூறுவாருமுளர்;

"[illegible]ற்றிச் சுவித்த நெடுவிசும் பேறிச்
[illegible]ற்றித் திரியுமோர் சாரணன்."

(மணிமேகலை, ௨௪-ம் காதை, ௧௧-௭.)

ஆறுத் தியானங்கள்வழியாக யோகஸமாதியை அடைய முயலுவதன்றி மேற்கூறிய அபிஞ்ஞைகளாகிய அஸாதாரண சக்தியைப் பெறுவது பௌத்தர்களுடைய முக்கியமான கருத்தன்று. வாயில்களின்வழியே புறத்தே செல்லுதலில்லாதபடி சித்தத்தை உள்ளடக்கி ஊறு நுகர்வு பற்றுக்களை அறுத்தலிலெ வதுதான் அவர்களுடைய முக்கியமான நோக்கமென்று தெரிய வருகின்றது.

சீலஸமாதிப் பிரஜ்ஞைகளைப்பெற்று அருகத்துக்களாகிப் பின்பு அதிகபரிபக்குவத்தையடைந்து போதிஸத்துவர்களுடைய நிலைமையைப்பெற்றவர்கள் புத்தபதவியை அடைவதற்கு வேண்டியவைகளான தசபாரமிதைகள் பௌத்தநூல்களில் விளக்கிச் சொல்லப்பட்டுள்ளன.

தசபாரமிதைகளாவன:—தானம், சீலம், க்ஷமை, வீரியம், தியானம்,. பிரஜ்ஞை, உபாயம், தயை, பலம், ஞானமென்னும் பத்துமாம்; இதனை,

"தானஞ்சீல மேபொறை தக்கதாய வீரியம்
ஊனமில்தி யானமே யுணர்ச்சியோ பொயமும்
மானமில் லருளினை வைத்தலே வலிமையும்
ஞானமீரைம் பாரமிதை நாடுங்கா லிவைகளும்"

என்றும் நீலகேசி, மொக்கலவாதச்சருக்கச் செய்யுளாலுணர்க. இப்பெயர் பாரமெனவும் வழங்கும்.

"இன்பஞ்சார் பெரும்பார மிரைந்து முடனிறைந்து
நன்கன நிலைபெற்ற நாதன்" எனவும்,

"தானமே முதலாகத் தசபார நிறைத்தருளி
ஊனமொன் றில்லாமை யொழிவின்றி யியற்றினையே"

எனவும் வருதல் காண்க. இப்பத்தும் உயிருறுப்புப்பொருள் சேர்ச்சி வகையால் முப்பதாமென்பர்;

"அருளெறியாற் பாரமிதை யாறைந்து முடனடக்கிப்
பொருள்முழுதும் போதிமுன் னுணர்ந்த முனிவரன்றன்
அருள்மொழியா னல்வாய்மை யறிந்தவரே பிறப்பறுப்பார்
மருளெறியாற் பிறருறு மயக்கறு மாறுளரோ."

([illegible])

பாரமிதை யென்பதற்குக் கரையையடைந்ததென்பது பொருள். ஈண்டுக்கூறிய தானமுதலிய பத்தும் நிரம்பப்பெற்றமையின், புத்தரைத் தசபலரென்று வழங்குவர். இப்பத்தினுள், தானபாரமிதையை விளங்கக்கூறித் தானபாரமிதை யென்று பெயர்பெற்றுள்ள ஒரு வடநூல் இருப்பதாகத் தெரிகின்றது; இது ஸ்ரீஹர்ஷகவி செய்த ஸம்ஸ்கிருத நைஷதம், ரு-ஆம் ஸர்க்கத்துள்ள கக-ஆவது சுலோகத்தாலும் அதற்கு ஸ்ரீ மல்லிநாதஸூரி செய்த வியாக்யானத்தாலுமுணரப்படும்.

புத்ததர்மமாகிய நான்குவாய்மைகள் இதுவரையிற் சுருக்கமாகச் சொல்லப்பட்டன; இங்கே சீலஸமாதிப் பிரஞ்ஞைகளைப்பற்றிச் சொல்லிய விவரங்களெல்லாம், துறவறத்தை மேற்கொண்ட பிக்ஷுக்கள் மட்டுமே கைக்கொண்டு அநுஷ்டிக்க வேண்டியவைகளாகவுள்ளன; இல்லறநெறியைப்பூண்ட உபாஸகர்களுக்கும் உபாஸிகைகளுக்கும் பஞ்சசீலத்தையாவது அஷ்டசீலத்தையாவது கைக்கொண்டு நடப்பது கடமையாகும். வேறுசீலங்களும் தியானஸமாதி முதலியவைகளும் அவர்களுக்கு உரியனவாகச் சொல்லப்படவில்லை. மேற்கூறிய அஷ்டசீலங்களில் விலக்கப்பட்டவற்றைப் பத்துவகைத் தீவினைகளென்று சொல்லுவதுண்டு; அவைகள் தசபாப மென்றுங் கூறப்படும்;

"தீவினை யென்பதி யாதென வினவின்
ஆய்தொடி நல்லா யாங்கது கேளாய்
கொலையே களவே காமத் தீவிழை
வுலையா வுடம்பிற் றோன்றுவ மூன்றும்
பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்லெனச் சொல்லிற் றோன்றுவ நான்கும்
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென்
றுள்ளந் தன்னி னுருப்பன மூன்றுமெனப்
பத்து வகையால்"

(மணிமேகலை, உச-ஆம் காதை, கஉ௩-௩௧; ௩0-ஆம் காதை, கூச-எஉ.)

இந்தப் பத்துவகைப் பாவங்களையும் பௌத்தரில் எவ்வறத்தோரும் ஒருபொழுதும் செய்யலாகாதென்பது விதி.

உபாஸகரும் உபாஸிகைகளுமாகிய இல்லறத்தார், ஸங்கத்தில் விநயபிடகம் படிக்கப்படும்பொழுது அங்கேபோய் அதைக் கேட்க வேண்டுமென்றும் அஷ்டமி பூர்ணிமை அமாவாஸ்யை

ஆகிய இந்தத் திதிகளிற் பட்டினியாயிருத்தல் வேண்டுமென்றும், பௌத்தஸந்யாஸிகள் வெளியே ஸஞ்சரிக்கக்கூடாத காலமாகிய *வருஷாகாலத்திலும் விதித்தவரையில் உபவாஸம் இருக்க வேண்டுமென்றும் உபவாஸமிருந்ததினத்தின் மறுநாட்காலையில் இயன்றவளவு முதலில் பிக்ஷுக்களை யுண்பித்து அப்பால் பாரணஞ்செய்யவேண்டுமென்றும் பௌத்தநூல்கள் கூறும். இன்னும் இல்லறத்தார்க்குரிய நியமங்கள், ஸிருகால வாதசூத்திரமென்கிற நூலிற் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன :

க.—தாய்தந்தையர்க்கும் மக்களுக்குமுரிய ஒழுக்கங்கள் :

தாய்தந்தையர்

(க) மக்களைத் தீச்செய்கைகளிலிருந்து விலக்கவேண்டும் ;

(உ) நற்செய்கைகளை அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும் ;

(ங) அவர்களுக்குக் கல்வி கற்பிக்கவேண்டும் ;

(ச) அவர்களுக்குத் தக்க பதிபத்தினிகளைத் தேடிக்கொடுக்க வேண்டும் ;

(ரு) உரிய தாயபாகத்தை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்;

மக்கள்

(க) தங்களைப்பாதுகாத்த தாய்தந்தைகளைத் தாங்கள் பாதுகாப்பதாகவும்,

(உ) குடும்பஸம்பந்தமாகச் செய்யவேண்டிய கடமைகளையெல்லாஞ் செய்வதாகவும்,

(ங) குடும்பத்தின் ஸொத்தைப் பாதுகாப்பதாகவும்,

(ச) குடும்பப்பொருளைப் பெறுவதற்குத் தக்கவர்களாகத் தங்களைச் செய்துகொள்ளுவதாகவும்,

(ரு) தாய்தந்தையர் மரணத்தை அடைந்தபின்பு அவர்களை ஞாபகத்தில்வைத்துப் பாராட்டி வருவதாகவும் நிச்சயித்துத் தங்கள் கடமைகளைச்செய்யவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

---

*இந்தக்காலம் பௌத்தர்களாற் பிராதிஹாரகபக்ஷமென்று சொல்லப்படும்.

உ.—குரு சிஷ்யர்களுக்குரிய ஒழுக்கங்கள்:

ஆசாரியன் சிஷ்யர்களை

(க) நல்வழியிற் பயிற்றுதலாலும்,

(உ) ஞானத்தைக் கைவிடாமலிருக்கும்படி உபதேசித்தலாலும்,

(ங) சாஸ்திரங்களிலும் காவியங்களிலும் ஞானத்தை உண்டாக்குதலாலும்,

(ச) அவர்களைப்பற்றி அவர்களுடைய மித்திரர்களுக்கும் ஸகபாடிகளுக்கும் தன்னுடைய நல்ல அபிப்பிராயத்தை வெளியிடுதலாலும்,

(ரு) அபாயத்திலிருந்து பாதுகாப்பதனாலும் அபிமானிக்க வேண்டியவனாக விருக்கிறான்;

சிஷ்யன் ஆசாரியர்களை

(க) அவர்களுடைய எதிரில் நிற்றலாலும்,

(உ) அவர்களுக்குப் பணிவிடை செய்தலாலும்,

(ங) வணக்கத்தோடிருத்தலாலும்,

(ச) அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்தலாலும்,

(ரு) அவர்களுடைய உபதேசத்தைக் கடைப்பிடித்தலாலும் கௌரவப்படுத்தவேண்டும்.

ங.—பதிபத்தினிகளுக்குரிய ஒழுக்கங்கள்:

பதியானவன் பத்தினியை,

(க) கௌரவத்தோடு நடத்துவதனாலும்,

(உ) அன்புடன் நடத்துவதனாலும்,

(ங) அவளைவிட்டு அதிசாரஞ்செய்யாதிருத்தலினாலும்,

(ச) பிறர் கௌரவிக்கும்படி செய்தலினாலும்,

(ரு) அவளுக்குத் தகுந்த ஆபரணங்களையும் உடைகளையும் அளிப்பதாலும் பாராட்டிக்கொண்டு இருக்கவேண்டியவனாக இருக்கிறான்;

பத்தினியானவள் பதியினிடத்தில் தன் அன்பையும் கௌரவத்தையும் செலுத்துவாளானால்,

(க) வீட்டுவேலைகளைத் திறமையுடன் ஒழுங்காக நடத்திக் கொண்டுபோகவேண்டும்;

(உ) சுற்றங்களுக்கும் நட்பினர்க்கும் நன்றாக விருந்தளிக்க வேண்டும்;

(ங) கற்புடையவளாக இருத்தல்வேண்டும்;

(ச) வீட்டுக்குரியசெலவை மிதமாகச் செய்யவேண்டும்;

(ரு) தான் செய்யும் வேலைகளிலெல்லாம் மறவாமையையும் திறமையையும் காட்டவேண்டும்.

ச.—நட்பினர் ஒருவரிடத்தில் ஒருவர் நடந்துகொள்ளவேண்டிய ஒழுக்கங்கள்:

சீலவானானமனிதன் தன்மித்திரர்களுக்கு

(க) நன்கொடை அளிப்பதனாலும்,

(உ) அவர்களைக் கௌரவித்துப் பேசுவதனாலும்,

(ங) அவர்களுடைய நன்மையை அபிவிருத்திசெய்வதனாலும்,

(ச) அவர்களைத் தனக்குச் சமானமாக நடத்துவதனாலும்,

(ரு) தன்னுடைய பாக்கியத்தை அவர்களோடு பகிர்ந்து கொள்ளுவதனாலும் உபசரித்தற்குரியவனாக இருக்கிறான் ;

அவர்கள்

(க) அவன் அஜாக்கிரதையாக இருக்கும்பொழுது அவனைப் பாதுகாப்பதனாலும்,

(உ) அவன் பொருளைப் பாதுகாப்பதனாலும்,

(ங) அவனுக்கு அபாயம் நேரிட்டபொழுது அபயமளித்துப் பாதுகாப்பதனாலும்,

(ச) அவனுக்குக் கஷ்டம் நேரிடும்பொழுது அவனைக் கைவிடாமையினாலும்;

(ரு) அவனுடைய குடும்பத்தாரிடத்தில் அன்பைச்செலுத்துதலினாலும் அவனிடத்தில் ,தங்களுக்குள்ள நட்பைப்பாராட்டவேண்டும்.

ரு.—யஜமானனுக்கும் வேலைக்காரர்களுக்குமுரிய ஒழுக்கங்கள்:

யஜமானன் வேலைக்காரர்களுடைய நன்மையை

(க) அவரவர்களுடைய சக்திக்கு இயன்றதொழில்களை விதிப்பதனாலும்,

(உ) அவரவர்களுக்குத் தக்க உணவையும் கூலியையும் கொடுப்பதனாலும்,

(ங) அவர்கள் வியாதியை அடைவாராயின் மருந்து உணவு முதலியனகொடுத்து உபசரிப்பதனாலும்,

(ச) (இருந்தால்) சுவையுள்ள நல்ல உணவுகளைக் கொடுத்து அவர்களை உண்பித்தலினாலும்,

(ரு) விடுமுறைநாட்களை அவர்களுக்கு அப்போதைக்கப் போது கொடுத்தலினாலும் அபிவிருத்திசெய்ய வேண்டியவனாக இருக்கிறான்;

அவர்கள்

(க) காலம்பெற எழுந்திருப்பதனாலும்,

(உ) யஜமானன் தூங்கினபின் தாம் தூங்குதற்குச் செல்லுதலாலும்,

(ங) கொடுத்ததைப் பெற்றுக்கொண்டு திருப்தியடைவதனாலும்,

(ச) யாதொரு மனக்குறைவுமின்றி ஊக்கத்துடன் வேலை செய்தலினாலும்,

(ரு) அவனிடத்தும் அவனைப்பற்றிப் பிறரிடத்தும் கௌரவமாக வசனித்தலினாலும் தங்களுக்கு யஜமானனிடத்துள்ள பக்தியைக் காட்டவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

சா.—உபாஸகர்களுக்கும் பிக்ஷுக்களுக்கும் உரிய ஒழுக்கங்கள்:

சீலவானான உபாஸகன் பிக்ஷுக்களை

(க) வாக்கினால் அன்பைச் செலுத்துதலாலும்,

(உ) காயத்தினால் அன்பைச் செலுத்துதலாலும்,

(௩) எண்ணத்தினுல் அன்பைச் செலுத்துதலாலும்,

(௪) கண்டவுடன் நல்வரவுகூறி அழைத்து ஏற்றுக்கொள் வதனுலும்,

(௫) அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுப்பதனுலும் உபசரிக்கவேண்டியவனுக இருக்கிருன்;

அவர்கள் உபாஸகனிடத்தில் தங்களுக்குள்ள பிரீதியை

(க) அதர்மஞ் செய்யாதபடிக்கும் தர்மம் செய்யும்படிக்கும் உபதேசிப்பதனுலும்,

(உ) அன்பைச் செலுத்துவதனுலும்,

(௩) மதச்சார்புள்ள நூற்பொருள்களை உபதேசிப்பதனு லும்,

(௪) அவனுடைய ஸந்தேகங்களைத் தீர்த்தலினுலும்,

(௫) அவனுக்கு வீட்டுநெறியை அறிவித்தலாலும் பாராட்டிக் கொண்டு வரவேண்டும்.

அந்த ஸ்ருகாலவாதசூத்திரத்தில், மேற் கூறியவண்ணம் நடப் பவர்கள் யாவரும் இந்த ஆறுவிதமான இயைபுகளிலும் சாந்தி யோடும் சுகத்தோடும் வாழ்வார்களென்றும், இல்லறவொழுக் கங்களை நன்ருகச்செய்து பெருமை பெற்று வருவார்களென்றும், மரியாதை கொடை அன்பு தன்னலம்பாராட்டாமை ஆகிய இவை யெல்லாம் உலகவாழ்வாகிய ஓடுந்தேருக்கு அச்சாணியைப்போல் வனவென்றும் சொல்லி இவ்விஷயம் முடிக்கப்பட்டிருக்கிறது.

"தோடா ரிலங்கு மலர்கோதி வண்டு வரிபாடு நீடு துணர்சேர்
வாடாத போதி நெறிநீழன் மேய வரதன் பயந்த வறநூல்
கோடாத சீல விதமேவி வாய்மை குணனுக நாளு முயல்வார்
வீடாத வின்ப நெறிசேர்வர் துன்ப வினைசேர்த னுளு மிலரே."

(வீர. யாப்பு. ௩-ஆம் கலித்துறை யுதாரணம்.)

பௌத்த சங்கம்.

பௌத்த ஸந்யாஸிகளுடைய கூட்டத்துக்குப் பௌத்த சங்கமென்று பெயர். புத்தர், தர்மம், சங்கம் என்று சொல்லுகிற மும்மணிகளுள் மூன்றாவது இது. ஞானோதயமான பின்பு கௌதமபுத்தர் காசிக்குப்போய், முன்பு தம்மோடு தவஞ் செய்து கொண்டிருந்தவர்களான ஐந்து ஸந்யாஸிகளுக்கும் தமக்குத் தெரியவந்த நான்கு சத்தியங்களையும் உபதேசித்து அவர்களைத் தம்முடைய சிஷ்யர்களாக அங்கீகரித்த காலந்தான் இந்தச் சங்கத்துக்கு உற்பத்திகாலம். பின்பு, கௌதமபுத்த ருடைய வாழ்நாளிலேயே இன்னும் எத்தனையோ பலர் அவருக் குச் சிஷ்யர்களாகித் துறவுபூண்டு இந்தச் சங்கத்தைச் சேர்ந்தார் கள். பிராமண க்ஷத்திரிய வருணத்தவர்களிலும் பலர் கௌதம புத்தருடைய உபதேசத்தினால் வைராக்கிய மடைந்து துறவு பூண்டதாகவும் தெரியவருகின்றது. கௌதம புத்தர் ஓரிடத்தி லிருந்து வேறிடஞ்சென்று தருமோபதேசஞ் செய்து கொண்டு வந்த நாடுகளிலெல்லாம் பெண்பாலார், "உயர்ந்த குலத்திற் பிறந்த பிள்ளைகளை யெல்லாம் இவன் துறவிகளாக்கிக்கொண்டு போய்விடவந்தான்" எனப் பாடிக்கொண்டிருந்தார்களென்று தெரிதலால் கௌதமபுத்தருக்குச் சிஷ்யர்களைச் சேர்த்துக்கொள் ளுகின்ற ஆற்றல் மிகவும் இருந்ததாக நினைக்க இடமுண்டு. இந்த ஆற்றலுக்கு அவருடைய மிகுந்தகருணையும் பிரசித்தமான வைராக் கியமுமே காரணங்கள். அவர் தமது தர்மத்தை உபதேசித்து விட்டுச் சிஷ்யர்களுடைய கூட்டமாகிய சங்கத்தை நியமியா திருந்தால், அவருடைய காலத்துக்குப் பின்பு பௌத்தமதம் நிலைபெற்றிராது. அவருடைய தர்மம் உலகத்தில் நிலை பெற்றதற்கு முக்கியகாரணம் சங்கந்தான். பௌத்த பிக்ஷுக்களுக்குரியனவாகிய நியமங்களுக்கும் ஹிந்துக்களுடைய ஸ்மிருதிகளில் சொல்லியிருக்கும் ஸந்யாஸ நியமங்களுக் கும் பலவிஷயங்களில் ஒற்றுமையிருத்தலால், புத்தர் சங்க முண்டாக்கியதைப்பற்றிப் புதுமை ஒன்றுமில்லையென்பர்; அஃ தாவது, முன்பு இருந்த ஸந்யாஸ தருமங்களிற் பெரும்

பானவற்றையே புத்தர் தமது மதத்துக்கும் உரியனவாக உப யோகித்துக் கொண்டாரென்றபடி. பிருஹதாரணியகோபநிஷத்தில், "பூர்வகாலத்து ஞானிகள் சந்ததியில் ஆசையுள்ளவர்களல்லர்; 'ஆத்மாவை வீடாகப்பெற்ற எங்களுக்குச் சந்ததியினால் என்ன பயன்?' என்று. அவர்கள் புத்ரேஷணை வித்தேஷணை லோகேஷணைகளைவிட்டுத் துறந்து பிக்ஷையெடுத்துப் பிழைக்கிறார்கள்" என்று சொல்லியிருக்கிறது; ஆகையால், பண்டைக் காலத்திலேயே ஸந்யாஸ ஸம்பிரதாயம் பிரபலமாக இருந்ததென்று தெரியவருகிறது. கௌதமபுத்தரும் அவருக்குச் சிறிது காலத்திற்கு முன்பிருந்த ஜிநனென்கின்ற மஹா வீரனும் தங்கள் மதத்தைப் பரவச் செய்துகொண்டு வந்தகாலத்தில், அநேகவிதமான சித்தாந்தங்களைச் சார்ந்தவர்களாகிய பல ஸந்யாஸிகளின் கூட்டங்கள் ஆரியாவர்த்தத்தில் அங்கங்கேயிருந்தனவென்று பாளீபாஷையிலுள்ள பௌத்த நூல்கள் தெரிவிக்கின்றன. இப்படியிருந்த ஸந்யாஸிகளைக் கூட்டங் கூட்டமாகவே புத்தர் தமக்குச் சிஷ்யர்களாக்கிக் கொண்டு தம்முடைய சங்கத்தை வளரவைத்தாரென்றும் பௌத்த நூல்களால் விளங்குகிறது. கிருஹஸ்தாச்சிரமத்திலிருந்து வானப் பிரஸ்தாச்சிரமத்தை யடைந்து காட்டில் கிருஹஸ்த தரும நியமங்களுக்கு உட்படாமல் ஸ்வாதந்திரியத்தைப் பெற்றுத் தத்துவங்களை ஆராய்ந்து வந்த மகான்களுடைய ஞானத்துக்குப் புலப்பட்ட உண்மைகளே வேதத்தின் ஆரணியபாகத்திலுள்ள உபநிஷத்துக்களில் அடங்கி யிருக்கின்றன. இவ்வாறு தத்துவத்தைத் தேடிக் கொண்டு வந்த காலத்தில் அநேகர்கள் அநேக விதமான மதங்களைச் சார்ந்து வந்தார்களென்பது பலருடைய கருத்து.

ஓல்டன்பர்க் (Oldenberg) என்பவர் புத்தர் விஷயமாக எழுதிய நூலில், பண்டைக் காலத்தின் நிலைமையைப்பற்றிப் பின் வருமாறு சொல்லியிருக்கிறார்: "உறுதியில்லாத பொருள்களைக் கொண்டு மதத்திற்குப் பின் மதத்தை அக்காலத்தில் உண்டாக்கி வந்தார்கள். அவற்றைப்பற்றிக் குறிப்பான சில விஷயங்கள் தெரியவருகின்றனவேயன்றி அதிகமாக ஒன்றும் நமக்குத் தெரியவில்லை. உலகம் எப்பொழுதும் உள்ளதா? அன்றா? ஆத்மா நித்தியமா? அநித்தியமா? ஒரு வழியில் நிலைமையற்றதாயும் வேறொரு வழியில் நிலைமையுள்ளதாயும் தோன்றுகிற தத்து

வத்தை ஒப்பநாடித் துணிவது எவ்வாறு? உலகம் அளவுபட்டதா? அளவுபடாததா? அல்லது, ஒரே காலத்தில் அளவுபட்டதாயும் அளவுபடாததாயுமுள்ளதா? அல்லது, அளவுபட்டதும் அளவுபடாததும் அல்லாததா? என்கிற அநேக விஷயங்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் அக்காலத்தில் நடைபெற்று வந்தன. அப்பொழுது தருக்கநூலைத்தழுவி ஸம்சய பரிசோதனை செய்ய வந்தனவாகிய, 'தோற்றுவனவெல்லாம் உண்மை', 'தோற்றுவனவெல்லாம் உண்மையல்ல' என்று சொல்லுகிற முக்கியப் பிரதிஜ்ஞைகளோடு கூடிய இருவகைக் கொள்கைகள் பிறந்தன. இங்கே, 'தோற்றுவனவெல்லாம் உண்மையல்ல' என்று சொல்லுந் தார்க்கிகனை நோக்கி, 'எல்லாம் உண்மையல்ல என்று சொல்லுகின்ற சித்தாந்தம் உன்னுடைய கொள்கையைப்பற்றியும் இயலுமா? அக்கொள்கையும் உண்மையல்லாததா?' என்று கேட்பார்கள். மறுமையுலகமொன்று உள்ளதென்றும் மரணத்துக்குப் பின்பு ஸ்திதியுண்டென்றும் மனிதனுடைய ஸங்கல்பத்துக்கு நிர்ப்பந்தமொன்றுமில்லையென்றும் நல்வினை தீவினைகளுக்குத் தக்க பயன் கிடைக்குமென்றும் அக்காலத்து மனிதர்கள் வாதஞ் செய்து கொண்டு வந்தார்கள். தீய வழிகளை உபதேசித்துக் கொண்டு வந்தவர்களில் மிகவுங் கொடியவனென்று புத்தரால் நினைக்கப்பட்ட மக்கலிகோஸாலன் என்பவன், நோதனசக்தி (தூண்டும் ஆற்றல்) ஆகிய ஸங்கல்பத்துக்கு ஸ்வாதந்திரியமில்லையென்று சொன்னதாகத் தெரிய வருகிறது. மனிதனுக்குச் சக்தியில்லை; சாமர்த்தியமில்லை; அதிகாரமில்லை; எல்லா வஸ்துக்களும் உயிரோடு கூடிய ஒவ்வொரு ஜந்துவும் ஆகிய இவைகளுக்குச் சக்தி அல்லது சாமர்த்தியம் ஒன்றுமில்லை; விதியினாலும் ஸ்வபாவத்தினாலும் ஒவ்வொன்றும் தன்னுடைய கதியை அடையத் துரத்தப்படுகிறது. ஞானியும் அஜ்ஞானியும் முடிவில் ஒரு நிகராகத் துன்பத்தை அனுபவித் தொழித்து விடுகிறார்கள். உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் நியாயமான தெய்விகச் செங்கோலுக்கு உள்ளடங்கியிருக்கின்றனவென்பது கூட விலக்கப்பட்டிருந்தது. புராணகசிபரென்பவர், 'ஒருவன் கங்கையின் தென்கரையில் படையெடுத்துக்கொண்டு வந்து உயிர்க்கொலையைச்செய்தும் செய்வித்தும் உலகத்தைப் பாழாக்கியும் பாழாக்குவித்தும் தீக்கொளுவியும் கொளுவுவித்தும் தான் குற்

றஞ் செய்ததாகத் தோஷத்தைத் தன்னில் ஆரோபித்துக்கொள்வ தில்லை; குற்றத்துக்குச் சிக்ஷை யாதுமில்லை. மற்றொருவன் கங்கையின் வடகரையிற் சென்று தருமதானம் செய்வதனாலும் செய்விப்பதனாலும் யாகங்களைச் செய்வதனாலும் செய்விப்ப தனாலும் நற்காரியமொன்றும் செய்தவனாகமாட்டான். நற் காரியத்துக்கு நற்பயன் யாதுமில்லை' என்று உபதேசித்துக் கொண்டு வந்தாரென்பதும், 'ஞானியும் அஜ்ஞானியும் உடல் விழுந்தவுடனே நாசத்தை யடைந்து சூனியமாய்விடுகிறார்கள்; இறந்தபின்பு அவர்களில்லை' என்கிற கொள்கையும் அக்காலத் தில் இருந்தனவென்பதும் சொல்லப்பட்டுள்ளன."

இங்ஙனம் பலவகைச் சித்தாந்திகள் பலவாறு பலவழிகளில் புத்தியைச் செலுத்தித் தத்துவத்தைத் தேடிப்பிடித்து உண்மை யான தருமத்தை அநேகர்க்கு உபதேசித்து வரவேண்டுமென்கிற ஆசையோடுகூடிஇல்வாழ்வைத்துறந்து கூட்டங்கூட்டமாகஇருந்து கொண்டு தருமவிசாரஞ் செய்துவந்தகாலத்தில் உண்டான புத்த மதம் தனக்கோர் அங்கமாகச் சங்கத்தை உண்டாக்கிக்கொண் டது ஒருவிதத்திலும் புதியதாகவாவது வியப்பாகவாவது நினைத் தற்கு இடமில்லையென்பதில் ஐயமுண்டோ?

'ஹர்மன்ஜாகோபி' என்கிற ஐரோப்பிய வித்வான் ஒருவர் ஜைனசூத்திரங்களைப்பற்றிஎழுதும்பொழுது,'ஜைனமதம் பௌத்த மதத்துக்கு முன்பிருந்ததா? பின்புண்டானதா?' என்று விசாரஞ் செய்து, ஜைனமதம் பௌத்தமதம் என்னும் இரண்டும் முக்கிய மாகப் பிராமண ஸந்யாஸிகளிடத்திலிருந்து உண்டாயினவென்று வெளியிட்டிருக்கிறார். இவ்வாறு தாம் நினைத்தற்கு ஜைன சம்பிர தாயத்திலும் பௌத்த சம்பிரதாயத்திலும் பிராமணர்களுடைய ஸ்மிருதி ஸம்பிரதாயத்திலும் உள்ள ஸந்யாஸதருமங்களை அவர் ஒத்திட்டுப் பார்த்திருக்கிறார். புத்த ஸந்யாஸிகளுக்குரிய * தச சீலங்கள் முன்னமே தருமத்திற் கூறப்பட்டுள்ளன. கொல்லாமை முதலிய ஐந்தும் பௌத்தர்களில் உபாஸகர்களெல்லோரும் அநுஷ்டிக்கவேண்டிய பஞ்சசீலங்களென்று தெரிவிக்கப்பட்டன. இந்த ஐந்தும் ஜைன ஸந்யாஸிகளுக்குரிய ஐந்து சீலங்களுக்குப் பெரும்பாலும் சமானமாகவுள்ளன. ஜைன ஸந்யாஸிகளுக்குரிய சீலங்களாவன: அஹிம்ஸை (கொல்லாமை), ஸூந்ருதம் (மெய்ம்

---

* தசசீலங்களைப் பௌத்ததருமம், ௬௩-ஆம் பக்கத்திற் பார்க்க.

மையாயும் பிரியமாயுமுள்ள சொல்), அஸ்தேயம் (கள்ளாமை), பிரமசரியம் (காமமின்மை), அப்ரதிக்ரஹம் (இரவாமை) என்பவை; 'பிராமணஸந்யாஸிகளுடைய முக்கியமான பஞ்சப் பிரதிஞ்ஞைகள் [விரதம்] : அஹிம்ஸை, ஸூந்ருதம், அபரிக்ரஹம், பிரமசரியம், ஔதாரியம் என்று போதாயன தர்ம சூத்திரம் தெரிவிக்கின்றது. பிராமண ஸந்யாஸிகளுக்கு இன்னும் ஐந்து விரதங்களுண்டு. அவைகளாவன: கோபமின்மை, குருபக்தி, ஆராயாது செய்தலில்லாமை, தூய்மை, ஆஹார சுத்தி என்பவை. 'மாக்ஸ்முல்லர்', 'புகளர்', 'கரன்' முதலிய ஐரோப்பிய வித்வான்களில் அநேகர், ஜைன ஸந்யாஸிகளும் பௌத்த ஸந்யாஸிகளும் பிராமண ஸந்யாஸிகளுடைய வழியை அனுசரித்துத் தங்களுடைய நியமங்களை உண்டாக்கிக்கொண்டார்களென்று சொல்லுகிறார்கள். பிராமணர்களுடைய ஸந்யாஸ நியமங்கள் அவர்களுடைய ஆச்சிரம விபாகங்கள் உண்டான காலத்திலேயே உண்டாயிருக்கவேண்டும். பௌத்த ஸந்யாஸிகளும் ஜைன ஸந்யாஸிகளும் தங்களுடைய மதங்கள் உண்டான ஆதிகாலத்திலே ஆர்யாவர்த்தத்தில் சிற்சில பாகங்களில் சிற்சிலராக விருந்தனரென்று அவர்களுடைய சமயநூல்களிலிருந்து தெரியவருகிறது. அந்தக்காலத்தில் பிராமணசம்பிரதாயத்தை அனுசரித்த ஸந்யாஸிகள் தேசமெங்கும் பரவியிருந்தார்கள். மேலும் பிராமணர்களுக்குரிய ஆச்சிரமதருமங்களை இக்காலத்தில் கௌதமதருமசூத்திரங்களென்று வழங்கிவருகிற சூத்திரங்களால் வெளியிட்ட கௌதமமுனிவர் கௌதம புத்தருடைய காலத்துக்கு முந்தியே இருந்தனரென்பதற்குத் தக்க ஆதாரங்களுள்ளனவென்று ஐரோப்பிய வித்வான்கள் உறுதியாகச்சொல்லுகிறார்கள். பிராமண ஸந்யாஸிகளுடைய நியமங்களில் சிலவற்றைச் சொல்லுவோம்: அவர்கள் தனதானியாதிகளில் ஒன்றையும் தாம் சேர்த்து வைத்துக்கொள்ளலாகாது; ஐம்பொறிகளையும் வென்றவர்களாக இருத்தல்வேண்டும்; மழைக்காலத்தில் இடம்விட்டுச் சஞ்சரிக்கக்கூடாது; அன்னபிக்ஷை வாங்குதற்கு மட்டுமே கிராமங்களினுட் பிரவேசிக்கலாம்; கேட்டவிடத்திலேயே மறுபடியுங் கேளாமல் சாதாரணமாக எல்லோரும் போஜனஞ்செய்தற்குரிய காலமானபின்பு அவர்கள் அன்னத்தைப் பிக்ஷையெடுத்துப் பெற்றுக்கொள்ளவேண்டும். அவர்களுக்கு இன்

சுவையுணவில் ஆசையிருத்தல் கூடாது; வாயின் தொழிலையும் கண்ணின் தொழிலையும் அடக்க வேண்டும்; நக்நனாயில்லாமலிருப்பதற்காகவே வஸ்திரந்தரித்தல் வேண்டும்; ஒரு கிராமத்தில் ஓரிரவிற்கு மேற்படத் தங்குதல் கூடாது; தமக்கு நன்மை செய்தாலும் தீமை செய்தாலும் எல்லாப் பிராணிகள் விஷயத்திலும் அவர்கள் உபேக்ஷையோடு கூடியிருக்க வேண்டும்; அவர்கள் குடுமி வைத்துக்கொண்டாலுங் கொள்ளலாம்; மழித்துக் கொண்டாலும் கொள்ளலாம்; ஸ்வப்ரயோஜனத்துக்காக (அந்தப் பயன்கள் இம்மையனவாயிருந்தாலுஞ் சரி, மறுமையனவாயிருந்தாலுஞ் சரி) ஒன்றுஞ் செய்யலாகாது; தண்டம், கமண்டலம், பிக்ஷாபாத்ரம், நீர் வடிக்கட்டுந் துணியொன்று, கிணற்றிலிருந்து நீரெடுக்குங் கயிறொன்று இவைகளே ஸந்யாஸிகள் தங்களிடத்தில் வைத்திருக்க வேண்டிய பொருள்கள். இப்படிப்பட்ட நியமங்களெல்லாம் ஜைனர்களுக்கும் பௌத்தர்களுக்குமுள்ளன. ஆனால் துறவிக்கு முதன்மையான இலக்கணம் மனத்திலுள்ள அடக்கமும் அவாவின்மையுமேயென்பது எல்லாமதத்தாருங்கொண்ட துணிபு. தர்மபதமென்கிற புத்த நூலில் உத்தம பிக்ஷுவின் இலக்கணமாவது அவனுடைய வேஷத்திலும் உடையிலும் இல்லை யென்றும் வைராக்கியத்திலும் சாந்தியிலும் சுத்தியிலும் உள்ளதென்றும் அநேக விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது: "தன்னுடைய வாக்கை நியமத்துக்குள்ளடக்கிச் செருக்கில்லாமல் விவேகத்தோடே பேசி இம்மை மறுமைகளை விளக்கிக் கொண்டு எவன் வருகிறானோ அவனுடைய உபதேசம் மதுரமாயிருக்கும்; அன்பையே உயிராகவும் புத்த தருமத்தையே ஆனந்தமாகவுமுடைய பிக்ஷுவானவன் சாந்திநிலையை அடைந்து ஸம்ஸ்காரங்களுக்கெல்லாம் முடிவைத்தரும் நிருவாணானந்தத்தைப் பெறுவான்; ஸ்கந்தங்களுடைய உற்பத்தியையும் முடிவையும் அறிந்துகொண்டவுடனே ஞானிகளுக்கு அமிருத ரூபமாயிருக்கிற நிருவாணமென்கிற ஸந்தோஷத்தின் ஆனந்தத்தை அவன் பெறுவான். தயையே அவனுக்கு ஜீவனோபாயமாக இருக்கக் கடவது; நேரான விசுத்தி மார்க்கமே அவனுக்கு ஒழுக்கமாக இருக்கக் கடவது; இப்படி யிருந்தால் பரிபூர்ணானந்தத்தைப் பெற்று அவன் துன்பத்தை நாசமடையச் செய்வான்.' வர்ஷிகையென்கிற செடியானது வாடிப்போன மலர்களைக் கீழே உதிர்ப்பதுபோல, பிக்ஷுக்களே!

நீங்கள் காமத்தையும் தீய எண்ணங்களையும் முற்றும் துறந்து விடுமின்; முற்றுமுணர்ந்தவனான புத்தனால் உபதேசிக்கப்பட்ட தருமத்தை அறிந்து கொண்டவன், வேள்வித்தீயை எப்பொழுதும் அந்தணர் ஆராதித்து வருவதுபோல அதனை ஆராதித்துக் கொண்டு வரக்கடவன்; பிராமணனுக்கு நலிவு செய்யலாகாது; அவனும் தன்னை நலிவு செய்ய வந்தவனை அடித்தற்குப் போகக் கூடாது; பிராமணனை அடிக்கிறவனுக்குக் கேடு உண்டாகும்; தன்னை அடித்தவனை எதிராக அடிக்கிறவனுக்கு இன்னும் அதிகமாகக் கேடு உண்டாகும். பேதையே! மயிரைச் சடையாகத் திரித்து வைத்துக் கொள்வதனால் என்ன பயன்? தோலுடையால் என்ன பயன்? உன்னுடைய துராசைகளெல்லாம் உன் உள்ளத்தில் இருக்கின்றன. நீ வெளியை மாத்திரம் சுத்தம் பண்ணிக் கொள்ளுகிறாய்.” இவ்விதமாக அநேக வகையாய்த் துறவிகளுக்கு மனத்தூய்மையே முக்கிய மென்று பின்னும் அந்நூல் தெரிவிக்கின்றது. இப்படியிருந்தும் பிக்ஷுக்களுக்குரிய சில நியமங்கள் தார்மிக சூத்திர மென்ற பௌத்தநூலிற் பின் வருமாறு புத்தர் சொன்னாரென்று சொல்லப்பட்டிருக்கின்றன: “பிக்ஷுக்களே! கேளுங்கள்; பாவத்தை யொழிக்கும் தருமத்தை நான் உங்களுக்கு உபதேசஞ் செய்கின்றேன்; அதை உள்ளத்தில் உறுதியாக வைத்துக் கொண்டிருங்கள்; நன்மையை அடையத் தேடுகிற ஞானியானவன் சங்கத்தாருக்கு உரிய அடக்க நெறியை (ஹ்ரியா பதம்) க்கைக்கொண்டு ஒழுக வேண்டும். பகலில் அகாலத்தில் கிராமங்களுக்கு அன்ன பிக்ஷைக்காகப் போகக்கூடாது; இராத்திரியிலும் போகக்கூடாது. அகாலத்தில் பிக்ஷையெடுக்கச் செல்வதனால் தீங்கு நேரிடுமென்றறிந்து விவேகிகள் அவ்வாறு செய்வதில்லை. ஐம்புலன்களும் பிராணிகளுக்கெல்லாம் மயக்கத்தை உண்டாக்குகின்றன. அப் புலன்களைப்பற்றி வரும் ஆசையை நீக்கிவிடுங்கள். பிக்ஷுவானவன் தன்னுடைய மத்தியாந்நபோசனத்தை உரியகாலத்தில் பண்ணவேண்டும். அவன் தக்க காலத்தில் தன்னுடைய உணவைப் பெற்றுத் தமியனாக மீண்டு வந்து ஏகாந்தமாகவிருந்து தியானஞ் செய்து கொண்டிருக்க வேண்டும். அவன் தன்னுடைய சித்தத்தைப் பரவ விடக்கூடாது; மனத்தை ஒன்றும் அடக்கிக் கொண்டிருக்க வேண்டும். அவன் உபாசகர்களோடாவது பௌத்த பிக்ஷுக்களோடாவது பேசும்

போது பௌத்ததருமத்தினுடைய பெருமையைப்பற்றிப் பேச வேண்டும். பிறரைப்பற்றிப் பழிமொழியாகவாவது புறங்கூறலாக வாவது பேசலாகாது. பிக்ஷுக்களில் சிலர் வாதஞ் செய்வதற்கு வேண்டிய வல்லமையைப் பெறுதற்கு முயலுகிறார்கள். அவர் களுடைய மனம் சிறுமையுள்ளது. அவர்களை நான் பாராட்டு கிறதில்லை. இப்படிச்செய்பவர்களுக்கு அநேகவழியாகத் தீங் கிற் பற்று உண்டாகும். அவர்களுக்கு வாதத்தில் முயற்சியிருக் கும்பொழுது அவர்கள் உண்மையாகத் தங்கள் மனத்தை நெடுந் தூரஞ்செலுத்திவிடுகிறார்கள். பௌத்தபிக்ஷுவானவன் உணவு படுக்கை ஆஸனம் உடலாடைகளின் தூய்மைக்கு வேண்டிய நீர் இவற்றை யெல்லாம் பெற்றுக்கொள்வதில் புத்தராலிடப்பட்ட கட்டளை யொன்றையும் கடக்கலாகாது. அவன் இவற்றைப் பற்றிப் பரபரப்புள்ளவனாக இருக்கக்கூடாது; தாமரையிலையி லுள்ள தண்ணீரைப்போலப் பற்றில்லாதவனாகவிருக்கவேண்டும்.''

புத்தர் உயிர்வாழ்ந்திருக்குங் காலத்தில் அவரை ஆசிரயித்த சிஷ்யர்களே சங்கத்தின் உற்பத்திக்குக் காரண மென்பது முன்ன ரே சொல்லப்பட்டிருக்கிறது. புத்தருக்கும் அவருடைய சிஷ் யர்களுக்குமிருந்த சம்பந்தம், இந்தத்தேசத்தில் தொன்று தொட் டுப் பிரசித்தமாக ஆரியர்களில் நடை பெற்றுவந்த குருசிஷ்யசம் பந்தத்தை யொத்ததுதான். முதலில் சிஷ்யர்களை அடையும் பொ ழுது, "பிக்ஷுவே! இங்குவா; தருமத்தை உபதேசஞ் செய்கி றேன். பிரமசர்யானுஷ்டானஞ் செய்துகொண்டு துன்பத்தை முடித்துவிடு'' என்று அவர்களுக்குச் சொன்னதாகச் சொல்லி யிருக்கிறது; இதனால், ஹிந்துமதத்தாருடைய தருமசாஸ்திரங்க ளிலுள்ளவாறு பௌத்தர்களும் நான்கு ஆச்சிரமங்களைப் பாராட் டிக்கொண்டு வந்ததாக நினைக்கக்கூடவில்லை; பிரமசர்யாச்சிரமத் திலிருந்து கிருஹஸ்தாச்சிரமத்துக்கும் கிருஹஸ்தாச்சிரமத்தி லிருந்து வானப்பிரஸ்தாச்சிரமத்துக்கும் அதிலிருந்து ஸந்யாஸத் துக்கும் படிப்படியாகச் செல்லுகிற சம்பிரதாயம் பௌத்தர்க ளாலேயே பங்கப்படுத்தப்பட்டதென்பது சிலருடைய கொள்கை. அதனாலும், எல்லாச்சாதியாருக்கும் ஸந்யாஸத்தைப் பெற யோக் கியதை யுண்டென்று ஒத்துக்கொண்டு அவ்வாறு நடத்தி வந்த தனாலும், ஸ்மிருதிசம்பிரதாயத்தை அனுஷ்டிக்கிற வைதிக மார்க் கத்தாருக்கும் பௌத்தர்களுக்கும் அனுகூலம் குறைந்து வந்தே த

ன்று சொல்லுகிறார்கள். மேற்கூறிய வாக்கியத்தில் பிரமசரிய சப்தத்துக்குக் காமமின்றி ஆஹாராதி நியமங்களுக்கு உட்பட்டிருத்தலே பொருளென்று அறிந்துகொள்ள வேண்டியது. ஆரம்பகாலத்தில் இஷ்டமுள்ளவர்களெல்லாரும் சங்கத்தைச் சேரலாமென்ற விதியிருந்தது. வரவரச் சிலநியமங்கள் விதிக்கப்பட்டன: சங்கத்தைச் சேர்தற்கு விருப்பமுள்ளவன் ஒட்டுவியாதியொன்றும் தனக்கில்லையென்றும், க்ஷயரோகம் தனக்கில்லையென்றும், மூர்ச்சாரோகம் தனக்கில்லையென்றும், தான் ஒருவருக்கும் அடிமையல்லவென்றும், தனக்குக் கடனில்லையென்றும், தான் போர்ப்படைச் சேவகனல்லவென்றும், தான் ஸந்யாஸியாவதில் தன் தாய்தந்தையர்களுக்கு உடன்பாடு உண்டென்றும் தெரிவித்தல் வேண்டும். இவைகளெல்லாம் பின்புதான் உண்டான விதிகளாம். ஆரம்பகாலத்தில் ஒருவன் தலையை மொட்டையடித்துக்கொண்டு துவராடையையுடுத்துத் தனியேயிருப்பானாயின் அவனுக்குப் பிக்ஷுத்தன்மை கிடைத்ததாக நினைத்து வந்தார்கள். பின்பு சங்கப்பிரவேசத்துக்கு வேண்டிய நியமங்கள் உண்டாக்கப்பட்டன. சங்கப்பிரவேசத்துக்கு இரண்டு வழி; ஒன்று, இருபது பிராயத்துக்குக் குறைவில்லாதவர்கள் நேராகவே ஸந்யாஸத்தையடைந்து சங்கத்தைச் சேரலாமென்பது; மற்றொன்று, எட்டுமுதல் இருபது இறுதியான பிராயமுள்ளவர்கள் பிற்காலத்தில் ஸந்யாஸத்தை அடைவதற்கு வேண்டிய சாதனங்களைப்பெற முயன்றுகொண்டு சங்கத்தை ஒட்டினவர்களாக விருக்கலாமென்பது. ஸந்யாஸங்கொடுக்கிற முறையில் இரண்டு படிகளுண்டு; அவற்றில், தாழ்ந்த (முதல்)படிக்கு ப்ரவ்ரஜ்யையென்றும், உயர்ந்ததான (இரண்டாம்) படிக்கு உபஸம்பதையென்றும் பெயர். ப்ரவ்ரஜ்யையாவது பழைய நிலையிலிருந்து நீங்குதல். உபஸம்பதையாவது பிக்ஷுக்களின் நிஷ்டையைப்பெற்றுக்கொண்டு சங்கத்தாரில் தானும் ஒருவனாகி அச்சங்கத்தையடைதல். ப்ரவ்ரஜ்யைப்பெற்று உபஸம்பதையைப் பெறாத ஸந்யாஸி வெளியாருக்குச் சங்கத்தைச் சேர்ந்தவனாகக் காணப்பட்டாலும் சங்கத்தில் அவனுக்கு உள்ளபதவி தாழ்ந்ததே. சிலருக்கு ப்ரவ்ரஜ்யாஸம்ஸ்காரமும், உபஸம்பதாஸம்ஸ்காரமும் ஒரேகாலத்தில் நடத்தப்படும். ஆனால், சாதாரணமாக ப்ரவ்ஜ்யாஸ்ம்ஸ்காரத்தைப் பெற்றுக்கொண்ட சிலகாலத்துக்

குப் பின்புதான் உபஸம்பதா ஸம்ஸ்காரத்தைக் கொடுப்பது வழக்கம். ப்ரவ்ரஜ்யையைப்பெற்றுக்கொள்ள வேண்டியவன், சங்கத்தாரெதிரிற் சென்றாவது முதியவனான ஒரு பௌத்தஸந்யாஸியினிடமாவது அந்தஸம்ஸ்காரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்; அந்தஸம்ஸ்காரத்துக்கு அதிகமாகச் செய்யவேண்டியது ஒன்றுமில்லை; அந்த ஸம்ஸ்காரத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டிய மனிதன் துவராடையை உடுத்திக்கொண்டு தலைமுடியையும் முகமுடியையும் சிரைத்துக்கொண்டு தனக்கு ப்ரவ்ரஜ்யையைக்கொடுக்கிற ஸந்யாஸியினிடத்தில், மூன்றுதரம் வணக்கத்துடனும் பக்தியுடனும்,* "புத்தம்சரணம் கச்சாமி", "தர்மம் சரணம்கச்சாமி", "ஸங்கம் சரணம் கச்சாமி" என்று சொல்லவேண்டும்; இதைச் சொன்னபின்பு பௌத்த ஸந்யாஸிகளுக்குரிய தசசீலங்களையும் தான் அநுஷ்டித்துவருவதாகவும் அவன் ஸங்கற்பித்துக்கொள்ள வேண்டும்; பின்பு உபஸம்பதையைப் பெற்றுக்கொள்ளும் பொழுது, அவன் சங்கத்தார்க்குமுன் சென்று பணிந்து தலைமேற்கூப்பிய கையனாய்ச் சங்கத்தைப்பார்த்துப் பின்வருமாறு சொல்லுதல்வேண்டும்: "பூஜ்யர்களே! எனக்கு ஸந்யாஸங் கொடுக்கவேண்டுமென்று சங்கத்தாரை வேண்டிக்கொள்ளுகிறேன். சங்கத்தார் என்னையும் தங்களிலொருவனாகச் செய்துகொள்ளவேண்டுகிறேன்; என்மேல் சங்கத்தார் தயையுள்ளவர்களாக விருக்கும்படி வேண்டுகிறேன். பூஜ்யர்களே! எனக்கு நீங்கள் ஸந்யாஸம் தந்தருளவேண்டுமென்று இப்படியே இரண்டுதரம் மூன்றுதரம் கேட்டுக்கொள்ளுகிறேன். சங்கத்தார் என்னை உயர்த்தித் தங்களில் ஒருவனாகச் செய்துகொள்ளவேண்டும்; என்னிடத்தில் கருணையுள்ளவர்களாயிருக்கவேண்டும்." இப்படி அவன் சொன்னபின்பு சில கேள்விகள்கேட்டு அவனைப் பரிசோதித்து அவனுக்குச் சங்கத்தைச் சேர்தற்குத் தகுதியுண்டென்று சங்கத்தார் தெரிந்துகொள்ளுவார்கள்; அக்கேள்விகளாவன:—(வந்தவனைப் பெயர்கூறியழைத்து) "நான் சொல்வதைச் செவிகொடுத்துக் கேட்கின்றனையா? சத்தியமாகவும் வஞ்சனையில்லாமலும் நீபேசுவதற்கு இதுதான் சமயம். உன்னைப்பற்றியிவை

---

* "முத்திறமணியை மும்மையின் வணங்கிச்
சரணாகியாய்ச் சரண்சென் றடைந்தபின்"

(மணிமேகலை, ௩௦-ம் காதை, [illegible])

கள் எப்படியிருக்கின்றனவோ அவற்றைப்பற்றிக்கேட்கப் போகி றேன்; நீ உள்ளதை உள்ளதென்றே சொல்லவேண்டும். இல்லா ததை இல்லையென்றே சொல்லவேண்டும். உனக்குப் பெருவி யாதி, கண்டமாலை, வெள்ளைக்குஷ்டம், க்ஷயம், மூர்ச்சாரோகம் இவைகளுள் ஒன்றுமில்லையா? நீ வஞ்சனைவேடம் பூண்டிராத உண்மையான மனிதன்தானா? நீ ஆண்மகனா? நீ யாருக்கேனும் அடிமையாக இருக்கின்றனையா? நீ கொடுக்கவேண்டிய கடன் ஒன்றுமில்லையா? நீ இராஜஸேவை செய்பவனா? ஸந்யாஸத்தை அடைவதற்குத் தாய்தந்தையர்களின் கட்டளைபெற்றிருக்கின்ற னையா? உனக்குப் பூர்ணமாக இருபது பிராயமாயிற்றா? உனக்கு வேண்டிய பிக்ஷாபாத்திரமும் காஷாய வஸ்திரங்களும் இருக் கின்றனவா? உன்பெயர் என்ன? உன் ஆசிரியன் பெயர் என்ன?'' (என்று சங்கத்தாரில் ஒருவன் பரிசோதகனாக முன் னின்று கேட்பான்.) இக்கேள்விகளுள் இறுதிக்கேள்வியால், பரவ் ரஜ்யையயடைந்தவன் உபஸம்பதையையடையுமுன் சங்கத் தாருள் ஒருபிக்ஷுவைக் குருவாக அடைந்து அவனிடம் பௌத்த தருமங்களையும் ஆசாரங்களையும் அறியவேண்டுமென்று தெரி கிறது. இந்தக்கேள்விகளைக்கேட்ட பரிசோதகன் இந்தக்கேள்வி களுக்கெல்லாம் நேரானவிடை வந்தவுடனே சங்கத்தாரைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லுவான்:—''பூஜ்யர்களே! சங்கத் தார் நான் சொல்வதைக் கேட்கவேண்டுகிறேன்; (குருசிஷ்யர் களுடையபெயர்களைச்சொல்லி) இன்னாருடைய சிஷ்யனான இங் கேயுள்ள இன்னான் ஸந்யாஸம்பெற்றுக்கொண்டு சங்கத்தைச் சேரவிரும்புகிறான்; இவன் சங்கத்தைச்சேர்வதற்கு விரோத மான தடையொன்றுமில்லை; இவனுக்குப் பிக்ஷாபாத்திரமும் துவராடைகளும் இருக்கின்றன. இவன் இன்னாருடைய சிஷ் யனாக இருந்துகொண்டு தானும் சங்கத்தைச் சேரவேண்டு மென்று வேண்டிக்கொள்ளுகிறான்; இவன் இன்னாருடைய சிஷ்யனாக இருந்துகொண்டு பிக்ஷுவாய்ச் சங்கத்தைச் சேர லாமென்று சங்கத்தார் கட்டளையிடக் கருதுகிறார்கள். இச்சங் கத்திலுள்ள பெரியோர்களில், இன்னாருடைய சிஷ்யனாக இவன் இருந்துகொண்டு சங்கத்தைச் சேரலாமென்று எண்ணங் கொண்டவர்கள் மௌனமாக இருக்கவேண்டும்; அவ்வாறு எண்ணங்கொள்ளாதவர்கள் தங்கள் கருத்தை வெளியிடவேண்

டும்." இவ்வாறு மூன்றுதரம் சொன்னபின்பு ஒருவரும் பேசாமலிருந்தால், அந்தப் பரிசோதகன் சபைக்குத் தலைவரான ஸ்தவிர [முதியோ]ரைப்பார்த்து வணங்கி (குருசிஷ்யர்களுடைய இயற்பெயர்சொல்லி), "இவன் இன்னாருடைய சிஷ்யனாயிருந்துகொண்டு சங்கத்தைச் சேர்தற்கு நியமனம் பெற்றுக்கொண்டான். சங்கத்தாரெல்லாரும் இதற்கு உடன்பட்டவர்கள். அதனாலேதான் எல்லோரும் மௌனமாயிருக்கிறார்களென்று நான் எண்ணுகிறேன்" என்று சொன்னபின்பு, அந்தச்சிஷ்யன் சங்கத்தில் ஒருவனாய்விடுகிறான். பிச்சையெடுத்துப் பெற்றுக் கொண்ட அன்னந்தான் அவனுக்குத் தகுதியான அன்னமென்றும், பிறர்விட்டெறிந்த கந்தைகளைச் சேர்த்துத் தைத்துக்கொண்ட ஆடைதான் அவனுக்குத் தக்க உடையென்றும், காட்டிலுள்ள மரத்தின் அடிதான் அவனுக்கு இருப்பிடமென்றும், கோமூத்திரந்தான் அவனுக்குத் தக்க மருந்தென்றும், உபாஸகர்கள் நல்ல ஆடை உணவு இருப்பிடம் மருந்து ஆகிய இவற்றைக் கொடுப்பார்களாயின் அங்கீகரிக்கலாமாயினும் அவற்றை யெல்லாம் மேற் கூறிய விதமாகவே அவன் பெற்றுக்கொள்வது உத்தமமென்றுங் கூறுவர். பின்னும் காமமின்மை, கள்ளாமை, கொல்லாமை யென்னும் விரதங்களிலிருந்து தவிர்ந்தாலும், யோகத்தாற் கிடைக்கும் இருத்திசக்திகள் தனக்கிருப்பனவாகப் பெருமை பாராட்டினாலும் சங்கத்திலிருந்து விலக்கி விடுவதற்கு இடமுண்டாமென்றும் சொல்லுவார்கள். இவ்வாறு சங்கத்தைச் சேர்ந்த ஒருவன் தன்னுடைய ஆசிரியனோடு கூடவேயிருந்து தருமத்தையும் சீலத்தையும் அவன்பால் அறிந்து கொண்டு தந்தையினிடத்தில் மைந்தன் இருக்கும் வண்ணம் நடந்துகொள்ளவேண்டும். இங்ஙனம் துறவியானவனுக்கு அந்த நிலைக்குரிய நியமங்களை நடத்தமுடியாவிட்டால் அவன் அதிலிருந்து இல்லறநிலைக்கு வந்துவிடலாம்.

பிக்ஷுக்களுக்குரிய ஆஹாரநியமங்கள்:— சூரியோதயமானபின்பு * மத்தியானத்துக்குள்ளாகவே அன்னரூபமான ஆஹாரத்தை உட்கொள்ளலாம். இந்த ஆஹாரத்தை பி

* "[illegible] நார்சீ ராடை மெய்போர்த் [illegible] [illegible] பெயுரைக்கும், உண்டாக்க [illegible] [illegible]" [illegible]

வீடாகப்போய்ப் பிச்சையெடுத்துத் தொகுக்கவேண்டும். வீட்டு வாயிலிற்போய் மௌனமாய்ப் பிக்ஷாபாத்திரத்தோடு * சும்மா நிற்கவேண்டும். கொடுத்தாற் பெற்றுக்கொள்ளவேண்டும்; கொடாவிட்டால் அப்பாற் போய்விடவேண்டும். இன்னார்வீட்டுக்குப் போகவேண்டுமென்று தெரிந்தெடுத்து உத்தேசத்தோடு போகக்கூடாது. தனக்கு ஒருவேளைக்கு வேண்டியவளவான உணவுகிடைத்த பின்பு பிக்ஷைவாங்கக்கூடாது. பிக்ஷையெடுத்த ஆஹாரத்தை† உண்பதற்கு முன் அசுபபாவனை செய்துகொண்டிருந்து, பின்பு தான் இறவாமலிருப்பதற்கு வேண்டுமளவே உண்ணவேண்டும். செல்வவான்களான உபாஸகர்கள் தாமாகவே பிக்ஷைக்கு அழைத்தால் போய் உண்ணலாம்; உண்ணலாகாதென்கிற நிர்ப்பந்தமில்லை; அப்பொழுது கூடப் பகலில் ஒருவேளை உணவுக்கே போகலாம். உபாஸகர்கள் பெரும்பாலும் பூர்ணிமையில் அழைப்பதுவழக்கம். தாம் இருக்கிற இடத்துக்கு உபாஸகர் யாரேனும் தாமாக வந்து உணவளித்தால் அதை உண்ணுகிற வழக்கமும் உண்டு. சில பிக்ஷுக்கள் ஆஹாரவிஷயத்தில் சில கடுமையான நியமங்களைக்கூட அனுஷ்டிப்பதுண்டு. ஊனுணவை உண்பதில்லையென்றும், பிக்ஷையெடுத்துப் பெற்றுக்கொண்டதையன்றி வேறொன்றையும் உண்பதில்லையென்றும், ‡ பிக்ஷாபாத்திரத்திற்கிடைத்ததை எறிகிறதில்லை

---

* "மனையகம் புகுந்து மணிமேகலைதான், புனையா வோவியம் போல நிற்றலும்" என்றதனால், பிக்ஷையிரத்தற்குச் சென்ற பிக்ஷுணிகளும் மௌனமாய்ச் சும்மா நிற்கவேண்டுமென்று தெரிகிறது; மணிமேகலை, ௧௬-ஆம் காதை, ௧௩௦ - ௩௧.

† நீலகேசி, மொக்கலவாதச்சருக்கம், ௫௨-ஆம் பாட்டுரை:—"தலை சிரைத்தலே, புருவஞ்சிரைத்தலே, அத்யுஷ்ணமும் அதிபாரமும் அதிதுர்க்கந்தியுமாகிய சீவரம்போர்த்தலே, ஸர்வமும் அசுசியென்று பாவித்துவிடலே, காமஸந்தாபமே, பொழுதுசெகுத்துண்டலே என்றிவை முதலாயின" என்பதனாலும் பௌத்தபிக்ஷுக்கள் உண்பதற்குமுன்பு அசுபபாவனை பண்ணவேண்டுமென்று தெரிகின்றது.

‡ "கொள்ளு மாறுந்தங் கோரகை யுட்கஞ்சி, மொள்ளு மாறு முதுகு நெளித்துண்டு" (நீலகேசி, அருக்கசந்திரவாதச்சருக்கம், ௬-ஆம் பாட்டு) எனவும், "வழிக்கு மாறுந்த மண்டையி லுண்டு" (நீலகேசி, அருக்கசந்திரவாதச்சருக்கம், ௭-ஆம் பாட்டு) எனவும் வருவனவற்றால் பௌத்தபிக்ஷுக்களுடைய பிக்ஷாபாத்திரம், கோரகையென்றும் மண்டையென்றும் கூறப்படுமென்றுணர்க.

யென்றும் இப்படிச் சில நியமங்கள் அவர்கள் வைத்துக்கொண் டிருந்தார்களென்று தெரிகிறது. பிக்ஷைக்குப் போகும்பொழுது ஊரிலுள்ளவர்கள் உண்டுவிட்ட செய்தியை இயன்றவரையில் தெரிந்துகொண்டு பின்பே போகவேண்டும்; தமக்கு உணவைக் கொடுத்துவிட்டு உபாஸகர் பட்டினியிருக்கும்படி முன்பு செல்ல லாகாது.

பிக்ஷாபாத்திரம், * மூன்று வஸ்திரம், இடையிற் கட்டுங் கச்சை, கந்தைகளைத் தைத்தற்குவேண்டிய ஊசி, க்ஷௌரக்கத்தி, நீர் வடிக்கட்டுகிற துணி என்னும் † எட்டுமே பிக்ஷுக்களுக் குரியவை; இவற்றையன்றித் தமதென்று வேறொன்றையும் வைத் திருத்தல் கூடாது. அப்படி ஏதாவதொரு பொருளை வைத்துக் கொண்டிருந்தால், அது நிருவாணமடைவதற்குப் பெருந்தடை யாகுமென்பது அவர்கள் கருத்து. பக்ஷிகள் தாம் பறந்து செல்லுமிடங்களுக்குச் சிறைகளையன்றி வேறொன்றையும் எப்படி உடன்கொண்டு செல்வதில்லையோ, அப்படியே பிக்ஷுக்கள் காஷா யத்தையன்றி வேறொன்றையும் கொண்டு செல்லலாகாதென்று பௌத்த நூல்கள் தெரிவிக்கின்றன. பணத்தை அவர்கள் தொட வுங்கூடாதென்பது விதி.

* மூன்றுவஸ்திரங்கள் : அந்தரவாஸகம், ஸங்காடி, உத்தராசங்க மென்பன ; "மருதின் வாழ்பகை யானவிம் மாந்தர்" (நீலகேசி, குண் டலகேசி வாதச்சருக்கம், ௬௬ - ஆம் பாட்டு) எனவும், "புடைவை கொண்டுகிழித்து மகதநாட்டுச் சதிரவரைக் கண்ணுறுபோலத் துன்னஞ் செய்து மருதந்துவர் தோய்த்துக்கொட்டி இவ்வாறு பகுக்லேசத்தாற் போர்க்கின்றது மோக்ஷார்த்தம்" (நீலகேசி, மொக்கலவாதச்சருக்கம், ௬-ஆம் பாட்டுரை) எனவும், "துவராடைகண்மூடியசேடன்" (நீலகேசி, புத்தவாதச்சருக்கம், ௨௧ - ஆம் பாட்டு) எனவும், "நிலம்பொய் நீர்பொய் நெடுநகர் தாமும்பொய், கலம்பொய் காற்றொடு தீயும்பொய் காடும் பொய், குலம்பொய் பேயெனக் கூறுஞ்செங் கூறையாய்" (நீலகேசி, புத்தவாதச் சருக்கம், ௭௩ - ஆம் பாட்டு) எனவும் வருவனவற்றால், பௌத்தபிக்ஷுக்களின் ஆடைகளின் இலக்கணமும் அவை துவராடை, செங்கூறை யென்று கூறப்படுதலும் அறிக.

† கிழிக்கத்தி, கத்திரிகை, சுண்ணம்புச்செப்பு, வெற்றிலைப்பெட்டி, பாக்குப்பை, பல்லுத்துடைக்கப் பாளை முதலியனவும், தலையைமழித்தற் குரிய கத்தி, தீட்டுக்கல், குடை, செருப்பு, மண்டை, கெண்டிமுதலியன வும் பிக்ஷுக்கள் கைக்கொள்ளுதற்குரியனவென்பர் நீலகேசி உரை யாசிரியர் ; அருக்கசந்திரவாதச்சருக்கம், ௧௧.

உபாஸகர்களில் யாராவது பிக்ஷுக்களுக்குப் பணங்கொடுக்க விரும்பினால் பணமாகக்கொடாமல், அவர்களுக்கு உரிய வஸ்திரம் முதலிய பொருள்களை வாங்கிக்கொடுத்தல் முகமாகவே சேர்ப்பிக்கக்கடவர். ஒரு பிக்ஷு பணம் வாங்கினானென்று தெரிந்தால், அவனைச் சங்கத்தார் விசாரித்துக் *குற்றத்தை ஒப்புக்கொள்ளுவித்து அவனைக்கொண்டு அந்தப்பணத்தை அருகிலுள்ள உபாஸகனுக்குக் கொடுத்துவிடச் செய்வதும், அங்ஙனம் பெற்றுக்கொள்ள அந்த உபாஸகன் உடன்படாவிட்டால் அவனைக்கொண்டாவது வேறு உபாஸகனைக் கொண்டாவது அதனை எடுத்தெறிந்துவிடச் செய்வதும், எந்த உபாஸகரும் எறிதற்கு உடன்படாவிட்டால் சங்கத்தார் ஒரு பிக்ஷுவை அதற்கென்று நியமித்து அவனைக் கொண்டு அந்தப் பணத்தை எடுத்தெறிந்துவிடச் செய்வதும், அந்தப் பிக்ஷு தான் பணத்தையெறிந்த இடத்தைக் கருத்தில் வைத்து வெளியிடலாகாதென்பதும் அவர்களுடைய நியமங்கள்.

வஸ்திரம்:—பௌத்த பிக்ஷுக்கள் எப்பொழுதும் வஸ்திரமில்லாமலிருக்கக் கூடாதென்றும், திகம்பரர்களாக இருந்தால் அவர்களுக்கு விரதபங்கம் நேரிடுமென்றும் சொல்லுவார்கள். சாதாரண ஜனங்கள் உடம்பு முழுவதையும் வஸ்திரத்தால் மூடிக்கொள்ளாத தேசங்களிற்கூடப் பிக்ஷுக்கள் உடம்பு முழுவதையும் வஸ்திரத்தால் மூடிக்கொள்ள வேண்டுமென்பது நியமம். இந்தக்கொள்கை ஜைனர்களுடைய திகம்பரவாதத்துக்கு முழுவதும் எதிராக உண்டாயிற்றென்று தோற்றுகின்றது. ஒவ்வொரு பிக்ஷுவுக்கும் அந்தரவாஸக் மென்றும், ஸங்காடி யென்றும், உத்தராஸங்கமென்றும் மூன்று காஷாய வஸ்திரங்கள் இருக்க வேண்டும்; அந்தர வாஸகம்-உள்ளாடை; ஸங்காடி-அரையிற் கட்டும் ஆடை; உத்தராஸங்கம்-மேற்போர்வை. இந்த மூன்றையும் தோய்த்து உலர்த்தி உபயோகித்துக் கொள்வதற்கு உபகாரமாக வேறு மூன்று வஸ்திரங்களே இருக்கலாம். உள்ள வஸ்திரங்கள் மலினமாகவும் சிதிலமாகவும் போய்விட்டால் வேறு வஸ்

* பிக்ஷுக்களுக்கு ஏதேனுங் குற்றம்நேரிடுமாயின், அதற்குப்பரிகாரம் நந்தவனத்துக்கு நீரிறைக்கையென்று தெரிகிறது; இதனை, "பிக்ஷுணிகளுக்குப் பிழை புகுந்தாற் பிராயச்சித்தம் புத்தர்கோயில் முற்றத்துக்கு மணற்சுமக்கை; பிக்ஷுக்களுக்குப் பிராயச்சித்தம் நந்தவனத்துக்கு நீர் இறைக்கை" (நீலகேசி, அருக்கசந்திரவாதச்சருக்கம், ௨௫ - ஆம் பாட்டுரை) என்பதனுலுணர்க.

திரம் பெற்றுக்கொள்வதற்குத் தாமாகவே முயலலாகாது. இல்லாததைப்பார்த்து யாராவது தாமாக வஸ்திரம் கொடுத்தாற் பெற்றுக்கொள்ளலாம்.

இருப்பிடம்:—காட்டில் மரத்தினடியில் தனித்து வாசஞ் செய்வது இந்திரிய நிக்கிரகத்துக்குச் சிறந்தவழியென்பது பௌத்தர்கள் கருத்து. ஆனால், கௌதமபுத்தர் தாம் தருமோபதேசஞ் செய்யத்தொடங்கின நாள்முதல் கிராமங்களுக்கும் பட்டணங்களுக்கும் அருகில் வாசஞ்செய்து கொண்டுவந்தார்; அநேக பிக்ஷுக்கள் தனியே காட்டிற்குச்சென்று மரத்தடியில் வாசஞ் செய்துகொண்டிருந்தார்கள்; சில பிக்ஷுக்கள் தமக்கு இருப்பிடமாகப் பிறராற் கட்டிக்கொடுக்கப்பட்ட விஹாரங்களில் கூட்டங் கூட்டமாக இருந்தார்களென்றுந் தெரிகிறது. * விஹாரங்கள் ஊருக்கு அருகிலுள்ள பெரிய தோட்டங்களில் பிக்ஷுக்கள் தங்குவதற்காக உபாஸகர் கட்டி அமைத்தவை. கௌதமபுத்தரது காலத்திலேயே சில விஹாரங்கள் அமைக்கப்பட்டிருந்தனவென்றும், அவர் காலத்துக்குப்பின் அங்கங்கே பற்பல விஹாரங்கள் அமைக்கப்பட்டனவென்றுஞ் சொல்லுவர். மலைக்குகைகளிலும், மலைகளில் சிறிதாகவும் பெரிதாகவும் சிற்பிகளாற் குடைந்தமைக்கப்பட்ட செயற்கைமுழைகளிலும் பிக்ஷுக்கள் தனித்தனியாகவாவது கூட்டங்கூட்டமாகவாவது தங்குவதுமுண்டு. அத்தன்மையனவாகிய குகைகள்பல நம்முடைய தேசத்தில் இப்பொழுதும் ஆங்காங்குக் காணப்படுகின்றன. அப்படிப்பட்ட விஹாரங்களிலாவது குகைகளிலாவது பிக்ஷுக்கள் வருஷமுழுவதும் வசிக்கிற வழக்கம் இல்லை. அவர்கள் சாதாரணமாக வருஷாகாலமொழிந்த மற்றைக்காலங்களில் ஓரிடத்திலிருந்து

---

* "பள்ளியுட் சங்கத்தாரோடுகிடந்த உபாஸகன் நித்ராவசத்தாற் சங்கத்தார்மேற் காலேறட்டு விழித்தால் அதற்குப் பச்சாத்தாபப்படுவது பாவமுண்டென்று அஞ்சியன்றோ" (நீலகேசி, புத்தவாதச்சருக்கம், ௯௯-ஆம் பாட்டுரை), "ஒருபள்ளியுளிருந்த சங்கத்தார் பலருட் சிலரைத் தோஷவான்களென்றும் ஸஹபோஜனஸஹவாஸங்களுக்கு யோக்கியரல்லரென்றுங்கழித்தால் ஒழிந்தாரெல்லாரும் யோக்யரென்றவாறு போலக் குற்றமென்று உன்னாற்கழிக்கப்பட்ட நான்குசொல்லுமொழித்து ஒழிந்தன புண்ணியகாரணமாம்" (௭0-ஆம் பாட்டுரை) என்பனவற்றால், சங்கத்தாருறைதற்குரிய விஹாரமென்பது தமிழிற் பள்ளியென்று சொல்லப்படுமென்று தெரிகிறது.

மற்றோரிடத்திற்குப் பெயர்ந்து சஞ்சரித்துக்கொண்டே யிருத்தல் வேண்டும். வருஷாகாலத்தில்மாத்திரம் ஓரிடத்திலேயே இருந்தல்வேண்டும். வருஷாகாலத்தில் வெளியில் மரத்தினடியில் வாசஞ் செய்யக்கூடாது; ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குச் செல்லவுங் கூடாது.

பிக்ஷுக்களின் தினசரியை:—புதியபிக்ஷுவாய்க் குருவினிடத்தில் பணிவிடை செய்துகொண்டு வருபவன், சூரியோதயத்துக்கு முன்னமே எழுந்து ஸ்நானஞ்செய்து தானும் தன் ஆசிரியனும் இருக்கும் விஹாரத்தைச் சுத்திசெய்து * தாம் தொழும் அசுவத்தவிருக்ஷத்தின் அடியையும் சுத்திசெய்து ஒரு நாள் முழுதும் தாம் பருகவேண்டிய நீரையெடுத்து வடிக்கட்டி வைத்தல்வேண்டும். அப்பால் ஏகாந்தமாகவிருந்து புத்ததருமத்தைத் தியானஞ் செய்யவேண்டும். பின்பு † தாதுகோபத்தையாவது போதிவிருக்ஷத்தையாவது மலரால் அருச்சித்துத் தொழுது ஒரு பிக்ஷாபாத்திரத்தை யெடுத்துக்கொண்டு ஆசிரியனுடன் பிக்ஷையெடுக்கச் செல்லவேண்டும். பிக்ஷையெடுத்துக் கொண்டு வந்த பின்பு ஆசிரியன் காலைக்கழுவிக்கொள்வதற்கு நீர் கொடுத்துப் பிக்ஷாபாத்திரத்தை அவன்முன்வைத்து அவனுந்தானும் உண்டபின்பு பிக்ஷாபாத்திரத்தைச் சுத்திசெய்யவேண்டும். மறுபடியும் புத்தரைத்தொழுது தியானஞ்செய்யவேண்டும். பின்பு

---

* பௌத்தர்களால் அரசமரம் தொழப்படுதலை, "புத்தர்கட்பத்தியிற்போதி மரந்தொழின்" (நீலகேசி, மொக்கலவாதச் சருக்கம், ௩௨-ம் பாட்டு) என்பதனாலும், "அருள் அறிவு துறவில்லாத போதிமரத்தைத் தொழுதல் என்னை? புத்த பக்தியால் அவனிருந்த போதிமரம்போலும் போதிமரந் தொழுகின்றனையாயின், அவனிருந்த மண்டைபோலும் மண்டையையும் அவன் தொட்ட செருப்புப் போலுஞ் செருப்பினையும் அவன் குடை போலுங் குடையினையுந் தொழுக' என்னும் அதனுரையாலு முணர்க.

† தாதுகோபம் - புத்தருடைய தாதுக்களைப் பாதுகாத்தற்குக் கட்டிய கட்டிடம்; தாது - என்பு முதலியன; "புத்தனுடைய என்பாகிய தாதுத் தொழுவார்" (நீலகேசி, அருக்கசந்திரவாதச் சருக்கம், ௨௭-ம் பாட்டுரை) எனவும், "நீ தாதுவினைத் தொழுவாய் புத்த தாது வென் [illegible]" (நீலகேசி, மொக்கலவாதச் சருக்கம், ௮௨-ம் பாட்டுரை) [illegible]வற்றால், புத்ததாது புதைக்கப்பட்டு வந்ததை அறிக [illegible].

பௌத்த சமயநூல்களைப் படிக்கிறதும் எழுதுகிறதும் தனக்குத் தெரியாதவற்றை ஆசிரியனிடம் கேட்டு அறிகிறதும் சாயங்காலம் வரையில் அவன் செய்யவேண்டிய தொழில்கள். சாயங்கால மானவுடனே விஹாரத்தைத் தீர்த்துச் சுத்திசெய்து விளக்கேற்றி அன்று தான் பௌத்த நூல்களிலிருந்து நெட்டுருப்பண்ணிய பகுதிகளைக் குருமுன்னே ஒப்பித்து, தான் ஏதாவது குற்றஞ் செய்திருந்தால் அதை ஆசிரியனுக்கு அறிவித்து க்ஷமிக்கும்படி கேட்டுக்கொள்ளவேண்டும்; நிரம்பிய மனமுடையவனாய் இந்திரியங்களை வெல்ல முயன்றுகொண்டு திரிகரணங்களாலுஞ் சுத்தனாய்ச் சாந்தியுடன் வளர்ச்சியடைந்து வரவேண்டும். *ஸ்தவிரர்களான பிக்ஷுக்கள் இவ்வாறு சிஷ்யர்களால் உபசரிக்கப்பட்டு, தங்களுக்குள்ள காலத்தை சீலானுஷ்டானத்திலும் ஐந்துவிதமான பாவனைகளிலும் தியானத்திலும் சமாதியைப் பெறுவதிலும் செலுத்திக்கொண்டு வருவார்கள். ஆசையைவென்று பற்றையறுத்து முற்பிறப்புக்களிலும் இப்பிறப்பிலும் செய்துவந்த கருமங்களின் ஸம்ஸ்காரங்களை யெல்லாம் நாசஞ் செய்துவிட்டு நிருவாணத்தைப் பெறுவதுதான் இவர்களுடைய முயற்சிகளுக்கெல்லாம் பயன். இவ்வாறு சீலபாவனாத்தியான சமாதிகளால், முறையே ஸ்ரோதாபந்நரென்றும் ஸக்ருதாகாமியென்றும் அநாகாமியென்றும் அர்ஹத்தென்றும் படிப்படியாக உயர்ந்திருக்கும் வகை நான்குண்டு; அசேக்ஷரென்கிற ஐந்தாம் வகை யொன்றும் இருப்பதாகச் சொல்வார்கள்.

"சங்கத்திலுறைபவன் வேறு செய்தியைப்பற்றியும் அற்ப விஷயங்களைப்பற்றியும் பேசமாட்டான்; தன்னுடைய சமய நூலையே விவரித்து வெளியிட்டுவருவான்; அல்லது வேறொருவரை அவ்வாறு செய்யத் தூண்டுவான்; அல்லது தூய்மையான மௌனத்தை அதிக கௌரவத்துடன் பாராட்டிவருவான்" என்று திரிபிடகத்தில் ஓரிடத்தில் சொல்லியிருக்கிறது.

மாதத்தில் இருமுறை பருவகாலங்களில் சமீபித்த இடங்களிலுள்ள பிக்ஷுக்களெல்லாரும் ஒருங்குசேர்ந்து உபவஸத விரதானுஷ்டானஞ் செய்துவருவது வழக்கம். உபவஸதமா

* ஸ்தவிரர் - மூத்தியபிக்ஷுக்கள்; இப்பெயர், "சிங்கதத்தரென்பாரொரு ஸ்தவிரர் ஸங்காவாஸத்துப் போதியின்கணின்ற பிக்ஷுணியைத் தயா செய்யப்புக" (நீலகேசி, அருக்கசந்திரவாதச் சருக்கம், கச - ஆம் பாட்டுரை) என்பதில் வந்திருத்தல் காண்க.

வது: உபவாஸம் (பட்டினியிருத்தல்) கூடியிருக்கிற பிக்ஷுக்க ளுள் ஒவ்வொருவரும் தங்களுடைய கடமைகளையும் ஆசாரத் தையும் முறைப்படி நடத்திக்கொண்டு வந்தார்களா வென்று விசாரித்தறிந்து கொள்ளுதலும், குற்றஞ் செய்தவர்களெல்லாம் தத்தம் குற்றத்தை அனுதாபத்துடன் வெளியிட்டுச் சங்கத்தா ருடைய க்ஷமையைப் பெற்றுக்கொள்வதுமே உபவஸதானுஷ் டானத்தின் முக்கியமான நோக்கம். ஒரெல்லைக்குட்பட்ட இடத் திலுள்ள பிக்ஷுக்களில் மூத்தவனுக்கு இந்த உபவஸதபிக்ஷு ஸங்கத்தைக் கூட்ட அதிகாரம் உண்டு. அச்சபைக்கு வரவேண் டிய பிக்ஷுக்களெல்லாரும், அந்த மூத்தவன் நியமித்தபடி சமீ பத்திலுள்ள விஹாரத்திலாவது மலையிலுள்ள குகையிலாவது வந்து சேரவேண்டும். ஒருபிக்ஷுவாவது வராமலிருத்தல் கூடாது; பைத்தியம் பிடித்திருந்தால்மட்டுமே வராதிருக்கலாம்; வரக்கூடா தபடி நோயை அனுபவித்துக்கொண்டிருப்பவர்கள், தாங்கள் விதி யைக்கடந்து குற்றமொன்றுஞ் செய்யவில்லை யென்று வேறொரு பிக்ஷுவைக்கொண்டு சங்கத்துக்குத் தெரிவிக்கக்கூடுமானால் வாராமல் நின்றுவிடலாம்; இப்படிச் செய்ய முடியாவிடின் நோயா ளியைச் சபைக்குத் தூக்கிக்கொண்டு வரவேண்டும்; அதுவும் முடியாவிட்டால் சபையே அவனிருக்குமிடம் செல்லவேண்டும். இவ்வாறு வரவேண்டியவர்களெல்லாரும் வந்தாலொழிய அந்தச் சபையை நடத்த ஒருவருக்கும் அதிகாரமில்லை.

சூரியாஸ்தமயமான பின்பு தீபவொளியில் பிக்ஷுக்களெல் லாரும் உரிய இடங்களில் இருப்பார்கள். உபாஸகர்கள் ஒருவரும் அச்சபை கூடுங்காலத்தில் அங்கேயிருத்தலாகாது. பின்பு, சபையில் எல்லாருக்குங் கேட்கும்படி ஸ்தவிரன் பிராதிமோக்ஷ வாக்கியத்தைச் சொல்லுவான்; பிராதிமோக்ஷமென்பது குற் றங்களை அனுதாபத்துடன் ஒத்துக்கொண்டு அவைகளின் பந்தத் திலிருந்து விடுதிபெறுதல்; "பூஜ்யர்களே! நான் சொல்வதைச் சங்கத்தார் அன்புடன் கேட்கவேண்டும்; இன்று, பக்ஷத்தின் பதினைந்தாவதாகிய உபவஸத தினமாயிருக்கிறது; சங்கத்தார் ஸித்தராயிருந்தால் உபவஸதானுஷ்டானஞ்செய்து பிராதிமோ க்ஷத்தைக் கேட்லாம். பூஜ்யர்களே! உங்களுடைய பரிசுத்தி யைப் பற்றிச் சங்கத்தாருக்குத் தெரிவியுங்கள்; நீங்கள் குற்றஞ் செய்திருந்தால் அதை ஒப்புக்கொள்வதற்கு வேண்டிய வாக்கியங்

களை நான் சொல்லுகிறேன்; கேளுங்கள்" என்று ஸ்தவிரன் சொன்னவுடன், சபையிலுள்ள பிக்ஷுக்கள் யாவரும், "நாங்களெல்லாம் நீ சொல்வதைக்கேட்டு அதற்கு ஏற்றவாறு நடந்து கொள்வோம்" என்று சொல்லுவார்கள். பின்பு ஸ்தவிரன் பின்வருமாறு கூறுவான்: "எவன் குற்றஞ்செய்திருந்தாலும் அதை அவன் ஒத்துக்கொள்ளவேண்டும்; குற்றஞ்செய்யாதவன் மௌனமாயிருக்கலாம். பூஜ்யர்களே! உங்களுடைய மௌனத்திலிருந்து நீங்கள் குற்றஞ்செய்யவில்லையென்று நான் அறிந்து கொள்வேன். தனியே ஒருவனை வினவினால் அவன் எப்படி விடைபகர்வானோ, அப்படியே இச்சபையை நோக்கி மூன்று முறை நான் கேட்கும் கேள்விகளுக்கு இங்குள்ள ஒவ்வொருவரும் தக்கவண்ணம் விடையளிக்க உரிமையுள்ளவர்களாய் விடுகின்றனர்." இப்படி ஸ்தவிரன் மூன்றுதரம் கேள்விகேட்டபின் தான் செய்த குற்றம் தன் ஞாபகத்திலுள்ளபொழுது அதை வெளிப்படையாகச்சொல்லி ஒத்துக்கொள்ளாத பிக்ஷு அந்ருதவாத தோஷத்தை [பொய்சொன்ன குற்றத்தை] அடைவான். மனப்பூர்வமாகச்செய்யும் அந்ருதவாதம் நாசத்தைத்தருமென்று ததாகதர் சொல்லியிருக்கிறார். ஆகையால், செய்த குற்றத்தை மறவாதிருந்து அதன் தோஷத்தினின்றும் நீங்குதலைத்தேடும் ஒவ்வொரு பிக்ஷுவும் தன்குற்றத்தை வெளிப்படையாகச் சொல்லிஒத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறுவெளிப்படையாகச் சொல்லி ஒத்துக்கொண்ட தோஷத்தின்பாரம் மிகவும் குறைந்துவிடும். பிரமசரிய விரதபங்கம், அஸ்தேய விரதபங்கம், அஹிம்ஸா விரதபங்கம், இருத்திசக்தியைப் பாராட்டாமையாகிய விரதத்தினின்று வழுவுதலாகிய இவற்றைப்பற்றியும் வேறு உள்ள விரதபங்கங்களைப்பற்றியும் ஸ்தவிரன் மூன்று முறை கேட்டபின்பு, சபையில் எல்லோரும் மௌனமாயிருந்தால், அப்பொழுது அவன், "பூஜ்யர்களெல்லோரும் தோஷமில்லாமல் சுத்தராயிருக்கிறார்கள்; ஆகையினாலேதான் அவர்கள் மௌனமாயிருக்கிறார்களென்று நினைக்கிறேன்" என்று சொல்லிப் பின்பு அந்த ஸ்தவிரன் சபையோரைநோக்கி, "நீங்கள் என்னிடத்தில் ஏதாவது ஒருகுற்றத்தைக் கண்டாவது கேட்டாவது அறிந்திருந்தாலும் என்னைப்பற்றி ஏதாவது உங்களுக்குச் சந்தேகமிருந்தாலும் அவற்றைத் தயைசெய்து வெளிப்படையாக எனக்குத்

தெரிவிக்கவேண்டும். நான் என்குற்றங்களை அறிந்துகொண்டு அவைகளுக்குரிய பரிகாரத்தைத் தேடுகிறேன்'' என்று சொல்லிச் சபையாருடைய அனுமதியைப்பெற்றுக்கொண்டு சபையை முடித்துவிடுவான். உபவஸததினத்தில் சாயங்காலத்துக்கு முன்பு பிக்ஷுக்கள் சேர்ந்திருக்குமிடத்திற்கு உபாஸகர்களும் பிக்ஷுணிகளுமாகிய எல்லோரும் வந்து திரிபிடகத்தில் ஒரு பாகமாகிய விநயபிடகத்தைப் பிக்ஷுக்கள்படிக்கப் பக்தியுடன் கேட்பது வழக்கம். உபவஸததினங்கள் ஆதிகாலத்தில் மாதத்துக்கு இரண்டாயிருந்தன. பின்பு அஷ்டமி திதிகளையுஞ் சேர்த்து நான்காக்கினார்கள். இந்த உபவஸதானுஷ்டானமும் வருஷாகால நியமமுமாகிய இவ்விரண்டுமே பிக்ஷுக்களெல்லோரும் ஒன்றாயிருந்து செய்யவேண்டியவை. முன்புகூறிய சீலம் தியானம் பாவனை முதலாகிய தம்மை நல்வழிப்படுத்துதற்கு வேண்டிய முயற்சிகளை ஒவ்வொருவரும் தத்தம் ஆற்றலுக்கு ஏற்றபடி நடத்திக்கொண்டு வரவேண்டும். புத்தர் பிறந்த கபிலவாஸ்துவுக்கும் அவருக்கு ஞானோதயமான புத்தகயைக்கும் அவர் தருமசக்கரப் பிரவர்த்தனஞ் செய்யத்தொடங்கிய இடமான காசிக்கும் அவர் பரிநிருவாணத்தையடைந்த இடமான குசீநகரத்துக்கும் பௌத்த பிக்ஷுக்களும் பிக்ஷுணிகளும் உபாஸகர்களும் உபாஸிகைகளுமாகிய எல்லோரும் யாத்திரையாகச் செல்லுகிற வழக்கமுண்டு. ஸ்தூபங்கள், தாதுகோபங்கள், *சைத்தியாலயங்கள் முதலியவற்றில் வழிபடுதலும் நித்திய நைமித்திகங்களை நடத்துதலும் உபாஸகர்களுக்குரியவழியென்று புத்தர் தம்முடைய பரிநிருவாணத்துக்கு முன்பு ஆநந்தனென்கிற சிஷ்யனுக்குச் சொன்னாரென்று தெரியவருகிறது.

---

* சைத்தியாலயங்கள் - புத்தப்படிமையுள்ள கோயில்கள்; இதனை, "சைத்தியங் காணிற் றலையினை முட்டும், பைத்தியங் கொண்டவர்" (நீலகேசி, அருக்கசந்திரவாதச் சருக்கம், உஅ - ஆம் பாட்டு) என்பதனாலும், 'புத்த ப்ரதிமையது ஆலயந்தொழுப' என்னும் அதனுரையாலும், புத்தப்படிமை பூசிக்கப்படுதலை, "எத்தின ரேத்துக வென்றிறை போல்வன, பாத்தில் பைம்பொற் படிமை செய்தாலவை, யேத்துநர் பெய்தவ ரெய்துவர்" (மொக்கலவாதச் சருக்கம், கூ) என்னுஞ் செய்யுளாலும், 'புத்த ப்ரதிமை செய்தார்க்கும் அதுகண்டு உபேக்ஷியாது ஸத்கரித்துப் பூசை செய்து தொழுதார்க்கும் புண்ணியமுண்டு' என்னும் அதனுரையாலும் உணர்க.

பெண்பாலார்க்கு ஸந்யாஸ யோக்கியதை உண்டென்பதும் அவர்களுக்கு ஸந்யாஸத்தைக்கொடுப்பதும் பௌத்தசமயத்தி லேதான் விசேஷமாக உள்ளனவென்று சொல்லுவதற்கு இட முண்டு. இந்தத்தேசத்திலுள்ள பிறமதங்களில் பெண்பாலாரும் வைராக்கியத்தைப் பாராட்டலாம்; அதனால் அவர்களுக்கு மேன் மையுண்டென்கிற அபிப்பிராயம் இருப்பதாகத் தெரிகிறது. ஒருவிதமான நியமத்துக்கும் உட்படாமல் தம்முடைய அந்தக் கரணத்தையே தமக்கு அதிகாரியாக வைத்துக்கொண்டு ஆசை யொன்றுமில்லாமல் தோஷங்களையெல்லாம்விட்டுச் சாந்திபெ ற்று ஸர்வஸ்வதந்திரமான நிலையாகிய ஸந்யாஸவழியில் இருப்ப தற்கு இயற்கையானதகுதி பெண்பாலார்க்கு இல்லையென்றும், அந்த ஸந்யாஸநிலைமைக்குரிய ஸ்வாதந்திரியத்தைக்குற்றமில்லா மற் பாதுகாத்துவருவதற்கு அவர்களால் இயலாதென்றும், இத் தேயத்தில் தொன்றுதொட்டுப் பெரியோர்கள் அபிப்பிராயங் கொண்டிருந்தார்கள். அப்படியிருந்தும் புத்தர் தம்முடைய செவிலித்தாயின்சொல்லை மறுத்தற்கு மனமில்லாதவராய்ப் பெண் பாலார்க்கும் ஸந்யாஸாதிகாரத்தைக்கொடுத்தார். ஸந்யாஸினி களின் சமுதாயத்துக்குப் பிக்ஷுணீ ஸங்கமென்றும், ஸந்யாஸி களின் சமுதாயத்துக்குப் பிக்ஷுஸங்கமென்றும், இவ்விரண்டன் சமுதாயத்துக்கும் உபயதா ஸங்கமென்றும் பெயர்.

புத்தர் பிக்ஷுணிகளுக்கு நியமித்த கட்டளைகள் எட்டு; அவை வருமாறு:

க.—பிக்ஷுணியானவள் நூறுவருஷங்களுக்கு முன்பு ஸந்யா ஸம் பெற்றவளாகவிருந்தாலும் அன்று ஸந்யாஸம் பெற்றுக் கொண்டபிக்ஷுவைக்கண்டால் கௌரவித்து அவனை வணங்கி எழுந்து நின்று கைகூப்பித்தொழுது பாராட்ட வேண்டும். இந்த நியமத்தை ஒவ்வொரு பிக்ஷுணியும் பரிசுத்தமானதாகவெண் ணிக்காப்பாற்றிக் கௌரவித்து வாழ்நாளிலே எப்பொழுதும் கட வாமற் கைக்கொண்டொழுக வேண்டும்;

உ.—பிக்ஷுணியானவள் பிக்ஷுக்களுள் ஒருவருமில் லாதவிடத்தில் மழைக்காலத்தைக் கழிக்கக்கூடாது. இந்த நிய மத்தை……………வேண்டும்;

௩.—பிக்ஷுணிகள் பக்ஷத்திற்கு ஒருமுறை பிராதிமோ க்ஷானுஷ்டானமும் தருமோபதேசம் பெறுதலுமாகிய இரண்டு

காரியங்களுக்காகப் பிக்ஷுக்களிடம் செல்லவேண்டும். இந்த நியமத்தை..............வேண்டும் ;

௫.—வருஷாகாலம் முடிந்தவுடனே பிக்ஷுணிகள் சங்கத்தின்*உபயபாகத்தாரையும் அழைத்துத் தம்மிடத்தில் யாரேனும் ஏதாவது குற்றத்தைக் கண்டிருந்தாலும் கேட்டிருந்தாலும் தம்மிடத்தில் யாருக்காவது ஏதாவதொருவிதமான ஸந்தேகம் இருந்தாலும் அவற்றையெல்லாம் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளவேண்டும். இந்த நியமத்தை...........வேண்டும் ;

௬.—பெருங்குற்றம் ஏதாவது செய்திருக்கிற பிக்ஷுணி பக்ஷத்துக்கு ஒருமுறை சங்கத்தின் உபயபாகத்தாருடைய முன்னிலையில் அவர்கள்விதித்த பிராயச்சித்தத்துக்கு உட்பட வேண்டும். இந்தநியமத்தை ....வேண்டும் ;

௭.—பெண்பாலார் இரண்டுவருஷகாலம் பஞ்சசீலம், அகாலபோஜனத்தியாகமாகிய ஆறு தருமங்களையும் கைக்கொண்டொழுகிய பின்புதான் தமக்கு ஸந்யாஸத்தைத்தரும்படி சங்கத்தின் உபயபாகத்தாரையும் வேண்டிக்கொள்ளலாம். இந்த நியமத்தை ....வேண்டும் ;

௮.—எப்பொழுதும் எவ்விதமான நிலைமையிலும் பிக்ஷுணியானவள் பிக்ஷுவை வைதலும் கடுமொழிகூறலும் ஆகா. இந்த நியமத்தை...............வேண்டும் ;

அ.—(ஸந்யாஸம் பெற்றுக்கொண்ட) அன்றுமுதல் பிக்ஷுக்களுக்கு விரோதமாகப் பிக்ஷுணிகள் யாதொன்றும் பேசலாகாது. பிக்ஷுணிகளுக்கு எதிராகப் பிக்ஷுக்களின் சொற்கள் அவ்வாறு தடுக்கப்படா. இந்தநியமத்தை..............வேண்டும்.

இந்த எட்டுநியமங்களையும் ஆராய்ந்துபார்த்தால், பௌத்த ஸங்கத்தில் ஸந்யாஸத்தால் பெண்பாலார்க்கு ஸ்வாதந்திரியம் அதிகமாய் கிடைத்ததென்று நினைக்க இடமில்லை. பிக்ஷுணிகளுக்கு உபஸம்பதாஸ்தானம் இல்லியமையாது. பிக்ஷுணிகளுக்கு உபதேசம்பண்ணவேண்டியது பிக்ஷுக்களின் கடமை. ஆகையால் பிக்ஷுக்களும் பிக்ஷுணிகளும் தனித்தனியே இருக்கவேண்டிய நிர்ப்பந்தமுண்டு. பிக்ஷுணிகளின்

* உபயபாகத்தாரை:—பிக்ஷுக்களை உபாஸகர் என்பவை.

இருப்பிடத்துக்கு அவர்களுக்குத் தருமோபதேசஞ் செய்தற்குரிய பிக்ஷுவுங்கூட எந்தப்பிக்ஷுணிக்கேனும் தேக அசௌக்கியமிருந்தாலன்றிப் போகலாகாது. பிக்ஷுணிகளோடு வழிக்கொள்ளுதலும் ஓரிடத்திற்குச் செல்லுதலும் ஒருவருமில்லாதிருக்கும்பொழுது அவர்களோடு ஏகாந்தமாக இருத்தலும் பிக்ஷுக்களுக்குத் தகாதனவாம். பிக்ஷுக்களின் தினசரியைக்கும் பிக்ஷுணிகளின் தினசரியைக்கும் மிக்க வேறுபாடில்லை. எந்தக் காலத்திலும் பிக்ஷுக்களைக் காட்டிலும் பிக்ஷுணிகள் கணக்கிற்குறைவாகவே இருந்தார்களென்று தெரிகிறது.

புத்தருடைய காலத்துக்குப் பின்பு பௌத்த மதத்துக்கு மூலாதாரம் சங்கந்தான். இப்பொழுதும் பௌத்த மதம் விளங்கி வரும் தேசங்களில் பிக்ஷுக்களே அந்த மதத்தைப் பாதுகாத்து எல்லோருக்கும் தருமங்களை உபதேசித்துப் பரவச் செய்து வருகிறார்கள். உபாஸகர்களுக்கும் உபாஸிகைகளுக்கும் சாதாரணமாக எல்லா மதத்தாரும் மதித்துக் கைக்கொண்டிருக்கிற பஞ்சசீலானுஷ்டானம் அல்லது அஷ்டசீலானுஷ்டானத்தையன்றி இவர்கள் பௌத்தர்களென்று எடுத்துக் காட்டக்கூடிய விசேஷ நியமம் ஒன்றும் எப்பொழுதுமேயில்லை. இதனாலே தான் பௌத்த சமயம் அதிகமாகச் சங்கத்தைப் பின்பற்றி வளரவேண்டியதாயிற்று. ஒரு தேசத்தில் பௌத்த சங்கத்தைச் சேர்ந்த பிக்ஷுக்களும் பிக்ஷுணிகளும் வேறு மதத்தையடைந்தால் அத்தேசத்தாரெல்லோரும் பௌத்த மதத்தை விட்டு விடும்படி நேரும்.

இதனாலே பௌத்தர்களுடைய மும்மணியாகிய புத்ததருமசங்கங்களில் சங்கத்துக்குள்ள பெருமையையும் முதன்மையையும் அறிந்துகொள்க.

மணிமேகலைக் கதைச்சுருக்கம்.

வெண்பா.

"இமையவர்கண் மோலி யிணைமலர்த்தாள் சூடச்
சமயந் தொறுநின்ற தையல்—சிமைய
மலைமடந்தை வாச மலர்மடந்தை யெண்ணெண்
கலைமடந்தை நாவலோர் கண்."

க.—விழாவறைகாதை.

பண்டைக்காலத்திற் காவிரிப்பூம்பட்டினத்தை வளமுறச் செய்வித்தற்கு நினைந்த அகத்தியமுனிவருடைய கட்டளையின்படி தூங்கெயிலெறிந்த தொடித்தோட்செம்பிய னென்னுஞ்சோழன் இந்திரனைவணங்கிக் குறையிரந்து அவனனுமதிபெற்று இருபத்தெட்டு நாள் அந்நகரில் நடத்தியதும் அச்சோழன் காலத்திற் போலவே பிற்காலங்களில் அவன் பரம்பரையோரால் ஆண்டு தோறும் நடத்தப்பெற்று வந்ததுமாகிய இந்திர விழாவை நடத்தக்கருதிய அந்நகரத்துள்ள பலசமயவாதிகளும் பிறரும் ஒருங்கு கூடி, "இந்திரவிழாவை நாம் மறந்தால் முசுகுந்தனது துயரைப் போக்கியதான நாளங்காடிப் பூதம் துன்பஞ்செய்யும்; பாவிகளைப் புடைத்துண்பதாகிய சதுக்கப்பூதம் இந்நகரை விட்டுநீங்கும்; ஆதலால் இவ்விழாவை நடத்துவோ மாக" என்று தம்முள் நிச்சயித்துக்கொண்டு அவ்விழா நடக்கப்போதலை நகரத்தாருக்கு அறிவிக்கும்படி முரசறைவோனுக்குச் சொல்ல, அவன் வச்சிரக் கோட்டத்துள்ள முரசை யானையின் பிடரிலேற்றி, முதலில் ஊரை வாழ்த்தி, "மேகம் மாதந்தோறும் மும்மழை பொழிக; அரசன் செங்கோலினனாகுக; அறிஞர்களே! இந்திரவிழா நடக்குங் காலத்திற் சுவர்க்கலோகம் வறிதாகும்படி எல்லாத்தேவரும் அதனை நீங்கி இங்கே எழுந்தருளுவாரென்பது பெரியோர்களுடைய துணிபாதலால், வீதிமுதலியவற்றிற் பூரணகும்பங்களும் பொற்பாலிகைகளும் பாவைவிளக்குக்களும் ஆகிய இவற்றைப் பரவ வைத்திடுமின்; குலைக்கமுகும் குலைவாழையும் கரும்பும் வஞ்சிக்கொடியும் பூங்கொடியும் ஆகிய இவற்றைக் கட்டவேண்டிய

இடங்களிற் கட்டுமின்; தூண்களில் முத்துமாலைகளை நாற்றுமின்; வீதிகளிலும் மன்றங்களிலும் பழமணலை மாற்றிப் புதுமணலைப் பரப்புமின்; துகிற்கொடிவகைகளை மாடங்களிலும் வாயில்களிலும் கட்டுமின்; சிவபெருமான்முதல் சதுக்கப்பூதமிறுதியாகிய தெய்வங்கள் உறையுங் கோயில்களிற்செய்யவேண்டிய காரியங்களை ஏற்பச்செய்யுமின்; தருமோபதேசஞ்செய்ய அறிந்தவர்களே! பந்தரிலும் அம்பலங்களிலுஞ்சென்று பிரசங்கம் புரிமின்; சமயவாதிகளே! வித்தியாமண்டபத்தை அடைந்து இருத்தற்குரிய இடத்திலிருந்து வாதம்புரிமின்; யாரிடத்தும் பகைமையும் கோபமுங் கொள்ளன்மின்" என்று கூறி முரசறைந்து இந்திரவிழாவைத் தெரிவித்தான்.

உ.—ஊரலருரைத்தகாதை.

பின்பு காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிழா நடைபெற்றது; அவ்விழாக்காலத்திற் பண்டைவழக்கப்படியே ஆடுதற்பொருட்டு மணிமேகலையும் மாதவியும் வாராமையால் மனம் புழுங்கிய சித்திராபதி வயந்தமாலையை அழைத்து, "நீ மாதவிபாற் சென்று விழாவிற்கு வாராதிருத்தல்பற்றி இவ்வூரார் கூறும் பழிமொழியை அவளுக்குச்சொல்லி வா" என்று அனுப்ப, அவள் சென்று மணிமேகலையோடு மாதவி இருந்த மலர்மண்டபத்தை யடைந்து, அங்கே தவத்தால் வாடிய மாதவியின் உடம்பைக் கண்டு வருத்தமுற்று அவளை நோக்கி, "நீ உன் மகளுடன் இந்திர விழாவிற்கு வராமலும், உன் மரபிற்கு ஒவ்வாத தவவொழுக்கம் பூண்டும் இருத்தல்பற்றி ஊரார்கூறும் பழிமொழிகள் பல" என்று கூற, மாதவி, "கணவன் கொலையுண்டதற்குப் பொறாளாய் மிக்கு சினந்து மதுரையை எரித்த பத்தினிக்கடவுளாகிய கண்ணகியினுடைய மகள் மணிமேகலை தவவழியிற் செல்லுதற்கு உரியளேயன்றி மிகவுமிழிந்த பரத்தைமைத் தொழிலுக்கு உரியளல்லள்; அன்றியும் அவள் அங்கேவாராள்; நான் இங்கேவந்து பௌத்தாசாரியராகிய அறவணவடிகளை வணங்கி, என் காதலன் மதுரையிற் கொலையுண்டது முதலிய பெருந்துன்பத்தை வருந்திச்சொல்லி முறையிட்டேன்; முறையிட்ட எனக்கு அவர்,

> 'பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
> பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
> பற்றின் வருவது முன்னது பின்னது
> அற்றோ ருறுவது அறிகென் றருளி' (௬௪ - ௭)

என்று நால்வகைவாய்மைகளையும் அருளிச்செய்து பஞ்சசீலத்தையும் உபதேசித்து,'இவற்றைக்கடைப்பிடி' என்றுசொல்லி என்னைத் தவவழியிற் புகுத்தினராதலின், நானும் அங்கே வருதற்கு உரியேனல்லேன் ; 'இச்செய்தியை என் தோழிகளுக்கும் என் நற்றாய் சித்திராபதிக்கும் சொல்'' என்றுகூற, அதுகேட்ட வயந்தமாலை பெறுதற்கரிய மாணிக்கத்தைக் கடலில் வீழ்த்தியவர் போலச் செயலற்று மீண்டு சித்திராபதியிடம் சென்றாள்.

௩.—மலர்வனம்புக்ககாதை.

இங்ஙனம் மாதவி வயந்தமாலைக்குச் சொல்லிய வருத்தச் சொல்லைக்கேட்ட மணிமேகலைக்கு அக்கேள்விவழியாகப் பற்றறுதற்குரிய நற்காலம் (ஏதுநிகழ்ச்சி) வந்துற்றமையால், அவள் தன்னுடைய தாய்தந்தைகளான கண்ணகிக்கும் கோவலனுக்கும் மதுரையில்நேர்ந்த துயரச்செய்தி தன்காதுகளைச் சுட மனங்கலங்கி அழுது சிந்துகின்ற கண்ணீரால் தான்தொடுக்கின்ற மாலையை நனைத்துக்கொண்டிருப்ப, மாதவி அதனைக்கண்டு கண்ணீரைத் துடைத்து அவளுடைய துக்கத்தை ஒருவகையாக மாற்ற நினைந்து, "இப்பூமாலை உன் கண்ணீர்க் கலப்பால் தூய்மையொழிந்தது ; ஆதலின், வேறுமாலை தொடுத்தற்கு நீ சோலைசென்று புதுமலர் பறித்துவா '' என்றாள்.

அதனைக்கேட்ட சுதமதி மாதவியை நோக்கி, "தாய்தந்தையர்க்கு நேர்ந்த பெருந்துன்பத்தைக்கேட்டு மிக்கதுக்கத்தை அடைந்த மணிமேகலையின் கண்ணீரைக்காணிற் காமன் தன் படைக்கலங்களை எறிந்துவிட்டு நடுங்குவான்; இப்பாவையை ஆடவர் புறத்தே காண்பாராயின் விட்டு நீங்குவாரோ? நீங்கார்; இயற்கைத்தன்மை குன்றுவர்; குன்றாமல் நிற்பராயின், அவர்கள் பேடியரல்லரோ? ஆதலால், இவளை இப்பொழுது புறத்தே பூப்பறித்தற்குத் தனியே அனுப்பலாகாது. இந்நகரத்தில் நான் வந்ததற்குரிய காரணங்கூறுவேன்; கேட்பாயாக : சண்பைநகரத்துள்ளானாகிய கௌசிகனென்னும் அந்தணனுடைய மகளாகிய யான், தனியே செல்லுதற்கு அஞ்சாமல் ஆராய்ச்சியின்றி ஒரு சோலையிற்சென்று பூப்பறித்தேன்; அப்பொழுது இந்திரவிழாவைக்காணுதற்கு இந்நகரைநோக்கி ஆகாயவழியேவரும் மாருதவேகனென்னும் வித்தியாதரனொருவன் என்னைக்கண்டு உடனே எடுத்துக்கொண்டு

மேலேசென்று, தன்வயமாக்கிச் சிலநாள் கழித்தபின் இந்நகரத்திலே என்னை விட்டு விட்டு நீங்கித் தன் நகரம் போயினன்; மகளிர் தனியே செல்லுதலால் உண்டாகும் தீங்கு இத்தன்மையது; ஆதலால், மணிமேகலை தனியே போய்ச் சோலையிற் பூப்பறித்தல் தவறாகும். இவளுடன் யாரேனும் செல்லவேண்டும். இலவந்திகைச் சோலைக்குச் சென்றால் அரசனுடைய பக்கத்திலுள்ளார் அங்கிருப்பர்; உய்யானத்திற்குச் செல்லலாமோ வெனின் அதில் தேவர்களாலன்றி மனிதர்களால் விரும்பப்படாதனவும் வண்டுகள் மொய்க்கப் பெறாதனவுமாகிய மலர்களையுடைய மரங்களெல்லாம் வாடாத பூமாலைகளைத் தூக்குதலால், 'இவ்வனம் பாசக்கையையுடைய பூதங்களாற் காக்கப்படும்' என்று நினைந்து அவ்வனத்தை அறிவுடையோர் அடையார்; சூரியகிரணத்தாற் சிறையிழந்த சம்பாதியிருந்த சம்பாதிவனமும், காவிரியின் தந்தையாகிய கவேரனிருந்த கவேரவனமும் மிக்க முதுமையையுடையனவும் தீண்டிவருத்துவனவுமாகிய தெய்வங்களாற்காக்கப்படுதலின் அவற்றினிடத்தும் அறிவுடையோர் செல்லார் ;

அருளு மன்பு மாருயி ரோம்பும்
ஒருபெரும் பூட்கையு மொழியா நோன்பிற்
பகவன தாணையிற் பன்மரம் பூக்கும் (௫௯ - ௬௧)

உவவனமென்று ஒருவனமுண்டு; அவ்வனத்தில் தன்னகத்துள்ளோருடைய ஓசையை வெளிப்படுத்தாமல் அவர்களுருவங்களை மட்டும் வெளிப்படுத்துவதாகிய பளிக்குமண்டபம் ஒன்றுளது ; அம்மண்டபத்தினுள்ளே மாணிக்கச் சோதிபரந்த ஒரு பதுமபீடம் இருக்கிறது; அப்பீடத்திலிட்டால் அரும்புகள் மலரும்; பலவருடஞ்சென்றாலும் அதில் இட்டமலர்கள் வாடா ; அம்மலர்களில் வண்டுகள் மொய்யா; இதுகாறும் அதன் பெருமையை உனக்குச் சொல்ல மறந்தேன்; கேட்பாயாக: ஒருதெய்வத்தை நினைந்தோர் அத்தெய்வத்தின் அடிகளைத் தியானித்து மலர்களை அப்பீடத்திற் சேர்த்தால் அம்மலர்கள் அப்பீடத்தை நீங்கி அத்தெய்வத்தின் அடிகளிடத்தே செல்லாநிற்கும்; யாதொரு நினைப்புமின்றி அவற்றை அப்பீடத்தே சேர்ப்பின், அவைகள் அதனை விட்டு நீங்கா; இதற்குக் காரணம் யாதென்று வினவுவாயாயின் சொல்லுவேன்; 'செய்யும் கருமங்கள் மனத்தோடு கூடாத விடத்தும் அவைகள்பலிக்கும்' என்னும் விரதிகள் துன்பமடையவும், 'மனத்

தோடுகூடாதவழிக்கருமங்கள்பலியா' என்போர்க்கு உதாரணமாகவும் மூலரை இட்டுக் காட்டுதற்கு மயனென்னும் தெய்வத் தச்சனால் அப்பீடம் நிருமிக்கப்பட்டதாகும்; அவ்வனத்திலன்றி உன் மகள் வேறு வனங்களிற் செல்லுதற்கு உரியளல்லள்; அவளோடு பூப்பறித்தற்கு நானும் துணையாகச் செல்வேன்'' என்று சொல்லிவிட்டு மணிமேகலையோடு சேர்ந்து அவள் போகும்பொழுது, உண்ணுநோன்பி யொருவனைத் தொடர்ந்து நின்று, "ஐய, இதனை உண்ணும்; உண்டால், காற்றுப்புகாத அறையிற் புகுந்தவர்போலே அழுக்குடைய உடம்பிற் புகுந்து வருந்திக் கொண்டிருக்கும் உம்முடைய உயிர் அவ்வருத்த மொழிந்து மிக்க இன்பத்தை அடையா நிற்கும்; ஆதலால் இதனையுண்டு தெளிக'' என்று கள்ளை யுண்ணும்படிவற்புறுத்திக் கூறும் ஒரு களிமகன் பின்னே வியப்புற்றுச் செல்லும் சனங்களும், ஒரு பித்தனுடைய பலவகைப்பட்ட விகாரச் செயல்களைக்கண்டு வருந்தி நிற்கும் சனங்களும், பேடென்னுங் கூத்தைக்கண்டு நிற்கும் சனங்களும், தெருவின் இருபுறத்துமுள்ள மாளிகைகளில் எழுதப்பட்டுள்ள சித்திரங்களைக்கண்டு வியந்து நிற்கும் சனங்களும், சிறு தேரின் மீது செய்து வைக்கப்பட்டுள்ள யானையின்மேற் சிறுவர்களையேற்றி மகளிர் பாராட்டுதலைக் கண்டுநிற்கும் சனங்களும் ஆகிய எல்லோரும், முன்னம் விராட நகரத்திற் பேடி வடிவங்கொண்டு சென்ற அருச்சுனனைக்கண்டு வியந்து சூழ்ந்துகொண்டவர்களைப் போல மணிமேகலையைச் சூழ்ந்துகொண்டு, "மிக்க அழகையுடைய இவளைத் தவவழியிற் புகுத்திய தாய் மிகவும் கொடியவள்; இவள் பூப்பறித்தற்குச் சோலையிற் புகுவாளாயின், ஆங்குள்ள அன்னப்பறவைகள் முதலியன இவள் நடை முதலியவற்றைக் கண்டு என்ன பாடுபடா!'' என்று இவைபோல்வனவற்றைச் சொல்லி அவளுடைய அழகைப் பாராட்டி மிகவும் வருந்தி நின்றனர். மணிமேகலை, சுதமதியோடு மெல்லச்சென்று உவவனத்தில் மலர்கொய்தற்குப் புகுந்தாள்.

௪.—பளிக்கறைபுக்ககாதை.

புகுந்தவள், அச்சோலையின் வளங்களையும் ஆங்குள்ள பொய்கையின் அழகையும் சுதமதிகாட்டக் காண்பாளாயினள்.

அவள் அங்கே அப்படியிருக்க, மதவெறிகொண்டு தெருத்தோறும் சனங்களை வருத்தித் திரிந்ததான காலவேகமென்னும்

யானையின் மதத்தை யடக்கித் தேரேறிச் சேனையுடன்வரும் உதய குமரன் நாடகக் கணிகையர் வீதியில் ஒரு மாடத்தே மலரணை மேற் காதற்பரத்தை யொருத்தியோடு யாழின் கோட்டைத் தழு விக்கொண்டு மயங்கிப் பாவை போலிருந்த எட்டிகுமரனைத் தெருப்பக்கத்திலுள்ள சாளர வழியாற் கண்டு, "நீ அடைந்த துன்பம் யாது?" என்றான். உடனே அவன் துணுக்குற்றெழுந்து விரைந்து அருகே சென்று உதயகுமரனை வணங்கித் துதித்து, "இயற்கை யழகுகெட்டு மலர்வனத்திற்கு இவ்வீதி வழியே நடந்து செல்லும் மணிமேகலையைக் கண்டேன்; கண்டவுடன் அவளது தந்தையாகிய கோவலன் மதுரையிலடைந்த கொடுந்துன்பம் நினைவிற்கு வந்து என் மனத்திண்மையை மாற்றி இந்த யாழி லுள்ள பகைநரம்பில் என் கையைச் செலுத்தியது; இதுவே நான் அடைந்த வருத்தம்" என்று சொல்ல, பலநாளாக மணிமேகலையை விரும்பிக்கொண்டேயிருந்த உதயகுமரன், அவன் சொல்லால், அவள் சோலை சென்றாளென்பதை அறிந்து மகிழ்ந்து, "அங்கே போய் மணிமேகலையை என் தேரிலேற்றிக்கொண்டு வருவேன்" என்று அவனுக்குச் சொல்லிவிட்டுத் தேரைச்செலுத்திச் சென்று உவவனத்தின் மதில்வாயிலை யடைந்தான்.

மணிமேகலை அத்தேரொலியைக் கேட்டுச் சுதமதியை நோக்கி, "உதயகுமரன் என்மேல் மிக்க விருப்பமுடையவ னென்று மாதவிக்கு வயந்தமாலை சொல்லியதை முன்னங் கேட் டுள்ளேன்; இஃது அவனுடைய தேரொலிபோலும்; இத்துன்பத் திற்கு யாது செய்வேன்?" என்றாள். அதைக்கேட்ட சுதமதி அவ்ளை ஆங்குள்ள பளிக்கறையிற் புகுத்தித் தாழக்கோலிட்டுக் கொண்டு உள்ளே இருக்கச் செய்துவிட்டு, தான் அப்பளிக்கறைக்கு ஐந்து விற்கிடைத் தூரத்தே நின்றாள். அங்ஙனம் நின்ற சுதமதி யைச் சோலையினுள்ளேவந்த உதயகுமரன் கண்டு, "யாருமில்லாத இவ்விடத்தே நின்றாய்; நீ மணிமேகலையுடன் வந்தாயென்று அறிந்துகொண்டேன்; அவள் முதுக்குறைவுற்றனளோ? அவளு டைய செவ்வாய் நகைத்தலைப் பெற்றதோ? கண்கள் பிறழ்ந்து உலாவி வேட்கையைப் புலப்படுத்துமோ? அவள் பௌத்த சங்கத் தாரிருப்பிடத்தை நீங்கி இவ்விடம் வந்ததற்குக் காரணம் யாது? சொல்வாய்" என்று தனது வேட்கை தோன்ற வினவினன்.

அப்பொழுது சுதமதி, வாயிலில்லாத அறையில் அகப்பட் டோர் போல மனம்வருந்தி, "இளமைப்பருவத்திலேயே முதுமை

வேடம் பூண்டு வழக்கைக்கேட்டு உண்மையை வெளிப்படுத்திய சோழன் கரிகாற் பெருவளத்தானுடைய வழித்தோன்றலே! நீ ஆண்டில் இளையையாயினும் அறிவில் முதியையல்லையோ? உனக்கு மகளிர் தெரிவித்தற்குரியனவும் உளவோ? ஆயினும், ஒன்று தெரிவிப்பேன்? கேட்டருளுக:

> வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
> புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
> மூப்புவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
> பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்
> புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
> அவலக் கவலை கையா றழுங்கல்
> தவலா வுள்ளந் தன்பா லுடையது
> மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
> மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய்" (கக௩ - உக)

என்று உடம்பினியல்பைக்கூறினள். அவள் அங்ஙனங்கூறிய இனியவார்த்தை உதயகுமரனதுகாதை அடையுமுன்னே பளிக்கறையினுள்ளேயிருந்த மணிமேகலையினுருவம் அவன்கண்ணுக்குத் தோற்றியது.

ரு.—மணிமேகலாதெய்வம் வந்துதோன்றியகாதை.

தோற்றியவுடன், அவ்வடிவத்தை மணிமேகலையின் வடிவமென்று நிச்சயித்து அப்பளிக்கறையினுள்ளே சென்றடைதற்கு நினைந்த உதயகுமரன், அதன்வாயில் காணப்படாமையால் அஃது இன்னவிடத்திலுள்ளதென்பதை அறிந்துகொள்ளுதற்குப் பளிக்குச் சுவரைக் கையால் தடவிக்கொண்டு சூழ்ந்து வந்தான்; வந்தவன் சுதமதியைப்பார்த்து, "மணிமேகலை எத்திறத்தினள்? சொல்" என்றான். என்றவனுக்குச் சுதமதி, "அவள் தவவொழுக்கமுடையவள்; குற்றஞ் செய்தாரைச் சபிக்கும்வன்மையையு முடையவள்; சிறிதும் காமவிகாரமில்லாதவள்; ஆதலின் நீ அவளை விரும்புதல் தக்கதன்று" என்று கூறினள். கூறவே, "அவள் எத்தன்மையளாயினும் ஆகுக; எப்படியும் எனக்கு உரியளாகக்கடவள்" என்று சொல்லிக்கொண்டு செல்பவன், மீட்டும் சுதமதியைப் பார்த்து, "துறவொழுக்கம் பூண்ட சமண மாதர்களின் நடுவே ஒருவித்தியாதரனால் இடப்பட்டவளென்று

எல்லாராலுங் கூறப்படும் நீ அவரைநீங்கிப் பௌத்தசங்கத்தைச் சார்ந்த மாதவியின் மகளுடன் வந்ததற்குக் காரணம் யாது? சொல்வாய்" என்றான்.

அதுகேட்ட சுதமதி, "அரச! யான் சண்பைநகரத்துள்ள கௌசிகனென்னும் அந்தணனுடைய மகள்; என் இளமைப்பருவத்தில் அன்னை இறந்தாள்; அவளிறந்தபின்பு தந்தையால் ஆதரிக்கப்பட்டுவந்த நான் ஒரு சோலையிற்சென்று தனியே நின்று பூக்கொய்கையில் என்னை விரும்பி ஆகாயத்தே எடுத்துச் சென்று தன்வயமாக்கிக்கொண்ட வித்தியாதரனொருவனால் இடப்பட்டு இந்நகரத்திருந்தேன்; இதனையறியாத என் தந்தை என்னைக்காணாமல் வருந்தித் தேடிக்கொண்டே கன்னியாகுமரியாற்றிற்கு நீராடச்செல்பவர்களோடு சென்றார்; செல்லுகையில் இடையிலுள்ளதான இந்நகரத்துச் சங்கமுகத்துறையில் நீராடுதற்கு அந்தணர்களோடுவந்து என்னை இந்நகரிற்கண்டு, 'நீ இங்கே எப்படிவந்தனை?' என்றுவினவி வருந்தி, அந்தணர்களோடிருத்தற்கு நான் தகுதியில்லேனாயினும் என்னிடத்து மிக்க அன்புடையவராதலின், அவர் என்னைக் கைவிடாதவராகி மனைதோறும் பிச்சையெடுத்து உண்பித்துத் தாமும் உண்டு பொழுது கழிப்பாராயினர். அப்படியிருக்கையில் ஒருநாள், அவர் பிச்சையெடுத்தற்குச் செல்லும்பொழுது இளங்கன்றையுடைய ஒருபசு அவரை முட்டி வயிற்றைக் கிழித்துவிட்டது; அதனாற் சரிந்தகுடரைக் கையிலேந்திக்கொண்டு நானிருந்தவிடமென்று முன்பு அறிந்தவராதலாற் சமணப்பள்ளியிற்புகுந்து, 'முனிவர்களே! யான் உங்களடைக்கலம்; என்னைப் பாதுகாக்கவேண்டும்' என்று முறையிட்டார்; அதைக்கேட்ட அவர்கள் சினந்து அவரை என்னோடும் புறத்தே தள்ளிவிட்டனர். நாங்களிருவரும் மிக்க துக்கமுடையவர்களாய்ப் புறவீதியிற்சென்று, 'கதியற்ற எம்மைப் பாதுகாக்கும் அறவோர் யாரேனுமுண்டோ?' என்று புலம்பி முறையிட்டோம்; அப்பொழுது மனைதோறும் சென்று ஐயமெடுக்கும் பாத்திரத்தையேந்திய கையையுடையவனும் முழுமதிபோன்ற முகத்தினனும் பொன்னிறமுள்ள சீவர ஆடையினனுமாகிய சங்கதருமனென்னும் முனிவன் விரைந்துவந்து, 'என்னதுன்பம் அடைந்தீர்கள்?' என்று எம்மை அருளுடன் பார்த்து இனிய மொழிகளைக் காதுகளில் நிறைத்து எம்மனத்தைக் குளிர்

வித்து உடனே தன் கையிலுள்ள பிச்சைப்பாத்திரத்தை என் கையிற் கொடுத்துவிட்டு என் தந்தையின் துன்பம் முற்றும் நீங்கும்படி அவரைத் தழுவி எடுத்துக்கொண்டு சென்று பௌத்த சங்கத்தார் இருப்பிடத்தைக்காட்டி என் தந்தையின் மரணத்துன்பத்தையும் நீக்கினன். அம் முனிவன் எனக்குச் செவியறிவுறுத்திய,

எங்கோ னியல்குண னேதமில் குணப்பொருள்
உலக நோன்பிற் பலகதி யுணர்ந்து
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
இன்பச் செவ்வி மன்பதை யெய்த
அருளறம் பூண்ட வொருபெரும் பூட்கையின்
அறக்கதி ராழி திறப்பட வுருட்டிக்
காமற் கடந்த வாமன் (எக - எ)

பாதங்களையே என்னுடைய நாவானது இடைவிடாமற் பாராட்டுமேயல்லாமல் வேறொன்றையும் சொல்ல அறியாது; அதுமுதல் பௌத்த சங்கத்தைச் சார்ந்திருந்த மாதவியிடத்தில் உறைவேனாயினேன்; அதனால் இவளுடன் வந்தேன்" என்று கூறினள். அது கேட்ட உதயகுமரன், "உனதியல்பைஅறிந்துகொண்டேன்; மணிமேகலையைச் சித்திராபதியால் இனி அடைதலுங் கூடும்" என்று சொல்லிவிட்டுக் காமபரவசனாய் அச் சோலையினின்றும் போயினன். போனவுடன் மணிமேகலை பளிக்கறையினின்றும் வெளியேவந்து சுதமதியை, நோக்கி, "அன்பிலனென்றும் தவவுணர்ச்சி யில்லாதவளென்றும் வருணக்காப்பிலளென்றும் விலைமாதென்றும் என்னை உதயகுமரன் இகழ்ந்தானென்றுநினையாமல் அவன் பின்னே என்னுடைய நெஞ்சமானது செல்லுதலுற்றது; இதற்குக் காரணம் யாது? காமத்தினியல்பு இதுவோ?" என்று சொல்லிக்கொண்டு நின்றாள். நின்றபொழுது, இந்திரவிழாவைக் காணுதலுற்ற மணிமேகலாதெய்வம் அவர்களுக்குத் தெரிந்தவளும் மாயவித்தை செய்பவளுமாகிய ஒரு மடந்தை வேடம்பூண்டு அச் சோலையையடைந்து பளிக்கறையிலுள்ள ஸ்ரீ பாதபீடிகையை வலங்கொண்டு உயர எழும்பி நின்று,

"புலவன் றீர்த்தன் புண்ணியன் புராணன்
உலக நோன்பி னுயர்ந்தோ யென்கோ
குற்றங் கெடுத்தோய் செற்றஞ் செறுத்தோய்
முற்ற வுணர்ந்த முதல்வா வென்கோ

காமற் கடந்தோ யேம மாயோய்
தீநெறிக் கடும்பகை கடிந்தோ யென்கோ
ஆயிர வாரத் தாழியந் திருந்தடி
நாவா யிரமிலே னேத்துவ தெவன் !" (௯௮ - ௧௦௫)

என்று துதிக்கத் தொடங்கியது; அங்ஙனம் துதித்துக்கொண்டிருக்கையிற் பகற்காலம் நீங்க அந்திமாலை வந்தது.

௬.—சக்கரவாளக் கோட்ட முரைத்த காதை.

வந்த அந்திமாலைப் பொழுதுநீங்க, சந்திரன் உதயமாயினன். மணிமேகலா தெய்வம் மீட்டும்,

ஆதி முதல்வ னறவாழி யாள்வோன்
பாத பீடிகை பணிந்து (௧௧ - ௨)

ஏத்தி அங்கே வாடிநின்ற சுதமதியைப்பார்த்து, "நீங்கள் இங்கே நின்றதற்குக் காரணம் யாது? என்ன துன்பமடைந்தீர்கள்?" என்று கேட்க, சுதமதி உதயகுமரன் மணிமேகலையை விரும்பிச் சொல்லிய சொல்லையும், பின்பு சித்திராபதியால் அவளைப் பெறலாமென்று அவன் எண்ணிச் சென்றதையும் கூறினாள்; கூறலும் அத்தெய்வம் அவளைப் பார்த்து, "உதயகுமரனுக்கு மணிமேகலைபாலுள்ள ஆசை சிறிதும் தணிவுற்றிலது; 'இது முனிவர்களுடைய தவவனம்; இதில் யாம் தீங்கு செய்யலாகாது' என்றெண்ணியே அவன் இச் சோலையை நீங்கினன்; இவள் இதனைக்கடந்து செல்வாளாயின், புறவீதியில் அவன் இவளை அகப்படுத்திக்கொள்ளுவான்; இஃது உண்மையே; நீங்கள் இச் சோலையைச் சூழ்ந்த மதிலின் மேற்றிசைக் கண்ணதாகிய சிறியவாயில் வழியேபோய் முனிவர்களுக்கு இருப்பிடமாகிய சக்கரவாளக் கோட்டத்திற் செல்லுக; சென்றால் ஒருபொழுதும் யாதொரு துன்பமும் அணுகாது" என்று சொல்லியது. சொல்லலும், சுதமதி, "மாருதவேகனும் நீயுமே அதனைச் சக்கரவாளக் கோட்டமென்று சொல்லுவீர்; மற்றையோர் யாவரும் சுடுகாட்டுக் கோட்டமென்றே சொல்லாநிற்பர்; சக்கரவாளக் கோட்டமென்றதற்குக் காரணம் யாது? அதனைச் சொல்லுக" என்றாள்.

என்றலும் அத்தெய்வம், "காவிரிப்பூம்பட்டினந்தோன்றிய காலத்தே உடன்றோன்றியதான நன்காடு இச்சோலையின் பக்கத்தேயுள்ளது. அது நாற்புறத்தும் வாயில்களையுடைய மதிலாற்சூழப்

பட்டது; காளிகோட்டத்தினையும், அருந்தவர் அரசர் கணவனிறக்க வுடனேயிறந்தமடவார் ஆகிய இவர்களுள் இன்னாரின்னார் இன்ன இன்னவிடத்தே புதைக்கப்பட்டாரென்பதற்கு அறிகுறியாக அவரவர்கள் வருணம் ஆச்சிரமம் முதலியவற்றிற்கும் அவரவர்கள் தகுதிக்கும் ஏற்பச் சிறியனவும் பெரியனவுமாகக் கட்டப்பட்டுள்ள பற்பலகோட்டங்களையும், மயானதெய்வங்களுக்குப் பலியிடுதற்கு உரிய தூண்களையும், கற்களை நிறுத்திச் செய்யப்பட்டுள்ள திண்ணைகளையும், காவற்காரர் உண்பதற்கும் உறங்குவதற்கும் அமைந்துள்ள குடிசைகளையும், தோரணங்களையும் பந்தர்களையுமுடையது; பிணங்களைச் சுடுதற்கும் சும்மாபோடுதற்கும் குழியிற் புதைத்தற்கும் உள்ளேவைத்து வாயிலையடைத்தற்கும் தாழியாற் கவித்தற்குமாக இரவும் பகலும் வருபவர்களுடைய ஓசையும், அங்ஙனம் வந்து செல்பவர்களுடைய ஓசையும், சாப்பறைகளின் ஓசையும், இறந்த துறவிகளைத் தொழுபவர் ஓசையும், மற்றையோர்பொருட்டு அழுபவர் ஓசையும், நரியின் கூக்குரலோசையும், செத்தோரையழைக்கும் பேராந்தைகளினோசையும், கோட்டானுடையகுரலும், ஆண்டலைப்பறவைகளின் குரலும் அம்மயானத்தில் மிகுதியாகவுண்டு; தான்றி, ஒடுவை, உழிஞ்சில், கான்றை, சூரை, கள்ளி முதலிய பற்பல மரவிசேடங்களும் அங்கே அடர்ந்துள்ளன; பேய்கள் நெருங்கியுள்ள வாகைமரம் நிற்கும் மன்றங்களையும், நிணத்தோடு இறைச்சிகளைத்தின்று மகிழ்ந்து பறவைகள் தங்கியுள்ள விளாமரம் நிற்கும் மன்றங்களையும், காபாலிகசமயத்தோர் வாழும் வன்னிமரம்நிற்கும் மன்றங்களையும், விரதத்தாலிளைத்த உடம்பையுடையசிலர் உடைந்த தலைகளை மாலையாகக்கட்டும் இலந்தைமரம் நிற்கும் மன்றங்களையும், பிணங்களைத்தின்போர் களித்துவாழும் வெளியான இடங்களையுடைய மன்றங்களையும் அம்மயானம் உடையது; நெருப்பிருந்தபாண்டங்களும் மண்டைகளும் பாடைகளும் அறுத்தெறிந்த மாலைகளும் உடைந்த குடங்களும் நெற்களும் பொரிகளும் சிறுபலியாக இடப்பட்ட அரிசிகளும் எங்கும் பரவப்பெற்றது;

தவத்துறை மாக்கண் மிகப்பெருஞ் செல்வர்
ஈற்றிளம் பெண்டி ராற்றுப் பாலகர்
முதியோ ரென்னு னிளையோ ரென்னுன்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்பவிவ்

வழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ! (௯௭ - ௧௦௪)

இத்தன்மையதான அச்சுடுகாட்டைப் பார்ப்பனச்சிறுவனாகிய சார்ங்கலனென்னும் ஒருவன், நகரமாக நினைந்து அதில் தனியே சென்று அங்கே களித்தாடிய பேயொன்றைக்கண்டு அஞ்சி அதனால் தாக்கப்பட்டுக் கதறிக்கொண்டு ஓடித் தன் தாயாகிய கோதமையையடைந்து, 'சுடலையிலுள்ள பேய்க்கு என்னுயிரைக் கொடுத்தேன்' என்று சொல்லி அவள்முன் வீழ்ந்து இறந்தான்; உடனே கோதமை, 'முதுமைப்பருவமடைந்து தளர்ந்த பார்ப்பானும் யானும் கண்ணிழந்துள்ளேமென்பதையும் வேறு புகலில்லேமென்பதையும் நினையாமல் எங்கள் மைந்தனுடைய உயிரையுண்டது அணங்கோ! பேயோ! அறிகிலேனே!' என்று புலம்பிக்கொண்டு தன் அருமைப்புதல்வனுடைய உடம்பையெடுத்து மார்போடு தழுவிச்சென்று சுடுகாட்டைச்சூழ்ந்த மதில்வாயிலையடைந்துநின்று, 'சம்பாபதீ! நீர்த்துறைகளிலும் மன்றங்களிலும் பழைய மரஅடிகளிலும் கோட்டங்களிலும் வேறிடங்களிலும் இருந்து யாருக்கும் எந்தச் சமயத்தும் யாதொருதீங்கும் அணுகா வண்ணம் பாதுகாத்தருளும் நீ என்மகனைக் காவாதொழிந்ததற்குக் காரணம் யாது? நின்பால் நடுவு நிலைமையில்லையோ? இனி யான் என்செய்வேன்!'' என்று வருந்தி முறையிட்டாள்.

"முறையிடவே சம்பாபதிவந்து, 'இவ்விரவில் இம்மயானத்திற் பேய்கள் போக்குவரவுசெய்யும் வாயிலில் நின்று மிக்க வருத்தமடைந்து நீ என்னை அழைத்ததற்குக் காரணம் யாது? சொல்வாய்' என்ன, கோதமை நிகழ்ந்ததைக் கூறினள். சம்பாபதி, 'உன் மகனுயிரை அணங்கும் பேயும் கவர்ந்தில; அவனுடைய அறியாமையையே பற்றுக்கோடாகக்கொண்டு இழவூழே அவனுயிரைக் கவர்ந்துசென்றது' என்று கூறினள். கூறலும், கோதமை, 'என்னுயிரை வாங்கிக்கொண்டு இவனுயிரை நீ தந்தருள்வாயாயின், இவன் கண்ணற்ற தந்தையைக் காத்தளிப்பான்; ஆதலால், அங்ஙனம் செய்தருள்வாயாக' என்று வேண்டினள். சம்பாபதி மனமிரங்கி, 'உயிர் உடம்பைவிட்டுநீங்கின் அது வினைவழியேசென்று வேறு பிறப்பை அடையாநிற்கும்; இதில் ஏதேனும் ஐயமுண்டோ?

வழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ! (௯௭ - ௧0௪)

இத்தன்மையதான அச்சுடுகாட்டைப் பார்ப்பனச்சிறுவனாகிய சார்ங்கலனென்னும் ஒருவன், நகரமாக நினைந்து அதில் தனியே சென்று அங்கே களித்தாடிய பேயொன்றைக்கண்டு அஞ்சி அதனால் தாக்கப்பட்டுக் கதறிக்கொண்டு ஓடித் தன் தாயாகிய கோதமையையடைந்து, 'சுடலையிலுள்ள பேய்க்கு என்னுயிரைக் கொடுத்தேன்' என்று சொல்லி அவள்முன் வீழ்ந்து இறந்தான்; உடனே கோதமை, 'முதுமைப்பருவமடைந்து தளர்ந்த பார்ப்பானும் யானும் கண்ணிழந்துள்ளேமென்பதையும் வேறு புகலில்லேமென்பதையும் நினையாமல் எங்கள் மைந்தனுடைய உயிரையுண்டது அணங்கோ! பேயோ! அறிகிலேனே!' என்று புலம்பிக்கொண்டு தன் அருமைப்புதல்வனுடைய உடம்பையெடுத்து மார்போடு தழுவிச்சென்று சுடுகாட்டைச்சூழ்ந்த மதில்வாயிலையடைந்துநின்று, 'சம்பாபதி! நீர்த்துறைகளிலும் மன்றங்களிலும் பழைய மரஅடிகளிலும் கோட்டங்களிலும் வேறிடங்களிலும் இருந்து யாருக்கும் எந்தச் சமயத்தும் யாதொருதீங்கும் அணுகா வண்ணம் பாதுகாத்தருளும் நீ என்மகனைக் காவாதொழிந்ததற்குக் காரணம் யாது? நின்பால் நடுவு நிலைமையில்லையோ? இனி யான் என்செய்வேன்!'' என்று வருந்தி முறையிட்டாள்.

"முறையிடவே சம்பாபதிவந்து, 'இவ்விரவில் இம்மயானத்திற் பேய்கள் போக்குவரவுசெய்யும்வாயிலில் நின்று மிக்க வருத்தமடைந்து நீ என்னை அழைத்ததற்குக் காரணம் யாது? சொல்வாய்' என்ன, கோதமை நிகழ்ந்ததைக் கூறினள். சம்பாபதி, 'உன் மகனுயிரை அணங்கும் பேயும் கவர்ந்தில; அவனுடைய அறியாமையையே பற்றுக்கோடாகக்கொண்டு இழவூழே அவனுயிரைக் கவர்ந்து சென்றது' என்று கூறினள். கூறலும், கோதமை, 'என்னுயிரை வாங்கிக்கொண்டு இவனுயிரை நீ தந்தருள்வாயாயின், இவன் கண்ணற்ற த்ந்தையைக் காத்தளிப்பான்; ஆதலால், அங்ஙனம் செய்தருள்வாயாக' என்று வேண்டினள். சம்பாபதி மனமிரங்கி, 'உயிர் உடம்பைவிட்டுநீங்கின் அது வினைவழியேசென்று வேறு பிறப்பை அடையாநிற்கும்; இதில் ஏதேனும் ஐயமுண்டோ?

கோட்டமெனப் பெயர்பெற்றது; இது சுடுகாட்டைச் சூழ்ந்த மதிலின்புறத்தேயுள்ளதாதலாற் சுடுகாட்டுக்கோட்டமென்று எல்லோராலும் கூறப்படும்; இதன் வரலாறு இதுவாகும்" என்று சொல்லக்கேட்டுக்கொண்டிருந்த மணிமேகலை, "மனிதர் வாழ்க்கை இத்தன்மைத்து" என்று சொன்னாள். அவள் அங்கே அப்படியிருக்கையில், சுதமதி தூங்குதலுற்றனள்; அப்பொழுது அத்தெய்வம் தன் வித்தையால் மயக்கி மணிமேகலையைத் தழுவியெடுத்துக் கொண்டு ஆகாயவழியே முப்பது யோசனையளவு தெற்கே சென்று கடல்சூழ்ந்த மணிபல்லவமென்னும் சிறுதீவை யடைந்து அதில் அவளை வைத்துவிட்டுச் சென்றது.

எ.—துயிலெழுப்பியகாதை.

சென்ற மணிமேகலாதெய்வம், "விடிந்தால் மணிமேகலையை எப்படியும் நான் அகப்படுத்திக்கொள்வேன்" என்று எண்ணிக்கொண்டு காமபரவசனாய்த் துன்பமுற்றுத் தூங்காமலேயிருந்த உதயகுமரன்முன்னே சென்று அவன் காண நின்று,

"........................மன்னவன் மகனே
கோணிலை திரிந்திடிற் கோணிலை திரியும்
கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்
மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை
மன்னுயி ரெல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயி ரென்னுந் தகுதியின் றாகும்
தவத்திறம் பூண்டோ டன்மேல் வைத்த
அவத்திற மொழிக" (எ - கச)

என்று அவனுக்குச் சொல்லிவிட்டுப் பின்பு உவவனஞ் சென்று அங்கே தூங்குகின்ற சுதமதியை யெழுப்பி, "யான் மணிமேகலா தெய்வம்; இந்நகரில் நடக்கும் இந்திரவிழாவைக்காணுதற்கு வந்தேன். நீ அஞ்சாதே; பௌத்த சமயவழியே செல்லுதற்குரிய நற்காலம் மணிமேகலைக்கு உண்டாயிற்று; ஆதலால், அவளை எடுத்துக்கொண்டு சென்று மணிபல்லவத்தில் வைத்தேன்; தன்னுடைய முற்பிறப்பில் நிகழ்ந்த செய்தியையும் அறிந்துகொண்டு அவள் இற்றைக்கு ஏழாவது நாளில் இங்கே வந்து சேருவாள். இந்நகரில் வேறு வடிவங்கொள்வாளாயினும் அவள் உனக்கு ஒளிப்

பாளல்லள்; அவள் இங்கே புகும் நாளில் இந்நகரின்கண்ணே பல அற்புதங்கள் நிகழும். நான் வந்ததையும் மணிமேகலை நல்ல வழியிற் சென்றதையும் மாதவிக்குச் சொல்வாயாக; மாதவி முன்னமே என்னை யறிவாள்; கோவலன், 'நமது குலதெய்வத்தின் பெயரை இக்குழந்தைக்கு இடுக' என்று சொல்லி, என் பெயரை இவளுக்கு (மணிமேகலைக்கு) வைத்த நாளின் இரவில் மாதவியின் கனவிற் சென்று, 'காமன் செயலற்று ஏங்கும் வண்ணம் ஆசையை முற்றக்கெடுக்கும் தவமாதைப்பெற்றாய்' என்று நனவிற்கூறுவது போல யான் கூறியதுண்டு; இதனையும் அவளுக்கு நினைப்பூட்டுவாயாக" என்று கூறிப்போயிற்று.

அப்பாற் சுதமதியெழுந்து மணிமேகலையின் பிரிவால் வருந்தி அச்சோலையைச் சூழ்ந்த மதிலின் மேற்கேயுள்ள சிறிய வாயில் வழியே சென்று சக்கரவாளக் கோட்டத்தையடைந்து ஆங்குள்ள உலகவறவியின் ஒரு பக்கத்தேயிருந்தாள். அவள் அப்படியிருக்கும்பொழுது அவ்விடத்தே தூணிலுள்ள பாவையொன்றை அதிட்டித்திருக்குந் தெய்வமொன்று சுதமதி மயங்கி அஞ்சும்படி,

"இரவி வன்ம னொருபெரு மகளே
துரகத் தானைத் துச்சயன் றேவி
தயங்கிணர்க் கோதைத் தாரை சாவுற
மயங்கி யானைமுன் மன்னுயிர் நீத்தோய்
காராளர் சண்பையிற் கௌசிகன் மகளே
மாருத வேகனோ டிந்நகர் புகுந்து
தாரை தவ்வை தன்னொடு கூடிய
வீரை யாகிய சுதமதி கேளாய் (கூஅ - கoஙு)

உன் தங்கையாகிய இலக்குமி தன்னுடைய முற்பிறப்பையும் உன்னுடைய முற்பிறப்பையும் அறிந்துகொண்டு இற்றைக்கு ஏழாம் நாளிரவில் இந்நகரத்தே வருவாள்; அவள் பிரிந்ததுபற்றி நீ அஞ்சற்க" என்று தன்னுடைய வாக்காற் கூறிற்று. அதனைக்கேட்டு மனம் நடுங்கிய சுதமதி, பொழுது புலருமளவும் அவ்விடத்தேயிருந்து சூரியன் உதித்தவுடன் எழுந்து புறப்பட்டு வீதிவழியே சென்று மாதவியை அடைந்து முதனாளில் நிகழ்ந்தவற்றைச் சொன்னவுடனே அவள் மாணிக்கத்தையிழந்த நாகம்போன்று மிக்க துயரத்தோடிருந்தாள். சுதமதி மணிமேகலையின் பிரிவாற்றாமையால் உயிரிழந்த உடம்புபோலச் செயலற்றிருந்தனள்.

அ.—மணிபல்லவத்துத்துயருற்றகாதை.

சுதமதி இங்கே இப்படியிருக்க, மணிபல்லவத்திற் கடலருகே மணலிற்றுயின்ற மணிமேகலை, துயிலுணர்ந்து தன்க்குத் தெரிந்த பொருள் யாதொன்றும் அங்கே காணப்படாமையால், முன்பிருந்த இடத்தைத் துறந்து வேற்றிடத்துச் சென்று பிறந்த உயிர் போன்றவளாகித் திகைத்துக் கொண்டிருக்கையிற் சூரியன் உதித்தான். உதித்தவுடன் அவள், "இவ்விடம், உவவனத்தில் முன்னம் கண்டறியப்படாத ஒரு பகுதியோ!

சுதமதி யொளித்தாய் துயரஞ் செய்தனை
நனவோ கனவோ வென்பதை யறியேன்
மனநடுக் குறூஉ மாற்றந் தாராய்
வல்லிருள் கழிந்தது மாதவி மயங்கும்
மெல்வளை வாராய் விட்டகன் றனையோ! (உ0 - உச)

இது மாயவித்தையோடு தோன்றிய அம்மடந்தை செய்த வஞ்சமோ! ஒன்றும் தெரியவில்லையே! தனியே இருத்தற்கு மிகவும் அஞ்சுகின்றேன்; நீ விரைந்து வருவாயாக" என்று சொல்லிக்கொண்டு பல நீர்த்துறைகளிலும் பல மணற்குன்றங்களிலும் சென்று தேடித் தனக்குத்தெரிந்த ஒருவரையுங் காணாதவளாகிக் கூக்குரலிட்டு அழுது வருந்துபவள், தன் தந்தையை நினைந்து,

"கோற்றொடி மாதரொடு வேற்றுநா டடைந்து
வைவா ளுழந்த மணிப்பூ ணகலத்
தையா வோ" என்று அழுவோண் முன்னர், (சக - ந)

இந்திரனாலிடப்பட்டதும் தரிசித்தோர்க்குப் பழம்பிறப்பைத் தெரிவிப்பதுமாகிய புத்த பீடிகை தோன்றியது.

கூ.—பீடிகைகண்டு பிறப்புணர்ந்தகாதை.

தோன்றலும் அதனைக்கண்ட மணிமேகலை, விம்மிதத்தால் தன்னை அறியாளாயினாள்; அவளுடைய கைகள் தலைமேற் குவிந்தன; பின்பு ஆனந்தக்கண்ணீரையுகுத்து அப்பீடத்தை மூன்று முறை வலம்வந்து பணிந்து எழுபவள். அப்பீடிகைக் காட்சியால் தன் பழம்பிறப்பில் நிகழ்ந்த செய்திகளையறிந்து, "மாதவ! உறுதிப்பொருளை யுணர்ந்தோய்! காயங்கரை யென்னும் நதிக்கரையில் நீ சொல்லியவெல்லாம் உண்மையாதலை விளங்க அறிந்தேன்: காந்தாரமென்னும் பெரியதொரு நாட்டிலுள்ள பூருவ

தேசத்தில் இடவயமென்னும் நகரை இராசதானியாகக் கொண்டு அரசுபுரிந்து வாழும் அத்திபதி யென்னும் அரசனுடையமைந்தனாகிய பிரமதருமா! நீ அவ்வரசனிடத்திற் சென்று தருமோபதேசம் புரிகையில், "இச்சம்புத்தீவில் இற்றைக்கு ஏழாம் நாளில் பூகம்பமுண்டாகும்; 'உண்டாகும் பொழுது இந்நகரும் நாக நாட்டில் நானூறு யோசனைப் பரப்பும் பாதலத்தில் வீழ்ந்து கெட்டொழியும்; ஆதலால், நீ இந்நகரத்தைவிட்டு விரைவில் வேறு நகரம் புகுவாய்' என்று சொல்ல, அவன் நகரத்தார் யாவருக்கும் அச்செய்தியைப் பறையறைவித்துச் சாற்றி எல்லாருடனும் அந்நகரை நீங்கி அதற்கு வடக்கேயுள்ள அவந்திநகரம் செல்லுதற்குப் புறப்பட்டு வழிக்கொண்டு இடையேயுள்ள காயங்கரையென்னும் நதிக்கரையை அடைந்து அங்கே பாடிவீடு செய்துகொண்டிருந்தபொழுது, ஐயா! நீ உரைத்தபடியே குறித்த நாளிற் பூகம்பமுண்டாக இடவயநகரம் அழிந்து போயிற்று; அதுதெரிந்த அரசனும் மற்றையோரும் உன்பால் அன்புமிக்கு உன்னைச் சரணமடைந்து சூழ்ந்துநின்ற காலத்தில், அவர்களுக்கு முத்திவழியை உபதேசித்துக் கொண்டிருந்தாய். இருந்தபொழுது, அசோதரநகரத்தரசனாகிய இரவிவன்மனென்பவனுடைய தேவியான அமுதபதியென்பவள் வயிற்றிற்பிறந்து இலக்குமியென்று பெயர் பெற்று, அத்திபதியென்னுமரசனுக்கு நீலபதி யென்பவள்பாற் பிறந்த இராகுலனுக்கு மனைவியாகப் புக்க யான் என் கணவனோடு வந்து தருமங்கேட்டற் பொருட்டு வணங்கியவுடன், நீ என்னை நோக்கி, 'இவ்விராகுலன் இற்றைக்குப் பதினாறாம்நாளில் திட்டிவிடமென்னும் பாம்பால் இறப்பான்; நீ இவனோடு தீயிற் புகுவாய்; புகுந்து. பின்பு காவிரிப்பூம்பட்டினத்திற் சென்று பிறப்பாய்; அவ்விடத்தில் உனக்கு ஒரு துன்பம் வரும்; அப்பொழுது மணிமேகலா தெய்வம் வந்து தோன்றி நள்ளிரவில் உன்னை யெடுத்துக்கொண்டு சென்று காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கே கடலிலுள்ள சிறுதீவொன்றில் வைத்துவிட்டுச் செல்லும்; சென்றபின் ஆங்குள்ள புத்தபீடிகையைத் தரிசித்துத் தொழுவாய்; தொழுதவுடன் உனது முற்பிறப்பில் நிகழ்ந்த செய்திகளையறிந்து இன்று நான் சொன்ன மொழிகளையும் தெரிந்துகொள்வாய்' என்று சொல்ல, 'என் கேள்வன் இன்னவாறு பிறப்பானென்பதையும் தெரிவிக்கவேண்டும்' என்று கேட்டேன்; கேட்ட எனக்கு, 'உன்னைக்கொண்டு சென்ற தெய்வம் மீட்டுங்

தோன்றி உனக்கு அதனைப் புலப்படுத்தும்' என்று அருளிச்செய்தாய்; அத் தெய்வம் வரவில்லையே!'' என்று ஏங்கி அழுதுகொண்டிருந்தாள்.

௧௦.—மந்திரங்கொடுத்தகாதை.

மணிமேகலை இப்படியிருக்கையில், "புத்தபீடிகை காட்டியால் இவள் பழம்பிறப்பையறிந்தாள்; இவளுடைய இயற்கையும் அழகியது'' என்றெண்ணிக்கொண்டு ஆகாயத்தினின்றும் இறங்கி வந்த மணிமேகலா தெய்வம், அவள் கேட்கும்படி,

> " உயிர்க ளெல்லா முணர்வுபா ழாகிப்
> பொருள்வழங்கு செவித்துளை தூர்த்தறி விழந்த
> வறந்தலை யுலகத் தறம்பா டறிக்கெனச்
> சுடர்வழக் கற்றுத் தடுமாறு காலை
> யிளவள ஞாயிறு தோன்றிய தென்ன
> நீயோ தோன்றினை நின்னடி பணிந்தேன்
> நீயே யாகிநிற் கமைந்தவிவ் வாசனம்
> நாமிசை வைத்தேன் றலைமிசைக் கொண்டேன்
> பூமிசை யேற்றினேன் புலம்பறுக " (௫ - ௧௩)

என்று புத்ததேவருடைய பீடிகையை அவராகவே மதித்துத் துதித்து வலம்வந்து பூசித்து வணங்கியது. வணங்கியதெய்வத்தை மணிமேகலை வணங்கி, "உன் திருவருளால், என்னுடைய முற்பிறப்பை அறிந்தேன்; அப்பிறப்பிற் கணவனாகவிருந்த இராகுலன் எங்கே பிறந்துள்ளான்?'' என்று கேட்டாள்.

கேட்டவளுக்கு அத் தெய்வம், "இலக்குமி! கேட்பாயாக: நீ ஒருநாள் சோலை பொன்றில் இராகுலனோடு ஊடியிருந்தாய்; இருந்தபொழுது அவன் ஊடலைத்தீர்த்தற்கு உனது அடியைவணங்கினான்; வணங்குகையில், இரத்தினத்தீவஞ்சென்று அங்கே தருமசக்கரத்தைப் பிரவிருத்திக்கச் செய்துவிட்டு வருபவனாகிய சாதுசக்கரனென்னும் பௌத்தசாரண முனிவனொருவன் உச்சிப்பொழுதில் ஆகாயத்தினின்றும் இறங்கிவர, நீ அவனைக் கண்டு மெய்ந்நடுங்கி மயங்கிக் கலங்கி ஒல்கிப் பணிந்தாய்; அது கண்ட இராகுலன், 'இங்கே வந்தவன்யார்?' என்று கோபித்துச் சொல்லவும், நீ அஞ்சி நடுநடுங்கி அவன் வாயைப் பொத்தி, 'ஆகாயத்தினின்றுமிறங்கிய இப் பெரியோனுடைய மலரடியை வணங்காமலும் இவனைத் துதியாமலும் இருந்தது எவ்வளவு பெரும்பிழை?' என்று அவனுக்குச் சொல்லி அவனோடும்

அம்முனிவனுடைய பாதங்களை வணங்கி, 'யாங்கள் தேவரீருடைய அடியேமல்லேமாயினும்,

அந்நீர் தண்ணீ ரமுதொடு கொணர்கேம் ; (௩௭)

அமுது செய்தருள்க ; தேவரீருடைய திருவுளப்பாங்கின்படியே நடத்தற்கு உரிமையுடையேம்' என்று தெரிவித்தலும், அம்முனிவன், 'தாயே! உண்பேன் ; இங்கே கொண்டு வருக' என்று சொல்ல, நீ உடனே அவற்றைக் கொணர்ந்து அவனை உண்பித்தாய் ;

அந்நா ளவனுண் டருளிய வவ்வறம்
நின்னுங் கொழியாது நின்பிறப் பறுத்திடும் ; (௪௦ - ௪௧)

அவ்விராகுலனே உவவனத்தில் உன்பால் வந்த உதயகுமரன். அதனாலே தான், அவனுடையமனம் உன்னை விரும்பியதன்றி உன் மனமும் அவனை மிகப்பற்றியது; அந்தப்பற்றை மாற்றி நல்வழிப் படுத்தற்கு நினைந்து உன்னை இத்தீவிற்கொணர்ந்து வைத்து இப் பீடிகையைக் காட்டினேன். இலக்குமீ! இன்னுங் கேட்பாயாக : முற்பிறப்பில் உன்னுடைய தமக்கைமாராயிருந்த தாரையையும் வீரையையும் அங்கநாட்டுள்ள கச்சயநகரத்தரசனாகிய துச்சயனென்பவன் மணஞ்செய்து கொண்டு ஒரு நாள் அவர்களோடு சென்று மலைவளங்களைக் கண்டு வந்து கங்கைக் கரையை அடைந்திருந்தபொழுது, அறவணவடிகள் அங்கே வரக்கண்டு உடனே எழுந்து வணங்கிய அவன், 'தேவரீர் யாவிர் ? எங்கே எழுந்தருளியது?' என்று கேட்க, அவர் 'பாதபங்கயமலையைத் தரிசித்தற்கு வந்தேன் ; ஆதிகாலத்தே புத்த தேவர் எல்லா உயிர்களுந்துக்கத்தினின்றும் நீங்கி இன்புற்றிருக்க வேண்டுமென்று நினைந்து அவைகள் யாவும் கேட்டு மகிழும்படி அம்மலையின் உச்சியில் நின்று கொண்டு தருமோபதேசஞ் செய்தபொழுது அவருடைய பாதச் சுவடுகள் தங்கப்பெற்றமையால், அஃது அப்பெயரையுடையதாயிற்று. குற்றமற்ற அறிவுடையீர்! நீங்களும் அதைத் தரிசித்து வழிபடுமின்' என்று கூறினர். அவர் கூறியவாறு உடனேசென்று அம்மலையை யடைந்து தரிசித்த புண்ணிய விசேடத்தால் தாரையும் வீரையும் முறையே மாதவியாகியும் சுதமதியாகியும் வந்து உன்னோடு கூடினர். மணிமேகலை! நீ பழம் பிறப்பையறிந்தாய் ; தருமத்தின் தோற்றத்தையும் தெரிந்துகொண்டாய் ; மற்றைச் சமயவாதிகளுடைய கொள்கைகளையும் இனி ஒரு காலத்திற் கேட்

பாய்; அங்ஙனம் கேட்கும்பொழுது உன்னை, 'இளமைப்பருவத்தினள்' என்று நினைந்து அவர்கள் தத்தம் சமய உண்மைகளைச் சொல்லார்கள்; ஆதலால், அக்காலத்து நீவேற்றுவடிவங்கொள்ள வேண்டுவது இன்றியமையாதது" என்று கூறி வேற்றுவடிவைக் கொடுப்பதும் ஆகாய வழியே சஞ்சரிக்கச் செய்வதுமாகிய மந்திரங்கள் இரண்டை அவளுக்கு உபதேசித்து, "நீ புத்ததேவர் அருளிச் செய்த நல்லற வழியை நணுகுதல் ஒருதலையென்று உணர்வாயாக; இப்பீடிகையை வணங்கித் துதித்து ஊர் செல்வாயாக" என்று சொல்லி விட்டு மேலே செல்லுதற்கு எழுந்து, "இன்னும் ஒன்றைச் சொல்ல மறந்து விட்டேனே" என்று மீட்டும் இறங்கி வந்து, "சிறந்த விரதவொழுக்கமுடையாய்! கேட்பாயாக: மக்கள் யாக்கை உணவாலாகிய தொகுதி; இம்மந்திரமோ பசியைத் தொலைக்கும்; இதனைக் கொள்க" என்று சொல்லி அம்மந்திரத்தை அவளுக்கு உபதேசித்து விட்டு எழுந்து ஆகாய வழியே சென்றது.

கக.—பாத்திரம்பெற்றகாதை.

அப்பால், மணிமேகலை அத்தீவிலுள்ள மணற்குன்றுகளையும் பூஞ்சோலைகளையும் குளிர்ந்த பொய்கைகளையும் பார்த்துக் கொண்டு மெல்ல உலாவி வருகையில் ஒருத்தி வந்து நின்று, "கப்பல் கவிழப்பெற்ற மகளிர்போல இங்குத் தனியே வந்த நீ யார்?" என்று கேட்டாள்.

மணிமேகலை, "பொற்கொடிபோல்வாய்! 'நீ யார்' என்றது என்னுடைய எந்தப் பிறப்பின் செய்தியைத் தெரிந்துகொள்ளுதற்கு? கேட்பாயாக: சென்ற பிறப்பில் இலக்குமி யென்னும் பெயரை யுடையேன்; இராகுலனென்னும் அரசிளங் குமரனுக்கு மனைவியாயிருந்தேன்; இப்பிறப்பில் நாடகக்கணிகையாகிய மாதவியின் வயிற்றிற் பிறந்தேன்; என் பெயர் மணிமேகலையென்பது; மணிமேகலா தெய்வம் காவிரிப்பூம்பட்டினத்துள்ள உவவனத்திலிருந்து இத்தீவிற் கொண்டுவந்து வைத்தமையால் இந்தப் பீடிகையைத் தரிசித்து முற்பிறப்பை அறிந்து கொண்டேன்; இங்கே வந்தமையால் நான் அடைந்த பயன் இது; என்னுடைய வரலாறும் இதுவாகும்; பூங்கொடிபோல்வாய்! உன் வரலாறு யாது?" என்று கேட்டவுடன் அவள், "இத்தீவிற்கு அயலிலுள்ளதான இரத்தினத்தீவத்திலே மிக உயர்ந்து விளங்காநின்ற சமந்தகூட

மலையின் உச்சியிலேயுள்ள புத்த தேவரது அடியிணைப்படிமை களைத் தரிசித்து விட்டு இத்தீவிற்கு முன்னொரு காலத்தில் வந்தேன்; வந்தது முதல் இந்திரன் கட்டளையால் இந்தத் தரும பீடிகையைக் காத்துக்கொண்டு இவ்விடத்திலேயே இருக்கிறேன்; என் பெயர் தீவதிலகையென்பது. புத்ததேவரருளிச் செய்த நல்லற வழியே நடப்போர் யாரேனும் இதனைத்தரிசிப்பாராயின் அவர்கள் அந்தத் தரிசன விசேடத்தால் உடனே தம்முடைய பழம் பிறப்புணர்ச்சியை அடைவது திண்ணம்; அத்தன்மையினையுடையோர் உலகத்தில் மிக அரியர்; அவர்களுக்கே தருமபதம் உரித்து; இஃது உண்மை. பழம்பிறப்புணர்ச்சியை அடைந்தமையால் நீ மிகவும் பெரியை. இந்தப் பீடிகைக்கு முன்னே மாமலர்க்குவளையும் நெய்தலும் மயங்கிய கோமுகியென்னும் கொழுநீரிலஞ்சியொன்று உள்ளது; அப்பொய்கையினுள்ளே யிருந்து, அமுதசுரபியென்னும் அக்ஷய பாத்திரமானது ஒவ்வொருவருடத்தும் புத்ததேவர் அவதரித்த காலமாகிய வைசாக சுத்த பூர்ணிமைதோறும் மேலே வந்து தோன்றி நிற்கும்; இத்தினம் அப்பூர்ணிமையே; அது தோன்றும் வேளையும் இதுவே; இப்பொழுது அந்தப்பாத்திரம் உன்கையில் வருமென்று எண்ணுகிறேன்; அதிலிடப்பட்ட அன்னம் எடுக்க எடுக்க மேன்மேலும் வளர்ந்து கொண்டேயிருக்கும்; அதன் வரலாற்றை உன் ஊரிலுள்ள அறவணவடிகளிடத்தே இனிக் கேட்பாய்" என்று சொல்லலும், மணிமேகலை அதைப்பெறுதற்கு விரும்பிப் புத்தபீடிகையை வந்தித்து அவளோடு சேர்ந்து சென்று கோமுகிப் பொய்கையை வலஞ் செய்து வந்து நின்றவுடன், அப்பாத்திரம் அப்பொய்கையினுள்ளிருந்து மணிமேகலையின் கையை அடைந்தது. உடனே அவள் அளவு கடந்த மகிழ்ச்சியுற்று நின்று,

"மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
எண்பிறக் கொழிய இறந்தோய் நின்னடி
கண்பிறர்க் களிக்குங் கண்ணோய் நின்னடி
தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி

உரை[illegible] மொழிப்போய் [illegible]
[illegible] வல்லுறு [illegible]
கடவ்கா[illegible]" ([illegible])

என்று புத்ததேவனைத் துதித்தாள்; அம்மணிமேகலைக்கு [illegible] உலகிற்கு உயிர்களுடைய பசித்துன்பத்தையும் அதனைத் தீர்ப்போருடைய பெருமையையும் தீவதிலகை சொல்லப்புகுந்து,

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையு மாணெழில் சிதைக்கும்
* * * புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்
இசைச்சொ லளவைக் கென்னா நிமிராது; (௭௬ - ௮௧.)

முன்னொருகாலத்தில், மழையே இல்லாது போனமையால், பசியால் வருந்திய கௌசிகமுனிவர் அதனைத் தீர்த்துக்கொள்ளுதற்கு எங்குத்திரிந்தும் சிறிதும் உணவுகிடையாததைப்பற்றி மெலிந்து பின் நாயிறைச்சியைப் பெற்றுத் தின்னப்புகுந்து, முதலில் அவ்விறைச்சியின் ஒருபகுதியைத் தெய்வங்கட்குப் பலியிடலானார்; அதுதெரிந்த இந்திரன் உடனே எங்கும் மழைபெய்யச் செய்தமையால், உயிர்கள் களித்துவாழும்படி விளைவுபெருகிய தென்பர்; அதனை நீ கேட்டிருப்பாயே.

ஆற்றுநர்க் களிப்போ ரறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்க ளரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே; (௯௨ - ௬)

ஆதலால், பசியைப்போக்கி உயிரைக்கொடுத்தலாகிய அறு[illegible] செய்வாய்" என்று கூறினள்; அதுகேட்ட மணிமேகலை, "போன பிறப்பில் என்கணவனாகிய இராகுலன் திட்டிவிடம் [illegible] பாம்பா [illegible] இறந்த பொழுது, யான் தீப்பாய்ந்து உயிரொடு [illegible] யில் முன்னம் சாதுசக்கரமுனிவர் [illegible] முனிவர்; [illegible] [illegible] [illegible]

பெரும்பசி அலைத்தற்கு இரங்கி வெயிலென்றும் மழையென்றும் பாராமல் எங்கும்வாடி அலைந்துதிரியும் ஏழைகளுடைய முகத்தைக்கண்டு இரங்கி இப்பாத்திரம் மேன்மேலும் அவர்களுக்கு அமுது சுரந்தளித்தலைக் காணும் விருப்பமுடையேன்'' என்று சொல்லக்கேட்டு மகிழ்ந்த தீவதிலகை, அவளோடு பின்னும் சில நேரம் அளவளாவிக் கொண்டிருந்து, ''இனி இப்பாத்திரத்தோடு உன் ஊருக்குச் செல்வாயாக'' என்றுசொல்ல, மணிமேகலை அவள் பாதத்தை வணங்கிப் புத்தபீடிகையைத்தொழுது வலஞ்செய்து ஆகாயகமனமந்திரத்தை ஜபித்து மேலேயெழுந்து ஆகாயவழியே சென்று, தன்னைக்காணாது வருந்தித் திகைத்து மயங்கி வழியை நோக்கிக்கொண்டே நிற்கும் சுதமதியையும் மாதவியையும்பார்த்து வியப்படையும்வண்ணம் அவர்களுடைய முற்பிறப்பை அவர்களுக்கு அறிவித்து, ''மானிடயாக்கையாற் பெறுதற்குரிய தவவழியை அறவணவடிகளிடத்தே இனிப் பெறக்கடவீர்; இஃது ஆபுத்திரனுடைய கையிலிருந்த அமுதசுரபியென்னும் அக்ஷயபாத்திரமாகும்; இதனைத் தொழுமின்'' என்றுசொல்லி அதனை அன்புடன் தொழுத அவர்களை அழைத்துக்கொண்டு அறவணவடிகளைத் தரிசித்தற்குச் சென்றாள்.

கஉ.—அறவணர்த்தொழுதகாதை.

சென்றவள், ''அறவணவடிகள் எங்கேயுள்ளார்?'' என்று விசாரித்துக்கொண்டு போய்,

> நரைமுதிர் யாக்கை நடுங்கா நாவின்
> உரைமூ தாள னுறைவிடங் குறுகி, (ந - அ.)

அவரைத் தரிசித்து மும்முறை பணிந்து துதித்துத் தான் உவவனஞ்சென்றதும், உதயகுமரன் அங்கே வந்து சொல்லிப் போனதும், பின்பு மணிமேகலாதெய்வம் தன்னையெடுத்துச்சென்று மணிபல்லவத்தில் வைத்ததும், அத்தீவிலுள்ள புத்தபீடிகைக்காட்சியால் தன் பழம்பிறப்பைத் தானறிந்துகொண்டதும், 'முற்பிறப்பிற் கணவனாயிருந்த இராகுலனே உதயகுமரனாக வந்துபிறந்தான்; அப்பிறப்பில் உனக்குத் தமக்கைகளாக இருந்த தாரையும் வீரையுமே மாதவியும் சுதமதியுமாக வந்தனர். அவர்கள் வரலாற்றை அறவணவடிகள்பால் நீ தெரிந்துகொள்' என்று மணிமேகலாதெய்வஞ்சொல்லி மூன்றுமந்திரங்களை உபதேசித்துச் சென்ற

பெரும்பசி அலைத்தற்கு இரங்கி வெயிலென்றும் மழையென்றும் பாராமல் எங்கும்வாடி அலைந்துதிரியும் ஏழைகளுடைய முகத்தைக்கண்டு இரங்கி இப்பாத்திரம் மேன்மேலும் அவர்களுக்கு அமுது சுரந்தளித்தலைக் காணும் விருப்பமுடையேன்" என்று சொல்லக்கேட்டு மகிழ்ந்த தீவதிலகை, அவளோடு பின்னும் சில நேரம் அளவளாவிக் கொண்டிருந்து, "இனி இப்பாத்திரத்தோடு உன் ஊருக்குச் செல்வாயாக" என்றுசொல்ல, மணிமேகலை அவள் பாதத்தை வணங்கிப் புத்தபீடிகையைத்தொழுது வலஞ்செய்து ஆகாயகமனமந்திரத்தை ஜபித்து மேலேயெழுந்து ஆகாயவழியே சென்று, தன்னைக்காணாது வருந்தித் திகைத்து மயங்கி வழியை நோக்கிக்கொண்டேநிற்கும் சுதமதியையும் மாதவியையும்பார்த்து வியப்படையும்வண்ணம் அவர்களுடைய முற்பிறப்பை அவர்களுக்கு அறிவித்து, "மானிடயாக்கையாற் பெறுதற்குரிய தவவழியை அறவணவடிகளிடத்தே இனிப் பெறக்கடவீர்; இஃது ஆபுத்திரனுடைய கையிலிருந்த அமுதசுரபியென்னும் அக்ஷயபாத்திரமாகும்; இதனைத் தொழுமின்" என்றுசொல்லி அதனை அன்புடன் தொழுத அவர்களை அழைத்துக்கொண்டு அறவணவடிகளைத் தரிசித்தற்குச் சென்றாள்.

கஉ.—அறவணர்த்தொழுதகாதை.

சென்றவள், "அறவணவடிகள் எங்கேயுள்ளார்?" என்று விசாரித்துக்கொண்டு போய்,

> நரைமுதிர் யாக்கை நடுங்கா நாவின்
> உரைமூ தாள னுறைவிடங் குறுகி, (௩ - ௪.)

அவரைத் தரிசித்து மும்முறை பணிந்து துதித்துத் தான் உவவனஞ்சென்றதும், உதயகுமரன் அங்கே வந்து சொல்லிப் போனதும், பின்பு மணிமேகலாதெய்வம் தன்னையெடுத்துச்சென்று மணிபல்லவத்தில் வைத்ததும், அத்தீவிலுள்ள புத்தபீடிகைக்காட்சியால் தன் பழம்பிறப்பைத் தானறிந்துகொண்டதும், 'முற்பிறப்பிற் கணவனாயிருந்த இராகுலனே உதயகுமரனாக வந்துபிறந்தான்; அப்பிறப்பில் உனக்குத் தமக்கைகளாக இருந்த தாரையும் வீரையுமே மாதவியும் சுதமதியுமாக வந்தனர். அவர்கள் வரலாற்றை அறவணவடிகள்பால் நீ தெரிந்துகொள்' என்று மணிமேகலாதெய்வஞ்சொல்லி மூன்றுமந்திரங்களை உபதேசித்துச் சென்ற

கலங்கஞர் நரகரும் பேயுங் கைவிடும் ;
கூனுங் குறளு மூமுஞ் செவிடும்
மாவு மருளு மன்னுயிர் பெறாஅ ;
அந்நாட் பிறந்தவ னருளறங் கேட்டோர்
இன்னாப் பிறவி யிகந்தோ ராதலிற்
போதி மூலம் பொருந்திய சிறப்பின்
நாதன் பாத நவைகெட வேத்துதல்
பிறவி தோறு மறவேன் மடக்கொடி! (அகூ - கoரு)

"இது நிற்க, மணிமேகலை! இந்நகரத்தில் உன்னாலே சில விசேடங்கள் நிகழ்வனவாம்; அவை நிகழ்ந்தபின்பன்றி யான் கூறும் தருமமொழி உன்மனத்திற் பொருந்தாது; இவ்விருவரும் முற்பிறப்பிற் பாதபங்கயமலையை வழிபட்ட புண்ணிய விசேடத்தால், பிற்காலத்தில் உன்னோடுகூடிப் புத்ததேவரது திருவடியைத் தொழுது வணங்கி வினைகளினின்றும் நீங்கி முத்தியை அடைவார்கள்; உயிர் மருந்தாகிய மிகச் சிறந்த அமுத சுரபியை நீ பெற்றனை; எல்லா உயிர்களுடைய பசியையும் தீர்ப்பாயாக;

மக்க டேவ ரெனவிரு சார்க்கும்
ஒத்த முடிவி னோரற முரைக்கேன்
பசிப்பிணி தீர்த்தல் என்றே யவரும்
தவப்பெரு நல்லறஞ் சாற்றினர். (கககூ - கூ)

மணிமேகலையும், "அங்ஙனமே செய்வேன்" என்றாள்.

கரு.—ஆபுத்திரன் திறமறிவித்தகாதை.

பின்பு அறவணவடிகள் மணிமேகலையை நோக்கி, "ஆபுத்திரன் வரலாற்றைக் கூறுவேன்; கேட்பாயாக; வாரணாசி யென்னுமூரில் வேதமோதுவிப்பவனாகிய அபஞ்சிகனென்னும் அந்தணன் மனைவி சாலியென்பாள்; அவள் நியமந்தப்பி ஒழுகினமையால் உண்டாகிய பாவத்தைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு, தான் கர்ப்பிணியாக இருந்தும் அதைப் பாராமல் கன்னியாகுமரிக்கு நீராடச் சென்றாள்; சென்றவள் சூலால் வருந்தி வழியிடையே ஒரு குழந்தையைப் பெற்று, அக் குழந்தையிடத்திற் சிறிதும் இரக்கம் வையாமல் அதனை ஒரு தோட்டத்தில் இட்டு நீங்கினள்; நீங்கவே அக்குழந்தை உணவு பெறாது பசியால் வருந்தியழுதது; அவ் வழுகை யோசையைக்கேட்டு ஒரு பசுவானது வந்து அதன் வருத்தந்தீரும்படி நாவால் நக்கிப் பாலூட்டி ஏழுநாள் வரையும்

அப்புறஞ் செல்லாது பாதுகாத்து வந்தது ; அப்படி யிருக்கையில் வயனங்கோடென்னும் ஊரிலுள்ளவனாகிய பூதியென்னும் அந்தணனொருவன் தன் மனைவியோடும் அவ்வழியே வருபவன், அக்குழந்தை அழுத கூக்குரலைக் கேட்டுச் சென்று தனியே கிடக்கும் அதனைக் கண்டு மிக்க துன்பத்தோடு கண்ணீர் பெருக்கி, 'இவன் பசுமகனல்லன்; என்மகனே' என்று கூறி அக்குழந்தையை யெடுத்து ஊர்சென்று வீடடைந்து மகிழ்ச்சியுடன் வளர்த்து உரியகாலத்துத் தன்குலத்திற்குரிய கல்விகளை நன்கு பயிற்றிவந்தான் ; வருகையில் அச் சிறுவன் ஒருநாள் அவ்வூரில் ஓரந்தணன் வீட்டிற் புகுந்து, யாகசாலையில் ஒருபசு மாலையைச் சுற்றியகொம்புகளை யுடையதாய்ப் பின்பு தனக்குண்டாகும் துன்பத்திற்கு அஞ்சி வெய்துயிர்த்துப் புலம்பி வேடர்களுடைய வலையிற்பட்ட மான் போல அஞ்சிக் கதறுவதைக்கண்டு மனநடுங்கிக் கண்ணீருகுத்து, 'இவர்களறியாத வண்ணம் இப் பசுவைக் கவர்ந்துகொண்டு இரவிற் போய்விடுவேன்' என்று தன்னுள் எண்ணிக்கொண்டே ஒரு பக்கத்தில் ஒதுங்கியிருந்து அன்றிரவில் அப்பசுவைக்கையிற்பற்றி ஊருக்கு வெளியே போய்விட்டான் ; பசுவைக்காணாத அந்தணர் பலர் அதனைத் தேடிச்சென்று வழியிற் பசுவையும் அதனைக் கவர்ந்து சென்ற அச் சிறுவனையுங்கண்டு அகப்படுத்திக்கொண்டு, அவன் கருத்தை யறியாராய், 'புலையா ! இப்பசுவை இரவில் என் கவர்ந்து சென்றாய் ?' என்று கேட்டு அவனைக் கோலாலடித்து ஒறுக்கத் தொடங்கினர். அப்பொழுது பசு அவர்களுள் மிகவும் வருத்திய உவாத்தியாயனை முட்டி வயிற்றைக்கிழித்துக் குடரைப் புறப்படச் செய்து காட்டிற்கு விரைந்தோடிவிட்டது. ஆபுத்திரன் அவர்களை நோக்கி, 'வருத்தன்மின் ; யான் சொல்வனவற்றைக் கேண்மின் ; நீங்கள் வருத்தும்படி இப்பசு என்ன குற்றஞ் செய்தது ?

> விடுநில மருங்கிற் படுபுல் லார்ந்து
> நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
> பிறந்தநாட் டொட்டுஞ் சிறந்ததன் றீம்பால்
> அறந்தரு நெஞ்சோ டருள்சுரந் தூட்டும்
> இதனொடு வந்த செற்ற மென்னை ?' (௬க - ௬)

என்றுகேட்க, அவர்கள், 'நீ விதியையறியாமல் வேள்வியை இகழுகின்றாய் ; ஆதலால் பசுமகனென்பதற்குப் பொருத்தமுடையை என்று இகழ்ந்து கூறலும், ஆபுத்திரன்,

'ஆன்மக னசலன் மான்மகன் சிருங்கி
புலிமகன் விரிஞ்சி புரையோர் போற்றும்
நரிமக னல்லனோ கேச கம்பள
னீங்கிவர் நுங்குலத் திருடி கணங்களென்
றோங்குயர் பெருஞ்சிறப் புரைத்தலு முண்டால்
ஆவொடு வந்த வழிகுல முண்டோ' (சூரு - அ)

என்று சொல்ல, அவர்களுள்ளே ஓரந்தணன், 'இவனுடைய பிறப்பின் வரலாற்றை யான் அறிவேன்! முன்னொருநாள் கன்னியாகுமரியில் விதிப்படி நீராடிவிட்டு வருத்தத்தோடு வந்த சாலியென்னும் ஒரு பார்ப்பனியைக்கண்டு, 'உன்னூர் யாது? நீ எதற்காக இங்கே வந்தனை?' என்று நான் கேட்டதற்கு அவள், 'யான் வாரணாசியென்னுமூரிலுள்ள ஆரண உவாத்தியாயனாகிய ஓரந்தணன் மனைவி; யானொழுகிய தீய வொழுக்கத்தாற் கணவனைப்பிரிந்து கன்னியாகுமரிக்கு நீராடச் செல்லுகையில், கொற்கை நகரத்துக்கு அப்பாற் காதவழித் தூரத்திலுள்ள இடையர் சேரியில் ஆண் குழந்தையொன்றைப் பெற்று இரக்கமின்றி அதனை அங்குள்ள ஒரு தோட்டத்தில் இட்டுப் போனேன்; இப்படிப்பட்ட தீவினையேனாகிய எனக்கு நற்கதி யுண்டோ?' என்று மிகத் துன்புற்று அழுதாள்; அங்ஙனம் அழுதவள் பெற்ற அந்தமகனே இவன்; இதைச் சொல்லுதலால் யாது பயனென்று இதுகாறும் உங்களுக்குத் தெரிவியாதிருந்தேன். அசுத்த னாதலால் இவனைத் தொடாதொழிமின்' என்று சொல்ல, ஆபுத்திரன், 'திலோத்தமையின் புத்திரர்கள் பெரிய முனிவர்களாக இருத்தல் கேட்டிலிரோ? நீங்கள் * சாலிக்குத் தவறுகூறத் துணிந்தீர்களே' என்று சொல்லி அவர்களைப் பார்த்து நகைத்தான்; வளர்த்த பூதியும் அவனை அசுத்தனென்று எண்ணி உடனே நீக்கிவிட்டான்; அப்பால், ஆபுத்திரன் பிச்சையெடுத்து உண்டு பொழுதுகழிக்க எண்ணினான். பசுவைத் திருடின கள்வனென்று இகழ்ந்து அந்தணர்களுடைய கிராமங்களிலெல்லாம் அவனுடைய பிச்சைப்பாத்திரத்திற் கல்லிடத் தொடங்கினார்கள்; அதனால், வேறு புகலின்றித் தென்மதுரையை யடைந்து சிந்தாதேவியின் கோவிலாகிய கலைநியமத்தின் முன்னேயுள்ள அம்பலத்தையே இருப்பிடமாகக் கொண்டு கையிற் பிச்சைப் பாத்திரத்தை யேந்தி வீடுதோறும் சென்று சென்று வாங்கிவந்த உணவை,

* சாலியென்பதற்கு அருந்ததி யென்னும் ஒருபொருள் தோன்றிற்று.

காணார் கேளார் கான்முடப் பட்டோர்
பேணு நரில்லோர் பிணிநடுக் குற்றோர்
யாவரும் வருகவென் றிசைத்துட னூட்டி, (கக - கூ)

அவர்களுண்டு எஞ்சியதையே தானுண்டு பிச்சையோட்டைத் தலையணையாக வைத்துக்கொண்டு, அவ்வம்பலத்தின்கண்ணே நாள்தோறும் இரவிற் கண்படைபுரிந்து காலங்கழித்து வந்தான்.

கச.—பாத்திரமரபுகூறியகாதை.

"அவன் அங்ஙனம் காலங்கழித்து வருகையில், அவனுக்கு ஒருநாள் அங்கே நிகழ்ந்த செய்தியைச்சொல்வேன்; கேட்பாயாக: அவன் அவ்வம்பலத்தில் ஓரிரவில் தூங்கும்பொழுது, சிலர் வந்து, 'பெரும்பசி எங்களை வருத்தாநின்றது' என்றார்கள். அதைக் கேட்ட அவன் அத்துன்பத்தைத் தீர்த்தற்கு ஆற்றலில்லாதவனாய் மிக்க வருத்தமடைந்தான்; அச்சமயத்திற் சிந்தாதேவி எழுந்தருளிவந்து, 'இதனைக் கொள்வாயாக; நாடெல்லாம் வறுமையுற்றாலும் இவ்வோடு வறுமையையடையாது; கொடுக்கக் கொடுக்க இதில் உணவு வளர்ந்துகொண்டேயிருக்கும்' என்று சொல்லி, தன்கையிலுள்ள அக்ஷய பாத்திரமொன்றை அவன் கையிற் கொடுத்தாள்; உடனே அவன் அளவுகடந்த மகிழ்ச்சியடைந்து,

'சிந்தா தேவி! செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே! நாமிசைப் பாவாய்!
வானோர் தலைவி! மண்ணோர் முதல்வி!
ஏனோ ருற்ற விடர்களைவாய்'' (கள - உ0)

என்று துதித்து அத்தேவியைப் பணிந்து, பசியால் மிகவருந்தி இரந்தவர்களை ஊட்டி மகிழ்வித்து, அன்றுமுதல் எல்லாவுயிர்களுக்கும் உணவளிப்பானாயினன்; உண்பதற்காக மனிதர்கள் பலர் அவனைச் சூழ்ந்துகொண்டார்கள்; விலங்குகளும் பறவைகளும் அவனைப் பிரியாவாய் அன்புடன் சுற்றிக்கொண்டன; அப்படியிருக்கையில், ஒருநாள் அவனது புண்ணியமிகுதியைத் தனது பாண்டு கம்பள நடுக்கத்தால் அறிந்த இந்திரன், அவனுக்கு வரங்கொடுக்க நினைந்து ஒரு முதிய வேதியனது வடிவுகொண்டு வந்து நின்று, 'நான் இந்திரன்; வரங்கொடுத்தற்கு வந்தேன்; நீ விரும்பியது யாது? உன்னுடைய பெரிய தானத்தின் பயனைப் பெற்றுக் கொள்வாயாக' என்று சொல்ல ஆபுத்திரன் விலாவெலும்பு ஒடியும் வண்ணஞ் சிரித்து,

'அறஞ்செய் மாக்கள் புறங்காத் தோம்புநர்
நற்றவஞ் செய்வோர் பற்றற முயல்வோர்
யாவரு மில்லாத் தேவர் நன் னாட்டுக்
கிறைவ'னாகிய பெருவிறல் வேந்தே! (௬௦ - ௬௫)

வருந்தி வந்தவர்களுடைய தீர்த்தற்கரிய பசியினைத் தீர்த்து அவர்களுடைய இனிய முகத்தை யான் காணும்படி செய்கின்ற எனது தெய்வப்பாத்திரம் ஒன்றே போதும்; வேறொன்றும் வேண்டற்பாலதன்று' என்று அவனை மதியாது சொன்னான்; சொல்லவே இந்திரன் கோபித்துப் பசித்துன்பத்தால் வருந்துவோரில்லையாம் படி செய்வேனென்று மனத்தில் நினைந்து எங்கும் மழை பெய்வித்து மிக்க செல்வத்தை யுண்டாக்கினான்; அதனால் பசித்து வருவோர் இலராயினர். அதுகண்டு ஆபுத்திரன் முன்னிருந்த அம்பலத்தை நீங்கி ஊர்தோறும் போய், 'உண்போர் யாரேனுமுண்டோ?' என்று வினவத் தொடங்கினான்; அதுகேட்டுச் செல்வக் களிப்பால் யாவரும் அவனை இகழ்ந்தார்கள்; உண்போரைப் பெறுமையால், அவன் பெருஞ் செல்வத்தையிழந்தோரைப்போல வருந்தித் தனியே செல்லுகையில், கப்பலில் வந்த சிலர் அவனைக் கண்டு, சாவகநாடு மழையில்லாமையால் மிகுந்த வறுமையுற்றதென்றும் அதிலுள்ள உயிர்கள் பெரும்பாலும் பசியால் இறந்தன வென்றும் கூறினர். அது கேட்டு அவன் அந்நாட்டிற்குச்செல்ல நினைந்து ஒரு கப்பலிலேறினன்; அக்கப்பல் சென்று மணிபல்லவத்தினருகே ஒருநாள் தங்கிற்று; அவன் அத்தீவில் இறங்கினன். இறங்கிய ஆபுத்திரன் ஏறிவிட்டானென்று மீகாமன் எண்ணி இருளில் அக்கப்பலை வேற்றிடம் செலுத்திக்கொண்டு போயினன். அது தெரிந்து ஆபுத்திரன் மிகுந்த வருத்தமடைந்து, 'பலர்க்கு உணவளிக்கும் இப்பாத்திரத்தை வைத்துக்கொண்டுயாருமில்லாத இத்தீவில் யான் மட்டும் இரேன்' என்று எண்ணி அப்பாத்திரத்தைத் தொழுது, 'வருடத்திற்கு ஒரு நாள் நீ தோன்றுவாயாக' என்று கூறிக் கோமுகிப் பொய்கையில் அதை விடுபவன், 'மிக்க கருணையோடு கூடித் தருமஞ் செய்தலையே மேற்கொண்டு எல்லாவுயிர்களையும் பாதுகாப்போர் யாரேனும்வரின் அவர் கையிற் புகுவாயாக' என்று சொல்லி அப்பொய்கையில் விட்டு விட்டுத் தான் பட்டினியிருந்து உயிர் துறப்பானாயினான். அப்பொழுது அத்தீவிற்குச் சென்ற யான் அவனைக் கண்டு, 'நீ யாது துன்பமடைந்தாய்?' என்று கேட்க, அவன் நிகழ்ந்தவற்றைச் சொல்லி

மணிபல்லவத்தில் உடம்பை வீழ்த்தி விட்டு எல்லா உயிர்களையும் பாதுகாக்குமெண்ணத்தோடு சென்று சாவக நாட்டரசனுடைய பசுவயிற்றினுதித்தான்.

கரு.—பாத்திரங்கொண்டு பிச்சைபுக்ககாதை.

"மணிமேகலை! இன்னும் கேட்பாயாக: முன்பு ஆபுத்திரனுக்கு ஏழுநாள் வரையும் பாலூட்டிய பசுவானது அப்புண்ணிய விசேடத்தால் சாவகநாட்டில் தவளமலையில் தவஞ்செய்துகொண்டிருக்கும் மண்முக முனிவனிடத்தே, பொன்மயமாகிய கொம்புகளையும் குளம்புகளையும் உடையதாய்ச் சென்று, ஈனுமுன்னமே பால் சுரந்து எல்லா உயிர்களையும் உண்ணச் செய்து கொண்டிருந்தது. அதனைக்கண்டு, முக்கால உணர்ச்சியையுமுடைய அம்முனிவன், 'இப்பசுவயிற்றில் எல்லாவுயிர்களையும் பாதுகாக்கும் ஒரு விசேடபுருடன் பொன்மயமான முட்டையினிடம் தோன்றுவன்' என்று கூறினன். தருமஞ் செய்தற்காகவே மணிபல்லவத்தில் இறந்த ஆபுத்திரன் தன்னைக் குழந்தைப் பருவத்தே காத்தளித்த பசுவை எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருந்தவனாதலின், மண்முக முனிவன் கூறியவாறே அப்பசுவயிற்றில் தோன்றினன்; அவன் தோன்றிய காலம் வைசாகசுத்த பூர்ணிமை; அப்பொழுது சில நன்னிமித்தங்கள் நிகழ்ந்தன. அது தெரிந்த சக்கரவாளக்கோட்டத்துள்ள முனிவர்கள், 'புத்தன் அவதரிக்குங் காலத்தில் தோன்றும் நிமித்தங்கள் இப்பொழுது நிகழ்வதற்குக் காரணம் என்ன?' என்று வியப்புற்று, அதனுண்மையைத் தெரிந்து கொள்ளுதற்குக் கந்திற்பாவையை யடைந்து வினவினர்கள்; அது, 'மணிபல்லவத்தில் இறந்த ஒரு விசேடபுருடன் உயிர்களைப் பாதுகாத்தற்காகச் சாவகநாட்டினுதித்தான்; அதனாலே தான் நன்னிமித்தங்கள் நிகழ்ந்தன. அவன் வரலாற்றை அறவணன்பாற் கேண்மின்' என்று சொல்லி என்பால் அனுப்பி எனது நாவை வருத்தியது. மகப்பேறில்லாமல் வருந்துபவனான அங்கரத்தரசன் பூமி சந்திரனென்பவன் மண்முக முனிவனை வணங்கி மேற்கூறிய பசுப்பெற்ற குழந்தையை வாங்கிக்கொண்டு சென்று வளர்த்து வந்தான்; அச்சிறுவன் இப்பொழுது அரசுரிமை பெற்று வாழ்கின்றான். இது நிற்க. காவிரிமாநதி மாறாது நீர் பெருகி இந்நாட்டை வளமுறச் செய்தும் யாதுகாரணத்தினாலோ உயிர்கள் வறுமையால் வருந்துகின்றன. ஆதலால்,

வெண்டிரை தந்த வமுதை வானோர்
உண்டொழி மிச்சிலை யொழித்துவைத் தாங்கு (௰௧ - ௨)

மிகப் பயன்படுகின்ற இவ்வமுதசுரபியை நீ சும்மா வைத்திருத்தல் தகுதியன்று" என்று கூறினர். அதைக்கேட்ட மணிமேகலை உடனே அவரை வணங்கித் துதித்துப் பிக்குணிக்கோலம் பூண்டு அப்பாத்திரத்தைக் கையிலேந்தி வீதியையடைந்தாள். அடையவே, உச்சயினிநகரத்தரசனாகிய பிரச்சோதனனென்பவன் உதயணனை வஞ்சித்துச் சிறைப்படுத்தியபொழுது, அவனைச் சிறை மீட்டற்கு அவன் மந்திரியாகிய யௌகந்தராயணனென்பவன் வேற்று வடிவங்கொண்டு வீதியையடைந்த காலத்தில், அவனைக்கண்டு துன்புற்று அநேகர் சூழ்ந்தாற் போலப் பிக்குணிக்கோலத்தை யுடைய மணிமேகலையைக் கண்ட பலரும், "உதயகுமரனுடைய உள்ளத்தில் ஒளித்திருக்கும் இவள் எல்லாருங் காணும்படி பிச்சைப் பாத்திரத்தையேந்தி வீதியையடைந்தது என்ன வியப்பு!" என்று கூறித் துன்புற்று அவளைச் சுற்றிக்கொண்டனர். அப்பொழுது மணிமேகலை, "கற்புடையமாதர் இடும் ஐயத்தையே முதலில் ஏற்றுக் கொள்ளுதல் தகுதி" என்றுசொல்ல, காயசண்டிகை, "மழையைத் தரும் கற்புடையமாதர்களுள் மிகமேம்பட்டவளாகிய ஆதிரையென்பவளுடைய வீடு இது; நீ இதிற் புகவேண்டும்" என்று அவளுக்குக் கூறினள்.

௧௬.—ஆதிரைபிச்சையிட்டகாதை.

அங்ஙனங்கூறிய காயசண்டிகை மீட்டும் மணிமேகலையை நோக்கி, "இந்த ஆதிரையின் கற்புவிசேடத்தைக் கேட்பாயாக: இவள் கணவன் சாதுவனென்பான்; அவன் ஒரு பரத்தையின் இணக்கத்தாற் கைப்பொருளிழந்து வறுமையுற்று வேறுதேயம் போய்ப் பொருள்தேடவெண்ணிச் சில வணிகரோடு கப்பலேறிச் சென்றான். செல்லுகையிற் கடுங்காற்றால் அக்கப்பல் கவிழ்ந்தது. கவிழவே சாதுவன் அதிலிருந்து ஒடிந்துவிழுந்த பாய்மரத்துண்டமொன்றைத் தெப்பமாகப்பற்றிக்கொண்டு நீந்திச்சென்று உடையில்லாது சஞ்சரிப்பவராகிய நாகருடைய மலைப்பக்கத்தை அடைந்தான். அஃது அங்ஙனமாக; அக்கப்பலினின்றும் நழுவிய மரத்தைப்பற்றிக் கடலில் நீந்திப் பிழைத்துக் காவிரிப்பூம்பட்டினம் வந்தோர், 'கப்பல் உடைய இறந்தவர்களோடு சாதுவனுமிறந்தான்'

என்று ஆதிரைக்குக் கூறினர். அதுகேட்ட அவள், மிக்க வருத்தமடைந்து இறக்கத்துணிந்து மயானத்திற் குழிதோண்டி, அதில் விறகுகளை அடுக்குவித்துத் தீயை மூட்டி, 'வினைப்பயனால் என்கணவனடைந்த இடத்தை நானுமடையக்கடவேன்' என்று சொல்லி அதிற்புகுந்தாள்; புகுந்தவளை யுத்தீயானது சுடாதொழிந்தது; ஒழியவே அவள், தீயுஞ்சுடாத பாவியேன் இனியாது செய்வேன்?' என்று ஏங்குகையில் ஆகாயவாணியானது, 'ஆதிரை! உன்கணவன் இறக்கவில்லை; அவன் பிழைத்துச்சென்று இப்பொழுது நாகர் மலையிலிருக்கிறான்; அங்கே பலவருடம் தங்கான்; சந்திரதத்தனென்னும் வாணிகனுடைய கப்பல்வழியே வந்து உன்னையடைவான்; நீ வருந்தாதே' என்று கூறிற்று. அதைக் கேட்ட ஆதிரை வருத்தமொழிந்து வீட்டையடைந்து கணவன் விரைந்து வருதலைக் குறித்து அதற்கேற்ற புண்ணியங்களை இடைவிடாது செய்துவந்தாள்.

"அங்கே நாகர்மலையையடைந்த சாதுவன், ஒருமரநிழலைச் சார்ந்து அயர்ச்சியால் துயில்கொள்ள, அம்மலையிலுள்ள நாகர்கள் வந்து இவ்வுடம்பு நமக்கு நல்ல உணவாகுமென்றெண்ணி அவனை எழுப்பினர்; அவன் அவர்கள் பாஷையை விளங்கக் கற்றவனாதலால், அவர்களோடுபேச, அவர்கள் அவனை வருத்துதலைத் தவிர்ந்து,'எங்களாசிரியன் ஒருவனிருக்கிறான்; அவனிடம் நீ வரல் வேண்டும்' என்று அழைத்துச்சென்றார்கள். சாதுவன் அவர்களோடும் போய்,

> கள்ளடு குழிசியுங் கழிமுடை நாற்றமும்
> வெள்ளென் புணங்கலும் விரவிய விருக்கையில்
> எண்குதன் பிணவோ டிருந்தது போலப்
> பெண்டுடனிருந்த (கூசு - கூ)

அவர்களுடைய குருமகனைக்கண்டு அவனோடு அளவளாவி அவனை வசமாக்கிக்கொண்டான்; கொள்ளவே அக்குருமகன், 'நீ இங்கு வந்தது எதன்பொருட்டு?' என்ன, சாதுவன் நிகழ்ந்ததைக் கூறினன். அவன், 'பசியால் வருந்திய இவனுக்கு வேண்டியவள்வு கள்ளையும் ஊனையுங்கொடுத்துப் பின் இளையவளாகிய நங்கை ஒருத்தியையுங்கொடுமின்' என்று சொன்னான் சாதுவன் அதுகேட்டு அவனுடைய அறியாமைக்கு வருந்தி, 'எனக்கு அவைவேண்டா' என்றான். அவன், 'பெண்டிரையும்

உண்டியையுமன்றி மாந்தர்க்கு இன்பந்தருவது வேறே யாதுளது? இருந்தாற் சொல்வாய்' என்று கோபித்துச் சொல்ல, சாதுவன்,

'மயக்குங் கள்ளு மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்
பிறந்தவர் சாதலு மிறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்
நல்லறஞ் செய்வோர் நல்லுல கடைதலும்
அல்லறஞ் செய்வோ ரருநர கடைதலும்
உண்டென வுணர்தலி னூரவோர் களைந்தனர்' (அச - கூ0)

என்று கூறினன். பின்பு அவன் கேட்ட வினாக்களுக்கெல்லாம் தக்கவாறு விடைகூறி மறுபிறப்பும் புண்ணியபாவங்களும் அவற்றால் வரும் இன்பதுன்பங்களும் உண்டென்பதை அறிவுறுத்தி இறக்கும்வரையும் நடக்கவேண்டியமுறையையும் அவனுக்கு இவையத் தெரிவித்து விடைபெற்று, அவன் கொடுத்த சந்தனம் அகில் துகில் முதலியவற்றைக் கைக்கொண்டு, அங்குவந்த சந்திரதத்தனென்னும் வாணிகனுடைய கப்பலிலேறி இந்நகரையடைந்து இவளோடு வாழ்வானாகிப் பலதானங்களும் செய்தான். அப்படிப்பட்ட மேம்பாட்டை யுடையவளாகிய இந்த ஆதிரையின் கையால் முதலிற் பிச்சை பெறுக" என்று சொல்ல, மணிமேகலை அவளுடைய மனையிற் புகுந்து வாய்பேசாமற் சித்திரம்போல நின்றாள். நின்றவுடன்,

தொழுதுவலங் கொண்டு துயரறு கிளவியோ
டமுத சுரபியி னகன்சுரை நிறைதரப்
பாரக மடங்கலும் பசிப்பிணி யறுகென
ஆதிரை யிட்டன ளாருயிர் மருந்து. (கஙௗஉ - ரு)

கஎ.—உலகவறவிபுக்ககாதை.

ஆதிரையளித்த பிச்சையை முதலில் மணிமேகலை ஏற்ற பின்பு அமுதசுரபியிலுள்ள சோற்றுத்திரளை,

அறத்தி னீட்டிய வொண்பொரு ளறவோன்
திறத்துவழிப் படூஉஞ் செய்கை போல (ங - ச)

எடுக்க எடுக்கக் குறையாமல் மேன்மேலும் வளர்ச்சியையடைந்து வந்தோருடைய பசியைப்போக்கி விளங்கிற்று. அதுகண்ட காயசண்டிகை வியந்து மணிமேகலையை வணங்கி, "அன்னாய்! என்

னுடைய தீராப்பசியையும் தீர்த்தருளவேண்டும்" என்று வேண்டினள். உடனே மணிமேகலை, அமுதசுரபியிலிருந்து ஒருபிடியமுதையெடுத்து அவளது கையிலிட்டாள். அதனையுண்டு அப்பசி நோய் தீர்ந்து மகிழ்ந்த காயசண்டிகை, "வடதிசையில் வித்தியாதரருலகிலுள்ள காஞ்சனபுரமென்பது என்னுடைய ஊர்; தென்றிசைக்கண்ணதாகிய பொதியின்மலையின் வளங்களைக் காண்பதற்குக் கணவனும் யானும் புறப்பட்டுப்போந்து இடையேயுள்ள காட்டாறொன்றின் கரையிலிருந்தோம். இருக்கையில், விருச்சிகனென்னும் முனிவனொருவன் பாரணஞ்செய்தற்குப் பனங்கனிபோன்ற பருமையையுடைய நாவற்கனியொன்றைத் தேக்கிலையில் வைத்துவிட்டு நீராடச்சென்றான். அக்கனி அம்முனிக்கு உணவாகுமென்பதனை அறியாத நான் முற்பிறப்பிற்செய்த தீவினையால் அதனைக் காலாற் சிதைத்துக் கெடுத்தேன். நீராடி மீண்டுவந்த விருச்சிகன் அக்கனி என்னாற் சிதைந்திருத்தலையறிந்து மிகவும் கோபித்து என்னை நோக்கி, 'தெய்வத்தன்மையுள்ளதும் பன்னிரண்டு வருடத்துக்கு ஒருமுறை ஒருகனியைத் தருவதுமாகிய நாவல்மரத்திலுண்டானது இது; இதனையுண்டோர் பன்னிரண்டுவருடம் பசியொழிந்திருப்பார்; நானோ பன்னிரண்டுவருடம் பட்டினியிருந்து ஒருநாளுண்ணும் விரதமுடையேன்; உண்ணுந்தினமும் இன்றுதான்; யான் உண்ணக் கருதிய கனியும் இதுவேகாண்; இதனை நீ அழித்துவிட்டாய்; ஆதலால், ஆகாயவழியே செல்லும் மந்திரத்தை மறந்து யானைத் தீயென்னும் நோயாற் பன்னிரண்டு வருடம் தீராப்பசிகொண்டு வருந்திப் பின்பு இங்கு இக்கனியை நான் உண்ணும் தினத்தில் நீ பசி யொழிவாயாக' என்றுகூறிப் பசியால் வருந்திப்போயினன். உடனே எனக்குப் பெரும் பசியுண்டாயிற்று. அதனால் மிக்க வருத்தமடைந்தேன். அதுகண்ட என்கணவன் சிறந்த கனிகள் கிழங்குகள் காய்கள் முதலியவற்றை நிரம்பக்கொணர்ந்து என்னையுண்பிக்கவும் அப்பசி தீரவில்லை; அந்தரஞ்செல்லும் மந்திரமும் என்நினைவுக்கு வரவில்லை. அப்போது அதுகண்டு வருந்திய என்கணவன், 'நீ நடந்துசென்று இத்தமிழ்நாட்டில் ஆற்றுமாக்கட்கு அருந்துணைவர்களாகிய பெருஞ்செல்வர்கள் வாழ்ந்திருக்கும் காவிரிப்பூம்பட்டினத்தையடைந்து அங்கே யிருப்பாயாக' என்று சொல்ல நான் அவ்வண்ணமேவந்து இங்கிருக்கின்றேன். இங்கு இந்திரவிழா நடக்குங்காலத்தில் ஒவ்வொருவருடத்தும் என்கணவன் வந்து என்வருத்தத்தைப் பார்த்துவிட்டுத் தானும் வருந்திச்செல்வான்.

> தணிவில் வெம்பசி தவிர்த்தனை வணங்கினேன்
> மணிமே கலையென் வான்பசிப் படர்கேன். (௭௨ - ௯)

இந்நகரில் முனிவர்கள் பலர் இருக்கும் சக்கரவாளக்கோட்ட மென்பது ஒன்றுண்டு. அதிற் பலரும் வந்து புகுதற்காகவே எப்பொழுதும் கதவுதிறந்துள்ள 'உலகவறவியென்றும் பெயரையுடைய அம்பலம் ஒன்றுண்டு. அதில்,

> ஊரு மாங்க ணுறுபசி யுழந்தோர்
> ஆரு மின்மையி னரும்பிணி யுற்றோர்
> இடுவோர்த் தேர்ந்தாங் கிருப்போர் பலர்; (௭௧ - ௮௧)

ஆதலால் அவ்விடத்திற்குச் செல்வாயாக" என்றுசொல்லிவிட்டு, அவள் தன்னூருக்குப்போயினள். போகவே மணிமேகலை, வீதியின் ஒருபக்கத்தே ஒதுங்கிச்சென்று உலகவறவியையடைந்து மூன்றுமுறை வலம்வந்து பணிந்து அதிலேறிச் சம்பாபதியையும் கந்திற்பாவையையும் வணங்கி,

> வெயில்சுட வெம்பிய வேய்கரி கானத்துக்
> கருவி மாமழை தோன்றிய தென்னப்
> பசிதின வருந்திய பைதன் மாக்கட்
> கமுத சுரபியோ டாயிழை தோன்றி; (௧௧ - ௯)

"இப்பாத்திரம் ஆபுத்திரன் கையிலிருந்ததாகிய அமுதசுரபி; உண்டற்கு விருப்பமுள்ள யாவரும் வருக" என்றுசொல்ல, பலரும் வந்து உண்பாராயினர்; ஆகவே அவ்வம்பலத்தில் உண்டுமொலியிருந்தது.

௧அ.—உதயகுமரன் அம்பலம்புக்ககாதை.

மணிமேகலை பிக்குணிக்கோலங்கொண்டு பாத்திரமேந்தி யுடமேற்று உலகவறவியிற் சென்றுளென்பதைக்கேட்ட சித்திராபதி மனங்கொதித்து வெய்துயிர்த்துக் கலங்கி, "மணிமேகலையை [illegible] வெளியிலிருந்தும் மீட்குவேன்" என்று எண்ணிக்கொண்டு [illegible] கணிகையரெல்லாரையும் பார்த்து, "கோவலன் இறந்த பின் [illegible] மாதவி எல்லாவற்றையும் துறந்து முனிவர்களுடைய தவப் [illegible] பயடைந்து தாபதக்கோலம் பூண்டிருத்தல் நகைக்கிடம் [illegible]; யாம் [illegible] இருக்கும் பதியில்

பெண்டிரல்லேம் ; பாணன் இறந்தபொழுது அவனுடன் இறவாத யாழைப்போல்வேம் ; பின்னும்,

நறுந்தா தூண்டு நயனில் காலை
வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம் ; (௧௮ - ௨௦)

தாபதக்கோலந்தாங்குவது நம்முடைய குலவொழுக்கத்திற்கு ஒத்ததன்று ; மாதவிமகள் மணிமேகலையின் பிக்குணிக்கோலத்தை மாற்றி அவள் கையிலேந்திய பிச்சைப்பாத்திரத்தை;

பிச்சை மாக்கள் பிறர்கைக் காட்டி, (௩௦)

பலநாளாக விரும்பிக்கொண்டிருக்கும் உதயகுமரனால் அவளை அவனது தேரிலேற்றுவித்தே வருவேன். அங்ஙனஞ்செய்து வாரேனாயின் குடிக்குற்றப்பட்டு ஏழுசெங்கலைத் தலைமேலேற்றிக் கொண்டு நாடகவரங்கைச் சுற்றிவந்து பழியோடிருக்கும் நாடக மடந்தையர்போல இனி நான் நாடகக்கணிகையர் வீட்டிற்குச் செல்லேனாகக் கடவேன்" என்று சபதஞ்செய்துவிட்டுத் தன்னைச் சிலர் சூழ்ந்துவரச்சென்று உதயகுமரனுடைய அரண்மனையை யடைந்து அவனைக்கண்டு துதித்து, மணிமேகலை உலகவறவியை அடைந்திருக்கின்றாளென்பதை அவனுக்குக் குறிப்பிக்க, அவன் உவவனத்தில் மணிமேகலையைக் கண்டதுமுதல் நிகழ்ந்தவற்றைக் கூறி அவளிடத்துள்ள விசேடத்தன்மையைப் பாராட்டினன்; சித்திராபதி அவனுடைய மனத்தை வேறுபடுத்தும் வார்த்தைகள் பலவற்றைச் சொல்லி முயல அவன் உள்ளம்பிறழ்ந்து தேரேறி உலகவறவியை யடைந்து, பலர்க்கும் உணவளித்துக்கொண்டிருக்கும் மணிமேகலையைக்கண்டு அருகிற்சென்று, "நீ தவக்கோலம் பூண்டது யாது கருதி?" என்று வினவினன்; மணிமேகலை, "பழம் பிறப்பிற் கணவனாக இருந்த இவனை வணங்குதல் முறையாகும்" என்று எண்ணி வணங்கி,

"பிறத்தலு மூத்தலும் பிணிப்பட் டிரங்கலும்
இறத்தலு முடைய திடும்பைக் கொள்கலம்
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்" (௧௩௬ - ௯)

என்றுகூறி, வேற்றுவடிவங்கொள்ள நினைத்து அவனைநீங்கிக் கோயிலினுள்ளேசென்று சம்பாபதியை வணங்கி, முன்பு மணிமேகலா தெய்வம் உபதேசித்த மந்திரத்தை ஓதிக் காயசண்டிகை

முற்று அமுதசுரபியையேந்தி வெளியேவந்து நின்றாள். அவள் அவ்வாறுவந்ததையறியாத உதயகுமரன், "சென்ற மணிமேகலை சம்பாபதிகோயிலுள்ளே ஒளித்துக்கொண்டாள்" என்று நினைந்துசென்று சம்பாபதியைவணங்கி, "பிச்சைப்பாத்திரத்தைக் காயசண்டிகையின் கையிற்கொடுத்துவிட்டு ஒளித்துச்சென்ற மணிமேகலையை இங்கேயுள்ள இவ்வளவு பாவைக்கூட்டங்களுள்ளே நான் எவ்வாறு தெரிந்துகொள்ளுவேன்? நீ எனக்கு அவளைக்காட்டாயாயின் இவ்விடத்திலேயே பாடுகிடப்பேன்; பலநாள்சென்றாலும் செல்லுக; மணிமேகலையை இங்கேவிட்டுவிட்டு நான்மட்டும்போகேன்; உன்னுடைய திருவடியைத்தொட்டேன்" என்று சபதங்கூறினன்.

கக.—சிறைக்கோட்டமறக்கோட்டமாக்கியகாதை.

உதயகுமரன் சம்பாபதியை வணங்கி இங்ஙனம் சபதங்கூறுகையில் அவன்கேட்கும்படி, "நீ எம்பெருமாட்டியின் முன்னே ஆராய்ந்து பாராமல் வஞ்சினங்கூறினை; இங்ஙனங்கூறியதில் யாதொருபயனுமில்லை" என்று ஆங்குள்ள சித்திரங்களுள் ஒன்றை அதிட்டித்துநிற்கும் தெய்வங் கூறியது. அவ்வார்த்தையைக்கேட்டு அவன் மனங்கலங்கி வருந்தி, "மணிமேகலையை மறப்பாயென்று முன்னங் கூறிய தெய்வத்தின் வார்த்தையும் வியப்பைத்தருகின்றது; தெய்வத்தன்மையுள்ளதாக இருத்தலின் அவள் ஏந்திய பாத்திரமும் வியப்பைத்தருகின்றது; இச்சித்திரம் பேசியதும் வியப்பை உண்டுபண்ணுகின்றது; இவற்றையெல்லாம் மணிமேகலையின் செய்தியை அறிந்துகொண்டபின்பு அறிவோம்" என்று நிச்சயித்துக்கொண்டு காமபரவசனாய் வெய்துயிர்த்து மீண்டு தன் இருப்பிடத்தை அடைந்தான். மணிமேகலை, "நம்வடிவத்தோடு திரிந்தால் உதயகுமரன் விட்டுநீங்கான்; கைப்பற்றிக்கொள்ள முயலுவன்; ஆதலால் நாம் காயசண்டிகை வடிவங்கொள்ளுதலே நன்று" என்று எண்ணி அவ்வடிவுகொண்டு சம்பாபதியின் கோயிலிலிருந்த அமுதசுரபியைக் கையிலேந்திக்கொண்டு எங்கும்போய்ப் பசித்துவந்த யாவருக்கும் உணவளித்துச் செல்லுபவள் ஒருநாள் அந்நகரத்துள்ள சிறைச்சாலையிற்புகுந்து அங்கே தண்டிக்கப்பட்டிருந்து பசியால் வருந்துவோரை அருளுடன்பார்த்து மனமுருகி இனிய மொழிகளைக்கூறி உண்பிப்பாளாயினள். அதனைக்கண்ட காவலாளர், அவள் ஒரு பாத்திரத்திலிருந்தே பலருக்கும் உணவளித்

தலைத் தெரிந்து வியப்புற்று, "இப்பாத்திரத்தின் விசேடத்தை யும் இவள் செய்தியையும் அரசனுக்குத் தெரிவிப்போம்" என்று நினைந்து சென்று ஒரு மண்டபத்தில் மிக்க சிறப்புடன் சீர்த்தி யென்னும் இராசமாதேவியோடு வீற்றிருக்கும் அரசனுடைய செவ்வியைப் பார்த்துச் சேய்மையில் வணங்கிநின்று,

"வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி
ஒளியொடு வாழி யூழிதோ றூழி
வாழி யெங்கோ மன்னவர் பெருந்தகை
கேளிது மன்னோ கெடுகநின் பகைஞர்" (௧௭௭ - ௮0)

என்று வாழ்த்தி, "யானைத்தீயென்னும் நோயால்வருந்தி உடல் மெலிந்து இந்நகரில் திரியும் மங்கை யொருத்தி சிறைக்கோட்டத் துள்ளே வந்து தேவரீரை வாழ்த்திக் கையின்கண் பிச்சைப்பாத் திரம் ஒன்றையே வைத்துக்கொண்டு அதிலிருந்துண்டாகி வளரும் சோற்றால் அங்கேயுள்ள எல்லாருடைய பசியையுந்தீர்த்து விளங்கு கின்றாள். இவ்வற்புதத்தைத் தெரிவிப்பதற்கே வந்தோம்" என் றார். அதைக்கேட்ட அரசன், "அம்மங்கையை இங்கே அழைத்து வருக" என்றான். உடனே காவலாளர்கள் வந்து அதனைச்சொல்ல அவள்சென்று அரசனைக்கண்டு, "அரச! உனது அருள் வாழ்க" என்றாள். அரசன், "மிக்க தவமுடையாய்! நீயார்? கையிலேந் திய பாத்திரம் எங்கே கிடைத்தது?" என்றான். அவள், "அரசே! நெடுங்காலம் வாழ்வாயாக; யான் விஞ்சைமகள்; இந்நகரில் வேற்று வடிவங்கொண்டு திரிந்தேன்; இது பிச்சைப்பாத்திரம்; இதனை அம்பலத்தேயுள்ள தெய்வமொன்று எனக்கு அருளியது; இது, தெய்வத்தன்மையோடு கூடியது; யானைத்தீயென்னுந் தீராப்பசியைத் தீர்த்தொழித்தது; பசியால் மெலிந்தவர்களுக்கு மிருதசஞ்சீவினியாகவுள்ளது" என்று சொல்ல, அரசன், "யான் செய்யவேண்டுவது யாது?" என்றுகேட்ப அவள், "சிறைச் சாலையை அறச்சாலையாகச் செய்யவேண்டும்" என்றாள். அரசன் அவள் விரும்பிய வண்ணமே சிறைச்சாலையை அழித்துத் தூய்மை செய்து அவ்விடத்தைப் பலவகையான புண்ணியங்களும் நடத்தற் குரிய இடமாகச்செய்வித்தான்.

உ0.—உதயகுமரனை வாளாலெறிந்தகாதை.

அரசனுடைய கட்டளையால், சிறைச்சாலை பலவகைப் புண்ணியங்களும் நிகழ்தற்குரிய அறச்சாலையாய் விளங்கிற்று. உதயகுமரன் இச்செய்திகளையெல்லாம் கேட்டு, "மணிமேகலை உலகவறவியை நீங்கி வெளியே வந்தபொழுது அவளைக் கைப்பற்றிக்கொணர்ந்து தேரிலேற்றி அவள் கற்ற வித்தைகளையும் அவள் கூறும் இனிய முதுமொழிகளையும் கேட்பேன்" என்று தன்னுள்ளே எண்ணிக்கொண்டு சென்று அவளிருக்கும் உலகவறவியில் ஏறினன். காஞ்சனனென்னும் வித்தியாதரன், "பெரும்பசியால் வருந்தும்படி காயசண்டிகைக்குப் பொதியின்மலையைச் சார்ந்த காட்டாற்றின் கரையில் விருச்சிகமுனிவன் இட்ட சாபத்தை அவள் அனுபவித்தற்குரிய பன்னிரண்டு வருடங்களும் சென்றன; சென்றும் அவள் வாராமைக்குக் காரணம் யாதோ?" என்று மிக்க கவலையுற்று, தனது நகரை நீங்கி ஆகாயவழியே வந்து காவிரிப்பூம்பட்டினத்தில் இறங்கிப் பூதசதுக்கமும் பல பூஞ்சோலைகளும் முனிவர்களுடைய தவச்சாலைகளும் மன்றங்களும் அம்பலங்களும் ஆகிய இடங்களிலெல்லாம் சென்று சென்று தேடித் தேடித் திரிந்து, காயசண்டிகைவேடம் பூண்டு உணவளித்து மாந்தர்கள் பலருடைய பசியையும் மாற்றிக்கொண்டிருக்கும் மணிமேகலையை மணிமேகலையென்று அறியானாகிக் காயசண்டிகையென்றே நிச்சயித்துக்கொண்டு அருகிற் சென்று அவளைநோக்கி, "நீ ஏந்திய இப்பாத்திரம் ஒன்றாயிருந்தும் இதனால் அளிக்கப்படும் உணவை அருந்துவோர் பலராய் உள்ளார்; எனக்கு இது மிக்க வியப்பைத் தருகின்றது; உன்னை வருத்திய யானைத்தீயாகிய நோயை ஒழித்தற்குத் தேவர்கள் இதனைக் கொடுத்தார்களோ?" என்று சொல்லிப் பின்பு பழைய நட்பினைப் புலப்படுத்தும் மொழிகள் பலவற்றைக் கூறிப் பாராட்டவும், அவள் அவற்றைச் சிறிதும் மதியாமல் அவனை நீங்கி உதயகுமரனையடைந்து அவனருகே நின்று இளமையின் நிலையில்லாமையை அவனுக்கு அறிவுறுத்த நினைந்து, அங்கே இயல்பாகவந்த முதுமைப்பருவத்தா ளொருத்தியைக் காட்டி, முன்பு அழகையுடையனவாயிருந்த அவளுடைய உறுப்புக்கள் வலிமைகுறைந்து அழகுகெட்டு வெறுக்கத்தக்கனவாக இருத்தலைப் பலவாற்றானும் அவனுக்குப் புலப்படுத்துவாளாகி,

"பூவினுஞ் சாந்தினும் புலான்மறைத் தியாத்துத்
தூசினு மணியினுந் தொல்லோர் வகுத்த
வஞ்சந் தெரியாய் மன்னவன் மகனே"(கூஎ - கூ)

என்று கூறினள். அவள் அவ்வாறு கூறுதலைக்கேட்ட காஞ்சனன், "யான் பாராட்டிக்கூறுகின்ற சொற்களின் பொருளை இவள் கொள்ளுகின்றிலள்; என்னை மதிக்கின்றிலள்; அயலான் பின்னே செல்லுகின்றாள்; என்னை அயலானாகக் கருதுகின்றாள்; காதற் குறிப்பைப் புலப்படுத்திக்கொண்டே நீதிமொழிகளை இவனுக்குக் கூறுகின்றாள்; இவன் ஆசைநாயகனாதலினாலேயே இவள் இவ்விடத்தில் தங்கிவிட்டாள் போலும்" என்று நினைந்து மிக்க கோபங்கொண்டு புற்றிலடங்கும் பாம்பைப்போல அவ்வுலகவறவியினுள்ளே புகுந்து தீதுகருதி ஒளித்து அடங்கினன். அவன் அங்ஙனம் அடங்கியதை அறியாத உதயகுமரன் மிக்க வேட்கையையுடையவனாகி, "மணிமேகலைதான் காயசண்டிகை வேடம்பூண்டு கையிற் பிச்சைப்பாத்திரத்தை ஏந்திக்கொண்டு வந்துநின்று நம்மை மயக்கினள்; அறிந்தவன் போன்று பழமைகூறிப் பாராட்டிய அயலானொருவன் இங்கே இருத்தலால் இவள் இன்றிரவில் இவ்விடத்தைவிட்டு நீங்குவாளல்லள்; இவள் செய்தியை இன்றிரவின் நடுயாமத்தே வந்து தெரிந்துகொள்வோம்" என்று தன்னுள் எண்ணிக்கொண்டே சென்று தன்னிருப்பிடமடைந்தான். மணிமேகலையும் காயசண்டிகையுருவத்தோடே சம்பாபதி கோயிலை அடைந்து வதிந்தாள். அப்பால் எல்லாரும் தூங்கிய பின்பு உதயகுமரன் முன்பு எண்ணியவாறே செல்லத்துணிந்து தனியேயெழுந்து அரண்மனையை நீங்கி உலகவறவியை யடைந்து,

வேக வெந்தீ நாகங் கிடந்த
போகுயர் புற்றளை புகுவான் போல (கூஅ - கூ)

அதனுள்ளே புகுந்தான். உடனே, அங்கே முன்னம் புகுந்து இவன் வரவை நோக்கிக்கொண்டே கோபத்துடனிருந்த காஞ்சனன், "இவன் இவளிடத்திலேயே வந்தான்" என்று நிச்சயித்து அதிக வேகத்தோடும் எழுந்து விரைந்துபோய் அவன் தோளை வெட்டி வீழ்த்திவிட்டு, காயசண்டிகையைக் கைப்பற்றிக்கொண்டு ஆகாயவழியே செல்லுவோமென்று நினைந்து அவளருகே சென்றான். அப்பொழுது அங்கேயுள்ள கந்திற்பாவையானது, "காஞ்சன செல்லாதே; செல்லாதே; இவள் உன்மனைவியாகிய காயசண்

டிகை யல்லள் ; இவ்வடிவம் மணிமேகலைகொண்ட வேற்றுவடிவம்; காயசண்டிகை கடும்பசியொழிந்து ஆகாயவழியே செல்லுகையில் அவளுக்கு நேர்ந்த துன்பத்தைக் கேட்பாயாக: ஆகாயசாரிகள் துர்க்கை எழுந்தருளியிருக்கும் விந்தமலைக்குநேராக மேலேசெல்லார் ; யாரேனும் அங்ஙனம் செல்வாராயின், அம்மலையைக்காக்கும் விந்தா கடிகையென்பவள் அவர்களைச் சாயையினாலே இழுத்துத் தன் வயிற்றில் அடக்கிக்கொள்வாள்; இதனை யறியாத காயசண்டிகை அம்மலைக்கு நேராக மேற்சென்று அவள் வயிற்றில் அடங்கி விட்டாள். காஞ்சன! இதனையுங் கேட்பாயாக: உதயகுமரன் ஊழ்வினையினால் இறந்தானாயினும் நீ சிறிதும் ஆராயாது வெட்டினமையால், அறிவில்லாதவனேயாவாய் ; மிக்க தீவினையைச் செய்துவிட்டாய் ; அவ்வினை விடாது தொடர்ந்து உன்னை வருத்தும்" என்று சொல்லியது. அதுகேட்டு மனம் வருந்திக் காஞ்சனன் தன்நகரத்துக்குச் சென்றான்.

உக.—கந்திற்பாவை வருவதுரைத்தகாதை.

அப்பால் சம்பாபதியின் கோயிலில் இருந்த மணிமேகலை, காஞ்சனன் செய்தியையும் உதயகுமரன் வெட்டுண்டு வீழ்ந்து இறந்ததையும் காஞ்சனனுக்குக் கந்திற்பாவை கூறிய அற்புத மொழியையும் அறிந்து உடனேயெழுந்து தான்கொண்ட வேற்று வடிவத்தைத் துறந்து உதயகுமரன் உருவத்தைநோக்கி, "முற்பிறப்பில் திட்டிவிடத்தால் உன்னுயிர்போன காலத்தில் நின்பிரிவாற்றாது தீயிற்பாய்ந்து நானும் உயிர்துறந்தேன் ; உவவனத்திற் கண்டபொழுது உன்பாற் கருத்தைச் செலுத்தியதுபற்றி மணிமேகலாதெய்வம் என்னை எடுத்துச்சென்று மணிபல்லவத்தில் வைத்துப் புத்தபீடிகைக்காட்சியால் என்பழம்பிறப்பை எனக்குத் தெரிவித்து உன் முற்பிறப்பையும் கூறிற்று; அதனால், நீ முன்பு கணவனாக இருந்ததையறிந்து யான் உன்பால் அன்புற்று,

> பிறந்தோ ரிறத்தலு மிறந்தோர் பிறத்தலும்
> அறந்தரு சால்பு மறந்தரு துன்பமும்
> யானினக் குரைத்துநின் னிடர்வினை யொழிக்கக்
> காயசண் டிகைவடி வானேன் காதல ; (கக - உஉ)

வித்தியாதரனுடைய வாட்படையால் வெட்டுண்டு வீழ்ந்தனையே; அந்தோ!" என்று புலம்பி வெய்துயிர்த்து வருந்தி அவனுருவின்

அருகே செல்வாளாயினள். அப்பொழுது அங்குள்ள கந்திற் பாவைத் தெய்வம், "நீ இவனிடத்திற் செல்லாதே; செல் லாதே; உனக்கு இவன் கணவனாக இருந்ததும் இவனுக்கு நீ மனை வியாக இருந்ததும் சென்ற பிறவியிலேமட்டும் நிகழ்ந்தனவல்ல; அதற்கு முன்னமேயும் எத்தனையோ பிறவிகளில் நிகழ்ந்தன;

> நினக்கிவன் மகனாத் தோன்றிய தூஉம்
> மனக்கினி யாற்குநீ மகளாய தூஉம்
> பண்டும் பண்டும் பல்பிறப் புளவாற்
> கண்ட பிறவியே யல்ல காரிகை; (உகூ - கூஉ)

இங்ஙனம் தடுமாறும் பிறவித்துன்பத்தை ஒழித்துக்கொள்ளுதற்கு முயலும் அறிவினையுடையாய்! இவனிறந்ததுபற்றி நீ துன்பமடை யாதே" என்று தனது தெய்வவாக்காற் சொல்லிற்று. அதுகேட்ட மணிமேகலை சென்று, "இவ்வம்பலத்தில் யாவருக்கும் மெய்ம்மை யைச் சொல்லிக்கொண்டு எழுந்தருளியிருக்குந் தெய்வம் ஒன்றுண் டென்பர்; அத்தெய்வம் நீதானோ? உன் திருவடியை வணங்கு கின்றேன்; சென்றபிறவியில் திட்டிவிடத்தாலும் இப்பிறவியில் வித்தியாதரனுடைய வாளாலும் இவன்இறந்ததற்குள்ள கார ணத்தை நீ அறிவையோ? அறிந்திருப்பாயாயின் அதனை அடிச் சிக்கு உரைத்தருளல் வேண்டும்" என்றாள். என்றலும் அத் தெய்வம், "புத்ததேவன் அவதரித்து வருதலைக்கூறிக் காயங் கரை யென்னும் ஆற்றங்கரையி லிருந்துகொண்டு மனிதருடைய அறிவின்மையைப் போக்கும் பிரமதருமமுனிவரை இராகுல னும் நீயும் வழிபட்டு அவருக்கு அமுது செய்விக்க நினைந்து அக்கருத்தை அவருக்கு அறிவித்து அவர் உடன்பாடுபெற்று, 'விடியற்காலத்திலேயே அடிசில் முதலியவற்றை விரைந்து ஆக்குவாய்' என்று மடையனுக்குக் கூறினீர்; அவன் யாது காரணத்தாலோ அக்காலத்தில் வாராமல் சிறிதுபொழுது பாணித்து வந்து, அங்ஙனம்வந்த அச்சத்தால் வழுக்குற்றுக் கால்தளர்ந்து மடைக்கலம் சிதையும்படி வீழ்ந்தான்; வீழ்ந் ததனைக்கண்டும் இரங்காமல், 'இவன் முனிவர்க்குச் செய்ய வேண்டிய காரியத்தை விரைந்து வந்து செய்யாது தாழ்த் தான்' என்று சினந்து தோளும் தலையும் துண்டமாய் வேறாகும்படி இராகுலன் அவனை வெட்டினான்; வெட்டிய அவ்வல்

வினையே அப்பிறப்பில் அவனைத் திட்டிவிடத்தால் இறக்கச் செய்த தன்றி இப்பிறப்பினும் இங்கு வெட்டுண்டு வீழச்செய்தது; உதய குமரன் இங்ஙனமிறந்ததற்குக் காரணம் இதுவே; வினை, தன் பயனை ஊட்டாமலொழியாதென்பது திண்ணம். இன்னும் கேட் பாயாக: உதயகுமரனிறந்ததற்கு மிகவும் வருத்தமுற்ற சக்கர வாளக்கோட்டத்து முனிவரால் அச்செய்தியை அறிந்த அரசன் உன்னைச் சிறையில் வைப்பான்; அதுதெரிந்த இராசமாதேவி உன்னைச் சிறைமீட்டுத் தன்காவலில் வைத்துக்கொள்வாள்; மாத வியின் வேண்டுகோளால் வந்த அறவணவடிகளுடைய சொல்லால் அக்காவலினின்றும் நீங்குவை. அப்பால் நீ சாவகநாடு போய் ஆபுத்திரனிடஞ் சென்று அவனோடு மணிபல்லவத்தை அடைவை; தன் வரலாற்றைப் புத்தபீடிகைக் காட்சியாலும் தீவதிலகையாலும் அறிந்து அவ்வரசன் தன்நாட்டை யடைந்தபின், நீ ஒரு முனிவன் வேடம் பூண்டு வஞ்சிநகரம் புகுவாய்; புகுந்து அந்நகரத்துள்ள சமயவாதிகள் பலருடைய கொள்கைகளையுங் கேட்பாய்;

> தீவினை யுறுதலுஞ் செத்தோர் பிறத்தலும்
> வாயே யென்று மயக்கொழி மடவாய்! (கக௩ - ௪)

இது நிற்க. என் வரலாற்றையும் கேட்பாயாக: யான் தெய்வ கணங்களைச்சார்ந்த ஒருவன்; என் பெயர் துவதிகனென்பது; இந்தப் பழைய தூணில் எனக்கு ஒப்பாக மயனாற் செய்யப்பட்ட இந்தப் படிமத்தைவிட்டு ஒருபொழுதும் நீங்கேன்" என்று மிகவும் விளக்கமாகச் சொல்லியது. சொன்னவுடன் மணி மேகலை, "அப்பால் என்னுடைய மரணமிறுதியாக நிகழும் செய்தி களையெல்லாம் உரைத்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தாள். பிரார்த்திக்கவே, "மழையில்லாததுபற்றிக் காஞ்சிநகரத்தில் உயிர் கள் பசியால் வருந்துதலையும் மாதவி சுதமதி யென்னும் இருவரு டன் அறவணவடிகள் அந்நகரஞ்சென்று உன்னுடைய வரவைப் பார்த்துக்கொண்டு தங்கியிருத்தலையும் வஞ்சிநகரத்தில் நீ அறிந்து உடனே அக்காஞ்சி நகரஞ் சென்று உணவளித்து எல்லாவுயிர் களையும் பாதுகாப்பாய்; அந்நகரத்தே உன்னாலே பற்பல அற் புதங்கள் நிகழும். அப்பால், வஞ்சிநகரிற் கேட்ட சமயவாதிகளு டைய கொள்கைகளையெல்லாம் அறவணவடிகளுக்கு நீ தெரிவிப் பாய்; அப்பொழுது அவர்,

" தவமுந் தருமமுஞ் சார்பிற் றோற்றமும்
பவமறு மார்க்கமும் பான்மையி னுரைத்து
மறவிரு ளிரிய மன்னுயி ரேமுற
அறவெயில் விரித்தாங் களப்பி லிருத்தியொடு
புத்த ஞாயிறு தோன்றுங் காறும் (கசுரு - எ)

இந்தத் தலத்திலேயே இறந்தும் பிறந்தும் தருமோபதேசஞ் செய்துகொண்டு தங்காநிற்பேன்" என்று சொல்லுவர். அவர் செய்த உபதேசமொழிகள் பிழையாமல் நல்லறங்கள் பலவற்றையும் செய்து இறந்து மேலேவரும் பிறப்புக்களை * உத்தர மகத நாட்டிலேயே பெறுவாய்; அவைகள் யாவும் உனக்கு ஆண்பிறப்பாகவே நிகழும்; அப்பிறப்புக்களுள் ஒவ்வொன்றிலும் அருளறத்தினின்றும் ஒழியாயாகி நின்று முடிவிற் புத்ததேவனுக்கு முதல் மாணுக்கனுகும் பெரும்பேறுற்றுப் பற்றற்று நிருவாணமடைவாய். இன்னுங்கேள்: உன் குலத்து முன்னோர்களுள் தானந் தாங்கிச் சீலத்தில் மேம்பட்ட ஒருவனைக் கடலினின்றும் முன்னம் எடுத்தளித்த மணிமேகலா தெய்வம் நீ முற்பிறப்பில் சாதுசக்கர முனிவனுக்கு உணவளித்த புண்ணியவிசேடமுடையாயென்பதையறிந்து உவவனத்தினின்றும் உன்னை யெடுத்து மணிபல்லவத்திற் கொண்டு சென்று புத்த பீடிகையைக் காணச்செய்தது" என்று அத்தெய்வம் சொல்லிற்று. கேட்ட மணிமேகலை கவலையொழிந்து மயக்கம் நீங்கியிருந்தாள். அவ்வளவிலே சூரியனுதித்தான்.

உஉ.—சிறைசெய்காதை.

சூரியனுதித்தவுடன் கந்திற்பாவையையும் சம்பாபதியையும் வழிபட்டவர்கள் அங்கே உதயகுமரன் வெட்டுண்டு கிடத்தலைக் கண்டு, அதனைச் சக்கரவாளக்கோட்டத்திலுள்ள முனிவர்களுக்குக் கூறினர். அம்முனிவர்கள், "இவன் வெட்டுண்டதற்குக் காரணம் நீ அறிந்ததுண்டோ?" என்று மணிமேகலையைக் கேட்ப, அவள் நிகழ்ந்தவற்றைச் சொல்ல, அவர்கள் உதயகுமரனுடைய உடம்பையும் மணிமேகலையையும் வேறிடத்தில் ஒளித்துவைத்துவிட்டு அரண்மனை சென்று தம்முடைய வரவை வாயில் காப்போ

* புத்ததேவர் அவதரித்ததும் அவருக்கு ஞானோதயமானதும் மகத நாடாதலால், அது சிறந்த புண்ணியபூமியாகப் பௌத்தரால் மிகப் பாராட்டப்படும்.

ரால் அரசனுக்குத் தெரிவித்து உள்ளேபோய் அரசனையடைந்து அவனை வாழ்த்தியபின்பு, அவர்களுள் ஒருமுனிவர், "அரசே! இன்றுமட்டுமன்று; இந்நகரில் காமவிகாரத்தால் மயங்கிப் பத்தினிப் பெண்டிரையடுத்து வன்மைசெய்தும் தவமகளிரை விரும்பியொழுகியும் ஒறுக்கப்பட்டு இறந்தோர் முற்காலத்தும் பலருண்டு; கேட்பாயாக: அரசர்களுடைய பரம்பரையை வேரறுத்த பரசுராமன் போர்செய்தற்கு வந்தபொழுது துர்க்கை, அந்நாளில் இந்நகரையாண்ட காந்தனென்னும் அரசனைப்பார்த்து, 'நீ இப்பொழுது பரசுராமனோடு போர்செய்தற்குச் செல்லுதல் தகுதியன்று' என்று கூறினமையால் வேறிடஞ் செல்லுதற்கு நினைந்த அவ்வரசன் இந்நகரைப் பாதுகாத்தற்குரியோர் யாரென்று ஆராய்ந்து காவற்கணிகையின் புதல்வனும் வீரருள்வீரனுமாகிய ககந்தனென்பவனே இதற்குத் தகுதியுள்ளானென்று நிச்சயித்து அவனை வருவித்து, 'அரசாளுங்குலவுரிமை உனக்கின்மையால், அரசபரம்பரையோரைக் கொல்லுதலையே விரதமாகக்கொண்ட பரசுராமன் உன்னோடு போர்செய்தற்கு வாரான்; அகத்தியமுனிவருடைய கட்டளைபெற்று யான் மீண்டு வருமளவும் இந்நகரை நீ பாதுகாக்கக்கடவை; உன்னாற் காக்கப்படுதலின் இந்நகர்க்குக் காகந்தியென்ற பெயருண்டாகக்கடவது' என்று சொல்லிவிட்டு வேற்றுவடிவங்கொண்டு தான்கருதிய இடஞ் சென்றான்.

"அவன் சென்றபின் ககந்தனென்பவனால் இந்நகரம் பாதுகாக்கப்பட்டு வந்தது. அப்பொழுது ஒருநாள் ககந்தனுடைய பிள்ளைகளுள் இளையவன், காவிரியில் நீராடிவிட்டுத் தனித்து வருபவளாகிய மருதியென்னும் பார்ப்பனியை அந்நதிவாயிலிற்கண்டு காமபரவசனாய், 'நீ வா' என்றழைத்தான்; அவள் மனங்கலங்கி, 'இவ்வுலகில் மழைவளத்தைத்தரும் பத்தினிப்பெண்டிராயுள்ளார் பிறருடைய நெஞ்சிற் புகார்; நானோ இவனுடைய உள்ளத்திற் புகுந்தேன்; ஆதலால், இனி அந்தணனுடைய முத்தீயைப்பேணுந் தகுதி எனக்கு இல்லையே! இதற்குக்காரணம் யாது?' என்றுதுன்பமுற்றுத் தன்னுடையவீட்டிற்குச்செல்லாமற்பூதசதுக்கம் புகுந்து மயங்கி, 'தெய்வமே! கொண்டவனுக்கு யாதொரு குற்றமுஞ் செய்திலேன்; அப்படியிருந்தும் பிறனுடைய நெஞ்சில் எளிதாகப் புகுந்தேன்; யான் செய்த தவறு இன்னதென்று எனக்கே புலப்படவில்லை; தவமறைந்தொழுகுவோர் முதலிய

றியவர்களைப் பாசங்கட்டிவர நீ இங்கே அறைந்தனையென்று ஆன்றோர் கூறக் கேட்டுளேன்; இப்பொழுது என்னை அங்ஙனஞ் செய்யாமையின், நீ ஈண்டிருத்தல் பொய்யாமோ?' என்று அவலித்து அரற்றினள். அரற்றும்பொழுது சதுக்கப்பூதம் தோன்றி, 'மடக்கொடி! கேட்பாயாக:

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்; (௫௧ - ௬௧)

பொய்க்கதைகளையும் நகையை விளைவிக்கும் மொழிகளையும் பிறர் வாய்க்கேட்டு நிருத்தகீதவாத்தியங்களையுடைய விழாக்களை விரும்பித் தெய்வங்களை வழிபடும் நியமத்தை மேற்கொண்டிருந்தனை; ஆதலின், உன் ஏவலால் மேகம் மழையைப் பெய்யாது; உத்தமப் பத்தினிப்பெண்டிரைப்போலப் பிறருடைய மனத்தைச் சுடுந்தன்மையும் உனக்கு இல்லாதுபோயிற்று. மேற்கூறிய வேற்றுச் செய்கைகளை விடுவாயாயின் மேகம் உனது மொழிவழிப்பட்டு ஒழுகாநிற்கும். மனம்போனவாறே யொழுகும் பெண்டிரைக் கட்டுவதுபோல உன்னை என் பாசம் கட்டுதல் செய்யாது. குற்றஞ் செய்தோரை ஏழு தினங்களுக்குள் தண்டித்தல் அரசனுடைய முறைமை; அவன் அக்காலவரையறையுள் அதனைச் செய்யா தொழியின் அப்பால் தண்டிப்பது என்னுடைய முறைமையாகும்; இவ்வேழுதினத்திற்குள்ளே தானே இச்செய்தியைக் கேட்டுக் ககந்தன் உன்னை விரும்பிய சிறுதொழிலாளனை வெட்டிவிடுவான்' என்று எடுத்துரைத்தது. அப்பூதம் உரைத்த ஏழுநாளைக்குள்ளே அச்சிறுதொழிலாளன் தாதையின் வாளால் தடியப்பட்டனன். மன்னவரேறே! இன்னுங் கேட்பாயாக:

"இந்நகரில் முன்பிருந்த பேரழகையுடைய தருமதத்த னென்னும் வாணிகனும் அவன் மாமன் மகளாகிய விசாகையென் பவளும் ஒருவர்பால் ஒருவர் மிக்க அன்புபாராட்டி உரையாடிக் கொண்டிருந்தமைபற்றி, 'இவர் காந்தருவ மணத்திற்கு உரியவரா யினர்' என்று ஊரிலுள்ளாரெல்லாரும் பழி கூறுவாராயினர். அப்பொழுது விசாகையானவள் சென்று உலகவறவியிலேறி, 'கந்திற்பாவாய்! இப்பழியை ஒழிப்பாய்' என்று முறையிட் டனள்; உடனே அத்தெய்வம், '[illegible]! இவள் [illegible] [illegible]ரும் இவ்[illegible]' என்[illegible]

உயர்த்திக்கூறியது; அதுகேட்டு ஊரார் அவனை வியந்து புகழ்ந்தார்கள். விசாகை, 'இத்தெய்வம் தெளிவியாதாயின், இவ்வூராருக்கு என்பாலுண்டாகிய ஐயம் நீங்காது; மறுபிறப்பிலேதான் மைத்துனனுக்கு மனைவியாவேன்; இப்பிறப்பில் இவனை மணத்தல் செய்யேன்' என்று தன்னுடைய நற்றாய்க்குச் சொல்லிவிட்டுக் கன்னிமாடம் புகுந்து தவஞ்செய்து கொண்டிருந்தாள். அப்பால், தருமதத்தன் தன் பழியைப் போக்கிய கந்திற்பாவையைத் துதித்துக் காவிரிப்பூம்பட்டினத்தைக் கடந்து தென் மதுரையையடைந்து, 'விசாகையையன்றி வேறு மகளிரை யான் விரும்பேன்; இப்பிறப்பு இங்ஙனம் ஒழிவதாக' என்று எடுத்துக்கூறி விரதம் பூண்டவனாகி வாணிகஞ்செய்து அறவழியே பொருளீட்டிப் பெருஞ் செல்வமுற்று அரசனால் எட்டிப்பூப்பெற்று மிக்க சிறப்பையடைந்து அறுபது பிராயம் வரையும் அந்நகரிற் றங்குவானாயினன். அப்பொழுது அவனிடத்தில் ஓரந்தணன் சென்று, 'நீ விவாகமின்றி இந்நகரத்தே இருந்து என்ன காரியஞ் செய்தனை? மனைவியில்லாதவர்கள் எவ்வளவு தருமஞ் செய்வாராயினும் தெய்வலோக மடையாரென்பதை நீ கேட்டறிந்திலையோ? இனித் தாழ்த்தலின்றி உன் நகரஞ் செல்வாயாக' என்று கூறலும், தருமதத்தன் அந்நகரைவிட்டு நீங்கிவந்து இந்நகரத்திற் புகுந்தான். அவன் வந்தது கேட்ட விசாகை சிறிதும் நாணமின்றிக் கன்னிமாடத்திலிருந்து புறத்தேவந்து அவனையடைந்து, 'இப்பொழுது நம்முள் ஒருவரையொருவர் நாம் அறிந்திலேம்; முன்பு நம்மை மயக்கிய அழகுகள் எங்கே ஒளித்துச் சென்றன? உனக்கு அறுபது பிராயம் ஆயின; எனக்கும் கூந்தல் நரைத்தது; முன்பிருந்த இளமையும் காமமும் எங்கே ஒளித்துப்போயின; உரைப்பாயாக. இப்பிறப்பில் யான் நின்னடியை அடையேன்; மறுமையில் நின்னை மணப்பது திண்ணம்.

இளமையு நில்லா யாக்கையு நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமு நில்லா
புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்
மிக்க வறமே விழுத்துணை யாவது; (கூ.டு-அ)

ஆதலால், தானஞ்செய்க' என்று சொல்ல, அவன் தான் ஈட்டிய பொருள்களையெல்லாம் விசாகைக்குக் காட்டி அப்பொருள்களைக் கொண்டு அவளோடு செய்த நல்லறங்கள் மிகப்பல. இது நிற்க;

முன் இந்த விசாகை கந்திற்பாவைத் தெய்வத்தாற் பழிநீங்கிப் பலர் நடுவே வீதியில் வருகையில், முன்பு மருதியால் மடிந்தவனுடைய மூத்தோன், அவ்விசாகையைக்கண்டு அதிகமோகங்கொண்டு, தான் தலையிலணிந்த மாலையை வாங்கி அவள் கழுத்தில் இடுதற்குத் துணிந்து அம்மாலையை எடுத்தற்காகத் தன் கையைக் குடுமியிற் செலுத்த அக்கை அதனைவிட்டு நீங்காததாயிற்று. ஆகவே, 'விசாகையின் ஒழுக்க விசேடத்தால் அவன் கை கீழே இழிந்திலது' என்று பலர் கூறக்கேட்ட ககந்தன் மிகுந்த கோபங்கொண்டு தன் மகனென்று பாராமல் உடனே அவனை வெட்டி வீழ்த்தினான்" என்று கூறினார்கள்.

கேட்ட அரசன், "இன்று மட்டுமன்று என்று தொடங்கிப் பலவற்றையுங் கூறினீர்; முன்பு நிகழ்ந்ததாகக்கூறிய அத்திய வொழுக்கம் இந்நாளினும் உளதோ? இயம்புமின்" என்று கேட்ப, அம்முனிவர்களுள் ஒருவர்,

"முடிபொருளுணர்ந்தோர் முதுநீ ருலகில்
கடியப் பட்டன வைந்துள வவற்றில்
கள்ளும் பொய்யுங் களவுங் கொலையும்
தள்ளா தாகுங் காமந் தம்பால்
ஆங்கது கடிந்தோ ரல்லவை கடிந்தோரென
நீங்கின ரன்றே நிறைதவ மாக்கள்
நீங்கா ரன்றே நீணில வேந்தே
தாங்கா நரகந் தன்னிடை யுழப்போர்; (௧௬௯ - ௭௬)

தன் கணவனாகிய கோவலன் கொலையுண்டது பொறாமல் மாதவி உலகவாழ்வை வெறுத்து முனிவர்களுடைய தவச்சாலையை அடைந்தாள். அவள் பெற்ற மணிமேகலை யென்பவள் இளம் பருவத்தே தானே தவஞ்செய்யத் துணிந்து சிற்றிலும் பேரிலுஞ் சென்று ஐயமேற்று அருந்தி ஊரம்பலமடைந்தாள். அவள் அவ்வியல்பினளாகவும், அவளை விழைந்து நிழல்போல விட்டுநீங்காமற் காமபரவசனாய் நள்ளிருளில் உதயகுமரன் அவ்வம்பலத்தை அடைந்தான். அது தெரிந்த மணிமேகலை, அவன் தன்னை நலியாதிருக்க வேண்டிக் காயசண்டிகை வடிவம் பூண்டாள். காயசண்டிகையை அழைத்துச் செல்லுதற்கு வந்து அங்கே முன்னமிருந்த அவள் கணவனாகிய வித்தியாதரன் கண்டு, அவள் மணிமேகலை யென்பதை யறியாமல், அவளைத் தன் மனைவியாகிய காயசண்டிகை யென்றும், அங்கே வந்த உதய குமர

னைத் தன் மனைவியை விரும்பி வந்தவனென்றும், தானே தன்னுள் நிச்சயித்துக்கொண்டு முறுகிய கோபமுற்று உடனே அவனை வாளால் வெட்டி வீழ்த்தினன்" என்று சொன்னார். அதுகேட்ட அரசன் தன்மகன் இறந்ததற்குச் சிறிதும் வருந்தாமற் சோழிகவேனுதியைப் பார்த்து, "உதயகுமரனுக்கு யான் செய்யவேண்டிய தண்டனையைத் தான் செய்தமையால் வித்தியாதரன் தகவிலனுவான் ;

மாதவர் நோன்பு மடவார் கற்பும்
காவலன் காவ லின்றெனி னின்றால்; (உ0அ - கூ.)

தன் மகனைப் பூமியிலே கிடத்தி அவன்மீதுதேர்க்காலைச் செலுத்தி முறைசெய்த அரசர்பிரானுடைய பரம்பரையில் ஒரு தீவினையாளன் பிறந்தானென்பதை மற்றை அரசர்கள் கேட்குமுன்னம் அவனைப் புறங்காடடைவித்து, கணிகைமகளாகிய மணிமேகலையையும் சிறைப்படுத்துக" என்றனன் ; சோழிகவேனுதி அவ்வாறு செய்தான்.

உ௯.—சிறைவிடுகாதை.

பின்பு, அரசன் கட்டளையால் வாசந்தவையென்னும் முதியவளொருத்தி, புத்திரசோகத்தாற் கலங்கி வருந்தும் இராசமாதேவியை விரைந்தடைந்து தொழுது முன்னின்று வாழ்த்தி அவளுடைய வருத்தம் நீங்கும்வண்ணம் பல கட்டுரைகள் கூறி ஒருவாறு ஆற்றுவித்துப் போயினள். அவள் போனபின்பு, இராசமாதேவி தன்னுடைய வருத்தம் புறத்தே தோன்றுதவண்ணம் அடக்கிக் கொண்டவளாய், "மணிமேகலையை வஞ்சித்து வருத்துவேன்" என்று எண்ணி அரசனைச் சார்ந்து, "செங்கோல் வேந்தே ! மணிமேகலையின் பிக்குணிக் கோலத்தைக்கண்டு தன்னறிவு வேறுபட்ட உதயகுமரன் அரசாட்சிக்கு உரியவனல்லன் ; அவன் அக்கொடுந்தொழிலால் இறந்தது தக்கதே; தனது இளமையைப் பயனற்றதாகச் செய்த பேரறிவுடையவளாகிய மணிமேகலைக்குச் சிறை தகுதியன்று" என்றாள். அரசன், "உன் கருத்து அப்படியாயின் அவளைச் சிறையினின்றும் விடுவி" என்று கூறினன். கேட்ட இராசமாதேவி சிறையினின்றும் விடுவித்து அவளை அழைத்துக் கொண்டு அரண்மனையுட்சென்று, "இவ்வூரிலுள்ளாரெல்லாரும் அடித்து வருத்தும்படி இவளைப் பித்துடையவளாகச் செய்வேன்"

என்றெண்ணி மயக்கும் மருந்தை அவளுக்கு ஊட்டினன். அவள் மறுபிறப்புணர்ந்தவளாதலால் சிறிதும் அறிவு வேறுபடாதிருந்தாள். அப்பால் இராசமாதேவி அறிவிலியாகிய ஒரிளைஞனை அழைத்து, "இவளுடம்பை எப்படியேனும் வேறுபடுத்தி 'மணிமேகலை என்னை விரும்பினாள்' என்று பலர்க்கும் சொல்வாயாக" என்று சொல்லிப் பொற்காசுகள் பலவற்றைக் கைநிறைய அவனுக்குக் கொடுப்ப, அவன் அத்தீச்செயற்கு உடம்பட்டு மணிமேகலை இருந்த இடத்தை அடைந்தான். அடைதலும் அவள், "இவன் வந்தது இராசமாதேவியின் வஞ்சனையால்" என்று நிச்சயித்து வேற்றுருவெய்துவிக்கும் மந்திரத்தை ஜபித்து ஆண்வேடம்பூண்டு அங்கேயிருந்தாள். அங்ஙனமிருந்ததனைக் கண்ட அறிவிலி, நடுநடுங்கி, "அரசருடைய அந்தப்புரத்தில் ஆடவர் அணுகார்; இராசமாதேவியின் தீய நினைப்பை யான் அறிந்திலேன்" என்று பயந்து அவ்விடத்தைவிட்டு விரைந்து புறத்தே ஓடிப்போயினன். அதன்பின் இராசமாதேவி "நம் அருமைப் புதல்வனை மயக்கி மாளச் செய்த இவளை இனி உயிரோடு வையேன்" என்று சினந்து, "நோய்மிகுதியால் இவளுக்கு உணவு செல்லவில்லை" என்று அவள்பாற் பொய்ந்நோயொன்றைக் காட்டி அவளைப் புழுக்கறையில் அடைப்ப, அவள் ஊணொழி மந்திரமுடையளாதலின் அம்மந்திரத்தை ஜபித்துச் சிறிதும் வாட்டமின்றி அவ்வறையிலேயே இருந்தாள். அதனைக்கண்ட இராசமாதேவி ஆச்சரியமுற்று நடுநடுங்கி அவளைநோக்கி, "மகனை யிழந்த பெருந்துன்பம் பொறுக்கலாற்றாது இத்தீங்குகளைச் செய்தேன்; நீ இவற்றைப் பொறுத்தருள வேண்டும்" என்று பலவாறு வேண்டினள். வேண்டவே மணிமேகலை, "சென்றபிறப்பில் நீலபதியின் வயிற்றிற் றோன்றிய இராகுலனைத் திட்டிவிடமென்னும் பாம்பு உயிருண்டபொழுது, அதனைப் பொறேனாகித் தீயிற்பாய்ந்து என்னுடைய உயிரை விட்ட நாளில்,

யாங்கிருந் தழுதனை யிளங்கோன் றனக்குப்
பூங்கொடி நல்லாய் பொருந்தாது செய்தனை
உடற்கழு தனையோ வுயிர்க்கழு தனையோ
உடற்கழு தனையே லுன்மகன் றன்னை
எடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரே
உயிர்க்கழு தனையே லுயிர்புகும் புக்கில்
செயப்பாட்டு வினையாற் றெரிந்துணர் வரிய

தவ்வுயிர்க் கன்பினை யாயி னாய்தொடி
எவ்வுயிர்க் காயினு மிரங்கல் வேண்டும்; (எக - கூ)

உன்மகனை வித்தியாதரனொருவன் வெட்டிவீழ்த்தியதற்குக் காரணமான தீவினையை இன்னதென்று கூறுவேன்; கேட்பாயாக: அது முற்பிறப்பில் மடைக்கலஞ்சிதைய வீழ்ந்த மடத்தொழிலாளனை வெட்டி வீழ்த்தியதாலுண்டாகிய தீவினையே; அத்தீவினை அப்பிறப்பிலேயே நஞ்சுவிழியரவால் அவனுடைய நல்லுயிரைவாங்கி இப்பிறப்பிலும் விஞ்சையன்வாளால் வெட்டுண்ணச்செய்தது. 'இச்செய்திகளை யெல்லாம் நீ எப்படி அறிந்தாயோ?' என்பையாயின் நடந்தது இவ்வாறாகும்" என்று தான் உவவனஞ்சென்றது முதலிய எல்லாவற்றையும், அவளுக்கு விளங்கக்கூறிப் பின்னுங் கூறுவாளாயினள்: "நீ மருந்தால் எனக்குப் பித்தேற்றினை; யான் மறுபிறப்புணர்ந்தேனாதலின் சிறிதும் அறிவுபிறழாதிருந்தேன்; உன் ஏவலால் கல்லாக்கயவன் என்பால்வர வேற்றுரு வெய்துவிக்கும் மந்திரவலியால் ஆணுருக்கொண்டிருந்தேன்; யாதொரு நோயுமில்லாத என்னைப் பொய்ந் நோய்காட்டிப் புழுக்கறையில் அடைப்பித்தாய்; ஊணொழி மந்திர முடைமையினாலேயே அத்துன்பத்தினின்றும் தப்பினேன். நீ சென்ற பிறப்பில் எனக்குக் கணவனாயிருந்த இராகுலனுக்கு இப்பிறப்பில் ஈன்றதாயாதலின், உனது துக்கத்தைக்களைந்து தீவினையைப்போக்கி உன்னை நல்வழிப்படுத்தற் பொருட்டே ஆகாயவழியே செல்லுதலையும் வேற்றுருக் கொள்ளுதலையும் யான் நினைந்திலேன்; இதுநிற்க; இவ்வுலகத்துள்ளோர்க்குத் துன்பம் தருவன யாவையெனின், காமம், கொலை, கள், பொய், களவென்னும் ஐந்துமாம். இவற்றைத் துறந்தோரே சீல முடையோராவர்.

செற்றஞ் செறுத்தோர் முற்ற வுணர்ந்தோர்
மல்லன்மா ஞாலத்து வாழ்வோ ரென்போர்
அல்லன் மாக்கட் கில்லது நிரப்புநர்
திருந்தே ரெல்வனை செல்லுல கறிந்தோர்
வருந்தி வந்தோ ரரும்பசி களைந்தோர்
துன்ப மறுக்குந் துணிபொரு ளுணர்ந்தோர்
மன்பதைக் கெல்லா மன்பொழி யார்" என
ஞான நன்னீர் நன்கனந் தெளித்துத்
தேனா ரோதி செவிமுதல் வார்த்து
மகன்றுயர் நெருப்பா மனம்விற காக
அகஞ்சுடு வெந்தீ யாயிழை யவிப்ப, (கஙக - சக)

இராசமாதேவி மனந்தெளிந்து மணிமேகலையை வணங்கினள்; மணிமேகலை அதனைப்பொறாளாகி, "நீ என் கணவனைப்பெற்ற தாயாக இருத்தலன்றி அரசனுடைய மாபெருந்தேவியாகவுமுள்ளாய்; ஆதலால் என்னை வணங்குதல் தகுதியன்று" என்று துதித்து அவளைத் தானும் அன்புடன் வணங்கினாள்.

உச.—ஆபுத்திரனுடைந்தகாதை.

மணிமேகலையை விரும்பிச்சென்ற உதயகுமாரன் விஞ்சையனுடைய வாட்படையால் உலகவறவியில் வெட்டுண்டு இறந்ததையும் மணிமேகலை சிறையில் வைக்கப்பட்டிருத்தலையுங் கேட்டு வருந்தி நடுங்கி அவளைச்சிறையினின்றும் நீக்கநினைந்த சித்திராபதி, இராசமாதேவிபாற் சென்று வணங்கி, "மாபெருந்தேவி! கோவலனிறந்தானென்று மாதவி தனது பரத்தைமைத் தொழிலை நீத்துத் தவச்சாலையை யடைந்ததும், அவள்மகளாகிய அரங்கக்கூத்தி பாத்திரமேந்தி வீடுதோறுஞ் சென்றுசென்று பிச்சையேற்றதும் யாவரும் அவமதித்துச் சிரித்தற்கு இடமாயினவேயன்றி வேறல்ல; இதுநிற்க; உதயகுமரனிறந்ததன்றி, மணிமேகலையால் இனி இந்நகரத்திற்கு உண்டாகும் பெருந்துன்பமுமொன்றுண்டு; கேட்பாயாக:

"முன்னொருநாள் அரசன், இந்நகரிற் கடற்கரையைச் சார்ந்த புன்னைமரச்சோலையில் பேரழகினளாகிய ஒரு மங்கையைக்கண்டு விரும்பி அவளோடும் ஒருமாதம் அச்சோலையில் உறைவானாயினன்; அம்மங்கை அவனிடஞ் சொல்லாது தன்னிடஞ் சென்றாள்; செல்லவே, அரசன், இளங்கொடி யாங்கொளித்தனளென்று பலவிடத்தும் தேடிக்கொண்டிருக்கும்பொழுது, அற்புத சக்தியையுடைய ஒரு சாரணன்வர, அரசன் கண்டு அவனை வணங்கி முன்னின்று, 'என் உயிர்போல்பவளாகிய ஒருத்தி இங்கே ஒளித்தனள்; அவளை அடிகள் கண்டதுண்டோ? உண்டாயின் சொல்லுக' என்றுகேட்ப, அந்தச்சாரணன், 'அரச! அம்மடந்தையை யான் இப்பொழுது கண்டிலேனாயினும் முன்பு அறிந்துளேன்; கேட்பாயாக: அவள் நாகநாட்டரசனாகிய வளைவணனென்பவனுடைய தேவியான வாசமயிலையென்பவளின் வயிற்றிற் றோன்றிய பீலிவளையென்பாள்; அவள் பிறந்தநாளிற் சோதிடங்கூற வந்த கணி, 'இவள் சூரியகுலத்தரச னொருவனைச் சேர்ந்து கரு

வுற்று வருவாள்' என்று அரசனுக்குக் கூறினன்; இது முன்பு நடந்தது; அவளே நீ கூறியமடந்தை; இனி, அவள் வயிற்றிற் றோன்றும் மகனே வருவான்; அவள் வாராள்; நீ கவலாதிருக்கக் கடவை. இன்னும் ஒன்று கேட்பாயாக: இந்திரவிழாச் செய்யாத நாளில் மணிமேகலா தெய்வத்தின் சொல்லால் உன் நகரத்தைக் கடல்கொள்ளும்; இந்திர சாபமுமிருத்தலால் அது தப்பாது; ஆதலால், யான்கூறியதை உண்மையென்றே நினைந்து இந்நகரைக் கடல் கொள்ளாதபடி இந்திரவிழாவை வருடந்தோறும் மறவாது செய்துவருக' என்று சொல்லிவிட்டுப் போயினன்; அவன்போன அந்நாள் தொடங்கி, நகரத்திற்கு எப்போது கேடுவந்துவிடுமோ வென்று இந்நகரத்தாரெல்லாரும் நடுங்கிக்கொண்டே இருக்கின்றனர் தன்னுடைய பெயரைப் பெற்றமடந்தை துன்பமுறுவாளாயின் அதனைப் பரிகரித்தற்கு மணிமேகலா தெய்வம் வருதலுங் கூடுமோவென்று யானும் அஞ்சா நின்றேன்" என்று சொல்லித் துதித்து, "நல்லமனமுண்டாகப் பெற்ற நாடகக் கணிகையை என்மனைக்குப் போதரும்படி கட்டளை யிடுவாய்" என்று கேட்ப, இராசமாதேவி,

> "கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையும்
> உள்ளக் களவுமென் றுரவோர் துறந்தவை (எஎ - அ)

ஆகும்; அவற்றையே கைக்கொண்ட உனது பரத்தைமைத் தொழிலை அசுத்தவழியென்றெண்ணி வந்த இவள் உன்னுடன் வந்து உன்மனையிற் புகுதாள்; என்னோடுதானே இருத்தற்குரியள்" என்று சொல்லிக்கொண்டிருக்கையில், மணிமேகலையின் நிலைமையைக்கேட்ட மாதவி அதனைச் சுதமதிக்குக்கூறி வருந்திச்சென்று அறவணவடிகளை வணங்கி அறிவித்து அவரை முன்னிட்டுக்கொண்டு அவளைச் சிறைமீட்டற்பொருட்டு இராசமாதேவியிடம் வர, இராசமாதேவி அவரைக்கண்டவுடன் மற்றை இருவரோடு மெழுந்து எதிர்சென்று அவரடியை வணங்கினாள்; அவர், "அறிவுண்டாக" என்று ஆசிகூறினர்; அப்பால் அவள் அவரைச் சிறந்த ஓராதனத்திலிருத்தி அடிவிளக்கிச் சிறப்புச் செய்து, "எமது நல்வினையே மிகப் பெரியோராகிய உம்மை இங்கே எழுந்தருளச் செய்தது;

> நாத்தொலை வில்லை யாயினுந் தளர்ந்து
> மூத்தவிவ் யாக்கை வாழ்கபல் லாண்டு" (கக - கo0)

வுற்று வருவாள்' என்று அரசனுக்குக் கூறினன்; இது முன்பு நடந்தது; அவளே நீ கூறியமடந்தை; இனி, அவள் வயிற்றிற் றோன்றும் மகனே வருவான்; அவள் வாராள்; நீ கவலாதிருக்கக் கடவை. இன்னும் ஒன்று கேட்பாயாக: இந்திரவிழாச் செய்யாத நாளில் மணிமேகலா தெய்வத்தின் சொல்லால் உன் நகரத்தைக் கடல்கொள்ளும்; இந்திர சாபமுமிருத்தலால் அது தப்பாது; ஆதலால், யான்கூறியதை உண்மையென்றே நினைந்து இந்நகரைக் கடல் கொள்ளாதபடி இந்திரவிழாவை வருடந்தோறும் மறவாது செய்துவருக' என்று சொல்லிவிட்டுப் போயினன்; அவன்போன அந்நாள் தொடங்கி, நகரத்திற்கு எப்போது கேடுவந்துவிடுமோ வென்று இந்நகரத்தாரெல்லாரும் நடுங்கிக்கொண்டே இருக்கின்றனர் தன்னுடைய பெயரைப் பெற்றமடந்தை துன்பமுறுவாளாயின் அதனைப் பரிகரித்தற்கு மணிமேகலா தெய்வம் வருதலுங் கூடுமோவென்று யானும் அஞ்சா நின்றேன்'' என்று சொல்லித் துதித்து, "நல்லமனமுண்டாகப் பெற்ற நாடகக் கணிகையை என்மனைக்குப் போதரும்படி கட்டளை யிடுவாய்'' என்று கேட்ப, இராசமாதேவி,

> "கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையும்
> உள்ளக் களவுமென் றுரவோர் துறந்தவை (எஎ - அ)

ஆகும்; அவற்றையே கைக்கொண்ட உனது பரத்தைமைத் தொழிலை அசுத்தவழியென்றெண்ணி வந்த இவள் உன்னுடன் வந்து உன்மனையிற் புகுதாள்; என்னோடுதானே இருத்தற்குரியள்'' என்று சொல்லிக்கொண்டிருக்கையில், மணிமேகலையின் நிலைமையைக்கேட்ட மாதவி அதனைச் சுதமதிக்குக்கூறி வருந்திச்சென்று அறவணவடிகளை வணங்கி அறிவித்து அவரை முன்னிட்டுக்கொண்டு அவளைச் சிறைமீட்டற்பொருட்டு இராசமாதேவியிடம் வர, இராசமாதேவி அவரைக்கண்டவுடன் மற்றை இருவரோடு மெழுந்து எதிர்சென்று அவரடியை வணங்கினள்; அவர், "அறிவுண்டாக'' என்று ஆசிகூறினர்; அப்பால் அவள் அவரைச் சிறந்த ஓராதனத்திலிருத்தி அடிவிளக்கிச் சிறப்புச் செய்து, "எமது நல்வினையே மிகப் பெரியோராகிய உம்மை இங்கே எழுந்தருளச் செய்தது;

> நாத்தொலை வில்லை யாயினுந் தளர்ந்து
> மூத்தவிவ் யாக்கை வாழ்கபல் லாண்டு'' (கூகூ - ௧00)

உ௫.—ஆபுத்திரனோடு மணிபல்லவமடைந்த காதை.

அப்பொழுது புண்ணியராசன், தன்பெருந்தேவியோடு அச்சோலையிற் புகுந்து அங்குள்ள தருமசாவகனென்னும் முனிவனை வணங்கி,

அறனு மறனு மநித்தமு நித்தத்
திறனுந் துக்கமுஞ் செல்லுயிர்ப் புக்கிலும்
சார்பிற் றோற்றமுஞ் சார்பறுத் துய்தியும்
ஆரிய னமைதியு மமைவுறக் கேட்டு, (௩ - ௯)

பின்பு, “இவள் ஒப்பற்ற பேரழகினள்; கையிற் பிச்சைப் பாத்திரமொன்றை உடையவளாய்த் தருமங்கேட்கிறாள்; யார்?” என்று வினவுகையில், அருகேநின்ற சட்டையிட்ட பிரதானி அரசனை வணங்கி, “இவளை யொப்பவர் யாருமில்லை. முன்னொருகாலத்தில் கிள்ளிவளவனோடு நட்புக்கொள்ளுதலை விரும்பிக் காவிரிப்பூம்பட்டினத்திற்குச் சென்றபொழுது, அங்கேயுள்ள அறவணவடிகள் இவள் வரலாறுகளையெல்லாங் கூறினாரென்று முன்னமே நான் உணர்ந்துள்ளேன்; அம்மடந்தையே இவள்” என்று கூறினன். கேட்டும், மணிமேகலை அரசனைப் பார்த்து, “உன் கையிலிருந்த பாத்திரமே என்கையை அடைந்தது; செல்வத்தால் மயங்கினை போலும்! நீ முற்பிறப்பை அறிந்திலை யாதலும் பசுவின் வயிற்றிற் பிறந்த இந்தப் பிறப்பையேனும் அறிந்திலையே; என்செய்தனை! மணிபல்லவஞ் சென்று புத்தபீடிகையைத் தரிசித்தாலன்றி உனது பழம்பிறப்பின் செய்தியையறியாய்; ஆதலால், அரச! அங்கே வருவாயாக” என்று சொல்லிவிட்டு, எழுந்து ஆகாய வழியே சென்று சூரியாஸ்தமயத்திற்கு முன்னமே மணிபல்லவத்தீவிற் சென்று வலங்கொண்டு புத்தபீடிகையைத் தரிசித்தாள். அது பழம்பிறப்பை அவளுக்குத் தெரிவித்தது. அதனை யறிந்து [illegible] அங்கேயிருக்க, புண்ணியராசன் அச்சோலையை [illegible] புகுந்து, [illegible]வளர்த்த தாயாகிய அமர சுந்தரி [illegible] வரலாறு முழுவதையும் அவன் கூறத் [illegible] வெளிப்புகுந்த [illegible] வெளியிட்டாள்; அதனைக்கேட்ட [illegible], [illegible],

[illegible]; ([illegible])

உன்னை அரசன் பெறுவதன்முன் இந்நாட்டில் பன்னிரண்டு வருடம் மழையில்லாமற் போயிற்று; வறுமைமிக்கது; அதனால் எல்லா வுயிர்களும் வருந்தின ; அக்காலத்தில் நீ தோன்றினை; தோன்றிய பின் இந்நாட்டில் எல்லா வளங்களும் நிரம்பின ; உயிர்கள் துயரம் நீங்கி வாழ்வனவாயின ; நீ நீங்குவாயாயின், எல்லா உயிர்களும் தாயைப்பிரிந்த குழந்தைகளைப்போலக் கூவாநிற்கும் ; இந்த நிலைமையையுடைய உலகத்தைக் காவாமல் உனது பயனையே விரும்பிச் செல்லுதல் தகுதியன்று ;

> தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயி ரோம்பும்
> மன்னுயிர் முதல்வ னறமுமீ தன்றால் " (கககூ - எ)

என்றுகூற, அரசன் கேட்டு, "மணிபல்லவத்தை வலங்கொள்ள வேண்டுமென்று எனக்குண்டாகிய வரம்புகடந்த ஆசை தணித்தற்கு அரியது ; ஆதலால், அங்கே போய்வருவேன் ; ஒருமாத காலம் இந்நகரைப் பாதுகாத்தல் உனது கடன்" என்று கூறிப் புறப்பட்டு வழிக்கொண்டு கடற்கரையைச் சார்ந்து நாவாயேறி மணிபல்லவத்தை யடைந்தான் ; உடனே மணிமேகலை வந்து அழைத்துச்சென்று அவனோடு அத்தீவை வலம்வந்து, "பழம் பிறப்பை யுணர்விக்கும் தருமபீடிகை இது" என்று காட்ட, அரசன் அதைத் தரிசித்து வலங்கொண்டு துதித்தான் ; துதிக்கவே அப்பீடிகை பழம்பிறப்பின் செய்தியை அவனுக்கு விளங்கத் தெரிவித்தது. அதனை யறிந்து வியப்புற்று, தனக்குப் பழம்பிறப்பில் அமுதசுரபியென்னும் அக்ஷயபாத்திரத்தை யளித்த சிந்தாதேவியை நினைந்து, "தென்றமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய்! அறிவிலே விளங்கிச் சொற்பொருள்களை உணர்த்தும் மடந்தையே! நான் பிறந்த பிறவிகள் தோறும் நின்னை வழிபடுதலல்லது மறந்து வாழேன்" என்று துதித்து மணிமேகலையோடுமெழுந்து தென்மேற்கிற்சென்று கோமுகிக்கரையில் ஒரு புன்னைமரத்தின் நிழலிலே இருந்தான் ; இருக்கையில் ஆபுத்திரனோடு மணிமேகலை வந்திருத்தலைத் தீவதிலகை அறிந்துவந்து, "அமுதசுரபியைக் கையிலேந்தி உயிர்களின் பெருந்துயரத்தைத் தீர்த்த பெரியோனே! அக்காலத்தில், மறந்து உன்னை இத்தீவில் தனியே விட்டுவிட்டுக் கப்பலேறிச்சென்று, பின்பு உன்னை நினைந்து மீண்டுவந்து இங்கே நீ இறந்திருத்தலை யறிந்து உடனே தம்முயிரை நீத்த ஒன்பது செட்டிகளின் உடலென்புகள் இவை; காண்பாயாக.

அச்செட்டிகள் உண்பிக்க உண்டு உடன் வந்தோர்கள், அவர்கள் இறந்தது தெரிந்து தாங்களும் இறந்தார்கள்; அவர்களுடைய என்புகள் இவைகள்காண். அலைகள் தொகுத்த மணலால் மூடப் பட்டுப் புன்னை நிழலின்கீழே உனது பண்டை யுடம்பு இருந்தைப் பார்ப்பாயாக.

நின்னுயிர் கொன்றாய் நின்னுயிர்க் கிரங்கிப்
பின்னாள் வந்த பிறருயிர் கொன்றாய்
கொலைவ னல்லையோ கொற்றவ னாயினை" (௧௭௨ - ௪)

என்று அரசனை நோக்கிக்கூறி, பின்பு மணிமேகலையைப்பார்த்து, "காவிரிப்பூம் பட்டினத்தைக் கடல்கொண்டது; அதற்குக் காரணங் கேட்பாயாக: நாகநாட்டரசன் மகளாகிய பீலிவளையென்பவள் தான்பெற்ற குழந்தையுடன்வந்து இத்தீவையும் புத்தபீடிகையையும் வலம்வந்து துதிக்கும்பொழுது, கம்பளச்செட்டியின் கப்பல் வந்து தங்க, பீலிவளை அவனிடஞ் சென்று, 'இவன் அரசன் புதல்வன்; இவனை அவனிடஞ் சேர்ப்பாயாக' என்று சொல்லி, குழந்தையை அவன்கையிற் கொடுக்க அவன் பெருமகிழ்ச்சியடைந்து வாங்கிக் கப்பலேறிச் செல்லுகையில், கப்பல் உடைந்துபோயிற்று. போகவே கப்பலிலிருந்தோரிற் சிலர் மெல்லப் பிழைத்துச்சென்று காவிரிப்பூம்பட்டினத்தை யடைந்து புதல்வனைக் கெடுத்த செய்தியை அரசனுக்குத் தெரிவித்தார். அதுகேட்டு அவன் பொறாமற் செயலற்றுக் கடற்கரையையடைந்து மகனைத் தேடிக்கொண்டு அலைந்தமையால், நகரம் இந்திரனுக்கு விழாச் செய்தலை விட்டொழிந்தது. ஒழியவே, அதனைப்பொறுக்காமல் மணிமேகலாதெய்வம், 'இந்நகரைக் கடல்கொள்ளுக' என்று சபிக்கக் கடல் நகரை மூடியது; மூடவே அரசன் வேறிடஞ்சென்றான். அறவணவடிகளோடு மாதவியும் சுதமதியும் யாதொரு வருத்தமுமின்றிப்போய் வஞ்சிநகரம் புகுந்தார்" என்று சொல்லிப் போயினள்; அவள்போனபின்பு புண்ணியராசன் அவ்விடத்தே மணலைத் தோண்டி, அங்கேதோன்றிய தன்னுடைய பழைய உடம்பின் என்பைக்கண்டு மயக்கமுற்றான். அதைக்கண்ட மணிமேகலை, "நீ என்ன துன்பமுற்றாய்? யான் நின் நாட்டிற்குவந்து நின்னை ஈங்கு அழைத்து வந்தது நினக்கு முற்பிறப்பையுணர்த்தி எங்கும் நின்புகழை நிலை நிறுத்தற் பொருட்டேயாகும். உலகத்தை யாளும் அரசர் தாமே அருளறத்தை-மேற்கொண்டால் உலகிற்

குற்றமெல்லாம் அற்றுவிடுமன்றோ? அறமெனப்படுவது யாதெனிற் சொல்லுவேன்; கேட்பாயாக: உயிர்களுக்கு உணவையும் உடையையும் இருக்கையையும் வழங்குவதே; இதனையன்றி வேறு இல்லை" என்று சொல்லித் தேற்றினள். அதனைக் கேட்ட அவன், "என்னுடைய நாட்டிலும் பிறருடைய நாட்டிலும் நின்னாற் சொல்லப்பட்ட நல்லறத்தைச் செய்வேன். நீ என்பிறப்பை உணர்த்தினை; நான் நின்னிடத்தினின்றும் பிரியும் வன்மையில்லேனாக விருக்கிறேன்" என, மணிமேகலை, "நீ வருந்தற்க. நீ இங்கு வந்துவிட்டதற்கு வருந்தி நின்நாடு நின்னை அழைக்கும்; ஆதலிற் கப்பலேறி நீ நின் நாட்டிற்குச் செல்லுக. நான் வஞ்சிநகரத்துக்குச் செல்வேன்" என்று கூறி ஆகாயத்திலெழுந்தாள்.

உகூ.—வஞ்சிமாநகர்புக்ககாதை.

எழுந்தவள், ஆகாயவழியே சென்று வஞ்சிநகர்ப்புறத்தே இறங்கி, தாய் கண்ணகியையும் தந்தை கோவலனையும் தரிசிக்க வேண்டுமென்கிற ஆசை தூண்டுதலாற் கோயிலிற்புகுந்து கண்ணகியை வணங்கித்துதித்து, "கணவனிறந்ததுதெரிந்து உடன் இறவாமலும் கைம்மைநோன்பை நோவாமலும் சினங்கொண்டு மதுரையை அழித்ததற்குக் காரணங்கூறியருளவேண்டும்" என்று பிரார்த்திக்கப் பத்தினிக்கடவுளாகிய கண்ணகி, "என்னுடைய தலைவனுக்குநேர்ந்த மரணத்துன்பத்தைப் பொறுக்க முடியாமையால் மதுரையை எரித்தழிக்கத் தொடங்கினேன்; அப்பொழுது மதுராபதியென்கிற அந்நகரத்தெய்வம் எனக்கு முன்னே தோன்றி, 'இத்துன்பத்தை நீங்களனுபவித்தல் முற்பிறப்பிற் செய்த தீவினையினாலேயே. அதனைக் கூறுவேன்; கேட்பாயாக:

'முன்பு கலிங்கநாட்டிலுள்ள சிங்கபுரத்தரசனாகிய வசு என்பவனும் கபிலபுரத்தரசனாகிய குமரனென்பவனும் தம்முட் பகைமைகொண்டு போர்செய்வாராயினர்; அப்பொழுது மனைவியுடன் சிங்கபுரத்துக் கடைவீதியிற்சென்று பண்டம்விற்றுக்கொண்டிருந்த சங்கமனென்னும் வணிகன்பாற் பொறாமையுற்று, அந்நகரத்தரசனிடம் வேலைபார்த்துக்கொண்டிருக்கும் பரதனென்பவன், 'இவன் பகைவனுடைய ஒற்றன்' என்று அரசனுக்குச்சொல்லி, யாதொரு குற்றமுமில்லாத அச்சங்கமனை அவ்வரசனைக்கொண்டு கொலை செய்வித்தான். சங்கமன்மனைவி நீலியென்பவள் அதனைத் தெரி

[illegible] அறுபது பெரிய மலையேறி வீழ்ந்து உடம்பைத் துறக்க நினைந்து, 'எமக்குத் துன்பஞ்செய்தோர் மறுபிறப்பில் இத்துன்பத்தையே அடைவோர்களாக' என்று சபித்துவிட்டு இறந்தான்; அப்பரதனே கோவலனாகப்பிறந்தான்; அவ்வினையால் இத்துன்பமடைந்தீர்கள்; பழம்பிறப்பிற்செய்த வினையின்பயனை யாரும் நுகர்ந்தே ஒழித்தல்வேண்டும்' என்கிற உண்மைமொழியைக் கூறியது. அத்தெய்வம் கூறியபின்னும் என்கோபம் அடங்காமையால், நகரத்தை எரித்தழித்தேன். முன்புசெய்த நல்வினையாலே நானும் என்கணவனும் தேவர்களாகிச் சென்றோம். இந்நல்வினையின் முடிவிற் கோபத்தாலுண்டாகிய பாவப்பயனை நுகர்தல்கூடும். இப்படிப் பிறந்து பிறந்தும் புண்ணியத்தின் இறுதியிற் பாவப் பயனையும் பாவத்தின் இறுதியிற் புண்ணியப் பயனையும் நுகர்ந்து நுகர்ந்து உழலாநிற்பேம். அப்பால் மகதநாட்டிற் கபிலையம் பதியிற் புத்த ஞாயிறு உதித்துப் போதிமரத்தினடியில் எழுந்தருளியிருந்து நால்வகைச் சத்தியங்களையும் அறிந்து பன்னிரண்டு சார்புகளின் தோற்றங்களையும் அவற்றின் அழிவையும் விளக்கக்கூறி இச்சக்கரவாள முழுவதும் தரும வொளியை வீசுங் காலத்தில், யாம் அவ்வுபதேச மொழிகளைக் கேட்டுத் துறந்து நிருவாணமடைவேம்; இப்பயனையாம் அடைதற்குக்காரணம், முன்பு காவிரிப்பூம்பட்டினத்திற் புத்தசைத்தியத்திலுள்ள இந்திர விகாரமேழினையும் உன் தந்தையுடன் ஏத்திய புண்ணியமே. யாம் நிருவாணத்தையடைவது புலநாளைக்குப் பின்பேயாயினும், அதுவரையும் பலவகையாகிய சித்திகளையும் செய்துகொண்டிருப்பேம். [illegible]த; நீ இந்நகரிலுள்ள பல சமயவாதிகள்கூறும் கொள்கைகளையெல்லாம் கேட்டு அவற்றுள் ஒன்றும் உனக்கு உண்மையென்று தோன்றாமையால் பின்பு பௌத்த சமயத்தைப்பற்றி யொழுகுவை" என்று சொன்னாள்.

[illegible]கேட்ட மணிமேகலை வணங்கி வேற்றுருவெய்து [illegible] ஒரு முனிவன் வேடங்கொண்டு,

[illegible] பற்றும் பன்னியும்
[illegible] பொழிலும் பொய்கையு மிடைந்த
[illegible] [illegible]
[illegible] (௨௨ - [illegible])

எங்கணும் விளங்கிய வஞ்சியம்பதியில், செங்குட்டுவனென்னும் சேரர்பெருமானது புகழ் விளங்கும்படி சென்று புகுந்தாள்.

உஎ.—சமயக்கணக்கர்தந்திறங்கேட்டகாதை.

புகுந்த மணிமேகலை, சமயவாதிகள் பலருடைய கொள்கைகளையும் அறியவிரும்பி, அவருள்ளே வைதிகவழியைச்சார்ந்த அளவைவாதியை முதலிலடைந்து, 'உன் கொள்கையை உரை' என்று வினவி, அவன் கோட்பாட்டைக் கூறக்கேட்டும் அப்பாற் சைவவாதியையும், அப்பாற் பிரமவாதியையும், அப்பால் வைணவவாதியையும், அப்பால் வேதவாதியையும், அப்பால் ஆசீவகவாதியையும், அப்பால் நிகண்டவாதியையும், அப்பாற் சாங்கியவாதியையும், அப்பால் வைசேடிகவாதியையும், அப்பாற் பூதவாதியையும் சார்ந்து சார்ந்து வினவி வினவி, அவரவர் தத்தங்கொள்கைகளைக் கூறக்கேட்டு அவற்றை அறிந்துகொண்டாள்.

உஅ.—கச்சிமாநகர்புக்ககாதை.

அதன்பின், மாதவியையும் சுதமதியையும் அறவணவடிகளையும் காணவிரும்பிப் புறநகரத்தைக் கடந்துசென்று வஞ்சிநகரத்தினுள்ளேபோய்ப் பலவகைச் சாதியாருமிருத்தற்குரிய வீதிகளையும் வேறுள்ளபல்இடங்களையும் முறையேகண்டு மகிழ்ச்சியுற்றுச்செல்பவள், பௌத்ததருமங்களைச் சொல்லும் முனிவர்கள் தங்கியிருக்கும் தவச்சாலையிற் புகுந்து, அங்கே தவஞ்செய்துகொண்டிருந்தமாசாத்துவானைப் பணிந்து, எடுக்கஎடுக்க உணவுவளரும் அமுதசுரபியின் விசேடத்தையும், அப்பாத்திரத்தைக்கொண்டு செய்த தானவிசேடத்தால் ஆபுத்திரன் புண்ணியராசனாகப்பிறந்து சாவகநாட்டை ஆண்டுவரும் பெருமையையும், தான் அவனை மணிபல்லவத்திற்கு அழைத்துவந்து புத்தபீடிகையைக் காட்டப் பழம்பிறப்புணர்ச்சியை அவன் பெற்றதையும், தீவதிலகை வெளிப்பட்டதையும், காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல்கொண்டமையால் மாதவியும் சுதமதியும் அறவணவடிகளும் சாதலின்றி அந்நகரில்வந்து புகுந்தார்களென்று தான் தீவதிலகையாற் கேட்டதையும், புண்ணியராசன் நாகபுரஞ்செல்லத் தான் மணிபல்லவத்தைவிட்டு வந்ததையும், தாயாகிய கண்ணகியைத் தரிசித்தது முதலியவற்றையும், பின் வேற்றுருக்கொண்டு பல சமயவாதிகளைச் சார்ந்து அவர்களுடைய

கொள்கைகளைக் கேட்டதையும், அக்கோட்பாடுகளெல்லாம் பொருத்தமில்லாமையால்தான் அவற்றை மனங்கொள்ளாததையும், பௌத்ததருமத்தைக் கேட்க விரும்பி அறவணவடிகளைத் தேடிக் கொண்டுவந்ததையும் சொன்னாள். இவற்றையெல்லாங் கேட்ட மாசாத்துவான், "உன்னை நான் கண்டது எனது நல்வினையாலேயே; உன் தந்தை கோவலனும் தாய் கண்ணகியும் அடைந்த வருத்தங்களும் மதுரையம்பதி அழிவுற்றதும் ஆகிய இவற்றைக் கேள்வியுற்று எல்லாவற்றையுந்துறந்து பௌத்தமதத்தைச்சார்ந்து தவஞ்செய்தலை மேற்கொண்டேன். கொண்ட யான் இங்கேவந்ததற்குக் காரணம் கேட்பாயாக:

"முற்காலத்தில் இந்நகரையாண்ட இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனென்னும் அரசன் தன் தேவிமாரோடும் இச்சோலையைச் சார்ந்து இருந்தபொழுது இலங்காதீவத்துள்ள சமனொளியென்னும்மலையை யடைந்து தரிசித்து வலங்கொண்டு ஆகாயவழியே மீள்வோராகிய சாரணர் இச்சோலையிலிறங்கி ஒரு சிலாதலத்திலிருந்தார். அங்ஙனம் இருக்கக்கண்ட அரசன் அவர்களை வணங்கி உபசரித்து அமுது செய்வித்துத் துதிக்க, அவர்கள்

பிறப்பிற் றுன்பமும் பிறவா வின்பமும்
அறத்தகை முதல்வ னருளிய வாய்மை
இன்ப வாரமு திறைவன் செவிமுதல்
துன்ப நீங்கச் சொரிபு மந்நாள், (கககூ - உஉ.)

நின் தந்தைக்கு ஒன்பதுதலைமுறை முன்னோனாகிய கோவலனென்பவன் அவ்வரசனுக்குக் காதற்பாங்கனாதலால், இங்கே வந்திருந்து அச்சாரணர் அரசனுக்குக்கூறிய அறமொழிகளைக்கேட்டு, தான் ஈட்டிய பலகோடிதனங்களையும் முன்னோர்கள் தருமவழியேதேடிய பொருள்கள் பலவற்றையும் ஏழுதினத்துள் இரவலர்க்குக் கொடுத்துவிட்டுப் பின்பு தவஞ்செய்வானாயினன்; அவன் அக்காலத்திற்புத்ததேவனுக்குக் கட்டுவித்த சைத்தியத்தைத் தரிசித்தற்காகவே வந்தேன்; காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல்விழுங்கிவிடும் என்ற செய்தியை ஈண்டுள்ள முனிவர்கள் துணிந்துகூறக்கேட்டு அந்நகரஞ்செல்லாமல் இவ்விடத்திலேயே இருந்துவிட்டேன். தீவினையுடைமையாற் கொலையுண்டிறந்த உன்தந்தை, நல்வினையால் தெய்வயாக்கையைப் பெற்றுப் பின்னும் தீவினைப்பயனை அனுபவித்து, அப்பால் புத்ததேவன் அவதரித்துச் செய்யுந் தருமோபதேசத்தைக் கேட்டு

வீடடைவானென்று அறிந்தோர் கூறக்கேட்டேன்; நானும் அக் காலத்தில் அவ்வறமொழிகளைக் கேட்டேன்; உனது பிற்காலச் செய்திகளை நீ கந்திற்பாவையாலறிந்தாயென்று அறவணவடிகளா லறிந்தேன். அம்முனிவர், உனக்குத் தருமோபதேசஞ் செய்தற்கு அமைந்தவிடம் காஞ்சிநகரமென்றெண்ணி இங்கிருந்து அங்கே சென்றார்; மாதவியும் சுதமதியும் அவருடன் அந்நகரம் போயினர். இன்னுங்கேட்பாயாக: மழையில்லாமையாற் காஞ்சிநகரத்தில் மிக்க வறுமையுண்டாயிற்று; பலவுயிர்கள் இறந்தன; அந்நகரில் ஐயமிடுவோர் இல்லாமற் போனமையால் அங்கேயிருந்த முனிவர்கள் இவ் விடம் வந்துவிட்டார்கள்; ஆதலால் அந்நகரமடைந்து எல்லாவுயிர் களையும் பாதுகாத்தல் உனக்குக் கடனாகும்" என்றுசொன்னான்.

அதனைக்கேட்ட மணிமேகலை அவனைவணங்கி அமுதசுரபி யைக் கையிலேந்திக்கொண்டு வஞ்சிநகரத்தின் மேற்றிசையி னின்று மேலேயெழுந்து ஆகாயவழியே வடதிசைக்கட்சென்று, மிக்க செல்வங்குன்றி வறுமையுற்று அழகுகெட்டுப் போயி ருக்கும் காஞ்சிநகரத்தைக்கண்டு மனமிரங்கி வலம்வந்து அந் நகரின் நடுவேயிறங்கித் தொடுகழற்கிள்ளியின் துணைவனாகிய இளங்கிள்ளியால் அங்கே கட்டுவிக்கப்பட்டுள்ள புத்தாலயத் தை வணங்கி அதற்குத் தென்மேற்கிற் சென்று ஒரு சோலையில் தங்கினள். அச்செய்தியைத் தெரிந்த ஒருவன் விரைந்து சென்று அரசனை வணங்கி, "அரச! கோவலன்புதல்வி, சிறந்த தவஞ் செய் தொழுகுபவள்; இச்சம்புத்தீவில் எல்லாருள்ளுஞ் சிறந்தவள்; அவள் கையிலேந்திய அமுதசுரபியென்னும் பாத்திரத்தோடு இந் நகரில் வந்து தருமதவனத்தே உறைகின்றாள்" என்றான். அது கேட்ட அரசன் கந்திற்பாவை முன்பு நமக்குக்கூறியது உண்மை யே யென்று மதித்து அத்தெய்வத்தை வந்தித்து மந்திரிகளுடன் விரைந்து சென்று மணிமேகலையையடைந்து அவளை நோக்கி,

"செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ
கொங்கவிழ் குழலார் கற்புக்குறை பட்டோ
நலத்தகை நல்லாய் நன்னா டெல்லாம்
அலத்தற் காலை யாகிய தறியேன் (கஅஅ - கூக)

இனிச் செய்வது யாதென்று மயங்கிக் கொண்டிருந்தேன்; இருந்தபொழுது ஒரு பெரியதெய்வம் எனக்கு முன்னேவந்து, 'நீ

வீடடைவானென்று அறிந்தோர் கூறக்கேட்டேன்; நானும் அக்காலத்தில் அவ்வறமொழிகளைக் கேட்டேன்; உனது பிற்காலச் செய்திகளை நீ கந்திற்பாவையாலறிந்தாயென்று அறவணவடிகளாலறிந்தேன். அம்முனிவர், உனக்குத் தருமோபதேசஞ் செய்தற்கு அமைந்தவிடம் காஞ்சிநகரமென்றெண்ணி இங்கிருந்து அங்கே சென்றார்; மாதவியும் சுதமதியும் அவருடன் அந்நகரம் போயினர். இன்னுங்கேட்பாயாக: மழையில்லாமையாற் காஞ்சிநகரத்தில் மிக்க வறுமையுண்டாயிற்று; பலவுயிர்கள் இறந்தன; அந்நகரில் ஐயமிடுவோர் இல்லாமற் போனமையால் அங்கேயிருந்த முனிவர்கள் இவ்விடம் வந்துவிட்டார்கள்; ஆதலால் அந்நகரமடைந்து எல்லாவுயிர்களையும் பாதுகாத்தல் உனக்குக் கடனாகும்" என்றுசொன்னான்.

அதனைக்கேட்ட மணிமேகலை அவனைவணங்கி அமுதசுரபியைக் கையிலேந்திக்கொண்டு வஞ்சிநகரத்தின் மேற்றிசையினின்று மேலேயெழுந்து ஆகாயவழியே வடதிசைக்கட்சென்று, மிக்க செல்வங்குன்றி வறுமையுற்று அழகுகெட்டுப் போயிருக்கும் காஞ்சிநகரத்தைக்கண்டு மனமிரங்கி வலம்வந்து அந்நகரின் நடுவேயிறங்கித் தொடுகழற்கிள்ளியின் துணைவனாகிய இளங்கிள்ளியால் அங்கே கட்டுவிக்கப்பட்டுள்ள புத்தாலயத்தை வணங்கி அதற்குத் தென்மேற்கிற் சென்று ஒரு சோலையில் தங்கினள். அச்செய்தியைத் தெரிந்த ஒருவன் விரைந்து சென்று அரசனை வணங்கி, "அரச! கோவலன்புதல்வி, சிறந்த தவஞ் செய்தொழுகுபவள்; இச்சம்புத்தீவில் எல்லாருள்ளுஞ் சிறந்தவள்; அவள் கையிலேந்திய அமுதசுரபியென்னும் பாத்திரத்தோடு இந்நகரில் வந்து தருமதவனத்தே உறைகின்றாள்" என்றான். அது கேட்ட அரசன் கந்திற்பாவை முன்பு நமக்குக்கூறியது உண்மையே யென்று மதித்து அத்தெய்வத்தை வந்தித்து மந்திரிகளுடன் விரைந்து சென்று மணிமேகலையையடைந்து அவளை நோக்கி,

"செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ
கொங்கவிழ் குழலார் கற்புக்குறை பட்டோ
நலத்தகை நல்லாய் நன்னா டெல்லாம்
அலத்தற் காலை யாகிய தறியேன் (கஅஅ - கூக)

இனிச் செய்வது யாதென்று மயங்கிக் கொண்டிருந்தேன்; இருந்தபொழுது ஒரு பெரியதெய்வம் எனக்கு முன்னேவந்து, 'நீ

சென்று அன்புடன் வணங்கி அவரடிகளை விளக்கி ஆசனத்திலிருத்தி அறுசுவைப்போனகம் அமுது செய்வித்து, "யான் செய்த புண்ணியம் தப்பாது பலித்திடுக" என்று சொல்லி மீட்டும் வணங்கினள்.

௨௯.—தவத்திறம் பூண்டுதருமங்கேட்டகாதை.

வணங்கிய மணிமேகலையை வாழ்த்திச்சொல்லும் அறவணவடிகள், "பீலிவளைபெற்ற குழந்தையைக் கம்பளச்செட்டி கடலிற் கெடுத்தது தெரிந்த அரசன் வருத்தமுற்று அக்குழந்தையைத் தேடியலைந்தமையாற் காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிழாச் செய்யப்படாது போயிற்று. மணிமேகலாதெய்வம் அது தெரிந்து நகரைக் கடல்கொள்ளுக என்று சபித்தது; இந்திரனும் சபித்தான். அதனால் அந்நகரம் கடலால் விழுங்கப்பட்டது. அப்பால் உன் தாயரும் யானுமாக உன்பொருட்டு இந்நகரம் அடைந்தேம்" என்று கூறினர். கூறவே மணிமேகலை அவருடைய அடியிணையை வணங்கி, "மணிபல்லவத்திற் புத்தபீடிகையைக் காத்துக்கொண்டிருக்கும் தீவதிலகையென்பவளும் இச்செய்தியைச் செப்பினள். நான் வேற்றுருக்கொண்டு சென்று வஞ்சிநகரமடைந்து ஆங்குள்ள பலசமயவாதிகள் கூறிய கொள்கைகள் யாவும் மனத்திற்குப் பொருந்தாமையால் அவற்றையும் முன்புகொண்டிருந்த வேற்று வடிவத்தையும்துறந்து இந்நகரமடைந்து நும்மைச்சரண்புக்கேன். தேவரீர் அடிச்சிக்கு உண்மைப்பொருளை உணர்த்தியருள வேண்டும்" என்று பிரார்த்திக்க, அவர் பிரத்தியக்கம் அநுமானமென்னும் இரண்டு அளவைகளின் இலக்கணங்களையும் அவற்றின் போலிவகைகளையும் உண்மையறிவுண்டாவதற்குக் கருவியாக அவளுக்குக் கூறினர்.

௩௰.—பவத்திறமறுகெனப் பாவைநோற்றகாதை.

தானஞ்செய்தலை மேற்கொண்டு சீலத்தில் முதன்மையாக நின்று பழம்பிறப்பின் உணர்ச்சியையடைந்த மணிமேகலை, அப்பால் புத்தஞ்சரணங்கச்சாமி தர்மஞ்சரணங்கச்சாமி ஸங்கம் சரணங்கச்சாமி என்பவற்றை மும்முறை சொல்லி மும்மணியையும் மும்முறைவணங்கி அறவணவடிகளைச் சரணடைந்தாள். [illegible]

வில்லாமல் இருந்த காலத்தில் தேவர்கள் பிரார்த்திக்கத் துடிதலோகத்தினின்றும் இவ்வுலகிலவதரித்து அரசமரத்தினடியிலேயிருந்து தத்துவத்தை ஆராய்ந்தறிந்து மாரனைவென்று முக்குற்றங்களையும் அறுத்து விளங்கிய புத்ததேவன் அருளிச்செய்த இன்பமயமாகிய கட்டுரையாகும் இது; பண்டைக்காலத்தில் அவதரித்த அளவற்ற புத்தர்கள் கருணையிருந்து திருவாய்மலர்ந்தருளியதும் இதுவே" என்றுசொல்லிப் பேதைமைமுதலிய பன்னிரு நிதானங்களின் தோற்றவொடுக்கங்களையும் பிறவற்றையும் முறையே விளங்க உபதேசித்து, "உன்மனத்திருள் நீங்குக" என்றுகூறி ஞானதீபத்தை நன்கு காட்டினர். மணிமேகலை அவ்வுபதேச மொழிகளைக்கேட்டு ஐயந்திரிபறவுணர்ந்து பிறவித்துன்பம் ஒழிவதாகவென்று அந்நகரிலேயே நோற்றுக்கொண்டிருந்தாள்.

உ

கணபதி துணை.

மணிமேகலை.

பதிகம்.

*[கதைபொதிபாட்டு.]

இளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து
விளங்கொளி மேனி விரிசடை யாட்டி
பொன்றிகழ் நெடுவரை யுச்சித் தோன்றித்
தென்றிசைப் பெயர்ந்தவித் தீவத் தெய்வதஞ்
சாகைச் சம்பு தன்கீழ் நின்று
மாநில மடந்தைக்கு வருந்துயர் கேட்டு
வெந்திற லரக்கர்க்கு வெம்பகை நோற்ற

---

௧. ஞாயிறு - சூரியன். எள்ளும் - இகழும்; உவமவுருபுமாம்.

௧ - ௨. "பொன்னிற் பொலிந்த நிறத்தா டோன்ற" மணி. † ௬ : ௧௪௫.

௩. வரை - மேரு. உச்சி - உச்சியில்.

௪. இத்தீவம் - சம்புத்தீவு.

௫. சாகை - கிளை. சம்பு - நாவன்மரம்.

௭. வெம்பகைநோற்ற - வெவ்வியபகையாக நோற்ற.

(பிரதிபேதம்.) ௧. 'எள்ளுந்தோன்றல்' ௪. 'தென்றிசைபெயர்ந்த' ௫. 'சாய்கை' ௭. 'தோற்றச்'

* இதுவும், இதுபோல் இந்நூலின் ஒவ்வொருபகுதியின் தலைப்பில் இருதலைப் பகரத்துள் உள்ள வாக்கியங்களும், கிடைத்த கையெழுத்துப் பிரதிகளுள் மிகப் பழையதும் இந்நூற் பரிசோதனைக்கு இன்றியமையாதிருந்ததுமாகிய மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயரவர்கள் வீட்டுப்பிரதியிற் காணப்பட்டன. இதனாலும், பதிகத்தினிறுதியில், "ஆறைம் பாட்டினு ளறிய வைத்தனனென்" என்றிருத்தலாலும் இந்நூற்பகுதிகளின் பெயர் பாட்டென்று வழங்கிவந்ததென்றும் தோன்றுகின்றது. † முதலிலுள்ள எண் காதையையும் பின்னுள்ளது அதனடியையும் குறிப்பன.

சம்பு வென்பாள் சம்பா பதியினள்
செங்கதிர்ச் செல்வன் றிருக்குலம் விளக்குங்
கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
வமர முனிவ னகத்தியன் றனாது
கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை
செங்குணக் கொழுகியச் சம்பா பதியயற்
பொங்குநீர்ப் பரப்பொடு பொருந்தித் தோன்ற
வாங்கினி திருந்த வருந்தவ முதியோ
ளோங்குநீர்ப் பாவையை யுவந்தெதிர் கொண்டாங்
காணு விசும்பி னாகாய கங்கை
வேணவாத் தீர்த்த விளக்கே வாவெனப்
பின்னிலை முனியாப் பெருந்தவன் கேட்டீங்
கன்னை கேளிவ் வருந்தவ முதியோ
ணின்னால் வணங்குந் தன்மையள் வணங்கெனப்
பாடல்சால் சிறப்பிற் பரதத் தோங்கிய

அ. சம்பாபதியினள் - சம்பாபதியினிடத்தேயிருந்தாள்; சம்பாபதியென்பது காவிரிப்பூம்பட்டினத்தின் பழைய பெயர்.

கூ. செங்கதிர்ச்செல்வன் திருக்குலம் - சூரியகுலம்.

க0. கஞ்சவேட்கையின் - நீருண்டாக்கும் விருப்பத்தையுடைய; கம் - நீர்; கஞ்சம் - நீருமாம்; "கஞ்சங் கலங்குவன" (நள. சுயம். கரு.) காந்தமன் - காந்தனாகிய மன்; காந்தனென்பது ஒரு சோழன்பெயர்; "கன்னி யேவலிற் காந்த மன்னவன்" மணி. உஉ : உஎ.

கக. மூ. "அமர முனிவ னகத்தியன் றனாது" மணி. உஉ : ௬௫.

கஉ. கரகம் - குண்டிகை; "நீரற வறியாக் கரகத்து" (புறநா. க.) காவிரிப்பாவை - காவிரியாகிய மங்கை; "நீர்ப்பாவை" மணி. பதிகம், கசு.

கங. செங்குணக்கு - செவ்விய கிழக்கு; செம்மை - நேர்மை.

கஎ. ஆனு - நேயம்; "ஆனுப் பைங்கிளி யாண்டுப் பறந்ததே" (சீவக. க00உ.) ஆகாயகங்கை: பெயர்.

கஅ. வேணவா - வேட்கையாலாகிய அவா; தொல். உயிர். சூ. அசு, பார்க்க.

ககூ. பின்னிலை முனியா - பின்நிற்றலை வெறுத. பெருந்தவன் - அகத்தியன்.

உ0. அன்னை: விளி; அன்னையென்றது, காவிரியை.

உஉ. மூ. மணி. கஅ : 57. பரதத்து - பரதகண்டத்தில்.

(பி - ம்.) க0. 'கஞ்சை' கக. 'முனிவரன்' கஉ. 'கவிழ்ந்த' கங. 'ஒழுகிய சம்பாபதி' கஎ. 'ஆனாஉ' ககூ. 'முனிவாய்' உ0. 'முதியோளினி' உக. 'தகைமையள்'

கோடாச் செங்கோற் சோழர் தங் குலக்கொடி
கோணிலை திரிந்து கோடை நீடினுந்
தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை
தொழுதன ணிற்பவத் தொன்மூ தாட்டி
கழுமிய வுவகையிற் கவாற்கொண் டிருந்து
தெய்வக் கருவுந் திசைமுகக் கருவுஞ்
செம்மலர் முதியோன் செய்த வந்நாள்

உ௩. சோழர்தங்குலக்கொடி - வேற்றுவேந்தரணுகாமையால் சோழர்தங் குலக்கொடியாயுள்ளாள்; இப்படியே வையைநதி, "வையையென்ற பொய்யாக் குலக்கொடி" என்று கூறப்பட்டுள்ளது; சிலப். ௧௩: ௧௭0.

உ௪. மணி. ௧: ௩௪ - ஆம் அடிக்குறிப்பைப் பார்க்க.

உ௫. பாவை - காவிரி.

உ௬. தொழுதனள்நிற்ப - தொழுது நிற்ப.

உ௭. கழுமிய - கலந்த. கவான் - துடையின்மேல்.

உ௮ - ௯. தெய்வக்கரு - உலகம் முப்பத்தொன்றனுள் மகாராஜிக லோகமுதலிய தெய்வலோகம் ஆறினுமுள்ள அறுவகைத் தெய்வகண பிண்டங்கள்; தெய்வலோகம் ஆறாவன: (௧) மகாராஜிகலோகம், (உ) திரயத்திரிம்சலோகம், (௩) யாமலோகம், (௪) துஷிதலோகம், (௫) நிருமாணரதிலோகம், (௬) பரநிருமித வசவர்த்திலோகமென்பன; "இருமூவகையிற், பெருவனப் பெய்திய தெய்வதக் கணங்களும்" (மணி. ௬: ௧௭௮ - ௯.) திசைமுகக்கரு - ப்ரஹ்மகாயிகலோகம் முதலிய ப்ரஹ்மலோகம் இருபதினுமுள்ள இருபது வகைப்பட்ட ப்ரஹ்மகணப்பிண்டங்கள்; ப்ரஹ்மலோகம் இருபதாவன: (௧) ப்ரஹ்மகாயிகலோகம், (உ) ப்ரஹ்மபுரோகிதலோகம், (௩) மஹாப்ரஹ்மலோகம், (௪) பரீத்தாபலோகம், (௫) அப்பிராமணாபலோகம், (௬) ஆபாஸ்வரலோகம், (௭) பரீத்தசுபலோகம், (௮) அப்பிராமணசுபலோகம், (௯) சுபகிருஸ்நலோகம், (௧0) பிரகத்பலலோகம், (௧௧) அஸம்ஞ்யாஸத்துலோகம், (௧உ) அப்பிரகலோகம், (௧௩) அதபலோகம், (௧௪) ஸுதர்சலோகம், (௧௫) ஸுதர்சிலோகம், (௧௬) அகநிஷ்டலோகம், (௧௭) ஆகாசானந்தியாயதனலோகம், (௧௮) விஞ்ஞானானந்தியாயதனலோகம், (௧௯) அகிஞ்சந்யாயதனலோகம், (உ0) நைவ ஸம்ஜ்ஞாயதனலோகமென்பன. இவற்றுள், பிரஹ்மகாயிகலோகம் முதலிய பதினாறையும் உருபப் பிரஹ்மலோகமென்றும், ஆகாசானந்தியாயதன லோகம்முதலிய நான்கையும் அருபப்பிரஹ்மலோகமென்றும் கூறுவர்; "நால்வகை மரபி னருபப் பிரமரு, நானால் வகையி னுருபப் பிரமரும்" (மணி. ௬: ௧௭௬ - ௭.) மேற்கூறியவற்றுள், தெய்வலோகங்கள் ஆறும் ஸகாம லோகங்களென்றும், பிரஹ்மலோகங்கள் இருபதும் நிஷ்காமலோகங்களென்றும் கூறப்படும். இவை, பௌத்த நூலிற் காணப்பட்டன. செம்மலர் முதியோன் - மஹாப்ரஹ்மா. அந்நாள் - அந்நாளில்.

(பி - ம்.) உ௪. 'கோணிலைதிரிந்து' உ௬. 'தொன்மூதாட்டியைக்'

ளென்பெயர்ப் படுத்தவிவ் விரும்பெயர் மூதூர்
நின்பெயர்ப் படுத்தே னீவா ழியவென
விருபாற் பெயரிய வுருகெழு மூதூ
ரொருநூறு வேள்வி யுரவோன் றனக்குப்
பெருவிழா வறைந்ததும் பெருகிய தலரெனச்
சிதைந்த நெஞ்சிற் சித்திரா பதிதான்
வயந்த மாலையான் மாதவிக் குரைத்தது
மணிமே கலைதான் மாமலர் கொய்ய

௩௰. என்பெயர்ப்படுத்த - என்பெயர்ப்படச்செய்த; என்றதனால், சம்பாபதி யென்னும் பெயர், சம்புத்தீவத்தெய்வத்திற்கு இயல்பாகவே உண்டென்பது பெறப்பட்டது. இதனை, "தகவிலை கொல்லோ சம்பாபதி" (மணி. ௬ : ௧௩௮) என்று வருதலாலுணர்க. சிலப்பதிகாரத்திலும் இந்நூலிலும் தென்மதுரையையும் அதன் அதிதேவதையையும் மதுராபதியென்று வழங்கியிருத்தல் காண்க. சோழர்களின் பழைய இராசதானியாதலின், இந்நகரம் மூதூரெனப்பட்டது. இப்படியே இந்நூலிற் பலவிடத்தும் இந்நகரை மூதூரென்று வழங்குவர் (௨ : ௩௪, ௪௰; ௩ : ௩௪; ௪ : ௨௮; ௧௮ : ௬௧; ௨௰ : ௨௮; ௨௧ : ௧௧௬); "ஆரங் கண்ணிச் சோழன் மூதூர்" (பதிகம், ௧௨) எனவும், "வீங்குநீர் வேலி யுலகிற் கவன்குலத்தோ, டோங்கிப் பரந்தொழுகலான்" (சிலப். ௧ : ௧௧ - ௨) எனவும் வருதல் காண்க.

௩௨. இருபாற் பெயரிய - சம்பாபதி, காவிரிப்பூம்பட்டினம் என்னும் இருவகைப் பெயரினையுடைய. உருகெழு மூதூர் - பகைவர்க்கு அச்சத்தைச் செய்தல் பொருந்திய பழைய ஊர்; மு. மணி. ௪ : ௩௬.

௧ - ௩௨. விரிசடையாட்டி, தெய்வதம், சம்புவென்பாள், சம்பாபதியினள்; அக்காலத்துக் காவிரிப்பாவை ஒழுகி அச்சம்பாபதியயலில் தோன்ற, ஆங்கிருந்த முதியோள் நீர்ப்பாவையை எதிர்கொண்டு விளக்கே வாவென, அதனைப் பெருந்தவன் கேட்டு வணங்கென, குலக்கொடி தண்டமிழ்ப்பாவை அம்முதியாளைத் தொழுதுநிற்ப, அம்மூதாட்டி, அவளைக் கவானிற் கொண்டிருந்து, அந்நாளில், என்பெயர்ப் படுத்த இம்மூதூரை நின்பெயர்ப் படுத்தேன், நீவாழியவென்றலால் இருபாற் பெயரியமூதூரென்க.

௩௩. நூறுவேள்வியுரவோன் - சதமகன்; இந்திரன்.

௩௪. அலர்பெருகியதென; அலர்-பலரறியநிகழ்த்தும் பழிமொழி.

௩௫. சித்திராபதி-மாதவியின் நற்றாய்; "எற்பயந்த, சித்திரா பதிக்குஞ் செப்புநீ" (மணி. ௨ : ௭௰ - ௭௧) என்று மாதவி கூறுதலாலுணர்க.

௩௬. வயந்தமாலை - மாதவியின் தோழி; "தன்மக டோழி, வயந்த மாலையை வருகெனக் கூஉய்" (மணி. ௨ : ௭ - ௮); இவளைக் கூனியென்றும் வழங்குவர். மாதவி - மணிமேகலையின்தாய்; நாடகக் கணிகை.

(பி - ம்.) ௩௧. 'பெயர்படுத்தேன்'

வணிமலர்ப் பூம்பொழி லகவயிற் சென்றது
மாங்கப் பூம்பொழி லரசிளங் குமரனைப்
பாங்கிற் கண்டவள் பளிக்கறை புக்கதும்
பளிக்கறை புக்க பாவையைக் கண்டவன்
றுளக்குறு நெஞ்சிற் றுயரொடும் போயபின்
மணிமே கலாதெய்வம் வந்துதோன் றியது
மணிமே கலையைமணி பல்லவத் துய்த்தது
முவவன மருங்கினவ் வுரைசா றெய்வதஞ்
சுதமதி தன்னைத் துயிலெடுப் பியதூஉ
மாங்கத் தீவகத் தாயிழை நல்லா
டான்றுயி லுணர்ந்து தனித்துய ருழந்தது
முழந்தோ ளாங்கணோ ரொளிமணிப் பீடிகைப்
பழம்பிறப் பெல்லாம் பான்மையி னுணர்ந்தது

---

௩௮. பொழில் - உபவனம். அகவயின் - உள்ளிடத்தே.

௩௯. பொழில் - பொழிலில். அரசிளங்குமரனை - உதயகுமரனை.

௪௰. பளிக்கறை - பளிங்காலாகிய அறை. ௪௧. பாவை - மணிமேகலை.

௪௨. துளக்குறுநெஞ்சு - நிலைகலங்குதலுற்ற நெஞ்சு; "கடிமரந் துளங்கிய காவும்" புறநா. ௨௩.

௪௩. மணிமேகலாதெய்வம் - அரக்கர் வாதைபண்ணுதபடி இந்திரன் ஏவலாலே சில தீவுகளைப் பாதுகாத்துக்கொண்டிருத்தலையுடையது; கோவலனுடைய குலதெய்வம்.

௪௪. மணிபல்லவம் - ஒரு சிறுதீவு; சிறுதீவை அந்தரத்தீவென்று வழங்குவர்.

௪௫. உவவனம் - உண்டாக்கப்பட்டவனம்; உபவனமென்னும் வடமொழிச் சிதைவு; இதனை ஆராமமென்றும் வழங்குவர். உரைசால் - புகழமைந்த.

௪௬. சுதமதி - மாதவியின் தோழியாகிய ஒரு பார்ப்பனி. துயில் எடுப்பியதூஉம் - துயில் எழுப்பியதும்; "உரவுநீர்ப் பரப்பி னூர்துயி லெடுப்பி" சிலப். ௪ : ௭௯.

௪௭. நல்லாள் - மணிமேகலை.

௪௮. தனித்துயருழந்ததும் - ஒப்பற்ற துயரால் வருந்தியதும்; "அருந்துய ருழக்குநின் றிருந்திழை யரிவை" புறநா. ௧௪௯.

௪௯. ஒளிமணிப்பீடிகை - செவ்வொளியையுடைய மாணிக்கத்தாலாகிய புத்தனுடைய பாதபீடிகையால்.

(பி - ம்.) ௪௧. 'பாவை கண்டவன்' ௪௨. 'பெயர்ந்தபின்' ௪௪. 'மணிப் பல்லவம்' ௪௬. 'துயிலெழுப்பியதூஉம்' ௪௮. 'தான்றுயி லெழுந்து' ௪௯. 'உழந்தோண்முன்னர்'.

முனார்ந்தோன் முன்ன ருயர்தெய்வந் தோன்றி
மனங்கவ லொழிகென மந்திரங் கொடுத்ததுந்
தீப திலகை செவ்வனந் தோன்றி
மாபெரும் பாத்திர மடக்கொடிக் களித்ததும்
பாத்திரம் பெற்ற பைந்தொடி தாயரொ
டியாப்புறு மாதவத் தறவணர்த் தொழுதது
மறவண வடிக ளாபுத் திரன்றிற
நறுமலர்க் கோதைக்கு நன்கன முரைத்தது
மங்கைப் பாத்திர மாபுத் திரன்பாற்
சிந்தா தேவி கொடுத்த வண்ணமு

---

௫௧. உயர்தெய்வம் - மணிமேகலாதெய்வம்.

௫௨. கவல் - கவலுதல்; முதனிலைத் தொழிற்பெயர். மந்திரம்:- வேற்றுரு அடைவிப்பதும், அந்தரத்தில் திரியச்செய்வதும், பசியை ஒழிப்பதுமாகிய மூன்று மந்திரங்கள். கொடுத்ததும் - உபதேசித்ததும்.

௫௩. தீபதிலகை - மணிபல்லவத்திலுள்ள புத்தனுடைய பாதபீடிகையை இந்திரனேவலாற் காவல்பூண்டு ஒழுகுபவள்; தீவுக்கு அலங்காரமாக உள்ளவளென்பது பொருள். செவ்வனம் - செவ்விதாக; "தீவ திலகை செவ்வன முரைக்கும்" (மணி. ௧௧ : ௨௦) எனவும், "சிறந்தோர்க் கல்லது செவ்வனஞ் சுரவாது" (மணி. ௧௧ : ௧௨௧) எனவும் இம்மொழி இப்பொருளில் வழங்கிவருதல் காண்க.

௫௪. மாபெரும்பாத்திரம் - அமுதசுரபியென்னும் பெயருள்ள பிச்சைப் பாத்திரத்தை. மடக்கொடிக்கு - மணிமேகலைக்கு.

௫௫. தாயரொடு - மாதவி சுதமதியென்னும் இருவரோடு; "ஆங்கத் தாயரோ டறவணர்த் தேர்ந்து" (பதிகம், ௮௬), "பொற்றொடி தாயரு மப்பதிப் படர்ந்தனர்" (௨௮ : ௧௫௪), "நகர்கடல் கொள்ளநின் றாயரும் யானும்" (௨௬ : ௩௫) என இவ்விருவரையும் மணிமேகலையின் தாயரென இந்நூலுள்ளே வழங்கிவருதல் காண்க.

௫௬. யாப்பு - கட்டு. அறவணர் - புத்த சங்கத்தினரான ஒரு முதிய முனிவர்.

௫௭. ஆபுத்திரன் - ஓரந்தணன்; தன்னைப்பெற்றவுடன் தாய் நீங்கிவிட, எழுநாள் வரையில் ஒரு பசுவாற் பாலூட்டிக் காக்கப்பட்டமையின், இவன் இப்பெயர்பெற்றான். திறம் - வரலாறு.

௬௦. சிந்தாதேவி-ஸரஸ்வதீதேவி; யாவருக்கும் சிந்தையிற் றோன்றிச் சொற்பொருளுணர்த்துபவளென்பது பொருள்; இந்நூலுள்ளே, "நாமிசைப் பாவாய்" (௧௪: ௧௮), "செழுங்கலைப் பாவாய்" (௨௫: ௧௩௬),

(பி - ம்.) ௫௨. 'ஒழியென' ௫௩. 'தீவதிலகை' ௫௭. 'அறவணரடிகள்' ௫௮. 'நறுமணக்கோதைக்கு' ௫௯. 'ஆங்கப்பாத்திரம்'

மற்றப் பாத்திர மடக்கொடி யேந்திப்
பிச்சைக் கவ்வூர்ப் பெருந்தெரு வடைந்ததும்
பிச்சை யேற்ற பெய்வளை கடிஞையிற்
பத்தினிப் பெண்டிர் பாத்தூ ணீத்ததுங்
காரிகை நல்லாள் காயசண் டிகைவயிற்
றானைத் தீக்கெடுத் தம்பல மடைந்தது
மம்பல மடைந்தன ளாயிழை யென்றே
கொங்கலர் நறுந்தார்க் கோமகன் சென்றது
மம்பல மடைந்த வரசிளங் குமரன்முன்
வஞ்ச விஞ்சையன் மகள்வடி வாகி
மறஞ்செய் வேலோன் வான்சிறைக் கோட்ட
மறஞ்செய் கோட்ட மாக்கிய வண்ணமுங்
காயசண் டிகையென விஞ்சைக் காஞ்சன

"உணர்விற் றோன்றி யுரைப்பொரு ளுணர்த்து, மணிதிக ழவிரொளி மடந்தை" (௨௫ : ௧௪௮) என வழங்குதலால் இஃது உணரப்படும்.

௬௧. மடக்கொடி - மணிமேகலை.

௬௨. பிச்சைக்கு - பிக்ஷைக்கு. அவ்வூர் - காவிரிப்பூம்பட்டினம்.

௬௩. கடிஞை - பிச்சைப்பாத்திரம்; "தோமறு கடிஞையும்" சிலப். ௧௦ : ௬௮.

௬௪. பத்தினிப்பெண்டிர் - ஆதிரை. பாத்தூண் - பகுத்துண்ணும் உணவு.

௬௫. காயசண்டிகை - ஒரு வித்தியாதரமகள்.

௬௬. ஆனைத்தீ - எதனாலும் தணியாத பெரும்பசியைச் செய்வதொரு வியாதி; இதனைப் பஸ்மகவியாதியென்பர் ஸ்ரீபுராணமுடையார்; இதனியல்பை, சீவக. ௪௦௦, ௪௦௩ - ஆம் பாடல்களாலுணர்க. அம்பலம் - உலகவறவி.

௬௮. கோமகன் - உதயகுமரன்.

௭௦. விஞ்சையன்மகள்வடிவு - காஞ்சனனென்னும் வித்தியாதரனுடைய மனைவியாகிய காயசண்டிகையினது உருவம்; மகள் - மனைவி; இந்நூலுள்ளே, "நினக்கிவன் மகனாத் தோன்றிய தூஉம், மனக்கினி யாற்குநீ மகளாய தூஉம்" (௨௧ : ௨௯ - ௩௦) என்புழி மகளென்பது இப்பொருளதாதலுணர்க.

௭௧. வேலோன் - சோழன். சிறைக்கோட்டம் - சிறைச்சாலையை.

(பி - ம்.) ௬௩. 'பெருந்தகைக்கடிஞை' ௭௦. 'மகள் வடிவாய உருவம்' ௭௩. 'காஞ்சயன்'

னாயிழை தன்னை யகலா தணுகலும்
வஞ்ச விஞ்சையன் மன்னவன் சிறுவனை
மைந்துடை வாளிற் றப்பிய வண்ணமு
மையரி யுண்க ணவன்றுயர் பொறாஅ
டெய்வக் கிளவியிற் றெளிந்த வண்ணமு
மறைகழல் வேந்த னாயிழை தன்னைச்
சிறைசெய் கென்றதுஞ் சிறைவீடு செய்தது
நறுமலர்க் கோதைக்கு நல்லற முரைத்தாங்
காய்வளை யாபுத் திரனா டடைந்தது
மாங்கவன் றன்னோ டணியிழை போகி
யோங்கிய மணிபல் லவத்திடை யுற்றது
முற்றவ ளாங்கோ ருயர்தவன் வடிவாய்ப்
பொற்கொடி வஞ்சியிற் பொருந்திய வண்ணமு

எ௪. அணுகலும் - நெருங்குதலும்.

எ௬. மைந்து - வலி. தப்பிய - வெட்டிய; "வாளிற் றப்பிய வல்வினை யன்றே" மணி. ௨௧ : ௬0.

எ௮. தெய்வக்கிளவி - கந்திற்பாவையாகிய தெய்வத்தின் மொழி.

எ௯. வேந்தன் - மாவண்கிள்ளி. அ0. வீடு - விடுதல்.

அ௧. நறுமலர்க் கோதைக்கு - இராசமாதேவிக்கு. நல்லறம் - பௌத்த தருமம்; இதனை அருளறமென்றுங் கூறுவர்.

அ௨. ஆபுத்திரன் நாடு - சாவகநாடு.

அ௩. ஆங்கவன்றன்னொடு - ஆபுத்திரனொடு.

அ௪. புத்தனுடைய பாதபீடிகையினையுடையதாதலின், 'ஓங்கிய மணிபல்லவம்' என்றார்.

அ௫. உயர்தவன்வடிவாய் - மணிமேகலை உயர்ந்த முனிவன் வடிவங்கொண்டு; "மையறு சிறப்பிற் றெய்வந் தந்த, மந்திர மோதியோர் மாதவன் வடிவாய்" (௨௬ : எ0 - எ௧) என்று பின் வருதல் காண்க.

அ௬. வஞ்சி - சேரனுடைய இராசதானி.

(பி - ம்.) எஎ - அ௨. 'நெடுநிலைக் கந்தி னின்ற பாவை, வருவ துரைத்து மயக்கொழி யென்றது, மகன்றுயர் பொறாஅ மன்னவன் மாதரைச், சினங்கொண் டாங்கோர் சிறையிடை யிட்டதுஞ், சிறைவீடு செய்த விராசமா தேவி, பொறைகொண் டிரப்பச் சிலங் கொடுத்ததுந், தாழ்கழல் வேந்தன் சாவக மன்னனுக், காயிழை தன்னை யகற்றிய வண்ணமும்' அ௧. 'நறுமலர்க்கோதை நல்லறம்' அ௬, 'பொற்கொடிமூதூர்', 'பொற்றொடிவஞ்சி.'

நவையறு நன்பொரு ளுரைமி னோவெனச்
சமயக் கணக்கர் தந்திறங் கேட்டது
மாங்கத் தாயரோ டறவணர்த் தேர்ந்து
பூங்கொடி கச்சி மாநகர் புக்கதும்
புக்கவள் கொண்ட பொய்யுருக் களைந்து
மற்றவர் பாதம் வணங்கிய வண்ணமுந்
தவத்திறம் பூண்டு தருமங் கேட்டுப்
பவத்திற மறுகெனப் பாவை நோற்றது
மிளங்கோ வேந்த னருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் டமிழ்த்திற மணிமே கலைதுற

---

௮௭. நவையறு - குற்றமற்ற. நன்பொருள் - நல்லதத்துவங்களை.

௮௮. சமயக்கணக்கர் - சமயவாதியர்; "சமயக் கணக்கர் மதிவழி கூறாது", "மாறுகொண் டறையு மதிநூற் கடல்கிளர், சமயக் கணக்கர் தந்திறங் கடந்து" கல். ௧௭, ௬௫.

௮௯. ஆங்கு - வஞ்சிநகரத்தில். ௯௦. கச்சி - காஞ்சிநகரம்.

௯௧. பொய்யுரு - முன்னங்கொண்ட முனிவன்வடிவு.

௯௨. அவர் - அறவணவடிகளது. ௯௩. தருமம் - பௌத்ததருமம்.

௯௫. இளங்கோவேந்தன் - சிலப்பதிகாரநூலாசிரியராகிய இளங்கோவடிகள். அருளிக்கேட்ப - அருள்புரிந்துகேட்ப; கேட்டருளவென விகுதிபிரித்துக் கூட்டினும் அமையும்.

௯௬. கூலவாணிகன் சாத்தன் - கூலவாணிகனான சாத்தன்; கூலம் எண்வகைத்து, நெல்லு, புல்லு, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகியென; பதினெண் வகைத்தென்பர் கூத்தநூலார்; "பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக" மதிவாணர்நாடகத்தமிழ்நூல்.

௯௭. தமிழ்த்திறம் - தமிழிலக்கணத்தின் பாகுபாட்டால். மணிமேகலை துறவு - மணிமேகலைதுறவென்னும் பெயருள்ள இந்நூலை; இந்நூலுக்கு மணிமேகலைதுறவென்னும் பெயருண்மை, நீலகேசியுரை முதலியவற்றிற் காணப்படும்; ஆயினும் மணிமேகலையென்னும் பெயர் இருவகை வழக்கினும் மிகுதியாக வழங்குதல்பற்றி, அப்பெயரே ஈண்டு எடுத்தாளப்பட்டது. இனி, மணிமேகலைதுறவென்பதனை நூற்பெயராகக் கொள்ளாமல் மணிமேகலை யென்பவளுடைய துறவென்று கொள்ளினும் பொருந்தும்.

(பி - ம்.) ௮௯. 'தொழுது' ௯௦. 'காஞ்சிமாநகர்' ௯௨. 'மற்றவன்' ௯௭. 'வண்டமிழத்தின் மணிமேகலை திறம்'

நவையறு நன்பொரு ளுரைமி னோவெனச்
சமயக் கணக்கர் தந்திறங் கேட்டது
மாங்கத் தாயரோ டறவணர்த் தேர்ந்து
பூங்கொடி கச்சி மாநகர் புக்கதும்
புக்கவள் கொண்ட பொய்யுருக் களைந்து
மற்றவர் பாதம் வணங்கிய வண்ணமுந்
தவத்திறம் பூண்டு தருமங் கேட்டுப்
பவத்திற மறுகெனப் பாவை நோற்றது
மிளங்கோ வேந்த னருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் டமிழ்த்திற மணிமே கலைதுற

---

௮௭. நவையறு - குற்றமற்ற. நன்பொருள் - நல்லதத்துவங்களை.

௮௮. சமயக்கணக்கர் - சமயவாதியர்; "சமயக் கணக்கர் மதிவழி கூறாது", "மாறுகொண் டறையு மதிநூற் கடல்கிளர், சமயக் கணக்கர் தந்திறங் கடந்து" கல். ௧௭, ௯௫.

௮௯. ஆங்கு - வஞ்சிநகரத்தில். ௯0. கச்சி - காஞ்சிநகரம்.

௯௧. பொய்யுரு - முன்னங்கொண்ட முனிவன்வடிவு.

௯௨. அவர் - அறவணவடிகளது. ௯௩. தருமம் - பௌத்ததருமம்.

௯௫. இளங்கோவேந்தன் - சிலப்பதிகாரநூலாசிரியராகிய இளங்கோவடிகள். அருளிக்கேட்ப - அருள்புரிந்துகேட்ப; கேட்டருள வென விகுதிபிரித்துக் கூட்டினும் அமையும்.

௯௬. கூலவாணிகன் சாத்தன் - கூலவாணிகனான சாத்தன்; கூலம் எண்வகைத்து, நெல்லு, புல்லு, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகியென; பதினெண் வகைத்தென்பர் கூத்தநூலார்; "பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக" மதிவாணர்நாடகத்தமிழ்நூல்.

௯௭. தமிழ்த்திறம் - தமிழிலக்கணத்தின் பாகுபாட்டால். மணிமேகலை துறவு - மணிமேகலைதுறவென்னும் பெயருள்ள இந்நூலை; இந்நூலுக்கு மணிமேகலைதுறவென்னும் பெயருண்மை, நீலகேசியுரை முதலியவற்றிற் காணப்படும்; ஆயினும் மணிமேகலையென்னும் பெயர் இருவகை வழக்கிலும் மிகுதியாக வழங்குதல்பற்றி, அப்பெயரே ஈண்டு எடுத்தாளப்பட்டது. இனி, மணிமேகலைதுறவென்பதனை நூற்பெயராகக் கொள்ளாமல் மணிமேகலை யென்பவளுடைய துறவென்று கொள்ளினும் பொருந்தும்.

(பி - ம்.) ௮௯. 'தொழுது' ௯0. 'காஞ்சிமாநகர்' ௯௨. 'மற்றவன்' ௯௭. 'வண்டமிழத்தின் மணிமேகலை திறம்'

மணிமேகலை.

முதலாவது

விழாவறைகாதை.

[முதலாவது விழாவறைந்தபாட்டு.]

உலகந் திரியா வோங்குயர் விழுச்சீர்ப்
பலர்புகழ் மூதூர்ப் பண்புமேம் படீஇய
வோங்குயர் மலயத் தருந்தவ னுரைப்பத்
தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்

க - ங. உலகம் - நன்மக்களுடைய ஒழுக்கம். திரியா - வேறுபடாத. ஓங்குயர் விழுச்சீர் - மிகவுமுயர்ந்த சீரியபுகழ். திரியாமூதூர், சீரினையுடைய மூதூரென்க; "உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீ, ரலைவாய்" (முருகு. கஉச - ரு.) பலர் புகழ் மூதூர் - பல தேசத்தாரும் கொண்டாடும் பழமையாகிய நகரம்; என்றது காவிரிப்பூம்பட்டினத்தை; பலரும்புகழ்தலை, "பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்" (சிலப். க : கo), "வாழியரோ........புகழா லமைந்த புகார்" (சிலப். புகார்க்காண்டத்தினிறுதிச் செய்யுள்) என்பவற்றாலும் பிறவற்றாலும் உணர்க; பலர் - பல சமயத்தாருமாம். மூதூர்ப் பண்பு மேம்படீஇய - மூதூரின் தன்மைகள் மிகும்பொருட்டு. மலயம் - பொதியின்மலை. அருந்தவன் - அகத்தியன். மேம்படீஇய உரைப்பவென்க.

ச. தூங்கு எயில்.....செம்பியன் - தேவர்கட்குப் பகைவராகிய அசுரர்களுடைய, ஆகாயத்திலே அசைகின்ற மதில்களை அழித்த வீரவளையை யணிந்த தோளையுடையசோழன்; இவன் சோழருள் ஒருவன்; இவன் தூங்கெயிலழித்ததனை, "ஒன்னா ருட்குந் துன்னருங் கடுந்திறற், றூங்கெயி லெறிந்தநின் னூங்கணோர்" (புறநா. கூகூ), "தூங்கெயின் மூன்றெறிந்த சோழன்கா ணம்மானை, சோழன் புகார்நகரம் பாடேலோ ரம்மானை" (சிலப். உகூ: 'வீங்குநீர்' என்னும் செய்யுள்), "வீங்குதோட் செம்பியன் சீற்றம் விறல்விசும்பிற், றூங்கு மெயிலுந் தொலைத்தலால்" (பழ. சகூ) என்பவற்றாலுணர்க.

(பி - ம்.) உ. 'மேம்படுதல்', 'மேம்படியர்.' ங. 'ஆங்குயர் மலயத் தருந்தவ னுரைப்ப'

விண்ணவர் தலைவனை வணங்கிமுன் னின்று
மண்ணகத் தென்றன் வான்பதி தன்னுண்
மேலோர் விழைய விழாக்கோ ளெடுத்த
நாலேழ் நாளினு நன்கினி துறைகென
வமரர் தலைவ னுங்கது நேர்ந்தது
கவராக் கேள்வியோர் கடவா ராகலின்
மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடெனு
மித்திறந் தத்த மியல்பினிற் காட்டுஞ்
சமயக் கணக்கருந் தந்துறை போகிய
வமயக் கணக்கரு மகலா ராகிக்

---

௫. விண்ணவர் தலைவனை - இந்திரனை.

௩ - ௫. அருந்தவன் உரைப்பச் செம்பியன் வணங்கியென்க; உரைப்ப எறிந்தவெனவும் இயையும்.

௬. 'மண்ணகத்து' என்பதுமுதல் சோழன்வார்த்தை. வான்பதி தன்னுள் - நன்றாகிய காவிரிப்பூம்பட்டினத்தில்.

௭. விழாக்கோள் எடுத்த - விழாவெடுத்தலை மேற்கொண்ட.

௮. நாலேழ்நாளினும் - இருபத்தெட்டு நாளிலும்; "நாலேழ் நாளினும்" என்பர் மேலும்; ௧ : ௬௭.

௫ - ௮. முன்னின்று உறைகென; உறைகென - உறைகவென்று சோழன்வேண்ட.

௯. நேர்ந்தது - இந்திரன் உடன்பட்டது; இது பெயர்; விழாவை யென்றபடி.

௧௦. கடவார் - பிழையார்.

௧௧. மெய்த்திறம் - மெய்ம்மையையுணர்த்துவனவாகிய நூல்வகைகள்; வழக்கு - உலகியல்; நன்பொருள் - தத்துவம்; வீடு - முத்தி; "மெய்த்திறம் வழக்கென விளம்புகின்ற, வெத்திறத்தினும்" (௨௭: ௧௦௬ - ௭) என்பர்மேலும். இப்படியே, "அருமறை விதியு முலகியல் வழக்குங், கருத்துறை பொருளும் விதிப்பட நினைந்து" (௬௬) என்றார் கல்லாடத்தும்.

௧௨. இத்திறம் - இவ்வகைகளை.

௧௩. தம் துறைபோகிய - தம்முடைய வழியிற் கைதேர்ந்த.

௧௪. அமயக் கணக்கரும் - காலங்களை எண்ணிச்சொல்வோராகிய சோதிடரும்; கணக்கரென்பது கணகரென்னும் வடமொழிச்சிதைவு. அகலாராகி - இந்நகரை விட்டு நீங்காராகி.

(பி - ம்.) ௧௧. 'திறம்விளக்கும்' ௧௪. 'கவையக்கணக்கருங் கல்லென் பேரூர்'

கரந்துரு வெய்திய கடவு ளாளரும்
பரந்தொருங் கீண்டிய பாடை மாக்களு
மைம்பெருங் குழுவு மெண்பே ராயமும்
வந்தொருங்கு குழீஇ வான்பதி தன்னுட்
கொடித்தேர்த் தானைக் கொற்றவன் றுயரம்
விடுத்த பூதம் விழாக்கோண் மறப்பின்

௧௫. கரந்துரு எய்திய கடவுளாளரும் - மக்கள்கண்கள் காணப் பொறாவென்று தமது மிக்க ஒளியையுடைய தெய்வ யாக்கையை மறைத்து அக்கண்கள் பொறுக்குமளவினவாகிய உருவங்களை நிருமித்துக்கொண்ட தேவரும். இதனை, "அந்தரத் துள்ளோ ரறியா மரபின், வந்து காண்குறூஉம் வானவன் விழவும்" (சிலப். ௬ : ௭௨ - ௩), "அவளுக்குப், பூவந்த வுண்கண் பொறுக்கென்று மேவித்தன், மூவா விளநலங் காட்டி" (சிலப். ௯ : ௩௩ - ௫) என வருவனவற்றாலும் அவற்றின் உரையாலும் உணர்க.

௧௬. ஒருங்குஈண்டிய - ஒன்றுபடத்திரண்ட. பாடை மாக்கள் - மொழி வேறுபட்டமாக்கள் ; இவர்கள், மரக்கலந்தருஞ் செல்வப் பொருட்டால் வந்த பரதேசிகள் ; இவரை, "புலம்பெயர் மாக்கள்" (சிலப். ௫ : ௧௧), "மொழிபெயர் தேத்தோர்" (சிலப். ௬ : ௧௪௩) எனவுங்கூறுவர்.

௧௭. ஐம்பெருங்குழு - அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், சாரணரென்னுமிவர்கள்; எண்பேராயம் - கரணத்தியலவர் முதலியோர் ; இவ்விவரத்தை, "அமைச்சர் புரோகிதர் சேனா பதியர், தவாத் தொழிற்றூதுவர் சாரண ரென்றிவர், பார்த்திபர்க் கைம்பெருங் குழுவெனப்படுமே", "கரணத் தியலவர் கரும விதிகள், கனகச் சுற்றங் கடைகாப்பாளர், நகர மாந்தர் நளிபடைத் தலைவர், யானை வீர ரிவுளி மறவ, ரினைய ரெண்பே ராய மென்ப" (திவாகரம்) என்பனவற்றாலுணர்க ; "ஐம்பெருங் குழுவு மெண்பே ராயமும்" சிலப். ௫ : ௧௫௭ ; பெருங். ௨. ௫ : ௬.

௧௮. ஒருங்கு குழீஇ - ஒன்றுபடக்கூடி. 'வான்பதிதன்னுள்' என்றது முதலியன, சமயக்கணக்கர் முதலியோர் வார்த்தை.

௧௯. கொற்றவன் - முசுகுந்தன். துயரம் - அவனுடைய கண்ணும் மனமும் இருளும்வண்ணம் அசுரர்விட்ட தாமதாத்திரத்தால் அவனுக்குளதாகிய துன்பம். துயரம் - துயரத்தை.

௨௦. விடுத்தபூதம் - முசுகுந்தனுக்கு ஒரு மந்திரமுபதேசித்து அவ்விருளைப்போக்கிய, பட்டினப்பாக்கம் மருவூர்ப்பாக்கம் இரண்டற்கும் இடையேயுள்ள நாளங்காடியிடத்துப் பூதம்; "வெற்றிவேன் மன்னற் குற்றதை யொழிக்கென......பீடிகை" (சிலப். ௫ : ௬௫ - ௭), "கடு விசை யவுணர்......இடனுங் காண்கும்" (சிலப். ௬ : ௭ - ௧௩) என்பவற்றாலும் அவற்றின் உரையாலும் உணர்க. விழாக்கோள் - விழாவெடுத்தல்.

(பி - ம்.) ௧௫. 'கரந்தருவெய்திய' ௧௮. 'குழீஇய' ௧௯. 'துயரற', 'துயரிற.' ௨௦. 'மறைப்பின்'

மடித்த செவ்வாய் வல்லெயி றிலங்க
விடிக்குரன் முழக்கத் திடும்பை செய்திடுந்
தொடுத்த பாசத்துத் தொல்பதி நரகரைப்
புடைத்துணும் பூதமும் பொருந்தா தாயிடு
மாயிரு ஞாலத் தரசுதலை யீண்டு
மாயிரங் கண்ணோன் விழாக்கால் கொள்கென
வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசங்
கச்சை யானைப் பிடர்த்தலை யேற்றி
யேற்றுரி போர்த்த விடியுறு முழக்கிற்

௨௧. வல்லெயிறு - வலிய பல்.

௨௨. முழக்கத்து - முழக்கத்தோடு. இடும்பை - துன்பம்.

௨௦ - ௨௨. மறப்பின், பூதம் இடும்பை செய்திடு மென்க.

௨௩ - ௪. தொடுத்த - கட்டிய. நரகர் - தம்மைப் பிறர்நம்புவதற்குத் தவவேடத்தில் மறைந்துநின்று அத்தவத்திற்கிழுக்கானவற்றின்கண் ஒழுகும் பொய்வேடத்தார் முதலிய அறுவகையோர். புடைத்து - அறைந்து. பூதம் - மேற்கூறிய பொய்வேடத்தார் முதலிய அறுவரைத் தன்பாசங்கட்டிவர அவரை அறைந்துண்ணும் சதுக்கப்பூதம்; இதனை, "மாதுய ரெவ்வமொடு மனையகம் புகாஅள்.......சேயிழை யரற்றலும்" (மணி. ௨௨ : ௪௯ - ௫௬), "தவமறைந் தொழுகுந் தன்மையி லாளர், அவமறைந் தொழுகு மலவைப் பெண்டிர், அறைபோ கமைச்சர் பிறர்மனை நயப்போர், பொய்க்கரி யாளர் புறங்கூற் றாளரென், கைக்கொள் பாசத்துக் கைப்படு வோரெனக், காத நான்குங் கடுங்குர லெடுப்பிப், பூதம் புடைத்துணும் பூத சதுக்கமும்", "பத்தினி யொருத்தி........உயிர்முன்புடைப்ப" (சிலப். ௫ : ௧௨௮ - ௩௪, ௧௫ : ௭௬ - ௮௬) என்பவற்றாலுணர்க.

௨௫. மாயிருஞாலம் - மிகப் பெரிய பூமி. ஈண்டும் - கூடும்.

௨௬. ஆயிரங்கண்ணோன் - இந்திரன். கால்கொள்கென-தொடங்குகவென்று சொல்ல; "கால்கோள் விழவின் கடைநிலை சாற்றி" சிலப். ௫ : ௧௪௪.

௨௭. வச்சிரக்கோட்டம் - வச்சிராயுதம் நிற்குங்கோயில்; சிலப். ௪: ௧௨. மணங் கெழுமுரசம் - விழாமுரசு.

௨௮. கச்சை - கீழ்வயிற்றிற் கட்டும் கச்சை. பிடர்த்தலை - பிடரிடம்.

௨௭ - ௮. மூ. "வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசங், கச்சை யானைப் பிடர்த்தலை யேற்றி" சிலப். ௫: ௧௪௧ - ௨.

௨௯ - ௩௧. ஏற்றுரிபோர்த்தமுரசு - வென்ற ஏற்றினது உரியைப் போர்த்தின முரசு; இக்கருத்தினைப் பின்வருவனவற்றாலுணர்க: "நல்லேற் றுரிவை தைஇய......முரசம்" (அகநா. ௩௩௪), "ஏறிரண் டுடன் மடுத்து, வென்றதன் பச்சை சீவாது போர்த்த,......முரசம்" (புறநா. ௨௮௮),

(பி - ம்.) ௨௧. 'வல்லெயிறரும்ப' ௨௭. 'மன்கெழு', 'மணமுழா வாங்கி' ௨௯. 'இடியுருமுழக்கின்'

கூற்றுக்கண் விளிக்குங் குருதி வேட்கை
முரசுகடிப் பிகூஉ முதுக்குடிப் பிறந்தோன்
றிருவிழை மூதூர் வாழ்கென் றேத்தி
வானமும் மாரி பொழிக மன்னவன்
கோணிலை திரியாக் கோலோ னுகுக
தீவகச் சாந்தி செய்தரு நன்னாள்

"ஏற்றுரி முரச நாண வெறிதிரை" (சீவக. ௨௧௪௨), "சாற்றிடக் கொண்ட வேற்றுரி முரசம்" (பெருங். ௧. ௬௮ : ௧௦௦), "ஏற்றுரி முரசி னிறைவன் மூதூர்க்கு" (டை. டை ௪௬: ௧௪௫.) இடிபுறு முழக்கின் முரசு - இடியினது முழக்கம்போலும் முழக்கினையுடைய முரசு. உறு: உவமவுருபு; "தோளுற்றொர்தெய்வந் துணையாய்த்துயர் தீர்த்தவாறும்" (சீவக. ௧௦.) கூற்றுக்கண் விளிக்கும் முரசு - கூற்றை அழைக்கு முரசு; கண்: அசைநிலையுமாம்; "மீன்க ணற்றதன் சுனையே" (புறநா. ௧௦௯.) குருதிவேட்கைமுரசு - குருதிப் பலிகொள்ளும் விருப்பத்தையுடைய முரசு; "குருதி வேட்கை யுருகெழு முரசம்" (புறநா. ௫௦.) கடிப்பு - முரசடிக்குங் குறுந்தடி. இகூஉம் - அறையும்; புறநா. ௧௫௮.

௬௨. திருவிழை மூதூர்: (மணி. ௬ : ௬௪.) வாழ்கென்று - வாழ்க வென்று.

௬௩. 'வானமும்மாரி' முதலியன முரசறைவோன் கூற்று. வானம் - மேகம். மாரி - மழை.

௬௪. கோள்நிலை திரியாக் கோலோன்ஆகுக - கோள்கள் நிற்கும் நிலை குலையாமைக்குக் காரணமாகிய செங்கோலையுடையோனுகுக; "கோணிலை திரிந்திடிற் கோணிலை திரியும்" (௭ : ௮) என இந்நூலுள்ளும், "கோணிலை திரிந்து.........அரசுகோல் கோடி னென்றான்" (௨௫௫) எனச் சீவகசிந்தாமணியுள்ளும் வருதல் காண்க.

௬௫. தீவகச்சாந்தி - தீபசாந்தி; என்றது இந்திரவிழாவை; சம்புத்தீவக் காவற்றெய்வம், முற்காலத்து இத்தீவிலுள்ளார்க்கு அசுரரால் வரும் தீங்கைப் பரிகரித்தற்பொருட்டு இந்திரனுக்குச் செய்தமையால் இவ்விழா இப்பெயர் பெற்றது; "நாவ லோங்கிய மாபெருந் தீவினுட், காவற் றெய்வதந் தேவர்கோற் கெடுத்த, தீவகச் சாந்தி" (மணி. ௨: ௧ - ௩); இனி, நகரத்திற்கு உளவாகுந் தீங்குகளைப் பரிகரித்தற் பொருட்டுச் செய்யப்படும் இவ்விழா, தீவிற்குச் செய்வதனேடொக்கு மென்பது பற்றித் தீவகச்சாந்தியெனப்பட்டதெனினுமமையும்; இவ்வூரம்பலத்தை, "உலகவறவி" (௭ : ௬௩, ௧௭ : ௭௮, ௮௬) என இந்நூலுள்ளும், இவ்வூர்வாயிலை, "உலகவிடைகழி" (௧௦: ௨௭) எனச் சிலப்பதிகாரத்துள்ளும், இவ்வூரரசனை, "உலகமன்னவன்" (௩ : ௪௬) என இந்நூலுள்ளும் கூறியிருத்தல் காண்க.

(பி - ம்.) ௬௧. 'கடிப்பிடூஉம்' ௬௩. 'வானமும் மாரியும்' ௬௫. 'தீபசாந்தி', 'தீவகசாந்தி.'

ளாயிரங் கண்ணோன் றன்னோ டாங்குள
நால்வேறு தேவரு நலத்தகு சிறப்பிற்
பால்வேறு தேவரு மிப்பதிப் படர்ந்து
மன்னன் கரிகால் வளவனீங் கியநா
ளிந்நகர் போல்வதோ ரியல்பின தாகிப்
பொன்னகர் வறிதாப் போதுவ ரென்பது
தொன்னிலை யுணர்ந்தோர் துணிபொரு ளாதலிற்
றோரண வீதியுந் தோமறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம்பா லிகைகளும்
பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்
காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக்கொடி வல்லியுங் கரும்பு நடுமின்

---

௩௭. நால்வேறு தேவர் - முப்பத்து மூவர்; அவர் வசுக்களெண்மரும், திவாகரர் பன்னிருவரும், உருத்திரர் பதினொருவரும், மருத்துவரிருவரும்; முருகு. 167.

௩௮. பால்வேறு தேவர் - பதினெண் கணங்கள்; பால் - பகுதி. படர்ந்து - நினைந்து.

௩௯. கரிகால் வளவன் - புகாரையாண்ட ஒரு சோழன். நீங்கிய நாள் - பகைவரை வெல்ல வடதிசையை நோக்கி அவன் போன நாளில்; "இருநில மருங்கின்............புண்ணியத் திசைமுகம் போகிய வந்நாள்" (௫ : ௮௧ - ௧௪) என்று சிலப்பதிகாரத்து வருதல் காண்க.

௪௧. பொன்னகர் - தேவலோகம். வறிதா - வறுமையையுடையதாக; தேவர் பலரும் விழாக்காண இந்நகர்க்கு வந்துவிடுதல்பற்றி, இவ்வாறு கூறப்பட்டது.

௪௦ - ௪௧. ஆகி வறிதாவென்க.

௪௩. கோட்டி - சபை; கோயில்வாயிலென்பர் சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர்; ௩௦ : ௬௨.

௪௪. பொலம் பாலிகை - பொற்பாலிகை.

௪௫. பாவைவிளக்கு - பிரதிமை விளக்கு; "பாவை விளக்குப் பசும்பொற் படாகை" (சிலப். ௫ : ௧௫௪.). உடன்பரப்புமின் - ஒருங்கு பரப்புமின்.

௪௬. வஞ்சி - மரவிசேடம்; கொடிவிசேடமுமாம்; வஞ்சிநகரத்தை, "பொற்கொடிப் பெயர்ப்படூஉம் பொன்னகர்" (௨௬ : ௬௨) எனப் பின்பு கூறுதல்காண்க.

௪௭. பூக்கொடிவல்லி யென்றார், துகிற்கொடியை மாற்றுதற்கு; "கதலிகைக் கொடியுங் காழூன்று விலோதமும்" மணி. ௧ : ௫௨.

(பி - ம்.) ௩௮. 'இப்பதியடர்ந்து' ௪௨. 'சொன்னிலை' ௪௩. 'தோட்டியும்' ௪௬. 'வாழைக்கதலியும் வஞ்சியும்' ௪௭. 'கரும்பொடு நடியின்'

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
பழமணன் மாற்றுமின் புதுமணற் பரப்புமின்
கதலிகைக் கொடியுங் காழூன்று விலோதமும்
மதலை மாடமும் வாயிலுஞ் சேர்த்துமின்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible]

[illegible] காழ் - காம்பு.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

னொட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்
பற்றா மாக்க டம்முட னாயினுஞ்
செற்றமுங் கலாமுஞ் செய்யா தகலுமின்
வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையுந்
தண்மணற் றுருத்தியுந் தாழ்பூந் துறைகளுந்
தேவரு மக்களு மொத்துடன் றிரிதரு
நாலேழ் நாளினு நன்கறிந் தீரென
வொளிறுவாண் மறவருந் தேரு மாவுங்
களிறுஞ் சூழ்தரக் கண்முர சியம்பிப்
பசியும் பிணியும் பகையு நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி

---

௬௦. ஒட்டிய - சபதஞ்செய்த. பொருள் - தத்துவம்.

௬௧. பட்டிமண்டபம் - வித்தியாமண்டபம்; ஓலக்கமண்டபமென்றுங் கூறுவர்; "பட்டி மண்டப மேற்றினை யேற்றினை" (திருவா. சதகம். ௪௧); "பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண் டபமும்" (சிலப். ௫: ௧௦௨); "பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்" (கம்ப. நகர. ௬௨.) பாங்கு - உரிய இடம்.

௬௨. பற்றாமாக்கள் - பகைவர்.

௬௩. செற்றம் - பகைமை நெடுங்காலம் நிகழும்கோபம்; "செற்ற நீக்கிய மனத்தினர்" (முருகு. ௧௩௨.) கலாம் - போர்; "புலாற்களஞ் செய்த கலாஅத் தானையன்", புறநா. ௬௧.

௬௫. துருத்தி - ஆற்றிடைக்குறை. தாழ்பூந்துறைகள் - ஆழ்ந்த பொலிவினையுடைய நீர்த்துறைகள்.

௬௮. ஒளிறுவாள் - விளங்கும்வாள்; "ஒளிறுவாண் மன்னர்" (புறநா. ௧௭௭.) மறவர் - வீரர்.

௬௯. கண்முரசு - முகத்தையுடைய முரசம்; "கடிப்பிகு கண்முரசம்" (நாலடி. ௧௦௦); முரசின் முகத்தைக் கண்ணென்றல் மரபு.

௭௦. பகை - உட்பகை.

௭௧. மழையும் செல்வமும் சுரக்கவென்று வாழ்த்தி.

௭௦ - ௭௧. மு. "பசியும் பிணியும் பகையு நீங்கி, வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி" சிலப். ௫: ௭௨ - ௩.

(பி - ம்.) ௬௦. 'ஒட்டிய துறுபொரு ளுணர்ந்த வாதிகள்' ௬௮. 'வெளிறு வான்மன்னரும்' ௬௯. 'இயம்ப'

யணிவிழா வறைந்தன னகநகர் மருங்கென்.

க.—விழாவறைகாதை முற்றிற்று.

எஉ. அகநகர் - உள்நகர்; என்றது பட்டினப்பாக்கத்தை.

க - எஉ. அருந்தவன் உரைப்பச் செம்பியன் விண்ணவர்தலைவனை நாலேழ்நாளினும் வான்பதிதன்னுள் உறைகென அவனேர்ந்ததைக் கேள்வியோர் கடவாராதலின், சமயக்கணக்கர் முதலியோர் குழீஇ, ‘மறப்பின் இடும்பைசெய்திடும், பொருந்தாதாயிடும், கால்கொள்க’ என, முதுக்குடிப் பிறந்தோன் முரசத்தை ஏற்றி இயம்பி ஏத்திச் சுரக்கென வாழ்த்திப் பொழிக, ஆகுக, நன்கறிந்தீர், துணிபொருளாதலின் நாலேழ் நாளினும் பரப்புமின், நடுமின், நாற்றுமின், மாற்றுமின், பரப்புமின், சேர்த்துமின், செய்யுமின், பொருந்துமின், ஏறுமின், அகலுமின் என அகநகர்மருங்கு விழாவை அறைந்தனனென்க.

(பி - ம்.) எஉ. ‘அகனமர் மருங்கென்’.

இரண்டாவது

ஊரலருரைத்தகாதை.

[இரண்டாவது ஊரலருரைத்தபாட்டு.]

நாவ லோங்கிய மாபெருந் தீவினுட்
காவற் றெய்வதந் தேவர்கோற் கெடுத்த
தீவகச் சாந்தி செய்தரு நன்னாண்
மணிமே கலையொடு மாதவி யாராத்
தணியாத் துன்பந் தலைத்தலை மேல்வரச்
சித்திரா பதிதான் செல்லலுற் றிரங்கித்
தத்தரி நெடுங்கட் டன்மக டோழி

க. நாவலோங்கிய மாபெருந்தீவு - சம்புத்தீவு; இது மகாத்வீபம் நான்கனுள் ஒன்றாதலின் மாபெருந்தீவெனப்பட்டது; இக்கருத்து, “நால்வகை மரபின் மாபெருந் தீவும்” (மணி. கூ : ககூரு) என்பதனால் விளங்கும்.

நு. நாள்-நாளில். ழ. “தீவகச் சாந்தி செய்தரு நன்னாள்”. மணி. க : நுகு.

(பி - ம்.) நு. ‘தீபசாந்தி செய்தரு மந்நாள்’ ச. ‘மாதவிபாரா’.

வயந்த மாலையை வருகெனக் கூஉய்ப்
பயங்கெழு மாநக ரலரெடுத் துரையென
வயந்த மாலையு மாதவி துறவிக்
கயர்ந்துமெய் வாடிய வழிவின ளாதலின்
மணிமே கலையொடு மாதவி யிருந்த
வணிமலர் மண்டபத் தகவயிற் செலீஇ
யாடிய சாய லாயிழை மடந்தை
வாடிய மேனி கண்டுளம் வருந்திப்
பொன்னே ரனையாய் புகுந்தது கேளாய்
உன்னோ டிவ்வூ ருற்றதொன் றுண்டுகொல்
வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்துக்
கூத்தும் பாட்டுந் தூக்குந் துணிவும்

---

௮. கூஉய் - அழைத்து.

௯. பயம் - பிரயோசனம். அலர் - பலரறிய நிகழ்த்தும் பழிமொழி. உரையென - அலரை மாதவிக்குச் சொல்லென்று சித்திராபதி சொல்ல.

௧௦. துறவிக்கு - துறவுக்கு.

௧௧. அயர்ந்து - மனந்தளர்ந்து. அழிவினள் - வருத்தமுடையாள்.

௧௩. மலர்மண்டபம்-பூத்தொடுக்கும்மண்டபம். அகவயிற்செலீஇ-உள்ளிடத்தேசென்று.

௧௪. சாயல் - மென்மை. மடந்தை - மாதவியினது.

௧௫. வாடியமேனி - தவத்தால் வாடிய மேனியை.

௧௬. பொன் - திருமகள்; 'பொன்னேரனையாய்' என்பது முதலியன வயந்தமாலைகூற்று. புகுந்தது - சம்பவித்ததை.

௧௭. உற்றதொன்றுண்டுகொல் - உற்றதாகிய பகைமை ஒன்றுண்டோ.

௧௮. வேத்தியல் - அரசர்க்காடுங் கூத்து; பொதுவியல் - எல்லார்க்கும் ஒப்ப ஆடுங்கூத்து; திறம் - வகை; "வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்து, மாத்திரை யறிந்து மயங்கா மரபி, னாடலும்" சிலப். ௧௪ : ௧௪௮ - ௫௦.

௧௯. பாட்டு - இசை. தூக்கு - தாளங்களின் வழியே வரும் செந்தூக்கு முதலிய எழு தூக்குகள்; "ஒருசீர் செந்தூக் கிருசீர் மதலை, முச்சீர் துணிவு நாற்சீர் கோயி, லைஞ்சீர் நிவப்பே யறுசீர் கழாலே, யெழுசீர் நெடுந்தூக் கென்மனார் புலவர்" என்பதனாலுணர்க. துணிவு - தாளவறுதி.

(பி - ம்.) ௮. 'வசந்த' ௯. 'அகன்கெழு மன்னக ரலர்படுத் துரையென' ௧௦. 'துறவிற்கு' ௧௭. 'நின்னோ டிவ்வூர் நின்றதொன் றுண்டுகொல்'

பண்ணியாழ்க் கரணமும் பாடைப் பாடலுந்
தண்ணுமைக் கருவியுந் தாழ்தீங் குழலுங்
கந்துகக் கருத்து மடைநூற் செய்தியுஞ்
சுந்தரச் சுண்ணமுந் தூநீ ராடலும்
பாயற் பள்ளியும் பருவத் தொழுக்கமுங்
காயக் கரணமுங் கண்ணிய துணர்தலுங்
கட்டுரை வகையுங் கரந்துறை கணக்கும்
வட்டிகைச் செய்தியு மலராய்ந்து தொடுத்தலுங்
கோலங் கோடலுங் கோவையின் கோப்பும்
காலக் கணிதமுங் கலைகளின் றுணிவும்

உ0. யாழ்க்கரணம் - யாழுக்குரிய செய்கை. பாடைப் பாடல் - அகநாடகங்களுக்கும் புறநாடகங்களுக்கும் உரிய உருக்கள்.

உக. கருவி - வாச்சியம். குழல் - புல்லாங்குழல்.

உஉ. கந்துகம் - பந்து. மடைநூல் - பாகசாத்திரம்.

உங. சுந்தரச்சுண்ணம் - நிறத்தையுடைய வாசனைப்பொடி; "சுந்தரச் சுண்ணத்து" சிலப். ரு : கடுரு.

உச. பாயற்பள்ளி - பாயலிடம். பருவத்தொழுக்கம் - காலங்கட்கேற்ப ஒழுகும் ஒழுக்கம்; பருவம் - இருது.

உரு. காயக்கரணம் - காயத்தாற்செய்யப்படும் அறுபத்து நான்கு வகைச்செய்கை. கண்ணியதுணர்தல் - பிறர் கருதியதை அறிந்து கொள்ளுதல்.

உசு. கட்டுரைவகை - தொடுத்துக்கூறும் சொல்வன்மை. கரந்துறை கணக்கு - மறைந்துறையும்வகை; "அடிசில் வினையும் யாழின் றுறையுங், கடிமலர்ச் சிப்பமுங் கரந்துறை கணக்கும், வட்டிகை வரைப்பும் வாக்கின் விகற்பமுங், கற்றவை யெல்லாங் காட்டுமி னமக்கென" பெருங். க. ங௪ : கசுசு - க.

உஎ. வட்டிகை - எழுதுகோல்; "வட்டிகைச் செய்தியின் வரைந்த பாவை" என்பர் பின்னும்; ச : இஎ.

உஅ. கோலம் - அவ்வக்காலங்கட் கேற்பக்கொள்ளும் ஒப்பனை; "இரவிற்கோர், கோலங் கொடியிடையார் தாங்கொள்ள" (சிலப். க : ங - ச.) கோப்பு - கோத்தல்.

உகூ. காலக்கணிதம் - சோதிடம்; "ஆயுள் வேதருங் காலக் கணிதரும்" (சிலப். ரு: சச.) கலைகள் - பரத்தையர்க்குரியவென்று நூல்களிற் கூறப்பட்ட யாழ்வாசினைமுதலிய அறுபத்துநான்கினுள் இப்பாட்டில்

(பி - ம்.) உ0. 'பண்ணியாழ்க்கானமும்', 'பண்ணியாழ்த்தான மும்.' உக. 'தாழ்ந்தீங்குழலும்' உரு. 'கண்ணியதுரைத்தலும்' உஅ. 'கோவையுங் கோப்பும்'

நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
வோவியச் செந்நூ லுரைநூற் கிடக்கையுங்
கற்றுத்துறை போகிய பொற்றொடி நங்கை
நற்றவம் புரிந்தது நாணுடைத் தென்றே
யலகின் மூதூ ரான்றவ ரல்லது
பலர்தொகு புரைக்கும் பண்பில் வாய்மொழி
நயம்பா டில்லை நாணுடைத் தென்ற
வயந்த மாலைக்கு மாதவி யுரைக்குங்
காதல னுற்ற கடுந்துயர் கேட்டுப்
போதல் செய்யா வுயிரொடு நின்றே
பொற்கொடி மூதூர்ப் பொருளுரை யிழந்து

முன்னும் பின்னுங் கூறுதொழிந்த கலைகள்; பரத்தையர்க்குரிய கலைகள் அறுபத்து நான்கென்பதைப் பின்வருவனவற்றாலுணர்க: "யாழ்முத லாக வறுபத் தொருநான், கேரிள மகளிர்க் கியற்கையென் றெண்ணிக், கலையுற வகுத்த காமக் கேள்வி" (பெருங். ௧. ௩௫ : ௮௪ - ௬); "கலை வலார் நெஞ்சிற் காமமே போன்றும்" (சீவக. ௨௧0௭); "பண்ணுங் கிளையும் பழித்த தீஞ்சொல், லெண்ணெண் கலையோ ரிருபெரு வீதியும்" (சிலப். ௧௪ : ௧௬௬ - ௭); "எண்ணான் கிரட்டி யிருங்கலை பயின்ற... மடந்தையர்" சிலப். ௨௨ : ௧௩௮ - ௯.

௩0. நன்கனம்வகுத்த - நன்றாக வகுக்கப்பட்ட; "நாணமு முடையு நன்கன நீத்து" (௩ : ௮௮) எனவும், "நாவிடை நன்னூ னன்கன நவிற்றி" (௧௩ : ௨௪) எனவும், "யாத்தொலை வின்றி நன்கன மறிந்த பின்" (௧௩ : ௨௬) எனவும் நன்கனமென்பது இப்பொருள்பட்டு இந்நூலுள்ளே பயின்றுவருதல் காண்க.

௩௧. ஓவியச்செந்நூல் - ஓவியநூல்; இப்பெயருள்ள நூல் ஒன்றுண்டென்பது, "ஓவியநூலுள் நிற்றல் இருத்தல் கிடத்தல் இயங்குத லென்னும் இவற்றின் விகற்பங்கள் பலவுள" (சிலப். ௮ : ௨௩ - ௬, அடியார்.) என்பதனாலறியலாகும்.

௩௨. துறைபோகிய - கற்றவகைகளிற் கைதேர்ந்த.

௩௩ - ௫. நற்றவம்புரிந்தது நாணுடைத்தென்று பலர் கூடி உரைக்கும் வாய்மொழியென்க.

௩௬. நயம்பாடில்லை - அழகுண்டாதலில்லை.

௩௮. காதலன் - கோவலன் கடுந்துயர் - மிக்க துயர்; என்றது கொலையுண்டதை; "கணவற் குற்ற கடுந்துயர்" (௨ : ௫0), "காதல னுற்ற கடுந்துயர்" (௨ : ௬௩) என்பர் பின்னும்; "கண்டா ளவன்றன் னைக் காணாக் கடுந்துயரம்" சிலப். ௧௧ : ௩௮.

௪0. பொருளுரை - புகழுரை.

(பி - ம்.) ௩௪. 'அலகைமூதூர்' ௩௬. 'நலம்பாடில்லை' ௩௯. 'போதல் செல்லாவுயிரோநன்றே'

நற்றொடி நங்காய் நானுத் துறந்தேன்
காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி
யூதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்கா
தின்னுயி ரீவ ரீயா ராயி
னன்னீர்ப் பொய்கையி னளியெரி புகுவர்

௪௧. நங்காயென்றது வயந்தமாலையை.

௩௮ - ௪௧. கேட்டு நின்று இழந்து துறந்தேனென்க.

௪௨. கனையெரி - மிக்கநெருப்பு; "கனையெரி யுரறிய மருங்கும்" (புறநா. ௨௩.) பொத்தி - மூட்டி; "கானவர் பொத்திய ஞெலிதீ விளக்கத்து" புறநா. ௨௪௭.

௪௩. ஊதுலைக் குருகின் உயிர்த்து - உலையிலூதும் துருத்திமூக்கைப் போலவே அழலெழவுயிர்த்து; "காதலர்ப் பிரிந்த நோயோ டுளங்கனன், றூதுலைக் குருகி னுயிர்த்தன ராங்கி" (சிலப். ௪ : ௫௮-௯), "காதலற் கெடுத்த நோயோ டுளங்கனன், றூதுலைக் குருகி னுயிர்த்தனள்" ஷை ௨௨ : ௧௫௧ - ௨.

௪௪. இன்னுயிரீவர் - இனியஉயிரைக் கொடுப்பார்; என்றது, காதலரிறந்தமை கேட்டபொழுதே இறப்பரென்றபடி; பாண்டியன் நெடுஞ்செழியனிறப்ப அவன் மனைவியாகிய பெருங்கோப்பெண்டும் உடனே இறந்த சரித்திரம் இங்கே அறியத்தக்கது; அதுவருமாறு: "அரிமா னேந்திய வமளிமிசை யிருந்த, திருவீழ் மார்பிற் றென்னர் கோமான், றயங்கிணர்க் கோதை தன்றுயர் பொறாஅன், மயங்கினன் கொல்லென மலரடி வருடித், தலைத்தா ணெடுமொழி தன்செவி கேளாள், கலக்கங் கொள்ளாள் கடுந்துயர் பெறாஅண், மன்னவன் செல்வுழிச் செல்க யானெனத், தன்னுயிர் கொண்டவ னுயிர்தே டினள்போற், பெருங்கோப் பெண்டு மொருங்குடன் மாய்ந்தனள்" (சிலப். ௨௫ : ௭௮ - ௮௬); இவ்வாறிறத்தலை மூதானந்தமென்பர்; "கயலேர் கண்ணி கணவனொடு முடிய, வியனெறிச் செல்வோர் வியந்துரைத் தன்று", "ஒருயி ராக வுணர்க வுடன்கலந்தோர்க், கிருயி ரென்ப ரிடைதெரி யார் - போரில், விடனேந்தும் வேலோற்கும் வெள்வளையி னாட்கு, முடனே யுலந்த துயிர்" பு - வே. ௨௬௨.

௪௨ - ௫. நளியெரி-செறிந்தநெருப்பு; "நன்மர னளிய நறுந்தண் சாரல்" (புறநா. ௧௫௦.) காதலரிறப்பிற் பொய்கையிற் புகுவதுபோலச் செறிந்த நெருப்பிற் புகுவர் பத்தினிப்பெண்டிர்; "பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற, வள்ளித ழவிழ்ந்த தாமரை, நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே" (புறநா. ௨௪௬); கணவரை யிழந்த பத்தினிப்பெண்டிர்க்குப் பொய்கையுந் தீயும் ஒரு தன்மையின வென்றபடி.

௪௪ - ௫. பின்வரும் வாக்கியத்தில் இவ்வடிகளின்கருத்து அமைந்திருத்தல் காண்க: "காதலன் வீயக் கடுந்துய ரெய்திப், போதல் செய்யா வுயிரொடு புலந்து, நளியிரும் பொய்கை யாடுநர் போல, முளியெரி புகூஉ முதுக்குடிப் பிறந்த, பத்தினிப் பெண்டிர்" மணி. ௧௮ : ௧௧ - ௫.

(பி - ம்.) ௪௫. 'பொய்கையினரி னியவெ

நளியெரி புகாஅ ராயி னன்பரோ
டுடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்
பத்தினிப் பெண்டிர் பரப்புநீர் ஞாலத்
தத்திறத் தாளு மல்லளெம் மாயிழை
கணவற் குற்ற கடுந்துயர் பொறாஅண்
மணமலி கூந்தல் சிறுபுறம் புதைப்பக்
கண்ணீ ராடிய கதிரிள வனமுலை
திண்ணிதிற் றிருகித் தீயழற் பொத்திக்
காவலன் பேரூர் கனையெரி மூட்டிய
மாபெரும் பத்தினி மகண்மணி மேகலை
யருந்தவப் படுத்த லல்ல தியாவதுந்
திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅ

---

௪௭. நோற்றுடம்படுவர் - கைம்மை நோன்பை நோற்று உடம்பை வருத்துவார். கைம்மைநோன்பு இன்னதென்பதைப் பின்வரும் மேற்கோள்களாலுணர்க: "வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட, வேளை வெந்தை வல்சி யாகப், பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியு, முயவற் பெண்டிர்" (புறநா. ௨௪௬); "இன்புறு தங்கணவ ரிடரெரி யகமூழ்கத், துன்புறு வனநோற்றுத் துயருறு மகளிரைப்போல்" சிலப். ௧௮ : ௩௪ - ௫.

௪௮. பரப்புநீர் - கடல்.

௪௯. ஆயிழை - கண்ணகி.

௫௧. சிறுபுறம் - பிடர்; "செயத்தகு கோவையிற் சிறுபுற மறைத்து" (சிலப். ௬ : ௧௦௨.) புதைப்ப - மறைப்ப. கூந்தல் அவிழ்ந்து கிடப்ப வென்றபடி.

௫௨ - ௩. முலைதிருகி - இடமுலையை வலக்கையாற்றிருகி; "இட முலை கையாற் றிருகி" (சிலப். ௨௧ : ௪௩.) அழற்பொத்தி-அழலைமூட்டி.

௫௪. காவலன் பேரூர் - பாண்டியனது பெரிய ஊராகிய மதுரையை.

௫௫. மாபெரும்பத்தினி - கண்ணகி.

௫௬. அருந்தவப்படுத்தலல்லது - செய்தற்கரிய தவவழியிற் சேர்த்தலையன்றி. யாவதும் - சிறிதும்.

௫௭. திருந்தாச்செய்கைத் தீத்தொழில் - பரத்தைமைத்தொழில்; "கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையு, முள்ளக் களவுமென் றுரவோர் துறந்தவை, தலைமையாக் கொண்டநின் றன்மையில் வாழ்க்கை" (௨௪ : ௭௭ - ௯) என்று சித்திராபதியை நோக்கி இராசமாதேவி பரத்தைமையை இழித்துச் சொல்லியதாகப் பின்னுங் கூறுவர்.

௫௫-௭. மணிமேகலை தவவழியிற் சேர்க்கப்படுவாளன்றிப்பரத்தை

(பி - ம்.) ௪௭. 'நோற்றுடன்படுவர்' ௫௨. 'கண்ணீராட்டிய' ௫௬. 'அருந்தவம்படுத்தலல்லது'

ஏங்கிய மந்திர மாவிழு கோசா
இட்டின் மாதவ ருறைவிடம் புகுந்தோர்
மறவனம் நீத்த மாசறு கேள்வி
அறவண வடிக ளடிமிசை வீழ்ந்து
மாபெருந் துன்பந் தொலைந்தனை யவர்க்குக்
காதல பற்று கடுந்துயர் கூறப்
பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோ ருறுவ தறிகென் றருளி

மற் றொழிலிற் சேர்க்கப்படுவோளல்லள்; "மணிமே கலைதுறவு யாவர்க்கு முறைக்கும், கணிகையர் கோலங் காணா தொழிக" சிலப். ௨௪: ௧௦௭-௮.

௧௯. மாதவர் - பௌத்த சங்கத்தார்.

௨௦. மறவனம் நீத்த - பாவத்தன்மைகளைத் துறந்த; பாவங்கள் பத்துவகைப்படும்; காயத்திற்றோன்றுவன மூன்றும், சொல்லிற்றோன்றுவன நான்கும், உள்ளத்திற் றோன்றுவன மூன்றுமென; இதனை, "தீவினை யென்பது யாதென வினவின்,..........கொலையே களவே காமத் தீவிழை, உலையா வுடம்பிற் றோன்றுவ மூன்றும், பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில், சொல்லெனச் சொல்லிற் றோன்றுவ நான்கும், வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென், றுள்ளந் தன்னி லுருப்பன மூன்றுமெனப், பத்து வகையால்" (மணி. ௨௪: ௧௨௨-௧௩௦; ௩௦: ௬௫-௭௨) என்பதனாலுணர்க.

௨௧. கூற - அறவணவடிகட்குக்கூற.

இனி, துக்கம், துக்கநிவாரணம், துக்கோற்பத்தி, துக்கநிவாரண மார்க்கமென்னும் வாய்மைகள் நான்கும் முறையே கூறப்படும்.

௨௪. பிறந்தோருறுவது பெருகிய துன்பம் - துக்கம்.

௨௫. பிறவாருறுவது பெரும்பேரின்பம் - துக்கநிவாரணம்.

௨௬. பற்றின் வருவது முன்னது - துக்கோற்பத்தி; "பற்றே பிறவு பயக்கிய வழியே" மணி. ௩௦: ௭௨.

௨௬-௭. பின்னது அற்றோர் உறுவது - துக்கநிவாரணமார்க்கம்.

௨௭. அறிகென்றருளி - [illegible] "[illegible] பிறப்பு விடு பற்[illegible] [illegible]" (மணி. ௩௦: [illegible]) [illegible] கூறப்படும்.

(௧-௨.) [illegible]

ஐவகைச் சீலத் தமைதியுங் காட்டி
யுய்வகை யிவைகொளென் றுரவோ னருளினன்
மைத்தடங் கண்ணார் தமக்குமெற் பயந்த
சித்திரா பதிக்குஞ் செப்பு நீயென
வாங்கவ ளுரைகேட் டரும்பெறன் மாமணி
யோங்குதிரைப் பெருங்கடல் வீழ்த்தோர் போன்று
மைய னெஞ்சமொடு வயந்த மாலையுங்
கையற்றுப் பெயர்ந்தனள் காரிகை திறத்தென்.

உ.—ஊரலருரைத்தகாதை முற்றிற்று.

௬அ. ஐவகைச்சீலம் - காமம், கொலை, கள், பொய், களவு என்னும் இவ்வைந்தையும் முற்றத்துறத்தல்; "கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையு, முள்ளக் களவுமென் றுரவோர் துறந்தவை" (உ௪ : எஎ - அ) என்பர் பின்னும்; "சீல நீங்காச் செய்தவத் தோர்க்கு" (உக : ௫எ), "சீலந் தாங்கித் தானந் தலைநின்று" (உ௪ : கஅஎ), "தானந் தாங்கிச் சீலந் தலைநின்று" (௩௦ : க) என இந்நூலுள்ளே சீலமென்பது பயின்றுவருதல் காண்க.

௬௯. உய்வகை இவைகொள்என்று - பிறப்பிறப்பினின்றும் தப்பும் வகை நால்வகைவாய்மையும் ஐவகைச் சீலமுமாகும்; இவற்றைக் கொள்வாயாகவென்று. உரவோன் - அறவணவடிகள்; உரம் - அறிவு.

௬௪ - ௯. வாய்மையும் சீலமும் இன்றியமையாதன வென்பதை, "வழுவாச் சீலம் வாய்மையிற் கொண்ட, பான்மையின்" (மணி. உ௯ : உ௦ - உக) என்பதனாலுணர்க.

எ௦. மைத்தடங்கண்ணார் - ஆயத்தார்.

எஉ - ௩. பெறுதற்கரிய மாணிக்கத்தைப் பெரியகடலில் வீழ்த்தியவர்களை யொத்து; "அதுகேட்ட வரசனு நகரமு, மோங்கிய நன்மணி யுறுகடல் வீழ்த்தோர், தம்மிற் றுன்பந் தாநனி யெய்த" (சிலப். ௩௦ : உ௯ - ௩௦.) மாமணி - நீலமணியுமாம்.

எ௫. கையற்று - செயலற்று. காரிகைதிறத்து - மாதவியிடத்தினின்றும்.

க - எ௫. நன்னாளில் மாதவிவாராத்துன்பம் மேல்வரச் சித்திராபதி இரங்கி வயந்தமாலையைக்கூவி அலரை மாதவிக்கு உரையென்று சொல்ல, வயந்த மாலை, மாதவியிருந்த மண்டபத்துச்சென்று கண்டு, வருந்தி, அனையாய், கேளாய், உண்டுகொல்! பண்பில்வாய்மொழி நாணுடைத்தென்ற வயந்தமாலைக்கு உரைக்கும் மாதவி, கேட்டு நின்று இழந்து நாணுத்துறந்தேன்; மணிமேகலை தீத்தொழிற் படாஅள்; இன்னுங்கேள்; புகுந்து வீழ்ந்து மயங்கித் துயரைக்கூற, உரவோன் அறிகென்றருளிக் காட்டி இவற்றைக் கொள்ளென்றருளினன்; இதனைக் கண்ணார்தமக்கும் சித்திராபதிக்கும் நீ செப்பென்றுசொல்ல, வயந்தமாலையும்கேட்டு மணியைக் கடலில்வீழ்த்தோர்போன்று கையற்றுப் பெயர்ந்தனளென முடிக்க.

(பி - ம்.) ௬அ. 'சீலத்தமைவுங்' எஉ. 'ஆங்கவருரை'.

மூன்றாவது

மலர்வனம்புக்க காதை.

[மூன்றாவது மலர்வனம்புக்கபாட்டு.]

வயந்த மாலைக்கு மாதவி யுரைத்த
வுயங்குநோய் வருத்தத் துரைமுன் றோன்றி
மாமலர் நாற்றம் போன்மணி மேகலைக்
கேது நிகழ்ச்சி யெதிர்ந்துள தாதலிற்
ரு றந்தையுந் தாயுந் தானனி யுழந்த
வெந்துய ரிடும்பை செவியகம் வெதுப்பக்
காத னெஞ்சங் கலங்கிக் காரிகை
மாதர் செங்கண் வரிவனப் பழிந்துப்

க-உ. உரைத்த உரைமுன் றோன்றி - சொல்லிய சொல்லிடமாக உதித்து.

௪. கன்மங்களாகிய காரணங்கள் தத்தம் பயனைக்கொடுத்தற்குத் தோற்றுதலை, 'ஏது நிகழ்ச்சி' என்பது பௌத்தநூல் வழக்கு; இதனைத் தோற்றப்பவ தர்மமென்பர்; "ஏது நிகழ்ச்சி யீங்கின் றாகலின்" ([illegible]), "ஏது நிகழ்ச்சி யாவும் பலவுள" (கஉ : க0௫), "ஏது நிகழ்ச்சி யாவும் பலவுள" (உக : கஅ0) என இந்நூலுள்ளே இப்பெயர் பின்பும் வருதல் காண்க. இஃது 'ஏது' எனவும் வழங்கும். எதிர்ந்துளதாதலின் - தோற்றியதாதலால்; "கனைக்கெதிர்முலை" மதுரை. ௬கக.

உ-௪. மணிமேகலைக்கு ஏது நிகழ்ச்சி மலர்நாற்றம்போல் தோன்றி எதிர்ந்துளதாதலினென இயைக்க.

௫. தந்தையும் தாயும் - கோவலனும் கண்ணகியும். உழந்த - வருந்திய.

௬. வெதுப்ப - சுட. ௭. காரிகை - மணிமேகலை.

௮. மாதர் - காதல்; உரிச்சொல்; "மாதர் காதல்" (தொல். உரி. ௩௨.) வரிவனப் பழிந்து - [illegible]; "[illegible] புற்ற" புறநா. ௨௨.

(௫-௬.) [illegible]

புலம்புநீ ருருட்டிப் பொதியவிழ் நறுமல
ரிலங்கிதழ் மாலையை யிட்டுநீ ராட்ட
மாதவி மணிமே கலைமுக நோக்கித்
தாமரை தண்மதி சேர்ந்தது போலக்
காமர் செங்கையிற் கண்ணீர் மாற்றித்
தூநீர் மாலை தூத்தகை யிழந்தது
நிகர்மலர் நீயே கொணர்வா யென்றலு
மதுமலர்க் குழலியொடு மாமலர் தொடுக்குஞ்
சுதமதி கேட்டுத் துயரொடுங் கூறுங்
குரவர்க் குற்ற கொடுந்துயர் கேட்டுத்
தணியாத் துன்பந் தலைத்தலை யெய்து
மணிமே கலைதன் மதிமுகந் தன்னு
ளணிதிகழ் நீலத் தாய்மல ரோட்டிய
கடைமணி யுகுநீர் கண்டன ளாயிற்
படையிட்டு நடுங்குங் காமன் பாவையை

---

௯. புலம்புநீருருட்டி - வருத்தத்தால் உண்டாகிய கண்ணீரை உதிர்த்து; தனித்து வீழ்கின்றகண்ணீர்த்துளியுமாம்.

௭ - ௧௦. காரிகை அழித்து மாலையை நீராட்ட.

௧௨. தாமரை: எழுவாய். மதி - மதியை. தாமரைமலர் மாதவி கைக்கும், மதி மணிமேகலை முகத்திற்கும் உவமை.

௧௩. காமர் - விருப்பம்.

௧௪. தூய நீர்மையையுடைய மாலையானது கண்ணீரில் நனைந்து தூயதன்மையையிழந்தது.

௧௫. நிகர்மலர் - ஒளியையுடைய மலர்; "நீர்வார் நிகர்மலர் கடுப்ப" (அகநா. ௧௧), "அரும்பவிழ் முல்லை, நிகர்மலர் நெல்லொடு தூஉய்" சிலப். ௯ : ௧ - ௨.

௧௬. மதுமலர்க்குழலி - மணிமேகலை.

௧௮. குரவர்க்கு - தாய் தந்தையர்க்கு.

௨௨. கடைமணி உகுநீர் - கண்மணிக் கடையினின்றும் உகுகின்ற நீர்; "பூவின் கடைமணி யுகுநீர் நெஞ்சசுட" சிலப். ௨௦ : ௫௪.

௨௩. படையை எறிந்துவிட்டுக் காமன் நடுங்குவான்.

(பி - ம்.) ௯. 'புலம்புநீருட்டி' ௧௦. 'இலங்குதண்மாலையை யிடு நீராட்ட', 'இக்நீராட்ட.'

யாடவர் கண்டா லகறலு முண்டோ
பேடிய ரன்றே பெற்றியி னின்றிடி
னாங்கன மன்றியு மணியிழை கேளா
யீங்கிந் நகரத் தியான்வரும் காரணம்
பாரா வாரம் பல்வளம் பழுநிய
காராளர் சண்பையிற் கௌசிக னென்போ
னிருபிறப் பாள னொருமக ளுள்ளே
னொருதனி யஞ்சே னாரா நெஞ்சமோ
டாரா மத்திடை யலர்கொய் வேன்றனை
மாருத வேகனென் பானோர் விஞ்சையன்
திருவிழை மூதூர் தேவர்கோற் கெடுத்த
பெருவிழாக் காணும் பெற்றியின் வருவோன்
றாரன் மாலையன் றமனியப் பூணினன்

---

௨௪. உண்டோ; ஓ: எதிர்மறை.

௨௫. பெற்றியின் - தம் இயற்கைத்தன்மை திரியாமல். நின்றிடின் - இவனை விரும்பாது நிற்பாராயின்.

௨௬. ஓ. மணி. ௨ : ௪௮.

௨௬ - ௭. யான்வரும் காரணத்தைக் கேளாய்.

௨௮ - ௯. பாராவாரம் - கடல். பழுநிய - முதிர்ந்த; "பெருவளம் பழுநி" (புறநா. ௧௧௩.) காராளர் - பூவைசியர். சண்பை - ஒருநகரம்; சீகாழியுமாம்; அங்கநாட்டிற் கங்கைக்கரையிலுள்ளதாகிய சம்பையென்னும் நகரமுமாம்; இவ்வுரைக்குக் காராளரென்பதனைக் காளரென்பதன் விகாரமாகக் கொள்க; காராளர் - ஒரு சாதியார்.

௨௯. ந. மணி. ௭ : ௧௦௨.

௩௧. ஒருதனி - ஒப்பில்லாததனி; மிக்க தனிமை.

௩௨. ஆராமம் - உபவனம். ௩௩. விஞ்சையன் - வித்தியாதரன்.

௩௪. மூதூர் - காவிரிப்பூம்பட்டினம்.

௩௫ - ௭. தாரன் - பூமாலையை யுடையவன். மாலையன் - மணிமாலையையுடையவன். 'தார மாலையன்' எனப் பாடமோதி, மந்தாரமாலையையுடையவனெனினுமமையும். தமனியப் பூணினன் - பொற்பூணியையுடையவன். பாரோர் காணா - மக்கள் கண்ணிற்குப்புலப்படாத. பலர்தொழுபடிமையன் - தேவர் பலருந் தொழும் தெய்வவடிவையுடையவன். படிமை - தெய்வ வடிவு; ந. "தாரன் மாலையன் றமனியப் பூணினன், பாரோர் காணாப் பலர்தொழு படிமையன்" சிலப். [illegible] - ௪.

(௩௰ - ௩௫.) [illegible]

பாரோர் காணாப் பலர்தொழு படிமைய
னெடுத்தன னெற்கொண் டெழுந்தனன் விசும்பிற்
படுத்தன னாங்கவன் பான்மையே னாயினே
னாங்கவ னீங்கெனை யகன்றுகண் மாறி
நீங்கினன் றன்பதி நெட்டிடை யாயினு
மணிப்பூங் கொம்பர் மணிமே கலைதான்
றனித்தலர் கொய்யுந் தகைமைய ளல்லள்
'பன்மல ரடுக்கிய நன்மரப் பந்த
ரிலவந் திகையி னெயிற்புறம் போகி'
னுலக மன்னவ னுழையோ ராங்குளர்.

௩௭. வருவோனும் படிமையனுமாகிய விஞ்சையன்.

௩௮. எடுத்தனன் - எடுத்து. விசும்பிலெழுந்தனனென்க.

௩௯. படுத்தனன் - அகப்படுத்திக்கொண்டான். அவன் பான்மையேனாயினேன் - அவனுடைய இன்பத்தின் பகுதியையுடையேனாயினேன்; "பனியிரு விசும்பிற் றேவர் பான்மையிற் றென்று சொன்னாள்" சீவக. ௫௫௩.

௪௦ - ௪௧. ஆங்கவன் - மாருதவேகன். ஈங்கு - இந்நகரத்திடத்து. கண்மாறி எனை அகன்று நீங்கினன் - விழித்த கண் இமைக்கும் அளவிலே மறைந்து என்னைவிட்டு நீங்கினன்; கண்மாறல் - விழித்த கண் இமைக்குமளவிலே மறைதல்; "கண்மா றாடவ ரொடுக்க மொற்றி" (மதுரை. ௬௪௨.) தன்பதி நெட்டிடையாயினும் நீங்கினனெனக் கூட்டுக. சுதமதியை மாருதவேகன் இந்நகரத்தில்விட்டு நீங்கினானென்பதை, "அஞ்செஞ் சாய லராந்தா ணத்துளோர், விஞ்சைய னிட்ட விளங்கிழை யென்றே, கல்லென் பேரூர்ப் பல்லோ ருரையினை" (மணி. ௫: ௨௩ - ௫) என்று உதயகுமரன் கூறியவாற்றானுமுணர்க.

௪௨. மணிப்பூங் கொம்பர் மணிமேகலை - மாணிக்கப் பூங்கொம்பு போலும் மணிமேகலை; எழுவாய்.

இனிப் பூக்கொய்தற்குரிய இடங்கூறுகின்றாள்.

௪௪ - ௫. பலமலர்களை நிரைத்த நல்ல மர நிழலையுடைய இலவந்திகையினது மதிலின் புறத்தே சென்றால்; மரப்பந்தர் - சோலையுமாம். இலவந்திகை - யந்திர வாவி; "நிறைக்குறி னிறைத்துப் போக்குறிற் போக்கும், பொறிப்படை யமைந்த பொங்கில வந்திகை" (பெருங். க. ௪௦: ௩௧௧ - ௨); "இலவந்திகை - நீராவியைச் சூழ்ந்த வயந்தச்சோலை; அஃது அரசனும் உரிமையுமாடும் காவற்சோலை" (சிலப். ௧௦ : ௩௦-௩௧) என்பர் அடியார்க்கு நல்லார்.

௪௬. உலகமன்னவன் - சோழன். உழையோர் - பக்கத்திலுள்ளோர்.

(பி - ம்.) ௩௯.'பான்மையளானேன்' ௪௦.'ஆங்கவனென்னை' ௪௩.'கொய்யுந்தன்மையளல்லள்' ௪௪.'நன்மலர்ப்பந்தர்'

விண்ணவர் கோமான் விழாக்கொ ணன்னாண்
மண்ணவர் விழையார் வானவ ரல்லது
பாடுவண் டிமிரா பன்மரம் யாவையும்
வாடா மாமலர் மாலைக டூக்கலிற்
கைபெய் பாசத்துப் பூதங் காக்குமென்
றுய்யா னத்திடை யுணர்ந்தோர் செல்லார்
வெங்கதிர் வெம்மையின் விரிசிறை யிழந்த
சம்பாதி யிருந்த சம்பாதி வனமுந்
தவாநீர்க் காவிரிப் பாவைதன் றாதை
கவேரனாங் கிருந்த கவேர வனமும்
மூப்புடை முதுமைய தாக்கணங் குடைய

---

௪௭. நன்னாள் - நன்னாளில்.

௪௮. வானவரல்லது - தேவர் விரும்புதலையன்றி. அல்லது மண்ணவர் விழையாரென இயைக்க.

௪௯. தேவர்கள் விரும்பினமையால் மரங்களில் வண்டுகள் இமிரா வாயின; "சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்" முருகு. ௪௩.

௪௯ - ௫௦. மரம் யாவையும் மாலைகளைத் தூக்கலின்; தூக்குதல்-தொங்கவிடல். வாடாத மலர்மாலைகள் தேவர்களால் நிருமிக்கப்பட்டன; "வாடாமாலை வார்தளிர்ப் பிண்டி வாம" சீவக. ௩௦௧௮.

௫௧. கைபெய்பாசம் - கையினிடத்துக் கொண்டபாசம். மரங்கள் வாடாமாலைகளைத் தூக்குதலால் பூதங்காத்தல் உணரப்பட்டது.

௫௨. உய்யானம் - உத்தியானம்; அரசர் விளையாடுங் காவற்சோலை; "உய்யா னத்தி னுறுதுணை மகிழ்ச்சியும்" சிலப். ௧௪ : ௧௨௭.

௫௩. வெங்கதிர் - சூரியன்.

௫௪. சம்பாதி - சடாயுவினுடன்பிறந்தவன். காவிரிப்பூம் பட்டினத்திற்கு அருகிலுள்ளதும் சம்பாதிபுரமென்று வழங்கப்படுவதுமாகிய புள்ளிருக்கு வேளூரிறைவனை, ஒரு யோசனை தூரத்திலிருந்து பூக்கொணர்ந்து சம்பாதி பூசித்தானென்று தெரிதலால் அவன்பூக்கொய்தவனம் இந்தச் சம்பாதிவனமாக இருத்தல் கூடுமென்று ஊகிக்கப்படுகின்றது.

௫௫ - ௬. தாதையாகிய கவேரன்; "கவேர கன்னிப் பெயரொடு விளங்கிய, தவாக்களி மூதூர்" ௯ : ௫௨ - ௩. என்பர் பின்னும்

௫௭. மூ. அகநா. எ: ௪. முதுமைய - முதுமையையுடைய. தாக்கணங்கு - தீண்டிவருத்துந் தெய்வம்; "தாக்கணங்கு, தானைக்கொண் டன்ன துடைத்து" (குறள். ௧௦௮௨), "வெம்முது பேய்க்கென் னுயிர் கொடுத்தேன்" என்று பின்னும் வருதல் காண்க; ௬ : ௧௩௦.

௫௪ - ௭. சம்பாதிவனமும் கவேரவனமும் தாக்கணங்குடையன.

(பி - ம்.) ௫௨. 'சம்பாவனமும்'

யாப்புடைத் தாக அறிந்தோர் செய்த
அருளு மன்பு மாருயி ரோம்பு
ஒருபெரும் பூட்கையு மொழியா நோன்பிற்
பகவ னாணையிற் பன்மரம் பூத்து
உவவன மென்பதொன் றுண்டத னுள்ளது
விளிப்பறை போகாது மெய்ப்புறத் திடும்
பளிக்கறை மண்டப முண்டத னுள்ளது
தூநிற மாமணிச் சுடரொளி விரிந்த
தாமரைப் பீடிகை தானுண் டாங்கிடை
அரும்பவிழ் செய்யு மலர்ந்தன வாடா

[illegible]. யாப்புடைத்தாக - உறுதியுடைத்தாக; யாப்பு - உறுதி; "யாப்பறை மாக்க ளியல்பிற் கொள்ளார்" சிலப். ௧௯ : ௩௦.

[illegible]. அருள் - அன்புகாரணத்தால் தோன்றும் அளி. அன்பு - [illegible] முதலாகிய மனத்தின்கண் நிகழும் நேயம்.

௨௦. பூட்கை - மேற்கோள்; "அறத்தாறு நுவலும் பூட்கை" புறநா. [illegible].

௨௧. பகவனது ஆணையின் - புத்தனது கட்டளையினாலே.

௨௨. உள்ளது - உள்ளிடத்தது.

௨௪. அதனுள்ளது - அம்மண்டபத்தின் உள்ளிடத்தது.

௨௩-௪. விளிப்பு அறைபோகாது - ஓசை வெளிப்போகாமல். மெய் புறத்து இடும் - தன்னைச்சார்ந்தாருடம்பைமட்டும் புறத்தே [illegible]ம். பளிக்கறைமண்டபம் - பளிக்குமண்டபம். தன்னுட் [illegible]ருடைய ஓசையை வெளிப்படுத்தாமல் அவர்களுருவத்தை [illegible] வெளிப்படுத்துமென்றது அப்பளிக்கு மண்டபத்தின் தன்மை [illegible]. விளிப்பறை: இருபெயரொட்டாம்; அறை - ஓசை.

[illegible]. [illegible] உள்ளதாகிய மண்டபமெனக் கூட்டுக.

[illegible]. [illegible]சுடரொளிவிரிந்ததாமரைப்பீடிகை - மாணிக்கச் [illegible] பாத பீடம்; என்றது புத்தன் பாதபீடத்தை; புத்தன் [illegible] [illegible]ம், [illegible] வழிபடுவோர் அறப்பற்றி, [illegible] பெருமை

[illegible] - [illegible]ட்டாய்.

[illegible]

[illegible] - [illegible]செய்யும்.

[illegible]

சுரும்பின மூசா தொல்யாண்டு கழியினு
மறந்தே னதன்றிற மாதவி கேளாய்
கடம்பூண்டோர் தெய்வங் கருத்திடை வைத்தோ
ராங்கவ ரடிக்கிடி னவரடி தாஅனுறு
நீங்கா தியாங்கணு நினைப்பில ராயிடி
னீங்கிதன் காரண மென்னை யென்றியேற்
சிந்தை யின்றியுஞ் செய்வினை யுறுமெனும்
வெந்திற னோன்பிகள் விழுமங் கொள்ளவுஞ்
செய்வினை சிந்தை யின்றெனின் யாவது
மெய்தா தென்போர்க் கேது வாகவும்
பயங்கெழு மாமல ரிட்டுக் காட்ட
மயன்பண் டிழைத்த மரபின ததுதா
னவ்வன மல்ல தணியிழை நின்மகள்
செவ்வனஞ் செல்லுஞ் செம்மை தானிலண்

௭௦. கடம்பூண்டு - முறைமையால் மேற்கொண்டு; "நிழல்வாய் நேமி, கடம்பூண் டுருட்டுங் கௌரியர்" (சிலப். ௧௫ : ௧ - ௨.) ஓர் தெய்வம் - ஒரு தெய்வத்தை.

௭௧. அவர் - அத்தேவருடைய. அடிக்கு ஆங்கு இடின் - அடியின் பொருட்டு (மலரை) அப்பீடத்தே இட்டால். அவரடிதானுறும் - (அம் மலர்) அத்தேவருடைய அடியை அடையும்.

௭௨. நினைப்பிலராய் இடின் யாங்கணும் நீங்காது.

௭௪ - ௫. சிந்தையின்றியும் செய்வினை யுறுமெனும் வெந்திறல் நோன்பிகள் - மனமில்லாதிருக்கவும் அறமும் பாவமுமுளவாகுமென்று சொல்லுகின்ற வெவ்விய திறலையுடைய விரதிகள். விழுமங்கொள்ளவும் - வருத்தங்கொள்ளவும்.

௭௬ - ௭. சிந்தை யின்றெனிற் செய்வினை யாவதும் எய்தாது என்போர்க்கு ஏதுவாகவும் - மனமில்லையாயின் அறமும்பாவமும் சிறிதும் உளவாகாவென்று கூறுவோர்க்குக் கருவியாகவும்.

௭௪ - ௭. மனமுளதாயவழி வினையுமுளதாமென்பதும், மனமிலதாய வழி வினையுமிலதாமென்பதுமாகிய இவற்றை, ௩௧௬, ௩௧௭-ஆம் திருக்குறள்களாலும் அவற்றிற்குப் பரிமேலழகரெழுதிய உரையாலும் உணர்க.

௭௮. பயம் - பயன். ௭௯. அது - அப்பீடிகை.

௮௧. செவ்வனஞ் செல்லும் - நேராகச் செல்லும்; வேறாகச் செல்லுமென்றுமாம்; "திருமக ளிருக்கை செவ்வனங் கழிந்து" சிலப். ௬ : ௧௨௭.

(பி - ம்.) ௬௮. 'சுரும்புமூசா' ௬௯. 'மறந்தேனிதன்றிறமாதவி மகள் கேள்' ௭௧. 'ஆங்கவனடிக்' ௭௮. 'பைங்கெழுமாமலரிட்டுக் காட்டி'

மணிமே கலையொடு மாமலர் கொய்ய
வணியிழை நல்லா யாலும் போவலென்
றணிப்பூங் கொம்ப ரவளொடுங் கூடி
மணித்தேர் வீதியிற் சுதமதி செல்வுழிச்
சிமிலிக் கரண்டைய னுழைகோற் பிரம்பினன்
றவலருஞ் சிறப்பி னராந்தா ணத்துளோ
னுணமு முடைய நன்கன நீத்துக்
காணு வுயிர்க்குங் கையற் றேங்கி
யுண்ணு நோன்போ டுயவ லியானையின்
மண்ணு மேனியன் வருவோன் றன்னை
வந்தீ ரடிகளும் மலரடி தொழுதே
னெந்த மடிக ளெம்முறை கேண்மோ
வழுக்குடை யாக்கையிற் புகுந்த நும்முயிர்

௮௪. அவளொடும் - மணிமேகலையோடும்.

௮௬. சிமிலிக்கரண்டையன் - உறியிலே வைத்த குண்டிகையையுடையன்; "கல்பொளிந் தன்ன விடுவாய்க் கரண்டைப், பல்புரிச் சிமிலி நாற்றி" (மதுரை. ௪௮௨ - ௩.) நுழைகோற் பிரம்பினன் - நுண்ணிதாகத் திரண்ட பிரம்பையுடையன்.

௮௭. தவலருஞ் சிறப்பின்அராந்தாணத்துளோன் - கேடில்லாத மேன்மையையுடைய அராந்தாணத்தேயுள்ளான்; அராந்தாணம் - அருகத்தானம்; என்றது சினாலயத்தை; "அஞ்செஞ் சாய லராந்தா ணத்துள்" மணி. ௫ : ௨௩.

௮௯. காணுவுயிர்க்குங் கையற்றேங்கி - நுண்ணிய உடம்பையுடைய உயிர்கட்கும் நடத்தல் இருத்தல் கிடத்தல் நிற்றல் முதலிய தன் றொழில்களால் துன்பங்கழுமோவென்று செயலற்று ஏங்கி.

௯௰. உயவல் - வருந்துதலையுடைய; "உயவற் பாண" புறநா. ௬௯.

௯௧. மண்ணுமேனியன் - கழுவாத மேனியையுடையன்; "கழுவா வுடலம்" (ஆளுடைய பிள்ளையார்திருவந். ௬, ௨௮); "மண்ணுவுடம்பு" (தக்க. ௨௧௧.) வருவோன் றன்னைநோக்கி.

௯௩. கேண்மோ - கேளும்; ஓ: அசைநிலை; "முதுமறை யந்தணிர் முன்னிய துரைமோ", "மாமறை மாக்கள் வருங்குலங் கேண்மோ" (௧௩ : ௫௬, ௯௩) என இந்நூலுள்ளே பின்பு வருதல் காண்க.

௯௪. அழுக்குடையாக்கையென்றான், மண்ணுமேனியாதலால்.

(பி - ம்.) ௮௬. 'நீர்மலி கரண்டைய னுழைத்தோற் பிரம்பினன்'. ௮௭. 'அரந்தாணம்', 'அராந்தானம்.' ௯௪. 'புகுந்தது', 'புகுந்து.'

புழுக்கறைப் பட்டோர் போன்றுளம் வருந்தா
திம்மையு மறுமையு மிறுதியி லின்பமுந்
தன்வயிற் றருஉமென் றலைமக ளுரைத்தது
கொலையுமுண்டோ கொழுமடற் றெங்கின்
விளைபூந் தேறலின் மெய்த்தவத் தீரே
யுண்டு தெளிந்திவ் யோகத் துறுபயன்
கண்டா லெம்மையுங் கையுதிர்க் கொண்மென
வுண்ணு நோன்பி தன்னொடுஞ் சூளுற்
றுண்மென விரக்குமோர் களிமகன் பின்னரும்

---

௯௫. புழுக்கறைப்பட்டோர் - புழுங்கச்செய்யும் அறையில் அகப்பட்டோர்.

௯௫-௬. நம்முயிர் பட்டோர்போன்று உளம் வருந்ாதவன் ளாம்.

௯௭-௯. இம்மைப்பயன் முதலிய மூன்றையும் தன்வயிற்றருஉந் (௯௭) தேறலெனவும் (௯௯), உரைத்ததாகிய (௯௭) தேறலெனவும் (௯௯) இயைக்க; தருஉந் தலைமகனென இயைப்பிறுமமையும்.

௧௦௦. யோக - மருந்து; சேர்க்கையுமாம்.

௧௦௧. எம்மையும் கையுதிர்க்கொண்மென - தேறலையன்றி எம்மை யும் அகற்றிவிடுமென்று. சீலமில்லாதவரைக்காணின், அவரோடு பேசா மல் அவரைப் போகும்படி கையசைத்துக் குறிப்பித்தல் சைனமுனி வர்க்கு இயல்பு: இப்படியே "மையறு படிவத்து மாதவர் புறத்தெனைக், கையுதிர்க் கோடலின்" (௫ : ௪௪ - ௫) எனப் பின்னும் வருதல்காண்க.

௧௦௨. உண்ணுநோன்பி - இரண்டு உவாவும் அட்டமியும் முட்டுப் பாடும் பட்டினிவிட்டுண்ணும் விரதி; என்றது சைனமுனிவனை; "பட் டினி நோன்பிகள்" (சிலப். ௧௫ : ௧௯௪.) சூளுற்று - சபதஞ்செய்து.

௧௦௩. உண்மென - உண்ணுமென்று. ஓர்களிமகன் பின்னரும் - ஒரு கட்குடியன்பின்னே நிற்போகும்.

௮௩-௧௦௩. காண்டையன், பிரம்பினன், உணோன் என்பன உண்ணு நோன்பிக்கு அடை; "அறக்கள் கூடியுந் தறித்தெ [illegible], பிறப்போ வேண்டேன் யானெனக் கூறி, யாத்த வாய [illegible] [illegible], செவ்வழித் தெருவி னிசையப் பாடி, யவ்வழி வருமோ நக்க [illegible], [illegible] [illegible] [illegible] வீயென, வெய்துச் சென்று வைதவன் விலக்கி, [illegible] [illegible] [illegible] வடிநறுந் தேறலைப், பழித்துக் கூறின் பார்ப் [illegible] [illegible], சொல்லா யாயிற் புல்லுவென் யானெனக், கையறு [illegible] [illegible] [illegible]" பெருங். ௧. ௪௦ : ௮௮ - ௯௮.

(பி - ம்.) ௯௫. 'போன்று வருந்தா' ௯௭. '[illegible]' ௧௦௧. '[illegible]' ௧௦௨. '[illegible]'

கணவிர மாலையிற் கட்டிய திரள்புயன்
குவிமுகி ழெருக்கிற் கோத்த மாலையன்
சிதவற் றுணியொடு சேணோங்கு நெடுஞ்சினைத்
ததர்வீழ் பொடித்துக் கட்டிய வுடையினன்
வெண்பலி சாந்த மெய்ம்முழு துரீஇப்
பண்பில் கிளவி பலரொடு முரைத்தாங்
கழூஉம் விழூஉ மரற்றுங் கூஉந்
தொழூஉ மெழூஉஞ் சுழலலுஞ் சுழலு
மோடலு மோடு மொருசிறை யொதுங்கி
நீடலு நீடு நிழலொடு மறலு
மைய லுற்ற மகன்பின் வருந்திக்
கையறு துன்பங் கண்டுநிற் குநருஞ்
சுரியற் றாடி மருள்படு பூங்குழற்
பவளச் செவ்வாய்த் தவள வாணகை
யொள்ளரி நெடுங்கண் வெள்ளிவெண் டோட்டுக்
கருங்கொடிப் புருவத்து மருங்குவளை பிறைநுதற்

---

௧௦௪. கணவிரமாலை - அலரிமாலை; "கணவிர மாலை கைக்கொண் டென்ன" மணி. ௫ : ௪௮.

௧௦௬. சிதவற்றுணி - சிதரினசீரை.

௧௦௬ - ௭. சினைத் ததர் வீழ்பு - கிளைகளிலுள்ள செறிந்த சுள்ளிகள்; வீழ்பு - சுள்ளிகளுக்கு ஆகுபெயர்; ததர் - கொத்துமாம்; "சிதர் நனை முருக்கின் சேணோங்கு நெடுஞ்சினைத், ததர்" சிறுபாண். ௨௫௪ - ௫.

௧௦௮. வெண்பலி - வெண்ணீறு. சாந்தம் - சந்தனம். உரீஇ - உருவி; பூசி.

௧௧௧. சுழலலுஞ் சுழலும் - சுழலுதலையுஞ் செய்வன். இவ்வாறு பின்வருவனவற்றிற்கும் இப்படியே பொருள் கொள்க; "இயங்கலு மியங்கு மயங்கலு மயங்கும்" சிலப். ௨௨ : ௧௫௪.

௧௧௪. மையலுற்றமகன் - பித்தன். ௧௧௬. தாடி - மோவாய்.

௧௧௮. வெள்ளிவெண்டோடு - சங்கினாற்செய்த காதணி.

௧௧௯. கருங்கொடிப் புருவம் - கரிய ஒழுங்காகிய புருவம்; "கருங்கொடிப் புருவ மேறா" (சீவக. ௬௫௮); இதனை, வடமொழியில் ப்ரூலதா என்பர்.

(பி - ம்.) ௧௦௪. 'கணவிரை', 'கணவிரிமாலை கட்டியதிரளையன்.' ௧௦௭. 'பொழிந்துக்' ௧௦௮. 'உறீஇ' ௧௧௦. 'அரற்றினுமரற்றும்' ௧௧௧. 'சுழலினுஞ்சுழலும்' ௧௧௨. 'ஓடினுமோடும்' ௧௧௩. 'நீடினுநீடும்' ௧௧௪. 'மையலுற்று' ௧௧௮. 'வெள்ளைவண்டோட்டுக்'

காந்தளஞ் செங்கை யேந்திள வனமுலை
யகன்ற வல்கு லந்நுண் மருங்கு
லிகந்த வட்டுடை யெழுதுவரிக் கோலத்து
வாணன் பேரூர் மறுகிடைத் தோன்றி
நீணில மளந்தோன் மகன்முன் னாடிய
பேடிக் கோலத்துப் பேடுகாண் குநரும்
வம்ப மாக்கள் கம்பலை மூதூர்ச்
சுடுமண் ணோங்கிய நெடுநிலை மனைதொறு
மையறு படிவத்து வானவர் முதலா

---

௧௨௧. அந்நுண் மருங்குல் - அழகியநுண்ணிய இடை.

௧௨௨. வட்டுடை - முழந்தாளளவாக உடுக்கும் உடை விசேடம்; "வட்டுடைப் பொலிந்த வண்ணக் கலாபமொடு, பட்டுச்சுமந் திசைந்த பரவை யல்குல்...வாசவ தத்தையை" (பெருங். ௨. ௪: ௧௨௨ - ௬.) எழுதுவரிக் கோலம் - கொங்கை முதலியவற்றில் எழுதிய பத்திக்கீற்று; "எழுதுவரிக் கோல முழுமெய் யுறீஇ" சிலப். ௫: ௨௨௬.

௧௨௩ - ௪. வாணன் - வாணாசுரன்; ஊர் - சோநகரம்; நீணில மளந்தோன் - கண்ணன்; மகன் - காமன்; பிரத்தியும்நன்; "வாணன் பேரூர் மறுகிடை நடந்து, நீணில மளந்தோ னாடிய" சிலப். ௬: ௫௪ - ௫.

௧௨௫. பேடு - புறநாடகம் பதினொன்றனுள் ஒன்று; அப்பதினொன்றையும் அவற்றை நிகழ்த்தியவர்களையும் பின்வரும் வெண்பாவா லுணர்க: "கடையமயி ராணிமரக் கால்விந்தை கந்தன், குடைதுடிமா லல்லியமற் கும்பஞ் - சுடர்விழியாற், பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கங், கொட்டியிவை காண்பதினோர் கூத்து." இப்பேடு உழை காரணமாக வாணனாற் சிறைவைக்கப்பட்ட தன் மகன் அநிருத்தனைச் சிறைமீட்கக் காமன் சோநகரத்தாடிய ஆடல். உழை - வாணன்மகள்.

௧௧௬ - ௨௫. "ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்துக், காம னாடிய பேடி யாடலும்" (சிலப். ௬: ௫௬ - ௭), "சுருளிடு தாடி மருள்படு பூங்குழ, லரிபரந் தொழுகிய செழுங்கய னெடுங்கண், விரிவெண் டோட்டு வெண்ணகைத் துவர்வாய்ச், சூடக வரிவளை யாடமைப் பணைத்தோள், வளரிள வனமுலைத் தளரியன் மின்னிடைப், பாடகச் சீறடி யாரியப் பேடி" சிலப். ௨௭: ௧௮௧ - ௬.

௧௨௬. வம்பமாக்கள் - புதியோர்; "வம்ப மாக்க டம்பெயர் பொறித்த" (சிலப். ௫: ௧௧௧.) கம்பலை - முழக்கம். மூதூர் - மூதூரில்.

௧௨௭. சுடுமண் ஓங்கிய - செங்கலாற் செய்யப்பட்டு உயர்ந்த; "சுடும ணோங்கிய நெடுநகர் வரைப்பு" (பெரும்பாண். ௪0௫); "சுடும ணெடுமதில்" (பு - வெ. 113); "சுடும ணேறா......கடிமனை" சிலப். ௧௪: ௧௪௬ - ௭.

௧௨௮. படிவம் - தெய்வவடிவம்.

(பி - ம்.) ௧௨௫. 'பேடிகாண்குநரும்'

வெவ்வகை யுயிர்களு முவமங் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தக ரியற்றிய
கண்கவ ரோவியங் கண்டுநிற் குநரும்
விழவாற்றுப் படுத்த கழிபெரு வீதியிற்
பொன்னாண் கோத்த நன்மணிக் கோவை
யையவி யப்பிய நெய்யணி முச்சி
மயிர்ப்புறஞ் சுற்றிய கயிற்கடை முக்காழ்
பொலம்பிறைச் சென்னி நலம்பெறத் தாழச்
செவ்வாய்க் குதலை மெய்பெறா மழலை
சிந்துபு சின்னீ ரைம்படை நனைப்ப

கஉகூ - ௩க. சுதை - சுண்ணச்சாந்து. வித்தகர் - சிற்பாசாரிகள்; "வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச், சித்திரச் செய்கைப் படாம்" (மணி: ௩ : கசுஎ - அ.) விளக்கத்தையுடைய சுதையாலியற்றிய ஓவியம்; ஓவியம் - சித்திரம். "எவ்வகைச் செய்தியு முவமங் காட்டி, நுண்ணிதி னுணர்ந்த நுழைந்த நோக்கிற், கண்ணுள் வினைஞரும்" (மதுரை. ருகசு - அ); "மயனெனக் கொப்பா வகுத்த பாவையி, னீங்கே னியான்" மணி. உக : க௩உ - ௩.

க௩உ. விழவு ஆற்றுப்படுத்த - விழவை வழிப்படுத்தின; நடத்திய என்றபடி; "முருகாற்றுப் படுத்த வுருகெழு வியனகர்" புறநா. உசச.

க௩ச. ஐயவி அப்பிய நெய்யணி முச்சி - வெண்சிறுகடுகையப்பிய நெய்யையணிந்த மயிர்முடி; பேய்தீண்டி வருத்தாவண்ணம் குழந்தைகளின் மயிர்முடியில் நெய்யணிந்து வெண்சிறுகடுகை அப்புதல் மரபு. வெண்சிறுகடுகிற்குக் கடிப்பகையென்னும் பெயர்வந்ததற்குக் காரணம் இதுவே; கடி - பேய்; "குறுநடைப் புதல்வர்க்குக், காவற் பெண்டிர் கடிப்பகை யெறிந்து, தூபங் காட்டித் தூங்குதுயில் வதியவும்" (எ : ருஎ - கூ) எனவும், "அரவாய்க் கடிப்பகை யையவிக் கடிப்பகை" (எ : எ௩) எனவும் பின்பு வருதல் காண்க. சந்திராபீடனென்பவனது தலையில் வெண்சிறுகடுகு அப்பியிருந்ததாக, காதம்பரி என்னும் வடநூலிலும் கூறப்பட்டுள்ளதென்பர். முச்சி - உச்சியில்.

க௩ரு - சு. கயிற்கடை - கொக்குவாய்; கோக்கும் வாயுமாம்; (கொக்கியென்று வழங்குகின்றது); "கயிற்கடை யொழுகிய காமர் தூமணி, செயத்தகு கோவை" (சிலப். சு : கOக - உ.) முக்காழ் - மூன்று கோவையாகிய முத்துவடம். பிறைச்சென்னி - பிறை வடிவமாகிய ஆபரணத்தின் இரண்டு கோடுகளில். முக்காழ் தாழவென்க.

க௩எ. 'மெய்பெறா மழலை' என்று ஈண்டுக்கூறியதுபோல, "விளையாமழலை" என்று பின்னுங்கூறுவர்; ச : கூகூ.

க௩அ. ஐம்படை - ஐம்படைத்தாலி; சாத்தற்கடவுளான திருமாலின் சங்கம் சக்கரம் கதை கட்கம் சார்ங்கம் என்னும் ஐந்து ஆயுதங்களின்வடிவமாகஅமைப்பது; இதனைப்பஞ்சாயுதமென்றும், ஐந்தாவது நாளில் பிள்ளை

வற்றங் காவாச் சுற்றுடைப் பூந்துகி
றொடுத்தமணிக் கோவை யுடுப்பொடு துயல்வரத்
தளர்நடை தாங்காக் கிளர்பூட் புதல்வரைப்
பொலந்தேர் மீமிசைப் புகர்முக வேழத்
திலங்குதொடி நல்லார் சிலர்நின் றேற்றி
யாலமர் செல்வன் மகன்விழாக் கால்கோள்
காண்மி னோவெனக் கண்டுநிற் குநரும்
விராடன் பேரூர் விசயனும் பேடியைக்
காணிய சூழ்ந்த கம்பலை மாக்களின்

களுக்கு இதனைத் தாரணஞ் செய்தல் மரபென்றும் கிருஹ்யசூத்ரம் என்னும் வடநூலில் இதற்குவிதி உள்ள தென்றுங் கூறுவர். “அமளித் துஞ்சு மைம்படைத் தாலிக், குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்” (எ : ருகூ - எ) என்பர் பின்னும்; இது தாலியெனவும் தாலியைம்படை யெனவும் வழங்கும்; “தாலி களைந்தன்று மிலனே பால்விட், டயினியு மின்றயின் றனனே” (புறநா. எஎ); “எழிலார் திருமார்பிற் கேற்கு மிவையென், றழகிய வைம்படையு மாரமுங் கொண்டு, வழுவில் கொடையான் வயிச்சிரவணன், றொழுதுவனாய் நின்றான் றாலேலோ, தூமணி வண்ணனே தாலேலோ” (பெரியாழ்வார்திரு. மொழி, க. ௩ : ரு); “தாலி யைம்படை தவழு மார்பிடை” கம்ப. நாடு. ருஅ.

கசக - ௩. பொற்றேரின் மேலுள்ள யானையிற் புதல்வரை யேற்றி; “பொற்சிறு தேர்மிசைப் பைம்பொற் போதக, நற்சிறா ரூர்தலின்” சீவக. அகூ.

கசச. ஆலமர் செல்வன் - சிவபெருமான்; மகன் - முருகக்கடவுள்; “ஆலமர் செல்வன் புதல்வன் வரும்” (சிலப். உச : ‘செறிவளை’) சிறாரை முருகக்கடவுளாக எண்ணினர். விழாக் கால்கோள் - விழாவின் தொடக்கம்.

கசரு. என - என்று சொல்ல.

க௩உ - சரு. வீதியில் நல்லார்சிலர், கோவையையும் முச்சியையும் குதலையையும் மழலையையும் பூணையுமுடைய புதல்வரை வேழத்து முக்காழ் தாழச் சின்னீர் நனைப்பத் துகில் துயல்வர ஏற்றிக் காண்மினோ வென்றுசொல்ல, அதனைக்கண்டு நிற்பவர்களும் என்க.

கசசு. பேரூர் - பேரூரில். விசயனும் பேடியை - அருச்சுனனாகிய பேடியை.

கசஎ. காணிய - காண. கம்பலைமாக்கள் - வேறுசிலகாட்சி கண்டு முழங்கித் திரியுமவர்; “கம்பலை மாக்கள் கணவனைத்தாங் காட்ட” சிலப். கக : உகூ.

(பி - ம்.) கச௦. ‘எடுப்பொடு’ கசஉ. ‘தேரதன்மிசை’ கச௩. ‘சிலர் நன்றேற்றி’ கசசு. ‘விசயப்பேடியை’ கசஎ. ‘கம்பலமாக்களின்’

மணிமே கலைதனை வந்துபுறஞ் சுற்றி
யணியமை தோற்றத் தருந்தவப் படுத்திய
தாயோ கொடிய ளகவில ளீங்கிவண்
மாமலர் கொய்ய மலர்வனந் தான்புகி
னல்லிள வன்ன நாணு தாங்குள
வல்லுந கொல்லோ மடந்தை தன்னடை
மாமயி லாங்குள வந்துமுன் னிற்பன
சாயல்கற் பனகொலோ தைய றன்னுடன்
பைங்கிளி தாமுள பாவைதன் கிளவிக்
கெஞ்சல கொல்லோ விசையுந வல்ல
வென்றிவை சொல்லி யாவரு மினைந்துகச்
செந்தளிர்ச் சேவடி நிலம்வடு வுறாமற்
குரவமு மரவமுங் குருந்துங் கொன்றையுந்
திலகமும் வகுளமுஞ் செங்கால் வெட்சியு
நரந்தமு நாகமும் பரந்தலர் புன்னையும்

---

௧௪௮. வந்து புறஞ்சுற்றி - பின்னரும் கண்டுநிற்குநரும் காண்குநரும் கண்டுநிற்குநரும் கண்டுநிற்குநரும் வந்துபுறத்தேசூழ்ந்து.

௧௪௯ - ௫0. அணி அமை தோற்றத்து - ஆபரணங்களில்லாத தோற்றத்தையுடைய; "உப்பமை காமத்துப்பின்" (௧0௭) எனவும், "நிகரமைந்த முழந்தாளும்" (௧௭௫) எனவும் சீவகசிந்தாமணியில் 'அமை' என்பது இப்பொருளில் வருதல்காண்க. அருந்தவப் படுத்திய - அரிய தவநெறியிற் சேர்த்த. தாயோ - மாதவியோ. "மணிமேகலை, யருந்தவப் படுத்த லல்லதி யாவதுந், திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்" (௨ : ௫௫ - ௭) என்று மாதவி முன்பு கூறியிருத்தல் காண்க.

௧௫0. இவள் - மணிமேகலை.

௧௫௨ - ௩. ஆங்குள அன்னம் நாணுது மடந்தை தன்னடை வல்லுந கொல்லோவென இயைக்க.

௧௫௭. இசையுந அல்ல - ஒப்பனவல்ல.

௧௫௮. இனைந்து உக - வருந்திச்சிந்த.

௧௫௯. சேவடியும் நிலமும் வடுவுறாமல்; மெல்ல நடந்தாளென்றபடி.

௧௬0. குரவம் - குராமரம். மரவம் - வெண்கடப்பமரம்.

௧௬௧. திலகம் - மஞ்சாடிமரம். வகுளம் - மகிழ்.

௧௬௨. நரந்தம் - நாரத்தை. நாகம் - சுரபுன்னை; "நனைசினையன நறுவிரையன நலனுடையன நாகம்" நீலகேசி, பதி. ௧௩.

(பி - ம்.) ௧௫0. 'கொடியவள்' ௧௫௫. 'சாயல கொல்லோ' ௧௬0. 'குந்தமுங் கொன்றையும்'

பிடவமுந் தளவமு முடமுட் டாழையுங்
குடசமும் வெதிரமுங் கொழுங்கா லசோகமுஞ்
செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமு
மெரிமல ரிலவமும் விரிமலர் பரப்பி
வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
யொப்பத் தோன்றிய வுவவனந் தன்னைத்
தொழுதனள் காட்டிய சுதமதி தன்னொடு
மலர்கொய்யப் புகுந்தனண் மணிமே கலையென்.

௩.—மலர்வனம்புக்ககாதை முற்றிற்று.

---

௧௬௩. பிடவம் - குட்டிப்பிடவமென்னுங்கொடி. தளவம் - செம்முல்லை (குறிஞ்சி. ௮0, ந.); "பனிவளர் தளவின் சிரல்வாய்ச் செம்முகை" (ஐங்குறு. ௪௪௭); "புதன்மிசைத் தளவி னிதன்முட் செந்நனை, நெருங்குகுலைப் பிடவமொ டொருங்குபிணி யவிழ" (அகநா. ௨௩); "குருதிக் கூரெயிறு கூத்தியர்கட் கொண்ட கொடித்தளவமே" (சீவக. ௧௬௫௧.) முடம் - வளைவு.

௧௬௪. குடசம் - வெட்பாலை விசேடம்; வெதிரம் - மூங்கில்; "குடசமும் வெதிரமுங் கொழுங்கொடிப் பகன்றையும்" சிலப். ௧௩: ௧௫௭.

௧௬௬. எரிமலர்இலவம்-நெருப்பைப்போலச் சிவந்த பூவையுடைய இலவமரம்; "எரியுரு வுறழ விலவ மலர" கலி. ௩௩.

௧௬௮. சித்திரச் செய்கைப்படாம் - சித்திரத்தொழில் அமைந்த துகில்.

௧௭௦. தொழுதனள் காட்டிய - வனதேவதையைத் தொழுது உவவனத்தைக் காட்டிய; புத்தனது பாதபீடிகையுள்ள வனமாதலால் அதனைத் தொழுதனளென்றுமாம்.

௧ - ௧௭௨. மாதவியுரைத்த உரைமுன்றோன்றி மணிமேகலைக்கு ஏது நிகழ்ச்சி எதிர்ந்துளதாதலின் அக்காரிகை வெதுப்பக் கலங்கி அழித்து உருட்டி ஆட்ட மாதவி நோக்கி மாற்றிக் கொணர்வாயென்றலும் அதனைக்கேட்டுத் துயரொடுகூறும் சுதமதி, 'கண்ணீரைக் கண்டனனாயிற்காமன் நடுங்கும்; ஆடவர் அகறலுமுண்டோ; நின்றிடிற் பேடியரன்றே; அன்றியும், யான் இந்நகரத்துவருங்காரணம் கேளாய்; கொய்வேனை விஞ்சையன் எடுத்தனன்; எழுந்தனன், படுத்தனன், ஆயினேன்; அவன் ஈங்கு என்னையகன்று தன்பதிநீங்கினன்; ஆதலால், மணிமேகலை தன்மையளல்லள்; போகின், உழையோராங்குளர்; செல்லார், எய்தார்; உவவனமென்பதொன்றுண்டு; உண்டு; உண்டு; மரபினது அதுதான்; செம்மைதானிலள்; யானும் போவல்' என்று கூடிச்செல்வுழி, பின்னரும் நிற்குநரும் காண்குநரும் நிற்குநரும் நிற்குநரும் மணிமேகலையைச் சுற்றி இனைந்துக, மணிமேகலை சுதமதிதன்னொடு மலர்கொய்யப் புகுந்தனளென முடிக்க.

நான்காவது

பளிக்கறைபுக்ககாதை.

[நான்காவது மணிமேகலை உதயகுமரனைக்கண்டு பளிக்கறைபுக்கபாட்டு,]

பரிதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்
கிருள்வளைப் புண்ட மருள்படு பூம்பொழிற்
குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய
வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்
மயிலா டரங்கின் மந்திகாண் பனகாண்
மாசறத் தெளிந்த மணிநீ ரிலஞ்சிப்

க. செல்வனுடைய கதிர். கதிர்த்தானைக்கு - கிரணங்களாகிய சேனைக்கு.

ங. தும்பி குழலிசை கொளுத்திக் காட்ட - தும்பிகள் வேய்ங்குழலின் ஓசையைப் பொருத்திக்காட்ட; தும்பி - வண்டின் கிளைகளுள் ஒரு சாதி.

ங - ச. இவ்வடிகளின் பொருள், "கொம்பர்த் தும்பி.........நல்லியாழ் செய்ய" (கக : ருஎ - அ) என்று இந்நூலுட் பின்பு வந்திருத்தல் காண்க.

ரு. வெயில் நுழைபு அறியாப் பொதும்பர் - ஞாயிற்றின் கதிர் தோன்றிய காலத்தும் படுகின்றகாலத்துமுட்படச் சிறிதும் செல்லுதலறியாத இளமரக்கா; குயில் நுழை பொதும்பர் - இலை நெருக்கத்தாலே குயில்கள் நுழைந்து செல்லும் இளமரக்கா. மு. "வெயினுழைபறியாக் குயினுழை பொதும்பர்" பெரும்பாண். ஙஎச.

க - சு. பொழிலிற் காட்டச் செய்யமயில் ஆடுகின்ற பொதும்பராகிய அரங்கில் இருந்து காண்பனவாகிய மந்திகளைக் காண்பாயாக.

எ. மணிநீரிலஞ்சி - பளிங்குபோலும் நீரையுடைய பொய்கை; நீல மணிபோலும் நீரையுடைய இலஞ்சியென்றுமாம். இலஞ்சி - இலஞ்சியில்.

(பி - ம்.) க. 'பருதி' உ. 'வளைவுண்டன', 'வளைப்புண்டென மருள்படும்.' ங - ச. 'கொழுந்திக்காட்ட மழலைவரிவண்டினம்' சு. 'மந்திகாண'

பாசடைப் பரப்பிற் பன்மல ரிடைநின்
றொருதனி யோங்கிய விரைமலர்த் தாமரை
யரச வன்ன மாங்கினி திருப்பக்
கரைநின் றாலு மொருமயி றனக்குக்
கம்புட் சேவற் கனைகுரன் முழவாக்
கொம்ப ரிருங்குயில் விளிப்பது காணாய்
யியங்குதேர் வீதி யெழுதுகள் சேர்ந்து
வயங்கொளி மழுங்கிய மாதர்நின் முகம்போல்
விரைமலர்த் தாமரை கரைநின் றோங்கிய
கோடுடை தாழைக் கொழுமட லவிழ்ந்த
வால்வெண் சுண்ண மாடிய திதுகாண்
மாதர் நின்கண் போதெனச் சேர்ந்து
தாதுண் வண்டின மீதுகடி செங்கையி

---

௯. ஒரு தனி - ஒப்பிலாததனி; "ஒப்புடைய தானையு ளொரு தனியனாகி" (சீவக. ௨௮௦); "ஒருதனி நின்றாய்" (௪ : ௯௯). "விரை... ஒருதனி யிருந்த திரு" (௧௯ : ௩௩ - ௪), "உலக வறவியி னொருதனி யேறி" (௧௭ : ௮௯), "ஒருதனி...மன்னவன்" (௨௫ : ௨௦௪) என, 'ஒரு தனி' என்பது இந்நூலுள்ளே பயின்றுவருதல் காண்க.

௮ - ௯. "குளனணி தாமரைக் கொழுமலர் நாப்ப, ணொருதனி யோங்கிய திருமலர்" மணி. ௧௫ : ௭௫ - ௯.

௧௧. ஆலும் - ஆடும்; ஆரவாரித்தழைக்குமென்றுமாம்; "மால்வரைச் சிலம்பின் மகிழ்சிறந் தாலும், பீலி மஞ்ஞையின்" பெரும்பாண். ௩௩௦ - ௩௧.

௧௨. கம்புள் - சம்பங்கோழி. சேவலினது குரல் முழவொலியாக.

௧௩. கொம்பர் - கொம்பரில். இருங்குயில் - கரியகுயில். விளிப்பது - பாடுதல்; "விளியாதான் கூத்தாட்டு" (திரி. ௧௧), "விளித்த வின்னமிர்துறழ்கீதம்" (சீவக. ௧௯௪௧) என்புழி விளித்தல் இப்பொருள் பட்டு வருதல் காண்க.

௧௪. எழுகின்ற துகள். ௧௫. மாதர் - அழகையுடைய.

௧௭. சங்குடைந்தாற் போலுந் தாழையின்; சூளா. நாடு. ௧௪.

௧௮. வால்வெண்சுண்ணம் - தூய வெள்ளிய சுண்ணம்; "ஊர்தி வால்வெள் ளேறே" (புறநா. ௧.) இது - இத்தாமரைமலரினை.

௧௪ - ௮. துகள் சேர்ந்து ஒளி மழுங்கிய நின்முகம்போற் சுண்ண மாடியதாகிய இத்தாமரைமலரினைக் காண்பாயாக.

(பி - ம்.) ௯. 'இருமலர்த்' ௧௧. 'கரைநின்றாடும்' ௧௭. 'தோடுடைத்தாழைக் கொழுமடல் வீழ்ந்த'

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] பொருள் [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] பட்டார்
[illegible]
[illegible]
[illegible]

[illegible] : [illegible] பொருள். [illegible] - குறிப்பு [illegible]

[illegible]

[illegible] ; “ புகழ் [illegible] ” [illegible]

[illegible]

[illegible] ; “ [illegible] ” (புறா. [illegible]

[illegible]

காமோர் [illegible] பெருமோர் மிகற்றிப்
பாடின் மிகைவிற் ப[illegible] முரசம் [illegible]
சோலியர் [illegible] மொழிப்பின் [illegible]
[illegible] பெருஞ்செல் [illegible]
[illegible] மெருபாற் பெயரிய [illegible]
சொருபாற் படாஅ [illegible]
பாறும் பறையும் பகன்[illegible]
மாறு மாக்கரு [illegible]
[illegible]
கால [illegible] குற்றமை

௧௫. காமோர் - முதற்கோத்தளர்; "காமோர், [illegible]" ([illegible]) [illegible] - செயவெ. மேனோர் [illegible] - [illegible]; [illegible].

௧௬. பாடின் மிகைவிற் பல்முரசம் [illegible] - பாசறை [illegible] [illegible] பயமுரசத்[illegible]; [illegible] - [illegible]பட்ட புள்; பாசறை [illegible]; [illegible]. பாயிரம், ௧௦.

௧௭. சோலியர் [illegible] - [illegible]பெருக்[illegible]. [illegible] - [illegible].

௧௮. [illegible] - [illegible]. பெரு[illegible] - [illegible].

௧௯ - ௯. [illegible] ௨௦ - [illegible]

௨௦. பாறு - பா[illegible]. பறை - பறையுறப்போர்; [illegible] பறை [illegible]; [illegible], "[illegible]" ([illegible]) [illegible].

௨௧. [illegible] - [illegible]யுடையார். [illegible] - [illegible]; "[illegible]" ([illegible]) [illegible] - [illegible].

௨௨. [illegible]. [illegible] - [illegible].

௨௩. [illegible]

[illegible]

விடுபரிக் குதிரையின் விரைந்துசென் றெய்திக்
கடுங்கண் யானையின் கடாத்திற மடக்கி
மணித்தேர்த் தானையொ டரசிளங் குமரன்
மணித்தேர்க் கொடிஞ்சி கையாற் பற்றிக்
காரலர் கடம்ப னல்ல னென்ப
தாரங் கண்ணியிற் சாற்றினன் வருவோன்.

இதைசிதைந்தார்ப்ப முந்நீரில் யாங்கணும் ஓடி மயங்குகின்ற வங்கம்போலக்காமோர்மையறப் பாகன்முதலியோர் அலவுற்று விளிப்ப மூதூரில் மேலோரின்றித் துடைத்துப் பெருங்கலக்குறுத்து ஒருபாற்படாது ஒருவழித்தங்காது நிலமால்வரை படர்ந்தெனக் காலவேகம் களிமயக்குற்றதாகவென முடிக்க.

வங்கம் யானைக்கும் காற்று மதத்திற்கும் உவமை. வங்கம்போலக் காலவேகம் களிமயக்குற்றென வெனவியையும். இப்படியே, "வீங்கு பிணி நோன்கயி றரீஇயிதை புடையூக், கூம்புமுதன் முருங்க வெற்றிக் காய்சினந் திருகிய கடுங்காற் றெடுப்பக் கல்பொரு திரைஇ, நெடுஞ்சுழிப் பட்ட நாவாய் போல, விருதலைப் பணில மார்ப்பச் சினஞ்சிறந்து, கோலோர்க் கொன்று மேலோர் வீசி, மென்பிணி வன்றொடர் பேணாது காழ்சாய்த்துக், கந்துநீத் துழிதருங் கடாஅ யானையும்" (மதுரை. ௩௭௮ - ௮௩) எனவந்திருத்தல் காண்க.

௪௫. பரிக்குதிரை; பரி - செலவு; "பகைப்புலங் கவர்ந்த பாய் பரிப்புரவி" மதுரை. ௩௮௯.

௪௬. கடுங்கண் - தறுகண்மை; அது கடுகக் கொல்லுதல்; "நெடுஞ்சுழிப் பட்ட கடுங்கண் வேழத், துரவுச்சினந் தணித்து" (மலைபடு. ௩௨௫ - ௬.) கடாத்திறம் - மதத்தின் கூறுபாடுகள்.

௪௮. 'கொடிஞ்சி - தாமரைப்பூவடிவமாகப்பண்ணித் தேர்த்தட்டின் முன்னே நடுவது' என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர்; "கொடிஞ்சி நெடுந்தேர்" (மதுரை. ௭௫௨): "நெடுந்தேர்க் கொடிஞ்சி" (புறநா. ௭௭); இதுதாமரைமொட்டு வடிவமுள்ள தென்றும் கூறுவர்.

௪௯. காரலர் கடம்பன் அல்லனென்பதை - கார்காலத்து அலர்கின்ற கடம்பின் அலரால்தொடுக்கப்பட்ட மாலையையுடைய முருகக்கடவுளல்லனென்பதை; "கார்நறுங் கடம்பின்" (புறநா. ௨௩) என்பதனாற் கடம்பு கார்காலத்திற்கு உரியதென்பதும், "பராஅரை மராஅத், துருள் பூந் தண்டார் புரளு மார்பினன்" (முருகு. ௧௦ - ௧௧) என்பதனால் முருகக் கடவுள் கடப்பமாலையையுடையரென்பதும் அறியப்படும்.

௫௦. ஆரங்கண்ணி - ஆத்திமாலை; இது சோழர்களுக்குரிய அடையாளமாலை; "ஆரங் கண்ணிச் சோழன்" சிலப். பதிகம், ௧௨.

௪௯ - ௫௦. அழகாலும் ஆண்மையாலும் உதயகுமரனை முருகக் கடவுளென்றெண்ணிக் கடப்பமாலையின்மையாலும் ஆத்திமாலையுண்மையாலும் அவனைச் சோழன்மகனென்று கண்டோர்துணிந்தமையின் இவ்வாறு கூறப்பட்டது.

௫௭-௬௦. மன்னவன்சிறுவன், உதயகுமரன், அரசிளங்குமரன், சென்

னாடக மடந்தையர் நலங்கெழு வீதி
யாடகச் செய்வினை மாடத் தாங்கட்
சாளரம் பொளித்த கால்போகு பெருவழி
வீதிமருங் கியன்ற பூவணைப் பள்ளித்
தகரக் குழலா டன்னொடு மயங்கி
மகர யாழின் வான்கோடு தழீஇ
வட்டிகைச் செய்தியின் வரைந்த பாவையி
னெட்டி குமர னிருந்தோன் றன்னை
மாதர் தன்னொடு மயங்கினை யிருந்தோ

றெய்தி அடக்கிப் பற்றி அல்லனென்பதைச்சாற்றித் தானையொடு வருவோனென்க.

௰௧. நாடகமடந்தையர் - நாடகக்கணிகையரது. வீதி - வீதியில்.

௰௨. ஆடகம் - நால்வகைப் பொன்னுள் ஒன்று. செய்வினை - செய்தொழில். மாடத்தாங்கண் - மாடத்திடத்தே.

௰௩. கால்போகுபெருவழி - காற்றுச்செல்லும் பெரியவழி. கால்போகு பெருவழியாகிய பொளித்தசாளரம்.

௰௪. வீதி மருங்கு இயன்ற - வீதியின் பக்கத்தே இயற்றிய. பூ அணைப்பள்ளி - மலரணையாகிய படுக்கையில்.

௰௫. தகரம் - மயிர்ச்சாந்து. தகரக்குழலாளென்றது, ஒருகணிகையை.

௰௬. மகரயாழ் - நால்வகையாழுள் ஒன்று; அது பதினேழு நரம்புடையது. கோடு - யாழ்த்தண்டு; "அங்கோட்டுச் செறிந்த வவிழ்ந்து வீங்கு திவவு" (சிறுபாண். ௨௨௨); "கருங்கோட்டுச் சீறியாழ்" (நெடுநல். ௭௦.) தழீஇ - தழுவி.

௰௭. வட்டிகை - எழுதுகோல்; "வட்டிகைச் செய்தியும்" (௨ : ௨௭) என்றார் முன்னும்.

௰௮. எட்டி - வைசியர்பெறும் பட்டப் பெயர்; "எட்டிப் பூப்பெற் றிருமுப் பதிற்றியாண், டொட்டிய செல்வத் துயர்ந்தோ னாயினன்" (௨௨ : ௧௧௩ - ௪) என்பர் பின்னும்; "எட்டி குமர னினிதி னியக்கு, மின்னொலி வீணைப் பண்ணொலி வெரீஇ" (பெருங். ௧. ௪௦ : ௧௧௬ - ௭); "எட்டி காவிதிப் பட்டந் தாங்கி" (ஷை ௨. ௩ : ௧௪௪); "எட்டி சாயல னிருந்தோன் றனது" (சிலப். ௧௫ : ௧௬௩); "எட்டி காவிதி யென்பன தேய வழக்காகிய சிறப்புப் பெயர்" (தொல். தொகை. சூ. ௧௨) என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

௰௯. மயங்கினை இருந்தோய் - மயங்கியிருந்தோய்.

(பி - ம்.) ௰௩. 'சாளரமொழித்த', 'சாரளமொழிந்த.' ௰௫. 'தாதவிழ் குழலாள்' ௰௬. 'மாதர்வீணையின்'

யாதுநீ யுற்ற விடுக்க ணென்றலு
மாங்கது கேட்டு வீங்கிள முலையொடு
பாங்கிற் சென்று தான்றொழு தேத்தி
மட்டவி முலங்கன் மன்ன குமரற்
கெட்டி குமர னெய்திய துரைப்போன்
வகைவரிச் செப்பினுள் வைகிய மலர்போற்
றகைநலம் வாடி மலர்வனம் புகூஉ
மாதவி பயந்த மணிமே கலையொடு
கோவல னுற்ற கொடுந்துயர் தோன்ற
நெஞ்சிறை கொண்ட நீர்மையை நீக்கி
வெம்பகை நரம்பி னென்கைச் செலுத்திய

---

௬௦. இடுக்கண் - துன்பம்.

௫௦ - ௬௦. அங்ஙனம் வருவோன் வீதியில் மாடத்துப் பள்ளியிற் குழலாடன்னொடு மயங்கித் தழீஇப் பாவையினிருந்தோன்றன்னை, இருந்தோய், நீயுற்ற இடுக்கண் யாதென்றலுமென்க.

எட்டிகுமரன் வீதிமருங்கியன்ற சாளரச்சேக்கையிலிருந்தமையின் உதயகுமரன் அவனைக்கண்டான்.

௬௨. பாங்கு - முறைமை ; பக்கமெனலுமாம். தொழுது - பணிந்து.

௬௩. மட்டு - தேன். ௬௪. எய்தியது - நேர்ந்ததை.

௬௦ - ௬௪. என்றலும் அதுகேட்டு எட்டிகுமரன் கணிகையொடுஞ் சென்று தொழுது ஏத்தி மன்னகுமரற்கு உரைப்போன்.

௬௫. செப்பினுள் வைகியமலர் புழுக்கத்தால் வாடும் ; “மடைமாண் செப்பிற் றமிய வைகிய, பெய்யாப் பூவின் மெய்சா யினளே” (குறுந். ௯); “வகைவரிச் செப்பினுள் வைகிய கோதையேம்” (கலி. ௬௮ : ௧௫); பெருங். ௧. ௩௩ : ௭௮ - ஆம் அடியின் குறிப்பைப்பார்க்க.

௬௬. தகைநலம் - மிக்கவழகு.

௬௭ - ௮. பயந்த - பெற்ற. மணிமேகலையைக் கண்டவுடன் எட்டிகுமரனுக்குக் கோவலனடைந்ததுன்பம் நினைவிற்கு வந்தமையின், ‘மணிமே கலையொடு, கோவல னுற்ற கொடுந்துயர் தோன்ற’ என்றாள்; இப்படியே, “இளங்கோன் கண்ட விளம்பொற் பைங்கொடி.........உருவிலாளனொ டுருவம் பெயர்ப்ப” (௫ : ௧ - ௬) என்பர் பின்னும்.

௬௯. நெஞ்சு இறைகொண்ட நீர்மையை - மனம் தங்குதல் கொண்ட தன்மையை ; “வண்டிறை கொண்ட கமழ்பூம் பொய்கை” மதுரை. ௨௫௩.

௭௦. பகைநரம்பு - நின்றநரம்பிற்கு ஆறாவதும் மூன்றாவதுமாகிய நரம்புகள் ; “நின்ற நரம்பிற் காறு மூன்றுஞ், சென்றுபெற நிற்பது கூட மாகும்” (சிலப். ௮ : ௩௩ - ௪, உரை,மேற்.) ; கூடம் - பகை.

திருயா னுற்ற விடும்பை யென்றலும்
மருமலர்த் தாரோன் மனமகிழ் வெய்தி
யாங்கவ டன்னையென் னணித்தே ரேற்றி
யீங்கியான் வருவே னென்றவற் குரைத்தாங்
கோடுமழை கிழியு மதியம் போல
மாட வீதியின் மணித்தேர் கடைஇக்
காரணி பூம்பொழிற் கடைமுகங் குறுகவத்
தேரொலி மாதர் செவிமுத லிசைத்தலுஞ்
சித்திரா பதியோ டுதய குமரனுற்
றென்மேல் வைத்த வுள்ளத் தானென
வயந்த மாலை மாதவிக் கொருநாட்
கிளந்த மாற்றங் கேட்டே னாதலி
னாங்கவன் றேரொலி போலு மாயிழை

---

௬௪ - ௭௧. உரைப்போன் மலர்போல் நலம்வாடி வனம்புகூஉம் மணிமேகலையொடு கோவலனுற்ற துயர்தோன்ற அத்துயரம் நீர்மையை நீக்கி என் கையைப் பகைசரம்பிற் செலுத்தியது; யானுற்ற இடும்பை இதுவென்றலு மென்க.

௭௨. தாரோன் - உதயகுமரன். முனிவருடைய உறைவிடத்தை நீங்கி மலர்வனத்திற்குச் சென்ற மணிமேகலையை இனி எளிதிற் பெறலா மென்று மகிழ்ந்தான்.

௭௩. அவள்தன்னை - மணிமேகலையை.

௭௪. அவற்கு - எட்டிகுமரற்கு.

௭௫. கிழியுமதியம் - கிழிதற்குக் காரணமாகிய மதியம். மதியம் போல - சந்திரன்போல; கலைநிரம்பினமையின், உதயகுமரனுக்கு மதி உவமையாயிற்று; "நாள்வாய் நிறைந்த நகைவெண்மதி செல்வ தொத்தான்" (சீவக. ௨௫௪.) மாடங்கட்கு மழையையும், தேருக்கு மதியத்தையும் உவமையாக்கினும் பொருந்தும்.

௭௬. கடைஇ - செலுத்தி; "காலியக் கன்ன கதழ்பரி கடைஇ" மதுரை. ௪௪௦.

௭௭. கடைமுகம் - வாயிலிடம். குறுக - அடைய.

௭௮. மாதர் - மணிமேகலை. செவிமுதல் - செவியிடம்.

௭௧ - ௮. என்றலும் மகிழ்வெய்தி, 'அவளை என்தேரேற்றி இங்கு வருவேன்' என்று அவனுக்குரைத்து மதியம்போலத் தேரைக் கடைஇப் பொழிலின் கடைமுகங்குறுக, அத்தேரொலி செவிமுதலிசைத்தலு மென்க.

௮௨. கிளந்த - சொல்லிய. ௮௩. ஆயிழை : விளி.

(பி - ம்.) ௭௫. 'கிழிக்கும்'

என்னெஞ் செவிமுத லிசைத்ததென் செய்கேன்
அருளா யென்றோ ஆயிழை யுரைத்தவந்
தறமறி கேட்டுத் தனக்குறு மயில்போற்
பளிக்கறை மண்டபம் பாவையைப் புகுவென்
றொளித்தறை தாழ்கோத் துள்ளகத் திருந்து
யாங்கு தனக்கோ ரையமின் றிடக்கை
நீங்கா தின்ற நேரிழை தன்னைக்
கல்லென் குரலொடு கடுந்தேர் விருத்திப்
பன்மலர்ப் பூம்பொழிற் பகன்றனைத் தருபோற்
பூமரச் சோலையும் புடையும் பொய்கையுந்
தாமரைச் செங்கண் பரப்பினன் வருஉ
மாநிலக் குமர வருதி லொருமுறை
பொருளுரை யின்று யுற்ற மதித்தேன்

என்செய்கு - யானென்செய்வேன்.

அருளாய் என்றோ ஆயிழை - மணிமேகலை.

உதயகுமரன் என்மேல் வைத்த உள்ளத்தானென்று ... மாலை ... பயோடு முன்னொருநாள் மாதவிக்கு ... ... கேட்டேன்; அதனின், ஆயிழாய், என் செவிமுத ... அவன் நேரொளிபோலும்; இதற்கு யான் யானென்செய்வே ... மணிமேகலை யுரைத்தனளென்க.

... தனக்குறுமயில் - நாணிப்புற்ற மயில்.

மண்டபத்தில். பாவையை - மணிமேகலையை. புகுக என்று.

... - இருக்கச்செய்து.

... மரபு; “ ... ” (...), “இருந்த மன்னவற் ... பொருந்தல் செல்லாது புக்கவ ளிறைஞ்ச” (...) ... ளுநோசெல்லைடயவர், பெருங்கதை ...

... மண்டபத்திற் புகுவென்று பாவையையொளித் ... டக்கையின் ...

வளரிள வனமுலை மடந்தை மெல்லிய
றளரிடை யறியுந் தன்மையள் கொல்லோ
விளையா மழலை விளைந்து மெல்லியன்
முளையெயி றரும்பி முத்துநிரைத் தனகொல்
செங்கய னெடுங்கண் செவிமருங் கோடி
வெங்கணை நெடுவேள் வியப்புரைக் குங்கொல்
மாதவ ருறைவிட மொரீஇமணி மேகலை
தானே தமியளிங் கெய்திய துரையெனப்
பொதியறைப் பட்டோர் போன்றுளம் வருந்தி
மதுமலர்க் கூந்தற் சுதமதி யுரைக்கு
[இளமை நாணி முதுமை யெய்தி
யுரைமுடிவு காட்டிய வுரவோன் மருகற்

---

௩௯௭. மெல்லியல் - மணிமேகலை.

௩௯௮. தளரிடை - ஆடவர் காமத்தாற்றளர்ந்த சமயத்தை ; இடை-காலம் ; "உடையோர் போல விடையின்று குறுகி" புறநா. ௫௪.

௩௯௯. "விளையா மழலையின் விரித்துரை யெழுதி" சிலப். ௮: ௯௭.

௪௦௦. "முளைவளரிளநகையே முழுமதி புரைமுகமே" (சிலப். ௭ : ௧௯), "முளையிள வெண்பன் முதுக்குறை நங்கை" ஷை ௧௫: ௨௦௨.

௪௦௨. வெங்கணை - விருப்பத்தைச் செய்யும் அம்பு.

௪௦௩. மாதவர் - சங்கத்தார் ; அறவணவடிகளென்றுமாம். ஒரீஇ - நீங்கி.

௪௦௪. தமியள் - தனித்தவளாய்.

௩௯௦ - ௪௦௪. தானையொடு தேரைப் புறத்தே நிறுத்திப் பொழிலிற் பகல் முளைத்ததுபோல் வருங்குமரன், சுதமதியைக் கண்டு, 'ஒருசிறை தனி நின்றாய், உன்றிறமறிந்தேன் ; மணிமேகலை அறியுந்தன்மையள் கொல்லோ ; அவள் முளையெயிறு முத்துநிரைத்தனகொல் ; அவள்கண்கள் வேள் வியப்புரைக்குங்கொல் ; அவள் மாதவருறைவிடத்தை யொரீஇத் தமியளாய் இங்கு எய்தியதற்குக் காரணமுரை' என்று கேட்ப வென்க.

௪௦௫. பொதியறைப்பட்டோர் - துவாரமில்லாத கீழறையில்அகப்பட்டோர் ; "பொதியறைப் பட்டோர் போன்றுமெய் வருந்தி" (மணி. ௧௧ : ௮) ; "போதார் பிறவிப் பொதியறை யோரென" சிலப். ௧௦ : ௧௧௧.

௪௦௭ - ௮. இளமைநாணி முதுமையெய்தி உரைமுடிவுகாட்டிய உரவோன் - இளமைப்பருவத்தைநாணி முதுமைப்பருவத்தையடைந்து, தம்முட் பகைமைகொண்டு வந்தாரிருவருடைய சொல்லை ஆராய்ந்து அவற்றின் முடிவை அவர்களுக்கு விளக்கிய அறிவுடையோனாகிய கரிகாற்பெருவளத்தானென்னுஞ் சோழன் ; இவ்வரலாற்றை அடியில்வரும்

(பி - ம்.) ௩௯௮. 'தளர்நடையறியுந்தன்மையைகொல்லோ' ௪௦௫. 'போன்றுமெய்வருந்தி' ௪௦௮. 'மருமாற்கு'

கறிவுஞ் சால்பு மரசியல் வழக்குஞ்
செறிவளை மகளிர் செப்பலு முண்டோ
வினைய தாயினும் யானொன்று கிளப்பல்
வினைவிளங்கு தடக்கை விறலோய் கேட்டி
வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
மூப்புவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை

பழமொழி வெண்பாவாலும் அதன் உரையாலுமுணர்க; "உரைமுடிவு காணு னிளமையோ னென்ற, நரைமுது மக்க ளுவப்ப - நரைமுடித்துச், சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை, கல்லாமற் பாகம் படும்" (௨௧), என்பது — 'தம்முள் மறுதலையாயினு ரிருவர் தமக்கு முறைமைசெய்யவேண்டி வந்து சில சொன்னால் அச்சொன்முடிவு கண்டே ஆராய்ந்து முறைசெய்ய அறிவு நிரம்பாத இளமைப்பருவத்தா னென்றிகழ்ந்த நரைமுதுமக்களுவக்கும் வகை நரைமுடித்து வந்து முறைவேண்டிவந்த இரு திறத்தாரும் சொல்லிய சொற்கொண்டே ஆராய்ந்தறிந்து முறைசெய்தான் கரிகாற்பெருவளத்தானென்னுஞ் சோழன்; ஆதலால், தத்தம் குலத்துக்குத்தக்க விச்சைகள் கற்பதற்கு முன்னே செம்பாகமுளவா மென்றவாறு'; இவ்வரலாறு, "முதியோ, ரவைபுகு பொழுதிற்றம் பகைமுரண் செலவும்" (௧௮௭ - ௮) என்று பொருநராற்றுப்படையிலும் கூறப்பட்டிருக்கின்றது. உரவோன் மருகற்கு-கரிகாற்பெருவளத்தான் வழித்தோன்றலாகிய உனக்கு; மருகன்-வழித்தோன்றல்; "உலக மாண்ட வுயர்ந்தோர் மருக" மதுரை. ௨௩.

௧௦௯. சால்பு - அமைதி. அரசியல் வழக்கு - அரசநீதி.

௧௦௯ - ௧௦. ஒப்பு: மணி. ௧௮ : ௧௪௦ - ௪௧.

௧௦௫ - ௧௦. அதுகேட்டு உளம்வருந்தியுரைக்குஞ் சுதமதி மருகற்கு அறிவு முதலியவற்றை மகளிர்செப்புதலும் உளவாகுமோவென்றா ளென்க.

௧௧௧. கிளப்பல் - சொல்லுவேன். ௧௧௨. வினை - போரில்.

இனி, மணிமேகலையை அவன் விரும்பாமலிருத்தற்கு உடம்பின் தூய்து அன்மையைச் சொல்லுவாள்.

௧௧௩. வினையின்வந்தது - கன்மத்தால் வந்தது. வினைக்கு விளை வாயது - கன்மத்திற்கு விளைநிலமாகவுள்ளது.

௧௧௪. புனைவன - சந்தனம் மலர்முதலியவை.

௧௧௫. மூப்புவிளிவுடையது - முதுமையையும் சாதலையுமுடையது. தீப்பிணி யிருக்கை - கொடியநோய்களுக்கு இருப்பிடமாகவுள்ளது.

௧௧௭. அரவு அடங்கு புற்றினென இயைக்க. செற்றம் - பகைமை நெடுங்காலம் நிகழ்வதாகிய சினம். சேக்கை - தங்குமிடம்.

(பி - ம்.) ௧௧௨. 'கேணீ' ௧௧௫. 'மூத்து'

யவலக் கவலை கையா றழுங்க
றவலா வுள்ளந் தன்பா லுடையது
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய்
யென்றவ ளுரைத்த விசைபடு தீஞ்சொல்
சென்றவ னுள்ளஞ் சேரா முன்னர்ப்
பளிங்குபுறத் தெறிந்த பவளப் பாவையி
னிளங்கொடி தோன்றுமா லிளங்கோ முன்னென்.

௪.—பளிக்கறைபுக்க காதை முற்றிற்று.

---

௧௧௮. அவலம் - வருத்தந்தோன்றி நிற்றல். கவலை - யாது செய்வ லென்றல். கையாறு - மூர்ச்சித்தல். அழுங்கல் - வாய்விட்டழுதல்; இஃது அரற்றெனப்படும்.

௧௧௮ - ௯. அவலம் முதலியவைகள் நீங்காததாகிய உள்ளத்தினைத் தன்னிடத்தே உடையது.

௧௨0. யாக்கை இதுவென - யாக்கை இத்தன்மையதென்று; இது வென்றது, 'வினையின் வந்தது' என்றது முதலியவற்றை.

௧௨௧. இதனை - இவ்வுடம்பை. புறமறிப்பாராய் - புறமறியாகப் பார்ப்பாயாக; பார்ப்பின், இதன் தூய்து அன்மை விளங்குமென்றபடி; "மற்றதனைப் பைம்மறியாப் பார்க்கப் படும்" (நாலடி. ௪௨); "பைம் மறியா நோக்கப் படுந்தார்க்குந் தகைமைத்து" இறை. சூ. ௧, உரை.

௧௨௨. அவள் - சுதமதி.

௧௨௪. "பளிங்குபுறத் தெறிந்த பவளப் பாவை" (மணி. ௧௮: ௭௮); "பளிக்கறைப் பவழப் பாவை பரிசெனத் திகழுஞ் சாயல்" சீவக. ௧௧௯௨.

௧௨௫. தோன்றும் - தோன்றுகின்றாள்.

௧௨௨ - ௫. என்று அவள் உரைத்தசொல் அவனுள்ளம் சென்று சேராமுன்னர், இளங்கொடி பாவைபோல இளங்கோமுன் தோன்று மென்க.

௧ - ௧௨௫. காண்பனகாண் காணாய் காண் காண் காணெனச் சுதமதி காட்ட மணிமேகலை வனங்காண்புழி, மன்னவன்சிறுவன் உதயகுமரன் அரசிளங்குமரன் வருவோன், இருந்தோன்றன்னை, இருந்தோய், யாதென்றலும், உரைப்பேன், என்றலும், மகிழ்வெய்தி உரைத்துக் கடைஇக் குறுகத் தேரொலி இசைத்தலும் என் செய்கெனவுரைத்தலும் கேட்டு இரீஇ நின்ற நேரிழைதன்னை, நின்றாய், அறிந்தேன்; தன்மையள்கொல்லோ, நிரைத்தனகொல், உரைக்குங்கொல், உரையென, சுதமதி, செப்பலுமுண்டோ; கிளப்பல்; கேட்டி என்று உரைத்தசொல் சேராமுன்னர் இளங்கொடி தோன்றுமெனமுடிக்க.

(பி - ம்.) ௧௧௮. 'கையாற்றழுங்கல்'

ஐந்தாவது

மணிமேகலாதெய்வம்

வந்து தோன்றிய காதை.

[ஐந்தாவது மணிமேகலை உதயகுமரன்பால் உள்ளத்தாளென
மணிமேகலை தனக்கு மணிமேகலாதெய்வம்
வந்துதோன்றியபாட்டு.]

இளங்கோன் கண்ட விளம்பொற் பூங்கொடி
விளங்கொளி மேனி விண்ணவர் வியப்பப்
பொருமுகப் பளிங்கி னெழினி வீழ்த்துத்
திருவின் செய்யோ ளாடிய பாவையின்
விரைமல ரைங்கணை மீன விலோதனத்
துருவி லாளனொ டுருவம் பெயர்ப்ப

௧. இளங்கோன் - உதயகுமரன். பொற்பூங்கொடி - காமவல்லி போன்ற மணிமேகலை.

௨. விளங்கொளி மேனி விண்ணவர் - தேவர்; மணி. ௬: ௯ - ௧௦.

௩. பொருமுகப் பளிங்கின் எழினி - பளிங்காகிய பொருமுக வெழினியை; எழினி - திரைச்சீலை; பொருமுகவெழினி - மூவகைத் திரைச்சீலைகளுள் ஒன்று; "ஒருமுக வெழினியும் பொருமுக வெழினியுங், கரந்துவர லெழினியும் புரிந்துடன் வகுத்து" சிலப். ௩: ௧௦௯-௧௦.

௪. திருவின் செய்யோள் - இலக்குமி; இன்: சாரியை; "செம் மலர்த் திருவின் பாவாய்" (சீவக. ௩௧௫) என்புழிப்போல. பாவை - பதினோராடலுள் ஒன்று; அது, போர்செய்தற்குச் சமைந்த கோலத்தோடு அசுரர் மோகித்துவிழும்படி கொல்லிப்பாவைவடிவாய்த் திருமகள் ஆடியது; இதனை, "செருவெங் கோல மவுணர் நீங்கத், திருவின் செய்யோ ளாடிய பாவையும்" (சிலப். ௬ : ௬௦ - ௬௧) என்பதனாலுணர்க; "பாவை திருமக ளாடிற் றதற்குறுப், போவாம லொன்றுடனே யொன்று." பாவையின் - பாவைபோல; பாவையாடிய திருமகள்போல வெனினும் பொருந்தும்.

௫. மலரைங்கணை-மலராகிய ஐந்துபாணம். விலோதனம்-கொடி.

௬. உருவிலாளன் - அநங்கன்; 'உருவி லாளனொ டுருவம் பெயர்ப்ப' என்பதற்கு இவளுருவத்தைக் காண்பவர்களுக்கு உடனே மன்மத பாதை உண்டாகின்றதென்பது கருத்தாகக்கொள்க; மணி. ௪ : ௬௭-௮, பார்க்க.

(பி - ம்.) ௫ - ௬. 'விலோதத்துருவிலாளனுருவம்'

வோவிய னுள்ளத் துள்ளியது வியப்போன்
காவியங் கண்ணி யாகுத றெளிந்து
தாழொளி மண்டபந் தன்கையிற் றடைஇச்
சூழ்வோன் சுதமதி தன்முக நோக்கிச்
சித்திரக் கைவினை திசைதொறுஞ் செறிந்தன
வெத்திறத் தாணின் னிளங்கொடி யுரையெனக்
குருகுபெயர்க் குன்றங் கொன்றோ னன்னநின்
முருகச் செவ்வி முகந்துதன் கண்ணாற்
பருகா ளாயிற் பைந்தொடி நங்கை

க - கூ. பூங்கொடி, பாவையின் உருவிலாளன்று உருவம் பெயர்ப்ப வென்க.

எ. ஓவியன் - சித்திரமெழுதுவோன்; உள்ளியது - சித்திரம் எழுதுவதற்காக நினைந்ததை; மணிமேகலையுருவத்தைச் சித்திரமென்று கருதினனென்றவாறாயிற்று; இது, "மேவிய பளிங்கின் விருந்திற் பாவையிஃது, ஓவியச் செய்தியென் றொழிவேன் முன்னர்" (கஅ: கூகூ - எ), "ஈங்கிம் மண்ணீட் டியாரென வுணர்கேன்" (கஅ: கருகூ) எனப் பின் வருவனவற்றால் துணியப்படும். வியப்போன் - ஆச்சரிய மடைவோன்; இது பெயர்; இனி, 'ஓவியன்' என்பதற்கு உதயகுமரன் ஆச்சரியத்தால் சித்திரம் போன்றவனாய் நின்றென்றும், 'அது' என் பதற்கு அவ்வடிவத்தையென்றும் பொருள் கூறினும் பொருந்தும்.

அ. காவியங்கண்ணியாகுதல் - மணிமேகலையாதலை.

எ - அ. வியப்போன் தெளிந்தென்க.

கூ. தாழ் ஒளி மண்டபம் - தங்கிய ஒளியையுடைய பளிங்குமண்டபத்தை. தடைஇ - தடவிப்பார்த்து; மண்டபத்துள்ளே செல்லக் கருதியவன் வாயில் காணுதற்கு முயலுகின்றான்.

கஉ. எத்திறத்தாள் - என்ன இயல்பையுடையாள்; நின் இளங்கொடி எத்திறத்தா ளென்க.

க0 - கஉ. சூழ்வோன் நோக்கி உரையென.

கங. குருகுபெயர்க்குன்றம் - கிரவுஞ்சகிரி. கொன்றோன் - முருகக்கடவுள்; "குருகுபெயர்க் குன்றங் கொன்ற நெடுவேலே" (சிலப். உச: 'சரவண'), "குருகுபெயர்க் குன்றங் கொன்றோன் மடவன்" ஷை ஷை 'ஆய்வளை'

கச. முருகச்செவ்வி - இளமைப் பருவத்தினழகை.

கரு. ஆயின் - ஆராயுமிடத்து.

கச - ரு. நங்கை நின் செவ்வியைப் பருகாளென இயைக்க.

(பி - ம்.) கூ. 'தாளொலி' கக - உ. 'சிறந்தன வொத்தாணின்' கச. 'முருகற்செவ்வி' கரு. 'பருகாளாயினிப்'

ஊழ்தரு தவத்தள் சாப சரத்தி
காமற் கடந்த வாய்மைய ளென்றே
தூமலர்க் கூந்தற் சுதமதி யுரைப்பச்
சிறையு முண்டோ செழும்புனன் மிக்குழீஇ
நிறையு முண்டோ காமங் காழ்க்கொளிற்
செவ்விய ளாயினென் செவ்விய ளாகென
வவ்விய நெஞ்சமொ டகல்வோ னாயிடை
யஞ்செஞ் சாய லராந்தா ணத்துளோர்
விஞ்சைய னிட்ட விளங்கிழை யென்றே
கல்லென் பேரூர்ப் பல்லோ ருரையினை
யாங்கவ னுறைவிட நீங்கி யாயிழை
யீங்கிவ டன்னோ டெய்திய துரையென

---

௧௬. ஊழ் - முறை; பௌத்தர்களுக்கு ஊழ்வினை உடன்பாடாகலின், ஊழ்வினையால் தரப்பட்ட தவத்தையுடையளென்றுமாம். சாப சரத்தி - சாபமாகிய அம்பையுடையாள்; சாபம் - சபித்தல்; வில்லையும் அம்பையும் உடையாளென்றும் ஒருபொருள் தோன்றிற்று. தவத்தினரைச் சாபசரரென்பர் வடநூலார்.

௧௯. செழும்புனல் மிக்குழிச் சிறையுமுண்டோ - வளவியபுனல் மிக்கவிடத்து அதனைத் தாங்கும் அரணுமுண்டோ; இல்லையென்றபடி; "நீர்மிகிற் சிறையு மில்லைத் தீமிகின், மன்னுயிர் நிழற்று நிழலு மில்லை" (புறநா. ௫௧); "நீர்மிகி னில்லை சிறை" பழ. ௧௯௦.

௧௯ - ௨௦. "சிறையென்ப தில்லைச் செவ்வே செம்புனல் பெருகுமாயி, னிறையென்ப தில்லைக் காம நேர்நின்று சிறக்கு மாயின்" சூளா. கல்யாண. ௧௫௫.

௨௦. காமம் காழ் கொளின் நிறையும் உண்டோ - காமம் அடிப்படின் அதனை நிறுத்துந்தன்மையும் உளதாகுமோ; காழ் - வைரம்; நிறை - நிறுத்துந் தன்மை; "பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே" குறுந். ௧௭.

௨௨. ஒளவியம் - பிறர்க்கு இவள் உரியளாதல் கூடுமோவென்பதால் உளதாகிய பொறாமை. ஆயிடை - அப்பொழுது.

௨௩. அஞ்செஞ்சாயல்: விளி; என்றது சுதமதியை. அராந்தாணம்: மணி. ௩: ௮௭; பெருங். ௨. ௨: ௧௩௮, ௭: ௧௬௧, ௫. ௪: ௧௫௧.

௨௪. விஞ்சையன் - வித்தியாதரன்; என்றது மாருதவேகனை.

௨௫. உரையினை - சொல்லையுடையாய்.

௨௩ - ௫. அராந்தாணத்திற் சுதமதி மாருதவேகனால் இடப்பட்டாளென்பதை, "என்மக ளிருந்த விடமென் றெண்ணித், தன்னுறு துன்பந் தாங்காது புகுந்து, சமணீர் காணுஞ் சரணென் றோனை" (மணி. ௫: ௫௦ - ௫௨) என்பதனாலுமுணர்க.

௨௭. உரையென - சொல்லென்று உதயகுமரன்சொல்ல.

(பி - ம்.) ௧௬. 'தவத்தர் சாபச்சாதகி', 'தவத்தான சாபதி சாத்தி.' ௧௮. 'தூஉமலர்' ௨௦. 'காழ்கொளிற்' ௨௧. 'ஆயினின்ன செவ்வியளாக்கென' ௨௨. 'ஆயிழை'

[illegible]

[illegible]
[illegible] படகா [illegible]
[illegible] ஒடுங்கிய [illegible]
[illegible] கோட்டுர்
[illegible]
பார்ப்பன [illegible]
[illegible]
[illegible] பருந்தாத் [illegible]
[illegible]
[illegible] குமியம் பெருந்துறைப்
[illegible]
[illegible] பெருந்துறைச் [illegible]

[illegible] “[illegible]” [illegible].

[illegible]. படகா - [illegible]. [illegible] - [illegible] [illegible].

[illegible]. [illegible] கோட்டுர்.

[illegible]. [illegible] - [illegible]; “[illegible]” ([illegible]) [illegible]; “[illegible]” [illegible].

[illegible]. [illegible] - [illegible]; “[illegible] பார்ப்பன மகளிர்” [illegible].

[illegible]. [illegible], ‘[illegible]’ [illegible]; “[illegible]” ([illegible]) [illegible].

[illegible]. [illegible] - [illegible]; “[illegible]” ([illegible]) [illegible] - [illegible].

[illegible]. [illegible] - [illegible].

[illegible]

[illegible]

[illegible]

வடமொழி யாளரொடு வருவோன் கண்டீங்
கியாங்கனம் வந்தனை யென்மக ளென்றே
தாங்காக் கண்ணீ ரென்றலை யுதிர்த்தாங்
கோத லந்தணர்க் கொவ்வே னாயினுங்
காதல னாதலிற் கைவிட லீயா
னிரந்தூண் டலைக்கொண் டிந்நகர் மருங்கிற்
பரந்துபடு மனைதொறுந் திரிவோ னொருநாட்
புனிற்றுப் பாய்ந்த வயிற்றுப் புண்ணினன்
கணவிர மாலை கைக்கொண் டென்ன
நிணநீடு பெருங்குடர் கையகத் தேந்தி
யென்மக விருந்த விடமென் றெண்ணித்
தன்றுய ரான்பந் தாங்காது புகுந்து
சமணீர் காளுஞ் சரணென் றேனை
யிவணீ ரல்லவென் றென்னொடும் வெகுண்டு
மையறு படிவத்து மாதவர் புறத்தெனைக்
கையுதிர்க் கோடலிற் கண்ணிறை நீரே

---

௪0. வடமொழியாளர் - பார்ப்பார்; பார்ப்பனியை, "வடமொழி யாட்டி" (௧௩: ௭௩) என்று பின்னர்க்கூறுவர்.

௪௧. மகள்: விளிப்பெயர்.

௪௪. கைவிடலீயான் - கைவிடான்; "காவலன் மகளோ கைவிட லீயான்" (௧௧: ௩௨) என்பர் பின்னும்; "காட்டிய தாதலிற் கைவிட லீயான்" சிலப். ௧௩: ௮௫.

௪௭. புனிற்று - ஈன்ற அணிமையையுடைய பசு.

௪௮. கணவிரமாலை - அலரிமாலை; மணி. ௩: ௧0௪.

௫௨. சமணீர்காள் - சமணர்களே.

௫௩. இவணீர் அல்லை என்று - இவ்விடத்திற்குரிய தன்மையன் [illegible].

௫௪. படிவம் - தவவேடம். மாதவர் - சைனமுனிவர்.

௫௫. கையுதிர்க்கோடலின் - கையசைத்துப் போய்விடுகவென்று குறிப்பித்தலால்; "[illegible] பிலியெனக் கையுதிர்க் கோடலும்" ([illegible]) என்று பின்னும்வரும்; இவ்வழக்கம் மலைநாட்டில் மிகுதி [illegible]. கண்ணிறைநீரேம் - கண்களில் நிறைந்த நீரையுடையே[illegible]

([illegible]) [illegible]. '[illegible]மவந்தனையேமகளொன்றே' ௪௨. 'உருத் [illegible]' [illegible]. 'திரிவேனொருநாள்' ௪௭. 'வயிற்றறு' [illegible] 'கொண்டனர்' [illegible]. '[illegible]டகம்' [illegible]. 'இவ [illegible]' [illegible]. '[illegible] நிறை [illegible], மதலோ [illegible]'

மறவோ ருளீரோ வாருமி லோமெனப்
புறவோர் வீதியிற் புலம்பொடு சாற்ற
மங்குறோய் மாட மனைதொறும் புகூஉ
மங்கையிற் கொண்ட பாத்திர முடையோன்
கதிர்சுடு மமயத்துப் பனிமதி முகத்தோன்
பொன்னிற் றிகழும் பொலம்பூ வாடைய
னென்னுற் றனிரோ வென்றெமை நோக்கி
யன்புட னளைஇய வருண்மொழி யதனா
லஞ்செவி நிறைத்து நெஞ்சகங் குளிர்ப்பித்துத்
தன்கைப் பாத்திர மென்கைத் தந்தாங்
கெந்தைக் குற்ற விடும்பை நீங்க
வெடுத்தனன் றழீஇக் கடுப்பத் தலையேற்றி
மாதவ ருறைவிடங் காட்டிய மறையோன்
சாதுயர் நீக்கிய தலைவன் றவமுனி
சங்க தருமன் றானெமக் கருளிய

---

௫௬. ஆரும் இலோம் - பாதுகாப்போர் யாரையுமில்லேம்.

௫௭. புறவோர் - புறத்திலுள்ளோரது.

௫௯. பாத்திரம் - பிச்சைப்பாத்திரம். இதனைக் கோரகை யென்பர்.

௬௦. இல்லறத்தோர் எல்லாருமுண்டபின்பு, பௌத்தசந்நியாசிகள் பகலில் உச்சிப்பொழுதிற் பிச்சைக்குச்செல்ல வேண்டுவது விதியாதலின், 'கதிர்சுடு மமயத்து' என்றார். இப்படியே, "வெங்கதிரமயத்து வியன்பொழி லகவயின், வந்து தோன்றலும்" (௧௦ : ௨௭ - ௮), "வெயில்விளங் கமயத்து விளங்கித் தோன்றிய, சாது சக்கரன் றன்னையா னூட்டிய" (௧௧ : ௧௦௨ - ௩) எனப் பின்னர் வருதல் காண்க.

௬௧. மருதந்துவரில் தோய்க்கப்பட்டு மஞ்சள்நிறமுள்ளதாதலால், 'பொன்னிற் றிகழும் பொலம்பூ வாடை' எனப்பட்டது; இதனைச் சீவரமென்பர்.

௬௩. அளைஇய - கலந்த ; "அன்புடை நன்மொழி யளைஇ" (முருகு. ௨௯௨); "இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ், செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்" குறள். ௯௧.

௭௦. சங்கதருமன் : பெயர் ; புத்ததர்ம சங்கமென்னும் மூன்றனுள் சங்கத்திற்குரிய தருமத்தை அனுசரித்து நடப்பவனென்று பொருள்.

(பி - ம்.) ௫௭. 'சேர' ௬௦. 'கதிர்சூட்டமைத்து' ௬௩. 'அளைஇய ருண்மொழி' ௬௪. 'நிரைத்து......குளிர்ந்து' ௬௬. 'இடும்பைகணீங்க' ௭௦. 'தானெனக் கருளிய'

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible]

[illegible]

வருளறம் பூண்ட வொருபெரும் பூட்கையி
னறக்கதி ராழி திறப்பட வுருட்டிக்
காமற் கடந்த வாமன் பாதந்
தகைபா ராட்டுத லல்ல தியாவது

---

௭௫. காருணியத்தைப் பூண்ட ஒப்பற்ற பெரிய மேற்கோளினாலே; அருளறம், நல்லறம், காருண்யம், தயாதருமம் என்பன ஒருபொருட் சொற்கள்; இதனை, "அஹிம்ஸா பரமோதர்ம:" என்பதிற்காண்க. கீதகோவிந்தத்தில் திருமாலின் தசாவதாரத்தை எடுத்துச் சொல்லிய, "வேதா நுத்தரதே" என்னும் சுலோகத்திற் பௌத்தாவதாரத்தின் பெருமையைப்பற்றி, "காருண்யமாதந்வதே" என்று ஸ்ரீஜயதேவர் பாராட்டியிருக்கின்றனர்.

௭௪ - ௫. எய்தப் பூண்டவென்க. உயிர்ப்பன்மைகள் இன்பச் செல்வியை அடையும்படி புத்தன் அருளறம்பூண்டமையை, "உயிர்க ளெல்லாம்...நீயோ தோன்றினை நின்னடி தொழுதேன்" (௧௰ : ௭ - ௧௨), "மாறுய ரெவ்வ மக்களை நீக்கி,...குன்றக மருங்கில்" (௧௰ : ௬௨ - ௬) என இந்நூலுள்ளே பின்னர் வருவனவற்றாலுமுணர்க.

௭௬. அறக்கதிர் ஆழி திறப்பட உருட்டி - தருமசக்கரத்தை உலகத்திற் பலவகையாக உருளச்செய்து; தருமத்தைச் சக்கரமாகக் கூறியதற்கேற்ப, 'உருட்டி' என்றார். 'திறப்பட' என்றதனால், பல வகையாக அவன் தருமோபதேசஞ்செய்தமை கூறியவாறாயிற்று. இது பற்றியே புத்தனைத் தருமசக்கரப் பிரவர்த்தனாசாரியனென்பர்; "ஆதி முதல்வ னறவாழி யாள்வோன்" (௧௰ : ௬௧) என்பர் பின்னும்; "அரு ளாழி நயந்தோய்நீ, யறவாழி பயந்தோய்நீ, மருளாழி துரந்தோய்நீ, மறையாழு புரந்தோய்நீ" வீர. யாப்பு. ௧௧, உதாரணம்.

௭௭. காமற்கடந்த - மாரனைவென்ற; மாரன் - தர்மவிரோதிகளான இச்சைகளை மனத்தில் உண்டாக்கும் ஒருதேவன்; மகாபோதி விருட்சத்தின்கீழே தவவொழுக்கம்பூண்டு நோற்றிருக்கையில் இவனாற் செய்யப்பட்ட இடையூறுகளையெல்லாம் வென்றுமேம்பட்டு விளங்கினமையால், புத்தனை, 'காமற் கடந்த வாமன்' என்றார்; "மாரனை வெல்லும் வீர நின்னடி" (௧௧ : ௬௧), "போதி... .....மாரனை வென்று வீரனாகி" (௩௰ : ௧௰ - ௧௧) எனப் பின்னர் வருதல்காண்க. 'மாரன்' என்பதற்குப்பொருள் மன்மதனன்றென்பது பௌத்தசமய மரபாதலால், இந்நூலிற் காமனென்று வருமிடமெல்லாம் மாரனென்று பொருள்கொள்க. வாமன் - புத்தன்; அழகுள்ளவனென்று பொருள். பாதம் - பாதத்தை.

௭௰ - ௭௨. அருளிய பாதம்.

௭௮. தகை பாராட்டுதல் என்பன, ஒரு சொன்னீரவாய்த் துதித்தலென்ற பொருளில்வந்தன. யாவதும் - சிறிதும்.

(பி - ம்.) ௭௫ - ௬. 'பூட்கை, யறக்கதிர்' ௭௮. 'அல்லதை யாவதும்'

மிகைநா வில்லேன் வேந்தே வாழ்கென
வஞ்சொ லாயிழை நின்றிற மறிந்தேன்
வஞ்சி நுண்ணிடை மணிமே கலைதனைச்
சித்திரா பதியாற் சேர்தலு முண்டென
றப்பொழி லாங்கவ னயர்ந்து போயபின்
பளிக்கறை திறந்து பனிமதி முகத்துக்
களிக்கயல் பிறழாக் காட்சிய ளாகிக்
கற்புத் தானில ளற்றவ வுணர்விலள்
வருணக் காப்பிலள் பொருள்விலை யாட்டியென்
றிகழ்ந்தன னாகி நயந்தோ னென்னாது
புதுவோன் பின்றைப் போனதென் னெஞ்ச
மிதுவோ வன்னாய் காமத் தியற்கை
யிதுவே யாயிற் கெடுகதன் றிறமென
மதுமலர்க் குழலாண் மணிமே கலைதான்
சுதமதி தன்னொடு நின்ற வெல்லையு
ளிந்திர கோடணை விழாவணி விரும்பி

எகூ. மிகைநா - மிகைக்கின்ற நா; மிகைத்தல் - வேறுபொருள்களைச் சொல்லுதல்; "காமனை வென்றோ னாயிரத் தெட்டு, நாம மல்லது நவிலா தென்னா" சிலப். க0 : ககூரு - எ.

அ0. நின்றிறம் - நின்வரலாறு.

அரு. அப்பொழில் - அப்பொழிலில். அயர்ந்து - தன்னைமறந்து; விரும்பியென்றுமாம்; மணி. ௫ : கஉரு.

அ௫. களிக்கயலென்றது கண்களை.

அஎ. வருணக்காப்பு - வருணத்திற்கேற்ற காவல்; வருணமாகிய காவலென்றுமாம். பொருள் விலையாட்டி - விலைமாது.

அஅ. நயந்தோன் - விரும்பினேன்.

கூக. தன்னென்றது, காமத்தை.

கூச. இந்திர கோடணை விழா (இந்திர கோடணையாகிய விழா) - இந்திரவிழா. பலவகைப்பட்ட முழக்கங்களையுமுடைமையின் விழா, கோடணை யெனப்பட்டது; கோடணை - முழக்கம்; அலங்காரமென்றுங் கூறுவர்; "இந்திர கோடணை யிந்நகர்க் காண, வந்தேன்", "இந்திர கோடணை விழவணி வருநாள்" மணி. எ : கஎ - அ, கஎ : சுகூ.

(பி - ம்.) எகூ. 'நாவில்லவென வேந்தே' அச. 'பகர்மதிமுகத்து' அசு. 'நற்றவப்புணர்விலள்' அஎ. 'வருளக் காப்பிளம் பொருண்முலையாட்டி' அகூ. 'பின்னர்ப்போன' கூக. 'கெடுகெவிதன்றிறமென'

வந்து காண்குறூஉ மணிமே கலாதெய்வம்
பதியகத் துறையுமோர் பைந்தொடி யாகி
மணியறைப் பீடிகை வலங்கொண் டோங்கிப்
புலவன் றீர்த்தன் புண்ணியன் புராண
னுலக நோன்பி னுயர்ந்தோ யென்கோ
குற்றங் கெடுத்தோய் செற்றஞ் செறுத்தோய்
முற்ற வுணர்ந்த முதல்வா வென்கோ
காமற் கடந்தோ யேம மாயோய்
தீநெறிக் கடும்பகை கடிந்தோ யென்கோ
வாயிர வாரத் தாழியந் திருந்தடி
நாவா யிரமிலே னேத்துவ தெவனென்
றெரிமணிப் பூங்கொடி யிருநில மருங்குவந்
தொருதனி திரிவதொத் தோதியி னொதுங்கி
நிலவரை யிறந்தோர் முடங்குநா நீட்டும்

கூசா. மூ. மணி. சா: க௩. ஓர் பைந்தொடியாகி - ஒரு பெண்வடிவு கொண்டு.

கூஎ. மணியறைப் பீடிகை - பளிக்கறையிலுள்ள பாதபீடத்தை.

கூகூ. உலகநோன்பு: மணி. ரு: எஉ.

க00. குற்றம் - காமவெகுளி மயக்கங்கள்; "யாமே னுரைத்த பொருள்கட் கெல்லாங், காமம் வெகுளி மயக்கங் காரணம்" (௩0: உருஉ - ௩) என்று பின்னர்க் கூறுவர்; "பூமகனே முதலாகப் புகுந்தமர ரெண்டிசையுந், தூமலரா லடிமலரைத் தொழுதிரந்து வினவியநாட், காமமுங் கடுஞ்சினமுங் கழிப்பரிய மயக்கமுமாய்த், தீமைசால் கட்டினுக் குத் திறற்கருவி யாய்க்கிடந்து நாமஞ்சார் நமர்களுக்கு நயப்படுமா றினி துரைத்துச், சேமஞ்சார் நன்னெறிக்குச் செல்லுமா றருளினையே" வீர. யாப்பு. கக, மேற்.

க0க. முற்றவுணர்ந்த முதல்வர் - சர்வஜ்ஞர்.

க0உ. ஏமமாயோய் - பாதுகாவலாக உள்ளோய்; ஏமம் - இன்பமுமாம்.

க0௩. தீநெறியாகிய கடும்பகை; தீநெறி - கெட்டவழி.

க0ச. இவனுடைய பாதத்தில் ஸகஸ்ராரசக்கரரேகையுண்டென்பர்.

க0ரு. ஏத்துவது எவன் - துதிப்பது எத்தன்மையது; என்னுவில் அடங்குவதன்று என்றபடி; மணி. கக: எச - உ.

க0எ. ஓதியின் - மெய்ஞ்ஞானத்துடன்.

க0அ. நிலவரை இறந்து - நிலவெல்லையைக் கடந்து. ஓர்: இடைச்சொல். நீட்டும் - நீட்டுகின்றாள்; சொல்லுகின்றாளென்றபடி.

(பி - ம்.) கூரு. 'மணிமேகலைதான்' கூகூ. 'உலவாநோன்பின்' க00. 'குற்றங்கடிந்தோய்' க0௩. 'கடந்தோயென்கோ' க0ச. 'நாமத்தாழியன் றிருந்தபடி' க0ரு. 'நாவாயிரமிலமேத்தவல்தெவ னென' க0எ. 'திரிவதொத்தியினொதுங்கி', 'திரிவதோதியினேதி.' க0அ. 'முடங்குணநீட்டும்'

புலவரை யிறந்த புகாரெனும் பூங்கொடி
பன்மலர் சிறந்த நன்னீ ரகழிப்
புள்ளொலி சிறந்த தெள்ளரிச் சிலம்படி
ஞாயி லிஞ்சி நகைமணி மேகலை
வாயின் மருங் கியன்ற வான்பணைத் தோளி
தருநிலை வச்சிர மெனவிரு கோட்ட
மெதிரெதி ரோங்கிய கதிரிள வனமுலை
யார்புனை வேந்தற்குப் பேரள வியற்றி
யூழி யெண்ணி நீடுநின் றோங்கிய
வொருபெருங் கோயிற் றிருமுக வாட்டி
[குணதிசை மருங்கி னாண்முதிர் மதியமுங்
குடதிசை மருங்கிற் சென்றுவீழ் கதிரும்
வெள்ளிவெண் டோட்டொடு பொற்றோ டாக
வெள்ளறு திருமுகம் பொலியப் பெய்தலு

இனி, நிலவெல்லையைக் கடந்தோராகிய தேவர்தலைகுனிவதற்குக்காரணமாகிய தனது நாவை நீட்டுகின்றாளென்றுமாம்.

க0கூ. புலவரையிறந்த - அறிவின் எல்லையைக் கடந்த; "புலவரை யிறந்தோய் போகுதல் பொறேஎன்" (சிலப். உஅ: களச.) புகார் - காவிரிப்பூம்பட்டினம்.

ககஉ. ஞாயில் - மதிலுறுப்புக்களில் ஒன்று; அஃது, எப்புழைக்கு நடுவாய் எய்து மறையுஞ் சூட்டென்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர் (சீவக. க0ரு); குருவித்தலையென்பர் அடியார்க்குநல்லார் (சிலப். கரு: உகஎ.) இஞ்சி - மதில்.

ககங. பணை - மூங்கில்; இது தோரணகம்பமெனப்படும்.

கக0 - கங. அகழியாகிய அடியினையும், இஞ்சியாகிய மேகலையையும், பணையாகிய தோளினையுமுடையாள்.

ககச. தருநிலை - கற்பகதரு நிற்குங்கோயில்; வச்சிர (நிலை) - வச்சிராயுதம் நிற்குங்கோயில்.

ககசு. வேந்தன் - சோழன். "பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து" நெடுநல். எஅ.

ககச - அ. இருகோட்டமாகிய கொங்கைகளையும், சோழன் கோயிலாகிய திருமுகத்தையுமுடையாள்.

கககூ. குணதிசை - கீழ்த்திசை. கஉக. தோடு - காதணிவிசேடம்.

கஉஉ. எள்ளறு - இகழ்ச்சியற்ற. பெய்தலும் - அணிந்துகொள்ளவும்.

(பி - ம்.) கக0. 'நன்மலர் துறந்த' ககஉ. 'மனமணிமேகலை' ககசு. 'நெடுநகர்க்கு' ககஎ. 'நீடுகின்று' கககூ. 'குணறிசை'

மன்னச் சேவ லயர்ந்துவிளை யாடிய
தன்னுறு பெடையைத் தாமரை யடக்கப்
பூம்பொதி சிதையக் கிழித்துப் பெடைகொண்
டோங்கிருந் தெங்கி னுயர்மட லேற
வன்றிற் பேடை யரிக்குர லழைஇச்
சென்றுவீழ் பொழுது சேவற் கிசைப்பப்
பவளச் செங்காற் பறவைக் கானத்துக்
குவளை மேய்ந்த குடக்கட் சேதா
முலைபொழி தீம்பா லெழுதுக ளவிப்பக்
கன்றுநினை குரல மன்றுவழிப் படர
வந்தி யந்தணர் செந்தீப் பேணப்
பைந்தொடி மகளிர் பலர்விளக் கெடுப்ப
யாழோர் மருதத் தின்னரம் புளரக்
கோவலர் முல்லைக் குழன்மேற் கொள்ள
வமரக மருங்கிற் கணவனை யிழந்து

கககூ - உஉ. மதியமும் கதிரும் முறையே வெள்ளித்தோடும் பொற்றோடுமாகத் திருமுகத்திற்பெய்தலும்.

க0கூ - உஉ. பூங்கொடி தோளி முகவாட்டி அவள், திருமுகம் பொலியப் பெய்தலும் ; சூரியன் அத்தமிக்கவுமென்றபடி.

கஉங. அயர்ந்து - மெய்ம்மறந்து; விரும்பியென்றுமாம்.

கஉங - சு. அன்னச்சேவல் பெடைகொண்டு தெங்கின் மடலேற.

கஉஎ. அரிக்குரல் - மெல்லிய குரலால். அழைஇ - அழைத்து.

கஉஎ - அ. பேடை, அழைஇப் பொழுதைச் சேவற்கு இசைப்ப.

கஉகூ. செங்காற் பறவை - அன்னப்புள். கானமென்றூர் மிகுதி பற்றி.

கநo. சேதா - செவ்விய பசு. கநஉ. குரல - குரலவாய்.

கநo - நஉ. சேதா பால் துகளையவிப்பக் குரலவாய்ப் படர ; "ஆன்கணங், கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதர" (குறிஞ்சி. உகஎ - அ) ; "கறவைதம் பதிவயிற், கன்றமர் விருப்பொடு மன்றுநிறை புகுதர" (கலி. கககூ) ; "மதவுநடை நல்லான், வீங்குமாண் செருத்த தீம்பால் பிலிற்றக், கன்றுபயிர் குரல மன்றுநிறைபுகுதரு, மாலையும்" அகநா. கச.

கநசு. முல்லை - முல்லைப்பண் ; "குழல்வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு, மழலைத் தும்பி வாய்வைத் தூத" சிலப். ச : கரு - சு.

கநஎ. அமரகம் - போர்க்களம்.

(பி - ம்.) கஉரு. 'பூம்பொறிசிதையக்' கஉசு - எ. 'எறி, யன்றிற் பேடை யரிகுரலளைஇ' கநஉ. 'குரன்மன்று' கநசு. 'முல்லை குழன் மேல்வைப்ப'

தமரகம் புகூஉ மொருமகள் போலக்
கதிராற்றுப் படுத்த முதிராத் துன்பமொ
டந்தி யென்னும் பசலைமெய் யாட்டி
வந்திறுத் தனளான் மாநகர் மருங்கென்.

ரு.—மணிமேகலாதெய்வம் வந்துதோன்றியகாதை முற்றிற்று.

கஙஅ. தமரகம் - தம்மவர்களிடம்.

கஙகூ. கதிராற்றுப்படுத்த - சூரியனைப்போக்கிய.

கசo. அந்திப்பொழுதாகிய மங்கை. பசலை மெய்யாட்டியென்றார், கணவனைப் பிரிந்தாளென்பது புலப்பட.

கசக. இறுத்தனள் - தங்கினள்.

கசo - சக. பசலை மெய்யாட்டி மாநகர்மருங்கு வந்திறுத்தனள்.

க - கசக. இளம்பொற்பூங்கொடி உருவம் பெயர்ப்ப, சூழ்வோன் சுதமதி முகநோக்கி உரையென, உரைப்ப, அகல்வோன் எய்தியது உரையென, கேட்டருள்; சங்கதருமனருளிய வாமன்பாதத்தைப் பாராட்டுதலல்லது மிகைநாவில்லேனென, அவன் போயபின், மணிமேகலை சுதமதியொடு நின்ற வெல்லையுள், மணிமேகலாதெய்வம், பைந்தொடியாகிப் பீடிகையை வலங்கொண்டு ஓங்கி ஒதுங்கி நாநீட்டும்; நீட்டப் புகாரெனும் பூங்கொடி பெய்தலும், பசலைமெய்யாட்டி முதிராத் துன்பமொடு நகர்மருங்கு வந்திறுத்தனளென்று முடிக்க.

ஆறுவது

சக்கரவாளக்கோட்டமுரைத்தகாதை.

[ஆறுவது மணிமேகலைதனக்கு
மணிமேகலாதெய்வம் சக்கரவாளக்கோட்டமுரைத்து
அவளை மணிபல்லவத்துக் கொண்டுபோனபாட்டு.]

அந்தி மாலை நீங்கிய பின்னர்
வந்து தோன்றிய மலர்கதிர் மண்டிலஞ்
சான்றோர் தங்க ணெய்திய குற்றந்

உ. மலர்கதிர் மண்டிலம் - சந்திரமண்டிலம்.

ங. சான்றோர் - உயர்ந்த குடியிற்பிறந்த மேன்மக்கள். எய்திய - உண்டாகிய.

(பி - ம்.) கசo. 'பூட்டி' உ. 'மண்டலம்'

தோன்றுவழி விளங்குந் தோற்றம் போல
மாசறு விசும்பின் மறுநிறங் கிளர
வாசற விளங்கிய வந்தீந் தண்கதிர்
வெள்ளிவெண் குடத்துப் பால்சொரி வதுபோற்
கள்ளவிழ் பூம்பொழி லிடையிடைச் சொரிய
வுருவு கொண்ட மின்னே போலத்
திருவி லிட்டுத் திகழ்தரு மேனிய
ளாதி முதல்வ னறவாழி யாள்வோன்
பாத பீடிகை பணிந்தன ளேத்திப்
பதியகத் துறையுமோர் பைந்தொடி யாகிச்

---

௪. தோன்றுவழி - தோன்றுமிடத்து.

௫. மாசு - குற்றம். விசும்பு - ஆகாயம். மறு - களங்கம். நிறம் கிளர - நிறம் விளங்கித் தோன்ற; நிறம் - மார்பிலென்றுமாம்.

௩ - ௫. சந்திரனிடத்துள்ள தூய்மையாலும், தான் அதற்கு மாறாக இருத்தலாலும், களங்கம், சான்றோரிடத்துண்டாகிய குற்றம்போல்விளங்கித் தோன்றியதென்பதாம்; இது, "குடிப்பிறந்தார்" (௯௫௭) என்னுங் குறளின் கருத்தை ஒருவாறு தழுவி, ஆண்டுள்ள பொருளையும் உவமத்தையும் முறையே உவமமாகவும் பொருளாகவும் பெற்றுவந்தமை காண்க; "அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந், திங்களுஞ் சான்றோரு மொப்பர்" நாலடி. ௧௫௧.

௬. ஆசு - குற்றம். தண்கதிர் - நிலாவை.

௭. சந்திரனுக்கு வெள்ளிக்குடமும், நிலாவிற்குப் பாலும் உவமை.

௨ - ௮. மண்டிலம் மறுநிறங்கிளரப் பால்சொரிவதுபோல் தண்கதிரை இடையிடையே சொரியாநிற்க.

௯. இல்பொருளுவமம்.

௰. இந்திரவில்லைப்போல ஒளிவிட்டு அழகைத்தருகின்ற திருமேனியையுடையளாய்; "திருவி லிட்டுத் திகழ்தரு மேனியன்" (சிலப். ௧௫: ௧௫௬.) இந்திரவில் இன்னவாறு தோன்றுமெனப் புலப்படாமையினால், அங்ஙனம் தோன்றுகின்ற தெய்வங்கட்கு அஃது உவமமாயிற்று; "மற்றவன் றேவ னாகி வானிடு சிலையிற் றோன்றி" (சீவக. ௯௫௧); "வானிடு வில்லின் வரவறியா வாய்மையாற், கானிலந் தோயாக் கடவுளை" நாலடி. கடவுள்.

௧௧. மூ. மணி. ௰: ௬௧. அறவாழியாள்வோன் - புத்தன்.

௧௨. பாதபீடிகை - உவவனத்திற் பளிக்கறையிலுள்ள பாதபீடம். பணிந்தனளேத்தி - பணிந்தேத்தி.

௧௩. மூ. மணி. ௫: ௯௬.

(பி - ம்.) ௪. 'விளக்கும்' ௭. 'குடத்திற்பால்' ௮. 'பூம்பொழிலிடையே சொரிய' ௯ - ௰. 'உருவுகண்டமின்னே போன்று, திரு'

வஞ்ச விஞ்ஞையன் மாருத வேகனு
மஞ்செஞ் சாய லியல லல்லது
நெடுநகர் மருங்கி னுள்ளோ ரெல்லாஞ்
சுடுகாட்டுக் கோட்ட மென்றல துரையார்
சக்கர வாளக் கோட்ட மஃதென
மிக்கோய் கூறிய வுரைப்பொரு ளறியே
னீங்கிதன் காரண மென்னை யோவென
வாங்கதன் காரண மறியக் கூறுவன்
மாதவி மகளொடு வல்லிருள் வருநர்
நீகே ளென்றே சேரிழை கூறுமிந்
நாமப் பேரூர் தன்னொடு தோன்றிய
வீமப் புறங்கா டிந்நக ரயல
தூரா நற்றே ரோவியப் படுத்துத்
தேவர் புகுதரூஉஞ் செழுங்கொடி வாயிலு
நெல்லுங் கரும்பு நீருஞ் சோலையு
நல்வழி யெழுதிய நலங்கிளர் வாயிலும்
வெள்ளி வெண்சுதை யிழுகிய மாடத்
துள்ளுரு வெழுதா வெள்ளிடை வாயிலு
மடித்த செவ்வாய்க் கடுத்த நோக்கிற்
றொடுத்த பாசத்துப் பிடித்த சூலத்து

---

௧௬. அஃது சக்கரவாளக்கோட்டமென்று.

௧௮. என்னையோவென - யாதென்று குதமறி கேட்ப.

௧௯. கூறுவல் - கூறுவேன்.

௨௦-௧. மாதவிமகளொடு நீ கேள். சேரிழை - மணிமேகலா தெய்வம்.

௨௩. ஈமப்புறங்காடு - மயானம்; ஈமம் - பிணஞ்சுடுதற்கு அடுக்கும் விறகடுக்கு; "எரிபுற விறகி னீம வொள்ளழல்" (புறநா. ௨௩௧.) இதன் - இந்த உவவனத்தின். புறங்காடு இதன் அயலிடத்துள்ளது.

௨௪. ஊராநற்றேர் - விமானம். ஓவியப்படுத்து - சித்திரம்போல ஆகாயத்தே நிற்கும்படி செய்து.

௨௮. வெள்ளிவெண்சுதை - மிக்க வெண்மையையுடைய சுண்ணச் சாந்து. இழுகிய - பூசிய.

௨௯. உரு - வடிவங்கள். வெள்ளிடை - வெளியான இடம்.

௩௦. கடுத்தநோக்கு - கோபித்துப்பார்த்த பார்வை.

௩௧. தொடுத்த பாசம் - பிறரைக் கட்டிய கயிறு; மணி. ௧: ௨௧.

(பி-ம்.) ௧௩. 'சாயலும்' ௧௬. 'கோட்டமீதென' ௧௮. 'என்கொலோவென' ௨௩. 'ஈமப்பெருங்காடு' ௨௪. 'ஓவியகப் படுத்து' ௨௭. 'நல்வழி யொழுகியசலத்' ௨௮. 'எழுதியமாடத்'

நெடுநிலை மண்ணீடு நின்ற வாயிலும்
நாற்பெரு வாயிலும் பாற்பட் டோங்கிய
காப்புடை யிஞ்சிக் கடிவழங் காரிடை
யுலையா வுள்ளமோ டுயிர்க்கட னிறுத்தோர்
தலைதூங்கு நெடுமரந் தாழ்ந்துபுறஞ் சுற்றிப்
பீடிகை யோங்கிய பெரும்பலி முன்றிற்

---

௪௭. நெடுநிலை மண்ணீடு - நீண்ட தோற்றத்தையுடைய பூத வடிவம்; என்றது மயானத்தைப் பாதுகாப்பதொரு தெய்வவிசேட வடிவமென்பர். மண்ணீடென்பதற்குச் சுதையாற் செய்யப்பட்ட பாவையென்று பொருள்; "பாங்குற மண்ணீட்டிற் பண்புற வகுத்து" (௬: ௨௦௦), "ஈங்கிம் மண்ணீட் டியாரென வுணர்கேன்" (௧௮: ௧௫௬) என இந்நூலுள்ளும், "கண்ணுள் வினைஞரு மண்ணீட் டாளரும்" (௫ : ௩௦) எனச் சிலப்பதிகாரத்துள்ளும் வருதல் காண்க. மண் - சுதை; "மண்மாண் புனைபாவை யற்று", "மண்ணோ டியைந்த மரத்தனையர்" குறள். ௪௦௭, ௫௭௬.

௪௮. நாற்பெருவாயிலும் - செழுங்கொடிவாயிலும் நலங்கிளர்வாயிலும் வெள்ளிடைவாயிலும் நின்றவாயிலுமாகிய நான்கு பெரியவாயிலும். பாற்பட்டு - பகுதிப்பட்டு.

௪௯. காப்பு - காவல். கடி வழங்கு ஆரிடை - பேய்கள் உலவுகின்ற அரிய இடம்; என்றது மயானத்தை.

௪௮ - ௯. ஓங்கிய ஆரிடையென்க.

௫௦. உலையாவுள்ளமோடு - தளராத உள்ளத்தோடு. உயிர்க்கடனிறுத்தோர் - உயிராகிய கடனைக்கொடுத்தோர்; உயிர்க்கடனிறுத்தலை, சிலப். ௫: ௮௭ - ௮ - ஆம் அடிகளின் உரையிற்காண்க. இவர்களை, மயானவாசினியது மந்திரசாதகரான பைரவவேஷதாரிகளென்றும், காபாலிகமதத்தினரென்றும் கூறுவர்; இஃது அவிப்பலியெனப்படும்; "சிரந்தெரிந்தன வறிந்தரிந்துகுவை செய்த பைரவர்கள் செந்நிலம், பரந்தெ ரிந்துபொடி செய்ய மற்றவை பரிக்க வந்தவர் சிரிப்பரே" தக்க. ௫௧.

௫௧. தலைதூங்குநெடுமரம் - உயிர்க்கடனிறுத்தோருடைய தலைகள் தொங்கப் பெற்ற நீண்ட மரங்கள். பலிகொடுப்போர் சிகையை மரத்தில் முடிந்துவிட்டுத் தலையையரிந்து தூர்க்கைக்குப் பலிகொடுத்தல் மரபாதலால் இங்ஙனங்கூறினர்; "வீங்குதலை நெடுங்கழையின் மிசைதோறுந் திசைதோறும் விழித்து நின்று, தூங்குதலை சிரிப்பன கண் டிறங்குதலை மறந்திருக்குஞ் சுடர்க்கட் சூர்ப்பேய்" (கலிங்க. கோயில். ௨௧.) இதுபோன்ற ஒழுக்கம், வடநூலில் தசகுமார சரிதத்தில் உபகாரவர்மாவின் சைசவவிருத்தாந்தத்திற் சொல்லப்பட்டுள்ளதென்பர்.

௫௨. பீடிகை - பீடம். பெரும்பலிபீடிகையோங்கிய முன்றிலென்க.

(பி - ம்.) ௪௭. 'நெடுநிலைநிறைமண்ணீடுநின்றவாயிலும்' ௪௯. 'கடிவழங்கா' ௫௦ - ௫௧. 'உயிர்க்கடவதொர்தலைதாங்கு'

காடமர் செல்வி கழிபெருங் கோட்டமு
மருந்தவர்க் காயினு மரசர்க் காயினு
மொருங்குடன் மாய்ந்த பெண்டிர்க் காயினு
நால்வேறு வருணப் பால்வேறு காட்டி
யிறந்தோர் மருங்கிற் சிறந்தோர் செய்த
குறியவு நெடியவுங் குன்றுகண் டன்ன
சுடுமண் ணோங்கிய நெடுநிலைக் கோட்டமு
மருந்திறற் கடவுட் டிருந்துபலிக் கந்தமு
நிறைக்கற் றெற்றியு மிறைக்களச் சந்தியுந்

---

௫௩. காடமர்செல்வி - துர்க்காதேவி; சண்டிகை யென்றுங் கூறுவர் (மணி. கஅ : க௧௫); கானநாடியென்பர் (தக்க. ௫௪, அ0.) கோட்டம் - கோயில். "கோளி யாலமுங் கோழரை மரங்களுங் குழுமித், தூளி யார்த்தெழு சுடலையு முடலமுந் துவன்றி, மீளி யாக்கைய தாக்கியுண் பேய்க்கண மிகைசூழ், கூளி தாய்க்கென வாக்கிய கோட்ட மொன் றுளதே" என்னும் நீலகேசிச் செய்யுளாலும் பரணிச் செய்யுள்களாலும் மயானத்தில் துர்க்கையாலயம் இருந்ததாகத் தெரிகின்றது.

௫0 - ௫௩. இறுத்தோருடைய தலைகள் தூங்குகின்ற மரங்களாற் சுற்றப்பட்டுப் பலிபீடிகை ஓங்கிய முன்றிலையுடைய கோட்டம்.

௫௫. ஒருங்குடன்மாய்ந்த பெண்டிர்-கணவனுடன் இறந்தமகளிர்.

௫௪ - ௫. ஆயினும் : ஓர் எண்ணிடைச்சொல்; "பொதியி லாயினு மிமய மாயினும்,..................புகாரே யாயினும்" (சிலப். க : க௪ - ௬) என்புழிப்போல.

௫௬. நால்வேறுவருணம் - அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்.

௫எ. இறந்தோர்மருங்கில்-இறந்தவருடம்பைப் புதைத்தவிடத்தே.

௫அ. குறியவும்நெடியவுமாகிய சிறிய மலைகளைக் கண்டாலொத்த; சிலப். உஎ : க௫௩.

௫௯. சுடுமண் - செங்கல். கோட்டம் - அறை; "ஈமப் புறங்காட், டரசர்க் கமைந்தன வாயிரங் கோட்டம்" (௬ : க௬௫ - ௬) என்பர் பின்னும்.

௫அ - ௯. கண்டன்ன கோட்டம்.

௬0. பெறுதற்கரிய திறலையுடைய தெய்வங்களையுடைய, திருந்திய பலியிடுதற்குரிய தூண்கள். கந்தம் : ஸ்கந்தமென்னும் வடமொழிச் சிதைவு; "இலகொளிக் கந்தமும்" (மணி. உ௪ : க௬உ); "கலிகெழு கடவுள் கந்தங் கைவிட" புறநா. ௫உ.

௬க. நிறைக்கற்றெற்றி - நிறுத்திய கல்லாலாகியதிண்ணை. மிறைக்களச்சந்தி - வளைந்த இடத்தினையுடைய பலவழிகளுங் கூடினசந்து; மிறை - வளைவு; "மிறைக்கொளி திருத்தி னானே" சீவக. உஅ௪.

(பி - ம்.) ௫௫. 'பெண்டீர்க்' ௫௯. 'சுடுமணோங்கிய' ௬க. 'நிறை கற் றெற்றிபு மிறைகளச்'

தண்டு மண்டையும் பிடித்துக் காவல
ருண்டுகண் படுக்கு முறையுட் குடிகையுந்
தூமக் கொடியுஞ் சுடர்த்தோ ரணங்களு
மீமப் பந்தரு மியாங்கணும் பரந்து
சுடுவோ ரிடுவோர் தொடுகுழிப் படுப்போர்
தாழ்வயி னடைப்போர் தாழியிற் கவிப்போ
ரிரவும் பகலு மிளிவுடன் றரியாது
வருவோர் பெயர்வோர் மாறாச் சும்மையு
மெஞ்சியோர் மருங்கி னீமஞ் சாற்றி

---

௬௨. மண்டை - உண்ணுதற்குரிய ஒருவகை மண்கலம்; ஏற்கும் பாத்திரமென்றுங்கூறுவர்; "கவிழ்த்த மண்டை மலர்க்குநர் யாரென", "பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்", "ஏலாது கவிழ்ந்தவெ னிரவன் மண்டை" (புறநா. ௧௦௩, ௧௧௫, ௧௭௯.) காவலர் - மயானங்காப்போர்.

௬௩. குடிகை - பர்ணசாலை; 'குடிகா' என்னும் வடமொழிச் சிதைவென்பர்; இஃது இக்காலத்துக் குடிசையென வழங்குகின்றது.

௬௪. தூமக்கொடி - புகையொழுங்கு; "மீன்சுடு புகையிற் புலவு நாறு நெடுங்கொடி" புறநா. ௫௨.

௫௩ - ௬௫. கழிபெருங்கோட்டமும், நெடுநிலைக் கோட்டமும், பலிக்கந்தமும், தெற்றியும், சந்தியும், குடிகையும், கொடியும், தோரணங்களும், பந்தரும் யாங்கணும் பரந்தென்க.

௬௬. சுடுவோர் - பிணங்களைச்சுடுவோர். இடுவோர் - கொணர்ந்து அவற்றைச் சும்மா போகடுவோர். தொடுதல் - தோண்டுதல்; மணி. ௧௬ : ௨௫.

௬௭. தாழ்வயின் அடைப்போர் - பள்ளமாகிய இடங்களிற் பிணங்களை அடைத்துவைப்போர்; தாழ்வயின் - தாழ்ந்த இடம். தாழியிற் கவிப்போர் - பிணங்களைத் தாழியினாலே கவிப்போர்; இதனை, "தேவருலக மெய்தின னாதலி, னன்னோற் கவிக்குங் கண்ணகன் றாழி" (௨௨௮), "கவிசெந் தாழிக் குவிபுறத் திருந்த" (௨௩௮), "ஈமத் தாழி யகலிதாக வனைமோ" (௨௫௬), "தாழிய பெருங்கா, டெய்திய ஞான்றே" (௩௬௪) எனவரும் புறநானூற்றுப் பாடல்களாலுணர்க; இத்தாழி, முதுமக்கட்டாழி யெனவும் வழங்கும்.

௬௮. இளிவுடன் - அருவருப்புடன். ௬௯. சும்மை - ஒலி.

௭௦. எஞ்சியோர் - சீவித்திருப்போர். ஈமஞ் சாற்றி - ஈமமுண்டென்பதைச் சொல்லி.

(பி - ம்.) ௬௭. 'காழ்வயினடப்' ௬௮. 'இரவும் பகலுமேயாவிடி னறிவரு' ௭௦. 'எஞ்சினர்மருங்கினேமஞ்சாற்றி'

நெஞ்சு நடுக்குறூஉ நெய்த லோசையுந்
துறவோ ரிறந்த தொழுவிளிப் பூசலும்
பிறவோ ரிறந்த வழுவிளிப் பூசலு
நீண்முக நரியின் றீவிளிக் கூவுஞ்
௭௫ சாவோர்ப் பயிருங் கூகையின் குரலும்
புலவூண் பொருந்திய குராலின் குரலு
மூண்டலை துற்றிய வாண்டலைக் குரலு
நன்னீர்ப் புணரி நளிகட லோதையி
னின்னா விசையொலி யென்றுநின் றறாது

---

௭௧. நெய்தலோசையும் - சாப்பறையின் ஓசையும்; "ஓரி னெய்தல் கறங்க வோரி, லீர்ந்தண் முழவின் பாணி ததும்ப" (புறநா. ௧௯௪); "பல்லவர்க் கிரங்கும் பாடிமிழ் நெய்தல், கல்லென வொலிக்குங் காடு" பு-வே. ௨௭௪.

௭௨. தொழுவிளிப் பூசல் - துதிமுழக்கம்; துறவோராதலால், தொழுதல் கூறப்பட்டது.

௭௩. பிறவோர் - இல்லறத்தோர்.

௭௫. இறப்போரை அழைக்கும் பேராந்தையின் ஒலியும்; பேராந்தை செத்தோரை அழைக்குமென்றும் கூறுவர்; "போழ்வாய்க் கூகை, சுட்டுக் குவியெனச் செத்தோர்ப் பயிருங், கள்ளியம் பறந்தலை" புறநா. ௨௪௦.

௭௬. குரால் - கோட்டான்.

௭௭. உணவாகத் தலைமூளையைக் கடித்துண்ட ஆண்டலைப்பறவை களின் குரலும்; ஆண்டலைப் பறவை - ஆண்மகனது தலைபோன்ற வடிவ முள்ள ஒருவகைப் பறவை; இதனை, "நீண்டபலி பீடத்தி லரிந்து வைத்த நெடுங்குஞ்சிச் சிரத்தைத்தன் னினமென் றெண்ணி, யாண்டலைப் புளருகணைந்து பார்க்கு மாலோ வணைதலுமச் சிரமச்ச முறுத்துமாலோ" (கலிங்க. கோயில்பாடியது, ௧௬) என்பதனாலுணர்க; "அழுகுரற் கூகையோ டாண்டலை விளிப்பவும்" (பட்டின. ௨௫௮); "ஆண்டலை பாட" (முத்ததிருப். ௩); "ஈமத் தூமமு மெரியினு மிருளொடு விளக்கா, வூமைக் கூகையு மோரியு முறழுறழ் கதிக்கும், யாமத் தீண்டிவர் தாண் டலை மாண்பில வழைக்குந், தீமைக் கேயிட னுயதோர் செம்மலை யுடைத்தே" (நீல. தரும. ௩); தக்க. ௨௩௪-ஆந்தாழிசைக் குறிப்பைப்பார்க்க.

௭௮. புணரி நளி கடல் - அலைகள் செறிந்த கடல். ஓதையின் - ஓசையைப்போல.

௭௯. இன்னா இசை ஒலி - துன்பத்தை இசைக்கின்ற ஒலிகள்.

௬௯ - ௭௯. மாருச் சும்மையும், நெய்தலோசையும், தொழுவிளிப்

(பி - ம்.) ௭௩. 'வாழுவிளிப் பூசலும்' ௭௪. 'வீழ்முகநரியின்றீ விளிக்குரலும்' ௭௬. 'புலாலூண்பொருந்திய குராலூண்குரலும்' ௭௭. 'ஊன்றலைதுற்றிய' ௭௮. 'நளிர் கடல்'

தான்றியு மொடுவையு முழிஞ்சிலு மோங்கிக்
கான்றையுஞ் சூரையுங் கள்ளியு மடர்ந்து
காய்பசிக் கடும்பேய் கணங்கொண் டீண்டு
மாலமர் பெருஞ்சினை வாகை மன்றமும்
வெண்ணிணர் தடியொடு மாந்தி மகிழ்சிறந்து
புள்ளிறை கூரும் வெள்ளின் மன்றமுஞ்
சுடலை நோன்பிக ளொடியா வுள்ளமொடு
மடைதீ யுறுக்கும் வன்னி மன்றமும்
விரத யாக்கைய ருடைதலை தொகுத்தாங்
கிருந்தொடர்ப் படுக்கு மிரத்தி மன்றமும்

பூசலும், அழுவிளிப்பூசலும், கூவும், குரலும், குரலும், குரலும் ஆகிய இன்னாவிசைகள் அறாதிருக்கப்பெற்று.

அ0 - அக. தான்றி முதலிய மரவிசேடங்கள் நெருங்கப்பெற்று.

அஉ. காய்பசி - மிக்கபசி (மணி. சு: கக௭, ஷை. கக: ௩௩.) கணம் - கூட்டம்.

அ௩. மால் - மேகம். சினை - கிளை. பல பேய்கள் கூட்டங்கொண்டிருத்தற்கு இடமானதுபற்றி வாகையடி, மன்றமெனப்பட்டது. பின் வருவனவற்றையும் இப்படியே கொள்க. ஊருக்கு நடுவாய் எல்லாருமிருக்கும் மரத்தடியை மன்றமென்பர் நச்சினார்க்கினியர்; முருகு. உஉசு.

அச. தடி - தசை. மாந்தி - உண்டு.

அரு. புள் - பேராந்தை, கோட்டான், கழுகு, பருந்து, காக்கை, ஆண்டலைப்புள் முதலியவை. இறைகூரும் - தங்குதல் மிக்க. வெள்ளில் - விளாமரம்.

அசு. சுடலை நோன்பிகள் - காபாலிகர்; "இறைவி கோட்டத்து ளீரிரு திங்கள தகவை, யுறையு ளாகவவ் வுறையருங் காட்டகத் துறைவான், பொறையு மாற்றலும் பூமியு மேருவு மனையான், சிறைசெய் சிந்தையா னந்தமில் பொருள்களைத் தெரிந்தான்" (தரும. எ) என்னும் நீலகேசிச் செய்யுளால் முனிசந்திரனென்ற ஒரு முனிவன் மயானத்திலிருந்து தவஞ்செய்தானென்று தெரிகிறது. ஒடியாவுள்ளம் - தளராதஉள்ளம்.

அஎ. மடை - சோறு. வன்னி - வன்னிமரம்.

அஅ. உடைதலைகளைச் சேர்த்து.

அகூ. இருந்தொடர்ப்படுக்கும் - பெரியமாலைகளாகச் செய்யும். இரத்திமன்றம் - இலந்தைமரம்நிற்கும்மன்றம்; "இரத்தி நீடிய வகன்றலை மன்றத்து" புறநா. ௩ச.

(பி - ம்.) அ0. 'ஒடுமையு முழிஞ்சிலு மொடுங்கிக்' அக. 'கள்ளியும் படர்ந்து' அ௩. 'ஆலம் பெருஞ்சினை வாகை மன்றமும்' அச. 'வெண்ணிணக் குடியொடுமோந்தி' அரு. 'வெள்ளிடை மன்றம்' அகூ. 'இருந்துடிபடுக்கும்'

பிணந்தின் மாக்க ணிணம்படு குழிசியில்
விருந்தாட் டயரும் வெள்ளிடை மன்றமு
மழற்பெய் குழிசியும் புழற்பெய் மண்டையும்
வெள்ளிற் பாடையு முள்ளீட் டறுவையும்
பரிந்த மாலையு முடைந்த கும்பமு
நெல்லும் பொரியுஞ் சில்பலி யரிசியும்
யாங்கணும் பரந்த வோங்கிரும் பறந்தலை
தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வ
ரீற்றிளம் பெண்டி ராற்றாப் பாலகர்
முதியோ ரென்னா னிளையோ ரென்னான்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்பவில்
வழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்

---

௯௦. குழிசி - பானை.

௯௧. வெள்ளிடைமன்றம் - வெளியான இடத்தையுடையமன்றம்; "உள்ளுநர்ப் பனிக்கும் வெள்ளிடை மன்றமும்" சிலப். ௫: ௧௧௭.

௯௨. புழல் - ஒருவகைச்சிற்றுண்டி.

௯௩. வெள்ளிற் பாடை: இருபெயரொட்டு. உள்ளீட்டறுவை-உள்ளே பண்டங்கள்இடுதலைப்பெற்ற உறி; "சுவன்மே லறுவையும்" (சிலப். ௧௦: ௯௮.) அறுவை - சீலையெனின், உள்ளீட்டையுடைய கிழியுமாம்.

௯௪. பரிந்த மாலை - பாடையிற்கட்டி அறுத்தெறியப்பட்ட மாலை; "வெள்ளின் மாலையும் விரிந்தவெண் டலைகளுங் கரிந்த, கொள்ளி மாலையுங் கொடிபடு கூறையு மகலும், பள்ளி மாறிய பாடையு மெலும்புமே பரந்து, கள்ளி யாரிடைக் கரந்ததோர் தோற்றமுங் கடிதே" நீல. த்ரும. ௪.

௯௫. சில்பலி யரிசி - சிறுபலியாகிய அரிசி; "தூவெள் ளரிசி, சில் பலிச் செய்து" முருகு. ௨௩௩ - ௪.

௯௬. பறந்தலை - பாழிடம்.

௮௩ - ௯௬. வாகைமன்றமும், வெள்ளின்மன்றமும், வன்னிமன்றமும், இரத்திமன்றமும், வெள்ளிடை மன்றமும் ஆகிய இம்மன்றங்கள் யாங்கணும் அழற்பெய்குழிசி முதலியவைகள் பரந்த பறந்தலையென்க.

௬௫ - ௯௬. பரந்து அறாது பரந்த பறந்தலையென்க.

௯௮. மூ. மணி. ௭ : ௮௧. ௧௦௦. கொடுந்தொழிலாளன் - காலன்.

௪௧ - ௧௦௧. ஆரிடை பறந்தலை சுடலை தின்னக்கண்டும்.

(பி - ம்.) ௯௦. 'பிணந்தீன்மாக்கணிணம்படுகுழிசியின்' ௯௨. 'பிறழ் பெய்மண்டையும்', 'பிழல்.' ௯௯. 'இளையோரென்னான்முதியோரென்னான்'

கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழு
மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ
வாங்கது தன்னையோ ரருங்கடி நகரெனச்
சார்ங்கல னென்போன் றனிவழிச் சென்றோ
னென்புந் தடியு முதிரமு மியாக்கையென்
றன்புறு மாக்கட் கறியச் சாற்றி
வழுவொடு கிடந்த புழுவூன் பிண்டத்
தலத்தக மூட்டிய வடிநரி வாய்க்கொண்
டுலப்பி லின்பமோ டுளைக்கு மோதையுங்
கலைப்புற வல்குல் கழுகுகுடைந் துண்டு
நிலைத்தலை நெடுவிளி யெடுக்கு மோதையுங்
கடகஞ் செறித்த கையைத் தீநா
யுடையக் கவ்வி யொடுங்கா வோதையுஞ்
சாந்தந் தோய்ந்த வேந்திள வனமுலை

---

௧௦௨. மிகப்பெரியசெல்வமாகிய கள்ளையுண்டு விளையாடுதலைச் செய்து.

௧௦௪. மடவோர் - மூடர்.

௧௦௫. அதுதன்னை - அம்மயானத்தை. கடி - காவல்.

௧௦௬. தனிவழிச்சென்றோனாகிய சார்ங்கலன்.

௧௦௮. அன்புறு மாக்கட்கு - உடம்பினிடத்தே அன்புமிகுந்த மனிதர்கட்கு. மாக்களென்றார், ஐம்புலவுணர்ச்சியேயன்றி மனவுணர்ச்சியில்லாதவ ரென்றற்கு; "மாவு மாக்களு மையறி வினவே" தொல்.மரபு. சூ. ௩௨.

௧௦௭ - ௮. யாக்கை, என்புமுதலியனவாமென்று மாக்கட்குச்சாற்றி.

௧௦௯. வழு - தாதுவிசேடம்; வழுவொடு - வழுவுதலுடனென்றுமாம். பிண்டமென்றது உடம்பை.

௧௦௮ - ௯. சாற்றிக் கிடந்தவென்க; இனி, சாற்றி வாய்க்கொண்டு உளைக்கும் நரியோதை யெனினுமமையும்.

௧௧௦. அலத்தகம் - செம்பஞ்சுக்குழம்பு.

௧௧௧. உலப்பு இல் இன்பமோடு - கேடில்லாத இன்பத்தோடு.

௧௧௪. தீநாய் - மயானத்திற்றிரியும் ஒருவகைநாய்.

(பி - ம்.) ௧௦௫. 'தன்னை யொருங்குகடிநகரென' ௧௦௭. 'அன்புந்தடியும்' ௧௦௯. 'வழுவொடு தோன்றியபுழுவூண்பிண்டத்து' ௧௧௩. 'நிலத்தலை' ௧௧௦. 'கறவி'

காய்ந்தபசி யெருவை கவர்ந்தூ ணோதையும்
பண்புகொள் யாக்கையின் வெண்பலி யரங்கத்து
மண்கணை முழவ மாக வாங்கோர்
கருந்தலை வாங்கிக் கையகத் தேந்தி
யிரும்பே ருவகையி னெழுந்தோர் பேய்மகள்
புயலோ குழலோ கயலோ கண்ணே
குமிழோ மூக்கோ விதழோ கவிரோ
பல்லோ முத்தோ வென்னா திரங்காது
கண்டொட் டுண்டு கவையடி பெயர்த்துத்
தண்டாக் களிப்பி னாடுங் கூத்துக்
கண்டனன் வெரீஇக் கடுநவை யெய்தி

---

௧௧௭. காய்ந்தபசி - மிக்க பசி (மணி. ௬: ௮௨, ௸. ௧௧: ௩௩.) எருவை - தலைவெளுத்து உடல் சிவந்திருக்கும் பருந்து; கழுகுமாம்; "விசும்பா டெருவை பசுந்தடி தடுப்ப" புறநா. ௬௪.

௧௧௮. வெண்பலி அரங்கத்து - சாம்பற்குவையாகிய அரங்கத்திலே.

௧௧௯. மண் கணை முழவமாக - மார்ச்சனை யமைந்த திரண்ட தண்ணுமையாக; தண்ணுமை - ஆடற்குரிய ஒருவகைத் தோற்கருவி.

௧௧௧ - ௯. உளைக்குமோதையும், எடுக்குமோதையும், ஒடுங்காவோதையும், கவர்ந்தூணோதையும் ஆகிய இவைகள் முழவமாகவென்க.

௧௨0. கருந்தலையென்றது, ஒரு பெண்பிணத்தின் தலையை.

௧௨௧. பேய்மகள் - பெண்பேய்.

௧௨௩. குமிழ் - குமிழம்பூ. கவிர் - முள்ளுமுருக்கம்பூ.

௧௨௪. என்னாது - என்று கருதாமல்.

௧௨௫. கண் தொட்டு உண்டு - கண்ணைத் தோண்டி உண்டு; "கண்டொட் டுண்ட" (முருகு. ௫௩.) கவை அடி பெயர்த்து - கவைத்த அடிகளைப்பெயர்த்து; "கருமறிக் காதிற் கவையடிப் பேய்மகள்" சிறுபாண். ௧௯௭.

௧௨௬. தண்டாக் களிப்பு - தணியாத களிப்பு; "தண்டா வீகைத் தகைமாண் குடுமி" புறநா. ௬.

௧௧௧ - ௨௬. உளைக்கு மோதை முதலியன முழவமாக வெண்பலியரங்கத்தில் ஒரு பேய்மகள் கவையடி பெயர்த்து ஆடுங் கூத்தையென்க.

௧௨௭. கண்டனன் - கண்டு. கடுநவை எய்தி - அப்பேயாற் பிடிக்கப்பட்டு; "கழல்கட் கூளிக் கடுநவைப் பட்டோர்" சிலப். ௫: ௨௧௫.

௧0௬ - ௨௭. சென்றோனாகிய சார்ங்கலனென்போன் கண்டு.

(பி-ம்.) ௧௨௩. 'அதரோ கவிரோ' ௧௨௫. 'கவையடிப் பெயர்த்து', 'கையடிபெயர்த்து.' ௧௨௬. 'களிப்பினொடாடு'

கெட்டோர் சொல்லின் வெளிற்றுரை பெயர்த்துப்
பொய்யுரை காறு மியங்கு கடலின்
௨௰ வெய்யூ ரேய்ப்பெனப் பெரிதொழிந் தேர்வோர்த்
தம்மின் நன்மூன் வீழ்ந்தபெயல் மைந்தரும்
பார்ப்பான் றன்னொடு கண்ணிழந் திருந்தத்
தீத்தொழி லாட்டுபெயர் இதுவள் றன்னின
யாருமி றமியே னென்பது நோக்கா
௨௰௫ தாருமி லுண்ட தன்னலோர் பேயோ
பாறு மன்றமுக் கொல்லி மாற
முறையுங் கோட்டமுங் காப்பாய் காவாய்
தனியேன் கொள்ளா ய்ப்பா பழியென

௨௰௫. ... - ... வெளிற்றுரை பெயர்த்து - பழிப்பிட்டுச் சொல்லிப் பெயர்த்து.

௨௰௬. ஏம்மின் - எண்ணாயே.

௨௰௭. ... நாளின்மூன்றோ றெக்கும். மெய்வைத்தல் : மணி. ... : ....

௨௦௮ - ௨௰௯. ... மெய்வைத்ததும்.

௨௰௯. பார்ப்பானொருவன் ... தந்தையை; "பார்ப்பான் றன்னொடு கண்ணிழந் திருந்த" என்று இங்கே சொல்லுதலா லும், "கண்ணில் கணவனோ" (௩ : ௬௦) என்று பின்பு வருதலாலும், ... தந்தை தாயிருவரும் கண்ணோயிழந்தோரென்பது பெறப்பட்டது.

௨௰௦. மணி. ... : ௬௪.

௨௰௧. ... பேயோ ; மணி. ௩ : ௬௪, ௬௦... ; ... ; குறள். ௬௪, ப...

௨௰௨ - ௩. ... முறையிடுகின்றது.

௨௰௩. ... - ... கொல்லி மாற - பறைய வலி ... மாற.

௨௰௪. ... - ... காவாய் - காவாமலிருந்தாய்.

[illegible]

மகன்மெய் யாக்கையை மாப்புறத் திட்டு
ஈமப் புறங்காட் டெயிற்புற வாயிலிற்
கோதமை யென்பாள் கொடுந்துயர் சாற்றிக்
கடிவழங்கு வாயிலிற் கிடந்தழு தெய்தி
யிடையிருள் யாமத் தெறிந்திசிற் கறைந்தின
என்றுற் றிலையோ வெனக்குரை யென்றே
பொன்னிற் பொலிந்த நிறத்தா டோன்ற
வாருயி லாட்டியென் னறியாப் பாலை
ஈமப் புறங்காட் டெய்தினேன் றன்னை
யணங்கோ பேயோ வாருயி ருண்ட
றறங்குவாள் போலக் கிடந்தனள் காவென
வணங்கும் பேயு மாருயி ருண்ணா
பிணங்குறான் மார்பன் பேதுகந் தாக
ஊழ்வினை வந்திவ னுயிருண்டு கழிந்தது
மாபெருந் துன்பமி னொழிவா யென்றலு
மென்னுயிர் கொண்டிவ னுயிர்தந் தருளென
கண்ணில் காவல னிவன்றாத் தோம்பிடு
மிவனுயிர் தந்தென் னுயிர்வாங் கென்றலு
முதுமூ தாட்டி யிரங்கினள் மொழிவோ

---

௧௪௧. கோதமை யென்பது அவள்பெயர். கொடுந்துயர் - தன் மகன் இறந்தானென்பது.

௧௪௨. மணி. ௬ : ௭௧.

௧௪௩. இருளையுடைய இடையாமத்தில்.

௧௪௫. பொன்னிற் பொலிந்த நிறத்தாள் - சூரியனைப்போல் விளங்கு நிறத்தையுடைய சம்பாபதி; பொன் - சூரியன்; "இலங்கதிர் நல்லொளி [illegible] விளங்கொளி மேனி விரிசடை யாட்டி" (௬ - ௨) என்று இந்நூற் பதிகத்தில் வருதல்காண்க.

௧௪௭. மணி. ௬ : ௧௨௪. ௧௪௯. என - என்று கோதமைசொல்ல.

௧௫௧. மார்பன் - சார்ங்கலன். பேதுகந்தாக - [illegible]

௧௫௨. என்றலும் - என்று சம்பாபதி சொல்லலும்.

௧௫௫. கண்ணில் காவலன் : மணி. ௬ : ௧௨௨. நம்பிமேல் - பாதுகாப்பாள்.

௧௫௬. என்றலும் - என்று கோதமை சொல்லலும்.

௧௫௭. முதுமூதாட்டி - சம்பாபதி.

(௧௩௯ - ௧௫௭.) [illegible] 'மா[illegible]ப்புற' [illegible]. '[illegible]' [illegible] '[illegible]ப்பாய்ப்பா[illegible]' [illegible]. '[illegible]' [illegible]. 'பே[illegible]' [illegible] '[illegible]' [illegible]. '[illegible]'

ஐய முண்டோ வாருயிர் போனாற்
செய்வினை மருங்கிற் சென்றுபிறப் பெய்துத
லாங்கது கொணர்ந்துநின் னாரிடர் நீக்குத
லீங்கெனக் காவதொன் றன்றுநீ யிரங்கல்
கொலையற மாமெனுங் கொடுந்தொழின் மாக்க
ளவலப் படிற்றுரை யாங்கது மடவா
யுலக மன்னவர்க் குயிர்க்குயி ரீவோ
ரிலரோ விந்த வீமப் புறங்காட்
டரசர்க் கமைந்தன வாயிரங் கோட்ட
நிரயக் கொடுமொழி நீயொழி யென்றலுந்
தேவர் தருவர் வரமென் றொருமுறை
நான்மறை யந்தணர் நன்னூ லுரைக்கு
மாபெருந் தெய்வ நீயரு ளாவிடின்
யானோ காவே னென்னுயி ரீங்கென
வூழி முதல்வ னுயிர்தரி னல்ல

கடுஅ - கூ. பிறப்பெய்துதலில் ஐயமுண்டோ; "செய்வினை வழித்தா புயிர்செலு மென்பது, பொய்யில் காட்சியோர் பொருளுரை யாதலின்" சிலப். உஅ : கசுஎ - அ; புறநா. ககூஉ.

கசு0. அது - அவ்வுயிரை. ஆரிடர் - தீர்த்தற்கரிய துன்பம்.

கசுக. எனக்கு ஆவதொன்றன்று - எனக்கு இயலுவதான ஒரு காரியமன்று.

கசுங. அவலப்படிற்றுரை - கேட்டைத் தருகின்ற பொய்யுரை. அது அவலப் படிற்றுரை யென்க.

கசுரு. இலரோ - உளரென்றபடி. புறங்காட்டில்.

கசுசு. ஆயிரம் கோட்டம் அமைந்தன; ஆயிரம் - அநேகம்; "இறந்தோர் மருங்கிற் சிறந்தோர் செய்த, குறியவு நெடியவுங் குன்றுகண் டன்ன, சுடுமண் ணோங்கிய நெடுநிலைக் கோட்டமும்" (சு : டுஎ - கூ) என்றூர் முன்னும்.

கசுஎ. நிரயக் கொடுமொழி - நரகவேதனையைத்தரும் கொடிய வார்த்தை; என்றது, "இவனுயிர் தந்தென்னுயிர்வாங்கு" (மணி. சு : கடுசு) என்றதை. என்றலும் - என்று சம்பாபதி சொல்லலும்.

கசுகூ. நூல் - வேதம். கஎ0. தெய்வமாகிய நீ.

கஎக. யான் என்னுயிரைத் துறப்பேன் என்று கோதமை சொல்ல.

கஎஉ. ஊழிமுதல்வன் - மஹாப்ரஹ்மா; "தெய்வக் கருவுந்

(பி - ம்.) கசுங. 'அலவலைப்படிற்றுரை', 'அவலை படிற்றுரை.' கசுரு. 'புறங்காட்டின்' கசுஎ. 'நிரையத்தொடு' கசுகூ. 'சென்னூலுரைக்கு' கஎக. 'என்னுயிரென்றபின்'

தாழித் தாழி யகவரைத் திரிவோர்
தாந்தரின் யானுந் தருகுவன் மடவா
கஎரு யீங்கெ ஞற்றலுங் காண்பா யென்றே
நால்வகை மரபி னரூபப் பிரமரு
நானால் வகையி னுருபப் பிரமரு
மிருவகைச் சுடரு மிருமூ வகையிற்
பெருவனப் பெய்திய தெய்வத கணங்களும்

திசைமுகக் கருவுஞ், செம்மலர் முதியோன் செய்த வந்நாள்" (மணி. பதிகம்,உஅ - கூ.) இகரத்தை அசைநிலையாக்கி ஊழ்வினையாகிய முதல்வ னெனக் கூறினும் பொருந்தும்.

கஎங. சக்கரவாளமாகிய தாழியினுடைய உள்ளிடத்தே சஞ்சரிப்பவர்.

கஎச. தரினெனவே தரலின்மை பெறப்பட்டது.

கஎங - ச. இறந்துபோன உயிரை மீட்டுக்கொடுக்குமாற்றல் இந்தச் சக்கரவாளத்திலுள்ள தேவர்களுக்கு எங்ஙனமில்லையோ அங்ஙனமே எனக்குமில்லை யென்றபடி.

கஎரு. ஆற்றல் - வலி. என்று - என்று சம்பாபதிசொல்லி.

கஎசு. நால்வகை மரபின் அருபப் பிரமரும் - உலகம் முப்பத்தொன்றனுள் இருபத்தெட்டாவதாகிய ஆகாசாநந்தியாயதன லோகம் முதலிய நான்கு உலகங்களிலுமுள்ள அருபப்பிரஹ்ம சாதியாராகிய நால் வகையினரும். இவர்களைத் தியானம் ஐந்தனுள் அவிசேஷமென்னும் ஐந்தாவதில் தேறியவர்களென்பர்.

கஎஎ. நால் நால்வகையின் உருபப் பிரமரும் - மேற்கூறிய உலகங்களுள் பன்னிரண்டாவதாகிய பிரஹ்மகாயிகலோகம் முதலாகிய உலகம் பதினாறிலுமிருக்கிற உருபப்பிரஹ்ம சாதியாராகிய பதினாறு வகையினரும்; இவர்களில் கஉ, கங, கச-ஆம் உலகங்களிலுள்ளவர்களை ஸ்ரோதாபத்தி என்னும் முதலாவது தியானத்தில் தேறியவர்களென்றும், கரு, கசு, கஎ-ஆம் உலகங்களிலுள்ளவர்களை ஸ்கிருதாகாமி என்னும் இரண்டாவது தியானத்தில் தேறியவர்களென்றும், கஅ, கக, உ௦-ஆம் உலகங்களிலுள்ளவர்களை அநாகாமி என்னும் மூன்றாவது தியானத்தில் தேறியவர்களென்றும், உக-ஆவது முதலிய ஏழுலகங்களிலுள்ளவர்களை அர்ஹத் என்னும் நான்காவது தியானத்தில் தேறியவர்களென்றும் பௌத்தநூல் கூறும்.

கஎசு - எ. இருவகைப் பிரஹ்மலோகங்கள் இருபதின் பெயர்களையும் இந்நூற்பதிகத்தின் உஅ - கூ - ஆம் அடிகளின்உரையிற்காண்க.

கஎஅ. இருவகைச்சுடர் - சந்திர சூரியர்கள்.

கஎஅ - கூ. மேற்கூறிய உலகம் முப்பத்தொன்றனுள் ஆறுவதாகிய மஹாராஜிகலோகம் முதலிய உலகம் ஆறிலுமுள்ள அறுவகைத்

(பி - ம்.) கஎங. 'அகவயிற்றிரிவோர்' கஎச. 'மடவோயீங் கெனுலுற்றலுங்' கஎசு. 'பிடமரும்.' கஎஎ 'உருபிதப்பிரமரு', 'உருபப் பிடமரு.'

பல்வகை யசுரரும் படுதுய ருறாஉ
மெண்வகை நரகரு மிருவிசும் பியங்கும்
பன்மீ னீட்டமு நாளுங் கோளுந்
தன்னகத் தடக்கிய சக்கர வாளத்து
வரந்தரற் குரியோர் தமைமுன் னிறுத்தி
யரந்தை கெடுமிவ ளருந்துய ரிதுவெனச்
சம்பா பதிதா னுரைத்தவம் முறையே
யெங்குவாழ் தேவரு முரைப்பக் கேட்டே
கோதமை யுற்ற கொடுந்துயர் நீங்கி
யீமச் சுடலையின் மகனையிட் டிறந்தபின்
சம்பா பதித னுற்ற றோன்ற
வெங்குவாழ் தேவருங் கூடிய விடந்தனிற்

தெய்வகணங்கள். இந்த உலகங்களின் பெயரைப் பதிகத்து ௨௮ - ௯-ஆம் அடியின் உரையிற்காண்க. 'பெருவனப்பெய்திய' என்றார், விளங்கொளி மேனியராதலின்.

௧௮௦. படுதுயர் - மிக்க துன்பம்.

௧௮௧. எண்வகை நரகர் - மேற்கூறிய உலகம் முப்பத்தொன்றனுள் முதலாவதாகிய நரகலோகத்தின் பகுதிகளான மஹாநிரயம், ரௌரவம், காலஸூத்ரம், ஸஞ்சீவனம், மஹாவீசி, தபனம், ஸம்பிரதாபனம், ஸம்ஹாதம் என்னும் எட்டு நரகங்களிலுமுள்ளவர்கள்.

௧௮௨. ஈட்டம் - கூட்டம். நாள் - இருபத்தேழு நட்சத்திரங்கள்.

௧௮௩. மேற்கூறிய அரூபப்பிரஹ்மகணலோகம் முதலியவற்றைத் தன்னுள் அடக்கிய கோளத்தைச் சக்கரவாளமென்பர்; "சக்கர வாளத்துத் தேவ ரெல்லாம்" (மணி. ௧௨: ௭௨), "எண்ணருஞ் சக்கர வாளமெங்கணும்" (ஷை. ௨௬: ௫௨) என வருதல் காண்க.

௧௮௪. வரந்தரற்குரியோர் - தேவர். முன்னிறுத்தி - கோதமைக்கு முன்னே நிறுத்தி.

௧௮௫. அரந்தை - துன்பம். கெடும் - கெடுமின். என - என்று சம்பாபதி சொல்ல.

௧௮௬ - ௭. சம்பாபதி உரைத்த முறையினை, மணி. ௬: ௧௭௩ - ௪-ஆம் அடிகளிற் காண்க.

௧௮௮. இறக்கத் துணிந்தமையால் கோதமை கொடுந்துயர் நீங்கினாள். இதுபோன்ற நிகழ்ச்சியைச் சிலப்பதிகாரம், ௨௫: ௮௨ - ஆம் அடி முதலியவற்றிற் காண்க.

௧௮௯. ஈமம் - பிணஞ்சுடுதற்கு அடுக்கும் விறகடுக்கு.

௧௯௦ - ௯௧. தோன்றக்கூடிய விடமென்க.

(பி - ம்.) ௧௮௨. 'பன்பினீட்டமு' ௧௮௪ - ௫. 'உரந்தரற் குரியோர் தம்மைமுன் னிறுத்தீங், காக்கை' ௧௯௧. 'அங்குவாழ் தேவருங் கூட்டிய'

சூழ்கடல் வளைஇய வாழியங் குன்றத்து
நடுவு நின்ற மேருக் குன்றமும்
புடையி னின்ற வெழுவகைக் குன்றமு
நால்வகை மரபின் மாபெருந் தீவு
மோரீ ராயிரஞ் சிற்றிடைத் தீவும்
பிறவு மாங்கத னிடவகை யுரியன
பெறுமுறை மரபி னறிவுவரக் காட்டி
யாங்குவா ழுயிர்களு மவ்வுயி ரிடங்களும்
பாங்குற மண்ணீட்டிற் பண்புற வகுத்து

---

௧௯௨. சூழ்கடல் - பெரும்புறக்கடல். ஆழியங்குன்றத்து - சக்கரவாளகிரியின் உட்பட்ட இடத்தில்.

௧௯௩. நடுவிடத்தே நின்றதாகிய, எண்பத்தீராயிரம் யோசனை உயரமும் அவ்வுயரத்திற்குத் தக்க பருமையும் அமைந்துள்ள மேருமலையும்.

௧௯௪. அம்மேருவின் பக்கத்தே அதிலிருந்து உயரத்தில் ஒன்றற்கொன்று வரவரப் பாதிப் பாதியளவு குறைந்து குறைந்து ஒன்றைச்சுற்றியொன்றாகச் சூழ்ந்துள்ள ஏழு குலகிரிகளும்.

௧௯௫. மேற்கூறிய மேருவும் அதனைச் சூழ்ந்துள்ள ஏழுகுலகிரிகளும் அக்குலகிரிகளுள் ஒவ்வொன்றனையும் சூழ்ந்து அவ்வக்கிரியின் உயர அளவுள்ள ஆழமும் அகலமுமமைந்த ஏழு கடல்களும் ஆகிய இவற்றையெல்லாம் சூழ்ந்து கிடக்கும் பெரும்புறக்கடலிலுள்ள சம்புத்தீவு முதலிய நான்கு மகாத்வீபங்களும். இந்த நான்கினுள் தெற்கேயுள்ளது சம்புத்தீவு; இது நாவலந்தீவு என்றுங் கூறப்படும்; இதனை, "நாவ லோங்கிய மாபெருந் தீவு" (மணி. ௨: ௧), "நாவலொடு பெயரிய மாபெருந் தீவத்து" (ஷை. ௧௧: ௧௦௭) என்பவற்றாலுணர்க.

௧௯௬. மஹாத்வீபம் நான்கினுள் ஒவ்வொன்றையும் தனித்தனியே ஐந்நூறு ஐந்நூறாகச் சூழ்ந்துள்ள இரண்டாயிரம் சிறு தீவுகளும்; இச்சிறு தீவுகள் அந்தரத்தீவுகளென்றுஞ் சொல்லப்படும்.

௧௯௫ - ௬. "அந்தரத் தீவினு மகன்பெருந் தீவினும்" (௨௫: ௨௨௪) என்று பின்வருதல் காண்க.

௧௯௩ - ௬. இவ்வடிகளிலுள்ள வரலாறுகள் பர்மாதேசத்துப் புத்த நூலிலிருந்து தெரிந்துகொள்ளப்பட்டன.

௧௯௭ - ௮. உரியனவற்றைக்காட்டி.

௧௯௯. உயிர்களென்றது அவ்வவ்வுயிர்கள் வாழுகின்ற உடம்புகளை.

௨௦௦. பாங்கு - பகுதித்திறன்; "அடியோர் பாங்கு மாயமு நீங்கி" (சிலப். ௧௬: ௮௫); அழகுமாம். மண்ணீட்டின் - சுதையாற் செய்யப்பட்டுள்ள பாவைவடிவமாக.

(பி - ம்.) ௧௯௨. 'ஆழிக்குன்றத்து' ௨௦௦. 'மண்ணிடிற்'

மிக்க மயனா லிழைக்கப் பட்ட
சக்கர வாளக் கோட்டமீங் கிதுகா
ணிடுபிணக் கோட்டத் தெயிற்புற மாதலிற்
சுடுகாட்டுக் கோட்ட மென்றல துரையா
ரிதன்வர விதுவென் றிருந்தெய்வ முரைக்க
மதனி னெஞ்சமொடு வான்றுய ரெய்திப்
பிறந்தோர் வாழ்க்கை சிறந்தோ னுரைப்ப
விறந்திருள் கூர்ந்த விடையிருள் யாமத்துத்
தூங்குதுயி லெய்திய சுதமதி யொழியப்
பூங்கொடி தன்னைப் பொருந்தித் தழீஇ
யந்தர மாறா வாறைந் தியோசனைத்
தென்றிசை மருங்கிற் சென்றுதிரை யுடுத்த
மணிபல் லவத்திடை மணிமேகலா தெய்வ
மணியிழை தன்னைவைத் தகன்றது தானென்.

௬.—சக்கரவாளக்கோட்டமுரைத்தகாதை முற்றிற்று.

---

௨0௧. மயன் - தெய்வத்தச்சன்; அசுரத்தச்சனென்றுங் கூறுவர்.
௨0௩. இடுதல் - போகடுதல். பிணக்கோட்டம் - மயானம்.
௨0௪. மு. மணி. ௬: ௩0. சுடுகாட்டுக் கோட்டம்: சிலப். ௧: ௨0.
௨0௫. இருந்தெய்வம் - மணிமேகலாதெய்வம்.

௨0௬. மதனில் நெஞ்சமொடு - செருக்கற்ற மனத்துடனே; மதன்-வலியுமாம்.

௨0௭. சிறந்தோன்-மணிமேகலை. வாழ்க்கையென்றது நிலையாமையை. வாழ்க்கையைச் சிறந்தோன் உரைப்ப.

௨0௯. இடையிருள் யாமத்து - நடுயாமத்தில்; மணி. ௬: ௧௪௫.
௨௧0. பூங்கொடிதன்னை - மணிமேகலையை.
௨௧௧. அந்தரம் ஆறா - ஆகாயமே வழியாக.
௨௧௧-௨. முப்பதுயோசனைதூரம் தென்றிசைக்கண்ணே சென்று.
௨௧0 - ௧௪. மணி. ௧: [illegible] - ௭.

[illegible] - ௨௧௪. [illegible] சொரிய, மேனியன் எத்தி நோக்கி என் [illegible], [illegible], இருந்தெய்வமுரைப்ப, சுதமதி என் [illegible], [illegible]; [illegible] தெய்வம், இதன் [illegible], சிறந்தோனுரைப்ப, தெய்வம் இடையிருள் [illegible] யொழியப் பூங்கொடிதன்னைத் தழீஇச் சென்று மணி [illegible] முடிக்க.

[illegible] ‘[illegible]யார்’ ௨0[illegible]. ‘[illegible]’ ௨௧0.

ஏழாவது

துயிலெழுப்பியகாதை.

[ஏழாவது மணிமேகலாதெய்வம் உவவனம்புகுந்து சுதமதியைத் துயிலெழுப்பியபாட்டு.]

மணிமே கலைதனை மணிபல் லவத்திடை
மணிமே கலாதெய்வம் வைத்து நீங்கி
மணிமே கலைதனை மலர்ப்பொழிற் கண்ட
வுதய குமர னுறுதுய ரெய்திக்
கங்குல் கழியிலென் கையகத் தாளெனப்
பொங்குமெல் லமளியிற் பொருந்தா திருந்தோன்
முன்னர்த் தோன்றி மன்னவன் மகனே
கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியுங்
கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரு
மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை
மன்னுயி ரெல்லா மண்ணாள் வேந்தன
றன்னுயி ரென்னுந் தகுதியின் றாகுந்
தவத்திறம் பூண்டோ டன்மேல் வைத்த

---

௩. மலர்ப்பொழிற் கண்ட - உவவனத்திற்கண்ட.

௪. உறுதுயர் - மிக்க துன்பம்.

௫. கையகத்தாள் - கையினிடத்தே யுள்ளாள்.

௬. பொருந்தாது - துயிலாது. ௯. வறம் - வறுமை.

௮ - ௧௨. இந்நூற் பதிகம், ௨௪ - ஆம் அடியைப் பார்க்க; "கோனிலை திரிந்து நாழி குறைபடப் பகல்கண் மிஞ்சி, நீணில மாரி யின்றி விளைவஃகிப் பசியு நீடிப், பூண்முலை மகளிர் பொற்பிற் கற்பழிந் தறங்கண் மாறி, யானையிவ் வுலகு கேடா மரசுகோல் கோடி னென்றான்" சீவக. ௨௫௫.

௧௧ - ௨. புறநா. ௧௮௬.

௧௩. தவத்திறம் - தவத்தின் கூறுபாடு.

(பி - ம்.) ௪. 'துயிலெய்தி' ௮. 'திரிந்திடக் கோணிலை' ௧௨. 'தகுவையாயின்', 'தகுதியையாயிற்.' ௧௩. 'தவத்திற்பூண்டோ'

வவத்திற மொழிகென் றவன்வயி னுரைத்தபி
னுவவனம் புகுந்தாங் குறுதுயில் கொள்ளுஞ்
சுதமதி தன்னைத் துயிலிடை நீக்கி
யிந்திர கோடணை யிந்நகர்க் காண
வந்தே னஞ்சன் மணிமே கலையா
ஞதிசான் முனிவ னறவழிப் படூஉ
மேது முதிர்ந்த திளங்கொடிக் காதலின்
விஞ்சையிற் பெயர்த்துநின் விளங்கிழை தன்னையோர்
வஞ்சமின் மணிபல் லவத்திடை வைத்தேன்
பண்டைப் பிறப்பும் பண்புற வுணர்ந்தீங்
கின்றேழ் நாளி லிந்நகர் மருங்கே
வந்து தோன்று மடக்கொடி நல்லாள்
களிப்புமாண் செல்வக் காவற் பேரூ
ரொளித்துரு வெய்தினு முன்றிற மொளியா
ளாங்கவ ளிந்நகர் புகுந்த வந்நா

௧௪. அவத்திறம் - கேடுசெய்யுங்காரியம்; "தவஞ்செய்வார்.... அவஞ்செய்வா ராசையுட் பட்டு" (குறள், ௨௬௬) என்பதில், 'அவம்' என்பது இப்பொருளில் வருதல் காண்க.

௬ - ௧௪. மணி. ௧௮ : ௮௰ - ௮௫.

௧ - ௧௪. மணிமேகலாதெய்வம் மணிமேகலையை மணிபல்லவத்திடை வைத்து நீங்கிப் பொருந்தாதிருந்தோனாகிய உதயகுமரன் முன்னர்த் தோன்றி அவத்திறம் ஒழிகவென்று உரைத்தபினென்க.

௧௭. இந்திரகோடணை - இந்திரவிழா.

௧௮. ம. சிலப். ௧௫ : ௫௫. அஞ்சல் - அஞ்சாதே.

௧௯. ஆதிசால்முனிவன் - புத்தன்.

௨௰. ஏது முதிர்ந்தது - ஏதுநிகழ்ச்சி முற்றியது.

௨௧. விஞ்சையின் - வித்தையினாலே.

௨௪. இன்றேழ்நாளில் - இற்றைக்கு ஏழாவதுநாளில்; மணி. ௧௧ : ௧௨௧.

௨௫. தோன்றும் - தோன்றுவாள். நல்லாள் - மணிமேகலை.

௨௬. பேரூர் - காவிரிப்பூம்பட்டினத்தில்.

௨௭. உருவை மறைத்து வருவாளாயினும்.

(பி - ம்.) ௧௪. 'அவ்வயினுரைத்தபின்' ௧௫. 'நவவனம்' ௨௧. 'குணர்ந்துநின்' ௨௫. 'வந்துகாண்குறும்' ௨௬. 'பெயரூர்' ௨௭. 'உன்றிறமொழியாள்', 'ஊன்றிறமொழியாள்.'

னீங்கு நிகழ்வன வேதுப் பலவுள
மாதவி தனக்கியான் வந்த வண்ணமு
மேதமி னெறிமக ளெய்திய வண்ணமு
முரையாய் நீயவ ளென்றிற முணருந்
திரையிரும் பௌவத்துத் தெய்வமொன் றுண்டெனக்
கோவலன் கூறியிக் கொடியிடை தன்னையென்
னுமஞ் செய்த நன்னா ளள்ளிருட்
காமன் கையறக் கடுநவை யறுக்கு
மாபெருந் தவக்கொடி யீன்றனை யென்றே
நனவே போலக் கனவகத் துரைத்தே
னீங்கிவ் வண்ண மாங்கவட் குரையென்
றந்தரத் தெழுந்தாங் கருந்தெய்வம் போயபின்
வெந்துய ரெய்திச் சுதமதி யெழுந்தாங்
ககன்மனை யரங்கத் தாசிரியர் தம்மொடு

---

௨௯. நிகழ்வனவாகிய ஏதுக்கள்.

௩௧. ஏதமில் நெறி - குற்றமில்லாதவழி; அஃதாவது விசுத்தி மார்க்கம்.

௩௨. அவள் - மாதவி. என் திறம் உணரும்-என்வரலாற்றை உணர்வாள்.

௩௩. பௌவத்து - கடலினிடத்து. தெய்வம் ஒன்று உண்டென- எனது குலமுதல்வனை விபத்தினின்று நீங்கிப் பாதுகாத்த தெய்வமொன்று உள்ளதென்று.

௩௫. நன்னாளிற் செறிந்த இருளிடத்தே.

௩௩ - ௫. சிலப். ௧௫ : ௨௮ - ஆம் அடி முதலியவற்றின் பொருளை இவற்றுடன் ஒப்பிடுக.

௩௬ - எ. சிலப். ௩௰ : ௨௫ - ௯.

௧௫ - ௪௰. மணிமேகலாதெய்வம் புகுந்து நீக்கி, 'இந்நகரில் இந்திர விழாக்காண வந்தேன்; யான் மணிமேகலாதெய்வம்; இளங்கொடிக்கு ஏது முதிர்ந்ததாதலால் அவளை மணிபல்லவத்தில் வைத்தேன்; அவள் இந்நகரில் இற்றைக்கு ஏழாநாளில் தோன்றுவள்; ஏதுப் பலவுள; மாதவிக்குரை; அவள் என்றிறமுணரும்; இவ்வண்ணம் அவட்கு உரை' என்று போயபினென்க.

௪௨. அகல் மனை அரங்கத்து - விசாலித்த வீடாகிய நடனசாலையில். ஆசிரியர் தம்மொடு-இயலாசிரியனும், ஆடலாசிரியனும், யாழாசிரியனும், இசையாசிரியனும், குழலோனும், தண்ணுமையோனுமாகிய இவர்களோடு நின்று.

(பி - ம்.) ௩௧. 'ஏதமினின்மக', 'ஏதமுனிமைக.' ௩௨. 'உரைப் பொருளுணரும்' ௩௩. 'பவ்வத் தெய்வ முண்டென' ௩௫. 'நல்லிருள்' ௩௬. 'கையாற் கடுநவை' ௪௧. 'எய்தியசுதமதி' ௪௨. 'தாசியர் தம்மொடு'

வகைதெரி மாக்கட்கு வட்டணை காட்டி
யாடல் புணர்க்கு மரங்கியன் மகளிரிற்
கூடிய குயிலுவக் கருவிகண் டுயின்று
பண்ணுக்கிளை பயிரும் பண்ணியாழ்த் தீந்தொடை
கொளைவல் லாயமோ டிசைகூட் டுண்டு
வளைசேர் செங்கை மெல்விர லுதைத்த
வெம்மைவெய் துறாது தன்மையிற் றிரியவும்
பண்பில் காதலன் பரத்தமை நோனா
துண்கண் சிவந்தாங் கொல்குகொடி போன்று
தெருட்டவுந் தெருளா தூடலொடு துயில்வோர்
விரைப்பூம் பள்ளி வீழ்துணை தழுவவுந்

௪௩. வகைதெரிமாக்கட்கு - அவிநயம் முதலிய கூறுபாடுகளைத் தெரிகின்ற மாந்தர்களுக்கு. வட்டணை காட்டி - கமல வர்த்தனையைக் காட்டி; கமலவர்த்தனையாவது கைத்தலங்காட்டல்; சீவக. ௯௭௫.

௪௪. அரங்கியல் மகளிரின் - நாடகமளிரைப்போல; நாடக மகளிருடனென்றுமாம்.

௪௫. கூடியகுயிலுவக்கருவி - சேர்ந்த குழல் யாழ் மத்தளம் குடமுழா இடக்கையென்பவை; "கூடிய குயிலுவக் கருவிக ளெல்லாங், குழல்வழி நின்ற தியாழே யாழ்வழித், தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப், பின்வழி நின்றது முழவே முழவொடு, கூடிநின் றிசைத்த தாமந் திரிகை" (சிலப். ௩ : ௧௩௮ - ௪௨, உரை.) கண்டுயின்று - ஒலியாதடங்கி. 'மகளிரின்' (௪௪) என்றதனால் அவர்கள் துயின்றமையும் பெறப்பட்டது.

௪௬. சிலப். ௨௨ : ௧௪௧.

௪௬ - ௯. பண்ணுக்கிளை - பண்ணின் வகைகளை. பயிரும் - இசைக்கும். தீந்தொடை - இனிய நரம்புகள். கொளைவல் ஆயமோடு - பாட்டில் வல்லமகளிர் கூட்டத்துடனே; கொளை - ஒற்றறுத்தலுமாம். கூட்டுண்டு - சேர்ந்தனுபவித்து. உதைத்த - தெறித்த. உறாது - உறாமையால். தொடை திரியவுமென்க; நெடுநல். ௬௮.

௫௦ - ௫௩. பரத்தமை-பரத்தன் தன்மை; பரத்தையை நுகர்வான் பரத்தன்; "பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர், நண்ணேன் பரத்தநின் மார்பு" (குறள். ௧௩௧௧); "வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு" (சிலப். ௧௬ : ௬௩.) நோனாது - பொறாமல். துயில்வோர் - ஊடியமகளிர். வீழ்துணை - விரும்பியகணவன். துயில்வோர் தழுவவும்.

(பி - ம்.) ௪௬. 'பண்ணுக்கிழமைபிறமண்ணியாழ்' ௪௭. 'கொளவல்லாய' ௪௮. 'வளையார் செங்கை' ௪௯. 'வேதுறாது' ௫௦. 'காதல் பார்த்தமை நோனாது' ௫௧. 'நுண்கண்' ௫௨. 'துயில்வோள்'

தளர்நடை யாயமொடு தங்கா தோடி
விளையாடு சிறுதே ரீர்த்துமெய் வருந்தி
யமளித் துஞ்சு மைம்படைத் தாலிக்
குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்க்குக்
காவற் பெண்டிர் கடிப்பகை யெறிந்து
தூபங் காட்டித் தூங்குதுயில் வதியவு
மிறையுறை புறவு நிறைநீர்ப் புள்ளுங்
காவுறை பறவையு நாவுள் ளழுந்தி
விழவுக்களி யடங்கி முழவுக்கண் டுயின்று
பழவிறன் மூதூர் பாயல்கொ ணடுநாட்
கோமகன் கோயிற் குறுநீர்க் கன்னலின்
யாமங் கொள்பவ ரேத்தொலி யரவமு
முறையுணின் றொடுங்கிய வுண்ணு வுயக்கத்து
நிறையழி யானை நெடுங்கூ விளியுந்
தேர்வழங்கு தெருவுஞ் சிற்றிடை முடுக்கரு
மூர்காப் பாள ரெறிதுடி யோதையு
முழங்குநீர் முன்றுறைக் கலம்புணர் கம்மியர்

---

௫௪. தளர்நடையாயம் - சிறார்கூட்டம்.

௫௬. ஐம்படைத்தாலி : மணி. ௩ : ௧௩௮, உரையைப்பார்க்க.

௫௮ - ௯. காவற் பெண்டிர் - செவிலித்தாயர். கடிப்பகை: மணி. எ : எ௩. காவற்பெண்டிர் துயில்வதியவும்.

௬௦. இறை - வீட்டின் இறப்பு. ௬௧. கா - சோலை.

௬௨. களி - களிப்பு ; கூத்துமாம். ௬௩. நடுநாள் - நடு இரவில்.

௪௯ - ௬௩. தன்மையிற் றிரியவும், வீழ்துணை தழுவவும், துயில் வதியவும், கருவி கண்டுயின்று நா உள்ளழுந்தி முழவுக்கண்டுயின்று ஊர் பாயல்கொள் நடுநாளிலென்க.

௬௪. கன்னலின் - நாழிகை வட்டிலால் ; முல்லை. ௫௮.

௬௫. யாமங்கொள்பவர் - நாழிகைக்கணக்கர் ; சிலப். ௫ : ௪௯.

௬௬. உண்ணு உயக்கம் - உண்ணாமையாலுண்டாகிய வருத்தம்.

௬௭. நெடுங்கூவிளி - நெடியகூப்பிடுதலின் முழக்கம் ; மணி. எ : ௧௧௫.

௬௮. சிற்றிடைமுடுக்கர் - சிறிய இடங்களையுடைய முடுக்குத் தெருக்கள்.

௬௯. துடி - ஒருவகைத் தோற்கருவி.

எ௦. கலம்புணர் கம்மியர் - கப்பலிற் சேர்ந்து தொழில் செய்வோர்.

(பி - ம்.) ௫௪. 'தாங்காதோடி' ௬௨. 'களிப்படங்கி' ௬௪ - ௫. 'குறிநீர்க் கன்னல், யாமங்கொள்வோர்' ௬௬. 'ஒங்கிய'

துழந்தடு கள்ளின் றோப்பியுண் டயர்ந்து
பழஞ்செருக் குற்ற வனந்தர்ப் பாணியு
மரவாய்க் கடிப்பகை யையவிக் கடிப்பகை
விரவிய மகளி ரேந்திய தூமத்துப்
புதல்வரைப் பயந்த புனிறுதீர் கயக்கந்
தீர்வினை மகளிர் குளனா டரவமும்
வலித்த நெஞ்சி னாடவ ரின்றியும்

---

௭௧. துழந்து அடு கள்ளின் தோப்பி உண்டு அயர்ந்து - துழாவிச் சமைத்த கள்வகைகளில் நெல்லாற் சமைத்த கள்ளையுண்டு தம்மை மறந்து; "இல்லடு கள்ளின் றோப்பி பருகி" பெரும்பாண். ௧௪௨.

௭௨. அனந்தர் - கள்ளை உண்டமையாலுண்டாகிய செருக்கு; "அனந்தர் நடுக்க மல்ல தியாவதும்" பொருந. ௯௪.

௭௩. கடிப்பகை - பேய்க்குப் பகையாகவுள்ளதென்று பொருள்; அரவாய்க்கடிப்பகை - அரம்போன்ற வாயினையுடைய வேப்பிலை. ஐயவிக்கடிப்பகை - வெண் சிறுகடுகு; இவை பேய்க்குப்பகை யென்பதை, புறநா. ௨௮௧-ஆம் செய்யுளாலும் உணர்க. பேய்முதலியவைகள் அணுகாதிருத்தற்கு இருவகைக் கடிப்பகையும் கூறப்பட்டன; மணி. ௩: ௧௩௪, உரையைப் பார்க்க.

௭௪. தூமத்து - புகையுடன்.

௭௩-௪. மகளிரேந்திய அரவாய்க்கடிப்பகை ஐயவிக்கடிப்பகை விரவிய தூமம் ஆகிய இந்த இரண்டுடன் சென்று என ஒருசொல் வருவிக்க.

௭௫-௬. புனிறுதீர்மகளிர் : கயக்கந்தீர்மகளிரென்க; கயக்கம் - கயங்குதல். புதல்வரைப்பெற்றுப் புனிறுதீர்ந்த மகளிர் இரவிற்சென்று குளத்தில் நீராடுதலை, "கணவ ருவப்பப் புதல்வர்ப் பயந்து, பணைத்தேந் திளமுலை யமுத மூறப், புலவுப்புனிறு தீர்ந்த பொலிந்த சுற்றமொடு, வளமனை மகளிர் குளநீ ரயர" (மதுரை. ௬00-௬0௩) என்பதனாலுமுணர்க. புதல்வரைப்பெற்றமகளிர் எழுந்துசென்று பத்தாவது இரவில் நீராடவேண்டுமென்று ஆபஸ்தம்பக்ருஹ்யத்தின் ௧௫-ஆம் கண்டத்துள்ள ௮-ஆம் ஸூத்திரத்தாலும், அந்நூலை அநுஸரித்துத் தோழப்பரென்று வழங்குகிற வைதிகஸார்வபௌமரியற்றிய க்ருஹ்யரத்னத்தில் ௬-ஆம் கண்டத்தில் நாமகரணப் பிரகரணத்திலுள்ள, "தசமேஹ்நி" என்னும் ஸூத்திரத்தாலும் தெரிகின்றதென்பர்.

௭௭. வலித்த நெஞ்சின் ஆடவர் இன்றியும் - பகைமையைக் கருதிய நெஞ்சினையுடைய வீரர் இல்லாதிருக்கவும்.

(பி-ம்.) ௭௧. 'துழந்தகள்ளின் தொப்பிரண்டயர்ந்து' ௭௩. 'நாவாய்க் கடிப்பகை' ௭௪. 'இரவியன்மகளிர்' ௭௫-௬. 'புதல்வர்ப்பயந்தபுனிறுதீருகத்து', 'விரிவியன்மகளிர்குளநாளரவமும்', 'புனிறுதீருயக்கந், தீர்வியன்.'

புலிக்கணத் தன்னோர் பூத சதுக்கத்துக்
கொடித்தேர் வேந்தன் கொற்றங் கொள்கென
விடிக்குரன் முழக்கத் திடும்பலி யோதையு
மீற்றிளம் பெண்டி ராற்றாப் பாலகர்
கடுஞ்சூன் மகளிர் நெடும்பு ணுற்றோர்
தந்துயர் கெடுக்கு மந்திர மாக்கண்
மன்றப் பேய்மகள் வந்துகைக் கொள்கென
நின்றெறி பலியி னெடுங்குர லோதையும்
பல்வே றோதையும் பரந்தொருங் கிசைப்பக்
கேட்டுளங் கலங்கி யூட்டிரு ளழுவத்து
முருந்தே ரிளநகை நீங்கிப் பூம்பொழிற்
றிருந்தெயிற் குடபாற் சிறுபுழை போகி
மிக்கமா தெய்வம் வியந்தெடுத் துரைத்த
சக்கர வாளக் கோட்டத் தாங்கட்
பலர்புகத் திறந்த பகுவாய் வாயி
லுலக வறவியி னொருபுடை யிருத்தலுங்

---

௭௮. புலிக்கணத் தன்னோர் - வீரர். பூத சதுக்கத்து - பூதத்தை யுடைய சதுக்கத்திலே; சதுக்கம் - நாற்சந்தி.

௮௧. மூ. மணி. ௬: ௯௮.

௮௨. கடுஞ்சூல்மகளிர் - முதற்சூலையுடைய மகளிர்; "கடுஞ்சூன் முண்டகங் கதிர்மணி கழாஅலவும்" சிறுபாண். ௧௪௮.

௮௭. ஊட்டிருளழுவத்து - ஊட்டினாற்போன்ற இருட்பரப்பில்.

௮௯. மூ. மணி. ௬ : ௨௨.

௯௨ - ௩. மூ. மணி. ௧௭: ௭௭ - ௮. உலக அறவி - ஊரம்பலம்; எல்லாச்சாதியாரும் வந்து தங்குதற்குரிய தருமசாலை; இதனை, 'லோகோபகாரிகா' என்பர் வடநூலார்.

௪௧ - ௯௩. சுதமதியெழுந்து நடுநாளில் எத்தொலியரவமும், நெடுங்கூவிளியும், துடியோதையும், அனந்தர்ப்பாணியும், குளறுடரவமும், பலியோதையும், நெடுங்குரலோதையும் ஆகிய பல ஓசைகளையும் கேட்டு உளம்கலங்கி நீங்கிப் போகிச் சக்கரவாளக்கோட்டத்திடத்தே உலகவறவியின் ஒரு புடையிருத்தலுமென்க.

(பி - ம்.) ௭௮. 'பூதச்சதுக்கத்து' ௮௫. 'புலியின்' ௮௭. 'பூட்டிரு ளழுவத்து' ௮௮. 'நீங்கிய பூம்பொழில்' ௯௩. 'உலகவிறைவி யொருபுடை'

கந்துடை நெடுநிலைக் காரணங் காட்டிய
வந்தி லெழுதிய வற்புதப் பாவை
மைத்தடங் கண்ணாள் மயங்கினள் வெருவத்
திப்பிய முரைக்குந் தெய்வக் கிளவியி

---

௯௪ - ௫. நெடுநிலை உடைக்கந்து அந்தில் - நெடிய தோற்றத்தையுடைய தூணாகிய அவ்விடத்தே. காரணம் காட்டிய - பழவினையாகிய காரணத்தை யாவருக்கும் காட்டுதற்பொருட்டு. எழுதிய - மயனென்னும் தெய்வத்தச்சனால் நிருமிக்கப்பட்ட. அற்புதப்பாவை - யாவருக்கும் ஆச்சரியத்தை உண்டுபண்ணுகின்ற பாவை; இது, மேற்கூறிய உலகவறவியிற் சம்பாபதி கோயிலின் கிழக்கேயுள்ள தூணொன்றில் தெய்வகணத்தோனாகிய துவதிகனென்பவனுடைய வடிவம்போல மயனால் நிருமிக்கப்பட்ட பாவை; முக்காலச்செய்தியையும், கேட்போர்க்குச் சொல்லும் இயல்பையுடையது; பேசுதல்பற்றி இது நாவுடைப்பாவையென்றுஞ் சொல்லப்படும். இவற்றை, "கந்துடை நெடுநிலைக் கடவு ளெழுதிய, வந்திற் பாவை யருளு மாயிடின்" (௧௫ : ௩௩ - ௪), "கந்துடை நெடுநிலைக் காரணங் காட்டிய, தந்துணைப் பாவையை" (௧௭ : ௮௯ - ௯௦), "நெடுநிலைக் கந்தி னிடவயின் விளங்கக், கடவு ளெழுதிய பாவையாங் குரைக்கும்" (௨௦ : ௧௧௦ - ௧௧), "கடவு ளெழுதிய நெடுநிலைக் கந்தின், குடவயி னமைத்த நெடுநிலை வாயின், முதியாள் கோட்டம்" (௨௧ : ௧ - ௩), "என்றிவை சொல்லி யிருந்தெய்வ முரைத்தலும்" (௨௧ : ௩௫), "மன்பெருந் தெய்வ கணங்களி னுள்ளேன், றுவதிக னென்பேன் றொன்றுமுதிர் கந்தின், மயனெனக் கொப்பா வகுத்த பாவையி, னீங்கேன்" (௨௧ : ௧௩௦ - ௩௩), "நெடுநிலைக் கந்தி னின்ற பாவை" (௨௨ : ௨), "இலகொளிக் கந்தி னெழுதிய பாவாய்" (௨௨ : ௯௧ , "நாவுடைப் பாவை நங்கையை யெடுத்தலும்" (௨௨ : ௯௪), "நாவுடைப் பாவையை நலம்பல வேத்தி" (௨௨ : ௧௦௪) என இந்நூலில் வருவனவற்றாலுணர்க. எழுதிய - பண்ணிய; "கடவு ளெழுதவோர் கற்றா ராரெனின்" (௨௫ : ௧௩௦), "கடவு ளெழுதவோர் கற்கே யாதலின்" (ஷை : ௧௬௯), "கடவு ளெழுதவோர் கற்கொண் டல்லது" (௨௬ : ௧௪) எனச் சிலப்பதிகாரத்து வருதல்காண்க.

௯௬. மைத்தடங்கண்ணாள் - சுதமதி.

௯௭. திப்பியம்: இது, திவ்யமென்னும் வடமொழிச்சிதைவு; தேவலோகத்திலிருப்பதென்று பொருள். இவ்வாறு இறந்தகால எதிர்காலச் செய்திகளைக் கூறுதல் பெரும்பாலும் இவ்வுலகவழக்கமன்மையின் இதனை, 'திப்பியம்' என்றார். "செங்கோல் காட்டிய தெய்வமுந் திப்பியம், பையர வல்குல் பலர்பசி களையக், கையி லேந்திய பாத்திரந் திப்பிய, முத்தை முதல்வி யடிபிழைத் தாயெனச், சித்திர முரைத்த விதூஉந் திப்பியம்" (௧௯ : ௧௦ - ௧௪) என்று இந்நூலுள்ளே, 'திப்பியம்' என்பது இப்பொருளில் வருதல் காண்க. தெய்வக் கிளவியினால் திப்பிய முரைக்கும்; தெய்வக்கிளவி - தெய்வத்தன்மையுள்ள சொல்; வடசொல்லாலெனினுமமையும்.

ணிரவி வன்ம னொருபெரு மகளே
துரகத் தானைத் துச்சயன் றேவி
தயங்கிணர்க் கோதைத் தாரை சாவுற
மயங்கி யானைமுன் மன்னுயிர் நீத்தோய்
காராளர் சண்பையிற் கௌசிகன் மகளே
மாருத வேகனோ டிந்நகர் புகுந்து
தாரை தவ்வை தன்னொடு கூடிய
வீரை யாகிய சுதமதி கேளா
யின்றேழ் நாளி லிடையிருள் யாமத்துத்
தன்பிறப் பதனொடு நின்பிறப் புணர்ந்திங்
கிலக்குமி யாகிய நினக்கிளை யாள்வரு
மஞ்சலென் றுரைத்த தவ்வுரை கேட்டு

---

௯௮. இரவிவன்மன் - அசோதரநகரத்தரசன்; சுதமதியென்பவளுடைய முற்பிறப்பில் தந்தையா யிருந்தவன்.

௯௮ - ௯. மூ. மணி. ௧௧: ௧௩௩-௪. துச்சயன்—துர்ஜயன் - பகைவர்களால் வருத்தமுற்று வெல்லப்படுபவனென்று பொருள்; இவன் அங்கநாட்டிலுள்ள கச்சயமென்னும் நகரத்தரசன்; சுதமதியென்பவளுடைய முற்பிறப்பிற் கணவனாக விருந்தவன்; மணி. ௧௦: ௫௦ - ௫௪.

௧௦௦. தாரை - இவள் வீரைக்கு முன்னே பிறந்தவள்; வீரை யானையால் இறந்தது கேட்டு இவள் இறந்தமையால், 'சாவுற' என்றார்; மணி. ௧௨: ௪௫ - ௮

௧௦௧. மயங்கி - மதுவைக் குடித்தமையால் மயங்கி.

௧௦௨. காராளர்சண்பை - அங்கநாட்டிற் கங்கைக்கரையிலுள்ளதாகிய சம்பாநகரம்; இப்பொருளில், காராளரென்பது கராளரென்பதன் விகார மென்றும், கொடுமையென்று பொருள்படுகின்ற கராளத்வம் அல்லது கராளதையென்பது இச்சொற்குப் பகுதியென்றும், இக்காராளர்கள் துர்க்காபூஜை செய்துநரபலிகொடுப்போரென்றும், இப்பெயர் இக்காலத்து மஹாராஷ்டிர தேசத்திற் கராடிகளென்று வழங்குகிறதென்றுங் கூறுவர்; மணி. ௫: ௨௧.

௧௦௪. தாரை தவ்வை - தாரையாகிய தவ்வை; தவ்வை - முன்பிறந்தவள். தாரை யென்பது மாதவியென்பவளுடைய முற்பிறப்புப் பெயர்.

௧௦௫. வீரையென்பது சுதமதியென்பவளுடைய முற்பிறப்புப்பெயர்.

௧௦௮. இலக்குமியென்பது மணிமேகலையின் முற்பிறப்பின் பெயர்; தாரை, வீரை, இலக்குமி இம்மூவரும் சகோதரிகள்.

௧௦௯. அஞ்சல் - அஞ்சாதே. தெய்வம் உரைத்தது.

(பி - ம்.) ௯௭ - ௮. 'இளவி யிரவிவன்மகனொரு' ௧௦௧. 'மயங்கியல் யானை' ௧௦௨. 'காராளகசண்பை' ௧௦௪. 'தாரைதனவ்வை' ௧௦௫. 'சுதைமதி' ௧௦௬. 'இன்றேளாளிடையிடை' ௧௦௭ - ௮. 'உன்பிறப் புணர்ந்தீங், கலக்குமியாகிய'

நெஞ்சு நடுக்குறாஉ நேரிழை நல்லாள்
காவ லாளர் கண்டுயில் கொள்ளத்
தூமென் சேக்கைத் துயில்கண் விழிப்ப
வலம்புரிச் சங்கம் வறிதெழுந் தார்ப்பப்
புலம்புரிச் சங்கம் பொருளொடு முழங்கப்
புகர்முக வாரண நெடுங்கூ விளிப்பப்
பொறிமயிர் வாரணங் குறுங்கூ விளிப்பப்
பணைநிலைப் புரவி பலவெழுந் தாலப்
பணைநிலைப் புள்ளும் பலவெழுந் தாலப்
பூம்பொழி லார்கைப் புள்ளொலி சிறப்பப்
பூங்கொடி யார்கைப் புள்ளொலி சிறப்பக்
கடவுட் பீடிகைப் பூப்பலி கடைகொளக்
கலம்பகர் பீடிகைப் பூப்பலி கடைகொளக்

கக0. நல்லாள் - சுதமதி.

ககஉ. சேக்கைத் துயில் கண் - படுக்கையில் தூங்குகின்ற ஆடவர் மகளிரென்னும் இருபாலாருடைய கண்கள்.

ககங. வறிதெழுந்தார்ப்ப - பொருளின்றி முழங்க.

ககச. புலம் - அறிவு. சங்கம் - புலவர் கூட்டம்.

ககரு. வாரணம் - யானை. நெடுங்கூ விளிப்ப - நெடியகூப்பீட்டைச் செய்ய; மணி. எ: சுஎ. கூ - கூப்பீடு; "வினைபுனை நல்லில் வினைகூஉக் கேட்பவும்" புறநா. சச.

ககசு. வாரணம் - கோழி.

ககஎ. பணை - குதிரைப்பந்தி. ஆல - ஆட.

ககஅ. பணை - கிளை. ஆல - முழங்க.

கககூ. பூம்பொழில் ஆர்கைப் புள் ஒலி சிறப்ப - பொலிவு பொருந்திய சோலையினிடத்தே நிறைதலையுடைய பறவைகளின் முழக்கம் அதிகரிக்க.

கஉ0. பூங்கொடியார் - மகளிர். புள் - கைவளை; "புட்கை போகிய புன்றலை மகார்" மலைபடு. உருங.

கஉக. தெய்வங்களுக்குரிய பீடங்களிற் கொடுக்கப்படும் பொலிவு பெற்ற பலிகளானவை முடிவுகொள்ள.

கஉஉ. அணிகலங்கள் விற்கப்படுகின்ற அங்காடிவீதியில் மலராற் செய்யப்படும் அர்ச்சனைகளைக் கடையிடங்கள் கொள்ள; "பூப்பலி செய்து காப்புக்கடை நிறுத்தி" (சிலப். உஅ: உஙக.) வாயில்களில் இல்லுறை தெய்வங்களின் பொருட்டுக் காலையிற் பூவிடுதல் மரபு.

(பி - ம்.) ககங. 'வலம்புரிசங்கம்' ககச. 'புலம்புரிசங்கம்', 'பொலம்புரிச்சங்கம்.' ககஎ. 'ஆர்ப்ப' ககஅ. 'கணநிலைப்புள்ளும்...ஆர்ப்ப' கஉக. 'கடிகொள' கஉஉ. 'பூப்பொலிகடிகொள'

குயிலுவர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழக்
கொடுப்போர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழ
ஊர்துயி லெடுப்ப வுரவுநீ ரழுவத்துக்
காரிருள் சீத்துக் கதிரவன் முளைத்தலு
ஏவுறு மஞ்ஞையி னினைந்தடி வருந்த
மாநகர் வீதி மருங்கிற் போகிப்
போய கங்குலிற் புகுந்ததை யெல்லா
மாதவி தனக்கு வழுவின் றுரைத்தலு
நன்மணி யிழந்த நாகம் போன்றவ
டன்மகள் வாராத் தனித்துய ருழப்ப
வின்னுயி ரிழந்த யாக்கையி னிருந்தன
டுன்னிய துரைத்த சுதமதி தானென்.

எ.—துயிலெழுப்பியகாதை முற்றிற்று.

கஉ௩. தோற்கருவி வாசிப்பாருடைய இடங்களிலெல்லாம் செவ்வை செய்யப்பட்ட வாத்தியங்கள் பரவியெழ; பண் - இசையென்றுமாம்.

கஉ௪. உபகாரிகளுடைய வாயில்கள்தோறும் கொடுத்தற்குரிய பல பண்டங்களும் பரவுதலுற்றுமிக.

கஉ௫. எடுப்ப - எழுப்ப. உரவுநீரழுவத்து - கடற்பரப்பில்.

கஉ௬. சீத்து - அழித்து.

கஉ௭. ஏ - அம்பு; "சுதமதி கேட்டுத் துளக்குறு மயில்போல்" (௪ : ௮௬) என்றார் முன்னும்; மு. முல்லை. ௮௪.

கஉ௯. போயகங்குலில் - சென்ற இரவில்.

க௩க. "மன்னவன் மகனுக் குற்றது பொறாஅ, னன்மணி யிழந்த நாகம் போன்று" (௨௫ : க௯௪ - ௫) என்று இவ்வுவமையே பின்னும் வரும்; "இருநிதிக் கிழவனும் பெருமனைக் கிழத்தியு, மருமணி யிழந்த நாகம் போன்றதும்" (சிலப். க௩ : ௫௭ - ௮.) அவள் - மாதவி.

க௩௩. "இன்னுயி ரிழந்த யாக்கை யென்னத், துன்னிய சுற்றந் துயர்க்கடல் வீழ்ந்ததும்" (சிலப். க௩ : ௫௯ - ௬௦) என்புழியும் இவ்வுவமை வருதல் காண்க.

க-க௩௪. மணிமேகலாதெய்வம் நீங்கித் தோன்றி உரைத்தபின் புகுந்து நீக்கி உரையென்று போயபின், சுதமதி எழுந்து கேட்டு உளங் கலங்கி நீங்கிப் போகி ஒருபுடையிருத்தலும், பாவை உரைக்கும்; அது, 'வரும், அஞ்சல்' என்று உரைத்தது; அதனைக்கேட்டு நடுக்குறுநல்லாள், கதிரவன் முளைத்தலும் போகி மாதவிக்குரைத்தலும், அவள் துயருழப்பத் தான் உயிரிழந்த யாக்கை போல இருந்தனளென முடிக்க.

(பி - ம்.) கஉ௫. 'எடுப்பிய', 'எழுப்பிய.' கஉ௯. 'போகியகங்குல்' க௩உ. 'மகவாரா'

எட்டாவது

மணிபல்லவத்துத்துயருற்றகாதை.

[எட்டாவது மணிமேகலை
மணிபல்லவத்துத்துயிலெழுந்து துயருற்றபாட்டு.]

ஈங்கிவ ளின்னண மாக விருங்கடல்
வாங்குதிரை யுடுத்த மணிபல் லவத்திடைத்
தத்துநீ ரடைகரைச் சங்குழு தொடுப்பின்
முத்துவிளை கழனி முரிசெம் பவளமொடு
விரைமர முருட்டுந் திரையுலாப் பரப்பின்
ஞாழ லோங்கிய தாழ்கண் ணசும்பி
னாம்பலுங் குவளையுந் தாம்புணர்ந்து மயங்கி
வண்டுண மலர்ந்த குண்டுநீ ரிலஞ்சி
முடக்காற் புன்னையு மடற்பூந் தாழையும்
வெயில்வர வொழித்த பயில்பூம் பந்த

---

௧. இவள் - சுதமதி.

௩. அடைகரையில். தொடுப்பு - விளாக்கொண்டு உழுதல்; "தொடுப்பே ருழவ ரோதைப் பாணியும்" சிலப். ௨௭ : ௨௩0.

௩ - ௪. அடைகரையாகிய கழனியிலென்றுமாம்.

௫. விரைமரம் - சந்தனம் அகில் முதலியன; "விரைமர மென்றகில்" (௧௬ : ௧௨௨) என்பர்மேலும். "வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகின்" சிறுபாண். ௧௫௫.

௬. ஞாழல் - புலிநகக்கொன்றை; "பொன்னுறு ஞாழற் பூவுடன் கடுக்கும், பேழ்வாய்ப் புலியுகிர்" (கல். ௫௨.) அசும்பு - சேறு; "வார சும் பொழுகு முன்றில்" புறநா. ௧௧௪.

௭. மயங்கி - கலந்து.

௮. குண்டு நீர் இலஞ்சி - ஆழமான நீரையுடைய பொய்கைக்கரை; இலஞ்சி : ஆகுபெயர்.

௯. முடம் - வளைவு. ௧0. பந்தர் - நிழல்.

௯ - ௧0. புன்னையும் தாழையும் வெயிலின் வரவையொழித்த பந்தர்.

(பி - ம்.) ௧. 'ஈங்கிவரிங்ஙனம்', 'ஈங்கிவரிஞ்ஞனம்.' ௪. 'முத்துவிளைகழனி' ௫. 'வரைமாமுருட்டு' ௬. 'தாழ்கண்ணசுரும்பி'

ரறல்விளங்கு நிலாமண னறுமலர்ப் பள்ளித்
துஞ்சு துயிலெழூஉ மஞ்சி லோதி
காதற் சுற்ற மறந்து கடைகொள
வேறிடத்துப் பிறந்த வுயிரே போன்று
பண்டறி கிளையொடு பதியுங் காணாள்
கண்டறி யாதன கண்ணிற் காணா
நீல மாக்கட னெட்டிடை யன்றியுங்
காலை ஞாயிறு கதிர்விரித்து முளைப்ப
வுவவன மருங்கினி லோரிடங் கொல்லிது
சுதமதி யொளித்தாய் துயரஞ் செய்தனை
நனவோ கனவோ வென்பதை யறியேன்
மனநடுக் குறூஉ மாற்றந் தாராய்
வல்லிருள் கழிந்தது மாதவி மயங்கு
மெல்வளை வாராய் விட்டகன் றனையோ
விஞ்சையிற் றோன்றிய விளங்கிழை மடவாள்
வஞ்சஞ் செய்தனள் கொல்லோ வறியே

கக. அறல் - நீர்அரித்து ஒழுகுதலால் உண்டாவது; "மட்டற னல்யாற்று" (புறநா. களஎ.) நிலாமணல் - நிலாவைப் போன்ற வெள்ளிய மணல். மலர்ப்பள்ளி - உதிர்ந்து கிடக்கும் மலராகிய படுக்கையில்.

கஉ. அஞ்சிலோதி-அழகிய சிலவானமயிரினையுடையாள்; "அஞ்சிலோதி யரசனுக் கொருநாள்" (உங : உச) என்பர்மேலும்; "அஞ்சிலோதி" குறிஞ்சி. கஅ0.

க - கஉ. மணிபல்லவத்திற் கரையிற் கழனியிற் பரப்பில் இலஞ்சிக் கரையில் மணலிற் பள்ளியில் துயிலெழுந்த மணிமேகலை யென்க.

கங. கடைகொள - முடிவுகொள்ள. கரு. காணாள் - காணாளாகி.

கசா. கண்டறியாதனவற்றைக் கண்ணிற் கண்டு.

கஎ. நெட்டிடை - நெடிய இடம்.

ககூ. 'உவவனம்' என்பது முதல் மணிமேகலை கூற்று.

உ0. சுதமதி: விளி. உக. இந்தநிலை நனவோ கனவோ.

உங. மயங்கும் - மயங்குவாள்.

உச. மெல்லிய வளையினையுடையாய்; எல்வளையுமாம்.

உரு. விஞ்சையிற் றோன்றிய - வித்தையினாலே தோன்றிய.

(பி - ம்.) கக. 'துறல்விடங்கு நிலாமணற்றூமலர்' கச. 'ஒதிடத்து' கரு. 'பதியங்காணாள்' கசா - எ. 'காண, நீலமாகடல்' கஅ. 'காலஞாயிறு' உ0. 'ஒழித்தாய்'

ஒருதனி யஞ்சுவென் றிருவே வாவெனத்
திரைதவழ் பறவையும் விரிசிறைப் பறவையு
மெழுந்துவீழ் சில்லையு மொடுங்குசிறை முழுவலு
மன்னச் சேவ லரச னாகப்
பன்னிறப் புள்ளினம் பரந்தொருங் கீண்டிப்
பாசறை மன்னர் பாடி போல
வீசுநீர்ப் பரப்பி னெதிரெதி ரிருக்குந்
துறையுந் துறைசூழ் நெடுமணற் குன்றமும்
யாங்கணுந் திரிவோள் பாங்கினங் காணாள்
குரற்றலைக் கூந்தல் குலைந்துபின் வீழ
வரற்றினள் கூஉ யழுதன ளேங்கி
வீழ்துய ரெய்திய விழுமக் கிளவியிற்

௨எ. ஒருதனி - ஒப்பற்றதனிமையை. வாவென - வாவென்று சொல்லிக்கொண்டு.

௨அ - ௯. அலையில் தவழ்ந்துசெல்லும் பறவைமுதலிய நீர்வாழ் பறவைச்சாதிகள் நான்கும்.

௨அ - ௩௧. திரைதவழ் பறவைமுதலியனவாகிய பன்னிறப் புள்ளினம்.

௩௨. போர்குறித்துவந்து படைவீடுகளில் விட்ட பகையரசரிருவருடைய படைகளிரண்டும் எதிரெதிரிருத்தல்போல. பாடி - படைவீடு.

௨அ - ௩௪. திரைதவழ்பறவை முதலியன, அன்னச்சேவல் அரசனாக நீர்ப்பரப்பில் எதிரெதிரிருக்குந் துறையென்க. இப்படியே, "கம்புட் கோழியுங் கனைகுர னாரையுஞ், செங்கா லன்னமும் பைங்காற் கொக்குங், கானக் கோழியு நீர்நிறக் காக்கையு, முள்ளு மூரலும் புள்ளும் புதாவும், வெல்போர் வேந்தர் முனையிடம் போலப், பல்வேறு குழூஉக் குரல் பரந்த வோதையும்" (௧0 : ௧௧௪ - ௯) என்றார் சிலப்பதிகாரத்தும்.

௩௪ - ௫. துறையும் குன்றமுமாகிய யாங்கணும். திரிவோள் - மணிமேகலை. பாங்கினம் - பக்கத்திலுள்ள இனங்களை.

௨எ - ௩௫. திருவே வாவெனத் திரிவோள்.

௩௬. குரற்றலைக் கூந்தல் - பூங்கொத்தை இடத்தேயுடைய கூந்தல்; "குரற்றலைக் கூந்தல் குடசம் பொருந்தி" (சிலப். ௧௪ : அஎ); "குரற்றலைக் கூந்தல் குலைந்துபின் வீழ" ஷை. ௩0 : ௩அ.

௩எ. கூஉய் - கூவி.

௩அ. விழுமக்கிளவியின் - துன்பத்தைப் புலப்படுத்தும் சொற்களால்.

(பி - ம்.) ௨எ. 'அஞ்சுவானறிவேவாவெனத்' ௨௯. 'சிலாலையுமொடுங்கு சிறைமுழவலும்', 'ஒடுங்குசிறைமூழும்.' ௩௧. 'புள்ளும் பரந்து' ௩௩. 'நெறி யெதிர்நிற்குந்', 'எதிரெதிர்நிற்கும்.' ௩௬. 'குரற்றலை கூந்தல்' ௩அ - ௯. 'விழுக்கிளவியற்றாழ்ந்து'

ருழ்துய ருறுவோ டந்தையை யுள்ளி
யெம்மிதிற் படுத்தும் வெவ்வினை யுருப்பக்
கோற்றொடி மாதரொடு வேற்றுநா டடைந்து
வைவா ளுழந்த மணிப்பூ ணகலத்
தையா வோவென் றழுவோண் முன்னர்
விரிந்திலங் கவிரொளி சிறந்துகதிர் பரப்பி
யுரைபெறு மும்முழ நிலமிசை யோங்கித்
திசைதொறு மொன்பான் முழநில மகன்று
விதிமா ணாடியின் வட்டங் குயின்று
பதும சதுர மீமிசை விளங்கி
யறவோற் கமைந்த வாசன மென்றே
நறுமல ரல்லது பிறமரஞ் சொரியாது
பறவையு முதிர்சிறை பாங்குசென் றதிராது
தேவர்கோ னிட்ட மாமணிப் பீடிகை

---

௩௯. தந்தையையுள்ளி - கோவலனை நினைந்து.

௪௦. எம்மிதிற்படுத்தும் வெவ்வினை - எம்மை இத்துன்பத்தினிடத்தே அகப்படுத்தும் வெவ்விய வினை; "என்னிதிற் படுத்த வேந்தல்" (சீவக. ௭௧௩.) உருப்ப - முதிர; "ஊழ்வினை யுருத்தென்" (சிலப். ௧௬: ௨௧௭); கோபிக்கவென்றுமாம்.

௪௧. கோற்றொடிமாதர் - கண்ணகி. வேற்றுநாடு - பாண்டிநாடு.

௪௨. வைவா ளுழந்த - கூரியவாளால் வெட்டுண்டு வருந்திய. அகலம் - மார்பு.

௪௫. நிலமிசை மும்முழமோங்கி.

௪௬. ஒன்பான் முழம் - ஒன்பது முழம்.

௪௭. விதிமாண்-விதி மாட்சிமைப்பட்ட.ஆடியின் வட்டங்குயின்று-பளிங்கினால் வட்டஞ் செய்யப்பட்டு.

௪௮. பதுமத்தையுடைய சதுரம்; பதுமமென்றதற்குப் புத்தனுடைய பாதங்களெனினும் பொருந்தும். மீமிசை - மேற்பட்ட இடம்.

௪௯. அறவோற்கு - புத்தனுக்கு.

௪௪-௯. சிறந்து பரப்பி ஓங்கி அகன்று குயின்று விளங்கி அமைந்த ஆசனமென்க.

௫௦. பிற - பிறவற்றை. மரம் நறு மலரையே சொரியும்.

௫௧. பறவையும் அப்பீடிகையின் பக்கத்திற்சென்று சிறையொலியைச் செய்யாது.

(பி - ம்.) ௪௦. 'மெய்விதறபடுத்து', 'எம்மிகற்படுத்தும்.' ௪௩. 'ஐயா கோவென்றழுவாள்' ௪௭. 'விதிமாண்டாடியின் விட்டணை குயின்று' ௪௮-௯. 'விளங்கியச், சிறவோர்' ௫௦. 'பிறமணஞ்' ௫௧. 'உதிராது'

பிறப்புவிளங் கவிரொளி யறத்தகை யாசனங்
கீழ்நில மருங்கி னாகநா டாளு
மிருவர் மன்னவ ரொருவழித் தோன்றி
யெமதீ தென்றே யெடுக்க லாற்றார்
தமபெரும் பற்று நீங்கலு நீங்கார்
செங்கண் சிவந்து நெஞ்சுபுகை யுயிர்த்துத்
தம்பெருஞ் சேனையொடு வெஞ்சமம் புரிநா
ளிருஞ்செரு வொழிமி னெமதீ தென்றே
பெருந்தவ முனிவ னிருந்தற முரைக்கும்

---

௫௩. பிறப்புவிளங்கு ஆசனம் - காண்போருடைய பழம்பிறப்புக்கள் அவர்களுக்கு விளங்குதற்குக் காரணமாகிய ஆசனம்.

௫௪. கீழ்நிலம் - கீழ்த்திசையிலுள்ள இடம். நாகரென்னும் ஒருவகை மனிதர் வாழும் நாடு நாகநாடென்பர்; இந்நாட்டின் பெயர், "நாகநன் னாட்டு நானூ றியோசனை" (௯: ௨௧), "நாகநாடு நடுக்கின் றாள்பவன்" (௨௪: ௫௪), "நாக நன்னா டாள்வோன்" (௨௫: ௧௭௮), "நாகநா டாள்வோன்" (௨௯: ௩) என இந்நூலினுள்ளே பின்பும் வருதல் காண்க. நாக இலச்சினையை (பாம்பின் அடையாளத்தை) உடைமையின், இவர்களுக்கு இப்பெயரும் தக்ஷகரென்ற பெயரும் வந்தனவென்று ஊகிக்கின்றனர்.

௫௬. எடுக்கல் ஆற்றார் - எடுக்கும் வன்மை இலராய்.

௫௭. தம பெரும்பற்று - தம்முடைய பெரிய விருப்பம். நீங்கலும் நீங்கார் - நீங்குதலையும் செய்யார்; "சுழலலுஞ் சுழலு, மோடலு மோடு மொருசிறை யொதுங்கி, நீடலு நீடும்" (௩: ௧௧௧ - ௩) என்றார் முன்னும்; "கறையிட றணியலு மணிந்தன்று" புறநா. ௧.

௫௮. நெஞ்சு புகையுயிர்த்து - மனங்கொதித்து; "வஞ்சினஞ் சாற்றி நெஞ்சுபுகை யுயிர்த்து" (௧௮: ௩௭) என்பர் மேலும்; "ஊதுலை தோற்க வுயிர்க்குமென் னெஞ்சன்றே" (௧௮: ௧௩) என்றார் சிலப்பதிகாரத்தும்.

௬௧. பெருந்தவ முனிவன் - புத்தன்; பொறிகளை யடக்கி நெடுநாள் மிக்க நியமத்தோடிருந்து அரியதவஞ்செய்தது பற்றி இவனைப் பெருந் தவ முனிவனென்றார்; "ஆதிசான் முனிவ னறவழி" (௭: ௧௯), "போது வறி விகழ்ந்து புலமுறு மாதவன்" (௧௦: ௮௪), "போதி மாதவன் பூமியிற் றோன்றும்" (௧௫: ௨௯), "பிணிப்பறு மாதவன் பீடிகை" (௨௫: ௩௪) என இந்நூலுள்ளே வருதல் காண்க; "பொருந்து போதியி, லிருந்த மாதவர், திருந்து சேவடி, மருந்து மாகுமே" (௩), "பூதலத்து ளெவ்வுயிர்க்கும் பொதுவாய திருமேனி, மாதவனீ" (௧௧), "மாதவரின் மாதவனீ வானவருள் வானவனீ" (௧௧) "மருளறுத்த பெரும்போதி மாதவரைக் கண்டிலமால்"(௧௫)என்பன வீரசோழியம் யாப்புப்படல உதாரணங்கள்.

(பி - ம்.) ௫௭. 'பற்றி' ௬௦. 'ஒழிமினெம' ௬௧. 'பெருந்தகை முதல் வனாந்தற முரைக்கும்.'

பொருவறு சிறப்பிற் புரையோ ரேத்துந்
தரும பீடிகை தோன்றிய தாங்கென்.

௮.—மணிபல்லவத்துத்துயருற்றகாதை முற்றிற்று.

———

௬௨. புரையோர் - ஈண்டு, பௌத்தரில் உயர்ந்தோர்; "புரை யோர்ப் பேணிப் போகலும் போகுவை" (மணி. ௨௧ : ௮௩), "அரசுவீற் றிருந்து புரையோர்ப் பேணி" (ஷை. ௨௫ : ௮௧), "புரையோர் தாமு மிப் பூம்பொழி லிழிந்து" ஷை. ௨௮ : ௧௧௨.

௫௨ - ௬௩. மாமணிப் பீடிகை, அறத்தகையாசனம், தருமபீடிகை அங்கே தோன்றியது.

௪௩ - ௬௩. அழுவோள்முன்னர்த் தோன்றிய தென்க.

௫௪ - ௬௩. இவ்வடிகளிற்கூறிய வண்ணமே, "வேக வெந்திற னாகநாட் டரசர்......திருந்தொளி யாசனம்" (௯ : ௫௮ - ௬௨) என்று பின்னுங்கூறுவர்.

௧ - ௬௩. இவள் இன்னணமாக, மணிபல்லவத்திடைத் துயி லெழும் அஞ்சிலோதி, போன்று காணாளாய்க் கண்டு, திருவே வாவென்று அழுவோள் முன்னர்த் தருமபீடிகை ஆங்குத்தோன்றிய தென்க.

———

ஒன்பதாவது

பீடிகைகண்டுபிறப்புணர்ந்தகாதை.

[ஒன்பதாவது மணிமேகலை மணிபல்லவத்திடைப்
பீடிகைகண்டு பிறப்புணர்ந்தபாட்டு.]

———

ஆங்கது கண்ட வாயிழை யறியாள்
காந்தளஞ் செங்கை தலைமேற் குவிந்தன

௧. அதுகண்ட - புத்தபீடிகையைக்கண்ட. ஆயிழை - மணிமே கலையானவள். அறியாள் - தன்னை அறியாளாயினாள். இது பதுமை பற்றி வந்த மருட்கையென்னும் மெய்ப்பாடு.

(பி - ம்.) ௨. 'குவிந்த'

தலைமேற் குவிந்த கையள் செங்கண்
முலைமேற் கலுழ்ந்துமுத் தத்திர ளுகுத்ததி
னிடமுறை மும்முறை வலமுறை வாராக்
கொடிமின் முகிலொடு நிலஞ்சேர்ந் தென்ன
விறுநுசுப் பலச வெறுநிலஞ் சேர்ந்தாங்
கெழுவோள் பிறப்பு வழுவின் றுணர்ந்து
தொழுதகை மாதவ துணிபொரு ளுணர்ந்தோய்
காயங் கரையினீ யுரைத்ததை யெல்லாம்
வாயே யாகுதன் மயக்கற வுணர்ந்தேன்
காந்தார மென்னுங் கழிபெரு நாட்டுப்
பூருவ தேயம் பொறைகெட வாழு
மத்தி பதியெனு மரசாள் வேந்தன்
மைத்துன னாகிய பிரம தரும

---

௩ - ௪. செங்கண் கலுழ்ந்து - சிவந்த கண்கள் கலங்கி. முலைமேல் முத்தத்திரள் உகுத்து - கொங்கைகளின்மேலே நீர்த்துளிகளைச் சொரிந்து. அதின் - அப்பீடிகையினது.

௬. மின்கொடி மணிமேகலையினுடைய உருவத்திற்கும், முகில் அவள் கூந்தலுக்கும் உவமை.

௭. அலச - வருந்த; (தக்க. ௪௨.) நிலஞ்சேர்ந்து - வணங்கி.

௮. எழுவோள் தனது முற்பிறப்பின் செய்தியை நன்றாக அறிந்து.

௯. 'தொழுதகை மாதவ' என்பதுமுதல், 'என்றெடுத் தோதினை' (௬௯) என்பதுஇறுதியாகவுள்ளவை, பிரமதருமனென்னுமுனிவன் முற்பிறப்பில் தனக்குக் கூறியவற்றைப் புத்தபீடிகைக் காட்சியாலறிந்து, அம்முனிவனை எதிர்பெய்து மணிமேகலை கொண்டுகூறுகின்றவை யெனக்கொள்க.

௧௦. காயங்கரை யென்பது ஒரு நதியின்பெயர். உரைத்ததை; ஐ: சாரியை. எல்லாம் - முழுவதும்.

௧௧. வாயேயாகுதல் - உண்மையாதலை; வாய் - உண்மை; "பொய்யறியா வாய்மொழியால்" மதுரை. ௧௯.

௧௨. பலதேயங்களைத் தன்னுள்ளே பெற்றதென்பார், 'காந்தார மென்னுங் கழிபெரு நாடு' என்றார்.

௧௩. பொறை - பாரம்; என்றது பாவத்தை.

௧௫. பிரமதருமன் : விளி.

(பி - ம்.) ௩. 'கையினள்' ௪ - ௫. 'கலிழ்ந்துமுத்தத்திரளுகுத்த தடமுறை' ௬ - ௭. 'நிலஞ்சேர்ந்ததென்ன, விறுநுசுப்பலைய' ௮. 'உணர்ந்தே' ௧௨ - ௧௩. 'கழிபெருநன்னாட்டுப், பூறுவதேசம்'

ளுங்கவன் றன்பா லணைந்தற னுரைப்போய்
தீங்கனி நாவ லோங்குமித் தீவிடை
யின்றேழ் நாளி லிருநில மாக்க
ணின்றுநடுக் கெய்த நீணில வேந்தே
பூமி நடுக்குறூஉம் போழ்தத் திந்நகர்
நாகநன் னாட்டு நானூ றியோசனை
வியன்பா தலத்து வீழ்ந்துகே டெய்து
மிதன்பா லொழிகென விருநில வேந்தனு
மாபெரும் பேரூர் மக்கட் கெல்லா
மாவு மாவுங் கொண்டுகழி கென்றே
பறையிற் சாற்றி நிறையருந் தானையோ
டிடவய மென்னு மிரும்பதி நீங்கி
வடவயி னவந்தி மாநகர்ச் செல்வோன்
காயங் கரையெனும் பேரியாற் றடைகரைச்
சேயுயர் பூம்பொழிற் பாடிசெய் திருப்ப
வெங்கோ னீயாங் குரைத்தவன் நாளிடைத்

---

௧௬. அவனென்றது அத்திபதியென்னும் அரசனை.

௧௭. சம்புத்தீவில்.

௧௮. மணி. ௭ : ௨௪.

௧௮ - ௨௦. இன்றேழ்நாளில் பூமி நடுக்குறும்பொழுதில்.

௨௦ - ௨௨. இந்த நகரும் நாகநாட்டில் நானூறு யோசனைப் பரப்பும் பாதலத்தில் விழுந்து கெடுதலுறும்.

௨௩. இதன்பால் ஒழிக என - இந்நகரினின்றும் புறத்தே செல்வாயாக வென்றுசொல்ல.

௨௫. ஆ - பசு. மா - மற்றை விலங்குகள். சிறிதும் தீங்குசெய்யத் தகாத சாதியாதலின், பசு முற்கூறப்பட்டது ; புறநா. ௯.

௨௬. நிறை அருந் தானையொடு - பகைமேற் செல்பொழுது நிறுத்துதலரியசேனையோடு ; " நிறையருந் தானை வேந்தனு நேர்ந்து " சிலப். ௨௫ : ௧௭௮.

௨௭. இடவயம் - அத்திபதியின் நகரம்.

௩௦. பொழிலில்.

௨௮ - ௩௦. செல்வோன் இருப்ப.

௩௧. எங்கோனென்றது பிரமதருமனை.

(பி - ம்.) ௧௬. 'தன்பாலணைந்தறமுரை' ௧௭. 'ஓங்குமத்தீவிடை' ௧௮. 'பின்றேழ்', 'மின்றேழ்.' ௨௬ - ௭. 'நிறையிருந்தானை யிடிவயம்' ௨௮. 'விடவயினவந்திம மானகர்', 'வசந்த மாநகர்.' ௨௯. 'பெயாற் றடைகரை' ௩௦ - ௩௧. 'இருதோமுனங் கோனீயங்'

தங்கா தந்நகர் வீழ்ந்துகே டெய்தலு
மருளறு புலவநின் மலரடி யதனை
யரசொடு மக்க ளெல்லா மீண்டிச்
சூழ்ந்தனர் வணங்கித் தாழ்ந்துபல வேத்திய
வருளறம் பூண்ட வொருபே ரின்பத்
துலகுதுயர் கெடுப்ப வருளிய வந்நா
ளரவக் கடலொலி யசோதர மாளு
மிரவி வன்ம னொருபெருந் தேவி
யலத்தகச் சீறடி யமுத பதிவயிற்
றிலக்குமி யென்னும் பெயர்பெற்றுப் பிறந்தே
னத்தி பதியெனு மரசன் பெருந்தேவி
சித்திபுர மாளுஞ் சீதரன் றிருமக
ணீல பதியெனு நேரிழை வயிற்றிற்
காலை ஞாயிற்றுக் கதிர்போற் றோன்றிய
விராகுலன் றனக்குப் புக்கே னவனொடு

---

௩௨. நகர்கேடெய்தியது கூறவே நாகநாட்டில் நானூறு யோசனைப் பரப்பினதுகேடும் கூறியதாயிற்று.

௩௫. ஏத்திய - ஏத்த. ௩௩ - ௫. நின்மலரடியதனை ஏத்த.

௩௭. அருளிய - உபதேசித்த.

௩௬ - ௭. இன்பத்தை அருளிய அந்நாளில்.

௩௮. கடலரவம்போன்ற ஒலியையுடைய அசோதர நகரம்; "மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்முளொலியும் பெருமையு மொக்கும்" என்று வருதல் காண்க.

௪0. அலத்தகம்=அலத்தம் - செவ்வரக்கு.

௩௯ - ௪0. தேவியாகிய அமுதபதி.

௪௧. பிறந்து இலக்குமியென்னும் பெயர்பெற்றேனென விகுதி பிரித்துக் கூட்டுக.

௪௨ - ௪. பெருந்தேவியும் மகளுமாகிய நீலபதி.

௪௬. இராகுலனென்பது புத்தனுடைய புத்திரன்பெயர்; அது புத்தனிடத்துள்ள பத்தியினால் இவனுக்கு இடப்பட்டதுபோலும்.

௪௫ - ௬. மனிதர்களுடைய பிறப்பிறப்புக்களுக்கு முறையே சூரியனுடைய தோற்றம்மறைவுகளை உவமை கூறுதல் பௌத்த சமயமரபாதலால், 'காலை ஞாயிற்றுக் கதிர்போற் றோன்றிய விராகுலன்' என்றார்; இதனை, "குணதிசைத் தோன்றி............ஆங்கவன் றானென்"

(பி - ம்.) ௩௩. 'மலரடிவணங்கி' ௩௪. 'எல்லாம் வீழ்ந்து' ௩௫ - ௬. 'ஏத்தி, யருளறம்' ௩௯. 'ஒருபெருமகளேன்' ௪௧. 'பெயர் பெறப்பிறந்தேன்' ௪௩. 'சித்தபுரம்' ௪௩ - ௪. 'சித்திரபுர மாளுஞ் சீதாருகன்மக, ணீலமதி'

பராவரு மரபினின் பாதம் பணிதலு
மெட்டிரு நாளிலிவ் விராகுலன் றன்னைத்
திட்டி விடமுணாஞ் செல்லுயிர் போனாற்
றீயழ லவனொடு சேயிழை மூழ்குவை
யேது நிகழ்ச்சி யீங்கின் றாதலிற்
கவேர கன்னிப் பெயரொடு விளங்கிய
தவாக்களி மூதூர்ச் சென்றுபிறப் பெய்துதி
யணியிழை நினக்கோ ரருந்துயர் வருநாண்

(௧௪ : ௯௯ - ௧௦௪), "தேவி கேளாய்...வீழ்கதிர் போன்றேன்" (௨௪ : ௧௦௧ - ௨), "சாக்கா டென்ப தருவுருத் தன்மை, யாக்கை வீழ்கதி ரெனமறைந் திடுதல்" (௩௦ : ௧௦௨ - ௩) என இந்நூலுள் வருவன வற்றாலுணர்க.

௩௭ - ௪௭. அந்நாளில்யான்இராகுலனோடு நின் பாதம் பணிதலும்.

௪௮. எட்டிருநாளில் - பதினாறுநாளில்.

௪௯. திட்டிவிடம் - கண்ணில் விடமுடையதொரு பாம்பு ; இதன் விழிக்கு எதிர்ப்பட்டோர் இறப்பர் ; இதனை, "திட்டி விடமுணச் செல் லுயிர் போவுழி" (௧௧ : ௧௦௦), "திட்டி விடமுண நின்னுயிர் போநாள்" (௨௧ : ௧௧), "திட்டி விடமுணச் செல்லுயிர் போயதும்" (௨௧ : ௪௦), "அழற்க ணாக மாருயி ருண்ண" (௨௩ : ௬௯), "நஞ்சுவிழி யரவி னல்லு யிர் வாங்கி" (௨௩ : ௮௪) என இந்நூலுள்ளே வருவனவற்றாலும், "புத் தன் திருஷ்டி விஷமாய்ப் பிறந்த ஜாதகத்து.........கண்விழிப்பிற் பிராணிகள் சாமென்றறிந்து தன் கண்விழியாதேகிடந்தமையின்" என வும், "நீ திருஷ்டிவிஷமானகாலத்து நினக்குக் கொலையுள்ளமில்லை யெனினும் கண்விழிக்கிற் பிராணிகள் சாமென்றறிந்து அதற்கஞ்சி விழி யாது கிடந்தது என்னோ" எனவும் வரும் நீலகேசிவிருத்தி சமயதிவாக ரத்தாலும் உணர்க; "கண்கிழித் துமிழ்விடக் கனலரா வரசு", "திட்டி யின் விடமன்ன கற்பின் செல்வியை" (கம்ப. தாடகை. ௧௦, கும்ப கர்ண. ௮௦) ; "திட்டி விஷத்தை", "திட்டி விஷமாகிய ஒரு மகாநாகம்" தக்க. ௫௫௪, ௬௪௫, உரை.

௫௨. இராசரிஷியும் யோகிகளிற் சிறந்தவருமாகிய கவேரரென்ப வர் முத்திபெறுதலைவிரும்பிப் பிரமதேவரைக்குறித்து அரிய தவம் செய்து அவரருளால் விஷ்ணுமாயையைத் தம் புத்திரியாக அடைந்து முத்தி பெற்றனரென்றும், பின்பு அக்கன்னி பிரமதேவர் கட்டளை யின்படி நதிவடிவுகொண்டு சென்றமையால் அந்நதி கவேரகன்னி யென்றும் காவேரியென்றும் பெயர்பெற்றதென்றும் ஆக்நேயபுராணத் தின் இரண்டாம்பாகத்துள்ள காவேரி மாகாத்மியத்தின் ௨௩-ஆம் அத்தி யாயத்தால் தெரிகின்றதென்பர் ; மணி. ௩ : ௫ - ௬, பார்க்க.

௫௩. மூதூர் - காவிரிப்பூம்பட்டினம். எய்துதி - அடைவாய்.

௫௪. அருந்துயரென்றது, உதயகுமரனால் மணிமேகலைக்கு உண் டாகும் மனவேறுபாட்டை.

(பி - ம்.) ௪௭. 'பாராவருமரபிற்பாதம்' ௪௯. 'விடமுண்டு', 'விடமுணச்.'

மணிமேகலாதெய்வம் வந்து தோன்றி
யன்றப் பதியி லாரிரு ளெடுத்துத்
தென்றிசை மருங்கிலோர் தீவிடை வைத்தலும்
வேக வெந்திற னாகநாட் டரசர்
சினமா சொழித்து மனமாசு தீர்த்தாங்
கறச்செவி திறந்து மறச்செவி யடைத்துப்
பிறவிப்பிணி மருத்துவ னிருந்தற முரைக்குந்
திருந்தொளி யாசனஞ் சென்றுகை தொழுதி
யன்றைப் பகலே யுன்பிறப் புணர்ந்தீங்
கின்றியா னுரைத்த வுரைதெளி வாயெனச்
சாதுயர் கேட்டுத் தளர்ந்துகு மனத்தேன்
காதலன் பிறப்புங் காட்டா யோவென
வாங்குனைக் கொணர்ந்த வரும்பெருந் தெய்வம்
பாங்கிற் றோன்றிப் பைந்தொடி கணவனை
யீங்கிவ னென்னு மென்றெடுத் தோதினை

௫௯. சினமாசு - கோபமாகிய குற்றம். மனமாசு - காமமும் மயக்கமும்.

௬௦. அறச்செவி - அறத்தைக் கேட்டற்குரிய காது; திறந்தென்றார், கேட்பினும் கேளாத் தகையவாதலின் (குறள். ௪௧௮); "அறவுரை கேட்டுணர்ந் தஞ்ஞான நீக்கி, மறவுரை விட்ட செவி" (அறநெறி. ௧௯௪.) மறம் - பாவம்.

௬௧. பிறவிப்பிணி மருத்துவன் - புத்தன்; மருத்துவன் - வைத்தியன்.

௫௮ - ௬௨. மணி. ௮ : ௫௪ - ௬௩.

௫௭ - ௬௨. வைத்தலும் சென்று ஆசனத்தைக் கைதொழுவாய்.

௬௪. என - என்று நீ சொல்ல.

௬௫. சாதுயர் கேட்டு - இராகுலன் இறப்பானென்னும் துன்பமொழியைக் கேட்டு.

௬௬. காதலன் - கணவன். பிறப்பும்; உம்மை: இறந்தது தழீஇய எச்சப்பொருளது.

௬௯. என்னும் - என்று சொல்லும்.

(பி - ம்.) ௫௮ - ௬௦. 'வேக வெந்தீ நாகநன் னாடர், காய்சினமொழிதறுமாசு தீர்த்தாங், கறச்செவி துறந்து மறச்செவி யடைப்ப' ௬௨ - ௪. 'தொழு, தன்றைப் பகலே நின்பிறப் புணர்த்தி, யின்றுநா னுரைத்த வுரை தெளி வருகென' ௬௭ - ௮. 'வீங்கனைக் கொணர்ந்தவிரும்பெருந் தெய்வம், பாங்கினறோன்றி'

யாங்கத் தெய்வதம் வாரா தோவென
வேங்கின ளழூஉ மிளங்கொடி தானென்.

கூ.—பீடிகைகண்டு பிறப்புணர்ந்தகாதை முற்றிற்று.

எக. இளங்கொடி-மணிமேகலை. அழூஉம் - அழுவாள். இளங்கொடி அழூஉம்.

க - எக. அதுகண்ட ஆயிழை தன்னை அறியாளாயினள்; அப்பொழுது அவள் கைகள் தலைமேற்குவிந்தன; அங்ஙனங் குவிந்த கையளாய் உகுத்து வந்து சேர்ந்து எழுவோள் பிறப்பையுணர்ந்து, "மாதவ, உணர்ந்தோய், நீ உரைத்ததையெல்லாம் மயக்கறவுணர்ந்தேன், பிரமதருமன், உரைப்போய், 'இத்தீவிடை இன்றேழ்நாளில் பூமி நடுக்குறூஉம் போழ்தத்து இந்நகரும் நாகநாட்டு நானூறு யோசனைப் பரப்பும் வீழ்ந்து கேடெய்தும், இதன்பாலொழிக' என்று சொல்ல, வேந்தனும் சாற்றி நீங்கிச் செல்வோன் இருப்ப, எங்கோன், நீ உரைத்தநாளில் நகர் கேடெய்தலும், நின்மலரடியை எல்லாம் ஏத்த அருளிய அந்நாளில், புக்கேன் அவனொடு நின்பாதம் பணிதலும், 'சூழ்குவை, எய்துதி, வருநாளில் வைத்தலும், கைதொழுதி, தெளிவாய்' என்று நீசொல்ல, காட்டாயோ வென்று யான் கேட்ப ஓதினை; அத்தெய்வம் வாராதோ" என்று இளங்கொடி ஏங்கி அழுமென்க.

(பி - ம்.) எ௦. 'ஆங்கத்தெய்வம்'

பத்தாவது

மந்திரங்கொடுத்தகாதை.

[பத்தாவது மணிமேகலாதேய்வம் வந்துதோன்றி மந்திரங்கோடுத்தபாட்டு.]

அறவோ னாசனத் தாயிழை யறிந்த
பிறவிய ளாயினள் பெற்றியு மைமெதன

க. அறவோன் - புத்தனது. ஆசனத்து - ஆசனத்தால்.

க - உ. அறிந்த பிறவியள் ஆயினள் - அறியப்பட்ட பிறவியை உடையளாயினள்; என்றது முற்பிறப்பை அறிந்தாளென்றபடி. பெற்றியும ஐது - இவள் பெற்ற பேறும் அழகியது; பெற்றி - பேறு; "பிணிப்பறுத்

(பி - ம்.) உ. 'பிறவியாயினள் பெற்றியமஃதென'

விரைமல ரேந்தி விசும்பூ டிழிந்து
பொருவறு பூங்கொடி பூமியிற் பொலிந்தென
வந்து தோன்றிய மணிமே கலாதெய்வ
முந்தைப் பிறப்பெய்தி நின்றோள் கேட்ப
வுயிர்க ளெல்லா முணர்வுபா ழாகிப்
பொருள்வழங்கு செவித்துளை தூர்ந்தறி விழந்த
வறந்தலை யுலகத் தறம்பாடு சிறக்கச்
சுடர்வழக் கற்றுத் தடுமாறு காலையோ
ரிளவள ஞாயிறு தோன்றிய தென்ன
நீயோ தோன்றினை நின்னடி பணிந்தே
னீயே யாகிநிற் கமைந்தவிவ் வாசன
நாமிசை வைத்தேன் றலைமிசைக் கொண்டேன்

தோர்தம் பெற்றி யெய்தவும்" (சிலப். ௯: ௧௦௦.) என - என்று மணிமேகலாதெய்வம் நினைந்து.

௩ - ௫. பூங்கொடி வந்து இழிந்து பூமியில் விளங்கினாற் போலத் தோன்றிய தெய்வமென்க.

௬. முந்தைப் பிறப்பு - முற்பிறப்பு. நின்றோள் கேட்ப - நின்ற மணிமேகலை கேட்கும்படி. "அறிபிறப் புற்றனை" (௧௦: ௭௫) என்பர் பின்னும்.

௭. 'உயிர்க ளெல்லாம்' என்பது முதல் புத்தனுடைய பாதபீடிகையை வணங்கும் மணிமேகலா தெய்வத்தின் கூற்று. உணர்வு பாழாகி - அறிவின்றி.

௮. பொருள் - தருமம்; "பொருணீங்கிப் பொச்சாந்தார்" (குறள், ௨௪௬) என்பதிற்காண்க. தூர்ந்தென்றார், அறத்தைக் கேளாதொழிதலின்; முன்பு, "அறச்செவி திறந்து" (௯: ௬௦) என்றதும் இது பற்றிப் போலும்.

௯. வறம் தலை உலகத்து - வறுமையைத் தன்னிடத்தேயுடைய உலகத்தில். அறம் பாடு சிறக்க - அறத்தின்றோற்றம் மிக; பாடு - படுதல்; உண்டாதல்; "அறம்பா டறிந்தனை" (௧௦: ௭௫) என்று பின்னும்வரும்; பாடு சிறக்க - பெருமை சிறக்கவென்றுமாம்.

௧௦. சுடர் - சூரியன். வழக்கு - வழங்குதல். காலை - காலத்தில்.

௧௧. இளவள ஞாயிறு - பால சூரியன்.

௧௨. பீடிகையைப் புத்தனாகவே பாவித்தமையால், 'நீயோ தோன்றினை' என்றாள்; "நீயேயாகி" என்று பின்னர்க் கூறுவதும் இக்கருத்துப் பற்றியே; பின்வருவனவற்றிற்கும் இஃது ஒக்கும்.

(பி - ம்.) ௮. 'அறிவழிந்து' ௧௦. 'சுடரவழகறுத்தடுமாறுகாலை' ௧௨. 'நீயே தோன்றுதி நின்னடி தொழுதேன்' ௧௩ - ௪. 'வாச, ஞமிசை வைத் தேன்றலைமிசைகொண்டேன்'

பூமிசை யேற்றினேன் புலம்பறு கென்றே
வலங்கொண் டாசனம் வணங்குவோள் முன்னர்ப்
பொலங்கொடி நிலமிசைச் சேர்ந்தெனப் பொருந்தி
யுன்றிரு வருளா லென்பிறப் புணர்ந்தே
னென்பெருங் கணவன் யாங்குள னென்றலு
மிலக்குமி கேளா யிராகுலன் றன்னொடு
புலத்தகை யெய்தினை பூம்பொழி லகவயி
னிடங்கழி காமமொ டடங்கா னாயவன்
மடந்தை மெல்லியன் மலரடி வணங்குழிச்

---

௧௫. புலம்பு - வருத்தம்; "புலம்புசே ணகலப் புரவி ராகுவிர்" (மலைபடு. ௪௧௨.) என்று - என்று சொல்லி.

௧௬. மானிடமகளாய் நிற்றலின், 'வணங்குவோள்' எனத் தெய்வத்தை உயர்திணையாற் கூறினார்; "யான் செய்த பாவமென்றாள்" (சீவக. ௩௧௫) என்புழிப்போல.

௧௭. பொலங்கொடி - பொற்கொடி; என்றது காமவல்லியை. பொருந்தி - வணங்கி.

௯ - ௧௭. கேட்பப் புலம்பறுகவென்று ஆசனத்தை வலங்கொண்டு வணங்குவோள் முன்னர்ப் பொருந்தியென்க.

௧௮. அவளைத் தெய்வமாகவறிந்தே மணிமேகலை, 'உன்றிருவருளால்' என்றாள்.

௧௯. என்றலும் - என்று மணிமேகலை கேட்பவும்.

௨௦. 'இலக்குமி' என்பதுமுதல் மணிமேகலா தெய்வத்தின் கூற்று. முந்தைப் பிறப்பெய்தி நின்றோளாதலின், மணிமேகலையை அத்தெய்வம் இலக்குமியென்றழைத்தது.

௨௧. புலத்தகையெய்தினை - ஊடினாய்; புலத்தல் - ஊடுதல். அகவயின் - உள்ளிடத்தே.

௨௨. இடங்கழி காமமொடு - வரம்பு கடந்து எழுதற்குக் காரணமாகிய காமமோடு; இப்படியே, உதயகுமரனைப்பற்றிச் சொல்லும்பொழுது, "இடங்கழி காமமொ டடங்கா னாகி" (௧௮ : ௧௧௯) என்பர் பின்னும்; "இடங்கழி மான்மாலை" என்பதற்கு, 'இராகவேகத்தை யுண்டாக்கும் மயக்கமுடைய மாலைக்காலம்' (பு-வெ. ௩௧௦, உரை) என்று பொருள் கூறுவர். "வம்பப்பரத்தை" என்பதற்கு, 'இடங்கழி காமத்தளாகிய குண்டக்கணிகை' (சிலப். ௧௦: ௨௧௯) என்று பொருள் கூறுவர் அடியார்க்கு நல்லார்.

௨௩. நின்னடியை வணங்கும்பொழுது.

(பி - ம்.) ௧௫. 'புலம்பறச்சென்று' ௨௦. 'கேளிவ்விராகுலன்' ௨௧. 'எய்திப்பூம்பொழிலகவையின்' ௨௨. 'இடங்கடழிகாமனொடடங்கானாயவன்' ௨௩. 'வணங்குழீஇச்'

சாறு சக்கரன் மீவிசும்பு திரிவோன்
உரு றெருமர லொழித்தாங் கிரத்தின தீவத்துத்
தரும சக்கர முருட்டினன் வருவோன்

உச. சாறுசக்கரன்: காரணப்பெயர்; பெரியோர் கூட்டத்திலுள்ளவனென்றவாறு; சக்கரம் - மண்டலம்; இனி, 'ஓம்மணிபத்மேஹூம்' என்ற மந்திரம் சுற்றுப்பக்கத்தில் எழுதப்பட்டுள்ள உலோகத்தாலாகிய சக்கரமொன்றை வலக்கையில் வைத்து மேற்கூறிய மந்திரத்தை உருவேற ஜபித்துக்கொண்டேனும் ஜபியாமலேனும் அச்சக்கரத்தைச் சுழற்றிக் கொண்டிருத்தல் பௌத்தர்களிற் சிலருடைய வழக்கமாதலால், இவன் அங்ஙனம் செய்யப்பட்டுள்ள நல்ல சக்கரத்தைச் சுழற்றிக்கொண்டிருத்தலையுடையனென்று பொருள் கூறினும் பொருந்தும். இஃது இக்காலத்து, 'திபேத்' என்னும் தேசத்துப் புத்தர்களுடைய வழக்கமாகக் காணப்படுகின்றதென்றும், இம்மந்திரத்தை இங்ஙனம் ஜபித்தலால் வரும்பயன், நரகலோகமுதலியவற்றில் முறையே பிறவாமல் தாண்டிச் சென்று நிருவாணமடைதலென்றுங் கூறுவர். மீ விசும்பு திரிவோன் - மேலேயுள்ள ஆகாயத்திற் சஞ்சரிப்பவன்; பௌத்தரில் இருத்தி (ஸித்தி) பெற்றோர் ஆகாய வழியேசென்று அவ்வவ்விடங்களில் இறங்கிப் புத்தனுடைய பாதபீடிகை முதலியவற்றைத் தரிசித்தலும், பக்குவிகளுக்குத் தருமோபதேசஞ் செய்தலும், ஏனையோர்க்கு எண்ணியவற்றையளித்தலும் மரபு; இத்தன்மையையுடையோர் சாரணரென்றும் சொல்லப்படுவர். இதனை, "நிலத்திற் குளித்து நெடுவிசும் பேறிச், சலத்திற் றிரியுமோர் சாரணன் றோன்ற" (உச : சகூ - எ), "தரும சாரணர் தங்கிய குணத்தோர், கருமுகிற் படலத்துக் ககனத் தியங்குவோர், ராசற்கேது வவ்வழி நிகழ்தலிற், புரையோர் தாமும் பூம்பொழி லிழிந்து" (உஅ : கஎகூ - கஉ) எனப் பின்வருவனவற்றாலுணர்க. இப்படியே சமணரில் இருத்தி பெற்றோரும் சாரணரென்று சொல்லப்படுவர்; "நீரினிற் பூவில் வானி னினைத்துழி யொதுங்கு கின்ற, சாரண ரெண்மராவர் சமணரி லிருத்தி பெற்றோர்" (சூடாமணி. உ : ச) என்று வருதல் காண்க.

உரு. தெருமரல் - மனக்கவற்சி; "செய்யார் தேஎந் தெருமரல் கலிப்ப" (பொருந. கஙு.) இரத்தின தீவத்து - இரத்தினத்தீவில்; இது மணிபல்லவமென்னுந் தீவிற்கு அயலிலுள்ள சிறுதீவு. இதிற் புத்தனுடைய பாதக்குறிகள் பொருந்திய உச்சியையுடைய மலையொன்று உண்டு. இதன் பெயர் சமந்தமென்பது; "ஈங்கித னயலகத் திரத்தின தீவத், தோங்குயர் சமந்தத் துச்சி மீமிசை, யறவியங் கிழவோ னடியிணை யாகிய, பிறவி யென்னும் பெருங்கடல் விடூஉ, மறவி நாவா யாங்குளது" மணி. கக : உக - ரு.

உசு. உருட்டினன்: வினையெச்சமுற்று. தருமம் முதலும் முடிவுமில்லாத நித்தியப்பொருளென்பார் தருமசக்கரமென்றும், அதனைத் தடையின்றிச் செலுத்துகின்றானென்பார் உருட்டினன் வருவோனென்றுங் கூறினார்; இப்படியே, "அறக்கதி ராழி திறப்பட வுருட்டி" (ரு : எசு) என்றார் முன்னும்; தருமத்தை ஸநாதனமென்று வடநூலார் கூறுப.

(பி - ம்.) உரு - சு. 'தீபத்துத்......முருட்டிய வருவோன்'

வெங்கதி ரமயத்து வியன்பொழி லகவயின்
வந்து தோன்றலு மயங்கினை கலங்கி
மெல்லியல் கண்டனை மெய்ந்நடுக் குற்றனை
நல்கூர் நுசுப்பினை நாணினை யிறைஞ்ச
விராகுலன் வந்தோன் யாரென வெருளலும்
விராமலர்க் கூந்த லவன்வாய் புதையா
வானூ டிழிந்தோன் மலரடி வணங்காது
நாநல் கூர்ந்தனை யென்றவன் றன்னொடு
பகையறு பாத்தியன் பாதம் பணிந்தாங்
கமர கேணின் றமரல மாயினு
மந்திரந் தண்ணீ ரமுதொடு கொணர்கே

தல் காண்க. தருமத்தைச் சக்கரமாகவும், அதன் அங்கங்களைச் சக்கரத்திற்குரிய அங்கங்களாகவும் உருவகஞ்செய்து நூல்கள் கூறும்; இதனை, அச்வகோஷபோதி ஸத்துவரென்பவரால் வடமொழியிற் செய்யப்பட்டுள்ள புத்தசரிதகாவ்யமென்னும் நூலில் தர்மசக்ரப்ரவர்த்தநோத்தியோஷண மென்னும் பதினைந்தாம் வர்க்கத்தினிறுதியிற் காண்க. இனி, முன்னர்க்கூறிய உலோகசக்கரத்தைக் கையில் வைத்துச் சுழற்றி வருவோனெனினும் பொருந்தும்; இப்பொருள் சாதுசக்கரனென்னும் பெயருக்குப் பொருத்தமுடைத்தாதல் காண்க.

௨௭. வெங்கதிரமயத்து - உச்சிப்பொழுதில்; மணி. ௫ : ௬௦, ௧௧ : ௧௦௨.

௨௪ - ௮. சாதுசக்கரன் திரிவோன் வருவோன் வந்துதோன்றலு மென்க.

௨௯ - ௩௦. மெய்ந்நடுக்குறுதல் முதலியன இறைபொருளாகப் பிறந்த அச்சமென்னும் மெய்ப்பாடு.

௩௧. சாதுசக்கரனைத் தன் மனைவி இறைஞ்சக்கண்டு வெகுண்டமை குடிகோள்பற்றிவந்த வெகுளியென்னும் மெய்ப்பாடு.

௩௪. நா நல்கூர்ந்தனை - நா வறுமையுற்றாய்; என்றது, சாரணனைத் துதியாது வீணேயிருந்தாயென்று இகழ்ந்தபடி; "நாடாது துணிந்து நாநல் கூர்ந்தனை" (௧௯ : ௪) என்பர் பின்னும்.

௩௫. பாத்தியன் - (புத்தனுடைய) பாதத்திற்கு அன்பன்; "திருவாத வூர்ச்சிவ பாத்தியன்" என்பதில், 'பாத்தியன்' என்பது இப்பொருளில் வருதல் காண்க; இது நம்பியாண்டார்நம்பிகள் திருவாக்கு.

௩௬. நின் தமரலம் ஆயினும் - யாம் நினக்குச் சிறந்த அன்பரல்லேமாயினும்.

௩௭. அமுது - அன்னம்; அமிர்தமென்னும் வடமொழிச்சிதைவு. இதனை ஆருயிர் மருந்தென்று இந்நூலுள்ளே பலவிடத்துங்கூறுவர்.

(பி - ம்.) ௩௦. 'நலங்கூர்' ௩௧. 'இராகுலன்வந்தீர்', 'இராகுல வந்தோய்.' ௩௧ - ௨. 'வெருளலு, மமலா' ௩௪. 'நாநலகூர்ந்தனை' ௩௫-௬. 'பணிந்துநீங்கமரகேள்'

முண்டி யாமுன் குறிப்பின மென்றலு
மெம்மனை யுண்கே ளீங்குக் கொணர்கென
வந்நா ளவனுண் டருளிய வவ்வற
நின்னாங் கொழியாது நின்பிறப் பறுத்திடு
முவவன மருங்கி லுன்பாற் றோன்றிய
வுதய குமர னவனுன் னிராகுல
னாங்கவ னன்றியு மவன்பா லுள்ள
நீங்காத் தன்மை நினக்குமுண் டாகலிற்
கந்த சாலியின் கழிபெரு வித்தோர்
வெந்துகு வெண்களர் வீழ்வது போன்மென

---

௩௮. உண்டி - உண்பாய். என்றலும் - என்று நீ சொல்லலும்.

௩௯. எம்மனை - தாயே. கொணர்க என - கொண்டுவருகவென்று சாதுசக்கரன் சொல்லி.

௪0. அவன் உண்டருளிய அவ்வறம் - சாதுசக்கரன் அமுதுசெய்தமையாலுண்டாகிய அந்தப்புண்ணியம்.

௪௧. நின்னாங்கொழியாது - நின்னைவிட்டு நீங்காது. நின்னாங்கு: மணி. ௧௧ : ௪௭.

௪0 - ௪௧. அவ்வறம் நின்பிறப்பை அறுத்திடும்.

௪௩. உதயகுமரனாகிய அவன்.

௪௪. அவனன்றியும் - அவன் உன்பால் நீங்காத விருப்பத்தைச் செலுத்துவதல்லாமலும்.

௪௪ - ௫. உதயகுமரனை மணிமேகலை இடைவிடாது நினைத்திருந்தாளென்பதை, உதயகுமரன் வெட்டுண்டு இறந்தபொழுது, "உவவன மருங்கி னின்பா லுள்ளந், தவிர்விலே னாதலின்" (மணி. ௨௧: ௧௩ - ௪) என்று அவள் அவனைக்குறித்துக் கூறியவாற்றாலும் உணர்க.

௪௬. கந்தசாலி - சிறந்தவாசனையுள்ள ஒருவகை நெல்; இப்பெயரினதாகிய நெல்லொன்று உண்டென்பது, தசகுமாரசரிதத்தின் உத்தரார்த்தத்தில் ஆறாவது உச்சுவாசத்திலுள்ள கோமினிகதையால் புலப்படுமென்பர். இக்காலத்து இந்நெல் கன்னடதேசத்துள்ள மங்கலாபுரத்தில் (மங்களூரில்) மிகுதியாகவுள்ளது. மணிமேகலையின் உயர்வுபற்றி அவளுக்குக் கந்தசாலி உவமை கூறப்பட்டது. கழிபெருவித்து - மிகச்சிறந்தவிதை.

௪௭. களர் - உப்புநிலம். வீழ்வது போன்ம் - விதைக்கப்படுவதையொக்கும்; என்றது, தருமத்துக்கு மூலமாகிய நீ உதயகுமரனை விரும்புவாயாயின் உனதியல்பு களர்நிலத்தில் விதைக்கப்பட்ட கந்தசாலியின் விதையைப்போன்று பயனற்றுப்போமென்றபடி. என - என்று நினைந்து.

(பி - ம்.) ௩௮. 'உண்டியான்' ௩௯. 'உண்டுகேளீயீங்குக் குணர்கென' ௪0. 'அருளியவறலமுது', 'அருளியவவ்வமுது.' ௪௭. 'வெங்களர்'

வறத்தின் வித்தாங் காகிய வுன்னையோர்
திறப்படற் கேதுவாச் சேயிழை செய்தே
னின்னுங் கேளா யிலக்குமி நீநின்
றவ்வைய ராவோர் தாரையும் வீரையு
மாங்கவர் தம்மை யங்கநாட் டகவயிற்
கச்சய மாளுங் கழற்கால் வேந்தன்
றுச்சய னென்போ னொருவன் கொண்டன
னவருட னுங்கவ னகன்மலை யாடிக்
கங்கைப் பேரியாற் றடைகரை யிருந்துழி
மறவண நீத்த மாசறு கேள்வி
யறவண னுங்கவன் பாற்சென் றோனை
யீங்கு வந்தீர் யாரென் றெழுந்தவன்
பாங்குளி மாதவன் பாதம் பணிதலு
மாதி முதல்வ னறவாழி யாள்வோன்
மாதுய ரெவ்வ மக்களை நீக்கி

---

௪௮. தருமத்திற்கு மூலமாகிய உன்னை.

௪௮ - ௯. ஓர்திறப் படற்கு ஏதுவாச்செய்தேன் - நின்மனம் ஒரு வழிப்படுதற்குக் காரணமாகச் செய்தேன்; ஒருவழி - வைராக்கியமார்க்கம்; "ஒருமன மெய்தி யிருவினைப் பிணிவிட, முப்பகை கடந்து நால்வகைப் பொருளுணர்ந்து" (வீர. யாப்பு. ௧௧, உதாரணம்) என்று வருதல்காண்க. செய்தேனென்றது, மணிமேகலையை உவவனத்திலிருந்து மணிபல்லவத்திற்குக் கொண்டுபோய்ப் புத்தனது பாதபீடிகையைக் காட்டி முற்பிறப்பின் செய்தியை அவள் அறிந்து உய்யும்படி செய்ததனை; மணி. ௨௧: ௧௩ - ௭.

௫௧. தவ்வையராவோர் - முன்பு பிறந்தோராவோர்.

௫௩. ழ. மணி ௧௨: ௩௯. ௫௨ - ௪. அவர்தம்மைத் துச்சயன் மணஞ்செய்து கொண்டான்.

௫௫. அவருடன் - தாரை வீரையென்பவருடன். ஆடி - விளையாடி.

௫௮. அவன் - துச்சயன். சென்றோனை - சென்ற அறவணவடிகளை.

௫௭ - ௮. மணி. ௨: ௬௦ - ௬௧.

௫௯ - ௬௦. அவன் பாங்கு உள்ளி - அவனுடைய இயல்பை நினைந்து. பணிதலும் - துச்சயன் வணங்குதலும்.

௬௧. மணி. ௬: ௧௧. ஆதிமுதல்வனென்பது முதலியவை அறவணவடிகள் துச்சயனை நோக்கிக் கூறும் சொல்.

௬௨. மாதுயர் எவ்வம் - மிக்கதுன்பம்; என்றது பிறப்பிறப்புக்களை; துயரெவ்வம்: ஒருபொருட் பன்மொழி. நீக்கி - நீங்கச்செய்து.

(பி - ம்.) ௪௯. 'சேயிழைவந்தேன்' ௫௦. 'உன்றன்' ௫௧. 'தவ்வையராகிய', 'தவ்வையளாகிய.' ௫௨. 'அங்கநாடகவையிற்' ௫௫. 'அவனுடனுங் கவரகன்மலை' ௫௬. 'பெயராற்றிடைகரை'

விலங்குந் தம்முள் வெரூஉம்பகை நீக்கி
யுடங்குயிர் வாழ்கவென் றுள்ளங் கசிந்துகத்
தொன்று காலத்து நின்றற முரைத்த
குன்ற மருங்கிற் குற்றங் கெடுக்கும்
பாத பங்கயங் கிடத்தலி னீங்கிது
பாதபங் கயமலை யெனும்பெயர்த் தாயது
தொழுதுவலங் கொள்ள வந்தே னீங்கிப்
பழுதில் காட்சியீர் நீயிருந் தொழுமென
வன்றவ னுரைத்த வவ்வுரை பிழையாது
சென்றுங்கை தொழுது சிறப்புச் செய்தலின்
மாதவி யாகியுஞ் சுதமதி யாகியும்

---

௬௩. வெரூஉம்பகை - அஞ்சுதற்குக் காரணமாகிய பகை.

௬௪. உயிர் உடங்கு வாழ்க என்று - எல்லாவுயிர்களும் தம்முள் மனவேறுபாடின்றி ஒத்து வாழ்வனவாக வென்று கருதி; எல்லாவுயிர்களும் ஒருபடியாக நிருவாணமடைந்து வாழ்கவென்று கருதியென்று கூறினும் பொருந்தும். உள்ளம் கசிந்து உக - மனம் கருணை மிகுதியால் இரங்கிக்கரைய.

௬௫. தொன்று காலத்து - பழையகாலத்தில்.

௬௨ - ௫. மணி. ௧௨: ௮௭ - ௯௯.

௬௫ - ௬. நின்று அறம் உரைத்த குன்ற மருங்கில் - எல்லா உயிர்களும் காணும்படி நின்று தருமோபதேசஞ்செய்த மலையினிடத்தே; அம்மலையாவது கிருத்திரகூடம்; அது மகததேசத்தின் இராசதானியாகிய இராசக்ருகநகரத்தின் அருகே உள்ளது. குற்றம்-காமவெகுளி மயக்கங்கள்.

௬௪ - ௬. முதல்வன் ஆள்வோன் உயிர் வாழ்கவென்று நின்று அறம் உரைத்த குன்றம்.

௬௭. பாதபங்கயம் - புத்தனுடைய பாததாமரைக் குறிகள்.

௬௮. பெயர்த்தாயது - பெயரையுடையதாயிற்று

௭௦. பழுது இல் காட்சியீர் - குற்றமில்லாத அறிவினையுடையீர். தொழுமென - தொழுமினென்று துச்சயன் முதலியோரை நோக்கி அறவணவடிகள் சொல்ல.

௭௧. பிழையாது - தப்பாது.

௭௨. சிறப்பு - விழா ; "சிறப்பொடு பூசனை செல்லாது" (குறள், ௧௮) ; பூசையெனினும் பொருந்தும்.

(பி - ம்.) ௬௩ - ௪. 'விலங்கு தம்முளா ருட்பகை நீக்கி யுடன்பயிர் வாள்க.........கசிந்து' ௬௭ - ௮. 'கிடைத்தலணங்கிது, பாதபங்கயமெனும்' ௭௦ - ௭௧. 'காட்சியீரே நீருந்தொழுமினென், றன்றவனுரைத்த வறவுரை'

கோதையஞ் சாய னின்னொடு கூடின
ரறிபிறப் புற்றனை யறம்பா டறிந்தனை
பிறவற முரைப்போர் பெற்றியுங் கேட்டனை
பல்வேறு சமயப் படிற்றுரை யெல்லா
மல்லியங் கோதை கேட்குறு மந்நா
ளிளையள் வளையோ ளென்றுனக் கியாவரும்
விளைபொரு ளுரையார் வேற்றுரு வெய்தவு
மந்தரந் திரியவு மாக்குமிவ் வருந்திறன்
மந்திரங் கொள்கென வாய்மையி னோதி
மதிநாண் முற்றிய மங்கலத் திருநாட்

---

௭௪. கோதையஞ்சாயலென்றது மணிமேகலையை.

௭௩-௪. பு. மணி. ௧௨ : ௧௭-௮.

௭௫. அறிபிறப்புற்றனை - முற்பிறப்பை யறிந்தாய்; "முந்தைப் பிறப்பெய்தி நின்றோள்" (௬) என்று இக்காதையில் முன்னுங் கூறியிருத்தல் காண்க. அறம் பாடு அறிந்தனை - தருமோற்பத்தியை யறிந்தாய்; "அறம்பாடு சிறக்க" (௧௰ : ௯) என்றார் முன்னும்.

௭௬. பிற அறம் உரைப்போர் - மற்றைச் சமயதருமங்களைச் சொல்லுவோர்.

௭௭. படிற்றுரை - பொய்வார்த்தை.

௭௮. அல்லியங்கோதை : முன்னிலைப்பெயர்.

௭௯. இளையள் - இளமையையுடையாள். வளையோள் - வளைகளையுடையாள்.

௮௰. விளைபொருள் உரையார் - விளைகின்ற தத்தம் சமயதத்துவங்களைச் சொல்லார்; இயல்பன்றென்பார் விளைபொருளென்றார். ஆதலாலென ஒருசொல் வருவிக்க. வேற்றுரு - வேறுவடிவம்.

௭௯-௮௰. பு. மணி. ௨௬ : ௬௮-௯. ௮௧. அந்தரம் - ஆகாயம்.

௮௨. வாய்மையின் ஓதி - நால்வகை வாய்மையுடன் அம்மந்திரங்களை உபதேசித்து; வாய்மையின் - உண்மையுடனென்றுமாம்.

௮௩. மதிநாள் முற்றிய - சந்திரன் நாள்தோறும் ஒவ்வொரு கலையாக வளர்ந்து முற்றுப்பெற்ற. மங்கலத்திருநாள் - பௌர்ணிமையில். புத்தன் ஞானம் பெற்றதினம் வைசாகசுத்த பௌர்ணிமையாதலால், அதனை விளக்குதற்பொருட்டு, 'மதிநாண் முற்றிய மங்கலத் திருநாள்' என்றார். புத்தன் பிறந்த தினமும் அதுவே. இதனால், வைசாகசுத்த பௌர்ணிமையைச் சிறந்த திருநாளாகப் பௌத்தர் இக்காலத்துங் கொண்டாடுவர்.

(பி - ம்.) ௭௪. 'நின்னொடுங்கூடினர்' ௭௫. 'அயப்பாடிறந்தனை' ௭௮-௯. 'நாளி, னினையவர் வளையோரென்றுனக்கு' ௮௧. 'அந்தரஞ் சேறலும்', 'அந்திரந் திரியவும்.'

[illegible]

௯௦.—[illegible]

[illegible]

னோடு பாத்தியன் பாதம்பணிந்து, 'அமர, கேள்; கொணர்கேம்; உண்டி; யாம் உன்குறிப்பினம்' என்றதும், அவன், 'கொணர்க' என்று உண்டருளிய அவ்வறம் நின்னை யொழியாது நின்பிறப்பை யறுத்திடும்; உவவனத்தில்தோன்றிய உதயகுமரன்றான் இராகுலன்; அவனுக்கு உன் பாலன்றி அவன்பால் உள்ளம் நீங்காத்தன்மை நினக்கு முண்டாதலின், நினது இயல்பு வீழ்வது போலுமென்றெண்ணி உன்னை ஒருதிறப் படற்கு எதுவாச்செய்தேன்; இலக்குமி! இன்னுங்கேள்; தாரையும் வீரையும் நின்தவ்வையராவோர்; அவர் தம்மைத் துச்சயன்கொண்ட னன்; அவன் அவருடன் மலையாடி அடைகரையிலிருந்துழிச் சென்ற அறவணனை அவன், 'வந்தீர்யார்?' என்று எழுந்து பாதத்தைப்பணித லும், அவன், 'பாதபங்கயத்தைத் தொழுது வலங்கொள்ளவந்தேன்; நீருந்தொழும்' என்ற உரைபிழையாது சென்று தொழுது சிறப்புச் செய்தலின், தாரையும் வீரையும் நின்னொடு கூடினர்; உற்றனை; அறிந் தனை; பெற்றியும் கேட்குவை; அந்நாள், யாவரும் உனக்கு உரையார்; ஆதலால், இம்மந்திரங்கொள்க" என்று அவற்றை உபதேசித்து, "உணர்நீ; நின்பதிப்புகுவாய்" என்று எழுந்தோங்கி, "யான் மறந்தது மொன்றுண்டு" என்று மறித்தும் இழிந்து, "கேளாய்; யாக்கை உண வின்பிண்டம்; இப்பெருமந்திரம் இரும்பசியறுக்கும்" என்று அம்மந் திரத்தைக்கொடுத்து எழுந்து நீங்கியதென வினைமுடிவு செய்க.

பதினொன்றாவது

பாத்திரம்பெற்றகாதை.

[பதினொன்றாவது மணிமேகலைக்குத் தீவதிலகை கோமுகியென்னும் பொய்கையிலெழுந்த பாத்திரங்கொடுத்தபாட்டு.]

மணிமே கலாதெய்வ நீங்கிய பின்னர்
மணிபல் லவத்திடை மணிமே கலைதான்
வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையுந்
தண்மலர்ப் பொய்கையுந் தாழ்ந்தனள் நோக்கிக்
காவதந் திரியக் கடவுட் கோலத்துத்

---

௩. குன்றமுதலியவற்றிற்கு இரண்டனுருபு விரிக்க.

௪. தாழ்ந்தனள் நோக்கி - தாழ்ந்து நோக்கி; மெல்ல நோக்கி.

௫. காவதம் - காதம்; 'வ' பகுதிப்பொருள் விகுதி யென்பர்; (சிலப். ௰: ௩௬, அடியார்.) கடவுட்கோலம் - தெய்வவேடம்.

௧ - ௫. நீங்கியபின்னர் மணிமேகலை நோக்கித் திரியவென்க.

(பி - ம்.) ௪. 'தண்புனற்பொய்கை'

தீவ திலகை செவ்வனந் தோன்றிக்
கலங்கவிழ் மகளிரின் வந்தீங் கெய்திய
விலங்குதொடி நல்லா யார்நீ யென்றலு
மெப்பிறப் பகத்துள் யார்நீ யென்றது
பொற்கொடி யன்னாய் பொருந்திக் கேளாய்
போய பிறவியிற் பூமியங் கிழவ
னிராகுலன் மனையா னிலக்குமி யென்பே
ராய பிறவியி லாடலங் கணிகை
மாதவி யீன்ற மணிமே கலையா
னென்பெயர்த் தெய்வ மீங்கெனைக் கொணரவிம்
மன்பெரும் பீடிகை யென்பிறப் புணர்ந்தே
னீங்கென் வரவிதீங் கெய்திய பயனிது

---

௬. தீவதிலகை - இந்திரனேவலாற் புத்தனுடைய பாதபீடிகையைப் பாதுகாத்துக்கொண்டு மணிபல்லவத்திலிருப்பவள்; (மணி. பதிகம், ௫௩, ௧௧: ௨௭ - ௮.) செவ்வனம் - செவ்விதாக; வேறாகவெனினும் பொருந்தும்; "திருமக ளிருக்கை செவ்வனங் கழிந்து" (சிலப். ௬: ௧௨௭) என்பதிற்காண்க.

௭. கலம் - கப்பல். மகளிரின் - மகளிரைப்போல.

௮. தொடி - வளை. என்றலும் - என்று தீவதிலகை கேட்கவும்.

௬ - ௮. தீவதிலகை தோன்றி யார் நீ யென்றலும்.

௯. 'எப்பிறப்பகத்துள்' என்பது முதலியன மணிமேகலையின் கூற்று.

௧௦. பொற்கொடி யன்னாய் - காமவல்லியையொப்பாய்.

௧௧. போய பிறவி - சென்ற பிறப்பு. கிழவன் - உரியவன்.

௧௨. மனை யான் - யான் மனைவி. இலக்குமி என்பேர் - இலக்குமி யென்பது எனது பெயர்.

௧௩. ஆய பிறவியில் - இப்பிறப்பில்.

௧௩ - ௪. பலவகையினராகிய கணிகையர்களுள் மாதவி நாடகக் கணிகையாதலின் அதனை விளக்குதற்பொருட்டு, 'ஆடலங்கணிகை மாதவி' என்றாள். கணிகையர்களின் வகையினைச் சிலப்பதிகாரம், ௩ - ஆம் காதையிலும், ௧௪ - ஆம் காதையிலும் காண்க.

௧௫. என்பெயர்த்தெய்வமென்றது மணிமேகலாதெய்வத்தை.

௧௬. பீடிகை - பீடிகையால்.

௧௭. பயனிதுவென்றது, பழம்பிறப்புணர்ந்ததனை.

(பி - ம்.) ௮. 'இலங்குகொடி யன்னா யார்நீ' ௧௨. 'என்பேன்'

பூங்கொடி யன்னா யார்நீ யென்றலு
மாயிழை தன்பிறப் பறிந்தமை யறிந்த
தீவ திலகை செவ்வன முரைக்கு
மீங்கித னயலகத் திரத்தின தீவத்
தோங்குயர் சமந்தத் துச்சி மீமிசை

---

௧௮. என்றலும் - என்று மணிமேகலை கேட்கவும்.

௧௯. ஆயிழை - மணிமேகலை. அறிந்தமை - அறிந்த தன்மையை.

௨௦. உரைக்கும் - சொல்லுவாள்.

மேல் வருவன தீவதிலகையின் கூற்று.

௨௧. இதன் அயலகத்து - இந்த மணிபல்லவத்தின் அயலிடத்துள்ள.

௨௨. ஓங்குயர் சமந்தத்து - மிகவுமுயர்ந்த சமந்தமென்னும் மலையினது. உச்சிமீமிசை - உச்சியின்மேலே; மீமிசை - மேல்; "கொல்களிற்று மீமிசைக் கொடி" (புறநா. ௯) இம்மலைக்குச் சமனொளி யென்றும் ஒரு பெயருண்டு; "இலங்கா தீவத்துச் சமனொளி யென்றுஞ், சிலம்பினை யெய்தி" (௨௮ : ௧௦௭ - ௮) என்று பின்வருதலாலுணர்க. "ஆறைந்தி யோசனை.........மணிபல் லவத்திடை" (மணி. ௬ : ௨௧௧ - ௨) என்றதனால் மணிபல்லவம் காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கே முப்பதுயோசனை தூரத்திலுள்ளதென்றும், "ஈங்கிதன்.........யாங்குள தாதலின்" (௨௧ - ௫) என இங்கே கூறியவதனால் இரத்தினதீவம் மணிபல்லவத்திற்கு அயலிடத்துள்ளதென்றும், அதிற் புத்தனுடைய பாதக் குறிகளுள்ள உச்சியையுடைய சமந்தமென்னும் மலையொன்றுண்டென்றும் தெரிதலாலும், "இலங்கா தீவத்த.........எய்தி" (மணி. ௨௮ : ௧௦௭ - ௮) என்பதனால் இலங்காதீவத்திற் சமனொளி யென்று பெயருள்ள புத்தஸ்தலமாகிய மலையொன்றுண்டென்று தெரிதலாலும் முன்னுள்ள சமந்தமென்பதும், பின்னுள்ள சமனொளியென்பதும், இலங்கையிலுள்ள 'ஆடம்ஸ்பீக்' என்று ஆங்கில பாஷையில் வழங்கும் மலையையே குறிக்கின்றனவென்று எண்ணுவதற்கு இடமுண்டு. இலங்கைத்தீவின் மேல்மாகாணத்தில் தென்கீழ்ப்பிரிவில் இரத்தினபுரியென்ற ஓரிடமும், சிலராற் சமந்தகூடமென்றும் சிலராற்சமனெலையென்றும் சொல்லப்பட்டுள்ள மலையொன்றும் உள்ளனவென்று யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை, வே. சதாசிவப்பிள்ளையென்பவரால், கி. பி. 1884 - ஆம் வருஷத்திற் பதிப்பிக்கப்பட்டுள்ள இலங்கைப்பூமிசாஸ்திர சங்கிரகமென்னும் புத்தகத்தால் தெரிகின்றது. மணிபல்லவம் காவிரிப்பூம்பட்டினத்திற்குத்தெற்கே ஆறைந்து யோசனை தூரத்துள்ளதென்றும் அதன் அயலிலுள்ளது இரத்தின தீவமென்றும் முன்பு கூறியதற்கு 'ஆடம்ஸ்பீக்' காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கே சற்றேறக்குறைய முப்பது காததூரத்திலிருத்தலும், அம்மலை பண்டைக்காலத்துச் சமந்தமென்றும் சமனொளியென்றும் கூறப்பட்டு வந்ததென்பதற்கு, இக்காலத்து அது, 'சமந்தகூடம்' என்றும், 'சமனெலை' என்றும் பெயர்

(பி - ம்.) ௨௨. 'சிமயத்துச்சி'

யறவியங் கிழவோ னடியிணை யாகிய
பிறவி யென்னும் பெருங்கடல் விடூஉ
மறவி நாவா யாங்குள தாதலிற்
றொழுதுவலங் கொண்டு வந்தே னீங்குப்
பழுதில் காட்சியிந் நன்மணிப் பீடிகை
தேவர்கோ னேவலிற் காவல் பூண்டேன்
றீவ திலகை யென்பெய ரிதுகே
டரும தலைவன் றலைமையி னுரைத்த

பெற்றிருத்தலும், சமனொளி இலங்காதீவத்துள்ளதென்பதற்கு அஃது இலங்கைத்தீவிலிருத்தலும் சான்றாதலறிக.

உங. அறவியங் கிழவோன் - அறத்திலே நிற்கின்ற உரிமையையுடையோனாகிய புத்தன்; "அறவியாற் காறு மூன்றும்", "அறவிய மனத்த ராகி" (சீவக. ககஉரு, உஅஎஎ); "அறவிய மனத்தினை யாகி", "அறவியான் றானு மறவமிர்த மீந்தான்" (நீல. தரும. சஅ, க0க.). இணை - இரண்டு.

உச. பிறவி காரணகாரியத்தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின், 'பிறவியென்னும் பெருங்கடல்' என்றார். விடூஉம் - கடத்தும்.

உரு. அறவிநாவாய் - அறத்திலே நிற்பதாகிய நாவாய்; நாவாய் - கப்பல்.

உஉ - ரு. உச்சிமீமிசை அடியிணையாகிய நாவாய் உள்ளது.

உங - ரு. பிறவியாகிய பெருங்கடலைக்கடத்தும் அடியிணையாகிய நாவாயென்க; "பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா, ரிறைவ னடி சேரா தார்" குறள். க0.

உசு. ஈங்கு வந்தேன்.

உக - சு. இம்மணிபல்லவத்தின் அயலிடத்தேயுள்ளதாகிய இரத்தினதீவத்துள்ள சமந்தமென்னும் மலையினது உச்சியிற் புத்தனது பாதமாகிய அறவிநாவாய் உள்ளதாதலால் அதனைத் தொழுது வலங்கொண்டு ஈங்குவந்தேனென்றாளென்க.

உஎ. பழுது இல் காட்சி - குற்றமற்ற தோற்றத்தையுடைய. பீடிகை - பீடத்தை.

உஅ. காவல் பூண்டேன் - காத்தலை மேற்கொண்டேன்.

உகூ. என்பெயர் தீவதிலகையென்பது.

ங0. தருமராசனென்பது புத்தன்பெயர்களுள் ஒன்றாதலின், தருமதலைவனென்றாள்.

(பி - ம்.) உசு. 'வந்தேனிந்தப்' உஅ. 'காவற் பூண்ட'

பெருமைசா னல்லறம் பிறழா நோன்பினர்
கண்டுகை தொழுவோர் கண்டதற் பின்னர்ப்
பண்டைப் பிறவிய ராகுவர் பைந்தொடி
யரிய ருலகத் தாங்கவர்க் கறமொழி
யுரிய துலகத் தொருதலை யாக
வாங்கன மாகிய வணியிழை யிதுகே
ளீங்கிப் பெரும்பெயர்ப் பீடிகை முன்னது
மாமலர்க் குவளையு நெய்தலு மயங்கிய
கோமுகி யென்னுங் கொழுநீ ரிலஞ்சி
யிருதிள வேனிலி லெரிகதி ரிடபத்

---

௩௧ - ௩. நோன்பினரே இப்பீடிகையைத் தரிசித்துக் கைதொழு தற்கு உரியராவார்; அங்ஙனந்தரிசித்தபின்பு அவர் பழைய பிறப்பின் செய்தியையறியும் அறிவையுடையராவார்.

௩௪ - ௫. அரியர் உலகத்து - அத்தன்மையையுடையோர் உலகத்திற் பெறுதற்கரியர். அவர்க்கு அறமொழி உரியது - அவர்க்குத் தரும பதம் உரிமையையுடையது. ஒருதலையாக - நிச்சயமாக.

௩௬. ஆங்கனமாகிய அணியிழை - அத்தன்மையையுடையாயாகிய அணியிழாய்; என்றது, நீ தருமபதங்கேட்டற்கு உரிமையையுடையா யென்றபடி.

௩௭. பெயர் - புகழ்; பெரும்பெயர் - வீடுமாம்; "மிக்குப்புக ழெய்திய பெரும்பெயர் மதுரை" மதுரை. ௬௯௯.

௩௮. மயங்கிய - கலந்த.

௩௯. கோமுகி - மணிபல்லவத்துள்ள ஒரு பொய்கை; காரணப் பெயர்; பசுவின் முகம்போன்ற வடிவமுடையதென்பது பொருள். இலஞ்சி - பொய்கையில்.

௩௭ - ௯. முன்னிடத்ததாகிய இலஞ்சியில்.

ஆபுத்திரன் வேண்டுகோளின்படி கோமுகியென்னும் பொய்கையி னுள்ளேயிருந்து அமுதசுரபியென்னும் பாத்திரம் ஒவ்வொருவருடத்தும் மேலேவந்து தோன்றுந்தினம் புத்தனுடைய ஜனனகாலமாகிய விசாக நட்சத்திரத்தோடு கூடிய வைசாகசுத்த பௌர்ணிமையாதலின், அத் தினத்தை மேலேவரும் நான்கடிகளாற் சிறப்பித்துக் கூறுவார்.

௪௦. இருது இளவேனிலில் - இளவேனிற்பருவத்தில்; பன்னிரண்டு மாதங்களுள் ஆவணிமுதலிய இரண்டிரண்டுமாதங்கள் இருது வெனவும் பெரும்பொழுதெனவும் பருவமெனவுங் கூறப்படும். அவை முறையே கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனி லென ஆறுவகையாம். அவற்றுள், ஈண்டு இளவேனிலென்றது சித்

(பி - ம்.) ௩௫. 'ஒருதலையாங்கனம்' ௩௬. 'ஆயிழை' ௩௯. 'என் னுமிக் கொழுநீரிலஞ்சி' ௪௦. 'இருந்திள'

[illegible]ெருப்புறின் மேறு மொருமூன்று சென்றபின்
மீனத் திடையிலை மீனத் தகவையிற்
போதித் தலைவனொடு பொருந்தித் தோன்று

[illegible] வைகாசி மாதங்களை. கதிர் எரி இடபத்து - சூரியன் மிக்க வெம்மையைச் செய்கின்ற வைகாசி மாதத்தில்.

௯௧. ஒருபதின் மேலும் ஒரு மூன்று சென்றபின் - இருபத்தேழு நட்சத்திரங்களுள் கார்த்திகை முதலாகிய பதின்மூன்று நட்சத்திரங்கள் சென்றபின்பு.

௯௨. நட்சத்திரங்களுள் நடுவில் நிற்றலையுடையதான விசாகநட்சத்திரத்தில்; "போதித் தலைவனொடு பொருந்திய போழ்தத்து" ([illegible]: [illegible]) என்று பின்புவருதலின், ஈண்டு விசாகம் கொள்ளப்பட்டது. அசுவினிமுதலிய இருபத்தேழனுள் பதினான்காவதாம் நடுவிலுள்ளதா மாகிய நட்சத்திரம் சித்திரையாக இருக்க அதனை நடுவிலுள்ளதாகக் கூறுமல் இவ்விடத்தில் விசாகத்தைக்கூறியது என்னையோவெனின் ஒவ்வொருவருடத்தும் பகலையும் இரவையும் சமனாக முப்பது முப்பது நாழிகையாகவே பெற்ற இரண்டு விஷுவத்தினங்களுள் ஒன்றாகிய மேஷாயனத்திற் சூரியனுக்கு எந்த நட்சத்திரத்திற் பிரவேசமுண்டாகின்றதோ அதை நட்சத்திரங்களில் முதலாவதாகக் கூறுவது சோதிட நூற்றுணிபாதலாலும், முன்னொருகாலத்திற் சூரியனுக்குக் கிருத்திகாப்பிரவேச மிருந்தபொழுது மேஷாயனம் நேரிட்டிருந்ததென்றும் அதுபற்றிக்கார்த்திகையை முதலாகக்கொண்டு நட்சத்திரங்களையெண்ணி வந்தார்களென்றும் பழைய சோதிடநூல்களால் தெரிகின்றமையாலும் நட்சத்திரங்களின் நடுவிலுள்ளதை விசாகமென்று கூறியது குற்றமன்றென்க. இப்படியே முன்னொருகாலத்தில் நட்சத்திரங்களைக் கார்த்திகை முதலாக எண்ணிவந்தார்களென்பது, கிருஷ்ணயஜுர்வேத ஸம்ஹிதையாலும் கிருஷ்ணயஜுர்வேத பிராஹ்மணத்தாலும் தெரிகின்றதென்பர். உச்சயினி நகரத்தில் விக்கிரமார்க்கனுடைய அவைக்களத்தி லிருந்த நவரத்தினங்களுள் ஒருவரென்று சொல்லப்படுகிற வராகமிகிர ரென்னும் பிரசித்த ஜ்யோதிஷிகர், தமதுகாலத்தில் மேஷாயனத்திற் சூரியனுக்கு அசுவினிநட்சத்திரப் பிரவேசமுண்டாயிருந்தமையறிந்து பஞ்சாங்கத்திற்கு மாறுக நட்சத்திரங்களை அசுவினிமுதலாக எண் [illegible] புகுத்தினமையின், இக்காலத்தில் நட்சத்திரங்கள் [illegible] எண்ணப்பட்டு வருகின்றனவென்பர்.

[illegible]-௪. [illegible] விசாகநட்சத்திரத்தைப் பதினான்காவதாகக் [illegible] ஆராய்ச்சி செய்தற்குரியது.

[illegible]. போதி - அரசமரம்; இதற்குப் போதத்தையுடையதென் [illegible]; போதம் - ஞானம்; இதனடியிலிருந்தபொழுது [illegible] ஞானத்தைப் பு[illegible] [illegible], [illegible] பெயர்பெற்றதென்பர்; புத்[illegible]

[illegible] 'போதி [illegible]'

மாபுத் திரன்கை யமுத சுரபியெனு
மாபெரும் பாத்திர மடக்கொடி கேளா
யந்நா ளிந்நா ளப்பொழு திப்பொழுது
நின்றாங்கு வருவது போலு நேரிழை
யாங்கதிற் பெய்த வாருயிர் மருந்து
வாங்குநர் கையகம் வருத்துத லல்லது

இதனடியிலிருந்தானென்பதை, "போதி நீழற் பொருந்தித் தோன்று, நாதன்" (கக : எரு - ச), "போதி மூலம் பொருந்திய சிறப்பி, ஞதன்" (கஉ : கoக - உ), "ஓங்குயர் போதி யுரவோன்" (கஉ : ககக), "போதித் தலைவனொடு" (கரு : உசு), "போதி மாதவன்" (கரு : உகூ), "முன்னவன் போதியி னல்லறம்" (உஅ : கசக), "பைம்பூம் போதிப் பகவற்கு" (உஅ : களச), "போதி மூலத்து, நாதன்" (உகூ : உரு - ச) என இந்நூலுள்ளே பின்வருவனவற்றாலுணர்க ; இது மகாபோதியெனவுங் கூறப்படும். தலைவன் - புத்தன். இனி, போதியென்பதற்கு ஞானமென்று பொருள்செய்தல் பௌத்தர் சைனர்களுடைய வழக்கமாக விருத்தலின், போதித்தலைவனென்றதற்கு ஞானத்திற்குத் தலைவனென்று பொருள் கூறினும் பொருந்தும் ; "போதிச் செல்வம் பூண்டவரேத்தும் பொலிவின்ரு, லாதிக் காலத் தந்தணன் காதன் மகனுத் தான்" (சீவக. ருசுசு.) தோன்றும் : முற்று.

சo - சரு. பு. மணி. கரு : உரு - சு.

சச. அமுதசுரபி - அமுதத்தினது மணம்போன்ற மணமுடையதென்றும், அமுதத்தைக்கொடுக்கும் காமதேனுவைப் போன்றதென்றும் பொருள் கூறுவர் ; அமுதம் - அமிர்தம், உணவு ; சுரபி - மணம், காமதேனு.

சo - சச. அமுதசுரபி, புத்தன் பிறந்தகாலத்தே ஒவ்வொரு வருடத்தும் கோமுகியென்னும் பொய்கையிலிருந்து தோன்றுதலின், 'போதித் தலைவனொடு பொருந்தித் தோன்றும்' என்றார்.

சரு - ௬. பாத்திரம் தோன்றும்.

சஎ. நின்றாங்கு வருவது போலும் - அப்பாத்திரம் நின்கையிடத்து வருவதுபோலும் ; நின்றாங்கு : (மணி. கo : சக) ; "நின்றாங்கு வருஉமென் னெஞ்சினை, யென்றாங்கு வாரா தோம்பினை கொண்மே" கலி. உரு.

சஅ. அதில் - அமுதசுரபியென்னும் பாத்திரத்தில். ஆருயிர் மருந்து - அன்னம் ; பசிநோயால் வருந்தாவண்ணம் உயிர்களைப் பாதுகாத்தலின், இஃது இங்ஙனங் கூறப்பட்டது ; "அகன்சுரைப் பெய்த வாருயிர் மருந்து" (கக :ககஎ) என்பர் பின்னும் ; சோறும் தண்ணீரும் இருமருந்தென்னப்படும் ; புறநா. எo.

சகூ. கையகம் - கையிடத்தை.

(பி - ம்.) சச. 'மாபுத்திரிகை' சஎ. 'நின்றாங்கருவது' சகூ. 'வருந்துதலல்லது'

தான்றொலை வில்லாத் தகைமைய தாகு
நறுமலர்க் கோதை நின்னூ ராங்க
ணறவணன் றன்பாற் கேட்குவை யிதன்றிற
மென்றவ ளுரைத்தலு மிளங்கொடி விரும்பி
மன்பெரும் பீடிகை தொழுதனள் வணங்கித்
தீவ திலகை தன்னொடுங் கூடிக்
கோமுகி வலஞ்செய்து கொள்கையி னிற்றலு
மெழுந்துவலம் புரிந்த விளங்கொடி செங்கையிற்
றொழுந்தகை மரபிற் பாத்திரம் புகுதலும்
பாத்திரம் பெற்ற பைந்தொடி மடவாண்
மாத்திரை யின்றி மனமகிழ் வெய்தி
மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி

---

௫0. தானென்றது அன்னத்தை. ௫௧. கோதை : விளி.

௫௨. இதன்றிறம் - இப்பாத்திரத்தின் வரலாறு. இதன்றிறத்தை அறவணன்பாற்கேட்குவை.

௫௩. அவள் - தீவதிலகை. இளங்கொடி - மணிமேகலை.

௫௪. தொழுதனள் வணங்கி - கைகுவித்து வந்தித்து.

௫௬. கொள்கையின் நிற்றலும் - நியமத்தோடு மணிமேகலை நிற்றலும்.

௫௭. எழுந்து - கோமுகியிலிருந்து எழுந்து. இளங்கொடி - மணிமேகலை.

௫௭ - ௮. பாத்திரம் எழுந்து இளங்கொடியினுடைய செங்கையிற் புகுதலும்.

௬0. மாத்திரையின்றி - அளவின்றி.

௬௧. 'மாரனை' என்பது முதலியன பாத்திரம்பெற்ற மகிழ்ச்சியால் மணிமேகலை புத்தனைக் குறித்துச் செய்யுந் துதிகள். 'மாரன்' என்பதன் பொருளை, மணி. ௫ : ௭௭ - ஆம் அடிக்குறிப்பிற் காண்க.

௬௨. தீநெறிக் கடும்பகை - கொடிய வழிகளாகிய மிக்கபகையை; காமமுதலியவற்றை, 'அரிஷட்வர்க்கம்' என்றும், 'வைரி' என்றும் வடநூலார் கூறுதல்போலத் தீநெறியைக் கடும்பகையென்றார்; மணி. ௫ : ௧0௩.

௬௩. பிறர்க்கு அறம் முயலும் பெரியோய் - மற்றையோர்க்குப் புண்ணிய முண்டாதற்கு முயலுகின்ற பெரியோனே; இப்படியே,

(பி - ம்.) ௫0. 'தான்றொலைவறியா' ௫௧. 'நறைமலர்க்கோதை' ௫௬. 'கொழுதிவலஞ்' ௫௮. 'தொழுதகை' ௬0. 'எய்த' ௬௨. 'கடப்போய்', 'பகைப்போய்.'

துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
கூரு யெண்பிறக் கொழிய விறந்தோய் நின்னடி
கண்பிறர்க் களிக்குங் கண்ணோய் நின்னடி

"பிறர்க்கற மருளும் பெரியோன்" (உக : கஎஅ) என்பர் பின்னும்; போதிவிருட்சத்தினடியிற் புத்தனுக்கு ஞானோதயமானபொழுது மாரன் அவனைநோக்கி, 'நீ இப்பொழுதே நிருவாணமடை' என்று சொல்ல, புத்தன் மயங்குகையில், பிரமதேவர்வந்து, 'நீ இப்பொழுது அடைய வேண்டாம்; நீ அறிந்த தருமத்தை உபதேசித்து நிருவாணமடைதற்குரிய வழியை எல்லோர்க்குங் காட்டிவிட்டு அப்பாற் செல்க' என்றலின், புத்தன் தருமோபதேசஞ் செய்யத்தொடங்கினனென்று புத்த சரிதத்தால் தெரிகின்றது.

கூச. துறக்கம் - சுவர்க்கம். அழிவற்ற நிருவாணமே அவனால் விரும்பப்பட்டமையின், அழிதன் மாலையதாய துறக்கம் வேண்டப்படாததாயிற்று.

கூரு. எண் பிறக்கு ஒழிய இறந்தோய் - மாந்தர்களுடைய எண்ணங்கள் எட்டாமற் பின்னே கிடக்கும்படி மேற்பட்ட நிலையிற் சென்றோனே; பிறக்கு - பின்; "துறைபிறக் கொழியப் போகி" (பெரும்பாண். ருகூக); "முதிர்காய் வள்ளியங் காடுபிறக் கொழிய" (முல்லை. க0க.) இறத்தல் - கடத்தல்.

கூகூ. பிறர்க்குக் கண் அளிக்குங் கண்ணோய் - உயிர்களுக்கு ஞானத்தை யருளிச்செய்த ஞானியே; கண் - ஈண்டு ஞானம். புத்தன் பலர்க்குத் தருமோபதேசஞ்செய்த ஆசிரியனாதலின், இங்ஙனங்கூறினர். இனி, உலோகோபகாரத்திற்காகப் புத்தனெடுத்த அநேக ஜாதகங்களுள், ஒன்றில் இவன் கொடையைப் பரிசோதிக்கவெண்ணி, இந்திரன்வந்து இரண்டு கண்களையுங் கேட்டபொழுது இவன் அவற்றைக் கொடுத்தானென்பராகலின், இதற்கு இந்திரனுக்குக் கண்ணைக்கொடுத்தோயென்று பொருள்கூறினும் பொருந்தும். இதனை, "விண்ணவர் நாயகன் வேண்டக், கண்ணினி தளித்த காதற், புண்ணிய னிருந்த போதி, நண்ணிட நோய்நலி யாவே" (வீர. யாப்பு. ரு, உதாரணம்), "கண்கொடுத்தா னடிகொடுத்தான் கயப்புலிக்குத் தற்கொடுத்தான், பெண்கொடுத்தா னுடம்பினையும் பிளந்திட்டுப் பிறர்க்கீந்தான், மண்கொடுத்தான் மகக்கொடுத்தான் மன்னுந்தற் சேர்ந்தார்க்கு, விண்கொடுத்தானவன்கொடுத்த விரித்துரைப்பன் கேளென்றாள்", "மிக்கதனங் களைமாரி மூன்றும் பெய்யும் வெங்களிற்றை மிருசிந்தா மணியை மேனி, யொக்கவரிந் தொருகூற்றை யிரண்டு கண்ணை யொளிதிகழுந் திருமுடியை யுடம்பி லூனை, யெக்கிவிழுங் குருதிதனை யரசு தன்னை யின்னுயிர்போற் றேவியையீன் றெடுத்த செல்வ, மக்களைவந் திரந்தவர்க்கு மகிழ்ந்தே யீயும் வானவர்தா முறைந்தபதி மாறு வூரே" (நீல. சமய.) என்னும் பாடல்களால் உணர்க.

(பி - ம்.) கூரு. 'என்பிறகொழியவிறைபோயநின்னடி', 'இருந்தோய் நின்னடி.'

தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
யுரகர் துயர மொழிப்போய் நின்னடி
வணங்குத லல்லது வாழ்த்தலென் னாவிற்
கடங்கா தென்ற வாயிழை முன்னர்ப்
போதி நீழற் பொருந்தித் தோன்று
நாதன் பாத நவைகெட வேத்தித்
தீவ திலகை சேயிழைக் குரைக்கும்

௬௭. தீமொழி - பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என்பன; மொழிக்கு - சொல்லைக் கேளாதிருத்தற்கு.

௬௮. வாய்மொழி - சத்தியம்.

௬௯. நரகர்களிற்சிலர்க்குக் கிலேசசாந்தி செய்வித்தற்பொருட்டு மனமிரங்கி ஒருஜாதகத்திற் புத்தன் நரகலோகத்திற்குச் சென்றானென்பராதலின், இங்ஙனங்கூறினார்; "அருவினை சிலர்கெட வொரு பெரு நரகிடை, யெரிசுடர் மரைமல ரெனவிடு மடியினை" வீர. யாப்பு: ௧௧, உதாரணம்.

௭௦. உரகர் - நாகர்; நாகர்களுக்குக் கருடனாலுண்டாகிய துன்பம் நீங்கும் பொருட்டு அவனுக்குத் தயாதருமத்தை உபதேசஞ்செய்து அவனால் அவர்களுக்கு அமிர்தங்கிடைக்கும்படி புத்தன் செய்தானென்பது ஒரு ஜாதககதை. இதனைப் பின்னுள்ள செய்யுட்களாலறிக: "மீதியல் கருடனை விடவர வொடுபகை விதிமுறை கெடவறம் வெளியுற வருளினை", "பொற்புடை நாகர்தந் துயரம் போக்கினை", "பைந்நாகர் குலமுய்ய வாயமிழ்தம் பகர்ந்தனையே", "ஆரமிழ்த மணிநாகர் குலமுய்ய வருளினையே", "வார்சிறைப்புள் ளரையற்கும் வாய்மைநெறி பகர்ந்தனையே" (வீர. யாப்பு. ௧௧, உதாரணங்கள்.) தயையைப் புலப்படுத்துதலையே பயனாக நினைந்து ஸ்ரீஹர்ஷகவி யென்பவரால் வடமொழியிற் செய்யப்பட்டுள்ளதாகிய ஜீமூதவாகனன் சரிதமாயுள்ள நாகாநந்தமென்னும் நாடகத்தை உற்றுநோக்கின், அஃது ஈண்டுக்கூறிய புத்தஜாதககதையின் வழிப்பட்டதாக யாவருக்கும் விளங்குமென்பர்.

௭௧ - ௨. வாழ்த்தல் அடங்காது; இப்படியே "ஆயிர வாரத் தாழியந் திருந்தடி, நாவா யிரமிலே னேத்துவ தெவன்" (௫ : ௧௦௪ - ௫) என்று முன்னும் வந்திருத்தல்காண்க.

௭௪. புத்தனை நாதனென்றல் மரபு; இதனை, "நவையறு நாத னல்லறம் பகர்வோர்" (௨௮ : ௭௧), "நாத னல்லறங் கேட்டலை விரும்பி" (௨௮ : ௮௯) என இந்நூலுள்ளே பின்வருவனவற்றாலுணர்க. புத்தர்களிற் சிலர் தேவர்களையும் நாதரென்பதுண்டு. நவை - குற்றம்.

௭௫. சேயிழைக்கு உரைக்கும் - மணிமேகலைக்குத் தீவதிலகை சொல்லுவாள்.

குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉ
நாணணி களையு மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோ
ரிசைச்சொ லளவைக் கென்னா நிமிராது
புன்மரம் புகையப் புகையழற் பொங்கி
மன்னுயிர் மடிய மழைவளங் கரத்தலி

இனிப் பசியின் கொடுமை கூறப்படுகின்றது.

“பசிப்பிணி யென்னும் பாவி” (அ0) என்பதனை ‘அழிக்கும்’ (எசு) என்பது முதலிய முற்றுவினைகளோடு தனித்தனியே கூட்டுக.

எசு. குடிப்பிறப்பு அழிக்கும் - பசி, தன்னாற்பற்றப்பட்டாருடைய உயர்குடிப்பிறப்பைக் கெடுக்கும்; அக்குடியிலிருந்த முன்னோர்களுக்கில்லாத இழிந்தசெயல்களை அவர்களிடத்து உளவாக்கலான் இவ்வாறு கூறப்பட்டது; “தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக, நல்குர வென்னு நசை” (குறள், க0சங.) விழுப்பங்கொல்லும் - சிறப்பினைக் கெடுக்கும்.

எஎ. கல்விப் பெரும்புணை விடூஉம் - கல்வியாகிய பெரிய தெப்பத்தை நீக்கும்; “நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார், சொற்பொருள் சோர்வு படும்” (குறள், க0சசு), “பிறந்த குலமாயும் பேராண்மை மாயுஞ், சிறந்ததங் கல்வியு மாயும்” (நாலடி. உஅரு) என வருதல் காண்க.

எஅ. நாண் அணி களையும் - நாணாகிய ஆபரணத்தை நீக்கும்; அழகுசெய்தலின், நாண் அணியெனப்பட்டது; “அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு” குறள், க0கச.

அ0. பண்பிற்குப் பண்பி இல்லையேனும் தன்னாற் சாரப்பட்டாரிடத்துள்ள எல்லா நன்மைகளையும் அழித்தற்கொடுமைபற்றிப் பசியைப் பாவியென்றார்; இப்படியே, “இன்மை யெனவொரு பாவி” (குறள், க0சஉ) என்று வருதல் காண்க. அது - அப்பசியை.

அக. இசை - புகழ். அளவைக்கு - அளத்தற்கு. என் நா நிமிராது - எனது நா எழமாட்டாது; நிமிர்தல் - பேசுதற்கு முயறல்; உபகாரிகளின் புகழ் அளவுபடாதென்றபடி.

பசி யாரையும் வருத்தி வேறுபாடுறுவிக்கு மென்பதற்கு உதாரணமாக விசுவாமித்திரமுனிவர் வறட்காலமொன்றில் நாயூன் தின்பதற்கு முயன்றதைத் தீவதிலகை இனிச்சொல்லுவாள்.

அஉ. மழை வளம் கரத்தலின் - மழையாகிய செல்வம் மறைந்துபோனமையால். மூ. மணி. உஅ : கருஎ.

(பி - ம்.) எஅ. ‘நாணினைக்களையும்’ அங. ‘மழைவளங்கரப்ப’

னரசுதலை நீங்கிய வருமறை யந்தண
னிருநில மருங்கின் யாங்கணுந் திரிவோ
னரும்பசி களைய வாற்றுவது காணான்
றிருந்தா நாயூன் றின்னுத லுறுவோ
னிந்திர சிறப்புச் செய்வோன் முன்னர்
வந்து தோன்றிய வானவர் பெருந்தகை
மழைவளந் தருதலின் மன்னுயி ரோங்கிப்
பிழையா விளையுளும் பெருகிய தன்றே
வாற்றுநர்க் களிப்போ ரறவிலை பகர்வோ
ராற்றா மாக்க ளரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை

---

௮௪. அந்தணன் - விசுவாமித்திர முனிவர்.

௮௫. அரும்பசி - தீர்த்தற்கரிய பசியை. ஆற்றுவது காணான் - தணித்தற்குரிய உணவு யாதொன்றையும் காணானாகி.

௮௭. விசுவாமித்திரமுனிவர் பசியின் கொடுமையால் நாயூன் தின்பதற்கு முயன்றாரென்பதை மனுஸ்மிருதி, ௧௦ - ஆம் அத்தியாயம், ௧௦௮ - ஆம் சுலோகத்திற்காண்க.

௮௮. இந்திரசிறப்பு - பலியிடுதல் (வைச்வதேவம்); இது மற்றைத் தேவர்களுக்கும் உரித்தெனினும் தலைமைபற்றி 'இந்திரசிறப்பு' எனப் பட்டது; உண்பதற்குமுன்பு இதனைச் செய்தல் வேண்டுமென்பது விதி.

௮௯. வானவர் பெருந்தகை - இந்திரன்.

௯௧. பிழையா விளையுள் - தப்பாதவிளைவு; "வேலி, யாயிரம விளையுட் டாக" (பொருந. ௨௪௯ - ௭); "வெள்ளமா றாது விளையுள் பெருக" மதுரை. ௧௦௯.

௮௫ - ௯௧. மழைவளங் கரத்தலின், அந்தணன் திரிவோன் காணான் உறுவோன் செய்வோன் முன்னர் வந்துதோன்றிய பெருந் தகை தருதலின், ஓங்கிப் பெருகியதன்றே.

௯௨. ஆற்றுநர்க்கு - பொறுக்கும் வன்மையையுடையோராகிய செல்வர்க்கு; ஆற்றுநர்க்களிப்போர் பயன்கருதிச் செய்வோராகின்றமையின், 'அறவிலைபகர்வோர்' என்றார். "இம்மைச் செய்தது மறுமைக் காமெனு, மறவிலை வாணிக னாஅ யல்லன்" புறநா. ௧௩௪.

௯௩. ஆற்றாமாக்கள் - தரித்திரர்; "எற்றகை மாற்றாமை யென்னா னுந் தாம்வரையா, தாற்றாதார்க் கீவதா மாண்கடன்" நாலடி. ௯௮.

௯௪. மேற்று - மேலது.

௯௩ - ௪. வாழ்க்கை களைவோர் மேற்று.

௯௨ - ௪. இவ்வடிகளின் கருத்து, "எமக்கீவோர் பிறர்க்கீவோர்,

(பி - ம்.) ௮௪. 'அரசு நீங்கிய' ௮௮. 'இந்திரச்சிறப்பு' ௯௦. 'ஓம்பி' ௯௪. 'நெறிவழக்க'

மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லா
முண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே
யுயிர்க்கொடை பூண்ட வுரவோ யாகிக்
கயக்கறு நல்லறங் கண்டனை யென்றலும்
விட்ட பிறப்பில்யான் விரும்பிய காதலன்
றிட்டி விடமுணச் செல்லுயிர் போவுழி
யுயிரொடு வேவே னுணர்வொழி காலத்து
வெயில்விளங் கமயத்து விளங்கித் தோன்றிய
சாது சக்கரன் றனையா னூட்டிய
காலம் போல்வதோர் கனாமயக் குற்றே

பிறர்க்கீவோர் தமக்கீபவென, வனைத்துரைத்தனன் யானாக" (புறநா. ௧௩௯) என்பதில் வந்திருத்தல்காண்க.

௯௫. மண்டிணி ஞாலத்து - அணுக்கள் செறிந்த நிலவுலகத்தில்; "மண்டிணிந்த நிலனும்" புறநா. ௨.

௯௬. மூ. புறநா. ௧௮.

௯௭. உயிர்க்கொடை - உயிரைக்கொடுத்தல். உரவோயாகி - வலிய அறிவினையுடையோயாகி.

௯௮. கயக்கு - கலங்குதல்; "கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்" (௯ : ௮௫) என்பர் பின்னும். 'கண்டனை' என்றது தெளிவு பற்றி. என்றலும் - என்று தீவதிலகை சொல்லலும்.

௯௯. விட்டபிறப்பு - போனபிறப்பு. காதலன் - கணவனாகிய இராகுலன்.

௧00. திட்டிவிடமுண - திருஷ்டிவிஷமென்னும் பாம்புதீண்ட; மணி. ௯ : ௪௯ - ஆம் அடியின் குறிப்பைப்பார்க்க. உயிர்போவுழி - உயிர் போன விடத்து.

௯௯ - ௧00. காதலன் உயிர்போவுழி.

௧0௧. உயிரொடு வேவேன் - அவன் பிரிவாற்றாது தீயிற்பாய்ந்து உயிரொடு வேவாநிற்பேன். வேவேன் : பெயர்.

௧00 - ௧0௧. மணி. ௯ : ௪௯ - ௫0.

௧0௨. மணி. ௫ : ௬0, ௧0 : ௨௭.

௧0௩. ஊட்டிய - உண்ணச்செய்த.

௧0௪. கனாமயக்குற்றேன் - கனாவாகிய மயக்கத்தை அடைந்தேன்.

௯௯ - ௧0௪. காதலன் உயிர்போவுழி வேவேன் உணர்வொழி காலத்துக் கனாமயக்குற்றேன்.

(பி - ம்.) ௯௯. 'பிறப்பின'

ஞுங்கதன் பயனே யாருயிர் மருந்தா
யீங்கிப் பாத்திர மென்கைப் புகுந்தது
நாவலொடு பெயரிய மாபெருந் தீவத்து
வித்தி நல்லறம் விளைந்த வதன்பயன்
றுய்ப்போர் தம்மனைத் துணிச்சித ருடுத்து
வயிறுகாய் பெரும்பசி யலைத்தற் கிரங்கி
வெயிலென முனியாது புயலென மடியாது
புறங்கடை நின்று புன்கண் கூர்ந்துமுன்
னறங்கடை நில்லா தயர்வோர் பலரா
லீன்ற குழவி முகங்கண் டிரங்கித்
தீம்பால் சுரப்போ டன்முலை போன்றே

க0ரு. அதன் - அக்கனுவின்.

க0ரு - சு. உயிர் உடம்பினீங்கும் பொழுதுள்ள நினைப்பின்பயனை மறுபிறப்பில் அவ்வுயிர் அடையுமென்பது தொன்னூற்றுணிபாதலின் இங்ஙனங் கூறினுள்; (மணி. கச : க0க - ச.) இக்கருத்தை, "பிறப் பென்னும் பேதைமை" (௩௫௮) என்கிற குறளுக்குப் பரிமேலழகரெழு திய விசேடவுரையாலுமுணர்க. க0எ. சம்புத்தீவில்.

க0அ. நல்லறத்தை வித்தி. பயன் - பயனை; என்றது பலவகைத் தாகிய செல்வத்தை.

க0கூ. துய்ப்போர் தம்மனை - அனுபவிக்கும் செல்வருடைய வீட் டில். துணிச் சிதருடுத்து - கிழிந்த சீரைகளை உடுத்திக்கொண்டு. சிதர், சிதாரெனவும் வழங்கும்.

கக0. வயிறுகாய் பெரும்பசி : மணி. கச : சு.

ககக. முனியாது - வெறுக்காமல். புயலென மடியாது - மழை யென்று ஓரிடத்தில் தங்காமல்; மடிதல் - தங்குதல்; "மல்லற் பேரூர் மடியின்" பெரும்பாண். உருச.

ககஉ. புறங்கடைநின்று - தலைவாயிலில் நின்றுகொண்டு. புன்கண் கூர்ந்து - துன்பமிகுந்து; "அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்து நோக்கிப், புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி, மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத், தவத்தாற் றவஞ்செய்யா தார்" நாலடி. ௩க.

ககஉ - ௩. முன் அறங்கடை - முற்பிறப்பிற் செய்தபாவத்தால். நில்லாது - ஓரிடத்தில் நில்லாது. அறத்தினீக்கப்பட்டமையின், பாவம் அறங்கடை யெனப்பட்டது; "அறன்கடை நின்றாரு ளெல்லாம்" குறள், கசஉ.

ககரு. சுரப்போள் - தாய்.

(பி - ம்.) க0அ. 'வித்தியால' ககஉ. 'நின்றுபுனகூர்நதிரநதது முனறங்'

நெஞ்சுவழிப் படூஉம் விஞ்சைப் பாத்திரத்
தகன்சுரைப் பெய்த வாருயிர் மருந்தவர்
முகங்கண்டு சுரத்தல் காண்டல் வேட்கையே னென
மறந்தே னதன்றிற நீயெடுத் துரைத்தனை
யறங்கரி யாக வருள்சுரந் தூட்டுஞ்
சிறந்தோர்க் கல்லது செவ்வனஞ் சுரவா
தாங்கன மாயினை யதன்பய னறிந்தனை
யீங்குநின் றெழுவா யென்றவ ளுரைப்பத்
தீவ திலகை தன்னடி வணங்கி
மாபெரும் பாத்திர மலர்க்கையி னேந்திக்
கோமகன் பீடிகை தொழுதுவலங் கொண்டு
வானூ டெழுந்து மணிமே கலைதான்
வழுவறு தெய்வம் வாய்மையி னுரைத்த
வெழுநாள் வந்த தென்மகள் வாராள்

ககசு. நெஞ்சுவழிப் படூஉம் - மனத்தின்வழியே ஒழுகும். விஞ்சை - வித்தை.

ககஎ. சுரை - ஈண்டுப்பாத்திரத்தில் உள்ளீடில்லாது குழிந்த பாகம்.

ககஎ - அ. அவர் முகங்கண்டு - மேற்கூறிய பசியாளர்களுடைய வாடிய முகங்கண்டு. வேட்கை - விருப்பம். என - என்று மணிமேகலை சொல்ல.

கககூ. அதன் திறம் - அப்பாத்திரத்தின் வரலாற்றை. அதன்றிறம் மறந்தேன்.

கஉ0. அறம்கரியாக - தருமமேசான்றாக. அருளாவது, "ஒன்றின் றுயர்கண்டாற் காரணமின்றித் தோன்றும் இரக்கம்" என்பர் (ரு) புறநானூற்று உரையாசிரியர்; "தொடர்புபற்றாது இயல்பாக எல்லாவுயிர்கண் மேலுஞ்செல்வது" என்பர் பரிமேலழகர்; குறள், உரு - ஆம். அதி. அவ.

கஉக. (பாத்திரம்) சுரவாது.

கஉஉ. ஆங்கனமாயினை - அறங்கரியாக அருள்சுரந்தூட்டும் அத்தன்மையை யுடையாயாயினை. 'அவர்முகங்கண்டு சுரத்தல் காண்டல் வேட்கையேன்' (ககஎ) என்று முன்பு கூறியதனால், 'அதன்பயனறிந்தனை' என்றாள்.

கஉ௩. அவள் - தீவதிலகை.

கஉசு. கோமகன் பீடிகை - புத்தனுடைய பாதபீடிகை.

கஉஅ. தெய்வம் - மணிமேகலாதெய்வம்.

(பி - ம்.) ககசு. 'பாத்திரமகன' ககஅ. 'சுரத்தில்வேட்கையே' கஉக. 'அல்லதீவளஞ்சுரவாது' கஉஉ. 'ஆங்கண மாயிழையதன்பய'

க௩0 வழுவா யுண்டென மயங்குவோண் முன்னர்
வந்து தோன்றி யவர்மயக் கங்களைந்
தந்தி லவர்க்கோ ரற்புதங் கூறு
மிரவி வன்ம னொருபெரு மகளே
துரகத் தானைத் துச்சயன் றேவி
க௩௫ யமுத பதிவயிற் றரிதிற் றோன்றித்
தவ்வைய ராகிய தாரையும் வீரையு
மவ்வைய ராயினீர் நும்மடி தொழுதேன
வாய்வ தாக மானிட யாக்கையிற்
றீவினை யறுக்குஞ் செய்தவ நுமக்கீங்
க௪0 கறவண வடிக டம்பாற் பெறுமின்
செறிதொடி நல்லீ ரும்பிறப் பீங்கிஃ
தாபுத் திரன்கை யமுத சுரபியெனு
மாபெரும் பாத்திர நீயிருந் தொழுமெனத்

க௩0. வழுவாய் - தப்புதல். என - என்று நினைத்து. மயங்குவோள் - சுதமதி.

க௩க. சுதமதியோடு மாதவியையும் உளப்படுத்தி 'அவர்' என்றார்.

க௩௨. அந்தில் - அவ்விடத்து. அற்புதம் - ஆச்சரியம். கூறும் - மணிமேகலை சொல்லுவாள்.

க௨எ - ௩௨. மணிமேகலைதான், மயங்குவோண் முன்னர் வந்து தோன்றிக் களைந்து அவர்க்கு ஓர் அற்புதங்கூறும்.

க௩௪. தேவியென்றது சுதமதியை.

க௩௩ - ௪. மூ. மணி. எ : ௯அ - ௯.

க௩௬. தவ்வையர் - தமக்கைமார். க௩எ. அவ்வையர் - தாய்மார்.

க௩அ - ௯. வாய்வதாக - வாய்ப்புடைத்தாருக. செய்தவம் நுமக்கு வாய்வதாகவென்க; "வாய்வ தாகநின் மனப்பாட்டறம்" (உக : கஎக) என்பர் பின்னும்; "வாய்வதின் வந்த குரவை" (சிலப். க௮ : ௪எ); "வாய்வதிற், றந்தையுந் தாயுந் தொழுதெழுக" ஆசார. ௫.

க௪0 - ௪க. உம்பிறப்பின்வரலாற்றை அறவணவடிகளிடம் அறிந்து கொள்ளுமின்.

க௪க - ௩. இஃது, ஆபுத்திரன் கையிலிருந்த அமுதசுரபியெனப் படுகின்ற மிகச்சிறந்துள்ள பாத்திரம்; இதனை நீருந் தொழுமினென்று மணிமேகலை சொல்ல.

(பி - ம்.) க௩0. 'வழுவாளுண்டென மயங்குவோள்' க௩௪. 'துரகதத்' க௩௫ - ௬. 'அமுதவதிவயிற் றோன்றியென், றவ்வையராகிய' க௪0. 'அறவண ரடிகள்'

தொழுதன ரேத்திய தூமொழி யாரொடும்
௧௪௫ பழுதறு மாதவன் பாதம் படர்கேம்
எழுகென வெழுந்தன ளிளங்கொடி தானென்.

கக.—பாத்திரம்பெற்றகாதை முற்றிற்று.

---

௧௪௪. தூமொழியார் - சுதமதியும் மாதவியும்.

௧௪௫. பழுது - குற்றம். இனி, "பழுதொழிந் தெழுந்திருந் தான்" (சிலப். கக: ௬௬) என்பதில் 'பழுது' என்பதற்கு உடம் பென்று அடியார்க்குநல்லார் பொருள்செய்திருத்தலால், பழுதறுமாதவ னென்பதற்கு உடற்பற்றொழிந்த அறவணவடிகளென்று பொருள்கூறி னும் பொருந்தும்; "செய்தவ யாக்கையின், மேவினே னாயினும் வீழ் கதிர் போன்றேன்" (௨௪ : ௧0௧ - ௨) என்று அறவணவடிகள் கூறிய தாகப் பின்பு கூறுதல்காண்க. படர்கேம் - செல்லுவேம்.

௧௪௬. இளங்கொடி - மணிமேகலை. இளங்கொடி, நீர் எழுக வென்று சொல்லி எழுந்தனளென்க.

௧ - ௧௪௬. மணிபல்லவத்தில் தெய்வம் நீங்கியபின்னர் மணிமேகலை தாழ்ந்து நோக்கித் திரிய, தீவதிலகை தோன்றி, 'யார்நீ' என்றலும், 'கேளாய் என்வரவு ஈது; பயன் இது; அன்னாய், நீயார்' என்றலும் தீவ திலகை உரைக்கும்; அங்ஙனமுரைப்பவள், என்றுரைத்தலும், மணி மேகலை விரும்பிப் பீடிகையைத் தொழுது வணங்கிக் கூடி வலஞ்செய்து நிற்றலும், அவள்கையிற் பாத்திரம் புகுந்தது; புகுதலும் மகிழ்வெய்தி, 'வாழ்த்தல் என்னாவிற்கடங்காது' என்றாள்; என்ற மணிமேகலையின் முன்னர்த் தீவதிலகை உரைக்கும்; அங்ஙனமுரைப்பவள், 'கண்டனை' என்றலும், மணிமேகலை, 'காண்டல் வேட்கையேன்' என, அவளுரைப்ப மணிமேகலை வணங்கி ஏந்தி வலங்கொண்டு எழுந்து மயங்குவோள் முன் னர் வந்துதோன்றிக் களைந்து கூறும்; அங்ஙனங் கூறுகின்றவள், தொழுமென, தொழுதேத்திய அவரொடும், இளங்கொடி எழுந்தன ளென வினைமுடிவுசெய்க.

பன்னிரண்டாவது

அறவணர்த்தொழுதகாதை.

[பன்னிரண்டாவது மணிமேகலை பாத்திரங்கொண்டு தன்னூர் அறவணர்த்தொழுதபாட்டு.]

ஆங்கவர் தம்முட னறவண வடிகள்
யாங்குள ரென்றே யிளங்கொடி வினாஅய்
நரைமுதிர் யாக்கை நடுங்கா நாவி
னுரைமூ தாள னுறைவிடங் குறுகி
மைம்மலர்க் குழலி மாதவன் றிருந்தடி
மும்முறை வணங்கி முறையுளி யேத்திப்
புதுமலர்ச் சோலை பொருந்திய வண்ணமு
முதய குமரனுங் குற்றுரை செய்தது
மணிமே கலாதெய்வ மணிபல் லவத்திடை
யணியிழை தன்னை யகற்றிய வண்ணமு
மாங்கத் தீவகத் தறவோ னாசன
நீங்கிய பிறப்பு நேரிழைக் களித்தது
மளித்த பிறப்பி னாகிய கணவனைக்
களிக்கய னெடுங்கட் கடவுளிற் பெற்றதுந்
தவ்வைய ராகிய தாரையும் வீரையும்

---

௧. அவர் - சுதமதி, மாதவி.

௨. இளங்கொடி - மணிமேகலை. வினாஅய்=வினவி - கேட்டுக்கொண்டு.

௪. உரைமூதாளன் - அறவணவடிகள். குறுகி - அடைந்து.

௩ - ௪. மணி. ௨௪ : ௯௯ - ௧௦௦ ; "நரைமூ தாளர்" புறநா. ௫௨.

௫. குழலி - மணிமேகலை. ௬. முறையுளி - விதிப்படி.

௭. சோலை - உவவனம்.

௧௧ - ௨. ஆசனம் பிறப்பை அளித்ததும்.

௧௪. கடவுளின் - மணிமேகலாதெய்வத்தால்.

௧௫ - ௬. வீரை மதுமயக்கத்தால் யானைக்குமுன்னே சென்றும்,

(பி - ம்.) ௫. 'குழலியர் மாதவன்' ௭. 'சோலைப்பொருந்திய' ௧௩. 'பிறப்பினாயிழை கணவனை'

வெவ்வினை யுருப்ப விளிந்துகே டெய்தி
மாதவி யாகியுஞ் சுதமதி யாகியுங்
கோதையஞ் சாய னின்னொடுங் கூடின
ராங்கவர் தந்திற மறவணன் றன்பாற்
பூங்கொடி நல்லாய் கேளென் றுரைத்தது
முரைத்த பூங்கொடி யொருமூன்று மந்திரந்
தனக்குரை செய்துதா னேகிய வண்ணமுந்
தெய்வம் போயபின் றீவ திலகையு
மையெனத் தோன்றி யருளொடு மடைந்தது
மடைந்த தெய்வ மாபுத் திரன்கை
வணங்குறு பாத்திரம் வாய்மையி னளித்தது
மாபுத் திரன்றிற மறவணன் றன்பாற்
கேளென் றுரைத்துக் கிளரொளி மாதெய்வம்
போகென மடந்தை போந்த வண்ணமு
மாதவன் றன்னை வணங்கின ளுரைத்தலு
மணிமே கலையுரை மாதவன் கேட்டுத்
தணியா வின்பந் தலைத்தலை மேல்வரப்
பொற்றொடி மாதர் நற்றிறஞ் சிறக்க
வுற்றுணர் வாய்நீ யிவர்திற முரைக்கே
னின்னெடுந் தெய்வ நினக்கெடுத் துரைத்த

தாரை நிலாமுற்றத்தின்மேல் ஏறி வீழ்ந்தும் இறந்தமையால், 'தாரையும் வீரையும், வெவ்வினை யுருப்ப விளிந்து' என்றார்; மணி. கஉ : சரு - அ-

கஎ - அ. மு. மணி. க0 : எ௩ - ச. க௯. திறம் - வரலாறு.

உக. பூங்கொடி - மணிமேகலாதெய்வம். மூன்றுமந்திரம் : மணி. க0 : அ0 - ௯க.

உச. ஐயெனத் தோன்றி - விரைவாகத்தோன்றி.

உரு. தெய்வம் - தீவதிலகை. உஎ - அ. மணி. கக : ருஉ.

உ௯. போக என - போவாயென்று சொல்ல.

மேல்வருவன அறவணவடிகளுடைய கூற்று.

௩உ. தலைத்தலை மேல்வர : மணி. உ : ரு.

௩௩. மாதர் : விளி. நற்றிறம் - நல்லகூறுபாடுகள்.

௩ச. உரைக்கேன் - உரைப்பேன்.

(பி - ம்.) உ௬. 'வணங்குபாத்திர' உஅ. 'கேளென்றுரைத்த' ௩௩. 'பொற்றொடிமாதவா'

வந்நா ளன்றியு மருவினை கழூஉ
மாதி முதல்வ னடியிணை யாகிய
பாதபங் கயமலை பரவிச் செல்வேன்
கச்சய மாளுங் கழற்கால் வேந்தன்
றுச்சயன் றன்னையோர் சூழ்பொழிற் கண்டேன்
மாபெருந் தானை மன்ன நின்னொடுந்
தேவியர் தமக்குந் தீதின் றேவெ
வழிதக வுள்ளமொ டரற்றின னாகி
யொளியிழை மாதர்க் குற்றதை யுரைப்போன்
புதுக்கோள் யானைமுன் போற்றாது சென்று
மதுக்களி மயக்கத்து வீரை மாய்ந்ததூஉ
மாங்கது கேட்டோ ரரமிய மேறித்
தாங்காது வீழ்ந்து தாரைசா வுற்றதூஉங்
கழிபெருந் துன்பங் காவல னுரைப்பப்
பழவினைப் பயனீ பரியலென் றெழுந்தே
யாடுங் கூத்திய ரணியே போல
வேற்றோ ரணியொடு வந்தீ ரோவென
மணிமே கலைமுன் மடக்கொடி யார்திறந்
துணிபொருண் மாதவன். சொல்லியு மமையான்

௩௬. அந்நாள் அன்றியும் - அந்தநாளிற் சென்றதல்லாமலும்.

௩௮. பாதபங்கயமலை : மணி. ௧௦ : ௬௧ - ௮.

௩௮ - ௪௦. செல்வேன் துச்சயனை ஓர் பொழிலிற் கண்டேன்.

௪௪. உற்றதை - உற்றதுன்பத்தை.

௪௫. புதுக்கோள் யானை - புதிதாகப் பிடித்துக்கொண்டுவரப்பட்டயானை ; குறுந். ௧௨௧.

௪௭. அது - வீரைமாய்ந்தது. அரமியம் - நிலாமுற்றம்.

௪௯. கழிபெருந் துன்பம் - மிகப்பெரியதுன்பம் ; அவ்விருவரும் இறந்தபெரியதுன்பமுமாம் ; கழிதல் - நீங்குதல்.

௪௬ - ௯. மாய்ந்ததும் சாவுற்றதுமாகிய துன்பத்தைக் காவலனுரைப்ப.

௫௦. பரியல் - வருந்தாதே.

௫௧ - ௨. "ஆடுங் கூத்தர்போ லாருயி ரொருவழிக், கூடிய கோலத் தொருங்குநின் றியலாது" சிலப். ௨௮ : ௧௬௫ - ௬.

௫௪. அமையான் - தணியானாகி.

(பி - ம்.) ௩௭. 'மாதவமுதல்வனடி' ௩௮. 'பங்கயமலர்பரவிச்' ௪௨. 'நீங்கின்றேவென' ௪௩. 'ஆற்றானாகி' ௪௫. 'யானையைப் போற்றாச்' ௪௭. 'கேட்டாளரமிய' ௫௧. 'ஆடுகூத்தரணியே' ௫௨. 'வேற்றோரணி

பிறவியு மறவியும் பெற்றியி னுணர்ந்த
நறுமலர்க் கோதாய் நல்கினை கேளாய்
தரும தலைவன் றலைமையி னுரைத்த
பெருமைசா லல்லறம் பெருகா தாகி
யிறுதியி னற்கதி செல்லும் பெருவழி
யறுகையு நெருஞ்சியு மடர்ந்துகண் ணடைத்தாங்குச்
செயிர்வழங்கு தீக்கதி திறந்து கல்லென்
றுயிர்வழங்கு பெருநெறி யொருதிறம் பட்டது
தண்பனி விழுங்கிய செங்கதிர் மண்டில
முண்டென வுணர்த லல்ல தியாவதுங்
கண்டினிது விளங்காக் காட்சி போன்றது
சலாகை நுழைந்த மணித்துளை யகவையி
னுலாநீர்ப் பெருங்கட லோடா தாயினு
மாங்கத் துளைவழி யுகுநீர் போல
வீங்கு நல்லற மெய்தலு முண்டெனச்
சொல்லலு முண்டியான் சொல்லுத றேற்றார்

ருரு. அறவி - புண்ணியத்தோடு கூடியவழி.

ருசா. நல்கினை கேளாய் - உவந்து கேளாய்; நல்குதல் - உவத்தல்; "நல்கினு நல்கா னாயினும்" புறநா. அ0.

ருரு - சா. மணி. உக : க0ரு - சா.

ருஎ. தருமதலைவன் - புத்தன்; மணி. கக : ங0.

ருகூ. இறுதியில் நற்கதி - நிருவாணம். பெருவழி - தருமம்.

சா0. அறுகை - அறுகம்புல். கண்ணடைத்தாங்கு - இடம் அடைக்கப்பட்டாற்போல.

சாக. செயிர் - குற்றம்.

சாஉ. உயிர்வழங்கு பெருநெறி - பிறந்திறக்கும் உயிர்களெல்லாம் போகும்வழி (சிலப். உஅ : கஎங - ச.) ஒருதிறம்பட்டது - ஒருவழிப் பட்டது.

சாங. செங்கதிர்மண்டிலம் - சூரியமண்டலம்.

சாச. யாவதும் - சிறிதும். ருகூ - சாரு. பெருவழி போன்றது.

சாசா. சலாகை - சிறிய நாராசம். அகவையின் - உள்ளிடத்தே.

எ0. யான்சொல்லலும் உண்டு. தேற்றார் - தெளியார்.

எ0 - எக. மக்கள் தேற்றாராதலின்.

(பி - ம்.) ருகூ. 'இறுதிநற்கதி' சா0. 'படர்ந்து கண்ணடைத்' சாக - உ. 'நல்லென்றுயிர்' சாங. 'தன்மணிவிழுங்கிய' எ0. 'சொல்லு முண்டியான்'

மல்லன்மா ஞாலத்து மக்களே யாதலிற்
சக்கர வாளத்துத் தேவ ரெல்லாந்
தொக்கொருங் கீண்டித் துடிதலோ கத்து
மிக்கோன் பாதம் விழுந்தன ரிரப்ப
விருள்பரந்து கிடந்த மலர்தலை யுலகத்து
விரிகதிர்ச் செல்வன் றோன்றின னென்ன
வீரெண் ணூற்றோ டீரெட் டாண்டிற்
பேரறி வாளன் றோன்றுமதற் பிற்பாடு
பெருங்குள மருங்கிற் சுருங்கைச் சிறுவழி
யிரும்பெரு நீத்தம் புகுவது போல
வளவாச் சிறுசெவி யளப்பரு நல்லற
முளமலி யுவகையோ டுயிர்கொளப் புகூஉங்
கதிரோன் றோன்றுங் காலை யாங்கவ
னவிரொளி காட்டு மணியே போன்று

எங. தொக்கு - கூடி. துடிதலோகம் - துஷிதலோகம்; இஃது உலகம் முப்பத்தொன்றனுள் ஒன்பதாவது; மஹாராஜிகலோக முதலிய தெய்வலோகம் ஆறனுள் நான்காவது.

எச. மிக்கோன் - சிறந்ததேவன்; இவன் பெயர் பிரபாபால னென்றுசில புத்தநூலால் தெரிகின்றது.

எஉ - ச. மணி. கூ0 : எ - கூ. எசு. செல்வன் - சூரியன்.

எரு - சு. புத்தன் தோற்றத்துக்குச் சூரியோதயத்தை உவமை கூறியிருத்தலை, (க0 : க0 - கக, கஉ : அரு - சு, உக : கசுரு - எ, உசு : சகூ) இந்நூலிற் பலவிடத்தும் காண்க.

எஅ. பேரறிவாளன் - புத்தன். பிற்பாடு - பின்னாக; இஃது ஒரு சொல்; "பெண்ணணி கோலம் பெயர்ந்தபிற் பாடு" சிலப். கங : க.

எச - அ. இரப்பத் தோன்றும்.

எசு - அ. தோன்றினனென்னப் பேரறிவாளன் தோன்றுவான்.

எகூ. சுருங்கை - மதகு. சிறுவழி - சிறுவழியிற்.

அ0. நீத்தம் - வெள்ளம். அக. செவி - செவியில்.

அஉ. உயிர் உவகையோடு கொள்ள.

எகூ - அஉ. சிறுவழியில் நீத்தம்புகுவதுபோலச் சிறுசெவியில் நல்லறம்புகும்.

அங. காலை - காலத்தில். அச. மணி - சூரியகாந்தம்.

(பி - ம்.) எக. 'மக்களைத்திரசசெல்வன்றோன்றினி யாதலிற்' எங. 'துடிதபோகத்து' எரு. 'விண்பரந்துகிடந்த' எசு. 'விசித்திரச் செல்வன்' எகூ. 'சுருங்கிற் சிறுநெறி' அஉ. 'உளமலையுவகை' அங. 'காலையாங்கனவி'

மைத்திருள் கூர்ந்த மனமாசு தீரப்
புத்த ஞாயிறு தோன்றுங் காலைத்
திங்களு ஞாயிறுந் தீங்குறு விளங்கத்
தங்கா நாண்மீன் றகைமையி னடக்கும்
வானம் பொய்யாது மாநிலம் வளம்படு
மூனுடை யுயிர்க ளுறுதுயர் காணா
வளிவலங் கொட்கு மாதிரம் வளம்படு
நளியிரு முந்நீர் நலம்பல தரூஉங்
கறவைகன் றார்த்திக் கலநிறை பொழியும்
பறவை பயன்றுய்த் துறைபதி நீங்கா
விலங்கு மக்களும் வெரூஉப்பகை நீங்குங்
கலங்கஞர் நரகரும் பேயுங் கைவிடுங்

---

௮௫. மைத்து - கறுத்து.

மேல்வருவன, புத்தன் அவதரிக்குங் காலத்து உளவாகும் நற்குறிகள்.

௮௭. தீங்கு உறுவிளங்க - தீமைகள் உறுமல் விளங்க; விரோதமில்லாம லிருக்கவென்றபடி.

௮௮. நாண்மீன் - நட்சத்திரங்கள். ௮௯. வானம் - மேகம்.

௯0. உடம்புமெலிந்த உயிர்கள் துயரைக்காணா; உடையுயிர்: வினைத்தொகை. ஊனுடையுயிர் - மக்கள்முதலிய உயிர்களுமாம்.

௯௧. வளிவலம் கொட்கும் - காற்று வலமாகச் சுழலும்; "வல மாதிரத்தான் வளிகொட்ப" (மதுரை. ௫) மாதிரம் - திசை; மலையுமாம்; "மாதிரங் கொழுக்க" மதுரை. ௧0.

௯௨. நளி இரு முந்நீர் - நீர்செறிந்த பெரியகடல்; "நளியிரு முந்நீர் நாவா யோட்டி" (புறநா. ௬௬); முந்நீர்: எழுவாய். நலம்: "ஓர்க்கோலை சங்க மொளிர்பவளம் வெண்முத்த, நீர்ப்படு முப்பினோ டைந்து" (சிலப். ௧0: ௧0௭, மேற்.) என்னும் வளங்கள்.

௯௩. கறவை - கறத்தலையுடைய பசுக்கள். கன்று ஆர்த்தி - கன்றை உண்ணச்செய்து. கலம் நிறை பொழியும் - கறவைக்கலமும் அதனினின்றும் பால்சொரியும் சாலும் வழியும்படி பாலைப்பொழியும்; நிறை - சால்; "பீரிவர்பு பரந்த நீரறு நிறைமுதல்" (பதிற். ௧௫); "கன்றருத்தி மங்கையர் கலநிறை பொழிதர, நின்றமேதி" (சீவக. ௬௬.) கறவைகள் பொழியும்.

௯௪. பறவைகள் நீங்கா; புறநா. ௨0. துய்த்து - அனுபவித்து; புசித்தென்றுமாம்.

௯௫. மிருகசாதியும் மனிதச்சாதியும் தம்முள் அஞ்சுதற்குக் காரணமாகிய பகைமையை ஒழியும்.

௯௬. அஞர் - துன்பம். அஞரை நரகச்சாதியும் பேய்ச்சாதியும் விட்டொழியும்.

(பி - ம்.) ௮௫. 'மனமாளகழூஉம்' ௮௯. 'வளம்படும்' ௯0. 'உயிர்கள் விறுவ துயர்' ௯௧. 'வலங்கொள்கும்' ௯௫. 'பெரும்பகைநீக்கும்'

கூனுங் குறளு மூமுஞ் செவிடு
மாவு மருளு மன்னுயிர் பெறாஅ
வந்நாட் பிறந்த வருளறங் கேட்டோர்
இன்னுப் பிறவி யிகந்தோ ராதலின்
போதி மூலம் பொருந்திய சிறப்பி
முதன் பாத நவைகெட வேத்துதல்
பிறவி தோறு மறவேன் மடக்கொடி
மாதர் நின்னால் வருவன வின்னு
ஏது நிகழ்ச்சி யாவும் பலவுள
வாங்கவை நிகழ்ந்த பின்ன ரல்லது
பூங்கொடி மாதர் பொருளுரை பொருந்தா

---

௯௮. [illegible]. சிலப். ௬ : ௧௧௭. கூன் - வளைவு; ஈண்டு வளைவை யுடைய வடிவத்திற்கு ஆகுபெயர். குறள் - குறியவடிவம்; மக்களுள் [illegible] குறியாரைக் குறளரென்றும், அவரிற் சிறிது நெடியாரைச் சிந்த ரென்றும் கூறுவர் ஆசிரியர் நச்சினார்க்கினியர் (தொல். செய். சூ. ௬௦.) [illegible] - [illegible].

௯௯. மா - விலங்குவடிவாகப் பிறப்பது. மருள் - அறிவின்றி மயங்கி யிருப்பது. உயிர் - ஈண்டு மக்களுயிர்.

௯௮ - ௯. கூன்முதலிய வடிவங்களை உயிர்கள் பெறமாட்டா. கூன் முதலிய அறுவகையுடன் குருடையும் மனைபோற் பிறப்பதாகிய பிண்டத்தையுங் கூட்டி எண்வகையெச்சமென்பர்; இதனை, "சிறப்பில் சிதடு முறுப் பில் பிண்டமுங், கூனுங் குறளு மூமுஞ் செவிடும், மாவு மருளு முளப்பட வாழ்நர்க், கெண்பே ரெச்ச மென்றிவை யெல்லாம், பேதைமை யல்ல தூதிய மில்லென" (புறநா. ௨௮) என்பதனாலும், "குறளொடு செவிடு [illegible] மருள் குருடு மாவே, யுறுமுறுப் பில்லாப் பிண்ட மோதிய [illegible] மெய் யெச்சம்" ([illegible]. ௧௨ : ௧௪) என்பதனாலும் உணர்க.

[illegible]. அருளறம் : வினைத்தொகை; தயாதருமமாம்.

௧௦௦. இன்னு - துன்பம். இகந்தோர் - கடந்தோர்.

௧௦௨. பாதம் - பாதத்தை. நவை - குற்றம்.

௧௦௨ - ௩. [illegible] மறவேன்; மறவேனென்றுமாம்.

௧௦௪. மாதர்: விளி. [illegible] - [illegible].

[illegible]. [illegible]. ௨௧ : ௬௦. ஏதுநிகழ்ச்சியென்பதன் பொருளை, [illegible] குறிப்பிற்காண்க.

[illegible] நிகழ்ச்சி.

[illegible] - [illegible]; [illegible] "[illegible] பொருளுரை" ([illegible]. ௨௧ : [illegible]); [illegible] பொருளுரை [illegible]" ([illegible]. [illegible] : [illegible]).

[illegible]

யாதி முதல்வ னருந்துயர் கெடுக்கும்
பாதபங் கயமலை பரசின ராதலி
னீங்கிவ ரிருவரு மிளங்கொடி நின்னோ
டோங்குயர் போதி யுரவோன் றிருந்தடி
தொழுதுவலங் கொண்டு தொடர்வினை நீங்கிப்
பழுதி னன்னெறிப் படர்குவர் காணா
யாருயிர் மருந்தா மமுத சுரபியெனு
மாபெரும் பாத்திர மடக்கொடி பெற்றனை
மக்க டேவ ரெனவிரு சார்க்கு
மொத்த முடிவி னோரற முரைக்கேன்
பசிப்பிணி தீர்த்த லென்றே யவருந்
தவப்பெரு நல்லறஞ் சாற்றின ராதலின்
மடுத்ததீக் கொளிய மன்னுயிர்ப் பசிகெட
வெடுத்தனள் பாத்திர மிளங்கொடி தானென்.

௨.—அறவணர்த்தொழுதகாதை முற்றிற்று.

---

௧௦௮. ஆதிமுதல்வன் - புத்தன். ௧௦௯. பரசினர் - துதித்தார்.

௧௦௮ - ௯. ஆதிமுதல்வனது பாதபங்கயமலை.

௧௧௦. இருவர் - மாதவி சுதமதியென்பவர். இளங்கொடி: விளி.

௧௧௧. உரவோன் - புத்தன்; உரம் - அறிவு.

௧௧௩. பழுது இல் நன்னெறி - குற்றமில்லாத நல்லவழி; இதனை விசுத்திமார்க்கமென்பர். நெறி - நெறியில். படர்குவர் - செல்குவர்.

௧௦௯ - ௧௧௩. பரசினராதலின், இவரிருவரும் நின்னோடு உரவோனடியைத்தொழுது வலங்கொண்டு நீங்கிப்படர்குவர்.

௧௧௬. இருசார்க்கும் - இரண்டு பகுதிகட்கும்.

௧௧௮. அவ்வறம், தீர்த்தல் ஆகும். அவரும் - அறவணவடிகளும்.

௧௧௯. தவப்பெரு நல்லறம் - மிகப்பெரிய நல்லதருமம்.

௧௨௦. கொளிய - கொளுத்தினாற்போன்ற.

௧௨௧. இளங்கொடி பாத்திரத்தை எடுத்தனள்.

௧ - ௧௨௧. இளங்கொடி அவர்தம்முடன் அடிகள் யாங்குளரென்று வினாஅய்க் குறுகி மாதவனடியை வணங்கி எத்தி உரைத்தலும் கேட்டு, அவரும் தவப்பெரு நல்லறம் சாற்றினராதலின், இளங்கொடி பாத்திரமெடுத்தனளென முடிக்க.

(பி - ம்.) ௧௦௯. 'பங்கயமலர்' ௧௧௮. 'அன்றேயாவரும' ௧௨௦. 'மடுத்த தீக்கதிமன்னுயிர்' ௧௨௧. 'எடுத்த பாத்திரம்'

பதின்மூன்றாவது

ஆபுத்திரன்றிறமறிவித்தகாதை.

[பதின்மூன்றாவது மணிமேகலைக்கு அறவணர்
ஆபுத்திரன்றிறங்கூறியபாட்டு.]

மாபெரும் பாத்திர மடக்கொடிக் கருளிய
வாபுத் திரன்றிற மணியிழை கேளாய்
வார ணாசியோர் மறையோம் பாள
னாரண வுவாத்தி யபஞ்சிக னென்போன்
பார்ப்பனி சாலி காப்புக்கடை கழிந்து
கொண்டோற் பிழைத்த தண்ட மஞ்சித்
தென்றிசைக் குமரி யாடிய வருவோள்

உ. திறம் - வரலாற்றை.

ந. வாரணாசி - காசி. மறையோம்பாளன் - வேதத்தைப் பாது காத்தலையுடையான்; அந்தணனென்றபடி; "வயனங் கோட்டிலோர் மறையோம் பாளன்" (கரு) என்பர் பின்னும்.

ச. ஆரண உவாத்தி - வேதம் ஓதுவிப்பவன்; உவாத்தி: உபாத்தி யாயனென்னும் வடமொழிச் சிதைவு. வேதத்திற் சில பாகத்தையே னும் வேதாங்கங்களையேனும் சீவனத்தின் பொருட்டு ஓதுவிப்பவன் உபாத்தியாயன்; இதனை மனுஸ்மிருதி, உ-ஆம் அத்தியாயம், கசக - ஆம் சுலோகத்திற் காண்க. இப்பெயர் தமிழ் நூல்களில் உவாத்தியன், உவாத்தியான், உவாத்தியெனவும் வழங்கும். அபஞ்சிகன்: காரணப் பெயர்; பங்கமில்லாதவனென்பது பொருள்.

ந - ச. மணி. கந: எஅ - கூ.

ரு. பார்ப்பனி சாலி - அவன்மனைவி சாலியென்பாள்; அந்தணர் களிற் கணவனைப் பார்ப்பானென்றும், மனைவியைப் பார்ப்பனியென்றும் கூறுதல் மரபு; "பார்ப்பான் றன்னொடு கண்ணிழந் திருந்தவித், தீத் தொழி லாட்டி" (சு: கநஉ - ந) என்றுமுன்பு வந்திருத்தல் காண்க. காப்புக் கடை கழிந்து - காவலின் எல்லையைக்கடந்து; கற்பொழுக்கம் நீங்கி யென்றபடி.

சு. கணவனுக்குப் பிழை செய்தமையாலுண்டாகும் தண்டத்திற் குப் பயந்து; தண்டம் - தண்டனை; "கொண்டோற் பிழைத்த தண்டந் தாக்கி" பெருங். க. நசு: கருச.

ரு - எ. மணி. ரு: நஎ - அ. ஆடிய - ஆடுதற்பொருட்டு.

(பி - ம்.) உ. 'இழாய் கேளாய்' ந - கூ. 'வாருணசி யோர் மறை மேம்படுநெஞ்ஞான அகத்துத் துஞ்சிருள் யாமத்தீன்ற' ச. 'ஆரனணவு வாத்திகன்'

சூன்முதிர் பருவத்துத் துஞ்சிரு ளியவிடை
யீன்ற குழவிக் கிரங்கா ளாகித்
தோன்றாத் துடவையி னிட்டன ணீங்கத்
தாயி றூவாக் குழவித்துயர் கேட்டோ
ராவந் தணைந்தாங் கதன்றுயர் றீர
நாவா னக்கி நன்பா லூட்டிப்
போகா தெழுநாட் புறங்காத் தோம்ப
வயனங் கோட்டிலோர் மறையோம் பாள
னியவிடை வருவோ னிளம்பூதி யென்போன்
குழவி யேங்கிய கூஉக்குரல் கேட்டுக்
கழுமிய துன்பமொடு கண்ணீ ருகுத்தாங்

---

௮. துஞ்சிருள் - யாவருந் தூங்குதற்குக் காரணமாகிய இருளில்; செறிந்த இருளுமாம். இயவு இடை - வழியினிடத்தே.

௯. குழவிக்கு - குழந்தைக்கு.

௧௦. துடவை - தோட்டம்; "தொடுப்பெறிந் துழுத துளர்படு துடவை" (பெரும்பாண். ௨௦௧); "தொய்யாது வித்திய துளர்படு துடவை" மலைபடு. ௧௨௨.

௯ - ௧௦. மணி. ௧௩: ௮௬ - ௭.

௧௧. தூவாக்குழவி - உண்ணாத குழந்தை. துயர் - பசித்துயரத்தால் ஒழியாமல் அழுது கூப்பிடும் ஒலி; ஆகுபெயர்; "தாயி றூவாக் குழவி போல, வோவாது கூஉநின் னுடற்றியோர் நாடே" புறநா. ௪.

௧௨. ஆ - பசு. அதன்றுயர்-அக்குழந்தையின் பசித்துன்பம்.

௧௪. புறங்காத்து ஓம்ப - பாதுகாக்க; இவை ஒருபொருட்பன்மொழி; புறங்காத்தல் - பாதுகாத்தல்; "வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப" (தொல். செய். சூ. ௧௧௦); "மெலிவில் செங்கோ னீபுறங் காப்ப" (புறநா. ௪௨.) இதனால் ஆபுத்திரனென்பது இவனுக்குப் பெயராயிற்று.

௧௫. வயனங்கோடு - ஓரூர். மறையோம்பாளன்: மணி. ௧௩: ௩.

௧௬. வருவோன் - மனைவியுடன் வருவோன்; பின், "காதலி தன்னொடு கைதொழு தெடுத்து" (௨௦) என்பதனால், 'மனைவியுடன்' என்பது கொள்ளப்பட்டது. பூதி என்பது அவன் பெயர்; "தாதை பூதியுந் தன்மனை கடிதர" (௧௦௧) என்று இக்காதையிலேயே பின்பு வருதல் காண்க.

௧௮. கழுமிய - கலந்த; புறநா. ௨௫௮. கண்ணீர் - உவகைக் கண்ணீர்.

(பி - ம்.) ௮. 'சூன்முதிருயக்கத்துத் துஞ்சிருள்யாமத்து' ௯. 'இரங்கினளாகி' ௧௦. 'இட்டனணீங்கித்' ௧௨. 'அணைதாங்காங்கதன்றுயர்கெட' ௧௫. 'வயவனங் கோட்டில்', 'வனயனங்கோட்டி.'

ஆமக னல்ல னென்மக னென்றே
காதலி தன்னொடு கைதொழு தெடுத்து
நம்பி பிறந்தனன் பொலிகநங் கிளையெனத்
தம்பதிப் பெயர்ந்து தாமினி திருந்துழி
மார்பிடை முந்நூல் வனையா முன்னர்
நாவிடை நன்னூ னன்கனம் நவிற்றி
ஓத்துடை யந்தணர்க் கொப்பவை யெல்லா
நாத்தொலை வின்றி நன்கன மறிந்தபி
னப்பதி தன்னுளோ ரந்தணன் மனையிற்
புக்கோ னாங்குப் புலைசூழ் வேள்வியிற்
குரூஉத்தொடை மாலை கோட்டிடைச் சுற்றி
வெரூஉப்பகை யஞ்சி வெய்துயிர்த்துப் புலம்பிக்

க௯. ஆமகன் அல்லன் - பசுவினுடைய மகனல்லன்; பசுப் பாதுகாத்திருந்ததைக் கண்டோராதலின் இங்ஙனங்கூறினன்.

உ௦. காதலி - மனைவி. கைதொழுது - அக்குழந்தையைத் தனக் களித்தது தெய்வமென்றெண்ணி அத்தெய்வத்திற்கு அஞ்சலிசெய்து; "பழுதில் காட்சிப் பைந்தொடி புதல்வனைத், தொழுதனன் வாங்கி" (உ௦: கஅஅ-௯) என்று இந்நூலுள்ளே பின்புவருதல் காண்க.

உக. நம்பியே பொலிகவென்று. உஉ. பதி - ஊர்.

உ௩. முந்நூல் - பூணூல். வனையா முன்னரென்பது விரையக் கற்பித்தமை விளக்கி நின்றது.

உ௪. நன்னூல் - வேதம் வேதாங்கங்கள். நவிற்றி - நவிற்ற; நவி [illegible] - [illegible] பயப்படுதல்; "நல்லோர் குழீஇய நாநவி லவையத்து" ([illegible]. [illegible]); "மறைநவி லந்தணர் நுவலவும் படுமே" புறநா. க.

உ௫. ஓத்து - வேதம்.

உ௬. நாத்தொலைவு: மணி. உ௪: கக; சிலப். ௩௦: ௬௬.

உ௮. புலைசூழ் வேள்வியில் - அசுத்தமாகிய கொன்றின்றலைச்செய் [illegible] வேள்வியில்; சூழ்தல் - செய்தல் (நச். உ௭௧, உரை); [illegible]. புலையும் வேள்வியும் இருபெயர்.

உ௯. [illegible] பொருந்திய தொடுக்கப்பட்ட மாலை கொம்பின்கண்ணே [illegible].

௩௦. வெரூஉப்பகை - அஞ்சத்தரும்பகை; வெரூஉ - அச்சம்; "[illegible] படப்பெருந் தடக்கை" (பொருந. ௧௨௫.) [illegible]: புலம்பு - வருத்தம்; "புலம்புவிட் டிரங்க [illegible]" [illegible].

[illegible]

கொலைநவில் வேட்டுவர் கொடுமர மஞ்சி
வலையிடைப் பட்ட மானே போன்றுங்
கஞ்சிநின் றழைக்கு மாத்துயர் கண்டு
நெஞ்சுநடுக் குற்று நெடுங்கணீ ருகுத்துக்
கள்ள வினையிற் கடுந்துயர் பாழ்பட
நள்ளிருட் கொண்டு நடக்குவ னென்று
முள்ளங் கரந்தாங் கொருபுடை யொதுங்கி
யல்லிடை யாக்கொண் டப்பதி யகன்றோன்
கல்லத ரத்தங் கடவா நின்றுழி
யடர்க்குறு மாக்களொ டந்தண ரெல்லாங்
கடத்திடை யாவொடு கையகப் படுத்தி
யாகொண் டிந்த வாரிடைக் கழிய
நீசமக னல்லாய் நிகழ்ந்ததை யுரையாய்
புலைச்சிறு மகனே போக்கப் படுதியென்

---

௩௧. கொலை நவில் வேட்டுவர் - கொல்லுதலைச்செய்கின்ற வேடருடைய. கொடுமரம் - வில்.

௩௩. அழைக்கும் ஆ துயர் - கூப்பிடுகின்ற பசுவின் துயரத்தை.

௩௦ - ௩௩. புலம்பிப் போன்று அஞ்சி நின்று அழைக்கும் ஆ.

௨௮ - ௩௩. புக்கோன் ஆவினது துயரத்தைக் கண்டென்க.

௩௫ - ௬. திருட்டுத் தொழிலால், பசுவினதுமிக்கதுன்பம் இல்லையாம்படி; கடுந்துயர் - மரணத்துன்பமுமாம். பாழ்படக் கொண்டென்க.

௩௬. நள்ளிருள் - செறிந்தஇருட்டு; "வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்" பொருந. ௭௨.

௩௭. உள்ளம் கரந்து - தன்னெண்ணத்தை மறைத்து.

௩௯. கல்லதரத்தம் - பருக்கைக்கற்கள் பொருந்திய சின்னெறியையுடைய அருநெறி; "கல்லத ரத்தங் கடக்க" சிலப். ௧௬ : ௫௭.

௪௰. அடர்க் குறுமாக்களொடு - நெருக்குதலைச்செய்யும் அறிவில்லாதாரொடு; "ஒலித்தொருங் கீண்டிய வூர்க்குறு மாக்களும்" (௧௫ : ௬௯) என்பர் பின்னும். குறுமாக்கள் : கலி. ௮௨.

௪௧. கடம் - அருநெறி.

௪௨. ஆ கொண்டு - பசுவைக் கைப்பற்றிக்கொண்டு. ஆரிடை - அரியவழி.

௪௪. ஊனைவிரும்பிப் பசுவைக்கவர்ந்தானென்று நினைந்து, 'புலைச்சிறுமகனே' என்றார். போக்கப்படுதி - விலக்கப்படுவாய்.

(பி - ம்.) ௩௧. 'கொடுவரமஞ்சி' ௩௫. 'களவினையாகியிக் கடுவினை பாழ்பட' ௩௮. 'ஆகொண்டப்பதி' ௪௨. 'ஆகொணர்ந்த' ௪௩. 'நீமகனல்லாய்' ௪௪. 'புலைச்சிரககனே போகப்படுதி'

நிலைக்கோ ளறு கைறந்தனர் கெட்ப
வாட்டுமின் றமக்கு மந்தா குவாரியைக்
கோட்டுவிற் குறிக் குடாப்புக் கருந்தும்
காட்டுடை கல்லாக் கறுத்த வெள்க்கோட
வாயுத் திண்ணு முங்காக் குழைப்போ
சேருவர செய்யமர் செருவர சேனயின்
விரிலை மருவிற் படுபுல் வாரத்து
வெகுலை மருவின் மதட் கெல்லாம்
பிறந்தநாட் செட்டுத் தெருநற் தீப்பர
வறந்தரு வெஞ்சோ டருள்நக் காட்டு
பிறுசெறுமி மக்கா செற்ற பேரிமா
முடாமறை மக்களிர் முதலிய றாநெமோ

---

௫. அலைகோல் - வருத்துதலைச்செய்யும் கோல். அறைந்தனர் - அறைந்தனராய்.

௬. ... அலைக்கும் - மிகவும் வருத்துகின்ற. இவை ஒரு பொருட் பன்மொழி.

௭. கோடு - கொம்பு. குடா புய்த்தகுந்த - குடைப்பிடுங்கி; "கோடுபுய்க் கல்லா ... நாடகேள்" (கலி. ௯௫); "புய்த்தெறி கரும்பின் விடுகழை" புறநா. ௨௮.

௮. கறுத்த வெள்க்கோட - விரைக்கொழுக்கோட; கறுத்தல் - ...; "கறுத்துக் குனியும் விரையின் பொருள" (தொல். உரி. ...) ... - வருதல்; "கால்கொள்ள் துன்ன வேழம்" புறநா. ௮௨.

... வருமா ஏழுதிரன் கருத்து.

௰. ... - செல்வமுடைமைத்து.

... எருதின் விடப்பட்ட ... தானே ... புல்லெல்லாம்; ... வெள்ளிற்றி வெய்தற்கு ... படப்பட்ட ... பொருந்தாயிடையாப்பும்.

... ... இப்பால் - இனியபால்.

... - ... ; உருபுமயக்கம். செற்றம் - ... ; புறநா. ௯௨, ௭.

... - ... . உரைபோ : உரையுமெல்லாம் ... தாரம்பெற்று ... .

பொன்னணி நேமி வலங்கொள்சக் கரக்கை
மன்னுயிர் முதல்வன் மகனெமக் கருளிய
வருமறை நன்னூ லறியா திகழ்ந்தனை
தெருமர லுள்ளத்துச் சிறியை நீயவ்
வாமக னுதற் கொத்தனை யறியா
யேமக னல்லாய் கேளென விகழ்தலு
மான்மக னசலன் மான்மகன் சிருங்கி
புலிமகன் விரிஞ்சி புரையோர் போற்று
நரிமக னல்லனோ கேச கம்பள
னீங்கிவர் நுங்குலத் திருடி கணங்களென்
றோங்குயர் பெருஞ்சிறப் புரைத்தலு முண்டா
லாவொடு வந்த வழிகுல முண்டோ
நான்மறை மாக்கா ணன்னூ லகத்தென
வாங்கவர் தம்முளோ ரந்தண னுரைக்கு
மீங்கிவன் றன்பிறப் பியானறி குவனென

ருஎ. நேமி - சக்கரத்தின் சூடு; வட்டமுமாம். வலம் - வெற்றி; வலப்பக்கமுமாம். நேமியையுடைய சக்கராயுதம்.

ருஅ. மன்னுயிர்முதல்வன் - திருமால். மகன் - பிரமன்.

சு0. தெருமரல் - சுழற்சி. சிறியை - சிறுமையையுடையாய்.

சுக. நூற்பொருளையறியும் அறிவிலானென்பார், 'ஆமக னுதற் கொத்தனை' என்றார்; "விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல், கற்றாரோ டேனை யவர்" (குறள். சுக0) என்று வருதல் காண்க.

சுஉ. இகழ்தலும் - அவ்வந்தணர் இகழ்ந்து பேசுதலும்.

மேல் வருவன ஆபுத்திரன் கூற்று.

சுங. அசலனென்பவன் ஆனின்மகன்; ஆன் - பசு. சிருங்கியென்பவன் மானின் மகன்; சமீக முனிவருக்குப் பசுவினிடம் பிறந்தவனென்னும் பாரதம்; ஆதி. ரு0 - ஆம் அத்.

சுச. விரிஞ்சியென்பவன் புலியின்மகன். புரையோர் - மேலோர்.

சுரு. கேசகம்பளனென்பவன் நரியின் மகன்; அசிதகேசகம்பளரென்று ஒரு முனிவர்பெயர் பௌத்த நூல்களிற் காணப்படுகின்றது.

சுஅ - கூ. ஆவொடு - ஆவால். நன்னூலகத்து ஆவொடு வந்த அழிகுலமுண்டோ? இல்லையென்றபடி. முன்னம், 'ஆமக னுதற் கொத்தனை' (சுக) என்று அந்தணர் இகழ்ந்ததற்குப் பரிகாரங் கூறுகின்றவனாதலின், 'ஆவொடு வந்த வழிகுல முண்டோ' என்றான்.

எ0 - எக. இவன் பிறப்பை யான் அறிகுவனென்று ஓரந்தணன் உரைப்பான்.

(பி - ம்.) ருஎ. 'வலங்கொளசதக்கை' ருஅ. 'எமக்களித்த' சு0. 'சிறியோய்நீயவ்' சுங - ச. 'சிருங்கிப், புலிமகன்விருஞ்சி' சுரு. 'தேசிகம்பலின்' சுகூ. 'மாக்கணன்னூலக'

நடைவருந் தெய்தி நல்கூர் மேனியள்
வடமொழி யாட்டி மறைமுறை யெய்திக்
குமரி பாதங் கொண்மையின் வணங்கித்
தமரிற் றீர்ந்த சாலியென் போடீர்
யாது நின்னூ ரீங்கென் வரவென
மாமறை யாட்டி வருதிற முரைக்கும்
வாரணா சியோர் மாமறை முதல்வ
னாரண வுவாத்தி யரும்பெறன் மனைவியான்
பார்ப்பார்க் கொவ்வாப் பண்பி னொழுகிக்
காப்புக்கடை கழிந்து கணவனை யிகந்தே
னெறிபய முடைவழி யிரியன் மாக்களொடு
தெற்கட் குமரி யாடிய வருவேன்

௰௨. நடை - வழி. நல்கூர் மேனியள் - இளைத்த உடம்பை யுடையாள்.

௰௩. வடமொழி யாட்டி - பார்ப்பனி; இந்நூலில், ௫: ௭௦ - ஆம் அடியிற் பார்ப்பாரை வடமொழியாளரென்று கூறியிருத்தல் காண்க. மறைமுறை யெய்தி - வேதவிதிப்படியே சென்று.

௰௪. குமரியாடப்போந்தோர், ஆங்குள்ள குமரித்தெய்வப் படிமத்தை வணங்குதல் மரபு.

௰௫. தமரிற்றீர்ந்த - தனக்குச் சிறந்தோரினின்றும் நீங்கிய.

௰௫-௬. வணங்கித் தீர்ந்த சாலி. ௰௬. ஈங்கு வரவு என்னை.

௰௭. உரைக்கும் - உரைப்பாள்.

௰௮. வாரணாசி - வாரணாசி - காசி; வடமொழியில் ஸித்தாந்த கௌமுதி யென்னும் நூலின் அவ்யயீபாவப் பிரகரணத்தில், "யஸ்யசா [illegible]" [illegible] 'வாராணஸீ' என்பதற்கு, [illegible] தீர்த்தமில்லாத நகர்' என்று தத்துவபோதினி [illegible] பொருள்செய்திருப்பதாகக் கூறுவர்.

[illegible] '[illegible]' என்பது, "[illegible] காதலொடு தகையாழ் [illegible]" ([illegible]. ௩௭: ௧௨௦ - ௨௧) எனப் பெருங்கதை [illegible].

[illegible]

பொற்றேர்ச் செழியன் கொற்கையம் பேரூர்க்
காவதங் கடந்து கோவல ரிருக்கையி
னின்ற குழவிக் கிரங்கே னாகித்
தோன்றாத் துடவையி னிட்டனன் போந்தேன்
செல்கதி யுண்டோ தீவினை யேற்கென்
றல்லலுற் றழுத வவண்மக னீங்கிவன்
சொல்லுத றேற்றேன் சொற்பய மின்மையிற்
புல்ல லோம்பன்மின் புலைமக னிவனென
வாபுத் திரன்பின் பமர்நகை செய்து
மாமறை மாக்கள் வருங்குலங் கேண்மோ
முதுமறை முதல்வன் முன்னர்த் தோன்றிய
கடவுட் கணிகை காதலஞ் சிறுவ
ரருமறை முதல்வ ரந்தண ரிருவரும்
புரிநூன் மார்பிர் பொய்யுரை யாமோ

அ௪. செழியன் - பாண்டியன். கொற்கை - பாண்டியர்களின் பழைய இராசதானி.

அ௫. கோவலர் - இடையர்.

அ௭. துடவை - தோட்டம். அ௬ - ௭. மணி. ௧௩ : ௯ - ௧௦.

அ௮. தீவினையேற்குச் செல்கதியுண்டோ.

௯௦. பயம் - பிரயோசனம்; இன்மையிற் சொல்லுதறேற்றேன்.

௯௧. புல்லலோம்பன்மின் - தீண்டலைச் செய்யாதொழிக. இவன் புலைமகன் - இவன் அசுத்தமுடைய மகன். புலை - வியபிசாரமுமாம்; இது மலைநாட்டுவழக்கென்பர்.

௯௨. அமர்நகை - விரும்புஞ்சிரிப்பு.

௯௩. கேண்மோ: கேளுமென்னும் ஏவற்பன்மை உயிர்கெட்டு ஓகாரம் பெற்றுவந்தது; நன். வி. சூ. ௩௪௧.

௯௪. முதுமறைமுதல்வன் - பிரமன்.

௯௫. கடவுட்கணிகை - திலோத்தமை யென்பாள். சிறுவர் - பிள்ளைகள்.

௯௬. முதல்வராகிய அந்தணரிருவரும். இருவர் - வஸிஷ்டர், அகஸ்தியர்.

௯௫ - ௯. அந்தணரிருவரும் காதலஞ்சிறுவரென்க.

௯௪ - ௯. வஸிஷ்டரும் அகஸ்தியரும் திலோத்தமையின் பிள்ளைகளென்பதைப் பின்வரும் வாக்கியத்தாலுணர்க; "வஸிஷ்டனும் அகஸ்தியனும், பிரஹ்மா திலோத்தமையென்னும் அப்ஸரஸைக்கண்டகாலத்துக் கலசத்து ஜனித்தனர்" நீல. ௩௰௰.

(பி - ம்.) ௯௨. 'ஆபுத்திரன்றனமாநகை'

சாலிக் குண்டோ தவறென வுரைத்து
நான்மறை மாக்களி நகுவன னிற்ப
வோத லந்தணர்க் கொவ்வா னென்றே
தாதை பூதியுந் தன்மனை கடிதர
வாகவர் கள்வனென் றந்தண ருறைதருங்
கிராம மெங்கணுங் கடிஞையிற் கல்லிட
மிக்க செல்வத்து விளங்கியோர் வாழுந்
தக்கண மதுரை தான்சென் றெய்திச்
சிந்தா விளக்கின் செழுங்கலை நியமத்
தந்தின் முன்றி லம்பலப் பீடிகைத்
தங்கினன் வதிந்தத் தக்கணப் பேரு

கூஅ. தவறு - குற்றம். கூகூ. நகுவனன் - சிரிப்பவனாகி.

கoo. ஒவ்வான் - பொருந்தான்; என்றது ஆபுத்திரனை.

கoக. தாதை - தகப்பன். கடிதர - நீக்க.

கoங. கடிஞை - பிச்சைப்பாத்திரம். கல் இட - கல்லைப் போகட; உலகத்திற் கடிஞையிற் கல்லிடுவோர் எக்காலத்தும் இலராகவும் இவனுக்கும் இங்ஙனம் நிகழ்ந்ததேயென்று இரங்கிக் கூறினர்; 'கடிஞையிற் கல்லிடுவாரில்' என்பது ஒரு பழமொழி; இதனைப் பின்வரும் வெண்பாவாலுணர்க: "நினைத்த திதுவென்றந் நீர்மையை நோக்கி, மனத்த தறிந்தீவர் மாண்டார் - புனத்த, குடிஞை யிரட்டுங் குளிர்வரை நாட, கடிஞையிற் கல்லிடுவா ரில்" பழ. உசகூ.

கoரு. தக்கணமதுரை - தென்றிசைக்கணுள்ள மதுரை; என்றது கூடற்பதியை; தக்கணம்: வடசொற்றிரிபு; சிலப். கச: அக, அடியார்க்குநல்லாருரையைப்பார்க்க.

கoகூ. சிந்தாவிளக்கு - ஸரஸ்வதிதேவி; மணி. பதிகத்தின் கூ0-ஆம் அடிக்குறிப்பைப்பார்க்க. நியமம் - கோயில்; ஸரஸ்வதிதேவியின் கோயிலாதலின், அதற்குக் கலைநியமமென்பது பெயராயிற்று; மணி. கச: க0 - கக, கஎ - அ.

கoஎ. முன்றில் அம்பலப்பீடிகை - சிந்தாதேவியின் கோயில் வாயிற் கண்ணுள்ள மன்றினிடத்தில். அம்பலப்பீடிகை - அம்பலமாகிய பீடிகை; அஃது உயர்த்திக்கட்டப்பட்டிருத்தலின், பீடிகையெனப்பட்டது; பீடிகையென்பதற்குக் கோயில்வாயிற்கணுள்ள பலிபீடமெனினும் பொருந்தும்; இங்ஙனங் கொள்ளுங்காற் பீடிகையையுடைய அம்பலமெனமாறுக.

கoஅ. தங்கினன் வதிந்து - தங்கி; ஒருபொருட் பன்மொழி. தக்கணப் பேரூர் - மதுரையில்.

(பி - ம்.) கoo. 'ஒவ்வாயென்றே' கoஉ. 'ஆங்கவர்களவ' கoங. 'கடிகையிற்கல்லிட'

ரையக் கடிஞை கையி னேந்தி
மையறு சிறப்பின் மனைதொறு மறுகிக்
காணார் கேளார் கான்முடப் பட்டோர்
பேணுந ரில்லோர் பிணிநடுக் குற்றோர்
யாவரும் வருகவென் றிசைத்துட னூட்டி
யுண்டொழி மிச்சிலுண் டோடுதலை மடுத்துக்
கண்படை கொள்ளுங் காவலன் றனென்.

கங.—ஆபுத்திரன்றிறமறிவித்தகாதை முற்றிற்று

ககo. மை - குற்றம். மறுகி - சுழன்று.

ககக. காணார் - குருடர். கேளார் - செவிடர்.

ககஉ. பேணுநரில்லோர் - அகதிகள். பிணி - நோய்.

ககக - உ. மணி. உஅ : உஉஉ - ங.

ககங. யாவரும் - மேற்கூறப்பட்ட காணார்முதலிய யாவரும். உடன் ஊட்டி - ஒருங்குண்ணச்செய்து ; உடன் - உடனேயென்றுமாம்.

ககச. உண்டொழி மிச்சில் உண்டு - அவர்கள் உண்டொழிந்த மிகுதியை யுண்டு ; இது, " விருந்தோம்பி, மிச்சின் மிசைவான் " (அரு) என்ற குறளின் பொருளைத் தழுவி வந்தவாறு காண்க. ஓடு - பிச்சைப் பாத்திரம். தலைமடுத்து - தலையணையாகக்கொண்டு.

ககரு. கண்படை - உறக்கம். காவலன் - காத்தலையுடையவன் ; என்றது ஆபுத்திரனை. காவலன் கண்படை கொள்ளுமென்க.

க - ககரு. அணியிழை, ஆபுத்திரன்றிறங்கேளாய் ; பார்ப்பனி சாலி, கழிந்து அஞ்சி வருவோள் இரங்காளாகிக் குழவியை இட்டு நீங்க, ஆ கேட்டு அணைந்து நக்கி ஊட்டிப் போகாது ஓம்ப, பூதியென் போன் கேட்டு உகுத்து என்மகனென்று எடுத்துப் பெயர்ந்து கூடி நவிற்ற, அறிந்தபின் புக்கோன் ஆ துயர் கண்டு உற்று உகுத்து உள் ளங்கரந்து ஒதுங்கி அகன்றோனாய்க் கடவாநின்றுழி அந்தணரெல்லாம் குறுமாக்களோடு சென்று கையகப்படுத்திக் கேட்ப, நல்லா குத்திப் புய்த்துறுத்து ஓட, ஆபுத்திரன் உரைப்போன், ' உரைமோ ' என, அந் தணரிகழ்தலும், ஆபுத்திரன், ' நன்னூலகத்து ஆவொடு வந்த அழிகுல முண்டோ ' என ஓரந்தணனுரைக்கும் ; அங்ஙனமுரைப்பவன், ' புல்ல லோம்பன்மின் ; புலைமகனிவன் ' என, ஆபுத்திரன் நகைசெய்து, ' சாலிக் குத்தவறுண்டோ ' என்றுரைத்து நகுவனனிற்ப, பூதி ஒவ்வானென்று கடிதர, கிராமமெங்கணும் கல்லிட, காவலன் மதுரை சென்றெய்தி வதிந்து ஏந்தி மறுகி இசைத்து ஊட்டி மிச்சிலுண்டு மடுத்துக் கண் படை கொள்ளுமென வினைமுடிவுசெய்க.

(பி - ம்.) ககஉ. ' பேணினரில்லோர் ' ககச. ' தலையடுத்து ', ' தலையெடுத்துக். ' ககரு. ' கரவேன்றனென் '

பதினான்காவது

பாத்திரமரபு கூறியகாதை.

[பதினான்காவது மணிமேகலைக்கு அறவணர் அமிர்தசுரபியென்னும் பாத்திரம் சிந்தாதேவி ஆபுத்திரற்குக் கொடுத்தவண்ணம் கூறிய பாட்டு.]

ஆங்கவற் கொருநா ளம்பலப் பீடிகைப்
பூங்கொடி நல்லாய் புகுந்தது கேளாய்
மாரி நடுநாள் வல்லிருள் மயக்கத்
தாரிடை யுழந்தோ ரம்பல மரீஇத்
துயில்வோர் தன்னைத் தொழுதன ரேத்தி
வயிறுகாய் பெரும்பசி மலைக்கு மென்றலு

---

௧. ஆங்கவற்கு - ஆபுத்திரனுக்கு; ஆங்கவன் : ஒருசொல்; "[illegible]" ([illegible]. ௧௧) என்புழிப்போல. அம்பலப்பீடிகை - அம்பலத்தில். அம்பலம் - பலருஞ்சென்று தங்குதற்குரிய பொதுவிடம். இது மன்றமெனவும் கூறப்படும். அம்பலப் பீடிகை : மணி. ௧௩ : ௧0௧, [illegible].

௨. நல்லாயென்றது மணிமேகலையை. புகுந்தது - நேர்ந்தது.

௧ - ௨. அவற்குப் புகுந்ததைக்கேள்.

௩. மாரிநடுநாள் - மழைமிக்க காலத்தையுடைய இடையாமத்தில். வல்லிருண்மயக்கத்து - வலிய இருட்கலப்பில்; 'இருண்மயக்கத்து' என்[illegible] இடையாமமாயிற்று; "புறையிருள்கூர், நெறியா [illegible]" (நற்றிணை. ௨௩௨) என வருதல் [illegible]

[illegible] உழந்தோர் [illegible] கூத்தர்முதலியோர் [illegible] முதலியோர்வந்து தங்குமிடம் அம்பலமென் [illegible], "[illegible] செட்புலப் பரிசின்" (மலைபடு. ௬௩௨) என் [illegible]

[illegible] - ஆபுத்திரனை.

[illegible] - [illegible]; [illegible]; "[illegible]" (புறநா. ௭0.) வயிறுகாய் பெரும்பசி : மணி.

[illegible]

மேற்றா ணல்லது வேற்றா ணில்லோ
னாற்றுவது காணா னாரஞ ரெய்தக்
கேளிது மாதோ கெடுகநின் றீதென
யாவரு மேத்து மிருங்கலை நியமத்துத்
தேவி சிந்தா விளக்குத் தோன்றி
யேடா வழிய லெழுந்திது கொள்ளாய்
நாடுவறங் கூரினுமிவ் வோடுவறங் கூராது
வாங்குநர் கையகம் வருந்துத லல்லது
தான்றொலை வில்லாத் தகைமைய தென்றே
தன்கைப் பாத்திர மவன்கைக் கொடுத்தலுஞ்
சிந்தா தேவி செழுங்கலை நியமத்து

எ. ஏற்றாண் - இரந்துண்ணுமுணவு. வேற்றாண் இல்லோன் - வேறு உணவில்லாத ஆபுத்திரன்.

அ. ஆற்றுவது காணான் - உதவும்வழியைக் காணானாகி. ஆற்றுதல் - உதவுதல்; "ஒருவீ ரொருவீர்க் காற்றுதிர்" (புறநா. ௫அ.) ஆரஞர் - தீர்த்தற்கரிய வருத்தம்.

இனி ஆபுத்திரன் வருத்தம் தீரும்படி அவனுக்குச் சிந்தாதேவி அமுதசுரபியென்னும் பாத்திரங்கொடுத்தமை கூறுவார்.

௯. இதுகேள். நின் தீதுகெடுக.

௧0. யாவரும் ஏத்தும் - எச்சமயத்தினரும் துதிக்கும். நியமம் - கோயில். கலைநியமம்: மணி. ௧௩ : ௧0௬.

௧௧. தேவியாகிய சிந்தாவிளக்கு.

௧௨. அழியல் - வருந்தாதே. இது கொள்ளாய் - இப்பாத்திரத்தைக் கொள்.

௧௩. வறங்கூரினும் - வற்கடம் மிகினும். வறம் - வற்கடம்; பஞ்சம்; "ஞாலம் வறந்தீரப் பெய்யக் குணக்கேர்பு, காலத்திற் றோன்றிய கொண்மூப்போல்" (கலி. அ௨.) வறங்கூராது-வறுமையுறாமல். ழ. மணி. ௨௫ : ௧௪௪.

௧௫. தான் என்றது பாத்திரத்தை. என்று - என்றுசொல்லி.

௧௪ - ௫. மணி. ௧௧ : ௪௯ - ௫0, ௧எ : ௫ - ௬.

எ - ௧௬. இல்லோன் ஆரஞரெய்தச் சிந்தாவிளக்கு, 'நின்றீது கெடுக' எனத்தோன்றி, 'கொள்வாய், கூராது, தகைமையது' என்று பாத்திரத்தைக் கொடுத்தலும்.

மேல்வருவன, பாத்திரம்பெற்ற மகிழ்ச்சியால் ஆபுத்திரன் சிந்தாதேவியைத் துதிக்குந்துதிகள்.

(பி - ம்.) ௯. 'நின்றீய்மை' ௧௨. 'ஏடாபரியலெழுந்திதுகேளாய்' ௧௩. 'இவரோடுவறங்' ௧௫. 'தான்றொலைவறியாத்தகைமையது'

நந்தா விளக்கே நாமிசைப் பாவாய்
வானோர் தலைவி மண்ணோர் முதல்வி
யேனோ ருற்ற விடர்களை வாயெனத்
தான்றொழு தேத்தித் தலைவியை வணங்கி
யாங்கவர் பசிதீர்த் தந்நா டொட்டு
வாங்குகை வருந்த மன்னுயி ரோம்பலின்
மக்களு மாவு மரஞ்சேர் பறவையுந்
தொக்குட னீண்டிச் சூழ்ந்தன விடாஅ
பழுமரத் தீண்டிய பறவையி னெழூஉ
மிழுமென் சும்மை யிடையின் றொலிப்ப

---

௧௮. நந்தாவிளக்கே - கெடாததீபமே; மைவிளக்கு அழிதன் மாலைத்தாதலின், 'நந்தாவிளக்கே' என்றான்; இது தெரிதருதேற்ற வுவமையென்னு மலங்காரம். இவள் வாக்கின் மடந்தையாதலின், 'நாமிசைப் பாவாய்' என்றான்.

௧௭ - ௨௦. அடுக்கிய விளிகளாற் சிந்தாதேவிபால் ஆபுத்திரனுக்குள்ள அன்பு மிகுதி விளங்கும்.

௨௧. தொழுது - அஞ்சலிசெய்து. தலைவி - சிந்தாதேவி.

௩ - ௨௧. மணி. ௨௫ : ௧௩௯ - ௫௩.

௨௩. வாங்குகை வருந்த: (மணி. ௧௯: ௪௬.) மன்னுயிர் என்றார், விலங்கு முதலியனவும் உண்பிக்கப்படுதல் நோக்கி. ஓம்பலின் - பாதுகாத்தலினாலே.

௨௪. மாவும் - விலங்குகளும்.

௨௫. உடன் தொக்கு ஈண்டி - ஒருமிக்கச்சேர்ந்து திரண்டு. விடா - விடாவாய்.

௨௬. பழுமரத்து ஈண்டிய - பழுத்தமரத்தின்கண்ணே வந்து கூடிய. பழுமரம், ஆலமரமுமாம். பறவையின்-பறவைபோல; (பொருந. ௬௪ ; பெரும்பாண். ௨௦ ; புறநா. ௧௭௩ ; நாலடி. ௨௦௨ ; சீவக. ௮௨௮.) எழூஉம் - எழுப்புகின்ற.

௨௭. சும்மை - ஒலி. இடையின்று - இடையீடில்லாமல். இடை - இடையீடு ; "எய்த்த லறியா திடையின்றி" பு - வெ. ௨௮௦.

௨௪ - ௭. மணி. ௨௮: ௨௨௨ - ௩௨.

௨௦ - ௨௭. ஆபுத்திரன் களைவாயெனத் தொழுது ஏத்தி வணங்கி அந்நாள் தொட்டு அவர் பசிதீர்த்து ஓம்பலின் விடாவாய் எழூஉஞ் சும்மை இடையின்றொலிப்பவென்க.

மேலே, ஆபுத்திரனுடைய புண்ணியமிகுதியைத் தனது பாண்டு கம்பள நடுக்கத்தாலறிந்த இந்திரன் அவனுக்கு வரங்கொடுத்தற் பொருட்டு விருத்தவேதியன் வடிவுகொண்டு வருதலைக் கூறுவார்.

(பி - ம்.) ௨௪. 'அருஞ்சிறைப்பறவையும்'

வீண்டுநீர் ஞாலத் திவன்செய லிந்திரன்
பாண்டு கம்பளந் துளக்கிய தாதலிற்
றளர்ந்த நடையிற் றண்டுகா லூன்றி
வளைந்த யாக்கையோர் மறையோ னாகி
மாயிரு ஞாலத்து மன்னுயி ரோம்பு
மாருயிர் முதல்வன் றன்முன் றோன்றி

---

௨௯. பாண்டு கம்பளம் - வெள்ளைக்கம்பளமாகிய ஆசனம். துளக்கியது - நடுங்கச்செய்தது.

௨௮ - ௯. ஆபுத்திரன் அறச்செயல் இந்திரனுடைய பாண்டுகம்பளத்தை நடுங்கச்செய்தது. இப்பூவுலகில் தானம் சீலம் முதலியவற்றிற் சிறந்த பௌத்தருளரானாலும், அவர்களுக்கு ஏதேனுந் துன்பமுளதானாலும் இந்திரனுடைய பாண்டுகம்பளம் நடுங்குமென்றும், அக்குறிப்பால் அவற்றை யறிந்துவந்து அவர்களுக்கு வேண்டிய வரங்களைக்கொடுத்தலும் தீங்குகளை ஒழித்தலும் இந்திரனுடைய கடப்பாடென்றும் தெரிகின்றது. புத்த தருமவொழுக்கினனாகிய வணிகனொருவன் கப்பல்கவிழ்ப்பெற்றுக் கடலில்வருந்தியதைத் தனது பாண்டுகம்பளத்தின் நடுக்கத்தாலறிந்த இந்திரன் அவ்வணிகனை அத்துன்பத்தினின்று நீக்கிப் பாதுகாத்தனனென்று இந்நூல் ௨௯-ஆம் காதையில் (௧௩ - ௨௬) வருதல்காண்க; "நமி விநமி என்பாரிருவர் குமாரர் தபச்சரணம் பண்ணியருளாநின்ற பகவானை யடைந்து நமஸ்கரித்துக் கந்தபுஷ்பாதிகளாற் பூசித்து நானாவித ஸ்தோத்திரங்களை அதிமதுரமாகப் பாடிநின்று விண்ணப்பம் செய்வார்: பகவானே தம்மாற் புத்திரபௌத்திராதி பந்துஜனங்களுக்கு வேறு வேறு இராச்சியம் கொடுக்கப்பட்டன; யாங்கள் அப்பொழுது சந்நிகிதமாயினமல்லேம்; இப்பொழுது எங்களுக்கு விபவங்களைப் பிரஸாதித்தருளவேண்டுமென்று நிர்ப்பந்தித்துநின்று துதிப்ப, இதனைத் தரணேந்திரன் தனது ஆசனங்கம்பித்தலில் அறிந்து கடிது வந்து மனுஷ்யரூபத்தைக்கொண்டு பருவதம்போலச் சலியாது எழுந்தருளிநின்ற பகவானது தைரியாதிசயத்தினைக்கண்டு விஸ்மிதனாகிப் பிரதக்ஷிணம்பண்ணித் துதித்துக் குமாரர்களை நோக்கிச் சொல்லுவான்" என்று ஸ்ரீ புராணத்துள்ள முதலாவது விருஷபதீர்த்தங்கரர் புராணத்தில் வருதலால், இப்படியே தனது ஆசன நடுக்கத்தால் அறியவேண்டுவனவற்றையறிந்து நல்லுயிர்களுக்குச் செய்யவேண்டுவனவற்றை இந்திரன் செய்வானென்று கூறுதல் சைனசம்பிரதாயமென்றும் தெரிகின்றது.

௩0 - ௩௧. தளர்ந்த நடையின் - நடைதளர்தலால்; தண்டுகால் ஊன்றி - தான்பிடித்ததண்டினையே காலாகவூன்றி; (நாலடி. ௧௪.) வளைந்த யாக்கை மறையோன் ஆகி - கூனிய உடம்பையுடைய வேதியனாகி; "தளர்ந்த நடையிற் றண்டுகா லூன்றி, வளைந்த யாக்கை மறையோன்" (சிலப். ௧௫: ௪௪ - ௫.) ஆகி ஊன்றியென்க.

௩௩. ஆருயிர்முதல்வன் - ஆபுத்திரன்; "ஆருயி ரோம்புநன்",

(பி - ம்.) ௨௯. 'பாணதென பவனத துளக்கிய' ௩௧. 'யாக்கை மறையோனாகி'

யிந்திரன் வந்தே னியாது நின்கருத்
துன்பெருந் தானத் துறுபயன் கொள்கென
வெள்ளை மகன்போல் விலாவிற நக்கீங்
கெள்ளினன் போமென் றெடுத்துரை செய்வோ
னீண்டுச் செய்வினை யாண்டுநுகர்ந் திருத்தல்
காண்டகு சிறப்பினுங் கடவுள ரல்ல
தறஞ்செய் மாக்கள் புறங்காத் தோம்புநர்
நற்றவஞ் செய்வோர் பற்றற முயல்வோர்
யாவரு மில்லாத் தேவர்நன் னாட்டுக்

"அருந்தே மாந்த வாருயிர் முதல்வனை" (௫௧, ௬௮) என இவனை இக்காதையிலேயே பின்பு கூறுதல் காண்க.

௩௪. யாதுநின்கருத்து - உன்னுடைய எண்ணம் என்ன?

௩௫. தானங்கள் பலவற்றுள்ளும் சிறந்தமையின், அன்னதானம் பெருந்தானமென்னப்பட்டது. உறுபயன் - மிக்க பிரயோசனம். கொள்க என - கொள்கவென்று இந்திரன் சொல்ல.

இனி, இங்ஙனங்கூறிய இந்திரனுக்கு ஆபுத்திரன் விடைபகர்ந்தது கூறுவார்.

௩௬. வெள்ளைமகன் போல் - பயனில்லாத சொல்லையுடையவன் போல; "வெள்ளைக் கோட்டி" (சிலப். ௩௦: ௧௯௮) என்பதற்கு, 'பயனில் உரைக்கோட்டி' என்று பொருள்கூறுவர் அரும்பதவுரையாசிரியர்.

௩௭. எள்ளுதல் - இகழுதல். போம் : ஏவற்பன்மை. செய்வோன்: பெயர்.

௩௮. ஈண்டுச்செய்வினை - இவ்வுலகத்துச்செய்யும் புண்ணியங்களின் பயனை. ஆண்டு - அவ்விடத்தில்.

௩௮ - ௯. நுகர்ந்திருத்தல் காண்டகு - அனுபவித்திருத்தலைச் செய்கின்ற. நுங்கடவுளரென்றான், தனக்கு அவர் அயலென்னுங்கருத்தால்; "நின்றநின் கார்மயி றன்னையும்" (திருச்சிற். ௭௬) என்புழிப்போல.

௪௦. புறங்காத்தோம்பல்: மணி. ௧௩ : ௧௪.

௪௨. யாவருமில்லா - அறஞ்செய் மாக்கள் முதலியோர்களில் ஒருவருமில்லாத.

௩௮ - ௪௨. தேவருலகம் வினைப்பயனனுபவிப்போர்க்கேயன்றி அறஞ்செய் மாக்கள் முதலியோர்க்கு இடமன்றென்பதை, "பொலம்பூங் காவி னன்னாட் டோருஞ், செய்வினை மருங்கி னெய்த லல்லதை, யுடையோ ரீதலு மில்லோ ரிரத்தலுங், கடவ தன்மையிற் கையற வுடைத்து" (புறநா. ௩௮) எனவும், "ஈவாருங் கொள்வாரு மில்லாத வானத்து, வாழ்வாரே வன்க ணவர்" (குறள், ௧௦௫௮, பரி. மேற்.), எனவும்,

(பி - ம்.) ௩௬. 'வெள்ளைகள் போல விலாவிற' ௩௭. 'போன்மென'

கிறைவ னாகிய பெருவிறல் வேந்தே
வருந்தி வந்தோ ரரும்பசி களைந்தவர்
திருந்துமுகங் காட்டுமென் றெய்வக் கடிஞை
யுண்டி கொல்லோ வுடுப்பன கொல்லோ
பெண்டிர் கொல்லோ பேணுநர் கொல்லோ
யாவையீங் களிப்பன தேவர்கோ னென்றலும்
புரப்போன் பாத்திரம் பொருந்தூண் சுரந்தீங்
கிரப்போர்க் காணா தேமாந் திருப்ப
நிரப்பின் றெய்திய நீணில மடங்கலும்

'ஈவாரும் ஏற்பாருமின்றி எல்லாரும் ஒரு தன்மையராதலின் ஒப்புரவு புத்தேளுலகத்து அரிதாயிற்று' (குறள், ௨௧௩, பரிமேல்.) எனவும் வருவற்றாலுணர்க.

௪௨ - ௩. 'யாவரும்......பெருவிறல் வேந்தே' என்பது இகழ்ச்சி.

௪௪. மு. மணி. ௨௩ : ௧௩௫.

௪௪ - ௫. வந்தோரரும்பசி - வந்தோருடைய பொறுத்தற்கரிய பசியை. களைந்து - நீக்கி. அவர் திருந்துமுகங்காட்டும் - அவருடைய இனிய முகத்தை யான் காணக்காட்டும்; என்றது அவர் திருந்துமுகங் காட்டும் என் தெய்வக் கடிஞையேயமையும்; உன்னாற் கொடுக்கப்படுவன எனக்கு இன்பஞ்செய்யாவாகலின், அவை வேண்டாவென்றவாறு; "ஈத்துவக்கு மின்பம்" (குறள். ௨௨௮) என்று வருதல்காண்க. காட்டும்: முற்று. தெய்வக்கடிஞையென்றான், வாங்குநர் கையகம் வருத்துதலல்லது தான் தொலைவில்லாத் தன்மைத்தாதலின்.

௪௮. ஈங்கு அளிப்பன - எனக்கு அளிப்பன; ஈங்கு, தன்மையை புணர்த்திற்று, "ஒழிக காம மீங்கென" (சீவக. ௭௨) என்புழிப்போல. தேவர்கோன்: விளி.

௪௬ - ௮. உன்னாலளிக்கப்படுவன உண்டிமுதலியவற்றுள் யாவையென்று ஆபுத்திரன் இந்திரனை இகழ்ந்துகூறலும்.

௩௭ - ௪௮. எடுத்துரைசெய்வோன் என்றலுமென்க.

இனி, தன்னை ஆபுத்திரன் அவமதித்தானென்று இந்திரன் சினந்து அவன் அன்னதானஞ்செய்தற்கு இடமில்லையாகும்படி மழைபெய்வித்து நாட்டை வளப்படுத்தி இரப்பாரை இல்லையாக்கினமை கூறுவார்.

௪௯. புரப்போன்பாத்திரம் - உயிர்களைப் பாதுகாப்பவனுடைய பிச்சைப் பாத்திரம்.

௫௦. ஏமாந்திருப்ப - ஆபுத்திரன் உண்பித்தற்கு ஆசையடைந்திருக்கும்படி; "அருந்தே மாந்த நெஞ்சம்" (புறநா. ௧௦௧); துன்பமுற்றிருப்ப வெனினுமமையும்.

௫௧. நிரப்பு - வறுமை.

(பி - ம்.) ௪௪. 'அருந்துபசிகளைந்து' ௪௯. 'பொழிந்துணசுரபபு

பரப்பு நீராற் பல்வளஞ் சுரக்கென
வாங்கவன் பொருட்டா லாயிரங் கண்ணோ
னோங்குயர் பெருஞ்சிறப் புலகோர்க் களித்தலும்
பன்னீ ராண்டு பாண்டிநன் னாடு
மன்னுயிர் மடிய மழைவள மிழந்தது
வசித்தொழி லுதவ மாநிலங் கொழுப்பப்
பசிப்புயி ரறியாப் பான்மைத் தாகலி
னாருயி ரோம்புந னம்பலப் பீடிகை
யூணொலி யரவ மொடுங்கிய தாகி
விடருந் தூர்த்தரும் விட்டேற் றாளரு

---

௫௩. ஆங்கவன் பொருட்டு - ஆபுத்திரன்பொருட்டு; ஆங்கவன்: ஒருசொல்.

௫௪. அளித்தலும் - இந்திரன் கொடுத்தலும்.

௫௦ - ௫௪. ஏமாந்திருப்பச் சிறப்பை இந்திரன் அளித்தலும்.

௫௬. மணி. ௨௮ : ௧௫௭.

௫௫ - ௬. பன்னிரண்டுவருடம் மழை வளத்தை இழந்ததாகிய பாண்டிநாடு; மணி. ௨௫ : ௧௦௧ - ௨.

௫௭. வசி - மழை; (மணி. ௧ : ௭௧); வசித்தொழிலுதவ : மணி. ௨௮ : ௨௩௩. ௫௮. பசிப்பு - பசித்தல்.

௫௫ - ௮. பாண்டிநன்னாடு பான்மைத்தாகலின்.

௫௯. ஆபுத்திரன் பலநாளிருந்து அறஞ்செய்தற்கிடனாயதுபற்றி அம்பலம் அவனதாகக்கூறப்பட்டது. அம்பலப் பீடிகை : மணி. ௧௩ : ௧௦௭, ௧௪ : ௧.

௬௦. ஊணொலி அரவம் - மக்களும் மாவும் பறவையும் ஒருங்கு வந்து சோற்றை உண்ணுதலால் ஒலிக்கும் ஒலி; ஒலியரவம்: வினைத்தொகை.

௬௧. விடர் - தீயநடையையுடைய காமுகர்; ஒரு வித்தையையுடையவரென்று கூறுவர் பிரதாபருத்திரீய வடநூலாசிரியரென்பர். தூர்த்தர் - பரத்தையை நுகரும் காமுகர். விட்டேற்றாளர் - இகழ்ந்து கடுஞ்சொற் சொல்லுவோர். விடருந்தூர்த்தரும்: (மணி. ௧௫ : ௬௦); "விடருந் தூர்த்தரும் விட்டே றுரைப்ப" (பெருங். ௧ : ௩௫ : ௨௨௪); "சிற்றினமாவது விடரும் தூர்த்தரும் நடருமுள்ளிட்டகுழு" (குறள். ௪௬, அவ.)என்றும், "நகைவகையராகிய நட்பினராவார் விடரும் தூர்த்தரும் வேழம்பரும்போன்று பலவகையால் நகுவித்துத் தாம் பயன்கொண்டு ஒழிவார்" (குறள். ௮௧௭) என்றும் பரிமேலழகரெழுதியிருக்கின்றனர். இவ்வடியிலுள்ள விடர்முதலிய மூன்று பெயர்களுள் மூன்றாவதாகிய விட்டேற்றாளரென்பதற்குச் சரியாக முறையே 'நடர்', 'வேழம்பர்' என்பனவற்றைப் பரிமேலழகர் அமைத்திருத்தலை நோக்குமிடத்து விட்டேற்றாளரென்பதற்கு நடரென்றேனும் வேழம்பரென்றே

(பி - ம்.) ௫௬. 'வளங்கரந்தது' ௫௭ - ௮. 'வசிதொழிலுதவமாநிலங் கொழுதிப்பசியுயிர்.' ௫௮ - ௬௩. 'பான்மையதாக, வட்டும்')

நடவை மாக்களு நகையொடு வைகி
வட்டுஞ் சூதும் வம்பக் கோட்டியு
முட்டா வாழ்க்கை முறைமைய தாக
வாபுத் திரன்று னம்பல நீங்கி
யூரூர் தோறு முண்போர் வினாஅ
யாரிவ னென்றே யாவரு மிகழ்ந்தாங்
கருந்தே மாந்த வாருயிர் முதல்வனை
யிருந்தாய் நீயோ வென்பா ரின்மையிற்
றிருவின் செல்வம் பெருங்கடல் கொள்ள
வொருதனி வரூஉம் பெருமகன் போலத்
தானே தமியன் வருவோன் றன்முன்

னும் பொருள்கொள்ளுதல் பொருத்தமுடைத்தெனத் தோற்றுகின்றது. இனிச் சுற்றத்தினின்றும், நட்பினின்றும் நீங்கிப் பிறரையும் அவ்வண்ணம் செய்விப்போனை விட்டேற்றியென்றல் வழக்கின்கண் உண்மையின், விட்டேற்றுள ரென்பதற்கு அத்தன்மையையுடையோரென்று பொருள்கூறினும் பொருந்தும்.

சுஉ. நடவை - வழி. வைகி - விடர் முதலியோர் தங்குதலால்.

சுங. வட்டு - உண்டையுருட்டுதல்; "அரங்கின்றி வட்டாடியற்றே" (குறள். ௪0க); "கல்லாச் சிறாஅர் நெல்லிவட் டாடும்" (நற்றிணை, ங.) வம்பக்கோட்டி - பயனில் சொற்களைச் சொல்லுவோர் கூட்டம்; "புல்லா வெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி" (நாலடி. கருரு); "வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின்" சிலப். ங0: ககூஅ.

சுச. முட்டா வாழ்க்கை - குறையாத வாழ்க்கை; "முட்டா வின்பத்து முடிவுல கெய்தினர்" சிலப். கரு: ககஎ.

ருக - சுச. பீடிகை ஒடுங்கியதாகி முறைமையதாகவென்க.

சுசு. உண்போர் வினாஅய் - உண்போரைவினாவி.

சுஎ. இகழ்ந்து - இகழ்தலால்.

சுஅ. அருந்தேமாந்த - பிறர் உண்ண ஆசைப்பட்ட; (மணி. கஅ: எஉ; புறநா. க0க.) ஆருயிர்முதல்வனை - ஆபுத்திரனை.

சுகூ. நீ இருந்தாயோவென்று வினாவுவோரில்லாமையால்.

சுஎ - கூ. இகழ்தலால் இன்மையின்.

எ0. செல்வத்தைக்கடல் கொள்ள.

எக. பெருமகன் - அரசன்; "பெருநில முழுதாளும் பெருமகன்" சிலப். க: ஙக.

எஉ. உண்போர்பலரிடையே யிருந்தோன் இப்போது மிகத் தனிமை யுற்றானென்பார், 'தானே தமியன் வருவோன்' என்று ஆசிரி

(பி - ம்.) சுசு. 'உண்போர்வினாவ' சுஅ. 'இருந்தேமார்ந்த' எ0. 'செல்வமொருகடல்' எஉ. 'தமியேவருவோன்'

மாநீர் வங்கம் வந்தோர் வணங்கிச்
சாவக நன்னாட்டுத் தண்பெயன் மறுத்தலி
னூனுயிர் மடிந்த துரவோ வென்றலு
மமரர்கோ னாணையி னருந்துவோர்ப் பெறாது
குமரி மூத்தவென் பாத்திர மேந்தி
யங்கந் நாட்டுப் புகுவதென் கருத்தென
வங்க மாக்களொடு மகிழ்வுட னேறிக்
கால்விசை கடுகக் கடல்கலக் குறுதலின்
மாலிதை மணிபல் லவத்திடை வீழ்த்துத்

யர் இரங்கிக் கூறினர்; இப்படியே, "காடேந்து பூஞ்சாரல் கடந்தான் காலிற் கழலானே", "கானம் வழங்கன் மேவிக் காலின்னேகி னானே" (சீவக. ௧௨௨௧, ௧௪௧௨) எனத் திருத்தக்கதேவர் நடந்துசென்ற சீவகனைப்பற்றி இரங்கிக் கூறியிருத்தல் காண்க.

௭௦ - ௭௨. "நயனுடையா னல்கூர்ந்தா னாதல் செயுநீர, செய்யா தமைகலா வாறு" (௨௧௧) என்னும் குறளை இவ்வடிகளின் பொருளோடு ஒப்பிடுக.

௭௩. மாநீர் - கடல்.. வங்கம் - கப்பல்.

௭௪. தண்பெயல் மறுத்தலின் - தண்ணியமழை இல்லாது போனமையால்.

௭௫. ஊன் உயிர்மடிந்தது - உடம்போடு கூடியவுயிர் அவ்வுடம்பினின்றும் நீங்கிற்று. என்றலும் - என்று வங்கம்வந்தோர் கூறலும்.

௭௬. இந்திரன் கட்டளையினால் உண்போரைப்பெறாமல்; ஆணையிற் பெறாதென்க; ஆணை - கட்டளை. வரங்கொடுத்தற்குவந்த இந்திரன் ஆபுத்திரன் தன்னை மதியாததுபற்றிக் கோபங்கொண்டு இரப்போர் இலராகும் வண்ணம் நாடுவளஞ்சுரக்கும்படி மழைபெய்வித்தமையின், இங்ஙனங்கூறினர்; இதனை இக்காதையில் ௩௪ - ஆம் அடிமுதலியவற்றாலுணர்க.

௭௭. குமரிமூத்த என்பாத்திரம் - ஒருகன்னிப்பெண் வறிதேமூத்தாற்போன்ற எனதுபாத்திரம்; கொடுப்போருங் கொழுநனுமேயன்றித் தானும் பயனிழந்து கழிந்த குமரியை ஈண்டு உவமைகூறினமையின் தானும் ஏற்பாருமேயன்றிப் பாத்திரமும் பயனிழந்து கழிந்ததேயென்று ஆபுத்திரன் இரங்கியவாறாயிற்று; "அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வ மிகநலம், பெற்றா டமியண்மூத் தற்று" (குறள். ௧௦௦௭); குமரிமூத்த: (மணி. ௨௨ : ௧௪௩.) பாத்திரம் - பாத்திரத்தை.

௭௮. அங்கந்நாடு: இவை ஒருசொன்னீர்மைய. என் கருத்தெனஎன தெண்ணமென்று ஆபுத்திரனினைந்து.

௮௦. கால் - காற்று. ௮௧. இதை - கப்பற்பாய்.

(பி - ம்.) ௭௪ - ௮. 'சாவகநன்னாட்டுப் புகுவது பொருளென, வங்க' ௮௦. 'கால்விசைநடுக்கிக்கடல்'

தங்கிய தொருநாட் டானுங் கிழிந்தன
னிழிந்தோ னேறின னென்றிதை யெடுத்து
வழங்குநீர் வங்கம் வல்லிருட் போதலும்
வங்கம் போயபின் வருந்துதுய ரெய்தி
பங்கு வாழ்வோர் யாவரு மின்மையின்
மன்னுயி ரோம்புமிம் மாபெரும் பாத்திர
மென்னுயி ரோம்புதல் யானோ பொறேஎன்
றவந்தீர் மருங்கிற் றனித்துய ருழந்தேன்
சுமந்தென் பாத்திர மென்றனன் றொழுது
கோமுகி யென்னுங் கொழுநீ ரிலஞ்சியி
னோரியாண் டொருநாட் டோன்றென விடுவோ
னருளறம் பூண்டா ராருயி ரோம்புந
ருளரெனி லவர்கைப் புகுவா யென்றுங்
குண்ணு நோன்போ டுயிர்பதிப் பெயர்ப்புழி
யந்நா ளாங்கவன் றன்பாற் சென்றே
னென்னுற் றனையோ வென்றியான் கேட்பத்

அஉ. ஒருநாள் கப்பல் தங்கியது.

எக - அஉ. ஏறி ஆங்கு இழிந்தனன்.

அங. அங்கு - மணிபல்லவத்தில்.

அஎ. ஓம்பும்: முற்று. பாத்திரம் மன்னுயிரோம்புமென்க.

அகூ. இப்பாத்திரமடைவதற்கு முற்பிறப்பில் மிக்க நல்வினைசெய்த நான் அதனையொழிந்து பின்னர்ச் சிறிது தீவினையுஞ்செய்தபக்கத் தானே தனித்துத் துயரத்தையுழந்தேன்; சிலப். கச: உகூ.

கூ0. பாத்திரம் சுமந்து என் - ஏற்போரில்லாத இவ்விடத்தில் இப்பாத்திரத்தை யான்சுமத்தலால் வரும்பயன் யாது.

கூஉ. ஓர்யாண்டொரு நாளென்றது, வைசாகசுத்தபௌர்ணிமையை.

கூங. அருளறம் - தயாதருமம்; மணி. ரு: எரு - ஆம் அடியின் குறிப்பிற்காண்க.

கூச. புகுவாயென்று - புகுவாயென்று சொல்லிப் பாத்திரத்தைக் கோமுகியில் விடுத்து.

கூரு. பட்டினிவிட்டிருத்தலாகிய விரதத்தால் உயிரை விடுகையில்; "உண்ணு நோன்போ டுயிர்பதிப் பெயர்த்ததும்" சிலப். உஎ: அங.

கூஎ. யானென்றது அறவணவடிகள். என் உற்றனையோ - யாது துன்பமடைந்தாயோ.

(பி - ம்.) அஉ. 'தயங்கியதொருநாள்' அஅ. 'யானோபோற்றேன்' கூக. 'என்னுயிக்கொழுநீர்' கூச. 'கைச்செல்வாயென்றுங்கு'

தன்னுற் றனபல தானெடுத் துரைத்தனன்
குணதிசைத் தோன்றிக் காரிருள் சீத்துக்
குடதிசைச் சென்ற ஞாயிறு போல
மணிபல் லவத்திடை மன்னுடம் பிட்டுத்
தணியா மன்னுயிர் தாங்குங் கருத்தொடு
சாவக மாளுந் தலைத்தாள் வேந்த
னாவயிற் றுதித்தன னாங்கவன் றானென்.

௧௪.—*பாத்திரமரபுகூறியகாதை முற்றிற்று.

---

௯௮. தன்னுற்றனபல - தன்னையடைந்த பலதுன்பங்களை.

௯௯. சீத்து - நீக்கி.

௧௦௧. உடம்பிட்டு : "தம்முடம் பிடாஅது" பொருந. ௯௧.

௧௦௨. தன்னாற் பசிதணிக்கப்படாத நிலைபெற்ற உயிரைப்பாது காக்கும் எண்ணத்துடன்.

௧௦௩. தாள் - முயற்சி. வேந்தன் - பூமிசந்திரன்.

௧௦௪. ஆங்கவன் - ஆபுத்திரன்.

௧௦௩ - ௪. ஆபுத்திரனைப்பெற்ற பசு மண்முகனென்னும் முனிவனிடத்ததாயினும் பூமிசந்திரனுடைய நாட்டகத்ததாதலின், 'வேந்தனு' எனப்பட்டது.

௧௦௨ - ௪. உயிர் உடம்பினீங்குங் காலத்து அதனால் யாதொன்று பாவிக்கப்பட்டது அஃது அதுவாய்த்தோன்றுமென்பது எல்லா நூல்களுக்கும் ஒத்த துணிபாகலின், 'மன்னுயிர் தாங்குங் கருத்தொடு, ஆவயிற் றுதித்தனன்' என்றார்; குறள், ௩௫௮, பரிமேல்.

௧ - ௧௦௪. உழந்தோர் மலைக்குமென்றலும், இல்லோன் அருரெய்த, சிந்தாவிளக்குத் தோன்றிப் பாத்திரங்கொடுத்தலும், ஆபுத்திரன் ஓம்பலின், விடாவாய் ஒலிப்ப, இந்திரன்கொள்கென, உரைசெய்வோன், 'யாவையீங்களிப்பன தேவர்கோன்' என்றலும், ஆயிரங்கண்ணோன் உலகோர்க்களித்தலும், பாண்டிநன்னாடு பான்மைத்தாகலின், பீடிகை முறைமையதாக, ஆபுத்திரன்நீங்கி உண்போரைவினவி என்பாரின்மையின் வருவோன்றன்முன் வந்தோர் மடிந்ததென்றலும், வங்கமேறி இழிந்தனன்; வங்கம் வல்லிருட்போதலும் துயரெய்தி விடுவோன் புகுவாயென்று உயிர்பதிப்பெயர்ப்புழிச்சென்றேன்; கேட்ப உரைத்தனன்; அவன் ஆவயிற்றுதித்தனனென வினைமுடிவு செய்க.

(பி - ம்.) ௯௮. 'தன்னுறுதுன்பம்' ௯௯. 'காரிருள்தீத்து' ௧௦௩. 'தலைத்தார்வேந்தன்' * 'அமுதசுரபியென்னும் பாத்திரமரபு கூறிய காதை முற்றும்'

பதினைந்தாவது

பாத்திரங்கொண்டு பிச்சைபுக்ககாதை.

[பதினைந்தாவது மணிமேகலை பாத்திரங்கொண்டு பிச்சைக்குப் பெருந்தெருப்போய பாட்டு.]

இன்னுங் கேளா யிளங்கொடி மாதே
யந்நா ளவனை யோம்பிய நல்லாத்
தண்ணென் சாவகத் தவள மால்வரை
மண்முக னென்னு மாமுனி யிடவயிற்
பொன்னின் கோட்டது பொற்குளம் புடையது
தன்னலம் பிறர்தொழத் தான்சென் றெய்தி
யீனு முன்ன மின்னுயிர்க் கெல்லாந்
தான்முலை சுரந்து தன்பா லூட்டலு
மூன்று காலமுந் தோன்றநன் குணர்ந்த
வான்ற முனிவ னதன்வயிற் றகத்து
மழைவளஞ் சுரப்பவு மன்னுயி ரோம்பவு
முயிர்கா வலன்வந் தொருவன் றோன்றுங்
குடர்த்தொடர் மாலை பூண்பா னல்ல
னடர்ப்பொன் முட்டை யகவையி னுளெனப்

உ. அந்நாள் - சாலியென்பவள் ஈன்றுபோகட்டுப்போனநாளில்; மணி. கங : க0. அவனை - ஆபுத்திரனை.

ங. சாவகம் - சாவகநாடு. ரு. கோட்டது - கொம்பையுடையது.

உ - அ. நல்லா, மாமுனியிடத்திற் கோட்டதாய்க் குளம்புடையதாய்ச் சென்றெய்தி உயிர்க்கெல்லாம் தன் பாலூட்டலுமென்க.

க0. முனிவன் - மண்முகன். அதன் வயிற்றகத்து - அப்பசு வயிற்றில்.

கஉ. உயிர்காவலனாகிய ஒருவன் வந்து தோன்றுவான்.

க0 - கஉ. அதன்வயிற்றகத்துத் தோன்றுமென்க.

கச. பொன் அடர்முட்டை அகவையினுன் - பொற்றகட்டாலாகிய முட்டையின் உள்ளிடத்துள்ளான். என - என்று மண்முகமுனிவன் சொல்ல.

கங - ச. அங்ஙனந்தோன்றுவோன்குடர்மாலை பூண்பானல்லன்;

(பி - ம்.) ச. 'மனமுகனென்னு' அ. 'நான்முலை சுரந்துநன்பா லூட்டலும்' க0. 'ஆன்வயிற்றகத்து' கச. 'ஆவயிற்றுளன்', 'அகவை யிற்றுளன்.'

பிணிநோ யின்றியும் பிறந்தறஞ் செய்ய
மணிபல் லவத்திடை மன்னுயிர் நீத்தோன்
றற்காத் தளித்த தகையா வதனை
யொற்கா வுள்ளத் தொழியா னுதலி
னுங்கவ் வாவயிற் றமரர்கண முவப்பத்
தீங்கனி நாவ லோங்குமித் தீவினுக்
கொருதா னாகி யுலகுதொழத் தோன்றினன்
பெரியோன் பிறந்த பெற்றியைக் கேணீ
யிருதிள வேனிலி லெரிகதி ரிடபத்
தொருபதின் மேலு மொருமூன்று சென்றபின்
மீனத் திடைநிலை மீனத் தகவையிற்
போதித் தலைவனொடு பொருந்திய போழ்தத்து
மண்ணக மெல்லா மாரி யின்றியும்
புண்ணிய நன்னீர் போதொடு சொரிந்தது
போதி மாதவன் பூமியிற் றோன்றுங்
கால மன்றியுங் கண்டன சிறப்பெனச்

முட்டை அகவையினுனென; "சுடர்த்தொடர் மாலை சூழா தாங்கோ, ரடர்ப்பொன் முட்டையு ளடங்கிய வண்ணமும்" (உ௫ : எஉ - ௩) என்பர் பின்னும்.

க௫. பிணிநோயின்றியும் - பிணியாலுளதாகும் வருத்தம் இல்லாதிருக்கவும்.

க௬. உயிர் நீத்தோன் - உயிரைத்துறந்தவனாகிய ஆபுத்திரன்.

க௫ - ௬. நோயின்றியும் அறஞ்செய்தற்பொருட்டு உயிர் நீத்தோனென்க; "உண்ணா நோன்போ டுயிர்பதிப் பெயர்ப்புழி" (க௪ : ௯௫) என்று முன்பு வந்திருத்தல் காண்க.

கஎ. தகை : அழகு ; தகுதியுமாம்.

க௮. ஒற்கா - தளராத; இஃது ஒல்காவென்பதன் விகாரம்; "ஒல்க லுள்ளமொ டொருபுடைத் தழீஇ" புறநா. க௩௫.

க௬ - உக. நீத்தோன் அவ்வாவயிற்றுத் தோன்றினன்.

உஉ. பெற்றி - பேறு. உ௩ - ௬. மு. மணி. கக : ௪0.

உக - ௬. போழ்தத்துத் தோன்றினனென வியையும்.

உ௯. போதிமாதவன் - புத்தன்.

௩0. சிறப்புக்கள் காணப்பட்டன.

உ௯ - ௩0. புத்தன் தோன்றுங்காலத்து உளவாகுஞ் சிறப்புக்களை, மணி. கஉ : அ௬ - ஆம் அடி முதலியவற்றிற் காண்க.

(பி - ம்.) கஎ. 'தகையாத்தகுதி' உஉ. 'பெற்றியதுகேள்' உ௩. 'எறிகதிரிடபத்' உ௯. 'போதி நாதன்'

சக்கர வாளக் கோட்டம் வாழு
மிக்க மாதவர் விரும்பினர் வியந்து
கந்துடை நெடுநிலைக் கடவு ளெழுதிய
வந்திற் பாவை யருளு மாயிடி
னறிகுவ மென்றே செறியிருட் சேறலு
மணிபல் லவத்திடை மன்னுயிர் நீத்தோன்
றணியா வுயிருயச் சாவகத் துதித்தன
னாங்கவன் றன்றிற மறவண னறியுமென்
றீங்கென் னாவை வருத்திய திதுகேள்
மண்ணாள் வேந்தன் மண்முக னென்னும்
புண்ணிய முதல்வன் றிருந்தடி வணங்கி
மக்களை யில்லேன் மாதவ னருளாற்
பெற்றேன் புதல்வனை யென்றவன் வளர்ப்ப
வரைசாள் செல்வ மவன்பா லுண்மையி
னிரைதார் வேந்த னாயின னவன்றான்
றுறக்க வேந்தன் றுய்ப்பிலன் கொல்லோ
வறக்கோல் வேந்த னருளிலன் கொல்லோ
சுரந்து காவிரி புரந்துநீர் பரக்கவு
நலத்தகை யின்றி நல்லுயிர்க் கெல்லா

---

௩௪. அந்தில் - அவ்விடத்து; "அந்தி லரங்கத் தகன்பொழி லகவயின்" சிலப். ௧௧ : ௯.

௨௮ - ௩௫. நீர் சொரிந்தது, சிறப்புக்கண்டனவென்று மாதவர் வியந்து அறிகுவமென்று பாவைபாற் செறியிருளிற் செல்லுதலுமென்க.

௩௯. என்னாவை வருத்தியதென்றது, முனிவர்களுக்கு ஆபுத்திரன் வரலாற்றை யான் சொல்லும்படி அப்பாவை செய்ததென்றவாறு.

௪௦. வேந்தன் - பூமிசந்திரன்.

௪௫. நிரைதார் : வினைத்தொகை. அவன்றான் - ஆபுத்திரன்றான்.

இதுகாறும் ஆபுத்திரன்றிறங் கூறப்பட்டது.

௪௬. துறக்கவேந்தன் - இந்திரன். துய்ப்பு இலன்கொல்லோ - அவிநுகர்ச்சி இலனாயினனோ.

(பி - ம்.) ௩௧, 'கோட்டகவாழு' ௩௭. 'தணியாதுயருறு சாவகத்து' ௪௧. 'திருந்தடிபொருந்தி' ௪௪. 'அவன்வயினுண்மையி' ௪௬. 'துப்பிலன் கொல்லோ' ௪௮. 'புரிந்து நீர்க்காக்கவும்'

மலத்தற் காலை யாகிய தாயிழை
வெண்டிரை தந்த வமுதை வானோ
ருண்டொழி மிச்சிலை யொழித்துவைத் தாங்கு
வறனோ டுலகின் வான்றுயர் கெடுக்கு
மறனோ டொழித்த லாயிழை தகாதென
மாதவ னுரைத்தலு மணிமே கலைதான்
றாயர் தம்மொடு தாழ்ந்துபல வேத்திக்
கைக்கொண் டெடுத்த கடவுட் கடிஞையொடு
பிக்குணிக் கோலத்துப் பெருந்தெரு வடைதலு
மொலித்தொருங் கீண்டிய வூர்க்குறு மாக்களு
மெலித்துகு நெஞ்சின் விடருந் தூர்த்தரும்

---

௫௦. அலத்தற்காலை ஆகியது - வறுமைக்காலம் உண்டாயிற்று. ஆயிழை: விளி.

௪௯ - ௫௦. இப்படியே, "செங்கோல் கோடியோ......அறியேன்" (௨௮ : ௧௮௮ - ௯௧) என்று பின்வருதல் காண்க.

௫௨. மிச்சில் - மிகுதி. ஒழித்து வைத்தாங்கு - பயன்படுத்தாது வைத்தாற்போல.

௫௩. வறன் ஒடு உலகு - வற்கடமானகாலம் பரந்தவுலகம்; "வறனோடின் வையகத்து வான்றருங் கற்பினள்" கலி. ௧௬.

௫௪. அறன் ஒடு ஒழித்தல் - அமுதசுரபியைப் பயன்படுத்தாது வைத்தல்.

௫௩ - ௪. மணி. ௨௧ : ௧௫௭ - ௮.

௫௫. மாதவன் - அறவணவடிகள்.

௫௬. தாயர் - மாதவி, சுதமதி. ௫௭. கடிஞை - பிச்சைப்பாத்திரம்.

௫௮. பிக்குணிக்கோலத்து - பிக்குணிக்கோலத்துடன்; துறந்தோர்களில் ஆண்பாலாரைப் பிக்ஷுக்களென்றும், பெண்பாலாரைப் பிக்ஷுணிகளென்றுங்கூறுதல் பௌத்தசமயமரபு. கோலம் - வேடம்.

௫௫ - ௮. மணிமேகலை ஏத்திக் கடிஞையொடு கோலத்தோடு பெருந்தெருவடைதலுமென்க.

இனிப் பெருந்தெருவிற் பிச்சைக்குப்போந்த மணிமேகலையின் பிக்குணிக் கோலத்தைக் கண்டோருடைய மனவருத்தத்தைக் கூறுவார்.

௫௯. குறுமாக்கள் - அறிவில்லாத சிறியர்; "அடர்க்குறு மாக்கள்" (௧௩ : ௪௦) என்றார் முன்னும்; "ஊர்க்குறு மாக்கள்" புறநா. ௯௪.

௬௦. மெலிந்து, மெலித்தென்றாயதுவிகாரம். விடருந் தூர்த்தரும்: மணி. ௧௪ : ௬௧.

(பி - ம்.) ௫௨. 'ஒளித்துவைத்தாங்கு' ௫௯. 'ஒளித்தொருங்கீண்டிய' ௬௦. 'விடமருந்தூர்த்தரும்'

கொடிக்கோ சம்பிக் கோமக னாகிய
வடித்தேர்த் தானை வத்தவன் றன்னை
வஞ்சஞ் செய்துழி வான்றனை விடீஇய
வுஞ்சையிற் றோன்றிய யூகி யந்தண
னுருவுக் கொவ்வா வுறுநோய் கண்டு
பரிவுறு மாக்களிற் றம்பரி வெய்தி
யுதய குமர னுளங்கொண் டொளித்த
மதுமலர்க் குழலாள் வந்து தோன்றிப்
பிச்சைப் பாத்திரங் கையி னேந்தியது
திப்பிய மென்றே சிந்தைநோய் கூர
மணமனை மறுகின் மாதவி யீன்ற

சுக. கோசம்பி - கௌசாம்பிநகரம்; இது, முதலிற் குசாம்ப னென்பவனாற் றிருவப்பட்டதாதலின் இப்பெயர்பெற்றதென்பர்; இது பாகதம்; "கொடியணி நெடுமதிற் கொடிக்கோ சம்பி" (பெருங். க. ருச: எசு.) கோமகனாகிய - அரசனாகிய.

சுஉ. வடி - திருத்தம்; "வானுட்கும் வடிநீண்மதில்" (புறநா. கஅ.) வத்தவன் - வத்ஸதேசத்தரசனாகிய உதயணன்; "வயந்தக குமரன் வத்த வற் குரைப்ப" பெருங். க. சங: அங.

சுஉ - ங. வத்தவன்றன்னை வஞ்சஞ் செய்துழி - (தனக்குத் திறை கொடாததுபற்றிச் சினந்து சாலங்காயனனென்னும் தன்மந்திரியால் யந் திரயானையைக்காட்டி வஞ்சமாகப்பிடிப்பித்துப் பிரச்சோதனனென்னு மரசன்) உதயணனைச் சிறைப்படுத்தியபொழுது.

சுச. உஞ்சையில் - உச்சயினிநகரத்தில்; இஃது அவந்திநாட்டி லுள்ளது; பிரச்சோதனனுடைய இராசதானி; இதையே அவந்தியென் றும் வழங்குவர். தோன்றிய - வேற்றுருவங்கொண்டு தோன்றிய. யூகி யந்தணன் - பிரமசுந்தர யோகியென்பவருடைய குமாரன்; உதயண னுடைய மந்திரிகள் நால்வருளொருவன்.

சுசு. பரிவுறுமாக்களில் - துன்பமுற்ற சனங்களைப்போல.

சுக - சு. பிரச்சோதனன் உதயணனை வஞ்சித்துச் சிறைப்படுத் திய பொழுது அவனைச் சிறைமீட்டற்கு யூகியென்பவன் மாறுவடிவங் கொண்டு உச்சயினிநகரப்பெருந்தெருவையடைந்ததும், அதனைக்கண் டோர் பலரும் பரிவுற்றுச் சூழ்ந்ததுமாகியவிவற்றை உதயணகுமாரகாவி யத்துள்ள உஞ்சைக்காண்டத்தானுணர்க.

எ0. திப்பியம், ஈண்டு ஆச்சரியமென்னும் பொருளைத்தந்து நின் றது. சிந்தைநோய்கூர - மனவருத்தம் மிக; சிந்தை - சிந்தாகுலம்; "என் றுண்டாங் கொல்லினிக் கட்படு நாளெனுஞ் சிந்தையே" சீவக. ககருக.

ருக - எ0. குறுமாக்களும் விடரும் தூர்த்தரும், மாக்களிற் பரி வெய்தி, குழலாள் தோன்றி ஏந்தியது திப்பியமென்று நோய்கூர வென்க.

வணிமலர்ப் பூங்கொம் பகமலி யுவகையிற்
பத்தினிப் பெண்டிர் பண்புட னிடூஉம்
பிச்சையேற்றல் பெருந்தக வுடைத்தெனக்
குளனணி தாமரைக் கொழுமலர் நாப்ப
ணொருதனி யோங்கிய திருமலர் போன்று
வான்றரு கற்பின் மனையுறை மகளிரிற்
றன்றனி யோங்கிய தகைமைய ளன்றே
வாதிரை நல்லா ளவண்மனை யிம்மனை
நீபுகல் வேண்டு நேரிழை யென்றனள்
வடதிசை விஞ்சை மாநகர்த் தோன்றித்
தென்றிசைப் பொதியிலோர் சிற்றியாற் றடைகரை
மாதவன் றன்னால் வல்வினை யுருப்பச்
சாவம் பட்டுத் தனித்துய ருறாஉம்

எஉ. பூங்கொம்பு - மணிமேகலை.

எஉ - ச. பூங்கொம்பு பத்தினிப்பெண்டிர் இடும் பிச்சையேற்றல் பெருந்தகவுடைத்தெனக் கூற.

எரு - சு. மணி. ச : அ - க ; பெருங். க. ருசு : கக.

எஎ. வான்றருகற்பு - மழையைப் பெய்விக்குங்கற்பு ; (மணி. கசு : சக - ரு0), "ஆங்கவை யொழிகுவை யாயி னாயிழை, யோங்கிரு வானத்து மழையுநின் மொழியது" (உஉ : சுஅ - க) என்று பின்வருதல் காண்க ; "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய் யெனப் பெய்யு மழை" (குறள், ருரு); "வறனோடின் வையகத்து வான்ற ருங் கற்பினாள்" கலி. கசு.

எசு - கூ. திருமலர்போன்று ஆதிரைநல்லாள் தான் தனியோங்கிய தகைமையள்அன்றேயென்க.

அக. வடதிசை விஞ்சைமாநகர் - வடதிசையிலுள்ள வித்தியாதர நகரமாகிய காஞ்சனபுரத்தில்.

அஉ. பொதியில் - பொதியின்மலை.

அந. வல்வினையுருப்ப - வலியதீவினையழல ; உருப்ப - தோன்ற வென்றுமாம்.

அந - ச. மாதவன்றன்னாற் சாவம்பட்டு.

(பி - ம்.) எஉ. 'பூங்கொடியகமலி' எஎ. 'வான்றருசிறப்பின்' எஅ. 'தனிபோகியதகைமை' எகூ. 'நல்லாளகன்மனை' அஉ. 'தென்றிசை மருங்கினோர்' அந. 'மாதவன்றன்முன்'

வீவில் வெம்பசி வேட்கையொடு திரிதருங்
காயசண் டிகையெனுங் காரிகை தானென்.

கரு.—பாத்திரங்கொண்டு பிச்சைபுக்ககாதை முற்றிற்று.

அசு. காரிகை - பெண்.

அக - சு. தோன்றி அடைகரையில் மாதவனாற் சாபம்பட்டுத்திரிதருங் காயசண்டிகையெனுங் காரிகையென்க; மணி. கஎ : உக - எஙு, உ0 : உஉ - சு.

அ0 - அசு. என்றனள் காயசண்டிகையெனுங் காரிகையென்க.

க - அசு. "மாதே, கேளாய்; நல்லா சென்றெய்தி ஊட்டலும், முனிவன், 'ஒருவன்றேன் றும்; அவன் பூண்பானல்லன்; அகலவையி னன்' என, நீத்தோன் ஒழியானாதலின், ஒருத்தனாகிப் போழ்தத்துத் தோன்றினன்; அப்போழ்தத்து நன்னீர் போதொடு சொரிந்தது; மாதவர் வியந்து அறிகுவமென்று பாவைபாற்சேறலும் அஃது, 'அறவணனறியும்' என்று என்னுவை வருத்திற்று; இதுகேள்; மண்ணாள்வேந்தன் வணங்கிப் பெற்றேனென்று வளர்ப்ப, உண்மையின், அவன் வேந்தனாயினன்; அலத்தற்காலை ஆகியது; ஒழித்தல் தகாது" என மாதவனுரைத்தலும், மணிமேகலை தாயரொடு தாழ்ந்தேத்திக் கடிஞையொடு கோலத்தோடு பெருந்தெருவடைதலும், மாக்களும் விடரும் தூர்த்தரும் பரிவெய்தித் திப்பியமென்று நோய்கூர, பூங்கொம்பு, 'பெருந்தகவுடைத்து' என அதுகேட்டுக் காரிகை, 'நீ புகல்வேண்டும்' என்றனளென வினைமுடிவுசெய்க.

பதினாறுவது

ஆதிரைபிச்சையிட்டகாதை.

[பதினாறுவது மணிமேகலைக்கு ஆதிரையென்னும் பத்தினிப்பெண்டிர் பாத்தூணீத்தபாட்டு.]

ஈங்கிவள் செய்தி கேளென விஞ்சையர்
பூங்கொடி மாதர்க்குப் புகுந்ததை யுரைப்போ

க. ஈங்கிவள் : ஒருசொல்; (திருச்சிற். கக.) இவள் - ஆதிரை.

க - உ. விஞ்சையர்பூங்கொடி - காயசண்டிகை. மாதர்க்கு - மணிமேகலைக்கு : ஆதிரைக்கென்றுமாம். மாதர்க்கு உரைப்போளென்க. புகுந்ததை - ஆதிரைக்குச் சம்பவித்ததை.

(பி - ம்.) க. 'ஈங்கென்செய்தி'

ளாதிரை கணவ னாயிழை கேளாய்
சாதுவ னென்போன் றகவில னாகி
யணியிழை தன்னை யகன்றனன் போகிக்
கணிகை யொருத்தி கைத்தூ ணல்க
வட்டினுஞ் சூதினும் வான்பொருள் வழங்கிக்
கெட்ட பொருளின் கிளைகே டுறுதலிற்
பேணிய கணிகையும் பிறர்நலங் காட்டிக்
காண மிலியெனக் கையுதிர்க் கோடலும்
வங்கம் போகும் வாணிகர் தம்முடன்
றங்கா வேட்கையிற் றானுஞ் செல்வுழி
நளியிரு முந்நீர் வளிகலன் வௌவ
வொடிமரம் பற்றி யூர்திரை யுதைப்ப
நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்

---

௩ - ௪. கணவன் சாதுவனென்போன்.

௫. ஆதிரையைப் பிரிந்துசென்று.

௬. கணிகை - வேசை. கைத்தூண் - தீய ஒழுக்கத்தால் வந்த உணவு; கை - ஒழுக்கம்; "கடவ தன்றுநின் கைத்தூண் வாழ்க்கை" (சிலப். ௧௫ : ௫௭.) நல்கவென்பதன்பின், 'உண்டு' என்று ஒருசொல் வருவிக்க.

௭. வட்டினும் சூதினும் - வட்டாடலிலும் சூதாடலிலும்; (மணி. ௧௪ : ௬௩.) வழங்கி - கொடுத்து.

௮. கணிகைக்கும் வட்டிற்கும் சூதிற்கும் கொடுக்கப்படுதல்பற்றி, 'கெட்டபொருள்' என்றார். பொருளின்கிளை - பொருளின்பகுதிகள்.

௰. காணமிலி - பொன்னில்லாதவன். கையுதிர்க்கோடலும்; உம்: உடனிகழ்ச்சி, "நீயெனப் பேச லோடும்......மயங்கி வீழ்ந்தான்" (சீவக. ௩௮௯) என்புழிப்போல. கையுதிர்க்கோடல்: மணி. ௩ : ௧௦௧, ௫ : ௫௫.

௮ - ௰. கேடுறுதலிற் கையுதிர்க்கோடலுமென்க.

௧௧. வாணிகர் - வியாபாரிகள்.

௧௨. தங்கா வேட்கை - பலவிடத்தும் செல்லவேண்டுமென்ற விருப்பம். தானென்றது சாதுவனை.

௧௩. வளி - காற்று. கலன் - கப்பல். காற்றாற் கப்பல் கவிழ.

௧௪. ஒடிமரம் - பாய்மரத்தின் ஒடிந்ததுண்டம்; "கூம்பிற்ற துண்டந் தழுவிக் கிடந்தான்" (சீவக. ௫௧௩.) உதைப்ப - செலுத்த; "ஓடுந் திரைக ளுதைப்ப வுருண்டுருண்டு" சீவக. ௫௧௪.

௧௫. மு. மணி. ௧௬ : ௩௯. நாகரென்பதன் பொருளை, மணி. ௮ : ௫௪ - ஆம் அடியின் குறிப்பிற் பார்க்க. உடையில்லாமற் சஞ்சரிப்பவராதலின் நாகர், 'நக்கசாரணர்' எனப்பட்டார்; நக்கம்=நக்நம் - நிருவாணம். சாரணராகிய நாகர்.

பக்கஞ் சார்ந்தவர் பான்மைய னாயின
னாவாய் கேடுற நன்மரம் பற்றிப்
போயினன் றன்னோ டுயிருய்ப் போந்தோ
ரிடையிருள் யாமத் தெறிதிரைப் பெருங்கட
லுடைகலப் பட்டாங் கொழிந்தோர் தம்முடன்
சாதுவன் றானுஞ் சாவுற் றனென
வாதிரை நல்லா ளாங்கது தான்கேட்
டூரீ ரேயோ வொள்ளழ லீமந்
தாரீ ரோவெனச் சாற்றினள் கழறிச்
சுடலைக் கானிற் றொடுகுழிப் படுத்து
முடலை விறகின் முளியெரி பொத்தி
மிக்கவென் கணவன் வினைப்பய னுய்ப்பப்
புக்குழிப் புகுவே னென்றவள் புகுதலும்

கசு. பான்மை - பகுதித்தன்மை; மணி. ரு: ருசு.

ரு - கசு. கணவன் சாதுவனென்போன், ஆகிப் போகி உண்டு வழங்கிச் செல்வுழி வெளவுதலாற் பற்றிச் சார்ந்து அவர்பான்மைய னாயின னென்க.

சாதுவன் கடலில் இறந்தானென்று கேட்ட ஆதிரையின்செய்தியை இனிக் கூறுவார்.

கஅ. போயினன் - சாதுவன். உய்ய - பிழைக்க.

ககூ. இடையிருள்யாமத்து - இருளையுடைய இடையாமத்தில்; யாமம் - இரவு; "யாம மும்பக லும்மறி யாமையால்" சீவக. கருரு.

உ0. மணி. கஅ: கூச; சிலப். கடு: உஅ - கூ. உடைகலப்பட்டு - உடைந்தகப்பலில் அகப்பட்டு. ஒழிந்தோர் - இறந்தோர்.

உக. என - என்றுசொல்ல.

கஅ - உக. போந்தோர் சாவுற்றனென.

உங. ஈமம் - பிணஞ்சுடுதற்கு அடுக்கும் விறகடுக்கு; மயானமு மாம். உச. தாரீர் - தருவீர்.

உரு. சுடலைக்கான் - மயானம். படுத்து - செய்து. தொடுகுழிப் படுத்தல்: மணி. சு: சுசு.

உசு. முடலைவிறகு - முறுக்குண்ட விறகு; "முடலை யாக்கை முழுவலி மாக்கள்" (பெரும்பாண். சுக.) பொத்தி - மூட்டி; "தீயழற் பொத்தி" (உ: ருங) என்றார் முன்னும்

உஎ. உய்ப்ப - செலுத்த.

உஅ. புக்குழி - புக்கவிடத்து. அவள் - ஆதிரை.

கஅ - உஅ. போந்தோர், ஒழிந்தோர் தம்முடன் சாதுவனும் சாவுற்றனென, நல்லாள் அதுகேட்டுக் கழறிப் படுத்துப் பொத்தி அதிற் புகுதலு மென்க.

படுத்துடன் வைத்த பாயற் பள்ளியு
முடித்த கூறையு மொள்ளெரி யுறாது
தாடிய சாந்தமு மசைந்த கூந்தலிற்
சூடிய மாலையுந் தொன்னிறம் வழாது
விரைமலர்த் தாமரை யொருதனி யிருந்த
திருவின் செய்யோள் போன்றினி திருப்பத்
தீயுங் கொல்லாத் தீவினை யாட்டியேன்
யாது செய்கே னென்றவ ளேங்கலு
மாதிரை கேளுன் னரும்பெறற் கணவனை
யூர்திரை கொண்டாங் குய்ப்பப் போகி
நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்
பக்கஞ் சேர்ந்தனன் பல்லியாண் டிராஅன்
சந்திர தத்த னெனுமோர் வாணிகன்
வங்கந் தன்னொடும் வந்தனன் றோன்று
நின்பெருந் துன்ப மொழிவாய் நீயென
வந்தரந் தோன்றி யசரீரி யறைதலு
மையரி யுண்க ணழுதுயர் நீங்கிப்
பொய்கைபுக் காடிப் போதுவாள் போன்று
மனங்கவல் வின்றி மனையகம் புகுந்தென்
கண்மணி யனையான் கடிதீங் குறுகெனப்
புண்ணிய முட்டாள் பொழிமழை தரூஉ

---

௨௯. பாயற்பள்ளி - படுக்கையிடம்.

௩0. உறாது - உறாமல். ௩க. ஆடிய - பூசிய.

௩௨. வழாது - வழுவாமல். ௩௩. தாமரை - தாமரைமலரில்.

௩௪. திருவின்செய்யோள் - திருமகள் ; மணி. ௫ : ௪.

௩௬. யாதுசெய்கேன் - என்னசெய்வேன். அவள் - ஆதிரை.

௩எ. அரும்பெறற்கணவன் - பெறுதற்கரியகணவன்.

௪௪. அந்தரம் - ஆகாயம். அசரீரி - அருவமாய் எங்கும் நிறைந்துள்ள முதற்றெய்வம். ௪௬. போதுவாள் - வருவாள்.

௪எ. கவல்வு - கவலையடைதல். மனையகம் - மனையிடம்.

௪அ. கண்மணியனையான் - கணவன் ; சிலப். க௩ : எ௫. உறுக என்று.

௪௯. முட்டாள் - வழுவாளாய் ; "புண்ணிய முட்டா" பட்டினப். ௨0௪.

(பி - ம்.) ௨௯. 'படுத்துடனமைத்தபாவனைப்பள்ளியும்' ௩அ. 'கொண்டாங்குயிருயப்போகி' ௪௪. 'அந்தரத்தொன்றி' ௪௫. 'அழிதுயர்நீங்கி', 'அழியாதுநீங்கி.'

மருப்பெறன் மரபிற் பத்தினிப் பெண்டிரும்
விரும்பினர் தொழூஉம் வியப்பின ளாயின
ளாங்கவள் கணவனு மலைநீ ரடைகரை
யோங்குயர் பிறங்க லொருமர நீழன்
மஞ்சுடை மால்கட லுழந்தநோய் கூர்ந்து
துஞ்சுதுயில் கொள்ளவச் சூர்மலை வாழு
நக்க சாரணர் நயமிலர் தோன்றிப்
பக்கஞ் சேர்ந்து பரிபுலம் பினனிவன்
றனே தமியன் வந்தன னளிய
னூனுடை யிவ்வுடம் புணவென் றெழுப்பலு
மற்றவர் பாடை மயக்கறு மரபிற்
கற்றன னாதலிற் கடுந்தொழின் மாக்கள்
சுற்று நீங்கித் தொழுதுரை யாடி
யாங்கவ ருரைப்போ ரருந்திறல் கேளா
யீங்கெங் குருமக னிருந்தோ னவன்பாற்
போந்தரு ளீயென வவருடன் போகித்

---

௫0. பெண்டிரும்; உம்மை: உயர்வு சிறப்பு.

௪௯ - ௫0. மணி. ௧௫ : ௭௭.

௫௧. வியப்பு - ஆச்சரியம். ஆதிரை வியப்பினளாயினள்.

மேலே சாதுவன் செய்திகூறுவார்.

௫௨. கணவனும் - சாதுவனும்.

௫௩. பிறங்கல் - மலை. நீழல் - நிழலில்.

௫௪. நோய் கூர்ந்து - வருத்தம்மிகுந்து.

௫௫. துஞ்சுதுயில்கொள்ள - (சாதுவன்) மிக்க நித்திரை கொள்ள. சூர் - அச்சம். ௫௬. நயமிலர் - இனிமையில்லாதவர்.

௫௭. பரிபுலம்பினன் - இவன் மிகவும் வருந்தினான்; “பக்க நீங்குமின் பரிபுலம் பினரென” (சிலப். ௧0 : ௨௬); “பரிபுலம் பலைத்தநும் வருத்தம் வீட” மலைபடு. ௪௯௭.

௫௯. எழுப்பலும் - சாதுவனை எழுப்பலும்.

௬0. அவர்பாடை - நாகர்களுக்குரிய பாஷையை.

௬௧. கடுந்தொழின்மாக்கள் - நாகர்.

௬௩. அருந்திறல் - பெறுதற்கரிய திறலையுடையாய்.

௬௪. இருந்தோன் : முற்று. ௬௫. என - என்று நாகர்சொல்ல.

(பி - ம்.) ௫௩. ‘ஓங்கியபிறங்கல்’ ௫௪. ‘மாக்கடலிழந்த’ ௬0. ‘பாடையின்மயக்கற’, ‘மயக்குறு.’ ௬௨. ‘தொழுதுரையாடலும்’

கள்ளடு குழிசியுங் கழிமுடை நாற்றமும்
வெள்ளென் புணங்கலும் விரவிய விருக்கையி
லெண்குதன் பிணவோ டிருந்தது போலப்
பெண்டுட னிருந்த பெற்றி நோக்கிப்
பாடையிற் பிணித்தவன் பான்மைய னாகிக்
கோடுயர் மரநிழல் குளிர்ந்த பின்னவ
னீங்குநீ வந்த காரண மென்னென
வாங்கவற் கலைகட லுற்றதை யுரைத்தலு
மருந்தக லின்றி யலைகட லுழந்தோன்
வருந்தின னளியன் வம்மின் மாக்கா
ணம்பிக் கிளையளோர் நங்கையைக் கொடுத்து
வெங்களு மூனும் வேண்டுவ கொடுமென
வவ்வுரை கேட்ட சாதுவ னயர்ந்து
வெவ்வுரை கேட்டேன் வேண்டே னென்றலும்
பெண்டிரு முண்டியு மின்றெனின் மாக்கட்

---

௬௬. குழிசி - பானை. கழிமுடைநாற்றமும் - மிக்க புலால்நாற்றமும்.

௬௭. உணங்கல் - வற்றல்.

௬௮. எண்கு - கரடி. பிணவு - பெண்கரடி; "பன்றி புல்வாய்" (தொல். மரபு. ௫௮) என்னும் சூத்திரத்தில், 'ஒன்றிய' என்றதனால், பிணவென்பது கரடிக்குங் கொள்ளப்பட்டது.

௬௯. பெண்டு - மனைவி.

௭0. பாடையிற்பிணித்து - பாஷையினாலே வயமாக்கி.

௭௧. கோடு - கிளை. நிழல் - நிழலில். அவன் - நாகர்களுடைய குருமகன்.

௭௨. வந்தகாரணமென்னென - வந்தது யாதுகருதியென்று கேட்ப. வந்தகாரணம் : சிலப். ௧0 : ௧௬௬.

௭௩. அவற்கு - குருமகனுக்கு.

௭௫. அளியன் - அளிக்கத்தக்கான்; "அளியன் றானே முதுவாயிரவலன்" புறநா. ௨௮௪.

௭௭. என - என்று குருமகன் சொல்ல

௭௫ - ௭. மாக்காள், நம்பிக்கு வேண்டுவகொடுமென.

௭௮. அயர்ந்து - கவலையுற்று.

௮0. உண்டி - உணவு. இன்றெனின் - இல்லையாயின்.

(பி - ம்.) ௭௧. 'குளிர்ந்தவன்பினன்' ௭௩. 'ஆங்கவனலைகட்' ௭௬. 'நங்கையைக்கொடுமின்' ௭௯. 'கெட்டேன்'

குண்டோ ஞாலத் துறுபய னுண்டெனிற்
காண்குவம் யாங்களுங் காட்டுவா யாகெனத்
தூண்டிய சினத்தினன் சொல்லெனச் சொல்லு
மயக்குங் கள்ளு மன்னுயிர் கோறலுங்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்
பிறந்தவர் சாதலு மிறந்தவர் பிறத்தலு
முறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையி
னல்லறஞ் செய்வோர் நல்லுல கடைதலு
மல்லறஞ் செய்வோ ரருநர கடைதலு
முண்டென வுணர்தலி னுரவோர் களைந்தனர்
கண்டனை யாகெனக் கடுநகை யெய்தி
யுடம்புவிட் டோடு முயிருருக் கொண்டோ
ரிடம்புகு மென்றே யெமக்கீங் குரைத்தா
யவ்வுயி ரெவ்வணம் போய்ப்புகு மவ்வகை
செவ்வன முரையெனச் சினவா திதுகே
ளுற்றதை யுணரு முடலுயிர் வாழ்வுழி

---

௮௧. உறுபயனுண்டோ. ௮௨. காண்குவம் - அறிவேம்.

௮௩. சினத்தினன் சொல்லென-கோபமுடையவனாய்ச் சொல்வாயென்று நாகருடைய குருமகன்கேட்ப. சொல்லும் - சாதுவன் சொல்லுவான்.

௮௫. கயக்கு - கலங்குதல்; "கயக்கறு நல்லறம்" (௧௧: ௯௮) என்றார் முன்னும்; பு. வெ. ௧௮௮, ௨௨௩.

௮௪ - ௫. கள்ளையும் கொலையையும் அறிவுடையோர் நீக்கினர்.

௮௬ - ௭. இவ்வடிகள், "உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி, விழிப்பது போலும் பிறப்பு" (௩௩௯) என்னும் குறளின் பொருளைத் தழுவி வந்திருத்தல் காண்க.

௮௯. அல்லறம் - பாவம்; அறமல்லாததென்றபடி.

௯௦. உரவோர் - அறிவுடையோர்.

௮௭ - ௯௦. உண்மையின், உணர்தலின் உரவோர் களைந்தனர்.

௯௧. கண்டனையாக - அறிந்தாயாகுக. என - என்று சாதுவன் சொல்ல. கடுநகை - பெருஞ்சிரிப்பு.

௯௫. செவ்வனம் - நேரே; "திருவிரி பூம்பொழிற் செவ்வனஞ் சேர்ந்து" (சீவக. ௫௧௫.) என - என்று குருமகன்சொல்ல.

௯௬. உயிர்வாழ்வுழி உடல் உற்றதையுணரும்.

(பி - ம்.) ௮௧. 'உண்டோமாக்கட்குறுபய' ௮௩ - ௪. 'சொல்லனு மயக்கும்'

மற்றைய வுடம்பே மன்னுயிர் நீங்கிடிற்
றடிந்தெரி யூட்டினுந் தானுண ராதெனி
னுடம்பிடைப் போனதொன் றுண்டென வுணர்நீ
போனார் தமக்கோர் புக்கிலுண் டென்ப
தியானோ வல்லே னியாவரு முணர்குவ
ருடம்பீண் டொழிய வுயிர்பல காவதங்
கடந்துசேட் சேறல் கனவினுங் காண்குவை
யாங்கனம் போகி யவ்வுயிர் செய்வினை
பூண்ட யாக்கையிற் புகுவது தெளிநீ
யென்றவ னுரைத்தலு மெரிவிழி நாகனு
நன்றறி செட்டி நல்லடி வீழ்ந்து
கள்ளு மூனுங் கைவிடி னிவ்வுடம்
புள்ளுறை வாழுயி ரோம்புத லாற்றேன்
றமக்கொழி மரபிற் சாவுறு காறு
மெமக்கா நல்லற மெடுத்துரை யென்றலு
நன்று சொன்னாய் நன்னெறிப் படர்குவை
யுன்றனக் கொல்லு நெறியற முரைக்கே
னுடைகல மாக்க ளுயிருய்ந் தீங்குறி
னடுதொழி லொழிந்தவ ராருயி ரோம்பி

கூஅ. தடிந்து - வெட்டி. கoo. புக்கில் - புகுமிடம்.

கoஉ. காவதம் - காதம். கoங. சேண் - நெடுந்தூரம்.

கoஉ - ங. உயிர்சேறல் கனவினுங் காண்குவை.

கoச - ரு. உயிர் புகுவது.

கoசு. அவன் - சாதுவன். கoஎ. நன்று - தருமம்.

ககo. தமக்கொழிமரபின் - தமக்கென்றே தீர்ந்த முறைமையினை யுடைய.

ககo - கக. மரபினையுடைய நல்லறமென்க.

கoசு - கக. நாகனும் எடுத்துரையென்றலும்.

ககஉ. படர்குவை - செல்வாய்.

ககங. ஒல்லும் நெறி-இயலும் வழி; இவ்வடி, "ஒல்லும் வகையா னறவினை யோவாதே, செல்லும்வா யெல்லாஞ் செயல்" (ஙங) என்ற குறளின் கருத்தைத் தழுவி வந்தவாறு காண்க.

ககரு. அடுதொழில் - கொல்லுந்தொழில்.

(பி - ம்.) கoஎ. 'நன்னெறிச்செட்டி தன்னடி' ககo - கக. 'என்றெனக் கொழிய் தேமுறு மேககரநன்றிநல்லற' ககஉ. - 'நன்றிது சொன்னாய்'

மூத்துவிளி மாவொழித் தெவ்வுயிர் மாட்டுந்
தீத்திற மொழிகெனச் சிறுமக னுரைப்போ
னீங்கெமக் காகு மிவ்வறஞ் செய்கே
மாங்குனக் காகு மரும்பொருள் கொள்கெனப்
பண்டும் பண்டுங் கலங்கவிழ் மாக்களை
யுண்டே மவர்த முறுபொரு ளீங்கிவை
விரைமர மென்றுகில் விழுநிதிக் குப்பையோ
டிவையிவை கொள்கென வெடுத்தனன் கொணர்ந்து
சந்திர தத்த னென்னும் வாணிகன்
வங்கஞ் சேர்ந்ததில் வந்துட னேறி
யிந்நகர் புகுந்தீங் கிவளொடு வாழ்ந்து
தன்மனை நன்பல தானமுஞ் செய்தன
ளாங்கன மாகிய வாதிரை கையாற்
பூங்கொடி நல்லாய் பிச்சை பெறுகென
மனையகம் புகுந்து மணிமே கலைதான்
புனையா வோவியம் போல நிற்றலுந்
தொழுதுவலங் கொண்டு துயரறு கிளவியோ
டமுத சுரபியி னகன்சுரை நிறைதரப்

கககூ. மூத்துவிளிமா - முதுமையுற்று இறக்கும் விலங்குகள்.

ககஎ. தீத்திறம் - கொலை. என - என்று சாதுவன் சொல்ல.

கஉஉ. விரைமரம் - சந்தனம் அகில் முதலியன.

கஉங. என - என்று நாகன் சொல்ல.

ககஎ - உங. உரைப்போன் இவையிவை கொள்கெனவென்க.

கஉரு. வங்கஞ்சேர்ந்ததில் - சேர்ந்த கப்பலில்.

கஉஅ. ஆங்கனமாகிய - அத்தன்மையை உடையளாகிய.

உ - கஉகூ. உரைப்போள், பிச்சை பெறுகெனவென்க.

கஙக. பிச்சைவாங்கும்பொழுது துறவறத்தினர் மௌனமாக நிற்க வேண்டுமென்பது விதியாதலின், ‘புனையா வோவியம் போல நிற்றலும்’ என்றார்; புனையா வோவியம் - வண்ணங்களைக் கொண்டெழுதாத வடிவைக்கோட்டின சித்திரம்; மணி. உஉ : அஅ; நெடுநல். கசஎ, ந.

கஙங. அகன்சுரை : மணி. கக : ககஎ.

(பி - ம்.) கஉ0. ‘பண்டுபெண்டீங்குக்கலங்’ கஉஅ. ‘ஆயிழை கையாற்’ கஙங. ‘சுரபியினகனசுனை’

பாரக மடங்கலும் பசிப்பிணி யறுகென
கஙரு வாதிரை யிட்டன ளாருயிர் மருந்தென்.

கரு.—ஆதிரைபிச்சையிட்டகாதை முற்றிற்று.

கஙரு. ஆருயிர்மருந்து - அன்னம்.

கஙங - ரு. நிறைதர இட்டனளென்க.

உ - கஙரு. உரைப்போள், 'ஆங்கனமாகிய ஆதிரைகையாற் பிச்சை பெறுக' என்று சொல்ல, மணிமேகலை மனையகம் புகுந்து நிற்றலும், ஆதிரை தொழுது வலங்கொண்டு ஆருயிர் மருந்திட்டனளென முடிக்க.

பதினேழாவது

உலகவறவிபுக்ககாதை.

[பதினேழாவது மணிமேகலை
காயசண்டிகையென்னும் விச்சாதரிவயிற்று யானைத்தீயவித்து
அம்பலம்புக்கபாட்டு.]

பத்தினிப் பெண்டிர் பாத்தூ ணேற்ற
பிச்சைப் பாத்திரப் பெருஞ்சோற் றமலை
யறத்தி னீட்டிய வொண்பொரு ளறவோன்
றிறத்து வழிப்படூஉஞ் செய்கை போல

க. பத்தினிப்பெண்டிர் - ஆதிரை. பாத்தூண் - (இயல்புடைய மூவர் முதலாயினோர்க்கும் தென்புலத்தார்முதலிய நால்வர்க்கும்) பகுத்துக்கொடுத்து உண்ணப்படும் உணவு; பாத்தல் - பகுத்தல். இதனால், ஆதிரையின் இல்வாழ்க்கைநலம் கூறப்பட்டது; "பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை, வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்" (குறள், சச.) பெண்டிரது பாத்தூணை.

உ. அமுதசுரபியிலுள்ள பெரிய சோற்றுத்திரளை; அமலை - சோற்றுத்திரளை; "அமலைக் கொழுஞ்சோறு" புறநா. ஙச.

க - உ. ஏற்ற பாத்திரம்.

ங. அறத்தின் ஈட்டிய - நல்வழியே சம்பாதித்த. ஒண்பொருள்: குறள், எசுO.

ங - ச. அறவோன் றிறத்து வழிப்படூஉம் செய்கைபோல-அறவோனிடத்துப் பெருகுதலுறுஞ் செய்கையைப்போல; அறவோன்-சற்பாத்திர

(பி - ம்.) க. 'பாத்தூணீய்த்த'

வாங்குகை வருந்த மன்னுயிர்க் களித்துத்
தான்றொலை வில்லாத் தகைமை நோக்கி
யானைத் தீநோ யகவயிற் றடக்கிய
காயசண் டிகையெனுங் காரிகை வணங்கி
நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
யடலரு முந்நீ ரடைத்த ஞான்று
குரங்குகொணர்ந் தெறிந்த நெடுமலை யெல்லா
மணங்குடை யளக்கர் வயிறு புக்காங்
கிட்ட தாற்றுக் கட்டழற் கடும்பசிப்
பட்டே னென்றன் பழவினைப் பயத்தா

ரம். தானப்பொருள், பாத்திரத்தின் பெருமைக்குத்தக்கபடி பெருகுதலுறு மென்பதை, "விருந்தின், றுணைத்துணை வேள்விப் பயன்" (குறள், அஎ), "அறப்பயனுந், தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால், வான்சிறிதாப் போர்த்து விடும்" (நாலடி. ௩அ) எனவருவனவற்றானுணர்க.

௬. தகைமையை (காயசண்டிகை) நோக்கி.

௨ - ௬. ஒண்பொருள் வழிப்படூஉஞ்செய்கைபோலப் பெருஞ்சோற்றமலைதான் றொலைவில்லாத்தகைமையை நோக்கியென்க.

௭. யானைத்தீநோய் - பஸ்மகவியாதி.

௮. காரிகை மணிமேகலையைவணங்கி.

௯. நெடியோன் - திருமால். மயங்கி - பருவதமுனிவரும் நாரதமுனிவரும் அம்பரீடனுக்கிட்டசாபமாகிய அந்தகாரத்தைத் தான் ஏற்றுக் கொண்டமையால் மயக்கமுற்று. தோன்றி - இராமனாக அவதரித்து. நெடியோன் நிலமிசைத் தோன்றிமயங்கியெனமாற்றுக. திருமால் இராமனாக அவதரித்தபொழுது, முற்கூறிய சாபாந்தகாரத்தால் மயக்கமுற்றிருந்தாரென்பதைப் பின்வருஞ் செய்யுளாலுணர்க: "கன்னியந்துழாய்க் கமலலோ சனன்றய ரதற்கு, மன்னு நன்மக னாகியே வந்தன னுதித்து, முன்னை யந்தகா ரத்தினான் மூடிடப் பட்டுத், தன்னை மாயனென் றறிந்திடா துறைந்தனன் சார்ந்தே" இலிங்க. உத்தர. அம்பரீடனை ஆழிகாத்த. அ௫.

௧0. முந்நீர் - ஆக்கல் முதலிய மூன்றுநீர்மையையுடைய கடல். அடைத்த ஞான்று - இலங்காநகரஞ்செல்ல அடைத்தநாளில்.

௧௨. அணங்கு - வருத்தம்; தெய்வத்தன்மையுமாம். அளக்கர் - கடல். புக்காங்கு - புகுந்தாற்போல.

௧௧ - ௨. மலையெல்லாம் அளக்கர் வயிறுபுக்காங்கென்க.

௧௩. இட்டது ஆற்றா - இட்டபொருளால் தணியாத.

௧௪. பட்டேன் - அடைந்தேன். வினைப்பயத்தாற் பட்டேனென்க.

(பி - ம்.) ௫ - ௬. 'அளிக்கத்தான' ௯. 'நெடுமான்மயங்கி'

லன்னை கேணீ யாருயிர் மருந்துவி
துன்னிய வென்னோய் துடைப்பா யென்றலு
மெடுத்த பாத்திரத் தேந்திய வமுதம்
பிடித்தவள் கையிற் பேணினள் பெய்தலும்
வயிறுகாய் பெரும்பசி நீங்கி மற்றவ
ளுயர நீங்கித் தொழுதன ளுரைக்கு
மாசில் வாலொளி வடதிசைச் சேடிக்
காசில்காஞ் சனபுரக் கடிநக ருள்ளேன்
விஞ்சையன் றன்னொடென் வெவ்வினை யுருப்பத்
தென்றிசைப் பொதியில் காணிய வந்தேன்
கடுவர லருவிக் கடும்புனல் கொழித்த
விடுமணற் கானியாற் றிணைந்தொருங் கிருந்தேன்

கரு. ஆருயிர் மருந்துவி - அரிய உயிரைப் பாதுகாக்கும் மருந்தை யுடையாய்; ஆருயிர்மருந்து - அன்னம்.

கசு. துன்னிய - நெருங்கிய. என்னோய் - எனது பஸ்மக வியாதியை. என்றலும் - என்று காயசண்டிகை சொல்லலும்.

சு - கசு. காரிகை, நோக்கி வணங்கி, 'என்னோய் துடைப்பாய்' என்றலு மென்க.

கஎ அமுதம் - அன்னத்தை.

கஅ. அவள்கையில் - காயசண்டிகையின்கையில். பிடித்துப்பெய்தலும்.

ககூ. அவள் - காயசண்டிகை. உ0. தொழுது உரைப்பாள்.

ககூ - உ0. அவள் நீங்கி நீங்கித் தொழுது உரைக்கும்.

உக. வாலொளி - வெள்ளிய ஒளி. சேடி - வித்தியாதரருலகு. சேடி வெள்ளிமலைக்கண் உள்ளதாதலின், அதற்கு வாலொளி கூறப்பட்டது; "வெள்ளி மால்வரை வியன்பெருஞ் சேடி" சிலப். சு: க.

உஉ. காசு - குற்றம். காஞ்சனபுரமாகிய காவலையுடைய நகரம்.

உங. விஞ்சையன் - கணவனாகிய வித்தியாதரன். உருப்ப தோற்ற; அழலவென்றுமாம்.

உச. பொதியில் - பொதியின்மலை. காணிய - காணுதற்கு.

உங - ச. விஞ்சையனொடு வந்தேன்.

உரு. கடுவரல் - விரைந்துவருதல். கொழித்த - தெள்ளிய.

உசு. கான்யாறு - காட்டாறு. ஒருங்கிருந்தேன் - கணவனுடனிருந்தேன்.

உச - சு. வந்தேன் கான்யாற்றிருந்தேனென்க.

(பி - ம்.) கசு. 'துன்னியவெந்நோய்' உஉ. 'காஞ்சனக்கடிநகர்' 'காஞ்சனபுறநகர்.' உச. 'காணியவருவேன்'

புரிநூன் மார்பிற் றிரிபுரி வார்சடை
மரவுரி யுடையன் விருச்சிக னென்போன்
பெருங்குலைப் பெண்ணைக் கருங்கனி யனையதோ
ரிருங்கனி நாவற் பழமொன் றேந்தித்
தேக்கிலை வைத்துச் சேணுறு பரப்பிற்
பூக்கமழ் பொய்கை யாடச் சென்றோன்
றீவினை யுருத்தலிற் செருக்கொடு சென்றேன்
காலா லந்தக் கருங்கனி சிதைத்தே
னுண்டல் வேட்கையின் வரூஉம் விருச்சிகன்
கண்டன னென்னைக் கருங்கனிச் சிதைவுடன்
சீர்திகழ் நாவலிற் றிப்பிய மான
தீரா றாண்டி லொருகனி தருவ
தக்கனி யுண்டோ ராறீ ராண்டு
மக்க ளியாக்கையின் வரும்பசி நீங்குவர்
பன்னீ ராண்டி லொருநா ளல்ல

உஎ. புரிநூல் - முறுக்கிய பூணுநூல். திரிபுரிவார்சடை - திரித்து முறுக்கிய நீண்டசடை.

உஅ. மரவுரியுடையன் - வற்கலையாகிய ஆடையையுடையன். உடையனாகிய விருச்சிகனென்போன்.

உகூ. பெண்ணை - பனை. கருங்கனி - கரியகனி; பெரியகனி யென்றுமாம்.

௩0. இருமை - பெருமை. நாவல் - சம்புமரம்.

௩க - உ. சேண்நாறுபூ; சேண் - நெடுந்தூரம். பரப்பினையுடைய பொய்கை. ஆட - நீராட.

உஅ - ௩உ. விருச்சிகனென்போன், நாவற்பழமொன்றையேந்தி வைத்துப் பொய்கையாடச் சென்றோனாகவென்க.

௩௩. உருத்தலின் - பயன்கொடுப்பத்தோற்றுதலினால். செருக்கு- களிப்பு.

௩௩ - ௪. உருத்தலிற் சென்று காலால் அந்தக்கனியைச் சிதைத்தேன்.

௩௫. வேட்கை - விருப்பம்.

௩௬. கருங்கனிச்சிதைவுடன் என்னைக் கண்டனன்.

மேல்வருவன விருச்சிகன்கூற்று.

௩எ. திப்பியம் - தெய்வலோகத்திலிருந்து உண்டாயது; இச் சொல் திவ்யமென்னும் வடமொழிச்சிதைவு; திவ் - தெய்வலோகம்; மணி. எ: கஎ.

௩அ. ஆண்டு - வருடம். ௩கூ - ௪0. உண்டோர் பசியை நீங்குவர்.

(பி - ம்.) ௩க. 'வைத்துச்சென்றுற்றுப்பரப்பிற்' ௩எ - அ. 'திப் பியமாகிய வீராறு'

துண்ணா நோன்பினே னுண்கனி சிதைத்தா
யந்தரஞ் செல்லு மந்திர மிழந்து
தந்தித் தீயாற் றனித்துய ருழந்து
௪௫ முந்நா லாண்டின் முதிர்கனி நானீங்
குண்ணு நாளுன் னுறுபசி களைகென
வந்நா ளாங்கவ னிட்ட சாப
மிந்நாள் போலு மிளங்கொடி கெடுத்தனை
வாடுபசி யுழந்து மாமுனி போயபின்
௫௦ பாடிமி ழருவிப் பயமலை யொழிந்தே
னலவலைச் செய்திக் கஞ்சின னகன்ற
விலகொளி விஞ்சையன் விழுமமோ டெய்தி
யாரணங் காகிய வருந்தவன் றன்னாற்
காரண மின்றியுங் கடுநோ யுழந்தனை
௫௫ வானூ டெழுகென மந்திர மறந்தே

---

௪௨. நோன்பு - விரதம். சிதைத்தாய் - அழித்தாய்.

௪௩. மந்திரத்தை இழந்து.

௪௪. தந்தித்தீ - பஸ்மகவியாதியென்று வழங்குகிற யானைத்தீ யென்னும் நோய்; சீவக. ௩௯௬. தனித்துயர் - ஒப்பற்றதுன்பம்.

௪௫. முந்நாலாண்டு - பன்னிரண்டு வருடம்.

௪௬. உறுபசி - மிக்க பசியை. களைகென - நீங்குகவென்று.

௪௭. அவன் - விருச்சிகன். சாபம் - சாபத்தை; சாபத்தின் முடிவெல்லையாகிய நாளென்றுமாம்; ஆகுபெயர்.

௪௭ - ௮. இளங்கொடி, சாபத்தைக் கெடுத்தனை.

௪௯. உழந்து - வருந்தி. முனி - விருச்சிகன்.

௫௦. ஒலி முழங்குகின்ற அருவியாலுண்டாகிய பிரயோசனத்தையுடைய பொதியின்மலையை. பாடிமிழ்: புறநா. ௪௯.

௫௧. அலவலைச்செய்திக்கு - மனத்திற்றோற்றியதை ஆராயாது செய்த என் செய்கைக்கு; "அலவலைவந் தப்பூச்சி காட்டுகின்றான்" (௨. ௧ : ௨), "பலபல நாழஞ் சொல்லிப் பழித்த சிசுபாலன் றன்னை, யலவலைமைதவிர்த்த வழகன்" (௪. ௩ : ௫) எனப் பெரியாழ்வார்திருமொழியில் வருதல்காண்க. இஃது அலவலைமையென்றும் வழங்கும்.

௫௨. விழுமம் - துன்பம்.

௫௩. ஆரணங்கு - அரியதெய்வத்தன்மை.

௫௩ - ௪. அருந்தவன்றன்னாற் கடுநோயுழந்தனை.

௫௫. வானூடு எழுக என - வானிடத்து எழுவாயென்று வித்தியாதரன் சொல்ல.

(பி - ம்.) ௪௬. 'உறுதுயர்' ௪௯. 'உழந்தமாமுனி' ௫௦ - ௫௨. 'ஒழித்தே, னலவலக்கவலை செய்வினையஞ்சி, யிலகொளி'

ஊனுயிர் நீங்கு முருப்பொடு தோன்றி
வயிறுகாய் பெரும்பசி வருத்துமென் றேற்குத்
தீங்கனி கிழங்கு செழுங்காய் நல்லன
வாங்கவன் கொணரவு மாற்றே னாக
நீங்க லாற்றா னெடுந்துய ரெய்தி
யாங்கவ னுங்கெனக் கருளொடு முரைப்போன்
சம்புத் தீவினுட் டமிழக மருங்கிற்
கம்ப மில்லாக் கழிபெருஞ் செல்வ
ராற்றா மாக்கட் காற்றுந் துணை யாகி
நோற்றோ ருறைவதோர் நோனக ருண்டாற்
பலநா ளாயினு நிலனொடு போகி
யப்பதிப் புகுகென் றவனருள் செய்ய
விப்பதிப் புகுந்தீங் கியானுறை கின்றே
னிந்திர கோடணை விழவணி வருநாள்

---

௫௬. உடம்பினின்றும் உயிர்நீங்குதற்குக் காரணமாகிய வெப்பத்தோடு.

௫௭. வயிறுகாய் பெரும்பசி: மணி. ௧௪: ௬. வருத்துமென்றேற்கு - வருத்துமென்ற என்பொருட்டு.

௫௮. தீங்கனி - இனியபழம். நல்லனவென்பதை ஒவ்வொன்றோடுங் கூட்டுக.

௫௯. ஆற்றேனாக - பசிதணியேனாக.

௬௧. அவன் - வித்தியாதரன்.

௬௨. தமிழகமருங்கில் - தமிழ்நாட்டில்; "இமிழ்கடல் வரைப்பிற் றமிழக மறிய" சிலப். ௩: ௩௭.

௬௩. கம்பம் - நடுக்கம். கழிபெருஞ்செல்வர் - மிகப்பெரிய செல்வத்தையுடையார்.

௬௪. பூ. மணி. ௧௧: ௩௫. ஆற்றாமாக்கள் - வறிஞர்.

௬௫. நோற்றோர் - முற்பிறப்பில் தவஞ்செய்தோர். நோன் நகர் - வலிமையையுடையநகர்; நோன்மை-வலி; "சாப நோன்ஞாண்" (புறநா. ௧௪.) நகர் - காவிரிப்பூம்பட்டினம்.

௬௩ - ௫. செல்வர் நோற்றார், ஆகி உறைவதோர் நகரென்க.

௬௬. பலநாள் ஆயினும் - ஆகாயவழியே செல்லக்கூடாமையாற் பலநாள் ஆகுமாயினும். நிலனொடுபோகி - பூமியில் நடந்துசென்று.

௬௭. அவன் - வித்தியாதரன்.

(பி - ம்.) ௫௭. 'என்றேற்கவன்' ௬௪. 'அருந்துணையாகிய' ௬௬. 'நிலனாடுபோகி'

வந்து தோன்றியிம் மாநகர் மருங்கே
யென்னுறு பெரும்பசி கண்டன னிரங்கிப்
பின்வரும் யாண்டவ னெண்ணினன் கழியுந்
தணிவில் வெம்பசி தவிர்த்தனை வணங்கினேன்
மணிமே கலையென் வான்பதிப் படர்கேன்
றுக்கந் துடைக்குந் துகளறு மாதவர்
சக்கர வாளக் கோட்டமுண் டாங்கதிற்
பலர்புகத் திறந்த பகுவாய் வாயி
லுலக வறவி யொன்றுண் டதனிடை
யூரு ராங்க ணுறுபசி யுழந்தோ
ராரு மின்மையி னரும்பிணி யுற்றோ
ரிடுவோர்த் தேர்ந்தாங் கிருப்போர் பலரால்
வடுவாழ் கூந்த லதன்பாற் போகென்
றுங்கவள் போகிய பின்ன ராயிழை
யோங்கிய வீதியி னொருபுடை யொதுங்கி
வலமுறை மும்முறை வந்தனை செய்தவ்
வுலக வறவியி னொருதனி யேறிப்
பதியோர் தம்மொடு பலர்தொழு தேத்து
முதியோள் கோட்ட மும்மையின் வணங்கிக்

---

௭௦. இம்மாநகர் மருங்கே வந்துதோன்றியென்க.

௭௨. கழியும் - நீங்குவான்.

௭௪. மணிமேகலை: விளி. வான்பதிப்படர்கேன் - சிறந்த ஊராகிய காஞ்சனபுரத்திற்குச் செல்வேன்.

௭௫. துக்கம் - பிறப்புமுதலியன; நால்வகைச் சத்தியங்களுள் துக்கம் முதலாவது.

௭௭ - ௮. பு. மணி. ௭ : ௩௨-௩. அதனிடை-அவ்வுலகவறவியில்.

௭௬ - ௮. ஆங்கதில் ஒன்றுண்டு.

௮௦. ஆருமின்மையின் - பாதுகாப்போர் ஒருவரும் இல்லாமையினாலே.

௭௮ - ௮௧. அதனிடை இருப்போர் பலர்.

௮௨. வடு - வகிர்; 'வடுவாழ் கூந்தல்' என்றது மணிமேகலையை.

௮௩. ஆயிழை - மணிமேகலை.

௮௫. வலமுறையாக மூன்றுமுறை வந்து பணிந்து; 'வந்து' என்று ஒரு சொல் வருவிக்க.

௮௮. முதியோள்கோட்டம் - சம்பாபதிகோயில். மும்மையின் வணங்கி - மனம் வாக்குக் காயங்களால் வணங்கி; மூன்றுமுறைவணங்கியென்றுமாம்.

(பி - ம்.) ௮௪. 'ஒருபடைபோகி' ௮௮. 'முறைமையின் வணங்கி'

கந்துடை நெடுநிலைக் காரணங் காட்டிய
தந்துணைப் பாவையைத் தான்றொழு தேத்தி
வெயில்சுட வெம்பிய வேய்கரி கானத்துக்
கருவி மாமழை தோன்றிய தென்னப்
பசிதின வருந்திய பைதன் மாக்கட்
கமுத சுரபியோ டாயிழை தோன்றி
யாபுத் திரன்கை யமுத சுரபியிஃ
தியாவரும் வருக வேற்போர் தாமென
வூண்ணொலி யரவத் தொலியெழுந் தன்றே
யாணர்ப் பேரு ரம்பல மருங்கென்.

கஎ.—உலகவறவிபுக்ககாதை முற்றிற்று.

கூ0. மணிமேகலையொடு மற்றையோரையும் உளப்படுத்தி, ' தந்துணைப்பாவை ' என்றார். பாவையை - கந்திற்பாவையை.

கூக. வேய்கரிகானம் - மூங்கில்கரிந்தகாடு.

கூ௩. பைதல் - துன்பம்.

கூ௬. ஏற்போராகிய யாவரும் வருகவென்று மணிமேகலைசொல்ல.

கூஎ. எழுந்தன்று - எழுந்தது. கூஅ. யாணர் - புதுவருவாய்.

கூஎ - அ. அம்பலமருங்கு ஒலியெழுந்தன்றென்க.

க - கூஅ. காயசண்டிகையென்னுங்காரிகை, நோக்கி வணங்கி, ' என்னோய் துடைப்பாய் ' என்றலும், மணிமேகலை பெய்தலும், அவள் பசிநீங்கித் தொழுது உரைக்கும்; அங்ஙனம் உரைப்பவள், ' அதன்பாற் போக ' என்று கூறிப் போகியபின்னர், ஆயிழை ஒதுங்கி வந்து வந்தனை செய்து ஏறி வணங்கித் தொழுது ஏத்தித் தோன்றி, ' ஏற்போர்யாவரும் வருக ' என, அம்பலமருங்கு ஒலியெழுந்தன்றென வினைமுடிவுசெய்க.

(பி - ம்.) கூ0. ' தன்றுணைப்பாவை ' கூ௬. ' இரப்போர்தாமென '

பதினெட்டாவது

உதயகுமரன் அம்பலம்புக்ககாதை.

[பதினெட்டாவது மணிமேகலை அம்பலமடைந்தமை சித்திராபதி உதயகுமரனுக்குச்சொல்ல அவன் அம்பலம்புக்கபாட்டு.]

ஆங்கது கேட்டாங் கரும்புண் ணகவயிற்
றீத்துறு செங்கோல் சென்றுசுட் டாங்குக்
கொதித்த வுள்ளமொடு குரம்புகொண் டேறி
விதுப்புறு நெஞ்சினள் வெய்துயிர்த்துக் கலங்கித்
தீர்ப்பலிவ் வறமெனச் சித்திரா பதிதான்
கூத்தியன் மடந்தையர்க் கெல்லாங் கூறுங்
கோவல னிறந்தபின் கொடுந்துய ரெய்தி
மாதவி மாதவர் பள்ளியு ளடைந்தது

க. ஆங்கதுகேட்டு - மணிமேகலை பிக்குணிக்கோலம் பூண்டு பிச்சையேற்று யாவருக்கும் உணவு கொடுத்தலைக்கேட்டு. ஆங்கு - அப்பொழுதே.

உ. தீத்துறுசெங்கோல் - தீயின்கண் பழுக்கக் காய்தலுற்ற செந்நிறத்தையுடைய நாராசம். சுட்டாங்கு - சுட்டாற்போல்.

ங. குரம்பு கொண்டு ஏறி - வரம்பை த்தாண்டியெழுந்து ; என்றது வரம்பு கடந்தென்றபடி ; "குரம்பெழுந்து குற்றங்கொண்டேறார்" நாலடி. கருங.

ச. விதுப்புறு - நடுக்கமுற்ற ; விரைதலுற்றவென்றுமாம்.

ரு. தீர்ப்பல் இவ்வறமென - மணிமேகலைகொண்ட இவ்வறத்தைத் தீர்த்து விடுவேனென்று எண்ணி. சித்திராபதி - மாதவியின்தாய்.

சு. எல்லா நாடகக்கணிகைகளுக்கும் சொல்லுவாள்.

க - சு. அதுகேட்டு எறி நெஞ்சினளாய் வெய்துயிர்த்துக் கலங்கி இவ்வறத்தைத் தீர்ப்பலென்று எண்ணிக் கூத்தியன் மடந்தையர் எல்லாருக்கும் சித்திராபதி கூறுவாள்.

மேல்வருவன சித்திராபதி கூற்று.

அ. மாதவர் பள்ளியுள் - சங்கத்தாரான அறவணவடிகளுடைய உறைவிடத்து ; பள்ளி - முனிவருறைவிடம் ; சிலப். ரு : கஎகூ.

எ - அ. கோவலன் இறந்தமைகேட்டு மாதவி அறவணவடிகளிடம் புகுந்து துறவுபூண்டமையை, "ஈங்கிம் மாதவ ருறைவிடம் புகுந்தேன், மற

(பி - ம்.) க. 'புண்ணுக்கையிற்' ங. 'குரங்கொண்டெழுந்து', 'குரம்பு கொண்டெழுந்து.' எ. 'நிறைந்தபின்'

நகுதக் கன்றே நன்னெடும் பேரூ
ரிதுதக் கென்போர்க் கெள்ளுரை யாயது
காதலன் வீயக் கடுந்துய ரெய்திப்
போதல் செய்யா வுயிரொடு புலந்து
நளியிரும் பொய்கை யாடுநர் போல
முளியெரிப் புகூஉ முதுகுடிப் பிறந்த
பத்தினிப் பெண்டி ரல்லேம் பலர்தங்
கைத்தூண் வாழ்க்கை கடவிய மன்றே
பாண்மகன் பட்டுழிப் படூஉம் பான்மையில்
யாழினம் போலு மியல்பின மன்றியு

வண நீத்த மாசறு கேள்வி, யறவண வடிக ளடிமிசை வீழ்ந்து........உர வோ னருளினன்" (உ : ருகூ - சுகூ) என வயந்தமாலைக்கு மாதவி கூறிய தாக இந்நூலிலும், "மற்றது கேட்டு மாதவி மடந்தை,........கோதைத் தாமங் குழலொடு களைந்து, போதித் தானம் புரிந்தறங் கொள்ளவும்" (உஎ : க0ரு-அ), "போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதா னம்புரிந்த, மாதவி தன்றுறவுங் கேட்டாயோ தோழீ" (உகூ : 'காதலன்றன்') எனச் சிலப்பதிகாரத்தும் வருவனவற்றாலுணர்க.

கூ. நகுதக்கன்று - சிரிக்கத்தக்கது. பேரூர் - பேரூரில்.

அ - கூ. அடைந்தது நகுதக்கன்று.

க0. இது தக்கு என்போர்க்கு - இச்செய்கை தகுதியுள்ளதென்று சொல்லும் அறிஞர்க்கு; தக்கது: விகாரம். எள்ளுரை - இகழ்ச்சியுரை.

கஉ. போதல்செய்யா - நீங்காத. புலந்து - வெறுத்து.

கக - உ. மணி. உ : ருஅ - கூ.

கங. நளி இரும்பொய்கை - குளிர்ந்த பெரிய குளம். ஆடுநர் - ஆடுவோர்.

கங - ச. மணி. உ : சரு.

கக - ரு. காதலன்வீயத் துயரெய்திப் புலந்து எரிபுகும் பத்தினிப் பெண்டிரல்லேம் யாம்.

கரு - சு. பலருடைய கையதாகிய உணவை உண்டுவாழ்தலில் உரிமையையுடையேம்.

கஎ. பாண்மகன் - பாணன். பட்டுழி - இறந்தவிடத்து.

கஅ. இயல்பினம் - இயல்பையுடையேம்.

கஎ - அ. பாண்மகனையும் யாழையும் உவமை கூறினாள், நாடகக் கணிகையாதலின்.

(பி - ம்.) க0. 'தக்கென்றவர்க்கெள்ளுரை' கஉ. 'போதல்செல்லா வுயிரொடுபுலர்ந்து' கஎ. 'பான்மையின்'

நறுந்தா துண்டு நயனில் காலை
வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்
வினையொழி காலைத் திருவின் செல்வி
யனையே மாகி யாடவர்த் துறப்பேந்
தாபதக் கோலந் தாங்கின மென்ப
தியாவரு நகூஉ மியல்பின தன்றே
மாதவி யீன்ற மணிமே கலைவல்லி
போதவிழ் செவ்வி பொருந்துதல் விரும்பிய
வுதைய குமரனு முலகாள் வண்டின்
சிதையா வுள்ளஞ் செவ்விதி னருந்தக்
கைக்கொண் டாங்கவ ளேந்திய கடிஞையைப்
பிச்சை மாக்கள் பிறர்கைக் காட்டி
மற்றவன் றன்னுன் மணிமே கலைதனைப்
பொற்றேர்க் கொண்டு போதே னாகிற்

கக. நயன் - பசை; என்றது செல்வத்தை.

உ0. வறும்பூ - தேனில்லாதபூ. பரத்தையர்க்கு வண்டு உவமையாதல்: "வண்டிற் றுறக்குங் கொண்டி மகளிரை" (மணி. கஅ: க0௧); மதுரை. ருஎஉ - ச. உக. வினை - நல்வினை.

உக - உ. "தவந்தீர் மருங்கிற் றிருமகள் போலப், பயந்தீர் மருங்கிற் பற்றுவிட் டொரீஇ, யிட்டதை யுண்ணு நீலம் போல, வொட்டிடத் தொட்டு முறுதி வாழ்க்கையுட், பத்திமை கொள்ளார்" (பெருங். க. ௩௫: க௩எ-சக); "புண்ணிய முலந்தபின் பொருளி லார்களைக், கண்ணிலர் துறந்திடும்.........வண்ணமே". சூளா. முத்தி. க௫.

உ௩. தாபதக்கோலம் - விதவைக் கோலம்; பிக்குணிக் கோலமுமாம்.

உச. நகூஉம் இயல்பினது - பழிக்கும் இயல்பையுடையது.

உரு. செவ்வி - சமயம்.

உஎ. உதயகுமரனை இங்கே வண்டாகக் கூறியதுபோல, "உதய குமரனெனு மொருவண் டணீஇய, விரைவொடு வந்தேன்" (ரு0 - ருக) என்று சித்திராபதி கூறியதாக இக்காதையிலேயே பின்னும் கூறுவர்; "பெண்டிர் நலம்வெளவித் தண்சாரற் றாதுண்ணும், வண்டிற் றுறப்பான் மலை" (கலி. ச0) என்று தலைமகனை வண்டாகக் கூறியிருத்தல் காண்க.

உஅ. சிதையாவுள்ளம் - வேறொன்றால் அழியாதவுள்ளம்.

உகூ. கடிஞை - பிச்சைப்பாத்திரம். ௩க. அவன் - உதயகுமரன்.

௩உ. போதேனாகின் - வாரேனாயின்.

(பி - ம்.) உக. 'விலையொழிகாலை' உரு. 'செவ்வினபொருந்தல்'

சுடும ணேற்றி யரங்குசூழ் போகி
வடுவொடு வாழு மடந்தையர் தம்மோ
ரனையே னாகி யரங்கக் கூத்தியர்
மனையகம் புகாஅ மரபின னென்றே
வஞ்சினஞ் சாற்றி நெஞ்சுபுகை யுயிர்த்து
வஞ்சக் கிளவி மாண்பொடு தேர்ந்து
செறிவளை நல்லார் சிலர்புறஞ் சூழக்
குறுவியர் பொடித்த கோலவாண் முகத்தள்
கடுந்தேர் வீதி காலிற் போகி
யிளங்கோ வேந்த னிருப்பிடங் குறுகி
யரவ வண்டொடு தேனின மார்க்குந்
தருமணன் ஞெமிரிய திருநா றொருசிறைப்

---

௩௩. சுடுமண் - செங்கல். ௩௪. வடு - குற்றம்.

௩௪ - ௫. மடந்தையர் தம்மோரனையேனாகி - மடந்தையரை ஒப்பேனாகி ; ஓர்: இடைச்சொல்.

௩௩ - ௫. பதியிலாரிற் குடிக்குற்றப்பட்டாரை எழு செங்கற்சுமத்தி அரங்குசூழ்வித்துப் புறத்துவிடுதல் மரபாதலின் சித்திராபதி இங்ஙனம் சபதஞ்செய்வாளாயினள் ; இதனை, " சுடும ணேறா வடுநீங்கு சிறப்பின் " (சிலப். ௧௪ : ௧௪௬) என்பதனாலும், அதன் விசேடவுரைகளாலும் உணர்க.

௩௭. வஞ்சினம் - சபதம். நெஞ்சுபுகை யுயிர்த்து - மனங்கொதித்து ; " செங்கண் சிவந்து நெஞ்சுபுகை யுயிர்த்து " (௮ : ௫௮) என்றார் முன்னும்.

௫ - ௩௭. சித்திராபதி கூறும் : 'மாதவி பள்ளியுளடைந்தது நகுதக்கன்று ; அஃது எள்ளுரையாயது ; யாம் பத்தினிப் பெண்டிரல்லேம் ; வாழ்க்கை கடவியமன்றே; இயல்பினம் ; அன்றியும் வண்டுபோல்குவம் ; துறப்பேம் ; தாங்கினமென்பது நகுமியல்பினது ; ஆதலால், மணிமேகலையைப் பொற்றேர்க்கொண்டு போதுவேன் ; அங்ஙனம் போதேனாயின் மரபினன் ' என்று வஞ்சினஞ் சாற்றியென்க.

௩௮. கிளவியைத் தேர்ந்து.

௪0. வியர் - வேர்வை. பொடித்த - தோன்றிய.

௪௨. இளங்கோ வேந்தன் - உதயகுமரன்.

௪௩. வண்டும் தேனும் நல்லமணத்தே செல்வனவாதலின், இங்கே சேர்த்துக் கூறப்பட்டன ; இதனை, " மங்கைநல்லவர் " (சீவக. ௮௬௨) என்னும் செய்யுளுரையாலுணர்க.

௪௪. தருமணல் ஞெமிரிய - கொண்டுவந்திட்ட மணல்பரந்த ; " தரு

(பி - ம்.) ௩௪. 'மடந்தையர் தம்மொடு' ௩௫. 'ஆடற்கூத்தியர்' ௩௬. 'மரபினளன்றென' ௪௪. 'திருமணன்ஞெமரிய'

பவழத் தூணத்துப் பசும்பொற் செஞ்சுவர்த்
திகழொளி நித்திலச் சித்திர விதானத்து
விளங்கொளி பரந்த பளிங்குசெய் மண்டபத்துத்
துளங்குமா னூர்தித் தூமலர்ப் பள்ளி
வெண்டிரை விரிந்த வெண்ணிறச் சாமரை
கொண்டிரு மருங்குங் கோதையர் வீச
விருந்தோ னிருந்தடி பொருந்திமின் றேத்தித்
திருந்தெயி றிலங்கச் செவ்வியி னக்கவன்
மாதவி மணிமே கலையுட னெய்திய
தாபதக் கோலந் தவறின் றோவென
வரிநுபெறு சிறப்பிற் குருகுகரு வுயிர்ப்ப

மணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து" (நெடுநல். ௬௦; பெருங். ௧. ௪௭ : ௧௯௭.) ஒருசிறை - ஒருபக்கம்.

௪௫. பவழத்தூணம் - பவளத்தாலாகிய தூண்; சிலப். ௫: ௧௪௮.

௪௬. நித்திலம் - முத்து; என்றது, முத்தாலாகிய சல்லியையும் தூக்கினையும். சித்திர விதானம் - சித்திரங்களையுடைய மேற்கட்டி; (மணி. ௧௯ : ௧௧௨ - ௩); "ஒவிய விதானத் துரைபெறு நித்திலத்து, மாலைத் தாமம் வளையுட னாற்றி" சிலப். ௩ : ௧௧௧ - ௨.

௪௫ - ௭. தூணத்தினையும் சுவரினையும் விதானத்தினையுமுடைய மண்டபமென்க.

௪௮. துளங்கும் மான் ஊர்தி - ஒளி அசைதலையுடைய சிங்காதனம். ஊர்தி - ஏறுதற்கிடமாகவுள்ள ஆசனமென்னும்பொருளது. பள்ளி - இடம்.

௪௯. தெண்டிரை விரிந்த - வெள்ளிய அலைகள் போலே விரிந்த.

௫௧. இருந்தோன் - உதயகுமரன். ஏத்தி - ஏத்த.

௪௭ - ௫௧. மண்டபத்துப் பள்ளியில் இருந்தோனென்க.

௫௨. நக்கு - சிரித்து. அவன் - உதயகுமரன்.

௫௪. தாபதக்கோலம் - தவவேடம்; என்றது பிக்குணிக் கோலத்தை. தாபதர் - தவமுடையவர். என - என்று உதயகுமரன் கேட்ப.

௫௨ - ௪. அவன் நக்குத் தாபதக்கோலம் தவறின்றோவென.

மேல்வருவன சித்திராபதிகூற்று; உதயகுமரன் இருந்தவிடம் அவைக்களமாதலின் மணிமேகலைசெய்தியைச் சிலேடையாற் கூறுவாள்.

௫௬. குருகு கருவுயிர்ப்ப - குருக்கத்திபெற, மாதவிபெற; குருகு - குருக்கத்தி; குருக்கத்தி மாதவியென வழங்கப்பெறும். பின்னர்க் காஞ்சி கூறப்படுதலின் பறவைகள் ஈனவெனவும் ஒருபொருள் கொள்ளலாம்.

வொருதனி யோங்கிய திருமணிக் காஞ்சி
பாடல்சால் சிறப்பிற் பரதத் தோங்கிய
நாடகம் விரும்ப நன்னலங் கவினிக்
காமர் செவ்விக் கடிமல ரவிழ்ந்த
துதைய குமரனெனு மொருவண் டுணீஇய
விரைவொடு வந்தேன் வியன்பெரு மூதூர்ப்
பாழ்ம்ம் பறந்தலை யம்பலத் தாயது
வாழ்கநின் கண்ணி வாய்வாள் வேந்தெனை
வோங்கிய பௌவத் துடைகலப் பட்டோன்

கசு. திருமணிக்காஞ்சியென்பதற்கு அழகிய கரியகாஞ்சிமரமென்றும், அழகிய மணிமேகலையென்றும் பொருள்கொள்க. மேகலைக்குக் காஞ்சியென்று பெயருளதாதல், "எதிருன் றுதலு நிலையின் மையுமா, மணிமே கலையு மொருமரப் பெயருங், கருதுங் காஞ்சி யென்றுங் கட்டுரை" என்னும் திவாகரச்சூத்திரத்தாலும், "ஒருமரப் பெயரு மோரிசைப் பெயருங், கச்சிப் பதியுமே கலையுங் காஞ்சி" என்னும் பிங்கலச்சூத்திரத்தாலும் துணியப்படும்.

கஎ. பரதமென்பதற்குப் பரதகண்டமென்றும் நாடகநூலென்றும் பொருள்கொள்க. மு. பதிகம், உஉ.

கஅ. நாடகம் - நாடகளின் இடமும், ஆடலும். நாடகம் இவளாற் சிறப்பெய்துமாகலின், "நாடகம் விரும்ப" என்றார்; "நாடக மேத்து நாடகக் கணிகை" (சிலப். பதி. கரு) என்றுவருதல் காண்க.

உ0. 'உதயகுமரனெனு மொருவண்டு' என்றது முன்னிலைப் புறம்; அஃதாவது முன்னே நிற்கின்றவரை நோக்கிப் பிறரைக் கூறுமாறு போலக் கூறுதல். உணீஇய - உண்ணும் பொருட்டு; உண்ணுதல் - மிசைதலும் அனுபவித்தலும்.

உஉ. பாழ்ம் பறந்தலை அம்பலத்து - பாழிடமாகிய புறங்காட்டைச் சார்ந்த உலகவறவியினிடத்து; பறந்தலை - புறங்காடு; "கள்ளியம் பறந்தலை யொருசிறை யல்கி" புறநா. உச0.

கரு - உஉ. குருகுகருவுயிர்ப்ப ஓங்கிய காஞ்சி, நலங்கவினிக் கடிமலரவிழ்ந்தது; அதனை உதயகுமரனாகிய வண்டு உண்ணும்பொருட்டு வந்தேன்; அக்காஞ்சி அம்பலத்தாயதென்க.

உங. கண்ணி - தலைமாலை; "கண்ணி கார்நறுங் கொன்றை" (புறநா. க.) நின்கண்ணி வாழ்கவென்றல் மரபு; (புறநா. ககஅ); "தாமரை யுறையுஞ் செய்யாள், வழுவினூர் தம்மைப் புல்லாள் வாழ்க நுங் கண்ணி மாதோ" (சீவக. கஅக0.) என - என்று சித்திராபதி சொல்ல.

உச. பௌவம் - கடல். உடைகலப் பட்டோன் - கப்பல் உடையப்பட்டோன்; "உடைகலப் பட்டாங் கொழிந்தோர் தம்முடன்" (கசு : உ0) என்றார் முன்னும்; "உடைகலப் பட்ட வெங்கோன்" சிலப். கரு : உக.

(பி - ம்.) கஅ. 'நன்னயம்' உஉ. 'பாஅழ்ம்'

வான்புணை பெற்றென மற்றவட் குரைப்போன்
மேவிய பளிங்கின் விருந்திற் பாவையிஃ
தோவியச் செய்தியென் றொழிவேன் முன்னர்க்
காந்தளஞ் செங்கை தளைபிணி விடாஅ
வேந்திள வனமுலை யிறைநெரித் ததூஉ
மொத்தொளிர் பவளத் துள்ளொளி சிறந்த
முத்துக்கூர்த் தன்ன முள்ளெயிற் றமுத
மருந்தே மாந்த வாருயிர் தளிர்ப்ப
விருந்தின் மூர லரும்பிய தூஉ
மாயிதழ்க் குவளை மலர்புறத் தோட்டிக்
காய்வேல் வென்ற கருங்கய னெடுங்க

---

௬௫. வான்புணை - சிறந்ததெப்பம். அவட்கு - சித்திராபதிக்கு. மேல்வருவன உதயகுமரன் கூற்று.

௬௬. பளிங்கின் - பளிக்கறையின்கணுள்ள. விருந்திற் பாவை இஃது - புதுமையினையுடைய பாவையாகிய இது.

௬௭. ஓவியச்செய்தியென்று - சித்திரச் செய்கையென்று.

௬௬ - ௭. மணிமேகலை தன்னைக்கண்டு அஞ்சிப் பளிக்கறையிற் புகுந்தபொழுது அவளைச் சித்திரமென்று தான் எண்ணியிருந்ததாக உதயகுமரன் கூறினான்; "தாழொளி மண்டபம்........எத்திறத் தாணின் னிளங்கொடி யுரையென" (௫ : ௯ - ௧௨) என்று முன்பு வந்திருத்தல் காண்க.

௬௮. தளைபிணி - கட்டியகட்டு; தளைத்தல் - கட்டுதல். விடா - விடாவாய்.

௬௮ - ௯. செங்கைகள் பிணிவிடாவாய் முலையை இறையளவு நெரித்தசெய்கையும்; இறை - சிறிது.

௭௦. பவளமென்றது வாயை.

௭௧. முத்துக்கூர்த்தன்ன - முத்துக்கள் கூர்மையுற்றாலொத்த. எயிறு - பல்.

௭௨. அருந்த ஏமாந்த - உண்ணுதற்கு ஆசைப்பட்ட; "அருந்தே மாந்த வாருயிர் முதல்வனை" (௧௪ : ௬௮) என்றார் முன்னும்.

௭௧ - ௨. "முள்வா யெயிற்றா றமுதம் முனியாது மாந்திக், கொள்ளாத வின்பக் கடற்பட்டனன்" சீவக. ௪௯௧.

௭௩. விருந்தின்மூரல் - புதிய இளநகை. அரும்புதல் - தோற்றுதல்.

௭௧ - ௩. எயிற்றமுதத்தையுண்ண ஆசையுற்ற எனதுயிர் செழிப்புறும் வண்ணம் புன்முறுவல் செய்ததும்.

௭௪. மாயிதழ் - கரிய இதழ்.

(பி - ம்.) ௬௯. 'முலையிறநெறித்ததூஉ'

ணறிவுபிறி தாகிய தாயிழை தனக்கெனச்
செவியகம் புகூஉச் சென்ற செவ்வியும்
பளிங்குபுறத் தெறிந்த பவளப் பாவையென்
னுளங்கொண் டொளித்தா ளுயிர்க்காப் பிட்டென்
றிடையிருள் யாமத் திருந்தேன் முன்னர்ப்
பொன்றிகழ் மேனி யொருத்தி தோன்றிச்
செங்கோல் காட்டிச் செய்தவம் புரிந்த
வங்கவ டன்றிற மயர்ப்பா யென்றன
டெய்வங் கொல்லோ திப்பியங் கொல்லோ
வெய்யா மையலேன் யானெனன் றவன்சொலச்
சித்திரா பதிதான் சிறுநகை யெய்தி
யத்திறம் விடுவா யரசிளங் குருசில்

---

௭௬. பிறிதாகியது - வேறுபட்டது. ஆயிழை தனக்கு - மணிமேகலைக்கு.

௭௭. புகூஉ - புகுந்து. செவ்வி - அழகு.

௭௪ - ௭. ஒட்டி வென்ற கண்கள் ஆயிழைக்கு அறிவு பிறிதாகிய தென்று குறிப்பித்துச் செவிக்கண்ணே சென்ற செவ்வியும்.

௭௮. மணி. ௪ : ௧௨௬. பளிங்கு - உவவனத்திலுள்ள பளிக்கறை. பாவை - மணிமேகலை.

௭௯. கொண்டு - நெரித்ததூஉம் அரும்பியதூஉம் செவ்வியும் ஆகிய இவற்றைக்கொண்டு. உயிர்க்காப்பிட்டு - உயிரைக் காத்தல்செய்து.

௭௮ - ௯. பாவை கொண்டு உயிர்க்காப்பிட்டு என்னுளத்து ஒளித்தா ளென்க.

௮௦. இருந்தேன் முன்னர் - துயிலாதிருந்தேனுடைய முன்பு; "பொங்குமெல் லமளியிற் பொருந்தா திருந்தோன், முன்னர்த் தோன்றி" (௭ : ௬-௭) என்று முன்பு வந்திருத்தல் காண்க.

௮௧. ஒருத்தியென்றது, மணிமேகலாதெய்வத்தை.

௮௩. அயர்ப்பாய் - மறப்பாய். ௮௨ - ௩. மணி. ௭: ௮ - ௧௪.

௮௦ - ௮௩. இருந்தேன்முன்னர் ஒருத்தி தோன்றிக் காட்டி அவள் திறம் அயர்ப்பாயென்றனளென்க.

௮௩ - ௪. என்றனள், தெய்வமோ? தெய்வலோகத்திற்றோன்றிய பொருளோ?

௮௫. எய்யா மையலேன் - குறையாத மயக்கமுடையேன்.

௮௭. அத்திறம்விடுவாய் - 'அங்கவ டன்றிற மயர்ப்பாய்' என்று நின்கனவிற் றோன்றிய ஒருத்தி கூறிய அதனை விடுவாயாக.

(பி - ம்.) ௭௭ - ௮. 'செவிகுறுக் குறூஉச் சென்ற செவ்வியும், பசும் பொற்'

காமக் கள்ளாட் டிடைமயக் குற்றன
தேவர்க் காயினுஞ் சிலவோ செப்பின்
மாதவன் மடந்தைக்கு வருந்துதுய ரெய்தி
யாயிரஞ் செங்க ணமரர்கோன் பெற்றது
மேருக் குன்றத் தூருநீர்ச் சரவணத்
தருந்திறன் முனிவர்க் காரணங் காகிய
பெரும்பெயர்ப் பெண்டிர் பின்புளம் போக்கிய
வங்கி மனையா ளவரவர் வடிவாய்த்
தங்கா வேட்கை தனையவட் டணித்ததூஉங்
கேட்டு மறிதியோ வாட்டிறற் குருசில்

அஅ. மயக்குற்றன - மயங்கிச்செய்த செய்திகள்.

அகூ. செப்பிற் சிலவோ? ; பலவுள்ளனவென்றபடி.

உதயகுமரனுக்குத் துணிவு பிறத்தற்பொருட்டு இந்திரன் அகலியை யை விரும்பியது முதலியவற்றைச் சித்திராபதி கூறுவாள்.

கூ0. மாதவன் மடந்தை - கௌதமன் மனைவியாகிய அகலியை.

கூ0 - கக. இந்திரன் கௌதமமுனிவர் மனைவியாகிய அகலியையை விரும்பிச் சேர்ந்து அம்முனிவர் சாபத்தால் ஆயிரங்கண் பெற்றானென் பது புராணகதை.

கூஉ. மேருக்குன்றத்து - இமயமலையினிடத்து ; "இமையவில் வாங் கிய" (கலி. ௩அ.) ஊரும் நீர்ச் சரவணத்து - பரந்த நீரையுடைய சர வணத்தில் ; சரவணம் - தருப்பைக் காட்டினையுடையதொரு பொய்கை.

கூ௩. முனிவர் - ஸப்தரிஷிகள்.

கூச. பெரும்பெயர்ப்பெண்டிர் - பெரிய புகழையுடைய மனைவியர்.

கூரு. அங்கி மனையாள் - அக்கினிதேவன் மனைவியாகிய ஸ்வாஹா தேவி. அவரவர்வடிவாய் - அவ்வம்முனி பத்தினிகளின் வடிவமாய்.

கூசு. வேட்கை - விருப்பம். அவண் - அவ்விடத்து.

கூஉ - சு. முன்னொரு காலத்தில் அக்கினிதேவன் ஸப்தரிஷிகளு டைய மனைவிகளை விரும்பி அந்தச் சந்தாபம் பொறுக்கமாட்டாமற் காட் டுக்குப் போனபொழுது அவன் எண்ணத்தையறிந்த ஸ்வாஹாதேவி அம் முனிவரெழுவர் மனைவிகளுள் அருந்ததி யொழிந்தோருடைய வடிவத் தை முறையே யெடுத்து வேறுவேறு காலங்களிற் சேர்ந்து அவன் வேட் கையைத் தணித்தாளென்று ஸ்ரீ வியாஸபாரதத்துள்ள ஆரணிய பர்வத் தில், உஉச - சு - ஆம் அத்தியாயங்களால் தெரிகின்றது.

(பி - ம்.) அஅ. 'உற்றென்' அகூ. 'செப்புவனன்' கூஉ. 'குன்றத் தொரு நீர்ச்சரவணத்' கூசு. 'வேட்கையவன்றணித்ததூஉம்'

கன்னிக் காவலுங் கடியிற் காவலுந்
தன்னுறு கணவன் சாவுறிற் காவலு
நிறையிற் காத்துப் பிறர்பிறர்க் காணாது
கொண்டோ னல்லது தெய்வமும் பேணாப்
பெண்டிர்தங் குடியிற் பிறந்தா ளல்ல
ளாடவர் காண நல்லரங் கேறி
யாடலும் பாடலு மழகுங் காட்டிச்
சுரும்புநாண் கருப்புவி லருப்புக்கணை தூவச்
செருக்கய னெடுங்கட் சுருக்குவலைப் படுத்துக்
கண்டோர் நெஞ்சங் கொண்டகம் புக்குப்
பண்டோர் மொழியிற் பயன்பல வாங்கி

கூஅ. கன்னி - கன்னிப்பருவம். கடி - கல்யாணம்.

க00. நிறை - நெஞ்சைக்கற்புநெறியில் நிறுத்தல்; "சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர், நிறைகாக்குங் காப்பே தலை" (குறள், ருஎ) என்று வருதல்காண்க. பிறர்க்காணாது - அயலாரைப் பாராமல்.

க0க. கொண்டோன் - கணவன்; மணி. கட: கூ.

க0உ. பெண்டிர் - குலமகளிர்.

க0க - உ. "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" குறள், ருரு.

க0ட. நல்லரங்கு - எழுகோலகலத்தினையும் எண்கோல்நீளத்தினையும் ஒருகோல்குறட்டுயரத்தினையும் வாய்தலிரண்டினையுமுடைய அரங்கு; சிலப். ட: க0க - ரு.

க0ச. கூத்தும் பாட்டும் அழகும் ஆகியவிவற்றைப் புலப்படுத்தி; "ஆடலும் பாடலு மழகு மென்றிக், கூறிய மூன்றி னொன்றுகுறைபடாமல்" (சிலப். ட: அ - கூ); "அழகிகூத் தாடு கின்றாள்" சீவக. கஉருச.

க0ரு. சுரும்பு - வண்டு; விகாரம். அருப்புக்கணை - மொட்டரு மலராகிய அம்பு; அரும்பு: விகாரம்; "கருப்பு வில்லியை யருப்புக்கணை மைந்தனை" (உ0: கூஉ), "கருப்பு வில்லி யருப்புக்கணை தூவ" (உரு: கூ0) என இந்நூலுள்ளே பின்பும் வருதல் காண்க.

க0சு. சுருக்குவலை - ஒருவகைவலை. படுத்து - அகப்படுத்திக் கொண்டு.

க0எ. அகம் - வீடு

க0அ. பயன்பல - பொருள் அணிகலம் ஆடை முதலியன.

(பி - ம்.) க0ரு - சு. 'கணைதூஉயச் செருக்கி' க0அ. 'பண்டொடா மொழியின்'

வண்டிற் றுறக்குங் கொண்டி மகளிரைப்
பான்மையிற் பிணித்துப் படிற்றுரை யடக்குதல்
கோன்முறை யன்றோ குமரற் கென்றலு
முதைய குமர னுள்ளம் பிறழ்ந்து
விரைபரி நெடுந்தேர் மேற்சென் றேறி
யாயிழை யிருந்த வம்பல மெய்திக்
காடமர் செல்வி கடிப்பசி களைய
வோடுகைக் கொண்டுநின் றூட்டுநள் போலத்
தீப்பசி மாக்கட்குச் செழுஞ்சோ றீத்துப்
பாத்திர மேந்திய பாவையைக் காண்டலு
மிடங்கழி காமமொ டடங்கா னாகி

---

௧௦௯. வண்டின் - தேனைக்கொண்டு மலரைத்துறக்கும் வண்டு போல; வண்டு, பரத்தையர்க்குவமை; "நறுந்தா துண்டு நயனில் காலை, வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்" (௧௯ - ௨௦) என்று இக்காதையிலும், "பருகு வாரிற் புல்லிப் பயங்கண் மாறத் துறக்கு, முருகு விம்மு குழலார் போல மொய்கொ டும்பி, யுருவப் பூங்கொம் பொசியப் புல்லித் தீந்தேன் பருகி, யருகு வாய்விட் டார்ப்ப வண்ணன் மெல்லச் சென்றான்" (௧௪௧௫) என்று சீவகசிந்தாமணியிலும் வந்திருத்தல் காண்க. கொண்டி மகளிர் - பொருள் கொள்ளுதலையுடைய பரத்தையர்; கொண்டி - கொள்ளையுமாம்; "நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர்" மதுரை. ௫௮௩.

௧௧௦. படிற்றுரை - பொய்வார்த்தை.

௧௧௧. கோன்முறை - செங்கோன்முறை. என்றலும் - என்று சித்திராபதி கூறலும்.

௧௧௨. உள்ளம் பிறழ்ந்து - மனம் வேறுபட்டு.

௧௧௩. விரைபரி : வினைத்தொகை.

௧௧௪. ஆயிழை - மணிமேகலை. அம்பலம் - உலகவறவி.

௧௧௫. காடமர்செல்வி - துர்க்கை; "காடமர் செல்வி கழிபெருங் கோட்டமும்" (௬ : ௫௩) என்றார் முன்னும்; அமர்தல் - விரும்பியுறைதல். கடிப்பசி களைய - பேய்களின் பசியைத் தணிவித்தற்பொருட்டு.

௧௧௫ - ௬. ஊட்டுநளாகிய காடமர் செல்விபோலவென இயைக்க.

௧௧௭ - ௮. பாத்திரமேந்தி மாக்கட்குச் செழுஞ்சோறீத்தபாவை - மணிமேகலை. காண்டலும் - உதயகுமரன் கண்டவுடன்.

௧௧௯. இடங்கழிகாமம் - வரம்பின்றிப் பெருகியகாமம்; இராகவேக மென்பாரு முளர் (மணி. ௧௦ : ௨௨); "இடங்கழி நெஞ்சத்திளமை யானை" சிலப். ௨௩: ௩௭.

(பி - ம்.) ௧௧௨. 'உள்ளகம் பிறழ்ந்து' ௧௧௫. 'களைஇய' ௧௧௬ - ௭. 'ஊட்டுவள்போல...தீப்பலிமாக்கட்கு'

யுடம்போ டென்ற னுள்ளகம் புகுந்தென்
னெஞ்சங் கவர்ந்த வஞ்சக் கள்வி
நோற்றூண் வாழ்க்கையி னொசிதவந் தாங்கி
யேற்றூண் விரும்பிய காரண மென்னெனத்
தானே தமிய ணின்றோண் முன்னர்
யானே கேட்ட லியல்பெனச் சென்று
நல்லா யென்கொ னற்றவம் புரிந்தது
சொல்லா யென்று துணிந்துடன் கேட்ப
வென்னமர் காதல னிராகுல னீங்கிவன்
றன்னடி தொழுதலுந் தகவென வணங்கி
யறைபோய் நெஞ்ச மவன்பா லணுகினு
மிறைவளை முன்கை யீங்கிவன் பற்றினுந்
தொன்று காதலன் சொல்லெதிர் மறுத்த
னன்றி யன்றென நடுங்கினண் மயங்கிக்
கேட்டது மொழிவேன் கேள்வி யாளரிற்

கஉக. கள்வி - மணிமேகலை.

கஉஉ. நோற்றூண் வாழ்க்கை - விரதங்களாற் பட்டினி விட்டு உண்ணுதலையுடைய வாழ்க்கை; வாழ்க்கை: தவத்திற்கு அடை. நொசி தவம் - நுண்ணிய தவம்; "நோற்றுணல் யாக்கை நொசிதவத்தீர்" சிலப். க0: உ௩.

கஉ௩. ஏற்றூண்-இரந்துண்ணுமுணவு.

கஉ௩ - ௫. என்னெனக் கேட்டல் இயல்பென்று உதயகுமரன் சென்று.

கஉ௬. நற்றவம் புரிந்தது என்கொல்.

கஉஎ. கேட்ப - உதயகுமரன் கேட்ப.

கஉஅ. என்னமர் காதலன் இராகுலன் - இவன் என்னை விரும்பிய கணவனாகிய இராகுலனாவான்; என்றது பழம்பிறப்பின் செய்தி கூறியபடி.

கஉகூ. வணங்கி - மணிமேகலை வணங்கி.

க௩0. அறைபோய் - ஒட்டைபோய். நெஞ்சம்அறைபோய் அவன்பால் அணுகினுமென்க.

க௩உ. தொன்று - பழமை.

க௩௩. நன்றியன்று - நன்மையன்று.

க௩௪. கேட்டது மொழிவேன் - நீ கேட்டதற்கு விடை கூறு

(பி - ம்.) கஉக. 'வஞ்சக்கிளவி' கஉ௩. 'காரணம்யாதென' கஉ௬. 'நல்லா யெனக்கோ நற்றவம்புரிந்தது' கஉஎ. 'துணிந்துடன் கேட்ப'

றோட்ட செவியைநீ யாகுவை யாமெனிற்
பிறத்தலு மூத்தலும் பிணிப்பட் டிரங்கலு
மிறத்தலு முடைய திடும்பைக் கொள்கல
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்
மண்டமர் முருக்குங் களிறனை யார்க்குப்
பெண்டிர் கூறும் பேரறி வுண்டோ
கேட்டனை யாயின் வேட்டது செய்கென
வாட்டிறற் குருசிலை மடக்கொடி நீங்கி
முத்தை முதல்வி முதியா ளிருந்த

வேன். அவன் கேட்டது, முன்பு, 'நல்லா யென்கொ னற்றவம் புரிந்தது' (௧௮: ௧௨௬) என்பதனாலுணரப்படும். கேள்வியாளரின் - கேள்வியாளர்களால்.

௧௩௫. நீ துளைக்கப்பட்ட செவியையுடையாயாயின்.

௧௩௪ - ௫. எனின்மொழிவேனென இயையும். இதில், "கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற், றோட்கப் படாத செவி" (௪௧௮) என்னும் குறளின் பொருள் அமைந்திருத்தல் காண்க.

மேல்வருவன மணிமேகலை கூற்று.

௧௩௭. இடும்பை - துன்பம். ௧௩௮. யாக்கையாகிய இது.

௧௩௬ - ௮. இஃது உடையது கொள்கலமென்க. இவ்வடிகளிற் போலவே, "வினையின் வந்தது வினைக்குவிளை வாயது,........மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய்" (௪: ௧௧௩-௨௧) என்று இந்நூலுள்ளே முன்னும் மக்கள் யாக்கையை இழித்துக் கூறியிருத்தல் காண்க.

௧௩௯. நல்லறம் - தயாதருமம்.

௧௪௦. மண்டு அமர் முருக்கும் களிறு - மிக்குச் செல்லுகின்ற போரை அழிக்கும் யானை.

௧௪௧. உண்டோ - இல்லையென்றபடி.

௧௪௦ - ௪௧. 'களிறனை யார்க்குப், பெண்டிர் கூறும் பேரறி வுண்டோ' என்றது முன்னிலைப்புறம்; இப்படியே, "இளமை நாணி முதுமை யெய்தி,........செறிவளை மகளிர் செப்பலு முண்டோ" (௪ : ௧௦௭ - ௧௦) என்று உதயகுமரனைநோக்கிச் சுதமதி கூறியதாக இந்நூலில் முன்பு நீதி கூறியிருத்தல் காண்க.

௧௪௨. வேட்டது - விரும்பியது.

௧௪௩. குருசிலை - உதயகுமரனை. மடக்கொடி - மணிமேகலை.

௧௪௪. முதியாள் - சம்பாபதி.

(பி - ம்.) ௧௪௦. 'மண்டலமாடுக்களிறு', 'மண்டமரடூஉங்களிறு.'

குச்சரக் குடிகை தன்னகம் புக்காங்
காடவர் செய்தி யறிகுநர் யாரெனத்
தோடலர் கோதையைத் தொழுதன ளேத்தி
மாய விஞ்சை மந்திர மோதிக்
காயசண் டிகையெனுங் காரிகை வடிவாய்
மணிமே கலைதான் வந்து தோன்ற
வணிமலர்த் தாரோ னவள்பாற் புக்குக்
குச்சரக் குடிகைக் குமரியை மரீஇப்
பிச்சைப் பாத்திரம் பெரும்பசி யுழந்த
காயசண் டிகைதன் கையிற் காட்டி
மாயையி னொளித்த மணிமே கலைதனை
யீங்கிம் மண்ணீட் டியாரென வுணர்கே
னாங்கவ ளிவளென் றருளா யாயிடிற்
பன்னா ளாயினும் பாடு கிடப்பே

---

௧௪௫. குச்சரக்குடிகை = கூர்ச்சரகுடிகா - கூர்ச்சரதேசத்துப் பணியமைந்த சிறிய கோயில். கூர்ச்சரதேசம் சிற்பத்திற் பெயர் பெற்றதென்பர்; "குச்சரக் குடிகைக் குமரியை மரீஇ" (௧௫௨) என்று இக்காதையிலேயே பின்னும் வரும்; கூர்ச்சரமென்பது குஜ்ஜரமென்று கன்னட பாஷையில் வழங்கப்படுகின்றது.

௧௪௬. அறிகுநர் - அறிவோர். ௧௪௭. கோதை - சம்பாபதி.

௧௪௮. மந்திரம் - மணிமேகலாதெய்வம் உபதேசித்த வேற்றுரு எய்துவிக்கும் மந்திரம்; மணி. ௧௦ : ௮௦.

௧௪௯. காரிகை - பெண்.

௧௪௯ - ௫௦. மணிமேகலை காரிகைவடிவாய் வந்து தோன்றவென்க.

௧௫௧. தாரோன் - உதயகுமரன். அவளென்றது, காயசண்டிகை வடிவுகொண்டு நின்ற மணிமேகலையை.

௧௫௨. குமரி - சம்பாபதி.

மேல்வருவன உதயகுமரன் கூற்று.

௧௫௩ - ௪. பாத்திரத்தைக் கையிற் காட்டியென்க.

௧௫௬. மண்ணீடு - சுதையாற் செய்யப்பட்ட பாவை; மணி. ௬ : ௪௭. மண்ணீடுகளுளென ஏழனுருபுவிரிக்க.

௧௫௮. பாடு - படுக்கை; பாடுகிடப்பேன் - வரங்கிடப்பேனென்று பொருள் கூறுவர் அடியார்க்குநல்லார்; "பாசண்டச் சாத்தற்குப் பாடு கிடந்தாளுக்கு", "பாசண்டன்பாற் பாடு கிடந்தாட்கு" சிலப். ௯ : ௧௫, ௩௦ : ௭௮.

(பி - ம்.) ௧௪௫. 'குஞ்சக்குண்டிகை' ௧௪௯. 'காயசண்டிகை வடிவாய்க் காரிகை'

னின்னுங் கேளா யிமையோர் பாவாய்
பவளச் செவ்வாய்த் தவளவா ணகையு
மஞ்சனஞ் சேராச் செங்கய னெடுங்கணு
முரிந்துகடை நெரிய வரிந்தசிலைப் புருவமுங்
குவிமுட் கருவியுங் கோணமுங் கூர்நுனைக்
கவைமுட் கருவியு மாகிக் கடிகொளக்
கல்விப் பாகரிற் காப்புவலை யோட்டி
வல்வா யாழின் மெல்லிதின் விளங்க
முதுக்குறை முதுமொழி யெடுத்துக் காட்டிப்

கருகூ. இமையோர் பாவாய் - தேவர்களுடைய தலைவி; "பவ மறுவித்த வானோர் பாவாய்" (உரு : கசஎ) என்று இந்நூலிற் சிந்தா தேவியைப் பின்பு கூறுதல் காண்க.

இனி, உதயகுமரன் மணிமேகலையின் நகைமுதலியவற்றால் தான் வலியழிந்து அவளுக்கு வயமாயினமை கூறுவான், தன்னை யானையாகவும் அவளது நகைமுதலியவற்றை யானையையடக்கி வயமாக்குங்கருவிகளாகவும் உருவகஞ்செய்து கூறுகின்றான்.

கசுக. 'அஞ்சனஞ் சேரா' என்றதனாற் கண்ணுக்கு மையெழுதாமை துணியப்படும்.

கசுங. கோணம் - தோட்டியென்னுங்கருவி; "கோணந் தின்ற வடுவாழ் முகத்த" மதுரை. ருகூஉ.

கசுச. கவைமுட்கருவி - கவைத்த முள்ளையுடைய பரிக்கோல்; "கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக், கல்லா விளைஞர் கவளங் கைப்ப" (முல்லை. ஙரு - சு.) கடிகொள - காவல்கொள்ள.

கசுங - ச. குவிமுட் கருவி முதலிய மூன்றும் யானையையடக்கும் கருவி விசேடங்கள்; "அரைமதி யிரும்பொடு கவைமுட் கரீஇ, பீலி சுற்றிய வேணு வெண்காழ், யானை" பெருங். க. ஙஉ : சுசு - அ.

கசு0 - சுச. நகை குவிமுட்கருவியும், கண் கோணமும், புருவம் கவைமுட் கருவியுமாகிக் கடிகொளவென இயைக்க; இது நிரனிறை.

கசுரு. கல்வியாகிய பாகர்களாற் காத்தலாகிய வலையைப்போக்கி; "மடங்கெழு நோக்கின் மதிமுகந் திறப்புண், டிடங்கழி நெஞ்சத் திளமை யானை, கல்விப் பாகன் கையகப் படாஅ, தொல்கா வுள்ளத் தோடு மாயினும்" (சிலப். உங : ஙசு - கூ) என்றதிற் கல்வியைப் பாகனாக உருவகஞ்செய்திருத்தல்காண்க.

கசுஎ. முதுக்குறை முதுமொழி - பேரறிவைப் புலப்படுத்திய மொழி; என்பது, 'பிறத்தலு மூத்தலும்' என்றது முதலியவற்றை.

கசுசு - எ. யாழோசைபோல இனிமையாக மொழிகளை எடுத்துக்காட்டி; யானை யாழிற்கு வயமாகுமாதலின், இங்ஙனம் கூறினான்; இதனை, "காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல், யாழ்வரைத் தங்கி

புதுக்கோள் யானை வேட்டம் வாய்த்தென
முதியா ளுன்றன் கோட்டம் புகுந்த
மதிவாண் முகத்து மணிமே கலைதனை
யொழியப் போகே னுன்னடி தொட்டே
னிதுகுறை யென்றன னிறைமகன் றானென்.

௧௮.—உதயகுமரன் அம்பலம்புக்ககாதை முற்றிற்று.

யாங்கு" (கலி. ௨), "அணியிழை மகளிரும் யானையும் வணக்கு, மணி யொலி வீணை" (பெருங். ௧. ௩௫ : ௧௦௦ - ௧௦௧), "இசையினி லிவட்குத் தோற்றும் யானையால் வேறு மென்னி, னிசைவதொன் றன்று கண்டீர்" (சீவக. ௭௪௮), "ஐம்புல வேழத்தின் வெந்தொழில் வீயக், கருணை வீணை காமுறத் தழீஇ" (ஞானாமிர்தம், ௪), "மகரயாழ் வல்ல மைந்த னொருவனைக் கண்ட மத்தப், புகர்முகக் களிற்றின்" (மேரு மந்தா. வச்சிராயுத. ௩௧) என்பனவற்றாலறிக.

௧௬௮. புதிதாகக் கொள்ளப்படும் யானை வேட்டையில் அகப்பட்ட தென்று கருதி. புதுக்கோள்யானை : மணி. ௧௨ : ௪௫.

௧௬௯. முதியாள் : விளி.

௧௭௧. அடிதொடுதல், சூளுறவுகளுள் ஒன்று; இதனைப் பின் வருவனவற்றாலுணர்க: "நம்மு, ளாமுசாஅங் கோனடி தொட்டேன்" (கலி. ௯௪); "அடல்வலி யெயினர்நி னடிதொடு கடனிது", "அடிதொடு படு கடனிது" சிலப். ௧௨ : 'சுடரொடு', 'துடியொடு.'

௧௭௨. இதுகுறை - இஃது எனக்கு வேண்டுங்காரியம்; குறை-காரியம்; "முறைவேண்டு நர்க்குங் குறைவேண்டு நர்க்கும், வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி" (பெரும்பாண். ௪௪௩-௪.) இறைமகன்-உதயகுமரன்.

௧ - ௧௭௨. சித்திராபதி, அதுகேட்டு எறி வெய்துயிர்த்துக்கலங்கித் தீர்ப்பலென்று கூத்தியன் மடந்தையரெல்லார்க்குங் கூறும்; அங்ஙனங் கூறுகின்றவள், வஞ்சினஞ்சாற்றி உயிர்த்துத் தேர்ந்து போகிக்குறுகிப் பொருந்தி நின்று ஏத்த அவன், 'தவறின்றோ' என, அவள், 'வேந்தே, நின்கண்ணி வாழ்க; காஞ்சி அம்பலத்தாயது' என, அதுகேட்டு அவட்கு உரைப்போன், 'எய்யா மையலேன்' என்று சொல்ல, சித்திராபதி சிறு நகை யெய்தி, 'படிற்றுரை யடக்குதல் கோன்முறையன்றோ குமரற்கு' என்றலும், உதயகுமரன் உள்ளம் பிறழ்ந்து எறி எய்திக் காண்டலும் அடங்காளுகிச்சென்று துணிந்து கேட்ப, அவள் வணங்கி நடுங்கி மயங்கி, 'வேட்டதுசெய்க' என்று கூறி நீங்கிப் புக்குத் தொழுது ஏத்தி ஓதிக் காயசண்டிகை வடிவாய் வந்து தோன்ற, தாரோன் புக்கு மரீஇ, 'இது குறை' என்றனனென வினை முடிவு செய்க.

(பி - ம்.) 'புதுக்கோட்டியானை'

பத்தொன்பதாவது

சிறைக்கோட்டமறக்கோட்டமாக்கிய காதை.

[பத்தொன்பதாவது மணிமேகலை காயசண்டிகை வடிவாய்ச் சிறைக்கோட்டம்புக்குச் சிறைவீடு செய்து சிறைக் கோட்டம் அறக்கோட்டமாக்கிய பாட்டு.]

முதியா டிருந்தடி மும்மையின் வணங்கி
மதுமலர்த் தாரோன் வஞ்சினங் கூற
வேடவிழ் தாரோ யெங்கோ மகனமு
நாடாது துணிந்து நாநல்கூர்ந் தனையென
வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச்
சித்திர மொன்று தெய்வங் கூறலு
முதய குமர னுள்ளங் கலங்கிப்
பொதியறைப் பட்டோர் போன்றுமெய் வருந்தி.

௧. முதியாள் - சம்பாபதி. மும்மை - மனம் வாக்குக் காயங்கள்; மூன்றுமுறை யென்றுமாம்.

௨. தாரோன் - உதயகுமரன். வஞ்சினம் - சூளுறவு; அஃது, "உன்னடி தொட்டேன்" (மணி. ௧௮ : ௧௭௧) என்றது.

மேல்வருவன தெய்வத்தின் கூற்று.

௪. நாடாது துணிந்து - ஆராயாது துணிவுற்று. நாநல்கூர்ந்தனை - நாவறுமையுற்றாய்; என்றது, "எண்ணித் துணிக கருமந் துணிந்தபி, னெண்ணுவ மென்ப திழுக்கு" (௪௬௭) என்னும் குறளின் பொருளைத் தழுவி வந்தவாறு காண்க; மணி. ௧௦ : ௩௪.

௫. வித்தகர் - சிற்பாசாரிகள்; "வித்தக ரியற்றிய, கண்கவ ரோவியம்" (௩ : ௧௩௦ - ௩௧), "வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச், சித்திரச் செய்கை" (௩ : ௧௯௭ - ௮) என முன்பு வந்திருத்தல் காண்க; "வித்தக ரியற்றிய விளங்கிய கோலத்து" சிலப். ௨௮ : ௨௨௯.

௬. ஒன்றுதெய்வம் - பொருந்திய தெய்வம்.

௪ - ௬. நல்கூர்ந்தனையெனக் கூறலுமென்க.

௮. பொதியறை - துவாரமில்லாத கீழறை; (மணி. ௪ : ௧௦௫); "போதார் பிறவிப் பொதியறையோர்" சிலப். ௧௦ : ௧௯௧.

(பி - ம்.) ௧. 'முறைமையின் வணங்கி'

யங்கவ டன்றிற மயர்ப்பா யென்றே
செங்கோல் காட்டிய தெய்வமுந் திப்பியம்
பையர வல்குல் பலர்பசி களையக்
கையி லேந்திய பாத்திரந் திப்பிய
முத்தை முதல்வி யடிபிழைத் தாயெனச்
சித்திர முரைத்த விதூஉந் திப்பிய
மிந்நிலை யெல்லா மிளங்கொடி செய்தியிற்
பின்னறி வாமெனப் பெயர்வோன் றன்னை
யகல்வாய் ஞால மாரிரு ளுண்ணப்
பகலர சோட்டிப் பணையெழுந் தார்ப்ப
மாலை நெற்றி வான்பிறைக் கோட்டு

---

௯. அவள் - மணிமேகலை. அயர்ப்பாய் - மறப்பாய்.

௧௦. செங்கோல் காட்டிய - செங்கோன்முறைமையை எடுத்துக் காட்டிய. தெய்வமுமென்றது, மணிமேகலாதெய்வத்தை ; உம்மை எதிரது தழீஇயது. திப்பியம் : மணி. ௭ : ௯௭.

௯ - ௧௦. உதயகுமரனுக்கு மணிமேகலாதெய்வம் செங்கோன் முறைமையை எடுத்துக்காட்டி, மணிமேகலை திறத்தை நீ மறப்பாயென்று கூறியதனை, "கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியும்......அவன்வயி னுரைத்தபின்" (௭ : ௮ - ௧௪), "பொன்றிகழ் மேனி யொருத்தி தோன்றி......அங்கவ டன்றிற மயர்ப்பா யென்றனள்" (௧௮ : ௮௧ - ௩) என இந்நூலுள்ளே முன்புவந்தவாற்றாலுணர்க.

௧௧ - ௨. களைய ஏந்திய பாத்திரம்.

௧௩. முத்தைமுதல்வி : மணி. ௧௮ : ௧௪௪. பிழைத்தாய் - தவறு செய்தாய்.

௧௪. இதூஉம் - இதுவும்.

௧௫. இந்நிலையெல்லாம் - செங்கோல்காட்டிய தெய்வமுதலிய மூன்றன் வரலாற்றையும். இளங்கொடி - மணிமேகலை.

௧௬. பெயர்வோன்றன்னை - பெயர்ந்துசெல்லும் உதயகுமரனை.

இனி இராத்திரியை யானையாக உருவகித்துக் கூறுவார்.

௧௮. பகல் அரசு - சூரியனாகிய அரசனை. பணை - பறை; யானை செல்லுங்கால் அதன்வரவை எல்லார்க்கும் தெரிவித்தற்குப் பணை முழங்கும்; "வெரூஉப்பறை நுவலும் பரூஉப்பெருந் தடக்கை, வெருவரு செலவின் வெகுளி வேழம்" பொருந. ௧௭௧ - ௨.

௧௯. மாலை நெற்றி - அந்திக்காலமாகிய நெற்றி. பிறைக்கோடு - பிறையாகிய தந்தம்.

(பி - ம்). ௧௧. 'பசிகெடுப்ப' ௧௫. 'உன்னிலை யெல்லாமிளங் கொடி செய்தியாயிற்'

நீல யானை மேலோ ரின்றிக்
காமர் செங்கை நீட்டி வண்டுபடு
பூநாறு கடாஅஞ் செருக்கிக் கால்கிளர்ந்து
நிறையழி தோற்றமொடு தொடர முறைமையி
னகர நம்பியர் வளையோர் தம்முடன்
மகர வீணையின் கிளைநரம்பு வடித்த
விளிபுண ரின்சீ ரெஃகுளங் கிழிப்பப்
பொருஅ நெஞ்சிற் புகையெரி பொத்திப்

---

௨௦. நீலயானை - கரியநிறத்தையுடைய இராத்திரியாகிய யானை. மேலோர் - பாகர்; "மேலோ ரின்றி" (௪ : ௩௫) என்றார் முன்னும்; "மேலோர் வீசி" மதுரை. ௩௮௧.

௨௧. காமர்செங்கை - விருப்பமாகிய துதிக்கை.

௨௨. பூநாறுகடாம் - ஏழிலைப்பாலை மலரினது மணம்நாறுகின்ற மதம்; இதனை, "பாத்த யானையிற் பதங்களிற் படுமத நாறக், காத்த வங்குச நிமிர்ந்திடக் கால்பிடித் தோடிப், பூத்த வேழிலைப் பாலையைப் பொடிப்பொடி யாகக், காத்தி ரங்களாற் றலத்தொடுந் தேய்த்ததோர் களிறு" (கம்ப. வரை. ௬) என்னுஞ் செய்யுளாலுணர்க; வேங்கை மலரின் மணமென்றுமாம்; "விலக்கருங் கரிமதம் வேங்கை நாறுவ" (கம்ப. நகர. ௫௮.) செருக்கி - களித்து. கால்கிளர்ந்து - காற்றைப் போல எழுந்து; "கால்கிளர்ந் தன்ன வேழம்" முருகு. ௮௨.

௨௧ - ௩. பெயர்வோன்றன்னை நீலயானை தொடரவெனவியைக்க; இரவுவரவென்றபடி.

௨௪. நம்பியர் - காதலஞ்செல்வர்; "நறுஞ்சாந் தகலத்து நம்பியர்" (சிலப். ௧௪ : ௧௦௦.) வளையோர் - மகளிர்.

௨௫. மகரவீணை - மகரயாழ்; இது நால்வகையாழ்களுள் ஒன்று; பதினேழுநரம்புகளையுடையது. கிளைநரம்பு - குரல், இளி, துத்தம், விளரி, கைக்கிளையென்னும் ஐந்துமாம்; இதனை, "கிளையெனப் படுவ கிளக்குங் காலைக், குரலே யிளியே துத்தம் விளரி, கைக்கிளை யெனவைந் தாகு மென்ப" (சிலப். ௮ : ௩௩ - ௪, மேற்.) என்பதனாலுணர்க. வடித்தல் - 'சுட்டு விரலும் பெருவிரலுங் கூட்டி நரம்பை அகமும்புறமும் ஆராய்தல்' (சிலப். ப. ௨௦௪) என்பர் அரும்பதவுரையாசிரியர்; 'நரம்பை உருவுதல்' (பொருந. ௨௩) என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

௨௬. இளி - இசை; ஏழுநரம்பினுள் ஒன்றன் பெயராயிருந்தும் எல்லாப்பண்ணிற்கும் இஃது அடிமணையாதலின், ஈண்டு இப்பொருளைத் தந்து நின்றது. சீர் - தாளவறுதி. எஃகு - வேல். சீராகிய எஃகு உளத்தைக் கிழிப்ப. ௨௭. எரிபொத்தி - (காமமாகிய) தீ மூட்டப்பட்டு.

(பி - ம்.) ௨௪. 'நகரம்பிரியாவிளையோர்'

பருஅக் குருகி னுயிர்த்தவன் போயபி
னுறையுட் குடிகை யுள்வரிக் கொண்ட
மறுவில் செய்கை மணிமே கலைதான்
மாதவி மகளாய் மன்றந் திரிதரிற்
காவலன் மகனோ கைவிட லீயான்
காய்பசி யாட்டி காயசண் டிகையென
வூர்முழு தறியு முருவங் கொண்டே
யாற்றா மாக்கட் காற்றுந் துணையாகி
யேற்றலு மிடுதலு மிரப்போர் கடனவர்
மேற்சென் றளித்தல் விழுத்தகைத் தென்றே
நூற்பொரு ளுணர்ந்தோர் நுனித்தன ராமென
முதியாள் கோட்டத் தகவயி னிருந்த
வமுத சுரபியை யங்கையின் வாங்கிப்
பதியகந் திரிதரும் பைந்தொடி நங்கை

---

௨௮. பருஅக்குருகின் உயிர்த்து - கொல்லன் உலைமுக்குப்போலே யுயிர்த்து ; பருஅக்குருகு: வெளிப்படை; வஞ்சிநகரைப் பூவாவஞ்சியென்றும், குதிரைமலையை ஊராக்குதிரையென்றும், குறிஞ்சிப் பண்ணைக் கொய்யாக் குறிஞ்சியென்றும், நாஞ்சின்மலையை உழாநாஞ்சிலென்றும் நூல்களில் வழங்குதல் காண்க. “ஊதுலைக் குருகி னுயிர்த்து” (௨: ௪௩) என்றார் முன்னும்.

௧௬ - ௨௮. பெயர்வோன்றன்னை நிலையானை தொடரச் சீறாகிய எஃகு உளங்கிழிப்ப எரிபொத்தி உயிர்த்து அவன் போயபினென்க.

இனி, மணிமேகலை உதயகுமரனுக்கு அஞ்சிக் காயசண்டிகை வடிவத்துடன் பிச்சையிடுதற்கு வெளிப்பட்டு வந்தமை கூறுவார்.

௨௯. உறையுட் குடிகை - இருப்பிடமாகிய சிறிய கோயிலில். உள்வரிக்கொண்ட - வேற்றுருவங்கொண்ட ; உள்வரியாவது பாண்டவர் விராடநகரத்துப்பிறிதுருவங்கொண்டாற்போல்வது என்பர் அடியார்க்கு நல்லார் (சிலப். ௮: ௮௪ - ௯); கிருத்திரிமவேடம் என்றும், வடிவு மறைத்தலென்றுங் கூறுவர் சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர் ; ௫: ௨௧௬, ௮: ௮௫ - ௯.

௩௧. ‘மாதவிமகளாய்’ என்பது முதலியன மணிமேகலையின் உட்கோள். மன்றம் - உலகவறவி.

௩௩. காவலன்மகன் - உதயகுமரன். கைவிடலீயான் - கைவிடான்.

௩௫. மு. மணி. ௧௭ : ௯௪.

௩௬ - ௮. வாங்குதலும் கொடுத்தலும் இரப்போர் கடனாதலின், அவர் எவ்விடத்திலும் வலிந்து சென்று கொடுத்தல் சிறப்புடைத்தென்று நூற்பொருளுணர்ந்தோர் ஆராய்ந்து சொன்னாரென்று கருதி.

௪௦. வாங்கி - கொண்டு. ௪௧. நங்கை - மணிமேகலை.

(பி - ம்.) ௪௧. ‘பைந்தொடி மடந்தை’

யதிர்கழல் வேந்த னடிபிழைத் தாரை
யொறுக்குந் தண்டத் துறுசிறைக் கோட்டம்
விருப்பொடும் புகுந்து வெய்துயிர்த்துப் புலம்பி
யாங்குப் பசியுறு மாருயிர் மாக்களை
வாங்கு கையகம் வருந்தநின் றூட்டலு
மூட்டிய பாத்திர மொன்றென வியந்து
கோட்டங் காவலர் கோமகன் றனக்கிப்
பாத்திர தானமும் பைந்தொடி செய்தியும்
யாப்புடைத் தாக விசைத்துமென் றேகி
நெடியோன் குறளுரு வாகி நிமிர்ந்துதன்
னடியிற் படியை யடக்கிய வந்நா
ணீரிற் பெய்த மூரி வார்சிலை
மாவலி மருமான் சீர்கெழு திருமகள்

---

௪௨. பிழைத்தாரை - பிழை செய்தாரை.

௪௩. தண்டத்து - தண்டத்தினையுடைய. சிறைக்கோட்டம்-சிறைச்சாலை.

௩௦ - ௪௬. மணிமேகலை, நுனித்தனராமென வாங்கிப் புகுந்து நின்று மாக்களை ஊட்டலுமென்க.

இவள் பலரையும் உண்பித்தலைக் கண்ட கோட்டங்காவலர் வியப்புற்றுச்சென்று அரசனுக்குத் தெரிவித்தல் இனிக் கூறப்படும்.

௫௦. யாப்புடைத்தாக - உறுதியுடைத்தாக. இசைத்தும் - சொல்லுவேம்.

௪௭ - ௫௦. கோட்டங்காவலர் வியந்து தானமும் செய்தியும் கோமகனுக்கு இசைத்துமென்றேகியென்க.

௫௧. திருமால் வாமனனாகிப்பேருருவங்கொண்டு.

௫௨. அடக்கிய - அடக்க. அந்நாளில்; அடக்கிய அந்நாளென இயைத்துப் பெயரெச்சத் தொடராக்கினுமமையும்.

௫௩. நீரிற் பெய்த - நீருடன் பூமியைக்கொடுத்த; பூமியைத் தாரை வார்த்துக் கொடுத்தவென்றபடி.

௫௨ - ௫௩. அடக்கிய நீரிற் பெய்தவெனவியைக்க.

௫௪. மாவலி மருமான் மகள் - மகாபலியின் வழித்தோன்றலாகிய அரசனுடைய மகள்; அரசன் பெயர் புலப்படவில்லை.*

---

* மகாபலியின் பரம்பரையரசர் யாரென்று வினவியபொழுது இராசாங்கத்துச் சிலாசாதன பரிசோதகர்களுள் ஒருவராக இருந்த, ஸ்ரீ வி.

(பி - ம்.) ௫௨ - ௫௩. 'அன்னாளங்கதுபெய்தி'

சீர்த்தி யென்னுந் திருத்தகு தேவியொடு
போதவிழ் பூம்பொழில் புகுந்தனன் புக்குக்
கொம்பர்த் தும்பி குழலிசை காட்டப்
பொங்கர் வண்டின நல்லியாழ் செய்ய
வரிக்குயில் பாட மாமயி லாடும்

---

௫௫. சீர்த்தியென்று பெயர் கூறப்படும் செல்வமிக்க தேவியுடன்.

௫௬. போது - மலரும் பருவமுள்ள அரும்பு.

௫௭. குழல் - வேய்ங்குழல். ௫௮. பொங்கர் - சோலை.

௫௭ - ௮. இவ்வடிகளிற்போலவே, "குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட, மழலை வண்டின நல்லியாழ் செய்ய" (௪ : ௩ - ௪) என்று முன்பு வந்திருத்தல் காண்க.

௫௯. வரி - வரிப்பாட்டு ; கீற்றுமாம்.

வேங்கையாவர்கள் அன்புடன் எழுதியனுப்பியவிடை வருமாறு: "பாண வம்சத்து அரசர்கள் மகாபலியின் பரம்பரையைச் சேர்ந்தவர் ; அவர்களின்கல்வெட்டுக்கள், வட ஆர்க்காடு ஜில்லா வேலூருக்கடுத்த திருவல்லமென்கிற கிராமத்திலும், மைஸூர் ஸமஸ்தானத்தில் துல்கான்போடே என்கிற ஊரிலும் கிடைத்திருக்கின்றன ; 'மூவுலகிலும் தொழப்பட்டவனும் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் தலைவனுமிருக்கின்ற பரமேசுவரனுக்கு வாயில்காக்கும்படியாக நியமிக்கப்பட்ட மகாபலிதலத்தைச்சேர்ந்தவன்' என்று சிலபாணவரசர்கள், தங்களுக்குரிய கல்வெட்டுக்களிற் சிறப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். பாணகுலத்தைச் சேர்ந்த செப்புப் பட்டயங்கள் இரண்டுண்டு. அவற்றில் ஒன்று, சிதம்பரம் கனகஸபையின் முகட்டைப் பொன்வேய்ந்த பராந்தகனென்று சொல்லப்பட்ட வீரநாராயணச்சோழன் பாணவம்சத்தை நிர்மூலஞ்செய்து அவர்களின் நாட்டைக் கங்கவம்சத்தைச்சேர்ந்த அத்திமல்லனென்ற அரனுக்குக் கொடுத்ததாகச் சொல்லுகின்றது. இந்த வீரநாராயணன் கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் முற்பாதியிற் சீவித்திருந்தான். மற்றொருசெப்புப்பட்டயத்திற் கீழே எழுதப்பட்டிருக்கும் வம்சாவலி கிடைத்தது :பலி, அவன்மகன்பாணன், அவன் குலத்திற்பிறந்தவன் பாணுதிராசன், இவ்வம்சத்தைச்சேர்ந்த அநேக அரசர்கள் மரித்தபிறகு இருந்தோன் ஜயநந்திவர்மன் (இவன் ஆந்திரதேசத்திற்கு மேற்கிலிருந்தநாட்டை ஆண்டவன்) ; அவன் மகன் முதலாம் விசயாதித்தன், அவன்மகன் ஜகதேகமல்லனென்கிற மல்லதேவன், அவன்மகன் பாணவித்தியாதரன், அவன்மகன் பிரபு மேருதேவன், அவ்ன் மகன் முதலாம் விக்கிரமாதித்தன், அவன் மகன் புகழ்விப்பவர்கண்டனென்கிற இரண்டாம் விசயாதித்தன், அவன் மகன் விசயபாதுவென்று கூறப்பட்ட இரண்டாம் விக்கிரமாதித்தன் (இவன் கிருஷ்ணராஜனென்ற அரசனுக்கு நேசன்.) இந்த அரசர்களின் காலம் தெரியவில்லை."

(பி - ம்.) ௫௫. 'சீதரதகையெனுந்', 'சீதாரிகையெனுந்.' ௫௬. 'பொருந்தினள்புக்கு', 'புகுந்தனள்புக்கு.' ௫௭. 'கொம்பலாததுகுழலிசைகாட்ட'

விரைப்பூம் பந்தர் கண்டுளஞ் சிறந்தும்
புணர்துணை நீங்கிய பொய்கை யன்னமொடு
மடமயிற் பேடையுந் தோகையுங் கூடி
யிருசிறை விரித்தாங் கெழுந்துடன் கொட்பன
வொருசிறைக் கண்டாங் குண்மகிழ் வெய்தி
மாமணி வண்ணனுந் தம்முனும் பிஞ்ஞையு
மாடிய குரவையிஃ தாமென நோக்கியுங்
கோங்கலர் சேர்ந்த மாங்கனி தன்னைப்
பாங்குற விருந்த பல்பொறி மஞ்ஞையைச்
செம்பொற் றட்டிற் றீம்பா லேந்திப்
பைங்கிளி யூட்டுமோர் பாவையா மென்று

---

௫௭ - ௬0. காட்டச்செய்யப் பாட ஆடும்பந்தர் கண்டு உளஞ்சிறந்து மென்க.

௬௧. துணை - பெண்ணன்னம். ௬௨. தோகை - ஆண்மயில்.

௬௩. கொட்பன - சுழலுவனவற்றை.

௬௪. ஒருசிறை- ஒரு பக்கம்.

௬௫. மாமணிவண்ணன் - கண்ணன். தம்முன் - பலதேவர். பிஞ்ஞை - நப்பின்னை.

௬௬. ஆடிய- (துவராபதியில் எருமன்றத்தே அக்காலத்து) ஆடிய. குரவை - கைகோத்தாடுங்கூத்து ; இதனை, வரிக்கூத்தின் ஒருறுப்பென்றும், வினோதக்கூத்து ஆறினுள்ஒன்றென்றும் கூறுவர் அடியார்க்கு நல்லார் ; சிலப் ௩ : ௧௨.

௬௫ - ௬௬. கண்ணனும் பலதேவரும் நப்பின்னையுமாகிய மூவரும் துவராபதியில் எருமன்றத்தே குரவைக்கூத்து ஆடியதனை, “மாயவன் றம் முன்னினொடும் வரிவளைக்கைப் பின்னையொடுங் கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற்கோதை புறஞ்சோர, வாய்வளைச்சீர்க் கடிபெயர்த்திட்டசோதையார் தொழுதேத்தத், தாதெருமன் றத்தாடுங் குரவையோ தகவுடைத்தே” (சிலப். ௧௭) என்பதனாலுணர்க.

௬௧ - ௬௬. அன்னத்திற்குப் பலதேவரும், மயிற்பேடைக்கு நப்பின்னையும், தோகைக்குக் கண்ணனும் உவமைகள். கொட்பனவற்றைக் கண்டு மகிழ்வெய்திக் குரவையிஃதாமென நோக்கியுமென்க.

௬௭. கோங்கலர் - கோங்கம்பூ. ௬௮. மஞ்ஞை - மயில்.

௭0. பாவை - பெண். என்றும் - என்று கருதியும்.

௬௭ - ௭0. கோங்கலர்க்குப் பாலையுடைய பொற்றட்டும், மாங்கனிக்குக் கிளியும், மயிலுக்குப் பெண்ணும் உவமைகள்.

(பி - ம்.) ௬0. ‘சிறந்து’ ௬௧. ‘அனமொடும்’ ௬௨. ‘பேடையுஞ் சேவலுங்கூடி’ ௬௪. ‘சிறை கண்டா.....வெய்திய’ ௬௫. ‘பின்னையும் ௬௬. ‘குரவையதாமென’ ௭0. ஊட்டுமோபாவை’

மணிமலர்ப் பூம்பொழி லகவயி னிருந்த
பிணவுக்குரங் கேற்றிப் பெருமதர் மழைக்கண்
மடவோர்க் கியற்றிய மாமணி யூசல்
கடுவ னூக்குவது கண்டுநகை யெய்தியும்
பாசிலை செறிந்த பசுங்காற் கழையொடு
வால்வீ செறிந்த மராஅங் கண்டு
நெடியோன் முன்னொடு நின்றன னுமெனத்
தொடிசேர் செங்கையிற் றொழுதுநின் றேத்தியு
மாடற் கூத்தினோ டவிநயந் தெரிவோர்
நாடகக் காப்பிய நன்னூ னுனிப்போர்
பண்ணியாழ் நரம்பிற் பண்ணுமுறை நிறுப்போர்

எஉ. பிணவுக்குரங்கு - பெண்குரங்கு ; "பன்றி புல்வாய் நாயென மூன்று, மொன்றிய வென்ப பிணவென் பெயர்க்கொடை" (தொல். மரபு. ருஅ) என்னும் சூத்திரத்தில், 'ஒன்றிய' என்றதனாற், 'பிணவு' என்பது குரங்குக்கும் கொள்ளப்பட்டது.

எங. மடவோர்க்கு - மகளிர்க்கு.

எச. கடுவன் - ஆண்குரங்கு ; "குரங்கி னேற்றினைக் கடுவ னென்றலும்" (தொல். மரபு. சூ. சுஅ.) ஊக்குவது - செலுத்துதலை.

எஉ - ச. கடுவன், பிணவுக்குரங்கை யேற்றி ஊசலை ஊக்குவது கண்டு நகையெய்தியுமென்க. எரு. கழை - மூங்கில்.

எசு. வால்வீ - வெள்ளியமலர். மராம் - வெண்கடம்பு.

எஎ. நெடியோன் - கண்ணன். முன் - தமையன் ; என்றது பலதேவரை.

எரு - எ. கழைக்குக் கண்ணனும் வெண்கடம்பிற்குப் பலதேவரும் உவமைகள். மராத்திற்குப் பலதேவர் : கலி. உசு : க ; கார். ககூ.

எஅ. தொடி - வீரவளை ; "தொடித்தோட்கை" மதுரை. ஙச.

எகூ. அவிநயம் - கதைதழுவாதே பாட்டுக்களின் பொருள்தோன்றக் கைகாட்டி அபிநயிப்பது.

அ0. நாடகம் - கதைதழுவிவருங்கூத்து. காப்பியம் - காவ்யம். நாடகக்காப்பியமாகிய நன்னூலென்க. நுனிப்போர் - கூர்ந்து ஆராய்வோர் ; "நூற்பொரு ளுணர்ந்தோர் நுனித்தனர்" (ஙஅ) என இக் காதையிலேயே முன்பு வந்திருத்தல் காண்க.

அக. பண்களையுடைய வீணைநரம்புகளிற் பண்களை முறையே நிறுத்துவோர்.

(பி - ம்.) எஉ. 'பெருந்தாமரைக்கண்' எச. 'கண்மெகிழ்வெய்தியும்' எரு. 'காலிக்கழையொடு'

தண்ணுமைக் கருவிக் கண்ணெறி தெரிவோர்
குழலொடு கண்டங் கொளச்சீர் நிறுப்போர்
பழுநிய பாடல் பலரொடு மகிழ்வோ
ராரம் பரிந்த முத்தங் கோப்போ
ரீரம் புலர்ந்த சாந்தந் திமிர்வோர்
குங்கும வருணங் கொங்கையி னிழைப்போ
ரஞ்செங் கழுநீ ராயிதழ் பிணைப்போர்
நன்னெடுங் கூந்த னறுவிரை குடைவோர்
பொன்னி னாடியிற் பொருந்துபு நிற்போ
ராங்கவர் தம்மோ டகலிரு வானத்து
வேந்தனிற் சென்று விளையாட் டயர்ந்து

௮௨. தண்ணுமைக்கருவி - மத்தளம்; இதனை உத்தமத்தோற் கருவியென்பர். கண்ணெறி தெரிவோர் - அதன் முகத்தில் அடித்தலை ஆராய்வோர்; கண் - வாத்தியங்களின் முகம்; "பண்ணமை முழவின் கண்ணெறி யறிந்து" சிலப். ௩ : ௪௧.

௮௩. குழலொடு கண்டம் கொள - வேய்ங்குழலோடு மிடற்றுப் பாடல் பொருந்தும் வண்ணம். சீர் - தாளவறுதி.

௮௪. பழுநிய பாடல் - முற்றுப்பெற்ற இசைப்பாடல். மகிழ்வோர் - மகிழ்ந்துபாடுவோர்.

௮௫. ஆரம் பரிந்தமுத்தம் - ஆரம் அறுபடுதலாற் சிந்தியமுத்துக் கள்.

௮௬. புலர்ந்த சாந்தம் - உலர்ந்த சந்தனம்.

௮௭. குங்குமவருணம் - சிவந்ததொய்யிற்குழம்பு. இழைப்போர் - எழுதுவோர்.

௮௮. ஆயிதழ்பிணைப்போர் - அழகிய இதழைத் தொடுப்போர்.

௯௦. ஆடி - கண்ணாடி.

௭௧ - ௯௧. தெரிவோரும், நுனிப்போரும், நிறுப்போரும், தெரிவோரும், நிறுப்போரும், மகிழ்வோரும், கோப்போரும், திமிர்வோரும், இழைப்போரும், பிணைப்போரும், குடைவோரும், நிற்போருமாகிய அவர்களோடென்க.

௯௧ - ௨. வானத்து வேந்தனில் - இந்திரன்போல; "வேந்தன் மேய தீம்புன லுலகமும்" (தொல். அகத். ௫. ௫), "வேந்தனும் வேந்து கெடும்" (குறள், ௮௯௯) என வருதலால், வேந்தனென்றதற்கே இந்திரனென்று பொருள்கூறினும் இழுக்காது. விளையாட்டு அயர்ந்து - விளையாட்டை விரும்பிச்செய்து.

(பி - ம்.) ௮௪. 'பழனிப்பாடல்பலவொடுமகிழ்வோர்' ௮௫ - ௮. 'கோப்போர், செங்கழுநீராற் சேயிதழ் பிணிப்போர்' ௮௯. 'கூந்தனூறு விரை' ௯௦. 'பொன்னனியாடி', 'பொன்னணி யாடியின்.'

குருந்துந் தளவுந் திருந்துமலர்ச் செருந்தியு
முருகுவிரி முல்லையுங் கருவிளம் பொங்கரும்
பொருந்துபு நின்று திருந்துநகை செய்து
குறுங்கா னகுலமு நெடுஞ்செவி முயலும்
பிறழ்ந்துபாய் மானு மிறும்பகலா வெறியும்
வம்மெனக் கூஉய் மகிழ்துணை யொடுதன்
செம்மலர்ச் செங்கை காட்டுபு நின்று
மன்னவன் றானு மலர்க்கணை மைந்தனு
மின்னிள வேனிலு மிளங்காற் செல்வனு
மெந்திரக் கிணறு மிடுங்கற் குன்றமும்
வந்துவீ ழருவியு மலர்ப்பூம் பந்தரும்
பரப்புநீர்ப் பொய்கையுங் கரப்புநீர்க் கேணியு
மொளித்துறை யிடங்களும் பளிக்கறைப் பள்ளியும்
யாங்கணுந் திரிந்து தாழ்ந்துவிளை யாடி

கூ௩. தளவு - செம்முல்லை. செருந்தி - ஒருமரம்; இது செருந்தெனவும் வழங்கும்.

கூ௪. முருகு - வாசனை. கருவிளை - ஒருமரம்; "அந்தண் ணகிலுஞ் சந்தனக் குழையுங், கருவிளங் கோடும்" (பெருங். ௧.௪௧:௯௨-௩.) பொங்கர் - சோலை; கிளையுமாம்.

கூ௬. நகுலம் - கீரி. கூ௭. இறும்பு - குறுங்காடு. வெறி - ஆடு.

கூ௮. வம்மெனக்கூஉய் - வாருமென்று கூவி; வாருமென்றது வம் என நின்றது; "கதுமெனக் கரைந்து வம்மெனக் கூஉய்" (பொருந. ௧0௧.) மகிழ் துணை - இராசமாதேவி.

கூ௯. காட்டுபு - காட்டி. ௧00. மலர்க்கணை மைந்தன் - மன்மதன்.

௧0௧. இன்னிள வேனில் - இனிய இளவேனிற்பருவம்; அஃதாவது சித்திரை வைகாசி மாதங்கள்; (சிலப். ௮: ௫௭.) இளங்காற் செல்வன் - தென்றற்காற்றாகிய செல்வன்; "சிறுகாற் செல்வன் மறுகிற் றூற்ற" சிலப். ௪: ௧௮.

௧0௨. எந்திரக்கிணறு - நீரை நிறைக்க வேண்டுமாயின் நிறைத்துப் போக்கவேண்டுமாயிற் போக்குதற்குரிய கிணறு. இடுங்கற்குன்றம் - செய்குன்று.

௧0௪. கரப்புநீர்க்கேணி - மறைதலையுடைய நீரையுடைய கிணறு; இதனை அந்தக்கேணி யென்பர்.

௧0௫. பளிக்கறை - பளிங்கறை. பள்ளி - இடம்.

௧0௬. யாங்கணும் - கிணறும் குன்றமும் அருவியும் பந்தரும் பொய்

(பி - ம்.) கூ௩. 'குருகுந்தளவு திருமலர் சொரிந்து', 'குருகுந்தளவுந் திருமலர்ச் செருந்தியும்.' கூ௭. 'விரும்புகயாவெறியும்', 'இரும்பகவா வெறி.' ௧0௨. 'இடுதற்குன்றமும்' ௧0௪. 'கரப்புநீர்க்கணியு'

மகத வினைஞரு மராட்டக் கம்மரு
மவந்திக் கொல்லரும் யவனத் தச்சருந்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்
கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினைப்
பவளத் திரள்காற் பன்மணிப் போதிகைத்
தவள நித்திலத் தாமந் தாழ்ந்த
கோணச் சந்தி மாண்வினை விதானத்துத்
தமனியம் வேய்ந்த வகைபெறு வனப்பிற்
பைஞ்சேறு மெழுகாப் பசும்பொன் மண்டபத்

தையும் கேணியும் இடங்களும் பள்ளியுமாகிய எவ்விடத்தும். திரிந்து - மன்னவன்றானும் மைந்தனும் வேனிலும் செல்வனும் திரிந்து.

கoஉ - கூ. இவ்வடிகளிற் போலவே, "அந்தக் கேணியு மெந்திரக் கிணறுந், தண்பூங் காவுந் தலைத்தோன் றருவிய, வெண்சுதைக் குன்றமும் வேண்டுவ பிறவு, மிளையோர்க் கியற்றிய விளையாட் டிடத்த, சித்திரப் பூமி வித்தக நோக்கி" (பெருங். க. ௩௩ : ௩-எ), "பளிக்கறைப் பூமியும் பந்தெறி களத்து, மணிக்கயிற் றூசன் மறலிய விடத்துங், கொய்ம்மலர்க் காவும் பொய்கைக் கரையு, மந்தக் கேணியும் வந்துபெயர் கூவி" (பெருங். க. ௩௪ : ககரு - அ) என வருதல்காண்க.

கoஎ. மகதவினைஞர் - மகதநாட்டிற்பிறந்த இரத்தினவேலைக்காரர். மராட்டம் - மகாராஷ்டிர தேசம்.

கoஅ. அவந்தி - அவந்திதேசம். யவனம் - யவனதேசம்.

கoஎ - அ. மகததேசத்துப் பிறந்த இரத்தின வேலைக்காரர் முதலியோர் தொழிலிற் பெயர்பெற்றவரென்பதை, "யவனத் தச்சரு மவந்திக் கொல்லரு, மகதத்துப் பிறந்த மணிவினைக் காரரும், பாடலிப் பிறந்த பசும்பொன் வினைஞருங், கோசலத் தியன்ற வோவியத் தொழிலரும், வத்த நாட்டு வண்ணக் கம்மரும்" (பெருங். க. ருஅ: ௪o - ௪௪) என்பதனாலுமுணர்க.

கoஎ - கூ. மேற்கூறிய மகதவினைஞர் முதலியோர் தண்ணிய தமிழ் நாட்டிற்பிறந்த தொழில் செய்வாருடனேகூடி.

ககஉ. நித்திலத்தாமம் - முத்துமாலை.

கக௩. கோணச்சந்தி - கோணமாகிய சந்தி; "சந்திக் கோணமு மந்திர வாணியும்" (பெருங். க. ருஅ : ருக.) விதானம் - மேற்கட்டி.

கக௪. தமனியம் - பொன்.

ககரு. பைஞ்சேறு மெழுகா - ஆப்பியால் மெழுகப்படாத; "பைஞ் சேறு மெழுகிய படிவ நன்னகர்" (பெரும்பாண். உகூஅ); சந்தனத்தால் மெழுகியவென்றபடி; "மங்கல வெள்ளை வழித்துமுத் தீர்த்தபின்" (சீவக. க௪எஎ) என வருதல் காண்க.

(பி - ம்.) கoஎ. 'மாட்டக்கம்மரும்' ககரு. 'செம்பொன் மண்டபத்து'

இந்திர ரொருவர் வெற்றிப் பேறும்
வாயி லிசைந்து மன்னவ ரருளாற்
செய்கைத் தந்திரியுஞ் செவ்வியின் வைகி
வெந்தா மன்னனை நெறி யிகந்தாக் கூப்ப
௪௨௦ வஞ்சியி னிருந்து வஞ்சி சூடி
முறஞ்செவி யானையுந் தேரு மாவு
மறங்கொளு [illegible] வயவரு மிடைந்த
[illegible] கோசிலொரு [illegible] வந்தோர்

௪௧௬. இந்திரவொருவர் - இந்திரச்செல்வமுடைய அரசர்.

௪௧௬-௪௧௭. இந்திரவொருவர், தேவியொடு [illegible] தாம் போரிலும் பகையரசரொடும் [illegible] செய்தும் [illegible] போரிலே [illegible] பொருந்து [illegible] [illegible] நின்று [illegible] [illegible] தோற்ற [illegible].

௪௧௭. வாயிலுக்கு இசைந்து - வாயில் காவலர்க்குத் தெரிவித்து. அருளால் - கட்டளையால்.

௪௧௮. செய்கைத்தந்திரியும் - பாகனை இடத்தே தாம் [illegible] தல்லாமலும். செவ்வியின் - சமயத்தில்.

௪௧௯-௪௧௯. கோட்டங்காவலர் இசைந்தமையால் [illegible] வாயிலோயாக் கட்டிசு.

௪௧௯. குறையாது மன்னவரிடுங்கி, [illegible] [illegible] சொல்லி.

௪௨௦. வஞ்சியின் இருந்து - கருவூரிலிருந்து. வஞ்சி சூடி - [illegible] [illegible] மாலையைச்சூடி; "பூவா வஞ்சியிற் பூத்த வஞ்சி, வாய்வா [illegible] [illegible] மகிழமைக் களித்த" (௨௩ : ௯௦ - ௯௩) என்று [illegible] [illegible] கூறப்பட்டிருத்தல் காண்க.

௪௧௯-௨௦. இனி, "வஞ்சி மன்னனை வேந்தனே வேந்து, வஞ்சித் திணைசெய் நடக்குறிக் [illegible]" (தொல். புறத். ௬. ௪), "வாடா வஞ்சி [illegible], கடாஅமன் கொள்ளுறிக் [illegible]", "வஞ்சி வளர்ந்தார் வாடிய வள்ளாரப்பு, [illegible] [illegible] [illegible]" (பு - வெ. ௨௩.) என வருவனவற்றாற் [illegible].

௪௨௧. முறஞ்செவி யானை - முறம் போலும் [illegible] யானை; "முறஞ்செவி வாரணம்" திரு. ௩௦ : [illegible].

௪௨௨. மறம் - வீரம். வயவர் - வீரர்.

[illegible]

(௪ - ௬.) [illegible]

[illegible]

சிலைக்கய னெடுங்கொடி செருவேற் றடக்கை
யார்புனை தெரிய லிளங்கோன் றன்னாற்
காரியாற்றுக் கொண்ட காவல் வெண்குடை
வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி
யொளியொடு வாழி யூழிதோ றூழி
வாழி யெங்கோ மன்னவர் பெருந்தகை
கேளிது மன்னோ கெடுகநின் பகைஞர்
யானைத் தீநோய்க் கயர்ந்துமெய் வாடியிம்
மாநகர்த் திரியுமோர் வம்ப மாத
ரருஞ்சிறைக் கோட்டத் தகவயிற் புகுந்து
பெரும்பெயர் மன்ன நின்பெயர் வாழ்த்தி
யையப் பாத்திர மொன்றுகொண் டாங்கு

றது, சேர பாண்டியர்களை; பின், "சிலைக்கய னெடுங்கொடி" என்று வருதலால் இங்ஙனங் கொள்ளப்பட்டது.

கஉச. சிலைக் கயல் நெடுங்கொடி - சேரனுடைய விற்கொடியையும், பாண்டியனுடைய கயற்கொடியையும்.

கஉரு. ஆர் - ஆத்தி; இது சோழர்களுக்கு உரிய அடையாள மாலை. இளங்கோன் - தம்பி; இவன் யுவராசாவாக இருத்தலின், 'இளங்கோன்' என்றார் போலும்.

கஉசு. காரியாறு - ஒருநதியின்பெயர். இதனை, 'காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி' (புறநா. சஎ), "செல்கதிமுன் னளிப்பார்தந் திருக்காரிக் கரைபணிந்து" (பெரிய. திருநா. நுசநு) என வருவனவற்றாலுணர்க. பெரும் போர்புரிவோர் ஆற்றிடையே அது செய்தல் இயல்பு; "உடன்றுமேல் வந்த வாரிய மன்னரைக், கடும்புனற் கங்கைப் பேர்யாற்று வென்றோய்" சிலப். உ அ : கஉ0 - உக.

கஉஎ. மாவண்கிள்ளி: விளி; இஃது அரசன் பெயர்.

கஉரு - எ. வந்தோருடைய கொடிகளை இளங்கோனாற் காரியாற்றுக்கொண்ட மாவண்கிள்ளியென்க.

கஉஅ. ஒளி - உறங்காநிற்கவும் உலகங்காக்கின்ற அரசரிடத் துள்ள கடவுட்டன்மை; "இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற, வொளியோ டொழுகப் படும்" (குறள், சகஅ); "உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி, கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்" சீவக. உசஅ.

கநுக. அயர்ந்து - கவலையுற்று.

கநுஉ. வம்பமாதர் - காயசண்டிகை; வம்பு - புதுமை.

கநுச. பெரும்பெயர் - மிக்கபுகழ்; "பெரும்பெயர்மன்னவன்" சிலப். கநு : கநுஅ.

(பி - ம்.) கஉஅ. 'ஒலியொடுவெழாஅதூழி' கஉகூ. 'வாழியெங்கோ வாழிய பெருந்தகை'

மொய்கொண் மாக்கண் மொசிக்கவூண் சுரந்தன
ளூழிதோ றாழி யுலகங் காத்து
வாழி யெங்கோ மன்னவ வென்றலும்
வருக வருக மடக்கொடி தானென்
றருள்புரி நெஞ்சமொ டரசன் கூறலின்
வாயி லாளரின் மடக்கொடி தான்சென்
றுய்கழல் வேந்த னருள்வா ழியவெனத்
தாங்கருந் தன்மைத் தவத்தோய் நீயார்
யாங்கா கியதிவ் வேந்திய கடிஞையென்
றரசன் கூறலு மாயிழை யுரைக்கும்
விரைத்தார் வேந்தே நீநீடு வாழி
விஞ்சை மகள்யான் விழவணி மூதூர்
வஞ்சந் திரிந்தேன் வாழிய பெருந்தகை
வானம் வாய்க்க மண்வளம் பெருகுக
தீதின் றாக கோமகற் கீங்கீ
தையக் கடிஞை யம்பல மருங்கோர்

க௩சு. மொய் - நெருக்கம். மொசிக்க - உண்ண; "மையூன் மொசித்த வொக்கலொடு" புறநா. கூசு.

க௩உ - சு. மாதர் புகுந்து வாழ்த்திக் கொண்டு ஊண்சுரந்தனள்.

க௩அ. என்றலும் - என்று கோட்டங்காவலர் கூறலும்.

க௩எ - அ. சிலப். கக: கரு - சு, உரு: கஅக - உ, உஎ: க௩கூ - ச0, உஅ: கஅரு - சு.

க௩கூ. மடக்கொடி வருக வருகவென்று.

கசக. வாயிலாளரின் - வாயிலாளர்களால்.

கசஉ. வாழியவென - வாழ்கவென்று மணிமேகலைசொல்ல.

மேல்வருவது அரசன் கூற்று.

கசச. நீ ஏந்திய இப்பாத்திரம் எங்கே கிடைத்தது.

மேல்வருவன மணிமேகலைகூற்று.

கசஎ. விஞ்சைமகளென்பதற்கு மந்திரத்தால் உருமாறிய மகளென்றும் வித்தியாதரமகளென்றும் இருபொருள்கொள்க: விஞ்சை - மந்திரம். பின்வருவனவும் இப்படியே ஏற்பப்பொருள்கொள்ளுதற்குரியவை.

கசகூ. வானம் - மழை. கரு0. கோமகற்குத் தீதின்றாகுக.

கரு0 - ருக. ஈது ஐயக்கடிஞை - இது பிச்சைப்பாத்திரம்.

(பி - ம்.) க௩சு. 'முசிக்க', 'பொசிக்க.' கசஉ. 'தாள்வாழிய' கச௩. 'தவத்தீர்நீர்' கசரு. 'அரசுகூறலும்' கசசு. 'விரைதார் வேந்தேநீடூழி' கரு0 - ருக. 'கோமகன்றனக்கிங், கைய கடிஞை'

தெய்வந் தந்தது திப்பிய மாயது
யானைத் தீநோ யரும்பசி கெடுத்த
தூனுடை மாக்கட் குயிர்மருந் திதுவென
யான்செயற் பாலதென் னிளங்கொடிக் கென்று
வேந்தன் கூற மெல்லிய லுரைக்குஞ்
சிறையோர் கோட்டஞ் சீத்தரு ணெஞ்சத்
தறவோர்க் காக்கு மதுவா ழியரென
வருஞ்சிறை விட்டாங் காயிழை யுரைத்த
பெருந்தவர் தம்மாற் பெரும்பொரு ளெய்தக்
கறையோ ரில்லாச் சிறையோர் கோட்ட
மறவோர்க் காக்கின னரசாள் வேந்தென்.

௰௯.—சிறைக்கோட்டமறக்கோட்டமாக்கியகாதை முற்றிற்று.

---

௧௫௨. திப்பியமாயது - தெய்வலோகத்திருந்து உண்டாகிய பொருளாகவுள்ளது.

௧௫௪. உடம்பு மெலிந்தவர்களுக்கு உயிரைக்கொடுக்குமருந்து. என - என்று மணிமேகலை சொல்ல. ௧௫௭. ழ. மணி. ௨௦ : ௧௧.

௧௫௭ - ௮. சிறைச்சாலையை இடித்துத் தூய்மைசெய்து அவ் விடத்தை அருள்பொருந்திய மனத்தையுடைய முனிவர்களுக்கு உரிய இடமாகச் செய்யுமதுவே நீ செயற்பாலதென்று மணிமேகலை சொல்ல.

௧௬௦. பெரும்பொருள் - அறம் ; ஞானமுமாம்.

௧௬௧. கறையோர் - கடமை கொடுப்போர். இல்லாக்கோட்ட மென்க ; என்றதனால், அரசன் கறைவீடுசெய்த செங்கோன்முறையை யுடையனென்றவாறாயிற்று ; இதனை, "சிறைப்படு கோட்டஞ் சீமின் யாவதுங், கறைப்படு மாக்கள் கறைவீடு செய்ம்மி, னிடுபொரு ளாயினும் படுபொரு ளாயினு, முற்றவர்க் குறுதி பெற்றவர்க் காமென, யானை யெருத்தத் தணிமுர சிரீஇக், கோன்முறை யறைந்த கொற்றவேந்தன்", "சிறையோர் கோட்டஞ் சீமின் யாங்கணுங், கறைகெழு நாடு கறைவீடு செய்ம்மென" (சிலப். ௨௩ : ௧௨௬ - ௩௧, ௨௮ : ௨௦௩ - ௪), "தம் பியை முகத்து ணோக்கி, யூர்பிணி கோட்டஞ் சீப்பித் துருதவ னுண்ட் நாட்டைப், பார்பிணி கறையி னீங்கப் படாமுர சறைவி யென்றான்" (சீவக. ௨௩௭௨) என்பனவற்றாலறிக.

௧ - ௧௬௨. தாரோன் வணங்கிக் கூறத்தெய்வங் கூறலும், உள்ளங் கலங்கி வருந்தி அறிவாமெனப் பெயர்வோன்றன்னை நீலயானை தொடர

(பி - ம்.) ௧௫௨. 'தெய்வந்தந்து திபைபியமாயது' ௧௫௪. 'மானிடமாக்க ளுயிர்மருந்திது' ௧௫௬. 'வேந்தன் கூறி' ௧௫௭. 'கோட்டஞ் சிதைத்து' ௧௫௮. 'அறவோர் காக்குமதிவாழிய' ௧௫௯. 'அருஞ்சிறைவிடுத்ததாயிழை தானென' ௧௬௨. 'மறவோர் ஙகாகினை ளாசாள'

எஃகு உளங்கிழிப்ப அவன் பொத்தி உயிர்த்துப் போயபின், மணிமேகலை நுனித்தனளென்று கருதி வாங்கிக் கோட்டம்புகுந்து மாக்களை ஊட்டலும், காவலர் வியந்து கோமகனுக்கு இசைத்துமென்றேகி, திருவன் சென்று ஏறலும், வாயிலுக்கிசைத்து வணங்கி, 'மன்னவ, வம்ப மாதர் ஊண் சுரந்தனள்' என்றலும், 'வருகவருக' என்று அரசன் கூறலின், மடக்கொடி வாயிலாளரிற் சென்று, 'நின் அருள்வாழிய' என, 'யாங்காகியது' என்று அரசன் கூறலும், ஆயிழையுரைக்கும் : அங்ஙனமுரைப்பவள், 'உயிர்மருந்து இது' என, 'யான் செய்தற்பாலது என்' என்று வேந்தன்கூற, மெல்லியல் உரைக்கும் ; அங்ஙனம் உரைப்பவள், 'நீ செயற்பாலது அறவோர்க்கு ஆக்குமது' என, வேந்து பெரும் பொருளெய்துதற்குக் கோட்டத்தை அறவோர்க்கு ஆக்கினனென வினைமுடிவுசெய்க.

இருபதாவது

உதயகுமரனைக் காஞ்சனன் வாளாலெறிந்தகாதை.

[இருபதாவது மணிமேகலை காயசண்டிகைவடிவெய்தக் காயசண்டிகை கணவனுகிய காஞ்சனனென்னும் விச்சாதரன் வந்து காயசண்டிகையாமெனக்கருதி அவள் பின்னிலைவிடா உதயகுமரனைப் புதையிருட்கண் உலகவறவியில் வாளாலெறிந்துபோன பாட்டு.]

அரச னாணையி னாயிழை யருளா
னிரயக் கொடுஞ்சிறை நீக்கிய கோட்டந்
தீப்பிறப் புழந்தோர் செய்வினைப் பயத்தான்
யாப்புடை நற்பிறப் பெய்தினர் போலப்
பொருள்புரி நெஞ்சிற் புலவோன் கோயிலு

---

௨. நிரயக் கொடுஞ்சிறை - நரகவேதனையைச்செய்யும் கொடிய சிறை. கோட்டம் - அறை.

௩. தீப்பிறப்புழந்தோர் - கொடிய பிறவியிற்பிறந்து வருந்தினோர்.

௪. யாப்பு - பொருத்தம்.

௫. பொருள்புரிநெஞ்சிற் புலவோன் - சத்தியம் நான்கினையும் விரும்பிய நெஞ்சினையுடைய புத்தன் ; பொருள் - சத்தியம்.

(பி - ம்.) ௩. 'செய்தவம் பயந்ததால்', 'செய்ததவப்பயத்தால்.' ௪. 'எய்தினபோல'

மருள்புரி நெஞ்சத் தறவோர் பள்ளியு
மட்டிற் சாலையு மருந்துநர் சாலையுங்
கட்டுடைச் செல்வக் காப்புடைத் தாக
வாயிழை சென்றதூஉ மாங்கவ டனக்கு
வீயா விழுச்சீர் வேந்தன் பணித்ததூஉஞ்
சிறையோர் கோட்டஞ் சீத்தரு ணெஞ்சத்
தறவோர் கோட்ட மாக்கிய வண்ணமுங்
கேட்டன னாகியத் தோட்டார் குழலியை
மதியோ ரெள்ளினு மன்னவன் காயினும்
பொதியி னீங்கிய பொழுதிற் சென்று
பற்றினன் கொண்டென் பொற்றே ரேற்றிக்
கற்றறி விச்சையுங் கேட்டவ ளுரைக்கு
முதுக்குறை முதுமொழி கேட்குவ னென்றே

---

௬. அறவோர் - பௌத்தமுனிவர்; "அறவோர் பள்ளியு மற னோம் படையும்" (சிலப். ரு : ௧எ௯); "அருணெஞ்சத், தறவோர் கோட்டம்" (௧௧ - உ) என்று இக்காதையிற் பின்பு கூறுதல் காண்க.

எ. அட்டிற்சாலை - மடைப்பள்ளி. அருந்துநர்சாலை - போசன சாலை.

அ. கட்டு - உறுதி. காப்பு உடைத்தாக - காவலையுடையதாக.

உ - அ. கோட்டம் காப்புடைத்தாகவென இயைக்க.

௯. ஆயிழை - மணிமேகலை.

௧0. வீயாவிழுச்சீர் - மாறாத சிறந்த கீர்த்தி. பணித்தது - சொல்லியது; அது, "யான்செயற் பாலதெ னிளங்கொடிக்கு" (மணி. ௧௯: ௧௫௫) என்றது.

௧௧ - உ. அருணெஞ்சத் தறவோர் : மணி. உ0 : ௬.

௧௩. கேட்டனனாகி - (உதயகுமரன்) கேட்டு. தோடார்குழலி, தோட்டார்குழலியென விகாரம்; சிலப். ப. ௪0௧.

௧௪. மதியோர் எள்ளினும் - அறிவுடையோர் இகழ்வாராயினும். காயினும் - கோபித்தாலும்.

௧௫. பொதியில்=பொது இல் - அம்பலம்.

௧௬. பற்றினன்கொண்டு - பிடித்துக் கொண்டு.

௧எ. விச்சை - வித்தை; உம்மை, இறந்தது தழீஇயது.

௧அ. முதுக்குறை முதுமொழி : மணி. ௧அ : ௧௬எ, உ0 : எ௪.

(பி - ம்.) எ. 'அருந்தினர்' ௯. 'சென்றதுமாங்' ௧௧ - உ. 'சிறையோர் நீங்கிச் சிறையோர்கோட்ட, மறவோர் கோட்ட' ௧௩. 'தோட்டலர் குழலியை' ௧௫. 'நீங்கிப் பொழுதிற்' ௧எ. 'கற்றறி விஞ்சையும்' ௧அ. 'முதுக்குறை மொழியுங் கேட்குவன்'

மதுக்கமழ் தாரோன் மனங்கொண் டெழுந்து
பலர்பசி களையப் பாவைதா னொதுங்கிய
வுலக வறவியி னூடுசென் றேறலு
மழைசூழ் குடுமிப் பொதியிற் குன்றத்துக்
கழைவளர் கான்யாற்றுப் பழவினைப் பயத்தான்
மாதவன் மாதர்க் கிட்ட சாப
மீரா றாண்டு வந்தது வாராள்
காயசண் டிகையெனக் கையற வெய்திக்
காஞ்சன னென்னு மவனுடன் கணவ
னோங்கிய மூதூ ருள்வந் திழிந்து
பூத சதுக்கமும் பூமலர்ச் சோலையு
மாதவ ரிடங்களு மன்றமும் பொதியிலுங்

கக. தாரோன் - உதயகுமரன். உ௦. ஒதுங்கிய - சென்ற.

உக. ஊடு - உள்ளே.

கூ - உக. சென்றதூஉம் பணித்ததூஉம் வண்ணமும் கேட்டு எள்ளினும் காயினும் சென்று குழலியைப்பற்றிக்கொண்டு ஏற்றிக் கேட்டுக் கேட்குவனென்று மனங்கொண்டு தாரோன் எழுந்து சென்று ஏறலு மென்க.

மேலே, காஞ்சனன் காயசண்டிகையைத் தேடிப்போந்ததும், உதயகுமரனைக் கொன்றதும் கூறப்படும்.

உஉ. பொதியிற்குன்றம் - பொதியின் மலை.

உங. கழை - மூங்கில். யாற்று - ஆற்றில்.

உச. மாதவன் - விருச்சிகன். மாதர்க்கு - காயசண்டிகைக்கு.

உரு. ஈராறாண்டு - பன்னிரண்டாவது வருடம்.

உசு. கையறவு - செயலறுதல். உரு - சு. காயசண்டிகை வாராள்.

உஎ. மூதூர் - காவிரிப்பூம்பட்டினம். இழிந்து - இறங்கி; என்றதனால், காஞ்சனன் ஆகாய கமனமுடையனென்பது பெறப்பட்டது; "விஞ்சையன் போயினன் விலங்குவிண் படர்ந்தென்" (கஉகூ) என்று இக் காதையிற் பின்வருதல் காண்க.

உகூ. பூதசதுக்கம் - தவவேடத்தில் மறைந்துநின்று அத்தவத்திற்கு இழுக்கானவற்றின்கணொழுகும் பொய்வேடத்தார் முதலிய அறுவகையோரையும் பாசத்தாற் கட்டி அடித்துண்ணும் பூதம் நிற்றற்கிடமாகிய சதுக்கம்; சதுக்கம் - நாற்சந்தி; "தவமறைந் தொழுகும்.........பூதம் புடைத்துணும் பூத சதுக்கமும்" (ரு:கஉஅ - ௩ச) என்று சிலப்பதிகாரத்து வருதல் காண்க. பூ - பொலிவு:

௩௦. மன்றம் - ஊருக்குநடுவாய் எல்லாருமிருக்கும்மரத்தடி; "மன்றமும் பொதியிலும்" முருகு. உஉசு.

(பி - ம்.) உ௦. 'களைஇயபாவைதானொடுங்கிய'. உச. 'மாதவனமாற் கிட்ட' உஎ. 'வந்துபுகுந்து' உகூ. 'பூதச்சதுக்கமும் பூமரச் சோலையும்'

தேர்ந்தனன் றிரிவோ னேந்திள வனமுலை
மாந்தர் பசிநோய் மாற்றக் கண்டாங்
கின்றுநின் கையி னேந்திய பாத்திர
மொன்றே யாயினு முண்போர் பலரா
லானைத் தீநோ யரும்பசி களைய
வான வாழ்க்கைய ரருளினர் கொல்லெனப்
பழைமைக் கட்டுரை பலபா ராட்டவும்
விழையா வுள்ளமொ டவன்பா னீங்கி
யுதைய குமரன் றன்பாற் சென்று
நரைமூ தாட்டி யொருத்தியைக் காட்டித்
தண்ணறல் வண்ணந் திரிந்துவே றாகி
வெண்மண லாகிய கூந்தல் காணாய்
பிறைநுதல் வண்ணங் காணா யோநீ
நரைமையிற் றிரைதோற் றகையின் றாயது
விறல்விற் புருவ மிவையுங் காணா
யிறவி னுணங்கல் போன்றுவே றாயின
கழுநீர்க் கண்காண் வழுநீர் சுமந்தன
குமிழ்மூக் கிவைகா ணுமிழ்சீ யொழுக்குவ
நிரைமுத் தனைய நகையுங் காணாய்

---

௩௧. திரிவோன் - காஞ்சனன்.

௩௨. கண்டு - காஞ்சனன் கண்டு.

மேல்வருவன காஞ்சனன் கூற்று.

௩௫. நோய் - பஸ்மகவியாதி. ௩௬. வானவாழ்க்கையர் - தேவர்.

௩௫ - ௬. களைய அருளினர்கொல்.

௩௭. பலபாராட்ட - பலவற்றைக்கூறிப் பாராட்ட.

௩௮. அவன் - காஞ்சனன்.

௪௦. நரைமூதாட்டி - நரையையும் முதுமையையுமுடையவள்.

௪௧. 'தண்ணறல் வண்ணம்' என்பது முதலியன மணிமேகலை கூற்று. அறல் - கருமணல்.

௪௪. நரைமை - வெண்மை.

௪௬. இறவின் உணங்கல் - இறால்மீனின்வற்றல்.

௪௯. நகை - பல்.

(பி - ம்.) ௪௧. 'தண்ணலவண்ணந்திரிந்து வேறாகிய' ௪௨. 'கூந்தலுங் காணாய்' ௪௪. 'நரைமயிற்றினர் தோற்றேகையின்' ௪௮. 'ஒழுகுவ', 'ஒழுகுவன.' ௪௯. 'பல்லுங்காணாய்'

சுரைவித் தேய்ப்பப் பிறழ்ந்துவே றாயின
விலவிதழ்ச் செவ்வாய் காணா யோநீ
புலவுப் புண்போற் புலால்புறத் திடுவது
வள்ளைத் தாள்போல் வடிகா திவைகா
ணுள்ளூன் வாடிய வுணங்கல் போன்றன
விறும்பூது சான்ற முலையுங் காணாய்
வெறும்பை போல வீழ்ந்துவே றாயின
தாழ்ந்தொசி தெங்கின் மடல்போற் றிரங்கி
வீழ்ந்தன விளவேய்த் தோளுங் காணாய்
நரம்பொடு விடுதோ லுகிர்த்தொடர் கழன்று
திரங்கிய விரல்க ளிவையுங் காணாய்
வாழைத் தண்டே போன்ற குறங்கிணை
தாழைத் தண்டி னுணங்கல் காணா
யாவக் கணைக்கால் காணா யோநீ
மேவிய நரம்போ டென்புபுறங் காட்டுவ
தளிரடி வண்ணங் காணா யோநீ
முளிமுதிர் தெங்கி னுதிர்கா யுணங்கல்
பூவினுஞ் சாந்தினும் புலான்மறைத் தியாத்துத்
தூசினு மணியினுந் தொல்லோர் வகுத்த
வஞ்சந் தெரியாய் மன்னவன் மகனென

---

௪௦. சுரைப்பழத்தின்விதை பல்லுக்கு உவமையாதலை, "சுரை வித்துப் போலுந்தம் பல்" (நாலடி. ௪௧௫) என்பதனாலுமுணர்க.

௪௨. புலவு - புலால்நாற்றம்.

௪௩. வள்ளைத்தாள் - வள்ளைத்தண்டு. வடிகாது - வடிந்தகாது.

௪௫. இறும்பூது - அதிசயம்; "இறும்பூது போலுமஃ தறிந்தரு ணீயென" சிலப். பதி. ௯.

௪௭. திரங்கி - திரைந்து.

௪௯. உகிர்த்தொடர் - நகத்தின்தொடர்ச்சி.

௫௧. குறங்கு - துடை. இணை - இரண்டு. ௫௩. ஆவம் - அம்புக்கூடு.

௫௬. முளிமுதிர்தெங்கு - உலர்ந்த முதிர்ந்த தென்னை.

௫௭. "புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது" (௪ : ௧௧௪) என்றார் முன்னும்.

௫௯. தெரியாய் - தெரிந்துகொள்வாய்.

(பி - ம்.) ௪௩. 'வடிந்தகாது' ௪௫. 'சான்றனமுலையிவைகாணாய்' ௪௮. 'தோளிவைகாணாய்' ௪௯. 'உகிரொடு கழன்று' ௫௩. 'காலி வையுங் காணாய்' ௫௭. 'புலான்மறுத்தியாத்து'

விஞ்சை மகளாய் மெல்லிய லுரைத்தலுந்
தற்பா ராட்டுமென் சொற்பயன் கொள்ளாள்
பிறன்பின் செல்லும் பிறன்போ னேக்கு
மதுக்கம ழலங்கன் மன்னவன் மகற்கு
முதுக்குறை முதுமொழி யெடுத்துக் காட்டிப்
பவளக் கடிகையிற் றவளவா ணகையுங்
குவளைச் செங்கணுங் குறிப்பொடு வழாஅ
தீங்கிவன் காதல னாதலி னேந்திழை
யீங்கொழிந் தனளென விகலெரி பொத்தி
மற்றவ ளிருந்த மன்றப் பொதியிலுட்
புற்றடங் கரவிற் புக்கொளித் தடங்கினன்

---

௭௦. விஞ்சைமகளாய் - காயசண்டிகையாய். மெல்லியல் - மணிமேகலை.

மேல்வருவது காஞ்சனன்செய்தி.

௭௨. பிறனென்றது உதயகுமரனை. இங்கே பிறன்பின் செல்லு மென்றதுபோல, "எண்ணிப்பத் தங்கை யிட்டா லிந்திரன் மகளு மாங்கே, வெண்ணெய்க்குன் றெரியுற் ருற்போன் மெலிந்துபின் னிற்கு மன்றே" (௧௫௬௭) என்று சீவகசிந்தாமணியிலும் வந்திருத்தல்காண்க.

௭௪. பூ. மணி. ௧௮: ௧௬௭.

௭௫. பவளக்கடிகை - பவளத்துண்டம்; என்றது உதட்டினை.

௭௬. குறிப்பு - இங்கிதம்.

௭௫ - ௬. இவ்வடிகளின் பொருளோடு, "ஒத்தொளிர் பவளத் துள்ளொளி சிறந்த.........உளங்கொண் டொளித்தா ளுயிர்க்காப் பிட்டு" (௧௮: ௭௦ - ௭௧) என்று உதயகுமரன் கூறியவாக்கியம் ஒப்பு நோக்கற்பாலது.

௭௭. இவனென்றது, உதயகுமரனை. காதலன் - ஆசைநாயகன்.

௭௮. ஈங்கு ஒழிந்தனள் - இவ்விடத்திலேயே தங்கிவிட்டாள்; என்னைத் தவிர்ந்தாளென்றுமாம்; ஈங்கு, தன்மையையுணர்த்துதலை, "ஈங்ஙனிப்பன" (மணி. ௧௪: ௪௮) என்பதிற்காண்க. இகல் - மாறுபாடு.

௭௯. மன்றப்பொதியில் - மன்றமாகிய பொதியில்; இருபெயரொட்டு; இப்படியே, "மன்றப் பொதியிற், கந்துடை நெடுநிலைக் கடவுட் பாவை" (௨௧: ௬ - ௭) என்று பின்னும்வரும்.

௮௦. இங்கே காஞ்சனனுக்குப் பாம்பை உவமை கூறியதற்கேற்ப, "வேக வெந்தீ நாகங் கிடந்த, போகுயர் புற்றளை புகுவான் போல", "வெஞ்சின வரவ நஞ்செயி றரும்பத்,தன்பெரு வெகுளியி னெழுந்தபை

(பி - ம்.) ௭௦. 'மெல்லியலுரைக்கத்' ௭௨. 'பிறர்பின்செல்லினும் பிறர்போல்' ௭௪. 'எடுத்துக்காட்டப்' ௭௫. 'பவளக் கடிகையும்' ௭௮. 'ஈங்கொழிந்தனளென வகையெரி' ௭௯. 'பொதியிற்'

காஞ்சன னென்னுங் கதிர்வாள் விஞ்சைய
னுங்கவ னுரைத்த வரசிளங் குமரனுங்
களையா வேட்கை கையுதிர்க் கொள்ளான்
வளைசேர் செங்கை மணிமே கலையே
காயசண் டிகையாய்க் கடிஞை யேந்தி
மாய விஞ்சையின் மனமயக் குறுத்தன
ளம்பல மருங்கி லயர்ந்தறி வுரைத்தவிவ்
வம்பலன் றன்னொடிவ் வைகிரு ளொழியா
ளிங்கிவள் செய்தி யிடையிருள் யாமத்து
வந்தறி குவனென மனங்கொண் டெழுந்து
வான்றேர்ப் பாகனை மீன்றிகழ் கொடியனைக்
கருப்பு வில்லியை யருப்புக்கணை மைந்தனை
யுயாவுத் துணையாக வயாவொடும் போகி
யூர்துஞ் சியாமத் தொருதனி யெழுந்து
வேழம் வேட்டெழும் வெம்புலி போலக்
கோயில் கழிந்து வாயி னீங்கி
யாயிழை யிருந்த வம்பல மணைந்து

விரித்தென, விருந்தோ னெழுந்து" (௯௮ - ௯, ௧௦௪-௬) என இக்காதையிலேயே கூறுதல் காண்க.

௮௨. அவள் - மணிமேகலை. ௮௩. கையுதிர்க்கொள்ளான்-நீக்கான். மேல்வருவன உதயகுமரனுட்கோள்.

௮௬. மாயவிஞ்சையின் - மாயவித்தையினால்.

௮௭. அயர்ந்து - வருந்தி; மறந்தென்றுமாம். அறிவுரைத்த - பழமைக்கட்டுரை பல பாராட்டிய.

௮௮. வம்பலன் - அயலான். வைகிருள் - வைகறைப்பொழுது.

௯௧. வான்றேர் - ஆகாயத்திலுலவும் தென்றற்காற்றாகிய தேர்.

௯௨. மணி. ௧௮ : ௧௦௫, ௨௫ : ௯௦; "மைதுழா நெடுங்கணார் மனத்துட் காமனார், ரைதுலாங் கவர்கணை யரும்பு வைத்தவே". சூளா. குமார. ௫.

௯௩. உயாவுத் துணையாக - வினாவுந்துணையாக; கொண்டென்று ஒருசொல் வருவிக்க; தனியே சென்றானென்றபடி. வயா - வேட்கை மிகுதி; "வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம்" தொல். உரி. சூ. ௭௩.

௯௪. போயவன் நடுஇரவில் மீட்டும் எழுந்து வந்தான்.

(பி - ம்.) ௮௨ - ௩. 'உரைத்த வலர்தார் வேந்தனுங், களையாவேட்கையிற் கைவிதிற் கொள்ளா' ௮௮. 'வம்பலன்றனனோடடவை கிருளொளியான்' ௮௯. 'ஈங்கிவைசெய்தி' ௯௧. 'பாகன்மீன்' ௯௩. 'உயிர்த்துணையாக வயர்ப்பொடும்', 'உற்றனையாகவயாவொடும்.'

வேக வெந்தீ நாகங் கிடந்த
போகுயர் புற்றளை புகுவான் போல
வாகந் தோய்ந்த சாந்தல ருறுத்த
வூழடி யிட்டத னுள்ளகம் புகுதலு
மாங்குமுன் னிருந்த வலர்தார் விஞ்சைய
னீங்கிவன் வந்தன னிவள்பா லென்றே
வெஞ்சின வரவ நஞ்செயி றரும்பத்
தன்பெரு வெகுளியி னெழுந்துபை விரித்தென
விருந்தோ னெழுந்து பெரும்பின் சென்றவன்
சுரும்பறை மணித்தோ டணிய வீசிக்
காயசண் டிகையைக் கைக்கொண் டந்தரம்
போகுவ லென்றே யவள்பாற் புகுதலு
நெடுநிலைக் கந்தி னிடவயின் விளங்கக்
கடவு ளெழுதிய பாவையாங் குரைக்கு

---

௯௮. தீ - விடம்

௯௯. போகுயர் புற்றளை - மிகவுயர்ந்த புற்றின்துவாரம்.

௯௮ - ௯. மணி. ௨௦: ௮௦, ௧௦௪ - ௫.

௧௦௦. சாந்து - சந்தனம். அலருறுத்த - பலரறியச்செய்ய.

௧௦௧. ஊழ் அடியிட்டு - முறையே அடிவைத்து; "ஊழடிமுட்டம்" (குறிஞ்சி. ௨௫௮.) அதன் உள்ளகம் - அம்பலத்தின் உள்ளிடம்.

௧௦௩. என்று - என்றுகருதி.

௧௦௪. நஞ்சு எயிறு அரும்ப - விடத்தைப் பல் வெளிப்படுத்த; விடத்தையுடைய பல்தோன்றவென்றுமாம்.

௧௦௫. பை - படம். ௧௦௪ - ௫. மணி. ௨௦: ௮௦, ௯௮ - ௯.

௧௦௬. இருந்தோன் - காஞ்சனன்.

௧௦௭. சுரும்பு அறை மணித் தோள் - மலையை யொத்த அழகிய தோள்; சுரும்பு - மலை; அறை: உவமவுருபு.

௧௦௯. போகுவல் - போவேன்.

௧௦௮ - ௯. விஞ்சையன் இருந்தோன், இவன் இவள்பால் வந்தனன் என்று எழுந்து சென்று வீசிப் போகுவலென்று புகுதலுமென்க.

௧௧௦. கந்து - தூண்.

௧௧௧. கடவுள் எழுதிய - மயனாற் பண்ணப்பட்ட; "மயனெனக் கொப்பா வகுத்த பாவையி, னீங்கேன்" (மணி. ௨௧: ௧௩௨ - ௩) என்று பின்வருதல் காண்க.

(பி - ம்.) ௯௯. 'போயபுற்' ௧௦௩. 'ஈங்குவந்தனன்' ௧௦௭. 'தோள் வீச' ௧௧௦. 'கந்தனிடவயின்' ௧௧௧. 'பாவயர்க்குரை'

அறுக லறுகல் விருந்தைக் காஞ்சன
மணிமே கலையவள் மறைந்துரு வெய்தினள்
காயசண் டிகைதன் கடும்பசி நீங்கி
௧௧௫ வானம் போவுழி வந்தது கேளாய்
அந்தரஞ் செல்வோ ரந்தி யிருந்த
விந்த மால்வரை மீமிசைப் போகார்
போவா ருளரெனிற் பொங்கிய சினத்தள்
சாயையின் வாங்கித் தன்வயிற் றிடூஉம்
௧௨௦ விந்தம் காக்கும் விந்தா கடிகை
அம்மலை மிசைப்போ யவள்வயிற் றடங்கினள்
கைம்மை கொள்ளேல் காஞ்சன விதுகே
ளூழ்வினை வந்திங் குதய குமரனை
யாருயி ருண்ட தாயினு மறியாய்

மேல்வருவன கந்திற்பாவை காஞ்சனனை நோக்கிக் கூறுங் கூற்று.

௧௧௨. அறுகல் அறுகல் - அறுகாதே அறுகாதே.

௧௧௪-௫. கடும்பசி நீங்கிக் காயசண்டிகை வானம்போவுழி அவ ளுக்கு வந்த துன்பத்தைக் கேள்.

௧௧௬. அந்தரஞ் செல்வோர் - தேவர். அந்தி - துர்க்கை.

௧௧௭. விந்தமால்வரை - விந்தியமலை.

௧௧௮-௯. விந்திய மலையிலிருத்தல் பற்றித் துர்க்கைக்கு விந்தா வனி யென்றும் ஒரு பெயருண்டு; "விந்தா சனிகொண்டாள்" என்பது நோக்குக.

௧௧௯-௨௦. விந்தமலையைப் பாதுகாக்கும் விந்தாகடிகை யென் பவள், யாரேனும் அம்மலைமேற்போகின் மிக்க கோபத்தையுடையளாய்ச் சாயையினால் அவர்களை இழுத்துத் தன்வயிற்றிலிடுவள்; பிரமதேவ னிடம் வரம்பெற்ற ஸிம்ஹிகை யென்னுமரக்கி இலங்கைக்குச் சென்ற அநுமானை இழுவாவிருந்தது, கடைப்பிடித்தியதாக வான்மீகிராமா யணம், சுந்தரகாண்டத்தால் தெரிகின்றது.

௧௨௧-௨௨. காயசண்டிகை விந்தாகடிகையின் வயிற்றிலடங்கினாள்.

௧௨௨. கைம்மை கொள்ளேல் - இழிவையாய்க் கொள்ளாதே; இழிவையென்றது அறியாது செய்தலை. இனி, உதயகுமரன் மணி மேகலையுடைய பழம்பிறப்பின் நாயகனென்பதனைக் கூறுதலால் அறிந்த கந்திற்பாவை அவன் இறந்தது பற்றி, மணிமேகலை அமங்கலையாய் விட்டதாக அவளைக் கொள்ளாதேயென்று கூறிற்றென்றலுமாம்; கைம்மை - அமங்கலை.

௧௨௩-௪. [illegible] செய்வோனே முற்பிறப்பில் [illegible]

(பி - ம்.) ௧௧௨. 'விருத்தைக் காஞ்சன' ௧௧௩. 'மறைந்துரு வெய்தி' ௧௧௭. '[illegible]' ௧௧௯. '[illegible]' ௧௧௯-௨௦. '[illegible] [illegible]...[illegible]'

வெவ்வினை செய்தாய் விஞ்சைக் காஞ்சன
வவ்வினை நின்னையு மகலா தாங்குறு
மென்றிவை தெய்வங் கூறலு மெழுந்து
கன்றிய நெஞ்சிற் கடுவினை யுருத்தெழ
விஞ்சையன் போயினன் விலங்குவிண் படர்ந்தென்.

உ௦.—உதயகுமரனைக்காஞ்சனன் வாளாலெறிந்தகாதை முற்றிற்று.

டியபாவம் உதயகுமரன் வெட்டுண்ணச் செய்தது; ஆனாலும் ஆராயாது செய்தலின் நீ அறியாய். இவ்வரலாற்றை, மணி. உக - ஆம் காதை, சஎ - ஆம் அடிமுதலியவற்றாலும், உங - ஆம் காதை, அஉ - ஆம் அடி முதலியவற்றாலும் உணர்க.

கஉஅ. கடுவினை - உதயகுமரனைக் கொன்றபாவம்.

கஉகூ. விலங்கு - குறுக்காக.

க - கஉகூ. கோட்டம் காப்புடைத்தாக, தாரோன் கேட்டு மனங்கொண்டு எழுந்து சென்று ஏறலும், கணவன், கையறவெய்தி வந்து இழிந்து தேர்ந்து திரிவோனைக் கண்டு பலபாராட்டவும், நீங்கிச் சென்று காட்டி மெல்லியல் உரைத்தலும், விஞ்சையன் புக்கு ஒளித்து அடங்கினன்; அரசிளங்குமரனும் கொள்ளான் மனங்கொண்டு எழுந்து போகி எழுந்து கழிந்து நீங்கி அணைந்து புகுதலும், விஞ்சையன், எழுந்து சென்று வீசிப் புகுதலும், பாவை உரைக்கும்; அங்ஙனம் உரைப்பது கூறலும், விஞ்சையன் எழுந்து படர்ந்து போயினனென வினைமுடிவு செய்க.

(பி - ம்.) கஉகூ. 'விளங்குவிண்'

இருபத்தொன்றாவது

கந்திற்பாவை வருவதுரைத்தகாதை

[இருபத்தொன்றாவது மணிமேகலை உதயகுமரன்மடிந்ததுகண்டு
உறுதுயரெய்த, நெடுநிலைக்கந்தின் நின்றபாவை
வருவதுரைத்து அவள் மயக்கொழித்தபாட்டு.]

கடவு ளெழுதிய நெடுநிலைக் கந்தின்
குடவயி னமைத்த நெடுநிலை வாயின்

க. கடவுள் எழுதிய - தெய்வதிகளையொத்த பாவையை மயன் பண்ணின; "கடவுட் பாவை" (எ) என்பர் பின்னும்.

உ. குடவயின் - மேற்றிசை யிடத்தே.

(பி - ம்.) உ. 'அமைந்த நெடுநிலை'

முதியாள் கோட்டத் தகவயிற் கிடந்த
மதுமலர்க் குழலி மயங்கின ளெழுந்து
விஞ்சையன் செய்தியும் வென்வேல் வேந்தன்
மைந்தற் குற்றது மன்றப் பொதியிற்
கந்துடை நெடுநிலைக் கடவுட் பாவை
யங்கவற் குரைத்த வற்புதக் கிளவியுங்
கேட்டன ளெழுந்து கெடுகவிவ் வுருவெனத்
தோட்டலர்க் குழலி யுள்வரி நீங்கித்
திட்டி விடமுண நின்னுயிர் போநாட்
கட்டழ லீமத் தென்னுயிர் சுட்டே
னுவவன மருங்கி னின்பா லுள்ளந்
தவிர்விலே னாதலிற் றலைமக டோன்றி
மணிப்பல் லவத்திடை யென்னையாங் குய்த்துப்

---

௩. முதியாள் கோட்டம் - சம்பாபதி கோயில்.

௧ - ௩. இவ்வடிகளால் சம்பாபதிகோயில், கந்திற்பாவைக்கு மேற்றிசையிலுள்ளதென்று தெரிகின்றது.

௪. குழலி - மணிமேகலை.

௫. விஞ்சையன் - காஞ்சனன். வென் - வெற்றி; "வென்வேலாடவன்" பு - வே. ௫௯.

௬. மைந்தற்கு - உதயகுமரனுக்கு. மன்றப்பொதியில்: மணி. ௨௦ : ௭௯.

௭. கந்திற்பாவை.

௮. அங்கவற்கு - காஞ்சனனுக்கு. அற்புதம் - ஆச்சரியம்.

௯. இவ்வுருக் கெடுகவென்று.

௧௦. குழலி: சுட்டு. உள்வரிநீங்கி - மறைந்தவேடமொழிந்து; என்றது, காயசண்டிகையின் வடிவமொழிந்தென்றபடி.

இனி, உதயகுமரனைக்குறித்து மணிமேகலை புலம்புதல் கூறப்படும்.

௧௧. திட்டிவிடம் - கண்ணில் விடமுடையதொரு பாம்பு; மணி. ௯ : ௪௯; இதனைப் பாம்புக்களுக்கு அரசென்றுங் கூறுவர்.

௧௨. கட்டழல் - மிக்கநெருப்பு. ஈமம் - மயானம்.

௧௧ - ௨. இவ்வடிகளாற் போனபிறப்பின்செய்தி கூறினள்.

௧௪. தலைமகள் - மணிமேகலாதெய்வம்.

௧௩ - ௪. உவவனத்திற் கண்டபொழுது உதயகுமரன்பால் மணிமேகலைக்குக் காதலிருந்ததென்பதை, "புதுவோன் பின்றைப் போனதென் னெஞ்சம், இதுவோ வன்னாய் காமத் தியற்கை" (௫ : ௮௯ - ௯௦), "அவன்பா லுள்ள, நீங்காத் தன்மை நினக்குமுண் டாகலின்" (௧௦ : ௪௪ - ௫) என முன்வந்திருத்தலாலுணர்க.

(பி - ம்.) ௫. 'வெள்வேல்' ௧௦. 'தோட்டக்குழலி', 'தோட்டலர் குழலி' ௧௧. 'விடமுண்டு'

பிணிப்பறு மாதவன் பீடிகை காட்டி
யென்பிறப் புணர்ந்த வென்முற் றோன்றி
யுன்பிறப் பெல்லா மொழியின் றுரைத்தலிற்
பிறந்தோ ரிறத்தலு மிறந்தோர் பிறத்தலு
மறந்தரு சால்பு மறந்தரு துன்பமும்
யானினக் குரைத்துநின் னிடர்வினை யொழிக்கக்
காயசண் டிகைவடி வானேன் காதல
வைவாள் விஞ்சையன் மயக்குறு வெகுளியின்
வெவ்வினை யுருப்ப விளிந்தனை யோவென
விழுமக் கிளவியின் வெய்துயிர்த்துப் புலம்பி
யழுதன ளேங்கி யயாவுயிர்த் தெழுதலுஞ்
செல்லல் செல்லல் சேயரி நெடுங்க
ணல்லியந் தாரோன் றன்பாற் செல்ல
னினக்கிவன் மகனாத் தோன்றிய தூஉ
மனக்கினி யாற்குநீ மகளாய தூஉம்

---

௧௬. பிணிப்பறு மாதவன் - புத்தன்; பிணிப்பு - பற்று; "பிணிப் பறுத் தோர்தம் பெற்றி யெய்தவும்" சிலப். ௧௫ : ௧௦௦.

௧௭ - ௮. தலைமகள் தோன்றி உய்த்துக் காட்டித் தோன்றி உரைத்தலினென்க.

௨௦. சால்பு - அமைதி; இன்பமுமாம். மறம் - பாவம்.

௧௯ - ௨௦. மணி. ௨௧ : ௧௧௩; சிலப். ௩௦ : ௧௩௮ - ௯.

௨௪. உருப்ப - கோபிக்க. விளிந்தனையோ - இறந்தாயோ.

௨௩ - ௪. உருப்ப வெகுளியின் விளிந்தனையோ.

௨௫. விழுமக்கிளவி - துன்பத்தைப் புலப்படுத்தும் சொற்கள்.

௨௬. அயாவுயிர்த்து - நெட்டுயிர்ப்புக்கொண்டு. எழுதலும் - மணிமேகலை எழுதலும்.

மேல், மணிமேகலையை நோக்கிக் கந்திற்பாவை கூறுதலைச் சொல்லுவார்.

௨௭. செல்லல் செல்லல் - போகாதே போகாதே. சேயரிநெடுங் கண் : விளி

௨௮. அல்லி - அகவிதழ். தாரோன் - உதயகுமரன்.

௨௯. மகனா - கணவனாக; "நோதக வுண்டோ நும்மக னார்க்கு" (சிலப். ௧௬ : ௭) எனக் கணவனை மகனென்று கூறியிருத்தல் காண்க.

௩௦. மனக்கினியாற்கு - உதயகுமரனுக்கு. மகளாயதூஉம் - மனைவியானதும்.

(பி - ம்.) ௧௬. 'பிணிப்புமாதவன்' ௨௨. 'காதலன்' ௨௯. 'தலைமகனாய்த்தோன்றியதூஉம்'

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

கஉ. [illegible] முத்திரப்பல் [illegible]; [illegible]

கங - கச. [illegible]; [illegible]

கச. [illegible] - [illegible]; [illegible]

கரு. விருமம் - [illegible].

கசு. [illegible] - [illegible], “[illegible]” ([illegible]. ௪0 : கஉ) [illegible].

கஎ. புற்றொடு - [illegible].

மேல், [illegible] இருப்பும், [illegible]

கஅ. விட்டபிறப்பு - போனபிறப்பு. இவர் - [illegible].

கக - உ0. இவர் [illegible].

உக. [illegible]; [illegible] - [illegible].

உஉ. [illegible] - [illegible].

உங. [illegible] - [illegible]; [illegible], “[illegible]” ([illegible]) [illegible].

உச. [illegible]

([illegible]) [illegible]

வையரி நெடுங்க ணாயிழை கேளெனத்
தெய்வக் கிளவியிற் றெய்வங் கூறும்
காயங் கரையெனும் பேரியாற் றடைகரை
மாயமின் மாதவன் வருபொரு ளுரைத்து
மருளுடை மாக்கண் மனமாசு கழூஉம்
பிரம தருமனைப் பேணினி ராகி
யடிசிற் சிறப்பியா மடிகளுக் காக்குதல்
விடியல் வேலை வேண்டின மென்றறு
மாலை நீங்க மனமகிழ் வெய்திக்
காலை தோன்ற வேலையின் வருஉ

---

௪௫. ஆயிழை: விளி. ௪௬. தெய்வம் - கந்திற்பாவை.

௪௭. அடைகரை - அடைகரையில்.

௪௮. மாதவன் வருபொருள் - புத்தன் அவதரித்தலை. உலகத்திற் பாவங்கள் அதிகரிக்கும் காலந்தோறும் அப்பாவங்களைப் போக்கி அருளறத்தை நிலைநிறுத்தி உயிர்களை நிருவாணமடைவித்தற் பொருட்டுப் புத்தாவதாரமுண்டென்பது பௌத்தநூற்றுணிபு; "ஈரெண் ணூற்றோ டீரெட் டாண்டிற், பேரறி வாளன் றோன்றும்" (௧௨ : ௭௭ - ௮), "மறவிரு ளிரிய மன்னுயி ரேமுற, வறவெயில் விரித்தாங் களப்பி லிருத்தியொடு, புத்த ஞாயிறு தோன்றுங் காறும்" (௨௧ : ௧௬௫ - ௭), "புலவன் முழுதும் பொய்யின் றுணர்ந்தோ, னுலகுயக் கோடற் கொருவன் றோன்று, மந்நா ளவனறங் கேட்டோ ரல்ல, தின்னாப் பிறவி யிழுக்குந ரில்லை" (௨௫ : ௪௫ - ௮), "கரவரும் பெருமைக் கபிலையம் பதியி, னளப்பரும் பாரமிதை யளவின்று நிறைத்துத், துளக்கமில் புத்த ஞாயிறு தோன்றி" (௨௬ : ௪௪ - ௬) என இந்நூலுள்ளே பலவிடத்தும் வருதல் காண்க.

௪௯. மருளுடை மாக்கள் - மயக்கத்தையுடைய மனிதர். மனமாசு - காம வெகுளி மயக்கங்கள்; "வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென், றுள்ளந் தன்னி லுருப்பன மூன்றும்" (௩௦ : ௭௦ - ௭௧) என்பதனு லுணர்க. கழூஉம் - கழுவும்.

௫௧. அடிகளுக்கு அடிசிற்சிறப்பு ஆக்குதலென்க.

௫௨. விடியல் வேலை - நாள்வெயிற்காலம்; வைகறைப்பொழு தெனினும் பொருந்தும்.

௫௧ - ௨. அடிகளுக்கு அடிசிற் சிறப்பு விடியல் வேலையாக்குதல் வேண்டினமென்று மடையனை நோக்கிக் கூறுதலும்.

௪௭ - ௫௨. அடைகரையில் உரைத்துக் கழூஉம் பிரமதருமனைப் பேணி விடியல்வேலையில் ஆக்குதலை வேண்டினமென்றலுமென்க.

௫௩. மாலை - இரவு.

௫௪. காலை - நாள்வெயிற்காலம். வருஉ - வந்து.

(பி - ம்.) ௪௮. 'ஆய்மனமாதவன்' ௫௧. 'அடிசிற் சிறபியாதே ஆக்காக குதல' ௫௩. 'மாலைநீங்கி'

நடைத்திறத் திழுக்கி நல்லடி தளர்ந்து
மடைக்கலஞ் சிதைய வீழ்ந்த மடையனைச்
சீல நீங்காச் செய்தவத் தோர்க்கு
வேலை பிழைத்த வெகுளி தோன்றத்
தோளுந் தலையுந் துணிந்துவே றாக
வாளிற் றப்பிய வல்வினை யன்றே
விராமலர்க் கூந்தன் மெல்லிய னின்னோ
டிராகுலன் றன்னை யிட்டக லாதது
தலைவன் காக்குந் தம்பொருட் டாகிய

---

௫௫. நடைத்திறத்து இழுக்கி - நடைவகையால் வழுக்கி.

௫௬. மடைக் கலம் - சோற்றுப்பாத்திரம். மடையன் - சமையற்காரன்.

௫௭. சீலம் - பஞ்சசீலம்; தசசீலமுமாம்; கொல்லாமை (அஹிம்ஸை), பொய்சொல்லாமை (ஸத்தியம்), களவின்மை (அஸ்தேயம்), காமமின்மை (பிரமசரியம்), இரவாமை (அஸங்கிரஹம்) என்னும் இவை பஞ்சசீலம்; இவ்வைந்தனோடு உயர்ந்த ஆசனத்து இருத்தல் கிடத்தலின்மை, சந்தனம் மாலை முதலியன தரியாமை, பொன் வெள்ளிகளைத் தீண்டாமை, பாடலாடல் விரும்பாமை, உதயத்திற்கு முன்பு புசியாமை என்னும் ஐந்தும்சேரத் தசசீலமாம். பஞ்சசீலத்துள், இரவாமை நின்ற நிலைக்களத்தின்கண் கள்ளுண்ணாமையைச் சேர்த்துக்கூறுவாருமுளர்; (நீல சமய.) கொல்லாமை, திருடாமை, வியபிசரியாமை, பொய்கூறாமை, கள்ளுண்ணாமையென்னுமிவை பஞ்சசீல மென்றும், இவை இல்லறத்தார் எல்லோர்க்கும் உரியனவென்றும், இவ்வைந்தனோடு இரவில் தூய்மையில்லாத உணவைப்புசியாமை, சந்தனம் முதலிய மணமுள்ள பொருள்களை உபயோகியாமை, தரையிற் பாய்மேலே படுத்தல் என்னும் மூன்றுஞ்சேர அஷ்டாங்கசீலமென்றும், இவை இல்லறத்தாரில் நிஷ்டாபரர்களுக்கே உரியனவென்றும், இவ்வெட்டனோடு நாட்டியம் கானம் முதலியவற்றை விரும்பாமை, பொன் வெள்ளிகளைத் தொடாமை யென்னும் இவ்விரண்டும்சேரத் தசசீலமென்றும், இப்பத்தும் துறவிகளுக்கே உரியனவென்றும், இப்பத்தில் வியபிசரியாமை நின்றவிடத்திற் பிரமசரியம் கூறப்படுமென்றும் தார்மிக சூத்திரமென்னும் பௌத்தநூல் கூறும்.

௫௮. பிழைத்தவெகுளி - தவறினமையால் வந்த கோபம்.

௬௰. தப்பிய - வெட்டிய. ௬௧. மெல்லியல் : விளி.

௫௬ - ௬௨. இப்படியே, "மடைக்கலஞ் சிதைய வீழ்ந்த மடையனை, புடற்றுணி செய்தாங் குருத்தெழும் வல்வினை, நஞ்சுவிழி யரவி னல்லுயிர் வாங்கி, விஞ்சையன் வாளால் வீட்டிய தன்றே" (௨௩ : ௮௨ - ௫) என்று இராசமாதேவியை நோக்கி மணிமேகலை கூறியதாகப் பின்பு வருதல் காண்க.

௬௩. தலைவன்- கடவுள். காக்கும்-காப்பான்; தடுப்பானென்றபடி.

(பி - ம்.) ௫௭. 'நீங்காத் தேசத்தோர்க்கு' ௬௧. 'விராக்கூந்தல்'

வவல வெவ்வினை யென்போ ரறியா
ரறஞ்செய் காத லன்பினி ளாயினு
மறஞ்செய் துளதெனின் வல்வினை யொழியா
தாங்கவ் வினைவந் தணுகுங் காலைத்
தீங்குறு முயிரே செய்வினை மருங்கின்
மீண்டுவரு பிறப்பின் மீளினு மீளு
மாங்கவ் வினைகா ணாயிழை கணவனை
யீங்கு வந்திவ் விடர்செய் தொழிந்த
தின்னுங் கேளா யிளங்கொடி நல்லாய்
மன்னவன் மகற்கு வருந்துதுய ரெய்தி
மாதவ ருணர்த்திய வாய்மொழி கேட்டுக்
காவல னின்னையுங் காவல்செய் தாங்கிடு
மீடுசிறை நீக்கி யிராசமா தேவி
கூட வைக்குங் கொட்பின ளாகி
மாதவி மாதவன் மலரடி வணங்கித்

௬௫-௬. வினையைத் தலைவன் காக்குமென்போர் அறியாரென இயைக்க; செய்தவன் நுகர்ந்தாலன்றி வினை தொலையாதென்றவாறு.

௬௬. மறம் செய்துளதெனின் - பாவம் செய்யப்பட்டிருப்பின். வல்வினை: சுட்டு. ௬௮. தீங்கு - துன்பம்.

௭௦. அவ்வினை - மடையனை வெட்டியபாவம். கணவனை - உதயகுமரனை.

௭௦-௭௧. அவ்வினை ஈங்குவந்து உன் கணவனை இவ்விடர் செய்தொழிந்ததென்க.

இனி, மணிமேகலைக்குப் பின் வருவனவற்றைக் கந்திற்பாவைத் தெய்வம் கூறுதல் கூறப்படும்.

௭௩. மகற்கு - உதயகுமரன் இறந்ததற்காக.

௭௪. உணர்த்தியவன் ஒருவனாயினும் உரைக்க வந்தோர் பலராதலின், 'மாதவருணர்த்திய' என்றார். வாய் - உண்மை.

௭௫. காவல்செய்தாங்கிடும் - சிறையில் வைப்பான்.

௭௬. இராசமாதேவி - பட்டத்துத்தேவி.

௭௭. கொட்பு - கொள்கை. ௭௮. மாதவன் - அறவணவடிகள்.

(பி-ம்.) ௬௫. 'அறஞ்செய்த காதலனன்பின' ௬௭. 'ஆங்கவெவ்வினை வந்தெனருங்காத்' ௭௩. 'வருதுயரெய்தி' ௭௪. 'மாதவருரைத்த', 'மாதவருணர்த்த.' ௭௫. 'காதலினின்னையுங் காவல்செய்தீங்கிடும்'

[illegible] கொண்டு
பா[illegible] மொழி கேட்டே
[illegible]
[illegible]
புலவோர் போல [illegible] போ[illegible]
போ[illegible] பொரு[illegible] பொருந்தி
[illegible]
[illegible]
[illegible]
[illegible] கேட்டு
[illegible] டைத்[illegible]

[illegible] - [illegible]ப்பட்[illegible].

20. [illegible]மொழி - [illegible]மொழி; [illegible]. [illegible]

21-22. [illegible]

23. [illegible] புலமையாளர்; [illegible] புலமையாளர் [illegible] ” ([illegible]) [illegible]; புலமையாளர் [illegible] பாடும் [illegible].

24. புலவோர் - [illegible]; புல - [illegible]. போ[illegible] போ[illegible] - போ[illegible].

25. பொருதுவர - [illegible]; “பொருநின் புலவர் பொரு [illegible]” ([illegible]); [illegible]. பொருந்தி - கேட்டு. [illegible] “[illegible] புலி [illegible]” ([illegible]) [illegible].

26-7. [illegible]

னாங்கத் தீவம்விட் டருந்தவன் வடிவாய்ப்
பூங்கொடி வஞ்சி மாநகர் புகுவை
யாங்கந் நகரத் தறிபொருள் வினாவு
மோங்கிய கேள்வி யுயர்ந்தோர் பலரா
லிறைவ னெங்கோ னெவ்வுயி ரனைத்து
முறைமையிற் படைத்த முதல்வனென் போர்களுந்
தன்னுரு வில்லோன் பிறவுருப் படைப்போ
னன்னோ னிறைவ னாகுமென் போர்களுந்
துன்ப நோன்பித் தொடர்ப்பா டறுத்தாங்
கின்ப வுலகுச்சி யிருத்துமென் போர்களும்
பூத விகாரப் புணர்ப்பென் போர்களும்
பல்வேறு சமயப் படிற்றுரை யெல்லா
மல்லியங் கோதை கேட்குறு மந்நா
ளிறைவனு மில்லை யிறந்தோர் பிறவா
ரறனோ டென்னையென் றறைந்தோன் றன்னைப்
பிறவியு மறவியும் பெற்றியி னுணர்ந்த
நறுமலர்க் கோதை யெள்ளினை நகுதி

---

௯0. தீவம் - மணிபல்லவம்.

௯௧. வஞ்சிமாநகர் - சேரர்களுடைய இராசதானி; மலைநாட்டி லுள்ளது.

௯௪ - ௫. படைத்த முதல்வனே இறைவன் எங்கோன் என்போர் களுமென்க; இவர்கள் பிரஹ்மவாதிகள்; "பேருல கெல்லாம் பிரம வாதியோர், தேவ னிட்ட முட்டை யென்றனன்" (௨௭ : ௯௬ - ௭) என்று வருதல்காண்க. இவர்களை இரணியகருப்பவாதிகளென்றுங் கூறுவர். ௯௬ - ௭. என்போர்கள் - அத்துவைத வாதிகள்.

௯௮. நோன்பு - கன்மங்கள். இத்தொடர்ப்பாடு-இந்தப்பந்தங்கள்.

௯௮ - ௯. நோன்பு அறுத்து இருத்துமென்போர்கள் - கர்ம ப்ரஹ்ம வாதிகள்.

௧௦௦. புணர்ப்பென்போர்கள் - பூதவாதிகள்.

௯௪ - ௧௦௦. இவ்வடிகளிற்கூறிய சமய இலக்கணங்களுட் சிலவும், இன்னும் பலவும் இந்நூல் ௨௭ - ஆம் காதையால் விளங்கவுணரப்படும்.

௧௦௧. படிற்றுரை - பொய்ம்மொழி.

௧௦௪. அறனோடு என்னை - தருமத்தால்வரும் பயன்யாது? அறைந்தோன் - பூதவாதி.

௧௦௫. அறவி - தருமத்தோடு பொருந்தியவழி.

௧௦௬. எள்ளினை நகுதி - இகழ்ந்து சிரிப்பாய்.

(பி - ம்.) ௯௬. 'தானுருவில்லோன்' ௯௮. 'நோன்பிற்றொடர்ப் பாடு' ௧௦௩. 'இல்லைபிறவிருந்தோர் பிறவார்'

வெள்ளிவீழ் போர்த்தமிழ்ப்புறை வேட்டுத்
கொள்ளிய துறைவென அறிந்திறப் புணர்ந்தவை
பாற்குழிக் கொண்டாக்க அருந்திறல் மைக்கள்
காம்பலர் தோரணி கழுமைக் குற்றியோர்
வெற்றலை நகைக்கு மிளிர்தொடி மன்னர்
பன்னெறித் தொன்முறை வயங்கொழு வாயிலோ
நிலைப் பழுதறுத்து வெந்நெறி பிறந்தாம்
வாயே வென்று மைக்கொழி படாய்
அருமை மறைய மன்றுறும் கல்வி
வெருவிய பாகையும் பேசா வெய்ய
தறிநுறு மறிவியோ வறியாய் கொண்டோர்
வறியா பாமி முற்கறு கோளாய்
முதிர்ந்தரு நெய்யின் முதார் யாக்கையாய்
கொடித்தேர் வீதியுந் தேவர் கோட்டமு
முதுமர இடங்களு முதுநீர்த் துறைகளும்
பொதியிலு மன்றமும் பொருந்துபு நாடிக்
காப்புடை மாநகர்க் காவலுங் கண்ணி
யாப்புடைத் தாக அறிந்தோர் வலித்த
மன்னவிர்க் கல்வியர் மதிநிறைந் தமைத்த
கன்னிய தெய்வதங் காட்டினர் வகுத்த
வாய்க்குத் தெய்வத மன்றிட நீர

௧௩௬ - ௮. அவைத்தோன்றவின் ... பெரும்.

௧௩௨. அயர்த்தொழிவாயோ - மறந்தொழிவாய்.

௧௩௩. மணி. ௨௩: ௬௬ - ௭0.

௧௩௪. வாயே - உண்மையே. ௧௩௫ - ௮. மணி. ௨௩: ...

௧௩௭. அறிதலையறியேயோ - அறிதலும் செய்யேயோ.

௧௪0. தேவர் கோட்டம் - தேவர் கோயில்.

௧௪௧. முதுமரம் - பழையமரம்.

௧௪௨. காவலுங்கண்ணி - காவலையுங் கருதி.

௧௪௩. யாப்புடைத்தாக - வலியுடைத்தாக. வலித்த - ...

௧௪௫. தெய்வதங்காட்டினர் - தெய்வத்தைக் காட்டினோர்.

(பி - ம்.) ௧0௯. 'போர் ...' [illegible]

வூன்கணி ஞர்கட் குற்றதை யுரைக்கு
மென்றிறங் கேட்டியோ விளங்கொடி நல்லாய்
மன்பெருந் தெய்வ கணங்களி னுள்ளேன்
றுவதிக னென்பேன் றொன்றுமுதிர் கந்தின்
மயனெனக் கொப்பா வகுத்த பாவையி
னீங்கேன் யானென் னிலையது கேளாய்
மாந்த ரறிவது வானவ ரறியா
ரோவியச் சேனனென் னுறுதுணைத் தோழ
னவனை யிந்நகர்க் காருரைத் தனரோ
வவனுடன் யான்சென் றாடிட மெல்லா
முடனுறைந் தார்போ லொழியா தெழுதிப்
பூவும் புகையும் பொருந்துபு புணர்ந்து
நாநனி வருந்தவென் னலம்பா ராட்டலின்
மணிமேகலையான் வருபொரு ளெல்லாந்
துணிவுட னுரைத்தே னென்சொற் றேறெனத்
தேறே னல்லேன் றெய்வக் கிளவிக
ளீறுகடை போக வெனக்கரு ளென்றலுங்

கஉஅ. ஊன்கணிஞர்கட்கு - மானிடர்களுக்கு ; சீவக. ருச.

மேல்வருவன, மணிமேகலைக்குத் தனதுவரலாற்றைக் கந்திற்பாவை கூறுங் கூற்று.

கங௧. துவதிகனென்பேன் - துவதிகனென்று பெயர் கூறப்படுவேன். தொன்று முதிர்கந்து - பழமை முதிர்ந்த தூண்.

கஙஉ. மயன் - தெய்வத்தச்சன் ; அசுரத்தச்சனென்றுங் கூறுவர் ; கந்திற்பாவை இருத்தற்கிடமாகிய சக்கரவாளக் கோட்டமும் மயனாற் செய்யப்பட்டதென்று இந்நூல், சு : ககூஉ - ஆம் அடி முதலியவற்றால் தெரிகின்றது. கஙரு. ஓவியச்சேனன் - சித்திரசேனன்.

கஙஎ. அவனுடன் - சித்திரசேனனுடன். ஆடிடம் - விளையாடுமிடம். கசஉ. தேறெனெ - தெளிவாயென்று கந்திற்பாவை சொல்ல.

மேல்வருவன மணிமேகலை கூற்று.

கசங. தெய்வக்கிளவிகளைத் தேறேனல்லேன் ; தெளிவேனென்றபடி.

கசச. ஈறு கடைபோக - மரணம் இறுதியாக ; "கடைபோகச் செல்வமுய்த் தார்" (நாலடி. ககக.) என்றலும் - என்று மணிமேகலை சொல்லலும்.

மேல் வருவன கந்திற்பாவை கூற்று.

(பி - ம்.) கஙஉ. 'பாவையை' கஙரு. 'ஓவிய சேனன்' கஙகூ. 'பொருந்துவகொணர்ந்து' கசo. 'நாநலம் வருந்தவென்னலம்' கசக. 'மணிமேகலைக்கு வரு' கசச. 'ஈறுயிர் கடைகொளெனக் குறையென்றலும்'

துவதிக னுரைக்குஞ் சொல்லலுஞ் சொல்லுவேன்
வருவது கேளாய் மடக்கொடி நல்லாய்
மன்னுயிர் நீங்க மழைவளங் கரந்து
பொன்னெயிற் காஞ்சி நகர்கவி னழிய
வாங்கது கேட்டே யாருயிர் மருந்தா
யீங்கிம் முதியா ளிடவயின் வைத்த
தெய்வப் பாத்திரஞ் செவ்விதின் வாங்கித்
தையனிற் பயந்தோர் தம்மொடு போகி
யறவணன் றானு மாங்குள னாதலிற்
செறிதொடி காஞ்சி மாநகர் சேர்குவை
யறவண னருளா லாய்தொடி யவ்வூர்ப்
பிறவண மொழிந்துநின் பெற்றியை யாகி
வறனோ டுலகின் மழைவளந் தரூஉ
மறனோ டேந்தி யாருயி ரோம்புவை
யாய்தொடிக் கவ்வூ ரறனொடு தோன்று
மேது நிகழ்ச்சி யாவும் பலவுள
பிறவற முரைத்தோர் பெற்றிமை யெல்லா
மறவணன் றனக்குநீ யுரைத்த வந்நாட்
டவமுந் தருமமுஞ் சார்பிற் றோற்றமும்

---

௧௪௫. உரைக்கும் : முற்று. சொல்லலுஞ் சொல்லுவேன் - யான் சொல்லுதலையுஞ் செய்வேன்.

௧௪௭. மணி. ௧௧ : ௮௩, ௨௫ : ௧௦௨. நீங்கக் கரந்து - நீங்கும்படி மறைந்து.

௧௪௭ - ௮. மணி. ௨௮ : ௧௫௬ - ௭. ௧௫௦. முதியாள் - சம்பாபதி.

௧௫௨. நிற்பயந்தோர் - மாதவியும் சுதமதியும்.

௧௫௩. ஆங்கு - காஞ்சிநகரில். ௧௫௪. செறிதொடி : விளி.

௧௫௩ - ௪. ஆங்கு உளனாதலிற் சேர்குவை.

௧௪௯ - ௫௪. அதுகேட்டு வாங்கிக் காஞ்சிமாநகர்சேர்குவை யென்க.

௧௫௬. பிறவணமொழிந்து - வேற்றுமதப்பற்றொழிந்து.

௧௫௭. வறன் ஓடு உலகில் - வறட்காலம் பரந்த உலகத்தில்.

௧௫௮. அறனோடு - அமுதசுரபி. ௧௫௭ - ௮. மணி. ௧௫ : ௫௩ - ௪.

௧௬௧. பிறவறமுரைத்தோர் - வஞ்சி நகரத்தில் மற்றைச் சமய தருமங்களைச் சொன்னோருடைய.

௧௬௩. சார்பு - துவாதசநிதானம் ; அவை, “ பேதைமை செய்கை புணர்வே யருவுரு, வாயி லூறே நுகர்வே வேட்கை, பற்றே பவமே

(பி - ம்.) ௧௫௫. ‘அருளவாய்கொடி’ ௧௫௭. ‘மறனோடுலகின்’ ௧௬௦. ‘ஏதுக்கு நிகழ்ச்சி’

பவமறு மார்க்கமும் பான்மையி னுரைத்து
மறவிரு ளிரிய மன்னுயி ரேமுற
வறவெயில் விரித்தாங் களப்பி லிருத்தியொடு
புத்த ஞாயிறு தோன்றுங் காறுஞ்
செத்தும் பிறந்துஞ் செம்பொருள் காவா
வித்தல நீங்கே னிளங்கொடி யானுந்
தாயரு நீயுந் தவறின் றாக
வாய்வ தாகநின் மனப்பாட் டறமென
வாங்கவ னுரைத்தலு மவன்மொழி பிழையாய்
பாங்கிய னல்லறம் பலவுஞ் செய்தபின்
கச்சி முற்றத்து நின்னுயிர் கடைகொள
வுத்தர மகதத் துறுபிறப் பெல்லா
மாண்பிறப் பாகி யருளற மொழியாய்

தோற்றம் வினைப்பய, னிற்றென வகுத்த வியல்பீ ராறும்" (மணி. உச : க0டு - அ, ௩0 : சடு - அ) என்பன.

கசுச. பவம் - கருமங்களின் கூட்டம்; "பவமெனப் படுவது கரும வீட்டம்" (௩0 : கூ௩) என வருதல் காண்க.

கசுடு. மறவிருள் - பாவமாகிய இருட்டு. ஏமுற - நிருவாணமாகிய இன்பத்தை அடையும்படி; ஏமம் - இன்பம்.

கசுசு. இருத்தி - அணிமாதியோகசித்திகளெட்டும்; "எத்திறத் தார்க்கு மிருத்தியுஞ் செய்குவம்" (உசு : சுக) என்று பின்னும் வருதல் காண்க; சித்தி எண்பத்தொன்பதென்று கூறுதலுமுண்டு; "எண்பத் தொன் பதுசித்தி யியல்பின வுளவென்று, பண்பொத்த நுண்பொரு ளைப் பாரறியப் பகர்ந்தனையே" என்பது வீர. யாப்பு. கக, உதாரணம்.

கசுஎ. தோன்றுங்காறும் - தோன்றுமளவும்.

கசுஅ. செம்பொருள் - தருமம்; மெய்யுணர்ந்தார் நெஞ்சிற்கெல் லாம் செம்மையுடைத்தாய்த் தோன்றலின், இப்பெயர்பெற்றது; "செம் பொருள் கண்டார்வாய்ச் சொல்" (குறள், கூக.) காவா - காத்து.

கசுகூ. இத்தலம் - இக்காஞ்சி நகரத்தை. கஎக. அறம் வாய்வதாக.

கஎஉ. அவன் - அறவணன். பிழையாய் - தப்பாயாய்.

கசுச - எஉ. அவன் உரைத்து நின் மனப்பாட்டறம் வாய்வதாக வென வுரைத்தலும். கஎ௩. நல்லறம் - காருணியம்.

கஎச. கச்சிமுற்றம் - காஞ்சிநகரிடம்; "வஞ்சிமுற்றம்" (சிலப். உடு : கூ, ௩ச.) கடை - முடிவு.

கஎடு. உத்தரமகதம் - வடமகதநாடு.

கஎசு. ஒழியாய் - நீங்காயாய்.

(பி - ம்.) கசுச. 'வேமறுமார்க்கமும்' கசுஅ. 'செம்பொருளிக வாய்' கசுகூ. 'இத்திற நீங்கேன்' கஎ௩. 'வாங்கிய நல்லறம் பலவுஞ்' கஎடு. 'புத்தமலலகததுனபிறப்'

மாண்பொடு தோன்றி மயக்கங் களைந்து
பிறர்க்கற மருளும் பெரியோன் றனக்குத்
தலைச்சா வகனுய்ச் சார்பறுத் துய்தி
யின்னுங் கேட்டியோ நன்னுதன் மடந்தை
யூங்க ணோங்கிய வுரவோன் றன்னை
வாங்குதிரை யெடுத்த மணிமே கலாதெய்வஞ்
சாது சக்கரற் காரமு தீத்தோ
யீது நின்பிறப் பென்பது தெளிந்தே
யுவவன மருங்கி னின்பாற் றோன்றி
மணிபல் லவத்திடைக் கொணர்ந்தது கேளெனத்
துவதிக னுரைத்தலுந் துயர்க்கட னீங்கி
யவதி யறிந்த வணியிழை நல்லாள்
வலையொழி மஞ்ஞையின் மனமயக் கொழிதலு
முலகுதுயி லெழுப்பினன் மலர்கதி ரோனென்.

உக.—கந்திற்பாவை வருவதுரைத்தகாதை முற்றிற்று.

---

௧௭௯. தலைச்சாவகனுய் - முதல்மாணுக்கனுய்; சாவகன்=ஶ்ராவகன்-கேட்பவன்; "தரும சாவகன் றன்னடி வணங்கி" (௨௫ : ௨) என்பர் பின்னும். சார்பு - பன்னிருநிதானம்; மணி. ௩௦ : ௪௫ - அ. உய்தி - பிழைப்பாய்.

௧௮௧. உன் குலத்தில் முன்பு அறத்தால் உயர்ச்சியுற்றிருந்த அறிவுடையோனுகிய ஒருவனை. ஊங்கண் - முன்பு; " தூங்கெயி லெறிந்த நின்னூங்கணோர் நினைப்பின்" (புறநா. ௩௯); "போந்தைக் கண்ணிநின் னூங்கணோர் மருங்கிற், கடற்கடம் பெறிந்த காவலன்" சிலப். ௨௮: ௧௩௪-௫.

௧௮௨. திரை எடுத்த - அழுந்தி இறவாவண்ணம் கடலினின்றும் எடுத்த; எடுத்த கதையை, சிலப்பதிகாரம், ௧௫: ௨௭ - ஆம் அடி முதலியவற்றிற் காண்க.

௧௮௩. சாதுசக்கரற்கு - சாதுசக்கரனென்னும் முனிவனுக்கு.

௧௮௪. ஈது - இத்தன்மையையுடையது.

௧௮௮. அவதி - எல்லை. ௧௯௦. மலர்கதிரோன்: வினைத்தொகை.

௧ - ௧௯௦. குழலி எழுந்து கேட்டு எழுந்து நீங்கி வெய்துயிர்த்துப் புலம்பி அழுதேங்கி அயாவுயிர்த்தெழுதலும், இருந்தெய்வம் உரைத்தலும், பூங்கொடி பொருந்தி, 'நின்பேரருள் பெறுவேன்' என, தெய்வங் கூறும்; அங்ஙனங்கூறுந் தெய்வம், 'என்சொற்றேறு' என, மணிமேகலை, 'எனக்கு அருள்' என்றலும் துவதிகனுரைக்கும்; அங்ஙனமுரைக்குந் துவதிகன் உரைத்தலும், நல்லாள் நீங்கி மயக்கொழிதலும், கதிரோன் துயிலெழுப்பினனென் வினைமுடிவு செய்க.

(பி - ம்.) ௧௭௮. 'அறமொழியும் பெரியோன்' ௧௭௯. 'சாவறுத் துய்தி'

இருபத்திரண்டாவது

சிறைசெய் காதை.

[இருபத்திரண்டாவது மணிமேகலை பொருட்டால் மடிந்தான் உதயகுமரனென்பது மாதவர்வாய்க்கேட்ட மன்னவன் மணிமேகலையை மந்திரியாகிய சோழிகவேனாதியாற் காவல்கொண்ட பாட்டு.]

கடவுண் மண்டிலங் காரிருள் சீப்ப
நெடுநிலைக் கந்தி னின்ற பாவையொடு
முதியோள் கோட்டம் வழிபடல் புரிந்தோ
ருதய குமரற் குற்றதை யுரைப்பச்
சாதுயர் கேட்டுச் சக்கர வாளத்து
மாதவ ரெல்லா மணிமே கலைதனை
யிளங்கொடி யறிவது முண்டோ விதுவெனத்
துளங்கா தாங்கவ ளுற்றதை யுரைத்தலு
மாங்கவ டன்னை யாருயிர் நீங்கிய
வேந்தன் சிறுவனொடு வேறிடத் தொளித்து
மாபெருங் கோயில் வாயிலுக் கிசைத்துக்
கோயின் மன்னனைக் குறுகினர் சென்றீங்
குயர்ந்தோங் குச்சி யுவாமதி போல

௧. கடவுண்மண்டிலம் - சூரியன். ௩. முதியோள் - சம்பாபதி.

௨ - ௪. பாவையொடு கோட்டத்தை வழிபடல் புரிந்தோர் உற்றதை முனிவர்க்கு உரைப்ப.

௫. சாதுயர் - உதயகுமரனிறந்த துன்பம்; மணி. ௯ : ௯௫.

௬. மணிமேகலையை நோக்கி.

௭. இளங்கொடி - மணிமேகலை; விளி. இது - உதயகுமரனிறந்தது. என - என்று முனிவர் கேட்ப.

௬ - ௭. மாதவரெல்லாம் மணிமேகலையை நோக்கி இதனை நீ அறிவது முண்டோவென.

௮. துளங்காது - நடுங்காது.

இனி, சக்கரவாளக் கோட்டத்துள்ள முனிவர் அரசனையடைந்து உதயகுமரன் காஞ்சனனால் இறந்தது மொழிதல் கூறப்படும்.

௧௧. வாயில் - வாயில்காப்போர். ௧௨. சிலப். ௨௦ : ௪௭.

௧௩. உவாமதி - பூர்ணசந்திரன்.

நிவந்தோங்கு வெண்குடை மண்ணக நிழற்செய
வேலுங் கோலு மருட்கண் விழிக்க
தீதின் றுருள்கநீ யேந்திய திகிரி
நினக்கென வரைந்த வாண்டுக ளெல்லா
மனக்கினி தாக வாழிய வேந்தே
யின்றே யல்ல விப்பதி மருங்கிற்
கன்றிய காமக் கள்ளாட் டயர்ந்து
பத்தினிப் பெண்டிர் பாற்சென் றணுகியு
நற்றவப் பெண்டிர் பின்னுளம் போக்கியுந்
தீவினை யுருப்ப வுயிரீறு செய்தோர்
பாராள் வேந்தே பண்டும் பலரான்
மன்மருங் கறுத்த மழுவா ணெடியோன்
றன்முன் றோன்ற றகாதொழி நீயெனக்
கன்னி யேவலிற் காந்த மன்னவ
னிந்நகர் காப்போர் யாரென நினைஇ

---

௧௪. செய: வியங்கோள்.

௧௫. திகிரி தீதின்று உருள்க ; தீது - இடையூறு.

௧௭. மதுரை. ௭௮உ. வரைந்த - எல்லையிட்ட.

௧௮. இனிது: பன்மையொருமை மயக்கம்.

காமமிகுதியாற் கொலையுண்ட உதயகுமரன் பொருட்டு வருந்தா வண்ணம், முற்காலத்து அந்நகரத்திற் காமமிகுதியால் தீங்கிழைத்துக் கொலையுண்ட இருவருடைய சரித்திரங்களை அம்முனிவர்களுள் ஒருவர் அரசனுக்குக் கூறுதல் மேற்கூறப்படும்.

உ0. கன்றிய - அடிப்பட்ட; "காமமே கன்றி நின்ற" (சீவக. உ௪0.) அயர்ந்து - செய்து. காமக்கள்ளாட்டு : மணி. ௧௮ : ௮௮, உ௫ : ௬௧.

உஉ. நற்றவப் பெண்டிர் - நல்ல தவஞ்செய்யுமகளிர் ; நற்றவம் - வீடுபெறுதற்குச் செய்யுந் தவமுமாம் ; "நற்றவஞ்செய் வார்க்கிடந் தவஞ்செய்வார்க்கு மஃதிடம்" சீவக. ௭௭.

உ௪. பண்டும்: உம்மை எதிரதுதழீஇய எச்சப்பொருளது.

உ௫. மன்மருங்கறுத்த - இராசகுலத்தை இல்லையாக்கின ; "சூர் மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி" (முருகு. உ௭௫.) மழுவாணெடியோன் - பரசுராமன் ; மதுரை, ௪௫.

உ௭. கன்னி - துர்க்கை ; சம்பாபதியுமாம். காந்தமன்னவன் - காந்தனென்னும் பெயரையுடைய அரசன்.

உ௮. இந்நகரென்றது, காவிரிப்பூம் பட்டினத்தை. நினைஇ - நினைந்து.

(பி - ம்.) உ௬. 'தகாதொழி'

நாவலந் தண்பொழி னண்ணார் நடுக்குறக்
காவற் கணிகை தனக்காங் காதல
னிகழ்ந்தோர் காயினு மெஞ்சுத லில்லோன்
ககந்த னாமெனக் காதலிற் கூஉ
யரசா ளுரிமை நின்பா லின்மையிற்
பரசு ராமனின் பால்வந் தணுகா
னமர முனிவ னகத்தியன் றனாது
துயர்நீங்கு கிளவியின் யான்றோன் றளவுங்
ககந்தன் காத்தல் காகந்தி யென்றே
யியைந்த நாம மிப்பதிக் கிட்டீங்
குள்வரிக் கொண்டவ் வுரவோன் பெயர்நாட்
டெள்ளுநீர்க் காவிரி யாடினள் வருஉம்
பார்ப்பனி மருதியைப் பாங்கோ ரின்மையின்

---

௨௯. சிலப். ௨௫ : ௧௭௩. நாவலந்தண்பொழில் - சம்புத்தீவில். நண்ணார் - பகைவர்.

௩௰. காவற்கணிகை - களத்தாடுங் கூத்தி; இராக்கடை வேசை யென்பர் அரும்பதவுரையாசிரியர் (சிலப். ௫ : ௫௰); இவள் அரசன் காமக்கிழத்திபோலும். காதலன் - மகன்.

௩௧. எஞ்சுதல் - குறைதல்.

௨௯ - ௩௧. நண்ணார் இகழ்ந்தோராய் நடுக்குறக்காயினும் எஞ்சுதலில்லோன்.

௩௨. ககந்தனாமென - ககந்தன் காத்தற்குரியனாவானென்று நினைந்து. கூஉய் - அழைத்து.

௩௰ - ௩௨. காதலனும் எஞ்சுதலில்லோனுமாகிய ககந்தனென்க. மேல்வருவது, ககந்தனை நோக்கி அரசன் கூறும் கூற்று.

௩௩. ககந்தன் கணிகைமகனாதலின், அவன்பால் அரசவுரிமை இலதாயிற்று.

௩௫. அமரமுனிவனாகிய அகத்தியன்.

௩௫ - ௬. இம்மன்னவன் அகத்திய முனிவர்பாற் பத்திமையுடைய னாதலை, "கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட, வமர முனிவ னகத் தியன் றனாது, கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை" (மணி. பதி. ௧௰ - ௧௨) என்பதனாலுணர்க.

௩௭. ககந்தன் : அண்மைவிளி. காத்தல் : வியங்கோள். 'என்று கூறி' என வருவிக்க.

௩௯. உள்வரிக்கொண்டு - வேற்றுருவங்கொண்டு. நாள் - நாளில். இனிக் கூறப்படுவது, பத்தினிப்பெண்டிர்பாற் சென்றணுகித் தீங் குற்றோன் கதை.

(பி - ம்.) ௩௧. 'இகந்தோர்க்காயினும்' ௩௭. 'ககந்தன் காத்த லின்'

யாப்பறை யென்றே யென்னையி னகற்றிக்
காவிரி வாயிற் கக்கந் திருவை
யீவா யென்ன நேரிழை கலங்கி
மன்றப் பொதியி லாலத் தருமறை யவர்க் கூட்டம்
பெண்டி ராயிற் பிறர்நெஞ்சு புகாஅர்
புக்கேன் பிறருளம் புரிநூன் மார்பன்
முத்திப் பேறு முறையெனக் கில்லென
மாறாய வெவ்வமொடு மனையகம் புகாஅள்
பூத சதுக்கம் புக்கனள் மயங்கிக்
கொண்டோற் பிழைத்த குற்றந் தானிலேன்
கண்டோ னெஞ்சிற் கரப்பெளி தாயினேன்
வான்றரு கற்பின் மனையறம் பட்டேன்
யான்செய் குற்றம் யானறி கில்லேன்
பொய்யினை கொல்லோ பூத சதுக்கத்துத்
தெய்வ நீயெனச் சேயிழை யரற்ற
மாபெரும் பூதந் தோன்றி மடக்கொடி

---

௪௨. யாப்பறை - உறுதியற்றவள்.

௪௩. காவிரி வாயிலில் - காவிரிக்கரையில் திருமுகத்துறைக்குறி ஸின்ற வாயிலில்; "காவிரி வாயிற் கடைமுகங் கழிந்து" சிலப். ௧௦ : ௩௩.

௪௪. என்ன - என்றுகூற. நேரிழை - மருதி. ௪௫. புறநா. ௨.

௪௭. பிறருளம்புக்கேனென்க. இக்கருத்தைத்தழுவி, "நிறைகொ ளடமின்" (சிலப். ௧ : ௨௭) என்பதில், 'நிறை' என்பதற்கு, 'பிறர் நெஞ்சு புகுதல்' என்று அடியார்க்குநல்லார் பொருள்செய்திருத்தல் காண்க. புரிநூன் மார்பனென்றது, தன் கணவனாகிய அந்தணனை.

௪௯. மாறாயவெவ்வம் - மிக்க துன்பம்; மணி. ௧௦ : ௩௨. புகாஅள் - புகாளாய்.

௫௦. பூதசதுக்கம் - தவமறைந்தொழுகும் தன்மையிலாளர் முதலிய அறுவகையினரைப் பாசத்தாற்கட்டிப் புடைத்துண்ணும் பூதம் நிற் றலையுடைய சதுக்கம்; சதுக்கம் - நாற்சந்தி; பூதசதுக்கத்தின் வரலாற் றைச் சிலப்பதிகாரம், ௫ : ௧௨௮ - ஆம் அடிமுதலியவற்றுலுணர்க.

௫௧. கொண்டோன் - கணவன். ௫௨. கரப்பு - ஒளித்தல்.

௫௩. வான்றருகற்பு - மழையைத்தரும் கற்பு. மனையறம் பட் டேன் - இல்லறத்திற்குத் தலைவியாக நிற்றலை ஒழிந்தேன்.

௫௪. யானறிகில்லேன் - யானறியேன்.

௫௫. பொய்யினைகொல்லோ - பொய்ம்மையையுடையாயோ.

௫௬-௭. நீ இல்லையாயினையோ. ௫௮. பூதம் - சதுக்கப்பூதம்.

(பி - ம்.) ௪௨. 'என்னிலாறு' ௫௮. 'மாபெருந்தெய்வம்'

நீகே ளென்றே நேரிழைக் குரைக்குந்
தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்
பிசியு நொடியும் பிறர்வாய்க் கேட்டு
விசிபிணி முழவின் விழாக்கோள் விரும்பிக்
கடவுட் பேணல் கடவியை யாகலின்
மடவர லேவ மழையும் பெய்யாது
நிறையுடைப் பெண்டிர் தம்மே போலப்
பிறர்நெஞ்சு சுடூஉம் பெற்றியு மில்லை
யாங்கவை யொழிகுவை யாயி னாயிழை
யோங்கிரு வானத்து மழையுநின் மொழியது
பெட்டாங் கொழுகும் பெண்டிரைப் போலக்
கட்டா துன்னையென் கடுந்தொழிற் பாச
மன்முறை யெழுநாள் வைத்தவன் வழூஉம்
பின்முறை யல்ல தென்முறை யில்லை

---

௫௯ - ௬0. குறள், ௫௫.

௬௧. பொய்யில்புலவன் - திருவள்ளுவர். பொருளுரை - பொருளை யுடைய சொல்; தருமவார்த்தையுமாம். தேறாய் - தெளியாயாய்; சிலப். ௨௮ : ௧௬௮.

௬௨. பிசி - பிதிர் (புதிர்); பொய்யுமாம். நொடி - விடுகதை.

௬௩. விசிபிணிமுழவின் விழா - கட்டப்பட்ட கட்டினையுடைய முழவினையுடைய விழா.

௬௪. கடவியையாகலின் - கடப்பாடாக வுடையையாகலின்.

௬௫. மடவரல் : முன்னிலைப்பெயர்.

௬௬. நிறை - நிறுத்தல். பெண்டிர் தம்மேபோல - பெண்டிரைப் போல.

௬௭. பெற்றியுமில்லை - தன்மையுமில்லை.

௬௫ - ௭. மணி. ௨௨ : ௪௫ - ௬.

௬௮. அவை - பிசியையும் நொடியையும் கேட்டலும், விழாக்கோள் விரும்பலும், கடவுட்பேணலும்.

௭0. பெட்டாங்கு - விரும்பியவண்ணம். பெண்டிரைப்போல - பெண்டிரைக் கட்டுவதுபோல.

௭௨. எழுநாள் - ஏழுநாளாம். வைத்து : சொன்னடை; அர சன் முறையாக ஏழுநாள் பொறுத்துவைத்திருந்து என்றலுமாம். வழூ உம் - தவறும்.

(பி - ம்.) ௫௯. 'தொழுமவள்' ௬௨. 'கேட்டும்' ௬௩. 'விரும்பியும்'

யீங்கெழு நாளி லிளங்கொடி நின்பால்
வாங்கா நெஞ்சின் மயரியை வாளாற்
சகந்தன் கேட்டுக் கடிதலு முண்டென
விகந்த பூத மெடுத்துரை செய்ததப்
பூத முரைத்த நாளா லாங்கவன்
றுதை வாளாற் றடியவும் பட்டன
னின்னுங் கேளா யிருங்கட லுடுத்த
மண்ணாள் செல்வத்து மன்னவ ரேறே
தரும தத்தனுந் தன்மா மன்மகள்
பெருமதர் மழைக்கண் விசாகையும் பேணித்
தெய்வங் காட்டுந் திப்பிய வோவியக்
கைவினை கடந்த கண்கவர் வனப்பினர்
மைத்துனன் முறைமையால் யாழோர் மணவினைக்
கொத்தன ளென்றே யூர்முழு தலரெழப்
புனையா வோவியம் புறம்போந் தென்ன
மனையக நீங்கி வாணுதல் விசாகை
யுலக வறவியி னூடுசென் றேறி
யிலகொளிக் கந்தி னெழுதிய பாவா
யுலகர் பெரும்பழி யொழிப்பாய் நீயென
மாநக ருள்ளீர் மழைதரு மிவளென

---

௭௫. மயரி - மயக்கமுடையான்.

௭௪ - ௬. ஏழுநாளிற்கடிதலுமுண்டு.

௭௭. இகந்தபூதம் - தீமையைக் கடந்தபூதம்.

௭௮. நாளால் - நாளில். ௮௦ - ௮௧. புறநா. ௩௬௩.

இனிக்கூறப்படுவது, நற்றவப்பெண்டிர் பின்னுளம்போக்கித் தீங்குற்றோன் கதை.

௮௨ - ௫. தருமதத்தனும் விசாகையும் வனப்பினர்.

௮௬. யாழோர்மணவினைக்கு - காந்தருவவிவாகத்திற்கு.

௮௭. ஒத்தனர் - இயைந்தனர்.

௮௮. புனையாவோவியம்-வண்ணங்களைக்கொண்டெழுதாமல் வடிவைமாத்திரம் கோட்டினசித்திரம்; மணி. ௧௬ : ௧௩௧; செயற்கையழகு யாதொன்றும் இன்மையின், இங்ஙனங்கூறினார்.

௯௦. ஊடு - உள்ளே. ௯௨. என - என்று விசாகைவேண்ட.

௯௩. இவள் மழையைத் தருவாளென்று.

(பி - ம்.) ௮௭. 'ஒத்தனரென்றே' ௯௦. 'ஊடுவெந்தேறி'

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

டொட்டிய செல்வத் துயர்ந்தோ னாயின
னந்த ணாள னொருவன் சென்றீங்
கென்செய் தனையோ விருநிதிச் செல்வ
பத்தினி யில்லோர் பலவறஞ் செய்யினும்
புத்தே ளுலகம் புகாஅ ரென்பது
கேட்டு மறிதியோ கேட்டனை யாயி
னீட்டித் திராது நின்னக ரடைகெனத்
தக்கண மதுரை தான்வழி தாக
விப்பதிப் புகுந்தன னிருநில வேந்தே
மற்றவ னிவ்வூர் வந்தமை கேட்டுப்
பொற்றொடி விசாகையு மனைப்புறம் போந்து
நல்லா ணாணாள் பல்லோர் நாப்ப
ணல்லவை கடிந்த வவன்பாற் சென்று
நம்முணா மறிந்தில நம்மை முன்னாண்
மம்மர் செய்த வனப்பியாங் கொளித்தன
வாறைந் திரட்டி யாண்டுனக் காடதென்
னாறைங் கூந்தலு நரைவிரா வுற்றன
விளமையுங் காமமும் யாங்கொளித் தனவோ
வுளனில் லாள வெனக்கீங் குரையா
யிப்பிறப் பாயினியா னின்னடி யடையே
னப்பிறப் பியானின் னடித்தொழில் கேட்குவ

ககச. ஒட்டிய - நீராத.

க0எ - கச. தருமதத்தனும் கூறி ஈட்டிப் பெற்று உயர்ந்தோனா யினனென்க.

கஉ0. அடைக என - அடைவாயென்று அந்தணாளன் கூற.

கஉஉ. புகுந்தனன் - தருமதத்தன் புகுந்தனன்.

கஉசு. அல்லவை - பொய்முதலியன.

மேல்வருவது விசாகைகூற்று.

கஉஅ. மம்மர் - மயக்கம். வனப்பென்றது இருவருடைய அழகையும்.

கூ0. நாறைங்கூந்தல்: சிலப். க0 : சகூ.

கஉகூ - கூ0. என் கூந்தலும் - எனது கூந்தலும். கூந்தல் - மயிர் மாத்திரையாய் ஐவகையுமுணர்த்தலின், 'நரைவிரா வுற்றன' என்று பன்மை கூறினர்; "வண்ணப்போ தருச்சித்து மகிழ்வானாத் தகையவே" சீவக. ககூச.

கூச. அப்பிறப்பு - மறுபிறப்பு.

(பி - ம்.) கூக. 'யாங்குகுத்தனவோ'

இளமையு நில்லா யாக்கையு நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமு நில்லா
புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்
மிக்க வறமே விழுத்துணை யாவது
தானஞ் செய்யெனத் தரும தத்தனு
மாமன் மகள்பால் வான்பொருள் காட்டி
யாங்கவ னவளுடன் செய்த நல்லற
மோங்கிரு வானத்து மீனினும் பலவாற்
குமரி மூத்தவக் கொடுங்குழை நல்லா
ளமர னருளா லகனக ரிடூஉம்
படுபழி நீங்கிப் பல்லோர் நாப்பட்
கொடிமிடை வீதியின் வருவோள் குழன்மேன்
மருதி பொருட்டான் மடிந்தோன் றம்முன்
கருகிய நெஞ்சினன் காமங் காழ்கொளச்
சுரியிரும் பித்தை சூழ்ந்துபுறந் தாழ்ந்த
விரிபூ மாலை விரும்பினன் வாங்கித்

---

௧௩௫ - ௬. "இளமையுஞ் செல்வமும் யாக்கையு நில்லா" சிலப். ௩௦: ௧௯௯. ௧௩௭. புத்தேளுலகம் - தேவருலகம்.

௧௩௫ - ௮. மணி. ௨௮ : ௯௮ - ௧௦௦.

௧௩௯. தானஞ்செய்யென - தானஞ்செய்யென்று விசாகைசொல்ல.

௧௪௦. மாமன்மகள் - விசாகை ; மணி. ௨௨ : ௧௮௬.

௧௪௩. குமரிமூத்த - கன்னிப்பெண்ணாகவிருந்து வறிதே மூப்புற்ற ; "குமரி மூத்தவென் பாத்திரம்" (௧௪ : ௭௭) என ஆபுத்திரன் கூறியதாக முன்னும் கூறியிருத்தல் காண்க. நல்லாள் - விசாகை.

௧௪௪. அமரன் அருளால் - கந்திற்பாவையிலுள்ள துவதிகனென்னும் தேவனுடைய கருணையால்.

௧௪௫. படுபழி - மைத்துனன் முறையால் யாழோர் மணவினைக்கு ஒத்தனரென்று ஊர்கூறிய பொய்ப்பழி.

௧௪௫ - ௬. நாப்பண்வருவோள் - விசாகை.

௧௪௭. மருதி - முற்கூறிய பார்ப்பனி மருதி. தம்முன் - தமையன்.

௧௪௮. கருகிய நெஞ்சு - இருண்ட நெஞ்சு. காழ்கொள - வயிரங் கொள்ள ; மணி. ௫ : ௨௦. காழ்கொளக் கருகிய நெஞ்சினனென்க.

௧௪௯. சுரியிரும்பித்தை - சுரிந்த கரிய தன் குடுமியில் ; "சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி" பொருந. ௧௬௦.

௧௫௦. மாலையை விரும்பி வாங்கி.

(பி - ம்.) ௧௩௫. 'நில்லாது'

தொல்லோர் கூறிய மணமீ தாமென
வெல்லவிழ் தாரோ னிடுவான் வேண்டி
மாலை வாங்க வேறிய செங்கை
நீலக் குஞ்சி நீங்கா தாகலி
னேறிய செங்கை யிழிந்தில திந்தக்
காரிகை பொருட்டெனக் ககந்தன் கேட்டுக்
கடுஞ்சினந் திருகி மகன்றுயர் நோக்கான்
மைந்தன் றன்னை வாளா லெறிந்தன
னூழிதொ றூழி யுலகங் காத்து
வாழிய வெங்கோ மன்னவ வென்று
மாதவர் தம்முளோர் மாதவன் கூறலும்
வீயா விழுச்சீர் வேந்தன் கேட்டன
னின்றே யல்ல வென்றெடுத் துரைத்து
நன்றறி மாதவிர் நலம்பல காட்டினி
ரின்று முளதோ விவ்வினை யுரைமென
வென்றி நெடுவேல் வேந்தன் கேட்பத்
தீதின் றாக செங்கோல் வேந்தென
மாதவர் தம்முளோர் மாதவ னுரைக்கு
முடிபொரு ளுணர்ந்தோர் முனிவீ ருலகிற்
கடியப் பட்டன வைந்துள வவற்றிற்

---

௧௫௨. எல் - விளக்கம். இடுவான் வேண்டி - இடவிரும்பி.

௧௫௩. வாங்க - கொள்ளுதற்பொருட்டு.

௧௫௪. நீலக்குஞ்சி - கருமையையுடைய குடுமி; நீலம் - கருமை; "நீல யானை மன்னவன்" சீவக. ௧௪௮.

௧௫௩ - ௪. கை நீங்காதாகலின்.

௧௫௫ - ௬. விசாகைக்குச் சூட்டுதற்பொருட்டு மாலைவாங்குதற்கு ஏறிய கை குஞ்சியினின்றும் இழிந்திலதென்று ககந்தன் கேட்டு.

௧௫௭. சினந்திருகி - கோபம்முறுகி; "காய்சினந் திருகிய கடுந் திறல் வேனில்" (பெரும்பாண். ௩.) நோக்கான் - நோக்கானாய்; இது நோக்கல் நோக்கம்.

௧௫௯ - ௬0. மு. மணி. ௧௧ : ௧௩௭ - ௮. ௧௬௨. வீயா - மாறாத.

௧௬௩. 'இன்றேயல்ல' என்பதனை இக்காதையில் ௧௧-ஆம் அடியிற்காண்க.

௧௬௫. உரைமென=உரையுமென - சொல்லுமென்று.

௧௬௭. வேந்தே, செங்கோல் தீதின்றாகவென்று.

௧௬௮. உரைக்கும் - உரைப்பான்.

௧௬௯. முடிபொருள் உணர்ந்தோர் - பரமார்த்த தத்துவஞானிகள்.

௧௭0. கடியப்பட்டன - விலக்கப்பட்டன. ஐந்தாவன : கள், பொய்,

கள்ளும் பொய்யுங் களவுங் கொலையுந்
தள்ளா தாகுங் காமந் தம்பா
லாங்கது கடிந்தோ ரல்லவை கடிந்தோ ரென
நீங்கின ரன்றே நிறைதவ மாக்க
ளீங்கா ரன்றே நீணில வேந்தே
தாங்கா நரகந் தன்னிடை யுழப்போர்
சேயரி நெடுங்கட் சித்திரா பதிமகள்
காதல னுற்ற கடுந்துயர் பொறாஅண்
மாதவி மாதவர் பள்ளியு ளடைந்தனண்
மற்றவள் பெற்ற மணிமே கலைதான்
முற்றா முலையினண் முதிராக் கிளவியள்
செய்குவன் றவமெனச் சிற்றிலும் பேரிலு
மையங் கொண்டுண் டம்பல மடைந்தன
ளாங்கவ ளவ்வியல் பினளே யாயினு
நீங்கா னவளை நிழல்போல் யாங்கணுங்
காரிகை பொருட்டாற் காமங் காழ்கொள

களவு, கொலை, காமமென்பன; "கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையு முள்ளக் களவுமென் றுரவோர் துறந்தவை" (உச : எஎ - அ) என்பர் பின்னும். அவற்றில் - அவ்வைந்தனுள்ளே.

கஎக - உ. காமம், கள்முதலிய நான்கினையும் நீக்காது; என்றது, காமமுடையோர் மற்றை நான்கு குற்றத்தையும் உடையராவரென்றபடி.

கஎ௩. ஆங்கது - அத்தன்மையதாகிய காமத்தை. அல்லவை கடிந்தோர் - அல்லாத கள்முதலியவற்றையுங் கடிந்தோராவர்.

கஎச. நீங்கினரன்றே - அக்காமத்தை நீங்கினோரே.

கஎகூ. உழப்போர் - வருந்துவோர்.

கஎரு - கூ. நீங்காரே நரகத்தில் துன்பமனுபவிப்போராவார். மேல் உதயகுமரன் செய்தி கூறப்படும்.

கஎஅ. காதலனுற்ற கடுந்துயர் - கோவலன் கொலையுண்டிறந்தது.

கஎகூ. மாதவர்பள்ளியுள் - பௌத்த சங்கத்தாரான அறவணவடிகளுடைய உறைவிடத்தில்.

கஎஅ - கூ. மணி. உ : ருகூ - சுகூ, கஅ : எ - அ.

கஎஎ - கூ. மகளாகிய மாதவி. பள்ளியுள் அடைந்தனள்.

கஅ0. அவள் - மாதவி. கஅஉ. தவம் செய்குவனென்று.

கஅ௩. ஐயம் - பிச்சை. அம்பலம் - உலகவறவி.

கஅரு. அவளை நிழல்போல் யாங்கணும் நீங்கானாய்.

கஅசு. காரிகைபொருட்டு - மணிமேகலைபொருட்டு. காழ்கொளமுற்ற; மணி. உஉ : கசஅ.

(பி - ம்.) கஎ௩. 'அவைகடிந்தோரென' கஎகூ. 'அடைதலும்'

வாயிரு ளஞ்சா னம்பல மடைந்தனன்
காயசண் டிகைவடி வாயினள் காரிகை
காயசண் டிகையு மாங்குள ளாதலிற்
காயசண் டிகைதன் கணவ னாகிய
வாய்வாள் விஞ்சைய னொருவன் றோன்றி
யீங்கிவள் பொருட்டால் வந்தன னிவனென
வாங்கவன் றீவினை யுருத்த தாகலின்
மதிமருள் வெண்குடை மன்ன னின்மக
னுதய குமர னொழியா னாக
வாங்கவ டன்னை யம்பலத் தேற்றி
யோங்கிருள் யாமத் திவனையாங் குய்த்தாங்
காயசண் டிகைதன் கணவ னாகிய
வாய்வாள் விஞ்சையன் றன்னையுங் கூஉய்
விஞ்சை மகள்பா லிவன்வந் தனனென
வஞ்ச விஞ்சையன் மனத்தையுங் கலக்கி
யாங்கவன் றன்கை வாளா லம்பலத்
திங்கிவன் றன்னை யெறிந்ததென் றேத்தி
மாதவர் தம்முளோர் மாதவ னுரைத்தலுஞ்
சோழிக வேனாதி தன்முக நோக்கி

க௮௭. அஞ்சானாகி அம்பலமடைந்தனன்.
க௮௮. காரிகை - மணிமேகலை. க௮௯. உளள் - உள்ளாள்.
க௯க. வாய்வாள் - தப்பாத வாள்.
க௯உ. இவள்பொருட்டு - காயசண்டிகையின் பொருட்டு.
க௯௩. அவன் - உதயகுமரன்; காஞ்சனனுமாம்.
க௯௪. மருள்: உவமவுருபு; மணி. ௪: ௨௭.
க௯௬. அவள் தன்னை - மணிமேகலையை.
க௯௭. இவனை - உதயகுமரனை.
௨00. விஞ்சைமகள் - காயசண்டிகை.
௨0௩. எறிந்தது - அத்தீவினை வெட்டியது.
௨0௫. ஏனாதியென்பது வேந்தனாற் கொடுக்கப்படும் பட்டப்பெயர்களுளொன்று; இதனை, "மாராயம் பெற்ற நெடுமொழி யானும்" (தொல். புறத். சூ. ௮) என்பதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதியவுரையானும், அதில், "போர்க்கடலாற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குக், கார்க்கடல் பெற்ற கரையன்றே - போர்க்கெல்லாந், தானாதியாகிய தார்வேந்தன் மோதிரஞ்சே, ரேனாதிப் பட்டத் திவன்" என்று அவர் எடுத்துக்காட்டிய பழம்பாட்டானுமுணர்க; பெரியபுராணத்துக் கூறப்பட்டுள்ள திருத்தொண்டர்களுள் ஒருவர்க்கு ஏனாதிநாதநாயனாரென்ற திருநாமம்

(பி - ம்.) க௯௪. 'மதிமருணெடுங்குடை'

யான்செயற் பால திளங்கோன் றன்னைத்
தான்செய் ததனாற் றகவிலன் விஞ்சையன்
மாதவர் நோன்பு மடவார் கற்புங்
காவலன் காவ லின்றெனி னின்றான்
மகனை முறைசெய்த மன்னவன் வழியோர்
துயர்வினை யாளன் றோன்றின னென்பது
வேந்தர் தஞ்செவி யுறுவதன் முன்ன
மீங்கிவன் றன்னையு மீமத் தேற்றிக்
கணிகை மகளையுங் காவல்செய் கென்றன
னணிகிளர் நெடுமுடி யரசாள் வேந்தென்.

௨௨.—சிறைசெய்காதை முற்றிற்று.

இதுபற்றியேவந்த குடிப்பெயர்போலும்; "ஆழிதொட்டான்" என்பதற்கு 'ஏனாதிமோதிரஞ் செறித்த சேனாபதி' (சீவக. ௨௧௬௭) என்று ஆசிரியர் நச்சினார்க்கினியரெழுதியிருக்கின்றனர். மேற் கூறியவாற்றாலும், இக் காதையின் தலைப்பில், 'மந்திரியாகிய சோழிகவேனாதி' என்றிருத்தலாலும், 'சோழிகவேனாதி' என்பதற்குச் சோழனுடைய ஏனாதிமோதிரஞ் செறித்த சேனாபதியும் மந்திரியுமாகிய ஒருவனென்று பொருள்கொள்ளுதல் பொருத்தமுடைத்து.

௨0௭. காஞ்சனன் தகுதியில்லாதவனாயினான்.

௨0௬ - ௭. யான் செயற்பாலதைத் தான் செய்ததனாலென்க.

௨0௮ - ௯. காவலின்றெனின், நோன்புமின்று, கற்புமின்று; "அருந்திற லரசர் முறைசெயி னல்லது, பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது" சிலப். ௨௮ : ௨0௭ - ௮.

௨௧0. மகனை முறைசெய்த மன்னவன் - கன்றையிழந்த பசுவின் துயரைத் தீர்த்தற்குத் தன் மகனைக் கிடத்தி அவன் மார்பில் உருளைசெல்லும்படி தேரையூர்ந்த மனுவேந்தன்; இதனை, "மேலைக், கறவைக்கன் றூர்ந்தானைத் தந்தையு மூர்ந்தான்" (பழ. ௬௩), "வாயிற் கடைமணி நடுநா நடுங்க, வாவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்றன், னரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன், பெரும்பெயர்ப் புகாரென் பதியே" (சிலப். ௨0 : ௫௩ - ௬), "கறவை முறைசெய்த காவலன்கா ணம்மானை" (ஷை. ௨௯ : 'புறவு நிறை'), "மருளும் பசுவொன்றின் மம்மர்நோய் தீர, வுருளுந் திருத்தே ருரவோன்" (குலோத்துங்கசோழனுலா) என்பவனவற்றாலும், பெரிய புராணத்திலுள்ள திருவாரூர்ச் சிறப்பாலுமுணர்க.

௨௧௧. துயர்வினை - தீவினை. ௨௧௨ - ௩. முன்னம் ஏற்றி.

௨௧௪. கணிகைமகள் - மணிமேகலை.

௧ - ௨௧௫. மண்டிலம் சீப்பப் புரிந்தோர் உரைப்பக்கேட்டு மாதவரெல்லாம் மணிமேகலையை நோக்கி, 'இதனை நீயறிவதுமுண்டோ' என,

(பி - ம்.) ௨0௯. 'காவலன்றித் தங்காவலான்?

அவள் உரைத்தலும், அவளைச் சிறுவனொடு வேறிடத்தொளித்து இசைத்துச் சென்று குறுகி ஒரு மாதவனுரைத்தலும், கேட்டு வேந்தன், 'உரையும்' என, ஒரு மாதவனுரைக்கும்; அங்ஙனமுரைக்குமாதவன் ஏத்தி உரைத்தலும், வேந்து காவல் செய்கென்றனனென வினைமுடிவு செய்க.

இருபத்துமூன்றாவது

சிறைவிடு காதை.

[இருபத்து மூன்றாவது மணிமேகலை சிறைவீடுசெய்த இராசமாதேவி குறைகொண்டிரப்பச் சீலங்கொடுத்த பாட்டு.]

மன்னவ னருளால் வாசந் தவையெனு
நன்னெடுங் கூந்த னரைமூ தாட்டி
யரசர்க் காயினுங் குமரற் காயினுந்
திருநிலக் கிழமைத் தேவியர்க் காயினுங்
கட்டுரை விரித்துங் கற்றவை பகர்ந்தும்
பட்டவை துடைக்கும் பயங்கெழு மொழியின
ளிலங்கரி நெடுங்க ணிராசமா தேவி
கலங்கஞ ரொழியக் கடிதுசென் றெய்தி
யழுதடி வீழா தாயிழை தன்னைத்
தொழுதுமுன் னின்று தோன்ற வாழ்த்திக்
கொற்றங் கொண்டு குடிபுறங் காத்துச்

---

௨. நரைக்கூந்தல் - வெண்மையையுடைய கூந்தல்.

௩ - ௪. ஆயினுமென்பது விகற்பப்பொருளைத் தருவதோரிடைச்சொல்; எண்ணிடைச்சொல்லுமாம்.

௫. கட்டுரை - பொருள் பொதிந்த சொல்.

௬. பட்டவை - உண்டான துன்பங்கள். பயம் - பிரயோசனம்.

௫ - ௬. விரித்தும் பகர்ந்தும் துடைக்கும் மொழியினள்.

௮. கலங்கஞர் - கலங்குதற்குக் காரணமாகிய துன்பம். கடிது சென்று - விரைவாகச் சென்று.

௧ - ௮. வாசந்தவையெனுமூதாட்டி, மொழியினள், தேவியது அஞரொழிய மன்னவனருளாற் கடிதுசென்றெய்தியென்க.

௧௦. தொழுது - அஞ்சலிசெய்து.

௧௧. கொற்றங்கொண்டு - அரசவுரிமையைக்கொண்டு; "கொற்றங் கொண்டு கோலினி தோச்சென" (பெருங். ௨. ௫: ௭௩.) குடிபுறங்

(பி - ம்.) ௬. 'பட்டதுதுடைக்கும்' ௯. 'அழுதனளடிவீழ்ந்து'

செற்ற தெவ்வர் தேஎந்தம தாக்கியுந்
தருப்பையிற் கிடத்தி வாளிற் போழ்ந்து
செருப்புகன் மன்னர் செல்வுழிச் செல்கென
மூத்து விளிதலிக் குடிப்பிறந் தோர்க்கு
நாப்புடை பெயராது நாணுத்தக வுடைத்தே
தன்மண் காத்தன்று பிறர்மண் கொண்டன்
றென்னெனப் படுமோ நின்மகன் மடிந்தது
மன்பதை காக்கு மன்னவன் றன்முன்

காத்து - குடிகளைப் பிறர் நலியாமற் பாதுகாத்து ; "குடிபுறங் காத்தோம்பி" குறள், ருசக.

கஉ. செற்றம் - பகைமை நெடுங்காலம் நிகழ்வது. தெவ்வர் - பகைவர்.

கங. தருப்பையிற்கிடத்தி - பரப்பியதருப்பைப்புல்லிற் கிடத்தி. போழ்ந்து - பிளந்து.

கச. செருப்புகல் மன்னர் - போரின்கண்ணே புக்குப் போர் செய்து வீழ்தலையுடைய அரசர். செல்வுழிச் செல்க என - செல்லுமுலகத்திலே செல்கவென்று அந்தணர் கூறும் வண்ணம்.

கரு. மூத்துவிளிதல் - மூப்புற்று இறத்தல். இக்குடி - சோழபரம்பரை.

கங - சு. போரிலிறவாமல் முதுமையுற்று நோயால் இறந்த அரசருடம்பை அந்தணர் தருப்பைப்புல்லிற்கிடத்தி, தமது ஆண்மையே பற்றுக்கோடாக யுத்தத்திலேயிறந்த அரசர்செல்லும் உலகத்திலே இவர் செல்கவென்று அவ்வுடம்பை வாளாற் பிளந்து அடக்குதல் மரபாதலின் இங்ஙனங் கூறினர். இப்படியே, "ஓடன் மரீஇய பீடின் மன்னர்,...... திறம்புரி பசும்புற் பரப்பினர் கிடப்பி, மறங்கந் தாக நல்லமர் வீழ்ந்த, நீள்கழன் மறவர் செல்வுழிச் செல்கென, வாள்போழ்ந் தடக்கலு முய்ந்தனர்" (புறநா. கூங), "மூப்பினும் பிணியினும் இறவாது அமர்க்களத்து வீழ்ந்தோரே துறக்கம்பெறுவர்" (தொல். அகத். சூ. சச, ந.) என வந்திருத்தல் காண்க; அகநா. சுக : க - ங, பார்க்க.

கசு. நாப்புடை பெயராது - இதனைக்கூறுதற்கு எனது நாவானது புடைபெயர மாட்டாது. நாணுத்தகவுடைத்து - நாணுந்தகுதியையுடைத்து ; "மலைத்தனை யென்பது நாணுத்தக வுடைத்தே" புறநா. ஙசு.

கஉ - சு. தமதாக்கியும் மூத்துவிளிதல் இக்குடிப்பிறந்தோர்க்கு நாணுத்தகவுடைத்து.

கஎ - அ. நின்மகன் மடிந்தது, தன் மண் காத்தமையாலன்று; பிறர் மண் கொண்டமையாலுமன்று ; காமத்தால்; அவ்விறப்பு யாதென்று கூறப்படும்.

கக. மன்பதை - உயிர்ப்பன்மை.

(பி - ம்.) கஉ. 'செற்றதெவ்வர்தேயந்தமது' கசு. 'நாணுத்தக வுடைத்தென'

துன்பங் கொள்ளே லென்றவள் போயபின்
கையாற் றுள்ளங் கரந்தகத் தடக்கிப்
பொய்யாற் றொழுக்கங் கொண்டுபுற மறைத்து
வஞ்சஞ் செய்குவன் மணிமே கலையையென்
றஞ்சி லோதி யரசனுக் கொருநாட்
பிறர்பின் செல்லாப் பிக்குணிக் கோலத்
தறிவு திரிந்தோ னரசிய றானிலன்
கரும்புடைத் தடக்கைக் காமன் கையற
வரும்பெற லிளமை பெரும்பிறி தாக்கு
மறிவு தலைப்பட்ட வாயிழை தனக்குச்
சிறைதக் கன்று செங்கோல் வேந்தெனச்

---

௨௦. கொள்ளேல் - கொள்ளாதே. அவள் - வாசந்தவை.

இராசமாதேவி, அரசனை யடைந்து மணிமேகலையைச் சிறைமீட்டு உடன்கொண்டு சென்று தன் காவலில்வைத்து வஞ்சித்தல் இனிக்கூறப் படும்.

௨௧. கையாற்றுள்ளங்கரந்து - செயலறவினையுடைய உள்ளத்தை மறைத்து ; என்றது புத்திரசோகத்தை வெளிப்படுத்தாமலென்றபடி.

௨௨. பொய்யாற்றொழுக்கங் கொண்டு - பொய்வழிக்கண் ஒழுகு தலைக்கொண்டு. புறமறைத்து - புறத்தே தோன்றாமல் மறைத்து ; என்றது மணிமேகலையை வஞ்சித்தற்கெண்ணிய தனது தீயவெண்ணத்தை ஒருவாற்றானும் வெளிப்படுத்தாமலென்றபடி.

௨௩. மணிமேகலையை வஞ்சஞ்செய்குவேனென்று கருதி.

௨௪. அஞ்சிலோதி - இராசமா தேவி.

௨௫. கோலத்து - வேடத்தைக்கண்டு.

௨௬. அறிவுதிரிந்தோன் - அறிவு வேறுபட்ட உதயகுமரன்.

௨௭. கையற - செயலற.

௨௮. இளமை - இளமையை. பெரும்பிறிதாக்கும் - பயன்படாது கெடச்செய்யும்.

௨௭ - ௮. கையறப் பெரும்பிறிதாக்குமென்க.

௨௯. தலைப்பட்ட - நேர்பட்ட ; முதன்மைப்பட்டவென்றுமாம்.

௩௦. தக்கன்று - தக்கதன்று ; விகாரம். வேந்து : அண்மை விளி. என - என்று இராசமாதேவி சொல்ல.

௨௪ - ௩௦. அஞ்சிலோதி ஒருநாள் அரசனுக்குச் சிறைதக்கன் றெனவென்க.

(பி - ம்.) ௨௬. 'அறவியறிரிந்தோன்'

றப்பின் பாலார் மக்க ளல்லார்
மறப்பின் பாலார் மன்னர்க் கென்ப
தறிந்தனை யாயினிவ் வாயிழை தன்னைச்
செறிந்த சிறைநோய் தீர்க்கென் றிறைசொல
வென்றே டெடுப்பினு மிருக்கவிவ் விளங்கொடி
தன்னோ டெடுப்பினுந் தகைக்குந ரில்லென்
றங்கவ டனைக்கூஉ யவடன் னொடு
கொங்கவிழ் குழலாள் கோயிலுட் புக்காங்
கறிவு திரிந்திவ் வகனக ரெல்லா
மெறிதரு கோலம்யான் செய்குவ லென்றே
மயற்பகை யூட்ட மறுபிறப் புணர்ந்தா
ளயர்ப்புறு செய்யா வறிவின ளாகக்

௩௧-௨. சிறப்பின்பாலார் மக்கள்-கல்விமுதலிய விசேடமுடை[illegible]வர் புதல்வர். அல்லார் மறப்பின்பாலார் - அல்லாதவர் மற[illegible]குரியவர். என்பது - என்று பெரியோர் கூறுதலை. இவ்வடிக[illegible] கருத்து, "உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்........ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளு, மூத்தோன் வருக வென்னா தவருள், அறிவுடை யோனா றரசுஞ் செல்லும், வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங், கீழ்ப் பாலொருவன் கற்பின், மேற்பா லொருவனு மவன்கட் படுமே" (புறநா. ௧௮௩) என்பதன் பொருளையும், "அரம்போலும்" (குறள், ௯௯௭) என்[illegible]ன் பொருளையும் ஒருவாறு தழுவி வந்திருத்தல் காண்க.

௩௩. ஆயிழை - மணிமேகலை.

௩௪. சிறைநோய்-சிறைத்துன்பம். தீர்க்கென்று - தீர்க்கவென்[illegible]. இறை - அரசன்.

௩௬. தன் ஓடு எடுப்பினும் - தனக்குரிய ஓட்டையேந்திப்பிச்சைக்குப் புகுவாளாயினும். தகைக்குநர் இல் - தடுப்பவர்களில்லை; "[illegible] யுடம்பு" (சீவக. ௧௧௭௨.) என்று - என்று கூறி.

௩௭. அவடனைக்கூஉய் - மணிமேகலையை யழைத்து.

௩௮. குழலாள் - இராசமாதேவி.

௩௭-௮. குழலாள் அவளோடு கோயிலுட்புக்கு.

௩௯. அறிவுதிரிந்து - அறிவைமருந்தால் வேறுபடச்செய்து; பி[illegible]தாக்கியென்றபடி.

௪௦. எறிதருகோலம் - அடிக்குங்கோலத்தை; கல்லெறியுங் கோ[illegible] யென்றுமாம். செய்குவலென்று - இவளுக்குச் செய்வேனென்[illegible].

[illegible]. மயற்பகையூட்ட - பித்தேறுதற்குக் காரணமாகிய மருந்[illegible]; "[illegible] மயற்பகை யூத்தோர்" (சிலப். [illegible]) [illegible]

[illegible] - [illegible]ப்பது.

[illegible] மறுபிறப்புணர்ந்[illegible], [illegible]

கல்லா விளைஞ னொருவனைக் கூஉய்
வல்லாங்குச் செய்து மணிமே கலைதன்
னெரிணைவள ரிளமுலை யேந்தெழி லாகத்துப்
புணர்குறி செய்து பொருந்தின னென்னும்
பான்மைக் கட்டுரை பலர்க்குரை யென்றே
காணம் பலவுங் கைந்நிறை கொடுப்ப
வாங்கவன் சென்றவ் வாயிழை யிருந்த
பாங்கி லொருசிறைப் பாடுசென் றணைதலுந்
தேவி வஞ்ச மிதுவெனத் தெளிந்து
நாவியன் மந்திர நடுங்கா தோதி
யாண்மை கோலத் தாயிழை யிருப்பக்
காணம் பெற்றோன் கடுந்துய ரெய்தி
யரச ருரிமையி லாடவ ரணுகார்

செய்யா வறிவினே னாயினேன்" (௩௨ - ௩) என்று பின்பு வருதல் காண்க. உணர்ந்தாள் அறிவினளாக.

௪௪. வல்லாங்குச்செய்து - வல்லபடி செய்து; "வடியா நாவின் வல்லாங்குப் பாடி" புறநா. ௪௭.

௪௮. காணம் - பழங்காசு; சீவக. ௧௧௧௭, ௩. கைந்நிறை கொடுப்ப - கைந்நிறையக்கொடுப்ப; நிறை: விகாரம், "நிலநெளி பரந்த வன்றே" (சீவக. ௪௩௩) என்பதில், 'நெளி' என்பதுபோல.

௪௩ - ௮. ஒருவனைக்கூஉய், 'வல்லாங்குச்செய்து புணர்குறி செய்து பொருந்தினனென்னுங் கட்டுரையைப் பலர்க்கும் உரை' என்று கூறிக் காணம்பலவும் கொடுப்பவென்க.

௪௯. ஆயிழை - மணிமேகலை.

௫௦. பாங்கு இல் ஒரு சிறைப்பாடு - அழகில்லாத ஒரு பக்கத்தி னிடத்தே; பக்கத்துள்ள ஒரு காவலிடத்தென்றுமாம்.

௪௯ - ௫௦. அவன்சென்று பாடுசென்றணைதலுமென்க.

௫௧. தேவி - இராசமாதேவி. இது - இவ்விளைஞன் வந்தது.

௫௨. நாவியல் மந்திரம் - நாப் புடைபெயருமளவிலே உச்சரிக்கப் படும் மந்திரம்; என்றது வேற்றுருவெய்துவிக்கும்மந்திரத்தை; "ஆறெ ழுத் தடக்கிய வருமறைக் கேள்வி, நாவியன் மருங்கி னவிலப் பாடி" ஞாநா. ௧௮௬ - ௭.

௫௧ - ௩. ஆயிழை, இது தேவிவஞ்சமெனத்தெளிந்து மந்திரத்தை ஓதிக் கோலத்துடனிருப்பவென்க.

௫௫. அரசருரிமையில் ஆடவரணுகார் - அரசருடைய தேவிமா ரிருக்கும் அந்தப்புரத்தில் ஆண்மக்கள் குறுகார்; "ஆடவர் குறுகா வருங்கடி வரைப்பின்" (நெடுநல். ௧௦௭); அந்தப்புரத்தை, "குழை முகப் புரிசை" (சீவக. ௨௭௫) என்பர் திருத்தக்கதேவர்.

(பி - ம்.) ௫௩. 'ஆண்மைக்'

நிரயக் கொடுமக ணினைப்பறி யேனென்
றகநகர் கைவிட் டாங்கவன் போயபின்
மகனைநோய் செய்தாளை வைப்ப தென்னென்
றுய்யா நோயி னூணொழிந் தனளெனப்
பொய்ந்நோய் காட்டிப் புழுக்கறை யடைப்ப
வூணொழி மந்திர முடைமையி னந்த
வாணுதன் மேனி வருந்தா திருப்ப
வையென விம்மி யாயிழை நடுங்கிச்
செய்தவத் தாட்டியைச் சிறுமை செய்தே
னென்மகற் குற்ற விடுக்கண் பொறுத்து
பொன்னே ரனையாய் பொறுக்கென் றவடொழ

---

௫௬. நரகத்தை யடைதற்குரிய கொடுமையையுடைய இவளது தீயவெண்ணத்தை நானறிந்திலேனெனக் கருதி; இராசமாதேவி வியபிசரிக்குங் கருத்துடையாளென்று அவ்விளைஞன் கருதினான்போலும்.

௫௭. அகநகர் - அந்தப்புரம்.

௫௪ - ௭. காணம்பெற்றேன், துயரெய்தி அறியேனென்றுகைவிட்டுப்போயபினென்க. ௪௩ - ௫௭. மணி. ௨௩ : ௧௪ - ௫.

௫௮. உதயகுமரனுக்குக் காமநோயை உண்டாக்கிக் கொல்லுவித்த இவளை இனி உயிருடன் வைத்தல் நமதன்பிற்கு யாதுபயனென்று இராசமாதேவி கருதி.

௫௯. உய்யாநோயின்-உயிரைத்தாங்கியிராமைக்குக் காரணமாகிய நோயினால்; மருந்தாற் போக்கவொண்ணாத நோயினாலென்றுமாம்.

௬௦. புழுக்கறை - புழுங்கச்செய்யும் அறை; "புழுக்கறைப் பட்டோர் போன்று" (௩ : ௬௫) என்றார் முன்னும்.

௫௮ - ௬௦. (இராசமாதேவி) வைப்பதென்னென்று காட்டி அடைப்ப வென்க.

௬௨. வாணுதல் - மணிமேகலை. ௫௮ - ௬௨. மணி. ௨௩ : ௧௬ - ௭.

௬௩. ஐயெனவிம்மி - விரையப்பொருமி; "ஐயென வளைப்ப" (சீவக. ௪௪௮); "மோதிரந்தொட் டையென்ன...நோக்கினாள்" (ஷை ௧௦௪௦.) ஆயிழை - இராசமாதேவி.

௬௪. செய்தவத்தாட்டியை - மணிமேகலைக்கு; ஐ: உருபு மயக்கம். சிறுமை - குற்றம்; என்றது மயற்பகையூட்டியது முதலிய மூன்றனையும்.

௬௪ - ௫. பொறுத்து செய்தேனென்க.

௬௬. பொன்னேரனையாய் - திருமகளின்மறுதலைபோல்வாய்; திருமகளுக்கு நேராகிய அத்தன்மையையுடையாயெனினுமமையும் (மணி. ௨ : ௧௬); "கோளரிக்குந் நிகரன்னார்" (திருச்சிற். ௨௨௫.) அவள் - இராசமாதேவி.

மேல்வருவன மணிமேகலைகூற்று.

(பி - ம்.) ௫௬. 'நினைப்பதறியேனென்று' ௬௬. 'பொறுக்கென்றனடொழ'

·ல பதிதன் வயிற்றிற் றோன்றிய
வேலங் கமழ்தா ரிராகுலன் றன்னை
யழற்க ணாக மாருயி ருண்ண
விழித்த லாற்றே னென்னுயிர் சுடுநாள்
யாங்கிருந் தழுதனை யிளங்கோன் றனக்குப்
பூங்கொடி நல்லாய் பொருந்தாது செய்தனை
வுடற்கழு தனையோ வுயிர்க்கழு தனையோ
வுடற்கழு தனையே லுன்மகன் றன்னை
யெடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரே
யுயிர்க்கழு தனையே லுயிர்புகும் புக்கில்
செயப்பாட்டு வினையாற் றெரிந்துணர் வரிய
தவ்வுயிர்க் கன்பினை யாயி னாய்தொடி
யெவ்வுயிர்க் காயினு மிரங்கல் வேண்டு
மற்றுன் மகனை மாபெருந் தேவி
செற்ற கள்வன் செய்தது கேளாய்
மடைக்கலஞ் சிதைய வீழ்ந்த மடையனை
யுடற்றுணி செய்தாங் குருத்தெழும் வல்வினை

---

௬௭ - ௮. தோன்றிய இராகுலன்றன்னை.

௬௯. அழற்கண் நாகம் - திட்டிவிடமென்னும்பாம்பு; அழல் - விடம்; "ஐந்தலை யரவின் சீற்றத் தாரழல் குளிக்க லுற்றார்" (சீவக. ௭௪௬); "அழல்வாய் நாகத் தாரெயி றழுந்தினர்" சிலப். ௫ : ௧௨௪.

௭௦. விழித்தல் - உயிர் வாழ்தல்; நாகத்தின் தொழிலாக்கினும மையும். [படி.

௭௧. இளங்கோன்றனக்கு யாங்கிருந்தழுதனை; அழுதிலாயென்ற

௭௫. புறங்காடு - மயானம்.

௭௬. புக்கில் - புகுமிடமாகிய உடம்பு; "நோக்கார்கொ லொய்ய தோர் புக்கிலை" நாலடி. ௪௧.

௭௭. வினையென்றது, நல்வினை தீவினையென்னும் இரண்டையும்.

௭௬ - ௭. வினையால் உயிர்புகும்புக்கில் தெரிந்துணர்வரியதென்க.

௭௮. அன்பினையாயின் - அன்பையுடையாயாயின். ஆய்தொடி: [விளி.

௭௯. எவ்வுயிர்க்காயினும் - எல்லாவுயிர்க்கும்.

௮௦. மாபெருந்தேவி - இராசமாதேவி; விளி.

௮௧. கோபித்த காஞ்சனன் கொலை செய்தற்குக் காரணமான தீவினையைக்கேள். ௮௨. மு. மணி. உ௧ : ௫௬.

௮௩. உடம்பைத் துண்டமாக வெட்டினமையால் தோன்றி யெழுந்த வலிய தீவினை.

(பி - ம்.) ௭௦. 'இழிதலாற்றேன்' ௭௫. 'ஈமப்புறங்காடு' ௭௭. 'செயற்பாட்டுவினை' ௮௩. 'உருத்தெழுமவ்வினை', 'உருத்தெழுபாவம்.'

நஞ்சுமிழ் யரவி னல்லுயிர் வாங்கி
விஞ்சையன் வாளால் வீட்டிய தன்றே
யாங்கதின் றன்மையோ விஃதென நீயெனிற்
பூங்கொடி நல்லாய் புகுந்த திதுவென
மொய்ம்மலர்ப் பூம்பொழில் புக்கது முதலாத்
தெய்வக் கட்டுரை தெளிந்தது யீறு
வெற்றுரை யெல்லா மொழிவின் றுரைத்து
மற்று முரைசெயு மணிமே கலைதான்
மயற்பகை யூட்டினை மறுபிறப் புணர்ந்தோ
னயர்ப்புறு செய்யா வறிவினே னாயினேன்
கல்லாக் கயவன் காரிருட் டான்வர
நல்லா யாருரு நான்கொண் டிருந்தே
னாளெழி மந்திர முடைமையி னன்றே
மாணிழை செய்த வஞ்சம் பிழைத்தது
தந்தரஞ் சேறு மயருக் கோடலுஞ்

---

௮௪. அரவின் - அரவினால். நல்லுயிர் வாங்கியென்றது, முற்பிறப்பிற் செய்தியை.

௮௫. வீட்டியது - கொன்றது; வீழ்த்தியதென்பதன் மரூஉவுமாம்.

௮௪-௫. வினை, முற்பிறப்பில் உயிரை அரவின் வாங்கி இப்பிறப்பில் விஞ்சையன் வாளால் வீட்டியது.

௮௬. இது - இச்செய்தியை. ௮௭. புகுந்தது - சம்பவித்தது.

௮௮. பொழில் - உவவனம்.

௮௯. தெய்வக்கட்டுரை - கந்திற்பாவைத்தெய்வங்கூறிய பொருள் பொதிந்த சொல்.

௯௦. ஒழிவின்று - விடாமல். ௮௭-௯௦. இதுவெனவுரைத்தென்க.

௯௧. மணிமேகலை பின்னும் சொல்லுவாள்.

௯௩. அயர்ப்புறு - மறப்புறு.

௯௪. கயவன் - கீழ்மகன்; கொடியவனுமாம். இருள் - இரவில்.

௯௫. நான் அவளுருக்கொண்டிருந்தேன்.

௯௪-௫. [illegible]. ௨௨ : ௨௨-௩.

௯௬. [illegible] - [illegible] பொய்க்கோய் [illegible]. பிழைத்தது - தப்பியது.

௯௬-௭. [illegible] வஞ்சம் பிழைத்தது.

௯௮. [illegible] - [illegible].

சிந்தையிற் கொண்டிலேன் சென்ற பிறவியிற்
காதலற் பயந்தோய் கடுந்துயர் களைந்து
தீதுறு வெவ்வினை தீர்ப்பது பொருட்டாற்
றையா லுன்றன் றடுமாற் றவலத்
தெய்யா மையறீஇந் தின்னுரை கேளாய்
ஆள்பவர் கலக்குற மயங்கிய நன்னாட்டுக்
காருக மடந்தை கணவனுங் கைவிட
வீன்ற குழவியொடு தான்வே றாகி
மான்றோர் திசைபோய் வரையாள் வாழ்வுழிப்
புதல்வன் றன்னையோர் புரிநூன் மார்பன்
பதியோ ரறியாப் பான்மையின் வளர்க்க

---

௯௮ - ௧0௧. போனபிறப்பில் எனக்குக் கணவனாயிருந்தோனை இப்பிறப்பில் மகனாகப் பெற்ற உனது துயரைக்களைந்து வினையைத் தீர்த்தற் பொருட்டே சேறலும் கோடலும் சிந்தையிற் கொண்டிலே னென்க.

௧0௨. தையால்: விளி.

௧0௨ - ௩. தடுமாற்று அவலத்து எய்யா மையல் - தடுமாறுதற்குக் காரணமாகிய வருத்தத்தைச்செய்யும் அறியாமையாகிய மயக்கம்; மையல் - செல்வச் செருக்குமாம்; “மையன்மத யானைநிரை மன்னன்” சீவக. ௫௮௯.

மேல், காமம், கொலை, கள், பொய், களவு ஆகிய இவ்வைந்தும் நீக்கற்பாலனவென்று இராசமாதேவிக்கு மணிமேகலை உபதேசித்தல் முதலியன கூறப்படும்.

௧0௪. அரசர் கொடுங்கோல் செலுத்துதலால், யாவரும் தத்தம் நிலை தடுமாறிய நல்ல நாட்டில்; கலி. ௫.

௧0௫. காருகமடந்தை - இல்லறவொழுக்கினளாகிய ஒருத்தி; நெய்வோர் குலத்துப் பிறந்த ஒருத்தியென்றுமாம். கைவிட - துறக்க.

௧0௬. குழவியும் தானும் வெவ்வேறிடத்துப் பிரிவுற்று.

௧0௭. மான்று - மயங்கி. வரையாள் - தன்னலம் விலைகொடுப்பார் யாவர்க்கும் விற்பதல்லது அதற்கு ஆவார் ஆகாதாரென்னும் வரையறை யில்லாளாய்.

௧0௪ - ௭. நாட்டிற் காருகமடந்தை கணவன் கைவிடுதலால் வேறாகி மான்று போய் வரையாளாய் வாழ்வுழியென்க. இல்லறவொழுக்கினளாகிய இவள் கற்பொழிந்து வரைவின்றி வாழ்தற்கு அரசனது கொடுங்கோன்மை காரணமாதலின், ‘ஆள்பவர் கலக்குற’ என்பது கூறப்பட்டது; “மாதவர் நோன்பு மடவார் கற்புங், காவலன் காவ லின்றெனி னின்றால்” (௨௨ : ௨0௮ - ௯) என்று இக்கருத்து முன்பு வந்திருத்தல் காண்க.

௧0௮ - ௯. புரிநூன் மார்பன் புதல்வன்றன்னை வளர்க்க.

ஆங்கப் புதல்வ னவன்றிற மறியான்
குன்புணர்ந் தறிந்தபின் றன்னுயிர் பிரிந்து
நீர்நசை வேட்கையி னெடுங்கட முழலுஞ்
சூன்முதிர் மடமான் வயிறுமிழ்ந் தோடக்
கான வேட்டுவன் கடுங்கணை தொடுப்ப
மான்மறி விழுந்து கண்டுமன மயங்கிப்
பயிர்க்குரல் கேட்டதன் பான்மைய ணுறி
யுயிர்ப்பொடு செங்க ணுகுத்த நீர்கண்
டோட்டி யெய்தோ னோருயிர் துறந்ததுங்
கேட்டு மறிதியோ வாட்டடங் கண்ணி
கடாஅ யானைமுன் கட்கா முற்றோர்
விடாஅது சென்றதன் வெண்கோட்டு வீழ்வ
துண்ட கள்ளி னுறுசெருக் காவது
கண்டு மறிதியோ காரிகை நல்லாய்

---

௧0. ஆங்கப்புதல்வன் - அங்ஙனம் வளர்க்கப்பட்ட புதல்வன். அவன்றிறம் - அவள் தன்னுடைய தாயென்னுந் தன்மையை.

௧௧. பின்னறிந்தென்க.

௧௨. நீர்நசை வேட்கையின் - நீரைநச்சிய விருப்பத்தால்; நசை வேட்கை; வினைத்தொகை; "நின்னசை வேட்கையி னிரவலர் வருவது" (புறநா. ௩); "நீர்நசைஇ வேட்கையின் மானின்று விளிக்கும்" (சிலப். ௧௧ : ௭௮.) கடம் - காடு.

௧௩. சூல் - கருப்பம். ௧௪. தொடுப்ப - செலுத்த.

௧௫. மான்மறி - பெண்மான்; மான்குட்டியுமாம்.

௧௬. பயிர்க்குரல் - பயிராகிய குரல்; பயிர் - மிருகங்களும் பறவைகளும் தம்மினத்தை அழைக்கும் ஓசைக்குறிப்பு; "மடமா [illegible] பயி ரழைப்பின்" புறநா. ௧௫௭.

௧௭. ஓட்டியெய்தோன் - வேட்டுவன்; சுட்டு.

௧௮-௯. நீத்ததும் துறந்ததும் கேட்டும் அறிதியோ; இதனுற் கள்ளையும் கொலையையும் நீத்தல் வேண்டுமென்பது கூறப்பட்டது.

௨0. கடாஅயானை - மதயானை; "கடாஅக் களிற்றின்மேல்" ([illegible]) கட்காமுற்றோர் - கள்ளை விரும்பியுண்டு களித்தோர்.

௨௧. [illegible] - [illegible]ப்பு.

௨0-௨௨. கட்காமுற்றோர் [illegible], "புகழ்[illegible] [illegible], [illegible] மயங்கிய [illegible]" ([illegible]) [illegible].

[illegible]

பொய்யாற் றொழுக்கம் பொருளெனக் கொண்டோர்
கையாற் றவலங் கடந்தது முண்டோ
களவேர் வாழ்க்கைய ருறாஉங் கடுந்துய
ரிளவேய்த் தோளாய்க் கிதுவென வேண்டா
மன்பே ருலகத்து வாழ்வோர்க் கிங்கிவை
துன்பந் தருவன துறத்தல் வேண்டுங்
கற்ற கல்வி யன்றாற் காரிகை
செற்றஞ் செறுத்தோர் முற்ற வுணர்ந்தோர்
மல்லன்மா ஞாலத்து வாழ்வோ ரென்போ
ரல்லன் மாக்கட் கில்லது நிரப்புநர்
திருந்தே ரெல்வளை செல்லுல கறிந்தோர்
வருந்தி வந்தோ ரரும்பசி களைந்தோர்
துன்ப மறுக்குந் துணிபொரு ளுணர்ந்தோர்
மன்பதைக் கெல்லா மன்பொழி யாரென
ஞான நன்னீர் நன்கனந் தெளித்துத்

---

௧௨௪. பொய்யாற்றொழுக்கம் - பொய்வழிக்கணொழுகுதல். பொருளெனக் கொண்டோர் - காரியமாகக்கொண்டோர்.

௧௨௫. கையாற்றவலம் - செயலறவாகிய துன்பம்.

௧௨௬. களவேர்வாழ்க்கையர் - களவே உழவுபோலும் இல்வாழ்க்கைப் பொருளாகவுடையோர்; "கைப்பொருள் வெளவுங் களவேர் வாழ்க்கைக், கொடியோர்" (பெரும்பாண். ௪௦ - ௪௧) கடுந்துயர் - மிக்க துன்பம். ௧௨௮. இவை - காமமுதலிய இவ்வைந்தும்.

௧௩௦. கல்வி காரிகை அன்று - கல்வி அழகுடைத்தன்று; என்றது பின்பு கூறப்படும் நற்குணங்களில்லாதவழிக் கல்வி அழகுடையதன்றென்றவாறு. இவ்வடியை முன்னுள்ள அடியோடு கூட்டித் துன்பம் தருவனவற்றைத் துறவாவழிக் கல்வி அழகுடைத்தன்றென்று பொருள் கூறினும் பொருந்தும்.

௧௩௨. "மல்லன்மா ஞாலத்து வாழ்வோர்" சிலப். ௩௦ : ௨௦௨.

௧௩௩. அல்லன்மாக்கட்கு - வறுமைத் துன்பமுடையார்க்கு.

௧௩௨ - ௩. நிரப்புநரே வாழ்வோரென்போர்.

௧௩௪. எல்வளை : விளி.

௧௩௪ - ௫. அரும்பசி களைந்தோரே செல்லுலகறிந்தோர்.

௧௩௬. துணிபொருள் - பரமார்த்த தத்துவஞானம்.

௧௩௬ - ௭. அன்பொழியாரே துணிபொருளுணர்ந்தோர்.

௧௩௮. ஞானநன்னீர் - ஞானமாகிய நல்லநீரை. நன்கனம்-நன்றாக.

(பி - ம்.) ௧௩௩. 'நிரப்பினர்'

தேஞுரோதி செவிமுதல் வார்த்து
மகன்றுயர் நெருப்பா மனம்விற காக
வகஞ்சுடு வெந்தீ யாயிழை யவிப்பத்
தேறுபடு சின்னீர் போலத் தெளிந்து
மாறுகொண் டோரா மனத்தின ளாகி
யாங்கவ டொழுதது மாயிழை பொறுஅ
டான்றொழு தேத்தித் தகுதி செய்திலை
காதலற் பயந்தோ யன்றியுங் காவலன்
மாபெருந் தேவியென் றெதிர்வணங் கினளென்.

உ௩.—சிறைவிடுகோதை முற்றிற்று.

---

௧௩௯. தேஞுரோதி - இராசமாதேவி. செவிமுதல் - செவியிடம்.

௧௪௦. மகன்றுயர் - புதல்வனிறந்த துயரம்; புத்திரசோகம்.

௧௪௧. அகம் - உள்ளிடம். ஆயிழை - மணிமேகலை.

௧௩௮ - ௪௧. ஞானநீரைத் தெளித்து வார்த்து வெந்தீயை அவிப்ப வென்க.

௧௪௨. தேறு - தேற்றுங்கொட்டை.

௧௪௩. மாறுகொண்டு - பகைமைகொண்டு.

௧௪௪. ஆங்கவள் - இராசமாதேவி. ஆயிழை - மணிமேகலை.

௧௪௬. காதலற் பயந்தோயன்றியும் - எனது முற்பிறப்பின் நாயகனை இப்பிறப்பிற் பெற்றதல்லாமலும்.

௧௪௬ - ௭. காவலன் மாபெருந்தேவியென்று - அரசன் பட்டத்துத் தேவியாகவுமுள்ளாயென்று.

௧ - ௧௪௭. வாசந்தவையென்னும்முதாட்டி, மொழியினள், அவள் மன்னவனருளாற் சென்றெய்தித் தொழுது முன்னின்று வாழ்த்தி, 'மன்னவன்றன்முன் றுன்பங்கொள்ளேல்' என்று போயபின், அத்தேவி கரந்து அடக்கிக் கொண்டு மறைத்து, 'மணிமேகலையை வஞ்சஞ் செய்குவல்' என்று ஒருநாள் அரசனுக்கு, 'சிறை நீக்கன்று' என, 'நீக்க' என்று இறைசொல, குழலாள் அவளைக்கூடயிப் புக்கு, 'செய்கு வல்' என்று [illegible], அறிவினளாக, கொடுப்ப அனைத்தும், இருப்ப, போயபின், அடைப்ப, இருப்ப, அவள் தொழ, மணிமேகலை ஒழிவின்று [illegible] மற்றவ்வுரைசெய்யும்; அவ்வனமுரைசெய்பவள் அவிப்ப, அவள் [illegible], ஆயிழை பொறுஅளாய், 'மாபெருந்தேவி' என்று எதிர் [illegible] முறை செய்க.

இருபத்துநான்காவது

ஆபுத்திரனாடடைந்த காதை.

[இருபத்துநான்காவது மணிமேகலை மாநகரொழிந்து ஆபுத்திரனாடடைந்த பாட்டு.]

மன்ன குமரனை வஞ்சம் புணர்த்த
தொன்முது கணிகைதன் சூழ்ச்சியிற் போயவன்
விஞ்சையன் வாளின் விளிந்தோ னென்பது
நெஞ்சு நடுக்குறக் கேட்டுமெய் வருந்தி
மாதவி மகடனை வான்சிறை நீக்கக்
காவலன் றேவி காற்கீழ் வீழ்ந்தாங்
கரவே ரல்கு லருந்தவ மடவா
ருரவோற் களித்த வொருபத் தொருவரு
மாயிரங் கண்ணோ னவிநயம் வழூஉக்கொள
மாயிரு ஞாலத்துத் தோன்றிய வைவரு
மாங்கவன் புதல்வனோ டருந்தவன் முனிந்த
வோங்கிய சிறப்பி னொருநூற்று நால்வருந்
திருக்கிளர் மணிமுடித் தேவர்கோன் றன்முன்
னுருப்பசி முனிந்த வென்குலத் தொருத்தியு
மொன்று கடைநின்ற வாறிரு பதின்மரித்

க. மன்னகுமரனை - உதயகுமரனை. புணர்த்த - சேர்த்திய.

உ. முதுகணிகை - சித்திராபதி; எழுவாய். தொன்முது: ஒருபொருட் பன்மொழி. போயவன் - உதயகுமரன்.

ங. விளிந்தோன் - இறந்தான்.

ரு. மாதவிமகடனை - மணிமேகலையை. நீக்க - நீக்குதற்பொருட்டு.

சு. காவலன்றேவி - இராசமாதேவி. ரு - சு. நீக்க வீழ்ந்து.

உ - சு. கணிகை, விளிந்தோனென்பதைக் கேட்டு வருந்தி வீழ்ந்து.

எ. 'அரவேர்' என்பது முதலியன சித்திராபதிகூற்று.

கக. புதல்வன் - சயந்தன். கரு. நூற்றிருபத்தொருவர்.

(பி - ம்.) ரு - சு. 'சிறைதவிர்த்த, காதலன்றேவி' கரு. 'ஒன்று கடையிட்ட'

தொன்றுபடு மாநகர்த் தோன்றிய நாண்முதல்
யானுறு துன்ப மியாவரும் பட்டிலர்
மாபெருந் தேவி மாதர் யாரினும்
பூவிலை யீத்தவன் பொன்றின னென்று
மாதவி மாதவர் பள்ளியு ளடைந்ததும்
பரந்துபடு மனைதொறும் பாத்திர மேந்தி
யரங்கக் கூத்திசென் றையங் கொண்டது
நகுத லல்லது நாடகக் கணிகையர்
தகுதி யென்னார் தன்மை யன்மையின்
மன்னவன் மகனே யன்றியு மாதரா
லிந்நக ருறூஉ மிடுக்கணு முண்டா
லும்பளந் தழீஇய வுயர்மண னெடுங்கோட்டுப்
பொங்குதிரை யுலாவும் புன்னையங் கானற்
கிள்மணி நெடுமுடிக் கிள்ளி முன்னா
ளிளவேனி லிறுப்ப விறும்பூது சான்ற

கசு. தொன்று - பழமை.

கஅ. மாபெருந்தேவி : விளி. மாதர் - நாடகக்கணிகைகள்.

கஎ - அ. மாதரெல்லாருள்ளும் யானுறுதுன்பம் யாவரும் பட்டில ரென இயைக்க.

ககூ. பூவிலை - அற்றைப்பரிசம் ; "பூவிலை மடந்தைய ரேவற் சில தியர்" (சிலப் : ரு : ருக.) ஈத்தவன் - கோவலன்.

உ0. மாதவர்பள்ளி - அறவணவடிகளுறையுமிடம்.

உஉ. அரங்கக்கூத்தி - மணிமேகலை.

உக - உ. அரங்கக்கூத்தி, பாத்திரமேந்திச் சென்று மனைதொறும் ஐயங்கொண்டதும்.

உ0 - உச. அடைந்ததும் கொண்டதும் நகுதற்குக் காரணமாவன வேயன்றி நாடகக் கணிகையர்களுடைய இயல்பன்மையால் அவற்றை அவர்க்குத் தகுதியென்று கூறார்; இனி, 'நாடகக்கணிகையர்' என்பதை எழுவாயாகக்கொண்டு அவர் தகுதியென்னாரெனினுமமையும்.

உரு. மன்னவன் மகனேயன்றியும் - உதயகுமரனுக்கு உண்டான இடுக்கணல்லாமலும். மாதரால் - மணிமேகலையால்.

உசு. இடுக்கண் - துன்பம்.

உஎ. உம்பளம் - உப்பளம்; விகாரம். கோடு - கரை.

உஅ. கானல் - கடற்கரைச்சோலை.

உகூ. நெடுமுடிக்கிள்ளி - ஓர் அரசன். முன்னா - முன்னாக.

௩0. இறுப்ப - தங்குதலால். இறும்பூது - அதிசயம். இறுப்பச் சான்ற.

(பி - ம்.) கஅ. 'மாதர்யாவரும்', 'மாதவர்யாவளாயினும்.'

பூநாறு சோலை யாருமி லொருசிறைத்
தானே தமிய ளொருத்தி தோன்ற
வின்ன ளார்கொ லீங்கிவ ளென்று
மன்னவ னறியான் மயக்க மெய்தாக்
கண்ட கண்ணினுங் கேட்ட செவியினு
முண்ட வாயினு முயிர்த்த மூக்கினு
முற்றுண ருடம்பினும் வெற்றிச்சிலைக் காமன்
மயிலையுஞ் செயலையு மாவுங் குவளையும்
பயிலிதழ்க் கமலமும் பருவத் தலர்ந்த
மலர்வா யம்பின் வாசங் கமழப்
பலர்புறங் கண்டோன் பணிந்துதொழில் கேட்ப
வொருமதி யெல்லை கழிப்பினு முரையாள்
பொருவரு பூங்கொடி போயின வந்நாள்
யாங்கொளித் தனளவ் விளங்கொடி யென்றே
வேந்தனை யட்டோன் மெல்லியற் றேர்வுழி

---

௩௧. சோலை - சோலையில். ஒருசிறை - ஒருபக்கத்தில்.

௩௨. தானேதமியள் - தான்தனித்தவளாய்.

௨௯ - ௩௨. முன்னுத் தோன்றவென்க.

௩௩. ஈங்குளளாகியஇத்தன்மையையுடையாள்யாவளோ வென்று.

௩௪. அறியான் - அறியானாய். மன்னவன் மயக்கமெய்தி.

௩௬. வாயென்றது நாவினை. உயிர்த்த - மோந்த.

௩௭. உற்றுணருடம்பு - தீண்டியுணருமுடம்பு.

௩௮. மயிலை - மல்லிகைவிசேடம். செயலை - அசோகு.

௩௯. பயிலிதழ் - செறிந்த இதழ். ௪௦. கமழ - கமழ்தலால்.

௩௮ - ௪௦. மயிலை முதலியனவாகிய அம்பென்க.

௩௫ - ௪௦. கண்ணினும் செவியினும் வாயினும் மூக்கினும் உடம்பினும் காமனுடைய மலரம்பின் வாசங்கமழ்தலால். ஈண்டுக்கூறிய, 'கண்ட கண்' முதலியன அரசனுடைய பொறிகள்; என்றது, வேறுவேறு காலங்களில் வேறு வேறு பொருள்களால் அனுபவிக்கப்படுவன ஒருகாலத்து அவள் கண்ணே அனுபவிக்கப்பட்டனவென்பதாம்.

௪௧. பலர் புறங்கண்டோன் - அரசன்.

௪௨. மதி - மாதம். கழிப்பினும் - கழித்தாளாயினும். உரையாள் - சொல்லாளாய். ௪௩. அந்நாள் - அந்நாளில்.

௪௫. தேர்வுழி - தேடும்பொழுது.

(பி - ம்.) ௩௩. 'இன்னளையார்கொல்' ௪௨. 'கழிப்ப வுரையாள்'

நிலத்திற் குளித்து நெடுவிசும் பேறிச்
சலத்திற் றிரியுமோர் சாரணன் றோன்ற
மன்னவ னவனை வணங்கி முன்னின்
றென்னுயி ரனையா ளீங்கொளித் தாளுள
ளன்னா ளொருத்தியைக் கண்டிரோ வடிகள்
சொல்லுமி னென்று தொழுதவவ னுரைப்பான்
கண்டிலே னாயினுங் காரிகை தன்னைப்
பண்டறி வுடையேன் பார்த்திப கேளாய்
நாக நாடு நடுக்கின் றாள்பவன்
வாகை வேலோன் வளைவணன் றேவி
வாச மயிலை வயிற்றுட் டோன்றிய
பீலிவளை யென்போள் பிறந்த வந்நா
ளிரவிகுலத் தொருவ னிணைமுலை தோயக்
கருவொடு வருமெனக் கணியெடுத் துரைத்தன

௪௬ நிலத்திற்குளித்து - நீரிற்புகுவதுபோல நிலத்திற்புகுந்து. நெடுவிசும்பேறி - சந்திரசூரியர்களை எட்டிப்பிடித்தற்குச் செல்வது போல நீண்ட ஆகாயத்திற்சென்று.

௪௭. சலத்தில் திரியும் - பூமிமேல் நடப்பது போல நீர்மேலே நடந்து திரியும்.

௪௬ - ௭. குளித்து ஏறித் திரியும் ஒருசாரணன் தோன்றவென்க. நிலத்திற் குளித்தல் முதலியன அற்புத சத்தியாகிய இருத்தியெனப்படும். தன் தந்தையாகிய சுத்தோதனனுக்கு ஞானமுண்டாக்குதற்பொருட்டு நிலத்திற் குளித்தல் முதலிய பலவற்புதங்களைப் புத்தன் காட்டினு னென்று அசுவகோஷபோதிசத்துவரென்பவராற் செய்யப்பட்டுள்ள புத்தசரிதத்தின் ௧௧ - ஆம் வர்க்கத்தாற் றெரிகின்றது; "நீரினிற் பூவில் வானி னினைத்துழி யொதுங்கு கின்ற, சாரணை ரெண்ம ராவார் சமணரி லிருத்தி பெற்றோர்" (௨ : ௪) என்றார் சூடாமணிநிகண்டுடை யாரும்; "வானூ டிழிந்தோன்" (௧௦ : ௩௩) என்று இந்நூலில் முன் வந் திருத்தல்காண்க; பெருங். ௩ - ௪ : ௮௬ - ௯, பார்க்க.

௪௮. அவனை - அச்சாரணனை. ௫௦. அன்னாள் - அத்தன்மையாள்.

௪௮ - ௫௧. அவனை வணங்கி நின்று சொல்லுமினென்று மன்னவன் தொழவென்க.

௫௩. அறிவுடையேன் - அறிதலுடையேன். ௫௫. வாகை - வெற்றி.

௫௫ - ௬. தேவியாகிய வாசமயிலை. ௫௭. அந்நாள் - அந்நாளில்.

௫௯. கரு - கருப்பம். வரும் - வருவாள். கணி - நூல்வல்ல நிமித் திகன். ௫௭ - ௯. அந்நாளிற் கணியெடுத்துரைத்தனன்.

(பி - ம்.) ௪௭. 'திரியுஞ் சாரணன் சென்ற' ௪௮ - ௯. 'முன் சென்றே, யென்னுயிர்.' ௫௦. 'காணிரோ வடிகள்'

னாங்கப் புதல்வன் வரூஉ மல்லது
பூங்கொடி வாராள் புலம்ப லிதுகே
டீவகச் சாந்தி செய்யா நாளுன்
காவன் மாநகர் கடல்வயிறு புகூஉ
மணிமே கலைதன் வாய்மொழி யாலது
தணியா திந்திர சாபமுண் டாகலி
னாங்குப்பதி யழிதலு மீங்குப்பதி கெடுதலும்
வேந்தரை யட்டோய் மெய்யெனக் கொண்டிக்
காசின் மாநகர் கடல்வயிறு புகாமல்
வாசவன் விழாக்கோண் மறவே லென்று
மாதவன் போயின வந்நாட் டொட்டுமிக்
காவன் மாநகர் கலக்கொழி யாதாற்
றன்பெயர் மடந்தை துயருறு மாயின்
மன்பெருந் தெய்வம் வருதலு முண்டென
வஞ்சினே னரசன் றேவியென் றேத்தி
நன்மனம் பிறந்த நாடகக் கணிகையை
யென்மனைத் தருகென விராசமா தேவி
கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையு

---

௬0. வரூஉமல்லது - வருவானேயன்றி.
௬௧. பூங்கொடி - பீலிவலை. புலம்பல் - வருந்தாதே.
௬௨. தீவகச்சாந்தி - இந்திரவிழவு.
௬௩. நகர் - காவிரிப்பூம்பட்டினம்.
௬௪. மணிமேகலை - மணிமேகலா தெய்வம். அது - நகர் கடல் வயிறு புகுதல்.
௬௨ - ௪. செய்யாநாளில் வாய்மொழியால் நகர் கடல்வயிறுபுகூஉ மென்க. ௬௪ - ௫. இந்திரசாபமுண்டாதலின், அது தணியாது.
௬௬. ஆங்கு - அக்காலத்தே. பதியிரண்டில், முன்னது நகரம், பின்னது அரசன். ௬௮. காசு - குற்றம். ௬௯. மறவேல் - மறவாதே.
௭0. மாதவன் - சாரணன். ௭௧. கலக்கு - கலங்குதல்.
௭௨. மடந்தை - மணிமேகலை.
௭௩. தெய்வம் - மணிமேகலா தெய்வம்.
௭௫. நாடகக்கணிகை - மணிமேகலை.
௭௬. தருகென - தருவாயென்று சித்திராபதி கேட்ப.
௭௭. 'கள்ளும் பொய்யும்' என்பது முதலியன இராசமாதேவி கூற்று.
(பி - ம்.) ௬௬. 'அழிதலுமீங்குப்பதிபுகுதலும்' ௭0 'மாதவனுரைத்த வந்நாட்' ௭௨. 'துயருமாயின்' ௭௫. 'நஞ்சனையிறந்த நாடகக் கணிகை'

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible] மணி. [illegible]

[illegible]

[illegible] மணி. ௨ : [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] ([illegible]) [illegible]

[illegible]

[illegible] ([illegible]) [illegible]

[illegible]

பற்றே பவமே தோற்றம் வினைப்பய
னிற்றென வகுத்த வியல்பீ ராறும்
பிறந்தோ ரறியிற் பெரும்பே றறிகுவ
ரறியா ராயி னாழ்நர கறிகுவர்
பேதைமை யென்ப தியாதென வினவி
னோதிய விவற்றை யுணரா து மயங்கி
யியற்படு பொருளாற் கண்டது மறந்து
முயற்கோ டுண்டெனக் கேட்டது தெளித
லுலக மூன்றினு முயிரா முலக
மலகில பல்லுயி ரறுவகைத் தாகு
மக்களுந் தேவரும் பிரமரு நரகருந்
தொக்க விலங்கும் பேயு மென்றே
நல்வினை தீவினை யென்றிரு வகையாற்
சொல்லப் பட்ட கருவினுட் டோன்றி
வினைப்பயன் விளையுங் காலை யுயிர்கட்கு
மனப்பே ரின்பமுங் கவலையுங் காட்டுந்
தீவினை யென்ப தியாதென வினவி
னாய்தொடி நல்லா யாங்கது கேளாய்
கொலையே களவே காமத் தீவிழை
வுலையா வுடம்பிற் றோன்றுவ மூன்றும்

மெனப்படும்; இவற்றினியல்பை, இந்நூல், ௩௦ - ஆம் காதையால் உணர்க. ௧௧௧. பேதைமை - அவிச்சை.

௧௧௨. இவற்றை - துவாதச நிதானங்களை. ௧௧௪. கோடு - கொம்பு.

௧௧௧ - ௪. பேதைமையென்பது மயங்கிக் கண்டது மறந்து கேட்டது தெளிதலென்க.

௧௧௫. 'உலகமூன்றினும்' என்பதுமுதற் செய்கை கூறப்படும்.

௧௧௫ - ௬. உயிராமுலகம் அலகில - உயிராகிய உலகம் அளவில்லாதன. செய்கை கூறுதற்கு அங்கமாக ஈண்டு அறுவகையுயிர்களும் கூறப்பட்டன. ௧௧௬ - ௮. பேயுமென்றே அறுவகைத்தாகுமென்க.

௧௨௦. சொல்லப்பட்ட கரு - மேற்கூறிய மக்கட்கருமுதலிய ஆறும்; "தெய்வக் கருவுந் திசைமுகக் கருவும்" (பதி. ௨௮) என்று முன்பு வந்திருத்தல் காண்க.

௧௧௯ - ௨௨. செய்கை, இருவகையால் தோற்றிக் காட்டுமென்க.

௧௨௫. காமத்தீவிழைவு - காமமாகிய கொடிய விழைவு.

௧௨௫ - ௬. கொலையும் களவும் காமமுமென உடம்பிற்றோன்றுவன மூன்றும்.

(பி - ம்.) ௧௦௮. 'இவ்வீராறும்' ௧௧௦. 'நரகடைகுவர்' ௧௨௦ 'பட்டபிறப்பினுட்டோன்றி' ௧௨௫. 'தீவழக்கு'

பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்லெனச் சொல்லிற் றோன்றுவ நான்கும்
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென்
றுள்ளந் தன்னி னுருப்பன மூன்றுமெனப்
பத்து வகையாற் பயன்றெரி புலவ
ரித்திறம் படரார் படர்குவ ராயின்
விலங்கும் பேயு நரகரு மாகிக்
கலங்கிய வுள்ளக் கவலையிற் றோன்றுவர்
நல்வினை யென்பது யாதென வினவிற்
சொல்லிய பத்தின் றொகுதியி னீங்கிச்
சீலந் தாங்கித் தானந் தலைநின்று
மேலென வகுத்த வொருமூன் றிறத்துத்
தேவரு மக்களும் பிரமரு மாகி
மேவிய மகிழ்ச்சி வினைப்பயன் உண்குவர்
நலந்தகன் றோமியொ டாயிழை நல்லீர்

கஎஎ. குறளை - கோள்.

கஎஎ - அ. பயனில் சொல் - அறம் பொருளின்பங்களுள் ஒன்றும் பயவாத சொல்.

கஎக. வெஃகல் - விரும்பல்; வெகுளல் - கோபித்தல்; வெஃகல் முதலிய மூன்றும் முறையே காமம் வெகுளி மயக்கமெனப்படும்.

கஅ0. உருப்பன - தோன்றுவன.

கஎஅ - அக. இவையென்பது, மூன்றும் நான்கும் மூன்றுமெனப் பத்து வகைப்படும்.

கஅஉ. இத்திறம் - கொலைமுதலிய தீயவழிகளில். படரார் - செல்லார்.

கஅஉ - ௩. நிலை. மோக்கல. செய். கஅ0, [illegible]. மேற். இக் கருத்து, "விலங்கு நரகரும் பேய்களு மாகுவர், கலக்குறுந் தீவினை கடியினீர்" (௨௰ : ௪௪ - ௨) எனப் பின்னும் வருதல் காண்க.

கஅரு. சொல்லியபத்து - கொலை, களவு, காமம், பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல், வெஃகல், வெகுளல், பொல்லாக்காட்சி என்பன.

கஅஎ. சீலம் - பஞ்சசீலமுதலியன. [illegible]. மணி. [illegible] : [illegible].

கஅஎ - க. நிலை. மோக்கல. செய். [illegible]0, [illegible]. மேற்.

கஅக - க௯. நிலை. புத்த. செய். உ௪, [illegible], [illegible]. மேற்.

க௯0. மகிழ்ச்சிவினை - நல்வினை.

க௯[illegible] - [illegible]0. மணி. [illegible] : [illegible] - [illegible].

[illegible]. [illegible] [illegible], [illegible]யும் [illegible] [illegible]யும்.

(பி - ம்.) [illegible]. 'ப[illegible]' [illegible]. '[illegible]' [illegible]. '[illegible] [illegible], ப[illegible]' [illegible]. '[illegible]' [illegible]. '[illegible]'

புரையீர் நல்லறம் போற்றிக் கேண்மின்
மறுபிறப் புணர்ந்த மணிமே கலைநீ
பிறவறங் கேட்ட பின்னாள் வந்தவ
னித்திறம் பலவு மிவற்றின் பகுதியு
முத்தேர் நகையாய் முன்னுறக் கூறுவ
லென்றவ னெழுதலு மிளங்கொடி யெழுந்து
நன்றறி மாதவ னல்லடி வணங்கித்
தேவியு மாயமுஞ் சித்திரா பதியு
மாதவர் நன்மொழி மறவா தும்மி
னிந்நகர் மருங்கின்யா னுறைவே னாயின்
மன்னவன் மகற்கிவள் வருங்கூற் றென்குவ
ராபுத் திரனா டடைந்ததற் பின்னாள்
மாசின் மணிபல் லவந்தொழு தேத்தி
வஞ்சியுட் புக்கு மாபத் தினிதனக்
கெஞ்சா நல்லறம் யாங்களுஞ் செய்குவ
லெனக்கிட ருண்டென் றிரங்கல் வேண்டா
மனக்கினி யீரென் றவரையும் வணங்கி
வெந்துறு பொன்போல் வீழ்கதிர் மறைந்த
வந்தி மாலை யாயிழை போகி
யுலக வறவியு முதியாள் குடிகையு
மிலகொளிக் கந்தமு மேத்தி வலங்கொண்

---

௧௪௨. புரை - குற்றம். நல்லறம் - அருளறம்.
௧௪௪. பிறவறம் - மற்றைச் சமயதருமம். [வேன்
௧௪௫ - ௬. இத்திறம் பலவற்றையும் இவற்றின் புகுதிகளையுங்கூ
௧௪௭. இளங்கொடி - மணிமேகலை. ௧௪௬. மணி. ௨௪ : ௮௧.
௧௪௮. நன்றறிமாதவன் : "நன்றறி செட்டி" மணி. ௯ : ௧௦௭
௧௫௫. கண்ணகியைத் தரிசித்தற்பொருட்டு வஞ்சிநகரத்திற்
௧௫௮. அவரையும் : உம், இறந்ததுதழீஇயது. [புகுந்து
௧௬௦. அந்திமாலையில்.
௧௬௧. முதியாள் குடிகை - சம்பாபதி கோயில்.
௧௫௯ - ௬௦. "வெந்துறு பொன்னி னந்தி பூப்ப" அகநா. ௭௧.
௧௬௨. கந்தம் - தூண்; என்றது கந்திற்பாவையை; ஆகுபெயர்; "கலிகெழு கடவுள் கந்தங் கைவிட" புறநா. ௫௨.

(பி - ம்.) ௧௪௨. 'நல்வினை போற்றிக்' ௧௪௪ - ௫. 'பின்னாளவன் னாக்கு' ௧௪௬. 'முத்தொகையாக முன்னர்க்கூறுவன்' ௧௫௦. 'மறவா தூய்மின்' ௧௫௨. 'இவன் கூற்றெனவறைகுவர்' ௧௫௩. 'அடைந்தபின் னுன்' ௧௫௯. 'வெந்தாறு பொன்' ௧௬௧. 'முதியாள் கோட்டமும்'

டந்தர மாறாப் பறந்துசென் றாயிழை
யிந்திரன் மருமா னிரும்பதிப் புறத்தோர்
பூம்பொழி லகவயி னிழிந்து பொறையுயிர்த்
தாங்குவாழ் மாதவ னடியிணை வணங்கி
யிந்நகர்ப் பேர்யா திந்நக ராளு
மன்னவன் யாரென மாதவன் கூறு
நாக புரமிது நன்னக ராள்வோன்
பூமிசந் திரன்மகன் புண்ணிய ராச
னீங்கிவன் பிறந்த வந்நாட் டொட்டு
மோங்குயர் வானத்துப் பெயல்பிழைப் பறியாது
மண்ணு மரனும் வளம்பல தரூஉ
முன்னின் றுருக்கு நோயுயிர்க் கில்லெனத்
தகைமலர்த் தாரோன் றன்றிறங் கூறின
னகைமலர்ப் பூம்பொழி லருந்தவன் றானென்.

௨௪.—ஆபுத்திரனாடடைந்தகாதை முற்றிற்று.

---

௧௬௩. அந்தரம் ஆறு - ஆகாயமேவழியாக; மணி. ௩: ௨௧௧.

௧௬௪. இந்திரன் மருமான் - புண்ணியராசன்; மருமான் - வழித்தோன்றல். பதி - நாகபுரம்.

௧௬௫. அகவயின் - உள்ளிடத்தே.

௧௬௬. மாதவன் - தருமசாவகன்.

௧௬௮. யாரென-யாரென்று மணிமேகலைகேட்ப. கூறும்-சொல்லுவான்.

௧௭௧. தொட்டும் - தொடங்கி; மணி. ௧௩: ௫௩.

௧௭௨. பெயல் - மழை. பிழைப்பு அறியாது - தவறுதலையறியாது.

௧௭௩. தரூஉம் - கொடுக்கும். ௧௭௪. உயிர்களுக்கு நோயில்லை.

௧௭௫. தகை - கட்டிய. தாரோன் றன் - புண்ணியராசனது.

௧௭௬. அகைமலர் - மலர்ந்தமலர்; "அகைமத்தம்" (௫௧. ௯௮.) அருந்தவன் - தருமசாவகன்.

௧ - ௧௭௬. தொன்முதுகணிகை கேட்டு வருந்தி வீழ்ந்து, ஏத்தி, 'தருக' என, இராசமாதேவி ஈங்கிவை சொல்வுழி, மாதவி அறவணவடிகளுடன் வர, காண்டலும், எதிர்சென்று இணையடி வணங்க, அவன், 'அறிவுண்டாக' என்று கூறலும், இராசமாதேவி காட்டி விளக்கிச் செய்தபின், 'வாழ்க' என, 'தேவி கேளாய்; நல்லீர் கேண்மின்; மணிமேகலை, முன்னுறக் கூறுவல்' என்று அவனெழுதலும், இளங்கொடி எழுந்து வணங்கி என்று வணங்கிப் போகி ஏத்தி வலங்கொண்டுசென்று இழிந்து பொறையுயிர்த்து வணங்கி, 'யாது? யார்?' என மாதவன் கூறும்; அங்ஙனங் கூறுமருந்தவன் கூறினனென வினைமுடிவுசெய்க.

இருபத்தைந்தாவது

ஆபுத்திரனோடு மணிபல்லவமடைந்த காதை.

[இருபத்தைந்தாவது மணிமேகலை ஆபுத்திரனொடு மணிபல்லவத் திடையடைந்துப் புத்தபீடிகைகாட்டிப் பிறப்புணர்ந்து வஞ்சிமாநகர்ப்புக்கபாட்டு.]

அரச னுரிமையோ டப்பொழில் புகுந்து
தரும சாவகன் றன்னடி வணங்கி
யறனு மறனு மநித்தமு நித்தமுந்
திறனுடை யாக்கையுஞ் செல்லுயிர்ப் புக்கிலுஞ்
சார்பிற் றோற்றமுஞ் சார்பறுத் துய்தியு
மாரிய னமைதியு மமைவுறக் கேட்டுப்
பெண்ணிணை யில்லாப் பெருவனப் புற்றாள்
கண்ணிணை யியக்கமுங் காமனோ டியங்கா
வங்கையிற் பாத்திரங் கொண்டறங் கேட்கு

க. அரசன் - புண்ணியராசன். உரிமை - மனைவி; "உரிமையொ போகி யல்லா லொளியுடை மன்னர் போகார்" சீவக. உகஉ.

உ. தருமசாவகனென்பது, அப்பொழிலில் சேர்ந்துறையும் [illegible] பெயர். இப்பெயர்க்குத் தருமங்கேட்பவனென்பது பொருள்.

௩. மறன் - பாவம். அநித்தம் - அநித்தியப்பொருளின் வகை.

௪. [illegible] - நித்தியப் பொருளின் வகை. [illegible] பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு, விரும்பியவை பெறாமை, வேண்டா [illegible] பெறுதல் என்னும். புக்கில் - புகுமிடம்.

௫. சார்பிற்றோற்றம் - பேதைமை முதலிய பன்னிரண்டின் [illegible] தோற்றம். உய்தி - பிழைத்தல்; "செய்தி கொன்றோர்க் [illegible]" (புறநா. [illegible]); "உய்திக் கால முணரக் கோவென" [illegible]

. [illegible] - [illegible]; [illegible] புத்தர்.

. பெருவனப்பு - பேரழகு.

. [illegible] - [illegible]. [illegible], "[illegible]" ([illegible]) [illegible]

[illegible]

யிங்கிணை யில்லா ளிவள்யா ரென்னக்
காவலற் றொழுது கஞ்சுக னுரைப்போ
னாவலந் தீவிலிந் நங்கையை யொப்பார்
யாவரு மில்லை யிவடிற மெல்லாங்
கிள்ளி வளவனொடு கெழுதகை வேண்டிக்
கள்ளவிழ் தாரோய் கலத்தொடும் போகிக்
காவிரிப் படப்பை நன்னகர் புக்கேன்
மாதவ னறவண னிவள்பிறப் புணர்ந்தாங்
கோதின னென்றியா னன்றே யுரைத்தே
னாங்கவ ளிவளவ் வகனகர் நீங்கி
யீங்கு வந்தன ளென்றலு மிளங்கொடி
நின்கைப் பாத்திர மென்கைப் புகுந்தது
மன்பெருஞ் செல்வத்து மயங்கினை யறியா
யப்பிறப் பறிந்திலை யாயினு மாவயிற்

---

௧0. யாரென்ன - யாரென்று அரசன் கேட்ப.

௧ - ௧0. அரசன் புகுந்து வணங்கிக் கேட்டு, 'இவள் யார்' என்னவென்க.

௧௧. கஞ்சுகன் - சட்டையிட்ட பிரதானி.

கஞ்சுகன் மணிமேகலையின் வரலாற்றை அரசனுக்குக் கூறுதல் இனிக் கூறப்படும்.

௧௩. இவள் திறமெல்லாம் - இவளுடைய வரலாறு முழுதும்.

௧௪. கிள்ளிவளவனென்றது, உதயகுமரன் தந்தையை. கெழுதகை - உரிமை; என்றது நட்பை.

௧௬. காவிரிப்படப்பை நன்னகர் - காவிரியைத் தோட்டக் கூற்றிற்கு எல்லையாகவுடைய காவிரிப்பூம்பட்டினம்; படப்பை - பக்கமுமாம்; "காவிரிப் படப்பைப் பட்டினம்" சிலப். ௧௫ : ௧௫௧.

௧௮. அன்றே - யான் போய்வந்த அக்காலத்தே.

௧௩ - ௮. இவள்திறமெல்லாம் அன்றே யுரைத்தேன்.

௨0. இளங்கொடி - மணிமேகலை.

௧௧ - ௨0. உரைப்போனாகிய கஞ்சுகன், 'ஈங்குவந்தனள்' என்றலும்.

௨௧. 'நின்கைப் பாத்திரம்' என்பது முதலியன, புண்ணியராசனை நோக்கி மணிமேகலை கூறுங்கூற்று. பாத்திரம் - அமுதசுரபி.

௨௨. செல்வத்து - செல்வத்தால்.

௨௩. அப்பிறப்பு - போனபிறப்பு; என்றது, சாலிவயிற்றிற் பிறந்த பிறப்பை.

(பி - ம்.) ௧௮. 'ஓதினனெறியானன்றே' ௧௯. 'ஆங்கவடானவ்வகநகர்'

றிப்பிறப் பறிந்திலை யென்செய் தனையோ
மணிப்பல் லவம்வலங் கொண்டா லல்லது
பிணிப்புறு பிறவியின் பெற்றியை யறியா
யாங்கு வருவா யரசநீ யென்றப்
பூங்கமழ் தாரோன் முன்னர்ப் புகன்று
மையறு விசும்பின் மடக்கொடி யெழுந்து
வெய்யவன் குடபால் வீழா முன்னர்
வானின் றிழிந்து மறிதிரை யுலாவும்
பூநா றடைகரை யெங்கணும் போகி
மணிப்பல் லவம்வலங் கொண்டு மடக்கொடி
பிணிப்பறு மாதவன் பீடிகை காண்டலுந்
தொழுதுவலங் கொள்ளவத் தூமணிப் பீடிகைப்
பழுதில் காட்சி தன்பிறப் புணர்த்தக்
காயங் கரையெனும் பேரியாற் றடைகரை
மாயமின் மாதவன் றன்னடி பணிந்து
தருமங் கேட்டுத் தாடொழு தேத்திப்
பெருமகன் றன்னொடும் பெயர்வோர்க் கெல்லாம்
விலங்கு நரகரும் பேய்களு மாக்குந்

உ௬. பிணிப்பு - பற்று. பெற்றி - தன்மை.

உ௭. ஆங்கு - மணிபல்லவத்திற்கு. நீ ஆங்கு வருவாயென்று.

உ௮. தாரோன் - புண்ணியராசன்.

உ0 - உ௮. இளங்கொடி புகன்று.

உ௯. மடக்கொடி - மணிமேகலை.

௩௧. இழிந்து - இறங்கி. ௩௪. மாதவன் - புத்தன்.

உ௯ - ௩௪. மடக்கொடி எழுந்து இழிந்து போகி வலங்கொண்டு காண்டலுமென்க.

௩௬. பழுது - குற்றம். ௩௫ - ௬. பீடிகைக்காட்சி உணர்த்த.

௩௭. அடைகரை - அடைகரையிலுள்ள.

௩௮. மாதவன் - பிரமதருமன்.

௩௯. 'தருமங்கேட்டு' என்பது முதலியன, பிரமதருமனை முன்னிலையாக்கி மணிமேகலை கூறுங்கூற்று.

௪0. பெருமகன் - அரசன்; என்றது அத்திபதியை. பெயர்வோர்க் கெல்லாம் - அவந்தி நகரத்திற்குச் செல்வோரெல்லோருக்கும்.

(பி - ம்.) உ௬. 'பெற்றிமையுணராய்' உ௮. 'முன்னர்ப்பொருந்தி' ௩௫. 'கொள்ளத்தூமணிப்' ௩௬ - ௭. 'பிறப்புணர்ந்த, சாயங்கரை'

கலங்கஞர்த் தீவினை கடிமின் கடிந்தாற்
றேவரு மக்களும் பிரமரு மாகுதி
ராகலி னல்வினை யயரா தோம்புமின்
புலவன் முழுதும் பொய்யின் றுணர்ந்தோ
னுலகுயக் கோடற் கொருவன் றோன்று
மந்நா ளவனறங் கேட்டோ ரல்ல
தின்னாப் பிறவி யிழுக்குந ரில்லை
மாற்றருங் கூற்றம் வருவதன் முன்னம்
போற்றுமி னறமெனச் சாற்றிக் காட்டி
நாக்கடிப் பாக வாய்ப்பறை யறைந்தீ
ரவ்வுரை கேட்டுநும் மடிதொழு தேத்த
வெவ்வுரை யெங்கட்கு விளம்பினி ராதலிற்

சஉ. கலங்கஞர்த்தீவினை - கலங்குதற்குக் காரணமாகிய துன்பத்தையுண்டாக்கும் கொலை முதலிய பத்துவகையினதாகிய பாவத்தை.

சச. நல்வினை - கொல்லாமை முதலிய பத்து வகையினதாகிய புண்ணியத்தை. அயராது ஓம்புமின் - மறவாது பாதுகாத்திடுமின்.

சரு. புலவன் - ஞானி; புத்தனென்பது இப்பொருட்டு. முழுதும் பொய்யின்றுணர்ந்தோன் - ஸர்வஜ்ஞன்.

சசு. உலகுயக் கோடற்கு - உலகைப் பிழைப்பித்தற் பொருட்டு. ஏகதேவனென்பது புத்தன் பெயர்களுள் ஒன்றாதலின் இங்கே, 'ஒருவன்' என்றார்.

சரு - சசு. புலவனும் உணர்ந்தோனுமாகிய ஒருவன் உலகை உயக் கோடற்குத் தோன்றுமென்க.

சஎ. அவனறம் - அவனாற் கூறப்படும் அறம்.

சஅ. இன்னா - துன்பம். இழுக்குநரில்லை - தப்புவோரில்லை.

சஎ - அ. மணி. கஉ : கூகூ - க00.

சகூ. மாற்றருங் கூற்றம் - பிறரால் தடுத்தற்கரிய இயமன்; "மாற்றருங் கூற்றம்" (தொல். புறத்திணை. சூ. உச); "மருந்தில் கூற்றம்" புறநா. ந.

ருO. அறம் போற்றுமினென்று சொல்லிப் பொருளை விளங்கச் செய்து; சாற்றி - நிறைத்தென்றுமாம்; "நிவந்துசெ னீத்தங் குளங்கொளச் சாற்றி" மதுரை. உசசு.

ருக. நாவே கடிப்பாக வாயாகிய பறையை அறைந்தீர்; கடிப்பு - பறையடிக்குங் குறுந்தடி; "நாக்கடிப் பாக வாய்ப்பறை யறையினும்" சிலப். கச : உக.

சO - ருக. பெயர்வோர்க்கெல்லாம் சாற்றிக் காட்டி அறைந்தீரென இயைக்க.

ருந. வெவ்வுரை - பதினாறுநாளில் இராகுலன் திட்டிவிடமென்னும் பாம்பால் இறப்பானென்றும், நீ அவனோடு தீயில் மூழ்குவையென்

(பி - ம்.) சசு. 'உலகுயக் கேட்டற்கு'

பெரியவன் றோன்று முன்னரிப் பீடிகை
௫௫ கரியவ னிட்ட காரணந் தானு
மன்பெரும் பீடிகை மாய்ந்துயிர் நீங்கிய
என்பிறப் புணர்ந்தது மென்னென் றியான்றொழ
முற்ற வுணர்ந்த முதல்வனை யல்லது
மற்றப் பீடிகை தன்மிசைப் பொறாஅது
௬௰ பீடிகை பொறுத்த பின்ன ரல்லது
வானவன் வணங்கான் மற்றவ் வானவன்
பெருமகற் கமைத்துப் பிறந்தார் பிறவியைத்
தரும பீடிகை சாற்றுக வென்றே
யருளின னாதலி னாயிழை பிறவியு
௬௫ மிருளறக் காட்டு மென்றெடுத் துரைத்த
நன்றே போன்ற தருந்தவர் வாய்மொழி
யின்றெனக் கென்றே யேத்தி வலங்கொண்
டத்திவ மின்னண மாக விறைவனு

...றும் சொன்ன சொற்கள்; இதனை, இந்நூல் ௯-ம் காதை, ௪௯ - ... முதலியவற்றாலுணர்க.

௫௪. பெரியவன் - புத்தன். பீடிகை - பீடிகையை.

௫௫. கரியவன் - இந்திரன்; "தேவர்கோ னிட்ட மாமணிப் பீடிகை" (அ : ௫௨) என்று முன்பு வந்திருத்தல் காண்க.

௫௫-௭. காரணந்தானும் உணர்ந்ததற்குக் காரணமும் எ... வென்று யான்றொழ.

௫௮. முற்றவுணர்ந்தமுதல்வன் - எல்லாமறிந்தமுதல்வன்; ... ...ன்; மணி. ௫ : ௧0௧. ௫௯. பொறாஅது - சுமவாது; முற்...

௬௧. வானவன் - இந்திரன்.

௬௨. பெருமகற்கமைத்து - புத்தனை அறிந்துகோடற் பொரு... ...பெற்றி. பிறந்தார்பிறவியை - பிறந்தோருடைய பழம்பிறப்பின் செய்... [...

௬௩. சாற்றுக - உணர்த்துக.

௬௪. அருளினன் - அருளினான். ஆயிழை பிறவியும் - உ... பிறவியையும்.

௬௧-௪. அவ்வானவன் அமைத்துச் சாற்றுகவென்று அரு... [...

௬௫. இருளற - மயக்கமற.

௬௬. அருந்தவர்: முன்னிலைக்கண்வந்தது.

...-௬. அன்று உரைத்ததாகிய வாய்மொழி.

...-௭. எனக்கு வாய்மொழி இன்றைக்குரைத்தது போ... ...

... [illegible] - மணிமேகலை. இன்னணமாக - இப்படி ...

... [illegible] - புண்ணியராசன்.

[illegible]

மாங்கப் பொழில்விட் டகநகர் புக்குத்
தந்தை முனியாத் தாய்பசு வாக
வந்த பிறவியு மாமுனி யருளாற்
குடர்த்தொடர் மாலை சூழா தாங்கோ
ரடர்ப்பொன் முட்டையு ளடங்கிய வண்ணமு
மாமுனி யருளான் மக்களை யில்லோன்
பூமிசந் திரன்கொடு போந்த வண்ணமு
மாய்தொடி யரிவை யமரசுந் தரியெனுந்
தாய்வாய்க் கேட்டுத் தாழ்துய ரெய்தி
யிறந்த பிறவியின் யாய்செய் ததூஉம்
பிறந்த பிறவியின் பெற்றியு நினைந்து
செருவேன் மன்னர் செவ்விபார்த் துணங்க
வரைசுவீற் றிருந்து புரையோர்ப் பேணி
நாடகங் கண்டு பாடற் பான்மையிற்
கேள்வி யின்னிசை கேட்டுத் தேவிய
ரூடற் செவ்வி பார்த்துநீ டாது

---

௭0. முனி - மண்முகமுனிவன்; மணி. கரு: ௪.

௭௩. அடர் - தகடு. ௭௨ - ௩. மணி. கரு: ௧௩ - ௪.

௭௧ - ௩. அருளால் அடங்கியவண்ணமும்.

௭௫. பூமிசந்திரன் - நாகபுரத்தரசன்.

௭௪ - ௫. இல்லோனாகிய பூமிசந்திரன்.

௭௬. அமரசுந்தரி - பூமிசந்திரன்மனைவி.

௬௮ - ௭௭. இறைவனும் விட்டுப் புக்குப் பிறவியும் அடங்கியவண்ணமும் போந்தவண்ணமும் கேட்டுத் துயரெய்தியென்க.

௭௮. இறந்தபிறவி - போனபிறப்பு. யாய் - தாய்; என்றது, சாலியை. இறந்தபிறப்பின் செய்தியை மணிமேகலையாலுணர்ந்தான் போலும்.

௭௯. பெற்றி - பேறு; என்றது, பசுவயிற்றிற்பிறந்தது முதலியவற்றை.

௮0. செவ்வி - தம் குறைகூறுதற்கேற்ற மனமொழிமெய்கள் இனியனாங்காலம். உணங்க - வாட.

௮௧. வீற்றிருந்து - வருத்தமின்றியிருந்து; செம்மாந்திருந்தென்றுமாம்; முநது. ௭0, ௩. புரையோர்ப்பேணி - பெரியோரைவழிபட்டு; அமைச்சர்களையும் புரோகிதர்களையும் விரும்பித் துணைக்கொண்டென்றுமாம்.

௮௨ - ௩. பட்டினப். ௧௧௩.

௮௪. ஊடல் - பிணக்கல்; 'வழக்காட்டு' என்பர் வெண்பாமாலை உரையாசிரியர். நீடாது - தாமதியாமல்.

(பி - ம்.) ௭௨. 'மாலை சூடியாங் கோர்' ௭௬. 'அரிவையாசுந்தரியெனுந்'

பாடகத் தாமரைச் சீறடி பணிந்து
தேமரு கொங்கையிற் குங்கும மெழுதி
யங்கையிற் றுறுமலர் சுரிகுழற் சூட்டி
நறுமுகை யமிழ்துறாஉந் திருநகை யருந்தி
மதிமுகக் கருங்கட் செங்கடை கலக்கக்
கருப்பு வில்லி யருப்புக்கணை தூவத்
தருக்கிய காமக் கள்ளாட் டிகழ்ந்து
தூவறத் துறத்த னன்றெனச் சாற்றித்
தெளிந்த நாதனென் செவிமுத லிட்டவித்
தேத மின்று யின்று விளைந்தது
மணிமேகலைதான் காரண மாகவென்
றணிமணி நீண்முடி யரசன் கூற
மனம்வே றுயினன் மன்னென மந்திரி

அடு. பாடகம் - ஒருவகைக்காலணி.

அசு. குங்குமம் - குங்குமச் சாந்து.

அஎ. அங்கையின் - அகங்கையினாலே. துறுமலர் - நெருங்கிய மலர். அங்கையிற் சூட்டி.

அஅ. முகை - அரும்பு. நறுமுகைபோலுந் திருநகை.

கூ0. கருப்புவில்லி - மன்மதன். அருப்புக்கணை - மொட்டாமலராகிய அம்பு. வில்லி கணையைத்தூவ.

கூக. காமக்கள்ளாட்டு - காமமாகிய கள்ளையுண்டு விளையாடும் விளையாட்டு; (மணி. உஉ: உ0); “காமக் கள்ளாட் டடங்கினர் மயங்க” சிலப். உஉ: கஉஎ.

அஉ - கூக. ‘நாடகங்கண்டு’ என்பது முதலியன காமக்கள்ளாட்டிற்கு அடை.

கூஉ. தூவறத்துறத்தல் - பற்றுக்கோடறத்துறத்தல்; கலி. ககஅ.

கூங. நாதன் - தருமசாவகன். முதல் - இடம். வித்து - அவன் கூறிய உபதேசமொழி. கூச. ஏதமின்றாய் - குற்றமில்லாமல்.

கூசு. நீண்முடி - தொன்று தொட்டுவந்தமுடி; குலத்தின்பெருமை கூறியவாறு; “நெடுமுடிக் குருசில்” (சீவக. உசுச.) அரசன் - புண்ணியராசன்.

கூங - சு. வித்து, மணிமேகலை காரணமாக இன்று விளைந்ததென்று அரசன்கூற.

எஎ - கூசு. அரசன், துயரெய்தி நினைந்து இகழ்ந்து சாற்றிக் கூற.

கூஎ. மன் - அரசன்.

மேல்வருவன, சனமித்திரனென்னும் மந்திரிகூற்று.

(பி - ம்.) அடு. ‘சீறடிபிடித்து’ அஅ. ‘அமிழ்தூறு திருநகை’ கூ0. ‘கருப்புவிலநங்கன்’ கூஉ. ‘துவரத்துறத்தல்’

சனமித் திரனவன் றொடொழு தேத்தி
யெங்கோ வாழி யென்சொற் கேண்மதி
நுங்கோ னுன்னைப் பெறுவதன் முன்னாட்
பன்னீ ராண்டிப் பதிகெழு நன்னாடு
மன்னுயிர் மடிய மழைவளங் கரந்தீங்
கீன்றாள் குழவிக் கிரங்கா ளாகித்
தான்றனி தின்னுந் தகைமைய தாயது
காய்வெங் கோடையிற் கார்தோன் றியதென
நீதோன் றினையே நிரைத்தா ரண்ணா
றோன்றிய பின்னர்த் தோன்றிய வுயிர்கட்கு
வானம் பொய்யாது மண்வளம் பிழையா
தூனுடை யுயிர்க ளுறுபசி யறியா
நீயொழி காலை நின்னா டெல்லாந்
தாயொழி குழவி போலக் கூஉந்
துயர்நிலை யுலகங் காத்த லின்றிநீ
யுயர்நிலை யுலகம் வேட்டனை யாயி
னிறுதி யுயிர்க ளெய்தவு மிறைவ
பெறுதி விரும்பினை யாகுவை யன்றே

---

௯௯. கேண்மதி - கேள்; மதி: முன்னிலையசை.

௧00. நுங்கோன் - பூமிசந்திரன்.

௧0௧. இப்பதிகெழுநன்னாடு - இந்நகரத்தினையுடைய நல்லசாவக [நாடு.

௧0௨. கரந்து - மறைந்து. ௧0௧ - ௨. மணி. ௧௪ : ௫௫ - ௬.

௧0௩. ஈன்றாள் - தாய். ௧0௧ - ௪. நாடு தகைமையதாயது.

௧0௩ - ௪. "தந்தையை மக்கள் முகம்பா ராமல், வெந்த சாகம் வெவ்வே றருந்தி" தமிழ்நா. ௧௮.

௧0௮. பிழையாது - தப்பாமல். ௧0௯. உயிர்கள் அறியா.

௧௧0. ஒழிகாலை - நீங்கியபொழுது.

௧௧௧. கூஉம் - கூப்பிடும்; முற்று.

௧௧0 - ௧௧. "தாயி றூவாக் குழவி போல, வோவாது கூஉம்" (புறநா. ௪); மணி. ௨௫ : ௨௩௬ - ௭.

௧௧௩. உயர்நிலையுலகம் - முத்தியுலகம்; "உயர்நிலையுலகமுஞ் சிறிது" (குறுந். ௩௬௧ : ௨.) வேட்டனை யாயின் - விரும்பினையாயின்.

௧௧௪. இறுதி - மரணம். உயிர்கள் இறுதியெய்தவும்.

௧௧௫. பெறுதி - இலாபம்.

௧௧௩ - ௫. வேட்டனையாயின் விரும்பினையாகுவை.

(பி - ம்.) ௧00. 'நுங்கோனின்னை' ௧0௨ - ௩. 'வளங்கரந்த, நீன்றாள்' ௧௧௨. 'காக்கலொன்றநீ' ௧௧௪. 'இறுதியுலகமெய்தவுமிறைவன்'

தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயி ரோம்பு
மன்னுயிர் முதல்வ னறமுமீ தன்றான்
மதிமா றோர்ந்தனை மன்னவ வென்றே
முதுமொழி கூற முதல்வன் கேட்டு
மணிபல் லவம்வலங் கொள்வதற் கெழுந்த
தணியா வேட்கை தணித்தற் கரிதா
லரசு முரிமையு மகநகர்ச் சுற்றமு
மொருமதி யெல்லை காத்தனின் கடனெனக்
கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஉ
யிலங்குநீர்ப் புணரி யெறிகரை யெய்தி
வங்க மேறினன் மணிபல் லவத்திடைத்
தங்கா தக்கலஞ் சென்றுசார்ந் திறுத்தலும்
புரைதீர் காட்சிப் பூங்கொடி பொருந்தி
யரைசன் கலமென் றகமகிழ் வெய்திக்
காவலன் றன்னொடுங் கடற்றிரை யுலாவுந்
தேமலர்ச் சோலைத் தீவகம் வலஞ்செய்து

---

௧௧௬. தன்னுயிர்க்கு - தன் உயிர் வருந்துதற்கு. ஓம்பும் - பாது காக்கும்.

௧௧௭. மன்னுயிர் முதல்வன் - புத்தன். அறம் - காருணியம். ஈது - நீ துறந்து முத்தியடைதற்கெண்ணியது. ஈது முதல்வனது அறமுமன்று.

௧௧௬ - ௭. புத்தனை, 'பரதுக்கதுக்கி' (நீலகேசி) என்று கூறி யிருத்தல் காண்க.

௧௧௮. மதி மாறோர்ந்தனையென்றான், பிறவுயிர்களின் வருத்தத் தை நீக்கக்கருதாது தன்பயனைக்கருதித் துறத்தற்கு எண்ணினமையால்.

௧௧௯. முதுமொழி - அறிவுவாய்ந்த மொழி. முதல்வன் - புண்ணிய ராசன்.

௩௭ - ௧௧௯. சனமித்திரன், மன் மனம்வேறாயினனென்று தொழுது ஏத்தி முதுமொழிகூற. ௧௨௩. மதி - மாதம்.

௧௨௪. கலஞ்செய்கம்மியர்-கப்பலில் தொழில்செய்வோர்; "கலம் புணர் கம்மியர்" மணி. ௭ : ௭௦. ௧௨௫. புணரி - கடல்.

௧௧௯ - ௨௬. முதல்வன் அம்மொழியைக்கேட்டுக் காத்தல் நின் கடனெனக் கூறிக் கூஉய் எய்தி ஏறினனென்க.

௧௨௭. தங்காது - இடையே தங்காமல். இறுத்தலும் - தங்கலும்.

௧௨௮. புரை - குற்றம். காட்சி - அறிவு. பூங்கொடி-மணிமேகலை.

௧௩௦ - ௩௧. காவலன்றன்னொடும் வலஞ்செய்து.

(பி - ம்.) ௧௨௪. 'கம்மியர் கடனெனக்கூஉய்'

பெருமகன் காணாய் பிறப்புணர் விக்குந்
தரும பீடிகை யிதுவெனக் காட்ட
வலங்கொண் டேத்தினன் மன்னவன் மன்னவற்
குலந்த பிறவியை யுயர்மணிப் பீடிகை
கையகத் தெடுத்துக் காண்போர் முகத்தை
மையறு மண்டிலம் போலக் காட்ட
வென்பிறப் பறிந்தே னென்னிடர் தீர்ந்தேன்
றென்றமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய்
மாரி நடுநாள் வயிறுகாய் பசியா
லாரிரு ளஞ்சா தம்பல மணைந்தாங்
கிரந்தூண் வாழ்க்கை யென்பால் வந்தோர்க்
கருந்தூண் காணா தழுங்குவேன் கையி
னாடுவறங் கூரினுமிவ் வோடுவறங் கூரா
தேடா வழிய லெழுந்திது கொள்கென
வமுத சுரபி யங்கையிற் றந்தென்
பவமறு வித்த வானோர் பாவா
யுணர்விற் றோன்றி யுரைப்பொரு ளுணர்த்து

---

௧௩௨. பெருமகன் - அரசன்; அண்மைவிளி.

௧௨௮ - ௩௩. பூங்கொடி பொருந்தி மகிழ்வெய்தி வலஞ்செய்து காட்ட.

௧௩௫. உலந்தபிறவி - போனபிறப்பில் நிகழ்ந்த செய்தியை.

௧௩௭. மையறுமண்டிலம் - குற்றமற்ற கண்ணாடி; "வயக்குறு மண்டிலம்" கலி. ௨௫.

௧௩௫ - ௭. மண்டிலம்போலப் பீடிகை உலந்தபிறவியைக் காட்ட. மேல்வருவன, பழம்பிறப்புணர்ந்த புண்ணியராசன் கூற்று.

௧௩௯. தமிழ்மதுரை: சிறுபாண். ௬௬ - ௭. கலை - வித்தை.

௧௪௰. மாரிநடுநாள் - மழையையுடைய நள்ளிரவில்.

௧௪௨. இரந்துண்ணுமுணவையே வாழ்க்கைப் பொருளாகவுடைய என்பால்வந்தோர் பொருட்டு.

௧௪௩. அழுங்குவேன் - வருந்துவேன்; பெயர்.

௧௪௪ - ௫. மணி. ௧௪: ௧௨ - ௩.

௧௪௬. அங்கையின் - அழகிய கையினால்.

௧௪௭. பவம் - கருமக் கூட்டம்.

௧௩௯ - ௪௭. இவ்வடிகளிற் கூறப்பட்டுள்ள சரித்திரத்தை, இந்நூலில் ௧௪ - ஆம் காதை, ௩ - ஆம் அடி முதலியவற்றால் உணர்க.

௧௪௮. உரைப்பொருள் - சொற்பொருள்.

(பி - ம்.) ௧௩௮ - ௯. 'என்னிடர் தீர்த்த, தென்' ௧௪௩. 'காணா தழுவேன்' ௧௪௫. 'ஏடாபரியல்'

மணிதிக ழவிரொளி மடந்தை நின்னடி
தேவ ராயினும் பிரம ராயினு
நாமாசு கழூஉ நலங்கிளர் திருந்தடி
பிறந்த பிறவிகள் பேணுத லல்லது
மறந்து வாழேன் மடந்தையென் றேத்தி
மன்னவன் மணிமே கலையுட னெழுந்து
தென்மேற் காகச் சென்று திரையுலாங்
கோமுகி யென்னும் பொய்கையின் கரையோர்
தூமலர்ப் புன்னைத் துறைநிழ லிருப்ப
வாபுத் திரனோ டாயிழை யிருந்தது
காவற் றெய்வதங் கண்டுவந் தெய்தி
யருந்துயிர் மருந்துமுன் னங்கையிற் கொண்டு
பெருந்துயர் தீர்த்தவப் பெரியோய் வந்தனை
யந்நா ணின்னை யயர்த்துப் போயினர்
பின்னாள் வந்துநின் பெற்றிமை நோக்கி

கசகூ. மணி - பளிங்கு; "மணிமரு டெண்ணீர்" (மலைபடு. உ௰); முத்துமாம்.

கருக. நா மாசு - நாக்குற்றம். கழூஉம் - போக்கும்.

கருஉ. பிறவிகள் - பிறவிகள்தோறும். பேணுதல் - உட்கொண்டு வழிபடுதல். கருங. மடந்தை : விளி.

கசகூ - ருங. நின்னடிகளைப் பிறவிகடோறும் பேணுதலல்லது மறவேன்.

கருரு. உலாம் - உலாவும். கருசா. கரை - கரையில்.

கருங - எ. மன்னவன் ஏத்தி எழுந்து சென்று கரையில் நிழலில் இருப்பவென்க.

கருகூ. தெய்வதம் - தீவதிலகை.

கசா௦. 'அருந்துயிர் மருந்து' என்பது முதலியன, தீவதிலகை புண்ணியராசனை நோக்கிக்கூறும் கூற்று. உயிர்மருந்து - சோறு.

கசாக. பெருந்துயர் - பசித்துயர். வந்தனை - வந்தாய்.

கசாஉ. அந்நாள் - போனபிறப்பில் மதுரையிலிருந்து கப்பல்வழியே வந்து இத்தீவத்தை அடைந்த அந்நாளில். அயர்ந்து - மறந்து. போயினர் : பெயர்.

கசாங. பெற்றிமை - தன்மை; என்றது, "உண்ணா நோன்போ லெிர்பதிப் பெயர்த்தமை" மணி. கச : கூ.

(பி - ம்.) கருக. 'நாமுறைபுகழ்ந்த நலந்திகழ்திருந்தடி' கருஅ. 'ஆயிழைதன்னைக்' கசா௦. 'மருந்துன்னங்கையிற்' கசாக. 'வருந்துயிர் நீக்கிய மறவோன்'

நின்குறி யிருந்து தம்முயிர் நீத்தோ
ரொன்பது செட்டிக ளுடலென் பிவைகா
ணாங்கவ ரிடவுண் டவருடன் வந்தோ
ரேங்கிமெய் வைத்தோ ரென்பு மிவைகா
ணூர்திரை தொகுத்த வுயர்மணல் புதைப்ப
வாய்மலர்ப் புன்னை யணிநிழற் கீழா
லன்புடை யாருயி ரரசற் கருளிய
வென்புடை யாக்கை யிருந்தது காணாய்
நின்னுயிர் கொன்றாய் நின்னுயிர்க் கிரங்கிப்
பின்னாள் வந்த பிறருயிர் கொன்றாய்
கொலைவ னல்லையோ கொற்றவ னாயினை
பலர்தொழு பாத்திரங் கையி னேந்திய
மடவர னல்லாய் நின்றன் மாநகர்
கடல்வயிறு புக்கது காரணங் கேளாய்

கசுச. நின்குறியிருந்து - நீ இறந்தவிடத்து உண்ணாநோன்புடனிருந்து ; குறி - இடம்.

கசுரு. ஆங்கவரிடவுண்டு - அவ்வொன்பது செட்டிகளும் உணவளிக்கவுண்டு.

கசுஎ. மெய்வைத்தோர் - உயிர்நீங்கினோர் ; மணி. சு : கஙக.

கசுஅ. ஊர்திரை தொகுத்த - பரந்த அலைகள் திரட்டிய.

கசுகூ. ஆய்மலர் - அழகியமலர். கீழால் - கீழிடத்தே ; உருபு மயக்கம்.

கஎ0. அன்பையுடைய அரியவுயிரை உனக்குக் கொடுத்த. ஆருயிரென்றது, ஈண்டு விஞ்ஞானஸ்கந்தத்தை. கஎக. காணாய் - பாராய்.

கசுஅ - எக. புதைப்பக் கீழால் யாக்கையிருந்தது காணாயென்க.

கஎ0 - எக. இவ்வடிகளோடு, "அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க், கென்போ டியைந்த தொடர்பு" (குறள், எங) என்பது ஒப்பு நோக்கற்பாலது.

கஎச. கொலைவன் - கொல்லுதலைச்செய்பவன் ; "கொலைவன் யார்கொலோ கொலைவன் மற்றிவன்" புறநா. கருஉ.

கஎஉ - ச. 'நின்னுயிர் கொன்றாய்' என்பது முதலியன வஞ்சப் புகழ்ச்சி.

கஎரு. 'பலர்தொழுபாத்திரம்' என்பது முதலியன, தீவதிலகை மணிமேகலையை நோக்கிக் கூறுங்கூற்று.

கஎசு. நகர் - காவிரிப்பூம்பட்டினம்.

கஎசு - எ. நகர் கடலிலழுந்திற்று.

(பி - ம்.) கசுசு. 'ஆங்கவர் மடவாரவருடன்வந்தோர்' கசுஅ. 'ஊதையீட்டிய வுயிர்மணல்' கஎசு. 'மடவரலாய'

நாக நன்னா டாள்வோன் றன்மகள்
பீலிவளை யென்பாள் பெண்டிரின் மிக்கோள்
பனிப்பகை வானவன் வழியிற் றோன்றிய
புனிற்றிளங் குழவியொடு பூங்கொடி பொருந்தித்
தீவகம் வலஞ்செய்து தேவர்கோ னிட்ட
மாபெரும் பீடிகை வலங்கொண் டேத்துழிக்
கம்பளச் செட்டி கலம்வந் திறுப்ப
வங்கவன் பாற்சென் றவன்றிற மறிந்து
கொற்றவன் மகனிவன் கொள்கெனக் கொடுத்தலும்
பெற்ற வுவகையன் பெருமகிழ் வெய்திப்
பழுதில் காட்சிப் பைந்தொடி புதல்வனைத்
தொழுதனன் வாங்கித் துறைபிறக் கொழியக்
கலங்கொண்டு பெயர்ந்த வன்றே காரிருள்
இலங்குநீ ரடைகரை யக்கலங் கெட்டது
கெடுகல மாக்கள் புதல்வனைக் கெடுத்தது
வடிவேற் கிள்ளி மன்னனுக் குரைப்ப

---

௧௭௮. நாகநன்னாடாள்வோன் - வளைவணன்.

௧௮௦. பனிப்பகைவானவன் - சூரியன். வழி - பரம்பரை.

௧௮௧. பூங்கொடி - பீலிவளை.

௧௮௦ - ௮௧. பூங்கொடி பொருந்தியதனை இந்நூல், ௨௪ - ஆம் காதை, ௨௧ - ஆம் அடிமுதலியவற்றாலுணர்க.

௧௮௧ - ௨. இத்தீவகமென்றது மணிபல்லவத்தை.

௧௮௩. பீடிகை - புத்தபீடிகை. ஏத்துழி - துதிக்கும்பொழுது.

௧௭௮ - ௮௩. மகள் என்பாள் மிக்கோள் பூங்கொடி குழவியொடு பொருந்தி வலஞ்செய்து வலங்கொண்டு ஏத்துழியென்க.

௧௮௪. இறுப்ப - தங்க. [தலை.

௧௮௫. அவன்றிறம் - அவன் காவிரிப்பூம்பட்டினத்திற்குச் செல்லு

௧௮௬. கொடுத்தலும் - பீலிவளை கொடுத்தலும்.

௧௮௯. தொழுதனன்வாங்கி - தொழுதுவாங்கி; மணி. ௧௩ : ௨௦. பிறக்கொழிய - பின்னொழிய.

௧௯௦. இருள் - இருளில். ௧௯௨. கெடுத்தது - இழந்தசெய்தியை.

(பி - ம்.) ௧௮௭. 'உவகையன்' ௧௮௯. 'தொழுதனன் வணங்கி' ௧௯௦. '[illegible]போயனன்றே' ௧௯௨. 'கெடுத்தமாக்கள் புதல்வனை [illegible]'

மன்னவன் மகனுக் குற்றது பொறாஅ
னன்மணி யிழந்த நாகம் போன்று
கானலுங் கடலுங் கரையுந் தேர்வுழி
வானவன் விழாக்கோண் மாநக ரொழிந்தது
மணிமே கலாதெய்வ மற்றது பொறாஅ
ளணிநகர் தன்னை யலைகடல் கொள்கென
விட்டனள் சாபம் பட்ட திதுவாற்
கடவுண் மாநகர் கடல்கொளப் பெயர்ந்த
வடிவேற் றடக்கை வானவன் போல
விரிதிரை வந்து வியனகர் விழுங்க
வொருதனி போயின னுலக மன்னவ
னருந்தவன் றன்னுட னாயிழை தாயரும்
வருந்தா தேகி வஞ்சியுட் புக்கனர்
பரப்புநீர்ப் பௌவம் பலர்தொழக் காப்போ
ளுரைத்தன கேட்க வுறுகுவை யாயினின்
மன்னுயிர் முதல்வனை மணிமே கலாதெய்வ

ககூச. உற்றது பொறாஅன் - உண்டான துன்பத்தைப் பொறானாகி.

ககூரு. மணி. எ : கஙக. ககூசு. தேர்வுழி - தேருமிடத்து.

ககூஎ. வானவன் விழாக்கோள் - இந்திரவிழாவெடுத்தலை.

ககூசு - எ. தேர்வுழி ஒழிந்தது.

உ00. பட்டது - உண்டான செய்தி.

உ0ச. ஒருதனி - துணையின்றி. மன்னவன் - நெடுமுடிக்கிள்ளி.

உ0ரு. அருந்தவன் - அறவணவடிகள். ஆயிழைதாயர் - உன் றாயர் ; என்றது, மாதவியையும் சுதமதியையும்.

உ0எ. பௌவம் - கடல். காப்போள் - மணிமேகலாதெய்வம். பலர்தொழப் பௌவத்தைக்காப்போளென்க.

உ0அ. உரைத்தன - சொல்லப்பட்டன ; முற்று.

உ0எ - அ. மேற்கூறிய செய்திகள், காப்போளால் எனக்கு உரைக்கப்பட்டனவென்க. இனி, 'உரைத்தன' என்பதைப் பெயராக்கி, 'கேட்கவுறுகுவையாயின்' என்பதனோடு கூட்டிப்பொருளுரைப்பினும் பொருந்தும்.

உ0அ - கூ. நின்மன்னுயிர் முதல்வனென்றது, கோவலன் மரபில் முற்பட்டானொரு வணிகனை.

(பி - ம்.) ககூச - கூ. 'மன்னது தெய்வமற்றது பொறாஅ ளகனகர தனை' ககூசு. 'கானலும் பொழிலும்' உ00. 'விட்டது சாபம்' உ0ச-ரு. 'போயினளருந்தவன் றன்னுடன்' உ0சு. 'புக்கனள்' உ0எ. 'பலர் கொளக காபபாள'

முன்னா ளெடுத்தது மந்நா ளாங்கவ
னறவர சாண்டது மறவணன் றன்பான்
மறுபிறப் பாட்டி வஞ்சியுட் கேட்பையென்
றந்தரத் தீவகத் தருந்தெய்வம் போயபின்
மன்னவ னிரங்கி மணிமேகலையுடன்
றுன்னிய தூமண லகழத் தோன்றி
யூன்பிணி யவிழவு முடலென் பொடுங்கித்
தான்பிணி யவிழாத் தகைமைய தாகி
வெண்சுதை வேய்ந்தவ ணிருக்கையி னிருந்த
பண்புகொள் யாக்கையின் படிவ நோக்கி
மன்னவன் மயங்க மணிமேகலையெழுந்
தென்னுற் றனையோ விலங்கிதழ்த் தாரோய்
நின்னா டடைந்தியா னின்னையீங் கழைத்தது
மன்னா நின்றன் மறுபிறப் புணர்த்தி
யந்தரத் தீவினு மகன்பெருந் தீவினு
நின்பெயர் நிறுத்த நீணில மாளு

உ௧0. முன்னாள் - மரக்கலமுடைந்த அக்காலத்தில்.

உ௧௧. அறவரசாண்டது - புண்ணியதானஞ்செய்தது; மணி. உ௯ : உ௭.

உ௧௩. தெய்வம் - தீவதிலகை.

இனி, மணலைத்தோண்டித் தன்பழைய உடம்பைக்கண்டு புண்ணியராசன் வருந்துதலும் மணிமேகலை அவனைத்தேற்றுதலும் கூறப்படும்.

உ௧௫. தூ - தூய்மை. அகழ - தோண்ட.

உ௧௬. ஊன்பிணியவிழவும் - தசையின்பிணிப்பு நீங்கவும்.

உ௧௭. தானென்றது யாக்கையை. பிணியவிழா - கட்டவிழாத.

உ௧௮. வெள்ளிய சுண்ணச்சாந்தால் வேயப்பட்டு அவ்விடத்து இருத்தல் போல இருந்த.

உ௧௯. படிவம் - வடிவம். உ௨௨. ஈங்கு - இத்தீவத்திற்கு.

உ௨௩. மறுபிறப்பு - பழம்பிறப்பு.

உ௨௪. அந்தரத்தீவினும் - இரண்டாயிரம் சிறுதீவுகளினும். அகன்பெருந்தீவினும் - நான்கு பெருந்தீவுகளினும்; மணி. ௬ : ௧௯௫ - ௬.

உ௨௫. பெயர் - புகழ்.

உ௨௨ - ௫. நின்னையீங்கழைத்தது உணர்த்தி நிறுத்தற்பொருட்டேயென்க.

(பி - ம்.) உ௧௧. 'ஆங்கவன்றன்னை' உ௧௨. 'கேட்குவை' உ௧௪. 'மன்னவன் வணங்கி' உ௧௪ - ௫. 'உடனுறனுன்னியது வாமணலகழத் தோன்றின' உ௧௭. 'தகைமைத்தாகி' உ௧௮. 'வேந்தவரிருக்கை' உ௧௯. 'கொளாக்கை' உ௨௪. 'அந்தரதீவின'

மாசற் றோமே யருளறம் பூண்டோர்
பொருளு முண்டோ பிறபுரை தீர்த்தற்
கறமெனப் படுவ தியாதெனக் கேட்பின்
மறவா திதுகேண் மன்னுயிர்க் கெல்லா
௨௩௰ முண்டியு முடையு முறையுளு மல்லது
கண்ட தில்லெனக் காவல னுரைக்கு
மென்னாட் டாயினும் பிறர்நாட் டாயினு
நன்னுத லுரைத்த நல்லறஞ் செய்கே
னென்பிறப் புணர்த்தி யென்னோ படைத்தனை
௨௩௫ நின்றிற நீங்க லாற்றேன் யானெனப்
புன்கண் கொள்ளனி போந்ததற் கிரங்கியின்
மன்பெரு நன்றுமி வாயெடுத் துரைக்கும்

௨௨௭. உலகத்திற் குற்றந்தீர்த்தற்குப் பொருளேயில்லை; எல்லா வுயிர்களும் குற்றமற்றனவாமென்றபடி. பிற: இடைச்சொல். புரை - குற்றம்.

௨௨௮ - ௯. இவ்வடிகளின்பொருள், 'மன்னவனெப்படி மன்னுயி ரப்படி' என்னும் பழமொழியின் பொருளை விளக்கிற்று.

௨௩௰. உண்டி முதலியவற்றையல்லாமல். உறையுள் - இருப்பிடம்; "பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர், தொகுத்தவற்று ளெல்லாந் தலை" (குறள், ௩௨௨); "உண்டி யுறையு [illegible]" [illegible]

௨௩௧. கண்டதில்லென - கண்டதில்லையென்று சொல்ல.

௨௨௯ - ௩௧. அறமெனப்படுவது, எல்லாவுயிர்கட்கும் உண்டி முதலியவற்றையீதலன்றி வேறு கண்டதில்லையென்று [illegible] சொல்ல; உண்டி முதலியவற்றை ஈதலே அறமென்றபடி.

௨௩௨. ஆயினும்: எண்ணிடைச்சொல். [செய்.

௨௩௩. நன்னுதல் உரைத்த - நீ சொல்லிய. செய்கேன் - செய்

௨௩௪. என்பிறப்பு உணர்த்தி - என்பழம்பிறப்பை அறிவித்து; பழம்பிறப்புணர்த்தல், நல்லறம் புரிதற்குரிய [illegible] காரணமாயிருந்ததுபற்றி, 'என்னோ படைத்தனை' என்றான். [illegible] "நாவலந்தீவின் மன்" (செய். ௨௩ : 'தொன்னாவல்') [illegible] போன்றது.

௨௩௫. [illegible] பிரியும் வன்மை யில்லேன் [illegible] என்ற சொல்ல.

௨௩௬. புன்கண் கொள்ளல் நீ - நீ துன்பத்தைக்கொள்ளாதே. போந்த[illegible] - நீ [illegible]

௨௩௭. [illegible]

[illegible]

(௫ - [illegible]) [illegible]

[illegible]

வங்கத் தேகுதி வஞ்சியுட் செல்வனென்
றந்தரத் தெழுந்தன ளணியிழை தானென்.

உ௫.—ஆபுத்திரனோடு மணிபல்லவமடைந்தகாதை முற்றிற்று.

உ௬அ. ஏகுதி - போவாய்.

உ௬௯. அந்தரத்து - ஆகாயத்தில். அணியிழை - மணிமேகலை.

க - உ௬௯. அரசன், புகுந்து வணங்கிக்கேட்டு, 'இவள் யார்' என்னக் கஞ்சுகன், 'ஈங்குவந்தனள்' என்றலும், 'இளங்கொடி, வருவாய்' என்று புகன்று எழுந்து இருந்து போகி வலங்கொண்டு பீடிகையைக் காண்டலும், அதனைத்தொழுது அவள் வலங்கொள்ள, அப்பீடிகை உணர்த்த, பணிந்து, 'போன்றது' என்று ஏத்தி வலங்கொண்டு இன்னணமாக, இறைவனும் விட்டுப் புக்குக் கேட்டு எய்தி நினைந்து கள்ளாட்டிகழ்ந்து சாற்றி, 'விளைந்தது' என்று கூற, மந்திரி சனமித்திரன், தொழுதேத்தி, 'மன்னவ, மதிமாறோர்ந்தனை' என்று முதுமொழி கூற, முதல்வன் கேட்டு, 'காத்தல் நின்கடன்' என்று கூறிக் கூஉய்க் கரையெய்தி ஏறினன்; அக்கலம், சென்று சார்ந்திறுத்தலும், பூங்கொடி, பொருந்தி மகிழ்வெய்தி வலஞ்செய்து, 'பீடிகை இது' எனக்காட்ட, மன்னவன் வலங்கொண்டு ஏத்தினன்; அவனுக்குப் பீடிகை பிறவியைக் காட்ட, மன்னவன், 'மறந்துவாழேன்' என்று ஏத்தி மணிமேகலையுடன் எழுந்து சென்று இருப்ப, தெய்வதம் கண்டு வந்தெய்தி, 'பெரியோய், வந்தனை; உடலென்பு இவைகாண்; என்புமிவைகாண்; காணாய்; கொன்றாய்; கொன்றாயாயினை. மடவரனல்லாய், நகர் கடல் வயிறு புக்கது; காரணங்கேளாய்; மணிமேகலா தெய்வம் சாபமிட்டனள்; இதுபட்டது; உலகமன்னவன் போயினன்; தாயரும் புக்கனர்; கேட்கிஉறுகுவையாயின், வஞ்சியுட் கேட்பை' என்று தெய்வம் போயபின், மன்னவன் இரங்கிப் படிவம் நோக்கி மயங்க, மணிமேகலை எழுந்து, 'கண்டது இல்' என, காவலன் உரைக்கும்; அங்ஙனம் உரைப்பவன், 'நீங்கலாற்றேன் யான்' என, அணியிழை, 'ஏகுதி; செல்வன்' என்று எழுந்தனளென வினைமுடிவு செய்க.

இருபத்தாறாவது

வஞ்சிமாநகர்புக்ககாதை.

[இருபத்தாறாவது மணிமேகலை கண்ணகிகோட்டமடைந்து வஞ்சிமாநகர் புக்கபாட்டு.]

அணியிழை யந்தர மாறா வெழுந்து
தணியாக் காதற் றாய்கண் ணகியையும்
கொடைகெழு தாதை கோவலன் றன்னையும்
கடவு ளெழுதிய படிமங் காணிய
வேட்கை துரப்பக் கோட்டம் புகுந்து
வணங்கி நின்று குணம்பல வேத்தி
யற்புக்கட னில்லாது நற்றவம் படராது
கற்புக்கடன் பூண்டு நுங்கடன் முடித்த

க. அணியிழை - மணிமேகலை.

உ. தணியா - குறையாத. தாய்கண்ணகி - தாயாகிய கண்ணகி.

ங. கொடைகெழுதாதை கோவலன் - ஈதல் பொருந்திய தாதையாகிய கோவலன்; கோவலன் கொடையிற் சிறந்தவனென்பது, கீரிப்பிள்ளையை அறியாது கொன்று கணவனால் நீப்புண்ட பார்ப்பனியின் கொலைப்பாவம் நீங்குதற்குத் தருமாசனத்தோருரைத்த நூல் வழியே தானஞ்செய்து அப்பார்ப்பனியைக் கணவனோடு கூட்டிப் பாதுகாத்தானென்றற்றொடக்கத்துச் சரித்திரங்களால் நன்கு புலப்படும்; இதனை, சிலப்பதிகாரத்திற் காண்க; கரு: ருச - எரு.

ச. (இமயமலைச்சிலையால்) தெய்வமாகப் பண்ணிய வடிவத்தைத் தரிசித்தற்பொருட்டு; "கைவினை முற்றிய தெய்வப் படிமத்து" (உஅ: உஉஅ) எனச் சிலப்பதிகாரத்து வந்திருத்தல் காண்க.

ரு. வேட்கை துரப்ப - ஆசைசெலுத்துதலால். கோட்டம் - கோயில்; இது சேரன் செங்குட்டுவனாற் கட்டுவிக்கப்பட்டது.

எ. 'அற்புக்கடன்' என்பது முதலியன மணிமேகலை கூற்று. அற்புக்கடன் - காதலனிறப்ப உடனிறத்தலும் தீப்பாய்தலும். நற்றவம் படர்தல் - நல்ல தவவழியிற் சேறல்; அஃதாவது கைம்மைநோன்பை நோற்று உடம்பை வருத்துதல்.

அ. கற்புக்கடன் பூண்டு - கற்பைக்கடனாக மேற்கொண்டு; "கற்புக்கடம் பூண்ட வித்தெய்வ மல்லது, பொற்புடைத் தெய்வம் யாங்கண்

(பி - ம்.) ச. 'படிவங்காணிய' ரு. 'கோட்டம்புக்கு' எ - அ. 'இல்லா வற்றவஞ்சிறக்கக் கற்புக்கடம்பூண்டு'

தருளல் வேண்டுமென் றழுதுமுன் னிற்ப
வொருபெரும் பத்தினிக் கடவுளாங் குரைப்போ
ளெம்மிறைக் குற்ற விடுக்கண் பொறாது
வெம்மையின் மதுரை வெவ்வழற் படுநாண்
மதுரா பதியெனு மாபெருந் தெய்வ
மிதுநீர் முன்செய் வினையின் பயனாற்
காசில் பூம்பொழிற் கலிங்கநன் னாட்டுத்

டிலமால்'' (சிலப். ௧௫ : ௧௪௩ - ௪) எனவும், "கற்புக்கடம் பூண்டு காதலன் பின்போந்த, பொற்றொடி நங்கைக்குத் தோழிநான் கண்டீர்'' (ஷை ௨௯: 'தற்பயந்தாள்') எனவும் கண்ணகியை முறையே கவுந்தியடிகளும் அடித்தோழியும் சிறப்பித்துப் பாராட்டியிருத்தல் காண்க. கண்ணகி கற்பை மறக்கற்பென்றும் சீறியகற்பென்றுங் கூறுவர். நும்கடன் முடித்தது - உம்முடைய கடனை நிறைவேற்றியது; என்றது, இங்கே மதுரையை அழற்படுத்திச் சிதைத்துப் பதினன்காம்நாளிற் கோவலனைச் சென்று கூடியதை யுணர்த்திற்று.

௭ - ௮. இவ்வடிகளின் கருத்து இன்னதாதலை, "காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி, யூதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்கா, தின்னுயி ரீவ ரீயா ராயி, னன்னீர்ப் பொய்கையி னளியெரி புகுவர், நளியெரி புகாஅ ராயி னன்பரோ, டுடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர், பத்தினிப் பெண்டிர்..................மாபெரும் பத்தினி'' (௨ : ௪௨ - ௫௫) என்று இந்நூலில் முன்பு வந்திருத்தலாலுணர்க.

௮ - ௯. அணியிழை எழுந்து புகுந்து வணங்கி நின்று ஏத்தி அருளல் வேண்டுமென்று அழுது நிற்பவென்க.

௧௦. பத்தினிக்கடவுள் - கண்ணகி.

௧௧. 'எம்மிறைக்கு' என்பது முதலியன, பத்தினிக்கடவுளாகிய கண்ணகி வார்த்தை. இறை - கோவலன். இடுக்கண் - துன்பம்; இங்கே கொலை.

௧௨. வெம்மையின் - கோபத்தால். மதுரை - மதுரையை. படுநாள் - படுத்தும்நாளில்; விகாரம்.

௧௩. மதுராபதியென்பது, மதுரையம்பதியின் அதிதேவதையின் பெயர்; "மதுரா பதியென்னு மாது'' (சிலப். ௨௨ : 'மாமகளும்') "மாபெருங் கூடன் மதுரா பதியென்பேன்'' ஷை ௨௩ : ௨௨.

௧௪. 'இதுநீர்' என்பது முதலியன, மதுராபதி தனக்குக் கூறியதைக் கொண்டுகூறும் பத்தினிக்கடவுள் வார்த்தை. வினை - தீவினை. பயன் - பிரயோசனம். இது பயன். ஆல்: அசை.

௧௫. காசு - குற்றம்.

(பி - ம்.) ௯. 'என்றெழுந்தனனிற்ப', 'என்றழுதனனிற்ப.' ௧௩-௪. 'தெய்வத, மதுநீர்செய்தவினை'

தாய மன்னவர் வசுவுங் குமரனுஞ்
சிங்க புரமுஞ் செழுநீர்க் கபிலையு
மங்கா ளின்றே ரடற்செரு வுறுநாண்
மூவிரு காவத முன்னுந ரின்றி
யாவரும் வழங்கா விடத்திற் பொருள்வேட்டுப்
பல்கலன் கொண்டு பலரறி யாம
லெல்வளை யாளோ டரிபுர மெய்திப்
பண்டக் கலம்பகர் சங்கமன் றன்னைக்
கண்டனர் கூறத் தையனின் கணவன்
பார்த்திபன் றொழில்செயும் பரத னென்னுந்
தீத்தொழி லாளன் றெற்றெனப் பற்றி
யொற்ற னிவனென வுரைத்து மன்னற்குக்
குற்றமி லோனைக் கொலைபுரிந் திட்டன
னங்கவன் மனைவி யழுதன ளரற்றி

---

௧௬. ஞாதியராகிய வசுவும் குமரனும். ௧௭. கபிலை - கபிலபுரம்.

௧௬ - ௭. சிங்கபுரம் வசுவுக்கும், கபிலை குமரனுக்கும் உரிய நக [ரங்கள்.

௧௮. ஆள்இன்றோர் : பெயர். நாள் - நாளில்.

௧௯. மூவிருகாவதம் - ஆறுகாதம். முன்னுநர் - முற்படுவோர் ; அணுகுபவருமாம்.

௨௦. வழங்கா - செல்லாத. வேட்டு - விரும்பி.

௨௧. கலன் - ஆபரணம்.

௨௨. எல்வளை - ஒளிபொருந்தியவளையையுடையாள் ; என்றது, நீலியை. அரிபுரம் - சிங்கபுரம்.

௨௩. பண்டக்கலம் - பொன்னாலாகிய அணிகலம் ; பண்டம் - பொன் ; பண்டமும் கலமுமாம் ; பண்டம் - சரக்கு. பகர் சங்கமன் றன்னை - விற்கும் சங்கமனென்னும் வணிகனை.

௨௪. தையல் : விளி.

௨௫. பார்த்திபனென்றது வசுவை. பரதனென்றது, கோவலனுடை பழம்பிறப்பிலுள்ள பெயர்.

௨௬. தெற்றென - விரைவாக.

௨௭. ஒற்றன் - வேய்த்து அறிபவன். மன்னர்க்கு உரைத்து.

௨௯. மனைவி - நீலியென்பவள். அழுது அரற்றி.

(பி - ம்.) ௧௭. 'செழுநீர்க்கபிலையும்' ௨௦. 'இடத்துப்பொருள்' ௨௨. 'எரிபுரமெய்தி' ௨௩. 'படைக்கலம்பகர்' ௨௪. 'கண்டவர்கூறத்தையலென்' ௨௭. 'உரைத்துமன்னவனாற்'

யென்மெய் பெயர்ப்போ னிருவரை யேறி
விட்ட சாபங் கட்டிய தாகு
மும்மை வினைவந் துருத்தொழி யாதென
மெய்ம்மைக் கிளவி விளம்பிய பின்றுஞ்
சீற்றங் கொண்டு செழுநகர் சிதைத்தேன்
மேற்செய்நல் வினையின் விண்ணவர்ச் சென்றே
மவ்வினை யிறுதியி னடுதீப் பாவ
மெவ்வகை யானு மெய்துத லொழியா
தாம்ப லில்வழி யிம்பரிற் பல்பிறப்
பியாங்கணு மிருவினை யுய்த்துமைப் போல
நீங்கரும் பிறவிக் கடலிடை நீந்திப்
பிறந்து மிறந்து முழல்வோம் பின்னர்
மறந்து மழைமறு மகதநன் னாட்டுக்

---

௨0. மெய்பெயர்ப்போன் - உயிர்விடுவோன். இருவரை - பெரிய மலை; "இருவரை யிவர்வதோ ரிலங்கெயிற் றரியென" சிந்தா. [illegible].

௨௧. கட்டியதாகும் - பலித்ததாகும்.

௨௨. உம்மைவினை - பழவினை. உருத்தல் - தோன்றுதல்; "[illegible] வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம்" (சிலப். பதி. ௫௫); "[illegible] முந்வினை யூட்டாது கழியாது" குறை. ரு. உ, உரை.

௨௩. கிளவி - சொல்.

௧௮ - ௨௩. மாபெருந்தெய்வம் விளம்பியபின்றுமென்க.

௧௯ - ௨௩. இச்சாபவரலாறு, "கடிபொழி லுடுத்த கலிங்கநன் னாட்டு, வடிவேற் றடக்கை வசுவுங் குமரனும், ...வழுவில் சாபம், பட்டனிர்" (சிலப். ௨௩ : ௧௩௪ - ௭0) என்று கண்ணகிக்கு மதுராபதித் தெய்வம் கூறியதாக இளங்கோவடிகள் கூறியிருத்தலாலும் [illegible]ப்படும்.

௨௪. நகர் - மதுரை.

௨௫. விண்ணவர்ச்சென்றேம் - கோவலனும் யானும் தேவராய்ச் சென்றேம்.

௨௬. அவ்வினை - மேற்செய்நல்வினை. அடுதீப்பாவம் - மதுரையை யழித்த கோபத்தாலுண்டான பாவம்.

௨௬ - ௭. பாவம் எய்துதலொழியாது.

௨௮. உம்பர் இல்வழி - தேவருலகத்தில் நல்வினை [illegible]

[illegible]

கொருபெருந் திலகமென் றுரவோ ருரைக்குங்
கரவரும் பெருமைக் கபிலையம் பதியி
னளப்பரும் பாரமிதை யளவின்று நிறைத்துத்
துளக்கமில் புத்த ஞாயிறு தோன்றிப்
போதி மூலம் பொருந்திவந் தருளித்
தீதறு நால்வகை வாய்மையுந் தெரிந்து
பன்னிரு சார்பின் பகுதித் தோற்றமு
மங்ஙிலை யெல்லா மழிவுறு வகையு
மிற்றென வியம்பிக் குற்றவீ டெய்தி

---

௪௩. திலகம் - மேலாதல். கபிலை இராசதானியாதலின், இங்ஙனம் கூறப்பட்டது.

௪௪. கரவு - மறைத்தல். கபிலையம்பதி - கபிலநகர் ; இது, கபில ரென்று பெயருள்ள ஒருமுனிவர் தவஞ்செய்தற்கு முன்னம் இடமாயிருந் ததுபற்றி இப்பெயர் பெற்றதென்பர் ; கபிலவஸ்துவெனவும் வழங்கும்.

௪௫. பாரமிதை - உடம்பு நேரவும் உறுப்பு நேரவும் பொருள் நேரவும் தானமுதல் ஞானமீறாகவுள்ள பத்தும் பூரித்தல் (மணி. உ௯ : உ௯); (௧) தானபாரமிதை, (௨) சீலபாரமிதை, (௩) க்ஷமாபாரமிதை, (௪) வீரியபாரமிதை, (௫) தியானபாரமிதை, (௬) ப்ரஜ்ஞாபாரமிதை, (௭) உபாயபாரமிதை, (௮) தயாபாரமிதை, (௯) பலபாரமிதை, (௧0) ஞானபாரமிதையென்பன. இவை தசபாரமிதையெனவும் தசாபார மெனவும் வழங்கும் ; இதனை, "தானஞ்சீ லம்பொறை தக்க தாய வீரிய, மூன மிலாறி யானமே புணர்ச்சியோ டுபாயமு, மானமில் லருளினை வைத்தலே வலிம்மையு, ஞான மீரைம் பாரமிதை நாடுங்கா லிவை களும்" (நீல மொக்கல. ௮௮), "இன்பஞ்சால் பெரும்பார மீரைந்து முடனிறைத்து, நன்கன நிலைபெற்ற நாதன்" (நீல. மொக்கல. ௮௮, ௧௰௰.), "தானமே முதலாகத் தசபார நிறைத்தருளி, யூனமொன் றில் லாமை யொழிவின்றி யியற்றினையே" (வீர. யாப்பு. ௧௧, உதாரணம்) என வருவனவற்றாலுணர்க. அளவின்று - அளவில்லாமல்.

௪௬. புத்தஞாயிறு - புத்தனாகிய ஞாயிறு.

௪௭. போதி - அரசமரம் ; என்றது மகாபோதியை.

௪௮. நால்வகைவாய்மை - துக்கமுதலியன.

௪௯. பன்னிருசார்பு - பேதைமைமுதலிய துவாதச நிதானங்கள்.

௫0. பன்னிருசார்பின் அழிவும்.

௪௯ - ௫0. "சார்பிற் றோற்றமுஞ் சார்பறுத் துய்தியும்" (உ௫ : ௫) என்று முன்பு வந்திருத்தல் காண்க.

௫௧. இற்று - இத்தன்மைத்து ; இதனைத் தோற்றத்தோடும் வகை யோடும் தனித்தனியே கூட்டுக. குற்றவீடெய்தி - காமம்முதலிய குற்றங் களினின்றும் விடுதல்பெற்று ; "குற்றவீ டாக மாதிக் குணங்களைக் குறைத்த லாகும்" சிவ - சித்தி. பரபக்கம், சௌத்திராந்திகன்மதம், ௬.

(பி - ம்.) ௪௪. 'கயிலையம்' ௪௫. 'அளவின்று நிறைந்து' ௪௭. 'பொதிந்துவந்தருளி'

பொங்கலருங் கங்க வாவ பொய்கை
மல்லல் அறக்கதிர் பிறங்குங் காலைப்
பைந்தொடி நங்கை படுகேள பகை
பிறந்த பிதாத பெருமொழிப் புறத்
றங்கப் பதியிற் றெற்றுத் தெய்தி
பம்புரு மனத்தொடு படைமாறுங் கோட்டத்
துறவி யுள்ளக் தோன்றித் தொடருங்
பிறவி நீத்த பெற்றிய ராகுவர்
மற்றிற மாயிழை மகேக காவ

௭௨. [illegible] - [illegible]. முன்பு புத்தன் [illegible] [illegible] ப்பெற்ற [illegible] [illegible] அப்பக்கம் [illegible] [illegible] செய்தார்.

௭௩ - ௭௪. மகத நாட்டுக் கபிலையம்பதியில் [illegible] [illegible] [illegible] பிறக்குங்காலமென்க.

௭௫. பைந்தொடி: முன்னிலைப்பெயர்.

௭௬. [illegible] - [illegible] [illegible] [illegible]; [illegible] காவிரிப்பூம்பட்டினத்துள்ளவை; [illegible] [illegible] [illegible] பொதுநாசமுற்றின் பொருளை [illegible] [illegible] [illegible] இடமாக இருப்பவை; இவை, "ப[illegible] [illegible] பாவைப் போற், பலிபெறு நெடுவேள் நிருமொழி, [illegible] [illegible] [illegible], [illegible] [illegible] [illegible] (சிலப். ௫௦ : ௧௧ - ௭) என்பதனாலறிக. [illegible] - [illegible]; [illegible], [illegible] காவிரிப்பூம்பட்டினத்துப் [illegible] பொருளை [illegible] [illegible] வழிபட்டாரென்பது பெறப்பட்டது.

௭௭. [illegible] - [illegible] செய்யும் இழிந்தபிறப்பு. [illegible] - [illegible]. 'இன்றி' என்றதனால், தந்நிமிர்பிறந்தல் [illegible] பட்டது.

௭௮. [illegible] - [illegible] செய்யும் நுமோபதேசமொழிகளை.

௭௯ - ௮. காவலிற் கேட்டென்க.

௮௦. [illegible] - [illegible]. உள்ளத்தே [illegible] தோன்றியென்க; "[illegible] [illegible]" (உ : ௫௦) என்ற இத்நூலின் முன்பு வந்த [illegible] [illegible]; [illegible] பெரியோரையாய், "[illegible]" என்றும் [illegible] [illegible] [illegible], '[illegible] [illegible] [illegible]' என்ற போர்வீ [illegible].

[illegible] - [illegible].

[illegible] [illegible], [illegible] [illegible] [illegible] [illegible]

[illegible]

மெத்திறத் தார்க்கு மிருத்தியுஞ் செய்குவ
நறைகமழ் கூந்த னங்கை நீயு
முறைமையி னிந்த மூதா ரகத்தே
யவ்வவர் சமயத் தறிபொருள் கேட்டு
மெய்வகை யின்மை நினக்கே விளங்கிய
பின்னர்ப் பெரியோன் பிடகநெறி கடவா
யின்னதிவ் வியல்பெனத் தாயெடுத் துரைத்தலு

சுக. இருத்தி - ஸித்தி.

சுஉ. ‘நறைகமழ்கூந்தல்’ என்பது முதலியவற்றுல் மணிமேகலைக்குப் பின்நிகழ்வன கூறுவாள்.

சுங. இந்தமூதூரென்றது வஞ்சிநகரத்தை.

சுரு. மெய்வகையின்மை - உண்மையில்லாமை.

சுசு. பெரியோன் பிடகநெறி - புத்தன் அருளிச்செய்த ஆகமங்களின் வழியை. புத்த தன்ம சங்கமென்னும் மூன்று மணிகளும் யாதோரிடையூறுமின்றி இருத்தற்குஇடமாய்க் கூடைபோலுதலின், பௌத்தாகமங்கள் பிடகமெனப் பட்டனவென்பர்; பிடகம் - கூடை. பிடகம், வினயபிடகம் ஸூத்திரபிடகம் அபிதர்மபிடகமென மூன்று வகைப்படும்; இவற்றைத் திரிபிடகமென்றும், பிடகத்திரயமென்றும் வழங்குவர்; இவற்றுள் முதலாவது வினயபிடகம், விபங்கம் கண்டகம் பரிவாரபாடமென மூன்று வகைப்படும். இவற்றுள், விபங்கம் பாராஜிகாதி பிரதமபாகமென்றும் (இது சங்கத்திலிருந்து விலக்குதற்குரிய குற்றங்களைக் கூறுவது), பிராயச்சித்தாதி துவிதீய பாகமென்றும் (இது பிராயச்சித்தத்தால் நிவிர்த்தித்தற்குரிய குற்றங்களைக் கூறுவது) இரண்டு பகுதியுடைத்து; கண்டகம், மஹாவர்க்கம் க்ஷூல்லவர்க்கமென இரண்டுபகுதியுடைத்து. இரண்டாவது ஸூத்திரபிடகம், தீர்க்கநிகாயம், மத்தியமநிகாயம், ஸம்யுக்த நிகாயம், அங்கோத்ரநிகாயம், க்ஷூத்திரக நிகாயமென ஐந்து வகையினையுடைத்து; [நிகாயம் - கூட்டம்.] இவற்றுள், க்ஷூத்திரக நிகாயம் க்ஷூத்திரகபாடம், தருமபதம், உதானம், இத்தியுக்தம், ஸூத்திரநிபாதம், விமானவஸ்து, பிரேதவஸ்து, ஸ்தேரகாதை, ஸ்தேரீகாதை (ஸ்தேரரென்றும், ஸ்தவிரரென்றும் உத்தம பிக்ஷூக்களுக்குப்பெயர்), ஜாதகம், நிர்த்தேசம், பிரதிஸம்பிதா மார்க்கம், அபதானம், புத்தவம்சம், சரியாபிடகமெனப் பதினைந்து பகுதியுடைத்து. மூன்றாவது அபிதர்மபிடகம் தருமசங்கினி, விபங்கம், கதாவஸ்துப்பிரகரணம், புத்கலப் பிரஜ்ஞப்தி, தாதுகதை, யமகம், பிரஸ்தானப் பிரகரணமென எழு வகையினையுடைத்து; “ஆத்த னேயெனத் தெளிந்தவ னமர்ந்திருந் தவர்க்குச், சூத்தி ரம்மிது வினயமு மிதுவிது பிறிதாஞ், சாத்தி ரம்மிவை மூன்றென வன்றவத் தோன்றல், பாத்து ரைக்குந்தன் பதப்பொருள் பலவகைப் படவே” நீல. புத்த. கரு.

சுஎ. தாய் - கண்ணகியாகிய பத்தினிக்கடவுள்.

(பி - ம்.) சுக. ‘இத்திறத்தார்க்கு’ சுரு - சுசு. ‘விளங்கிப்பின்னர்ப் பெரியான்’

பிணையல் வளையோ னென்றவனக் கியாவரும்
வினைபொரு ளுரையார் வேற்றுருக் கொண்டெனை
மையறு சிறப்பிற் றெய்வதந் தந்த
மந்திர மோதியோர் மாதவன் வடிவாய்த்
தேவ குலமுந் தெற்றியும் பள்ளியும்
பூமலர்ப் பொழிலும் பொய்கையு மிடைந்து
நற்றவ முனிவருங் கற்றடங் கினரு
நன்னெறி காணிய தொன்னூற் புலவரு
மெங்கணும் விளங்கிய வெயிற்புற விருக்கையிற்
செங்குட் டுவனெனுஞ் செங்கோல் வேந்தன்
பூத்த வஞ்சி பூவா வஞ்சியிற்
போர்த்தொழிற் றானை குஞ்சியிற் புனைய

இனி, மணிமேகலை வேற்றுருக்கொண்டு வஞ்சிநகரத்துள்ளே செல்லுதல் கூறப்படும்.

௬௮ - ௯. மணி. ௧௦ : ௭௧ - ௮௦.

௭௦. தெய்வதம் - மணிமேகலாதெய்வம்.

௭௧. மந்திரம் - வேற்றுருவெய்துவிக்கும் மந்திரம்.

௭௨. குலம் - கோயில்; "தேவகுலநிழல்" (ஆசார. ௩௨.) தெற்றி - வேதிகை; திண்ணையுமாம். பள்ளி - சாலை; "நெருக்கின் றிணிமனைப் புறப்பூம் பள்ளி" புறநா. ௩௩.

௭௩. மிடைந்து - நெருங்கி. ௭௫. காணிய - கண்ட.

௭௨ - ௬. தேவகுலம் முதலியன மிடைந்து முனிவர் முதலியோர் எங்கணும் விளங்கிய இருக்கையென்க.

௭௭. செங்குட்டுவன் - சேரன்; இவன் இளங்கோவடிகளின் றமையன்; கண்ணகியின்படிவத்தைப் பிரதிட்டிப்பித்தோன்.

௭௮. பூத்தவஞ்சி - வஞ்சிமலர்; பகைவர் நாட்டைக் கொள்ள [illegible] போர்செய்தற்கு அவர்மேற்செல்வோர் அதற்கு அறிகுறியாக அணிந்துகொள்வது; இது முதலுக்கேற்ற அடையடுத்து நின்றது. பூவா வஞ்சி - வஞ்சிநகர்; வெளிப்படை; இந்நகரை வாடாவஞ்சி யென்றுங் கூறுவர்; "பூவா வஞ்சியிற் பூத்த வஞ்சி, வாய்வா ளனேந்தலை [illegible] [illegible] [illegible]" (௨௬ : ௫௦ - ௫௧) எனச் சிலப்பதிகாரத்துங் [illegible] [illegible].

[illegible] - ௯. இருக்கையினையுடைய பூவா வஞ்சியென்க.

[illegible]. தானை - சேனை. குஞ்சி - குடுமி.

[illegible] - [illegible]. பூவாவஞ்சியிற் பூத்தவஞ்சியைத் தானை குஞ்சியிற்புனைய [illegible].

(பி - ம்.) [illegible]. '[illegible]' [illegible]. 'வேற்றுருக் கொண்டென' [illegible] [illegible]; [illegible]. 'பூவாவஞ்சியிற் பூத்தவஞ்சி' [illegible].

நிலநா டெல்லைதன் மலைநா டென்னக்
கைம்மலைக் களிற்றினந் தம்முண் மயங்கத்
தேரு மாவுஞ் செறிகழன் மறவருங்
கார்மயங்கு கடலிற் கலிகொளக் கடைஇக்
கங்கையம் பேர்யாற் றடைகரைத் தங்கி
வங்க நாவியி னதன்வடக் கிழிந்து
கனக விசயர் முதற்பல வேந்த
ரனைவரை வென்றவ ரம்பொன் முடிமிசைச்
சிமைய மோங்கிய விமைய மால்வரைத்
தெய்வக் கல்லுந் தன்றிரு முடிமிசைச்
செய்பொன் வாகையுஞ் சேர்த்திய சேரன்

அக. கையையுடைய மலைபோலுங் களிற்றினம். மயங்க - கலக்க.

அ0 - அக. மலைநாடென்று சொல்லும்வண்ணம் களிற்றினங்கள் மயங்க வென்க; செல்லும் நெறிக்கணுள்ள நாடுகள், யானைகளின் மிகுதியால் மலைநாடென்று சொல்லப்பட்டன.

அ௩. கலிகொள - முழங்க. கடைஇ - செலுத்தி.

அ௫. நாவி - மரக்கலவிசேடம்; இம்மொழி மலைநாட்டில் வழங்குகின்றது. வங்கநாவி: இருபெயரொட்டுப் பண்புத்தொகை. இழிந்து - இறங்கி.

அ௬. கனகவிசயர் - கனகனும் விசயனும்; இவர் ஆரியவரசர். பலவேந்தர் - உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன் முதலியோர்; இதனை, சிலப்பதிகாரம், உ௬ - ஆம் காதை, க௮உ - ஆம் அடி முதலியவற்றிற்காண்க.

அ௭. அனைவரைவென்று - எல்லோரையும்வென்று; உம்மை விகார வகையால் தொக்கது. அவரென்றது கனகவிசயரை.

அஅ. சிமையம் - உச்சி.

அகூ. தெய்வக்கல் - பத்தினிக்கடவுளாகிய கண்ணகிவடிவம் அமைத்தற்குரிய கல்.

கூ0. வாகை - வாகைமலர்; பகைவரை வென்றோர் வென்றதற்கு அறிகுறியாக அணிந்துகொள்ளுவது; அரசர் அம்மலரைப் பொன்னாற் செய்து அணிந்துகொள்ளுதல் இயல்பாதலின், 'செய்பொன்வாகை' என்றார்; "பொலந்தோட்டுப் பைந்தும்பை" (உஉ) எனவும், "பொலந் தும்பை" (கூ௭) எனவும் புறநானூற்றிற் கூறியிருத்தல் காண்க.

அ௭ - கூ0. அவர் முடிமிசைக் கல்லும் தன் முடிமிசை வாகையுஞ் சேர்த்திய சேரனென இயைக்க.

எகூ - கூ0. புனைய மயங்கக் கலிகொளக் கடைஇத் தங்கி இழிந்து வென்று சேர்த்திய சேரனென்க.

(பி - ம்.) அ௪. 'கங்கைப் பேரியாற்றடை' அ௫. 'வங்கநாவாயி தன் வடகிழக்கிழிந்து' அ௬. 'முதற்சின வேந்தர்' கூ0. 'செம்பொன்'

விற்றிறல் வெய்யோன் றன்புகழ் விளங்கப்
பொற்கொடிப் பெயர்ப்படூஉம் பொன்னகர்ப் பொலிந்தன
டிருந்துநல் லேது முதிர்ந்துள தாதலிற்
பொருந்துநால் வாய்மையும் புலப்படுத் தற்கென்.

உ௬.—வஞ்சிமாநகர் புக்ககாதை முற்றிற்று.

சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்று ஆரியவரசரை வென்று கற்கொண்டுமீண்ட வரலாற்றை, சிலப்பதிகாரம், கால்கோட்காதை முத லியவற்றுல் உணர்க.

௯௧. விற்றிறல்வெய்யோன் - வில்வலியை விரும்பினோன்; "வெம் முனை வெற்றி விறல்வெய்யோன்" பு - வெ. ௬௮.

௭௭ - ௯௧. வேந்தன் சேரன் வெய்யோன்; அவன்றன்புகழெனக.

௯௨. பொற்கொடி - அழகியகொடி; என்றது வஞ்சிக்கொடியை. நகர் - வஞ்சி; "பூங்கொடிப் பெயர்ப்படூஉந், திருந்திய நன்னகர்" (உ௮ : ௧0௧ - உ) என்று பின்வருதல் காண்க.

௯௧ - ௨. விளங்கப் பொலிந்தனள்.

௯௩. நல்லேது - நல்வினையாகிய காரணம்.

௯௨ - ௩. ஆதலிற் பொலிந்தனள்.

௯௪. நால்வாய்மை - நான்குவகைப்பட்ட சத்தியம்; அவை துக் கம் முதலியன; அவற்றை ஸத்திய சதுஷ்டயமென்பர்.

௯௨ - ௪. புலப்படுத்தற்குப் பொலிந்தனளென்க.

௧ - ௯௪. அணியிழை, எழுந்து புகுந்து நின்று ஏத்தி, 'அருளல் வேண்டும்' என்று அழுதுநிற்ப, பத்தினிக்கடவுள் உரைப்பாள்; அங் ஙனமுரைப்பவளாகிய தாய், 'இன்னதிவ்வியல்பு' என எடுத்துரைத்த லும், மணிமேகலை ஓதி வடிவாய்ப் பொன்னகர்ப் பொலிந்தனளென வினை முடிவு செய்க.

(பி - ம்.) ௯௨. 'கொடிபெயர்ப்' ௯௩. 'திருந்தநல்லேது' ௯௪. 'நல்வாய்மை'

இருபத்தேழாவது

சமயக்கணக்கர்தந்திறங்கேட்டகாதை.

[இருபத்தேழாவது வஞ்சிமாநகர்ப்புறத்துச் சமயக்கணக்கர்தந் திறங்கேட்டபாட்டு.]

நவையறு நன்பொரு ளுரைமி னோவெனச்
சமயக் கணக்கர் தந்திறஞ் சார்ந்து
வைதிக மார்க்கத் தளவை வாதியை
யெய்தின ளெய்திநின் கடைப்பிடி யியம்பென
வேத வியாதனுங் கிருத கோடியு
மேதமில் சைமினி யெனுமிவ் வாசிரியர்
பத்து மெட்டு மாறும் பண்புறத்
தத்தம் வகையாற் றாம்பகர்ந் திட்டனர்
காண்டல் கருத லுவம மாகம
மாண்டைய வருத்தா பத்தி யோடியல்

க. நவை - குற்றம். பொருள் - தத்துவம்.

உ. சமயக்கணக்கர் - சமயநூலுணர்ந்தவர். வாதிகள். திறம் - தொகுதி; இடமுமாம்.

க - உ. மணி. பதி. அஎ - அ. உரைமினோவெனச்சார்ந்து.

ங. அளவைவாதி - பிரமாணவாதி.

ச. கடைப்பிடி - சித்தாந்தம். இயம்பென - சொல்லென்று மணிமேகலை வினவ.

ங - ச. அளவைவாதியை எய்தி இயம்பென.

ரு. 'வேதவியாதனும்' என்பது முதலியன அளவை வாதியின் [வார்த்தை.

சா. ஏதம் - குற்றம்.

ரு - அ. வேதவியாதன் பத்தளவையும் கிருதகோடி எட்டளவையும் சைமினி ஆறளவையும் பகர்ந்திட்டனரென்க.

கூ. 'காண்டல்' என்பது முதலியவற்றால் பத்தளவைகளின் பெயரும், அவற்றினிலக்கணமுங் கூறப்படும். காண்டல் - பிரத்தியக்கம். கருதல் - அனுமானம்; இது கருத்தெனவும் வழங்கும்.

க0. இயல்பு - ஸ்வபாவலிங்கம்.

(பி - ம்.) ங. 'அளவையாதியை' அ. 'பகிர்ந்திட்டனர்' கூ. 'காண்டல்கருத்தே' க0. 'ஆண்டவருத்தாபத்தியோடியையு'

ஐதிக மபாவ மீட்சி யொழிவறி
வெய்தியுண் டாநெறி யென்றிவை தம்மாற்
பொருளி னுண்மை புலங்கொளல் வேண்டு
மருளில் காட்சி யைவகை யாகுங்
கண்ணால் வண்ணமுஞ் செவியா லோசையு
நண்ணிய மூக்கா னாற்றமு நாவாற்
சுவையு மெய்யா லூறுமெனச் சொன்ன
வினையிவை கண்டுகேட் டுயிர்த்துண் டுற்றுத்
துக்கமுஞ் சுகமு மெனத்துயக் கறவறிந்
துயிரும் வாயிலு மனமுமூ றின்றிப்
பயிலொளி யொடுபொரு ளிடம்பழு தின்றிச்
சுட்ட றிரிதல் கவர்கோட லின்றாது
கிட்டிய தேச நாம சாதி
குணக்கிரி யையி னறிவ தாகுங்
கருத்தள வாவது

---

௧௧. ஐதிகம் - ஐதிஹ்யம். அபாவம் - இன்மை. மீட்சியொழிவறிவு - மீட்சியினால் ஒழிந்த பொருளையறியுமளவை; என்றது பாரிசேடத்தை.

௧௨. உண்டாநெறி - சம்பவம். இவை தம்மால் - காண்டல் முதலிய இந்தப்பத்துப் பிரமாணங்களாலே.

௧௩. புலங்கொளல் - அறிதல்.

௧௪. 'மருளில்' என்பது முதலாகக் காட்சியளவையின் இலக்கணம் கூறப்படும். மருள் - மயக்கம். காட்சி - பிரத்தியக்கப் பிரமாணம்.

௧௯. துயக்கு - தடை.

௨௦. வாயில் - இந்திரியம். ஊறு - இடையூறு.

௨௧. ஒளி - சோமசூரியாக்கினிகள்.

௨௨. சுட்டல் - பொருளுண்மை மாத்திரை காண்டல். திரிதல் - ஒன்றை மற்றொன்றாகக் கருதல்; இது விபரீதமெனப்படும். கவர்கோடல் - சந்தேகம்; "கண்ட பொருளை யிரட்டுறவே கருத லையந் திரியவே, கொண்ட திரிவாம்" சிவ - சித்தி. சுபக்கம், அளவை. ௩.

௨௫. 'கருத்தளவு' என்பது முதல் அனுமானப்பிரமாணம் கூறப்படும்; கருத்தளவு - அனுமானப்பிரமாணம்.

(பி - ம்.) ௧௧. 'மீட்சிமொழி' ௧௨ - ௩. 'உண்டானெறியென்றிவை தம்மாற்போ பொருளினுண்மையுளங்' ௧௫-௬. 'ஓசையு, மூக்கானாற்றமு நாக்காற்சுவையும்' ௧௮ - ௯. 'உண்டுயிர்த்துற்றுத், துக்க சுகமெனத் துயத்தறவறிந்து' ௨௦ - ௨௧. 'மனமுமூன்றிப், பயிலொழியொடும் பொருள்'

குறிக்கொ ளளவமா னத்தது மேயந்
தகைமை யுணருந் தன்மைய தாகு
மூவகை யுற்றது பொதுவெச்ச முதலாம்
பொதுவெனப் படுவது சாதன சாத்திய
மிவையந் நுவய மின்றி யிருந்துங்
கடந்திகழ் யானைக் கானவொலி கேட்டோ
னுடங்கெழில் யானையங் குண்டென வுணர்த
லெச்ச மென்பது வெள்ளவே றாவினு
னிச்சயித் தத்தலை மழைநிகழ் வுரைத்தன்
முதலென மொழிவது கருக்கொண் முகில்கண்
டிதுமழை பெய்யு மெனவியம் பிடுத

உஎ. அநுமானத்து - அநுமானத்தால்; "அநுமானமாவது: சாத்தியத்தையொழியச் சம்பவியாததாகிய சாதனத்தாற் சாத்தியத்தைப் பற்றிப் பிறக்கும் ஞானமாகும்" (நீல. தரும. செய். ௬உ, சமய.) அநுமேயம் - அநுமித்து உணரப்படுவது.

உஅ. அது - அவ்வநுமானவளவை; அது பொதுவெனவும், எச்சமெனவும், முதலெனவும் மூன்று வகைப்படும்.

உ௯. சாதனம் - ஏது. சாத்தியம் - துணிபொருள்.

௩௦. இவை - இவற்றிற்கு. அந்நுவயம் - சேர்க்கை; அஃதாவது நியதமான உடனிகழ்ச்சி.

௩௧. கடம் - மதம். கானம் - காடு. ௩௨. உடங்கு - உடனே.

உ௯ - ௩௨. பொதுவெனப்படுவது உணர்தலென்க. பொதுவைச் சாமானியாநுமானமென்பர்.

௩௩ - ௪. வெள்ள ஏறாவினுல் - வெள்ளமாகிய சாதனத்தால். அத்தலை - அவ்விடம். எச்சமென்பது வெள்ளவேறாவினுல் அத்தலை மழைநிகழ்வு நிச்சயித்துரைத்தல். இதனைச் சேஷாநுமானமெனவும் காரியாநுமானமெனவும் கூறுவர்.

௩௫. கரு - சூல். முகில் - மேகம். ௩௬. இது - இம்மேகம்.

௩௫ - எ. முதலென மொழிவது சூற்கொண்ட மேகத்தைக்கண்டு இது மழை பெய்யுமென்று நிச்சயித்தல். இதனைக் காரணாநுமானமெனவும், பூர்வாநுமானமெனவும் கூறுவர். இது, வரற்பாலதை முன்னமே அறிவிப்பது.

௩௩ - எ. இவ்வடிகளிற் கூறப்பட்டுள்ள அநுமானங்களை, "இடித்து மின்னி யிருண்டு மேக மெழுந்த போதிது பெய்யுமென், றடித்த டம்மில் சந்த முந்தி யலைத்து வார்புன லாறுகொண், டெடுத்து வந்திட மால்வரைக்க ணிருந்து கொண்டல் சொரிந்ததென்று, முடித்[illegible] [illegible] காட்டியன்றநு மானமென்று மொழிந்திடே" (சிவ - [illegible]. பரபக்கம், உலோகாயதன்மதமறுத்தல், உ) என்பதனாலுமுணர்க.

(பி - ம்.) உஎ. 'குறிகொள்' ௩௦. '[illegible]'

லென்னு மேதுவி னென்றமுக் காலந்
தன்னி லொன்றிற் சார்ந்துள தாகி
மாண்ட வுயிர்முதன் மாசின் றாகிக்
காண்டற் பொருளாற் கண்டில துணர்த
லுவம மாவ தொப்புமை யளவை
கவய மாவாப் போலுமெனக் கருத
லாகம வளவை யறிவ னூலாற்
போக புவன முண்டெனப் புலங்கொள
லருத்தா பத்தி யாய்க்குடி கங்கை
யிருக்கு மென்றாற் கரையிலென் றெண்ண
லியல்பி யானைமே லிருந்தோன் றோட்டிக்
கயலொன் றீயா ததுவே கொடுத்த

---

௩௮. தன் : பன்மையொருமை மயக்கம்.

௩௯. உயிர்முதல் - உயிரும் இந்திரியமும் மனமும்; "உயிரும் வாயிலு மனமுமூ றின்றி" (௨௭ : ௨௦) என்றார் முன்னும்.

உவமவளவை:—

௪௨. கவயமா - ஒருவகைமிருகம். ஆப்போலும்-பசுவையொக்கும்.

௪௧ - ௨. "கண்ணன் கருமுகில்போல் வண்ணனெனக் கேட்டவனைக், கண்ணுமுணர் வொப்பெனவே காண்" என்றும் வரும்.

ஆகமவளவை:—

௪௩. அறிவனூல் - ஆப்தன் வாக்கியமாகிய நூல்.

௪௪. போகபுவனம் - சுவர்க்கநரகங்கள். புலங்கொளல் - அறிதல்.

௪௩ - ௪. ஆகமவளவையாவது புலங்கொளலென்க. இதனைச் சாத்தமென்றும், உரையளவையென்றும் கூறுவர்.

அருத்தாபத்தியளவை:—

௪௫. ஆய்க்குடி - இடைச்சேரி.

௪௫ - ௬. இது பொருளளவையென்றும் கூறப்படும்; "அடுத்துல கோதும்பொருளருத் தாபத்தி யாமதுதா, னெடுத்த மொழியினஞ் செப்புவ தாகுமிவ் வூரிலுளர், படைத்தவ ரென்னிற் படையா தவருமுண் டென்றுமிவன், கொடுப்பவ னென்னிற் கொடாதாரு முண்டென்றுங் கொள்வதுவே" என்றும் வரும்.

இயல்பளவை:—

௪௭. இருந்தோன் ஒன்றுதாவெனிலென வருவித்துக் கொள்க. தோட்டி - அங்குசம்.

௪௭ - ௮. "மாமே லிருந்தொரு கோறா வெனிற்சுள்ளிக் கோறரலுஞ், சோமே லிருந்தொரு கோறா வெனிற்றர லேதுணிந்து, பூமேவு

(பி - ம்.) ௪௭. 'இயைபிலியானை'

ஐதிக மென்ப துலகுரை யிம்மரத்
தெய்திய தோர்பே யுண்டெனத் தெளித
லபாவ மென்ப தின்மையோர் பொருளைத்
தவாதவ் விடத்துத் தானிலை யென்றன்
மீட்சி யென்ப திராமன்வென் றனென
மாட்சியி லிராவணன் றோற்றமை மதித்த
லுள்ளநெறி யென்பது நாராசத் திரிவிற்
கொள்ளத் தகுவது காந்தமெனக் கூற

கண்ணெழுத் தங்கோல் கொடுத்தலும் பூதலத்தே, நாமே வியல்பென்று கூறுவர் நல்லசொன் னாவலரே" என்றும்வரும்; சோ - மதில்.

ஐதிகவளவை:—

௪௯. உலகுரை - உலோகவாதம்; அஃதாவது, கர்ணபரம்பரையால் வரும்வாக்கியம்.

௪௯ - ௫௦. "கொன்பயில் வேலைக் கடல்புடை சூழுங் குவலயத்தோ, ரன்புட னாலி லலகையுண் டென்பர்க ளென்பதுவு, மின்பயில் புற்றில் விடநாக முண்டென்ப ரென்பதுவு, மென்பர்க ளாவல ரென்பது மைதிக மென்பர்களே" என்றும் வரும்.

அபாவவளவை:—

௫௧ - ௨. அபாவமாவது இன்மையாகும்; அஃது ஒருபொருளை இல்லையென்பது.

மீட்சியளவை:—

௫௪. மாட்சிஇல் - பெருமையில்லாத.

௫௩ - ௪. இஃது ஒழிபெனவும் பாரிசேடமெனவும் கூறப்படும்; "சீரா ரொழிபென்று செப்பப் படுவது திண்புவிமேற், போராடி நின்று பொருதா ரிருவர்தம் போர்க்களத்துப், பாரா ரிராகவன் வென்றா னெனிற்றன் பரிசழிந்து, நேரா மிராவணன் றோற்றசொல் லாகி நிகழ்வதுவே" என்றும் வரும். மூன்று பெயரிலே இருவரைக் கள்வரல்ல ரென்றால் நின்றவொருவனைக் கள்வனென்றறிகையுமது.

சம்பவவளவை:—

௫௫. நாராசத்திரிவின் - இருப்புச்சலாகையின் சலனத்தால்.

௫௫ - ௬. உள்ளநெறியெனினும், உண்டாநெறியெனினும், சம்பவமெனினுமொக்கும்; "துயக்கற வுண்மை யெனநா வலர்க ணிந்துரைப்ப, தியற்கைப் பொருளினை யிற்றென லாமிது தானுரைக்கின், வியக்குற்ற கால்சலிக் குந்தீச் சுடும்விய னீர்குளிரும், வயக்குற்ற மண்வலி தென்றுபட் டாங்கு வழங்குவதே" என்றும்வரும்; ஆயிரத்தில் நூறுண்டென்பதும், நூற்றிலே தொண்ணூறுண்டென்பதுமது.

மேல் உவமைமுதலிய அளவைகளுக்குக் காட்டிப்போந்த "கண்ணன் கருமுகில்போல்" என்றற்றொடக்கத்துச் செய்யுட்கள், சிவஞானசித்தியார், சுபக்கம், அளவை இலக்கணத்திற்கு மறைஞானதேசிகர் எழுதிய உரையிற்காணப்பட்டன.

லெட்டுள பிரமா ணுபா சங்கள்
சுட்டுணர் வொடுதிரி யக்கோட லையந்
தேராது தெளிதல் கண்டுணா ராமை
யெய்தா மில்வழக் குணர்ந்ததை யுணர்த
னினைப்பென நிகழ்வசுட் டுணர்வெனப் படுவ
தெனைப்பொரு ளுண்மை மாத்திரை காண்ட
றிரியக் கோட லொன்றையொன் றென்றல்
விரிகதி ரிப்பியை வெள்ளியென் றுணர்த
லைய மென்ப தொன்றைநிச் சயியா
மையற் றறியோ மகனோ வென்ற
றேராது தெளிதல் செண்டு வெளியி
லோராது தறியை மகனென வுணர்தல்
கண்டுணா ராமை கடுமாப் புலியொன்
றண்டலை முதலிய கண்டுமறி யாமை
யில்வழக் கென்பது முயற்கோ டொப்பன
சொல்லின்மாத் திரத்தாற் கருத்திற் றோன்ற
லுணர்ந்ததை யுணர்த லுறுபனிக் குத்தீப்
புணர்ந்திடன் மருந்தெனப் புலங்கொள நினைத்த
னினைப்பெனப் படுவது காரண நிகழாது
நினக்கிவர் தாயுந் தந்தையு மென்றூஉ
பிறர்சொலக் கருதலிப் பெற்றிய வளவைகள்

இதுகாறும் காட்சிமுதலிய அளவைகள் பத்தும் அவற்றினிலக்கணங்களும் முறையே கூறப்பட்டன.

இனி, சுட்டுணர்வு முதலிய பிரமாணுபாசங்களெட்டும் அவற்றினிலக்கணங்களும் முறையே கூறப்படும்.

பிரமாணுபாசங்கள் எட்டு:—

௫எ. பிரமாணுபாசங்கள் - பிரமாணப்போலிகள்.

௬௨. எனைப்பொருள் - எல்லாப்பொருள். ௬௪. இப்பி - சிப்பி.

௬௬. மையல் - மயக்கம். தறி - கட்டை.

௬எ. செண்டுவெளி - ஒருவகை முற்றம்.

௬அ. ஓராது - உணராது.

௬௯. கடுமாவாகிய புலி; கடுமை - சினம். கண்டுணராமையை உபேட்சாத்மக ஞானமென்பர்.

எ௦. அண்டலை; ஐ : சாரியை. எ௧. கோடு - கொம்பு.

எ௪. மருந்து - பரிகாரம்.

எஎ. இப்பெற்றிய - இத்தன்மையையுடையன; முற்று.

(பி - ம்.) ௬௫. 'நிச்சயியாது' ௬௯. 'கடுமெருப்புலியிலோர்ந்து'

பாங்குறு முலோகா யதமே பௌத்தஞ்
சாங்கிய நையா யிகம்வை சேடிக
மீமாஞ் சகமாஞ் சமயவா சிரியர்
தாம்பிரு கற்பதி சினனே கபில
னக்க பாதன் கணாதன் சைமினி
மெய்ப்பிரத் தியமனு மானஞ் சாத்த
முவமான மருத்தா பத்தி யபாவ
மிவையே யிப்போ தியன்றுள வளவைக
ளென்றவன் றன்னைவிட் டிறைவ னீசனென
நின்ற சைவ வாதிநேர் படுதலும்
பரசுநின் றெய்வ மெப்படித் தென்ன
விருசுட ரோடிய மானனைம் பூதமென்
றெட்டு வகையு முயிரும்யாக் கையுமாய்க்

---

௭௮. பாங்கு - பகுதி. ௮௧. சினன் - புத்தன்.

௮௨. அக்கபாதன் - அக்ஷபாத முனிவர்; இவருக்குக் கௌதம முனிவரென்றும் பெயருண்டு. கணாதனென்பதற்கு நொய்யைப் புசிப்பவனென்று பொருள்; கணம் - நொய்; இவர் இக்காரணத்தாற் கணசனரென்றும் பெயர் பெறுவர்.

௮௩. பிரத்தியம் - பிரத்தியக்கம். சாத்தம் - ஆகமம்.

௭௮ - ௮௫. உலோகாயதம் முதலிய அறுவகைச் சமயங்கட்கும் முறையே பிருகஸ்பதிமுதலிய அறுவரும் ஆசிரியரெனவும், மேற்கூறிய பத்தளவைகளுள் அவர்களாற் கைக்கொள்ளப்பட்டு இப்பொழுது வழங்கும் அளவைகள் பிரத்தியக்கமுதல் அபாவமிறுதியாகிய ஆறுமேயெனவுங் கொள்க. உலோகாயதம் முதலிய அறுவகைச்சமயங்களுள், உலோகாயதத்திற்குப் பிரத்தியக்கமொன்றும், பௌத்தத்திற்குப் பிரத்தியக்கத்தோடு அனுமானமும், சாங்கியத்திற்கு அவ்விரண்டனோடு ஆகமும், நையாயிகத்திற்கு அம்மூன்றனோடு உவமானமும், வைசேடிகத்திற்கு அந்நான்கனோடு அருத்தாபத்தியும், மீமாஞ்சகத்திற்கு அவ்வைந்தனோடு அபாவமும் பிரமாணமாமெனக் கொள்க.

௮௬. என்றவன் - அளவைவாதி.

சைவவாதம் :—

௮௬. இறைவன் - எப்பொருளினுந் தங்குகின்றகடவுள்; இறை - தங்குதல்.

௮௭. துதிக்கப்படும் நினதுதெய்வம் எத்தன்மையையுடையதென்று மணிமேகலை வினவ.

௮௮. இருசுடர் - சந்திரசூரியர். இயமானன் - யாகத்தலைவன்.

கட்டிநிற் போனுங் கலையுருவி னோனும்
படைத்துவிளை யாடும் பண்பி னோனுந்
துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனுந்
தன்னில் வேறு தானொன் றிலோனு
மன்னே யிறைவ னாகுமென் றுரைத்தனன்
பேருல கெல்லாம் பிரம வாதியோர்
தேவ னிட்ட முட்டை யென்றனன்
காதல் கொண்டு கடல்வணன் புராண
மோதினன் நாரணன் காப்பென் றுரைத்தனன்
கற்பங் கைசந் தங்கா லெண்கண்
டெற்றெ னிருத்தஞ் செவிசிக் கைமூக்
குற்ற வியாகர ணமுகம் பெற்றுச்

---

௯௧. கலையுருவினோன் - கலைகளை உருவாகவுடையவன்; "ஐயா றதன்மிசை யெட்டுத் தலையிட்ட, மையில் வான்கலை மெய்யுடன் பொருந்தி" என்றார்; திருச்சிற். ௧, பேர்.

௯௩. துடைத்து - சங்கரித்து. துயர்தீர்தோற்றத்தோன் - உயிர்களது இளைப்பொழிக்கும் பெருமையையுடையவன்.

பிரமவாதம்:—

௯௬ - ௭. உலகெல்லாம் ஒரு தேவனிட்ட முட்டையென்று பிரமவாதி கூறினன்.

வைணவவாதம்:—

௯௮. கடல்வணன் - திருமால். புராணம் - பழமை.

௯௯. ஓதினன் - வைணவவாதி.

வேதவாதம்:—

௱. 'கற்பம்' என்பது முதல் வேதவாதி கூற்று. சந்தம் - சந்தோவிசிதி. எண் - சோதிடம்.

௱௧. நிருத்தம் - நிருக்தம். சிக்கை - சிக்ஷை.

௱ - ௱௨. கற்பம் சந்தோவிசிதி சோதிடம் நிருத்தம் சிக்ஷை வியாகரணம் என்னுமிவ்வாறும் முறையே வேதத்திற்குக் கை கால் கண் செவி மூக்கு முகம் என்னும் உறுப்புக்களாகவுள்ளன; இதனை, "முகம் வ்யாகரணந் தஸ்ய ஜ்யோதிஷந் நேத்ர முச்யதே, நிருக்தம் ச்ரோத்ர முத்திஷ்டஞ் சந்தஸாம்விசிதிஃபதே, சிக்ஷாக்ராணந்து வேதஸ்ய ஹஸ்தௌ கல்பாந்ப்ரசக்ஷதே" என்னும் சுலோகத்தாலுமறிந்து கொள்க; [illegible] பாணினிவியாகரணத்தைச் சார்ந்ததும், பட்டோஜிதீக்ஷிதரால் செய்யப்பட்டதுமாகிய சித்தாந்தகௌமுதியென்னும் வடநூலின் முதலில் [illegible]ாகிய பஸ்பசமென்னுமாஹ்நிகத்தில் உதகரிக்கப்பட்டதென்பர். [illegible] கற்பம் முதலியவாறும் வேதாங்கமெனப்படும்; "[illegible] உலகியற் சொல்லையொழித்து வைதிகச் சொல்லையாராயும் [illegible], [illegible] உடனாய்ந்து [illegible] தொடக்கத்து [illegible], போதாயனீயம் பாரத்துவாசம் ஆபஸ்தம்பம் [illegible], [illegible] பாராசரம் முதலிய [illegible] [illegible] [illegible]

சார்பிற் றோன்றா வாரண வேதக்
காதி யந்த மில்லையது நெறியெனும்
வேதிய னுரையின் விதியுங் கேட்டு
மெய்த்திறம் வழக்கென விளம்பு கின்ற
வெத்திறத் தினுமிசை யாதிவ ருரையென
வாசீ வகநூ லறிந்த புராணனைப்
பேசுநின் னிறையார் நூற்பொருள் யாதென
வெல்லையில் பொருள்களி லெங்குமெப் பொழுதும்
புல்லிக் கிடந்து புலப்படு கின்ற

மாம்" (தொல். புறத். சூ. ௨0; கலி. க—வுள்.) என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

க0ங. சார்பிற்றோன்றா - ஒரிடத்திற்றோன்றாத; ஸ்வயம்புவென்றபடி. திருவள்ளுவமாலையில் வெள்ளிவீதியார் (௪௨) பாட்டில் வேதம், "செய்யாமொழி" என்று கூறப்பட்டிருத்தல் காண்க; இக்கருத்தை, "நாத்திக மல்லது சொல்லலை யாயின்மு னுள்பயந்த, சாத்திர மாவது வேதமன் றோவது தான்சயம்பு, சூத்திரி நீயது வல்லை யலாமையிற் சொல்லுகிலாய், போத்தந்தி யோவதன் றீமையென் றான்பொங்கிப் பூதிகனே", "பூதிகன் றானது சொல்லலும் யானது வல்லனெல்லாஞ், சாதிகண் டாயெனத் தான்றளராதது சாற்றுகென்றாட், காதியென் றானுமொ ரந்தமென் றானுமுண் டேலதற்கு, நீதினுயி னுலுரை நீயினி யானது நேர்வனென்றான்" (நீல. வேத. செய். ங-ச) என வருவனவற்றானுணர்க. வேதக்கு-வேதத்திற்கு. க0ரு. வேதியன் - வேதவாதி.

க0சு. மெய்த்திறம் - நூல்வகைகள்; மெய்யுணர்த்துவனவற்றை மெய்யென்றார்; "மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடு" (க : கக) என முன்பு வந்திருத்தல் காண்க. "யாமெய்யாக் கண்டவற்றுள்" (ங00) என்னும் திருக்குறளில், 'மெய்' என்பது இப்பொருளதாதலறிக. வழக்கு- உலகியல்.

க0சு - எ. இவ்வடிகளாற் கூறப்பட்டுள்ளவை மணிமேகலையின் உட்கோள்.

ஆசீவகவாதம்:—

க0அ. ஆசீவகநூல் - சமணசமயத்தின் பாகுபாடு இரண்டனுள் ஒருவகைக்குரிய நூல்; "அன்னதோர் வாய்மை யாசீ வகன மணர்களிற் கூறும்" (சிவ. சித்தி. பரபக்கம், ஆசீவகமதம், க.) புராணன் - முதியோன். ஆசீவகமதம், முற்காலத்துச் சமதண்டமென்று பெயருள்ள ஒரூரிற் பரவியிருந்ததென்று தெரிகின்றது; நீல.

க0கூ. இறை யார் - கடவுள் யாவன். நூற்பொருள் யாதென - உனது நூலிற் சொல்லப்படும் பொருள் என்னவென்று மணிமேகலை கேட்ப.

க0அ-கூ. "ஆத்தனு நூலும் பொருளு நிகழ்ச்சியும், பாத்தன சொல்லிற் பயம்பெரி தாதலி, னேத்துரை யேயிங் குரையென் றுரைத்தனள், சாத்திரம் யாவையுந் தன்னிக ரில்லாள்" நீல. ஆசீவக. செய். க௨.

(பி - ம்.) க0ங - ச. 'வேதத், தாதியந்த மில்லை யதுவே நெறியெனும்'

வரம்பி லறிவ னிறைநூற் பொருள்களைந்
துரந்தரு முயிரோ டொருநால் வகையணு
வவ்வணு வுற்றுங் கண்டு முணர்ந்திடப்
பெய்வகை கூடிப் பிரிவதுஞ் செய்யு
நிலநீர் தீக்காற் றெனநால் வகையின
மலைமர முடம்பெனத் திரள்வதுஞ் செய்யும்
வெவ்வே றாகி விரிவதுஞ் செய்யு
மவ்வகை யறிவ துயிரெனப் படுமே
வற்ப மாகி யுறுநிலந் தாழ்ந்து
சொற்படு சீதத் தொடுசுவை யுடைத்தா
யிழினென நிலஞ்சேர்ந் தாழ்வது நீர்தீத்
தெறுதலு மேற்சே ரியல்பு முடைத்தாந்

---

௧௧௨. வரம்பிலறிவன் இறை - அநந்தஞானியாகிய மற்கலிதேவனே எமது கடவுள். நூற்பொருள்கள் ஐந்து - நவகதிரென்னும் நூலிற் கூறப்பட்டுள்ள பொருள்கள் ஐந்தாகும்.

௧௧௩. அப்பொருள்கள் உயிரும் நால்வகை அணுக்களுமாம்.

௧௧௨ - ௩. ஆசீவக மதத்தினர்க்குத் தெய்வம் மற்கலியென்பதும், நூல் நவகதிரென்பதும், அதிற் கூறப்பட்ட பொருள்கள ஐந்தென்பதும் ஆகிய இவற்றை, "என்றலு மற்கலி தானே யிறையினி, யொன்பதுவாங் கதிர் நூல்யா முடையன, மன்பெறு நுண்பொருளைந்தியல் பாயவை, யின்ப நிகழ்ச்சியுங் காழ்ப்பா டெனச்சொல" (நீல. ஆசீவக. செய். ௧௩) என்பதனாலறிந்துகொள்க; "மற்கலி நூலின் வகையிது" (௧௬௫) என்று இக்காதையிலேயே பின்வருதல் காண்க.

௧௧௪. அவ்வணுவென்றது உயிரை.

௧௧௫. கூடி - நிலவணுமுதலிய நால்வகையணுக்களோடுங்கூடி.

௧௧௪ - ௫. இவ்வடிகள் உயிரணுவின் இலக்கணங்கூறின.

௧௧௬. மேற்கூறிய நால்வகையணுக்களும் இவையென்றபடி.

௧௧௭ - ௮. அந்நால்வகையணுக்களும் திரள்வதுஞ்செய்யும்; விரிவதுஞ்செய்யும்.

௧௧௬ - ௮. இவ்வடிகளால் மேற்கூறிய நால்வகையணுக்களின் பொதுவிலக்கணம் கூறப்பட்டது.

௧௨௦. வற்பம் - வன்மை. நிலம் வற்பமாகியுறும்.

௧௨௦ - ௨௨. தாழ்ந்து உடைத்தாய்ச்சேர்ந்து ஆழ்வது நீரென்க.

௧௨௩. தெறுதல் - சுடுதல்.

௧௨௨ - ௩. தீ, பெறுதலும் மேற்சேரியல்பும் உடைத்து.

(பி - ம்.) ௧௧௩ - ௪. 'நால்வகையினு, மூவணு'

காற்று விலங்கி யசைத்தல் கடனிவை
வேற்றியல் பெய்தும் விபரீ தத்தா
லாதி யில்லாப் பரமா ணுக்க
ளீறற் றியாவதுஞ் சிதைவது செய்யா
புதிதாய்ப் பிறந்தொன் றொன்றிற் புகுதா
முதுநீ ரணுநில வணுவாய்த் திரியா
வொன்றிரண் டாகிப் பிளப்பதுஞ் செய்யா
வன்றியு மவல்போற் பரப்பதுஞ் செய்யா
வுலாவுந் தாழு முயர்வதுஞ் செய்யுங்
குலாமலை பிறவாக் கூடும் பலவும்
பின்னையும் பிரிந்துதந் தன்மைய வாகு
மன்னிய வயிரமாய்ச் செறிந்துவற் பமுமாம்
வேயாய்த் துளைபடும் பொருளா முளைக்குந்
தேயா மதிபோற் செழுநில வரைப்பா
நிறைந்தவிவ் வணுக்கள் பூதமாய் நிகழிற்
குறைந்து மொத்துங் கூடா வரிசையி

கஉச. விலங்கி - குறுக்கிட்டு. இவை - இவ்வணுக்கள்.

கககூ - உச. இவ்வடிகளாற் கூறப்பட்டுள்ள ஐந்துபொருள்களின் இயல்பைப் பின்வருஞ் செய்யுட்களாலுமறிக: "நிலநீ ரெறிகாற் றுயி ரின் னியல்பும், பலநீ ரவற்றின் பரிபா லவைதாம், புலமா கொலியொன் றொழிய முதற்காஞ், சலமா யதுதண் மையையே முதலாம்", "எறித் தன் முதலா யினதீ யினவாஞ், செறித்தல் லொலியோ டிவைகாற் றின வா, மறித்தல் லறிதல் லவைதா முயிராங், குறித்த பொருளின் குணமா லிவையே." நீல. ஆசீவக. கஎ - அ.

கஉரு. வேற்றியல்பு - வேறுதன்மை.

கஉஎ. யாவதும் - சிறிதும். சிதைவது - அழிதல்.

கநக. அவல்போல் - அவலைப்போல. கநரு. வற்பம் - வன்மை.

கநகூ. வேய் - மூங்கில். கநஎ. தேயாமதி - முழுமதி.

கநகூ. குறைந்தும் ஒத்தும் கூடா - பின் சொல்லப்படுமளவிற் குறைந்தும் அளவொத்துங் கூடுவனவல்ல.

கநகூ - சக. "ஒன்றினை யொருவி மூன்றங் குற்றிடா விரண்டு விட்டு, நின்றிடா திரண்டு கூடு நெறிநில நான்கு நீர்மூன், றின்றிரண் டழல்கா லொன்று விசைந்திடும் பூமி யிவ்வா, றென்றுநீர் நீகா லாகி யீண்டுவ தென்றி யம்பும்" (சிவ - சித்தி. பரபக்கம், ஆசீவகன்மதம், எ) எனவருதல் காண்க.

(பி - ம்.) கஉச. 'ஆற்றுவிங்கே யசைத்தல்கடிவை' கஉரு. 'வேற் றியலெய்தும்' கஉஎ. 'யாதுஞ்சிதைவது' கஉஅ. 'புத்தாப்பிறந்தொன்று' கநo. 'பிறவாய்க் கூடும்மலையும்'. கநச-ரு. 'தன்மையதாக, வன்னிய' கநகூ. 'வேயிரத்துளைப்படும்' கநஎ. 'வரைப்பால்' சநகூ.'கூடாவரியின்'

னென்று முக்கா லரைகா லாயுறுந்
தொன்றுமிக் கதனற் பெயர்சொலப் படுமே
யிக்குணத் தடைந்தா லல்லது நிலனுய்ச்
சிக்கென் பதுவு நீரா யிழிவதுந்
தீயாய்ச் சுடுவதுங் காற்றாய் வீசலு
மாய தொழிலை யடைந்திட மாட்டா
வோரணுத் தெய்வக் கண்ணோ ருணர்குவர்
தேரார் பூதத் திரட்சியு ளேனோர்
மாலைப் போதி லொருமயி ரறியார்
சாலத் திரண்மயிர் தோற்றுதல் சாலுங்
கருமம் பிறப்புங் கருநீலப் பிறப்பும்
பசும்ம் பிறப்பும் செம்ம் பிறப்பும்
பொன்ன் பிறப்பும் வெண்ண் பிறப்பு
மென்றிவ் வாறு பிறப்பினு மேவிப்
பண்புறு வரிசையிற் பாற்பட்டுப் பிறந்தோர்
கழிவெண் பிறப்பிற் கலந்துவீ டணைகுவ

கசங. சிக்கென்பதுவும் - வன்மை யுற்றிருத்தலும்; "வற்பமாகி யுறுநிலம்" (கஉO) என்று இக்காதையில் முன்பு வந்திருத்தல் காண்க.

கசசு. தெய்வக்கண்ணோர் - கேவலஞானிகள்.

கசஎ. தேரார் - அறியார். ஏனோர் - மற்றையோர்; என்றது, கேவல ஞானிகளல்லாதாரை.

கசசு - எ. ஓரணுவை ஏனோர் தேராரென்க.

கசஅ. போது - காலம்.

கசகூ. சாலும் - மேற்கூறியதற்கு உவமையாக அமையும்.

கருO. கரும்பிறப்பென்றது நரக சன்மத்தை.

கருரு. கழிவெண்பிறப்பு - மிகவெள்ளிய பிறப்பு.

கருO - ருரு. இவ்வடிகளிற் கூறிய கரும்பிறப்பு முதலியவைகள் முறையே ஒன்றற்கொன்று ஏற்றமுடையவை; "வெண்மைநன் பொன்மை செம்மை நீல்கழி வெண்மை பச்சை, யுண்மையிவ் வாறி னுள்ளுங் கழிவெண்மை யோங்கு வீட்டின், வண்மைய தாகச் சேரு மற்றிவை யுருவம் பற்றி, யுண்மையவ் வொட்டுத் தீட்டுக் கலப்பினி லுணருமென்றான்" (சிவ - சித்தி. பரபக்கம், ஆசீவகன்மதம், அ.) ஈண்டுப் பிறப்புக்களை

(பி - ம்.) கசO. 'அரைக்காலாயுந்' கசக. 'மிக்கவதனிற்' கசங. 'சிக்கென்பதூஉ நீராயிழைவதுந்' கசச. 'தீயாச்சுடுவதுங் காற்றாய்வீசுவதும்' கசரு-சு. 'மாட்டா, தோரணு' கசஎ. 'நோலாபூதத் திரட்சியுளானோர்' கசஅ. 'மயிருமறியார்' கருச - ரு. 'பாற்படக் கழிந்த, கழிவேய் பிறப்பிற் கலந்தா வீடணைவர்'

ரழியல் வேண்டா ரதுவுறற் பாலா
ரிதுசெம் போக்கி னியல்பிது தப்பு
மதுமண் டலமென் றறியல் வேண்டும்
பெறுதலு மிழத்தலு மிடையூ றுறுதலு
முறுமிடத் தெய்தலுந் துக்கசுக முறுதலும்
பெரிதவை நீங்கலும் பிறத்தலுஞ் சாதலுங்
கருவிற் பட்ட பொழுதே கலக்கு
மின்பமுந் துன்பமு மிவையுமன்று வெனத்தகு
முன்னுள வூழே பின்னுமுறு விப்பது
யற்கலி நூலின் வகையிது வென்னச்
சொற்றடு மாற்றத் தொடர்ச்சியை விட்டு

வகுத்துக் கூறியதுபோல, "மணியுயிர் பொன்னுயிர் மாண்ட வெள்ளியி, னணியுயிர் செம்புயி ரிரும்பு போலவாம், பிணியுயி ரிறுதியாப் பேசி னேனினித், துணியின மெனத்தொழு திறைஞ்சி வாழ்த்தினர்" (சீவக. ௩௧௧௧) என்று உயிர்களை வகுத்துக் கூறியிருத்தல் காண்க.

௧௫௬. 'அது' என்றது, கழிவெண்பிறப்பினை.

௧௫௭. 'இது' என்றது, கரும்பிறப்புமுதல் கழிவெண் பிறப்பு இறுதியாகவுள்ள பிறப்புக்களில் முறையே பிறந்து வீடுபெறுதலை.

௧௫௯ - ௬௨. பெறுதல்முதற் சாதலீறாகவுள்ளவைகள் கருவிற் சேர்ந்தபொழுதே கலப்பனவாம். [படும்.

௧௬௩. இன்பதுன்பங்களாகிய இவைகளும் அணுவென்று கூறப்

௧௫௯ - ௬௪. இவ்வடிகளின் பொருளோடு, "பேறிழ விடையூ றின்பம் பிரிவிலா திருக்கை மற்றும், வேறொரு நாட்டிற் சேறல் விளைந்திடு மூப்புச் சாதல், கூறிய வெட்டு முன்னே கருவினுட் கொண்ட தாகுந், தேறிய வூழிற் பட்டுச் செல்வதிவ் வுலக மென்றான்", "புண்ணிய பாவ மென்னு மிரண்டணுப் பொருந்த வைத்தே, யெண்ணிய விவற்றி னோடு மேழென வெங்களோடு, நண்ணிய வொருவன் கூறு ஞானமிவ் வாற தென்று, கண்ணிய கருத்தி னோர்கள் கதியினைக் காண்ப ரென்றான்" (சிவ-சித்தி. பரபக்கம், ஆசீவகன். ௯-௧௦) என்னும் செய்யுட்களை ஒப்பிடுக.

௧௬௫. மற்கலிதேவனது ஒன்பது கதிரென்னும் நூலிற் கூறப் பட்டுள்ள வகை இதுவாகுமென்று ஆசீவகமதத்தோன் சொல்ல.

௧௬௬. சொற்றடுமாற்றத்தொடர்ச்சி - தடுமாற்றச் சொற்றொடர்ச்சி; என்றது, பூர்வோத்தர விரோதமுள்ள ஆசீவகமதத்தோன் கூற்றை.

(பி - ம்.) ௧௫௬. 'அழியல்வேண்டா வதுவுறற்பாலர்' ௧௫௮. 'வேண் டுதலும்' ௧௫௯. 'இறத்தலும்' ௧௬௦. 'உடமிறுத்தெய்தலுந் துக்கமுஞ் சுகமிறுறலும்' ௧௬௨. 'பொழுதேபிறக்கு', 'பொழுதேயிறக்கும்.' ௧௬௩. 'இவையிவையெனத்தகு' ௧௬௫. மறக்கலின்னூலின் வகையிதுவென்று.' ௧௬௬. 'சொற்றமாற்றத்'

நிகண்ட வாதியை நீயுரை யென்றுற்
புகழுந் தலைவன்யார் நூற்பொருள் யாவை
யப்பொரு ணிகழ்வுங் கட்டும் வீடு
மெய்ப்பட விளம்பென விளம்ப லுறுவோ
னிந்திரர் தொழப்படு மிறைவனெம் மிறைவன்
றந்த நூற்பொரு டன்மாத்தி காயமு
மதன்மாத்தி காயமுங் காலா காயமுந்
தீதில் சீவனும் பரமா ணுக்களு
நல்வினை யுந்தீ வினையுமவ் வினையாற்
செய்வுறு பந்தமும் வீடுமித் திறத்த
வான்ற பொருடன் றன்மைய தாயுந்
தோன்றுசார் வொன்றின் றன்மைய தாயு

---

௧௭௦. மெய்ப்பட - உண்மைப்பட.

௧௬௭ - ௭௦. நிகண்ட வாதியை நோக்கி உங்கள் தலைவன் யார்? நூற்பொருள்கள் யாவை? அப்பொருள்களின் நிகழ்ச்சியையும், பந்தத்தையும், வீட்டினையும் சொல்லுவாயென்று மணிமேகலைகேட்ப. நிகண்ட வாதி - சமணர் இருதிறத்தாரில் ஒருவகையான்; இவன் நிர்க்கந்தவாதி யென்றும் திகம்பரவாதி யென்றுங் கூறப்படுவென். இறைவன், நூல், பொருள், பொருணிகழ்வு என்னும் இந்நான்கினையும் முறையே ஆப்தன், ஆகமம், பதார்த்தம், பிரவர்த்தியென்பர்.

நிகண்டவாதம்:—

௧௭௧. சதேந்திரர்களாலே வணங்கப்படும் அருகனே எமது தெய்வமாயி; சதேந்திரராவார்: பவனேந்திரர் நாற்பத்திருவரும், வியந்தரேந்திரர் முப்பத்திருவரும், கற்பேந்திரர் இருபத்திருவரும், சந்திரனும் சூரியனும் நரேந்திரனும் மிருகேந்திரனுமென்பார்.

௧௭௨. தந்த நூற்பொருள் - அருகன் உண்டுபண்ணியஅங்காகமம் பூர்வாகமம் பகுசுருதியாகமமென்று மூன்று ஆகமங்களிலும் கூறப்பட்டுள்ள பொருள்கள்.

௧௭௩. காலமும் ஆகாசமும்.

௧௭௨ - ௩. தந்தநூற்பொருள்கள் தருமாத்திகாயம் முதல் வீடு ஈறாகவுள்ள இந்தப் பத்துப் பகுதியின.

௧௭௪ - ௬. இவ்வடிகளாற் கூறப்பட்டுள்ள இறைவனையும் அவன் கூறிய நூற்பொருள்கள் பற்றையும், "எனக்கேட்டாய் கெடுத்தாய்ப் பா [illegible] டொழுப்பினோர், தனக்காய தருமமு மதருமமுங் காலமு [illegible] ப்பாட்ட [illegible] முயிருவும் புள்ளியமே, வினைக்குங்காற் பாவமே [illegible] டே [illegible]" ([illegible]. மொக்கல. உ௨.) என்னும் செய்யுளால் [illegible]

மநித்தமு நித்தமு மாகி நின்று
நுனித்த குணத்தோர் கணத்தின் கண்ணே
தோற்றமு நிலையுங் கேடு மென்னு
மாற்றரு மூன்று மாக்கலு முரித்தா
நிம்ப முளைத்து நிகழ்த னித்திய
நிம்பத் தப்பொரு ளன்மை யநித்தியம்
பயற்றுத் தன்மை கெடாது கும்மாய
மியற்றி யப்பய றழிதலு மேனைத்
தருமாத்தி காயந் தானெங்கு முளதாய்ப்
பொருள்களை நடத்தும் பொருந்த நித்தியமா

---

௧௭௯ - ௮௦. ஒருபொருள் ஒரேகணத்தில் அநித்தியத்தன்மை நித்தியத்தன்மையென்னும் இரண்டையும் அடையுமென்பதை, "கல்வியா னல்லனே காமாதி யாற்றீயன், செல்வத் துயர்ந்தான் குலத்தினிற் றாழ்ந் தனனும், வல்லுவா னென்றொன்று வல்லா னிதுவன்றே, நில்லாமை நித்த நிலை" (நீல. மொக்கல. ௧௧௩, சமய.) என்பதனாலு முணர்க. கணம் - க்ஷணம்.

௧௮௦ - ௮௨. ஒருபொருள் ஒரேகணத்தில் உற்பத்தி ஸ்திதி நாச மென்று மூன்றையுமடையுமென்பதை, "உருவப் பிழம்பப் பொருளென் றுரைப்பனிப் பாறயிர்மோர், பருவத்தி னும்பரி யாயப் பெயரென்பன் பாலழிந்து, தருவித் துரைத்த தயிருரு வாய்மும்மைத் தன்மையதாந், திருவத்த தென்பொரு ளாதலைத் தேர தெளியிதென்றான்" (நீல. மொக்கல. ௧௨௨) என்னுஞ் செய்யுளாலும், 'உருவப்பிழம்பாகிய புற்கலத்தைப் பொருளென்பேன்; பால்தயிர் முதலாயின அதனது பரியாய மென்பேன்; பாற் பரியாயத்து நின்ற புற்கல திரவியம் தயிர்ப்பரியாய மடைந்து பரிணமித்தலின் உற்பத்தி ஸ்திதி விநாசாத்மகமாகித் தூஷிக் கப்படாத பெருமைத்தாம் என்பொருளென்று தெளியென்று சொன் னார்' என்னும் அதனுரையாலு மறிந்துகொள்க.

௧௭௭ - ௮௨. பொருள் உரித்தாமென்க. ௧௮௩. நிம்பம் - வேம்பு.

௧௮௫ - ௬. இவ்வடிகளாற் கூறப்பட்டுள்ள திருஷ்டாந்தத்தின் இயல்பை, "பெற்றது தானுங்கும் மாயத் திரிபு பயற்றியல்பே, யிற்ற திதுவென திட்டமென் பாயிவ் விருமையினுந், தெற்றெனத் தீர்ந்தோர் பொருளென்னை தேற்றினித் தேற்றலையேன், மற்றது வாமை மயி ரெனச் சொல்லுவன் மன்னுமென்றான்" (நீல. மொக்கல. ௧௨௩) என் பதனாலுமுணர்க. கும்மாயம் - புழுக்கிய பச்சைப்பயற்றோடு சருக் கரை முதலியன கூட்டி ஆக்கப்படுவதொரு சிற்றுண்டி; இஃது இப் பெயரோடு விஷ்ணுவாலயங்களில் இக்காலத்தும் வழங்கிவருகின்றது; "கும்மாயத்தொடு வெண்ணெய்விழுங்கி" (திவ். பெரியாழ்வார். ௩. ௩ : ௩) என்பதில், 'கும்மாயம்' என்பதற்கு ஸ்ரீமணவாளமாமுனிகள், 'குழையச்சமைத்தபருப்பு' என்று பொருள்செய்திருக்கின்றனர்; "பயற் றது கும்மாயம்" நன். சூ. ௨௯௯, மயிலை. மேற்.

௧௮௭ - ௮. தருமாத்திகாயம் எங்குமுளதாகி எக்காலத்தும் பொருள்களை நடத்துமென்க.

வப்படித் தாகி யதன்மாத் திகாயமு
௧௧௦ மெப்பொருள் களையு நிறுத்த லியற்றுங்
காலங் கணிக மெனுங்குறு நிகழ்ச்சியு
மேலுங் கற்பத் தின்னெடு நிகழ்ச்சியு
மாக்குமா காய மெல்லாப் பொருட்கும்
பூக்குமிடங் கொடுக்கும் புரிவிற் றுகுஞ்
௧௧௫ சீவ னுடம்போ டொத்துக் கூடித்
தாவில்சுவை முதலிய புலன்களை நுகரு
மோரணு புற்கலம் புறவுரு வாகுஞ்

௧௦௯ - ௧௦. அதன்மாத்திகாயம் எப்பொருள்களையும் நிற்கச்செய்யும்.

௧௦௭ - ௧௦. இவ்வடிகளாற் கூறப்பட்டுள்ள தருமாத்திகாயம் அதருமாத்திகாயங்களின் இலக்கணங்களைப் பின்வருபவைகள் நன்கு புலப்படுத்தும்: "அத்தியா யமூர்த்தியா யளவி றேசியா, யொத்தளவுலகினோ டுலக லோகமாந், தத்துவந் தனைச்செய்து தம்மத் தம்மமா, மத்திகள் செலவொடு நிலையிற் கேதுவாம்", "அச்சுநீர் தேரொடு மீனை யீர்த்திடா, வச்சுநீ ரன்றியத் தேரு மீன்செலா, வச்சுநீர் போலத்தம் மத்தி சேறலை, யிச்சையு முயற்சியு மின்றி யாக்குமே", "அந்தரத் தருபத்து மூன்ற தாகிய, விந்திர படலமு நிரைய மேழ்களு, மந்தர மலைமண்ணு மற்று நின்றிடா, வந்தமி னிலையதம் மத்தி யில்லையேல்", "பறவையின் சிறகொடு பாத நின்றுழி, நெறியினுற் செலவொடு நிலையை யாக்குமா, லுறவிபுற் கலமிவை யோட நிற்றலைச், செறிவுறத் தம்மத்தம் மத்தி செய்யுமே" (மேருமந்தர. வைசயந்தன்முத்தி. ௮௮, ௧௦, ௧௧, ௧௨); "தருமாத்திகாயம், குயவன் திகிரிக்குக் கீழிட்டசிலைபோலவும், தேருக்கு அச்சுப்போலவும், கலத்திற்குக்கடல்போலவுமாம்", "தருமாத்தியும் அதருமாத்தியும் பக்ஷிக்குச் சிறகுங் காலும்போற் சீவபுற்கலங்களுடைய கமனத்திற்கும் ஸ்திதிக்கும் அப்பிரேரகசாதனமாம்" நீல. மொக்கல. ௨௭ - ௮, சமய. ௧௧௧. கணிகம் - க்ஷணிகம்.

௧௧௧ - ௩. காலம் குறுநிகழ்ச்சியையும் நெடுநிகழ்ச்சியையுமாக்குமென்க; "க்ஷணிகமென்பது எழுசெங்கழுநீரிதழை ஒரு குறட்டிலடுக்கிப் பலவானுயினுனொருவன் மிகவுங் கூரியதோருளிவைத்துக் கூடமிட்டுப் புடைத்தால் ஆரும்புரையற்று ஏழாம்புரையிற் செல்லுமளவாம்; இனிக்கற்பமாவது, ஒசனையகன்றுயர்ந்ததோர் வச்சிரமலை கருப்பிணியுடுத்த பட்டாடைத் தோகைபட்டுக் கையறத்தேய்ந்ததாம்" நீல. மொக்கல. ௩௧, சமய.

௧௧௩ - ௪. ஆகாயம் எல்லாப்பொருட்கும் இடங்கொடுக்குஞ் செயலையுடையது; "பரந்திடங் கொடுக்கும் விசும்புதோ யுள்ளம்" மலைபடு. ௬௭.

௧௧௫ - ௬. சீவன் உடம்போடொத்துக்கூடிப் புலன்களை நுகரும்.

௧௧௭. ஓரணு - பரமாணு; அவ்வணு புற்கலமும் புறவுருவுமாகும். புற்கலமென்றது உடம்பை; புறவுருவென்றது மற்றை வடிவங்களை.

(பி - ம்.) ௧௧௫. 'ஒத்துத் தோன்றி'

சேர்சா னல்வினை தீவினை யவைசெயும்
வருவழி யிரண்டையு மாற்றி முன்செ
யருவினைப் பயனனு பவித்தறுத் திடுத
லதுவீ டாகு மென்றன னவன்பி
னிதுசாங் கியமத மென்றெடுத் துரைப்போன்
றனையறி வரிதாய்த் தான்முக் குணமாய்
மனநிகழ் வின்றி மாண்பமை பொதுவா
யெல்லாப் பொருளுந் தோன்றுதற் கிடனெனச்
சொல்லுதன் மூலப் பகுதிசித் தத்து
மானென் றுரைத்த புத்தி வெளிப்பட்
டதன்கணா காயம் வெளிப்பட் டதன்கண்
வாயு வெளிப்பட் டதன்க ணங்கி
யானது வெளிப்பட் டதன்க ணப்பின்
றன்மை வெளிப்பட் டதின்மண் வெளிப்பட்
டவற்றின் கூட்டத் தின்மனம் வெளிப்பட்
டார்ப்புறு மனத்தாங் கார விகாரமு
மாகா யத்திற் செவியொலி விகாரமும்

ககூஅ. நல்வினை நல்வினையையும், தீவினை தீவினையையும் உண்டாக்கும்; இன்பதுன்பங்களை யுண்டாக்குமெனினும் பொருந்தும்.

பந்தத்தினிலக்கணங்கூறிற்றிலர், "அவ்வினையாற், செய்வுறு பந்தமும்" (கஎரு - சு) என்று முன்னர்க் கூறினமையின்.

ககூகூ. வருவழியிரண்டு - நல்வினைவரும்வழியும் தீவினைவரும்வழியும். முன்செய் - முற்பிறப்பிற்செய்த.

உ0ச. என்றனன் - என்று நிகண்டவாதி கூறினன்.

ககூகூ - உ0ச. வீட்டிலக்கணம் இவ்வடிகளாற் கூறப்பட்டது போல, "பெரும்பாவ மறத்துய்த்துப் பெறுதும்யாம் வீடென்னோ, மரும்பாவ காரிநீ யாவர்வா யதுகேட்டாய், வரும்பாவ மெதிர்காத்து மன்னுந்தம் பழவினையு, மொருங்காக வுதிர்த்தக்கா லுயிர்த்தூய்மை வீடென்றாள்" (நீல. மொக்கல. சஎ) என்னும் செய்யுளில் வந்திருத்தல் காண்க.

சாங்கியவாதம்:—

உ0சு. சொல்லுதல் மூலப்பகுதி - சொல்லப்படுவது மூலப்பகுதி. சித்தம் - மூலப்பகுதி.

உ0எ. மான் - மகத்தத்துவம். மகத்தத்துவத்திற்குப் புத்தியென்றும் ஒருபெயருண்டு.

உ0கூ. அங்கி - அக்கினி. உக0. அப்பு - நீர்.

உகஉ. கூட்டம் - ஸமஷ்டி.

வாயுவிற் றொக்கு மூறெனும் விகாரமு
மங்கியிற் கண்ணு மொளியுமாம் விகாரமுந்
தங்கிய வப்பில்வாய் சுவையெனும் விகாரமு
நிலக்கண் மூக்கு நாற்ற விகாரமுஞ்
சொலப்பட் டிவற்றிற் றொக்கு விகாரமாய்
வாக்குப் பாணிபாத பாயு ருபத்தமென
வாக்கிய வினைவெளிப் பட்டிங் கறைந்த
பூத விகாரத் தான்மலை மரமுத
லோதிய வெளிப்பட் டுலகாய் நிகழ்ந்து
வந்தவழியே யிவைசென் றடங்கி
யந்தமில் பிரளய மாயிரு மளவு
மொன்று மெங்கும் பரந்துநித் தியமா
மறிதற் கெளிதாய் முக்குண மன்றிப்
பொறியுணர் விக்கும் பொதுவு மன்றி
யெப்பொரு ளுந்தோன் றுதற்கிட மன்றி
யப்பொரு ளெல்லா மறிந்திடற் குணர்வா
யொன்று மெங்கும் பரந்துநித் தியமாய்
நின்றுள வுணர்வாய் நிகழ்தரும் புருடன்
புலமார் பொருள்க ளிருபத் தைந்துள
நிலநீர் தீவளி யாகா யம்மே
மெய்வாய் கண்மூக் குச்செவி தாமே
யுறுசுவை யொளியூ றோசைநாற் றம்மே
வாக்குப் பாணிபாத பாயு ருபத்த

உகசு. தொக்கு - துவக்கிந்திரியம். ஊறு - பரிசம்.

உகஅ. நிலக்கண் - நிலத்தின்கண்

உஉக. இவையென்றது கருமேந்திரிய பஞ்சகத்தை.

உஉச. ஓதிய: வினையாலணையும்பெயர்.

உஉஎ - ஙஉ. இவ்வடிகளாற் புருஷ தத்துவத்தின் இலக்கணம் கூறப்பட்டது; இதனை, "எத்திறத் திறுஞ்செய் யான்குண மொன் றிலன், றத்துவ னின்பி னபேதன லேபக, னித்திய னெங்கு மூன னெச் காட்சியன், றய்த்த வுடையனென் றோன்றனு மென்றுன்" (சிவ. சாங்கிய. எ) என்பதனாலுமறிந்துகொள்க.

(பி - ம்.) உஉஎ. 'முக்குணமின்றி' உஉஅ. 'பொருளுமின்றி'

மாக்கு மனோபுத்தி யாங்கார சித்த
முயிரொடு மான்மா வொன்றெரி மாமெனத்
தெரிதரச் செப்பிய திறமுங் கேட்டு
வைசேடிகனின் வழக்குரை யென்னப்
பொய்யில் பொருளுங் குணமுங் கருமமுஞ்
சாமா னியமும் விசேடமுங் கூட்டமு
மாமா றுகூறு மதிப்பொரு ளொன்பது
குணமுந் தொழிலு முடைத்தா யெத்தொனைப்
பொருளுக்கு மேதுவா மப்பொரு ளொன்பான்
ஞாலநீர் தீவளி யாகா யந்திசை
காலமான்மா மனமிவற் றுண்மையில
மொழியூறு நிறஞ்சுவை நாற்றமோ டைந்தும்
பயில்குண முடைத்தா நின்ற நான்குந்
சுவைமுத லொரோகுண மவைகுறை வுடைய

---

௨௨௮. புத்தி - மகத்தத்துவம். சித்தம் - பிரகிருதி.

௨௨௨-௯. இவ்வடிகளால் இருபத்தைந்து தத்துவங்களும் கூறப்பட்டன; இதனை, "மன்றுயிர் தெற்றெனவில்லது மான்செருக், கென்னவுயிர்திரியமைக்தைத் தொருமன, மன்னதன் மாத்திரை யைந்தைந்து பூதமும், பன்னிய வையையும் பதப்பொருளொன்றுன்" (நீல. சாங்கிய. ௩) என்பதனாலுமுணர்க; தெற்றெனவில்லது - பிரகிருதி. செருக்கு - அகங்காரம்.

௨௩0. கேட்டு - மணிமேகலை கேட்டு.

௨௩௧. உரையென்ன - சொல்லாயென்று மணிமேகலை கேட்ப.

வைசேடிகவாதம்:—

௨௩௩. சாமானியம் - பொதுமை. விசேடம் - சிறப்பு. கூட்டம் - சமவாயம்; இதனை உடன்புணர்ப்பென்றும் கூறுவர்.

௨௩௪. ஆறுகூறும் - ஆறுபகுதியாகும்.

௨௩௫. அப்பொருள் ஒன்பான் - அந்தப்பொருள் ஒன்பது வகைப் [படும்.

௨௩௮-௯. பொருளொன்பது உடைத்தாய் ஏதுவாகும்.

௨௪0. நின்றநான்கு - நீர் தீ காற்று ஆகாயமென்பன.

௨௪௧. சத்தம் முதல் நாற்றம் இறுதியாகிய ஐந்தனுள், நீர் சத்தம் முதலிய நான்கு குணங்களையும், தீ சத்தம்முதலிய மூன்றினையும், காற்றுச் சத்தம் முதலிய இரண்டினையும், ஆகாயம் சத்தமொன்றினையுமுடையன.

இசை முதலிய நான்கின் இலக்கணங்களும் ஒருபிரதியிலும் காணப்படவில்லை; பின் வருவனவற்றுள்ளும் சில இப்படியே யுள்ளன.

வோசை யூறு நிறநாற் றஞ்சுவை
மாசில் பெருமை சிறுமை வன்மை
மென்மை சீர்மை நொய்ம்மை வடிவ
மென்னு நீர்மை பக்கமுத லனேகங்
கண்ணிய பொருளின் குணங்க ளாகும்
பொருளுங் குணமுங் கரும மியற்றற்
குரிய வுண்மை தருமுதற் பொதுத்தான்
போதலு நிற்றலும் பொதுக்குண மாதலிற்
சாதலு நிகழ்தலு மப்பொருட் டன்மை
யொன்றணு கூட்டங் குணமுங் குணியுமென்
றொன்றிய வாதியு முரைத்தன னுடனே
பூத வாதியைப் புகனீ யென்னத்
தாதகிப் பூவுங் கட்டியு மிட்டு
மற்றுங் கூட்ட மதுக்களி பிறந்தாங்

---

௨௫௨ - ௬. இவ்வடிகளாற் குணங்கள் பகுத்துக் கூறப்பட்டன.

௨௫௭ - ௮. பொருளும் குணமும் கருமத்தைச் செய்தற்கு உரிமையையுடையன; பொருள் குணமென்னும் இரண்டாலும் நிகழ்வது கருமமென்றபடி. உண்மை - ஸத்துவம். முதற்பொது - பரசாமானியம்; முதற்பொது உண்மை தருமென்க.

௨௬௧. ஒன்று - விசேடம். அணு - பிருதிவிமுதலிய நான்கு பூதங்களின் பரமாணுக்கள். ஒன்று அணுவிலுள்ளதென்க. கூட்டம் - ஸமவாயம். இவ்வடி விசேடத்தின் இலக்கணமும், சமவாயத்தின்இலக்கணமும் கூறிற்று.

௨௬௨. ஒன்றியவாதி - விசேடவாதி.

௨௪௨ - ௬௨. இவ்வடிகளாற் கூறப்பட்டுள்ள பொருள்கள் ஆறினியல்பை, "நெறியெனப் படுவது நின்ற மெய்ம்மையங், கறிதலுக் கரியன வாறு சொற்பொருள், செறியயான் சொலீறி ரப்பியங் குணந் தொழில், பொறியினுய் பொதுச்சிறப் புடன்பு ணர்ப்பதே", "பூதமைந் தொடுதிசை மனம் பொழுதுயி, ரோதினப் பொருள்கடா மொன்ப தாமவை, நீதியிற் குணமவற் றியல்பு செய்கையும், போதரும் பொருட் புடை பெயர்ச்சி யாகுமே", "பெரியதும் பின்னது மாய தப்பொது, வுரிதினிற் பொருள்களைச் செலுத்து மொற்றுமை, தெரிவுற வருவது சிறப்ப தாங்குணக், கிரியைக ளிதற்கெனக் கிளத்தல் கூட்டமே" (நீல. வைசேடிக. ௩-௫) எனவருஞ் செய்யுட்களாலுமுணர்க.

௨௬௩. புகல் நீ என்ன - நீசொல்வாயென்று மணிமேகலைசொல்ல.

பூதவாதம்:—

௨௬௪. தாதகிப்பூ - ஆத்திப்பூ. கட்டி - கருப்புக்கட்டி.

௨௬௫. மற்றுங்கூட்ட - கூட்டற்குரிய மற்றைப் பொருள்களையுங் கூட்ட. மதுக்களி பிறந்தாங்கு - மதுவினிடத்துள்ள மதசக்தி தோன்றினாற்போல.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible] பதி - பேரூர். [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

லென்றலு மெல்லா மார்க்கமுங் கேட்டு
நன்றல வாயினு நான்மா றுரைக்கிலேன்
பிறந்தமுற் பிறப்பை யெய்தப் பெறுதலி
னறிந்தோ ருண்டோ வென்றுநக் கிடுதலுந்
தெய்வ மயக்கினுங் கனவுறு திறத்தினு
மைய லுறுவார் மனம்வே றும்வகை
யைய மன்றி யில்லையென் றலுமின்
றந்தை தாயரை யனுமானத் தாலல
திந்த ஞாலத் தெவ்வகை யறிவாய்
மெய்யுணர் வின்றிமெய்ப் பொருளுணர் வரிய

---

௨௭௭. என்றலும் - என்று பூதவாதி சொல்லலும். கேட்டு - மணிமேகலைகேட்டு.

௨௬௪ - ௭௭. இவ்வடிகளிற் கூறப்பட்டுள்ளவற்றைப் பின்வருஞ் செய்யுட்கள் நன்குபுலப்படுத்தும்: "அணிகொ ளாரத் தரசவை கேட்கெனப், பிணிகொண் மூஞ்சிப் பிசாசகன் சொல்லுவான், குணிகுணம் மெனுங் கூற்றில ஞலதென், றணிவைம் பூதங்க ளேதொழில் சொல்லுவேன்", "திண்ணென் றீரில நீர்வளி காயத்தாற், கண்ணு மூக்கொடு நாமெய் செவிகளாய், வண்ண நாற்றஞ் சுவையினொ டோசை, யெண்ணுங் காலை யியைந்துழி யெய்துமே", "ஐந்துங்கூடி யறிவின்ப மாதியா, வந்து தோன்றி மதுமயக் காற்றலி, னந்தி நாளுங் குடஞ்சுடர் நாட்டம்போற், சிந்தி ஞலவை சென்றினஞ் சேருமே", "உலகெலாமவை யேயுயி ருண்டெனச், சொலவ லாருரை சொற்றெளிர் தேநின்று, பலக லாங்களுஞ் செய்ப பயனிலார், புலவ ராவதன் றேவங்குப் போந்ததே", "சென்ற காலத்துஞ் செல்கின்ற காலத்து, நின்ற காலத்தி லும்மிந் நிகழ்ச்சியே, யென்று மிவ்வுல கத்தன்மைத் தேயிது, வன்ற தென்றுரைப் பாரயர்ப் பார்களே" நீல. பூத. ௩ - ௭.

௨௭௯. முற்பிறப்பை எய்தப்பெறுதலின் - முற்பிறப்புணர்ச்சியைப் புத்தபீடிகையால் நான் அடையப்பெற்றதை; சாரியைநிற்க இரண்டனுருபு தொக்கது. 'நன்றலவாயினும்' (௨௭௮) என்பதுமுதல் 'உண்டோ' (௨௮௦) என்பது இறுதியாகவுள்ளவை மணிமேகலையின் உட்கோள்.

௨௮௦. என்று நக்கிடுதலும் - என்று மணிமேகலை உட்கொண்டு மறுபிறப்பில்லையென்ற பூதவாதிகூற்றை நினைந்து நகைத்து, நகைத்ததென்னை யென்று வினவிய அவனுக்குத் தான் பழம்பிறப்புணர்ந்ததைத் தெரிவித்தலும்.

௨௮௧ - ௩. நீ பழம்பிறப்புணர்ந்தேனென்றது, மையலுறுவார் மனம், தெய்வமயக்கினும் கனவுறுதிறத்தினும் வேறுபடும் விதமேயாகும்; அது, பிரத்தியக்கமன்மையாற் சந்தேகமேயன்றி வேறில்லையென்று அவன் கூறலும்.

௨௮௩ - ௫. இவ்வடிகள், பிரத்தியக்கமன்றி அனுமான அளவை கொள்ளாத பூதவாதிக்கு அவ்வளவையுண்டென்று கூறுமுகத்தால் மறுமையுண்டென்ன மணிமேகலை சாதித்ததைக்கூறின.

௨௮௬. மெய்யுணர்வு - சத்தியஞானம். மெய்ப்பொருள் - பரமார்த்ததத்துவங்கள்.

வைய மல்லதிது சொல்லப் பெறாயென
வுள்வரிக் கோலமோ டுன்னிய பொருளுரைத்
தைவகைச் சமயமு மறிந்தன ளாங்கென்.

௨௭.—சமயக்கணக்கர் தந்திறங்கேட்டகாதை முற்றிற்று.

---

௨௮௭. ஐயமல்லது இது - இது சந்தேகமன்று. சொல்லப்பெறாய் - சொல்லாதே.

௨௬௪ - ௮௭. இவ்வடிகளிற் கூறப்பட்டுள்ள பூதவாதிகூற்றுக் களும் அவற்றிற்கு மணிமேகலை கூறிய விடையுமாகிய இவை, "இறை வனு மில்லை யிறந்தோர் பிறவா, ரறனோ டென்னையென் றறைந்தோன் றன்னைப், பிறவியு மறவியும் பெற்றியி னுணர்ந்த, நறுமலர்க் கோதை யெள்ளினை நகுதி, யெள்ளினை போலு மிவ்வுரை கேட்டிங், கொள்ளிய துரையென வுன்பிறப் புணர்த்துவை, யாங்குநிற் கொணர்ந்த வருந் தெய்வ மயக்கக், காம்பன தோளி கனமயக் குற்றனை, யென்றவ னுரைக்கு மிளங்கொடி நல்லா, யன்றென் றவன்மு னயர்ந்தொழி வாயலை" (௨௧: ௪0௫ - ௧௨)எனக் கந்திற்பாவை மணிமேகலைக்கு வருவ துரைத்ததாக முன்வந்ததனோடு ஒப்புநோக்கற்பாலன.

௨௮௮. உள்வரிக்கோலம் - மறைந்த வேடம்.

௨௮௯. இக்காதையிற் கூறியவை பத்துமதங்களாகவிருப்ப, இங்கே, 'ஐவகைச்சமயம்' என்றது இழுக்கன்றோவெனின், அளவை வாதமுதலிய ஐந்தும் ஒருவகையிலும், ஆசீவகவாதம் நிகண்டவாத மென்னும் இரண்டும் ஒருவகையிலும் அடங்குமென்பராதலின், அன் றென்க; "அவ்வுரு வென்ன வைவகைச் சமயமுஞ், செவ்விதின் றன்மை யிற் சிந்தையின் வைத்திலேன்" (௨௯: ௪௨ - ௪) என்று அறவணவடி களுக்கு மணிமேகலை கூறியதாகப் பின்னும் வருதல் காண்க; "ஐம் பெருஞ் சமயமு மறந்தோற் றனவென" (பெருங். ௧. ௫௬: ௨௪௯.) ஆங்கு - வஞ்சிநகரத்தில்.

௧ - ௨௮௯. (மணிமேகலை) சார்ந்து அளவைவாதியை எய்தி இயம்பென, அவன் அளவைகளொன்றனன்; என்றவன்றன்னைவிட்டுச் சைவவாதியை நின்தெய்வம் எப்படித்தென்ன, அவன் இறைவனுரு மென்றுரைத்தனன்; பிரமவாதி முட்டை யென்றனன்; கடல்வணன் புராணமோதினன் காப்பென்றுரைத்தனன்; அவற்றோடு வேதியனுரை யின் விதியுங்கேட்டு இவருரை இசையாவென்று நினைந்து, ஆசீவகனை நோக்கி, 'இறை யார்? நூற்பொருள்யாது?' என, அவன், 'வகையிது' என்ன, நிகண்டவாதியை நோக்கி, 'மெய்ப்படவிளம்பு' என அவன் அது வீடாகுமென்றனன்; அவன்பின் சாங்கியன் செப்பியதிறமுங் கேட்டு, 'வைசேடிக! நின்வழக்கையுரை' என்ன, அவனும் உரைத்த னன்; உடனே பூதவாதியைநோக்கி, 'நீபுகல்' என்ன அவன், 'வினை துய்த்தல் பொய்ம்மை' என்றலும், நக்கிடுதலும், அவன் இல்லையென்ற லும், 'எவ்வகையறிவாய்; இது சொல்லப் பெறாய்' என உரைத்து ஐவகைச் சமயமுமறிந்தனளென வினைமுடிவுசெய்க.

இருபத்தேட்டாவது

கச்சிமாநகர்புக்ககாதை

[இருபத்தேட்டாவது தாயரோடு அறவணவடிகளையுந் தேர்ந்து கச்சிமாநகர்க்கட்சென்றபாட்டு.]

ஆங்குத் தாயரோ டறவணர்த் தேர்ந்து
வாங்குவிற் றானை வானவன் வஞ்சியின்
வேற்று மன்னரு முழிஞைவெம் படையும்
போற்புறஞ் சுற்றிய புறக்குடி கடந்து
சுருங்கைத் தூம்பின் மனைவளர் தோகையர்
கருங்குழல் கழீஇய கலவை நீரு
மெந்திர வாவியி லிளைஞரு மகளிருந்
தந்தமி லாடிய சாந்துகழி நீரும்

க. ஆங்கு - வஞ்சிநகரத்தில். தாயர் - மாதவி சுதமதி.

உ. வாங்குவில் - வளைந்தவில். வானவன் - சேரன்.

ங. வேற்றுமன்னர் - பகையரசர். உழிஞைவெம்படை - உழிஞை மாலையைச்சூடி அரணைக்காக்கும் வெவ்வியபடை. உழிஞை, புறமதிலை வளைப்போரும் அதனைக்காப்போருமாகிய இருதிறத்தினரும் அணிதற்கு உரியது.

ச. போல்: உவம உருபு. புறக்குடி - புறத்தேயிருத்தற்குரிய பல வகைமாந்தரும் குடியிருக்குமிடம்; என்றது புறநகரத்தை; இது புறஞ் சிறையென்றும், புறப்படைவீடென்றும், புறஞ்சேரியென்றுங் கூறப் படும்.

ங - ச. புறநகர், நால்வகைப் படைவீரரும் பிறருஞ் செறிந்திருத் தற்கு இடமாதலின், இங்ஙனங்கூறப்பட்டது.

ரு. சுருங்கை - நீர்செல்லுதற்குக் கற்களாற் கரந்துபடுத்தது. தூம்பு - சலதாரை. சுருங்கையாகிய தூம்பென்க; "நீணிலம் வகுத்து நீர் நிரந்துவந் திழிதரச், சேணிலத் தியற்றிய சித்திரச் சுருங்கைசேர் கோணி லத்து வெய்யவாங் கொடுஞ்சுறத் தடங்கிடங்கு" (சீவக. கசஉ); "சுருங்கை வீதி மருங்கிற் போகி" (சிலப். கச: சுரு); சுருங்கையின் இயல்பு இருபதாம் பரிபாடலாலுமுணரப்படும்.

'சுருங்கைத்தூம்பின்' (ரு) என்பது, 'பாய்தலின்' (கஎ) என மேல்வருவதனோடு சென்றியையும்.

சு. கழீஇய - கழுவிய.

எ. எந்திரவாவி - வேண்டும் பொழுது நீரை நிறைத்தற்கும் வேண் டாதபொழுது போக்குதற்கும் உரிய யந்திரங்களையுடைய நீர்நிலை; இஃது இலவந்திகையெனவுங் கூறப்படும். இளைஞர் - ஆடவர்.

அ. ஆடிய - பூசிய. சாந்து - சந்தனம்.

புவிகா வலன்றன் புண்ணிய நன்னாட்
சிவிறியுங் கொம்புஞ் சிதறுவிரை நீரு
மேலை மாதவர் பாதம் விளக்குஞ்
சீல வுபாசகர் செங்கைநறு நீரு
மறஞ்செய் மாக்க ளகின்முதல் புகைத்து
நிறைந்த பந்தற் றசும்புவார் நீரு
முறுப்புமுர ணுறாமற் கந்தவுத் தியினாற்
செறித்தரைப் போர்தஞ் செழுமனை நீரு
மென்றிந் நீரே யெங்கும் பாய்தலிற்
கன்றிய கராமு மிடங்கரு மீன்களு
மொன்றிய புலவொழி யுடம்பின வாகித்

கூ. காவலன் - அரசன். புண்ணியநன்னாள்- புண்ணியத்தையுடைய நல்ல நட்சத்திரத்தில்; என்றது, அரசனுடைய சன்ம நட்சத்திரத்தி லென்றவாறு.

க௦. சிவிறி கொம்பு என்னுமிரண்டும் நீரை வீசுங் கருவிவிசேடங் கள்; சிவிறியைப் பெருந்துருத்தியென்று கூறுவர்.

கூ - க௦. ஒருவன் சீவித்திருக்குங்காறும் அவன் பிறந்த நட்சத் திரத்திலும் இறந்த பின்பு அவன் இறந்த திதியிலும் சிறப்புச் செய்ய வேண்டுமென்பது தருமநூற்றுணிபு. பிறந்தநாள் விழவை வெள்ளணி நாளென்பர்.

கக. மேலைமாதவர் - மேன்மையையுடைய முனிவர்; ஐ: சாரியை.

கஉ. சீலவுபாசகர் - பஞ்சசீலத்தையுடையஉபாசகர்; பௌத்தரில் இல்லறம் நடத்தும் ஆடவரையும் மகளிரையும் முறையே உபாஸகரென் றும் உபாஸகைகளென்றுங் கூறுதல் மரபு.

கச. பந்தல் தசும்பு - தண்ணீர்ப்பந்தலிலுள்ள நீர்க்குடம். வார் நீர் - ஒழுகுகின்றநீர்.

கரு. உறுப்பு முரணுறாமல் - உறுப்புக்கள் மாறுபடாமல்; "நேர் கட்டி செந்தே னிரியாசம் பச்சிலை, யார மகிலுறுப்போ டாறு" (சிலப். ரு: கச, அடியார். மேற்.) கந்தவுத்தியினால் - சேர்த்தற்குரிய வாசனைப் பண்டங்களால்; உத்தி - சேர்த்தல்; இது யுக்தியென்னும் வடமொழிச் சிதைவு.

ரு - கஎ. சுருங்கைத் தூம்பிற் பாய்தலினென்க.

கஅ. கன்றிய - பகைமையிற்றழும்பிய. கராம் இடங்கர் என்னும் இரண்டும் முதலைச்சாதி விசேடங்கள்; "கொடுந்தாண் முதலையு மிடங் கருங் கராமும்" குறிஞ்சி. உஎரு.

கஎ - கூ. பாய்தலிற் புலவொழிந்தன.

(பி - ம்.) கச. 'தசும்பமர்நீரும்' கரு. 'கந்தபுந்தியினால்' கசா. 'செறித் தமைப் போர்தஞ் செழுமணிநீரும்' கஎ. 'எங்கும்பரத்தலின்'

தாமரை குவளை கழுநீ ராம்பற்
பூமிசை பரந்து பொறிவண் டார்ப்ப
விந்திர தநுவென விலங்ககழு டுத்து
வந்தெறி பொறிகள் வகைமாண் புடைய
கடிமதி லோங்கிய விடைநிலை வரைப்பிற்

உ0. தாமரைமுதலிய மூன்றும் பகற்பூவென்றும், ஆம்பல் இராப்பூவென்றுங் கூறுவர் அடியார்க்கு நல்லார்; இதனை, சிலப்பதிகாரம், உ-ஆம் காதை, கச - ம் ஆம் அடிகளின் விசேடவுரையிற் காண்க.

உக. மிசைபரந்து - மேலேபரவப் பெற்று; இவ்வெச்சம் காரணப் பொருட்டு. ஆர்ப்பப் பரந்தென்க.

உஉ. கலவைநீர் முதலியன பாயப்பெற்றுப் பலநிறப்பூக்களையுடைமையின், அகழிக்கு வானவில் உவமையாயிற்று; "சந்த ரம்ம லர்க ளொண்ணெய் சுண்ணந் தாது குங்குமஞ், சந்த னக்குழம்பு மேற்பரந்து பாடி குழ்ந்தக, முந்த ரத்த ருக்க ளைய ணிந்து குழ்கிடந்ததோ, விந்திரத்தநுவின் வண்ண மென்ன தன்ன தாகுமே" மேருமந்தர. வைசயந்தன் முத்தி.

ம - உஉ. கலவைநீரும் சாந்துகழிநீரும் விரைநீரும் நறுநீரும் வார்நீரும் மனைநீரும் ஆகிய இந்நீர் சுருங்கைத் தூம்பினூல் எங்கும்பாய்தலின், உடம்பினவாகிப் பரந்தலான் இலங்கு அகழென்க.

உங. பொறிகள் - யந்திரங்கள்; அவற்றின் வகையைப் பின்வருவனவற்றானுணர்க: "மாற்றவர் மறப்படை மலைந்துமதில் பற்றி, நூற்றுவரைக் கொல்லியொடு நூக்கியெறி பொறியுந், தோற்றமுறு பேய்களிறு நூற்றுவெரும் பாம்புங், கூற்றமன கழுகுதொடர் குந்தமொடு கோண்மா", "விற்பொறிகள் வெய்யவிடு குதிரைதொட ரயில்வாள், கற்பொறிகள் பாவையன மாடமடு செந்தீக், கொற்புனைசெய் கொள்ளிபெருங் கொக்கெழில்செய் கூகை, நற்றலைக டிருக்கும்வலி நெருக்குமர நிலையே", "செம்புருகு வெங்களிக ளுமிழ்வதிரிந் தெங்கும், வெம்புருகு வட்டுமிழ்வ வெந்நெய்முகந் துமிழ்வ, வம்புமிழ்வ வேலுமிழ்வ கல்லுமிழ்வ [illegible], தம்புலன்க ளால்யவனர் தாட்படுத்த பொறியே", "கரும்பொ[illegible] பதிகை நாகம்விடு சகடங், குரங்குபொரு தகர்மெறி கூர்த்தரிவ[illegible], பாந்துபசும் பொற்கொடி பதாகையொடு கொழிக்குந், [illegible] தெய்வர்தலை பனிப்பத்திருந் தின்றே" (சீவக. ககக - எ); "[illegible]விற் பொறியுங், கருவிர லூகமுங் கல்லுமிழ் கவணும், பரிவுறு [illegible]யும் பாகடு குழிசியுங், காய்பொன் னுலையுங் கல்லிடு கூடையுந், [illegible] தொடக்கு மாண்டலை யடுப்புங், கவையுங் கழுவும் புதையும் [illegible], ஐயவித் துலாமுங் கைபெய ரூசியுஞ், சென்றெறி சிரலும் [illegible] பன்றியும், மெழுவுஞ் சீப்பு முழுவிறற் கணையமுங், கோலுங் குந்[illegible] [illegible]ம் பிறவும்" சிலப். கரு: உ0எ - கஎ.

[illegible]. [illegible] - காவலாகியமதில்; என்றது, எளியெய்தாத [illegible] புற[illegible] [illegible] அடியாலும் அத[illegible]தோர்க்கு [illegible] [illegible]யாலும் [illegible]ட்டுகைகளாற் செய்யப்பட் [illegible] [illegible]ப்பட [illegible] [illegible]. [illegible], [illegible]

பசுமிளை பரந்து பஃறுழி னிறைந்த
வெள்ளிக் குன்ற முள்கிழிந் தன்ன
நெடுநிலை தோறு நிலாச்சுதை மலரும்
கொடிமிடை வாயில் குறுகினள் புக்குக்
கடைகாப் பமைந்த காவ லாளர்
மிடைகொண் டியங்கும் வியன்மலி மறுகும்
பன்மீன் விலைஞர் வெள்ளுப்புப் பகருநர்
கள்ளெடை யாட்டியர் காழியர் கூவியர்
மைந்நிண விலைஞர் பாசவர் வாசவ
ரென்னுநர் மறுகு மிருங்கோ வேட்களுஞ்
செம்பு செய்ஞ்ஞருங் கஞ்ச காரரும்
பைம்பொன் செய்ஞ்ஞரும் பொன்செய் கொல்லரு
மரங்கொஃ றச்சரு மண்ணீட் டாளரும்

ணென்றுரைக்கு நூல்" குறள், எசங.

உரு. மிளை - காவற்காடு. ச - உஅ. கடந்து குறுகினன் புக்கென்க.

உசு - அ. உள் கிழிந்தன்ன வாயில். புக்கு - புகுந்து.

உகூ. கடைகாப்பமைந்த - வாயில் காத்தற்கமைந்த.

௩0. மிடைகொண்டு - நெருங்குதல் கொண்டு.

௩க. மீன்விலைஞர் - மீன்விலைப்பரதவர். உப்புப்பகருநர் - உப்பு விற்பார்; ஆவார், உமணரும் உமட்டியரும்; அளவருமாம்; பகர்தல் - விற்றல்.

௩உ. கள் நொடையாட்டியர் - கள்ளைவிற்கும் வலைச்சியர்; நொடை - விலை; "நறவுநொடை" (பெரும்பாண். கசக.) காழியர் - பிட்டுவாணிகர். கூவியர் - அப்பவாணிகர்; "காரகற் கூவியன் பாகொடு பிடித்த" பெரும்பாண். ௩எஎ.

௩௩. மைந்நிண விலைஞர் - ஆட்டுவாணிகர். பாசவர் - இலையமுதிடுவோர்; அன்றி, கயிறுதிரித்துவிற்பாரும், பச்சிறைச்சி சூட்டிறைச்சி விற்பாருமாம். வாசவர் - பஞ்சவாசம்விற்பார்; அவை, "தக்கோலந் தீம்பூத் தகைசா லிலவங்கங், கப்பூரஞ் சாதியோ டைந்து" (சிலப். ரு : உசு, அடியார். மேற்.) என்பன.

௩ச. கோவேட்கள் - குயவர்; இப்பெயர் வேட்கோவரெனவும் வழங்கும்.

௩ரு. செம்பு செய்ஞ்ஞர் - செம்பு கொட்டிகள். கஞ்சகாரர் - வெண்கலக்கன்னார்.

௩சு. பைம்பொன் செய்ஞ்ஞர் - பொற்பணிசெய்வோர். பொன் செய் கொல்லர் - உருக்குத்தட்டார்.

௩எ. மரங்கொஃறச்சர் - மரத்தைவெட்டுந்தச்சர்; கொல்லல் -

(பி - ம்.) உஎ. 'நெடுநிலைமனைதொறும்' ௩௩. 'பைந்நிணவிலைநர்' ௩ரு. 'செய்நரும்' ௩எ. 'மரங்கொறச்சர்'

வரந்தர வெழுதிய வோவிய மாக்களுந்
தோலின் றுன்னருந் துன்ன வினைஞரு
மாலைக் காரருங் காலக் கணிதரு
நலந்தரு பண்ணுந் திறனும் வாய்ப்ப
நிலங்கலங் கண்ட நிகழக் காட்டும்
பாண ரென்றிவர் பல்வகை மறுகும்
விலங்கரம் பொரூஉம் வெள்வளை போழ்நரோ
டிலங்குமணி வினைஞ ரீரீஇய மறுகும்
வேத்தியல் பொதுவிய லென்றிவ் விரண்டின்
கூத்தியல் பறிந்த கூத்தியர் மறுகும்
பால்வே றாக வெண்வகைப் பட்ட
கூலங் குவைஇய கூல மறுகு
மாகதர் சூதர்வே தாளிகர் மறுகும்

வெட்டல். மண்ணீட்டாளர்-சிற்பாசாரிகள்; அன்றிச் சுதையாற் பாவை யுள்ளிட்டன பண்ணுவாரென்றும் குயவரென்றுமாம்; மணி. ௬ : ௪௭.

௩௮. ஓவியமாக்கள் - சித்திரகாரிகள்.

௩௯. தோலின் துன்னர் - செம்மார்; உறைகாரரும், பறம்பர் முதலாயினருமாம். துன்னவினைஞர் - தையற்காரர்.

௪௦. மாலைக்காரர் - மாலைதொடுப்போர். காலக்கணிதர் - சோதிட நூலோர்; இவர்கள் கணிகளெனவுங் கூறப்படுவர்.

௪௧. பண் - இசை; பாலை குறிஞ்சி மருதம் செவ்வழியென்னும் பெரும்பண்ணுமாம்; திறம் - அவற்றின் கிளைகள்; அவை இருபத்தொரு வகைப்படும்.

௪௨. நிலம் - மூவகைத்தானம்; அவை எழுத்தும் அசையும் சீரும். கலம் - யாழ். கண்டம் - குரல்.

௪௩. பாணர் - இசைக்காரர்; இசைப்பாணரும், யாழ்ப்பாணரும், மண்டைப்பாணருமெனப் பாணர் பலவகையினராவார்.

௪௪. விலங்கரம் - வாளரம். வளைபோழ்நர் - சங்கறுப்பார்.

௪௫. மணிவினைஞர் - முத்துக்கோப்பார்.

௪௭. கூத்தியல்பு - கூத்தினிலக்கணம். கூத்தியர் - பதியிலார்.

௪௬ - ௭. மணி. ௨ : ௧௮ - ௯. ௪௮. பால் - பகுதி.

௪௯. குவைஇய - குவித்த. கூலமறுகு - கூலக்கடைத்தெரு.

௪௮ - ௯. எண்வகைக் கூலங்களாவன: "நெல்லுப் புல்லு வரகு தினை சாமை, யிறுங்கு தோரையொடு கழைவிளை நெல்லே" (சிலப். ௫ : ௨௩, அடியார். மேற்.) என்பன; கூலம் பதினெண்வகைத்தென்பர் கூத்தநூலார்; சிலப். ப. ௧௫௫, ௧௬௧.

௫௦. மாகதர் - இருந்தேத்துவார்; சூதர் - நின்றேத்துவார்; வேதாளிகர் - பலவகைத்தாளத்திலாடுவார்; "சூதர் வாழ்த்த மாகதர்

(பி - ம்.) ௩௮. 'வரந்தரவெழுதும்' ௩௯. 'தோலின்றொழிலினரும்'

போகம் புரக்கும் பொதுவர்பொலி மறுகுங்
கண்ணுழை கல்லா நுண்ணூற் கைவினை
வண்ண வறுவையர் வளந்திகழ் மறுகும்
பொன்னுரை காண்போர் நன்மனை மறுகும்
பன்மணி பகர்வோர் மன்னிய மறுகு
மறையோ ரருந்தொழில் குறையா மறுகு
மரைசியன் மறுகு மமைச்சியன் மறுகு
மெனைப்பெருந் தொழில்செ யேனோர் மறுகு
மன்றமும் பொதியிலுஞ் சந்தியுஞ் சதுக்கமும்
புதுக்கோள் யானையும் பொற்றார்ப் புரவியுங்
கதிக்குற வடிப்போர் கவின்பெறு வீதியுஞ்
சேணோங் கருவி தாழ்ந்தசெய் குன்றமும்

நுவல. வேதா ளிகரொடு நாழிகை யிசைப்ப" (மதுரை. ௬௭௦ - ௭௧); "சூதர் மாகதர் வேதா ளிகரொடு", "மாகதப் புலவரும் வைதா ளிகருஞ், சூதரும்" சிலப். ௫: ௪௮, ௨௬: ௭௪ - ௫.

௫௧. பொதுவர் - பொதுமகளிர். ௫௨. நுழைகல்லா- நுழையாத.

௫௩. வண்ணவறுவையர் - பலநிறங்களையுடைய உடைநெய்வோர்; புடைவை விற்பாருமாம்; "நோக்குநுழை கல்லா நுண்மைய........அறுவை" பொருந. ௮௨ - ௩.

௫௪. பொன்னுரை காண்போர் - பொன்னை உரைத்தவுரையை அறுதியிடும் பொன்வாணிகர்.

௫௫. பன்மணிபகர்வோர் - பலவகைப்பட்ட இரத்தினங்களை விற்கும் வாணிகர்.

௫௬. அந்தணர் வீதி.

௫௭. இராசப் பெருந்தெருவும் மந்திரிகள்வீதியும். [யோர்.

௫௮. எனை = எனை; விகாரம். ஏனோர் - சேனாதிபதிகள் முதலி

௫௯. "மன்றமும் பொதியிலும்" (மணி. ௨௦ : ௩௦.) சந்தி - முச்சந்தியும் ஐஞ்சந்தியும். சதுக்கம் - நாற்சந்தி; "சதுக்கமுஞ் சந்தியும் புதப்பூங் கடம்பு, மன்றமும் பொதியிலும்" முருகு. ௨௨௫ - ௬.

௬௦. புதுக்கோள் யானை - புதிதாகப்பிடிக்கப்பட்டு வந்த யானை; (மணி. ௧௨ : ௪௫, ௧௮ - ௧௬௮.) பொற்றார்ப்புரவி - பொன்னாலாகிய கிண்கிணி மாலையையணிந்த குதிரை.

௬௧. கதிக்குற - நடையில் மேம்பாடுற. வடிப்போர் - பயிற்றும் யானைப்பாகரும், வாசிவாரியரும்; வடித்தல் - பயிற்றல்; "வடிகயிறுய்ந்து" சீவக. ௭௧௪.

௬௨. சேண் - நெடுந்தூரம். செய்குன்றம் - கட்டுமலை.

(பி - ம்.) ௫௧. 'போகம்புரக்குமுழவர்' ௫௨. 'ஒண்ணூற்கைவினை' ௫௯. 'மன்றமுங் கவலையும்' ௬௧. 'கவின்கொள்வீதியும்'.

வேணவா மிருக்கும் விரைமரக் காவும்
விண்ணவர் தங்கள் விசும்பிட மறந்து
நண்ணுதற் கொத்த நன்னீ ரிடங்களுஞ்
சாலையுங் கூடமுந் தமனியப் பொதியிலுங்
கோலங் குயின்ற கொள்கை யிடங்களுங்
கண்மகிழ் வுற்றுக் கொண்ட வேடமோ
டந்தர சாரிக ளமர்ந்தினி துறையு
மிந்திர விகார மெனவெழில் பெற்று

---

௬௩. வேணவா - வேட்கையாலுண்டாகிய அவா; வேட்கையாவது, பொருள்கண்மேற் றோன்றும் பற்றுள்ளம்; அவாவாவது, அப்பொருள்களைப் பெறவேண்டுமென்று மேன்மேல் நிகழும் ஆசை; "செய்யுண் மருங்கின் வேட்கை யென்னு, மையை னிறுதி யவாமுன் வரினே, மெய்யொடுங் கெடுத லென்மனார் புலவர், டகார ணகார மாதல்வேண்டும்" (தொல். உயிர். சூ. ௨௮௮) என்பதனால் முடித்துக்கொள்க.

௬௫. நீரிடங்கள் - பொய்கை முதலியவைகள்.

௬௬. சாலை - அறச்சாலைகள். தமனியப்பொதியில் - பொன்னாலாகிய அம்பலம்; "பொன்னம்பலமு முண்டு" (சிலப். பதி. ௪௰ - ௪௧) என்பர் அடியார்க்குநல்லார்; "கண்ணெலாங் கவர்வன கனக கூடமும்" (சூளா. நகர. ௭) என்று வருதல் காண்க.

௬௭. கோலங்குயின்ற - சித்திரமெழுதப்பெற்ற. கொள்கையிடங்கள் - விரதங்களை அனுட்டித்திருத்தற்குரிய தவச்சாலைகள்; கொள்கை - விரதம்; "தாவில் கொள்கைத் தந்தொழின் முடிமார்" (முருகு. ௮௧); "கோவலன் சென்றக் கொள்கையி னிருந்த, காவுந்தி யையையைக் கைதொழு தேத்தி" சிலப். ௧௪ : ௧௫ - ௬.

௨௧ - ௬௮. வியன்மலி மறுகுமுதற் கொள்கை யிடங்களிறுதியாக வுள்ள இடவிசேடங்களை மணிமேகலை கண்டென்க. இவ்வடிகளிற் போலப் பற்பலசாதியாருடைய குடியிருப்புக்களையும் இளங்கோவடிகள் கூறியிருத்தல் காண்க: "வேயா மாடமும் வியன்கல விருக்கையும்...... ......பாடல்சால் சிறப்பிற் பட்டினப் பாக்கமும்" சிலப். ௫ : ௭ - ௫௮.

௬௯. அந்தரசாரிகள் - ஆகாயசாரிகள். அமர்ந்து - விரும்பி.

௭௰. இந்திரவிகாரம் - புத்தனாலயத்தில் இந்திரனால் நிருமிக்கப் பட்ட அரங்கு; 'விகாரம் - கையாற் கருவியாற் பண்ணாது மனத்தால் நிருமித்தல்' என்பர் அடியார்க்குநல்லார்; சிலப். ௧௰ : ௧௪.

௬௯ - ௭௰. இந்திர விகாரமென்றது, காவிரிப்பூம்பட்டினத்துப் புத்த சைத்தியத்துள்ள ஏழரங்கினையும்; இஃது, 'அந்தர சாரிக ளமர்ந்தினிதுறையும்' என்பதனாற் பெறப்பட்டது; "அந்தர சாரிக ளறைந்தனர் சாற்று, மிந்திர விகார மேழுடன் போகி" (௧௰ : ௧௩ - ௪), "இந்திர விகார மேழுடன் புக்காங், கந்தர சாரிக ளாறைம் பதின்மர்" (௨௭: ௯௨ - ௩) எனச் சிலப்பதிகாரத்து வருதல் காண்க.

(பி - ம்.) ௬௪. 'விசும்பிடை'

நவையறு நாத னல்லறம் பகர்வோ
ருறையும் பள்ளிபுக் கிறைவனை நல்லாள்
கோவலன் றாதை மாதவம் புரிந்தோன்
பாதம் பணிந்துதன் பாத்திர தானமுந்
தானப் பயத்தாற் சாவக மன்னவ
னானமொன் றின்றி யுலகாள் செல்வமுஞ்
செல்வற் கொணர்ந்தத் தீவகப் பீடிகை
யொல்காது காட்டப் பிறப்பினை யுணர்ந்தது
முணர்ந்தோன் முன்ன ருயர்தெய்வந் தோன்றி

---

௭௧. நவை - குற்றம். நாதன் - புத்தன். நல்லறம் - அருளறம். பகர்வோர் - சங்கத்தார்.

௭௨. பள்ளி - தவத்தோருறைவிடம்; "ஐயருறை பள்ளியிடம்" சீவக. ௧௭௮௨.

௭௦ - ௭௨. இந்திரவிகாரம் பள்ளிக்கு உவமம்.

௭௩. கோவலன்றாதை-மாசாத்துவான்; இவன், மதுரையிற்கோவலன் கொலையுண்டது முதலியவற்றை மாடலனென்னும் மறையவன் கூறக்கேட்டுத் தன்பொருளையெல்லாம் தானஞ்செய்துவிட்டுக் காவிரிப் பூம்பட்டினத்திற் புத்தசைத்தியத்துள்ள ஏழு விகாரங்களிலுமிருந்து நோற்கும் பௌத்த முனிவர்களுக்கு முன்னேசென்று துறவுபூண்டானாதலின், 'மாதவம்புரிந்தோன்' என்றார்; இதனை, "மைந்தற் குற்றது மடந்தைக் குற்றதுஞ், செங்கோல் வேந்தற் குற்றதுங் கேட்டுக், கோவலன் றாதை கொடுந்துய ரெய்தி, மாபெருந் தானமா வான்பொரு ளீத்தாங், கிந்திர விகார மேழுடன் புக்காங், கந்தர சாரிக ளாறைம் பதின்மர், பிறந்த யாக்கைப் பிறப்பற முயன்று, துறந்தோர் தம்முன் றுறவி யெய்தவும்" (௨௭: ௮௮ - ௯௫), "மாசாத்துவான் றுறப்பவும்" (௨௯: உரைப்பாட்டுமடை) எனச் சிலப்பதிகாரத்து வருதலாலும், இக்காதையிற் பின்னேவரும், "தையல்கேள்" (௯௩) என்பது முதலியவற்றாலும் அறிந்துகொள்க.

௭௪. தன் பாத்திரதானம் - தன்கையிலுள்ள அமுதசுரபியென்னும் பாத்திரத்தாற் செய்யப்படும் அன்னதானம்.

௭௫. தானப்பயம் - முற்பிறப்பிற் செய்த அன்னதானத்தாலுண்டாகிய புண்ணியம்; பயம் - பிரயோசனம். சாவகமன்னவன் - சாவக நாட்டரசனாகிய புண்ணியராசன்.

௭௫ - ௬. உலகாளுதற்குக்காரணம் தானப்பயன்.

௭௭. செல்வற் கொணர்ந்து - புண்ணியராசனை அழைத்துவந்து. பீடிகை - புத்தபீடிகை.

௭௮. ஒல்காது - தளராது. ௭௭ - ௮. பீடிகையைக்காட்ட.

௭௯. உணர்ந்தோன் - புண்ணியராசன். தெய்வம் - தீவதிலகை.

(பி - ம்.) ௭௪. 'பாத்திரத்தாலனமுந்' ௭௮. 'ஒல்லாதுகாட்ட'

மனங்கவல் கெடுத்தது மாநகர் கடல்கொள
வறவண ரடிகளுந் தாயரு மாங்குவிட்
டிறவா திப்பதிப் புகுந்தது கேட்டதுஞ்
சாவக மன்னன் றன்னா டெய்தத்
தீவகம் விட்டித் திருநகர் புகுந்ததும்
புக்கபி னந்தப் பொய்யுரு வுடனே
தக்க சமயிக டந்திறங் கேட்டது
மவ்வவர் சமயத் தறிபொரு ளெல்லாஞ்
செவ்வி தன்மையிற் சிந்தைவை யாதது
நாத னல்லறங் கேட்டலை விரும்பி
மாதவற் றேர்ந்து வந்த வண்ணமுஞ்
சொல்லின ளாதலிற் றாயோய் நின்னையென்
னல்வினைப் பயன்கொ ணுன்கண் டதுவெனத்
தையல் கேணின் றாதையுந் தாயுஞ்
செய்ததீ வினையிற் செழுநகர் கேடுறத்

அ0. மனங்கவல் கெடுத்ததும் - உள்ளம் கவலைகொள்ளுதலைக் கெடுத்ததும்: கவல் - கவலுதல்; முதனிலைத்தொழிற்பெயர். நகர் - காவிரிப்பூம்பட்டினம்.

அஉ. இப்பதியென்றது வஞ்சியை. கேட்டதும் - (தீவதிலகை யால்) தான் கேட்டதும்.

அச. தீவகம் - மணிபல்லவம்.

அரு. புக்கபின் - புகுந்து கண்ணகி கோட்டம் தொழுதபின். பொய்யுரு - மாதவன் வடிவு.

அசு. சமயிகள் - அளவைவாதிமுதலியோர்.

அஅ. செவ்விது அன்மையின் - திருத்தமுடையுன அல்லாமை யின்; செவ்விது: பன்மை யொருமைமயக்கம்.

அகூ. நாதன் நல்லறம் - புத்தன் கூறிய தருமங்களை; மணி. உஅ: எக.

கூ0. மாதவற்றேர்ந்து - அறவணவடிகளைத்தேடி.

கூக. 'ஆயோய்' என்றது முதலியன கோவலன்றாதை வார்த்தை.

கூ௩. தையல்: விளி. தாதையும் தாயும் - கோவலனுங் கண்ணகி யும்.

கூச. தீவினை - முற்பிறப்பிற் சங்கமனைக்கொல்வித்ததனாலாகிய பாவம். நகர் - மதுரை.

(பி - ம்.) அஉ. 'புகுந்ததுங் கேட்டதும்' அ௩. 'தன்னோடெய்த' அச. 'தீவகம் விடீஇத்திரு' அரு. 'புக்கவளிந்த.' அஅ. 'செவ்வித் தன்மை' கூச. 'திருநகர்'

துன்புற விளிந்தமை கேட்டுச் சுகத
னன்புகொ ளறத்திற் கருகனே னாதலின்
மனைத்திற வாழ்க்கையை மாயமென் றுணர்ந்து
தினைத்தனை யாயினுஞ் செல்வமும் யாக்கையு
நிலையா வென்றே நிலைபெற வுணர்ந்தே
மலையா வறத்தின் மாதவம் புரிந்தேன்
புரிந்த யானிப் பூங்கொடிப் பெயர்ப்படூஉந்
திருந்திய நன்னகர் சேர்ந்தது கேளாய்
குடக்கோச் சேரலன் குட்டுவர் பெருந்தகை
விடர்ச்சிலை பொறித்த வேந்தன் முன்னாட்

---

௯௫. விளிந்தமை - இறந்தமை. சுகதன் - புத்தன்; நல்ல வருகையையுடையவனென்று பொருள்; நல்ல நடையையுடையவனென்றுமாம்.

௯௪ - ௫. தீவினையிற் கொலையுண்டிறந்தமையைக்கேட்டு.

௯௬. அன்புகொள் அறம் - நல்லறம். அருகன் - பக்குவி.

௯௭. மனைத்திறவாழ்க்கை - இல்வாழ்க்கை. மாயம் - பொய்.

௯௮. தினைத்தனையாயினும் - தினையளவாவது.

௯௮ - ௯. மணி. உஉ : ௧௩௫ - ௬.

௧00. பௌத்ததருமம் பூர்வோத்தர விரோதமில்லாததென்பாராதலின், 'மலையாவறத்தின்' என்றார்; மலைதல் - மாறுபடல்; "மாறாத் திருவற மூர்த்தியை" (௬), "முன்பின் மலையா மங்கலமொழியின்" (உ௬௧) என இந்நூல், ௩0 - ஆம் காதையில் வருதலுங்காண்க. புரிந்தேன் - செய்தேன்.

௧0௧. கொடி - வஞ்சி. ௧0௨. நகர் - வஞ்சிநகர்.

௧0௧-௨. இந்நகர், "பொற்கொடிப் பெயர்ப்படூஉம் பொன்னகர்" (உ௬ : ௬௨) என்று முன்னும் கூறப்பட்டது.

௧0௩. குடக்கோச்சேரலன் - மேனாட்டிற்கு அரசனாகிய சேரன்; குடக்கு - மேற்கு; கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுள் ஒன்றாகிய குடநாட்டிற்கு அரசனென்பதுபற்றிக் குடக்கோவென்றாரெனினுமமையும்; "குடக்கோ முனிசேரன்" (சிலப். சிறப்.) குட்டுவர் பெருந்தகை-குட்டநாட்டார்க்கு அரசன்; குட்டமும் கொடுந்தமிழ் நாடுகளுள் ஒன்று; "குடக்கோக் குட்டுவன்" (சிலப். உ௬ : ௬௧); "இயறேர்க் குட்டுவன்" சிறுபாண். ௪௯.

௧0௪. விடர்ச்சிலை பொறித்த வேந்தன் - நெடுஞ்சேரலாதன்; இவன் வடநாட்டரசர்களை வென்று சென்று இமயமலையில் தனது இலச்சினையாகிய விற்பொறியைப் பொறித்தமையால், இமயவரம்பனெனவும், விடர்ச்சிலை பொறித்த வேந்தனெனவும் பெயர்பெற்றான்; இவனை இமய

(பி - ம்.) ௯௫ - ௬. 'விளிந்தமைகேட்டுச் சுகத்த, னங்கொன்றறத்திற்கு' ௯௮. 'தினைத்தனைத்தானும்' ௯௯. 'நிலையாதென்றே விலைபெற வுணர்ந்து' ௧0௧ - ௨. 'பெயர்படு, திருந்திய'

துப்படு செவ்வாய்த் துடியிடை யாரொடு
மிப்பொழில் புகுந்தாங் கிருந்த வெல்லையு
ளிலங்கா தீவத்துச் சமனொளி யென்னுஞ்
சிலம்பினை யெய்தி வலங்கொண்டு மீளுந்
தரும சாரணர் தங்கிய குணத்தோர்
கருமுகிற் படலத்துக் ககனத் தியங்குவோ
ரரைசற் கேது வவ்வழி நிகழ்தலிற்
புரையோர் தாமுமிப் பூம்பொழி லிழிந்து
கற்றலத் திருந்துழிக் காவலன் விரும்பி
முற்றவ முடைமையின் முனிகளை யேத்திப்

வரம்பன் நெடுஞ்சேரலாதனெனவும் கூறுவர்; இது, பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்தாலுணரப்படும்; "இமயஞ் சூட்டிய வேம விற்பொறி, மாண்வினை நெடுந்தேர் வானவன்" (௩௯) எனப் புறநானூற்றிலும், "விடர்ச்சிலை பொறித்த விறலோன்" (௨அ : ௧௩௫) எனச் சிலப்பதிகாரத்திலும் இவன் கூறப்பட்டிருத்தல் காண்க.

௧௦௫. துப்பு - பவளம். துடி - உடுக்கை.

௧௦௩ - ௬. சேரலனும் பெருந்தகையுமாகிய வேந்தன் முன்னொரு காலத்துத் துடியிடையாரொடும் இப்பொழிலிற் புகுந்து இருந்தவிடத் தென்க.

௧௦௭ - ௯. இலங்கைத் தீவத்துள்ள சமனொளியென்னும் மலையை யடைந்து வலங்கொண்டு மீண்ட சாரணர். இம்மலை, சமந்தமென்றும் சமந்தகூடமென்றும் பெயர்பெறும். இதன் வரலாறு, இந்நூல் ௧௧-ஆம் காதை ௨௨-ஆம் அடியின்குறிப்பிற் கூறப்பட்டது. தங்கிய குணத்தோர்-குணங்கள் தங்கப்பெற்றோர்.

௧௧௦. முகிற்படலம் - மேகக்கூட்டம். ககனம் - ஆகாயம். ககனத் தியங்கல் இருத்திகளில் ஒன்று.

௧௧௧. அரசற்கு - இமயவரம்பனுக்கு ஏது அவ்வழி நிகழ்தலின் - நல்வினையாகிய காரணம் பயனளித்தற்கு அவ்விடத்தே தோற்றுதலி னாலே.

௧௧௨. புரையோர் - மேற்கூறிய தருமசாரணர்.

௧௦௬ - ௧௨. சாரணரும் குணத்தோரும் இயங்குவோருமாகிய புரையோர்.

௧௧௩. கற்றலத்து - சிலாதலத்தில். காவலன் - சேரன்.

௧௦௪ - ௧௩. வேந்தன் இருந்தவெல்லையுள் அவனுக்கு ஏது நிகழ் தலிற் புரையோரும் இழிந்து அப்பொழிலிற் கற்றலத்திருந்தபொழுது.

௧௧௪. முனிகளை - தருமசாரணரை.

(பி - ம்.) ௧௦௫. 'துவர்படுசெவ்வாய்' ௧௦௯ - ௧௦. 'தருமசாதனர், தன்னின் மூத்தார்க்கு முகிற்படலத்திற்ககன' ௧௧௪. 'முனிகளையேவிப்'

பங்கயச் சேவடி விளக்கிப் பான்மையி
னங்கவர்க் கறுசுவை நால்வகை யமிழ்தம்
பாத்திரத் தளித்துப் பலபல சிறப்பொடு
வேத்தவை யாரொடு மேத்தின னிறைஞ்சலிற்
பிறப்பிற் றுன்பமும் பிறவா வின்பமு
மறத்தகை முதல்வ னருளிய வாய்மை
யின்ப வாரமு திறைவன் செவிமுதற்
றுன்ப நீங்கச் சொரியு மந்நா
ணின்பெருந் தாதைக் கொன்பது வழிமுறை
முன்னோன் கோவலன் மன்னவன் றனக்கு
நீங்காக் காதற் பாங்க னாதலிற்
றுங்கா நல்லறந் தானுங் கேட்டு
முன்னோர் முறைமையிற் படைத்ததை யன்றித்
தன்னா ளியன்ற தனம்பல கோடி
யெழுநா ளெல்லையு ளிரவலர்க் கீத்துத்
தொழுதவம் புரிந்தோன் சுகதற் கியற்றிய

---

௧௧௬. அறுசுவையாவன: கைப்பு, கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பு என்பன; (குறள், ௬௨௮, பரிமேல்.) நால்வகையமிழ்தமாவன: உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன; மணி. ௨௮: ௨௬௧-௨. அமிழ்தம் - உணவு.

௧௧௫-௮. காவலன், விரும்பி ஏத்தி விளக்கி அளித்து ஏத்தி இறைஞ்சலினென்க.

௧௨௰. அறத்தகைமுதல்வன் - புத்தன்; தருமராசனென்றவாறு. வாய்மை - நால்வகைச்சத்தியம்.

௧௧௯-௨௰, மணி. ௨: ௬௬-௭, ௩௰: ௧௮௬-௮.

௧௨௧. இறைவன் செவிமுதல் - அரசனுடைய செவியிடத்தே.

௧௨௰-௨௧. வாய்மையாகிய அமுதை.

௧௨௩. நின்பெருந்தாதைக்கு - உன் தந்தையாகிய கோவலனுக்கு.

௧௨௭. முறைமையின் - நல்வழியாலே. முன்னோர் தேடிவைத்த பொருளையல்லாமல்.

௧௨௯. எழுநாளென்றல் ஒருமரபு.

௧௩௰. புரிந்தோன் - முற்கூறிய முன்னோனாகிய கோவலன். சுகதற்கு - புத்தனுக்கு.

(பி-ம்.) ௧௧௫. 'விளக்கிய பான்மையின்' ௧௧௬. 'அமிர்தம்' ௧௧௮. 'வேந்தனிறைஞ்சலின்' ௧௨௨. 'சொரியு முன்னாளில்' ௧௨௯. 'எல்லையிர வலர்க்களித்து'

வானோங்கு சிமையத்து வாலொளிச் சயித்த
மீனோர்க் கெல்லா மிடர்கெட வியன்றது
கண்டுதொழு தேத்துங் காதலின் வந்தித்
தண்டாக் காட்சித் தவத்தோ ரருளிக்
காவிரிப் பட்டினங் கடல்கொளு மென்றவத்
தூவுரை கேட்டுத் துணிந்திவ ணிருந்த
தின்னுங் கேளாய் நன்னெறி மாதே
தீவினை யுருப்பச் சென்றநின் றாதையுந்
தேவரிற் றோற்றிமுற் செய்தவப் பயத்தா
லாங்கத் தீவினை யின்னுந் துய்த்துப்
பூங்கொடி முன்னவன் போதியி னல்லறந்
தாங்கிய தவத்தாற் றன்றவந் தாங்கி
காதலி தன்னொடு கபிலையம் பதியி

---

௧௩௧. சிமையத்து - மலையில். வாலொளிச்சயித்தம் - வெள்ளிய ஒளியையுடைய ஆலயம்; சயித்தம் - சைத்தியமென்னும் வடமொழிச் சிதைவு; இதுசேதியமெனவும் வழங்கப்பெறும்; மணி. ௨அ : ௧௭௫.

௧௩௨. ஈனோர்க்கு - இவ்வுலகத்தோர்க்கு; "ஈனோர்வடிவில்" (சிலப். பதி. ௫௩, ௨௩ : ௧௭௬); "ஈனோர்க் குரைப்பாம் பதிகத்து வியன்ற வாறே" சீவக. ௨௯.

௧௩௪. தண்டாக்காட்சி - நீங்காத அறிவு.

௧௩௩ - ௪. இத்தவத்தோரென்றது, ஆண்டுள்ள முனிவர்களை.

௧௩௬. யான் இவ்விடமிருந்தது தூவுரை கேட்டமையாலேயே யென்க.

இதுகாறும், தான் துறந்ததற்கும் வஞ்சிநகரடைந்ததற்கும் ஆண்டே வதிவதற்கும் காரணங்கூறிய மாசாத்துவான், மேலே பெரியோர் தனக்குக்கூறிய செய்தி முதலியன கூறுவான்.

௧௩அ. சென்ற - கொலையுண்டிறந்த.

௧௩௯. முற்செய் தவப்பயத்தால் தேவரிற் றோற்றியென்க.

௧௪0. ஆங்கத்தீவினை - முற்கூறிய தீவினையின் பயனை. துய்த்து - அனுபவித்து.

௧௪௧. பூங்கொடி : விளி. முன்னவன் - புத்தன்.

௧௪௩. காதலி - கண்ணகி. கபிலையம்பதி - கபிலநகர்; இது புத்தன் பிறந்தஇடம்; கபிலவஸ்துவென்றுங் கூறப்படும்.

(பி - ம்.) ௧௩௧ - ௨. 'வால்வளைச் சயிந்தம், மேனோர்க் கெல்லா மடர்கெட' ௧௩௩. 'காதலன்வந்து' ௧௩௫ - ௬. 'மென்ற, தாழுரை கேட்டுத் துணிந்தியா னிருந்தேன்' ௧௩அ. 'தீவினையிறுப்ப' ௧௩௯. 'தோற்றமுன்' ௧௪௧. 'போதியர்நல்லறம்'

ஞாத னல்லறங் கேட்டுவீ டெய்துமென்
றற்புதக் கிளவி யறிந்தோர் கூறச்
சொற்பய னுணர்ந்தேன் றோகை யானு
மந்நா ளாங்கவ னறநெறி கேட்குவ
னின்னது தன்மையந் நெடுநிலைக்கந்திற் றுன்னிய
துவதிக னுரையிற் றுணிந்தனை யன்றோ
தவநெறி யறவணன் சாற்றக் கேட்டன
னுங்கவன் றானுநின் னறத்திற் கேதுப்
பூங்கொடி கச்சி மாநக ராதலின்
மற்றம் மாநகர் மாதவன் பெயர்நாட்
பொற்றொடி தாயரு மப்பதிப் படர்ந்தன
ரன்னதை யன்றியு மணியிவை கேளாய்
பொன்னெயிற் காஞ்சி நாடுகவி னழிந்து
மன்னுயிர் மடிய மழைவளங் கரத்தலி
னந்நகர் மாதவர்க் கைய மிடுவோ

கசச. நாதன் - புத்தன். எய்தும் - அடைவான்.

கசரு. கிளவி - சொல்.

கசசு. பயன் - பிரயோசனம். தோகை: விளி.

கசஎ. அவனறநெறி - புத்தன் உபதேசிக்கும் அறவழிகளை.

கசசு - எ. யானும் அறநெறிகேட்குவன்.

கசஅ. நின்னது தன்மை - உனது பிற்காலச் செய்தியை.

கசஅ - க. நினது தன்மையைத் துவதிகனுரையால் தெளிந்தா யன்றோ.

கரு0. (கந்திற்பாவையால் நீ அறிந்தாயென்பதை) அறவணவடிகள் சொல்லக்கேட்டேன்.

கருக. அவன்றானும் - அறவணவடிகளும். ஏது - ஏதுநிகழ்ச்சிக் குரிய இடம்.

கருஉ. பூங்கொடி : விளி.

கருச. பொற்றொடிதாயரும் - உன்னுடைய தாயராகிய மாதவியும் சுத மதியும்.

கருங - ச. பெயர்நாளில் தாயரும் உடன்சென்றார்.

கருசு. காஞ்சிநாடு - காஞ்சிநகரத்தையுடைய நாடு.

கருஎ. மூ. மணி. கக : அங. மடிய - இறக்க. கருஅ. ஐயம் - பிச்சை.

கருசு - எ. மணி. உக : கசஎ - அ.

(பி - ம்.) கசரு - சு. 'கழறச்சொற்பய' கசஎ. 'அறநெறிகடவேன்' கசக. 'துணிந்தனை தவநெறி' கருச. 'பொற்றொடித்தாயரும்' கருரு. 'அன்னதன்றியும்'

ரின்மையி னிந்நக ரெய்தினர் காணு
யாருயிர் மருந்தே யந்நாட் டகவயிற்
காரெனத் தோன்றிக் காத்தனின் கடனென
வருந்தவ னருள வாயிழை வணங்கித்
திருந்திய பாத்திரஞ் செங்கையி னேந்திக்
கொடிமதின் மூதூர்க் குடக்கணின் றோங்கி
வடதிசை மருங்கின் வானத் தியங்கித்
தேவர் கோமான் காவன் மாநகர்
மண்மிசைக் கிடந்தென வளந்தலை மயங்கிய
பொன்னகர் வறிதாப் புல்லென் றுயது
கண்டுளங் கசிந்த வொண்டொடி நங்கை
பொற்கொடி மூதூர்ப் புரிசை வலங்கொண்டு
நடுநக ரெல்லை நண்ணின ளிழிந்து
தொடுகழற் கிள்ளி துணையிளங் கிள்ளி
செம்பொன் மாச்சினைத் திருமணிப் பாசடைப்
பைம்பூம் போதிப் பகவற் கியற்றிய

கருகூ. எய்தினர் - (அம்மாதவர்) வந்தார். கசுo. மருந்தே : விளி.
கசுo - சுக. மணி. உக : கருஎ - அ.

கசுக. காரை உவமைகூறினார், இவள் கைம்மாறு கருதாமலளிக்கின்றமையின் ; "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட், டென்னாற் றுங் கொல்லோ வுலகு" (குறள், உகக); "வந்து தோன்றினன் மாமழை போலென" (உஅ : கஅரு) என்பர்பின்.

கசுஉ. மாசாத்துவானை 'அருந்தவன்' என்றார், துறவு பூண்டமையின்.

கசுச. மூதூர்க்குடக்கண் - பழைமையாகிய வஞ்சிநகரத்தின் மேற்றிசைக் கண்ணே. கசுசு. மாநகர் - அமராவதி.

கசுஅ. பொன்னகர் - காஞ்சிநகர். வறிதாப் புல்லென்றுயது - செல்வமின்றிப் பொலிவிழந்திருந்ததை.

கசுகூ. நங்கை - மணிமேகலை. கஎo. புரிசை - மதில்.

கஎஉ. தொடுகழற் கிள்ளியின் தம்பியாகிய இளங்கிள்ளி ; கிள்ளி - சோழன்.

கஎங. சினை - கிளை. திருமணி - அழகிய மரகதமணி. பாசடை - பசிய இலை.

கஎங - ச. இவ்வடிகளிற் கூறியது போலவே, "பவளச் செழுஞ்

(பி - ம்.) கருகூ - சுo. 'காணுவாருயிர்' கசுஉ. 'அருந்தவரருள' கசுஎ. 'மிசைகிடந்தனவளந்தலை மயக்கிப்' கசுஅ. 'வறிதாய்ப்புல்' கஎo - எக. 'புரிசை புலங்கொண்டு, நடுகெரெல்லை நண்ணாளளிழிந்து'

சேதியந் தொழுது தென்மேற் காகத்
தாதணி பூம்பொழி ருன்சென் றெய்தலும்
வையங் காவலன் றன்பாற் சென்று
கைதொழு திறைஞ்சிக் கஞ்சுக னுரைப்போன்
கோவலன் மடந்தை குணவதம் புரிந்தோ
ளாவலந் தீவிற் றுனனி மிக்கோ
ளங்கையி னேந்திய வமுத சுரபியொடு
தங்கா திப்பதித் தருமத வனத்தே
வந்து தோன்றினண் மாமழை போலென
மந்திரச் சுற்றமொடு மன்னனும் விரும்பிக்
கந்திற் பாவை கட்டுரை யெல்லாம்
வாயா கின்றென வந்தித் தேத்தி
யாய்வளை நல்லா டன்னுழைச் சென்று
செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ

சுடர் மரகதப் பாசடைப், பசும்பொன் மாச்சினை விசும்பகம் புதைக்கும், போதி" (வீர. யாப்பு. ௧௧, உதாரணம்) என்று மகாபோதியை இங்ஙனம் சிறப்பித்துக் கூறியிருத்தல் காண்க. மகாபோதி பொன்மயமாயிருந்த தென்பதுபற்றிப் பௌத்தர் இக்காலத்தும் அரசமரத்தைப் பொற் றகட்டால் அலங்கரித்து வழிபடுவர்.

௧௭௫. சேதியம் - கோயில்.

௧௭௨ - ௫. துணையிளங்கிள்ளி பகவற்கியற்றிய சேதியத்தைத் தொழுது.

௧௭௭. வையங்காவலன் - துணையிளங்கிள்ளி.

௧௭௮. கஞ்சுகன் - சட்டையிட்ட பிரதானி.

௧௭௯. 'கோவலன்மடந்தை' என்பது முதலியன கஞ்சுகன்கூற்று. மடந்தை - மகள்.

௧௮௨. தருமதவனம் - தருமத்தைக்கொடுக்கும் வனம்.

௧௮௩. மழைபோல் வந்து தோன்றினளென்று கஞ்சுகன் கூற.

௧௮௪. மந்திரச்சுற்றம் - மந்திரிகள்.

௧௮௫. கந்திற்பாவையென்றது, காஞ்சியில் ஒரு தூணில் உறையும் தெய்வத்தை.

௧௮௬. வாயாகின்றென - உண்மையாகின்றதென்று. வந்தித்தேத்தியது. மேற்கூறிய கந்திற்பாவையை.

௧௮௭. நல்லாள்தன்னுழை - மணிமேகலையிடத்து.

௧௮௮. 'செங்கோல்' என்பதுமுதல் துணையிளங்கிள்ளி கூற்று.

௧௮௮. மணி. ௭ : ௮ - ௧௦.

(பி -ம்.) ௧௭௫. 'சேதிமந்தொழுது' ௧௮௨. 'தருமதாவனத்தே' 'தருமசார்வனத்தே' ௧௮௮. 'தெய்வம்பிழைத்தோ'

கொங்கவிழ் குழலார் கற்புக்குறை பட்டோ
நலத்தகை நல்லாய் நன்னா டெல்லா
மலத்தற் காலை யாகிய தறியேன்
மயங்குவேன் முன்னரோர் மாதெய்வந் தோன்றி
யுயங்கா தொழிநின் னுயர்தவத் தாலோர்
காரிகை தோன்று மவள்பெருங் கடிஞையி
னாருயிர் மருந்தா லகனில முய்யு
மாங்கவ ளருளா லமரர்கோ னேவலிற்
றூங்கா மாரியுந் தானனி பொழியு
மன்னா ளிந்த வகனகர் புகுந்த
பின்னா ணிகழும் பேரறம் பலவாற்
கார்வறங் கூரினு நீர்வறங் கூராது
பாரக வீதியிற் பண்டையோ ரிழைத்த
கோமுகி யென்னுங் கொழுநீ ரிலஞ்சியொடு
மாமணி பல்லவம் வந்த தீங்கெனப்
பொய்கையும் பொழிலும் புனைமினென் றறைந்தத்
தெய்வதம் போயபிற் செய்தியா மமைத்த
திவ்விட மென்றே யவ்விடங் காட்டவத்

ககூக. அலத்தற்காலை - வறுமைக்காலம். அறியேன் - அறியேனாகி.

கஅஅ - ககூக. மணி. கரு : சகூ - ரு0.

ககூங. உயங்காதொழி - வருந்தவேண்டா.

ககூச. தோன்றும் - தோன்றுவாள். கடிஞை - பிச்சைப்பாத்திரம்.

ககூரு. ஆருயிர்மருந்து - சோறு. ககூஎ. மாரி - மேகம்.

ககூசு - எ. அவளருளால் கோன் ஏவலிற் பொழியும்.

ககூஅ. அன்னாள் - அம்மங்கை. ககூகூ. பின்னாள் - பிற்காலத்து.

உ00. கார்வறங்கூரினும் - மழைபெய்யாதொழியினும். கூராது : [முற்று.

உ0க. பண்டையோரிழைத்த - முன்னோர் செய்த.

உ0உ. இலஞ்சி - பொய்கை.

உ0ச. புனைமின் - அலங்கரித்துச் செய்யின்; பிறரையும் உளப்படுத்திக் கூறியது இது.

உ0சு. (துணையிளங்கிள்ளி) காட்ட.

(பி - ம்.) ககூஉ. 'முன்னரோமாதெய்வந்' உ0ச - ரு. 'பொதியிலும் புனைமினென்றறைந்த, தெய்வதம்'

தீவகம் போன்ற காவகம் பொருந்திக்
கண்டுளஞ் சிறந்த காரிகை நல்லாள்
பண்டையெம் பிறப்பினைப் பான்மையிற் காட்டிய
வங்கப் பீடிகை யிதுவென வறவோன்
பங்கயப் பீடிகை பான்மையின் வகுத்துத்
தீவ திலகையுந் திருமணி மேகலா
மாபெருந் தெய்வமும் வந்தித் தேத்துதற்
கொத்த கோயி லுளத்தகப் புனைந்து
விழவுஞ் சிறப்பும் வேந்த னியற்றத்
தொழுதகை மாதர் தொழுதன ளேத்திப்
பங்கயப் பீடிகைப் பசிப்பிணி மருந்தெனு
மங்கையி னேந்திய வமுத சுரபியை
வைத்துநின் றெல்லா வுயிரும் வருகெனப்
பைத்தர வல்குற் பாவைதன் கிளவியின்
மொய்த்த மூவறு பாடை மாக்களிற்
காணார் கேளார் கான்முட மானோர்
பேணா மாக்கள் பேசார் பிணித்தோர்
படிவ நோன்பியர் பசிநோ யுற்றோர்

---

௨௦௭. தீவகம் - மணிபல்லவம். காவகம் - சோலையினுள்ளே.

௨௧௦. அங்கப்பீடிகை - மணிபல்லவத்திருந்த புத்த பீடிகை. அறவோன் - புத்தன்.

௨௧௧. வகுத்து - செய்து.

௨௧௪. உளத்தக - நினைத்தற்குத்தக. ௨௧௬. மாதர் - மணிமேகலை.

௨௧௭. பங்கயப்பீடிகை - பாதபீடிகையில்.

௨௧௯. வருகென - வருகவென்று மணிமேகலை சொல்ல.

௨௧௭ - ௯. பீடிகையில் அமுதசுரபியை வைத்தென்க.

௨௨௨. காணார் - குருடர். கேளார் - செவிடர். அவயவஹீனர்க்கு இரங்குதலைப் பத்துநிஷ்டைகளுள் ஒன்றென்பர்.

௨௨௩. பேணுமாக்கள் - பாதுகாக்கப்படாதமாக்கள்; என்றது அகதிகளை.

௨௨௨ - ௩. மணி. ௧௩ : ௧௧௧ - ௨.

௨௨௪. படிவநோன்பியர் - தவவேடத்தையும் நோன்பையுமுடையவர்.

(பி - ம்.) ௨௧௩. 'மாதெய்வந்தன்னையும்' ௨௧௬. 'துதித்தனளேத்தி' ௨௧௯. 'எல்லாவகையிரும்' ௨௨௦. 'தன்கையின்'

[illegible]

[illegible] (சிலப். கூ) [illegible]

[illegible]

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

இருபத்தொன்பதாவது

தவத்திறம்பூண்டு தருமங்கேட்ட காதை.

[இருபத்தொன்பதாவது மணிமேகலை, காஞ்சிமாநகர்க்கட்சென்ற பின்னர் அறவணரடிகளும் தாயருஞ்செல்ல அவரைக்கண்டு இறைஞ்சித் தருமங்கேட்ட பாட்டு.]

இறைஞ்சிய விளங்கொடி தன்னை வாழ்த்தி
யறந்திகழ் நாவி னறவண னுரைப்போன்
வென்வேற் கிள்ளிக்கு நாகநா டாள்வோன்
றன்மகள் பீலி வளைதான் பயந்த
புனிற்றிளங் குழவியைத் திவகம் பொருந்தித்
தனிக்கலக் கம்பளச் செட்டிகைத் தரலும்
வணங்கிக் கொண்டவன் வங்க மேற்றிக்
கொணர்ந்திடு மந்நாட் கூரிரு ளியாமத்
தடைகரைக் கணித்தா வம்பி கெடுதலு
மரக்கலங் கெடுத்தோன் மைந்தனைக் காணு

---

௧. இளங்கொடிதன்னை - மணிமேகலையை.

௩. வென் - வென்றி. கிள்ளி - நெடுமுடிக்கிள்ளி. நாகநாடாள்வோன் - வளைவணன்.

௪. மகளாகிய பீலிவளை. பயந்த - பெற்ற.

௫. குழவியை - குழந்தையை. திவகம் - மணிபல்லவம்.

௬. தனிக்கலம் - ஒற்றைக்கப்பல்.

௩-௬. பீலிவளை, தான் கிள்ளிக்குப் பயந்த குழவியைத் திவகத்தைப் பொருந்திக் கம்பளச் செட்டியின் கையில் தரலும்.

௭. அவன் - கம்பளச்செட்டி.

௮. கூரிருள்யாமத்து - மிக்க இருளையுடைய இடையிரவில்.

௯. அணித்தா - சமீபமாக. அம்பி - கப்பல்.

௰. கெடுத்தோன் - கம்பளச்செட்டி. மைந்தனை - குழந்தையை.

(பா-ம்.) [illegible] '[illegible] விளக்கொடி' ௫. 'பெய்பொருந்தி'

தரைசற் குரைத்தலு மவனயர் வுற்று
விரைவனன் றேடி விழாக்கோண் மறப்பத்
தன்விழாத் தவிர்தலின் வானவர் தலைவ
னின்னுயிர்த் தந்தை நெடுங்குலத் துதித்த
மன்னுயிர் முதல்வன் மகர வேலையுண்
முன்னிய வங்க முங்கிக் கேடுறப்
பொன்னி னூசி பசுங்கம் பளத்துத்
துன்னிய தென்னத் தொடுகட லுழந்துழி
யெழுநா ளெல்லை யிடுக்கண்வந் தெய்தா
வழுவாச் சீலம் வாய்மையிற் கொண்ட
பான்மையிற் றனாது பாண்டு கம்பளந்
தானடுக் குற்ற தன்மை நோக்கி
யாதி முதல்வன் போதி மூலத்து
நாத னாவோ னளிநீர்ப் பரப்பி

கக. அரைசற்கு - நெடுமுடிக்கிள்ளிக்கு. அயர்வுற்று - வருந்தி.

கஉ. விரைவனன் - விரைபவனாகி. தேடி - குழந்தையைத்தேடு தலால். விழாக்கோள் - இந்திரவிழாக்கொள்ளுதலை.

க௩. வானவர்தலைவன் - இந்திரன்.

கச. நின்னுயிர்த்தந்தை - கோவலன்.

க௫. மன்னுயிர் முதல்வனென்றார், அருளறம்பூண்டோனாதலின்.

க௬. முங்கி - முழுகி.

க௭. ஊசி வணிகனுக்கும், பசுங்கம்பளம் கடலுக்கும் உவமம்.

க௮. உழந்துழி - வருந்தி நீந்தியபொழுது.

க௫ - ௯. எழுநாளெல்லை உயிர்முதல்வன் தொடுகடலுழந்துழி யென்க (மணி. உ௮ : கஉ௩ - ௩௦); "நண்ணுவழி யின்றி நாள்சில நீந்த" (க௫ : ௩க) என்றார் சிலப்பதிகாரத்தும்.

'எழுநாள்' (க௯) என்பதைப் பின்வரும் 'கொண்ட' (உ௦) என்பத னோடு கூட்டினும் பொருந்தும்.

உ௦. சீலத்தை நால்வகைவாய்மையுடன் கொண்ட.

உக. பாண்டுகம்பளம் - வெள்ளைக்கம்பளமாகிய ஆசனம்.

உக - உ. மணி. கச : உ௮ - ௯.

உ௩ - ச. ஆதிமுதல்வனாகிய நாதனாகற்பாலோன்; என்றது, முற் கூறிய வணிகனை; இங்ஙனம் புத்தனாகற்பாலோரைப் போதிசத்துவ ரென்பர். அளி - பெருமை.

(பி - ம்.) கக. 'அரசர்க்குரைத்தலும்' க௬. 'முருங்கிக் கேடுற' க௮. 'கடனீந்துழி' க௯. 'எல்லையுருவந்தெய்த' உக - உ. 'கம்பளத் தானடுக்குற்ற' உ௩. 'அதிரமுதல்வன்' உச - ௫. 'நாதநாவான...நீர் பரப்பி, யெவ்வம்'

னெவ்வமுற் றுன்றன தெவ்வந் தீரெனப்
பவ்வத் தெடுத்துப் பாரமிதை முற்றவு
மறவர சாளவு மறவாழி யுருட்டவும்
பிறவிதோ றுதவும் பெற்றிய ளென்றே
*சாரண ரறிந்தோர் காரணங் கூற
வந்த வுதவிக் காங்கவள் பெயரைத்
தந்தையிட் டனனினைத் தையனின் றுறவியு
மன்றே கனவி னனவென வறைந்த
மென்பூ மேனிமணி மேகலா தெய்வ
மென்பவட் கொப்ப வவனிடு சாபத்து

*௨௪ - ௫. நாதனுவோன் கடலில் துன்பமுற்றான்; அவனது துன்பத்தைத் தீர்ப்பாயென்று மணிமேகலாதெய்வத்திற்கு இந்திரன்சொல்ல.

௨௬. பாரமிதை: மணி. ௨௬ : ௪௫; பாரமிதைபத்தும் உயிருறுப்புப் பொருணோர்ச்சிவகையான் முப்பதாமென்பர்; "அருணெறியாற் பாரமிதை யாறைந்து முடனடக்கிப், பொருண்முழுதும் போதியின்கீழ் முழுதுணர்ந்த முனிவரன்ற, னருண்மொழியா னல்வாய்மை யறிந்தவரே பிறப்பறுப்பார், மருணெறியாம் பிறநூலு மயக்கறுக்கு மாறுளதோ" (சித்தாந்தத்தொகை; சிவ - சித்தி. பரபக்கம், சௌத்ராந்திகன்மதம், ௨, ஞானப்.) பாரமிதையென்பதற்குக் கரையை அடைவதென்றுபொருள். ஈண்டுக்கூறிய தானமுதலியபத்தும் நிரம்பப்பெற்றவனுனமையின், புத்தன் தசபலனென்று வழங்கப்படுவன். இப்பத்தினுள், தானபாரமிதையை விளங்கக் கூறுவதாகிய தானபாரமிதையென்னும் நூலொன்று வடமொழியிலிருப்பதாகத் தெரிகின்றது. இது ஸ்ரீஹர்ஷகவி செய்த ஸம்ஸ்கிருத நைஷதம், ௫ - ஆம் ஸர்க்கத்துள்ள ௧௧ - ஆவது சுலோகத்தாலும் அதற்கு ஸ்ரீமல்லிநாதஸூரிசெய்த வியாக்கியானத்தாலும் உணரப்படுமென்பர். முற்றவும் - பூரிக்கவும்.

௧௪ - ௨௬. மணி. ௨௧ : ௧௮௧ - ௨. ௨௭. அறவாழி - தருமசக்கரம்.

௨௬ - ௮. எடுத்துப் பிறவிதோறும் உதவும்பெற்றியள்.

௨௮ - ௯. பெற்றியளென்றுகூற.

௩௦. அந்தவுதவிக்கு - மேற்கூறிய வணிகனைக் கரையேற்றிய அவ்வுபகாரத்தைத் தான் மறவாதிருத்தலைப் புலப்படுத்தற்பொருட்டு.

௩௧. தந்தை - கோவலன். நினை - நினக்கு. துறவியும் - துறத்தலையும்.

௧௪ - ௩௧. சிலப். ௧௫ : ௨௮ - ௩௭.

௩௦ - ௩௩. மணி. ௭ : ௩௩ - ௮.

௩௪. என்பவட்கொப்ப அவனிடுசாபத்து என்றதனால், மணிமேகலா தெய்வம் சாபமிட்டமை பெறப்பட்டது; அது, ௨௫ : ௧௯௮ - ௨௦௦-ஆம் அடிகளால் உணரப்படும்.

(பி - ம்.) ௨௯. 'அறிந்தோரராணங்கூற' ௩௧. 'தாதையிட்டனன்' ௩௪. 'என்பவட்குரைப்பவ வளிடுசாபத்து'

நகர்கடல் கொள்ளநின் றுயரும் யானும்
பகருநின் பொருட்டா லிப்பதிப் படர்ந்தன
மென்றலு மறவணன் றாளிணை யிறைஞ்சிப்
பொன்றிகழ் புத்த பீடிகை போற்றுந்—
தீவ திலகையு மித்திறஞ் செப்பின
ளாதலி னன்ன வணிநகர் மருங்கே
வேற்றுருக் கொண்டு வெவ்வே றுரைக்கு
நூற்றுறைச் சமய நுண்பொருள் கேட்டே
யவ்வுரு வென்ன வைவகைச் சமயமுஞ்
செவ்வி தன்மையிற் சிந்தையின் வைத்திலே
னடிகண் மெய்ப்பொரு ளருளுக வென்ன
நொடிகுவெ னங்காய் நுண்ணிதிற் கேணீ
யாதி சினேந்திர னளவை யிரண்டே
யேதமில் பிரத்தியங் கருத்தள வென்னச்

---

௩௫. நகர் - காவிரிப்பூம்பட்டினம்.

௧௩ - ௩௫. தன்விழாத்தவிர்தலின், மணிமேகலா தெய்வத்திற் கொப்ப வானவர் தலைவனுகிய அவன் இட்ட சாபத்தால் நகரைக் கடல் கொள்ளவென்க.

௩ - ௩௫. மணி. ௨௪ : ௨௯ - ௬௯. ௩௬. பதி - காஞ்சிநகரம்.

௩௫ - ௬. மணி. ௨௮ : ௧௫௪ - ௪.

௩௭. என்றலும் - என்று அறவணவடிகள் கூறலும்.

௩௮ - ௯. புத்தபீடிகை போற்றும் தீவதிலகை: மணி. ௧௧ : ௨௭ - ௯.

௩ - ௩௯. மணி. ௨௫ : ௧௭௬ - ௨௧௩. ௪0. நகர் - வஞ்சிநகரம்.

௪௨. சமயம் - அளவைவாதமுதல் பூதவாதமிறுதியாகிய சமயங்கள்.

௪௩. மணி. ௨௭ : ௨௮௯.

௪௪. செவ்விது : பன்மையொருமை மயக்கம்.

௪௫. அடிகள்: விளி. என்ன - என்று மணிமேகலை கேட்ப.

௪௬. நொடிகுவென் - சொல்லுவேன்.

'நொடிகுவென்' என்பது முதலியன அறவணவடிகளுடைய கூற்று.

௪௭. சினேந்திரன் - புத்தன்.

௪௮. ஏதம் - குற்றம். பிரத்தியம் - பிரத்தியக்கப் பிரமாணம்; மணி. ௨௭ : ௮௩. கருத்தளவு - அனுமானப்பிரமாணம்.

௪௭ - ௮. என்ன இரண்டேயென்க.

(பி - ம்.) ௩௭. 'அறவணனடியிணை' ௩௮. 'திகழ்பவுத்தபீடிகை' ௩௯. 'தீவலதிலகையும்' ௪0. 'ஆதலினந்தவணி' ௪௨. 'நூற்றியச்சமய நுண்'

*சுட்டுணர் வைப்பிரத் தியக்க மெனச்சொலி
விட்டனர் நாம சாதிகுணக் கிரியைகண்
மற்றவை யனுமா னத்துமடை யும்மெனக்
காரண காரிய சாமா னியக்கருத்
தோரிற் பிழைக்கையு முண்டுபிழை யாதது
கனலிற் புகைபோற் காரியக் கருத்தே
யேனை யளவைக ளெல்லாங் கருத்தினி
லான முறைமையி னனுமான மாம்பிற
பக்க மேதுத் திட்டாந்த முபநய
நிகமன மென்ன வைந்துள வவற்றிற்
பக்க மிம்மலை நெருப்புடைத் தென்றல்

---

* இவ்வடிமுதலியவற்றால் இக்காதையிற் கூறப்பட்டுள்ள பிரத்தியக்கம் அனுமானமென்னும் இரண்டளவையிலக்கணங்களும், அவற்றின் பாகுபாடுகளும் இன்ன நூலின் கருத்தைத் தழுவிவந்தனவென்று விளங்காமையாலும், தமிழிலுள்ள தருக்கசங்கிரகம், அன்னம்பட்டீயம் முதலியவற்றிலும், சிவஞானசித்தியார் சுபக்கத்துள்ள அளவையிலக்கணத்திற்குப் பலரெழுதிய உரைகளிலும் வந்துள்ள குறியீடு முதலியவைகள் வேறு முறையாக இருத்தலாலும், இயன்றவளவு விசாரித்தும் இந்த முறையுள்ள பழைய நூல்கள் இக்காலத்து வழங்கவில்லையென்று வடமொழித் தருக்கநூல்கள் பலவற்றிலும் மிக்க பாண்டித்தியமுள்ளவரும், முன்பு கும்பகோணத்தில் வசித்தவருமாகிய குறிச்சி மஹாமஹோபாத்யாய ஸ்ரீ ரங்காசாரியாவர்கள் முதலிய மஹாவித்துவான்கள் பலரும் சொல்லிவிட்டமையாலும், இவற்றைப்பற்றி இலங்கையிலுள்ள வித்தியோதய பாடசாலைத்தலைவரும் பௌத்தமதாசாரியருமாகிய ஸ்ரீ ஸுமங்களரை விசாரிக்கும்படி செய்ததற்கு அவர் பிரத்தியக்கம் அனுமேயம் ஶ்ராத்தேயமெனப் பிரமாணம் மூன்றுவகைப்படுமென்றும், அவற்றுட் பிரத்தியக்கத்தினிலக்கணம் அங்கோத்தரநிகாயமென்னும் நூலிலுள்ள காலாமசூத்திரத்திலும் மத்தியமநிகாயமென்னும் நூலிலுள்ள மஹாஹஸ்திபதோபமசூத்திரத்திலும் அனுமேயத்தினிலக்கணம் மேற்கூறிய நூல்களிலுள்ள அனுமானசூத்திரங்களிலும் ஶ்ராத்தேயத்தினிலக்கணம் மேற்கூறிய நூலிலுள்ள மஹாஸிஹ்மநாதசூத்திரத்திலும் கூறப்பட்டுள்ளனவென்றுமட்டுந் தெரிவித்தமையாலும், அந்நூல்களும் அவற்றைப் புலப்படுத்துவோரும் கிடைக்காமையாலும், இந்தப்பாகத்திற்குக் குறிப்புரை எழுதப்படவில்லை; ஆயினும் முதலிற் கூறிய வித்துவான்களுடைய முன்னிலையிற் பலமுறை ஆராய்ச்சிசெய்து ஏட்டில் இருந்தவாறே மூலம் மாத்திரம் பதிப்பிக்கப்பட்டது.

(பி - ம்.) ௪௯. 'வைகப்பிரத்தியக்கம்' ௫௧. 'மானத்தடையுமெனக்' ௫௨. 'காரியஞ்சாமானிய' ௫௩. 'கனலியிற்புகைபோல்' ௫௫. 'ஏனையரானவைகள்' ௫௭ - ௮. 'திருட்டாந்தமுபனபளிகமெனவைந்து'